MADURAI KAMARAJ
SPECIAL CONVOCATIO
CONFERRING D.LIT (HONOR
ON
HONO ABLE CH MIN ER OF T
தமிழரசு
16-7-1 .3

ভাউচার

16 7.93 to 16.12.93

JL
Vol.11 no N 73
193.7.12
- 16.12.3

காதி கிராஃப்ட்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

இந்த இதழில்...

மதுரை காமராஜர் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை ... 5
கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் வறுமை நீங்கிடவும், வேலைவாய்ப்புகள் பெருகிடவும் தொடர்ந்து பாடுபடுவோம்! —மாண்புமிகு முதல்வர் உரை ... 13
திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் - ஒரு கண்ணோட்டம் ... 17
மனநிறைவு தரும் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ... 21
கலைக்கோயில் ... 24
தமிழே! உன்னை வாழ்விக்க வாழ்வதுதான் நெல்லைச் சீமை ... 28
கனக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் ... 30
மக்களாட்சித் தத்துவத்தின் மாட்சிக்கு அடிப்படை - பயனுள்ள விவாதங்களே... —மாண்புமிகு முதல்வர் உரை ... 33
கடமைகளை அர்ப்பணிப்பு உணர்வோடும் உறுதியோடும் தொடர்ந்து செய்யுங்கள்! —மாண்புமிகு முதல்வர் உரை ... 39
சென்னைப் புறநகரில் ஒரு தொழில் பூங்கா ... 44
திருவண்ணகிரியில் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள் விழா ... 47
புதுப்பொலிவு பெறும் குற்றாலம் ... 48

உள்ளே...

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டச் சிறப்புக் கட்டுரைகள் ... பக்கம்: 17

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

ஆடித் திங்கள் - 1

மலர்:24 இதழ்:2

16-7-1993

விலை: ரூ.3

டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மனிதாபிமான அணுகுமுறையுடன் கூடிய ஈர நெஞ்சம் கொண்ட ஒரு மாதரசி!

அரும்புகழ் பெற்ற, அனைவரையும் ஈர்க்கும் ஆளுமைப் பண்பு கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை அறிமுகப்படுத்துவதை எனக்களிக்கப்பட்ட இணையில்லா மரியாதையாகவும், பெருமைக்குரிய தனிச் சிறப்பாகவும் மதிக்கிறேன். அவர்களுடைய தலைமையின்கீழ் தமிழகத்தின் ஏழை எளிய மக்கள் புதிய ஒளியைக் கண்டு ஒரு புதிய வாழ்வை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். உயர்ந்த எண்ணங்கள், உண்மை, புத்திக்கூர்மை, செயல் வேகம், நடைமுறையில் செயலாக்கும் திறன் ஆகியவற்றின் உறைவிடமாகத் திகழுகின்றார். அவர் முழுமைப் பண்புகளுக்கு முன்னுதாரணமாக விளங்குகிறார்.

தமிழ்நாட்டின் முதல்வர் என்ற முறையில் தாம் ஒரு தகுதி வாய்ந்த தலைவர் என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டார். இந்தியாவில் தமிழ்நாடு ஒரு முதன்மை மாநிலமாகத் திகழ வைத்தார். அவரை வணங்கும் தமிழ்நாட்டு மக்கள் அவரைப் பாசத்துடனும் மரியாதையுடனும் புரட்சித்தலைவி என்று அழைக்கிறார்கள்.

மிகப் பிரகாசமான கல்விச் சாதனையைப் பள்ளியில் புரிந்த டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சுய கல்வி மூலம் தம் அறிவாற்றலை மேன்மேலும் வளர்த்துக் கொண்டார். அவர் மேன்மேலும் ஏராளமான நூல்களைக் கற்பதில் ஆர்வமுள்ளவர் என்பதை நாம் குறிப்பிட்டே ஆகவேண்டும். அவர் மிகப் பெரிய எழுத்தாளர்களான டிக்கன்ஸ், பிரான்ட் சிஸ்டர்ஸ், ஜேன் ஆஸ்டின், மகாத்மா காந்தி, சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் படைப்புகளோடு இடையறாத் தொடர்பு கொண்டு அதன்மூலம் தமது மனதை விசாலமாக்கி, தமது அறிவு வானத்தை அகலப் படுத்திக் கொண்டவர்.

ஆங்கில மொழியில் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு இருந்த புலமையும் ஆற்றலும் அனைவரும் அறிந்த ஒன்றாகும். ஆங்கிலத்தோடு தமிழ், கன்னடம், தெலுங்கு, இந்தி, மலையாளம் ஆகிய மொழிகளில் அவருக்கு உள்ள ஆற்றலும் தகுதியும் அவர் ஒரு பன்மொழி அறிஞர் என்பதைப் பறைசாற்றுகின்றன. தன் பேச்சுக்களையும் எழுத்துக்களையும், சிறந்த மொழி ஞானம், சந்தர்ப்பங்களுக்குப் பொருந்தும் திறன், சிந்தனை வளம் ஆகியவை நிறைந்தவைகளாக ஆக்குவதில் அவருக்குள்ள திறமை, அவரை ஒரு சிறந்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் விளங்க வைக்கின்றன.

சிறந்த நாடக நடிகையாகவும், திரைப்பட நடிகையாகவும் விளங்கிய டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், வாழ்க்கை அனுபவத்தை ஒரு கலை ஞானத்துடன் விசாலப்படுத்தியுள்ளார். பல வேறு கலைகளில் அவருக்கிருந்த தேர்ச்சி, வாழ்க்கை அனுபவத்தை வளப்படுத்தியது; பொதுவாழ்வில் அவர் எதிர்நோக்க வேண்டியிருந்த அநேக சோதனைகளையும் தாங்குகின்ற ஆற்றலை அவருக்கு அளித்தது.

டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஒரு குறிப்பிடத்தக்க படைப்பாற்றலில் சிறந்த கலைஞர் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். மிக நுணுக்கமான விவரங்களைப் புரிந்துகொள்வதில் ஒரு ஓவியனின் கண் பார்வையும், அனைத்திலும் உள்ள உயிர்த்துடிப்புகளை உணர்ந்து கொள்வதில் ஒரு பாடகனின் காதுகளையும் பெற்றவர். தமது சுயசரிதையாகிய 'மனம் திறந்து பேசுகிறேன்', நான்கு நாவல்கள், ஏராளமான தமிழ்ச் சிறுகதைகள் மற்றும் தகவல்களைத் தரும் பல ஆங்கில, தமிழ்க் கட்டுரைகள் மூலம் வளமான கற்பனை, உயர்ந்த புத்திக்கூர்மை, மொழி ஆற்றல் ஆகியவற்றின் மூலம் தான் ஒரு வளமான எழுத்தாளர் என்ற மதிப்பைப் பெற்றார். இந்த வகையில், ஒரே சமயத்தில் தான் ஒரு பிராந்தியவாதி, தேசியவாதி, பிரபஞ்சவாதி என்பதை எடுத்துக்காட்டியுள்ளார்.

மனித மனப்பாங்கினை ஆழமாக அறிந்து கொள்ளும் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் திறன், நடுவுநிலைமை, தன்வயப்படாமை, புரிந்து போற்றும் நன்னெஞ்சம், துயர்ப் படுவோரைப் பற்றிய உண்மையான அக்கறை ஆகியவற்றை வழங்கியுள்ளது. ஆட்சித்திறம், அரசியல் நுழைபுலம், தும்நிலைக்கேற்ற மதிநுட்பம், இயற்கையிலும் முயற்சியிலும் பெற்ற ஞானம் இவை அனைத்தையும் வரமாகப் பெற்ற அரசியல் நிபுணர் அவர் ஆவார்.

(மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு, 1993 ஜூலை 14-ஆம் நாளன்று மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தால் டாக்டர் பட்டம் வழங்கப் பட்டபோது, பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் எம்.டி.கே. குத்தாலிங்கம், டி.எஸ்.சி அவர்களால் வழங்கப்பட்ட பட்டமளிப்புப் பட்டயம்)

தலைமைப் பண்புகளை ஏராளமாகப் பெற்ற தலைவர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் புரியும் ஒவ்வொரு செயலிலும் அவருடைய சமநிலைத் தன்மை, அறிவுபூர்வமான, நடைமுறை சாத்தியமான, முற்போக்கான எண்ணங்கள் ஆகியவை பிரதிபலிக்கும். அவரது வளமான பேச்சுத் திறமையும், நிர்வாகத் திறமையும், புத்திக்கூர்மையும் அவர் ஒரு சாதனையாளர் என்பதை நிரூபித்துவிட்டன. ஆனால், அவர் முற்றிலும் தன்னடக்கத்துடனும், பணிவுடனும் திகழ்கிறார். டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பண்பாடு, கண்ணியம், சுய கட்டுப்பாடு உடையவராவார். தமது பகுத்தறிவினாலும் பிரச்சினைகளைச் சரியான கோணத்தில் நோக்கும் தன்மையினாலும், சமுதாயத்தின் அனைத்துப் பிரச்சினைகளையும் விஷயங்களையும் தீர்த்து வைக்கின்றார். அவரது வலுவான மதிநுட்பமும், உயரிய சிந்தனையும் மிகக் கடுமையான நிர்வாகப் பணியை எளிமையாகவும், நளினமாகவும் செய்து முடிக்கும் ஆற்றலை வழங்கியுள்ளன.

தாழ்த்தப்பட்டோர், சமூகத்தின் வசதி வாய்ப்புகள் பெறாதோர், நலிந்த பிரிவினர், குறிப்பாக, பெண்கள், குழந்தைகள் ஆகியோர் மீது கொண்ட அக்கறையும், அனுதாபமும் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் வாழ்க்கையையும், வாழ்வியல் கோட்பாட்டையும் பெரிதும் பாதித்திருக்கின்றன. அதனை, பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டமும், தொட்டில் குழந்தைத் திட்டமும் பிரதிபலிக்கக் காணலாம். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல்வாழ்வுக்காக ஒரு பத்து அம்சத் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்திலுள்ள உடல் ஊனமுற்றோர்களின் தேவைகளைக் கவனிப்பதற்காகவே ஒரு தனி இயக்குநரகத்தை உருவாக்கி இருக்கும் தனிப்பெரும் பெருமை இவரையே சாரும். இலவச மருத்துவ முகாம்கள், சிறப்பு மருத்துவ முகாம்கள், ரயில் மருத்துவமனை ஆகியவற்றை நடத்துவதன் மூலம், அனைவருக்கும் நலவாழ்வு எனும் அரிய திட்டத்தை அரசு முனைப்போடு நடத்தி வருகிறது.

டாக்டர் ஜெ. ஜெயலலிதா 20-ஆம் நூற்றாண்டின் தன்னிகரற்ற, தலைமை வாய்ந்த, பெண்ணுரிமை வீராங்கனை ஆவார். பெண்கள் தங்கள் சமூக உரிமைகளைப் பெறவேண்டும் என்றும், பொருளாதார ரீதியாகச் சுதந்திரம் பெற அவர்களுக்கு உதவி செய்யப்பட வேண்டும் என்று உறுதியாக நம்புகிறார். அதேநேரத்தில், வீடு, சமூகம், நாடு என்று குறித்த தங்களது பொறுப்புக்களை அவர்கள் சரிவர நிறைவேற்ற வேண்டும் என்பதும் அவர் கருத்தாகும்.

பெண்கள் வாழ்க்கையில் உயர்வதற்காக அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் விதத்தில் பெண்களுக்காக மாநில அளவிலான குழு ஒன்று அவரால் அமைக்கப்பட்டிருக்கிறது. அனைத்துத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களும் பெண்களாகவே இருக்க வேண்டும் என்று அவர் ஆணையிட்டிருக்கிறார். இது ஒரு சரியான நடவடிக்கையாகும். ஏனெனில், சின்னஞ்சிறு குழந்தைகளுக்குத் தேவை - தாய்மையின் பராமரிப்பு, தாய்மையின் கவனிப்பு, தாய்மையின் பரிவு ஆகியவையாகும்.



பெண்களின் முறையீடுகளைக் கவனிப்பதற்காகவே அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் முழுவதும் பெண்களாலேயே நிர்வகிக்கப்படும் காவல் நிலையங்கள் அமைக்க அவர் ஆணையிட்டுருக்கிறார்.

டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமைப் பொறுப்பில் இருந்து மாநிலத்தை வழிநடத்திச் செல்லும் இந்த இரண்டாண்டுகளில், ரூ.20,000 கோடிக்கு மேலான முதலீட்டுத் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தேசிய அரோமெடிக்ஸ் தொழிற்சாலையும், ஜெயங்கொண்டத்தில் லிக்னைட் நிலக்கரி தோண்டியெடுத்தல் மற்றும் மின் உற்பத்தி ஒருங்கிணைப்புத் திட்டமும் அவற்றில் குறிப்பிடத்தக்க முக்கிய திட்டங்களாகும்.

டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் விளையாட்டு ஆர்வம் நிர்வாகத் திறன் ஆகியவற்றை எடுத்துக்கூறும் விதத்தில், மிக நவீனமான வெளி அரங்க விளையாட்டுத் திடல் ஒன்று உலகத்தரம் வாய்ந்ததாகக் குறிப்பிட்ட குறுகிய காலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. உருவாகிவரும் விளையாட்டு வீரர்களையும், வீராங்கனைகளையும் இனங்காணவும், மேலும் அவர்களது திறமைகளை வளர்க்கவும், தேசிய, சர்வதேச விளையாட்டுக் களங்களில் பெருமைக்குரிய, சிறப்பிடத்தைத்

தமிழகம் பெறவும், தமது தலைமையில் இயங்கும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தை அவர் உருவாக்கியிருக்கிறார்.

தமிழகத்தின் புகழ்வாய்ந்த, நீண்ட காலமாகக் கவனிப்பாரற்ற திருக்கோவில்களின் சீரமைப்புக் காகவும், ஆலயங்களில் அன்றாட வழிபாடு நிகழ்த்த நிதியமைப்பதற்காகவும் டாக்டர் ஜெ. ஜெயலலிதா பெரும்பணி ஆற்றியுள்ளார். இவ்வாறு நமது தொன்மையான பண்பாட்டு மரபைப் பேணுவதற்கும், பாதுகாப்பதற்கும் இந்தியப் பண்பாட்டை வளர்க்கவும் அவர் ஆற்றியுள்ள பணிகள் அளப்பரியன.

டாக்டர் ஜெ. ஜெயலலிதா, கல்வித்துறையில் பெரிதும் நாட்டமுடையவர். வகுப்பு உணர்வையும் ஏழ்மையையும் அகற்றுவதற்கான ஒரு வழி, பொதுமக்களுக்குக் கல்வி புகட்டுவதே என்பது அவரது உறுதியான நம்பிக்கையாகும். கட்டாயத் தொடக்கக் கல்வியைத் தமிழ்நாடு அறிமுகப்படுத்தி உள்ளது. பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும் தரமிக்க உயர்கல்வியைப் பேணி வளர்க்க வேண்டு மென்பது அவரது பெருவிழைவாகும். உயர் கல்விக்கான மாநிலக் குழுவையும், மாநிலக் கல்வி ஆலோசனைக் குழுவையும் நிறுவிட அவரே காரணமாவார். தமிழக மக்களின் தலைவிதியை நிர்ணயித்து அறிவுப்பூர்வமாகவும் ஆக்கப்பூர்வ மாகவும் அவர்களை வழிநடத்திச் செல்பவர் புரட்சித்தலைவர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களே என்றால் மிகை காது.

டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உருக்குப் போன்ற உறுதியுடன் விளங்கும் ஒரு செயல்வேகம் மிக்க தலைவர்.

டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மனிதா பிமான அணுகுமுறையுடன் கூடிய ஈரநெஞ்சம் கொண்ட ஒரு மாதரசி.

டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பல்வேறு கலைவடிவங்களில் பழமையையும் புதுமையையும் சரியாக இணைக்கவல்ல திறம்படைத்த புத்தார்வம் கொண்ட கலைஞர். டாக்டர் ஜெ. ஜெயலலிதா குறிப்பிடத்தக்க தலைமைப் பண்புகளை உடையவர்.

டாக்டர் ஜெ. ஜெயலலிதா கல்வியில் சிறந்த வர். தமிழகத்தில் தன்னிகரற்ற பொறுப்புமிக்க தலைவர் என்ற முறையில், தமிழகத்தின் விரை வான வளர்ச்சிக்காகப் பாராட்டிற்குரிய பெருஞ் செயல்களை ஆற்றுவதில் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமது தெளிவான பார்வை, சிந்தனை, ஆக்கப்பூர்வமான ஆற்றல் மற்றும் நுண் மான்நுழைபுலம் ஆகியவற்றைப் பயன்படுத்தி இருக்கிறார்.

எனவே, டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர் களுக்கு, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் ஆட்சிப் பேரவையும், ஆட்சிக்குழுவும், 'டாக்டர் ஆப் லெட்டர்ஸ்' (Doctor of Letters-Homoris Causa) பட்டம் வழங்க ஒருமனதாகப் பரிந்துரைத் துள்ளன; அவர்களுக்கு அப்பட்டம் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மதுரையில், தல்லாகுளம் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அனைத்து மகளிர் காவல் நிலையத்தை திறந்து வைத்தார் (14.7.1993).

இளைஞர்களின் ஆற்றலை வளர்ப்பதற்குத் தேவையான சூழலைப் பல்கலைக்கழகம் உருவாக்க வேண்டும்!

மதுரை காமராஜர் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத் தின் வெள்ளிவிழாவினையொட்டி நடைபெறுகின்ற இந்தச் சிறப்புப் பட்ட மளிப்பு விழாவில் பேச என்னை அழைத்துப் பெருமைப்படுத்தியமைக்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

இந்தச் சிறப்புமிகு விழாவில் உங் களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள என்னை அழைத்தமைக்கு இப்பல்கலைக் கழகத்தின் வேந்தரான மேதகு ஆளுநர் அவர்களுக்கு என் நன்றியினைத் தெரி வித்துக் கொள்கிறேன். 25 ஆண்டுகள் என்பது ஒரு நிறுவனத்தின் வரலாற்றில் குறுகிய காலமே. ஆனால், இந்தப் பல் கலைக்கழகத்தின் வளர்ச்சியில் நெருங்கிய தொடர்பு கொண்டு, அதன் மேம் பாட்டிற்குச் சிறந்த பங்கினை ஆற்றிய உங்களுக்கு இந்த விழா ஒரு தனி முக்கியத்துவம் வாய்ந்தது என நம்பு கிறேன். ஏனெனில், இந்தப் பல்கலைக் கழகம் எந்தக் குறிக்கோள்களை முன்னி றுத்தித் தொடங்கப்பட்டதோ, அதன் அடிப்படையில் இதன் சாதனைகளை எடைபோட இது ஒரு சந்தர்ப்பமாக அமையும்.

''மதுரை காமராஜர் பல்கலைக் கழகம்'' என்ற பெயரில் மதுரை நகரின் பெயரும், பெருந்தலைவர் காமராஜர் பெயரும் அடங்கியுள்ளன. இப்படி ஓர் பெயர் வைக்கப்பட்ட காரணத்தினாலேயே இப்பல்கலைக்கழகத்தின் மதிப்பு உயர்ந் துள்ளது. தேச வளர்ச்சியில் ஈடு பட்டுள்ள நிறுவனம் என்ற குணத்தையும் பெற்றது.

சரித்திரக் காலத்திற்கு முன்பிருந்தே வரலாற்றுப் புகழ்பெற்ற ஒரு சில இந்திய நகரங்களில் மதுரையும் ஒன்று. புராணங் களில் காணப்படும் ஒரு சில மேற் கோள்கள் இந்நகரின் வளமையை உணர்த்துகின்றன. இராமாயணம், மகாபாரதம்; கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம், மெகஸ்தனிஸ் எழுதிய நூல்கள் பருத்தி ஆடைகளுக்கும், மாணிக் கங்களுக்கும் பெயர் பெற்ற பாண்டியர் களின் நகரத்தைப் பற்றி குறிப்பிட்டி ருக்கின்றன. மகாவம்சம் எனப்படும் இலங்கை நூல் மதுரையைத் தலைநகராகக் கொண்ட பாண்டிய அரசனைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. புத்தரின் மகா நிர் வாணத்திற்குப் பின்பு ஆண்ட, இம் மன்னனின் காலம் கி.மு. 6-ஆம் நூற்றாண்டாக இருக்கலாம். கி.பி. 75-இல் பிளினியும், கி.பி. 130-இல்

அட்டை சொல்லும் செய்தி:

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலரே பல்கலைக் கழக வளாகத்துக்குள் நுழைந்து, ஆங்கிலேயர்கள் நிர்வாகத்தை நடத்த உதவி புரியும் வகையிலும், ஆங்கிலேயர்களின் கலாச்சார, இலக்கிய, சமூக நடவடிக்கைகளுடன் ஒன்றிவிடும் விதத்திலும் உருவாக்கப்பட்டார்கள்.

நிர்வாகத்தைக் கவனிக்கும் பொறுப்பு அமைச்சுப் பணிகளில் அமர்த்தப்பட்ட ஏராளமான படித்தவர்களின் கையில் ஒப்படைக்கப்பட்டது. ஆனால், இந்தப் பல்கலைக் கழகங்களின் மூலமாக ஆங்கிலேயர்கள் புகுத்த விரும்பிய கல்வியே, மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. இலட்சக் கணக்கான மக்களின் உணர்வுகளைத் தட்டி எழுப்பியது. அதே கல்வியின் மூலம் ஆங்கிலேயர்களின் அதிகாரத்தைப் பறிப்பார்கள் என்பதை அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

கல்வி ஒரு சக்தி வாய்ந்த கருவி. ஒரு குறிப்பிட்ட குறிக்கோளுடனும், இலட்சியங்களுடனும் கூடிய குறுகிய வட்டத்துக்குள் மட்டும் கல்வியின் தாக்கத்தையும் செல்வாக்கையும் அடக்கிவிட முடியாது. இது, எண்ணங்களைத் தூண்டிவிட்டு ஆழமான இசை மீட்டுகின்றது. இது நமது உணர்வுகளைத் தூண்டிவிடுவதுடன், எண்ணத்தை வெளிப்படுத்த சிறந்த கருவியாக விளங்குகிறது. ஆசிரியரின் மதிநுட்பத்தையும் பாடத்திட்டங்களையும் பற்றிக் கவலைப்படாமல், சுதந்திரமாக உயர் பண்புகளைப் பற்றி ஆராய்வதற்கு உத்வி செய்யும் வகையில் மனித எண்ணத்தை உருவாக்கி, கலாச்சாரத்தையும், தத்துவத்தையும் போதிக்கின்றது. இளைய சமுதாயத்தின் இலட்சியங்களைத் தடுக்காமல், அதை நிறைவேற்றும் வண்ணம் கல்வியின் கட்டமைப்புகளைச் சிறந்த மனத்துடன் தொடர்ந்து கவனிக்க, வரலாறு நமக்குக் கற்றுக் கொடுத்த இந்தப் பாடத்தை மீண்டும் மீண்டும் படிக்க வேண்டும்.

இதன் பொருள் என்னவென்றால், கீழ்க்கண்ட வினாக்களை நாம் புதிதாகக் கேட்க வேண்டும்:

⊙ பல்கலைக்கழகத்தின் தன்மை எதுவாக இருக்க வேண்டும்?

⊙ அதன் நோக்கம் என்ன?

⊙ சமூக வாழ்க்கையில் அதனுடைய பங்கை அது எந்த முறையில் ஆற்ற வேண்டும்?

⊙ மக்களாட்சியின் இலட்சியங்கள், சமத்துவச் சமுதாயம் அமைக்க வேண்டிய நிர்ப்பந்தங்களைப் பொறுத்தவரையில் பல்கலைக்கழகத்தின் பங்கு என்ன?

1947-இல் அலாகாபாத் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பல்கலைக்கழகத்தின் அடிப்படை நோக்கங்களையும், தேசிய வாழ்வில் அதன் பங்கு பற்றியும் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள்-

''மனிதாபிமானம், பொறுமை, பகுத்தறிவு, உண்மையைத் தேடிச் செல்லுதல் ஆகியவற்றின் சின்னமாகப் பல்கலைக் கழகம் விளங்குகிறது. உயர்ந்த நோக்கங்களை நாடி மனித வர்க்கம் தொடர்ந்து நடைபோட இது உறுதுணையாக விளங்குகிறது. பல்கலைக்கழகங்கள் இன்று, தங்களுடைய கடமைகளைச் சரியாகச் செய்துவந்தால், அவைகள் நாட்டுடனும், மக்களுடனும் இசைந்திருக்கின்றன என்று பொருள்படும்.

எனவே, நமது பல்கலைக்கழகங்கள், தாராளமான கல்வி உணர்வை மேம்படுத்துவதே அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளன. தலைமை ஏற்கத் தகுதி வாய்ந்த அறிவாற்றலையும், நல்லெண்ணத்தையும் கல்வியினால் பெற்ற மனிதர்களை உருவாக்குவதில் பல்கலைக் கழகங்கள் அக்கறை கொண்டுள்ளன. இத்தகைய அடிப்படை நோக்கங்களிலிருந்து வளர்ந்த பல்கலைக்கழகங்கள் கல்வி, தேர்ச்சி, தொண்டு ஆகியவைகளில் கவனம் செலுத்துகின்றன. முற்காலத்தில் கல்வி, தேர்ச்சிப் பணிகள் பல்கலைக்கழகங்களின் நடவடிக்கைகளில் முக்கியப் பங்கினை ஆற்றின. சிக்கலான, எந்திரமயமான இன்றைய சமுதாயத்தில், பணிகள் பெருமளவில் வளர்ந்துவிட்டன. கல்வி, புலமை என்னும் செயற்பாடுகள் தொண்டுப்பணிக்கு மிக அருகில் வந்துவிட்டன. அதாவது, பல்கலைக்கழகங்கள் சமுதாயத்திற்கு நிபுணர்களையும், நிபுணத்துவத்தையும் வழங்குகின்றன. தொழில் நுட்பத்துறையில் மாணவர்கள் சிறந்த தேர்ச்சியைப் பெற உதவும் வகையில் பல்கலைக்கழகங்கள் பணியாற்றுகின்றன. போட்டி நிறைந்த இந்தக் காலத்தில் பல்கலைக்கழகங்கள் சொல்லிக் கொடுக்கும் - கற்றுக்கொள்ளும் முறைகளில் சிறந்து விளங்கி முன்னோடியாகத் திகழவேண்டும். அப்பொழுதுதான் அறிவு பூர்வமான ஒரு மாணவர் தலைமையேற்று தேசிய வாழ்வின் பல்வேறு துறைகளில் மாறுதல்களைச் செய்திட முடியும்.

மேற்கூறப்பட்ட குறிக்கோள்களில் சிக்கலான முறைகள் ஒரு பக்கமிருக்க, பல்கலைக்கழகங்கள், இடைவிடாது மென்மேலும் அறிவைத்தேடி, செல்லும் அறிவுஜீவிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் கொண்டதொரு சமுதாயமாக இயங்கும். இன்றைய கலாச்சார - பரிமாற்றத்தில் உள்ள முக்கியப் பிரச்சினைகளுடன் தொடர்பு கொண்ட, தேர்ந்தெடுக்கப்பட்ட, ஒரு சிறப்புக் குழுவாக இருக்கும். வளர்ந்து விட்ட மனித அறிவாற்றல், விஞ்ஞானம் தொழில் நுட்பம் ஏற்படுத்திய மிகுந்த பாதிப்பு ஆகியவற்றால், இந்த கலாச்சார பரிமாற்றத்தைப் புதிய கோணத்தில் ஆராய்ந்து முற்றிலும் மாறுபட்ட விதத்தில் பல்கலைக்கழகங்களை நோக்குவது அவசியமாகிறது. பல்கலைக்கழகத்தைப் பற்றி எந்த ஒரு கண்ணோட்டத்தை நாம் வளர்த்துக் கொண்டாலும், சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமானதாகவும் இருக்க வேண்டும். நாட்டின் நிகழ்காலத் தேவைகளுக்கு மட்டுமல்லாமல் எதிர்காலத் தேவைக்குப் பொருந்துவனவாக இருத்தல் வேண்டும். விஞ்ஞானம், தொழில்நுட்ப மாறுதல்களின் பின்னணியில், தேசத்தின் நலனுக்காக தம்முடைய பங்கை ஆற்றும் வகையில் தனி நபர்களின் அறிவாற்றலையும், இதர பண்புகளையும் வளர்க்கும் நோக்கோடு, மகாத்மா காந்தி, ஸ்ரீ அரவிந்தர், ரவீந்திரநாத் தாகூர் போன்ற நம் நாட்டுப் பெருந்தலைவர்கள் பல்கலைக்கழக கல்வியைப் பற்றிப் பல்வேறு வகையான யோசனைகளைத் தெரிவித்துள்ளார்கள். இந்த அனைத்து மாதிரிகளையும் பரிசீலித்து, கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவை ஒருங்கே இணைக்கப்பட்ட ஒரு முறையை உருவாக்கி, சமுதாயத்தில் தலைமையக

விலங்குகளில் உயர்ந்தது சிங்கம்.
அதைப் போல மனிதர்களில் சிறந்தவன் சிறந்த சிந்தனையாளனே.
- தந்தை பெரியார்

• கல்வி கற்பிப்பது என்பது வெறும் அறிவைப் பெற்று ஆங்காங்கே காணப்படும் செய்திகளை, தகவல்களைச் சேகரிப்பது என்ற எல்லையில் வெறுமனே முடிந்து விடுவது அல்ல. வாழ்க்கையின் முதன்மையை, முழுமையை, முழுவதுமாக உணர்ந்து கொண்டு, சிறந்த மனிதனாக மாறுவதற்கு நல்ல பயிற்சியை வழங்குவதுதான் கல்வி என்று நாம் கருத வேண்டும். அந்த வகையில் வாழ்வின் அனுபவமே ஒரு வகையில் நாம் கற்கும் கல்வி என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

மாக, ஒரு புதிய பாதையைப் படைப்பதாக, பரிசோதனை செய்வதாக, குறிப்பிட்ட சில அடிப்படைப் பண்புகளை நிலை நிறுத்துவதாகப் பல்கலைக்கழகம் அமைகிறது.

அதே சமயத்தில் பல்கலைக்கழகம் கற்றுக் கொடுக்கின்ற கற்றுக் கொள்கிற முறையினைத் தொடரவேண்டும். உயர் தர கற்றுத்தரும் சாதனங்கள் பல்கலைக் கழகத்தில் கிடைக்க வகை செய்ய வேண்டும். உயர் கல்வியில் கற்றுக் கொடுக்கின்ற, கற்றுக் கொள்கிற முறையின் சிறப்பு, செயற்பாடு அல்லது சாதனை ஆகியவை முற்றிலும் மாணவர்களின் தரத்தைப் பொறுத்தே அமைகின்றன. உன்னதத்தை நாடிச் செல்லுதல் என்பதே தூண்டுகோலாக வேண்டும். இவைகளில் உன்னதம் என்பது, உயர் கல்வியில் மனித சக்தி, சாதனங்கள், போதுமான அடிப்படை வசதிகள், தகுதி வாய்ந்த தங்களை அர்ப்பணித்துக் கொண்ட ஆசிரியர்கள், ஆர்வமும் கடமை உணர்வுமிக்க மாணவர்கள், திறமையான கற்பித்தல், திறமையான நிர்வாகம், கல்விக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளுதல், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே சுமூகமான உறவு நிலவுதல் என்றே பொருள்படும். உயர்நிலைச் செயற்பாடு மற்றும் குறிக்கோள் என்ற சூழலில்தான் தரமான உயர்கல்வி எய்திட இயலும். இம்முறையில் வடிவமைக்கப்பட்ட தரத்தை சற்றும் குறைத்துக் கொள்ளவே முடியாது. ஏனெனில் கல்விக்காக சமுதாயம் அதிக செலவு செய்கிறது. அதற்கு ஈடாக சமுதாயத்திற்குச் சேவை, செயல்திறன் வடிவில் பலன்கள் இருந்தாக வேண்டும். துரதிர்ஷ்டவசமாக இந்தக் கருத்து பெரும்பாலும் ஒதுக்கப்படுகிறது. அண்மைக் காலத்தில் படித்தவர்கள் எண்ணிக்கை மட்டுமே கருத்தில் கொள்ளப்படுகிறது. ஆனால் உயர்கல்வி மட்டத்தில் படித்தவர்களின் தரம் நிச்சயமாக வலியுறுத்தப்படும். ஏனெனில், சமுதாயத்தின் நாளைய தலைவர்களைப் பல்கலைக்கழகம்தான் உருவாக்குகின்றது. விஞ்ஞான தொழில் நுட்ப கால கட்டமான இத்தருணத்தில் கல்வியின் அனைத்துத் துறையிலும் பல்கலைக்கழகங்களிலிருந்து படித்துவரும் மாணவர்கள் முன்னணியில் இருக்க வேண்டும் என்பதே பொருளாகும். எனவே தரம் என்பது மிக முக்கியமான குறிக்கோளாகும். ஆனால் பல்கலைக் கழகங்களிடமிருந்து மாணவர்கள் வேறு ஒன்றை எதிர்பார்க்கிறார்கள். பெரும்பாலான மாணவர்களுக்குப் பல்கலைக் கழகம் பட்டம் நல்ல வேலை பெற ஒரு பாஸ்போர்ட் என்றே கருதுகிறார்கள். ஒரு வேலையைப் பெறுவதற்காகத் தங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் பல்கலைக்கழகம் பயிற்சியளிக்கும் என்றே எதிர்பார்க்கிறார்கள். ஆனால் நடைமுறையில் அதுபோல் நடைபெறுவது இல்லை. மாணவர்களின் தேவையையோ, சமுதாயத்தின் தேவைகளையோ பூர்த்தி செய்யும் அளவிற்குப் பல்கலைக் கழகத்தின் செயல்பாடுகள் அமைவதில்லை. எனவே அனைத்துத் தரப்பிலும் ஒரு விரக்தி ஏற்பட்டுள்ளது.

இந்த உணர்வுகளை திரு வில் டுராண்ட் பொருத்தமாக வர்ணித்துள்ளார்.

''வகுப்பறையை விட விளையாட்டு மைதானத்தையும், தத்துவத்தை விட பந்தாட்டங்களையும் இளைஞர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். கண்ணாடி அணிந்த ஒரு சீன நாட்டு மாணவன், அமெரிக்கப் பல்கலைக் கழகத்தைப் பற்றி ''உடல் வலிமையற்றவர்களுக்குப் பாடங்களைச் சொல்லித்தர சந்தர்ப்பங்கள் வழங்கும் ஒரு விளையாட்டுச் சங்கம்'' என்று வர்ணித்தபோது, அனைவரும் நினைப்பதைப் போல அந்தக் கருத்து அவ்வளவு மோசமானதல்ல.

வில் டுராண்ட் அமெரிக்க மாணவனைக் குறிப்பிட்டுச் சொன்னார். இந்தியாவில் இந்திய மாணவன் விளையாட்டு மைதானத்தையும் விரும்புவதில்லை.

ஒரு மனிதனின் வாழ்வில் இளமை என்பது சாதனைகள் புரிய வேண்டிய பருவம். வாழ்க்கையின் அந்தக் கால கட்டத்தில் நிறைய எதிர்பார்ப்புகள் இருக்கும். இலட்சிய உணர்வுகள் பிராதானமாக இருக்கும். பண்புகளை அளக்கும் கருவியில் எது சரி எது தவறு என்பது உயர்நிலையில் வைக்கப்படும். சேவை மனப்பான்மை இயற்கையாகவே வரும். உணர்ச்சிகளும், தவறான கருத்துக்களும் பகுத்தறிவையையும், நடு நிலையையும் தாண்டிச் செல்வதில்லை.

அறிவாற்றல் மிக உயர்ந்த நிலையிலும், பகுத்துப் பார்க்கும் ஆர்வம் அதிகமாகவும் உள்ளன. இயற்கையிலேயே அறிவுத்தாகம் ஏற்படுகிறது. இளைஞர்கள் இயற்கையாகவே வெளிப்படுத்தும் இத்தகைய ஆற்றலை வெளிக்கொணர்வதே சமுதாயத்தின் முக்கியக் கடமையாகும். இளைஞர்கள் ஆற்றலை வளர்ப்பதற்குத் தேவையான சூழ்நிலையைப் பல்கலைக்கழகம் உருவாக்க வேண்டும் எனச் சமுதாயம் எதிர்பார்க்கிறது. இத்தகைய பொறுப்பைச் சமாளிக்க பல்கலைக்கழகம், போதிய வசதிகளைப் பெற்றிராத காரணத்தால், விரைவில் வெறுப்பும், ஏமாற்றமுமே வந்தடைகின்றன. நமது நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்கள், தற்போதுள்ள அதன் கட்டமைப்பில், இளைஞர்களின் இலட்சியங்களைப் பிரதிபலிப்பதாக இல்லை என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தமக்கே இயல்பான அமைப்பு, சிந்தனைப் போக்கு மாணவரின் கவனத்தை ஈர்ப்பதற்குப் பதில் அதனை ஒதுக்கித் தள்ளுகிற செயல்பாடு இவற்றால் பல்கலைக்கழகம் சிரமப்படுவதாகத் தோன்றுகிறது. வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றவோ, ஈர்ப்புடையதாக ஆக்கவோ அதிக அளவிற்குச் சமுதாயத்திற்குப் பயன்படும் வகையிலோ பல்கலைக்கழகங்கள் செயல்படவில்லை. இதைச் சொல்லும்பொழுது, எந்த ஒரு குறிப்பிட்டப் பல்கலைக் கழகத்தையும், மனதில் கொள்ளாமல் பொதுவான கருத்தாகச் சொல்லுகிறேன். இந்தப் பிரச்சினையை அதிகப்படியான முக்கியத்துவத்துடன் கவனிக்க வேண்டும். பல்கலைக்கழகக் கல்வி இப்பொழுது இந்தியாவில் சமூகம் மற்றும் அரசியல் விமர்சனத்தை நோக்கியுள்ளது. பாட

டாலமியும் பாண்டியர்களின் நகரத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள்.

மதுரை மாநகரம் சங்க காலத்தில் புகழின் உச்சிக்கே சென்றது. இந்தக் கால கட்டத்தில் பல நூற்றாண்டுகளாக மதுரை மாநகரம் கல்வி, கலாச்சாரம், நாகரிகத்தின் பெருமையாக விளங்கியது. சங்கம் என அழைக்கப்படும் தமிழ்க் கழகத்தைச் சேர்ந்த பிரபல கவிஞர்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்க சேவையைப் புரிந்திருக்கிறார்கள்.

பத்துப்பாட்டுகளில் மிக நீளமான கவிதையாகிய மதுரைக் காஞ்சியில் கி.பி. ஆரம்ப நூற்றாண்டுகளில் மதுரையைப் பற்றிய அழகிய வர்ணனைகள் காணப் படுகின்றன. அக்காலத்தில் நகரங்களைத் திட்டமிட்டு அமைப்பவர்களுடைய கனவாக மதுரை விளங்கியது. அமைதியான, வளமான கலாச்சாரம், கல்வி மற்றும் பக்தி நிறைந்த சூழலில் இங்கு மக்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்தினார்கள். கிறிஸ்து பிறப்பதற்கு முன்பிருந்தே மதுரை மாநகரம், சுமேரியா, பாபிலோனியா, எகிப்து, அரேபியா, கிரேக்க ரோம நாடுகளுடன் வியாபார, வணிக தொடர்புகளைக் கொண்டிருந்தது. இந்நகரின் கலை, கட்டடக் கலைகளின் கம்பீரமும், எழிலும் மக்களின் உயர்ந்த கலாச்சாரமும் மதுரைக்குத் ''தென் இந்தியாவின் ஏதென்ஸ்'' என்ற பட்டத்தைப் பெற்றுத் தந்தன. இலக்கியங்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க சாதனைகளைக் கொண்டு மதுரை ஒரு பெரிய கல்வி மையமாக விளங்கியது என அறியலாம். இப்பொழுது மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் அகில உலகக் கல்வி மையமாக உருவாகிப் பழமையும், புதுமையும் அருமையாக அமையப்பெற்று பண்டைய பெருமையை மீண்டும் அமைத்துக் காட்டியுள்ளது என்று நான் சொன்னால் அது மிகையாகாது என்று நான் நம்புகிறேன்.

காமராஜ் என்றபெயரேஒரு மாபெரும் சக்தி. வாழும்போதே வரலாறான திரு. காமராஜ் அவர்கள் கூர்ந்த அரசியல் மதிநுட்பம், எதார்த்தம் ஆகியவற்றின் அடிப்படையில் சமுதாயத்தின் விதியை நிர்ணயித்த தலைவர்களுக்கு உதாரணமாக விளங்கக்கூடியவர். அவர் உண்மையிலேயே ஒரு மக்கள் தலைவர். மக்களுக்கு என்ன தேவை என்பதை உணர்ந்தவர். மக்களின் தேவைகளையும் குறிக்கோள்களையும் பிரதிபலிக்கும் கொள்கைகளையும் வகுத்தவர். இம் மாநிலத்தின் கல்வி வளர்ச்சிக்காக மகத்தான தொண்டு புரிந்தவர். அனைத்து வளர்ச்சிக்கும் வேலை வாய்ப்புக்கும் திறவுகோலாக கல்வி விளங்குவதை அவர் உணர்ந்தார். எனவே, கல்வியின் பலன்கள் குறிப்பிட்ட ஒரு சில செல்வந்தர்களின் தனிச் சொத்தாக விளங்காமல் பரம ஏழைக்கும் கிடைக்க வேண்டுமென்று விரும்பினார். இன்று நம் மாநிலத்திலுள்ள இலட்சக்கணக்கான மக்களின் முன்னேற்றத்திற்குக் காமராஜரின் தீர்க்க தரிசனமே காரணம். இன்று தமிழகத்தில் படித்த, தொழில்நுட்ப வல்லுநர்கள் ஏராளமாக உள்ளனர் என்றால் அந்தப் பெருமை, 'இலவசக் கல்வியைத்' திட்டமிட்டு அமல்படுத்திய பெருந்தலைவர் காமராஜர் அவர்களைச் சாரும். எனினும் நமது மதிய சத்துணவுத் திட்டத்தின் மூலம் பரம ஏழைகளின் குழந்தைகளுக்கும் கல்வியைத் தந்த பெருமை புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையே சாரும். இந்த மதிய உணவுத் திட்டம் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு வேளை சத்துணவையாவது உறுதியாக அளித்து, ஏழைப் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப ஊக்குவிக்கின்றது.

நமது நாட்டில் உயர்கல்வி என்பது இப்போது முக்கியமான கால கட்டத்தில் இருக்கிறது. நம்மைப் பல பிரச்சினைகள் எதிர்கொண்டுள்ளன. பல கல்வி நிறுவனங்கள் பல்வேறு பிரச்சினைகளை நன்கு அலசி நல்ல பல யோசனைகளைக் கூறியிருக்கின்றன. ஆனால் அடுத்தடுத்து வரும் அரசுகள் இவற்றை அமல்படுத்துவதில் தாமதம் காட்டின. பல சமயங்களில் அந்த அரசுகள் அரைமனதுடன் பிரச்சினையை அணுகின. இதன் விளைவாக அவர்கள், இளைஞர்களின் வாழ்க்கையுடன் விளையாடிக் கொண்டு இருக்கிறார்கள். இப்போதுள்ள பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வு காண, இனியும் காலதாமதம் செய்தால், நமது எதிர்கால சமுதாயமே அழிந்து போகக்கூடும்.

நமது நாட்டில் சீரிய வாழ்விற்குச் சரியான கல்வி இன்றியமையாததாக காலகாலமாகக் கருதப்பட்டது. உயர்ப் பண்புகளைத் தேட முயற்சிக்கும்போது கல்வி முறையைப் பின்பற்றி திறமையுள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுடைய திறமைகளை வெளிப்படுத்தி மிகச் சிறந்தவைகளையே கற்பிக்க வேண்டும். ஒரு மாணவனிடத்தில் எதிர்பார்க்கப்படும் நன்னடத்தையையும் சிறந்த ஒழுக்க மேம்பாட்டினையும் இது வலியுறுத்துகின்றது. ஆன்மீக வளர்ச்சி பெற்று, வாழ்க்கையின் புனிதத்துவத்தின் மதிப்பையும் இயற்கையின் பெருமைகளையும் உணர்ந்து, தற்பெருமையைக் குறைத்து, தன்னிடம் உள்ள சிறந்தவைகளை சமுதாயத்திற்கு வழங்கிடும் வகையில் மாணவர்களை உயர்த்துவது கல்வியின் குறிக்கோளாகும்.

ஆசிரியரும், மாணவரும் உண்மையைத் தேடும் பயணத்தை மேற்கொண்டு இருக்கிறார்கள் என்றே கருதப்படுகிறார்கள்.

இதைத்தான் பால்கல் என்ற அறிஞர், ''கல்வி என்பது வான வெளியில் உள்ள வட்டம் போன்றது. அது அமைப்பில் எவ்வளவு பெரியதாக உள்ளதோ அந்த அளவு அறியாதவற்றுடன் தொடர்புடையது'' என்று எழுதினார்.

கல்வியைப் பற்றியும் கற்பதைப் பற்றியும் தமிழக மக்கள் உண்மையிலேயே தன்னிகரற்ற பழக்க வழக்கங்களை மேற்கொண்டுள்ளனர். அவர்களைப் பொறுத்த வரையில் கல்வியின் மதிப்பு வாழ்க்கையின் மதிப்புடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. ஒரு மனிதன் சரியாக வாழ, கல்வி உதவவில்லையென்றால், அது உபயோகமான கல்வியாகக் கருதப்படமாட்டாது. 2000 ஆண்டுகளுக்கு முன்பு திருவள்ளுவர், அன்றைய தமிழர்கள் நடைமுறையில் கொண்டிருந்த தவைகளை ஒட்டி, கல்வியைப் புற்றி கூறிய கருத்துக்கள் இன்றும் பொருந்தி வருகின்றன.

திருவள்ளுவர் கூறினார்:

''கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்கு தக''

— கற்க வேண்டியவற்றை ஐயந்திரிபறக் கற்க. கற்றதோடு நின்று விடாமல், கற்ற நூல்கள் காட்டிய வழியில் செல்க.

கல்வி அறிவைத் தருகிறது. எவ்வளவு ஆழமாக ஒருவன் கற்கிறானோ அவ்வளவு ஆழமுடையதாக அவனது அறிவு விளங்குகிறது. இந்த அறிவு, சமுதாயத்தின் நன்மைக்காகவேயல்லாமல், தனி மனிதன் தன்னை வளப்படுத்திக் கொள்வதற்காக அல்ல!

''தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு''

— திருவள்ளுவ முனிவர் எண், எழுத்து என்னும் இரண்டைப் பற்றியும் கூறினார். இரண்டும் கற்பதற்குத் தேவையானவை என்று கருதினார். கல்வி பகுத்தறிவை வளர்க்கிறது. பகுத்தறிவு அல்லவை நீக்கவும், நல்லதைச் சேர்க்கவும் உதவுகிறது. அத்தகைய கல்வி உலகத்துச் செல்வங்களைக் காட்டிலும் உயர்ந்தது. ஏனெனில் செல்வம் அழியும். கல்வி அழிவதில்லை.

''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.''

கல்வி இவ்வாறு லட்சியப் பார்வையில் வடிவமைக்கப்பட்டு வாழ்க்கையின் தேவைகளைச் சந்திக்கும் வகையில் இணைக்கப்பட்டது. பண்டைய தமிழர்கள் அடிப்படைக் கல்விக்கும், புலமையை வழங்கும் கல்விக்கும் உள்ள வேறுபாட்டை அறிந்திருந்தார்கள். பகுத்தறிவுத் திறனை வளர்ப்பது, முறையல்லாத நட்பை விலக்குவது, வாழ்க்கையின் சிறந்த பண்புகளைப் போற்றுவது, புரிந்து கொள்வது, சகமனிதர்களிடம் அன்பு காட்டுவது ஆகியவற்றிற்கு மாணவனை ஆயத்தப்படுத்துவதே கல்வி முறையின் இறுதிக் குறிக்கோளாகக் கருதப்பட்டது.

ஒரு இலட்சியச் சமுதாயத்தை நிறுவுவதற்கு உரிய சாதனமாகவே பொதுக் கல்வியைத் திருவள்ளுவர் கருதினார். தமிழ்க் கல்வியில் உள்ள சிறந்த மரபுகளின் ஒட்டு மொத்த வடிவமே திருக்குறள் ஆகும். 1857-ஆம் ஆண்டு இந்தியாவில் முதல் பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட்டபோது, ஆங்கிலக் கல்வியை மாதிரியாகக் கொண்டு தற்போதைய உயர்தரக் கல்வி முறை இந்தியாவில் தோன்றியது.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில மாணவர்களுக்கு மட்டுமே முற்போக்குக் கல்வியின் பலன்கள் கிடைப்பது, பல்கலைக் கல்வியின் முக்கியக் குறிக்கோளாகக் கருதப்பட்டது. அதனால் ஒரு சில நபர்கள் கலைகளிலும் பழம்பெரும் இலக்கியங்களிலும் நன்கு தேர்ச்சி பெற்று, சமுதாயத்தின் தலைமை ஏற்கவும், நாட்டின் நிர்வாக இயந்திரத்தில் பங்கேற்கவும் பயிற்சியளிக்கப்பட்டார்கள்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் செ. ஜெயலலிதா அவர்கள், மதுரை காமராஜ் பல்கலைக்கழகக் கட்டட நிதியாக, தமது சொந்தப் பணத்திலிருந்து ரூ.5 இலட்சத்தை, காசோலையாக, பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களிடம் வழங்கினார்.

உபநிஷத்துக்களில் ஒரு கதை உண்டு. இதன்படி சநத்குமாரனை நாரதர் அணுகி தனக்குக் கற்றுக் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார். அவர் ஏற்கெனவே கற்றுக் கொண்டது என்ன என்பதை அறிய சநத்குமாரன் விரும்பினார்.

அதற்கு நாரதர் விஞ்ஞானம், இரசாயனம், வானவியல், ஜோதிடம் இயற்பியல் மற்றும் பல பாடங்களைக் கற்று இருப்பதாகக் கூறினார்.

இதற்கு சநத்குமார் பதில் கூறும் போது, அவர் எதையுமே கற்றுக் கொள்ளவில்லை என்றார். அதாவது கல்வியின் நோக்கமே, தெரியாததை அறிந்து கொள்வதுதான் என்பதை உணர்த்தும் எண்ணத்தில் அவ்வாறு கூறினார்.

முறை வைப்பிலும் வலியுறுத்தும் பண்பிலும் செயல்படும் முறையிலும் முறையாகப் பிரதிபலிக்கும் வண்ணம் தேசிய எதார்த்தங்களைப் பல்கலைக்கழகங்கள் விரைவாகவோ தாமதமாகவோ உணர்ந்து கொண்டுதான் தீரவேண்டும்.

உதாரணத்திற்கு, படித்தவர்களிடையே உள்ள உண்மையான பிரச்சினையான வேலையின்மையை எடுத்துக் கொள்வோம். இந்தப் பிரச்சினை நம்மால் உருவாக்கப்பட்ட பிரச்சினை என்பது தெளிவாகத் தெரிகிறது. பல்கலைக்கழகப் பட்டம், வேலைவாய்ப்பைப் பெறும் வழி என்ற வகையில் பெறப்படுகிறது. ஆனால், வேலைவாய்ப்பு என்பது அப்படி நடைமுறையில் இல்லை. மாணவர்கள் பல்கலைக்கழக வாயிலை விட்டு வரும்வரை அதை உணருவதில்லை. இளைஞர்கள் அரசாங்கத்திலோ அல்லது தனியார் துறையிலோ வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் பல்கலைக்கழகப் பட்டங்களைப் பெற முந்துகிறார்கள். அரசாங்க வேலைகள் பல்கலைக்கழகங்கள் உற்பத்தி செய்பவர்களுக்குச் சிறிய அளவிலேயே கிடைக்கின்றன. தனியார் துறைகள் பணிக்குத் தேர்ந்தெடுக்க ஏற்றுக் கொள்ளும் முறைகள், வெறும் பட்டங்களை மட்டும் பெற்றுள்ள பெரும்பான்மை மாணவர்களுக்குப் பலனளிப்பதில்லை. இதன் விளைவாக, வேலைவாய்ப்பில்லாத படித்தவர்களின் எண்ணிக்கை எச்சரிக்கும் அளவு உயர்கிறது. மாணவர்கள் விரக்தியடைகிறார்கள். தேசிய முயற்சி வீணாகிறது. இன்று தமிழ்நாட்டிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள முப்பத்து எட்டு இலட்சம் இளைஞர்களில் 22 இலட்சம் பேர் படித்தவர்கள். ஒவ்வொரு ஆண்டும் 5 இலட்சம் படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்கிறார்கள். அவர்களில் 1.41 இலட்சம் இளைஞர்கள் புகுமுக வகுப்பு அல்லது அதற்கு இணையான படிப்பும், ஒரு இலட்சம் இளைஞர்கள் பட்டப் படிப்பும், மேற்பட்ட படிப்பும் படித்தவர்கள். வேலைவாய்ப்பு அலுவலகங்களிலுள்ள பதிவேடுகள் உண்மையிலேயே நிலைமையின் முழு அபாயத்தைப் பிரதிபலிக்கவில்லை. தொழில் நுட்பத் தகுதியுடைய இளைஞர்களிடையே உள்ள வேலையில்லாப் பிரச்சினை கடுமையாக உள்ளது. நமது நாட்டில் நடைபெறும் பொருளாதார வளர்ச்சியின் தரத்தையும் பிரதிபலிப்பதாக உள்ளது. மற்ற மாநிலங்களிலும் ஏறக்குறைய இந்நிலைமைதான் என நிச்சயமாகக் கூறுவேன். இது எப்படிப்பட்ட கல்வியைப் பல்கலைக்கழகங்கள் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படைக் கேள்வியை எழுப்புகிறது. இதனால் வளங்கள் இழக்கப்படாமல் வேலைவாய்ப்பிற்கான அணுகுமுறைகள் எப்போதும் கிடைக்கும் வண்ணம் இருப்பின், இளைஞர்கள் வாழ்க்கை நீரோட்டத்தில், நம்பிக்கையுடனும், சிறப்புடனும் தடைபடாமல் நுழைய முடியும்.

எனவே, இன்று இந்தியாவில் நாம் உருவாக்கிவரும் சமுதாயம் அளிக்கும் என்னற்ற வேலைகளுக்குப் பட்டம் ஒரு கட்டாயத் தேவையில்லை. உயர்ந்த படிப்போ, தொழில்நுட்பத் தகுதிகளோ தேவையில்லை. நாட்டிலுள்ள வேலைவாய்ப்பு நிலையைத் தொடர்புபடுத்தி பல்கலைக்கழகக் கல்வியைக் கவனித்து, இது சம்பந்தமாகப் பல்கலைக் கழகங்களின் இலக்கினைத் தெளிவாக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று நான் நினைக்கிறேன். பல்கலைக்கழகங்கள் வேலைகள் உருவாக்கும் தொழிற்சாலை மாதிரி இருப்பது தவறு என்று நான் நினைக்கிறேன். நம்முடைய நாடு அளிக்கும் வேலைகளுக்கு நம்முடைய இளைஞர்களைத் தகுதியாக்குவதற்கு, பல்வேறு வகையான நிறுவனங்களின் செயல்பாடுகள் கண்டிப்பாக இருக்க வேண்டும். இந்த உண்மை ஆரம்பத்திலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டு, சீர்திருத்தங்கள் தொடக்கப்பள்ளி அளவிலேயே தொடங்க வேண்டும்.

கோத்தாரி ஆணைக்குழுவும், இந்திய அரசின் புதிய கல்விக் கொள்கையும், இது தொடர்பாகச் சந்தேகமில்லாமல் பல பரிந்துரைகளைச் செய்துள்ளன. ஆனால், மேற்கொண்டு தொழில்நுட்பப் பயிற்சியும், மற்ற நிறுவனங்களின் தேவைகளையும் சார்ந்திருக்கின்ற வேலைவாய்ப்புகளுக்கான பட்டதாரி இளைஞர்களைத்தான் பல்கலைக் கழகங்கள் உற்பத்தி செய்கின்றன. சமுதாயம் பெருமிதப் பட்டுக்கொள்வதற்கு மட்டும் அதிகப் பட்டதாரிகளை உருவாக்கும் பொறுப்பினைப் பல்கலைக்கழகங்களின்மீது சுமத்தக் கூடாது என்பதே விடையாக இருக்கும் என நான் கருதுகிறேன். படித்தவர்களை அதிக எண்ணிக்கையில் வெளிக்கொணரும் அளவிலும் இருக்கக்கூடாது. வேகமாக மாறிவரும் சமுதாயத்தில் வேலைவாய்ப்பின் தேவைகள் பல்கலைக் கழகங்களைத் தவிர, தகுந்த நிறுவனங்களினால் சமாளிக்கப்பட வேண்டும்.

மேற்படிப்பு என்பது வேலைவாய்ப்பில் தன் பங்கினைச் செலுத்துகிறது. ஆனால், பல்வேறு மட்டங்களில் எண்ணிக்கையில் எந்தத் தாக்கத்தையும் உண்டாக்குவதில்லை. அது மறைமுகமாக, பலன்களை உறுதி செய்கிறது. மேலும், நடைமுறையில் வேலைவாய்ப்பின்மைப் பிரச்சினை படித்தவர்களிடையே மிகக் கடுமையாக உள்ளதைக் காண்கிறோம். படித்த இளைஞர்கள் தாங்கள் பெற விரும்புகின்ற வேலை பெற இயலாமையால் விரக்தி அடைகின்றார்கள். படித்த இளைஞர்கள் ஒரு குறிப்பிட்ட வகையான வேலைகளைப் பார்க்க விரும்புகிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் அரசாங்கத்திலேயோ அல்லது வியாபாரத்திலேயோ ஈடுபட விரும்புகிறார்கள். அவர்கள் பல்கலைக்கழகங்களில் பட்டத்தை நாடுவது, அவர்கள் படிக்கும் பாடங்களிலும் ஆர்வத்தின் காரணமாக அன்று. பட்டப்படிப்பு என்பது அரசாங்கத்திலோ, வியாபாரத்திலோ, வங்கியிலோ வேலைக்காக விண்ணப்பிக்கும்போது ஒரு தேவையான தகுதியாகும். ஆனால், பல்கலைக்கழகங்களிலிருந்து வெளிவரும் பட்டதாரிகளை ஏற்றுக் கொள்ள இந்தப் பகுதிகளில் போதுமான வேலைகள் இல்லை. எனவே, பல்கலைக்கழகக் கல்வியின் வெளிப்பார்வையில் ஒரு தீவிர மாற்றம் வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

பல்கலைக்கழகங்களின் முக்கிய கவனம், குறிப்பாகப் பல்கலைக்கழகங்களின் எல்லைக்குள் வருகின்ற தொழில் நுட்ப நிறுவனங்களின் முக்கிய கவனம் மாணவர்களைச் சொந்தமாகப் புதிய முயற்சிகளை மேற்கொள்ள ஆயத்தப் படுத்த வேண்டும் என நான் நினைக்கிறேன்.

> பழக்கமும் குருட்டுப் மூடநம்பிக்கையும், சமூகத்தின் முதல் பகைகள்.
>
> - தந்தை பெரியார்

சுயவேலை, பலவகையில் அரிய அனுபவமாகவும், பலனளிக்கத்தக்க வகையிலும் இருக்கும். தனி நபரின் முழுத்திறமையும் பயன்படக்கூடிய சிறு தொழில்கள் மூலம் சுயவேலைவாய்ப்பினைப் பெறலாம்.

இந்தியா வேகமாகத் தொழில்மயமாகி வருவது புதிய வேலைவாய்ப்புகள் பெருகும்வண்ணம் அமைந்து வருகிறது. புதிய வேலைவாய்ப்புகளுக்கான வழிகளை ஆய்ந்து மாணவர்கள் அவைகளுக்குத் தங்களைத் தகுதியானவர்களாக்கிக் கொள்ள உதவுவது பல்கலைக் கழகங்களின் பொறுப்பாகும். மேல்படிப்பு அமைப்பு நம்முடைய பட்டதாரிகளுக்குத் தன்னம்பிக்கை அளிக்க உதவ முடியும். சரியான அளவு தன்னம்பிக்கையையும், ஒழுக்க உணர்வையும் உருவாக்கி முக்கியமான ஒழுங்கான முன்னேற்றத்தைத் தேசத்திற்கு அளிக்க முடியும். இது தொடர்பாக, தற்போது நடத்தப்பெறும் பல்கலைக்கழகக் கல்வியின் செயல்முறைகள் விமரிசனத்திற்கு உள்ளாக வேண்டியுள்ளது.

புதிய தகவல்களையும் அது தொடர்பான விளக்கங்களையும் கொண்டதாக, பாடத் திட்டங்களும் அதனைப் போதிக்கும் முறைகளும் கவனமாக மதிப்பிடப்பட்டு மறுவடிவம் அளிக்கப்பட வேண்டும்.

போதிக்கும் துறைகள் மேல்படிப்பு முறையில் முக்கியப் பங்கினை வகிக்க வேண்டும். எல்லாப் படிப்பும் ஆசிரியருக்கும், சொல்லிக் கொடுப்பவருக்கும் இடையே அமையும் பேச்சுக்கள்தான். ஆசிரியரின் நோக்கம் மாணவர்களின் திறமையை ஊக்கப்படுத்தி, அவர்களிடையே பாடங்களின் மதிப்புமிக்க உணர்வுகளை ஊட்டுவதுதான். தகவல்களின் தொகுப்பாக இருப்பது இறுதியாக எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. அதைவிட ஆசிரியர்களின் தனித்தன்மையும், தூண்டும் உணர்வும்தான் மாணவர்களின் மனதில் செயலாக்கத்தை உண்டாக்குகின்றன. உணர்ந்த எண்ணங்களும், அறிவுத் திறனும்தான் போதிக்கும் முறைக்கு ஒரு முக்கியத் தேவையாகும் பிரச்சினை. போதுமான ஊதியம் வழங்குவதோ அல்லது பரிசுகள் பெறுவதோ அல்ல. தகுதியானவர்கள் போதுமான அளவு கிடைப்பதுதான் பிரச்சினை. அவர்கள் ஆசிரியப் பணியை விரும்பத்தக்க உழைப்பாகவும், சமுதாயத் தொண்டாகவும், நாட்டுப் பற்றாகவும், ஒரு அறிவுபூர்வ முயற்சியாகவும் கொண்டிருப்பின் மாணவர்களும், ஆசிரியர்களும், தாங்கள் விரிவாகக் கற்றுக் கொள்ள உதவும்.

தமிழக அரசு மேல்படிப்புப் பற்றிய விஷயங்களில் முழுமையான அக்கறை காட்டி வருகிறது என்பதை நான் சொல்லித்தானாகவேண்டும். மாநில முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு உயர் கல்விக்கான மாநிலக்குழு அமைக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடங்கி வைக்கும்போது, ''மற்ற நாடுகளில் காணப்படும் அற்புத வளர்ச்சியுடன் இணைந்து நமது கல்வி முறையின் இலக்குகள் தொடர அவசியமான தேவைகள் உள்ளன. அறிவியல் நாட்டம், தகவல்கள், மேல்தகவல்கள் பெறுவதில் கவனம் செலுத்த வேண்டும். அப்படிச் செய்யின் புதிய கண்டுபிடிப்புகளும் முன்னேற்றங்களும் மனித இனத்தின் யதார்த்த நலனில் நேரடியாகப் பங்கு பெற முடியும்''.

ஆசிரியர்களின் திறமைகளை உயர்த்தவும், மாணவர்களிடையே ஒழுக்க உணர்வுகளை விதைக்கவும், நமது சமுதாயத்தின் சமூக பொருளாதார மாற்றங்களில் குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்க ஆராய்ச்சியாளர்களை அழைக்க வேண்டிய தேவையை நான் வலியுறுத்தினேன். இந்தக் குழு சமீபத்தில்தான் செயல்படத் தொடங்கியுள்ளது.

உயர் கல்விக்கான நிறுவனங்களிடையே ஒத்துழைப்பை மேம்படுத்தவும், பாடத்திட்ட வளர்ச்சியில் புதுமைகளை வளர்த்து உற்சாகமூட்டவும், ஆசிரியர்களுக்கு உயர்பயிற்சிகள் வழங்கவும், திறமைகள் இருக்குமிடங்களை இனங்கண்டு உற்சாகமூட்டி, உலகத்தில் சிறந்த வைகளைப் பெற்று கல்வியின் உயர்ந்த தரங்களை வளர்க்க உதவவும் இந்தக்குழு ஒரு சிறந்த பங்கை வகிக்கும் என நாம் நம்புகிறேன்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் கற்பிப்பதிலும், கற்றுக் கொள்வதிலும் புகழ்பெற்ற மரபினை நிலைநிறுத்தியுள்ளதை நான் அறிவேன். புகழ்மிக்க ஆசிரியர்களையும், மாணவர்களையும் அது உருவாக்கியுள்ளது. அவர்கள் உலகமெங்கும் தாங்கள் சிறப்பு பெற்ற துறையில் திறம்படச் செயலாற்றியுள்ளார்கள். தமது சமுதாயத்திற்கு இன்றியமையாத அடிப்படை மதிப்புகளின் முக்கியத்துவத்தைத் தொடர்ந்து, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் உறுதி செய்து வருகிறது என்பதை நான் அறிவேன். தெளிவாகப் புரிந்து கொள்ளாமல் அடிப்படை மதிப்புகளை ஏற்றுக் கொள்ளாமல் எவ்வளவுதான் முன்னேறிய கல்வி என்றாலும், நோக்கம் இழந்து வறண்டுவிடும்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகச் சிறப்புப் பட்டமளிப்பு விழாவில் புத்தகப் போர்க்களத்தில் நீங்கள் அடைந்த புகழையும், வெற்றியையும் பாராட்டுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இப்பொழுது மிகப்பெரிய போர்க்களம் உங்கள் முன்னே இருக்கிறது. வாழ்க்கை என்னும் போர்க்களம். நீங்கள் நுழையவுள்ள உலகம் சவால்களும், துன்பங்களும் நிறைந்தது. உங்களைச் சுற்றி சாதாரணத் தரங்களை அடைவதற்கான ஓயாத ஓட்டத்தைக் காண்பீர்கள். வித்தியாசப்பட்ட மனித உணர்ச்சிகள் மற்றும் தவறான கருத்துக்களின் தாக்கத்தை நீங்கள் உணர்வீர்கள். உங்களைக் கலக்கமுறச் செய்யும் புதிய பிரச்சினைகளை நீங்கள் சந்திக்க வேண்டியிருக்கும். எப்படி இருப்பினும் சோர்வடையத் தேவையில்லை. உங்களது மாணவப் பருவத்தில் நீங்கள் பெற்றுள்ள புரிந்து கொள்ளும் சக்தியும், அறிவுத் திறனும் நம்பிக்கையும், துணிவும் கொண்டு எதிர்வரும் வாழ்க்கைப் போரைச் சந்திக்க உதவும். இப்பொழுது உலகத்தைச் சந்தித்து வாழ்க்கையெனும் போர்க்களத்தில் வெற்றிகரமாகப் போரிடலாம். என்னுடைய சிறிய அறிவுரை,

''புதிய கருத்துக்களை வரவேற்ப வராக இருங்கள்;

> எழுத்தறிவு இல்லாமலே, எல்லாச் செயல்களையும் சாதிப்பது என்பது முடியாது என்று நான் உறுதியாக நம்புகிறேன். கல்வி ஒருவனுடைய அறிவைப் பெருக்கும், கூர்மையாக்கும், நற்செயல்களைச் செய்யத் தூண்டும்.

உங்களையே நீங்கள் சார்ந்திருக்கக் கற்றுக் கொள்ளுங்கள்''

இப்படித்தான் மிகப்பெரிய தலைவர்களான பெருந்தலைவர் காமராஜர் மற்றும் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். ஆகியோர் வாழ்க்கையில் முன்னுக்கு வந்துள்ளார்கள்.

மேதகு ஆளுநர் அவர்கள், என்னை அழைத்து இந்தச் சிறப்புப் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ளச் செய்ததற்கு, எனது நன்றியை மீண்டும் காணிக்கையாக்குகிறேன்.

இப்பொழுது ஆங்கிலப் புலவர் திரு ஹெச்.டபிள்யூ. லாங்பெலோ அவர்களின் பாடலிலிருந்து ஒரு மேற்கோள் காட்டி உரையை நிறைவு செய்கிறேன்.

''உலகமெனும் விரிந்த போர்க்களப்
பாசறையில்
வாழ்க்கையின் திறந்த வெளியில்
ஊமைபோல் இருக்காதே! ஓடுகின்ற
மந்தையாகாதே!
போராட்டத்தில் கதாநாயகனாக இரு!
எவ்வளவு இனிமையாக இருப்பினும்
எதிர்காலத்தை நம்பாதே!
இறந்தகாலம் இறந்ததைப் புதைக்கட்டும்.
மனதை உன்னுள் இருத்தி கடவுளை
நினைத்து
இன்றே இன்றைய தினமே செயல்படு!
பெரிய மனிதர்களின் வாழ்க்கை நமக்கு
நினைவூட்டுகிறது.
நாம் நம்முடைய வாழ்க்கையை
உயர்வாக்க முடியும்
நாம் வெளியேறும்போது, நமக்குப்
பின்னர் விட்டுச் செல்வது
நமது காலத்திய மண்ணில் நம்
அடிச்சுவடுகள்!

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழாவின் மகிழ்ச்சியான இந்நேரத்தில், வெள்ளிவிழா நிறைவு பெறுவதையொட்டி, இதன் நினைவாக, ஒரு புதிய கட்டடம், ஒரு புதிய மாநாட்டுக் கூடம் கட்டப் பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளதாக நான் அறிகிறேன்.

பல்கலைக்கழகக் கட்டட நிதிக்காக, அதனுடைய புதிய வெள்ளிவிழா மாநாட்டுக் கூடத்துக்காக என்னுடைய தனிப்பட்ட கொடையாக என்னுடைய பங்காக ரூபாய் ஐந்து இலட்சம் அளிப்பதை அறிவிப்பதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். மதுரை-காமராஜர் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் குத்தாலிங்கம் அவர்களை, அதற்கான காசோலையைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை நகரில் குடிநீர் விநியோகம்: மாண்புமிகு முதல்வர் ஆலோசனை

சென்னை நகரில் தற்போது நிலவி வரும் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு குறித்தும், இதை நிவர்த்தி செய்ய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்தும் 23.6.93 அன்று செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் விரிவாக ஆலோசனை நடத்தினார்.

தற்போது சென்னையில் குழாய் மூலமாக இரண்டு நாட்களுக்கு ஒருமுறை 35 மில்லியன் காலன் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. இதுதவிர, 276 லாரிகள் மற்றும் 285 டிராக்டர்கள் மூலமாகவும் நாள்தோறும் சுமார் 9 மில்லியன் காலன் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது, நகரின் தெருக்களில் 4,795 இரும்புத் தொட்டிகள் வைக்கப்பட்டு அதன் மூலம் தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது.

நெய்வேலியிலிருந்து தற்போது நாள்தோறும் 225 லாரிகள் மூலமாகச் சென்னைக்கு 25 இலட்சம் லிட்டர் தண்ணீர் கொண்டுவரப்படுகிறது. இந்த நீரின் அளவை அதிகரிப்பதற்காக, அடுத்த ஒரு வாரத்திற்குள் லாரிகளின் எண்ணிக்கையை 500 ஆக உயத்தும்படி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

நகரில் தற்போதுள்ள குடிநீர்த் தொட்டிகளின் எண்ணிக்கையைக் குறுகிய காலத்திற்குள் 7,000 ஆக உயர்த்தும்படியாகவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதுதவிர, நகரின் தெருக்களில் தண்ணீர் வழங்கிவரும் டிராக்டர்களின் எண்ணிக்கையை விரைவில் இரட்டிப்பாக்குமாறும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணைபிறப்பித்தார்.

மேலும், மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவின்படி தற்போது லாரிகள் மற்றும் டிராக்டர்களில் தண்ணீர் நிரப்பும் இடங்களின் எண்ணிக்கையை உடனடியாக உயர்த்துவதற்கு, சென்னைக் குடிநீர் வாரியம் உடனடி நடவடிக்கையை மேற்கொள்ளும்.

பொதுமக்களிடமிருந்து தண்ணீர் ஒழுங்கான நேரத்தில், போதிய அளவில் வருவதில்லை என்ற புகார்கள் வருவதைக் குறிப்பிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், இது போன்ற புகார்கள் எழாவண்ணம் கண்காணிப்புப் பணியைத் தீவிரப் படுத்த வேண்டும் என்றும் ஆணையிட்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடத்திய ஆய்வில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர், மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர், தலைமைச் செயலர் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கிராமப்புற்ங்களிலும், நகர்ப்புறங்களிலும் வறுமை நீங்கிடவும், வேலைவாய்ப்புகள் பெருகிடவும் தொடர்ந்து பாடுபடுவோம்!

— மாண்புமிகு முதல்வர் உரை —

''கிராமங்களில் தான் இந்தியா வாழ்ந்துகொண்டு இருக்கிறது'' என்று, மகாத்மா காந்தி அவர்கள் கூறியது, முற்றிலும் உண்மையே! கிராமங்கள்தான் நமது நாட்டின் உயிர்நாடி. கிராமங்களின் பொருளாதாரச் சூழ்நிலையும், சுகாதாரச் சூழ்நிலையும் மேம்படும்போது தான், நமது நாடு முழுமையான வளர்ச்சி அடைந்ததாக, நாம் பெருமைப்பட முடியும். அந்த வகையில், எனது தலைமையிலான இந்த அரசு, கிராம மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காக, பல நல்ல திட்டங்களைத் தீட்டி, முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது.

கிராமப் பொருளாதாரத்தில் மேம்பாட்டிற்கு, அடிப்படையானவைகளுள், கால்நடைச் செல்வமும் ஒன்று; எனவே, அந்தக் கால்நடைச் செல்வங்களின் உற்பத்திப் பெருக்க இன உயர்வு, நவீன முறைச் சிகிச்சை, ஊட்டமுள்ள கால்நடைத் தீவனங்கள், கால்நடைப் பராமரிப்பு போன்ற பல துறைகளில், இந்த அரசு தனிக் கவனம் செலுத்தி வருகின்றது.

தமிழக அரசால் நடத்தப்பட்டு வரும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம், 1903-ஆம் ஆண்டு, ஒரு சாதாரண கால்நடை மருத்துவக் கல்லூரியாக, சென்னையில் தோன்றியது. அன்று விதைக்கப்பட்ட இந்த விதை, இன்று பல விழுதுகளைக் கொண்ட, பெரிய ஆலமரமாக வளர்ந்துள்ளது. காலத்தின் தேவைக்கு ஏற்ப, மக்களின் சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதால், ஒரு சாதாரணக் கல்லூரி, இன்று ஒரு பெரிய பல்கலைக் கழகமாக உருவெடுத்துள்ளது.

சேலம் நாமக்கல் பகுதியில், கோழிப் பண்ணைகள் தொடங்கப்பட்டவுடன், அந்தப் பகுதி மக்களின் பொருளாதார நிலையை, உயர்த்த வேண்டும் என்ற எண்ணத்துடன், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், 1985-ஆம் ஆண்டு நாமக்கல் நகரில், ஒரு 'கால்நடை மருத்துவக் கல்லூரியை' நிறுவிட ஆணையிட்டார்.

கிராமப்புற மக்களின் பொருளாதார நிலையை உயர்த்தும் பணியில், கால்நடை மருத்துவக் கல்லூரியின் பங்கை, நன்கு உணர்ந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், 'கால்நடை மருத்துவம்', மற்றும் கால்நடை மருத்துவ அறிவியலுக்கு' என, ஒரு தனிப் பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும், என்ற கருத்தினை வெளியிட்டார்கள். அந்தச் சீரிய சிந்தனையின் செயல் வடிவம் தான் இன்றைய கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம். இந்தப் பல்கலைக் கழகம், இந்தியத் துணைக் கண்டத்தில் அமைந்த, முதலாவது கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் என்பதோடு, உலகிலேயே ஆறாவது கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம், என்ற பெருமையும் பெற்றுள்ளது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க, இந்தப் பல்கலைக் கழகத்தின் நிர்வாகக் கட்டடங்களுக்கு, இன்று அடிக்கல் நாட்டியதில், நான் பெருமிதமும் பெருமகிழ்ச்சியும் அடைகிறேன்.

இந்தியாவில் ஆண்டுதோறும், கால்நடைகள் மூலம் கிடைக்கப் பெறும் பால், இறைச்சி, முட்டை மற்றும் தொழு உரம் ஆகியவற்றின் மதிப்பு, 45,000 கோடி ரூபாய் என்பதை அறியும்போது, இந்தியாவின் பொருளாதாரத்தில் கால்நடைகளின் பங்கு, எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது தெளிவாகிறது. நமது தமிழ்நாட்டில் மட்டும், ஆண்டுதோறும் 361 கோடி லிட்டர் பாலும், 37,000 டன் இறைச்சியும், 247 கோடி முட்டைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால், நம் நாட்டில் உள்ள கால்நடைகள் மூலம், நமக்குக் கிடைக்கும் உணவுப் பொருட்கள், நமக்குப் போதுமானவையாக உள்ளதா என்றால், 'இல்லை' என்று தான் சொல்ல வேண்டியுள்ளது.

புரதப் பற்றாக்குறை நீங்கி, தன் விறைவு அடையவேண்டும் என்கிற

தமிழகத்தைச் சேர்ந்த மூன்று மருத்துவ நிபுணர்களுக்கு விருது!

இந்திய மருத்துவக் கழகம் (Medical Council of India) ஆண்டாண்டுதோறும் சிறந்த மருத்துவர்களுக்கு விருது வழங்கிச் சிறப்பித்து வருகின்றது.

1992-ஆம் ஆண்டுக்கான விருதுகள் தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று மருத்து

டாக்டர் ஜே.ஜி. கண்ணப்பன்

வர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. அரசு பல் மருத்துவக் கல்லூரியின் முன்னாள் முதல்வர், டாக்டர் ஜே.ஜி. கண்ணப்பன் அவர்களுக்கு "HARI OM ASHRAM ALEMBIC" ஆராய்ச்சி விருது அவரது சிறந்த ஆராய்ச்சிக்காக அளிக்கப்

டாக்டர் ஏ.என். சந்திரசேகரன்

பட்டுள்ளது. இது, ஒரு சான்றிதழும், தங்கப் பதக்கமும் மற்றும் பத்தாயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் கொண்டது. பேராசிரியர் டாக்டர் ஜே.ஜி. கண்ணப்பன் அவர்களுக்கு, இந்திய மருத்துவக் கழகம் அவரது தொண்டினைப் பாராட்டி 1982-ஆம் ஆண்டு டாக்டர் பி.சி. ராய் தேசிய விருதினை வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு மருத்துவக் கல்லூரியில் பணிபுரியும் மூட்டுத் தசை இணைப்பிணி நோய் நிபுணர் பேராசிரியர் டாக்டர் ஏ.என். சந்திரசேகரன், அவர்களுக்கு, இந்திய மருத்துவக் கழகம் அத்துறையின் சிறந்த வளர்ச்சிக்காக டாக்டர் பி.சி. ராய் தேசிய விருதினை அளிக்கிறது.

86 வயது முதிர்ந்த டாக்டர் சி.எஸ். ராமன் அவர்களுக்கும் டாக்டர் பி.சி. ராய் விருது இந்திய மருத்துவக் கழகம் அளிக்கிறது. டாக்டர் சி.எஸ். ராமன் அவர்கள் தமிழகத்தின் பல் மருத்துவத் துறையின் தந்தை எனப் போற்றப் படுகிறார்.

டாக்டர் சி.எஸ். ராமன்

மேற்கண்ட இரு மருத்துவர்களுக்கும் சான்றிதழும், தங்கப்பதக்கமும் 15 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் வழங்கப்படும்.

களின் கீழ், கால்நடைகளை வாங்க வும் - வளர்க்கவும், கடன் உதவியும் மானியமும் வழங்கி வருகிறது. இவர்களுக்கு உரிய தொழில் நுட்பத்தைக் கண்டறிந்து வழங்குகின்ற இந்தக் கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கும், கால்நடைப் பராமரிப்புத் துறையின் வளர்ச்சித் திட்டங்களுக்கும், இந்த அரசு, 1993-94-ஆம் ஆண்டில், 81.7 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது.

தமிழகத்தில் உள்ள செம்மறி ஆடுகளின் தரத்தை உயர்த்த, ஐரோப்பியப் பொருளாதாரச் சமூகத்தின் European Economic Community -யின் நிதி உதவியுடன், 13.5 கோடி ரூபாய் செலவில், ஒரு திட்டம் தீட்டப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

கிராமங்களின் பொருளாதாரத்தை உயர்த்த, பல்வேறான கால்நடை வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற, இந்த அரசு தயாராக உள்ளது. அத்தகைய திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்தும், திறன் மிக்க பட்டதாரிகளை, இந்தப் பல்கலைக் கழகம் உருவாக்கித் தர வேண்டும், என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டிலிருந்து இப்பல்கலைக் கழகத்தில், கால்நடை உயிர்நுட்பவியல், கால்நடைப் பராமரிப்புப் பொருளாதாரம், கால்நடைப் பராமரிப்பு விரிவாக்கம், கால்நடை அறிவியல் வணிக நிர்வாகம், வேளாண்காடு வளர்ப்பு ஆகியவற்றில், முதுநிலைப் பட்டப் படிப்புகள் தொடங்க இருப்பதையும், மாவட்டந்தோறும், பல்கலைக் கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள், அமைய இருப்பதையும் அறிந்து, நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

'எங்கும் எதிலும் மங்காத தமிழ்', என்று சங்கநாதம் முழங்கிக் கொண்டிருக்கும், தமிழக அரசின் கொள்கைக்கு, வலிமை சேர்க்கின்ற வகையில், இந்தப் பல்கலைக் கழகம், 'கால்நடை இயல் கலைச் சொற்களஞ்சியம்' (Glossary of Technical Words) ஒன்றினைத் தயாரித்து வெளியிட்டதற்கு, எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக் கழகம், உலகக் கல்வித் தரத்திற்கு ஒப்பான கல்வியை வழங்கி, திறன்வாய்ந்த பட்டதாரிகளை உருவாக்க, பாடத் திட்டங்களில், உரிய மாற்றங்களைத் தொடர்ந்து செய்திடவேண்டும்; கால்நடை உற்பத்தியில், மாறிவரும் சூழ்நிலைகளைச் சமாளிப்பதற்கு, ஏற்ற ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். ஆய்வு முடிவுகளைப் பல்கலைக் கழகத்திலிருந்து, வயல்வெளிகளுக்கு விரைவில் கொண்டு சேர்த்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் - வறுமை நீங்கிடவும், வேலை வாய்ப்புகள் பெருகிடவும், வளமை சேர்த்திடவும், மகிழ்ச்சி வளர்ந்திடவும், தொடர்ந்து பாடுபடுவோம் - என்று உறுதி கூறிக்கொள்கிறேன்.

திருநெல்வேலி- கட்டபொம்மன் மாவட்டம்

- ஒரு கண்ணோட்டம்

திருநெல்வேலி(கட்டபொம்மன்) மாவட்டம் 1790-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1-ஆம் நாள் உருவாக்கப்பட்டது. இந்த மாவட்டத்தின் மொத்தப்பரப்பளவு 6,838 சதுர கி.மீட்டர். இதன் மொத்த மக்கட் தொகை 24,93,189. இதில் ஆண்கள் 12,24,319 பேர். பெண்கள் 12,68,870. திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் படித்தவர்களின் எண்ணிக்கை 14,09,304. இது மொத்த மக்கட் தொகையில் 57 சதவிகிதம் ஆகும்.

இந்த மாவட்டத்தில் மூன்று வருவாய்க் கோட்டங்களும் (திருநேல்வேலி, சேரன்மகாதேவி, தென்காசி), 9 வட்டாட்சியர் அலுவலகங்களும் உள்ளன. அவை: திருநெல்வேலி, பாளையங்கோட்டை, சங்கரன்கோயில், தென்காசி, செங்கோட்டை, சிவகிரி, நாங்குநேரி, ராதாபுரம், அம்பாசமுத்திரம்.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் 19 ஊராட்சி ஒன்றியங்களையும், 38 பேரூராட்சிகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இவற்றைத் தவிர திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப்பாளையம், தென்காசி, செங்கோட்டை, கடையநல்லூர், சங்கரன்கோயில், புளியங்குடி ஆகிய 8 நகராட்சிகளும் இங்கு உள்ளன.

எண்ணும் எழுத்தும்

14 கல்லூரிகளைத் தன்னகத்தே கொண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் இங்கு இயங்கி வருகிறது. இந்த மாவட்டத்திலுள்ள ஒரே பல்கலைக்கழகம் இதுதான். இந்த மாவட்டத்தில் மொத்தம் 2091 பள்ளிகள் உள்ளன. இவற்றில் 114 மேல்நிலை மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகள். திருநெல்வேலி மாவட்டத்தில் மொத்தம் 4072 சத்துணவு மையங்கள் இயங்கிவருகின்றன.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் ஒரு அரசு மருத்துவக் கல்லூரியும், ஒரு பொறியியல் கல்லூரியும், சித்த மருத்துவக் கல்லூரி ஒன்றும் உள்ளன.

கண்வேர் கற்றுலா மையங்கள்

பாபநாசம் நீர்வீழ்ச்சி

பாபநாசம் மலைமீது மேலணை, கீழணை என்று இரண்டு அணைகள் கட்டப்பட்டுள்ளன. மேலணையில் சிற்றாறுகளின் நீர் தேக்கி வைக்கப்பட்டு அது இரு திறப்புக் குழாய்களின் வாயிலாக வெளியேற்றப்படுகிறது.

மணிமுத்தாறு நீர்வீழ்ச்சி

கல்லிடைக் குறிச்சி இரயில் நிலையத்திலிருந்து 8 கி.மீ. தொலைவில் மணிமுத்தாறு அணை கட்டப்பட்டுள்ளது. அணையின் மொத்த நீளம் 3 கி.மீ. மணிமுத்தாறு அருவியில் ஆண்டு முழுவதும் நீர் விழுகிறது.

முண்டந்துறை புலிகள் சரணாலயம்

களக்காடு புலிகள் சரணாலயம், குற்றாலம், கிருஷ்ணாபுரம் சிற்பக்கலை, பத்தமடை, கூந்தக்குளம் பறவைகள் சரணாலயம், அரியகுளம் பறவைகள் சரணாலயம், மூன்றடைப்புப் பறவைகள் சரணாலயம் போன்றவை பிற சுற்றுலாத் தலங்களாகும்.

பழம்பெரும் கோயில்கள்

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருக்குறுங்குடியிலுள்ள சிவன் கோயில், சங்கரன் கோயிலிலுள்ள சங்கர நாராயணசாமி கோயில், நாங்குநேரியிலுள்ள வானமாமலைக் கோயில், உவரியிலுள்ள சுயம்புலிங்கசுவாமி கோயில் தென்காசியிலுள்ள காசி விஸ்வநாதர் கோயில் போன்றவை வரலாற்றுச் சிறப்புமிக்கவையாகும்.

உலகும் பேரும்

சங்கரநயினார் கோயில்

நெல்லை நாட்டுச் சிறந்த கோயில்களுள் ஒன்று சங்கர நயினார் கோயில். ஆதியில் அது புற்றுக் கோயிலாக இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. இன்றும் பாமர மக்கள் அதனைப் பாம்புக் கோயில் என்றே வழங்குவர். அங்குள்ள புற்று மருந்து என்னும் திருமண் எவ்வகைப் பிணியையும் தீர்க்க வல்லதென்று கருதப்படுகிறது. அக்கோயிலையுடைய ஊர் முன்னாளில் இராசபுரம் என வழங்கிற்று. இதனாலேயே இராசை என்னும் பெயர் இலக்கியத்தில் அவ்வூரைக் குறிப்பதாயிற்று. பிற்காலத்தில் கோயிற் பெயரே ஊர்ப் பெயராகக் கொள்ளப்பட்டது.

உயரிய நோக்கில், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம், உயர்ந்த ரகக் கால்நடைகளை உருவாக்கியும், மேம்பட்ட மேலாண்மை நுட்பங்களைக் கண்டறிந்தும், உயரிய நோய்த் தடுப்பு மருந்துகளை உருவாக்கியும், சேவை புரிந்து வருகின்றது. அவற்றை உழவர் பெருமக்களுக்குக் கொண்டு சேர்க்க, வானொலி வேளாண்மைப் பயிற்சிப் பள்ளி, மற்றும் உழவர் பயிற்சி நிலையங்கள் மூலமும், கிராமப்புற மக்களுக்கு இந்தத் தொழில் நுட்பங்கள், சென்றடையும் அரிய பணியையும் ஆற்றி வருகின்றது.

தீவிரக் கால்நடை அபிவிருத்தித் திட்டம் (Intensive Cattle Development Scheme) உறைநிலை கருப்பொருள் வங்கிகள் (Frozen Semen Banks) ஏற்படுத்துதல், தரமான தீவன மேம்பாட்டுத் திட்டம் (Feed Development Programme), ஆகியவற்றின் மூலம், கால்நடை வளர்ப்போருக்கு இந்தப் பல்கலைக் கழகம், பெரிதும் துணை புரிந்து வருவது, பாராட்டுக்குரியது ஆகும்.

கால்நடை பராமரிப்புத் துறையும், இப்பல்கலைக் கழகமும் இணைந்து, உயர்ந்த ரகக் கோழிகள், சமச்சீர் உணவு, தடுப்பூசி மருந்துகள், நோய்க் கட்டுப்பாட்டு முறைகள், விற்பனை வசதிகள் போன்றவைகள் மூலம், கோழி இனத்தின் மேம்பாட்டிற்குப் பாடுபட்டு வருகின்றன.

அண்மையில், இப்பல்கலைக் கழகத்தின் ஓர் அங்கமாகிய, நாமக்கல் கால்நடை மருத்துவமனை வளாகத்தில், 15 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள, நவீன வசதிகளுடனும், புதிய கருவிகளுடனும் கூடிய 'கோழியின நோய் அறியும் ஆய்வுக்கூடம்' (Avian Diseases Diagnositic Laboratory) கோழி வளர்ப்போருக்குப் பெருமளவில் பயனளிக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

சிறு வயதிலிருந்தே பிராணிகள் என்றால் எனக்குப் பிரியம் அதிகம். குறிப்பாக, Pet animals வளர்ப்பதில் எனக்குத் தனி ஆர்வம் உண்டு. எங்கள் வீட்டில் செல்லப் பிராணிகள் இல்லாமல் இருந்த காலமே இல்லை என்று சொல்லலாம். செல்லப் பிராணிகளை வளர்ப்பவர்களுக்குத் தான், அந்தப் பிராணிகளை வளர்ப்பதில் கிடைக்கும் மகிழ்ச்சியும், மனநிறைவும் புரியும். அத்தகைய செல்லப் பிராணிகளுக்கு எற்படும் நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்க, 'மைய நோய் ஆய்வகம்' (Central Diagnositc Laboratory) ஒன்று மாதவரத்திலும், 'மைய மருத்துவச் சிகிச்சை ஆய்வகம்' மற்றும், 'சிறப்பு மருத்துவ ஆலோசனைப் பிரிவு' (Central Clinical

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகக் கட்டடங்களுக்கான அடிக்கல் நாட்டு விழா

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகக் கட்டடங்களுக்கான அடிக்கல் நாட்டுவிழா சென்னை கலைவாணர் அரங்கில் 30.6.1993 அன்று நடந்தது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் 1989-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தப் பல்கலைக் கழகத்துக்குச் சென்னையிலுள்ள மாதவரத்தில் நிர்வாக அலுவலகங்களுக்கான கட்டடம் கட்டப்படவுள்ளது. இதைப் போல் சென்னை வேப்பேரியிலுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியில் ஆராய்ச்சிக் கூடமும், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியில் மாணவிகள் விடுதி, மருத்துவமனை போன்றவையும் புதிதாகக் கட்டப்படவுள்ளன. இந்தப் புதிய கட்டடங்கள் ரூ.3 கோடியே 17 இலட்சம் செலவில் கட்டப்படுகின்றன.

விழாவில், இந்தப் புதிய கட்டடங்களுக்கான அடிக்கல்லை, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நாட்டிவைத்து, நன்னீர் இறால் வளர்ப்புத் திட்டத்தையும் தொடங்கிவைத்து விழாப் பேருரை ஆற்றினார்.

விழாவில், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு டி. ஜனார்த்தனன் அவர்கள் கலந்துகொண்டு இந்தக் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் முதல் துணை வேந்தர் மறைந்த டாக்டர் ரிச்சர்டு மாசிலாமணியின் உருவப்படத்தைத் திறந்துவைத்துப் பேசினார்.

பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் வே. ஞானப்பிரகாசம், பல்கலைக் கழகத்தின் சாதனைகளையும் எதிர்காலத் திட்டங்களையும் விளக்கிப் பேசினார்.

விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பொன்னாடை போர்த்தி, வேலைப்பாடமைந்த சிற்பம் ஒன்றை நினைவுப் பரிசாக வழங்கினார்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவ, மாணவிகள் உட்பட பலரும் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

விழா முடிவில், பல்கலைக் கழகப் பதிவாளர் டாக்டர் பத்மநாபன் நன்றி நவின்றார்.

Laboratory and referral Clinic) ஒன்று சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியிலும் செயல்பட்டு வருகின்றன. இவை அனைத்தும், பிராணிகளிடத்து அன்பு செலுத்தும், மனித நேயமிக்க மக்களுக்கு, மகிழ்ச்சி தரக்கூடிய செய்திகள் ஆகும்.

தாவர உணவிற்கு அடுத்தபடியாக, மீன் பெரும்பாலான மக்களால் உட்கொள்ளப்படுகிறது. குறிப்பாக, கடற்கரைப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு, மீன் முக்கிய உணவாக அமைந்துள்ளது. நமது மாநிலத்தில் அமைந்துள்ள கடற்கரையின் நீளம் மட்டும், 1000 கி.மீ.ட்டர். கடற்கரையை ஒட்டியும் உள்நாட்டிலும், நன்னீர்ப் பரப்பும், உவர்நீர்ப் பரப்புமாக, மீன்பிடிப் பரப்பு மட்டும், 16 இலட்சம் எக்டேர் நிலம் உள்ளது. இவற்றிலிருந்து ஆண்டிற்கு, 3 இலட்சம் டன் மீன் மட்டுமே கிடைக்கிறது. ஆனால், நமது தேவையோ, 6 இலட்சம் டன் மீன்களாகும்.

இதுவரை மீன் வகை உணவு உற்பத்தியில், 50 சதவிகிதம் மட்டுமே நாம் எட்டியுள்ளோம். நமது தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்யும் வகையில், தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகம், மீன் உற்பத்திப் பெருக்கத்திற்குத் தேவையான வழிவகைகளைச் செய்வதோடு, புதிய மீன் பிடி உத்திகளையும், மீன் உற்பத்திப் பெருக்கத்திற்கு ஆலோசனைகளையும், மீனவர்களுக்குக் கற்றுத் தர வேண்டும் என, இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பெருமளவில், அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும், இறால் வளர்ப்புக்கு, இந்த அரசு பல திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தி வருகிறது. இறால் மீன் வகையில், நமது மாநிலத்தில் வளரும் நன்னீர் இறாலுக்கு, வெளி நாடுகளில் நல்ல கிராக்கி உள்ளதால், அதன்மூலம் மிகுந்த அளவில், அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்க வாய்ப்புள்ளது. அதே நேரத்தில், அவற்றை இனப் பெருக்கம் செய்வதில், சில இடர்ப்பாடுகள் உள்ளன, என்ற உண்மையை அறிந்தவுடன், உடனடியாக இவற்றைக் களைய, தேவையான நடவடிக்கைகளை எடுக்க ஆணையிட்டேன். அந்த நிலையில் இந்தப் பல்கலைக் கழகம், ஒரு திட்டத்தைத் தயாரித்து, என் பார்வைக்குக் கொண்டு வந்தபோது, நான் அத்திட்டத்திற்கு 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தேன்.

காவிரி ஆற்றுப் படுகையில் உள்ள, நன்னீர் இறால் வகை மீன்களைக் கொண்டு, தூத்துக்குடி மீன்வளக் கல்லூரிப் பண்ணையில், Induced breeding முறையின் மூலம், ஆண்டு ஒன்றுக்கு 20 இலட்சம் Fresh Water Prawn Seadlings-களை உற்பத்தி செய்து, தமிழகத்தில் உள்ள மீனவர்களுக்கும் கிடைக்குமாறு செய்ய, திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் 200 கிராம் முதல், 250 கிராம் வரை வளரும் இந்த நன்னீர் இறால் மீன்கள், கிலோவுக்கு 1000 ரூபாய் வரை, அந்நியச் செலாவணியை ஈட்டும் என்று அறியும்போது, இதனால் நமது கிராமங்களில் நிகழப் போகும், பொருளாதார மாற்றத்தை எண்ணி, எனது மனம் மகிழ்ச்சி அடைகிறது.

தமிழக அரசு, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற ஏழை எளியவர்கள், ஏற்றம் பெற வேண்டும் என்ற நோக்கோடு, கிராம மக்களுக்குப் பல திட்டங்

நல்வாழ்த்துக்கள்:

அரிசி ஆலை மற்றும் நெல் அரிசி வியாபாரிகள் சங்கம்
20, செஞ்சி ரோடு, விழுப்புரம் 605 602

S.K. ஷாகுல் ஹமீது
பொதுச் செயலாளர்

With Best Compliments From

PANRUTI OIL MILL OWNERS ASSOCIATION

(Regd. No.35/93)
11, Madras Road
Panruti-607 106

President: V.P. GNANASEKARA PANDIYAN
Secretary: A. SHANMUGAM

சிறப்புப் பேட்டி:

மனநிறைவு தரும் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

நெல்லை மாவட்டம் பல்வேறு துறைகளில் முன்னேறி வருகிறது என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஆர். வேலு, இ.ஆ.ப., அவர்கள் விளக்கிக் கூறுகிறார். அறிவொளி இயக்கம், வெள்ள நிவாரணப் பணிகள், குடிநீர்த் திட்டம் முதலான வளர்ச்சிப் பணிகள் துரிதமாக நிறை வேற்றப்பட்டு வருகின்றன என்பதையும், தொழில் துறையில் தன்னிறைவு பெற்று விளங்குகிறது என்பதையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இந்தச் சிறப்புப் பேட்டியில் கூறுகிறார்.

இயற்கை அமைப்பாலும், வரலாற்றுச் சிறப்பாலும் சமுதாய அமைப்பாலும், சமய வளர்ச்சி யாலும், அரசியல் முறையாலும் திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டம் பேரும் புகழும் பெற்று விளங்குகிறது.

இந்த மாவட்டம் அரசியல், கல்வி, தத்துவம், சமுதாயம், நிர் வாகம் போன்ற பல துறைகளில் சிறந்து விளங்கிய பெருந்த தலைவர் களை இந்த நாட்டுக்குத் தந்து பெருமை சேர்த்துள்து. அகத்திய முனிவர் தவமிருந்து தமிழ் வளர்த்த பொதிகை மலையும், தமிழ் கண்ட தோர் பொருநை ஆறும் உடைய நெல்லை மாவட்டம் இன்னும் எத் தனையோ சிறப்புகளுக்கும் உரிய தாகும்.

விடுதலைக்கு வித்திட்டு முதல் முழக்கமிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவாக இந்த மாவட்டம் 20.10.1986-ஆம் நாள் உருவாக்கப்பட்டது. இந்த மாவட்டத் தின் ஆட்சித் தலைவராக திரு ஆர். வேலு, இ.ஆ.ப., அவர்கள் 1991-92-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள்முதல் பணியாற்றிவருகிறார். தனி மாவட்டமாகப் பிரிந்த நெல்லை கட்டபொம்மன் மாவட்டத் தின் பத்தாவது ஆட்சியாளர் ஆவார் இவர்.

குற்றாலச் சாரல் விழா

அருவிகள் நிறைந்த சிறந்த சுற்றுலாத் தலமான குற்றாலம் சென்ற ஆண்டு ஏற்பட்ட திடீர் வெள்ளத் தினால் பெரும் சேதம் அடைந்து அங்கு தற்சமயம் சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருவதாக அறிந்தோம். இந்தப் பணிகள் தற் சமயம் எந்த நிலையில் உள்ளன?

குற்றாலச் சீரமைப்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இன்னும் ஓரிரு வாரங்களில் இந்தப் பணிகள் முடிவடைந்துவிடும். குற்றாலச் சாரல் விழா திட்டமிட்ட படி நடக்கும்.

அறிவொளி இயக்கம்

நெல்லை மாவட்டத்தில் அறி வொளி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டி ருப்பதாகத் தெரிகிறதே?

ஆம். நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் 1991-ஆம் ஆண்டு இறுதியில் அறிவொளி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த மாவட் டத்தின் மொத்த மக்கள் தொகையில் சுமார் 11 இலட்சம் பேர் கல்வி அறிவு பெறாதவர்கள். இதில் 15 முதல் 35 வயதுக்கு உட்பட்ட 2,80,000 பேருக்கு எழுத்தறிவு புகட்டும் நோக்கத்துடன் அறிவொளி இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. முதற் கட்டமாக 2 இலட்சம் பேருக்குக் கல்வி அறிவு புகட்டப் பட்டுள்ளது. இவர்களுக்கு மே மாதம் 15-ஆம் நாள் முதல் தொடர் கல்வி தொடங்கப்பட்டுள்ளது. இந்தப் பணியில் மொத்தம் 26 ஆயிரம் தொண்டர்கள் (Volunteers) ஈடுபடுத் தப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் அறிவொளி இயக்கம் தொடங்கப் புட்டுள்ள 5-வது மாவட்டம் ஆகும் இது''

நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவருடன் ஒரு சந்திப்பு

திருநெல்வேலி துணுக்குகள்

வெள்ள நிவாரணப் பணிகள்

சென்ற ஆண்டு நவம்பர் திங்கள் 12-ஆம் நாள் முதல் 14-ஆம் தேதி முடிய நெல்லை மாவட்டத்தில் வீசிய புயல் காரணமாகப் பெய்த கடும் மழையால் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, தென்காசி, செங்கோட்டை, சிவகிரி, அம்பாசமுத்திரம், நாங்குநேரி, ராதாபுரம் வட்டாரங்களில் பெருத்த சேதம் ஏற்பட்டது. இதன் காரணமாக ரூபாய் 101.53 கோடி அளவுக்கு உயிர்ச்சேதமும் பயிர்ச் சேதமும் பிற சேதங்களும் ஏற்பட்டன.

வெள்ள நிவாரணப் பணிகளுக்கென அரசு இந்த மாவட்டத்துக்கு ரூபாய் 959.91 இலட்சம் ஒதுக்கியிருந்தது. இதில் 21.5.1993 முடிய ரூ.744.475 இலட்சம் வெள்ள நிவாரணப் பணிகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளது.

முதியோர் உதவித் தொகை

முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி- கட்டபொம்மன் மாவட்டத்தில் மே 1993 முடிய 22,938 நபர்களுக்கு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

நீர்த்தேக்கங்கள்

நெல்லை மாவட்டத்திலுள்ள முக்கிய நீர்த் தேக்கங்களும் (Reservoirs) அவற்றின் உயரமும்

1. பாபநாசம் - 143 அடி
2. மணிமுத்தாறு - 118 அடி
3. கடானா - 85 அடி
4. ராமா நதி - 84 அடி
5. கருப்பா -நதி - 72 அடி
6. குண்டாறு - 36 அடி

நெல்லை மாவட்டத்தின் உயிரோட்டம்!

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் தமிழ்நாட்டின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இந்த மாவட்டம் வடக்கே காமராசர் மாவட்டத்தாலும் தெற்கே குமரி, கிழக்கே சிதம்பரனார் மாவட்டங்களாலும் மேற்கே கேரளா மாநிலத்தினாலும் சூழப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தின் உயிரோட்டம் தாமிரபரணி ஆறுதான். ஏனெனில் நெல்லை மாவட்டத்தின் பெரும்பாலான விவசாய நிலங்கள் இந்த ஆற்று நீரினால் தான் வளம் பெறுகின்றன. இந்த மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் கால் பகுதி விவசாய நிலங்களாகும்.

அழகிய ஆறுகள்

நெல்லை மாவட்டத்தின் வாழ்வும், வளமும், வனப்பும், செழிப்பும் மண்டிக்கிடப்பது இங்கு பாயும் ஆறுகளின் வளத்திலேயேதான். நெல்லை மாவட்டத்தின் பெருமையே தாமிரபரணியில்தான் உள்ளது. இதைத் தவிர சிற்றாறு, பச்சை ஆறு, நம்பியாறு, கொடுமுடியாறு, கடகை நதி, இராம நதி போன்றவையும் இங்கு பாயும் பிற ஆறுகளாகும்.

நெல்லை மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழை அளவு 814·8 மி.மீ

இந்த மாவட்டத்தில் மொத்தம் 6 அணைக் கட்டுகள் உள்ளன. அவை பாபநாசம், மணிமுத்தாறு, கடகை நதி, இராம நதி, கருப்பா நதி, குண்டாறு ஆகியன.

விளையும் பயிர்கள்

நெல்லை மாவட்டத்தின் மொத்த பயிர்ப்பரப்பு 4,39,298 எக்டேர். இதில் நன்செய் 79,668 எக்டேர், புன்செய் 3,59,630 எக்டேர். இதில் 99,934 எக்டேரில் நெல் பயிரும், 4,955 எக்டேரில் சோளமும், 695 எக்டேரில் கம்பும், 1197 எக்டேரில் கேழ்வரகும் பயிர் செய்யப்படுகிறது. இவற்றைத் தவிர பருத்தி, மிளகாய், கரும்பு, நிலக்கடலை போன்ற பணப் பயிர்கள் சுமார் 2,17,718 எக்டேரிலும் பயிராகின்றன.

மேலும், வாழை, மா, கொய்யா, திராட்சை, தக்காளி போன்ற பழவகைகளும் சுமார் 11,392 எக்டேரில் பயிர் செய்யப்படுகிறது.

வனப்பகுதிகள்

நெல்லை மாவட்டத்திலுள்ள காடுகளின் மொத்தப் பரப்பளவு 1,22,055 எக்டேர் ஆகும்.

மருத்துவமனைகள்

இந்த மாவட்டத்தில் மொத்தம் 10 மருத்துவ மனைகளும், 55 ஆரம்பச் சுகாதார நிலையங்களும், 385 துணைச் சுகாதார நிலையங்களும் உள்ளன. இவை தவிர 4 கால்நடை மருத்துவ மனைகளும், 35 கால்நடை மருந்தகங்களும் உள்ளன.

வளரும் தொழிற்சாலைகள்

நெல்லை மாவட்டத்தில் 21 பெரிய தொழிற்சாலைகளும், 4,455 சிறு தொழிற்சாலைகளும் உள்ளன. இவற்றில் மொத்தம் 13 இலட்சத்து 84 ஆயிரத்து 521 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். இதில் பெண் தொழிலாளர்கள் மட்டும் 89,147 பேர்.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்



இந்த அறிவொளி இயக்கத்தில் ஈடுபட்டுள்ள தொண்டர்களில் பெரும்பாலோர் தங்களை இந்தப் பணிக்கு முழுமையாக அர்ப்பணித்துள்ளனர். தற்போதைய நிலவரப்படி இந்த மாவட்டத்தில் மொத்த எழுத்தறிவு சதவிகிதம் 56.53-லிருந்து 70.47 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

வெள்ள நிவாரணப் பணிகள்

வெள்ள நிவாரணப் பணிகள் முடிவடைந்துவிட்டனவா? கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நெல்லை மாவட்டத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தின் காரணமாக சுமார் 105 கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டது. (இது தனியார் மற்றும் பொதுச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட மொத்த இழப்பீடு ஆகும்). வெள்ள நிவாரணப் பணிகள் ஏறக்குறைய முடியும் தறுவாயில் உள்ளன. வெள்ள நிவாரணப் பணிகளுக்காகத் தமிழக அரசு 10 கோடி ரூபாய் வழங்கியது. தனியார் தொண்டு நிறுவனங்களும் இந்த வெள்ள நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பல வகைகளில் உதவின.

நெல்லை மாவட்டத்தில் புதிதாகக் குடும்ப அட்டைகள் கேட்டு எத்தனை விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன? இவர்களுக்குக் குடும்ப அட்டைகள் எப்போது வழங்கப்படும்?

இந்த மாவட்டத்தில் 1.25 இலட்சம் பேர் புதிதாகக் குடும்ப அட்டைகள் கேட்டு மனு செய்துள்ளனர். 31.5.1993 உடன் இந்த மனுக்கள் மீதான விசாரணை முடிந்தது. 30.6.1993-க்குள் புதிய அட்டைகள் வழங்கப்பட்டுவிடும்.

குடிநீர்த் திட்டம்

உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்பட்டுவரும் சங்கரன் கோயில் குடிநீர்த் திட்டம் எப்போது முடிவடையும்?

திருநெல்வேலியிலிருந்து 60 கி.மீ. தூரத்திலுள்ள சங்கரன் கோயிலுக்கு ரூ.12.5 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுவரும் குடிநீர்த் திட்டப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. குழாய்கள் பொருத்தும் பணி ஏறக்குறைய முடிவடைந்துவிட்டது. இவ்வாண்டு இறுதிக்குள் இந்தப் பகுதிக்குக் குடிநீர் கிடைத்துவிடும்.

இதைத்தவிர, இந்த மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சினை உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் தாமிரபரணியை ஆதாரமாகக் கொண்டு, ரூபாய் 85 கோடி செலவில் குடிநீர் வழங்கும் ஒரு பெருந்திட்டம் (Master Plan) தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் இதன்மூலம் இந்தக் கிராமங்களின் குடிநீர்ப் பிரச்சினை நிரந்தரமாக நீக்கப்படும் என்றும் கூறினார் ஆட்சித் தலைவர்.

மனுநீதி நாள்

வாரந்தோறும் நடைபெறும் மாவட்ட ஆட்சியரின் குறை தீர்க்கும் நாளில் சுமார் எத்தனை விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன?

திங்கட்கிழமைதோறும் (குறை தீர்க்கும் நாள்) 340 முதல் 400 வரை மனுக்கள் பெறப்படுகின்றன. இவற்றில் ஓய்வூதியம், வேலை வாய்ப்பு, வங்கிக் கடன், வீட்டு மனைப்பட்டா போன்றவைகள் கேட்டும், வரதட்சிணைக் கொடுமை, சொத்துத் தகராறு போன்றவை சம்பந்தமாகவும்தான் நிறைய மனுக்கள் வருகின்றன. இதைத் தவிர நாங்கள் மாதம் ஒரு முறை இரண்டு வட்டாரங்களில் மனுநீதி நாள் நடத்துகிறோம். இதில் ஒரு வட்டாரத்தில் மாவட்ட ஆட்சியரும் மற்றொன்றில் மாவட்ட வருவாய் அலுவலரும் (DRO) கலந்து கொள்கிறார்கள். மனுநீதி நாளில்தான் அதிகமான குறை தீர்க்கும் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. இவற்றில் சாலை வசதி, குடிநீர், தெரு விளக்குகள், கூடுதல் பேருந்து போன்றவை கேட்டுதான் அதிகமான விண்ணப்பங்கள் இருக்கும். இந்த ஒரு நாளில் மட்டும் சுமார் 500 விண்ணப்பங்கள் அந்த இடத்திலேயே பரிசீலிக்கப்பட்டு முடிவு செய்யப்படும். மற்ற மாவட்டங்களில் இல்லாத அளவுக்கு நாங்கள் இதைச்சிறப்பாக நடத்துகிறோம்.

பேட்டியைத் தொடர்ந்து நெல்லை மாவட்டத்தின் மேலும் பல சிறப்புகளை விவரிக்கிறார் ஆட்சித் தலைவர்.

''சாதிக் கலவரங்களுக்குப்பெயர் போனது நெல்லை மாவட்டம். அறிவொளி இயக்கம் போன்றவை மூலம் இதுமக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டு சாதிக் கலவரங்கள் தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. கல்வி, பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி போன்ற சாதனங்கள் சமுதாயத்திற்குக் குறிப்பிடத் தக்க சேவை செய்து இந்த மாவட்ட மக்களின் பிற்போக்கான வாழ்க்கை முறையை மாற்றி அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

சமுதாயக் கொடுமை, சமூக அநீதி போன்றவற்றில் மாவட்ட ஆட்சியரே நேரடியாகத் தலையிட்டு பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கிறார். இப்போதுதான் தங்கள் சொந்தப் பிரச்சினைகளுக்காக இம் மாவட்ட மக்கள், அரசை நேரடியாக அணுக முன்வந்திருக்கிறார்கள்.

இந்த மாவட்டத்தின் முக்கிய தொழில் விவசாயம்தான். நெற்பயிர் அதிக அளவிலும் அதை அடுத்து கரும்பு, வாழை போன்றவையும் இங்கு பயிர் செய்யப்படுகின்றன.

ஊரும் பேரும்

கங்கை கொண்டான்

'கங்கை கொண்டான் சோழச் சதுர்வேதி மங்கலம்' என்று கல்வெட்டுக்களால் குறிப்பிடப்படும் இவ்வூர், கங்கை கொண்ட சோழ மன்னன் இராசேந்திரன் பெயரைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

மேலகரம்

'திருக்குற்றாலக் குறவஞ்சி' பாடிய திரிகூடராசப்பக் கவிராயர் பிறந்த ஊர் இது. தென் காசியிலிருந்து 2 கி.மீ. தூரத்தில் இவ்வூர் உள்ளது.

கடையம்

தொழில்வளம் மிக்க ஊர் கடையம். இங்கு திங்கட்கிழமை தோறும் சந்தை கூடுகிறது. பன்னீர் இங்கு தண்ணீர் பட்டபாடு! இங்கிருந்து ரோஜாப்பூ, தாழம்பூ ஆகிய மலர்கள் நிறைய மற்ற இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. மகாகவி பாரதியாரின் மாமனார் இவ்வூரைச் சேர்ந்தவர்.

மற்ற மாவட்டங்களுக்கு இல்லாத ஒரு சிறப்பு இந்த மாவட்டத்திற்கு உண்டு. அதுதான் ஐவகை நிலம். பாலை (தேரி நிலம்) உட்பட 5-வகை நிலத்தை உடைய ஒரே மாவட்டம் நெல்லை மாவட்டம் தான்.

இந்த மாவட்டத்தின் மொத்தப் பரப்பில் 30 சதவிகிதம் காட்டுப் பகுதியாகும். குற்றால நீர் மூலிகை மருந்துகளால் ஆனது. அதனால் தான் இந்தக் குளிர்ந்த நீரில் (அருவி) குளித்தாலும்கூட சளி பிடிப்பதில்லை. அத்தகைய சக்தி வாய்ந்தது குற்றால அருவி. குற்றாலத்தில் முக்கனிகளும் உண்டு.

மேற்குத் தொடர்ச்சி மலையில் மூலிகைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இதைக் கொண்டு தென்காசிப் பகுதியில் ஒரு மூலிகைப் பண்ணை விரைவில் ஆரம்பிக்கப்படும்.

களக்காடு பகுதியில் கள்ளத்தனமாக நடைபெற்றுவந்த வைடூரியம் தோண்டும் பணி முழுவதுமாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

முண்டந்துறைப் புலிகள் சரணாலயத்தில் சிங்கவால் குரங்கு என்ற ஒருவகைக் கருங்குரங்குகள் காணப்படுகின்றன.

தொழில் வளம்

சங்கரன் கோயில் பகுதியில் காற்றாலை (Wind Mill) அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இராதாபுரம் வட்டம் கூடங்குளம் கிராமத்தில் ஒரு அணுமின் நிலையம் அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்து அதனைச் செயல்படுத்த தமிழக அரசைக் கேட்டுக் கொண்டது. இந்தத் திட்டத்திற்கான நிலங்களைக் கையகப்படுத்தும் பணி 31.7.1993 உடன் முடிவடைந்துவிடும். வெளிநாட்டு உதவி இல்லையென்றாலும்கூட மத்திய அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முன்வந்திருக்கிறது. தற்சமயம் கட்டடங்கள் கட்டும் பணியும் நடைபெறுவதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் கூறினார்.

திருநெல்வேலி தாலுகாவிலுள்ள கங்கைகொண்டான் மற்றும் பிராஞ்சேரி கிராமங்களில் சிப்காட் உதவியுடன் தொழில் மையம் ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. நிலம் கையகப்படுத்தும் பணி தற்சமயம் நடைபெற்று வருகிறது.

பீடித் தொழில், தீப்பெட்டி செய்தல் போன்றவையே இம்மாவட்ட மக்களின் முக்கிய ஆதாரமாகும். பீடி சுற்றும் தொழில் நெல்லை மாவட்டம் முழுவதும் நடைபெறுகிறது.

பழங்குடியினர்

பாபநாசம் பகுதியில் 5 குடியிருப்புகளில் சுமார் 300 எண்ணிக்கையில் காணிக்கர் என்ற பழங்குடியினர் வாழ்கின்றனர். இதுவரை இவர்கள் பழங்குடியினர் (Tribels) வகுப்பில் சேர்க்கப்படவில்லை. தற்சமயம் இவர்களைப் பழங்குடியினர் பிரிவின்கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவர்களுக்குத் தற்போது கல்வி, வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்தப்பழங்குடி மக்களில் 25 நபர்களுக்கு காடுகளில் வேலை கொடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வேலைவாய்ப்பில் பெண்கள்

செயற்கை வைரம் பட்டைத் தீட்டும் தொழிலில் (Gem Cutting) பெண்கள் ஈடுபட்டுள்ளனர். செருப்பு தைக்கும் தொழிலிலும் தற்சமயம் பெண்கள் ஈடுபட்டிருப்பது ஒரு நல்ல முன்னேற்றமே.

பல்துறை விளக்க முகாம்

மாதம் ஒரு முறை எல்லாத் துறைகளும் இணைந்து 'பல்துறை விளக்க முகாம்' (Multi Media Campaign) நெல்லை மாவட்டத்தில் நடத்தப்படுகிறது. இந்த முகாமின் மூலம் அரசுத் துறை சலுகைகள், நிதி உதவி போன்றவற்றை எவ்வாறு பெறலாம் என்பது மக்களுக்கு எடுத்துரைக்கப்படுகிறது. அரசின் வளர்ச்சித் திட்டப் பணிகள் மக்களிடம் நேரில் எடுத்துச் செல்லப்படுகிறது.

அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் உட்பட அனைத்துத் துறை அலுவலர்களும் வருகை புரிந்து நிகழ்ச்சியில் பங்கு பெறுவார்கள். இந்தப் பல்துறை விளக்க முகாம் தமிழ்நாட்டிலேயே மாதந்தோறும் இம் மாவட்டம் ஒன்றில் தான் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

குடும்ப நலம்

இந்த மாவட்டத்தைச் சேர்ந்த பெண்கள் இப்போது அதிகமாக குழந்தைகள் பெற்றுக் கொள்வதில்லை. இது ஒரு நல்ல முன்னேற்றம். குடும்ப நலத்தில் இந்தியாவில் கேரளாவுக்கு அடுத்தபடியாக நமது மாநிலம் இருப்பது பெருமைப் படக்கூடியதாகும். இதற்கு, திரைப் படங்கள் மூலமாக மக்களுக்கு எடுத்துரைக்கப்பட்ட நல்ல கருத்துகளும் ஒரு முக்கியக் காரணமாகும்.

சென்ற ஆண்டு சிறுசேமிப்பில் இந்த மாவட்டம் நிர்ணயிக்கப்பட்ட தொகையான ரூபாய் 25 கோடிக்கு பதிலாக 26.1 கோடி ரூபாய் வசூல் செய்து சாதனை படைத்தது.

கடைசியாக, சாதி சமய பேதங்கள், சமுதாய இன்னல்கள் போன்றவை இந்த மாவட்டம் முன்னேறாததற்கு ஒரு முக்கியக் காரணமாகும். தற்போது மக்களை நல்வழிப் படுத்துவதில் பத்திரிகைகள் பெரும்பங்காற்றுகின்றன. மக்களை நல்ல வழியில் கொண்டு செல்ல நெல்லை மாவட்டப் பத்திரிகைகள் ஆற்றும் பணியை வெகுவாகப் பாராட்டினார் மாவட்ட ஆட்சித் தலைவர்.

- ஜே. சந்திரன்.

ஊரும் பேரும்

சீவலப்பேரி

சிற்றாறு, கயத்தாறு, பொருநை ஆகிய மூன்றும் கலக்கும் இடமே முக்கூடல். தற்போது, சீவலப்பேரி முக்கூடல் என்றே அழைக்கப்படுகிறது. திருநெல்வேலியிலிருந்து 17 கி.மீ. தொலைவில் உள்ளது இது.

தச்சநல்லூர்

தச்சர் ஒருவரின் வேண்டுகோளுக்கிணங்க சீர்நெடுமாறன் என்னும் மன்னனால் வழங்கப்பட்ட பெயரே தச்சநல்லூர் ஆகும். இது, திருநெல்வேலியிலிருந்து 3 கி.மீ. வடக்கே உள்ளது. 'காந்திமதி பிள்ளைத் தமிழ்' எழுதிய அழகிய சொக்கநாதப் பிள்ளை இவ்வூரைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கலைக்கோயில்

அப்சரஸ் நடனம் - கிருஷ்ணாபுரம்

கிருஷ்ணாபுரம்.

தென்னகச் சிற்பக் கலைக்குப் புகழ்பெற்ற சுற்றுலாத் தலம்.

இது, திருநெல்வேலிக்குக் கிழக்கே 12 கி.மீ. தொலைவில் உள்ளது. மதுரை நாயக்க மன்னர்களில் ஒருவரான குமார கிருஷ்ணப்ப நாயக்கன், இங்கே ஒரு ஊரை

உலகத்து மாந்தரெல்லாம்
உவப்புடன் வந்து பார்க்கும்
ஒப்பற்ற சிலைகள்!

தமிழகத்துச் சிற்பக்கலைக்குத்
தரணியில் ஈடுஇணை
இல்லை என்று இறுமாந்து
கூறும் வண்ணம் எழுந்து
நிற்கும் எழில்மிகு
திருவுருவங்கள்!

கண்ணையும் கருத்தையும்
கவரத்தக்க வகையிலே
கல்லிலே கலைவண்ணம்
கண்ட அற்புதச் சிற்பங்கள்!

இவையெல்லாம் காண
திருஷ்ணாபுரத்துக்கு
வரவேண்டும்... வாருங்கள்
போகலாம்!

உருவாக்கினான். அவன் பெயராலேயே இது **கிருஷ்ணாபுரம்** என வழங்கலாயிற்று.

இங்கே, திருவேங்கடநாதர் கோயில் ஒன்று உள்ளது. 'நெல்லையப்பர் கோயிலுடன் இணைந்த கலைக்கோயில் கிருஷ்ணாபுரம் அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில்' என்று அங்குள்ள கல்வெட்டொன்று தெரிவிக்கிறது.

கிருஷ்ணாபுரம் கோயிலினுள் நுழைகிறோம்.

முதல் சிலையே நம்மை மெய்மறக்கச் செய்கிறது. நாடோடிப் பெண் ஒருத்தி நடனமாடுவது போன்ற உயிரோவியம் அது. ஒரே கல்லால் ஆன அந்த அழகிய சிற்பத்தின் கை நரம்புகள் தெரிகின்றன. விலா எலும்புகள் கூடத் தத்ரூபமாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன.

கைதேர்ந்த சிற்பக் கலைஞனின் கைவண்ணத்தால் உருவான சிற்பங்களை வரிசையாகப் பார்த்துக்கொண்டே போகிறோம்.

அடுத்து, நாம் காண்பது, குறத்தி ஒருத்தி ராஜகுமாரன் ஒருவனைக் களவாடிச் செல்கின்ற தோற்றம். குறத்தி, ராஜகுமாரன், திருவுருவச் சிலையொட்டிய தூண் யாவும் நேரில் காண்பது போன்ற பிரமையே ஏற்படுகிறது. தூணைத் தட்டிப் பார்க்கிறோம். உலோகத்தைத் தட்டினால் ஏற்படும் சத்தமல்லவா கேட்கிறது! இதுவும் ஒரே கல்லால் ஆன, சிற்பியின் எண்ணத்தை எழிலுருவமாக வடித்திருக்கும் வடிவம்தான்!

அர்ச்சுனன் தவம் புரியும் காட்சி அற்புதம்! அற்புதம்! அவனது தாடி, கைவிரல்களிலுள்ள நகங்கள் தத்ரூபம்.

கர்ணன் இப்படித்தான் இருந்தானோ? அவனை வடித்த சிற்பியின் கைகளை எடுத்து அப்படியே கண்களில் ஒற்றிக் கொள்ளவேண்டும்.

வில்லேந்தி நிற்கும் கர்ணனின் தொடை நரம்புகள் தெரியும்படியும், கால் முட்டிகள் இயல்பாய் அமைந்திருப்பதையும் கண்டு வியக்கிறோம்.

குறத்தி ராஜகுமாரனைத் தூக்கிச் சென்ற காட்சியைப் பார்த்தோம்.

ரதி - சுற்சிற்பம் - கிருஷ்ணாபுரம்

இந்தச் சிலையோ, குறவன் ராஜகுமாரியைத் தூக்கிச் செல்லும் சிலையாகும். இதிலும் குறவன் விலா எலும்புகள் தெரியும்படியாகத் தன் கைத்திறமையைக் காட்டியிருக்கிறான் சிற்பி. ராஜகுமாரி முக்காடு போட்டிருக்கும் துணியைக்கூடக் கல்லால் வடித்திருக்கும் அழகே அழகு!

எண்ணிய உருவத்தை நுண்ணிய வேலைப்பாட்டுடன் காட்டியிருக்கும் அந்தக் கைவினைஞனுக்குத் தலைவணக்கம் செய்ய வேண்டும்.

பூலோக ரம்பையைப் பார்த்திருக்கிறோமா? அவளை இங்கே பார்க்கிறோம் - பேசாத கற்சிலையாக! ஒரு கையில் (உள்ளங்கையில்) மாதுளையையும், ஒரு கையில் பூச்செண்டையும் வைத்து நடனமாடும் அந்த நங்கையின் நளினம் நம் நயனத்தைவிட்டு அகலவே இல்லை.

இப்போது நாம் வருவது உன் மண்டபத்துக்கு... வீரபுரத்திரரின் நடனக் காட்சி. ஒரு காலைத்தூக்கி நின்றாடும் அந்தக் காட்சி மட்டுமல்ல, கையில் வாளும் கேடயமும் ஏந்தி நிற்கும் அந்தக் கம்பீரத் தோற்றமும் இன்றும் நம் மனக் கண் முன் தோன்றுகிறதே!

இந்தச் சிலையைச் செதுக்கிய சிற்பியின் திறமையைப் பாருங்கள், சிலையின் கால் எந்தவித ஆதாரமும் இல்லாமல் இருக்கிறது! இன்னொன்றையும் நாம் குறிப்பிட வேண்டும், அந்த மீசை எத்தனைத் தத்ரூபமாக அமைக்கப்பட்டிருக்கிறது!

பூலோக ரம்பையைப் பார்த்த நாம் மன்மதனையும் பார்க்க வேண்டாமா? கையில் வில்லுடன் காட்சியளிக்கும் மன்மதச் சிலையைச் சற்று உன்னிப்பாகப் பார்க்க வேண்டும். அதாவது வில்லில் ஒரு சிறு துவாரம் உள்ளது. அதில் ஊசியைப் போட்டால் மறு துவாரத்தின் வழியாகக் கீழேவந்து விழுகிறது. அத்தனை நுணுக்கமாக வில்லுக்குள்ளேயே - அந்தக் கல்லுக்குள்ளேயே துவாரத்தையும் வைத்து நம் கண்ணுக்குள்ளேயே நிற்கிற மாதிரி கைவண்ணம் காட்டியிருக்கிறார் அந்தக் கைதேர்ந்த சிற்பி!

புருஷா மிருகம் என்பது கலையெழில் மிக்க சிலை. அதாவது மனிதனும் மிருகமும் இணைந்த ஒரு தோற்றம். இடைக்கு மேலே மனித உருவம்; கீழே மிருக உருவம். அதாவது யாளி உருவம். இதுவும் நம் கண்ணையும், கருத்தையும் கவர்கிறது.

அடுத்து நாம் காண்பது, பீமன் - தர்மர் சிலை. தர்மருக்குக் கிருதா உள்ளது. அந்தக் காலத்திலேயே கிருதா வைத்துக் கொள்ளும் பழக்கம் இருந்ததோ?

அவர் அணிந்துள்ள அங்கவஸ்திரம், அவர் கைவிரல்களில் உள்ள மோதிரங்கள் அனைத்தும் தத்ரூபம்.

கல்லிலே ஜாலம் புரிந்திருக்கிறார் அந்தக் கல் தச்சன்!

நம் கையை, அங்குள்ள ஒரு சிலையின் மேல் வைத்து ஒருபக்கம் மறைத்துக் கொண்டு பார்த்தால், யானை தெரிகிறது! மறுபக்கம் கையை வைத்து மறைத்துப் பார்த்தால் காளை தெரிகிறது!

அதோ! அங்கே முனிவர் ஒருவர் நிற்கிறாரே! போய்ப் பார்க்கிறோம். அவரது மேலாடையில் பட்டன்கூட இருக்கிறது. 'ராஜகுமாரி'! உன்னைத்தான் திருமணம் செய்வேன்!'' என்று சபதம் செய்திருக்கிறாராம் அவர். அவர் அருகே அந்த ராஜகுமாரி கூட நின்று கொண்டிருக்கிறாள். அவளது முகம் பளபளவென்று மெருகேற்றப்பட்டிருக்கிறது. ராஜகுமாரியின் தோழி ஒருத்தி அருகே நிற்கிறாள். அவள் கையில் தம்புரா கூட இருக்கிறது. நெற்றியில் நெற்றி சூடி - சந்திரப்பிறை உள்ளது. ஸீல்லாமே ஒரு நாடகக் காட்சியைப் பார்ப்பது போன்ற பிரமைகூட அல்ல, பிரமிப்பு!

ரதிதேவியின் கூந்தலை - அந்தத் தலைமுடியை - வாரிவாரியாக இழைஇழையாக அதுவும் கல்லிலே காட்டப்பட்டிருக்கும் திறமையை என்னவென்று சொல்வது!

ரதியின் மூக்கில் ஒரு சிறு துவாரம்கூட உள்ளது. எதற்கு? மூக்குத்தி போடவாம். ரதிக்கு ஒரு தோழி. வெற்றிலைபாக்கைத் துப்பப் பனிக்கம் (சிறு கிண்ணம்) ஒன்று அவள் கையில் உள்ளது. மற்றொரு தோழி, வெற்றிலையை மடித்துத் தருகிறாள்.

அடுத்து, நாம் அங்கே பார்ப்பது, ஏவலருடன் உள்ள வீரபுரத்திரர் சிலை. ஒரு கையில் கொம்பு வாத்தியத்துடன் காட்சி தரும் அவர் வலது காலை, இயல்பாக இல்லாமல் திருப்பி வைத்திருக்கும் நிலையில் காணப்படுகிறார். இங்கேயும் சிற்பியின் கைவண்ணத்தையே பார்க்கிறோம்.

இந்தச் சிலையிலும் விலா எலும்புகள் தத்ரூபமாகக் காட்டப்பட்டிருக்கின்றன. வீரபுரத்திரரின் தோழி ஒருத்தி பரதநாட்டியம் ஆடிக் கொண்டே, கிளிக்குப் பழம் தரும் காட்சியும் நம் கண்ணைக் கவர்கின்றது.

அதோ, வரிசையாக இரு பக்கமும் சிற்பக் கலையெழில் மிக்க தூண்களுடன் காட்சியளிக்கும் அந்த மண்டபம்தான் வீரப்பநாயக்கர் மண்டபம். 16-வது நூற்றாண்டில் கட்டப்பட்டது. இதை உற்சவ மண்டபம் என்றும் கூறுவர். இதேபோல உள் மண்டபம் ஒன்றும் காட்சியளிக்கிறது.

பொதுவாக, இங்குள்ள சிற்பங்கள் அனைத்துமே ஒரே கல்லால் உருவாக்கப்பட்டது.

தமிழகச் சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாய் விளங்கும் கிருஷ்ணாபுரம் சிற்பங்கள், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்துக்குப் பெருமை சேர்க்கும் ஒன்றாக நின்று நிலவி வருகின்றன.

- பி.வி. கிரி

களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம்

காடு, காட்டிலுள்ள விலங்குகள் இவற்றைப் பாதுகாப்பது மனிதனின் தலையாய கடமை. காட்டை வளர்ப்பதனால் இயற்கையையும் காட்டிலுள்ள விலங்குகளைப் பாதுகாப்பதனால் ஒரு நாட்டின் வளத்தையும் உணர்த்த முடியும்.

காடுகளையும், காட்டிலுள்ள விலங்குகளையும் வளர்ப்பதற்கு அரசு பலவித நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. முக்கியமாக புலிகளைப் பாதுகாப்பதில் அரசு தனித்த நடவடிக்கைகள் எடுத்ததன் மூலம், அவை அழிவதிலிருந்து பாதுகாக்கப்படுகின்றன. இந்தியாவில் புலிகள் காப்பகம் 18 இடங்களில் அமைந்துள்ளன. தமிழ்நாட்டில் களக்காடு- முண்டந்துறையில் புலிகள் காப்பகம் அமைந்துள்ளது.

களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், மேற்கு மலைத் தொடர் அடர்ந்த காடுகளின் தென்கோடியில் திருநெல்வேலி- கட்டபொம்மன் மாவட்டத்தில் சுமார் 817 சதுர கிலோமீட்டர் அளவில் நீண்டு விரிந்து 1988-ஆம் ஆண்டு உதயமாகியது. இப்பகுதியில் காண்பதற்குரிய வகை வகையான அரிய விலங்குகளும், தாவர இனங்களும் பெருகி நிறைந்துள்ளன. 175 குடும்பத்தைச் சார்ந்த 4,390 தாவர இனங்களில் 157 குடும்பத்தைச் சார்ந்த 2,105 இனங்கள் இவ்வன உயிர்க் காப்பகத்தில் மட்டுமே உள்ளன எனக் கணக்கிடப்பட்டுள்ளது. 17 வகையான விலங்கினங்கள் இங்கு வாழ்கின்றன.

தாமிரபரணி ஆறு, இவ்வன உயிர்ப் பகுதியாகிய மலையுச்சியிலிருந்து உற்பத்தியாகி பாம்பார், மைலார், காரையார், சேர்வலார், மணிமுத்தார், பேயார், உள்ளார், கவுதலையார் ஆகிய ஆறுகளில் இணைந்து, கலந்து, தவழ்ந்து வருவது கண்கொள்ளாக் காட்சியாகும். இதிலிருந்து சுமார் 48 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் திருநெல்வேலியிலிருந்து சுமார் 50 கிலோமீட்டர் தூரத்தில் இப்புலிகள் காப்பகம் அமைந்துள்ளது. மொத்த வன உயிர்ப் பரப்பளவான 817 சதுர கிலோமீட்டரில் 459 சதுர கிலோ மீட்டர் பகுதி இடையூறுகள் இல்லாத 'கோர் பகுதி' யாகவும், 358 சதுர கிலோமீட்டர் பரப்பளவு பஃபர் பகுதியாகவும் பராமரிக்கப்படுகிறது. 35 சதுர கிலோமீட்டர் பகுதி மட்டும் சுற்றுலாப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் 10 வகைக் காடுகள் உள்ளன. அவை: பசுமை மாறாக் காடுகள், பாதி பசுமை மாறாக் காடுகள், ஈரப்பசையுள்ள இலையுதிர்க் காடுகள், உலர் இலையுதிர்க் காடுகள், தேக்கு மரக் காடுகள், ஆற்றோரக் காடுகள், முட்புதர்க் காடுகள், ஈத்தக் காடுகள், புல்வெளிக் காடுகள், தட்ப வெப்ப இலையுதிர் காடுகள்.

இந்தியாவில் காணப்படும் 18 வகையான மனித இனமல்லாத குரங்கு வகைகளுள் சிங்கவால் குரங்கு, தேவாங்கு, கருமந்தி, ஹனுமான் மந்தி, போன்னட் குரங்கு ஆகிய 5 இனங்கள் உள்ளன. இவைகளுடன் மிளா, காட்டுப் பன்றி, புள்ளிமான், முள்ளம் பன்றி, கீரிப்பிள்ளை முதலிய பல விலங்குகள் உள்ளன.

இக்காப்பகம் இந்தியாவின் தென் கோடியிலுள்ள புலிகளின் உறைவிடமாக அமைகிறது. புலி தவிர சிறுத்தைப் புலி, காட்டுப் பூனை, புனுகுப் பூனை, செந்நாய், குள்ளநரி, கழுதைப்புலி ஆகிய மிருகங்களும் வாழ்கின்றன. மேலும் வரை ஆடு, கரடி, காட்டு மாடு, யானை, மலபார் அணில், பறக்கும் அணில், சருகுமான், அலுங்கு ஆகிய அரிய இன விலங்குகளும் காணப்படுகின்றன. ராஜநாகம், கட்டு விரியன், கண்ணாடி விரியன், பார்க் பிட் வைப்பர், உடும்பு, பல்லி, ஓணான், ஆமை, முதலை, அரிய வகைத் தவளை இனங்களும் உள்ளன. கொக்கு, நாரை, ஸ்பர்வுள், கதுவாலி, மினிவெட், ஈ உண்ணி, நைட்ஜார், கழுகு, ஸ்விப்ட், வாக் டெயில்ஸ், டிராங்கோஸ், பாரடைஸ் பிளைகேட்சர், பாரகீட் முதலிய 80-க்கும் மேற்பட்ட பறவையினங்கள் வாழ்ந்து வருகின்றன.

இப்புலிகள் காப்பகம் பற்றியும், திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சித் திட்டங்கள் பற்றியும் திருநெல்வேலி-கட்டபொம்மன் ஆட்சித் தலைவர் திரு வேலு அவர்களிடம் கேட்ட போது அவர் கூறியதாவது:

''இந்த வனக் காப்பகம் தென்றல் உற்பத்தியாகும் இடம். 60 சதவிகிதம் அரிய வகைத் தாவரங்கள் இங்கு உள்ளன. மூலிகைச் செடிகள் அதிக அளவில் காணப்படுகின்றன. சந்தனம், தேக்கு மரங்கள் பெரும் எண்ணிக்கையில் உள்ளன. இக்காடுகளில் அரிய வகைக் கற்கள் கிடைப்பதால் மக்கள் அதை எடுப்பதற்கு வருவதால் தமிழக அரசு பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி வருகிறது''

இப்புலிகள் காப்பகத்தில் ஆராய்ச்சி அதிகாரியாகப் பணி புரியும் திரு டி. பாண்டியன் அவர்கள் புலிகள் காப்பகம் பற்றியும் அதன் சிறப்புகள் பற்றியும் எடுத்துக் கூறினார். அழிந்து வரும் புலிகளின் எண்ணிக்கையைக் குறைக்க அரசும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக விளக்கினார். புலிகளின் வளர்ப்பு பற்றிய சிறப்புப் படங்களைக் காண்பித்தார். தலையணை என்ற இடத்தில் நூலகமும், அருங்காட்சியகமும், தங்கும் விடுதியும் உள்ளன.

புலிக் குட்டியானது பிறந்து 3 வாரங்கள் வரை கண் திறப்பதில்லை. அதுவரை புலி தனது குட்டிகளை மிகப் பாதுகாப்புடன் கவனித்துக் கொள்கிறது. 3 வாரத்திற்குப் பிறகு நடப்பதற்குப் பழகுகிறது. வளர்ந்தவுடன் உணவு வேட்டையாடச் செல்லும்பொழுது குட்டிகளையும் அழைத்துச் செல்கிறது. மானை வேட்டையாடியவுடன் குட்டிகளை உண்ணச் சொல்லி விட்டுக் காவல் புரிகிறது.

முண்டந்துறையில் இருந்து காரையார், கண்ணிக் கட்டி, பேயார், காளிபார் புல் மொட்டை வரை சுமார் 22 கிலோமீட்டருக்கு சாலை உள்ளது. கேரளாவில் இருந்து போனக்காடு எஸ்டேட் வரை ஒரு வழி உள்ளது. முண்டந்துறையில் இருந்து கேரளா வரை சாலை வரவேண்டும் என்று ஒரு திட்டம் உள்ளதாம். அத்திட்டம் நிறைவேறினால் இப்புலிகள் காப்பகம் பாடு திண்டாட்டமாகி விடும்.

முண்டந்துறையில் சின்ன மயிலார், பெரிய மயிலார், இஞ்சிக் குழி போன்ற கோர் பகுதியில் காணிக்காரர்கள் என்றழைக்கப்படும் 52 மலைவாழ் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. குச்சில்காடு பகுதியில் 15 குடும்பங்கள் உள்ளன. இந்தக் குடும்பத்தில் உள்ளவர்கள் மின்சார வாரியத்திற்குச் சொந்தமான நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துப் பயிர் செய்து வருகிறார்கள்.

களக்காடு-முண்டந்துறையில் 7 வனச் சரகம் உள்ளன. அவை: கடையம் வனச் சரகம், பாபநாசம் வனச் சரகம், முண்டந்துறை வனச் சரகம், அம்பாசமுத்திரம் வனச் சரகம், சேரன் மகாதேவி வனச் சரகம், களக்காடு வனச் சரகம், திருக்குறுங்குடி வனச் சரகம். ஒவ்வொரு சரகத்திற்கும் இடையே ஒரு கி.மீ. இடைவெளி உள்ளது. ஒவ்வொரு சரகத்திலும் 8 கண்காணிப்பாளர்கள் உள்ளனர்.

முண்டந்துறையில் எக்கோ வளர்ச்சித் திட்டத்தின் மூலம் மலைவாழ் கிராமங்களுக்கு இலவச மருந்து, ஆலோசனைகள் வழங்குகின்றனர். ஒவ்வொரு மாதமும் 5 கிராமங்களுக்கு 5 மருத்துவர்கள் சென்று சிகிச்சை செய்து வருகின்றனர். இந்த மருத்துவ முகாம்களுக்கு மக்களிடையே பெரும் வரவேற்பு ஏற்பட்டுள்ளது என்று வன விலங்கு உதவிக் காப்பாளர் திரு எபனேசர் அவர்கள் கூறினார்.

களக்காடு-முண்டந்துறை புலிகள் காப்பகத்தில் 2,500 அடி உயரத்தில் செங்குறிஞ்சி மரம் (Gluta Travncorca) உள்ளது. இது 24 ஆண்டுகளுக்கு ஒரு முறை மலரும் அதிசய குணம் கொண்டது.

ஊரும் பேரும்

சிவகிரி

தோப்புகள் நிறைந்த ஊர் இது எனலாம். அரண்மனைத் தோப்பு, கண்மாய்த் தோப்பு, புறகரைத் தோப்பு. சண்முக ஆல் தோப்பு, தென்னந்தோப்பு, மாந்தோப்பு ஆகியவை இங்கு மிகுதியாக உள்ளன. நெல் விளையும் பூமியான இங்கு மாம்பழத்துக்கும் குறைவில்லை.

புல்லர்ட்டன் என்ற ஆங்கிலேயத் தளபதி, மூன்று மைல் தூரத்துக்குக் காடுகளை அழித்து சிவகிரி கோட்டையைக் காப்பாற்றினார் என்பது வரலாறு.

தமிழே! உன்னை வாழ்விக்க வாழ்வதுதான் நெல்லைச்சீமை!

நிலமகளின் தலைமகளே தமிழே! உன்னை
நீள்மாடக் கூடல்நகர் வளர்த்த போதும்
மலைமகளின் தலைமகளாம் பொதியை தானே
மணிவயிற்றில் தாங்குகின்ற பேறு பெற்றாள்!
அலைமகளின் தலைமகளாம் பொருநை யாற்றின்
அன்புத்தாய் ஆனவளும் அவளே! அந்த
மலைமகளின் காலடியில் மணக்கும் நெல்லை
மாநகரே கலைமகளின் கோவில் அம்மா!

மலையினிலே நீபிறந்தாய் உனைவ ளர்க்கும்
மரபுடையார் சாரலிலே பிறந்த வந்தார்!
தலையினிலே நீபிறந்தாய், தாயே, உன்னைத்
தாலாட்டு வோர்நெல்லை தனிற் பிறந்தார்!
அலைமரபு தொடர்வதைப்போல் தொடரும் நெல்லை
அறிஞர்புகழ் யாருரைக்கக் கூடும்! ஏதோ
சிலபெயரை மட்டும்நான் செப்பு கின்றேன்
சிற்றரிசிச் சித்திரமிக் கவிதை யம்மா!

தென்னாதமிழ் அகத்தியனார், திருமால் பக்திச்
சிறப்புரைத்த நம்மாழ்வார், திசைகள் போற்றும்
வள்ளுவத்தின் உரைப்பரிமேல் அழகர், என்றும்
வாழும் சே னாவரையர், சிவஞா னத்தார்

உள்ளுதொறும் இனிக்கும்அதி வீர ராமர்
உலகறிந்த குமரகுரு, கடிகை முத்து,
கள்ளவிழும் மலர்க்கூந்தல் பிராட்டி எங்கள்
காந்திமதி தனைப்பாடும் சொக்க நாதர்

கவிராச பண்டிதனார், கிருஷ்ணப் பிள்ளை
காவடிச்சிந் தனித்தஅண்ணா மலையார், தெய்வச்
செவிகளிக்கக் கவியளித்த தண்ட பாணி,
திரிகூட ராசப்பன், பூர்ணலிங்கம்
புவிமதிக்கும் மில்டனையே தமிழில் தந்த
புகழாளர் வெள்ளக்கால் சுப்ர மண்யர்,
அவனி தொழத் தமிழ்வளர்த்த கா. சுப் பிள்ளை,
அனவரத விநாயகனார், மாத வய்யா,

செக்கிழுத்த சிதம்பரனார், கம்பன் பாட்டுச்
சிறப்புரைத்த டி.கே.சி., நெல்லை யப்பர்,
மக்கள் தமிழ் தனைத்தந்த சொக்க லிங்கம்,
மகராச நீதிபதி, அறிஞர் பி.ஸ்ரீ.,
சொக்க வைத்த சங்கரதாஸ், இசைவெள் ளத்தில்
சுழலவைத்த கிட்டப்பா, சேதுப் பிள்ளை,
நக்கீர எழுத்தாளர் புதுமைப் பித்தன்,
நல்லறிஞர் பெ.நா.அ, நற்பா வாணர்,

ஆய்வறிஞ ராம்வையா புரியார், நல்ல
அ.சீ.ரா., பாஸ்கரர், சுப் பையா பிள்ளை,
காய்கதிர்போல் கனன்றெழுந்த தமிழர் தந்தை
கவிபோற்றும் ஆதித்தர் இவர்க ளோடு
தேய்வறியாத் தமிழ்நிலவு கவிதைத் கோமான்
தீரரெங்கள் பாரதியார் வாழ்ந்த சீமை!
வாய்வலிக்கச் சொல்வானேன், தமிழே, உன்னை
வாழ்விக்க வாழ்வதுதான் நெல்லைச் சீமை

- கவிஞர்!!
இளந்தேவன்





நூல் நயம்

உத்தரமேரூர் உலா

ஆசிரியர்: இனியவன்
வெளியீடு:
வாசுகி நூலகம்,
விநாயகநல்லூர்,
வேடந்தாங்கல் அஞ்சல்-603 314.
பக்கம்:136 விலை:ரூ.30/-

ஊரும் பேரும் அறிந்து கொள்ள ஆவல் எழுவது இயல்புதானே? அந்த வகையில் உத்தரமேரூர் குறித்த செய்திகளையெல்லாம் ஒருசேரத் தொகுத்துத் தந்திருக்கிறார் நூலாசிரியர்.

இந்த நூலில் உத்தரமேரூர் குறித்த விரிவான வரலாற்றுச் செய்திகள், செவி வழிக் கட்டுக் கதைகள் ஆகியவற்றோடு நிகழ்கால உண்மைகளும் இழையோடி இருக்கின்றன.

புதுமைச் சிறப்போடு விளங்கும் புத்தக அமைப்பு நூலுக்கு மெருகேற்றுகிறது. பண்டைய சிறப்பை விளக்கும் இந்நூல், பள்ளி மாணவர்க்கு மட்டுமல்ல, இத்துறை ஆர்வலருக்கும் பயன் தரும் களஞ்சியமாகும்.

—பி.வி.ஜி.

ஞானக்கடல் பட்டினத்தார்

ஆசிரியர்: மயிலைத் தொண்டன்
வெளியீடு:
தமிழ்மணி பதிப்பகம்,
107-ஏ, பெரியார் பாதை (மேற்கு)
தூளைமேடு, சென்னை-94.
பக்கம்:112 விலை:ரூ.16/-

பக்திச் சுவையுடன் சமுதாயச் சீரழிவுகளையும் இழையவிட்டுப் பாடியவர் பட்டினத்தடிகள்.

இந்நூலில் அவரது வரலாற்றோடு, அவர் மனித குலத்துக்கு வழங்கிய மாபெரும் கருத்து மணிகளை ஆங்காங்கே ஒலித்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

மானிட வாழ்க்கையின் தத்துவமும், மாய வாழ்க்கையின் மன மயக்கமும் அழகுற எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அனைவரும் படிக்க வேண்டிய நூல்.

மென்மலர்

ஆசிரியர்: ரா. ராஜதுரை
வெளியீடு:
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
பார்க் டவுன், சென்னை-600 003.
பக்கம்:87 விலை:ரூ.25/-

மிகச் சிறந்த பத்துச் சிறுகதைகளின் தொகுப்பாகும் இது. முதல் கதை 'மென்மலர்' மனத்தை நெகிழ வைக்கிறது. இதே போல, மற்ற கதைகளும் சமுதாயப் பிரச்சினைகளை நமக்கு உணர்த்துகின்றன. ஆசிரியரின் எளிய நடை இதயத்தைத் கவருகின்றது. எப்போதோ எழுதப்பட்ட சிறுகதைகள் என்றாலும், இப்போதும் படிக்கத் தூண்டுகிறதே!

புதுயுகச் சிற்பி

ஆசிரியர்: கவிஞர் துளசிதாசன்
வெளியீடு:
துளசிதாசன் பதிப்பகம்,
26, டாக்டர் பெசன்ட் சாலை,
சென்னை-600 004.
பக்கம்:80 விலை:ரூ.12.50/-

புதுக் கவிதைகளின் தொகுப்பு. பல கவிதைகள் இதயத்தைத் தொடுகின்றன. சமுதாயப் பிரச்சினைகளைப் படம் பிடித்துக் காட்டும் பாடல்கள் பல. குழந்தைகளுக்கும்கூடப் பாட்டு உண்டு.

மதம் அழிப்போம் - ஜாதி
மதம் அழிப்போம் - தம்பி
'மதம்' எனும் நச்சதன்
வேரறுப் போம்!'

என்கிறார்.

கடலூர் மணிமாறன் பாடல்கள்

ஆசிரியர்: டாக்டர் கடலூர் மணிமாறன்
வெளியீடு:
விடியல் வெளியீட்டகம்,
109, மேலைத்தெரு,
கிருட்டிணராயபுரம்-639 102.
திருச்சி.
பக்கம்:112 விலை:ரூ.15/-

இந்நூலில் 54 கவிதைகள் உள்ளன. ஒவ்வொன்றும் தித்திக்கும் தீங்கரும்பு. பாவேந்தர் பக்கம், கொள்கை முழக்கம், குமுகாயச் சிந்தனை ஆகிய மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

பாவேந்தரைப் பற்றிக் கூறுகையில், 'வளமான சிந்தனையின் உரைகல்' என்றும், 'விழிப்புக்கு நாற்றங்கால் நீயே' என்றும் தமக்குப் பின்னால் பன்னூறு பாமலரை அரும்பச் செய்த பாங்குமிகு பூம் பொழிலே!' என்றும் போற்றுகிறார்.

குமுகாயச் சிந்தனையில், 'இல்லாமை இடம்பெயர வேண்டும்' என்கிறார். நல்ல கவிதைத் தொகுப்பு.

குளிர் சாதனங்கள் ஏர்கண்டிஷன் ரெப்ரிஜிரேஷன்

ஆசிரியர்: ஏ.கே. சேஷய்யா
வெளியீடு:
கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்,
வடபழனி, சென்னை-600 026.
பக்கம்:112 விலை:ரூ.16/-

ஒரு காலத்தில் ஆடம்பரப் பொருளாகக் கருதப்பட்ட குளிரூட்டும் பெட்டி (ரெப்ரிஜிரேட்டர்) இன்று பல மத்தியத் தரக் குடும்பங்களில் பயன்படுத்தப் படுகிறது. குளிர்சாதனப்பெட்டி இன்று ஒரு இன்றியமையாத சாதனமாக அமைந்து விட்டது. இதைப்போலவே இன்று பல அலுவலகங்கள் மற்றும் உயர்தரக் குடும்பங்களில் ஏர்கண்டிஷன் அமைக்கப்பட்டு பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

இவ்விரு குளிர்சாதனங்களைப் பற்றி விவரமாக எடுத்துரைக்கிறது இந்நூல். இந்தக் குளிர்சாதனங்களின் அமைப்பு முறை, இவற்றில் பயன்படுத்தப்படும் வாய்ப்புகள், இயங்கும்முறை ஆகியன பற்றிப் படங்களுடன் விளக்கியிருக்கிறார் ஆசிரியர்.

குளிர்சாதனங்களைப் பழுதுபார்க்கும் முறைகள் பற்றி இந்நூலின் கடைசி அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது, இந்தச் சாதனங்களை வைத்திருப் போருக்குப் பயன்தரக் கூடியது ஆகும்.

—ஜே.சந்திரன்

'கொலைகாரன் கை'

ஆசிரியர்: மோபசான்
வெளியீடு:
சாந்தா பப்ளிஷர்ஸ்,
5, ஸ்ரீபுரம் 2-ஆம் தெரு,
இராயப்பேட்டை, சென்னை-600 014.
பக்கம்:110 விலை:ரூ.15/-

மோபசான் சிறுகதைகளின் தமிழ் மொழி பெயர்ப்பு நூல்.

ஒவ்வொரு சிறுகதையையும் ஓர் எழுத்தாளர் மொழிபெயர்த்திருக்கிறார். 'பிரெஞ்ச்' மொழியிலிருந்து நேரடியாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளதாலும், இவற்றை மொழி பெயர்த்துள்ள அறிஞர் பெருமக்கள் பிரெஞ்ச், தமிழ் மொழிகளில் புலமை பெற்றவர்கள் என்பதாலும், இக்கதைகளில் மோபசானின் எழுத்தில் உள்ள உணர்வுகளையும், உயிரோட்டத்தையும் காண முடிகிறது.

பல அற்புத மலர்களின் மணங்கமழும் கதம்ப மாலை இந்நூல்.

—என். குமாரசாமி

முக்களாட்சித் தத்துவத்தின் மாட்சிக்கு அடிப்படை- பயனுள்ள விவாதங்களே...

அகில இந்தியச் சட்டப்பேரவைத் தலைவர் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் உரை

அகில இந்தியச் சட்டப்பேரவைத் தலைவர்கள் மாநாடு தொடர்பாக நடத்தப்படும் இந்தக் கருத்தரங்கின் தொடக்க விழாவில் உங்களோடு கலந்து கொள்ளும் வாய்ப்பை எனக்குத் தந்த மாண்புமிகு நாடாளுமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெருமைமிகு இம்மாநாடு, உன்னதமான சென்னை மாநகரில் நடைபெறுவது குறித்து, நான் தனிப்பட்ட முறையில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இங்கு தங்களுக்கு உயர்ந்த தங்குமிட வசதிகள் செய்யப்பட்டிருக்கும் என்பதோடு உங்களுடைய விவாதங்கள் பயனுள்ளவையாகவும் ஆக்கப்பூர்வமாகவும் அமையும் என நான் நம்புகிறேன்.

இங்கே தங்கியிருக்கும் இந்தக் கால கட்டத்தில் தமிழகச் சட்டப்பேரவை ஆவணக் காப்பகத்துக்குச் சென்று, அங்குள்ள ஆவணங்களைப் புரட்டிப் பார்த்து, இந்தப் பேரவை பாதுகாத்துப் பேண விரும்புகின்ற மரபுகளையும் பண்புகளையும் நீங்கள் அறிந்து கொள்ள இது ஒரு வாய்ப்பாக அமையும் என நம்புகிறேன்.

புகழ்வாய்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் மாபெரும் தலைவர்களும் இதே மண்டபத்தில் அமர்ந்து நம் நாட்டின் சட்டப்பேரவை வரலாற்றுக்குக் குறிப்பிடத்தக்க பங்கினை அளித்துள்ளார்கள். தலைசிறந்த அரசியல் தலைவர்கள் இந்த உன்னத அவையில் நடைபெற்ற விவாதங்களில் பங்கெடுத்ததன் மூலம் ஜனநாயக மரபுகளை வரைமுறைப்படுத்தி வடிவமைத்துள்ளார்கள். தொலைநோக்குப் பார்வையையும், மக்களின் நலன்களையும் தங்கள் இதயங்களில் நிறுத்திய மாமனிதர்கள். இங்கே உறுப்பினர்களாகிய

சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு மக்களின் பொருளாதார, சமூக வளர்ச்சிக்கான கொள்கைகளை வகுப்பதில் அரசுக்கு உதவியாக, இருந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட தலைவர்களின் பெயர்ப் பட்டியல் மிக நீளமாக இருப்பதால், அவர்கள் அனைவரின் பெயர்களைக் குறிப்பிடுவது கடினமாக உள்ளது. அவர்களில் ஒரு சிலரை மட்டும் குறிப்பிட்டால், நான் பாரபட்சமாக நடந்து கொள்ளுகிறேன் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாவேன்.

இங்கே அங்கம் வகித்த உறுப்பினர்களின் உயர்ந்த தரத்தின் காரணமாக, அகில இந்தியச் சட்டப்பேரவை வரலாற்றில், தமிழ்நாடு சட்டப்பேரவை ஒரு பெருமைமிகு இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதை மட்டும் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

எனவே, தமிழ் மக்களின் தலை நகராம் எழில்மிகு சென்னையை, அதுவும், மதிநுட்பமும், தேர்ந்த அணுகுமுறையும் ஒருங்கே இணைந்து சட்டமன்றத்தின் சிறப்பான இயக்கத்துக்குக் காரணமான மக்களைக் கொண்ட தமிழகத்தின் தலை நகரை நீங்கள் தேர்ந்தெடுத்திருப்பது சாலப் பொருத்தமானதாகும்.

சட்டமியற்றும் அவை, நாடாளுமன்றமுமாக இருந்தாலும், சட்டப்பேரவை அல்லது மேலவையாக இருந்தாலும் அது மக்களாட்சியின் மையமாகவே விளங்குகின்றது. அது மக்களாட்சிப் பண்புகளின் இதயமாகவும், ஆன்மாவாகவும் உள்ளது. அது அரசியல் அமைப்பின் உண்மையான சிறு வடிவமாக (true miniature) அமைகிறது. மக்களின் எண்ணங்களைப் பிரதிபலித்து, கருத்துக்களாக அவற்றை உருவாக்கி, சட்டங்களாக இயற்றி, செயல் திட்டங்களாக அது நிறைவேற்றுகிறது.

''மக்களுக்கும் அரசுக்கும் இடையே பாராளுமன்றம் ஒரு பாலமாக அமைகிறது. சூழ்நிலைகளைப் புரிந்து கொள்ளவும், உருவாக்கவும் இயலும் இடமாக இது அமையும். பேரவை உறுப்பினர்கள் மக்களின் கருத்துக்களை வெறுமனே பின்பற்றுகிறவர்களாக இல்லாமல், அவர்களை வழிநடத்துபவர்களாக இருக்க வேண்டும்'' என்று டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்கள் கூறியிருக்கிறார்கள். எனவே, பேரவையானது, தலைமைப் பண்பு மற்றும் அரசியற்கலை ஆற்றல்களை வெளிப்படுத்திக் காட்டுகிற சிறந்த வாய்ப்புகளை நல்குகிறது. பேரவையின் கவனம், நிகழ்காலப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்ற அளவோடு நின்றுவிடுவதில்லை; எதிர்காலப் பிரச்சினைகளுக்காகவும், அரப் பணிக்கின்ற வகையில் இருக்குமானால் அது நிகழ்காலத் தேவையை நிறைவு செய்வதோடு எதிர்காலச் சமுதாயத்தின் நலனையும் கருத்தில் கொண்டதாக அமையவேண்டும். ஹெரால்டு லாஸ்கி சொன்னதைப் போல, பிரச்சினைகளை வெறுமனே உற்று நோக்காமல், அவைகளைப் பற்றிய ஒரு விசாலமான பார்வையும் இருந்திடல் வேண்டும். இத்தகைய செயல்பாடுகள் தான் பேரவை அதன் உண்மையான நோக்கத்தை நெருங்கச் செய்யும்.

குடியாட்சிக் கோட்பாட்டுக்குக் கட்டமைப்பும் வடிவமும் தந்து, அதைச் செயல்படச் செய்யும் முக்கியமான ஒரு அமைப்பு சட்டப்பேரவையாகும். ஆனால், மக்களின் எதிர்பார்ப்புகளே அதிமுக்கியத்துவம் வாய்ந்தவையாகும். 'மக்கள்' 'சக்தி' என்று பொருள்படும் இரண்டு கிரேக்கச் சொற்களிலிருந்து வந்தது தான் 'மக்களாட்சி' என்னும் சொல் ஆகும். அதன் சொற்பொருள் 'மக்களின் ஆட்சி' என்பதே ஆகும்.

இதைத்தான் 'மக்களால், மக்களுக்காக, மக்களே நடத்தும் மக்களின் அரசு' என்று அருமையாகக் குறிப்பிட்டார், ஆபிரகாம் லிங்கன்.

இன்றைய மக்களாட்சி அமைப்பில், மக்களால் தேர்வு செய்யப்பட்ட பேரவை மக்களின் எதிர்பார்ப்புகளை வலியுறுத்துகிற இடம் அதோடு நிர்வாக அமைப்பானது பேரவைக்குப் பதிலளிக்கக்கூடிய பொறுப்பையும் உள்ளடக்கியதாகவுள்ளது.

பண்டைய கிரேக்கத்தில் மக்களாட்சி முறை விரிந்து பரந்திருந்தது. ஆனால், அப்போது இருந்த மக்களாட்சி முறை தற்போதைய மக்களாட்சி முறையில் அடிப்படையிலேயே வேறுபாடு கொண்டதாக உள்ளது. அன்றைய மக்களாட்சி நேரடியானது; அதாவது இன்றைய பிரதிநிதித்துவ முறை அன்றைய மக்கள் அறிந்திராத ஒன்றாகும். மேலும் இந்த அரசமைப்பில் அனைத்து மக்களும் ஈடுபாடு கொண்டிருந்தனர். ஏனெனில், மாநிலம் என்பது ஒரு நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளை உள்ளடக்கிய குறுகிய எல்லை கொண்டதாக இருந்தால் அது சாத்தியமாமிற்று.

இன்று மக்களாட்சி தத்துவம் சட்டப்பேரவையில் வெளிப்படுத்துப்படுகிறது. சட்டப்பேர்வையில் மக்கள் பிரதிநிதித்துவ அமைப்பின் மூலம் இது வெளிப்படுகிறது. சட்டப்பேரவை அலுவல் நடைமுறை மற்றும் செயல் முறைகள் மூலமும்

> ''எல்லாச்சட்டமன்றங்களுக்கும் அனுப்பவேண்டிய சிறந்த உரை!''
>
> **மாண்புமிகு தமிழக முதல்வர் உரைக்கு மக்களவைத் தலைவர் திரு சிவராஜ் பட்டீல் பாராட்டு!**
>
> ''இன்று நமது கருத்தரங்கின் பொருளான ''அவையில் விவாதத்தின் தரத்தை எவ்வாறு உயர்த்துவது'' என்பது குறித்து முதல்வர் ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை எண்ணங்களைத் தூண்டுவதாகவும், முழுமையாகவும் இருந்தது. அவரது உரை எங்களுக்கு உற்சாகமூட்டுவதாக இருந்தது.
>
> ''அனைத்து மாநிலச் சட்டமன்றங்களுக்கும் கற்றறிக்கை அனுப்பக்கூடிய வகையில் அவரது உரை இருந்தது. அவையில் பேசக்கூடிய பேச்சாளர்களுக்குத்தான் இந்த உரை என்று கருதுகிறேன்.
>
> ''முதல்வர் ஜெயலலிதா அவர்களின் இந்த உரை, இன்றைய கருத்தரங்கின் தரத்தை உயர்த்திவிட்டது. இந்தக் கருத்தரங்குக்கு மேலும் புகழைச் சேர்த்து அதிக அர்த்தமுள்ளதாக ஆக்கிவிட்டது. அவருக்கு நாங்கள் அனைவரும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்''.

நம்பிக்கையைக் கைவிடாதே. அதுதான் வெற்றியின் முதல் படிக்கட்டு.
- பேரறிஞர் அண்ணா

மாண்புமிகு உறுப்பினர்களின் செயற்பாடுகளின் வெளிப்படுத்தப்படுகிறது. எனவே, இன்று மக்களாட்சியைச் செயல்படுத்துவது மிகச் சிக்கலான பணியாகும். அது, சட்டப்பேரவையின் அன்றாடப் பணிகளுடன் நின்றுவிடுவது மட்டுமல்ல; மக்கள் சக்தியில் நம்பிக்கை வைத்திருக்கும் பொதுப் பிரச்சினைகளை நிர்வகிப்பதில் தகுந்த அணுகுமுறையைப் பயன்படுத்துவதாகவும் அமையவேண்டும்.

குறிப்பிட்ட வாழ்க்கை முறைகளையும், ஒழுங்குமுறைகளையும் கடைப்பிடிக்க வேண்டுமென மக்களாட்சி முறை நெறிமுறைப்படுத்துகிறது. இவையனைத்தும், மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காகச் சமுதாயத்தின் சக்தியினை ஒருமுகப்படுத்துவதற்கே ஆகும். பகுத்துப் பார்த்தல், அலசிப் பார்த்தல், விவாதித்தல், பொருத்தமானவற்றை ஏற்றுக்கொள்ளுதல் என்பவைகள் பிரச்சினை தீர்க்கும் அணுகுமுறையாக இருக்க வேண்டுமென வலியுறுத்துகிறது. சுருங்கக் கூறின், மக்களாட்சி நமக்கு ஒரு கண்ணோட்டத்தையும், வாழ்க்கை முறையையும் தந்து, சில லட்சியங்களையும், கோட்பாடுகளையும் சிறந்த நடைமுறைகளையும் ஏற்றுக் கொள்ளச் சொல்கிறது.

சிந்திக்கவும், சிந்தித்ததை வெளிப்படுத்தவும், தேவையான சுதந்திரத்திற்கு மக்களாட்சி வழிவகுக்கிறது. ஆனால், இந்தச் சுதந்திரம், நடுநிலையோடு கனிவுடன் அடுத்தவர்களின் எண்ணங்களுக்கும், நோக்கங்களுக்கும் மதிப்பளிப்பதாக இருக்க வேண்டும். மக்களாட்சியின் வெற்றிக்கும் இதுவே அடிப்படையாகும். ஒரு குழப்பமான நிலைமைக்கு மக்களாட்சி இறங்கிவிடக்கூடாது. அதே நேரத்தில், மக்களாட்சி பெரும்பான்மையினரின் அல்லது சிறுபான்மையினரின் கொடுங்கோல் ஆட்சியாகவும் மாறிவிடக்கூடாது.

என்னைப் பொறுத்தவரையில், மக்களாட்சி செயல்பாட்டுக்குச் சரியான அடையாளம் என்பது வேறு எதையும்விட நமது சாதனைகளின் தரம், எண்ணங்களின் தரம், அரைகளைப் பிரதிபலிக்கும் விதம் ஆகியவைகளைப் பொறுத்தே அமையும்.

விவாதித்தல், விவாதிப்பதன் மூலம் நமது கருத்துக்களை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ள வைத்தல், மாறுபட்ட கருத்துக்களைச் சரி செய்து கொள்ளுதல் ஆகியவையே மக்களாட்சி அணுகுமுறையாகும். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது சரியான நிலையையோ, தங்களுடைய கருத்தில் புதைந்துள்ள நியாயங்களையோ, தங்கள் தத்துவங்களின் ஏற்றுக் கொள்ளக் கூடிய தன்மைகளையோ, சக உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் முன் வைப்பதே விவாதமாகும். சிந்தனைகளைத் தூண்டும் விதமாகவும் விவாதங்கள் உயர்தரமாக அமைய வேண்டும். சிறந்த விவாதம் என்பது திறமைகளை மட்டுமே வெளிப்படுத்துவதாகாது. அது நாகரீகத்தையும், நன்னடத்தையையும் பிரதிபலிப்பதாகும்.

நாம் நமது பேரவைகளை அமைக்கும் போது 'பாராளுமன்றங்களின் தாய்' என்று, அழைக்கப்படும் ஆங்கிலேயப் பாராளுமன்ற முறையின் தாக்கத்தால் உந்தப் பெற்றோம். கருத்துக்களைப் பிரதிபலிப்பது என்ற வகையில் விவாதங்கள், ஆங்கிலேய மக்களவையில் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளன. இங்கிலாந்து மக்களவையில் மூன்றில் ஒரு பங்கு நேரம் விவாதங்களுக்காகவே ஒதுக்கப்படுகிறது என அறிகிறேன். கிளாட்ஸ்டன், டிஸ்ரேலி, வின்ஸ்டன் சர்ச்சில், ஆட்லி ஆகிய பிரபல அரசியல் வித்தகர்கள் தங்களுடைய வரலாற்றுப் புகழ் மிக்க விவாதங்களின் மூலம் சமுதாயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். கட்சிக் கண்ணோட்டத்தில் மற்றவர்கள் மீது புழுதி வாரி வீசுதல் - தம் கட்சிக்குப் பலம் சேர்த்தல் என்பவற்றைத் தாண்டி வெற்றுச் சடங்காக இல்லாமல் அமைகின்ற வாதமே சிறப்புடைய வலிமையான வாதமாகும். பிரச்சினைகளை அலசி, அடுத்தவர்களுடைய கருத்துக்களை நன்கு புரிந்து கொண்டு அவைகளைத் திறமையாக மடக்கும் திறமையை இது பிரதிபலிக்கிறது.

சட்டமன்றம் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் தலை சிறந்த சாதனமாகவே 'விவாதம்' நிலை நிறுத்தப்படுகிறது. இங்கிலாந்து நாட்டில், கடினமான கால கட்டங்களில், நாட்டின் ஒட்டுமொத்த மனநிலையை வெளிப்படுத்த விவாதங்கள் பயன்படுத்தப்பட்டன. 1940 மே திங்களில் நார்வே படையெடுப்புப் பற்றி இரண்டு நாட்களாக இடைவிடாது நடைபெற்ற ஆணித்தரமான விவாதங்களின் காரணமாகத்தான் போர்க்காலப் பிரதமராக இருந்த நெவில்சேம்பர்லின் பதவி விலக வேண்டியிருந்தது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. அண்மையில், 1982, ஏப்ரல் திங்கள் 2-ஆம் நாள் பாக்லாந்து தீவுகளின் மீது எடுக்கப்பட்ட படையெடுப்பின் போது, இங்கிலாந்து பாராளுமன்றத்தில் கொட்டப்பட்ட உணர்ச்சிகள் நாட்டு மக்களின் ஒட்டுமொத்த எண்ணங்களைப் பரதிபலிப்பதாக அமைந்தன. எதிர்க்கட்சித் தலைவர் திரு மைக்கேல் புட் அவர்களின் உணர்ச்சிகரமான முழக்கத்தைத் தொடர்ந்து தான் அர்ஜென்டினாப் படைகளை வெளியேற்ற திருமதி தாட்சர் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைஏற்பட்டது. தவறான, மிருகத்தனமான ஆக்ரமிப்பு உலகில் வெற்றியடையாது என்பதை அரசாங்கம் இப்பொழுது செயல்களின் மூலம் நிரூபித்தாக வேண்டும். அவற்றை வார்த்தைகளால் எப்போதுமே சாதிக்க முடியாது. அப்படி இந்த ஆக்ரமிப்பு வெற்றி பெற்றுவிட்டால், அது பாக்லாந்து தீவுக்கு மட்டுமல்ல, அபாயகரமான இந்தப் பூமிப்பந்தில் வாழும் அனைத்து மக்களுக்கும் ஆபத்தாகவே முடியும்.

இங்கிலாந்து மக்களவையின் உறுப்பினர்களின் விவாதத் திறமைகளைக் கொண்டே அவர்களின் அரசியல் அந்தஸ்து உயர்ந்தும் தாழ்ந்தும் இருக்கின்றன. உறுப்பினர்களின் அறிவாற்றலையும், மற்றவர்கள் தங்கள் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவைக்கும் ஆற்றலையும் பரிசோதிப்பதாக இந்த விவாதங்கள் அமைகின்றன. சிறந்த அரசியல் வாதியின் படைக்கலன்களில், விவாதம் ஓர் இன்றியமையாத ஆயுதமாகவே கருதப்படுகிறது. ஆகவே, விவாதங்கள், விவாதங்களாக மட்டுமல்லாமல், அரசின் கொள்கைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதால் உயர்ந்த மதிப்பையும் பெற்றுள்ளன. விவாதங்கள், ஆளுங்கட்சியினருடையதாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியினருடையதாக இருந்தாலும் சரி, அமைச்சர்கள் தொடர்ந்து தங்களுடைய கொள்கைகளையும் செயற்பாடுகளையும் வகுத்துக் கொள்ளப் பெரிதும் உதவுகின்றன.

சட்டமன்றம் வெற்றிடத்தில் பணிபுரியவில்லை. எனவே, சட்டமன்றத்தின் தாக்கம் மக்களிடையே அது கொண்டுள்ள உறவைப் பொறுத்துள்ளது.''

''சட்டப்பேரவை தேசத்தின் ஒலிக் கருவியாகும். அது மக்களுக்காகவும் பேசுகிறது மக்களுடனும் பேசுகிறது'' என்று இலாயிட்ஸ் ஜார்ஜ் கூறினார். எனவே, சட்டப்பேரவையின் விவாதங்கள் மக்கள் கருத்துப் பாதிக்கின்றன. மக்கள் கருத்தாலும் பாதிக்கவும் படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய

பொறுப்புகளை நிறைவேற்ற ஒரு கருவியாக விவாதங்களைப் பயன்படுத்தும் அளவில் சட்டப்பேரவையின் வெற்றிகரமான இயக்கம் உறுதி செய்யப்படுகிறது.

மற்றொரு முக்கியமான பொருளை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஜனநாயகத்தில் ஒரு முக்கியமான அம்சத்தைச் சட்டப்பேரவைகள் கோடிட்டுக் காட்டுகின்றன. அதாவது, தார்மீக அணுகுமுறையின் அவசியத்தை அவை வற்புறுத்துகின்றன. விவாத முறையன் மூலம், மாண்புமிகு உறுப்பினர்கள், கட்டுப்பாட்டின் முக்கியத்துவத்தை ஏற்றுக் கொண்டு, பிரச்சினைகளைத் தீர்க்க ஒப்புக்கொள்கிறார்கள். டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் ஒரு முறை கூறினார்.

''மக்களாட்சித் தத்துவத்தின் அறப் பண்புகளை நாம் வலியுறுத்துகிறோம். நாம் விண்ணப்பித்து நற்பலன் அடைகிற அளவுக்கு ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் பகுத்தறிவுக்கூறு இருக்கிறது என்று கருதுகிறோம். நாம் எப்போதும் சரியாகத்தான் இருப்போம் என்று சொல்ல முடியாது, என்பதையும், நமது எதிராளிகள் சில நேரத்தில் சரியாக இருப்பார்கள் என்பதையும் நாம் நம்ப வேண்டும். நமது எதிராளிகளிடத்திலும் சில நற்பண்புகள் இருக்கலாம் என்பதை ஒத்துக் கொள்கின்ற வகையில் நமக்குத் தன்னடக்க உணர்வைத்தான் - குடியாட்சித் தத்துவம் நம்மிடத்தில் வலியுறுத்துகிறது. மற்றவர்களைப் புரிந்துகொள்ள வேண்டியதும் அவர்களோடு இணக்கமான ஒரு முடிவுக்கு வரவேண்டியதும் நம்முடைய கடமையாகும். மக்களாட்சிக் கோட்பாடும், வன்முறைச் செயல்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாகும் .

சட்டப்பேரவையில் விவாதங்களின் போது மாண்புமிகு உறுப்பினர்கள் வெளிப்படுத்தவேண்டிய அடிப்படை நாகரீகத் தன்மைகளையே டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்களுடைய வார்த்தைகள் வலியுறுத்துகின்றன. இந்தியாவில் உள்ள பாராளுமன்றமும் சட்டமன்றங்களும் பல ஆண்டுகளாக மாண்புமிகு உறுப்பினர்களுடைய கண்ணியத்தையும், உரிமைகளையும், கடமைகளையும், நன்னடத்தைகளையும் முதன்மைப்படுத்தக் கூடிய நெறிமுறைகளை வகுத்து நடைமுறைப்படுத்தி வந்துள்ளன. விவாதங்களை நடத்துவதற்குரிய விதிமுறைகளை நான் குறிப்பிட்டுக்காட்டத் தேவையில்லை. ஏனென்றால், நம் அனைவருக்குமே அவைகள் நன்கு தெரியும். விவாதங்களின் பொருளடக்கம், அதன் தன்மைகளும் பெரும்பாலும் மாண்புமிகு உறுப்பினர் ஒவ்வொருவரும் மக்களாட்சித் தத்துவத்தைப் புரிந்து கொள்ளும் அளவைப் பொறுத்தே அமையும். எனவே தான், இந்தக் கொள்கைகளை உங்களுக்கு விளக்குவதில் உங்கள் பொன்னான நேரத்தை நான் எடுத்துக்கொண்டுள்ளேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய தனிப்பட்ட நடத்தையால் ஒளிமிக்க சாதனைகளால், மக்களாட்சி முறையில் வைத்த நம்பிக்கையாலும், உறுதிப்பாட்டாலும், சபையின் கண்ணியத்தையும், பெருமையையும் உயர்த்துகிறார்கள் என்பதை அவர்கள் உணர வேண்டும். பழுத்த பல பாராளுமன்ற உறுப்பினர்கள், தங்களுடைய பேச்சின் உயர்ந்த தரத்தாலும், தெளிந்த எண்ணங்களாலும் மட்டுமல்லாமல் தங்களின் கடமை உணர்ச்சியாலும் சட்டப் பேரவையின் நெறிமுறைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற ஊக்கத்தாலும், உண்மை உணர்வாலும் தங்களின் தனிப்பட்ட ஆளுகையால் பாராளுமன்ற வரலாற்றில் தங்களின் முத்திரைகளைப் பதித்துக் சென்றிருக்கிறார்கள்.

சட்டப்பேரவையில் சிறந்த பேச்சாளராக ஆவதற்கு, மாண்புமிகு உறுப்பினர்கள் இடைவிடாத கடும் உழைப்பின் மூலமாக இத்தகைய தேவையான பண்பு நலன்களைப் பெறவேண்டும். பேச்சுக் கலையை வளர்ப்பதில் இடைவிடாது தொடர்ந்து ஈடுபடுவதோடு பேசு பொருள் பற்றி ஆழ்ந்து சிந்திப்பதும் அவசியம். கேட்பவர்கள் மனதில் பாதிப்புரை ஏற்படுத்த வேண்டுமென்றால் பேசப்படுகின்ற பொருளும், பேசுகின்ற முறையும் மிகவும் முக்கியமாகும். மாண்புமிகு உறுப்பினர்கள், ஆண் ஆனாலும், பெண் ஆனாலும், பொருளைப் பற்றி நன்கு புரிந்து கொண்டால் ஒழிய மற்றவர்களுக்குப் புரிய வைக்க முடியாது. இதற்காக முழுமையான பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். தன்னுடைய முழு நேரத்தையும், ஆற்றலையும், நாம் புரிய விருக்கும் பணிக்காகவே செலவிட வேண்டும்.

அண்மைக் காலத்தில் துரதிருஷ்டவசமாக, சட்டப்பேரவையின் நடவடிக்கைகளின் காலஅளவு வெகுவாக அதிகரித்து விட்டது. சட்டப்பேரவையில் விவாதிக்கப்படும் பொருட்கள் சமுதாயத்தின் பலதரப்பட்ட மக்களிளுடைய மிகுந்த விளைவுகளை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளன. சமுதாயத்தின் பல்வேறு பிரிவினர்களைப் பலவிதமாகப் பாதிக்கின்றன. விவாதப் பொருட்கள் மிகவும் சிக்கலாகிவிடுவதோடு மக்களின் தேவைகளுக்குத் தொடர்பே இல்லாத தோற்றத்தையும் சிலவேளைகளில் அவைகள் ஏற்படுத்தி வருகின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதத்திற்குத் தயாராக வரும் வகையில், பல்வேறு பொருட்களைப் பற்றிப் படிக்க நேரம் மிகக் குறைவாகவே உள்ளது. இதன் விளைவாக, பாராளுமன்ற விவாதங்களைப் பற்றித் தீவிரமாக எண்ணாது மிகச் சாதாரணமாகவே எடுத்துக் கொள்கிறார்கள். பெரும்பாலான உறுப்பினர்கள் பேச்சை முன்கூட்டித் தயாரிக்காமல் மத்தமின்றி விவாதத்தில் பங்கேற்கிறார்கள். விவாதப் பொருட்களைப் பற்றிச் சிந்திப்பது மிகவும் குறைந்து விட்டது. அரசியல் சர்ச்சைகளிலும், தீவிரமடைந்து வருகிற முரண்பாடுகளிலும் அதிக நேரம் வீணாகிறது. சட்டப் பேரவைக்கு வெளியே உள்ள அரசியல் சூழ்நிலை அவைக்கு உள்ளே விவாதங்களைச் சூடேற்றுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள், சபையின் விவாதங்களைச் சுய வளர்ச்சிக்கான தொடர்ந்த, நிலையான முயற்சியாகவே கருத வேண்டும். சட்டப்பேரவை என்பது சாதாரணப் பொதுமேடை அல்ல. ஒரு சில அதிர்ஷ்டசாலிகள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றத் தங்களது கருத்தையும், ஆசைகளையும் வெளிப்படுத்துகின்ற பெருமைக்கும், கௌரவத்திற்குமுரிய அவையாகும். இத்தகைய மதிப்பு வாய்ந்த விவாதச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால் சட்டப்பேரவையின் விவாதங்களின் தரமும் சாதனைகளும் சீர்குலைந்துவிடும்.

விவாதத்தில் பங்கு பெறுவதைப் புனிதமாகவும், தலையாய கடமையாகவும் மாண்புமிகு உறுப்பினர்கள் கருத வேண்டும். அவர்கள் கிஞ்சிற்றும் சுயநலமற்ற முறையிலும் மக்களது நலத்துக்காகவும் இந்தப் பணியை ஆற்ற வேண்டும். தங்களது எண்ணத்திலும் சொல்லிலும், செயலிலும் அவர்கள் சட்டமன்றத்தின் கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டும். விவாதத்தின்போது நன்னடத்தையின் தரத்திற்கு ஒத்துவராத எதைச் சொன்னாலும், சட்டமன்றத்தின் கண்ணியத்திற்கு அவை ஒத்துவாராதவையாகத்தான் அமையும். விவாதத்தின் போது பயன்படுத்தும் மொழி மாண்புமிகு உறுப்பினரின் தனிப்பட்ட கலாச்சாரத்தை இனம் காட்டும் அடையாளமாகும். விவாதத்தின்போது உபயோகப்படுத்தப்படும் மொழி எப்பொழும் தண்மையாகத்தான் இருக்க வேண்டுமே தவிர ஆத்திரமூட்டும் வகையில் அமையக் கூடாது. அவை ஒட்டுமொத்த நல்லிணக்கத்தை மேம்படுத்த வேண்டுமே தவிர, சட்டமன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் உறுப்பினர்களின் உணர்வுகளைப் புண்படுத்தக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர்களின் ஒழுக்க உணர்வும், கண்ணியமும் விவாதங்களின் தரத்திற்குப் பலத்தையும் நளினத்தையும் ஊட்டி, பாராளுமன்ற நெறிமுறைகளின் வெற்றியை உறுதி செய்கின்றன. அவையின் கண்ணியத்தை நிலை நிறுத்தும் எண்ணத்தில் சிறந்த பாராளுமன்றப் பேச்சாளர்கள் விவாதங்களின்போது ஒழுங்காக நடந்து கொள்வதில் மிகவும் கவனத்துடன் இருப்பார்கள். பண்டித ஜவகர்லால் நேரு அவர்களுடைய வாழ்க்கையில் நடைபெற்ற ஒரு சம்பவம் இந்த உண்மையை வலியுறுத்துகிறது. அவர் ஒரு சமயம் பாராளுமன்றத்தில் 'பொய்' (lies) என்ற வார்த்தையை உபயோகப் படுத்தினார். அது தகாத வார்த்தை என்று ஆட்சேபிக்கப்பட்டது. ஜவகர்லால் நேரு அவர்கள் அந்த வார்த்தைக்குப் பதிலாக 'உண்மை அல்லாதவை' (untruths) என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். ஆனால், அது அத்துடன் முடிந்துவிடவில்லை. தகாத வார்த்தையைப் பேசியதற்காக ஜவகர்லால் நேரு அவர்கள் மிகவும் வேதனைப்பட்டார். 1951 ஜூன் திங்கள் 15-ஆம் நாள் முதலமைச்சர்களுக்கு வரைந்த கடிதத்தில் அவர் கூறினார்.

''அரசியல் நிர்ணய திருத்தச் சட்ட மசோதா கொந்தளிப்பான சில நேரங்களில் உணர்ச்சிகரமான விவாதங்களுக்கு வழி வகுக்கிறது. உணர்ச்சிகள் கொந்தளித்து துடித்த வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன, என நான் அஞ்சுகிறேன். இந்த விவாதத்தின்போது ஒரு சமயம் உயர்ந்த தரத்திலிருந்து நான் இறங்கி தேவையின்றிக் கடின வார்த்தையைப் பயன்படுத்தியமைக்காக வருந்துகிறேன். ஆனால், இந்த விவாதத்தை இரண்டு வாரங்களாக நடத்திய அலுப்பும் தொடர்ந்து வந்த குற்றச்சாட்டுக்களைக் கேட்டுக் கொண்டிருந்ததும், அவமானப்படுத்தப்பட்ட பேச்சுக்களும் என் பொறுமையை மிகவும் சோதித்து விட்டன.''

ஆனால், ஜவகர்லால் நேரு அவர்கள் அதற்கும் மேலாக ஒன்று கூறினார். 1963-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27-ஆம் நாள் ஆந்திர மாநில இரு சபை உறுப்பினர்களிடையே அவர் ஆற்றிய உரையின் ஒரு பகுதியை இங்கே விளக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன். ஏனெனில், அது தீர்க்கதரிசனமாகவும், அதே நேரத்தில், சட்டப்பேரவைகளில் தரம் தாழ்ந்த நடவடிக்கைகளை, ஜனநாயக அமைப்பாக விளங்கும் சட்டப்பேரவைக்கு நாம் புரியும் புனித சேவையாகக் கருதி, தடுத்து நிறுத்தாவிட்டால் அது ஒரு தொடர்கதையாகவே ஆகிவிடும் என்பதைக் குறிப்பதாகும் அமைகிறது.

''பொது வாழ்வில் நாகரிகம் குறைந்து கொண்டே வருவது துரதிர்ஷ்டவசமானது பொதுச் சேவையின் தரத்தை வெகுவாக இது குறைத்து விடுவதுடன் இது நம்மையும் நமது நிறுவனங்களையும், நமது பாராளுமன்றத்தையும், நமது சட்டமன்றங்களையும் தரம் தாழ்த்துகிறது. மாண்புமிகு உறுப்பினர்களின் நடவடிக்கையை ஒழுங்குபடுத்த நமது பாராளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் நிறைய விதி முறைகள் உள்ளன. அவர்கள், வரன்முறைப்படுத்தப்பட்ட அவைக்கு ஏதுவான சொற்றொடர்களைத்தான் பயன்படுத்த வேண்டியுள்ளது. இவையெல்லாம் கண்டிப்பாகப் பின்பற்றப்படுவதற்குக் காரணம், சபையின் விவாதங்கள் சூடாகிவிடாமலும் சில சமயங்களில் நாம் நடந்து கொள்வதைப்போல ஒருவரையொருவர் சபித்துக்கொள்ளாமலும் இருப்பதற்கே ஆகும். ஆனால் சட்டப்பேரவைத் தலைவர் கடைப்பிடிக்கும் இந்த அனைத்து மரபுகளும், சிறந்த பழக்க வழக்கங்களும், ஒழுங்குமுறைகளும் பண்டைய கால முறையாகத் தோன்றினாலும், அவை சபையின் நடவடிக்கைகளை ஒழுக்கத்துடனும், நாகரிகத்துடனும் கொண்டு செல்வதற்கே ஆகும். எந்த அர்த்தமும் இல்லாத இத்தகைய பழைய பாணியை நாம் ஏன் பின்பற்ற வேண்டும் என்று தற்பொழுது சிலர் கேட்கின்றனர். உதாரணமாக, சட்டப்பேரவைத் தலைவர் சில உறுப்பினர்களை வெளியேற்ற உத்தரவிடும் அளவுக்கு நிர்ப்பந்தப்படுத்தப்படுவார். நீங்கள் பாராளுமன்றத்தில் இருந்தால் பேரவைத் தலைவரின் சொல்லைக் கேட்டே ஆக வேண்டும். இல்லையெனில் நீங்கள் அங்கு இயங்க முடியாது என்பதோடு, அங்கே குழப்பந்தான் நிலவும். இதேதான் தற்போது நடைபெற்று வருகின்றது. குழப்பம் விளைவிக்கும் போக்கே நிலவுகின்றது. சட்டப் பேரவைக்கு வெளியே இதுபோன்ற நடவடிக்கைகள் தவறுதான். ஆனால் சட்டப்பேரவைக்குள் இது நிச்சயமாக மிகப்பெரிய தவறுதான். இதுபோன்ற போக்குகள் நிலவுவதால் தான் ஐரோப்பாவில் பல நாடுகளில் மக்களாட்சி தோல்வியடைந்துள்ளது. ஒரு கட்சி சர்வாதிகாரப் போக்கில் நடந்து கொள்ள முற்படும் பொழுது மற்ற கட்சிக்கும் இதேபோல் நடந்து கொள்ள எத்தனிப்பதால் அனைத்துக் கட்சிகளும் தங்களைத் தாங்களே தரந்தாழ்த்திக்கொண்டு நாட்டின் ஒட்டுமொத்த தேவைகளும் குலைக்கப்படுவதோடு மக்களாட்சி முறையும் துண்டு துண்டாகச் சிதறியடிக்கப்படுகிறது. எனவே, இதுபோன்ற நடவடிக்கைகளைப் பற்றி நீங்கள் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் என நான் விரும்புகிறேன்.''

1963-இல் நேருவினால் சொல்லப்பட்ட இந்த வார்த்தைகள் 1993-லும் பொருத்தமுடையதாகவே தோன்றுகின்றன. ஓரளவுக்கு விட்டுக்கொடுத்தலும், நகைச்சுவை உணர்வுகளும், பேரவை நடவடிக்கைகளை அழகுபடுத்துவதுடன், சாதனைகளின் தரத்தை உயர்த்தி, மாண்புமிகு உறுப்பினர்களின் சிறந்த குணநலன்களை வெளிப்படுத்த ஏதுவாகிறது. ஒருவர் தன்னுடைய கட்சியின் சார்பாக ஒரு நிலையை எடுக்க வேண்டியிருந்தாலும், நினைவில் நிற்கத்தக்க வகையில் ஒரு சில பாராட்டு வார்த்தைகளுடனான வாதத்திறமை கொண்டு தம்முடைய கருத்தை மற்றவர்களுக்கும் உணர்த்தலாம். 1939-ஆம் ஆண்டு ஒரு மசோதாவின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு திரு வி.எஸ். சீனிவாச சாஸ்திரி அவர்கள் கூறிய ஒரு சில கருத்துக்களுக்குச் சென்னை மகாணத்தின் முதன்மைப் பொறுப்பை வகித்த மாண்புமிகு திரு சி. ராஜகோபாலாச்சாரியார் கூறிய சில கருத்துக்கள் நினைவுக் கூரத் தக்கவையாகும்.

''நேற்று மாண்புமிகு சாஸ்திரி அவர்கள் சிறந்த பல கருத்துக்களைக் கூறினார்கள், ஆனால், முதலில் அவர் பேசிய பேச்சில் இருந்த சிறந்த அழகையும் சிறந்த முழுமையையும் நான் பாராட்டியே ஆக வேண்டும். இப்படி முழுமையாகப் பாராட்டுகின்ற அதே நேரத்தில், நான் ஒன்று சொல்லியாக வேண்டும்... நான் சொல்ல அவர் அனுமதிக்க வேண்டும். அதாவது அந்தப் பேச்சு

★ கலை என்பது நெறி முறை, வீரம், ஒழுக்கம், கற்பு, காதல் என்னும் பண்புகளைத் தரக்கூடிய தாக இருத்தல் வேண்டும்.

உங்கள் வீட்டுத் தின்னை கும்மா கிடக்கு மானால், அதை ஒரு தின்னைப் பள்ளிக்கூடமாக மாற்றுங்கள். அது ஒரு கோவிலைக் கட்டியதற்கு ஒப்பாகும்.

- முதறிஞர் இராஜாஜி

அமைப்பு - நம்முடைய மக்களின் கலாச்சாரத்தையும், அறிவாற்றலையும், அடிப்படையாகக் கொண்டு பல நூற்றாண்டுகளுக்குமுன் ஏற்படுத்தப்பட்டது இந்த அமைப்பு! கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் நாடு முழுவதும் மாபெரும் அரசியல், பொருளாதார, சமுதாய எழுச்சி ஏற்பட்டாலும், இந்நிர்வாக அமைப்பு இன்றளவும் நிலைக்கக் காரணம், மாறிவரும் தேவைகளைச் சமாளிப்பதில் காட்டும் உடனடி ஆக்கம்மிக்க ஆற்றல் தான்.

சட்டம் ஒழுங்கு பராமரிப்பு மற்றும் வரிவசூல் ஆகிய பணிகளுக்காக இயங்கி வந்த இம்மாவட்ட நிர்வாக இயந்திரம் படிப்படியாகப் பயன்மிக்க திட்டம் மற்றும் வளர்ச்சிக்கான இயந்திரமாக மாற்றப்பட்டது. அமைப்பும் செயல் முறையும் அப்படியே இருந்தாலும், நோக்கங்களும், இலக்குகளும் மாறி உள்ளன. ஓரளவு பராமரிப்புப் பணிகளைச் செய்து வந்தவர்களே தற்போது புதிய சூழ்நிலையில் புதிய சவால்களைப் பழைய பணியில் அவர்கள் காட்டிய அதே நிர்வாக ஆர்வத்துடன் சந்திப்பது ஒரு சுவையான செய்தியாகும்.



இன்று மாநில நிர்வாகத்தின் கடமை சிக்கலானதாகும். மக்களின் ஆசைகள் வேகமாக வளர்கின்றன. ஆனால், மக்களின் அடிப்படைத் தேவைகள் கூட இன்னும் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன. மக்களுடைய தேவைகள் அரசியல் அடிப்படையில் வளர்ந்து வருகின்றன அது மக்களாட்சியில் நியாயமான வளர்ச்சியுமாகும். பிரதிநிதித்துவ அரசு அரசியலாக்குவதை ஏற்றுக் கொள்கிறது. எந்த அளவிற்கு எழுத்தறிவு வளர்கிறதோ அந்த அளவு ஒருவருடைய சுய உரிமையைப் பற்றிய விழிப்புணர்வு அதிகமாக இருக்கும். அதன் விளைவாக, மக்கள் வாய்ப்புகளை ஒரு உரிமையாகக் கோருகிறார்கள். மாநிலமும் அவர்கள் திருப்தி அடையும் அளவில் வாய்ப்புகளை அளிக்க வேண்டியுள்ளது. மேலும், உரிமை, பொறுப்பு என்பனவற்றின் பொருள்களும் மாறிவருகின்றன. நமது அரசியல் அமைப்புச் சட்டங்களின் விளக்கங்களாலும், பல்வேறு நீதிமன்றத் தீர்ப்புகளாலும், இந்த மாற்றங்கள் ஏற்படுகின்றன. சுதந்திரமும், வாய்ப்புகளின் சமத்துவமும் இனி சட்டப் பொருளின் வரம்பிற்குள் அடங்குவதில்லை. அரசியல் சட்டத்தின் அமைப்பின்படியும், விளக்கங்களின்படியும் மேலும் அவை ஆழமாகச் சமுதாய, பொருளாதார, நெறிமுறை முக்கியத்துவம் பெறுகின்றன. அதன் பலனாக, மாநில அரசின் பொறுப்பு மிகவும் விரிவடைகின்றது.

உதாரணமாக, தொடக்கக் கல்வி என்பது தொடக்கத்தில் நேரடிக் கொள்கையாகக் கருதப்பட்டது. இன்று உச்சநீதிமன்றம் அதனை அடிப்படை உரிமை என்று விளக்கியுள்ளது. அதைப்போல, சமுதாய, பொருளாதாரக் கடமைகள் மாநில அரசின் கட்டாயக் கடமைகளாக்கப்பட்டுள்ளன. அதனால் அரசுப் பணியாளர்கள் அதிகமான பொறுப்புகளை ஏற்கவேண்டியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் அலுவலர்களின் முறையான கண்ணோட்டம், அணுகுமுறை, நோக்கத்தின் தேவையைக் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். அரசுப் பணியாளர்கள் தனிமைப்பட்டுச் செயல்படமுடியாது.

அரசுப் பணியாளர்கள் மாறிவரும் சமுதாய, பொருளாதார நிலைமைகளைப் புரிந்துகொண்டு, அதில் பங்கு கொண்டு, மக்கள் நலனுக்காகப் புதிய அக்கறையுடன், புதிய தெளிவுடன், புதிய தொலைநோக்குடன் வளர்ச்சி மற்றும் பெருக்கத்தின் பிரச்சினைகளைக் கையாள அரசு இயந்திரத்தை முடுக்கவேண்டும். அதிகார அமைப்பு எப்பொழுதும் திறமையாக இயங்குவது, ஆனால் அதற்கென்று எல்லைகளும் வரையறைகளும் உள்ளன என்பதை நாம் அனைவரும் தெரிந்துள்ளோம். - ஆனால், இன்று அரசுப் பணியாளர்கள் அரசு இயந்திரத்தைச் சமுதாய, பொருளாதார மாற்றங்களுக்குக் கடந்த காலத்தில் பயன்படுத்தியதைவிட அதிகஅளவில் திறமையுடன், விரைவாகப் பயன்படத்தக் கற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த மாறிவரும் சூழலில், நிர்வாகத்திற்கு ஒரு ஆதார நிலை உள்ளது. மாவட்ட அளவிலுள்ள அலுவலர்கள் அளவற்ற பொறுப்புகளை ஏற்கவேண்டும். அவர்கள் நிர்வாகத்தின் கண், காதுகளாக இருப்பவர்கள், அவர்கள் மக்களிடமும், மக்கள் பிரதிநிதிகளிடமும் நேரடித் தொடர்புடையவர்கள். பொதுமக்களின் தேவைகளின்பால் அவர்களுக்குப் போதிய இரக்கமும், அனுதாபமும் இருக்கவேண்டும். அவர்களுக்கு மக்கள் பிரதிநிதிகளின் பங்கினைப் பற்றி, முறையான தெளிவும், பொறுமையும் இருக்கவேண்டும். அவர்கள் ஏழை மக்களுக்கான தேவைகளைப் புரிந்து, ஏற்பாடு செய்து அவர்களுக்குத் திறமையாகவும், தாமதமில்லாமலும் வழங்கச் சேவை செய்யும் மனஉறுதி கொண்டவர்களாக இருக்கவேண்டும். மக்களின் விருப்பங்களையும், தேவைகளையும் நிறைவு செய்யும் விதமாக திட்டங்கள் அமைத்துச் செயல்படும் வகையில் அரசுப்பணியாளர்கள், கற்பனைச் சக்தியும், புதுமை வளமும் கொண்ட திறமைகளை வளர்த்துக் கொள்ளவேண்டும். அவற்றையெல்லாம் விட தலத்திலுள்ள மாநில அரசின் பிரதிநிதி என்ற வகையில் மாநில அரசின் தத்துவங்களை உணர்ந்து, கொள்கைகளை நடைமுறைப்படுத்தி அனைத்து வழியிலும் மாநில அரசின் நோக்கம் சிறப்புறும் வகையில் செயல்படவேண்டும்.

நமது அரசு மிகச் சரியாக இரண்டாண்டுகளுக்கு முன்பு பொறுப்பேற்ற போது மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு மிகவும் சீர்குலைந்திருந்ததை நீங்கள் நினைவுகூரவேண்டும். இலங்கைத் தீவிரவாதிகள் விருப்பம்போல் மாநிலத்தில் நடக்க அனுமதிக்கப்பட்டு அதனால் மக்களிடையே பயஉணர்வும், வன்முறையைப் பற்றிய கவலையும் இருந்தது. மாவட்ட நிர்வாகம், குறிப்பாக காவல் துறையினரின் திறமை மிகவும் சோதனைக்கும், நெருக்கடிக்கும் உள்ளாகியது. நாங்கள் பொறுப்பேற்றவுடன், சட்டம் ஒழுங்கை நல்லமுறையில் பராமரித்து, அமைதியை மீட்டு, பயமும், கவலையும் இல்லாத சகஜ வாழ்க்கையைக் கொண்டு

அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்களுக்கும் 'Fax Machine' வாங்க மாண்புமிகு முதல்வர் ஆணை

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாடு ஜூன் 24 முதல் 26 முடிய மூன்று நாட்களாக மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் நடந்த இந்த மாநாட்டில் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 'Fax Machine' இல்லையென்றும், தாங்கள் விரைந்து செயல்பட மற்றும் அறிக்கைகளை அரசுக்கு உடனுக்குடன் அனுப்புவதற்கு 'Fax Machine' அவசியம் தேவை எனவும் வேண்டுகோள் விடுத்தனர்.

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கருத்தை அறிந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாடு நடந்துகொண்டிருக்கும் பொழுதே, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்களுக்கு 23 'Fax Machine'-களை வாங்குவதற்குக் கோப்பில் கையெழுத்திட்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனுக்குடன் தங்கள் குறைகளைக் கேட்டு முடிவெடுத்தது கண்டு, மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கைதட்டி தங்களுடைய நன்றியினை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டார்கள்.

அழகிய பெண்ணின் குடை போல அமைந்திருந்தது. நல்ல வடிவமைப்புடன் அழகாக அமைக்கப்பட்ட வண்ணமயமான ஒரு பட்டுக்குடை - வெயிலிலிருந்தும், காற்றிலிருந்தும், மழையிலிலிருந்தும் நம்மைக் காப்பாற்ற முடியாத குடை (சிரிப்பு).''

ராஜாஜி அவர்கள் சொல்ல விரும்பியதை மிக அழகாகச் சொன்னார் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். அழகான அந்த வார்த்தை ஜாலங்கள் சட்டமன்ற நடவடிக்கைகளுக்கு உயிரூட்டியது மட்டுமல்லாமல், சொல்லப்பட வேண்டிய கருத்துக்களை அழகாகச் சொல்ல உதவி புரிந்ததோடு ஒரு இறுக்கமான சூழ்நிலையையும் தளர்த்த உதவியது.

முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு, மொழி மேதையாவார். அவர் மிகச் சிறந்த பாராளுமன்றவாதி. அவர் இந்த ஒரு பொருளைப்பற்றியும் மிக ஆழமாகப் புரிந்து கொள்வார். அவர், மற்றவர்களுக்குப் புரியாத கூர்மதியுடன், உறுப்பினர்களின் கருத்துக்களை அறிந்து கொண்டு, அவர்களுடைய வாதங்களை உடைக்கின்றார் என்ற எண்ணத்தை ஏற்படுத்தாமலேயே தம்முடைய திறமையான பதில்களால் எதிரியின் வாதங்களை உடைத்துவிடுவார். 1968-இல் ஆண்டு மார்ச் திங்கள் 20-ஆம் நாள் தமிழகச் சட்டப்பேரவையில் நடைபெற்ற விவாதத்தின்போது அவர் கூறினார்:

''திரு விநாயகம் அவர்கள் (எதிர்க்கட்சியின் மூத்த உறுப்பினர்) கூறினார்: உங்கள் அரசை நாங்கள் கவிழ்க்க மாட்டோம்.''

''விநாயகம் போன்று திறமையான காங்கிரஸ்காரர்கள் எங்களுக்கு ஆதரவாக இருப்பது குறித்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.''

''நான் மீண்டும் சொல்கின்றேன். நீங்கள் எங்களது அரசைக் கவிழ்த்தால் நஷ்டம் எங்களுக்கல்ல, மாறாக நஷ்டம் நாட்டிற்கே.''

பேச்சுக்கலையிலும் விவாதக்கலையிலும் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு தன்னிகரற்ற ஆசான், ஆவார். எல்லாக் காலத்திற்கும் அவர் தலை சிறந்த பேச்சாளர். அவர் அசாதாரண திறமையுடன் விவாதிப்பார். அவர் தன்னுடைய பேச்சுக்களுக்கு அழகும் வண்ணமும் சக்தியும் ஆற்றலும் வேறுபாடுகளும் வலிவும் தர உயர்ந்த இலக்கியங்களைக் கருவியாகப் பயன்படுத்தினார்.

மற்றொரு சந்தர்ப்பத்தில் பேரறிஞர் அண்ணா சொன்னதாவது:

''ஒரு திருமண வரவேற்பு விழாவிற்கு நீங்கள் செல்லும்போது, உங்களை உபசரிப்பவர் உங்கள் மீது பன்னீரைத் தெளிக்கும்போது, அதில் ஒரு சொட்டு உங்கள் கண்ணில் விழுந்து ஒரு எரிச்சலை உண்டாக்குகிறது. ஆனால், அதற்காகப் பன்னீரைத் தெளித்து உபசரித்தவரிடம் நீங்கள் குற்றம் காணமாட்டீர்கள். நீங்கள் எவ்வாறு அவரிடம் குற்றம் காணமாட்டீர்களோ, அதேபோன்று என் மனது புண்படும்படி பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பேச்சுக்களைக் கோபப்படாமல் நான் ஏற்றுக்கொள்ளக் கற்றுக் கொண்டேன். குறிப்பாக, கடந்த என்னுடைய 25 ஆண்டுக் காலப் பொது வாழ்வில் எனக்கு ஏற்பட்ட அவமானங்களையும் என்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளையும் எண்ணிப்பார்க்கும் போது இத்தகைய பேச்சுக்கள் எவ்வளவு கடினமாக இருந்தாலும் அவற்றை என் மேனியைத் தழுவிச் செல்லும் குளிர் தென்றலாகவே நான் கருதுகிறேன். இந்த விவாதத்திற்கு வலுவூட்டிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.''

நாம் மக்களாட்சி வழிமுறைகளைத் தேர்ந்தெடுத்துள்ளோம். நம் நாட்டின் மன்னர்களாக விளங்கக்கூடிய பொது மக்களின் கருத்துக்கள் சட்டமன்றங்களில் வெளிப்படுத்தப்படுகின்றன. எனவே, இம்மாபெரும் நாட்டின் பிரதிநிதியான இந்தியாவின் சட்டப்பேரவைகள் திகழ்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் நம்முன்னே உள்ள பெரிய பிரச்சினைகளை விசால உணர்வுடன் திறமையான முறையில் சாதாரண நிலைகளிலிருந்து உயர்ந்து நாம் பொறுப்புகளை நிறைவேற்றவேண்டும். தேசத்தின் குறிக்கோள்களை விளக்கவும், மக்களாட்சி நெறிமுறைகளில் நமக்குள்ள நம்பிக்கைகளை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்ளவும், கருத்துப் பரிமாற்றங்கள் - நல்ல கருத்துப்பரிமாற்றங்கள், விவாதங்கள்- திறமையான விவாதங்கள் ஆகியவற்றைத் தவிர எனக்கு வேறு வழி தெரியவில்லை. ஜவகர்லால் நேரு ஒரு முறை கூறினார்:''

''வார்த்தைகள் பெரும்பாலும் மந்திர சக்தி வாய்ந்தவை. ஆனால், மனித உணர்ச்சிகளின், தேச உணர்வுகளின் மந்திரச் சக்திகளை சில நேரம் வார்த்தைகளின் மந்திர சக்திகூட சரியாகத் தெரிவிக்க முடியாமல் போய்விடக் கூடும்.''

அதே நேரத்தில், வார்த்தைகளைப் பயன்படுத்தி, தகுந்த வார்த்தைகளைப் பயன்படுத்தி, கண்ணியமிக்க வார்த்தைகளைப் பயன்படுத்தி, அறிவுப்பூர்வமான வார்த்தைகளைப் பயன்படுத்தி, மக்களாட்சி உணர்வை நாம் பெற்றாக வேண்டும். இந்தியச் சட்டமன்றங்களில் நடைபெறும் விவாதங்களின் தன்மைகளை எப்படி உயர்த்துவது? விவாதங்களின் பங்கையும், முக்கியத்துவத்தையும் மீண்டும் எப்படி உறுதிப்படுத்துவது? என்பதைப் பற்றி இந்தக் கருத்தரங்கில், மிக அதிகப் பொறுப்புக்களைச் சுமக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் விவாதிப்பார்கள் என்று நம்புகிறேன். நான் ஒரு சில பொதுவான கருத்துக்களை மட்டும் உங்கள் பரிசீலனைக்குக் கொண்டு வந்துள்ளேன்.

இந்த அருமையான சந்தர்ப்பத்தை வழங்கிய உங்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

(தமிழ்நாடு சட்டப்பேரவையில் 27.6.93 அன்று நடைபெற்ற அகில இந்தியச் சட்டப்பேரவைகளின் முதன்மை அலுவலர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை.)

மாண்புமிகு முதல்வர் உதவி

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம், சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்வதற்காக நிதியுதவி வேண்டி, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் - ஆரணியைச் சேர்ந்த திருமதி. சரஸ்வதி என்பவரும், சேலம் மாவட்டம்- கனவேலம்பட்டி புதூரைச் சேர்ந்த திரு. எம். தங்கவேல் என்பவரும் மனு செய்திருந்தார்கள். அவர்களின் கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இருவருக்கும் தலா ரூ.20,000 மருத்துவச் சிகிச்சைக்காக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க ஆணையிட்டார்.

மக்கள் நலனுக்காக

உங்கள் கடமைகளை அர்ப்பணிப்பு உணர்வோடும், உறுதியோடும் தொடர்ந்து செய்யுங்கள்!

மாண்புமிகு முதல்வர் உரை

மாவட்ட ஆட்சியாளர்கள்; காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் அரசு உயர் அலுவலர்களுடைய இம்மாநாடு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். மாநில நிர்வாகத்தின் கடந்த காலச் செயல்பாடுகளை ஆய்வு செய்து நிர்வாகத்தின் பலத்தையும், பலவீனத்தையும் தெரிந்துகொள்ள நமக்கு அரிய வாய்ப்பை அளித்துள்ளது. நம்முடைய செயல்பாடுகளை மேலும் செழுமைப்படுத்த அலுவலர்களின் அனுபவங்களைச் சேர்த்து அறிந்துகொள்ள உதவுகிறது. இம்மாநாடு பல்துறைகளிலுள்ள முக்கியமான பிரச்சினைகள் குறித்து உகந்த நியாயமான, ஆக்கப் பூர்வமான முறையில் விவாதிக்க ஒரு இனிமையான சூழ்நிலையை அளித்துள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலே, இம்மாநாடு அரசியல் நோக்கத்தையும், விருப்பத்தையும் நமது நிர்வாகத் திறமைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து, அதன்மூலம் நமது நோக்கங்களையும், இலக்குகளையும் நியாயமான படிப்படியான முறையில் திட்டமிட்டுத் தேவையான திறமைகளுடன், விரைவாகச் சாதிக்க, அற்புதமான அமைப்பை அளிக்கிறது. எனவே, இம்மாநாட்டில் கலந்துகொண்டு, இன்றும் நாளையும் விவாதிக்கப்படவேண்டிய பொருட்கள் மீது உங்கள் கருத்துக்களைக் கேட்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மாவட்ட நிர்வாகம் என்பது, ஆங்கிலேயர்களால் விட்டுச் செல்லப்பட்ட

வந்து மாநிலத்திற்குச் சிறப்பு சேர்க்க தமிழ்நாட்டிலிருந்து அனைத்துத் தீவிர வாதச் சக்திகளையும் அப்புறப்படுத்தி மக்கள் மனதில் நம்பிக்கை உண்டாக்கும் பொறுப்பினை எங்கள் மீது ஏற்றுக் கொண்டோம். பொறுப்பேற்றுக் கொண்ட சில மாதங்களில், உங்களது ஒத்துழைப்பாலும், நிலைமைகளைப் புரிந்துகொள்ளும் உங்களது தெளிவாலும், உங்களது மனமுவந்த உதவியினாலும், இந்தச் சவாலில் நாங்கள் வெற்றி பெற்றோம். மிகக் குறைந்த அளவிலுள்ள படையினாலும், பழைய ஆயுதங்களாலும், மாநிலக் காவல்துறை குறிப்பிடத்தகுந்த வெற்றிபெற முடிந்தது. தங்களுடைய அலுவலர்களை ஊக்கப்படுத்தி, நிர்வாகத்தை முடுக்கி விட்டதன் மூலம் கவலைப்படும் தேவை கடந்துவிட்டது என்றாலும், நிம்மதியாக இருக்க வேண்டிய காலம் இதுவல்ல, அதற்கான காலம் இன்னும் கனியவில்லை.

தீவிரவாதம் என்பது தந்திரமான ஒரு காரியமாகும். அது பதுங்கி இருந்து கொண்டு சிறிய வாய்ப்புக் கிடைத்தாலும், தனது கோரத் தலையைத் தூக்கிப் பெயர் தெரியாத அப்பாவிகளைத் தாக்கும். ஜனநாயகத்துக்கும், ஜனநாயக வாழ்வுக்கும் தீவிரவாதம் எதிரானது. ஜனநாயக நடைமுறைக் கொள்கைகளை நிலைநிறுத்த வேண்டிய நிர்வாகம் நமது மத்தியில் இருந்து தீவிரவாதத்தை ஒழித்துக்கட்ட எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும். எனவே, மாவட்ட நிர்வாகம் எப்போதும் விழிப்புடனும், கண்காணிப்புடனும் இருக்க வேண்டும். உங்கள் பணியை நிறைவேற்ற உங்களுக்குத் தேவையான மனித சக்தி, கருவிகள் மற்றும் பொருட்களைப் பொறுத்த மட்டில் அனைத்து உதவிகளையும் மாநில அரசு வழங்கும் என்று உறுதி கூறுகிறேன். தீவிரவாத நடவடிக்கை என்பது நமது நாட்டின் பாதுகாப்புக்கு எதிரானது என்பதை நீங்கள் தயவு செய்து நினைவில் கொள்ளவேண்டும்.

கடந்த இரண்டாண்டுகளாக நாம் தீவிரவாதிகளின் பலத்தை முழுவதுமாகத் தகர்த்துவிட்டோம். விடுதலைப்புலிகள் உள்பட இலங்கைப் போராளிகள் குழுக்களை விரட்டிவிட்டோம். மாநிலத்தில் தீவிரவாதம் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள் எந்தவகையிலும் நேரடியாகவோ மறைமுறைமுகமாகவோ தலை தூக்காத வகையில் நாம் தொடர்ந்து கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இதில் எந்தவிதத் தொய்வும் இருக்கக்கூடாது. திருப்தியும் இருக்கக்கூடாது. கடலோரப் பகுதிகளில், அகதிகள் முகாம்களில் தொடர்ந்து கண்காணிப்பு, சிறப்பு முகாம்களில் தீவிரக் கட்டுப்பாடு ஆகியவை தீவிரவாதத்தையும், பயங்கரவாதிகளையும் ஒடுக்கும் செயல் திட்டத்தின் முக்கிய பகுதிகளாகும்.

உரிய நேரத்தில் சரியான தகவல்களை அளிக்கும் வகையில், நமது உளவுத் துறையை முடுக்கிவிடவேண்டும். ஏனெனில் அதனடிப்படையில்தான் காவல் துறையினர் செயலாற்ற முடியும். இது வரை இந்த விஷயத்தில் நாம் அடைந்த வெற்றிகளுக்காக நான் உங்களைப் பாராட்டுகிறேன். தொடர்ந்து உங்கள் திறமையைச் செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன். பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது நாட்டையே உலுக்கிய இனக் கலவரம் ஏற்பட்ட கால கட்டத்தில், சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதில் மாவட்ட நிர்வாகம் சிறந்த பணியாற்றியது. நான் இதற்குமுன் பலமுறை குறிப்பிட்டதைப் போல் நாட்டின் மற்ற பகுதிகளில் குழப்பங்கள் நிலவினாலும், நம் மக்களிடையே நிலவி வரும் சமய, வகுப்புப் பொறையுடைமையும், நமது மாவட்ட நிர்வாக அதிகாரிகள், கவனமாகக் கையாண்டமுறைகளும், தமிழ்நாட்டைத் தொடர்ந்து அமைதிச் சோலையாக விளங்கச் செய்தன. எந்தச் சூழ்நிலையிலும் நீங்கள் சிறந்து விளங்க முடியும் என்பதற்கு இது எடுத்துக்காட்டாகும். சாதாரண நேரங்களிலும் ஆழ்ந்த ஈடுபாடு நிலைநிறுத்தப்பட்டால், மக்களுடைய நலன் ஒரு அர்ப்பணிக்கப்பட்ட நிர்வாகத்தால் முழுமையாகப் பாதுகாக்கப்படும். இது சம்பந்தமாக அரசியல்வாதிகள் என்ன சொன்னாலும், அதைப் பொருட்படுத்தாமல் நீங்கள் இதுவரையில் செயலாற்றியதைப் போல சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்க நீங்கள் தொடர்ந்து சிறப்பாகச் செயலாற்றி நாட்டிலேயே தமிழ் நாடுதான் அமைதி தவழும் மிகச் சிறந்த மாநிலம் என்ற நல்ல பெயரைப்பெற்றுத் தர உதவவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கண்களை மறைத்துக் கொள்ளும் அரசியல்வாதிகள் என்ன சொன்னாலும் பரவாயில்லை. உண்மையைத் தெரிந்த, சிறந்த நீதிபதிகளாக விளங்கும் பொது மக்களால் உங்கள் சேவை பெரிதும் பாராட்டத்தக்கதாகும். விவாதங்களுக்குச் சம்பந்தமான, மாவட்ட நிர்வாகத்தின் மற்ற பிரச்சினைகள் குறித்து நான் கண்டிப்பாகச் சுருக்கமாகக் குறிப்பிட வேண்டும். அவற்றிற்குமுன், மாநில நிதிநிலைமையை பற்றி இங்கே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள் மீது உங்கள் கவனத்தை ஈர்க்கிறேன். எல்லா வகையிலும் செலவுகளில் மிகவும் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும். மக்களின் நலனுக்காகத் திட்டம் மற்றும் திட்டம் சாராத இனங்களில் கணிசமான தொகை ஒதுக்கப்படுகிறது. இப்படி ஒதுக்கப்படும் தொகை சரியாகவும், திறமையாகவும் பயன்படுத்தப்படுகிறதா என்பதை உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

செயல்களின் அளவுகளைவிட, செயல்களின் தரத்தை உறுதிப்படுத்துவதை நீங்கள் வற்புறுத்தவேண்டும். யாருக்காக ஒதுக்கப்பட்டுள்ளதோ அந்த மக்களுக்காகப் பலன் கிடைக்கும் வகையில் நிதிகள் பயன்படுத்தப்படவேண்டும். உற்பத்தி அளிக்காத செலவினங்களைத் தவிர்த்து, மக்களுக்கு நேரடிப் பலன்களைத் தரும் திட்டங்களைச் செயல்படுத்த முனையவேண்டும். நாம் செலவிடும் செலவினங்களினால் நியாயமான உற்பத்தியினைத் திரும்பப் பெறுவதில் பணியாளர்களின் செயல்பாட்டினை மாவட்டங்களிலுள்ள துறைத் தலைவர்களை முறையாகக் கண்காணிக்கச் சொல்ல வேண்டும். மாவட்ட அலுவலர்கள் தங்களின்கீழ் பல்வேறு நிலையிலுள்ள பணியாளர்களில் பணிகளை ஆய்வு செய்து மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்குத் தகுந்த அளவு, உற்பத்திரீதியில் ஏற்பட்ட பலனைச் சரிபார்க்க வேண்டும்.

சிறுசேமிப்பு வசூலை மேற்பார்வையிடுவதில் மாவட்ட ஆட்சியர்கள் முக்கியப்பங்கு வகிக்கவேண்டும். மாநில அரசின் நிதி மற்றும் வரவுசெலவு நிலைக்கு இது உதவும். மேலும் இது மக்களின் சேமிக்கும் பழக்கத்தையும், சிக்கனப் பழக்கத்தையும் ஊக்கப்படுத்தி அவர்களது வளர்ச்சிக்கு உதவும். மாவட்ட நிர்வாகம் என்பது ஒரு வியாபாரம் என்ற எண்ணத்தை விதைத்தால், அரசு செலவிடும் பணத்திற்குச் சிறந்த பலனைப் பெறமுடியும். இந்த அடிப்படையில் மாவட்ட நிர்வாகத்தைச் சீரமைப்பின், திறமையும், உற்பத்திப் பெருக்கும் முதன்மையாக அமையும். இதுசம்பந்தமாக மாவட்ட ஆட்சியாளர்கள் செயல்திறத்தோடு செயல்படக் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் நிர்வாகத்தில் திறமையை ஊக்கப்படுத்த புதிய வழிகளைக்கண்டு, செயல்முறைகளில் மாற்றங்களைத் தொடங்கவேண்டும்.

வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய தகவல்கள், ஆய்வுகளைத் திரட்டி வைக்கவும், கண்காணிக்கவும், கணிப்பொறிகளைப் பெரிய அளவில் பயன்படுத்த வேண்டுமென்று மாவட்ட ஆட்சியாளர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நிலப்பதிவேடுகளைப் பராமரிப்பதற்கும் கணிப்பொறிகளைப் பயன்படுத்தவேண்டும். கணிப்பொறிகளைப் பயன்படுத்துவது கிராமப்புற மக்களின் ஆவணத் தேவைகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும், காலஅளவு நிர்ணயத் திட்டங்களை வகுத்து நிறைவேற்றவேண்டும். வருவாய் நிர்வாகத்தின் அடிப்படைப் பணி, நில ஆவணங்களையும், நிலஅளவு ஆவணங்களையும், நில உரிமைப் பட்டாப் புத்தகங்களையும், அன்றன்றைய தேதிவரை சரிவரப் பராமரிப்பதுதான். தன்னுடைய உரிமைக்கான ஆவணங்கள் நிர்வாகத்தால் சரியாகப் பராமரிக்கப்படுகிறது என்பதை உணரும் எந்த ஒரு கிராமப்புற மனிதனும் மகிழ்ச்சி அடைவான். நில ஆவணங்களை நவீனமுறையில் கணிப்பொறியினைப் பயன்படுத்திப் பாதுகாப்பதுதான் நமது முயற்சியாகும்.

மக்கள் குறைதீர்க்கும் பணிகளில் நீங்கள் சிறப்பாகப் பணியாற்றி இருக்கிறீர்கள். உங்களில் சிலர் தனிப்பட்ட முறையில் பெருமளவில் அக்கறை எடுத்துப் பணியாற்றி இருக்கிறீர்கள். மக்களைச் சந்தித்து அவர்களின் குறைகளை அறிந்து அதைப்போக்க உங்களுக்கு எல்லா வாய்ப்பும் இருக்கிறது. குறை தீர்க்கும் செயல்முறை, மற்ற துறைத் தலைவர்களின் ஒத்துழைப்பை நாடித் தீர்க்கவும் மாவட்டங்களில் உங்களுக்கு உதவுகிறது. தாமதம் இல்லாமல் நன்மைகள் கிடைக்க வேண்டும் என்று மாவட்ட நிர்வாகத்திடம் ஏழைகள் எதிர்பார்க்கிறார்கள். அவர்களுடைய பெரும்பாலான குறைகள் மிகவும் சாதாரணமானவைகள். நில ஒதுக்கீடு, வீட்டுமனை ஒதுக்கீடு, பட்டா மற்றும் முதியோர் உதவித் தொகை போன்றவை இந்தக் குறைகளை மக்களுக்கு திருப்தி அளிக்கும் வகையில் மாவட்ட ஆட்சியர்கள் போக்கி, நிர்வாகத்திற்கு நல்ல பெயர் கிடைக்க உதவவேண்டும். பெரும்பாலான தாமதங்கள் வழக்கமான மற்றும் தவிர்க்கக் கூடிய காரணங்களால்தான் ஏற்படுகின்றன. மாவட்ட ஆட்சியர்கள் நேரடி அக்கறை எடுத்துச் செயலாற்றும் போது நல்ல விளைவுகள் ஏற்படுகின்றன. அந்த நேரத்தில் பொதுமக்கள் அவர்களைப் பெரிதும் புகழ்கிறார்கள். பொது மக்களின் குறை தீர்க்க, மாவட்ட ஆட்சியர்கள் நேரடி அக்கறை எடுத்து, நிர்வாக இயந்திரத்தை வலுப்படுத்தி, அவர்களது பணியாளர்களையும் அக்கறைப்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அறிவொளி இயக்கத் திட்டங்களை நிறைவேற்ற நீங்கள் காட்டிய ஆர்வத்திற்காக உங்களைப் பாராட்டுகிறேன். இந்த அறிவொளி இயக்க நிலைகளைத் தொடர்ந்து பராமரிப்பது ஒரு முக்கியமான பணியாகும். அறிவொளி இயக்கத்தின் ஆரம்பக்கட்டப் பிராச்சாரத்திற்குப் பிறகு மாவட்டங்களில் வயது வந்தோருக்கு கற்பிப்போர்கள் கிடைக்கும்படியான திட்டங்களை நாம் அமைக்க வேண்டியிருக்கும். சமீபத்தில் அரசு அறிமுகப்படுத்தியுள்ள புதிய வேலைவாய்ப்புத் திட்டத்தில், வயது வந்தோர் கல்வியும் (அறிவொளி இயக்கம்), மதுவிலக்குப் பிரச்சாரமும் இரண்டு முக்கியப் பணிகளாகும். அவை படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் இந்தத் திட்டத்தில் சேரும்வண்ணம் இருக்கும். இந்த வேலைவாய்ப்புத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படுவதை நீங்கள் கண்காணிப்பது அவசியமாகும்.

குடும்பநலத் திட்டத்திலும் அதன் குறியீட்டை அடைவதிலும் நீங்கள் காட்டும் தொடர்ந்த ஆர்வத்தை நான் கவனத்தில் கொண்டுள்ளேன். உங்களது ஈடுபாட்டினால் ஆண்டிற்காண்டு குறிப்பிடத்தகுந்த சாதனையைத் தமிழ் நாடு அடைந்துள்ளது. இது நமது மாநிலத்தில் குடும்பநலத் திட்டத்திற்கு நாம் அளித்துள்ள முக்கியத்துவத்தின் முன்னேற்றத்தைக் காண்பிக்கிறது. குடும்ப நலத் திட்டம் என்பது வெறும் இலக்கினைச் சாதிப்பதல்ல. தம்பதிகள், குழந்தைகள் பிறப்பதற்கான இடைவெளி, வரையறுக்கப்பட்ட குடும்பம், மழலைகளைச் சரியான முறையில் கவனித்தல் ஆகியவற்றைப் போதுமான அளவு புரிந்து கொள்வும். நமது மாநிலத்திலுள்ள சில மாவட்டங்களில் பழக்கத்திலுள்ள கொடுமையான பெண் சிசுவதையை நிறுத்துவதற்கும் குடும்பநலத் திட்டம் உதவ வேண்டும். மாவட்ட ஆட்சியர்கள் மனவளர்ச்சி குன்றிய, உடல் ஊனமுற்ற மற்றும் மகளிர் பலன்பெறும் சமூகநலத் திட்டங்களில் நேரடி அக்கறை காட்ட வேண்டுமென விரும்புகிறேன். அரசிடம் இத்தகைய மக்களுக்கான பல திட்டங்கள் இருக்கின்றன. ஆனால், இந்தத் திட்டத்தின் பலன்கள் அவர்களைச் சென்றடைகிறதா என்பதை உறுதிப்படுத்துவதுதான் முக்கியம். கடந்த காலங்களில் இத்தகைய திட்டங்களின் பலன்கள் யாருக்குச் சென்றடைய வேண்டுமோ அவர்களுக்குச் சென்றடையவில்லை என்று அறிந்தேன். அதனால்தான் மாவட்டங்களிலிருந்து, அவர்களைச் சென்னைக்கு வரவழைத்து நானே நேரடியாக நலத்திட்ட உதவிகளை வழங்க முடிவெடுத்தேன். இந்த உதவிகளை வாங்குபவர்கள் அதைப் பெறத் தகுதியானவர்கள் தானா என்று நானே நேரடியாகப் பார்க்க விரும்பினேன். மாவட்ட ஆட்சியர்கள் முறையான நடவடிக்கை எடுத்து, பலனாளிகளை இனங்கண்டு சென்னைக்கு அழைத்து வந்ததனால், நானே அவர்களைத் தனித் தனியாகச் சந்தித்து உதவிகளை அளிக்க முடிந்தது. இதுபோல மாவட்டங்களில் மக்களுக்கு இத்தகைய உதவிகள் வழங்கப்படும்போது, பொது நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்து, நேரடியாக அவர்களுக்கு வழங்கப்படுவதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்யவேண்டும்.

விவசாயம், கால்நடை, மீன்வளம், ஊரகவளர்ச்சி, ஃகாதாரம், தொழில்கள், குடிநீர் வழங்கல் போன்ற துறைகளிலுள்ள திட்டங்களைச் செயல்படுத்துவதில் மாவட்ட ஆட்சியர்களின் ஈடுபாடு மிகவும் முக்கியமானதாகும். நிதி மற்றும் பலன் பெறுபவர்களின் எண்ணிக்கை இலக்குகள் சாதிக்கப்படுவதைக் கவனிக்க வேண்டும். இந்தத் திட்டங்கள் உண்மையாக நடைமுறைப்படுத்துவதில் உள்ள தடைகளை நீங்கள் நீக்கவேண்டும். இந்தத் திட்டங்களில் பலனாளிகளின் பங்கை நீங்கள் உறுதிப்படுத்தினால்தான், அவர்கள் தங்களுக்கு வழங்கப்படும் உதவிகளையும் சேவைகளையும் நிலைநிறுத்தும் பராமரிப்புப் பொறுப்பினை ஏற்றுக்கொள்ள முடியும்.

நமது மாநிலத்திலுள்ள ஊராட்சி நிறுவனங்களின் தோற்றத்தில், புதிய அரசியலமைப்பின் தேவைகளை உறுதி செய்வதற்கேற்றாற்போல் மாற்றம் கொண்டுவர எண்ணப்படுகிறது. இப் பொருள்மீது விவாதம் நடைபெறும்போது உங்களது கருத்துக்களைக் கேட்க ஆவலாக உள்ளேன்.

ஊராட்சி அமைப்புகளுக்கு விரைவில் தேர்தல் நடத்த வேண்டும். கிராமங்களில் வளர்ச்சித் திட்டங்களைச் சரியான முறையில் நிறைவேற்றும் பொறுப்பை அதிகாரப்பற்றற்ற தலைமை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே எங்கள் கொள்கையாகும்.

இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு முதல் இடத்திலிருந்து நழுவிவிட்டது என்று அறிகிறேன். இந்த ஆண்டு அவ்வாறு நழுவாமல் முதல் இடத்தில் இருக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கவேண்டும் என வலியுறுத்துகிறேன். அதேபோல் அனைத்துத் திட்டங்களிலும் தமிழ்நாடு முதலிடத்தை அடைய எல்லா நடவடிக்கைகளும் நீங்கள் எடுக்கவேண்டும் என விரும்புகிறேன்.

இம்மாநாட்டில் விவாதங்களுக்கு மிகவும் நெருக்கமான சில பொதுவான ஆலோசனைகளை நான் குறிப்பிட்டுள்ளேன். உங்களின் கடந்த இரண்டாண்டு அற்புதமான பணிகளுக்காக மீண்டும் ஒரு முறை பாராட்டுகிறேன். மக்களின் நலனுக்காக உங்கள் கடமைகளை அர்ப்பணிப்பு உணர்வோடும், உறுதியோடும், அனுதாபத்தோடும், நியாயமான உணர்வோடும் நீங்கள் தொடர்ந்து செய்வீர்கள் என நம்புகிறேன். இப்பொழுது, நிகழ்ச்சி நிரலில் காணப்படும் பல்வேறு பொருள்கள் மீது உங்களது ஆக்கப்பூர்வ ஆலோசனைகளை அளிப்பீர்களென எதிர்பார்க்கிறேன்.

மக்கள் நலனுக்காக உங்கள் கடமைகளை அர்ப்பணிப்பு உணர்வோடும், உறுதியோடும் தொடர்ந்து செய்யுங்கள்!

(மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளின் மாநாடு 24.6.93 அன்று தலைமைச் செயலகத்தில் நடந்தது. அப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை.)

சென்னைப் புறநகரில் ஒரு

தொழில் பூங்கா

''தமிழகத்தில் தொழில் வாய்ப்புகள்'' குறித்த கருத்தரங்கின் தொடக்க விழாவில் கலந்து கொள்ளும் இந்நேரத்தில், தொழில் அதிபர்களான உங்களையெல்லாம் மீண்டும் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் என்னுடைய அரசு ஆட்சி பொறுப்பேற்றவுடன் நான் தொடங்கிய விவாதத்தின் தொடர்ச்சி தான் இந்தக் கருத்தரங்கம் என்று கருதுகிறேன். இத்தகைய கருத்தரங்கம், நாம் எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கின்றோம் என்பதை அறிய உதவுவதோடு, எதிர்காலத்திற்கு நம்மைத் தயார் செய்து கொள்வதற்கும் உதவியாக இருக்கும். இந்த விவாதங்கள் அரசு நல்ல செயல் திட்டங்களை உருவாக்கி, அதன் மூலம் ஒருங்கிணைந்த செயலாக்கத்திற்கு அடித்தளமாக அமையுமென நம்புகிறேன்.

பல்வேறு முன்னணித் துறைகளில் தங்களை அர்ப்பணித்து போற்றத்தகு முன்னேற்றம் அடைந்ததற்காக விருதுகள் பெற்ற தொழிலதிபர்களை வாழ்த்தி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன். இதை மற்றவர்களும் பின்பற்றி தொழில் துறையில் உயர்ந்த நிலையை அடைய, நமக்கு இது போன்ற மேலும் பல உதாரணங்கள் தேவைப்படுகின்றன.

ஊக்கமுள்ள முதலீட்டாளர்களுக்கு வழங்க, தமிழ்நாட்டில் பல வாய்ப்புகள் இருப்பதை நீங்கள் எல்லோரும் நன்கு அறிவீர். உகந்த தொழில் மற்றும் தொழிலாளர் சூழ்நிலையைத் தவிர தமிழ்நாட்டில் மிக உயர்ந்த பயிற்சி பெற்ற மற்றும் உற்பத்தித் திறன் கொண்ட மனித வளம் இருக்கிறது.

பல்வேறு மாநிலங்களில் உள்ள குழப்பமான சூழ்நிலையை ஒப்பிடும் போது, தமிழ்நாட்டில் உள்ள அமைதியான சட்டம் ஒழுங்கு நிலைமை ஆர்வமுள்ள தொழில் முதலீட்டாளர்களுக்கு ஊக்கம் அளிப்பதாக உள்ளது. தேவையான அடிப்படை வசதியைப் பொறுத்த மட்டில் தமிழகம் நமது நாட்டில் மூன்றாவது இடத்தில் இருக்கிறது. மின் உற்பத்தியை அதிகரிக்க தனியார்துறை ஈடுபாட்டுடன் நிறைவேற்ற, பல பெரிய திட்டங்களைத் தீட்டியுள்ளோம். முன்னோடித் திட்டமாக, ரூ.4,200 கோடி செலவில் மூன்று திட்டங்களை நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளோம்.

இதைத்தவிர, கூட்டுத்துறையில் ரூ.7,000 கோடி செலவில் ஒருங்கிணைந்த சுரங்கம் மற்றும் மின் உற்பத்தித் திட்டம் ஒன்று நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. நீங்கள் மகிழ்ச்சி அடையத்தக்க வகையில் தமிழகத்தில் தற்பொழுது மின்வெட்டே இல்லை. எதிர்காலத்திலும் இந்த மகிழ்ச்சியான நிலை தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்பது தான் எங்கள் முயற்சி.

'தமிழகத்தில் தொழில் வாய்ப்புகள்' குறித்த கருத்தரங்கினை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 23.6.'93 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்து ஆற்றிய உரை.

எட்டாவது திட்டத்தில் மாநிலத்தின் தொழில்துறையின் அடிப்படை வசதிகளுக்காக, குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டங்கள் ரூ.1,450 கோடி செலவில் நிறைவேற்றப்படவுள்ளன. தொழில் உற்பத்தி, தரம், கடன் வசதி போன்ற பல்வேறு இனங்களில் அகில இந்தியாவில் தமிழகம் மற்ற மாநிலங்களைவிட முன்னணியில் உள்ளது. குறிப்பாக சிறு தொழில்களின் ஆண்டு வளர்ச்சி 15.25 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. இது நாட்டின் உயர்ந்த அளவாகும்.

ஏற்றுமதியைப் பொருத்தமட்டில் அகில இந்திய அளவில் நம்முடைய பங்கு 12.5 சதவிகிதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. நமது மாநிலம், தோல் பொருட்கள், ஆயத்த ஆடைகள், துணி உற்பத்தி, கடல் பொருட்கள், பொறியியல் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தியிலும் குறிப்பிடத்தக்க முன்னணியில் இருக்கிறது. தொழில் தொடங்குவதற்கான ஏற்றதொரு சூழ்நிலை நமது மாநிலத்தில் இருப்பதைக் கோடிட்டுக் காட்டுவதற்காகவே இதை நான் குறிப்பிடுகிறேன்.

தொழில்துறையைத் தாராளமயமாக்குவதில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்த பொருளாதாரச் சீர்திருத்தத்தை நாடு உருவாக்கியுள்ளது. பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதற்காக மைய அரசு பல நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது. இதில் மாநிலங்கள் பின் தங்கிவிடக்கூடாது. வேகமான தொழில் வளர்ச்சிக்காகத் தமிழக அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தொழில் தொடங்குவதற்கு வசதியாக ஏற்ற சூழ்நிலையையும், அடிப்படை வசதிகளையும் மாநில அரசு செய்து தர வேண்டியிருப்பதால், முக்கிய பொறுப்பு மாநில அரசின் மேல் விழுந்துள்ளது. இதனால் தனியார் துறைகளில் உள்ள தொழில் அதிபர்கள், அவர்களுக்கு வழங்கப்படும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி புதிய தொழிற்சாலைகள் அமைக்க இயலும். தாராளக் கொள்கை என்பது கட்டுப்பாட்டைத் தளர்த்துவதாகும்.

தனியார் துறையை ஊக்கப்படுத்துவதும் இதில் அடங்கும். உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் வலியுறுத்தும் முயற்சியையும் இது குறிப்பிடுகின்றது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, தொழில் வளர்ச்சிக்குத் தகுந்த சூழ்நிலைகளையும் தொழில் முனைபவர்களுக்கு நட்பான சூழ்நிலைகளையும் உருவாக்கும் நோக்கத்துடன் 1992-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் பரவலான நிதிச் சலுகை மற்றும் பிற ஊக்கங்களைக் கொண்ட புதிய தொழில் கொள்கையை நான் அறிவித்தேன்.

அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதை விரைவுபடுத்தவும், வழிகாட்டும் பணிகளுக்கும் தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் (TACID), தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி வளர்ச்சி நிறுவனம் (GUIDANCE) போன்ற தனி நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி வளர்ச்சி நிறுவனம், தொழில் மூலதனம் செய்பவர்களுக்கு உதவுவதற்காக ஓராண்டுக்கு முன் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக் கழகம் (TACID) மத்திய அரசு திட்டப்படி மூன்று தொழில் வளர்ச்சி மையங்களை உருவாக்கும் பணிகளை எடுத்துக் கொண்டுள்ளது. மாநில அரசின் சார்பில் தருமபுரி மாவட்டம், பருகூரில் தொழில் வளர்ச்சி மையம் ஒன்றையும், திண்டுக்கல்-அண்ணா மாவட்டம் நிலக்கோட்டையில் ஒரு வேளாண் தொழிற்பேட்டையையும் உருவாக்க தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக் கழகம் தொடங்கியுள்ளது.

இதைத்தவிர, பெரிய ஏற்றுமதி மையமான திருப்பூரில் ரூ.200

கோடி செலவில் அடிப்படை வசதிகளை அதிகரிக்கும் ஒரு பெரிய திட்டத்தையும் இந்த நிறுவனம் எடுத்துக் கொண்டுள்ளது.

இவையெல்லாம் நாங்கள் எடுக்கும் முயற்சிகளின் சிறு உதாரணங்களேயாகும். புதிய முதலீடுகளை வரவேற்பதே பொதுவான எங்கள் கொள்கையாகும்.

முக்கியமாக, போட்டியும், லாபமும் உள்ள துறைகளில் முதலீடுகளை நான் வரவேற்கிறேன். இம்முதலீடுகளில் சில புதிய தொழில் கொள்கையில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. குறிப்பிட்டுச் சிலவற்றைச் சொல்ல வேண்டுமானால், தோல் பொருட்கள், ஆடைகள், மோட்டார் வாகனப் பாகங்கள் மற்றும் மின்னணுவியல் சாதனங்கள் போன்ற சில பிரிவுகளில் நான் முக்கிய கவனம் செலுத்தவுள்ளேன். தொழில் வளர்ச்சியில் தாய்த் தொழில்களாகக் கருதப்படும் மாபெரும் திட்டங்களில் முதலீடுகளுக்கு அரசு எல்லா உதவிகளையும் வழங்கும். புதிய தொழில் மற்றும் முதலீடு முயற்சிகளுக்கு இவை முக்கிய அம்சமாக எடுத்துக் கொள்ளப்படும்.

மாவட்ட அளவில் சிறுதொழில் முனைவர்கள் ஒரே இடத்தில அனைத்து அனுமதிகளும் பெற வழி செய்யும் அமைப்பை உருவாக்கி முதலீட்டாளர்களுக்கு ஒரு நட்பான சூழ்நிலையை உருவாக்கி வருகிறோம். குறிப்பிட்ட பகுதிகளிலும், தொழிற்பேட்டைகளிலும் தொழில் வளர்ச்சிக் குழுமங்கள் அமைக்க சட்டம் கொண்டுவரப்படும். இதன் மூலம் தொழில் முனைவர்களுக்கு ஏற்படும் பல சுமைகள் குறைக்கப்பட்டு அவர்கள், தங்கள் திட்டங்கள் மேல் முழுக்கவனம் செலுத்த வழி கோலும்.

உள்நாட்டு முதலீட்டை மட்டும் கவர வேண்டுமென்று நாங்கள் எண்ணவில்லை. வெளிநாட்டிலிருந்து குறிப்பாக சிங்கப்பூர், பசிபிக் நாடுகளிலிருந்து நேரடி முதலீட்டை ஊக்கப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு **"சென்னைத் தொழில் பூங்கா"** என்றழைக்கப்படும் ஒரு வணிக வளாகத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம். இதன் மூலம் வெளிநாட்டு முதலீடு ஊக்கப்படுத்தப்படுவதோடு, உள்

அடுத்த இதழிலும்

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டச் சிறப்புக் கட்டுரைகள், சுவையான செய்திகள் இடம்பெறும்.

நாட்டுப் பொருளாதாரத்தில் புதிய தொழில் நுணுக்கங்கள் அறிமுகப்படுத்தப்படும். இதைத்தவிர, தொழில் நுணுக்கத்திலும், நிர்வாகத் திறமையிலும் முன்னேற்றம் ஏற்படும். இது உலகச் சந்தையில் போட்டியையும் ஊக்குவிக்கும். சென்னை தொழில் பூங்காவுக்கு வெளிநாட்டு முதலீட்டைக் கவரும் தமிழக அரசின் குறிக்கோளை நிறைவேற்ற, தமிழக அரசு எடுத்து வரும் முயற்சிகளுக்கு எடுத்துக்காட்டாக இந்தத் தொழில் பூங்கா திகழும்.

சென்னை நகரின் புறநகர்ப் பகுதியில் அமைக்கப்படும் இத் தொழிற் பூங்கா, தென்கிழக்கு ஆசியாவில் எந்த ஒரு பகுதியுடனும் ஒப்பிடும் அளவுக்கு அடிப்படை வசதிகளைக் கொண்டிருக்கும். மேலும், இந்திய அளவில் தனித்தன்மையுடன் கூடிய ஊக்கத் திட்டங்களைக் கொண்டதாகவும் இது இருக்கும். தமிழ்நாட்டுக்கு விலை மதிக்கத்தக்க பயன்கள் கிடைக்கும் வகையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டை அதிகரிப்பது இப்பூங்காவின் முக்கிய குறிக்கோளாகும். இதற்குத் தேவைப்படும் ஊக்கத்தை மத்திய, மாநில அரசுகள் அளிக்க வேண்டும். மாநில அரசைப் பொறுத்தமட்டில் மின்சார சப்ளை, மாநில அரசின் ஒப்புதலை விரைவாக வழங்குதல், அடிப்படை வசதிகள் போன்ற உதவிகளை முதலீட்டாளர்களுக்கு அரசு வழங்கும்.

மத்திய அரசின் ஒத்துழைப்போடுதான் ஒரு மாநிலம், தொழில் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைய முடியும். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், எண்ணூரில் ஒரு துணைத் துறைமுகம் அமைப்பது அவசரத் தேவையாகும். இதனால் மாநிலத்தின் மின் உற்பத்தி பாதிக்காத வகையில் நிலக்கரியை எளிதாகக் கொண்டுவர முடியும்.

மற்றொரு பெரிய திட்டம் தென்னக எரிவாயு இணைப்புத் திட்டம் ஆகும். இத்திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்துமாறு நாங்கள் மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம். எரிசக்தி கிடைப்பதை இது அதிகரிப்பதோடு இரசாயனத் திட்டங்களுக்குத் தேவைப்படும் முக்கிய பொருளாகவும் விளங்கும். இது குறித்து மத்திய அரசு தேவையான ஒப்புதல்களை அளித்துள்ளதை அறிந்து நான் மகிழ்ச்சியடைகிறேன். தென்மாநிலங்களின் தொழில் வளர்ச்சிக்குத் அத்தியாவசியமாகத் தேவைப்படும் இத் திட்டத்தை மிக விரைவில் செயல்படுத்தத் தேவைப்படும் பிற நடவடிக்கைகளையும் துரிதப்படுத்துமாறு நான் மைய அரசை வலியுறுத்த விரும்புகிறேன்.

தொழில் துறையில் எங்கள் முன்னேற்றம் மனநிறைவு அளிப்பதாக இருந்தாலும், இப்போதுள்ள நிலையை அப்படியே தக்க வைத்துக் கொள்ள வேண்டுமென்று மட்டும் நினைக்காமல், தொழில் வளர்ச்சியை விரிவுபடுத்தி தமிழ்நாட்டைத் தொழில் துறையில் இந்தியாவிலேயே முதல் இடத்துக்குக் கொண்டு வரவேண்டும் என்பதில் முனைப்பாக இருக்கிறோம். எங்களுடைய இந்த முயற்சிக்குத் தொழில் அதிபர்கள் உற்சாகத்துடன் ஒத்துழைப்பு நல்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

இறுதியில் இந்தக் கூட்டுமுயற்சி தான் தொழில் துறையில் மேன்மையடைய உதவியாக இருக்கும்.

இக்கருத்தரங்கத்தில் இடம் பெறும் பேச்சு வார்த்தைகள் பயனுள்ளவையாக இருக்கும் என நான் நம்புகிறேன். என்னுடைய உரையை முடிப்பதற்கு முன் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இம்மாதிரியான கருத்தரங்கில் நீங்கள் பலம் மற்றும் பலவீனங்களை விவாதித்து, தமிழகத்தில் தொழில் வளர்ச்சி பெருக வாய்ப்புகள் என்ன என்பதை ஆராய்ந்து, தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்த நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து எங்களுக்கு ஆலோசனை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். உங்களிடமிருந்து பயனுள்ள பல ஆலோசனைகளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

கிருஷ்ணகிரியில் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா

தமிழ்நாடு அரசின் சார்பில் மாநில அளவிலான பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா 12.6.93 அன்று, கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி விளையாட்டுத்திடலில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ.தசரதன் இ.ஆ.ப. அவர்கள் விழாவிற்கு வருகை புரிந்த அனைவரையும் வரவேற்புப் பேசினார்.

அதனைத் தொடர்ந்து மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள் தலைமையுரையாற்றிப் பேசும்போது, பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தமிழுக்கும் தமிழ் மண்ணுக்கும் தனது கவி ஆற்றல் மூலம் பெருமை சேர்த்த மாமனிதர் என்றும், பாரதிதாசன் கண்ட புதுமைப் பெண் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி என்றும் புகழாரம் சூட்டினார்.

தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகையில், பாவேந்தர் பாரதிதாசன் தமிழ் வளர்க்கப் பாடினார். மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைப் பற்றிப் பாடல்களில் பாடியுள்ளார். ஆகவேதான் தமிழ்நாட்டில் மட்டுமின்றி நாடு முழுவதும் அவர் புகழ் பரவியது. பாரதியார் மீது கொண்ட பற்றினால் தன் பெயரையே மாற்றிக்கொண்டார். அவர் பாடியது போன்ற புதுமையான திட்டங்களோடு தமிழகத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சி நடத்தி வருகிறார். இந்தியாவின் முதல் பெண் முதல்வர் என்று ஆட்சி நடத்தி வருகிறார் என்றார்.

பாவேந்தர் பாரதிதாசன் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசும்போது, நாட்டின் வளர்ச்சிக்குப் பாடிய கவிஞர்களில் முக்கியமானவர் பாவேந்தர் பாரதிதாசன் ஆவார். இவர் பாடிய பாடல்கள் விடுதலை உணர்வைத் தூண்டின. இவர் புகழ் நிலைக்க நாம் செய்யும் கைமாறுதான் இந்தப் பாராட்டு விழாவாகும். சாதிப் பிரச்சினையைக் கைவிட வேண்டும். மதப் பாகுபாடு கூடாது. ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று பாவேந்தர் பாடியுள்ளார் என்றார்.

விழாவினையொட்டி நடத்தப்பட்ட பேச்சுப்போட்டி, கவிதைப்போட்டி, கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பரிசுகள் வழங்கி, அரசு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

விழாவில், காவேரிப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் திரு முனுசாமி, கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் திரு முனிவெங்கடப்பன், மொரப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு சிங்காரம், பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் திரு புருசோத்தமன் ஆகியோர் பாவேந்தர் பாரதிதாசன் பெருமைகளைப்பற்றிப் பேசினார்கள்.

விழாவின் முடிவில், செய்தி மக்கள் தொடர்பு இணை இயக்குநர் திரு பா. செயப்பிரகாசம் அவர்கள் நன்றி நவின்றார்.

விழாவில் மாணவ மாணவியரின் கலைநிகழ்ச்சி மற்றும் தருமபுரி மாவட்டக் காவல்துறையினரின் கரகம், காவடி நிகழ்ச்சி ஆகியவை வெகு சிறப்பாக நடைபெற்றன.

13.6.93 அன்று மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள், தொரப்பள்ளியில் முதறிஞர் இராஜாஜி நினைவு இல்லத்தைப் பார்வையிட்டார்.

இலக்கியம் எதற்காக?

இலக்கியம் எதற்காக? இலக்கியம் எப்படி இருக்க வேண்டும்? எப்படிப்பட்டதை இலக்கியம் என்று சொல்லலாம்? அவை எதற்காக இருக்க வேண்டும்? என்பது பற்றிச் சிந்தித்தால், மனிதனின் உயிர் வாழ்க்கைக்கு மட்டும் அல்லாமல், மனித சமுதாய வளர்ச்சிக்கு ஏற்றதாகவும் அது இருக்க வேண்டும் என்பது எனது கருத்து.

- தந்தை பெரியார்.

1-8-1993

நான்காவது அட்டை சொல்லும் செய்தி:

புதுப்பொலிவு பெறும் குற்றாலம்!

திரிகூடமலை என்றும், பொதியை என்றும் வரலாற்றுக் காலம் தொட்டு புகழ்பெற்ற குற்றாலம், கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தென் மாவட்டங்களில் பெற்ற கன மழையினால் வெள்ளம் ஏற்பட்டு பெருத்த சேதம் அடைந்துள்ளது. இதற்குமுன் கண்டிராத வெள்ளம் பாய்ந்து குற்றாலத்தைச்சீர்குலைய வைத்துவிட்டது.

குற்றாலப் பேரருவியில் பெரிய பாறாங்கற்கள் வெள்ளத்தில் அடித்துவந்தும், பெரிய அளவிலான மரங்கள் வேருடன் சாய்ந்தும் சேதப்படுத்தியுள்ளன. நீர்வீழ்ச்சியில் குளிக்குமிட வளைவு, குளிக்கும் தளம் நடைபாதைப் பாலங்கள் குற்றாலநாதரின் திருக்கோவிலின் நடைபாதைத் தளங்கள் நீரால் அரிக்கப்பட்டு, பழுதடைந்த நிலையில் பயன்படுத்த இயலாதபடி சேதம் அடைந்துள்ளன. குற்றாலப் பேரருவியும், ஐந்தருவியும் வெள்ளத்தால் உருக்குலைந்து போய்விட்டன.

அரசு குற்றாலத்தை மேம்படுத்தும் பணியாக சீரமைப்புப் பணிக்காக ரூ.30 இலட்சம் முதல் கட்டமாகவும், இரண்டாம் கட்டமாக ரூ.27 இலட்சம் மேம்பாட்டு வேலைக்காகவும், மொத்தம் ரூ.57 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

சீரமைப்பு வேலைகள் தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகத்தின்வசம் ஒப்படைக்கப்பட்டு வேலைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகமும் போர்க்கால அடிப்படையில் தேர்ந்த பொறியாளர்களை வைத்து சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளது. குற்றாலம் மற்றும் ஐந்தருவி சீரமைப்புப் பணிகள் முடிந்து, வரும் சாரல் பருவத்திற்குத் தயாராக உள்ளது.

ஆர்ச்சுப் (வளைவு) பகுதி நவீன முறையில் (Ganiting) வலுப்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது. சேதம் அடைந்த குளிக்கும் தளம் புதிய முறையில் கருங்கற்களால் பாவப்பட்டுள்ளது. வளைவுக்கு வெளிப்பகுதியில் நடைபாதை வசதியும் அமைக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட நடைபாதைப் பாலங்கள் மீண்டும் கட்டப்பட்டுள்ளன. பெண்கள் குளிப்பதற்குத் தனியாக, புதிய நடைபாதை வசதியும் உடைமாற்றும் அறையும் அமைக்கப்பட்டுள்ளன. வளைவுக்கு முன்பகுதியில் உள்ள குளம் தூர் நீக்கப்பட்டு நீச்சல் குளம் போல அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இயற்கைப்பொலிவு மிளிர நீர்வீழ்ச்சியின் இருபுறங்களிலும் தேவையற்ற கட்டடங்களை நீக்கி அழகுபடுத்த வேண்டி இயற்கைச் செடிகள், மரங்கள் அமைந்த கண்கவர் வனப்பகுதியும் (Landscape) ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அருவிக்கு எதிரில் உள்ள மண்டபம் புதுப்பிக்கப்பட்டு அதன் கோபுர மற்றும் முகப்பு வேலைகள் தேர்ந்த ஸ்தபதிகளைக் கொண்டு சீரமைக்கப்படுகின்றன.

முதன்முறையாக, பொங்குமாங்கடல் வெள்ளத்தால் மண் மற்றும் கற்களால் மூடப்பட்டுள்ளதைத்தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகம் அப்புறப்படுத்தி நீர் மெத்தை (Water Cushion) அமைத்ததால் மேலிருந்து நீரோடு கல் மண் கலந்து வராதபடி தடுக்கப்பட்டு நீராடுபவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

இப்போது குற்றால சீசன் தொடங்கி, சுற்றுலாப் பயணிகள் அங்கே சூழ்ந்துள்ளனர்.

பேரருவியிலும், ஐந்தருவியிலும் நீர் வெள்ளம்போல் கொட்டுகிற காட்சி, கண்கொள்ளாக் காட்சியாகத் திகழ்கிறது.

ஆடவர் மகளிர் குழந்தைகள் அருவியில் நீராடி மகிழ்கின்றனர். வெள்ளம் ஏற்படுத்திய வேதனை இப்போது அங்கே இல்லை. கொள்ளை இன்பத்தில் ஆழ்கின்றனர் மக்கள்!.

ஊரும் பேரும்

திருநெல்வேலி

வாகுதேவநல்லூர்

புளியங்குடியிலிருந்து 8 கி.மீ. தூரத்தில் உள்ளது, இது. புலித் தேவரால் கட்டப்பட்ட கோட்டை இங்குள்ளது. 1759-இல் கான் சாகிப்பின் படைகள் இக்கோட்டையை முற்றுகையிட்டன.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
முகவரி: அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

காதி கிராப்ட்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

DIPR/273/DBM/93

காவிரி நீர்ப் பிரச்சினையில் மாண்புமிகு முதல்வர் தமிழகத்தின் உரிமை காக்க உண்ணாவிரதம்

காவிரி நீர்ச் சிக்கலில், நடுவர் மன்றம் வழங்கிய இடைக்காலத் தீர்ப்பைக் கர்நாடக அரசு உடனடியாக நடைமுறைப்படுத்த மத்திய அரசு ஆணை இடக்கோரி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்கள் கால வரையரையற்ற உண்ணாவிரதத்தை 18.7.93 அன்று மேற்கொண்டார்.

யாரும் எதிர்பாராத நிலையில் 18.7.'93 அன்று காலை 9.30 மணியளவில் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம் அருகே வந்தமர்ந்த அவர், உண்ணாவிரத அறிவிப்பை வெளியிட்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் உண்ணாவிரதம் பற்றிக் கேள்விப்பட்டு, அமைச்சர் பெருமக்கள், முன்னாள் அமைச்சர் பெருமக்கள், வாரியத்தலைவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அதிகாரிகள் ஆகியோர் அங்கே வந்து கூடினர். காவல்துறையினர் கண்காணிப்புப் பணியில் கவனமாக ஈடுபட்டார்கள்.

சென்னை நகர் முழுவதும் வேகமாக இச்செய்தி பரவவே ஏராளமான ஆண்களும், பெண்களுமாக மாண்புமிகு முதல்வர் அவர்களைக் காண வெயிலையும் பொருட்படுத்தாது சாரிசாரியாக வந்து திரண்டனர்.

செய்தியாளர் சந்திப்பு

தம்மைக் காணவந்த செய்தியாளர்களையெல்லாம் சந்தித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், தம்முடைய உண்ணாவிரதத்திற்கான காரணங்களை விளக்கிப் பின்வருமாறு தெரிவித்தார்:

"இன்று காலை 9.15 மணிக்கு இங்கே (எம்.ஜி.ஆர். நினைவிடம்) வந்தேன். தலைவர் சமாதிக்குப் போய் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினேன்; அதன் பிறகே இந்த உண்ணாவிரதத்தைத் தொடங்கியிருக்கிறேன்.

காவிரி நீர்ப் பிரச்சினையில், நடுவர்மன்றம் வழங்கிய இடைக்காலத் தீர்ப்பைச் செயல்படுத்த வேண்டும் என்று கர்நாடக அரசுக்கு மத்திய அரசு உத்தரவிடவேண்டும் என்று நான் பலதடவை கோரிக்கை வைத்தேன். ஆனால், அதனால் எவ்விதப் பயனும் இல்லை.

இப்போது கடுமையான நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. மேட்டூர் அணையில் 20 நாள் முதல் 25 நாள் வரை திறந்துவிடப் போதுமான தண்ணீர்தான் இருக்கிறது. ஆகவே, மத்திய அரசும் பிரதமரும் இவ்விஷயத்தில் தலையிட்டு உடனே 'காவிரி' நதியில் தண்ணீர் திறந்துவிடக் கர்நாடக அரசுக்குத் தகுந்த அறிவுரை வழங்கவேண்டும்.

காவிரியில் தண்ணீர் திறந்துவிடும் வரை, நான் காலவரையற்ற தொடர் உண்ணாவிரதம் இருப்பேன். நடுவர் மன்றம் 205 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று இடைக்காலத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

அதில், ஒவ்வொரு மாதமும் எவ்வளவு தண்ணீரைக் கர்நாடக அரசு திறந்துவிட வேண்டும் என்று பட்டியலே கொடுக்கப்பட்டிருக்கிறது.

1991-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24-ஆம் தேதி நாங்கள் பதவியேற்றோம்; அடுத்த நாள் 25-ஆம் தேதி நடுவர் மன்றத் தீர்ப்புக் கிடைத்தது. இரண்டாண்டுக் காலம் ஆகியும், இன்னமும் நடுவர் மன்றத் தீர்ப்பைக் கர்நாடக அரசு அமல்படுத்தவில்லை.

நடுவர்மன்றத் தீர்ப்பின்படி, கடந்த ஜூன் மாதம் 10.16 டி.எம்.சி. தண்ணீரைக் கர்நாடக அரசு காவிரி நதியில் திறந்துவிட்டிருக்க வேண்டும். ஆனால், 4.82 டி.எம்.சி. தண்ணீர்தான் வந்தது.

இந்த மாதம் (ஜூலை) 42.96 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிட்டிருக்க வேண்டும். ஆனால், இதுவரை வந்தது 7.40 டி.எம்.சி. தண்ணீர் தான். இந்தத் தண்ணீரையும் கர்நாடக அரசு திறந்துவிடவில்லை; இது, மேட்டூர் அணைக்கட்டுப் பகுதியில் பெய்த மழையின் காரணமாக வந்த தண்ணீராகும்.

தண்ணீர் பெறுவதற்கு எல்லா வழிமுறைகளையும் நான் கடைப்பிடித்துவிட்டேன். நடுவர் மன்றத் தீர்ப்பைத் நிறைவேற்றக்கோரி மத்திய அரசுக்குத் தீர்மானம் போட்டு அனுப்பினோம்.

சட்டமன்றத்திலும் தீர்மானம் போட்டுப் பிரதமருக்கு அனுப்பி வைத்தோம். இதுதவிர, அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் குழுவை நானே தலைமை தாங்கி டெல்லிக்கு அழைத்துச் சென்று பிரதமரிடம் மனுக்கொடுத்தேன்.

எல்லா வாதங்களையும் எடுத்து ரைத்து ஆகிவிட்டது; நான் தனியாகவும் பிரதமரைப் பலமுறை சந்தித்து இது தொடர்பாக வற்புறுத்திப் பேசியிருக்கிறேன். எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

30.3.'93 அன்று, மத்திய அமைச்சர் சுக்லாவுக்கு இது தொடர்பாக நான் கடிதம் எழுதினேன். இதுவரை எந்தப் பதிலும் வரவில்லை.

11.6.'93 அன்று பிரதமருக்கு நானே மீண்டும் இன்னொரு கடிதம்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

இந்த இதழில்...

காவிரி நீர்ப் பிரச்சினையில் தமிழகத்தின் உரிமைகாக்க மாண்புமிகு முதல்வர் உண்ணாவிரதம் ... 2

உரிமை காக்கும் முதல்வர் வாழ்க! (கவிதை) ... 22

ஏழை எளியோர்க்கு மாண்புமிகு முதல்வர் உதவி ... 24

ஒரு லெட்சத்து 33 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலை ... 27

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றித்திலும் ஒரு கிராமப்புற விளையாட்டு மையம்! —மாண்புமிகு முதல்வர் உரை ... 29

தனி மனிதர்கள் நலத்தைவிட அமைப்பின் நலம் - தொழிலின் நலம் - பொது நலம் இவைகளே முக்கியம்! —மாண்புமிகு முதல்வர் உரை ... 33

காரைக்குடியில் கவியரசருக்குத் திருவிழா ... 37

கண் மருத்துவம் ... 41

நூல் நயம் ... 48

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

ஆடித் திங்கள் - 17

மலர்: 24 இதழ்: 3

1-8-1993

விலை: ரூ.3

எழுதினேன்; காவிரி நதியில் தண்ணீர் இல்லையென்றும், இதனால் குறுவை, சம்பா பயிர்கள் பாதிக்கப்படும் என்றும் அதில் குறிப்பிட்டிருந்தேன்; அந்தக் கடிதத்திற்கும் பதில் இல்லை.

கடந்த 3.7.'93 அன்று, நமது பொதுப்பணித்துறை அமைச்சர் கண்ணப்பனும் மத்திய அமைச்சர் சுக்லாவுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். ஏதோ அதிர்ஷ்டவசமாக 91-92-ஆம் ஆண்டில், அதிக அளவு மழை பெய்த காரணமாகப் பிரச்னை இல்லாதிருந்தது.

குறுவைப் பயிரைக் காப்பாற்ற 30,000 கனஅடி தண்ணீர் திறந்து விட வேண்டும்; ஆனால், இப்போது 15,000 கனஅடி தண்ணீர் தான் திறந்து விடுகிறோம்.

இந்த உண்ணாவிரதப் போராட்டம் எனது கடைசி முயற்சியாகும்; இதைத் தவிர வேறு வழி எனக்குத் தெரியவில்லை''.

வினாக்கள் - விளக்கங்கள்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவ்வாறு அறிவித்ததைத் தொடர்ந்து, செய்தியாளர்கள் தொடுத்த வினாக்களும் அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்த விளக்கங்களும் வருமாறு:

வினா: இரவு பகலாக உண்ணாவிரதம் இருப்பீர்களா?

விளக்கம்: கோரிக்கை நிறைவேறும் வரை, காலவரையற்ற வகையில் இரவு பகலாக உண்ணாவிரதம் இருப்பேன்.

வினா: மத்திய அரசு உத்தரவிட்டால், தண்ணீர் திறந்துவிடக் கர்நாடக அணையில் தண்ணீர் இருக்கிறதா?

விளக்கம்: கர்நாடக அணையில் போதுமான அளவு தண்ணீர் இருக்கிறது.

வினா: உங்களுடன் அமைச்சர்களும் உண்ணாவிரதம் இருப்பார்களா?

விளக்கம்: நான்தான் உண்ணாவிரதம் இருக்கிறேன். ஆனால், அமைச்சர்களும் என்னோடு உண்ணாவிரதம் இருக்கப் பிரியப்படுகிறார்கள். எல்லோரும் உண்ணாவிரதம் இருந்தால், நிர்வாக வேலைகள் நடக்கவேண்டும் அல்லவா? எனவே அமைச்சர்களை உண்ணாவிரதம் இருக்க வேண்டாம் என்று சொல்லிவிட்டேன்.

வினா: அனைத்துக்கட்சி எம்.பிக்களுடன் பிரதமரைச் சந்திக்கப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளதே.

விளக்கம்: ஏற்கெனவே கட்சி எம்.பிக்களுடன் பிரதமரைச் சந்தித்து மனுக் கொடுத்தாகிவிட்டதே!

வினா: மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறீர்களா?

விளக்கம்: நல்லதே நடக்கும்; நியாயம் கிடைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறேன். வேறு வழியில்லாமல்தான் இந்தக் கடைசி முயற்சியை நான் மேற்கொண்டிருக்கிறேன்.

வினா: உங்கள் உண்ணாவிரதத்திற்கு மற்ற கட்சியினர் ஆதரவு தெரிவித்திருக்கிறார்களா?

விளக்கம்: இது அ.இ.அ.தி.மு.க. நடத்தும் உண்ணாவிரதம் அல்ல; தமிழக மக்களின் ஜீவாதாரப் பிரச்சினை என்ற ரீதியில் முதல்வர் என்ற முறையில், அரசின் சார்பாக நான் உண்ணாவிரதம் இருக்கிறேன். மேலும், காவிரி நீர்ப்பிரச்சினை விஷயத்தில் தமிழகத்தின் எல்லாக் கட்சிகளுக்கும் இரண்டாவது கருத்து இருப்பதாகத் தெரியவில்லை.

நோன்பிருந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள்- அவ்வப்போது ஆங்காங்கே நின்றிருந்த அரசு தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்டராமன், இ.ஆ.ப., போன்ற உயர் அதிகாரிகளை அருகழைத்து ஆலோசனை நடத்தினார்; அரசுக் கோப்புகளைப் பார்த்தார்.

தம் நோக்கம் வெற்றிபெற வாழ்த்தி எழுச்சி முழக்கமிட்ட எல்லோரையும் பார்த்து, முறுவல் முகத்தினராய்க் கையசைத்தார்; அந்த நிலையிலும் தம்மைக் காண வந்த மக்கள் கொடுத்த விண்ணப்பங்களைக் கனிவோடு பெற்றுக் கொண்டு, கவனிப்பதாக வாக்குறுதியளித்தார்.

மீண்டும் செய்தியாளர் சந்திப்பு

மாலை 6.25 மணியளவில் மாண்புமிகு முதல்வர் அவர்களை மறுபடியும் செய்தியாளர்கள் சந்தித்தார்கள். அப்போது அவர்கள் கேட்ட வினாக்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதிலளித்தார்.

வினா: கர்நாடக முதலமைச்சர் வீரப்ப மொய்லி சென்னையில் உங்களைச் சந்தித்துப் பேசிய பிறகு, தமிழகத்துடன் சுமுகமான உறவு இருக்கும் என்று சொன்னாரே?

விளக்கம்: உண்மையில் தமிழகத்துடன் சுமுகமான உறவு இருக்குமானால் தமிழகத்திற்குத் தண்ணீர் திறந்து விட்டிருக்கலாம் அல்லவா?

வினா: நடுவர் மன்றத் தீர்ப்பை அமல்படுத்தாத கர்நாடக அரசை 'டிஸ்மிஸ்' செய்யச் சொல்லி மத்திய அரசை வற்புறுத்துவீர்களா?

விளக்கம்: அப்படி நான் வற்புறுத்தமாட்டேன்; இப்போதுள்ள பிரச்சினை நடுவர் மன்றத் தீர்ப்பின்படி காவிரியில் தண்ணீர் திறந்து விடவேண்டும் என்பதுதான்.

வினா: மத்திய அரசு செவி சாய்க்காமலிருந்தால், பாராளுமன்றத்தில் வரவிருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிப்பீர்களா?

விளக்கம்: இப்போதுள்ள பிரச்சினை அதுவல்ல; அரசியல் சட்டப்படி நடுவர்மன்றத் தீர்ப்பை நிறைவேற்றும் கடமையைச் செய்ய மத்திய அரசு தவறிவிட்டது. எனக்குள்ள கடைசி 'பிரம்மாஸ்திரமாக' இப்போராட்டத்தைத் துவக்கியிருக்கிறேன்.

வினா: காங்கிரஸ் அல்லாத மாநிலம் தமிழகம் என்பதால் மத்திய அரசு கவனிக்காமல் பேசாதிருக்கிறதா?

விளக்கம்: அதற்கு நான் காரணம் கற்பிக்க விரும்பவில்லை; மத்திய அரசு கடமையாற்றத் தவறிவிட்டது.

வினா: இங்கே நீங்கள் உண்ணாவிரதம் இருப்பதால் பாதுகாப்புப் பிரச்சினை ஏற்பட்டதா?

விளக்கம்: போலீசார் இருக்கிறார்கள்; பார்த்துக் கொள்ளுவார்கள்.

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளக்கமளித்தார்.

ஆளுநர் வருகை

புதுவையில் இருந்த மேதகு தமிழக ஆளுநர் திரு. சென்னா ரெட்டி அவர்கள், தமது நிகழ்ச்சிகளை ரத்து செய்துவிட்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உண்ணாவிரதமிருக்கும் செய்தியறிந்து உடனே சென்னை விரைந்தார்.

மாலை 7.30 மணியளவில் உண்ணாவிரத மேடைக்கு வந்து சேர்ந்தார் ஆளுநர். மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் ஒரு மணி நேரம் பேச்சு வார்த்தை நடத்தினார்.

''காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை அமல்படுத்தும்படி, அரசியல் சட்டத்தின் 256-வது விதியின்கீழ், கர்நாடக அரசுக்கு பிரதமர் நரசிம்ம ராவ் அவர்கள் உத்தரவிடவேண்டும்; அதுவரை நான் எனது உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடமாட்டேன்''- என்று அப்போது மேதகு ஆளுநரிடம் மாண்புமிகு முதல்வர் தெரிவித்தார்.

முதல்வர் அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு வந்த ஆளுநரைச் செய்தியாளர்கள் சந்தித்தார்கள். அப்போது அவர், ''இதுபற்றி நான் பிரதமரிடம் பேசினேன்; முதலமைச்சர் உண்ணாவிரதத்தைத்

தொடரவேண்டாம் என்று சொல்லச் சொன்னார். அதற்கு இவர் மறுத்து விட்டார்; இரண்டாண்டுக் காலமாக இப்பிரச்சினையில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்று சொன்னார். இதுபற்றி மீண்டும் நான் பிரதமரிடம் பேசுவேன்; இந்தப் பிரச்சினையைச் சுமுகமாக முடிக்க என் முயற்சி தொடரும்'' என்றார்.

பிரதமரின் நடவடிக்கை:

மாண்புமிகு முதல்வர் அவர்களின் உண்ணாவிரதம் பற்றிய செய்தியறிந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் சில வேகமான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

மத்திய நீர்க்கமிஷன் தலைவரை அழைத்து, உடனடியாகப் பெங்களூருக்கும் சென்னைக்கும் சென்று நிலைமையை நேரில் பார்த்து தம்மிடம் அறிக்கை அளிக்குமாறு உத்தரவிட்டார்.

அலுவலகப் பணிகள்

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உண்ணாவிரதமிருந்த போதும் தம் அலுவலகப் பணிகளைக் கவனிக்க அவர் தவறவில்லை.

பொதுமக்கள் அமைதிகாக்க முதல்வர் வேண்டுகோள்

முதல்வரின் உண்ணா நோன்பைக் கேள்விப்பட்டு மக்கள் உணர்ச்சி வசப்பட்டதால், மாநிலத்தில் அன்றாட வாழ்க்கையும் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டதை அறிந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொது மக்களுக்கு எவ்வித துயரும் ஏற்படக்கூடாது என்பதற்காக அமைதி காக்குமாறு வேண்டி ஓர் அறிக்கையை வெளியிட்டார்கள்.

'காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில், காவிரி நடுவர் நீதிமன்றத்தின் ஆணையை உடன் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, இன்று (18.7.1993) காலை 9.15 மணி முதல் நான் ஆரம்பித்துள்ள கால வரையற்ற உண்ணாவிரதத்தை அறிந்த பொதுமக்கள் அனைவரும் மகத்தான ஆதரவு நல்கியதற்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

பொதுமக்கள் எனது உண்ணாவிரதத்தை ஆதரித்துச் சாலை மறியலில் ஈடுபடுவதாக எனக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. மக்களின் இயல்பான அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படக்கூடாது என்ற எண்ணத்தாலும்தான் என்னை நானே வருத்திக் கொண்டு இந்தக் கால வரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகிறேன்.

எத்தனைத் துன்பங்கள் எனக்கு ஏற்பட்டாலும் தாங்கிக் கொள்வேன். ஆனால், என் அன்பிற்குரிய தமிழக மக்களுக்கு ஏற்படும் சிறு துயரத்தைக்கூட என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது.

எனவே, என்மீது அளவுகடந்த அன்பைக் காட்டிவரும் எனது அன்பிற்குரிய தமிழக மக்கள் அனைவரும், இந்த உணர்ச்சிபூர்வமான நேரத்தில் அமைதிகாக்க வேண்டும் என்றும், இயல்பான வாழ்க்கைக்குக் குந்தகம் விளைவிக்கும் எந்தவிதமான செயல்களிலும் ஈடுபடவேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாநிலத்தின் உயிர்நாடியான ஒரு பிரச்சினையை முன்வைத்து, முதலமைச்சர் என்ற முறையில் நான் தனியே தொடங்கி, நடத்தி வருகின்ற இந்த அறப்போராட்டம் வெற்றி பெறப் பொதுமக்கள் அனைவரும் தங்களுடைய பேராதரவைத் தரவேண்டும் என்றும் அமைதி காக்க வேண்டும் என்றும், மீண்டும் ஒருமுறை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

—இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மருத்துவப் பரிசோதனை

காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு முதல்நாள், மருத்துவர்கள் மருத்துவப் பரிசோதனை நடத்தினார்கள்.

இரண்டாம் நாள் 19.7.1993

நேற்றுக் காலையிலிருந்து உண்ணாவிரதமிருந்த களைப்பு மிகுதியால், இரவு 12.30 மணிக்கு மேல்தான் சிறிது கண்ணயர்ந்தார் மாண்புமிகு முதல்வர்.

காவல்துறை உயர் அதிகாரிகளும், மருத்துவக் குழுவினரும் மட்டுமல்ல; காணவந்து அங்கே கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்களும் கண் துஞ்சாது, பசிநோக்காது அங்கே இரவெல்லாம் காத்திருந்தார்கள்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற-நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருடைய நிலைமையும்கூட அதுதான்.

இரண்டாவது நாளான இன்று-கதிரவன் எழுமுன் விழித்தெழுந்து மீண்டும் உண்ணாவிரத மேடையிலே அதிகாலை 6.45 மணிக்கு வந்தமர்ந்தார் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்.

அவருடைய முகம் பார்த்ததும் திரண்டிருந்த மக்களெல்லாம் எழுச்சிமயமாகப் ''புரட்சித்தலைவி வாழ்க'', ''உண்ணாவிரதம் வெல்க'', ''மத்திய அரசே - காவிரியில் தண்ணீர் திறந்துவிடு'' என்பனபோன்ற முழக்கங்களை எழுப்பினார்கள்.

முறுவல் முகத்தோடு அவர்களை நோக்கிக் கையசைத்தார் மாண்புமிகு முதல்வர் அவர்கள். அதன்பின் - அன்று காலை செய்தித் தாள்களைப் படித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், காவிரியில் தண்ணீர் விடக்கோரி மேற்கொண்ட உண்ணாவிரதம் பற்றிய விவரம் செய்தித்தாள்கள், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் மூலம் தமிழக மக்களுக்கெல்லாம் எட்டியது. அவர்களெல்லாம், கிடைத்த வண்டி வாகனங்கள் மூலமாகச் சென்னை நோக்கி அணிஅணியாக வரலாயினர்.

மருத்துவ அறிக்கை

பிற்பகலில் - மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளர், செய்தியாளர்களிடம், மாண்புமிகு முதல்வர் அவர்களின் உடல் நிலை பற்றித் தெரிவித்ததாவது:-

''இன்று காலை 11 மணிக்கு மருத்துவக் குழுவினர் மாண்புமிகு முதல்வர் அவர்களின் உடல்நலம் பற்றிப் பரிசோதித்தார்கள். அவருக்கு இரத்த அழுத்தம் குறைவாக இருப்பதாகத் தெரிவித்தார்கள்; நாடித் துடிப்பு வழக்கத்தைவிட அதிகமாயிருக்கிறது; இரத்தத்தில், சர்க்கரையின் அளவு நேற்றைய தினத்தைவிடக் குறைந்து விட்டது; முதல்வர் அவர்கள் மேலும் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தால் அவரது உடல்நிலை கவலையளிக்கக்கூடும் என்று மருத்துவர்கள் தெரிவித்தார்கள்.''

காணவந்தவர்கள் கணக்கற்றோர்

'பிரதமரிடமிருந்து திட்டவட்டமான அறிவிப்பு வருகிறவரை உண்ணாவிரதத்தைக் கைவிடப் போவதில்லை' என்ற குறிக்கோளில் மிகவும் உறுதியோடு காணப்பட்டார் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்.

ஏராளமாகக் கூடியிருந்த தாய்மார்கள் - கொளுத்தும் வெயிலையும் பாராமல், கொட்டும் வியர்

மக்கள் மறியலும் முதல்வர் வேண்டுகோளும்

தமிழகத்தின் நலத்திற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் தம்மையே வருத்திக் கொண்டு உண்ணாவிரதமிருந்ததால் - தமிழ் நாட்டு மக்கள் கொந்தளிப்படைந் தனர். இதன் காரணமாகப் பல இடங்களில் பஸ் மறியல் - இரயில் நிறுத்தம் - விமானதள மறியல் - கடையடைப்புப் போன்ற சம்ப வங்கள் நிகழ்ந்தன.

இவ்வாறான நிகழ்ச்சிகளால், பொதுமக்களின் அவதிநிலையறிந்த மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மிகுந்த மனவேதனை யுற்றார். உண்ணாவிரதம் இருந்த நிலைமையிலும் - மக்கள் நலம் காக்கும் உத்தரவுகளை அவ்வப் போது பிறப்பித்தார்.

'தமிழகத்தில் உள்ள எல்லாப் போக்குவரத்துக் கழகப் பேருந்து களும் உடனடியாக ஓட்டப்பட வேண்டும்; இரயில் போக்குவரத் துகள் பாதிக்கப்படக்கூடாது; கடை களை யாரும் மூடக்கூடாது; எந்த வகையிலும் மக்களின் மாமூல் வாழ்க்கை பாதிக்கப்படக்கூடாது; அவர்களின் அன்றாட வாழ்வில் எவ்வித இடையூறும் ஏற்படக் கூடாது; காவல்துறையினர் தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்; இந்த வகையில் எல்லாத் தரப் பினரும் ஒத்துழைக்க வேண்டும்' என்று அவர் மிக உருக்கமாக வேண்டுகோள் விடுத்தார்.

அதன்படி, இன்று (19.7.93) மாலை முதலே தமிழகமெங்கும் சகஜ வாழ்க்கை திரும்பியதுகேட்டு, அவர் மகிழ்ந்தார்.

பிரதமருடன் எம்.பி.க்கள் சந்திப்பு

புதுடெல்லியில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்களை - அனைத் திந்திய அண்ணா திராவிட முன் னேற்றக் கழகத்தின் நாடாளுமன்றக் குழுவினர் திரு ஜி. சுவாமிநாதன் தலைமையில் அன்று (19.7.93) சந்தித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உண்ணாவிரதம் பற் றிப் பிரதமரிடம் எடுத்துக்கூறிய அவர்கள் - முதல்வரின் கோரிக் கையை ஏற்றுக் காவிரியில் தண்ணீர் திறந்துவிட ஏற்பாடு செய்யுமாறு பிரதமரை வற்புறுத்தினார்கள்.

மத்திய நதிநீர்க் கமிஷன் தலைவர் திரு எம்.எஸ். ரெட்டி - காவிரிப் பிரச்சினை பற்றிய நிலை மையை நேரில் கண்டறியப் பெங்களூருக்கும், சென்னைக்கும் சென்றிருப்பதாகவும், அவர் திரும்பி வந்து அறிக்கை அளித்தபின் தக்க நடவடிக்கை உடனே எடுக்கப்படும் என்றும், பிரதமர், அவர்களிடம் தெரிவித்தார்.

காவிரிப் பிரச்சினை பற்றி உயர்நிலைக் குழுக்கூட்டம் கூட்டி யிருப்பதாகவும், அப்போது அவர் தெரிவித்தார்.

ரெய்ப்பூர் சென்றுள்ள, மாண்பு மிகு மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு வி.சி. சுக்லா, ஜப்பான் சென்றிருக்கும் நீர்வளத் துறைச் செயலாளர் திரு சி.டி.தத்தே ஆகியோரையும் உடனே டில்லிக்குத் திரும்புமாறு பிரதமர் அழைத்திருப் பதாகவும் டெல்லியில் மத்திய அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தீக்குளிப்பும் உதவியும்

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உண்ணாவிரதம் இருப் பதைப் பொறுத்திட இயலாமல் சேலம் மாவட்டத் தாய்மார்கள் இரு வர் தீக்குளிக்க முயன்று படுகாய முற்றதாகச் செய்தி வந்தது.

இது குறித்து, மாண்புமிகு முதல் வர் அவர்கள் வெளியிட்ட ஓர் அறிக்கையில் குறிப்பிட்டிருந்ததாவது:-

''மாநிலத்தின் உயிர்நாடியான ஒரு முக்கியமான பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்ற காரணத்தினால்தான், நான் தனியே இந்தக் காலவரையற்ற உண்ணா விரத அறப்போராட்டத்தைத் தொடங்கிப் பல இன்னல்களுக்கும், இடர்பாடுகளுக்கும் இடையே தொடர்ந்து நடத்தி வருகின்றேன்.

தமிழக மக்கள் அனைவரையும் பாதித்துள்ள இந்தப் பிரச்சி னைக்குத் தீர்வு காணவேண்டுமென என்னை நானே வருத்திக்கொண்டு இந்த அறப்போராட்டத்தை நடத்தி வருகிறேன். எனது அன்பிற்குரிய தமிழக மக்களுக்கு எந்தவிதச் சிறிய இடர்ப்பாடோ, துன்பமோ ஏற்படக் கூடாது என்பதோடு இந்த அறப் போராட்டத்தால் மற்ற எவரும் பாதிக்கப்படக் கூடாது என்பதும் தான் எனது அவா.

சேலம் மாவட்டம் அன்னதானப் பட்டியைச் சேர்ந்த வயலெட் மற்றும் பராசக்தி ஆகிய இரண்டு பெண் மணிகளும் என்மீது கொண்ட அளவுகடந்த பாசத்தினால், நான் மேற்கொண்டிருக்கும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தீக்குளித்துள்ளதாக எனக்குச் செய்தி கிடைத்துள்ளது.

என்மீது கொண்ட அன்பினால் இவர்கள் இருவரும் தங்களை வருத் திக் கொண்ட செய்தியை அறிந்து மிகுந்த வேதனையும் துயரமும் அடைந்தேன்.

காவிரிப் பிரச்சினைக்குத் தீர்வு காண, ஒட்டு மொத்தமாகத் தமிழக மக்கள் அனைவரின் சார்பாக என்னை நானே வருத்திக்கொண் டிருக்கும்போது, தங்கள் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் எந்தவிதமான செயல்களிலும் எனது அன்பிற்குரிய சகோதர சகோதரிகள் ஈடுபடக் கூடாது என்று மிகுந்த பாசத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

தீக்குளித்த அந்த இரண்டு சகோதரிகளுக்கும் அனைத்திந்திய

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், தலா 50,000 ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப் படும். மேலும் அந்தச் சகோதரி களுக்கு வேண்டிய நல்ல மருத்துவச் சிகிச்சை அளிக்க ஏற்பாடுகள் செய்துள்ளேன். அந்த மருத்துவச் சிகிச்சைக்காகும் முழுச் செலவையும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமே ஏற்கும் என்பதையும் தெரிவித்துக்கொள் கிறேன்.

எனதருமைத் தமிழக மக்களே! உங்களுக்காக எந்தத் துயரத்தையும் தாங்கிக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன்; நீங்கள் யாரும் உங்களை வருத்திக்கொள்ளும் எவ்விதச் செயலிலும் ஈடுபடவேண் டாம் என்று மிகுந்த பாசத்துடன் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.'

- அந்த அறிக்கை இவ்வாறு அமைந்திருந்தது.

அதிகக் களைப்பு

இரண்டாவது நாளாக உண்ணா விரதம் இருந்த மாண்புமிகு முதல் வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மிகுந்த களைப்புற்றவராகக் காணப்பட்டார்.

மூன்றாம் நாள் 20.7.93

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் உண்ணாவிரதம் மூன்றாவது நாளாகத் தொடர்ந்தது.

8.30 மணியளவில் மருத்துவக் குழுவினர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடல்நலத்தைப் பரி சோதித்தார்கள்.

மருத்துவ அறிக்கை

மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலாளர், மாண்புமிகு முதல்வர் அவர்களின் உடல்நிலை பற்றி இவ்வாறு தெரிவித்தார்:

''மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உடலில் நீர்ச்சத்து, சர்க்கரைச்சத்து வேகமாகக் குறைந்து வருகிறது. அவர் மேலும் உண்ணா விரதத்தைத் தொடர்ந்தால், உடல் நிலை சீர்கேடு அடையும்; அச்சம் ஊட்டும் வகையில் 'உடல்நிலை மோசமடையும் என்று அவர்களைப் பரிசோதித்த மருத்துவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள்- உண்ணாவிரத மேடையில் இருந்த வாறே மற்ற அமைச்சர்களோடு சிறிது நேரம் நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்தினார். அவர் குரல் மிகவும் பலவீனமாகத் தொனித்தது.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்க ளெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிடவேண்டினர். அவரோ,

வையையும் பொருட்படுத்தாமல் உண்ணாவிரதத்துக்கு ஆதரவாக முழங்கிக் கொண்டே இருந்தார்கள்.

உண்ணாவிரதத்தின் இரண்டாவது நாளான இன்று - அரசியல் பிரமுகர்கள், திரைப்படத் தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், முன்னணி நட்சத்திரங்கள், திரைப்படக் கவிஞர்கள், இசையமைப்பாளர்கள், பின்னணிப் பாடகர்கள் தொழில் நுட்பக் கலைஞர்கள், திரையரங்க அதிபர்கள் ஆகிய எண்ணற்றோர் மாண்புமிகு முதல்வர் அவர்களை நேரில் வந்து பார்த்து, உண்ணாவிரதத்தின் குறிக்கோள் வெற்றி பெற வாழ்த்தினார்கள்.

முன்னாள் குடியரசுத் தலைவர்

உண்ணாவிரதத்தின் இரண்டாவது நாளான இன்று - முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன், முன்னாள் மகாராட்டிர ஆளுநர் திரு சி. சுப்பிரமணியம் ஆகியோர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த இடத்திற்கு வருகை தந்தார்கள்.

மிகுந்த களைப்பின் இடையிலும் - அவர்களோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிரமத்தோடு பேசிக்கொண்டிருந்தார்கள்.

மேலும் பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள், சமயப் பெரியோர்கள், அனைத்துக் கட்சித் தலைவர்கள், தொழிலதிபர்கள் மற்றும் பலதுறைப் பிரமுகர்கள் முதல்வரைக் கண்டு வாழ்த்துத் தெரிவித்தவண்ணம் இருந்தனர்.

காவிரியில் தண்ணீர் திறந்து விடக்கோரி உண்ணாவிரதமிருக்கும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு முழுமையான ஆதரவு தெரிவிக்கும் வகையில், தமிழ்நாடு திரையரங்க உரிமையாளர் சங்கத்தார் எடுத்தமுடிவின்படி ஒரு நாள் படக்காட்சிகள் முழுவதும் ரத்து செய்யப்பட்டன.

மாணவருக்கு உதவி

இன்றையதினம் ஏராளமான மகளிர் அணியைச் சேர்ந்த பெண்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வரிசை வரிசையாகச் சென்று பொன்னாடை, கைத்தறியாடைகளை அணிவித்து ஆதரவு தெரிவித்தார்கள்.

அப்போது - சென்னை, புரசைவாக்கத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி, தன் மகனுக்கு பி.எஸ்சி., படிக்க இடம் கிடைத்திருப்பதாகவும், ஆனால் கல்லூரியில் சேர்க்க முடியாத வறிய நிலை இருப்பதாகவும் தெரிவித்தார்.

''அதற்கு எவ்வளவு பணம் தேவைப்படும்?'' என்று கேட்டறிந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் - ரூ.1,700-ஐ தம் சொந்தப் பணத்திலிருந்து கொடுத்து உதவினார்.

பெண்ணுக்கு உதவி

சென்னை-வண்ணாரப்பேட்டை பகுதியிலே திருமதி வசந்தா என்பவர், தமது வறிய வாழ்வு குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தெரிவித்து உதவி கோரினார்.

அவருக்குத் தம் சொந்தப் பணத்திலிருந்து ஆயிரம் ரூபாய் கொடுத்து ஆறுதல் கூறினார் மாண்புமிகு முதல்வர்.

'பொதுமக்களுக்குத் தினையளவு துன்பமும் ஏற்படக் கூடாது' முதல்வர் அவர்கள் வேண்டுகோள்

(19.3.93) மாலையில் இன்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டார். அதன் முழுவிவரம் வருமாறு:

'என் உயிரினும் மேலான தமிழகப் பெருமக்களுக்கு வேண்டுகோள்.

காவிரி நதிநீர்ப் பங்கீடு பிரச்சினையில் இரண்டாண்டுக் காலத்திற்கு முன்பு நடுவர் மன்றத்தில் நாம் வாதாடிப் பெற்ற இடைக்காலத் தீர்ப்பை நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்தியப் பிரதமர் அவர்களிடம்நேரில் பலமுறை வற்புறுத்தியும், இதுவரை நடக்காத காரணத்தால் *18.7.1993* முதல் காலவரையற்ற உண்ணாவிரதத்தை நான் மேற்கொண்டுள்ளேன்.

இந்த இரண்டு நாட்களாக அரசியல் தலைவர்களும், கலையுலக உடன்பிறப்புகளும் முக்கியப் பிரமுகர்களும் நேரில் வந்த எனக்கு வாழ்த்துக் கூறி ஊக்கம் அளித்துள்ளார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக என்மீது அளவற்ற பாசம் வைத்துள்ள தமிழக மக்கள் நேரில்வந்து கண்கலங்க வாழ்த்துக் கூறியதோடு, இரவு பகலாக உண்ணாவிரதப் பந்தலில் அவர்கள் அமர்ந்திருப்பது என் நெஞ்சத்தை நெகிழ வைக்கிறது.

மேற்கண்ட அனைவருக்கும் என் இதயத்தின் அடித்தளத்திலிருந்து

பொங்கிவரும் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

பிரச்சினையைத் தீர்க்க எனக்கு மலையளவு துன்பம் வந்தாலும் தாங்கிக் கொள்ளத் தயாராக உள்ளேன். ஆனால், பொதுமக்களுக்கு இதனால் எள் அளவு இடையூறு ஏற்பட்டாலும் என்னால் தாங்கிக் கொள்ள இயலாது. பொது மக்களுக்கு இடையூறு ஏற்படாமல் அமைதி காக்க வேண்டும் என்று, நேற்று நான் அனைவருக்கும் வேண்டுகோள் விட்டிருந்தும், அடக்கமுடியாத உணர்ச்சியின் காரணமாக மறியல் போன்ற செயல்களில் பொதுமக்கள் ஈடுபட்டு உள்ளதாக எனக்குத் தகவல் வந்துள்ளது.

நீங்கள் என்மீது காட்டும் அன்பை இமயம் அளவு மதிக்கின்றேன். என்றாலும், அதனால் மற்றவர்களுக்கு ஏற்படும் இடையூறுகளை எண்ணித் தாங்கமுடியாத துயரம் அடைகிறேன்.

மற்றவர்களுக்கு இடையூறில்லாமல் நீங்கள் பார்த்துக்கொண்டால் உண்ணாவிரதத்தால் எனக்கு ஏற்பட்டுள்ள சோர்வும் ஓடோடிவிடும்.

மருத்துவர்கள், இதற்குமேல் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தால் என் உடல்நிலை மோசமாகப் போகும் என்று கூறினாலும், தமிழகத்தின் உரிமையைப் பெற வேண்டும் என்று நினைக்கும்போது என் உள்ளத்தில் அசைக்கமுடியாத உறுதியும் தெம்பும் ஏற்படுகிறது. இந்தப் பிரச்சினை தீர எத்தனை நாள் ஆனாலும், அதுவரை உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளுவேன்.

தமிழகத்தின் ஜீவாதார உரிமையைப் பெற என் உயிரையும் விலையாகக் கொடுக்கத் தயார். ஆனால் என் தமிழக மக்களுக்குத் தினையளவுத் துன்பமும் ஏற்படக் கூடாது என்பதில் திண்ணமாக உள்ளேன்.

எனவே, நீங்கள் என்மீது வைத்துள்ள அன்பின் அடையாளமாக அமைதி காத்திட வேண்டுகிறேன். இந்த நிமிடம் முதல் ஒரு சிறு சம்பவம்கூட ஏற்படாமல் அமைதி காக்க என் அன்பு வேண்டுகோளாக இதன்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

உங்கள் அன்பு நிச்சயம் நமக்கு வெற்றியைத் தேடித்தரும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை எனக்கு இருக்கிறது.'

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மருத்துவ அறிக்கை

இன்று மாலை 5.30 மணியளவில் ஒரு மருத்துவ அறிக்கை மருத்துவக் குழுவினரால் வெளியிடப்பட்டது:

'மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வழக்கமான பரிசோதனையும், மற்ற மருத்துவப் பரிசோதனையும் செய்யப்பட்டது. தற்போது உண்ணாவிரதமிருக்கும் முதல் அமைச்சரின் உடல்கூறு அமைப்பு, மிகச் சிரமத்துடன் சமநிலையில் இருப்பதாக இந்தப் பரிசோதனைகளில் இருந்து தெரியவருகிறது.

முதலமைச்சர் அவர்கள் இப்போது மிகச் சோர்வாகவும் களைப்பாகவும் இருக்கிறார். உண்ணாவிரதம் நீடித்தால், முதல்வரின் உடல்நிலை மேலும் பாதிக்கப்படும் என்று டாக்டர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

- என்று அந்த மருத்துவ அறிக்கை அறிவித்தது.

அங்கே முகாமிட்டிருந்த மருத்துவக் குழுவில் - பலவேறு துறைகளைச் சேர்ந்த டாக்டர்கள், செவிலியர்கள் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

வரிசையுற வந்த மக்கள்

உண்ணாவிரதமிருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கண்டு வாழ்த்த வந்த மக்கள் கூட்டம், கட்டுப்படுத்த முடியாத அளவில் பெருங்கடலாயிற்று.

எனவே, காவல்துறையினர் அவர்களை வரிசையாகச் சென்று முதல்வர் அவர்களைக் காண வகை செய்தார்கள். எதிரே அமர்ந்திருந்த மக்கள் கூட்டம் தவிர - இந்த 'கியூ'வில் மட்டும் சுமார் ஒரு மைல் தூரத்திற்கு மக்கள் அணிவகுத்து, அமைதியாக வந்ததைக் காணமுடிந்தது. முதியவர்களும், இடுப்பில் குழந்தையோடு பல தாய்மார்களும் அக் கூட்டத்திலிருந்தனர்; பலர், விழிநீர்ப் பெருக்கிய வண்ணம் வந்து கொண்டிருந்தார்கள்.

அதற்கு அடியோடு மறுத்துவிட்டார். அதன்பிறகு அவர் படுக்கையில் சாய்ந்தார்.

ஆளுநர் சந்திப்பு

மேதகு தமிழக ஆளுநர் திரு சென்னாரெட்டி அவர்கள், தம் துணைவி சாவித்திரியாருடன் இரண்டாவது முறையாக மாண்புமிகு முதல்வர் அவர்களை உண்ணாவிரத மேடைக்கே வந்து சந்தித்தார். மிகுந்த களைப்பால் சோர்ந்திருந்த முதல்வரிடம் சிறிதுநேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு வந்த அவரைச் செய்தியாளர்கள் சந்தித்தனர்; அப்போது, மேதகு ஆளுநர் அவர்கள் தெரிவித்ததாவது;

''முதலமைச்சர் அவர்களின் உடல்நிலைபற்றி விசாரிக்கவே நான் வந்தேன்; அவரது உடல்நிலை எங்கள் எல்லோருக்கும் கவலையளிப்பதாகவே இருக்கிறது. நான் முதலமைச்சரிடம் குறிப்பிட்ட ஒரு ஆலோசனை கூறியிருக்கிறேன். அது பற்றிய அவர் கருத்தை அறிந்து அதன்மீது மேல் நடவடிக்கை எடுப்பேன்''.

கேள்வி: எதுபோன்ற ஆலோசனை தெரிவித்தீர்கள்?

பதில்: நான் தெரிவித்தது... இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய ஆலோசனையாகும். உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு நான் விடுத்த வேண்டுகோள் அப்படியே இருக்கிறது.

கேள்வி: முதலமைச்சரின் உடல் நிலை கவலையளிப்பதாக உள்ளது என்று டாக்டர்கள் கூறியிருக்கிறார்களே?

பதில்: உண்மையிலேயே அவருடைய உடல்நிலை கவலையளிப்பதாகத்தான் இருக்கிறது.

பிரதமர் அனுப்பிய குழு

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் காவிரி நீரைக் கர்நாடக அரசு திறந்துவிடவேண்டும் என்ற கோரிக்கையின் பேரில் உண்ணாவிரதம் மேற்கொண்டு அன்றோடு (20.7.93) மூன்று நாட்களாகியது.

இதுபற்றிப் பிரதமரிடம் அ.இ.அ.தி.மு.க. நாடாளுமன்றக் குழுவினர் சென்றுமுறையிட்டுக் கொண்டார்கள். அதன்பேரில், பிரதமர் அவர்களால், அனுப்பப்பட்ட மத்திய நீர்வளக் கமிஷன் தலைவர் திரு எம்.எஸ். ரெட்டி, பெங்களூர் சென்று பேச்சுவார்த்தை நடத்தி விட்டு, அன்று காலை 10.30 மணியளவில் சென்னை வந்து சேர்ந்தார்.

தமிழ்நாடு அரசு உயர் அதிகாரிகளுடன், தலைமைச் செயலக மாநாட்டு அரங்கில் அவர் பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஆலோசனைக் கூட்டம் .

அந்த ஆலோசனைக் கூட்டத்தில், தமிழ்நாடு அரசு சார்பில் - பொதுப்பணித்துறை செயலாளர் திரு வி. சுந்தரம், வேளாண்மைத் துறைத் தனிச் செயலாளர் - திரு ஆர்.சி. பாண்டா, வேளாண்மைத் துறை இயக்குநர் திரு என். கோவிந்தன், காவிரி தொழில் நுட்பக் குழுத் தலைவர் திரு ஏ. மோகன கிருஷ்ணன், காவிரி நீர் ஆலோசனைக் குழுத் தலைவர் திரு ஆர். திருமலை, பொதுப்பணித் துறை (நீர்ப்பாசனம்) தலைமைப் பொறியாளர் திரு கே. போண்டி, ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

அவர்களோடு - மத்திய நீர்வளக் கமிஷன் தலைவர் திரு எம்.எஸ். ரெட்டி 2 மணி நேரம் ஆலோசனை நடத்தினார்; பின்னர் - அரசு தலைமைச் செயளாலர் திரு டி.வி. வெங்கட்ராமனுடன் அவர் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தார்; அப்போது அட்வகேட் ஜெனரல் திரு சுப்பிரமணியமும் உடனிருந்தார்.

இதே நேரத்தில் - காவிரி நதி நீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பது பற்றிய வழிவகை காண்பதற்காகப் பிரதமர் அவர்கள் டெல்லியில் உயர்நிலைக் கூட்டத்தைக் கூட்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. திரு எம்.எஸ். ரெட்டி டெல்லி சென்று கர்நாடகம் - தமிழ்நாடு நிலவரம் பற்றிப் பிரதமரிடம் தெரிவிப்பார் என்றும், அதன்பிறகு இப்பிரச்சினை குறித்து மாண்புமிகு பிரதமர் தக்க நடவடிக்கை எடுப்பார் என்றும் கூறப்பட்டது.

மருத்துவ அறிக்கை

உண்ணாவிரதத்தின் 3-ஆம் நாளான இன்று முழுவதும், மாண்புமிகு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மிகவும் சோர்வாக இருந்தார்; உட்கார்ந்திருந்தே இருக்க இயலாததால் பெரிதும் படுத்தபடியே இருந்தார்.

டாக்டர்கள் இரண்டுமுறை அவரைப் பரிசோதித்தார்கள்; அவருடைய உடலில் குளுகோஸ் அளவு குறைந்து வருவதால் இரத்தத்தைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும் என்று டாக்டர்கள் கூறினார்கள். அதற்கு முதல்வர் அவர்கள் மறுத்து விட்டார்.

அதேபோல் - நரம்புமூலம் குளுகோஸ் ஏற்றவேண்டும் என்ற யோசனையும் அவரால் மறுக்கப்பட்டது.

நேற்றிரவு 10.30 மணிக்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் சிறுநீரில் 'அசிடோன்' இருப்பது மீண்டும் தெரிய வந்தது. இதனால் மாண்புமிகு முதல்வரின் உடல் உறுப்புகள் இயங்குவதில் சீரற்ற நிலை ஏற்பட்டது.

இனியும் குளுகோஸ் ஏற்றாவிட்டால், அவரது உடல்நிலை சீர் செய்ய முடியாத அளவுக்கு மோசமாகும் என்று மருத்துவர்கள் எச்சரித்தார்கள்.

''குளுகோஸ் ஏற்றுவது குறித்து நாங்கள் தொடர்ந்து முதல்வர் அவர்களை வற்புறுத்தி வருகிறோம்'' என்று மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலர்ளர் கூறினார்.

முதல்வர் அறிக்கை

தம்முடைய உண்ணாவிரதத்திற்கு ஆதரவு தெரிவித்துத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் சிலர் தீக்குளிக்க முயன்ற செய்தி கேள்வியுற்று முதல்வர் அவர்கள் பெரிதும் மனவேதனையுற்றார்.

அதைக் கண்டித்து - மிகமிகக் களைப்புற்றிருந்த நிலைமையிலும் அவர் இன்று ஓர் அறிக்கை வெளியிட்டார்.

அந்த அறிக்கையின் முழுவிவரம் வருமாறு:

'தமிழக மக்களுக்கு எந்தவிதமான சிறிய இடர்ப்பாடும் துன்பமும் இன்றிக் காவிரி நீர் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்கின்ற எண்ணத்தில் ஒட்டுமொத்தமாகத் தமிழக மக்களின் சார்பாக நான் மேற்கொண்டுள்ள இந்தக் காலவரையற்ற உண்ணாவிரத அறப்போராட்டத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் என்னை நான் வருத்திக் கொள்வது போல் என் மீதுள்ள அளவு கடந்த அன்பு கொண்டுள்ள சகோதர சகோதரிகள் தீக்குளிக்க முயற்சி செய்வதாகப் பல இடங்களிலிருந்து எனக்குத்தகவல்கள் கிடைத்துள்ளன. கடந்த 19-ஆம் தேதி சேலம் மாவட்டம் அன்னதானப்பட்டியைச் சேர்ந்த வயலெட் மற்றும் பராசக்தி என்ற இரண்டு பெண்மணிகள் தீக்குளித்தாகத் தகவல் கிடைத்தவுடன் அவர்கள் இருவருக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தலா 50,000 ரூபாய் நிவாரண நிதியாக வழங்க ஏற்பாடு செய்ததோடு, கழகத்தின் சார்பில் அந்தச் சகோதரிகளுக்குத் தேவையான தீவிர மருத்துவ ஏற்பாடு செய்தேன்; மேலும் இதுபோன்று தன்னைத் தானே வருத்திக் கொள்ள வேண்டாம் என்ற அன்பான வேண்டுகோளையும் விடுத்தேன். ஆனால், என்னுடைய துயரத்தையும் அதிகரிக்கும் வண்ணம், மேலும் சில இடங்களில் சிலர் தீக்குளிப்பு போன்ற செயல்களில் ஈடுபட்டதாக எனக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

பெரியார் மாவட்டம் அம்மாபேட்டை பவானிகிளைக் கழகச் செயலாளர் திரு என்.ஆர். கோவிந்தராஜ் மற்றும் 50 பேர் 19-ஆம் தேதி மாலை தீக்குளிக்க முயன்றபோதுகாவல்துறையினர் அவர்களைத் தடுத்து உள்ளனர் இதேபோல், சேலம் மாவட்டம் ராசிபுரம் கிளைக் கழகத் தலைவர் திரு மணி, செயலாளர் திரு பிரபாகரன் இருவரும் நேற்று

மாலை தங்கள் மீது மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டு தீக்குளிக்க முயன்றபோது காவல்துறையினர் அவர்களைத் தடுத்துக் காப்பாற்றியுள்ளனர்.

கோவை மாவட்டம் துடியலூரைச் சேர்ந்த திரு ரங்கன் என்பவரின் மகள் சகுந்தலா என்பவர் தனது உயிரை மாய்த்துக் கொள்ள விஷத்தை அருந்தியதாகவும் எனக்குச் செய்தி கிடைத்துள்ளது.

மதுரை ஜெய்ஹிந்தபுரம் கழகச் செயலாளர் திரு.. பால்ராஜ் மற்றும் 20 பேர் நேற்று சென்னைக்கு வந்து தீக்குளிக்க முயன்றபோது காவல் துறையினர் அவர்களைத் தடுத்துள்ளார்கள்; விஷயம் அறிந்தவுடன்

நானே நேரில் அழைத்து, தீக்குளித்தல் போன்ற செயல்களில் கண்டிப்பாக ஈடுபடக்கூடாது என்ற அன்புக் கட்டளையை நேரில் தெரிவித்தேன்.

இதுபோன்ற சம்பவங்கள் என் மனதை வெகுவாகப் பாதித்து உள்ளன. நான் பலமுறை வேண்டுகோள் விடுத்தும் இன்னும் பல சகோதர சகோதரிகள் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ளும் செயல்களில் தொடர்ந்து ஈடுபடுவது உண்மையிலேயே என் நெஞ்சை மிகுந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளது; கோயம்புத்தூர் மாவட்டம் பெரிய நாயக்கன்பாளையம் துடியலூரைச் சேர்ந்த சகுந்தலா என்பவருக்குக் கழகத்தின் சார்பில் 50,000/- ரூபாய் வழங்க ஏற்பாடு செய்துள்ளேன். அனைத்து ஏற்பாடுகளையும் கழகத்தின் சார்பில் செய்துள்ளேன். இந்த மருத்துவச் சிகிச்சைக்கான முழுச் செலவையும் கழகமே ஏற்கும், எத்தகைய சூழ்நிலையிலும் தமிழக மக்களின் ஒட்டுமொத்த சார்பில் துன்பங்களை நான் மட்டுமே தாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். எனவே தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ளும் நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டாம் என்று எனது அன்பிற்குரிய சகோதர சகோதரிகளை மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

—இவ்வாறு மாண்புமிகு முதல் அமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அந்த அறிக்கையில் கூறியிருந்தார்.

காவிரி நீர்: அரசு அறிக்கை

காவிரியாற்றில் தண்ணீர் திறந்து விடுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூன்றாவது நாளாக உண்ணாவிரதமிருந்தது கண்டு, தமிழக அமைச்சர் பெருமக்களெல்லாம் பெரிதும் கவலையுற்றனர்.

ஆதரவாகக் காணவந்து திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களில் - தாய்மார்கள் பலரும் ''அம்மா, அம்மா!'' என்றும் ''எங்கள் காவிரித் தாயைக் காப்பாத்துங்கோ''.. என்றும் கதறி அழுததையும், அவர்களைச் சிலர் அமைதிப்படுத்த முயன்றதையும் காணமுடிந்தது.

கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் - கூட்டம் பெருகிக்கொண்டிருந்ததே தவிர மட்டுப்படுவதாக இல்லை; இதனாலேயே மூன்றாவது நாளாகக் கடற்கரைச் சாலைப் போக்குவரத்துக்கள் யாவும் வழிமாற்றி விடப்பட்டன.

இந்தியாவில் - தமிழகத்திற்குக் கர்நாடக அரசு கொடுத்த தண்ணீரின் அளவு குறித்து, அரசு ஓர் அறிக்கை வெளியிட்டது; அதன் விவரம் வருமாறு:

''கர்நாடக அரசு தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் திறந்துவிட்டது சம்பந்தமாகச் சில தவறான தகவல்களை வெயிட்டுள்ளது. பொருத்தமற்ற குழப்பமான அறிக்கைகளையும் கர்நாடக அரசு வெளியிட்டு இருக்கின்றது. அதில் நடப்பு நிதியாண்டில் ஜூன், ஜூலை, மாதங்களில் 17.77 டி.எம்.சி. தண்ணீர் விட்டதாகக்குறிப்பிடப்பட்டுள்ளது,அதோடு கடந்த ஆண்டைவிடக் கூடுதலாக 15 டி.ம்.சி. தண்ணீர் விட்டதாகவும் கூறியுள்ளது. எனவே இந்தத் தவறான தகவலுக்குப் பதில் அளிப்பதோடு, தமிழக அரசு சார்பில் சரியான தகவல்களைத் தெரிவிக்க வேண்டியது அவசியம் ஆகிறது.

நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின்படி காவிரி ஆற்றில் கர்நாடக அரசு ஆண்டுக்கு 205 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிடப்பட வேண்டும்; இந்த உத்தரவுப்படி தண்ணீர் எவ்வளவு திறந்து விடப்படுகிறது என்பதைத் தமிழக அரசு கண்காணித்துவருகிறது இதன்படி ஜூன், ஜூலை, மாதங்களில் ஆயக்கட்டுப்பாசனத்துக்காக 10.16 டி.எம்.சி. மற்றும் 42.76 டி.எம்.சி. தண்ணீர் தமிழ்நாட்டுக்குத் திறந்து விடப்படவேண்டும். ஆனால், தமிழ்நாட்டுக்கு ஜூன் மாதம் 4.82 டி.எம்.சி. தண்ணீர்தான் திறந்து விட்டு இருக்கிறார்கள். ஜூலை மாதத்தில் 11.04 டி.எம்.சி. தண்ணீர் கிடைத்து இருக்கிறது; மொத்தம் 15.86 டி.எம்.சி. தண்ணீர் தான் வந்து இருக்கிறது. ஜூலை மாதத்துக்குள் இன்னும் 37.06 டி.எம்.சி. தண்ணீர் திறந்து விடப்பட வேண்டும்; நடுவர் மன்ற உத்தரவின்படி கணக்கெடுப்ப

நடத்தப்பட்ட போதுதான் இந்தத் தகவல் கிடைத்து இருக்கிறது.

தமிழ்நாடு இந்த ஆண்டு மேட்டூர் அணையில் இருந்து சுமார் 15 டி.எம்.சி. தண்ணீர் வரை கூடுதலாகச் செலவிட்டுள்ளது என்றும், கர்நாடக அரசு கூறியுள்ளது. இது பொருத்தமற்ற பேச்சாகும். மேட்டூர் அணை தண்ணீரைப் பயன்படுத்துவது தமிழக அரசின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேச, கர்நாடக அரசுக்கு உரிமை கிடையாது.

'காவிரி நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ், தமிழக அரசு முன்பு இருந்ததைவிடக் கூடுதலாக 2.5 இலட்சம் ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்ய ஏற்பாடு செய்துள்ளது என்று கர்நாடக அரசு கூறியிருப்பது சரியல்ல. இது தவறான புள்ளி விவரம் ஆகும். சொல்லப்போனால் 1971-72-ஆம் ஆண்டில் 28.2 இலட்சம் ஏக்கர் நிலத்தில் பயிர் செய்யப்பட்டு வந்தது; தற்போது 18.31 இலட்சம் ஏக்கர் நிலத்தில்தான் சாகுபடி செய்யப்படுகிறது. ஆனால், அதே நேரம் கர்நாடக அரசு முன்பு 6.82 இலட்சம் ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்துவந்தது தற்போது 11.2 இலட்சம் ஏக்கர் அளவுக்கு உயர்த்தியுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக ஆயக்கட்டுப் பாசனம் மூலம் 5 இலட்சம் ஏக்கர் முழுவதும் பயிர் செய்யப்படுவது கிடையாது. 4.14 இலட்சம் ஏக்கர் நிலத்தில் மட்டுமே விவசாயம் நடந்திருக்கிறது.

இந்த ஆண்டில் இதுவரை 75 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மட்டுமே விவசாயம் செய்து வருகின்றனர் 2.58 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் செய்யத் தயார்நிலையில் உள்ளன. இதற்காக நாற்றுகள் நடப்பட்டு இருக்கின்றன; ஆனால் தண்ணீர் போதுமா என்ற கேள்விக்குறி எழுந்துள்ளது. இதனால் நெற்பயிர் பிழைக்குமா என்று நம் தமிழக விவசாயிகள் சந்தேகத்தோடு காத்திருக்கும் நிலை உள்ளது.

—இவ்வாறு இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

முன்னாள் குடியரசுத்தலைவர் ஆர்.வி. உட்பட எண்மர் அறிக்கை

காவிரி நீர் குறித்த நடுவர் மன்றத் தீர்ப்பை உடனே அமல் நடத்துமாறு மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்கு- முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் உட்பட முக்கியஸ்தர்கள் எண்மர் ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தார்கள்.

முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதிகள் திரு. எஸ். நடராசன், திரு. கிருஷ்ணையர், வழக்கறிஞர்கள் ராம் ஜெத்மலானி எம்.பி., கே.கே. வேணுகோபால், சென்னை உயர்



நீதிமன்ற முன்னாள் நீதிபதிகள் திரு. எம்.எம். இஸ்மாயில், பி. வேணுகோபால், வழக்கறிஞர் அசோக் சென் ஆகியோர் அந்த அறிக்கையில் கையெழுத்திட்டிருந்தார்கள்.

நான்காம் நாள் 21.7.93

நான்காம் நாளான இன்று முதல்வருடைய உடல்நிலை மிகவும் மோசமடைந்தது; உட்காரவோ, நடக்கவோ அவரால் இயலவில்லை. பேசவும் சக்தியற்ற நிலையில் இருந்தார்.

டாக்டர்கள் மிகத் தீவிரமாகக் கண்காணித்து வந்தார்கள்.

தம்மைக் காண வந்தோரைப் பார்த்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் இலேசாகப் புன்முறுவல் மட்டுமே பூத்தார்; பேச இயலவில்லை.

பிரதமருக்குத் தந்தி

'தஞ்சை, திருச்சி விவசாயிகளைக் காப்பாற்றுவதற்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு உண்ணாவிரதம் இருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சரைக் காப்பாற்ற வேண்டும்; காவிரி நீர்ப் பிரச்சினையில் தலையிட்டு நல்ல முடிவெடுக்க வேண்டும்' என்றெல்லாம் இந்தியப் பிரதமருக்குக் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் இன்று அவசரத் தந்தி அனுப்பினார்கள்.

மத்திய அமைச்சர் வி.சி. சுக்லா வருகை

நேற்றிரவு பெங்களூருக்குச் சென்று, மாண்புமிகு கர்நாடக முதல்வர் திரு. வீரப்பமொய்லியைச் சந்தித்த மாண்புமிகு மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு. வி.சி சுக்லா அவர்கள் இன்று சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

நேரே, உண்ணாவிரத மேடைக்கு வந்து சேர்ந்த அவர், மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் இப் பிரச்சினை குறித்துத் தீர்வுகாண மத்திய அரசின் யோசனையை

எடுத்துக் கூறினார்.

அப்போது- மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. தங்கபாலு, மாண்புமிகு தமிழ்நாடு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன், நீர்வளக் கமிஷன் தலைவர் திரு. எம்.எஸ். ரெட்டி, தமிழக அரசு தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன், அட்வகேட் ஜெனரல் கே. சுப்பிரமணியம் ஆகியோர் உடனிருந்தார்கள்.

செய்தியாளர் சந்திப்பு

அந்தப் பேச்சுவார்த்தை முடிந்தும், தம்மைச் சூழ்ந்து கொண்ட செய்தியாளர்களிடம் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. வி.சி. சுக்லா அவர்கள் தெரிவித்ததாவது:

''தமிழக முதலமைச்சரோடு நான் காவிரி நீர் பிரச்சினை தொடர்பாகப் பேசினேன். மாநில அரசு அதிகாரிகளுடனும், மத்திய அரசு அதிகாரிகளுடனும் இதுபற்றி மேலும் ஆலோசனை நடத்தவிருக்கிறேன். அதுமுடிந்து, மறுபடியும் நான் முதலமைச்சரைச் சந்திப்பேன்; அவரும் தன்னுடைய அமைச்சரவை சகாக்களுடன் ஆலோசனை நடத்துவதாகக் கூறியிருக்கிறார். பிரதமர் தெரிவித்த வாழ்த்தையும் முதலமைச்சருக்குத் தெரிவித்தேன். எல்லாம் நல்லபடியாக முடியும் என்று நம்புகிறேன்''

முதல்வருக்குப் பூச்செண்டு

மாண்புமிகு மத்திய ராஜாங்க அமைச்சரான திருமதி மார்கரெட் ஆல்வா, இன்று தனித் தூதுவர் ஒருவர் மூலம் பூச்செண்டு கொடுத்தனுப்பியிருந்தார்.

அமைச்சர்களுடன் ஆலோசனை

மத்திய அமைச்சர் சென்றபின், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மிகுந்த களைப்போடு உண்ணாவிரத மேடையில் இருந்தவாறே சக அமைச்சர்களோடு ஆலோசனை நடத்தினார்.

இவ்வாறு நடத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் காவிரிப் பிரச்சினை குறித்து ஒரு முடிவெடுக்கப்பட்டது; அதை எடுத்துக் கொண்டு மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன், அரசு தலைமைச் செயலாளர் திரு.

டி.வி. வெங்கட்ராமன் ஆகியோர் ஆளுநர் மாளிகைக்குச் சென்றனர்.

அமைச்சரவை முடிவு, அங்கிருந்த மாண்புமிகு மத்திய அமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர்- அதுகுறித்து, மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவுடன், மாண்புமிகு மத்திய அமைச்சர் தொலைபேசியில் தொடர்புகொண்டு கலந்தாலோசித்தார்.

மருத்துவ அறிக்கை

நான்காவது நாளாக உண்ணாவிரதம் இருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் உடல் நிலையை மருத்துவர் குழு பரிசீலித்தது; அன்று பிற்பகல் 2.20 மணியளவில் அதுபற்றி வெளியிடப்பட்ட மருத்துவ அறிக்கை பின்வருமாறு தெரிவித்தது:

'தமிழக முதல்வர் அவர்கள் இன்று காலையில் மிகவும் சோர்வாக இருந்தார்; எனினும் இயன்ற அளவில், தம்மைச் சந்தித்த முக்கியப் பிரமுகர்களுடன் பேசினார். மத்திய அமைச்சர் திரு. வி.சி. சுக்லாவைச் சந்தித்தார்; சக அமைச்சர்களுடனும் கலந்து பேசினார். 2.15 மணிக்கு மருத்துவர் குழு முதல்வரைப் பரிசோதித்தது. முதல்வர் மிகச் சோர்வாக இருக்கிறார். உடல் உறுப்புகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பின் விளைவுகள் ஏற்படாமலிருக்க இப்போதைய நிலை தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று டாக்டர்கள் கூறியுள்ளனர்.

மத்திய அமைச்சர் மீண்டும் சந்திப்பு

மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. வி.சி. சுக்லா அவர்கள், மேதகு தமிழக ஆளுநர் திரு. சென்னாரெட்டி, மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. தங்கபாலு ஆகியோர் இன்று (21.7.93) மாலை சரியாக 4.50 மணிக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உண்ணாவிரதமிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

திரண்டிருந்த மக்களிடையே மிகுந்த பரபரப்பும், எழுச்சிமயமான எதிர்பார்ப்பும் இருந்தன.

வருகைதந்த முக்கியப் பிரமுகர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டதன் அறிகுறியாக- மாண்புமிகு முதல்வர் அவர்களின் முகமலர்ச்சியிலிருந்தே புரிந்து கொண்ட மக்கள்- ''காவிரித்தாய் வாழ்க''... ''புரட்சித்தலைவி வாழ்க''... ''தியாகத் தலைவி வாழ்க'' என்பன போன்ற வாழ்த்து முழக்கங்களை எழுப்பினார்கள்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்- மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. வி.சி. சுக்லா அவர்கள் கொடுத்த பழச்சாற்றை வாங்கிச் சாப்பிட்டுத் தமது உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்.

நாவலர் அறிவிப்பு

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள், ஒலிபெருக்கியில்- ''காவிரி தந்த கலைச் செல்வி இப்போது காவிரிக்குத் தண்ணீரை மீட்டுக் கொண்டு வந்திருக்கிறார். இந்த வெற்றியைக் கொண்டாடும் வகையில், புரட்சித்

தலைவி அவர்கள் அண்ணாசமாதிக்கும், புரட்சித்தலைவர் சமாதிக்கும் சென்று விட்டு இல்லம் செல்லுவார்'' என்று அறிவித்தார்.

அதன்படி இரு நினைவிடங்களிலும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதன்பின்- 4 நாள் உண்ணாவிரதம் மேற்கொண்டு தியாக வேள்வி நடத்திய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தம் இல்லத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

செய்தியாளர் சந்திப்பு

இதற்கிடையில் தம்மைச் சந்தித்து வாழ்த்துக் கூறிய செய்தியாளர்களுக்கு மகிழ்ச்சி தெரிவித்தார் மாண்புமிகு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்.

அப்போது, காவிரிப் பிரச்சினையில் ஏற்பட்ட உடன்பாடு குறித்து அவரளித்த விளக்கம் வருமாறு:

''காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து அமைக்கப்பட்ட நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை அமல்நடத்துவது தொடர்பான அடிப்படை அம்சங்களைக் கண்காணிக்க ஒரு கண்காணிப்புக்குழு அமைக்க மத்திய அரசு சம்மதித்துள்ளது.

மேலும், மத்திய அமைச்சரவைச் செயலாளர் மற்றும் காவிரியாறு ஓடும் மாநிலங்களின் தலைமைச் செயலாளர்களையும் கொண்டதோர் அமலாக்கக் கமிட்டியும் அமைக்கப்படும்.

கண்காணிப்புக் குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு, இடைக்காலத் தீர்ப்பை அமல் நடத்துவதை இந்தக் கமிட்டி உறுதிப்படுத்தும்.

இது நமக்கு மகத்தான வெற்றியாகும்''.

வினாவும் விளக்கமும்

இதைத் தொடர்ந்து செய்தியாளர்கள் தொடுத்த வினாக்களும்- மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்த விளக்கங்களும் வருமாறு:

வினா: காவிரியில் உடனடியாகத் தண்ணீர் விடப்படுமா?

விளக்கம்: அது இன்றைய ஒப்பந்தத்தில் உள்ளடங்கியிருக்கிறது. காவிரியில் தண்ணீர் வரத் தொடங்கி விடும்.

வினா: இந்த உடன்பாடு உங்களுக்குத் திருப்தியளிக்கிறதா?

விளக்கம்: நமக்கு மகத்தான வெற்றி கிடைத்துள்ளது. நடுவர் மன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டு, இரண்டாண்டுகளுக்கு மேலாகியும் இதற்காக எந்த ஒரு அமைப்பும் நியமிக்கப்படவில்லை.

வினா: நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்பைக் கர்நாடக அரசு ஏற்றுக் கொள்கிறதா?

விளக்கம்: அது நம்முடைய நோக்கமல்ல; மத்திய அரசு இதில் தலையிட வேண்டும்; நடுவர் மன்றத் தீர்ப்பு அமல்படுத்தப்பட வேண்டும் என்று கோரி வந்தோம். அதில் மகத்தான வெற்றி கிடைத்துள்ளது.

இந்த அறப்போரில் எனக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி அறிக்கை

அன்றிரவே 21.7.1993 மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால், நன்றி தெரிவிக்கும் அறிக்கையொன்று விரிவாக வெளியிடப்பட்டது.

அதன் முழு விவரம் வருமாறு:

''தமிழகத்தின் ஜீவனாகத் திகழும் காவிரி நதிக்கு, கடந்த பல ஆண்டுகளாகவே நியாயமாகவும், சட்டத்தின்படியும் கர்நாடகத்தில் இருந்து திறந்துவிட வேண்டிய தண்ணீரைத் திறந்துவிடாது தமிழகத்தின் காவிரி டெல்டா பகுதியை வறட்சிக்கு ஆளாக்கிய கொடுமையிலிருந்து விடுவிக்கும் தூய நோக்கத்தோடு காவிரி நதி நீர் தாவா பற்றி விசாரித்த நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பினை அமல் நடத்திட மத்திய அரசை வற்புறுத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ளச் செய்வதற்காக, காந்தியடிகளின் அறவழிப் போராட்டமான உண்ணா நோன்பினை நான் மேற்கொண்டிருந்த போது, என்னுடைய போராட்டம் வெற்றியடைய வாழ்த்துக் கூறியும், என்னுடைய தூய நோக்கத்திற்கு வலுவூட்டியும், ஆக்கமும், ஊக்கமும் அளித்திட போராட்ட மேடைக்கே நேரில் வந்து என்னை நெக்குருகச் செய்திட்ட இலட்சோப லட்சம் வணக்கத்திற்குரிய பெரியோர்களுக்கும், என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களுக்கும், இதய தெய்வம் புரட்சித் தலைவரின் ரத்தத்தின் ரத்தமான என் உயிரினும் மேலான உடன் பிறப்புக்களுக்கும், என் இதயம் கனிந்த நன்றியினைக் காணிக்கை ஆக்கிக் கொள்கிறேன்.

உண்ணாநோன்பு தொடங்கிய செய்தி கேள்விப்பட்டவுடன் தனது சுற்றுப் பயணத்தையும் ரத்து செய்து விட்டு உடனடியாகச் சென்னை திரும்பி வந்து, தனது அதிகார வரம்பின் மரபுகளை எல்லாம் பொருட்படுத்தாது, ஒன்றுக்கு இரண்டு முறை நேரில் உண்ணா விரதப் பந்தலுக்கு வந்திருந்து என் உடல் நிலை பற்றி வாஞ்சையுடன் கேட்டறிந்ததோடு, பிரச்சினையின் நியாயத்தை உணர்ந்து, ஆதரவளித்த மேதகு ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டி அவர்களுக்கும், அவரது துணைவியார் அவர்களுக்கும் பெரிதும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியத் திருநாட்டின் உயர்ந்த அந்தஸ்துக்குரிய முன்னாள் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள், முன்னாள் மத்திய, மாநில அமைச்சரும், ஆளுநருமான திரு சி. சுப்பிரமணியம் அவர்கள், மற்றும் தமிழகத்தின் மூத்த முக்கிய பிரமுகர்கள், பல்வேறு அரசியல் கட்சிகளின் முன்னணித் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளு

மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் என்னை நேரில் சந்தித்து ஊக்கமளித்ததோடு, தமிழகத்தின் ஒற்றுமை உணர்வினை உணர்த்தியமைக்காகவும் என் உடல் நலம் குறித்து அக்கறையுடன் விசாரித்து சென்ற பாங்குக்காகவும் நான் பெரிதும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

திரை உலக முன்னணி நடிக, நடிகையர்கள், தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், இசையமைப்பாளர்கள், பின்னணிப் பாடகர்கள், விநியோகஸ்தர்கள், எனப் பிரபலமானவர்கள் முதல் பல்வேறு டெக்னீசியன்கள் வரை மிகப் பெருமளவில் உண்ணா நோன்பிருந்த இடத்திற்கு நேரில் வந்து ஆதரவளித்த பாங்கிற்கு என்றென்றும் நன்றி கூறிடுவேன். என்னை வந்து சந்தித்த ஒவ்வொருவருக்கும் பெயர் குறிப்பிட்டுத் தனித் தனியே நன்றி கூறிடவே விரும்புகிறேன். ஆனால் பட்டியல் மிகப் பெரிதாக இருப்பதால், தனித் தனியே நான் நன்றி கூறியதாக ஏற்றுக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன்.

சமுதாயத்தின் பல்வேறு துறையினர், அரசின் உயர் அலுவலர்கள் முதல் ஊழியர்கள் வரையிலானோர் - தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த தொழில் அதிபர்கள், வணிகர்கள் மற்றும் சாமான்யர்கள் முதலானோர் மற்றும் பத்திரிகைத் துறையினர் என என்னை உண்ணா நோன்பிருந்த நான்கு நாட்களிலும் சந்தித்துச் சென்றோர், என்னை வாழ்த்தியது மட்டுமல்லாமல், நம் உயிரினும் மேலான தமிழகத்தின் ஜீவாதாரப் பிரச்சினையில் தமிழகம் ஓர் அணியில் உள்ளது என்ற கருத்திற்கு வலுவூட்டியமைக்காகவும் பெரிதும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுத்துறை மற்றும் பிற மருத்துவமனைகளின் மருத்துவர்கள் என் உடல் நலத்தில் காட்டிய அக்கறைக்கு எனது மனமுவந்த நன்றி.

நான் உண்ணா நோன்பு தொடங்கியவுடன் அங்கேயே என்னைச் சூழ்ந்து நின்றதோடு, நான்கு நாட்களும், இரவு பகல் ஊண் உறக்கமின்றி என்னுடனேயே இருந்திட்ட சட்டப் பேரவைத் தலைவர் மற்றும் டாக்டர் நாவலர் முதலான நம் அமைச்சரவையினர், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக

முன்னணியினர் மற்றும் உடன் பிறப்புகள் அனைவருக்கும் நன்றி.

இலட்சக் கணக்கில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் தொண்டர்கள் உண்ணாவிரத மேடை முன்னர் குவிந்த வண்ணமாக ஒருபுறமிருக்க, இரவெல்லாம் பல்லாயிரக் கணக்கான தாய்மார்களும், பொது மக்களும் சாலைகளிலேயே படுத்திருந்ததையும், அவர்களில் பலர் எவ்வித அரசியல் கட்சியையும் சாராத பொதுவான எண்ணங் கொண்டவர்கள் என்பதையும் அறிகிறபோது அவர்களுக்கெல்லாம் என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கை ஆக்குவது பெரிதும் என் கடன் எனக் கருதுகிறேன்.

என் உயிரையும் பொருட்படுத்தாது கடைசி முயற்சி எனப் போராட்டம் தொடங்கியதை அடுத்து பிரச்சினைக்கு முடிவு ஏற்பட நடவடிக்கை மேற்கொள்ள முன்வந்த மத்திய நீர்ப் பாசன அமைச்சர் திரு வி.சி. சுக்லா அவர்களுக்கும், அவர் நேரில் வந்து சந்தித்து என் கோரிக்கைகளின் நியாயத்தைக் கேட்டறிந்தமைக்காகவும் பெரிதும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

காவிரி நதி நீர்ப் பிரச்சினை என்பது தமிழகத்தின் ஜீவாதாரப் பிரச்சினையாகும். இதில் நமக்குக் கிடைத்திருக்கும் நியாயத்தையும், நீதியையும் நடைமுறையாக்கித் தர மத்திய அரசு சட்டப்படியும், தர்மப்படியும் கடமைப்பட்டுள்ளது என்பது உணர்த்திட தமிழகமே ஓரணியில் உள்ளது என்பதை உணர்த்திடவே, என்னையே வருத்திக் கொள்ளும் இப் போராட்டத்தினை மேற்கொண்டேன். ஆனால் என் மீது அன்பும், பாசமும், அளவுக்கதிகமாகக் கொண்டிருக்கும் உடன் பிறப்புகளில் சிலர் என்னை வருத்திக் கொள்வது பொறுக்காமல், தங்களையே வருத்திக் கொள்ளவும், தங்கள் உயிரையே மாய்த்துக் கொள்ளவும் முயன்றிருப்பது என்னை மேலும் வருத்தப்படுத்தினாலும், அவர்களது மெய்யான அத்தியாகத்திற்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, அத்தியாகிகளுக்கும், அவர் தம் குடும்பத்தினருக்கும் என் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் நான் அறப்போராட்டம் தொடங்கிய செய்தியைக் கேள்விப்பட்டவுடன் என் விருப்பத்திற்கு மாறாக உணர்ச்சி வசப்பட்டோர் சிலரது போராட்ட முஸ்தீபுகள் காரணமாக முதல் இரண்டு நாட்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்த பல்வேறு அசௌகரியங்களைத் தாங்கிக் கொண்ட பொது மக்களுக்கும் - பின்னர் அமைதி காக்க வேண்டுமென நான்விடுத்த அன்பு வேண்டுகோளை ஏற்று எவ்வித அசம்பாவிதமோ - சகஜ வாழ்க்கை பாதிப்போ ஏற்படாது பார்த்துக் கொண்ட அனைவர்க்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவிரி நதியில் உரிய நீர் பெறுவது தமிழர்கள் ஒவ்வொருவரது பிறப்புரிமை என்பதை நாட்டுக்கு உணர்த்திட நான் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு உறுதுணை புரிந்த ஒவ்வொருவருக்கும் -என் மீது மெய் சிலிர்க்க அன்பு செலுத்திய அனைவர்க்கும் என் இதயம் நிறைந்த நன்றியறிதலை வார்த்தைகளால் மட்டும் அல்லாது என் உள்ளத்து உணர்வுகளாலும் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

கடந்த இருபதாண்டுகளில், காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் இந்த அறப் போராட்டம் காரணமாக இன்று வெற்றி கண்டுள்ளோம். தமிழக மக்கள் அனைவரும் இப் போராட்டத்தில் எனக்கு ஒரு முகமாகக் காட்டிய ஆதரவு காரணமாகவும், எனக்குப் பின் பலமாகக் குரல் கொடுத்ததின் காரணமாகவும் இவ்வெற்றியை ஈட்டியுள்ளோம். எனவே இம் மகத்தான வெற்றியை ஈட்டிட ஒத்துழைத்த தமிழகத்தின் அனைத்து தரப்பு மக்கள் ஒவ்வொருவருக்கும் என் நன்றி உரித்தாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

—இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நிகழ்ச்சித் தொகுப்பு: பி.எல்.ஆர்.

பிரதமருக்கு முதல்வர் கடிதம்

காவிரி நதிநீர்ப் பிரச்சினை தொடர்பாக மேற்கொண்ட உண்ணாவிரதத்தை - மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் முடித்து சில நாட்கள் கூட ஆகவில்லை; மாண்புமிகு கர்நாடக முதல்வர் விடுத்த அறிவிப்பொன்றின் காரணமாக நமது முதல்வர் அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதினார்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு பிரதமர் நரசிம்மராவ் அவர்களுக்கு எழுதிய அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டு இருந்ததாவது:

'காவிரி நீர்ப்பிரச்சினையில் நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பின்படி, தமிழக மக்கள் தங்களுக்குச் சேர வேண்டிய தண்ணீரைப் பெறுவதற்காக நான் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டதைத் தாங்கள் அறிவீர்கள்.

காவிரியில், தமிழகத்திற்குச் சட்டப்படி கிடைக்க வேண்டிய தண்ணீரைத் திறந்துவிட ஏற்பாடு செய்யும்படி உங்களிடமும், கர்நாடக அரசிடமும் பலமுறை வற்புறுத்தி இருக்கிறேன். எனினும் என்னுடைய இந்த முயற்சி தோல்வி அடைந்தது. அரசு மேற்கொண்ட முயற்சி தோல்வி அடைந்ததால், இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஜனநாயக முறைப்படி மக்கள் கவனத்துக்குக் கொண்டு வருவதற்காக நான் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டேன்.

கடந்த 21-ஆம் தேதி, சென்னைக் கடற்கரையில் நான் உண்ணாவிரதம் இருந்த இடத்தில் மத்திய நீர்ப்பாசன அமைச்சர் திரு. வி.சி. சுக்லா அவர்கள் என்னைச் சந்தித்துப் பேசினார். அப்போது அவரிடம் கீழ்க்கண்ட 3 கோரிக்கைகளை வைத்தேன்.

அதன் விவரம் வருமாறு:

நடுவர்மன்ற இடைக்கால உத்தரவுப்படி தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் திறந்து விடவேண்டும் என்று மத்திய அரசு அரசியல் சட்டம் 256-வது பிரிவின்கீழ், கர்நாடக அரசுக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

இடைக்கால உத்தரவுப்படி தண்ணீர் திறந்து விடப்படுகிறதா என்பதைச் சரி பார்க்கக் கண்காணிப்புக் குழு ஒன்றை நியமிக்க வேண்டும்.

மேட்டூர் அணையில் நீர்மட்டம் குறைவாக இருப்பதால் தஞ்சை குறுவைப் பயிரைக் காப்பாற்ற உடனடியாகத் தண்ணீர் திறந்து விடும்படி கர்நாடக அரசுக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

மத்திய அமைச்சர் திரு. வி.சி. சுக்லா அவர்கள் என்னிடம் பேசும் போது தண்ணீர் திறந்துவிட ஏற்பாடு செய்வதற்காக அமலாக்க கமிட்டி ஒன்றும், இதைக் கண்காணிப்பதற்காகக் கண்காணிப்புக் கமிட்டி ஒன்றும் அமைக்கப்படும் என்று வாக்குறுதி அளித்தார். காவிரியில் தண்ணீர் திறந்துவிட நான் ஏற்பாடு செய்கிறேன் என்றும் அவர் உறுதி அளித்தார்.

கடைசியாக 2 கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதால், இது சம்பந்தமாக நான் சக அமைச்சர்களிடம் ஆலோசனை நடத்கிய பின்னர், முதல் கோரிக்கையை வற்புறுத்தவில்லை. இதைத் தொடர்ந்து, மத்திய அமைச்சர் வி.சி. சுக்லா முன்னிலையில், பழரசம் அருந்தி உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டேன்.

அமைச்சர் திரு. வி.சி. சுக்லா அவர்கள் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்கூட, காவிரியில் இடைக்காலத் தீர்ப்பின்படி தண்ணீர் திறந்துவிடப்படுவதைக் கண்காணிக்கக் கண்காணிப்புக்குழு அமைக்கப்படும் என்று அறிவித்தார். காவிரி நீர் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மத்திய அரசுப் பிரதிநிதிகள் இதில் இருப்பார்கள் என்றும் அவர் கூறினார்.

அதோடு, அமலாக்கக் கமிட்டி ஒன்று அமைக்கப்படும் என்றும் மத்திய அமைச்சர் அவர்கள் கூறி இருந்தார். இந்தக் கமிட்டியில் அமைச்சரவைச் செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள் இடம் பெற்று இருப்பார்கள். இந்தக் கமிட்டி, கண்காணிப்புக் கமிட்டியின் சிபாரிசுகளின்படி தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யும்.

அமைச்சர் திரு. சுக்லாவின் பேட்டியும், அறிக்கையும் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியிடப் பட்டிருந்தது.

நான் உண்ணாவிரதம் இருந்த போது, என்னிடம் மத்திய அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற மத்திய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்று நான் இதுவரை நம்பிக் கொண்டு இருந்தேன்.

இதற்கிடையில், கர்நாடக முதல் அமைச்சர் திரு. வீரப்ப மொய்லி அவர்கள் கூறியதாக இன்று பத்திரிகைகளில் வெளியாகி உள்ள அவரது அறிக்கையில்- "நீர்வளத் துறை அமைச்சர் திரு. வி.சி. சுக்லா அவர்கள் அறிவித்தபடி, நடுவர் மன்றத் தீர்ப்பை அமல்படுத்தப் படுவதைக் கண்காணிக்கக் கண்காணிப்புக் குழு அமைக்கப்படாது" என்று கடந்த 26-ஆம் தேதி உங்களைச் சந்தித்த கர்நாடகத் தூதுக் குழுவிடம் நீங்கள் (பிரதமர்) கூறியதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும் நடுவர் மன்றத் தீர்ப்பை அமல்படுத்த கண்காணிப்புக் குழு அமைக்க மத்திய அரசு விரும்பவில்லை என்றும் பத்திரிகைச் செய்திகளில் மேலும் கூறப்பட்டுள்ளது.

நீங்கள், கர்நாடக எம்.பி.க்கள் குழுவிடம் அப்படிச் சொல்லி இருக்க மாட்டீர்கள் என நான் நம்புகிறேன். ஜூலை 21-ஆம் தேதி திரு. வி.சி. சுக்லா அவர்கள் என்னைச் சந்தித்த போது, எனக்குக் கொடுத்த உறுதிமொழியை நீங்கள் காப்பாற்றுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். அவர் எங்களுக்கு ஒரு உறுதிமொழியைக் கொடுக்கும் முன்பு, உங்களின் சம்மதத்தைப் பெற்று இருப்பார் என்று நான் நிச்சயமாகக் கருதுகிறேன். சிக்கலான காவிரி நீர்ப் பிரச்சினையில் இது வேறுவிதமாக இருக்காது என நான் எதிர்பார்க்கிறேன்.

எப்படி இருந்தாலும்- கண்காணிப்புக்குழு, அமல்படுத்தப்படும் குழு ஆகியவை அமைக்கப்படும் என்று திரு. வி.சி. சுக்லா அவர்கள் பத்திரிகைகளுக்கு அறிவித்திருப்பதால், அதற்கு மத்திய அரசின் சம்மதம் இருந்திருக்கும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

ஆனால், நிலைமை இப்போது வேறுவிதமாக இருந்தால், உண்மையிலேயே அது மோசமானதாகும். வீரப்ப மொய்லியின் அறிக்கை உண்மையாக இருக்குமேயானால், தமிழக மக்களின் சார்பில் எனது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசு, தனது முடிவெடுக்க முடியாத நிலையால் இந்தப் பிரச்சினையைத் தள்ளிப் போடக் கூடாது என்று எச்சரிக்கை விடுக்கிறேன்.

காவிரி பிரச்சினைக்காக நான் உண்ணாவிரதம் இருந்ததற்குத் தமிழக மக்கள் தங்கள் முழு ஆதரவை எனக்குத் தெரிவித்து இருக்கிறார்கள்.

திரு. வி.சி. சுக்லா அவர்கள் அறிவித்துள்ளதன் அடிப்படையில், மத்திய அரசு தனது அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ளும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தோம்; ஆனால், திரு. சுக்லாவின் உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை.

காவிரி அணையில் நீர் வரத்து குறிப்பிடத்தக்க அளவில் குறைந்து இருக்கிறது. காவிரிப் படுகைப் பகுதிகள் கடுமையான தண்ணீர் தட்டுப்பாட்டை நோக்கி உள்ளன. காவிரியில் தண்ணீர் வரத்து கடந்த 23-ஆம் தேதி, 16,018 கன அடியாக இருந்தது. 27-ஆம் தேதி 4,224 கன அடியாகக் குறைந்துள்ளது.

திரு. வி.சி. சுக்லாவின் உறுதிமொழியை மத்திய அரசு அமல்படுத்தாவிட்டால், காவிரிப்படுகைப் பகுதி விவசாயிகள், தங்கள் கடும் கொந்தளிப்பை விரைவில் காட்டத் தொடங்கி விடுவார்கள் என நான் அஞ்சுகிறேன். இந்தப் பிரச்சினையை நீங்கள் அரசியல் கோணத்தில் இருந்து பார்க்கவில்லை என நான் கருதுகிறேன்.

நான் உண்ணாவிரதம் இருந்த பிறகு, தமிழக மக்கள் உங்களிடம் எதிர்பார்ப்பதெல்லாம் குறுவைப் பயிரைக் காப்பாற்ற நடுவர் மன்ற உத்தரவுப்படி கர்நாடக அரசு காவிரியில் தண்ணீர் திறந்து விட கண்காணிப்புக் குழுவையும் அமல்படுத்தும் குழுவையும் நியமிக்க வேண்டும்' என்பதுதான். ஆனால் அவர்கள் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. அவர்களின் உணர்வுகளை நான் உங்களுக்கு இதன் மூலம் தெரியப்படுத்துகிறேன்.

நிலைமையைப் புரிந்துகொண்டு சட்டப்படி விரைவில் தீர்வு காண்பீர்கள் என நம்புகிறேன்.

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமது கடிதத்தில் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டின் உயிர்நாடி காவிரி

தமிழ்நாட்டின் உயிர்நாடி காவிரியில் இருக்கிறது. தமிழ்நாட்டில் கால்வாய்ப் பாசனத்தைச் சார்ந்துள்ள நிலங்களில் 85 விழுக்காடு நிலங்கள் காவிரி நீரை நம்பியுள்ளன. காவிரி நீரை உபயோகிப்பதில் தமிழ்நாட்டுக்கு உள்ள உரிமை மிகவும் பழமை வாய்ந்தது. அவ்வுரிமை தமிழ்நாட்டிற்கும் கர்நாடகத்திற்கும் இடையே ஏற்பட்ட 1892-ஆம் ஆண்டு மற்றும் 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தங்கள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளக் கடந்த இருபது ஆண்டுகட்கும் மேலாக மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியுற்ற பின், சட்டப்பூர்வமாக இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மைய அரசால் நியமிக்கப்பட்ட உயர் நீதிபதிகளைக் கொண்ட நடுவர் மன்றம் அளித்துள்ள இடைக்காலத் தீர்ப்பை மதிக்கமாட்டோம் என்றும், அது தங்களைக் கட்டுப்படுத்தாது என்றும் கர்நாடக அரசு கூறுவது நியாயமற்றதும், மிகவும் வருந்தத்தக்கதும் ஆகும்.

ஏழை எளியோர்க்கு மாண்புமிகு முதல்வர் உதவி

• சிவகங்கை வட்டத்தில் உள்ள காளையார் கோவில் கிராமத்தைச் சேர்ந்த சிற்பியான திரு அருணாசலம் என்பவர் இலங்கையில் உள்ள அருள்மிகு ஸ்ரீ கைலாசநாதர் திருக்கோயில் ராஜகோபுரம் கட்டும் பணிக்காக 1989-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கை சென்றார். அங்கு சென்றபின், சிற்பி அருணாசலம் இறந்து போனார். இலங்கையில் காலமாகிப் போன திரு அருணாசலத்தின் மனைவி திருமதி காசியம்மாளின் மனுவினை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கருணையுடன் பரிசீலித்து, திருமதி காசியம்மாளின் வறுமை நிலையை அறிந்து, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.10,000 வழங்க ஆணையிட்டுள்ளார்.

• நாகப்பட்டினம் துறைமுகத்தில் கப்பலில் பளு தூக்கி இயந்திரத்தில் வேலை செய்யும்பொழுது திரு ஏ. நாகராஜன் என்ற கூலித் தொழிலாளி தவறி விழுந்து மரணம் அடைந்தார். அவர் தனியார் நிறுவனத்தில் பணியாற்றி இறந்து போனதால், அவருக்கு அரசு நிவாரணம் கிடைப்பதற்குச் சட்டத்தில் வகை இல்லாதபோதும், அன்னாரது மனைவியின் வறுமை நிலையை அறிந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள், அன்னாரின் மனைவிக்குச் சிறு பெட்டிக் கடை வைக்க முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.10,000 வழங்க ஆணையிட்டுள்ளார்.

• சென்னை நகரில் ஜரினா பேகம் என்ற மூன்று வயதுச் சிறுமி மீது மாட்டு வண்டி மோதி, அந்தச் சிறுமி இறந்து போனாள். மாட்டுவண்டி மோதி ஏற்படும் விபத்தில் உயிரிழந்தோரின் வாரிசுதாரர்களுக்கு நிவாரண உதவி பெறும் தகுதி இல்லை. இருப்பினும், மாண்புமிகு முதல்வர் அவர்கள், அந்தச் சிறுமியின் பெற்றோர்கள் அளித்த மனுவினைக் கருணையுடன் பரிசீலித்து முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1000 வழங்குவதற்கு உத்தரவிட்டுள்ளார்.

• சென்னை, கிழக்கு முகப்பேறு, ஜெயலலிதா நகரைச் சேர்ந்த சந்திரா - தங்கம் என்ற தம்பதியர் அவர்களுடைய நான்கு வயதுக் குழந்தை வெண்ணிலா மிகவும் ஊனமுற்ற நிலையில் இருப்பதாகவும், அந்தக் குழந்தையைப் பாதுகாக்க வும், பராமரிக்கவும், மருத்துவச் சிகிச்சை அளிக் கவும் ஏதாவது உதவி வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு மனுக் கொடுத்து இருந்தார்கள்.

சிறுமி வெண்ணிலாவின் நிலைமையைக் கேட்டறிந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அந்த ஊனமுற்ற சிறு குழந்தையின் எதிர்காலத்தைக் கருதி அக்குழந்தைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500-ஐ முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து அதன் ஆயுட்காலம் முழுவதும் வழங்க ஆணையிட்டார்.

• கன்னியாகுமரி மாவட்டம் குட்டக்குளி என்னும் இடத்தில் ஏற்பட்ட சாலை விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர். அந்த 3 குடும்பத்தினரின் வறுமை நிலையை அறிந்து, ஒவ்வொரு குடும்பத்திற்கும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் பத்தாயிரம் வழங்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்.

• நீலகிரி மாவட்டம் மஞ்சூரில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் இறந்துபோன மணி என்பவரின் குடும்பத்திற்கு அரசின் சார்பில் ரூ.15,000 ஏற்கெனவே வழங்கப்பட்டது. திரு மணி அவர்களின் தாயார் திருமதி கருப்பாயாள் தனது குடும்பத்தைச் சார்ந்த ஒருவருக்கு அரசாங்க வேலை வேண்டி, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கோரிக்கை மனு ஒன்றை அளித்திருந்தார். திருமதி கருப்பாயாள் அவர்களின் கோரிக்கை மனுவினைக் கருணையுடன் பரிசீலித்த மாண்புமிகு முதல்வர் அவர் அவரது குடும்பத்தைச் சார்ந்த தகுதியுள்ள ஒரு வரை அரசுப் பணியில் உடனடியாக அமர்த்து மாறு உத்தரவிட்டுள்ளார்.

• நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா அக்கரைப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த கீழ்க்கண்ட 7 மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் சென்றவர்கள் மீண்டும் கரைக்குத் திரும்பவில்லை.

இராமச்சந்திரன், ஆனந்தவேல், குட்டியாண்டி, பாலையன், இராசக்கண்ணு, பழனியாண்டி, சுப்பிரமணி.

அம் மீனவர் குடும்பங்களின் அவல நிலையை அறிந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், அம் மீனவர் குடும்பம் ஒவ்வொன்றிற்கும் தலா ரூ.5,000 முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க உத்தரவிட்டுள்ளார்.

• கர்நாடக மாநிலத்தில் ஏற்பட்ட கலவரத்தில் தமிழர்கள் தங்கள் உடைமைகளை இழந்து உயிருக்குப் பயந்து அகதிகளாகப் பெரியார் மாவட்டத்தில் தஞ்சம் புகுந்தனர். சுமார் 683 கர்நாடகத் தமிழர்கள் இன்றும் அகதிகளாகப் பெரியார் மாவட்டத்தில் இருந்து வரும் நிலைமையைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர்களின் துயரைக் களைந்து மறுவாழ்வு அளிப்பதற்கு ரூ.34,66,000-ஐ கர்நாடகத் தமிழக மறு வாழ்வு நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளார்.

• சிதம்பரனார் மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், நடுநாலுமூலைக்கிணறு கிராமத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த கீழ்க்கண்ட 8 நபர்கள், வேலைக்குச் செல்ல இயலாததால் அவர்களின் குடும்பம் படும் துயரை நீக்க, மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைப்படி, அவர்களின் குடும்பம் ஒவ்வொன்றிற்கும் ரூ.5,000- மாண்புமிகு தமிழக முதல்வர் பொது நிவாரண நிதியிலிருந்து ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

செல்வி முத்துக்கனி, செல்வி முத்துக்குமாரி, திரு சுப்பிரமணியன், திரு முத்துராஜ் சிவன், திரு வெள்ளத்துரை, திரு சுகுமார், திரு கணேசன், திரு அமுதன்.

மேலும், அந்தத் துப்பாக்கிச் சூட்டில் காயம் அடைந்த 8 நபர்களும் அவர்களுக்கு வழங்கப்பட நிவாரணத் தொகை போதவில்லை என்றும், மேலும் பொருள் உதவி வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மனு கொடுத்திருந்தனர். அந்த மனுவினைக் கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், காயமுற்ற அனைவரும் நிரந்தர வருமானம் இல்லாத ஆதிதிராவிட விவசாய ஏழைக்கூலிகள் என்பதனால் அக் குடும்பங்களின் துயரைக் களைய மேலும் அக்குடும்பத்தினர்களுக்குத் தலா ரூ.5,000-ஐ முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க ஆணையிட்டுள்ளார்.

• புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் இறந்த செல்வி மதலைமேரியின் குடும்பத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே ரூ.10,000 நிதியுதவி வழங்க உத்தரவிட்டார்.

இறந்துபோன செல்வி மதலைமேரியின் தாயார் திருமதி எலிசபெத் அவர்கள், தான் எந்த வருமானமும் இல்லாமல் வறுமை நிலையில் மிகவும் கஷ்டப்படுவதால், மேலும் நிதி உதவி அளிக்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கோரிக்கை மனு ஒன்றை அளித்திருந்தார். அவரது மனுவினைக் கருணையோடு பரிசீலித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேலும் ரூ.5,000-ஐ செல்வி மதலைமேரியின் தாயார் எலிசபெத்திற்கு, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்குவதற்கு ஆணையிட்டுள்ளார்.

உரிமை காக்கும் முதல்வர் வாழ்க!

ஆடிமாத ஞாயிறொன்றில் சேதியொன்று வந்தது
அதையறிந்த எனதுதேசம் பதைபதைத்து நின்றது
ஈடிலாத முதல்வர்நோன்பு ஏற்றசெய்தி வந்தது
இதயம் யாவும் காவிரிக்கு உரிமைவேட்கை
கொண்டது!

வங்கமென்னும் கடலும்கூட வாழ்த்துநூறு தந்தது
வானம்கூட வாழ்த்திசைக்கக் கீழிறங்கி வந்தது
தங்கமங்கை முதல்வர்செய்யும் தவத்தைஞாலம் கண்டது
தர்மம் வாழ்க! ஒருபுரட்சித் தலைவிவாழ்க
என்றது!

வண்ணம் இன்னும் பூசிடாத ஓவியத்தைப் போலவும்
வாசமுள்ள தாமரைப்பூ வாடிநிற்றல் போலவும்
அன்னை கொண்ட நோன்புதன்னைத் திசைகள்
எட்டும் பார்த்தன
அற்புதத்தை எண்ணிஎண்ணிப் பூதமைந்தும்
வேர்த்தன.

நீரிலாடும் செயல்மறந்து நேசர்நெஞ்சம் நொந்தனர்
நீரிலாட மனமில்லாது நெருப்பிலாடி வெந்தனர்
வேரிலாத மரங்களாக மங்கைமார்கள் வீழ்ந்தனர்
வீதியெங்கும் சூளுரைத்து வீரர்கோடி சூழ்ந்தனர்

கட்சிபேதம் அற்றுமாந்தர் கைகுலுக்க வந்தனர்
காவிரிக்குக் குரல்கொடுக்கும் கடமைவாழ்க
என்றனர்

'பிச்சையன்று உரிமை' என்று உச்சரித்து நின்றனர்
'பேசுகின்ற நடுவர்தீர்ப்பைச் செயல்படுத்து'
என்றனர்.

பேச்சுவார்த்தை பேச்சுவார்த்தை என்றுகாலம்
போனது!
பெரியநீதி மன்றம்தந்த தீர்ப்பும் என்ன ஆனது?
மூச்சிருக்கும் நாள்வரைக்கும் பேச்சுவார்த்தை
என்பதா?
முடிவிலாத வறட்சிவந்து தஞ்சைநெஞ்சைத்
தின்பதா?

என்றுகேட்டு நோன்புநோற்றுத் தாய்மைவெற்றி
கண்டது
இதயதெய்வம் என்னும்பேர்க்குச் செயல்விளக்கம்
தந்தது
நின்றுகேட்கும் தெய்வமல்ல, இன்றுகேட்கும்
தெய்வமே
நீதிகேட்கும் முதல்வர் என்று புவிஉணர்ந்து
கொண்டது!

உணவுநீத்து உடல்வருத்தி உரிமைகாத்த முதல்வரை
உரிமைகாக்க அனைவருக்கும் உணர்வுதந்த
முதல்வரை
புனிதமிக்க கடமையாற்றிப் புகழ்படைத்த முதல்வரை
பூக்கும்நன்றி மலர்கள்தூவி வாழ்கவென்று
வாழ்த்துவோம்!





கவிஞர் இளந்தேவன்

TNSC BANK

The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

Rate of Interest on Deposits (Effective from 1.3.1993

Sl.No.	Type of Deposit	Rate of Interest per annum
1.	Savings Bank Accounts	5.25 % w.e.f. 1.7.93
2.	Fixed Deposits :	
	For 46 DAYS and above but upto 270 days	11.25%
	For 271 DAYS and above but upto 364 days	11.00%
	For 1 YEAR and above	11.25%

Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

ஒவ்வொரு உளராட்சி ஒன்றியத்திலும் ஒரு கிராமப்புற விளையாட்டு மையம் ஏற்படுத்தப்படும்!

விளையாட்டு வீரர்களுக்கு விருது வழங்கும் விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை

அனைத்துத் துறைகளிலும மேலோங்கி நிற்கும், தமிழகம் உருவாக்கிய தலைசிறந்த விளையாட்டு வீரர்களையும் வீராங்கனைகளையும் பாராட்டி, அவர்களின் திறமைகளைப் போற்றி, அவர்களைப் பெருமைப்படுத்துவதற்காக நடைபெறுகின்ற, இந்த இனிய விழாவில் பங்கேற்று, உங்கள் அனைவரையும் சந்திப்பதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த விழா, தமிழக விளையாட்டுத் துறையின் வரலாற்றில் ஒரு மைல் கல்; ஒரு திருப்பு முனை.

சாதனைகளை ஏற்படுத்தி, தமது சொந்த மாநிலத்திற்கும், தாய்நாட்டிற்கும், பெருமையினைத் தேடித் தந்துள்ள விளையாட்டு வீரர்களையும், வீராங்கனைகளையும், தமிழக மக்களின் சார்பாகப் பாராட்ட, அரசு நடத்தும் ஏற்றமிகு விழா இது. சாதனையாளர்களின் சாதனைகளைப் போற்றுவது, இந்த விழாவின் ஒரு முக்கிய குறிக்கோளாக இருப்பினும், அத்தகைய சாதனைகள் மென்மேலும் முறியடிக்கப்பட்டு, அகில இந்திய விளையாட்டு அரங்கிலும், சர்வதேச விளையாட்டு அரங்கிலும், புதிய சாதனைகளையும், சிறப்புக்களையும், தமிழகத்து விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் படைக்க வேண்டும் என்ற, நம் அனைவரின் எதிர்பார்ப்பையும், அவாவையும் வெளிப்படுத்தவும், வளர்ந்துவரும் இளைய சமுதாயத்தின் ஆற்றலை, நெறிப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்திலும் தான், இத்தகைய விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

இளைய சமுதாயத்தின் எண்ணத்திலும், வாழ்விலும், மன எழுச்சியையும், மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தும் சக்தி, மற்றெந்தத் துறையையும்விட விளையாட்டுத் துறைக்குத் தான் உண்டு. மனித சக்தியின் மகத்தான, உடல் மற்றும் மன ஆற்றலை, வெளிப்படுத்தும் அற்புதமான கருவி, விளையாட்டுத் துறை என்பதை உணராதவர் மிகச் சிலரே. விளையாட்டில் ஈடுபாடு இல்லாத இளமைக் காலம், வளமான எதிர்கால வாழ்க்கைக்கு அடிகோலாது.

"There is something wrong with the young chap who doesn't play games"

என்று ஓர் அறிஞர் குறிப்பிடுகின்றார்.

எங்கே காட்டாறு போன்ற இளமையின் வேகம், விளையாட்டு மைதானம் என்ற ஆரோக்கியமான மேடையில், போட்டி என்ற பயிற்சியால், சீர்படுத்தப்படுகின்றதோ, நெறிமுறைப் படுத்தப்படுகின்றதோ, அங்கேதான், வெற்றி தோல்வியினைச் சமமாகக் கருதும் உயர்ந்த மன நிலையும், தொடர்ந்து பாடுபட்டு வெற்றி பெற வேண்டும் என்ற மனத் திடமும் உண்டாகும். சிறு வயதில் விளையாட்டு மைதானங்களில் ஏற்படும் பக்குவம் தான், நமது எதிர்கால வாழ்க்கையின்

பல்வேறு கட்டங்களில், எழும் முக்கியப் பிரச்சினைகளைத் தெளிவான சிந்தனையுடன் எதிர்கொள்ளும் ஆற்றலை நமக்குத் தருகின்றது என்பதை, யாரும் மறுக்க முடியாது.

என்னுடைய பள்ளிப் பருவத்திலே, நான் கல்வியில் மிகுந்த ஈடுபாட்டுடன் இருந்தபோதும், விளையாட்டுத் துறையை ஒதுக்கவில்லை. பல விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொண்டு, பல பரிசுகளை வென்றிருக்கின்றேன். கல்வியிலும், விளையாட்டிலும் சமமான ஆர்வத்தைக் காட்டியதால் தான், ''பள்ளியின் சிறந்த ஆல்ரவுண்டர்'' என்ற விருதினை நான் பெற முடிந்தது. அந்த இனிய நினைவுகள் எனது மனதில் இன்றும் பசுமையாக உள்ளன.

விளையாட்டுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கும் கல்வி முறையே, சிறந்ததாக இருக்க முடியும் என்பதே, எனது ஆணித்தரமான கருத்து. விளையாட்டுக்கு ஒரு முக்கியமான இடத்தைக் கொடுக்கும் கல்வி முறை தான் முழுமையானதாக இருக்க முடியும். ஒரு குழந்தை, தான் பிறந்த நாள் முதல், 6 ஆண்டுக் காலம் வரை, மற்றெந்த சூழ்நிலைகளையும்விட, விளையாட்டுச் சூழ்நிலையில் தான், அதிகமான அளவில், தன்னைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றி கற்றுக்கொள்கிறது என்று, உளவியல் அறிஞர்கள் கண்டறிந்துள்ளார்கள். இந்த முறையில், குழந்தைப் பருவத்தில் முக்கியத்துவம் பெறுகின்ற, விளையாட்டு என்கின்ற அம்சம், நமது வாழ்நாள் முழுவதும், விளையாட்டுப் போட்டிகள், உடற்பயிற்சி என்று பல வழிகளில் நமக்கு உடல் ஆரோக்கியத்தையும், மன எழுச்சியையும் அளிப்பதை நாம் காண்கிறோம்.

நல்ல நாகரீகத்தையும், பண்பாட்டையும், உலகத்திற்கு ஈந்த தமிழர்கள், விற்பயிற்சி, வாள் பயிற்சி, வேல்பயிற்சி மற்றும் மல்யுத்தம் போன்ற வீர விளையாட்டுகளிலும், குதிரையேற்றம், சதுரங்கம், பந்தெறிதல் போன்ற பல வகையான விளையாட்டுகளிலும், மிக்க ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பதை, தமிழ்ப் பேரிலக்கியங்கள், குறிப்பாக ''சிலப்பதிகாரம்'', ''திருக்குற்றாலக் குறவஞ்சி'' போன்றவை, எடுத்து உரைக்கின்றன. அது மட்டுமல்ல, பெண்களும், விளையாட்டிலும் உடற்பயிற்சியிலும் கொண்டிருந்த ஆர்வத்தை, 'திருக்குற்றாலக் குறவஞ்சி' என்ற காவியத்தில் இருந்து, நாம் அறிந்துகொள்ள முடிகின்றது.

கிரேக்கர்கள் 'ஆரோக்கியமான உடலே, ஆரோக்கியமான மனதிற்கு வழி வகுக்கும்' - அதாவது, A sound mind in a sound body என்ற கொள்கையைத், தீவிரமாகக் கடைப்பிடித்தார்கள். உடலைப் பேணிக் காப்பதில் அவர்கள் காட்டிய ஆர்வம், இன்றும் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. சுவர் இருந்தால் தானே சித்திரம் வரைய முடியும் என்ற உண்மையை, நாமும் உணர்ந்தாக வேண்டும்.

விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளின் சாதனைகளைப் பாராட்டி, மகிழ்ச்சி அடையும் அதே நேரத்தில், இன்னும் சர்வதேச விளையாட்டு அரங்கில், நமக்கு உரிய இடத்தை நாம் பெறவில்லையே என்ற ஆதங்கமும், மனதில் ஏற்படுகிறது. பல விளையாட்டுகளில், இறுதிப் போட்டிக்குச் செல்லும் நிலையை அடையாமல், ஆரம்ப கட்டத்திலேயே நாம் தேங்கி விடுவதன் காரணத்தை, ஆராய்ந்து பார்க்கும்போது,

— சர்வதேச தரத்திற்கான பயிற்சி மிகக் குறைவாக இருப்பது

— சர்வதேச போட்டிகளில் அதிக அளவில் பங்கேற்காமை

— அடைந்தே தீருவோம் என்ற மனப்பான்மையில் குறைபாடு,

அதாவது killer instinct இல்லாத குறைபாடு ஆகிய மூன்று அம்சங்களில், நம்மவரிடையே தகுதிக் குறைவு இருப்பது, தெரிய வருகிறது.

இந்த மூன்று தேவைகளையும் பூர்த்தி செய்து, நமது விளையாட்டு வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் அந்தந்தத் துறைகளில் பயிற்சி அளித்தால், சர்வதேச விளையாட்டு அரங்கங்களில், நமக்கென ஒரு தனி இடத்தை நாம் பெறும் நாள், வெகு தூரத்தில் இல்லை என்பதை, நான் உறுதியோடு நம்புகிறேன்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, அத்தகைய குறிக்கோள்களோடு, தமிழக விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும், உன்னதமான நிலையை அடைவதற்கு, உகந்த சூழ்நிலைகளை உருவாக்க, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். அவற்றில் மிக முக்கியமானது, அண்மையில் Sports Development Authority of Tamil Nadu - தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் என்ற அமைப்பினை உருவாக்கியது ஆகும். இத்தகைய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளால், பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக, இந்த அரசு செயலாற்றும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

விளையாட்டுத் திறனை வளர்த்துக்கொள்ள, நகர்ப்புறங்களில் மட்டுமின்றி, கிராமப்புறங்களிலும் விளையாட்டு அரங்கம், உடற்பயிற்சி நிலையம், என்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்

விளையாட்டு வீரர்களுக்கு விருது வழங்கும் விழா

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் விளையாட்டு வீரர்களுக்கு விருது வழங்கும் விழா 17.7.93 அன்று கலைவாணர் அரங்கில் சிறப்புற நடைபெற்றது. மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டு, விளையாட்டு வீரர்களுக்கு விருதுகளையும், ரொக்கப் பரிசுகளையும் வழங்கினார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. பொன்னுசாமி அவர்கள் வரவேற்புப் பேசுகையில், ''நேரு ஸ்டேடியம் அருகில் நீச்சல்குளம், சைக்கிள் போட்டி களம், உடற்பயிற்சி களம் ஆகியவை அடங்கிய விளையாட்டு வளாகத்தைப் புரட்சித்தலைவி பெயரில் உருவாக்க இருப்பது, அவர் விளையாட்டுத் துறையின் காவல் தெய்வம் என்று நிரூபிக்கிறது. விளையாட்டுத் துறையின் கற்பக விருட்சமாகத் திகழும் முதல்வர் விளையாட்டுத் துறைக்கு உரிய முக்கியத்துவத்தைக் கொடுத்து, அந்தத் துறைக்கு உயிரூட்டிய மாமருந்தாவர்'' என்றார்.

மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில்,

கல்வியில் தமிழ், ஆங்கிலம் மற்றும் சில பாடங்கள் இருப்பதைப் போல, விளையாட்டையும் கட்டாயப் பாடமாக வைத்து, விளையாட்டுப் பாடத்திலும் தேர்ச்சி அடைந்தால்தான், அவர்கள் மேல் வகுப்புக்குச் செல்ல வேண்டும் என்ற நிலை உருவாக வேண்டும்.

6 கோடி மக்கள் தொகை கொண்ட தமிழகத்தில் கிராம அளவில் 10 இலட்சம் பேராவது விளையாட்டில் ஈடுபட்டால்தான் உலக அளவில் 5 வீரர்களாவது தமிழகத்தின் சார்பில் பங்குபெறும் நிலை உருவாகும்'' என்றார்.

1990-இல் நடந்த 11-வது ஆசிய விளையாட்டுப் போட்டியில் கபடி அணியில் தங்கப்பதக்கம் பெற்ற எஸ். ராஜரத்தினத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒரு இலட்ச ரூபாயும், விருதும் விழாவில் வழங்கினார். கீழ்க்கண்ட விளையாட்டு வீரர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் விருதுகளையும் ரொக்கப் பரிசுகளையும் வழங்கினார்.

திருமதி அனுராஜூ - (கேரம்), திரு மரிய இருதயம் - (கேரம்), திரு ஆரோக்கியராஜ் - (கேரம்) ஆகிய இம்மூவருக்கும் விருது மற்றும் ரூ.15 ஆயிரம் ரொக்கம் வழங்கப்பட்டது.

திரு எஸ்.ஏ. மது - (கைப்பந்து), திரு ஏனஸ்டு அமீர்பாபு - (கைப்பந்து), திரு டி.சி. ஜோதிஷ் - (கைப்பந்து), திரு எ. சிவராமன் - (கைப்பந்து), திரு செந்தூரீஸ்வரன் - (கூடைப்பந்து), திரு ஜெய்சங்கர் மேனன் - (கூடைப்பந்து), திரு கே. பாதர் - (பளுதூக்குதல்), திரு பொ. ரங்கசாமி - (பளுதூக்குதல்), திரு என். சம்பத் - (பளுதூக்குதல்), திரு எஸ். பிச்சையா - (பளுதூக்குதல்), திரு சபாஸ்டியன் சேவியர் - (நீச்சல்), திரு சணல்குமார் - (நீச்சல்), திரு சுரேஷ்குமார் - (நீச்சல்) இவர்களுக்கு விருது மற்றும் ரூ.10 ஆயிரம் வழங்கப்பட்டது.

திரு. வில்வநாதன் ஆனந்த் (சதுரங்கம்), லியாண்டர் பயஸ் (டென்னிஸ்), திரு. ஆர். சந்திரசேகர் (பளுதூக்குதல்), திரு. ரமணராவ் (கைப்பந்து) ஆகியோரும் இந்த விருது பெறத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் அடங்குவர்.

விளையாட்டுத்துறை காலண்டரை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத் தலைவர் சிவந்தி ஆதித்தன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

முன்னதாக, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத் தலைவர் திரு. சிவந்தி ஆதித்தன் அவர்கள் வாழ்த்திப் பேசினார். இறுதியில் கல்வித்துறைச் செயலர் திரு. சங்கரகப்பையன், இ.ஆ.ப. அவர்கள் நன்றி நவின்றார்.

—நிகழ்ச்சித்தொகுப்பு:
கரு. சண்முகசுந்தரம்

• பெருந்தலைவர் காமராசர் அவர்களிடத்தில் தனி உதவியாளராகப் பணியாற்றிய திரு. வரதராஜன் என்கிற அம்பி வறுமையில் வாடுவதாக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மனு ஒன்றினைச் சமர்ப்பித்திருந்தார்.

அவருடைய மனுவைக் கருணையோடு பரிசீலித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் திரு. வரதராஜன் என்கிற அம்பிக்கு, பெருந்தலைவர் காமராசர் அவர்களிடத்தில் பணியாற்றியதை கருத்தில்கொண்டு, அவருக்கு ஐந்தாயிரம் ரூபாயை முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க ஆணையிட்டுள்ளார்.

• கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை வட்டத்தைச் சேர்ந்த ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த திருமதி வள்ளி என்பவர் தனது கணவர் திரு. சுந்தர ராஜனைச் சிலர் கொன்று விட்ட காரணத்தால், தனது கடினமான குடும்பச் சூழ்நிலையை விளக்கி தனக்கு நிதி உதவி செய்யுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மனு கொடுத்து இருந்தார். அவரது மனுவினைக் கருணையுடன் பரிசீலித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.5,000 வழங்க ஆணையிட்டுள்ளார்.

• ஜெகதாபட்டினத்தில் 28.12.1992ல் கடலில் மீன் பிடிக்கச் சென்ற வீரப்பன், முருகன், சின்னதம்பி மற்றும் கோவிந்தராஜ் ஆகியோர் காணாமல் போய்விட்டனர். அவர்களைத் தேடும் பணி கடலோரக் காவல்படை மற்றும் வான்-படை மூலம் முயற்சி எடுத்தும் இதுவரை அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அந்த மீனவர்களின் குடும்பங்களின் வறுமை நிலையை அறிந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், அந்த நான்கு மீனவர்களின் குடும்பங்களுக்கும், தலா ஐந்து ஆயிரம் ரூபாயை, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க ஆணையிட்டுள்ளார்.

• நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், ஓவேலி கிராமத்தைச் சேர்ந்த திருமதி நாகரத்தினம் என்பவரின் மகள் செல்வி, கவிதா என்பவர் சமையல் செய்யும்போது, ஆடையில் தீப்பிடித்து இடுப்புக்குமேல் கழுத்துவரை தீக்காயங்கள் ஏற்பட்டு, மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும், தீக்காயங்களுக்கான பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள நிதி உதவி அளிக்கக் கோரி மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மனு ஒன்றினைச் சமர்ப்பித்திருந்தார். அந்த மனுவைக் கருணையுடன் பரிசீலித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், செல்வி கவிதாவின் மருத்துவச் சிகிச்சைக்காக, "முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து" ரூபாய் ஐயாயிரத்தை அளிக்க ஆணையிட்டுள்ளார்.

• நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி நகரில் வசிக்கும் திரு சண்முகத்திற்கு மூளை வளர்ச்சி குன்றிய மூன்று மகன்களும், படிக்காத 24 வயது நிரம்பிய ஒரு மகளும் இருக்கிறார்கள் என்றும், ஏழ்மையான நிலையில் மகிவும் சிரமப்படுவதாகவும் அவர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மனு ஒன்றினைச் சமர்ப்பித்திருந்தார்.

அந்த மனுவைக் கருணையுடன் பரிசீலித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், படிக்காத திருமணப் பருவத்தில்இருக்கும் 24 வயது நிரம்பிய திரு சண்முகத்தின் மகள், ஏதாவது தொழில் செய்து பிழைப்பதற்காக, "முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து" ஐந்தாயிரம் ரூபாயை வழங்க ஆணையிட்டுள்ளார்.

படித்த வேலைவாய்ப்பற்ற

ஒரு இலட்சத்து 33 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலை!

மாண்புமிகு முதல்வர் ஆணை

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், பள்ளி சாராக் கல்வி மற்றும் குடியினால் விளையும் கேடுகளைப் பிரச்சாரம் செய்வது குறித்து ஒரு புதிய திட்டத்தைச் சட்டமன்றப் பேரவையில் அறிவித்து இருந்தார். இத்திட்டத்திற்கு ஒப்புதலளித்து 9.6.93 அன்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த 'படித்தோர் தன்னார்வத் தொண்டு பணித் திட்டம்' தற்போது நடைமுறையில் உள்ள வேலை வாய்ப்பற்றோருக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்தியும், மேம்படுத்தியும் நடைமுறைப் படுத்தப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதால் தற்போதுள்ள வேலைவாய்ப்பற்றோருக்கு நிவாரணம் வழங்கும் திட்டம் நிறுத்தப்படும். இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாவன:-

1. அனைவர்க்கும் தொடக்கக் கல்வி எனும் இலக்கை அடைவது.
2. மதுவின் தீமைகள் குறித்து தொடர்ந்து பிரச்சாரம் செய்வது.
3. சமுதாயத் தொண்டாற்றும் ஏராளமான படித்த வேலையற்றோருக்குத்தற்காலிக உதவி வழங்குவது.

எஸ்.எஸ்.எல்.சி/பிளஸ்-2/பட்டப் படிப்பு முடித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 1.4.93 வரை 5 ஆண்டுகள் அல்லது அதற்குமேல் ஆகியுள்ளவர்கள் இந்தத் திட்டத்தின்கீழ் தன்னார்வத் தொண்டர்களாகப் பணியாற்றத் தகுதியுள்ளவர்களாவார்கள்.

இவர்களின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000-த்திற்கு மேற்படாமலும், வயது 1.4.93 வரை 35-க்கு குறைவாகவும் இருக்க வேண்டும். ஏற்கெனவே வேலை வாய்ப்பற்றோருக்கான நிவாரண உதவியினைத் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் பெற்றவர்கள் இந்தத் திட்டத்தில் பணியாற்ற இயலாது.

இத்திட்டத்தில் சேரத் தகுதியுள்ளவர்கள் தங்களுடைய பெயர்களைத் தாங்கள் நிரந்தரமாக வசித்து வரும் எல்லைக்குட்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ளலாம். நகர்ப்புறப் பகுதியில் வசிப்பவர்கள். நகராட்சி/மாநகராட்சி ஆணையர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளலாம்.

ஊராட்சி/நகராட்சி/மாநகராட்சி ஆகியவற்றுக்கு இந்தத் தன்னார்வத் தொண்டர்கள் தேர்ந்தெடுக்கப் படுவர். 500 நபர்கள் கொண்ட ஒவ்வொரு பகுதிக்கும் ஒருவர் பயிற்று விப்போராகத் தேர்ந்தெடுக்கப் படுவர். மொத்த எண்ணிக்கை மக்கள் தொகைக்கு ஏற்ப அமையும். மக்கள் தொகை 500-க்குக் குறைவாகவும், 400-க்கு அதிகமாகவும் உள்ள பகுதிகளுக்கு ஒரு பயிற்று விப்போர் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொரு தன்னார்வப் பயிற்றுநரும் பள்ளிப் படிப்பை இடையிலேயே நிறுத்திய 10 முதல் 20 நபர்களுக்குப் பயிற்சி அளிப்பார்கள். இந்தத் தன்னார்வத் தொண்டர்களைத் தேர்வு செய்யும்போது சம்பந்தப்பட்ட பகுதிகளில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தன்னார்வத் தொண்டு புரியத் தேர்ந்தெடுக்கப்படுவோர்க்கு மது விலக்குப் பிரச்சாரம் மேற்கொள்வது குறித்து முதலில் பயிற்சி அளிக்கப்படும். இந்தப் பயிற்சி முறை மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையினரால் வரையறுக்கப்படும். பின்னர் இவர்களுக்குப் பள்ளி சாராக் கல்வி குறித்தும் பயிற்சி அளிக்கப்படும். இதற்கென ஒரு பணிக்குழு அமைக்கப்படும்.

ஒவ்வொரு தன்னார்வப் பயிற்றுநருக்கும் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை மதிப்பூதியம் வழங்கப்படும். இந்த ஊதியம் பள்ளிப்படிப்பை இடையில் நிறுத்தியவர்களின் எண்ணிக்கைக் கணக்கிற்கேற்ப வழங்கப் படும். எஸ்.எஸ்.எல்.சி.வரை படித்த பயிற்றுநர் பள்ளிப்படிப்பை இடையில் நிறுத்திய 10 பேர்களுக்கும், பிளஸ்-2 படித்த பயிற்றுநர் பள்ளிப்படிப்பை இடையில் நிறுத்திய 15 பேர்களுக்கும், பட்டப் படிப்புப் படித்த பயிற்றுநர்கள் பள்ளிப்படிப்பை இடையில் நிறுத்திய 20 பேர்களுக்கும் கல்வி பயிற்றுவிப்பார்கள். இருமாதங்களுக்கொரு முறைவழங்கப்படும் இந்த மதிப்பூதியம் எஸ்.எஸ்.எல்.சி படித்தவர்களுக்கு ரூ.150 என்ற அளவிலும், பிளஸ்-2 படித்தவர்களுக்கு ரூ.225 என்ற அளவிலும், பட்டதாரிகளுக்கு ரூ.300 என்ற அளவிலும் வழங்கப் படும். தங்களிடம் படிப்பவர்களின் எண்ணிக்கையினை அவர்கள் தொடர்ந்து குறையாமல் அதே அளவில் இரண்டு மாத காலங்களுக்குப் பார்த்துக் கொள்வதற்கேற்ப இந்த மதிப்பூதியம் கணக்கிட்டு வழங்கப்படும்.

இந்தத் திட்டம் மூன்று ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு நல்லமுறையில் தேறி வெளிவரும் குழந்தைகள் பள்ளிகளில் 6-ஆம் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன்மூலம் 6 முதல் 14 வயது வரை உள்ள 15 இலட்சம் குழந்தைகளுக்குக் குறுகிய காலத்தில் படிப்பறிவு அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு ஏறத்தாழ 16 கோடி ரூபாய் செலவாகும். ஒரு இலட்சத்து 33 ஆயிரம் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் இத்திட்டத்தினால் பயன் பெறுவர்.

தவும், விளையாட்டுத் திறன் படைத்த இளைஞர்களை இனங்கண்டு, அவர்களைத் தெரிந்தெடுத்து, குறிப்பிட்ட துறைகளில் தனிப் பயிற்சி அளிக்கவும், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு கிராமப்புற விளையாட்டு மையம், ஒரு Rural Sports Centre ஏற்படுத்தப்படும்.

ஏழை மாணவ மாணவ மாணவிகளுக்கு, இலவச விடுதி வசதியும், கல்வி உதவித் தொகையும், வழங்கப்பட்டு வருவதைப் போல, விளையாட்டில் ஆர்வம் காட்டி, திறமைகளை வெளிப்படுத்தும் மாணவ-மாணவிகளுக்கெனத் தனியே, ஒவ்வொரு மாவட்டத் தலைமையிடத்திலும், ஒரு விளையாட்டு விடுதி, ஒரு Sports Hostel ஏற்படுத்த, இந்த அரசு தீர்மானித்துள்ளது. இந்த விடுதிகளில் தங்கிப் பயில்பவர்களுக்கு, சத்தான உணவு, விளையாட்டுகளில் தனிப்பயிற்சி, சிறப்பு மருத்துவ வசதி போன்றவை வழங்கப்படும்.

வயதான நிலையில், வறுமையில் வாடும் விளையாட்டு வீரர்களுக்கு, இதுவரை மாதாந்திர உதவித் தொகை, 75 ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. முதிர்ந்த விளையாட்டு வீரர்கள் பெறும் இந்தத் தொகை, 75 ரூபாயிலிருந்து, 500 ரூபாயாக உயர்த்தி வழங்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பாராட்டும் பரிசும், கலைத்துறை, கல்வித் துறைக்கு மட்டுமல்லாமல், விளையாட்டுத் துறைக்கும் உரித்தானது. ஒவ்வொரு ஆண்டும் சிறந்த விளையாட்டு வீரர்களில், ஆண்கள் இருவருக்கும், பெண்கள் இருவருக்கும், விருதுகளுடன் தலா ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கும் திட்டத்தையும் செயல்படுத்த, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முதல் கூட்டத்திலேயே முடிவெடுக்கப்பட்டுள்ளது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி, இந்த அரசு பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்ற நேரத்தில், அரசினுடைய முயற்சிகளோடு, தனியார் துறையினரும், பெரிய தொழில் நிறுவனங்களும், இந்த ஆணையத்துடன் தங்களை இணைத்துக் கொண்டு, விளையாட்டு வளர்ச்சிக்குப் பாடுபட, முன்வர வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன். அத்தகைய நிறுவனங்கள், தங்களுக்குப் பிடித்தமான விளையாட்டுப் பிரிவுகளைத் தேர்ந்தெடுத்து, விளையாட்டு வீரர்கள் - வீராங்கனைகளுக்குச் சர்வதேச அளவிலான பயிற்சி அளித்து, போட்டிகளுக்கு அனுப்பி வைத்து, ஊக்குவிக்க வேண்டும். இத்தகைய கூட்டு முயற்சிகளில், நாம் இணைந்து ஈடுபடுவோமானால், Asian Games, Olympics போன்ற போட்டிகளில், தமிழகம் பல பதக்கங்களை வெல்லும் நாள், வெகு தூரத்தில் இல்லை என்பதை, இங்கே உறுதியோடு கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

என் அன்பிற்குரிய தமிழகத்து மாணவ மாணவியரே, இளைய தலைமுறையின் இளவல்களே! உங்கள் அனைவருக்கும் ஒரு செய்தியை நான் இந்தத் தருணத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். நீங்கள் அனைவரும், நீங்கள் பயின்று வரும் விளையாட்டுப் பிரிவுகளில், உங்கள் சாதனைகளை, இன்று விருதுகளைப் பெறும் வீரர் வீராங்கனைகளைப் போன்று, தேசிய, சர்வதேசத் தரத்திற்கு உயர்த்திக்கொள்ள, முன்வர வேண்டும். அதற்கான முயற்சிகளில் நீங்கள் ஈடுபாட்டோடும், உண்மையோடும், தமிழகத்திற்கும் நாட்டிற்கும் புகழை ஈட்டித் தரும் வண்ணமும், செயல்பட முன் வருவீர்களேயானால், அரசு சமீபத்தில் ஏற்படுத்தி உள்ள 'தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு'க் கடிதம் எழுதுங்கள். நிச்சயமாக, தகுதியும் ஆர்வமும் இருப்பவர்களை, Olympics தரத்திற்கு உயர்த்தி, தமிழகத்திற்குப் பெருமை சேர்க்க, இந்த அரசு பாடுபடும் என்ற உறுதியை, உங்களுக்குத் தெரிவித்துக் கொள்வதில், நான்மிக்க மனநிறைவு அடைகின்றேன்.

இன்று விருதுகளையும் பதக்கங்களையும் பெறும், நமது தமிழகத்து விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும், நமது தமிழகத்திற்கும் தாய் நாட்டிற்கும் சிறப்பும் சேர்க்கும் பணியில், அயராது பாடுபட்டதால் தான், நம் அனைவரின் பாராட்டுக்களையும் பெற்று, புகழோடு திகழ்கின்றனர். இவர்கள் அனைவரும், இதுவரைப் படைத்தவை சாதனைகளாகவும், இனிமேல் படைக்கப்போவது, சரித்திரங்களாகவும் மலர வேண்டுமென வாழ்த்துவதில், மகிழ்ச்சியும், மனநிறைவும் அடைகின்றேன். இந்தச் சாதனை வீரர் வீராங்கனைகளின், முயற்சிகளும் சாதனைகளும், இளைய தலைமுறையினருக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் என்று நம்புகின்றேன்.

விருது பெறும் சாதனையாளர்கள் அனைவருக்கும், தமிழக மக்கள் சார்பாகவும், எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

'தனி மனிதர்கள் நலத்தைவிட, அமைப்பின் நலம், தொழிலின் நலம், பொது நலம் இவைதாம் முக்கியம்!'

—மாண்புமிகு முதல்வர் உரை

திரைப்படத் தொழிலில் தயாரிப்பாளர்களுக்கும், நடிகர்களுக்கும், விநியோகஸ்தர்களுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளைக் குறித்து, முதலமைச்சர் அவர்கள் 21.6.1993 பேச்சுவார்த்தை நடத்தி தகராறைத் தீர்த்து வைத்து ஆற்றிய உரை:

சமீப காலமாகத், திரைப்படத் தொழிலில் விநியோகஸ்தர்களுக்கும், ஏனைய சாராருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக, புதிய படங்கள் எடுப்பதும், விநியோகிப்பதும், வெகுவாகக் குறைந்து, திரைப்படத் தொழிலே ஒரு தேக்க நிலைக்கு வந்து ஸ்தம்பித்து விட்டது. இதனால் பல்வேறு தீய விளைவுகள் நிகழ்ந்து விட்டன என்றெல்லாம் இங்கே கூறினீர்கள். அது உண்மைதான்.

இத்தொழிலை நம்பி வாழும், பல்லாயிரக்கணக்கான தொழிலாளப் பெருமக்கள், தொழில் நுட்பக் கலைஞர்கள் வேலையின்றித் தவித்து, பிழைப்பின்றிப் பேதலித்ததை, நான் ஏற்கெனவே நன்கறிவேன். இத்தொழிலை நம்பியவர்களுக்கு, பெருத்த நட்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதும் உண்மையே. அரசுக்கு இந்த வகையில் கிடைக்க வேண்டிய வருவாய், வெகுவாகக் குறைந்திருக்கிறது. இன்னொரு கோணத்தில் பார்த்தால், திரைப்பட ரசிகர்கள், போதிய படங்கள் இன்றி ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

இந்தப் பிரச்சினை, இன்னும் பூதாகரமாக உருவெடுக்குமுன் அரசே தலையிட்டுத் தீர்த்து வைக்க முன் வந்துள்ளது. அந்த வகையில் தான், முத்தரப்பினரையும், கலைஞர்களையும், நடிகர்களையும் கூட்டி, இப்படி ஒரு சமரசப் பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்யச் சொன்னேன். பொதுவாக, உங்களின் பிரச்சினையை, நீங்களே தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே என் ஆசை. அது முடியாத போது தான், நீங்களும் அரசை அணுக வேண்டும்; அரசும் தலையிட்டு உதவ வேண்டும்.

இந்த அரசைப் பொறுத்த வரையில், நான் முதலமைச்சராய் பொறுப்பேற்ற உடன், உங்கள் அனைவரையும், 20.8.1991 அன்று இதே இடத்தில் அழைத்து, உங்களுக்கு உள்ள பிரச்சினைகளை எல்லாம் கேட்டு, பின்னர் அவற்றில் பலவற்றிற்கு, 25.7.1992-இல் நடந்த பாராட்டு விழாவில் தீர்வு கொடுத்தேன். பல்வேறு சலுகைகளையும், உரிமைகளையும் வழங்கினேன். குறைந்த முதலீட்டில் எடுக்கும் படத்திற்கான மானியம் உயர்த்தப்பட்டது. அவ்வாறு மானியம் வழங்கப்படும் படங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டது. சிறந்த படத்தைத் தேர்ந்தெடுக்கும் குழுவில், பெடரேஷனுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டது. ஸ்லைடுகளுக்கு உள்ள வரி நீக்கப்பட்டது. திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள 24 Craft தொழிலாளர்கள், விபத்திற்குள்ளானால், விபத்து நிவாரண உதவித் தொகை வழங்க உத்தரவிடப்பட்டது. மண்டலத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவில், பெடரேஷனுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டது.

திரையரங்குக் கட்டணம் உயர்த்தப்பட்டது. திரையரங்குகளுக்குப் பராமரிப்புக்கென, டிக்கெட் கட்டணத்தில் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டது.

இதை அடுத்து டிசம்பர் 1992-இல் விநியோகஸ்தர்களுக்கும், திரையரங்கு உரிமையாளர்களுக்கும் ஏற்பட்ட பிரச்சினையில், ஒரு சில நாட்கள் திரையரங்குகள் மூடப்பட்ட நிலையில், என்னுடைய ஆலோசனையின் பேரில், உள்துறைச் செயலாளர், பேச்சு வார்த்தை நடத்தி 11.1.1993-இல் சுமூகமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.

இப்போது விநியோகஸ்தர்கள் ஒரு புறமாகவும், மற்ற அனைவரும் ஒரு புறமாகவும் திரண்டு, இந்தத் தகராறில் நின்று கொண்டிருக்கிறீர்கள். பிரபல நடிகர்களும், இயக்குநர்களும் வந்திருக்கிறார்கள். அவர்களும் பிரச்சினையில் சம்பந்தப்பட்டுவிட்டார்கள். இரு தரப்பிலிருந்தும் பலபேர் பேசினீர்கள். அவரவர் கருத்தைத் தெளிவாக எடுத்துச் சொல்லி, தத்தம் பக்கம் உள்ள நியாயத்தை, நன்கு வலியுறுத்தியிருக்கிறீர்கள். இந்தத் துறையில், எனக்கும் நீண்ட நெடிய தொடர்பு

உள்ள காரணத்தால், பிரச்சினைகளின் கூறுகளை, நுணுக்கங்களை, அதில் உள்ள நியாய அநியாயங்களை, என்னால் எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது. இந்த சமரசப் பேச்சுக்கு, நான் அழைத்த உடன் வருகை தந்து, கலந்துகொண்டு, இது வரை ஒத்துழைப்பு தந்து, இனியும் ஒத்துப்போக ஒப்புதல் அளித்த உங்கள் அனைவரையும் வெகுவாகப் பாராட்டுகிறேன்.

எந்த ஒரு சிக்கலுக்கும், ஏதாவது ஒரு மட்டத்தில், ஏதாவது ஒரு காலக்கட்டத்தில், தீர்வு ஏற்பட்டே ஆக வேண்டும். அப்படிப்பட்ட நிலை தான், இன்றைக்கு வந்திருக்கிறது என்று கருதுகிறேன்.

திரைப்படத் துறையைப் பொறுத்த வரையில், தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், திரையிடுவோர் ஆகிய மூன்று சாராரும், அத் தொழிலின் முக்கிய முதுகெலும்புகள். இவர்களில் யார் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பேச்சுக்கே இடமில்லை. மூவரும், அவரவருக்குரிய எல்லைக் கோட்டைத் தாண்டாமல், அடுத்தவர் எல்லையில், உரசாமல் செயல்படும் சூழ்நிலை தான், ஆரோக்கியமான, அருமையான சூழ்நிலையாக இருக்க முடியும். இதைத் தான் இந்த அரசு எதிர்பார்க்கிறது; விரும்புகிறது. யாரும், யார் மீதும் ஆதிக்கம் செலுத்தி அழுத்துவதை; சமூக சூழ்நிலையை, நல்லுறவைப் பாதிப்பதை, இந்த அரசு விரும்பவில்லை.

தனி மனிதர்கள் நலத்தைவிட, அமைப்பின் நலம், தொழிலின் நலம், பொது நலம், இவை தாம் முக்கியம். Conflict of interest-ஐ விடுத்து, Commonality of interest பார்க்கப்பட வேண்டும். எனவே, சுருங்கச் சொன்னால், உங்களுக்குள் உள்ள வேறுபாடுகள், மாறுபாடுகள் மறைந்து, உறவு தழைத்து, அது நல்லுறவாக மலர வேண்டும். ஒவ்வொருவரும் தத்தம் வாதத்தை வலியுறுத்தும் போது, அடுத்தப் பக்கமுள்ள நியாயத்தையும் பார்க்க வேண்டும். கவுரவப் பிரச்சினைகளைப் பெரிதுபடுத்தி, அதனால் நடக்க இருக்கும் நல்ல காரியங்களை, கெடுத்துவிடாது பார்த்துக் கொள்ள வேண்டும். உங்களில் ஒருவர் என்ற முறையில், உரிமை எடுத்து உங்களுக்கு இதைச் சொல்லுவதை, பரந்த மனதோடு ஏற்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

நீங்கள் கூறிய கருத்துக்களை எல்லாம் உன்னிப்பாகக் கேட்டேன். இதற்கு முன், உள்துறைச் செயலாளரிடம், நீங்கள் முறையிட்டவற்றையும் கேட்டறிந்தேன். பிரச்சினைகள் என்ன என்று, என்னால் இனம் காண முடிந்தது. அவற்றில் முக்கியமானவை எவை எவை என்று, என்னால் பகுக்கவும் தொகுக்கவும் முடிந்தது. அந்த வகையில், அவற்றிற்கான தீர்வு, இவை இவை எனத் தீர்மானித்து, அறிவிக்க முன் வந்துள்ளேன். அதற்குக் காரணம், இங்கே குழுமியுள்ள இரு தரப்பினரும், எனக்கு அந்த ஒரு சைகையினை நேரடியாகவும், மறைமுகமாகவும் தந்திருக்கிறீர்கள். எனவே, உங்கள் ஒப்புதலோடு, பிரச்சினை தீர்வதற்கு, பின்வருமாறு தீர்வுகளை அறிவிக்கிறேன். சம்பந்தப்பட்ட அனைவரும், ஏற்றுக்கொண்டதாகக் கொண்டு, அவை நிறைவேற்றப்படும்.

திரையுலகில் நிலவி வந்த நெருக்கடி தீர்ந்தது!

விநியோகஸ்தர்கள், தயாரிப்பாளர்கள், நடிகர்கள் மத்தியில் மாண்புமிகு முதல்வர் நடத்திய பேச்சில் உடன்பாடு ஏற்பட்டது!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் நடைபெற்ற திரைப்படத் தொழில் சம்பந்தப்பட்டவர்களின் கூட்டுக் கூட்டத்தில் ஏற்பட்ட உடன்பாட்டின் அம்சங்கள்:

திரைப்படத் தொழிலில் சமீப காலமாக நிலவி வந்த தொழில் முறையிலான கருத்து வேறுபாடுகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு, தீர்த்து வைத்ததன் அடிப்படையில் ஏற்பட்ட உடன்பாட்டின் அம்சங்கள்-

1. கடந்த சில மாதங்களாக, தமிழ்த் திரைப்படத் தொழிலில் ஈடுபட்டிருந்த விநியோகஸ்தர்கள், தயாரிப்பாளர்கள், நடிகர்கள், மற்றவர்கள் மத்தியில், நிலவி வந்த தகராறு தீர்க்கப்பட்டு, தொழிலில் இருந்த தேக்க நிலை, ஸ்தம்பித்த நிலை, இன்று முதல் நீக்கப்பட்டு, இனி முதல் முன்னையக் காலங்களைப் போல், படத் தயாரிப்புகள் தொடங்கப்படும்.

2. இன்றிலிருந்து வெளியிடப்படும் திரைப்படங்களுக்கு, எந்த விதத் தடையும், இடைஞ்சலும் ஏற்படாவண்ணம், பார்த்துக்கொள்ளப்படும். குறிப்பாக, 24.6.1993-இல் வெளியிடப்படும் படத்திற்கும், இது பொருந்தும்.

3. திரைப்படங்களைத் தயாரிக்கும் தயாரிப்பாளர்கள், தம் விருப்பம் போல் படங்களைத் தயாரித்து, வெளியிடும் வர்த்தகச் சுதந்திரத்தை, Freedom of trade பெற்றவர்களாவார்கள். எந்த விநியோகஸ்தருக்கு, என்ன விநியோக முறையில், என்ன விலையில் கொடுப்பது என்று தீர்மானிக்கும் உரிமை, தயாரிப்பாளருக்கு வெகுவாகவே உண்டு. அதே நேரம், விநியோகஸ்தர் ஒப்புக் கொள்ளாவிடில், வியாபாரம் நடக்காது என்பதும் உண்மையே. எனவே, மார்க்கெட் நிலவரத்தை அனுசரித்து, இரு தரப்பினரும் பேசி முடிவு செய்யும் வர்த்தகச் சுதந்திரம், இரு சாராருக்கும் உண்டு.

விநியோக முறையில், தற்சமயம் நடைமுறையில் இருந்து வரும் எதார்த்த முறை, Plain distribution குறைந்த பட்ச உத்தரவாத முறை Minimum guarantee distribution ஒட்டு மொத்த விலை, Outright distribution ஒரு குறிப்பிட்ட காலம் வரை ஓடவிட்டு வாங்கும் முறை, Time space distribution படத்தை போட்டுக் காட்டி விற்கும் முறை, போன்ற பல்வேறு முறைகளில், இரு சாராரும் பேசி, எந்த முறையையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். இருசாராருக்கும் உள்ள, இந்த வர்த்தகச் சுதந்திரத்திற்கு, நேரடியாகவோ, மறைமுகமாகவோ, ஊறு விளைவிக்கும் எந்தச் செயலும், கண்டிப்பாகக் கைவிடப்பட வேண்டும்.

4. தயாரிப்பாளர்கள், நடிகர்கள், திரையரங்கு உரிமையாளர்கள், விநியோகஸ்தர்கள், மத்தியில் ஏற்படும் தகராறுகளுக்கு, விநியோகஸ்தர்கள், பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியில், சிவப்புச் சுற்றறிக்கை, Red Circular - என்ற ஒரு முறையைக் கடைப்பிடித்தது, மற்ற சாராரை வெகுவாகப் பாதிப்பதாக, அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதில் பிரச்சினையும் தீர வேண்டும்; அதற்கெனச் சரியான முறையும் கடைப்பிடிக்கப்பட வேண்டும், என அரசு கருதுகிறது. இந்தச் சிவப்புச் சுற்றறிக்கை முறையை இனிமுதல் கைவிடும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இதற்குப் பதிலாக, இன்று முதல், இத்தொழிலில் ஏற்படும் தகராறுகளை, அந்தந்த மாவட்ட மட்டத்தில் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்றும், அதற்கென மாவட்ட அளவில், ஒரு உயர் மட்டக் குழுவை நியமிப்பது என்றும், அதற்கு அந்த மாவட்டத்தின் ஆட்சித் தலைவர், Collector அல்லது அவரால் நியமிக்கப்பட்ட உயர் அதிகாரி ஒருவர், தலைவராக இருப்பார் என்றும், அதில் தயாரிப்பாளர் பிரதிநிதிகள், விநியோகஸ்தர் பிரதிநிதிகள், திரையரங்கு உரிமையாளர் பிரதிநிதிகள் என, முறையே தலைக்கு இருவரை நியமிப்பது என்றும், அந்த உயர்மட்டக் குழு, பிரச்சினையை 2 மாதத்திற்குள் முடிவு செய்யவேண்டும் என்றும், அந்த முடிவின் மீது மேல் முறையீடு செய்ய வேண்டியிருப்பின், மாநில மட்டத்தில் ஒரு உயர்மட்டக் குழுவை, செய்தித் துறைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு நியமித்து, முத்தரப்பினர் பிரதிநிதிகள், முறையே இருவரை அக்குழுவில் இடம் பெறச் செய்து, பிரச்சினைக்கு முடிவு கட்டலாம் என்றும், அரசு கருதுகிறது. மேல் முறையீட்டை, இக்குழுவும் 2 மாதத்தில் முடிவு செய்ய வேண்டும். மாநில மட்டக் குழுவின் முடிவே இறுதியானதாக இருக்கும். இந்த ஏற்பாட்டைச் சம்பந்தப்பட்டவர்கள் ஏற்க வேண்டும்.

5. விநியோகஸ்தர்களுக்கும், திரையரங்கு உரிமையாளர்களுக்கும் இடையே, 1992-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் ஏற்பட்ட தகராறை ஒட்டி, 11.1.1993-இல் முதலமைச்சரின் அறிவுரையின் பேரில், உள்துறைச் செயலாளர் முன்னிலையில், ஒரு செட்டில் மெண்டு ஏற்பட்டது. குறிப்பாக, திரையிடப்படும் படத்தில் கிடைக்கும் வசூலை, இரு சாராரும் சதவிகித அடிப்படையில், பிரித்துக் கொள்வதற்கான ஒப்பந்தம் தான் அது. அது பரவலாக அமலாக்கப் படுவதாக அறிந்தாலும், அது முழுக்க முழுக்கச் செயல்படவில்லை என்று, அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறத. இன்று முதல், அந்த ஒப்பந்தம் முழுவதுமாக அமல் செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

6. குறைந்த செலவில், அல்லது சிறு முதலீட்டில் தயாரிக்கும் படங்களுக்குச், சலுகை வழங்கி, உற்சாகப் படுத்த வேண்டும் என வலியுறுத்தப் பட்டுள்ளது.

இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின் தான், இப்படங்களுக்கான மானியத்தைப் படத்திற்கு 3 இலட்சம் ரூபாய் என உயர்த்தியது. சலுகை பெறும் படங்களின் எண்ணிக்கையும் 50 என உயர்த்தப்பட்டது. இருப்பினும், இப்போது கூறப்பட்ட கோரிக்கையை, தமிழக அரசு பரிவோடு பரிசீலிக்கும். வரிச் சலுகை, மானியம் வழங்கல் பற்றி, அரசு ஆய்ந்து ஒரு முடிவுக்கு வரும். இதற்கிடையில், இப்போது மானியம் பெறும் குறைந்த முதலீட்டுப் படங்களின் எண்ணிக்கை, 50 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை இன்று முதல், 75 ஆக உயர்த்தப்படும். அதாவது, இன்று முதல் ஆண்டு ஒன்றுக்கு 75 படங்களுக்கு மானியம் Subsidy வழங்கப்படும். இதற்காக ஆண்டுக்கு 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும். சிறு முதலீட்டுப் படங்களுக்காக எடுக்கப்படும் பிரதிகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை இனிமுதல் 12-லிருந்து 6-ஆகக் குறைக்கப்படும்.

7. வேறு மாநிலத்தில் தமிழ்ப் படம் DUB செய்யப்படும்போதும்/ வெளிப்புறக் காட்சிகள் எடுக்கப்படும் போதும், அதிக வரி - கட்டணம் கட்டவேண்டியிருக்கிறது. வேறு மொழிப்படங்களை இங்கே தமிழில் DUB செய்யப்படும் போது, அதிக வரி இங்கே விதிப்பதில்லை. இதனால் இங்கே தமிழில் DUB செய்யப்படும் படம் குறைந்த செலவில் தயாராகி, அதிகம் வெளி வருகிறது. இது குறைந்த முதலீட்டில் தயாரிக்கப்பட்ட தமிழ்ப் படங்களுக்கு, பெரும் போட்டியாக அமைகிறது. எனவே, இன்று முதல், மற்ற மாநிலங்களில் தமிழ்ப் படம் DUB செய்யும்போது வெளிப்புறக் காட்சிகள் எடுக்கும்போது, நிர்ணயிக்கும் அதே அல்லது அதற்கு அதிக

இலக்கியம் என்றால், அது நாகரிகத்தைப் புகட்ட வேண்டும்; மக்களிடம் உயரிய குணங்களைப் புகுத்த வேண்டும்.

- தந்தை பெரியார்

திரு இராசகோபாலன், செல்வி விசாலி கண்ணதாசன் ஆகியோர் கவிதை பாடினார்கள்.

பின்னர் மாலை 7 மணியளவில் தொடங்கிய சிறப்புக் கூட்டத்திற்கு மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தலைமை தாங்கினார். பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு மா.தங்கவேலு, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார்கள். கவியரசர் கண்ணதாசன் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்து மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்கள் விழாப் பேருரையாற்றினார்கள். விழாத்தலைமை வகித்த மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் பேசியதாவது:

'தமிழக முதல்வரின் கட்டளைக் கிணங்க காரை மாநகரில் அரசு சார்பில் உணர்ச்சிமயமாக, கண்ணதாசன் பிறந்தநாள்விழா நடக்கிறது. இந்தவிழா பெருமையைத் தருகிறது என்று மட்டும் கூறவில்லை. இதை நடத்த எங்களுக்கும் தகுதி இருக்கிறது என்று கூறிக்கொள்கிறேன்.

''கடந்த 2 ஆண்டில் எந்த தலைவருக்கும் ஒருநாள் விழா நடந்ததில்லை. மாலை நிகழ்ச்சிகள் நடப்பதோடுசரி. ஆனால், கவியரசரைப் பெருமைப்படுத்த வேண்டும். அவர் அந்தப் பெருமைக்குரியவர், பெருமைப்படுத்தப்படவேண்டியவர் என்ற முதல்வரின் விருப்பத்திற்கிணங்கக் கவியரங்கமும், பட்டிமன்றமுமாக இந்த நிகழ்ச்சி அமைந்திருந்தது. கண்ணதாசன் மணிமண்டபம் முன்பாகச் சிலை அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டது. கண்ணதாசனுக்குச் சிலை அமைக்கும் நிலையில்தான் நாங்களும் இருக்கிறோம். பட்டுக்கோட்டையில் பிறந்து பாட்டுக்கோட்டை அமைத்த கல்யாண சுந்தரத்திற்கு நினைவாலயம், பாரதியார் நினைவு இல்லம் முன்பாக திருவுருவச் சிலை அமைக்க உத்தரவிட்டுக் கவிஞர்களைப் பெருமைப்படுத்தும் முதல்வர் இந்தக் கோரிக்கையையும் ஏற்றுக்கொள்வார். அடுத்த ஆண்டு பிறந்தநாள் விழா நடக்கும்போது சிலை இல்லையே என்ற நிலை இருக்காது.

''கம்பன் , இளங்கோ போன்ற கவிஞர்களுக்குக் கிடைக்காத பெருமை கண்ணதாசனுக்குக் கிடைத்தது என்றால் அவர் பாமரனும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் எளிய நடையில் கவிதைகளை எடுத்துக் கூறியவர். கண்ணதாசன் தன்னம்பிக்கைமிக்க, துணிச்சல் மிக்க கவிஞர். அவரைப்போலவே மொழி வெறி, இன வெறி, ஆதிக்க வெறி போன்றவற்றை துணிச்சலோடு எதிர்க்கிற ஆற்றல் கண்ணதாசனுக்கு விழா எடுத்துள்ள தமிழக முதல் வருக்கும் உண்டு.

20-ஆம் நூற்றாண்டில் தமிழ் வளர்த்த பெருமை கண்ணதாசனுக்கும் உண்டு. இனப்பற்று, மொழிப் பற்றுடன் ஒரு காலத்தில் கண்ணதாசன் பகுத்தறிவுக் கருத்துக்களை பாடினாலும், இன்றளவில் அவரது இறைவனைப் பற்றிய பாடல்களும் மக்கள் மத்தியில் நிலைத்திருக்கின்றன.

அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கி மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு கு.ப.கிருஷ்ணன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்:

''திருச்சியில் உள்ள கலைக்காவேரி என்ற அமைப்பின் மூலம் கண்ணதாசன் எழுதிய 'ஏசு காவியம்' வெளியில் வந்தது என்ற உண்மையைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அ.தி.மு.க. பிரசவ வேதனையில் இருந்தபோது மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர். புதிய வரலாறு படைக்க அதிமுகவை ஆரம்பித்தபோது பலர் ஏளனம் செய்தனர். எள்ளிநகையாடினார்கள். நடக்குமா, நடக்காதா என்று புருவம் நெறித்தனர். ஆனால் எம்.ஜி.ஆரிடம் இருந்து சற்று விலகியே இருந்த கவியரசர் அ.தி.மு.க. மாபெரும் கட்சியாக உருமாறும் என்று கூறினார். அந்தச் சாகாவரம்பெற்ற தெய்வீகக் கவிஞர் கூறியதைப் போலவே இன்று எம்.ஜி.ஆர் அடையாளம் காட்டிய முதல்வர் ஜெயலலிதா அவர்களின் சிறப்பான ஆட்சியில் மக்கள்நல்வாழ்வு பெறுகிறார்கள் என்றால் கண்ணதாசனின் கணிப்பு நூற்றுக்கு நூறு சரியானதே.

கண்ணதாசன் அண்ணாவைப் பற்றிப் பாடியவர் காமராசரைப் பற்றிப் பாடியவர். அரசியல் வாழ்வில் ஒரே இடத்தில்தான் நிலையாக இல்லாதது பற்றிக் கூறும்போது ''ஒரு நிலத்தை உழுது அது அறுவடைக்குத் தயாராக இருக்கும்போது, அதை விட்டுவிட்டுப் புதுக்கரம்பை நிலத்தைப் பயிரிடும் காரியம் எனக் குப்புதிதல்ல'' என்று கூறி இருக்கிறார். காட்டுராஜா சிங்கம் பாட்டு ராஜா கண்ணதாசன் என்று காமராசரையே கவிபாட வைத்த பெருமை கண்ணதாசனுக்கு உண்டு என்று கூறினார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி கற்பகம் இளங்கோ, திரு மா.சா.மா. இராமச்சந்திரன், திரு கரு. முருகானந்தம் மற்றும் கவிஞர் அரு.நாகப்பன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். விழா முடிவில் உதவி இயக்குநர் திரு டி.பி.எஸ். சுந்தரநாதன் அவர்கள் நன்றி கூறினார்.

மாண்புமிகு புரட்சித்தலைவியின் ஆட்சியில் நடந்துள்ள சாதனைகளின் பட்டியல்களில் கவியரசர் கண்ணதாசன் அவர்களுக்கு எடுத்த விழா சாதனைக் கிரீடத்தில் பொறிக்கப்பட்ட ஒரு வைரக்கல் என்றால் அது மிகையல்ல...

ரெ. இராவணன்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம்.

மான வரி - கட்டணம் தமிழ்நாட்டிலும் விதிக்கப்படும் என முடிவு செய்யப்படுகிறது.

8. தமிழ்த் திரைப்படங்களின் வீடியோ, தொலைக்காட்சி உரிமை, இதரத் தொலைத் தொடர்பு விண்வெளி உரிமைகள் போன்றவை, இப்போது பழக்கத்தில் இருக்கும், அதாவது விநியோகஸ்தரிடம் ஒப்படைக்கும், Surrender செய்யும் முறை, தொடர்ந்து நீடிக்கும்.

9. தமிழகத்தில் கணிசமான திரையரங்குகளில், நிர்ணயித்த கட்டணத்திற்கு மேலாக, பல மடங்கு உயர்த்தி, எல்லா டிக்கெட்டுக்கும் ஒரே கட்டணமாக, அதாவது flat rate ஆக, புதுப் படங்களுக்கு அனுமதிப்பதாகவும், அதே நேரம் படம் பார்ப்போரை, நிர்ணயித்த எண்ணிக்கையைவிட, இரண்டு அல்லது மூன்று மடங்கு Over-ஆக அனுமதிப்பதாகவும், அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இது ஒரு மிகப் பெரிய முறைகேடு என்பதோடு, அரசை ஏமாற்றும், அரசுக்கு வர வேண்டிய வருவாயை இழக்கச் செய்யும் குற்றமும் ஆகும். இதை லேசாக விடுவதற்கில்லை. இன்று முதல், இதற்குக் காரணமான திரையரங்குகள், விநியோகஸ்தர்கள், சம்பந்தப்பட்ட அனைவர் மீதும், நடவடிக்கை எடுப்பதோடு, குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும். இந்த முறைகேடு தடுக்கப்படும்; ஒடுக்கப்படும்.

10. தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் ஆகியோருக்கு, ஒரு ஒழுங்கு நெறி, Code of conduct கொண்டு வரவும், ஒரு Licensing system- உரிமம் வழங்கும் திட்டத்தின்கீழ் கொண்டு வருவது குறித்தும் ஆராயப்படும்.

11. தமிழ்த் திரைப் படங்களில் நடக்கும் வீடியோ, கேபிள் டி.வி. திருட்டு செயல்களை, தீவிரமாகத் தடுத்து நிறுத்த, இதற்கென ஒரு தனிக் காவல் படை, Separate cell உருவாக்கப்பட்டு, Video piracy கேபிள் டி.வி. திருட்டுகள், தடுக்கப்படும்.

12. 5 ஆண்டுகளுக்கு முன் வெளியிடப்பட்ட பழைய படங்களுக்கு, எப்படிப்பட்ட வரிச் சலுகை, எத்தகைய உதவி அளிக்கப்பட வேண்டும் என்பது பற்றி, அரசு தனியாகப் பரிசீலித்து முடிவெடுக்கும்.

13. வெளிப்புறப் படப்பிடிப்பிற்கு அனுமதி ஒரே இடத்தில் Single Window Clearance-ஆக வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை, ஏற்கெனவே கொள்கை ரீதியில் ஏற்கப்பட்டுள்ளது- விரைவில் இதற்கான ஆணை பிறப்பிக்கப்படும்.

14. தமிழக அரசு நடத்தும் திரைப்படக் கல்லூரியில் திரைப்படத் தொழிலாளர்கள், கலைஞர்கள், நுணுக்கர்கள் ஆகியோரின் குழந்தைகளுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகித இட ஒதுக்கீடு செய்வது குறித்தும், சலுகைக் கட்டணம் விதிப்பது குறித்தும், அரசு ஆய்ந்து விரைவில் முடிவு எடுக்கும்.

இப்போது அறிவிக்கப்பட்ட 14 அம்சங்களில், திரைப்படத்துறைக்குப் பெருவாரியாக சலுகைகளும், நன்மைகளும் அடங்கியுள்ளன. அதோடு எனது சிறு சிறு வேண்டுகோள்களும் இணைந்து இருக்கின்றன. இவற்றை அனைத்துத் தரப்பினரும் முழுமனதோடு ஏற்றுக்கொண்டு, நடைமுறைப் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரைப்படத்துறையில் எப்போது, எத்தகைய பிரச்சினைகள் எழுந்தாலும், தேவைப்படும்போதெல்லாம் பரிவுடன் கவனித்து அவற்றைச் சுமூகமாகத் தீர்த்து வைக்கும் அரசு இந்த அரசு - உங்களது அரசு என்பதை உங்களுக்கு மீண்டும் நினைவூட்டி, நாளை முதல் திரைப்படத்துறை முன்னைய காலத்தைப்போல் இயங்கத் தொடங்கும், மென்மேலும் வளரும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, இக்கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களுக்கு நினைவு மண்டபம் - புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணை

மறைந்த மாபெரும் கவிஞரும், தமிழ் இலக்கிய உலகிலும், தமிழகத் திரைப்பட உலகிலும் தனக்கென ஒரு தனிப் பாணியை வகுத்துக்கொண்டு, தமிழக மக்களிடம் எழுச்சியை எற்படுத்தியவருமான பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் அவர்களின் நினைவாக ''நினைவு மண்டபம்'' ஒன்றினைப் பட்டுக்கோட்டையில் கட்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

தமிழ் வளர்ச்சிக்கும், தமிழர்களின் முன்னேற்றத்திற்கும், உழைக்கும் தொழிலாளர்களுக்காகவும், குரல் கொடுத்தது மட்டுமன்றி, சமுதாய வளர்ச்சிக் காகப் பாடல்கள் பல எழுதியவரும், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் படங்களில் பிரபலமான பாடல்கள் பல எழுதியவருமான பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் அவர்களின் புகழ் நிலைத்து நிற்கவேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்துடன், பலரது வேண்டுகோளுக்கு இணங்க, இந்த நினைவு மண்டபத்தை அமைக்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர் 'கவியரசர் கண்ணதாசன்' அவர்களுக்குத் தமிழக அரசு சார்பில் அவரது 66-வது பிறந்த நாள் விழா காரைக்குடியில் உள்ள கவியரசர் கண்ணதாசன் மணி மண்டபத்தில் காலை முதல் இரவு வரை நடைபெற்றது. இது ஒரு விழாவாக இல்லாமல் காரைக்குடி மக்கள் கவியரசருக்கு எடுத்த திருவிழா போல் நடந்தது.

27.6.93 அன்று காலையில் கண்ணதாசன் மணிமண்டபத்தில் செய்தி-மக்கள் தொடர்புத்துறை சார்பில் அமைக்கப்பட்டிருந்த கவியரசரின் அரிய புகைப்படக் கண்காட்சியை மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் திறந்துவைத்தார்.

மணிமண்டபம் முழுவதும் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்ற இந்த விழாவின் தொடக்க நிகழ்ச்சியாகப் பட்டிமன்றம் நடந்தது. செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் இணை இயக்குநர் திரு பா. செயப்பிரகாசம் வரவேற்புரையாற்றினார். காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு கே. நாகப்பன் முன்னிலை வகித்துச் சிறப்புரையாற்றினார்.

கவியரசரின் புதல்வர் திரு கண்மணிசுப்பு அவர்கள் 'எங்கள் நெஞ்சில் கவியரசர்' என்ற தலைப்பில் பேசினார். பின்னர் பேராசிரியை டாக்டர் சரஸ்வதி இராமநாதன் தலைமையில் பட்டிமன்றம் நடந்தது. 'கவியரசர் கண்ணதாசனின் விஞ்சிய புகழுக்குக் காரணம் அவரது அற்புதக் கற்பனையே! அனுபவ முத்திரையே! என்ற தலைப்பில் நடந்த பட்டிமன்றத்தில், 'அற்புதக் கற்பனையே' என்ற தலைப்பில் திரு எல்.கே. சுபாஷ்சந்திரபோஸ், திருமதி உமையாள் முத்து, திரு அரங்கநெடுமாறன், திருமதி என். சரசுவதி அவர்களும், அனுபவ முத்திரையே' என்ற தலைப்பில் டாக்டர் சின்னப்பா, திருமதி விசாலாட்சி, டாக்டர் பழ.முத்தப்பன், திருமதி புனிதாஏகாம்பரம் அவர்களும் வாதிட்டார்கள்.

முடிவில் பேராசிரியை டாக்டர் சரஸ்வதி இராமநாதன் அவர்கள் 'கவியரசர் கண்ணதாசனின் விஞ்சிய புகழுக்குக் காரணம் அவரது அனுபவ முத்திரையே' என்று தீர்ப்பு அளித்தார்.

மாலை நிகழ்ச்சியாக, கல்லூரி, பள்ளி மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாலை 5 மணியளவில் 'காலங்களில் நீ வசந்தம்' என்ற தலைப்பின் கீழ் கவியரங்கம் தொடங்கியது. கவியரங்கத்திற்கு, கவிஞர் இளந்தேவன் தலைமை தாங்கினார். கவிஞர்கள் திரு சொ.சொ.மீ. சுந்தரம், திரு சவகர்லால், திரு நா.மீனவன், திரு கரு.நாகராசன்,

AAVIN
NELLAI

THE TIRUNELVELI DISTRICT CO-OPERATIVE MILK PRODUCERS' UNION LTD.
TIRUNELVELI-7.

Integrated Dairy Development Project under
National Co-operative Development Corporation Scheme

Project Cost	Rs.7.05 crores
No. of Societies to be covered under Milk Procurement	651
No. of farmers to be covered under co-operative ambit	8,09,000
No. of Milch animals to be covered	1,05,000
Quantity of Milk to be Procured (Litres per day)	73,600
Quantity of milk to be supplied to the Consumers (Litres per day)	60,000
No. of Societies to be covered under Artificial Insemination	520
No. of Societies to be covered under Animal Health	651

Dr. R. Solomon
Managing Director

R. Velu, I.A.S.,
Distrit Collector/Chairman

கண் மருத்துவம்

பதில்கள்:
டாக்டர் வி.எம். லோகநாதன்
இயக்குநர்
அரசு பொது கண் மருத்துவமனை
சென்னை

க. சுப்பிரமணியன்
சென்னை-21.

★ மூன்றரை வயதுள்ள என் மகள் கண்களில் அடிக்கடி கண்ணீர் கசிகிறது; வெய்யிலால் கண் கூசுகிறது என்கிறாள்; ஏன் இப்படி? என்ன செய்யலாம் டாக்டர்?

"கண்ணீர்ப் பையில் அல்லது கண்ணுக்கு வரும் நாளத்தில் அடைப்பு ஏற்பட்டிருந்தால் இவ்வாறான குறைநேரக்கூடும்; அறுவைச் சிகிச்சை மூலம் அதைக் குணமாக்கி விடலாம். பயப்படத் தேவையில்லை."

வி.எம். ஸ்ரீதர்
அருப்புக்கோட்டை

★ கண் நோய் என்பது தொத்து நோயா?

"எல்லாமே தொத்தக்கூடிய நோய்கள் அல்ல; கண்வலி, 'மெட்ராஸ் ஐ' ஆகியவை தொத்தும் தன்மை உள்ளவை; 'காட்ராக்ட்' போன்றவை அவ்வாறல்ல."

ப. தென்னரசு
அறச்சலூர்

★ பஸ், ரயில் பயணங்களின்போது படிப்பதால் கண்ணுக்கு ஆபத்து வருமா?

"அப்படியொன்றுமில்லை; படிக்க முடிகிறதென்றால் தாராளமாகப் படிக்கலாம். பார்வைக்கோ, கண்ணுக்கோ அதனால் கெடுதல் இல்லை."

பெ. மாணிக்கம்
சேலம்

★ கண்ணில் ஏராளமாகத் தூசுகள் விழக்கூடிய தூழ்நிலையில் நான் வேலை செய்கிறேன். கண்ணைப் பாதுகாக்கவும் கத்தமாக வைத்திருக்கவும் வழி சொல்லுங்கள் டாக்டர்?

"உங்கள் வசதிப்படி 'பவர்' இல்லாத கண்ணாடியொன்று அணிந்துகொள்ளுங்கள் முதலில்; அதன்பிறகு ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று தடவை நன்றாக முகத்தைக் கழுவுங்கள் - போதும்."

பி.டி. அரசு
வெள்ளங்கிரிபுதூர்

★ சிரசாசனம் செய்வது கண்ணுக்கு நல்லதா, கெடுதலா?

"இரண்டுமே இல்லை. அது ஒரு நல்ல உடற்பயிற்சிதான். ஆனால் அப்படிச் செய்யத் தொடங்கு முன்பாக, உங்கள் உடலில் வேறு ஏதும் நோய் இல்லாதிருக்கிறதா என்று டாக்டரிடம் பரிசோதித்துக் கொள்வது நல்லது. ஏனென்றால், ஏதாவது நோய்க்கு நீங்கள் ஆளாகியிருக்கும் பட்சத்தில் சிரசாசனம் செய்தால் அந்நோய் அதிகரிக்கவும் வாய்ப்புண்டு."

★ கண்ணையும், படிப்பையும் ஒப்பிட்டுத் திருவள்ளுவர் கூறியிருப்பது பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் டாக்டர்?

★ "உலகப் பொதுமறை எழுதிய அவர் குறளில் ஒரு குறையும் இல்லை. உடலில் மிகவும் சிறிய பாகமாகக் கண் இருந்தாலும் அது மிகமிக முக்கிய உறுப்பாகக் கருதப்படுகிறது. கண்ணில்லாவிட்டால் உலகமே இருண்டு போகிறதல்லவா? கல்வியும் அப்படி முக்கியம் என்று கூறியிருக்கிறார் வள்ளுவர். இதனால் தான் - படிக்காதவர் கண்களைப் புண் என்று அவர் இழித்துரைக்கிறார். இதில் ஒருதவறும் இல்லையே!

எம். சுந்தர்ராஜன்
ஜோலார்பேட்டை

★ எந்தக் குறையால் ஒருவருக்கு மாலைக் கண் வியாதி ஏற்படுகிறது?

எங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

இங்ஙனம்
அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கம்
சிதம்பரம்

"Sow the seeds of Khadi & Village Industries:
Grow with Co-operative Movement towards Healthy & Wealthy Nation!"

For the best Quality and Prompt supply of all
Wooden and steel articles please contact:

Kallakurichi Carpentary, Blacksmithy,
Slate and Allied Educational Products
Producers Industrial Co-operative Society Limited

(Unit of Khadi & Village Industries Board)
26-A, Gandhi Road, Kallakurichi 606 202



முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி

நலிவுற்ற திருக்கோயில்களில் ஒரு காலப் பூசையாவது நடக்க வேண்டும் என மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டு அதைச் செயல்முறைப் படுத்தத் திட்டங்களை வகுத்து வருகின்றார். அதன் அடிப்படையில், அப்பகுதிகளிலுள்ள ஊர்ப் பொதுமக்களும், உபயதாரர்களும் தாமாக முன் வந்து ரூ.25,000 நன்கொடையாக செலுத்தினால், அத்தொகையை வைத்து ஒரு வைப்பு நிதி ஏற்படுத்தி அதனிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு ஒரு காலப் பூசை நடத்தப் பயன்படுத்தப் படும். இவ்வாறு ரூ.25,000 நன்கொடை கொடுக்க முடியாத சூழ்நிலையில் ரூ.12,500 நன்கொடையாகச் செலுத்தினால் அரசின் பங்காக முதலமைச்சர் திருக்கோயில் திருப் பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.12,500 வழங்கி ஆக மொத்தம் ரூ.25,000 வைப்பு நிதியாக ஏற்படுத்தி அதனிலிருந்து கிடைக்கும் வட்டியை ஒரு காலப் பூசை தொடர்ந்து நடைபெற பயன்படுத்த ஆணையிட்டுள்ளார்.

அதன் அடிப்படையில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கீழ்க்கண்ட 10 திருக்கோயில்கள் ஒவ்வொன்றிற்கும் தலா ரூ.12,500 வீதம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திருக்கோயில், திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.1,25,000 வழங்க உத்தர விட்டுள்ளார்.

1. அருள்மிகு சீனிவாசப் பெருமாள் மற்றும் காசி விஸ்வநாதர் திருக்கோயில், கல்யாணபுரம், திருவையாறு வட்டம்.

2. அருள்மிகு சீனிவாசப்பெருமாள் மற்றும் விநாயகர் திருக்கோயில், புதூர், பாபநாசம் வட்டம்.

3. அருள்மிகு கோதண்டராமசாமி திருக்கோயில், முடிகொண்டான், நன்னிலம் வட்டம்.

4. அருள்மிகு வரதராஜப்பெருமாள்திருக்கோயில், இடையாத்தான்குடி, நன்னிலம் வட்டம்.

5. அருள்மிகு சாமுண்டீஸ்வரி திருக்கோயில், இடையாத்தான்குடி, நன்னிலம் வட்டம்.

6. அருள்மிகு காசிவிஸ்வநாதர் பாலதண்டாயுத பாணி திருக்கோயில், ஆப்பக்கூடல் பவானி வட்டம்.

7. அருள்மிகு ஆதிநாராயணப்பெருமாள் திருக் கோயில், ஆதியர், பெருந்துறை வட்டம்.

8. அருள்மிகு ஆதீஸ்வரர் திருக்கோயில், ஆதிநூர், பெருந்துறை வட்டம்.

9. அருள்மிகு பிள்ளையார் அம்மசார் தர்மராஜர் வகையறா திருக்கோயில், மேல்கரிப்பூர், செங்கம் வட்டம்.

10. அருள்மிகு மாணிக்க விநாயகர் திருக்கோயில், வடமாத்தூர், செங்கம் வட்டம்.

மேற்கண்ட திருக்கோயில்களும் அதனுடைய பங்காக ரூ.12,500 நன்கொடையாக அளித் துள்ளன. ஆக மொத்தம் ரூ.25,000 கொண்டு மேற்கொண்ட ஒவ்வொரு திருக்கோயில்களும் ஒரு காலப் பூசையினைச் சிறப்பாக நடத்தும்.

16 தேர்வுநிலைப் பேரூராட்சிகள் சிறப்புநிலைப் பேரூராட்சிகளாக உயர்வு

சுற்றுலா, தொழில்கள், வர்த் தகம் முதலிய துறைகளில் மிகச் சிறந்த வாய்ப்புகள் உள்ள 16 தேர்வு நிலைப் பேரூராட்சிகளைச் சிறப்பு நிலைப் பேரூராட்சிகளாக உயர்த்தி, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

அவை பின்வருமாறு: பூவிருந்த வல்லி, பம்மல், தேர்வுநிலை நகரியம் திருவேற்காடு (செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம்), கள்ளக் குறிச்சி (தென்னார்க்காடு மாவட்டம்), சத்துவாச்சாரி (வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம்), வீரப்பன் சத்திரம், கிழக்கு காசிபாளையம் (பெரியார் மாவட்டம்), கோத்தகிரி (நீலகிரி மாவட்டம்), குறுச்சி, குனிய முத்தூர் (கோயமுத்தூர் மாவட்டம்), இனாம்கரூர், கே.அபிஷேகபுரம் (திருச்சி மாவட்டம்), திருப்பரங் குன்றம் (மதுரை மாவட்டம்), ஒட்டன்சத்திரம் (திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்), வடக்கு வள்ளியூர் (திருநெல்வேலி-கட்ட பொம்மன் மாவட்டம்), திருச் செந்தூர் (சிதம்பரனார் மாவட்டம்).

இந்தப் பேரூராட்சிகளின் ஆண்டு வருவாய் ரூ.20 இலட்சத் திற்கு அதிகமாகவும் மக்கள் தொகை 10,000-க்கு மேல் கொண்ட தாகவும் உள்ளன.

"இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. முதல் காரணம் - குழந்தைகளைப் பொறுத்தவரை 'ஏ' சத்து உடலில் குறைவாக இருந்தால் இது வரும்; அந்தச் சத்துள்ள உணவுப் பொருட்களை உண்டு வந்தாலே இதற்குப் போதுமானது. இரண்டாவது காரணம் - குழந்தையானாலும், பெரியவரானாலும், வயிற்றுப்போக்கு ஆகிறபோது 'ஏ' சத்தானது குடலிலிருந்து உறிஞ்சப் படுவதில்லை. இதனால் - கருவிழியும், விழித்திரையும் பாதிக்கப்பட்டு மாலைக் கண்நோய் வரும்."

வி. சுலோசனா
சுண்டக்காம்பாளையம்

★ கண்ணில் 'காண்டாக்ட் லென்ஸ்' பொருத்திக் கொள்ளுவது நல்லதா?

"நல்லதுதான். ஆனால், அதற்கான காரணங்கள் சரியாக இருக்க வேண்டும். ஒரு கண்ணில் நல்ல பார்வை இருந்து மறு கண்ணில் பார்வைக் குறைவு ஏற்பட்டிருந்தால்-குறையுள்ள கண்ணில் மட்டுமே பொருத்திக் கொள்ளலாம். இரு விழிகளிலும் பிளஸ் பவரோ, மைனஸ் பவரோ அதிகமாயிருந்தாலும் கூட 'காண்டாக்ட் லென்ஸ்' பொருத்திக் கொள்ளலாம்; தவறில்லை. வெளிநாடுகளிலெல்லாம் உடைக்கேற்ற நிறத்தில் காண்டாக்ட் லென்ஸ் போட ஆரம்பித்து விட்டார்கள்; நல்லவேலையாக இன்னும் அந்தப் பழக்கம் நம் நாட்டுக்கு வரவில்லை!"

ஆர். மூர்த்தி
மண்டபம்

★ புத்தகத்தையோ, தொலைக்காட்சியையோ நீண்டநேரம் பார்த்துக் கொண்டிருந்த பிறகு, உடனே மற்றவற்றைப் பார்த்தால் எனக்குத் தெளிவாகத் தெரிவதில்லை; இது ஏன் டாக்டர்?

"உங்களுக்கு மட்டுமல்ல, எல்லோருடைய பார்வையுமே அது போன்ற நிலையில் அப்படித்தான் இருக்கும். இதற்கு After Image என்று பெயர். நீண்டநேரம் தெளிவான பொருளையே பார்த்தோமானால் கண் பாப்பாவானது சற்றே விரிவடைந்திருக்கும். பிறகு. உடனடியாக நாம் பார்க்கும் அடுத்த பொருள் சிறிது நேரத்திற்குத் தெளிவாகத் தெரியாதுதான். இது இயற்கை. இது கெடுதலின் அறிகுறி இல்லை".

எல். மாணிக்கவாசகம்
சங்கரன்கோயில்

★ கிட்டப் பார்வை - தூரப் பார்வை என்றால் என்ன டாக்டர்?

"இரண்டுமே கண்ணாடி போட வேண்டிய நிலைதான். இந்தக் கட்டுரையில் உள்ள வரைபடத்தைக் கவனமாகப் பாருங்கள்; உங்களுக்குத் தெளிவான விடை கிடைக்கும்".

தி. முருகேசன்
ஆணைக்குப்பம்

★ வெளியில் சென்றால் நிறம் மாறும் கண்ணாடி போட்டுக் கொள்ளுவதால் கண்ணுக்குத் கெடுதலா?

"நன்மையும் இல்லை. தீமையும் இல்லை. நன்றாகப் பரிசோதித்துப் போட்டுக் கொள்ள வேண்டும் - அவ்வளவு தான்".

எஸ். அப்துல் ரஃபிக்
சின்னசேலம்

★ கண்ணீர் உப்புக் கரிக்கிறது ஏன் டாக்டர்?

"கண்ணீர் மட்டுமல்ல; நம்முடைய இரத்தத்திலிருந்து பிரியும் எந்த நீருமே கரிப்பாகத்தான் இருக்கும். வியர்வை, சிறுநீர் ஆகியவை இதற்கு உதாரணம்.

இரா. சிவகுகன்
பட்டுக்கோட்டை

★ பகல்-இரவு எப்போதும் சிலர் கூலிங் கிளாஸ் அணிவது பார்வைக்குக் கெடுதல் இல்லையோ?

"பழக்கம்தான் அதற்குக் காரணம்; அதனால் கெடுதலோ நன்மையோ எதுவும் கிடையாது."

க. அருணாசலம்
பழநி

★ எனக்கு வயது 33. கண்களின் முன்னால் எப்போதாவது கொசுக்கள் கூட்டமாகப் பறப்பதுபோல் தெரிகிறது. இது ஏன்?

"மருத்துவத் துறையில் இந்தத் தன்மையானது Muscal என்று குறிப்பிடப்படும். எதற்கும் கண் டாக்டரிடம் தீவிரப் பரிசோதனை செய்து கொள் ளுங்கள். இதற்கு நோய் காரணமாகவும் இருக்கலாம் - அப்படி இல்லாமலும் இருக்கலாம்; பரிசோதிக்காமல் பதில் சொல்ல இயலாது.

எம்.எஸ். ராஜன்
ஜோலார்ப்பேட்டை

★ எனக்குக் கண்ணிமைகளில் அடிக்கடி கட்டி வருகிறதே, ஏன்?

"சிறியவர்களுக்குக் கண்ணாடி போடவேண்டிய நிலைமை இருந்து, போடாமலிருப்பதால் அப்படி வரக் கூடும். இது Eystain எனப்படும். பெரியவர்களுக்கு அதுபோல் வர, சர்க்கரைநோயும் காரணமாக இருக்கக் கூடும்."

★ மார்க்கெட்டில் விதம் விதமான கூலிங்கிளாஸ்கள் மலிவாக விற்கப் படுகின்றன; அதில் நல்லதைத் தேர்ந்தெடுப்பது எப்படி?

"விலை மலிவாக இருக்கிறது என்று பார்ப்பீர்களானால் விலை மதிப்பற்ற உங்கள் பார்வைக்கு ஆபத்து வந்து விடும்; கண் டாக்டர் பரிசோதித்த பின், அவர் குறிப்பிடுகிறபடி போட்டுக்கொள்ளுவதே நல்லது."

ஆர். கனகராஜ்
அந்தியூர்

★ நான், ஆறு மாதங்களுக்கு முன்பு வலது கண்ணில் ஏற்பட்ட பார்வைக் குறைவு காரணமாக 'காண்டாக்ட் லென்ஸ்' போட்டுக் கொண்டேன். ஆனாலும், இடது கண் அளவிற்குப் பார்வைத் தெளிவில்லை. இது ஏன்?

"அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட உங்கள் வலது கண்ணில் - விழித்திரையில் பார்வை படும் இடத்தில் ஏதாவது கோளாறு இருக்கக்கூடும். திறமையான கண் டாக்டரை அணுகிப் பரிசோதித்துக் கொள்ளுங்கள்".

- தொகுப்பு: பி.எல்.ஆர்.



படம்-1

சாதாரண நிலையில், தூரப்பார்வையின்போது, விழித் திரையில் பார்வை சரியாக விழுவதைக் காட்டும் படம்.



படம்-2

புத்தகம் படிக்க அருகே பார்க்கையில் அல்லது எழுதுகையில் லென்சானது விரிந்து, தனது ஒளித்திறனைக் (Power) கூட்டி, பார்வையை வழித்திரையில் விழச் செய்கிறது.



படம்-3

40 வயது முதல், லென்ஸ் தனது கிட்டப் பார்வையின் போது ஒளியை அதிகரிக்கும் தன்மையை இழப்பதால், பார்வையானது விழித்திரையின் பின்னால் விழ, உருவங்கள் சரியாகத் தெரியாது.



படம்-4

இவ்வாறான குறையை (40 வயதிற்கு மேல்) கண்ணாடி அணிவதன் மூலம் நிவர்த்தி செய்து விடலாம்.

பயிற்சிக் கால உதவித் தொகை அதிகரிப்பு

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினைச் சேர்ந்த சட்ட பட்டதாரிகளுக்கு நீதித்துறை நிர்வாகத்தில் மூத்த மற்றும் பிரபல வழக்கறிஞர்களுடன் மூன்று ஆண்டுகள் பயிற்சி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் பயிற்சி பெறும் சட்டம் பயின்ற பட்டதாரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500 பயிற்சிக் கால உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. தற்போது பயிற்சி பெறும் மாணவர்கள் இந்த பயிற்சிக் கால உதவித் தொகையை உயர்த்த வேண்டுமென்று பலமுறை கோரிக்கை மனுக்களைக் கொடுத்து வந்துள்ளார்கள்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அவர்களது வேண்டுகோளை கனிவுடன் பரிசீலித்து அவர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் பயிற்சி உதவித்தொகை ரூ.500- ஐ உயர்த்தி ரூ.750 ஆக வழங்க வேண்டும் என ஆணையிட்டுள்ளார்.

அண்ணா விருது பெற்றவருக்கு அரசு வேலை!

ஒவ்வொரு ஆண்டும் தீரச் செயல் புரிந்தவர்களுக்கு 'அண்ணா விருது' குடியரசுத் தின விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டும் குடியரசுத் தின விழாவில் வட ஆர்காடு-அம்பேத்கர் மாவட்டம், திருப்பத்தூர் தாலுக்கா, காக்கன்கரை கிராமத்தைச் சேர்ந்த திரு கே.எஸ். குமார் என்பவருக்குத் தீரச் செயல்புரிந்தவர்களுக்கான 'அண்ணா விருது' மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் திருக்கரத்தால் 26.1.93 அன்று வழங்கப்பட்டது.

திரு கே.எஸ். குமார் ஒரு சாலை விபத்திலிருந்து சிறிய பெண்ணைக் காப்பாற்றியபொழுது அவருடைய கால் துண்டிக்கப்பட்டு அவர் ஊனமாக வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தத் தீரச்செயல்களுக்காக வீர விருது பெற்ற திரு கே.எஸ். குமார் அவர்கள் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் தனக்கு ஒரு நிரந்தர வேலை வேண்டும் என விண்ணப்பித்திருந்தார்.

திரு கே.எஸ். குமாரின் கோரிக்கையைக் கருணையுடன் பரிசீலித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவருக்குப் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தில் உதவியாளராகப் பணி நியமனம் செய்ய உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சரின் துணைவியாருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி

• தமிழ்நாட்டில் 1946 முதல் 1957 வரை தமிழகச் சட்டமன்ற உறுப்பினராகவும், தமிழக அமைச்சரவையில் பல்வேறு துறைகளில் அமைச்சராகவும், 1953 முதல் 1954 வரை சென்னை நகர மேயராகவும், 1956 முதல் 1962 வரை பாராளுமன்ற உறுப்பினர் ஆகவும் செயலாற்றி வந்த திரு பரமேஸ்வரன் அவர்கள் 1966-ஆம் ஆண்டில் காலமானார். திரு பரமேஸ்வரன் அவர்களின் துணைவியார் திருமதி சாரதா பரமேஸ்வரன் (70 வயது) அவர்கள் பூந்தமல்லியில் உள்ள ஒரு அனாதை இல்லத்தில் 8 ஆண்டுகள் மேலாளராகப் பணியாற்றி, தற்போது மேலும் பணியாற்ற இயலாத காரணத்தால் பணியிலிருந்து விலகிவிட்டார்.

வயது முதிர்ச்சியால், உடல்நிலை பாதிக்கப்பட்ட திருமதி சாரதா பரமேஸ்வரன் அவர்கள், மத்திய, மாநில அரசுகள் மூலம் எவ்வித உதவிப் பணமும் இதுவரை கிடைக்கப்பெறாத நிலையில், தனது வறுமை நிலையை விளக்கி, மருத்துவச் செலவிற்காக நிதி உதவி கோரி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் மனு ஒன்றினைச் சமர்ப்பித்திருந்தார்.

அவரது கோரிக்கை மனுவினைப் பரிவுடன் பரிசீலித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1,00,000-ஐ (ரூபாய் ஒரு இலட்சம்) உடனடியாக திருமதி சாரதா பரமேஸ்வரன் அவர்களுக்கு வழங்கிட ஆணையிட்டுள்ளார்.

TNPSC

விளம்பர எண். 27/93

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

அகில இந்திய பணிகள் மற்றும் மாநிலப் பணிகளைச் சேர்ந்த அலுவலர்களுக்கான அரையாண்டு மற்றும் மொழித் தேர்வுகள் - செப்டம்பர் 1993

அகில இந்தியப் பணிகள் (ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ்.) மற்றும் தமிழ்நாடு மாநிலப் பணிகளைச் சார்ந்துள்ள சில வகைப் பிரிவு அலுவலர்களுக்கான (Certain Classes of Officers) அரையாண்டு மற்றும் மொழித் தேர்வு, இவ்வாணையத்தினால் 2.9.93 முதல் நடத்தப்படும். இத் தேர்வுக்கான விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தில் வந்து சேர வேண்டிய கடைசித் தேதி 11.8.93 ஆகும். விண்ணப்பப் படிவத்தையும் சம்பந்தப்பட்ட விவரங்களையும், தேர்வுக்கட்டுப்பாடு அலுவலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002 அவர்களிடமிருந்து எழுத்து மூலம் விண்ணப்பித்துக் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்புகள்: 1. மேற்குறிப்பிட்டுள்ள பணிகளில் தற்போது பணியில் இருப்போருக்கு மட்டுமே இத்தேர்வுகள் உரியதாகும்.

2. இத்தேர்வுகளுடன் நடத்தப்பெறும் தமிழ்மொழி உயர்நிலைத் தேர்வே மற்ற மாநிலங்களைச் சார்ந்த அகில இந்தியப் பணிகளில் பணிபுரியும் அலுவலர்களுக்கான ரூ.1,000 ரொக்கப் பரிசளிப்புத் திட்டத்தின் கீழான 'தமிழ்ப்புலமைத் தேர்வும்' ஆகும். இத்தேர்வு எழுத விரும்பும் அலுவலர்கள் பத்தாண்டுப் பணிக்காலம் பூர்த்தி செய்யாதவர்களாயிருத்தல் வேண்டும். தேர்வு எழுத விரும்புவோர் அவர்களது விண்ணப்பம் 11.8.93-க்குள் தேர்வாணையத்திற்கு வந்து சேரும்படி தங்கள் மாநில அரசாங்கத்தின் தலைமைச் செயலர் வாயிலாக, தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர், சென்னை-600 009 அவர்களுக்கு விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும்.

DIPR/1204/MS/93

TNPSC

விளம்பர எண். 28/93

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தமிழ்ப்புலமைத் தேர்வு - செப்டம்பர் 1993

1993-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13-ஆம் தேதியன்று ஆறு ஆண்டுகள் பணிநிறைவு பெறாமலும், பள்ளி இறுதி வகுப்பிலோ, பட்டப் படிப்பிலோ தமிழை ஒரு பாடமாக எடுக்காமலும் அல்லது தமிழில் எந்தத் தேர்விலும் தேர்ச்சி பெறாமலும் உள்ள தமிழ்நாடு பிரிவைச் சார்ந்த தாய்மொழி தமிழ் அல்லாத அகில இந்தியப் பணிகள் (ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். மற்றும் ஐ.எப்.எஸ்.) அலுவலர்களுக்கான தமிழ்ப்புலமைத் தேர்வு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் அதன் அலுவலகத்தில் 1993-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13 மற்றும் 14-ஆம் தேதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது. இத்தேர்வில் தேர்ச்சி பெறுபவர்கள் ரூ.1,000 ரொக்கப் பரிசாகப் பெறத்தகுதி பெற்றவர்களாவார்கள். இத் தேர்வுக்கான விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தில் வந்து சேர வேண்டிய கடைசித் தேதி 16.8.93 மாலை மணி 5.45 ஆகும். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். மற்றும் ஐ.எப்.எஸ் அலுவலர் அல்லாதவர்கள் இத்தேர்வு எழுதத் தகுதியற்றவர்கள் ஆவர். விண்ணப்பப் படிவம் தேர்வுக்கட்டுப்பாடு அலுவலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002 அவர்களிடமிருந்து எழுத்து மூலம் விண்ணப்பித்துப் பெறலாம்.

DIPR/1205/MS/93

எங்கள் இனிய நல்வாழ்த்துக்கள்



M.K.M. ஜியாவுதீன்
தலைவர்: விழுப்புரம் வர்த்தகர் சங்கம்
விழுப்புரம்

S. கலைச் செல்வன்
செயலாளர்: விழுப்புரம் வர்த்தகர் சங்கம்
விழுப்புரம்

A.R. மாதவன், பி.எஸ்ஸி.,
பொருளாளர்: விழுப்புரம் வர்த்தகர் சங்கம்
விழுப்புரம்

நூல் நயம்

கீதை சாரம்

ஆசிரியர்: மகாத்மா காந்தி
வெளியீடு:
காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை-625 020.

பக்கம்:51 விலை:ரூ.5/-

வேதவியாசர் அருளிய கீதை ஒரு அரிய நூல். 'கீதை என் தாய்' என்றார் அண்ணல் காந்தியடிகள்.

நம் நாட்டின் சிறந்த உபநிடதமான கீதை, எல்லோருமே படிக்க வேண்டிய ஒரு நூலாகும். இதனை எளிதில் படித்துத் தெரிந்து கொள்ளும் வகையிலே, இதன் சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பெரியவர்கள், இளைஞர்கள் எல்லோருமே படித்துப் பயன்பெற வேண்டிய நல்லுரைகள் நிறைந்த நூல்.

- பி.வி. கிரி.

மாமன்னன் பூலித்தேவன்

ஆசிரியர்: ந. இராசையா
வெளியீடு:
ஞானமுருகன் எழுத்தகம்,
3-97, அயன் கொல்லங் கொண்டான்
காமராசர் மாவட்டம்-626 142.

பக்கம்:187 விலை:ரூ.45/-

"**மா**மன்னன் பூலித்தேவன் என்பான் நெற்கட்டான் செவ்வல் பாளையக்காரன். இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றை 1750-இல் இருந்தே தொடங்கியவன். 1755-இல் விடுதலை வித்தையும் ஊன்றியவன்..." என்கிற கருத்தைத் தகுந்த ஆதாரங்களுடன் நிறுவியிருக்கிறார் ஆசிரியர். 'வெள்ளையனே வெளியேறு' என்று முதல் முழக்கமிட்டவன் பூலித்தேவன் என்பதைத் தம் ஆழ்ந்த ஆராய்ச்சியின் மூலம் கோடிட்டுக் காட்டுகிறார் அவர்.

ஒரு விடுதலைப் போராட்ட வீரனின் வீரவரலாற்றைப் பகுத்தும் தொகுத்தும் தக்க சான்றுகளுடன் தருகிறார் ஆசிரியர். நூலாசிரியரின் உழைப்பும் உறுதியும் இந்நூலில் நன்கு வெளிப்படுகிறது. தகுந்த விளக்கப்படங்களும் உள்ளன. ஆராய்ச்சி நோக்குடைய இளைஞர்கள் இந்நூலைப் படிக்க வேண்டும்.

சாலை விதிமுறையும் விபத்து தடுப்பும்

ஆசிரியர்: தூரியநாத்
வெளியீடு:
தமிழ்மணி பதிப்பகம்,
107-ஏ, பெரியார் பாதை (மேற்கு)
தூளைமேடு, சென்னை-94..

பக்கம்:112 விலை:ரூ.15/-

ஆங்காங்கே சாலை விபத்துக்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இதற்கெல்லாம் காரணம், சாலை விதிமுறைகளைக் கடைப்பிடிக்காததேயாகும். இதை உணர்ந்து நாம் செயல்பட்டால், சாலை விபத்துக்களிலிருந்து நாம் விடுபடலாம் என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது இந்நூல்.

சாலைப் பாதுகாப்பு விதிமுறைகள், பாதசாரிகள், வாகனம் ஓட்டுநர்கள் ஆகியோர் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. சாலைப் போக்குவரத்துத் தொடர்பான ஏராளமான தகவல்களும், அதற்கான விளக்கப் படங்களும் உள்ளன.

-பி.வி.ஜி.

கிறிஸ்தவத் தமிழ் நாடகங்கள்

ஆசிரியர்: பெ. கோவிந்தசாமி
வெளியீடு:
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
பார்க்டவுன்,
சென்னை-600 003.

பக்கம்:232 விலை:ரூ.50/-

தமிழ் நாடகக் கலை வரலாற்றில் கிறிஸ்தவர்களுக்கும் பெரும் பங்குண்டு என்பதைச் சித்திரிக்கிறது இந்நூல். இந்நூலாசிரியர், கிறிஸ்தவத் தமிழ் நாடகங்கள் குறித்து சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றவர்.

கிறிஸ்தவத் தமிழ் நாடகத்தின் தோற்றம்- வளர்ச்சி, கிறிஸ்தவத் தமிழ் நாடக- இனங்கள், கிறிஸ்தவத் தமிழ் நாடகங்களின் பாடு பொருள், அதன் அமைப்பு ஆகியவை குறித்து ஆய்வுகள் அழகுறத் தொகுக்கப் பெற்றுள்ளன. நூலாசிரியரின் உழைப்பும், நாடக ஆர்வமும் பளிச்செனத் தெரிகிறது.

> உங்களை நீங்கள் அறிந்துகொள்ள புத்தகம் மற்றவர்களை நீங்கள் புரிந்து கொள்ளும்படி செய்ய வல்லவை; அது போலவே, உங்களை நீங்களே அறிந்து கொள்ளவும் செய்யும்.
>
> - எட்வர்ட் பிரேக்கர்

'நமக்குள் எத்தனை நல்லவர்கள்?'

ஆசிரியர்: சக்தி. விஜயலட்சுமி உத்ராபதி
வெளியீடு:
செந்தில் பதிப்பகம்,
10, பொன்னுசாமி தெரு,
இராயப்பேட்டை, சென்னை-14.

பக்கம்:87 விலை:ரூ.12/-

காந்தியும், பாரதியும் தன்னை மிகவும் பாதித்து, தன் வாழ்க்கைப் பாதையை மாற்றியமைத்ததாக எழுதத் தொடங்கியதும், இது சுயசரிதையோ என ஐயப்பாடு எழுந்தது. இல்லை; சத்தியம், உழைப்பு, வெற்றிக்கு வழி, மனித தர்மம் என்று மிகவிரிவாகக் கூறி, இவற்றிற்கெல்லாம் உதாரணமாக நம்மிடையே வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கிற மாமனிதர்களையும், நல்லவர்களையும் அடையாளம் காட்டுகிறார் ஆசிரியர். நம் எண்ணங்கள், செயல்களுக்கு மெருகேற்றிக் கொள்ள உதவும் நூல், இது.

வெண்மை போர்த்தியது

ஆசிரியர்: காவேரி
வெளியீடு:
காவ்யா
16,17 இ. கிராஸ்
இந்திரா நகர், பெங்களூர்-560 038.

பக்கம்:189 விலை:ரூ.25/-

சிறுகதைகளும் நெடுங்கதைகளும் அடங்கிய தொகுப்பு.

கதைகளுக்கு எடுத்துக் கொண்டிருக்கும், கரு, இடம், கதையில் வரும் மனிதர்கள், பெண்கள் எல்லாமே வித்தியாசமானவர்கள், விபரீதமானவர்கள்.

வித்தியாசமான நடையில் கதை சொல்லப்பட்டிருக்கிறது. இதை கதை என்பதைவிட, ஆசிரியரின் அனுபவம் என்றே சொல்லத் தோன்றுகிறது. நீளமாக விவரிப்பதைச் சுருக்கி இருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

—குமார்

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள் வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

இந்த இதழில்...

சுதந்திரத் திருநாட்டின் பெயரையும் புகழையும் என்றென்றும் நிலைநாட்டுவோம்!

-மாண்புமிகு முதல்வர் உரை ... 2
சென்னையில் செயற்கை மழை ... 9
நெல்லை மாவட்டச் சுதந்திரச் சுடர்மணிகள் ... 11
'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின் வீர வரலாறு ... 15
பேரூராட்சிகளின் பெரும்பணிகள் ... 17
மகளிர் நலனில் மகத்தான பணிகள் ... 21
இதன் வயது - 100 ... 24
நெல்லையில் நெல்குவிக்கும் சகோதரர்கள் ... 27
மக்கள் நல்வாழ்வில் மருத்துவமனையின் பங்கு ... 29
களிமண்ணில் கைவண்ணம் ... 31
பெரியார் மாவட்டத்தில் அறிவொளி இயக்கம் ... 33
நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டத்தில் -பாசன வாய்க்கால் தூர்வாரும் பணிகள் ... 35
வெறிநாய்க்கடி ... 37
மாணவர் பக்கம் ... 40
அமரர் ப. ஜீவானந்தம் — கவிதை ... 43
எழில்மிகு குற்றாலத்தில் ஏற்றமிகு சாரல் விழா ... 44
கண் மருத்துவம் —டாக்டர் பதில்கள் ... 46
நூல் நயம் ... 48

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

ஆடித் திங்கள் - 32
மலர்:24 இதழ்:4
16-8-1993
விலை: ரூபாய் மூன்று



மாண்புமிகு முதல்வர் அவர்களின் சுதந்திரத் திருநாள் சிறப்புரை

புகழ்மிக்க தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில், நம் பாரத தேசத்தின் இலட்சியத் திருக்கொடியை, தமிழ்ப் பெருமக்களின் மேலான நல்லாதரவோடு, மூன்றாவது முறையாக ஏற்றி வணங்குவதில், பெருமகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறேன். இந்த வாய்ப்பினை எனக்கு அளித்த, எனது அன்பிற்கினிய தமிழக மக்களுக்கு, எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆண்டாண்டுக் காலமாய், அடிமைப் பட்டிருந்த அவலம் நீங்கி, 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே' - என, ஆனந்த சுதந்திரப் பண் பாடி... ஆண்டுகள் நாற்பத்து ஆறு கழிந்து, நாற்பத்து ஏழாம் ஆண்டு சுதந்திரத் திருநாளில், நமது உள்ளங்களில் மகிழ்ச்சி பொங்க, இங்கே நாம் குழுமியுள்ளோம்.

தியாகச் சுடர்கள்

நாட்டின் சுதந்திரத் தாக வேள்வியில், அன்று தங்களை அர்ப்பணித்துக் கொண்டதோடு, இன்று நாம் இந்தப் புண்ணிய பூமியில், சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பதற்கு, காரணகர்த்தர்களாய்த் திகழ்ந்திட்ட, தியாகச் சுடர்களை நினைவு கூர்ந்து, நல்லதொரு எதிர்காலத்தை உருவாக்க, நமது கடமைகளை எண்ணிப் பார்க்க வேண்டிய நன்னாள் தான், இந்நாள்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், இந்நன்னாளைப் பற்றிக் குறிப்பிடும்போது -

''வெள்ளையர்களின் கணக்குத் தீர்ந்த நாள், இந்தியர்கள் கணக்குப் பார்க்கும் நாள்''

எனச் சிறப்பாகக் குறிப்பிட்டார்கள்.

அந்த அடிப்படைத்தத்துவத்தை மனதிலே கொண்டு தான், நாடு விடுதலை பெற்றதன் தலையாய நோக்கங்களை, உண்மையாக எய்துவதில், உங்கள் சகோதரியின் தலைமையில் இயங்கும் இந்த அரசு, முழு மூச்சுடனும், உறுதியுடனும், அயராது செயல்பட்டு வருகின்றது.

நம் அரசியல் அமைப்பு, தெளிவுபடுத்திச் சுட்டிக் காட்டியுள்ளபடி, ''இறுதி எஜமானர்கள் மக்கள் தான்'' என்ற கோட்பாட்டில், அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ள எங்கள் அரசு. அம்மக்களின் விருப்பத்தையும், தேவைகளையும் நிறைவேற்றி வைப்பதில், முனைப்புடன் உள்ளது.

தமிழ்நாட்டின் ஜீவாதாரப் பிரச்சினை

மக்களின் நம்பிக்கை வீண் போகாமல் பணியாற்றிட வேண்டும், என்ற அடிப்படை இலக்கைக் கொண்டுள்ள அரசாகத் திகழுகிற காரணத்தால் தான், தமிழகத்தின் ஜீவாதாரப் பிரச்சினையான, காவிரி நதிநீர்ப் பிரச்சினையில், அண்மையில் நமது உரிமையை நிலை நாட்டிட, உயிரையும் பணயம் வைத்து, காலவரையற்ற உண்ணா அறப்போரினை, அண்ணல் காந்தியடிகளின் அற வழியில் நான் மேற்கொண்டு, இந்தியத் துணைக் கண்டத்தின் கவனம் முழுவதையும் ஈர்த்து, இன்றைக்கு இந்தப் பிரச்சினைக்கு, ஒரு புதிய திருப்புமுனையை ஏற்படுத்தி உள்ளோம்.

அட்டை
சொல்லும்
செய்தி:

காவிரி நதியில் நீர் பெறுவது என்பது, காலம் காலமாக, நாம் பெற்று வந்துள்ள உரிமை என்பதோடு, தமிழகத்தின் ஜீவ நாடியே, அதிலே அடங்கியுள்ளது என்பதால் தான், இதே கோட்டை முகப்பில், நான் முதன் முதலாக, 1991 ஆகஸ்ட் 15-ஆம் நாள், கொடியேற்றி உரையாற்றியபோது, காவிரி நதிநீர்ப் பிரச்சினையை, முக்கிய பொருளாகக் குறிப்பிட்டிருந்தேன். அதனைத் திரும்பவும் நினைவுபடுத்துவது, இன்றைய சூழ்நிலையில், மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அன்றைக்கு நான் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தேன்:

காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை, இந்த அரசின் முழுக் கவனத்தையும், முயற்சியினையும் தற்போது ஈர்த்துள்ளது. தமிழ்நாட்டின் ஜீவாதாரப் பிரச்சினையும், மாநிலம் முழுவதும், ஒட்டுமொத்தமாக குரல் கொடுத்துச் செயல்பட வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையுமான, காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில், நாம் நியாயம் கேட்டு, மத்திய அரசைத் தலையிடக் கோரி வருகிறோம். நீதி எவர் பக்கம் என்பதை, இந்தியத் துணைக் கண்டமே அறிந்துள்ளதால், இப்பிரச்சினையில், நாட்டை ஆளும் தலைமைப் பொறுப்பிலுள்ள மைய அரசு, தனது கடமையைச் செய்தாலே போதுமானது. இந்தச் சுதந்திர நன்னாளில், அந்த நியாயத்தின் குரலை, அனைவரும் கேட்கிற வகையில், நாம் உரத்த குரலில் மீண்டும் முழங்குவோம். காவிரி நதிநீர்ப் பிரச்சினை, தமிழ்நாட்டின் ஒவ்வொரு தனி மனிதனின் பிரச்சினை ஆகும்.

There is no scope anymore for negotiations or talks to settle this issue. We want only a judicial settlement which must be honoured by one and all.

காவிரிப் பிரச்சினையைத் தீர்க்க, இனிப் பேசிப் பயனில்லை. நீதிமன்ற ஆணை ஒன்றே, இனி இப்பிரச்சினைக்குத் தீர்வாக அமைய முடியும் என்பதை, வற்புறுத்திட விரும்புகிறேன். அத்தகைய நீதித் துறை ஆணை, ஒவ்வொருவராலும் மதிக்கப்பட வேண்டும்; ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அது தவிர, இனி பேச்சுவார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதை, அரசின் சார்பில், ஆணித் தரமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.''

இவ்வாறு, இதே கோட்டைக் கொத்தளத்தில் இருந்து, நான் கூறியபடி, ''நீதி மன்றமான காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பு ஒன்றே, சரியான தீர்வாக அமையும்; அது ஒவ்வொருவராலும் மதிக்கப்பட வேண்டும். அதனை நிறைவேற்றித் தர வேண்டிய கடமையும், கட்டாயமும், மைய அரசுக்கு உண்டு.'' நமது இந்த நிலையை வற்புறுத்தி, மத்திய அரசை நடவடிக்கை மேற்கொள்ளச் செய்திட, எடுத்துக் கொண்ட அனைத்து முயற்சிகளும், பலன் தராமல் போன காரணத்தால் தான், உச்சகட்ட முயற்சியாக, எனது உயிரைப் பணயம் வைத்து, உண்ணாவிரத அறப் போராட்டத்தை மேற்கொண்டேனே தவிர, சிலர் கூறுவது போல், இது திடீர் நடவடிக்கை அல்ல, என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

தமிழக மக்களின் நலன் காக்கப்பட வேண்டும்!

எனக்கு என் உயிர் முக்கியம் அல்ல. தமிழகத்தின் தன்மானம் காக்கப்பட வேண்டும்; தமிழக மக்களின் நலன் காக்கப்பட வேண்டும் என்பது தான், என் முக்கிய குறிக்கோள் ஆகும். இந்த அடிப்படையில் அமைந்தது தான், அந்த உண்ணாவிரதப் போராட்டமாகும். என்னைக் குறை கூறும் அரசியல் வாதிகள், இதனை, நம் தன்மான உயிர்ப் பிரச்சினையாக எடுத்துக் கொண்டு இருந்திருப்பார்களானால், இந்த நடவடிக்கையினையும் பிரச்சினை ஆக்கி இருக்க மாட்டார்கள். அவர்களுக்கு மக்கள் நலன் பெரிதல்ல; தமிழகத்தின் தன்மானம் பெரிதல்ல; அவர்களைப் பொறுத்த மட்டில், எப்படியாவது இந்த அரசையும், என்னையும் குறை கூறி, அரசியல் ஆதாயம் தேட வேண்டும் என்பது தான் முக்கிய நோக்கம்; குறிக்கோள்; இவையன்றி வேறு எதுவும் இல்லை. அவர்கள் என் போராட்டத்தை விமர்சனம் செய்வதை விடுத்து, மத்திய அரசை வற்புறுத்தி, காவிரியில் தண்ணீர் பெற முயற்சித்திருக்க வேண்டும். போராடக் கூட முன் வந்திருக்க வேண்டும். காலை வாரி விடக் காலம் பார்த்துக் கொண்டிருப்பவர்களை எல்லாம், கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், தமிழகத்தின் உரிமைக் குரலை உணர்த்திடும் வகையில் தான், என் போராட்டத்தைத் தொடங்கினேன்.

தமிழகத்தையே ஓரணியில் திரட்டிய, மகத்தான அப்போராட்டத்திற்குப் பின்னர் தான்; சட்டப்படியும் நியாயப்படியும், ஏற்கெனவே நடவடிக்கை எடுத்திருக்க வேண்டிய மத்திய அரசு, முதன் முறையாக, நடுவர் மன்றத் தீர்ப்பின் இடைக்கால ஆணையை நிறைவேற்றும் வகையில், கண்காணிப்புக் குழுவினையும், செயலாக்கக் குழுவினையும் நியமிக்க ஒப்புக்கொண்டது.



நாட்டு விடுதலைக்காகச் சிறையில் வாடிய வர்கள், தீவுகளுக்குத் துரத்தப்பட்டவர்கள் மண்டை பிளக்கப்பட்டவர்கள், குடும்பச் சுகத்தை இழந்தவர்கள், தடியடியால் இறந்த குமரன், தூக்குமேடை ஏறிய பகத்சிங், சொத்தைப் பறி கொடுத்த சிதம்பரம் பிள்ளை போன்ற வீரத் தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்த வேண்டும். அவர்கள் சிந்திய இரத்தமும், கண்ணீரும் நமது வீர வணக்கத்திற்கு உரியன. அவர்கள் நமக்கு வழி காட்டிகள்.

இருபதாண்டுக் காலமாகப் பேசிப் பேசியும்; முறையிட்டு முறையிட்டும்; பல நேரங்களில் போராடிப் போராடியும்; தீர்வு காண முடியாத காவிரிப் பிரச்சினைக்கு, எனது அறப்போராட்டம், ஒரு புதிய பாதையை வகுத்துக் கொடுத்துள்ளது என்றே கருதுகிறேன்.

நாம் பெற்றுள்ள வெற்றியின் பலனை அடைகிற வகையில்; காவிரியில் தண்ணீர் திறந்துவிடச் செய்வது வரையிலான, அனைத்து நடவடிக்கைகளிலும், சற்றும் தயக்கம் காட்டாமல், தன்னை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டிய கடமையினை, மத்திய அரசு உடனடியாகச் செய்திட வேண்டும் என்பது, எனது சுதந்திரத் தினக் கோரிக்கை மட்டுமல்ல; இது தமிழகத்தின் ஒட்டு மொத்த உரிமைக் குரல். இந்தக் குரல் மத்திய அரசைத் தட்டி எழுப்பிட வேண்டும். இன்னும் தாமதம் என்பது, சுதந்திரப் பூமியின் அமைதிப் பூங்காவாகத் திகழும், ஒரு பகுதி மக்களின் ஜீவாதார உரிமை, கட்சி பேதங்களின் அடிப்படையில், நியாயமான காரணங்கள் இன்றி, புறக்கணிக்கப்படுவதாக ஆகிவிடும் என்பதை, எனது எச்சரிக்கையாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டுள்ளேன்.

என் அறப் போராட்டத்தைத் தொடர்ந்து, அமைக்கப்படும் என உறுதி அளிக்கப்பட்ட, கண்காணிப்புக் குழுவும், செயலாக்கக் குழுவும், இன்னும் அமைக்கப்படவில்லை. இதனைச் சுட்டிக் காட்டியும், உடனடியாகக் காவிரியில் தண்ணீர் திறந்து விடக் கோரியும், பிரதமருக்கு நேரடிக் கடிதம் ஒன்று எழுதியுள்ளேன். ஆனால், அக்கடிதத்திற்கு, இதுகாறும் பதில் ஏதும் இல்லை; உறுதியளித்த வண்ணம், எவ்வித நடவடிக்கையும் இல்லை.

மத்திய அரசு இப்பிரச்சினையில், தமிழக மக்களின் நலனை, முற்றிலும் புறக்கணிக்கும் போக்கிலேயே, தொடர்ந்து செயல்படுகிறது; தனிப்பட்ட முறையில், எனக்கெதிரான போக்கில் நடந்துகொள்வதாக நினைத்து, நாட்டின் கூட்டாட்சி முறைத் தத்துவத்திற்கே, கேடு விளைவிக்கும் முயற்சியில், மத்திய அரசே ஈடுகிறது, என்றே கருத வேண்டுயுள்ளது.

"பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்போம்" என்ற முழக்கத்தை, உள்ளபூர்வமாக ஏற்றுக் கொண்டவர்களாக இருந்தால், வேற்றுமையில் ஒற்றுமை கண்டு, நாம் கட்டிக் காத்துவரும் ஒருமைப்பாட்டு உணர்வுகளுக்குக், குந்தகம் உண்டாக்கும் முயற்சிகளில் ஈடுபட மாட்டார்கள்.

தனது பொறுப்பினைத் தட்டிக் கழித்து, தமிழக மக்களின் நலனில், ஒரு மெத்தனப் போக்கைக் கடைப்பிடித்து வரும், மத்திய அரசின் இப்போக்கு, ஒட்டு மொத்த இந்திய நாட்டின் ஒருமைப் பாட்டுக்கே, குந்தகம் உண்டாக்கி விடுமோ, என்ற அச்சத்தின் காரணமாகத் தான், எனது இந்த எச்சரிக்கையினை, இந்த நேரத்தில் தெரிவிப்பது, எனது கடமை எனக் கருதுகிறேன்.

கச்சத் தீவு

உணர்வுப்பூர்வமான இன்னொரு பிரச்சினையினையும், எனது முதல் சுதந்திர நாள் கொடியேற்று விழா உரையின் போது, தெரிவித்திருந்தேன். ஆழகடலுக்குள் மீன் பிடிக்கச் செல்லும், ராமேஸ்வரம் பகுதி மீனவர்களுக்கு, இழைக்கப்படும் இன்னல்களைக் களைய ஒரே வழி, உடனடியாகக் கச்சத் தீவில், நமக்குள்ள உரிமையை மீட்பது தான் என, அன்றைக்கே குறிப்பிட்டிருந்தேன். தமிழகச் சட்டமன்றத்திலும், ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. பல நாள் கழித்து, பிரதமரிடமிருந்து எனக்கு வந்த பதிலில், நமது கோரிக்கை, விரிவான பரிசீலனையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது மீனவச் சகோதரர்கள், மீன் பிடிக்கக் கடலுக்குச் சென்று, இலங்கை ராணுவத்தின் தொல்லைக்கு ஆளாகாமல், அபாயம் இன்றித் திரும்பி வர முடியுமா, என்ற நிச்சயமற்ற தன்மை இருக்கும்போது, மத்திய அரசு விரைந்தும், அழுத்தமாகவும் இது குறித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதே, எனது 'சுதந்திரத் தின வற்புறுத்தல்' எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள்

இம்மாதம் 8-ஆம் தேதியன்று, சென்னையில் ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் நிகழ்ந்த, குண்டு வெடிப்புச் சம்பவத்தில், 11 பேர் இறந்து போனது, ஒரு சோகமான, துயரமான நிகழ்ச்சியாகும். இத்தகைய சூழ்நிலையில், தமிழக அரசும், காவல்துறையும் தங்களுடைய கடமைகளை, முழுமையுடனும், விரைந்தும் ஆற்றும் வகையில், நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இதிலும் அரசியல் ஆதாயம் தேடுவதற்கென்றே, பொறுப்பற்ற சிலர், வேண்டாத பல அறிக்கைகளைக் கொடுத்து வருகிறார்கள்.

அமைதிப் பூங்காவாகத் திகழும் தமிழகத்தில், வன்முறையைத் தூண்டிவிட்டு, ஒரு வன்முறைக் கலாச்சாரத்தை, தங்கள் சொந்த நலனுக்காக உருவாக்க, ஒரு சில தீய சக்திகள், திட்டமிட்டு முயன்றுகொண்டு வருகின்றன. வன்முறையும், பயங்கரவாதமும், இந்தியாவின் பல பகுதிகளில், தலைவிரித்தாடும் சூழ்நிலையிலும், தமிழகம் ஒரு அமைதிப் பூங்காவாக ஒற்றுமையை வலியுறுத்தும் மாநிலமாக, நல்லெண்ணத்தை உருவாக்கும் நாட்டின் ஒரு அங்கமாகச் செயல்பட்டு வருகிறது. பொது அமைதிக்குப் பங்கம் விளைவித்து, அரசியல் ஆதாயம் தேடுபவர்கள், யாராக இருந்தாலும், அவர்களை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில், யார் ஈடுபட்டு இருந்தாலும், குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, தண்டனை வழங்க, நான் ஒரு போதும் தயங்க மாட்டேன்.

இந்த வழக்கை, மத்திய புலனாய்வுத் துறை, C.B.I. எடுத்துக் கொண்டு, மேல் விசாரணை மேற்கொள்ள வேண்டும், என்று நான் குறிப்பிட்டது, ஏதோ தமிழக காவல் துறையினரால், இந்தப் பணியைச் செய்ய முடியாததனால் கூறியதாக, சிலர் குற்றம் காண்கிறார்கள். என் தலைமையின் கீழ் இயங்கும், தமிழகக் காவல் துறை, திறமையுடனும் ஆற்றலுடனும் செயல்படத் தக்க, ஒரு தலை சிறந்த காவல் படை என்பதை, இந்திய நாடே ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால், இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம், பல மாநிலங்கள் தொடர்புடைய பிரச்சினைகளை மட்டுமல்லாது, அயல் நாடுகள் தொடர்புடைய பிரச்சினைகளையும், உள் அடக்கியதாகக் கருதப்படுவதால் தான். இதை மத்திய புலனாய்வுத் துறை, விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமன்று வற்புறுத்தினேன். பொதுவாக எந்த ஒரு வழக்கிலும், ஒரு மாநிலம் மட்டுமல்லாது, பிற மாநிலங்களின் தொடர்பும், அயல்நாடுகளின் தொடர்பும் இருக்குமானால், அவ்வழக்கை சி.பி.ஐ. விசாரிப்பது, நடைமுறையில் இருந்து வரும் ஒரு வழக்கமாகும். விசாரணை துரிதமாகவும், விரைவாகவும் நடைபெற வேண்டும் என்பதற்காகத்தான், எடுத்த உடனேயே இந்த வழக்கை, காவல்துறை CID குற்றப்பிரிவிற்கு, அதாவது Crime Branch C.I.D.-க்கு, மாற்ற ஆணை இட்டிருந்தேன். எதிலும் கட்சி அரசியலைக் கலப்படம் செய்யும் சிலர், இதையும் குறை கூறியுள்ளார்கள்.

குற்றவாளிகளைக் கண்டுபிடித்தே தீருவோம்!

டெல்லியிலிருந்து ஒரு அமைச்சர் வந்த பின்பு தான், தமிழக அரசும், தமிழகக் காவல் துறையும், நடடிவக்கை எடுக்க ஆரம்பித்தது, என்பது போன்ற ஒரு மாயத் தோற்றத்தை உண்டாக்க வேண்டும் என்றே, ஒரு மத்திய அமைச்சரைச் சென்னைக்கு அனுப்பி, அரசியல் ஆதாயம் தேட முயற்சி செய்திருக்கிறார்கள். மத்திய அமைச்சர் ஒருவர் வந்து தான், இந்தத் தமிழக அரசையும் காவல் துறையையும் செயல்பட வைக்க வேண்டும் என்ற நிலை இங்கே இல்லை. அவர்கள் வந்தாலும் வராவிட்டாலும், பொறுப்புடனும், கடமையுணர்வுடனும், செயலாற்றும் திறமையும் ஆற்றலும், இந்தத் தமிழக அரசுக்கும், காவல் துறைக்கும் நிறையவே உண்டு.

எங்கள் கடமைகளை எவ்வாறு செய்ய வேண்டும் என்று யாரும் இந்த அரசுக்கும், காவல் துறைக்கும் புதிதாகப் பாடம் கற்றுத் தர வேண்டிய அவசியம் இல்லை. மத்திய அமைச்சர் ஒருவர் இங்கே வந்து, "புலனாய்வுப் பணிகளைத் துரிதமாகச் செய்யுங்கள்" என்று, நம் காவல் துறையினருக்கு அறிவுறுத்துகிறார். இது தேவையா? இவர் இவ்வளவு தூரம் சென்னைக்கு வந்து இதைச் சொல்லாவிட்டால், நம் தமிழகக் காவல் துறையினர் அப்பணியைத் துரிதமாகச் செய்ய மாட்டார்களா? அதே மத்திய அமைச்சரிடம், "இந்த வழக்கு விசாரணையை

விடுதலை நாள் விழா

இந்தியாவின் 47-வது விடுதலை நாள் விழா சென்னைக் கோட்டைக் கொத்தளத்தில் 15.8.'93 அன்று கொண்டாடப்பட்டது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தை வந்தடைந்த போது அங்கே குழுமியிருந்தோர் வான் பிளக்கும் வாழ்த்தொலி வழங்கி அவரை மகிழ்ச்சியோடு வரவேற்றனர். பள்ளி மாணவ, மாணவியர் சீருடைகளுடன் சாலையில் அணிவகுத்து நின்று அழகுக்கு அணி சேர்த்தனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, தலைமைச் செயலர் திரு. டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப., அவர்கள் முப்படை அதிகாரிகள், காவல்துறை உயர்அதிகாரிகள் சென்னை நகர செரீப் திரு. சுரேஷ் கிருஷ்ணா ஆகியோரை அறிமுகம் செய்து வைத்தார்.

காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

சரியாக, காலை 8.30 மணிக்குக் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். தேசியக் கொடி பட்டொளி வீசிப் பறந்து பூமாரி பொழிய, தேசிய கீதம் இசைக்கப்பட்டது. தேசியக் கொடிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வணக்கம் செலுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள், கோட்டைக் கொத்தளத்தில் சுதந்திர தின விழாச் சிறப்புரை ஆற்றினார்.

சிறப்புரை ஆற்றிய பின்பு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு இனிப்பும், காலைச் சிற்றுண்டியும் வழங்கினார்.

உடல் ஊனமுற்றோர் நலம் மற்றும் மகளிர் நலம் போன்ற துறைகளில் சிறப்பாகப் பணி புரிந்ததற்காக, மனநலம் குன்றியோர் கல்வி மற்றும் மறுவாழ்வு மையமான பாத்வே (Pathway) விற்கு 1992-1993க்கான முதல்வர் விருதினையும், தொட்டில் குழந்தைத் திட்டத்தின்கீழ், பெண் குழந்தைப் பாதுகாப்பு மற்றும் பெண் சிசு வதைத் தடுப்பு போன்ற சீரிய பணி புரிந்ததற்காக, கர்ண பிரயாக் மற்றும் எஸ்.ஓ.எஸ். குழந்தைகள் கிராம சாட்நாத் இல்லத்திற்கு (Karna Prayag and SOS Children's Village Chatnath Homes) விருதினையும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

சட்டப்பேரவைத் தலைவர், அமைச்சர் பெருமக்கள், சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. கே.ஏ. சுவாமி, முப்படை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள், உயர் அதிகாரிகள், விடுதலைப் போராட்ட வீரர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள் முதலானவர்கள் விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்தனர்.

—நிகழ்ச்சித் தொகுப்பு:
கரு. சண்முகசுந்தரம்

மத்தியப் புலனாய்வுத் துறைக்கு, C.B.I.-க்கு எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று நான் கோரினால், உடனே அவர், ''தமிழகக் காவல் துறையினர் மிகவும் திறமை வாய்ந்தவர்கள். அவர்களாலேயே இந்த வழக்கு விசாரணையை நடத்த முடியும்'' என்கிறார். நான் தலைமை ஏற்றிருக்கும் தமிழகக் காவல் துறையினரின் திறமை பற்றி, அந்த மத்திய அமைச்சர் சொல்லித் தான் நாம் தெரிந்து கொள்ள வேண்டுமா? தமிழகக் காவல் துறையின் மீது, இந்த அரசிற்கும் எனக்கும், முழு நம்பிக்கை உண்டு. இதுவரை அவர்கள் எடுத்த எந்தக் காரியத்திலும், வெற்றி காணாமல் விட்டதில்லை. எனவே, இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்திலும், குற்றவாளிகளை, தமிழகக் காவல்துறை நிச்சயம் கண்டுபிடித்தே தீரும்.

இடைத்தேர்தல்கள்

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அதிகமாகி, பயங்கரவாதம் தலை தூக்கியபோது, நான் என் உயிரைத் துச்சமாக மதித்து, அவர்களை அடக்கினேன், ஒடுக்கினேன். என் உயிரைப் பற்றிக் கவலைப்படாமல், மக்கள் நலனுக்காக, நான் எவ்வித அச்சமும் இன்றி, செயலாற்றி வருவதை, இந்த நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். ஒரு ஜனநாயக அமைப்பில், குடிமக்களின் அடிப்படை உரிமைகளில், ஒன்றாகக் கருதப்படுவது, எவ்விதத் தடங்கலும் தலையீடுமின்றித், தேர்தல்களில் பங்குபெறும் உரிமையாகும். அண்மையில், நிகழ்ந்த, இடைத் தேர்தல்கள் பற்றிய குளறுபடிகள், ஒரு வலுவான ஜனநாயக அமைப்பெனக் கருதப்பட்டு வந்துள்ள, இந்திய நாட்டின் ஆட்சி அமைப்பு முறையின், அடித்தளத்தையே தகர்க்கும் முயற்சி, எனக் கருத வேண்டியுள்ளது.

எல்லா மாநில இடைத் தேர்தல்களையும், ஒட்டு மொத்தமாக ஒத்தி வைப்பதாக அறிவித்தவுடன், நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளும், நீதி மன்றங்களும், அம்முடிவுக்கு எதிராகக் கருத்துக்களைத் தெரிவித்த பின்னரும் கூட, உரிய உடனடி நடவடிக்கை மேற்கொள்ளாமல், பின்னர், நீதிமன்றங்களின் நடவடிக்கைகளையும், அறிவுறுத்தல்களையும், தவிர்த்துக் கொள்ளும் நோக்கத்துடன், தமிழ்நாட்டைத் தவிர, ஏனைய மாநிலங்கள் அனைத்திலும், வரும் செப்டம்பர் மாதம் 10-ஆம் தேதிக்குள், இடைத் தேர்தல்கள் நடைபெறும் என அறிவித்திருக்க வைப்பதும், மத்திய ஆட்சியினர், ஜனநாயகத்திற்கு எதிராகத் தொடுத்திருக்கும் பாணம், என்றே கருத வேண்டியுள்ளது.

தமிழ்நாட்டு மக்களுக்குச் செய்த துரோகங்களுக்காக, அம்மக்கள் தங்களைப் புறமுதுகிட்டு ஓடச் செய்திடுவார்கள், என்ற அச்சத்தோடிருப்பவர்களை, காத்திடும் ஒரே நோக்கத்தோடு, ஜனநாயகத்தின் அடித்தளத்தையே, அசைத்திடும் முயற்சியில் ஈடுபடுவோர், எவ்வளவு பெரிய இடத்தில் இருப்பவர்களாக இருந்தாலும், அவர்களின் இத்தகைய செயலைக் கண்டிக்க, நாட்டின் அனைத்துத் தரப்பு மக்களும், முன் வர வேண்டும் என வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த இடைத் தேர்தல்கள் நடைபெறாத காரணத்தால், எனக்கோ அல்லது எங்கள் ஆட்சிக்கோ, எவ்வகையிலும் தனிப்பட்ட இழப்போ, பாதிப்போ ஏற்படப் போவதில்லை. ஆனால், ''ஒரு வலுவான ஜனநாயக அமைப்புள்ள நாடு இந்தியா'', என உலக அரங்கில், நாம் பெற்று வந்துள்ள நற்சான்று, பறிபோய் விடுமோ என்ற ஆதங்கத்தாலும், மத்திய ஆட்சியும், தலைமைத் தேர்தல் கமிஷனும், இந்த இடைத் தேர்தல்களை நடத்தும் விஷயத்தில், செய்துள்ள பித்தலாட்டங்களைக் குறிப்பிட வேண்டி உள்ளது.

எந்த ஒரு அரசியல் கட்சியும், பலம் பொருந்தியதாகவும், சக்தி வாய்ந்ததாகவும், மக்கள் ஆதரவைப் பெற்றதாகவும் இருந்தால் தான், அதனை நேரடியாக அரசியல் களத்தில் சந்தித்து மோதிடச் சக்தியற்றவர்கள், இவ்வாறு குறுக்கு வழியில் தொல்லை கொடுப்பதையும் இடையூறு செய்வதையும், தங்கள் வாடிக்கையாக வைத்துக் கொள்வர். ஆனால், இவற்றையே தனது அணுகுமுறையாக, ஓர் நாட்டின் ஆட்சி கொண்டிருக்குமேயானால், ஒரு நல்ல கூட்டாட்சி அமைப்பில் இயங்கும், ஜனநாயக நாடென்று, நம்மை யார் ஏற்றுக் கொள்வார்கள்?

இந்த அச்சத்தின் காரணமாக எழுந்ததே, இந்த எனது வெளிப்பாடாகும். அது தவிர, இவர்கள் தரும் இன்னல்களுக்கோ, இடையூறுகளுக்கோ, நாட்டு மக்களின் நல்லாதரவைப் பெற்றுள்ள, என் தலைமையிலான இந்த அரசு, துளியும் அஞ்சப் போவதில்லை. தமிழக மக்களுக்காகவும், ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டுவதற்காகவும், எத்தனை இன்னல்கள் வந்தாலும், அவற்றை ஏற்கத் தயாராக இருக்கிறேன்.

சுதந்திரக் காற்றின் சுகம்!

பொறுப்பற்ற சில அரசியல்வாதிகள் ஏற்படுத்தும் சலசலப்புக்கு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் வாரிசு ஆன நான், என்றும் அஞ்சமாட்டேன் என்று, இந்த விடுதலை நாளில் உறுதி கூறிக் கொள்கிறேன்.

இவ்வாறு நம்முடைய உயிர்ப் பிரச்சினையிலும், உரிமைப் பிரச்சினையிலும், எதற்கும் அஞ்சாமல் குரல் கொடுத்து வந்துள்ள உங்களது அரசு; சுதந்திரக் காற்றின் சுகத்தை, நாட்டு மக்கள் அனைவரும் அனுபவித்திடும் வகையில், பல்வேறு முற்போக்கான, மனிதாபிமான மிக்க வளர்ச்சிப் பணிகளையும், விரைந்து செய்து வருகிறது என்பதைக் குறிப்பிட வேண்டியது, எனது இன்றியமையாக் கடமை ஆகும்.

குடிநீர்ப் பிரச்சினை

சென்னை மாநகரில் குடிநீர்ப் பிரச்சினை, ஒவ்வொரு ஆண்டும், பொது மக்களை மிகுந்த சிரமத்திற்கு உள்ளாக்கி வருகிறது. பருவ மழை அடிக்கடி பொய்த்து வருவதாலும், நிலத்தடி நீர் மிகவும் குறைந்துவிட்ட காரணத்தாலும், மக்கள் தொகைப் பெருக்கத்தாலும், சென்னை மாநகருக்கு நான்தோறும் தேவைப்படும், 55 மில்லியன் காலன் குடிநீர் கிடைப்பது, அரிதாகவே உள்ளது.

இந்த ஆண்டு, குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிப்பதற்காக, உங்கள் அரசு மேற்கொண்ட போர்கால நடவடிக்கைகளால் தான், ஓரளவிற்கேனும், மக்களுக்குக் குடிநீர் விநியோகம் செய்ய முடிந்தது. எப்படியேனும் வருங்காலங்களில், சென்னை நகரக் குடிநீர்ப் பிரச்சினைக்கு, ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், என்ற உறுதியை மேற்கொண்டுள்ளேன். அதை நிறைவேற்றுகிற வகையில், எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளேன்.

தெலுங்கு கங்கைத் திட்டம் மூலம், ஆந்திர மாநிலத்திலிருந்து, கிருஷ்ணா நதி நீரை, சென்னைக்குக் கொண்டு வருவதற்கான பணிகளை, தமிழக அரசு முழு முயற்சியுடன் செயல்படுத்திய போதிலும்,

இந்த நாட்டின் சுதந்திரத்திற்காகத் தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்த இலட்சக்கணக்கான தியாகிகளுக்கு இந்நாளில் நமது அஞ்சலியைக் காணிக்கை ஆக்குவது நமது நீங்காக் கடமை ஆகும்.

வேறு ஒரு மாநிலத்தின் பங்கும் அதில் இருப்பதால், காலதாமதம் தவிர்க்க இயலாத ஒன்றாக உள்ளது. மேலும், வேகமாக வளர்ச்சி அடைந்து வரும், சென்னை மாநகரத்தின் எதிர்காலக் குடிநீர்த் தேவையை, ஒரு திட்டத்தின் மூலம் மட்டுமே, நிறைவு செய்ய இயலாது. எனவே நம் மாநிலத்திலேயே இருக்கின்ற, ஒரு நீர் ஆதாரத்திலிருந்தே, குடிநீரைச் சென்னைக்குக் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணத்துடன், வீராணம் ஏரியிலிருந்து நீர் கொண்டு வரும் புதியதொரு திட்டத்தைப் பரிசீலித்தோம். ஏறத்தாழ இரண்டு மாதங்களுக்கு முன்பு, இதற்கான திட்ட அறிக்கையை, உடனடியாகத் தயாரிக்க நான் ஆணையிட்டேன். தீர்க்கமான ஆய்வுக்குப் பின்பு, 464 கோடி ரூபாய் செலவில், பழைய வீராணம் திட்டம் போல் அல்லாது, ''புதிய வீராணம் குடிநீர்த் திட்டமாக'', தயாரிக்கப்பட்டுள்ளது. புதிய தொழில் நுட்பத்தையும், தரமுள்ள குழாய்களையும் பயன்படுத்தி, இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம், சென்னை மாநகருக்கு, தினமும் 40 மில்லியன் காலன் குடிநீர் கிடைக்கும்.

உலக வங்கியின் நிதி உதவி!

464 கோடி ரூபாய் நிதி ஆதாரங்களை, எவ்வாறு திரட்டுவது என்பது, இந்த அரசுக்கு ஒரு பெரிய சவாலாக இருந்தது. பொதுமக்களுக்கு, மிக முக்கியமாகத் தேவைப்படும் இந்தத் திட்டத்திற்கு, உலக வங்கியின் நிதி உதவியைப் பெறுவது, என முடிவெடுத்து, அதற்கான பேச்சுவார்த்தைகளை, உலக வங்கி அலுவலர்களிடம், தமிழக அரசு அதிகாரிகள் நடத்தினார்கள்.

குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும், என்ற நமது உள்ளக்கிடக்கையை, நன்கு புரிந்து கொண்ட உலக வங்கி அதிகாரிகள், இத்திட்டத்தை நன்கு பரிசீலித்து, ஏற்றுக்கொண்டு, இதற்கு நிதி உதவி வழங்க, சமீபத்தில் முடிவெடுத்துள்ளனர் என்ற மகிழ்ச்சியான செய்தியை, உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

எத்தனை இன்னல்கள் வந்தாலும், எத்தனை இடர்ப்பாடுகளைச் சந்திக்க வேண்டியிருந்தாலும், இந்தப் புதிய வீராணம் குடிநீர்த் திட்டம், வரும் 1994-ஆம் ஆண்டு, ஜனவரி மாதத்தில் தொடங்கப்படும் என்பதையும், 1995-ஆம் ஆண்டு, ஜூன் மாதத்திற்குள் முழுமையாக நிறைவேற்றப்படும் என்பதையும், இந்தச் சுதந்திரத் தின நன்னாளில் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சி

விரைந்து முன்னேற்றம் காண வேண்டும், என்ற நமது நோக்கத்திற்கு, நாட்டில் மிகுந்திருக்கும் ஏழ்மையும், வறுமையும், மிகப் பெரிய தடையாக இருப்பதை உணர்ந்து, வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு, முன்னுரிமை கொடுத்து வருகிறோம்.

தொழில் துறைத் தேக்கமும், அதன் காரணமாக உருவாகி வரும் வேலை இல்லாத் திண்டாட்டமும், நமது பொருளாதார வளர்ச்சியின் அடித்தளத்தையே, தகர்த்தெறிந்து விடும் என்ற உண்மையை உணர்ந்து, தொழில் துறை வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறோம்.

நாட்டின் பிரபலமான தொழில் அதிபர்கள் அனைவரையும், நேரில் அழைத்து, அவர்களில், உடனடியாகத் தொழில் தொடங்க முன் வந்தவர்களுக்கு, உடனடி அனுமதியினை அன்றைக்கே வழங்கியதால் மட்டும், 20,000 கோடி ரூபாய்க்கான தொழில்கள், தமிழகத்தில் உருவாகிட, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவை மட்டுமின்றி, நடுத்தர மற்றும் சிறுதொழில்களின் விரைவான வளர்ச்சியில், இந்த அரசு, தனிக் கவனம் செலுத்தி, ஆக்கமும் கொடுத்து வருகின்றது.

வியத்தகு வேளாண் உற்பத்தி!

விவசாயத் துறையில், பாதகமான பல்வேறு இயற்கைச் சூழ்நிலைகள், கடந்த இரண்டாண்டுகளாக இருந்தும்கூட, இந்த ஆண்டு மட்டும், 1 கோடியே ஒரு இலட்சம் மெட்ரிக் டன், உணவு தானிய உற்பத்தி செய்து, இதுவரை இல்லாத ஒரு

TNSC BANK

The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

Rate of Interest on Deposits (Effective from 1.3.1993

Sl.No.	Type of Deposit	Rate of Interest per annum
1.	Savings Bank Accounts	5.25 % w.e.f. 1.7.93
2.	Fixed Deposits :	
	For 46 DAYS and above but upto 270 days	11.25%
	For 271 DAYS and above but upto 364 days	11.00%
	For 1 YEAR and above	11.25%

Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

நெல்லை மாவட்ட சுதந்திரச் சுடர் மணிகள்

சாவடி அருணாசலப் பிள்ளை
(செங்கோட்டை)

வன்முறை பலாத்காரத்தினால்தான் ஆங்கிலேய ஆட்சியை ஒரு முடிவுக்கு கொண்டுவர முடியுமென சில இளைஞர்கள் உணர்ந்தனர். 'சித்திரை மீட்டிங்' என அழைக்கப்பட்ட புகழ் பெற்ற இரகசியக் கூட்டம் செங்கோட்டைச் சாவடி அருணாசலம் பிள்ளை அவர்கள் வீட்டில் 1911 ஏப்ரலில் நடைபெற்றது. வாஞ்சிநாதன் தலைமை தாங்கினார். விடுதலைப் போராட்ட வீரர்களைக் கருவறுத்துக் கொண்டிருந்த டபிள்யூ எஸ். ராபர்ட் வில்லியம் டி. எஸ்டோர்ட் ஆஷ் I.C.S. துரையை ஒழித்துக் கட்டவேண்டுமென முடிவெடுத்தனர் இப்பணியைச் செய்ய பதினைந்து பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு திருவுளச் சீட்டு முடிவுக்கு வந்தனர். திருவுளச் சீட்டில் வாஞ்சிநாதன் பெயர் வந்தது. ஆஷ் துரை செல்லும் இடங்களுக்கு எல்லாம் வாஞ்சியும் அருணாசலம் பிள்ளையும் சென்றனர்.

வாஞ்சிநாதன் மணியாச்சி ரயில் நிலையத்தில் ஆஷ் துரையை முதல் வகுப்புப் பெட்டியில் சுட்டு வீழ்த்துகிறார். வஞ்சிநாதனின் கடைசி மூச்சு வரை அவரோடு பணியாற்றிய அருணாசலம் பிள்ளையை, போலீஸ் தீவிரமாகத் தேடியதால் அவர் தலைமறைவானார். ஆஷ் கொலை நடந்த ஒரு வாரத்திற்குள் அதாவது ஜூன் 23-ஆம் தேதி பி.பி. தாமஸ் (டி.ஐ.ஜி.) தலைமையிலான போலீஸ் படை அருணாசலப் பிள்ளையைக் கல்கத்தாவில் கண்டுபிடித்து கைது செய்து சென்னை மத்தியச் சிறைச்சாலையில் அடைத்தது. இந்திய விடுதலைப் போராட்டத்தின் திருப்பு முனையாக அமைந்தது இந்த நிகழ்ச்சி.

அருணாசலம் பிள்ளையோடு பதின்மூன்று கைதிகளையும் சேர்த்து தூக்கில் தொங்கவிட எல்லா முயற்சிகளும் கையாளப்பட்டன. ஆந்திரக் கேசரி சர். டி. பிரகாசம், சீனிவாச ராமாநுஜாச்சாரி போன்ற சட்ட மேதைகளின் வாதத்திறனும், முயற்சியும் இவர்களைத் தூக்கு மேடையிலிருந்து தப்புவித்தன.

திருமணமாகி ஓராண்டு கழிவதற்கு முன்பே தன் இளம் மனைவி கருவுற்றிருந்த வேளையில் ஆஷ் துரையை ஒழித்துக்கட்டும் பணியில் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர் அருணாசலம் பிள்ளை. இவர் டாக்டருக்கு கல்கத்தாவில் நான்காம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தவர். சிறையில் சித்திரவதை பிள்ளைக்கு. ஆங்கில ஆதிக்கத்தை ஒழித்துக் கட்டுவதற்காகப் பத்திரத்தில் ரத்தக் கையொப்பமிட்ட அவரது விரல்களைப் போலீசார் ரூல் தடியால் சிதைத்தனர். அதன்பின்

அன்னை நாடு அடிமைப்பட்டுக் கிடந்த காலம்!

அண்ணல் காந்தியடிகள் தலைமையில், ஆர்த்தெழுந்தனர் ஆயிரமாயிரம் தொண்டர்கள்!

சுதந்திரத் தீ கொழுந்துவிட்டு எரிந்தது. அந்தத் தீயின் தகிப்பிலே தாக்குப் பிடிக்க முடியாது என்றுணர்ந்த வெள்ளையர் வெருண்டோடினர்.

ஆனந்த சுதந்திரம் மலர்ந்தது!

விடுதலைப் போரிலே வீர முழக்கம் செய்த தொண்டர்களின் அகமும் முகமும் மலர்ந்தது!

அந்த வேள்வியிலே...

அடிமை விலங்கொடிக்க அல்லல்பட்டோர் - உடல் பொருள் ஆவி அனைத்தையும் தத்தம் செய்தவர் பல்லாயிரவர்!

அன்றைய புனிதப் போரில் பங்கு கொண்டு, புகழ்பெற்று விளங்கும் சுதந்திரத் தியாகிகள் பலர் இன்றும் நம்மிடையே வாழ்ந்து வருவது நமக்கெல்லாம் பெருமை தரும் ஒன்றல்லவா?

அந்த வகையில், திருநெல்வேலிச் சீமையிலே பிறந்த, சுதந்திரச் சுடர் மணிகளைப் பற்றி அறிந்து கொள்வதிலே யாருக்குத்தான் மகிழ்ச்சி ஏற்படாது?

அந்த நன்மணிகளைப் பற்றி அறிந்து கொள்வோமா?

அவரால் எழுதவே முடியவில்லை. சுத்த சைவ ரான அவருக்குப் பச்சை மாமிசத்தை உணவோடு கலந்து ஊட்டினர்.

சோமயாஜுலு

1921-இல் இவர் அரசியலில் நுழைந்தார். வ.வே.சு. ஐயர், சுப்பிரமணிய சிவாவோடு நட்பு பூண்டார். இந்திய விடுதலைப் பணிக்காக மதுரை யிலிருந்து பெல்ஜியம் வரை சென்று திரும்பியதில் 1,400 மைல் பாதயாத்திரை மேற்கொண்டார். நீலன் சிலை சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண் டார். அதன் விளைவாக, பெர்ஹாம்பூர் சிறையில் அடைக்கப்பட்டார். ராஜதுவேஷ வழக்கிற்காக மூன்று ஆண்டுகள் தண்டனை அடைந்தார். இடையில் காந்தி இர்வின் ஒப்பந்தப்படி விடுதலை செய்யப்பட்டார். கோவில்பட்டியில் இரண்டு ஆண்டுகள் தண்டனை. பாதுகாப்புச் சட்டப்படி கைது. கவர்னர்கள், வைசிராய்கள் வரும்போது சிறைவாசம். இவ்வாறு இவர் காலம் ஓடியது. விடுதலை வீரர் ஸ்தாபன அமைப்பை உருவாக் கினார். தென்மண்டல விடுதலை வீரர் ஸ்தாபனத் தின் தலைவராகவும் தமிழ்நாடு விடுதலை வீரர் ஸ்தாபனத்தின் தலைவராகவும், திருநெல்வேலி மாவட்ட விடுதலை வீரர் சமிதியின் தலைவராக

பாபநாசத்திலுள்ள கல்யாண தீர்த்தத்திற்குச் சீடர்கள் சிலருடனும், தம் புதல்வியுடனும் சென்றிருந்தபோது, ஐயரின் புதல்வி கால் தடுக்கி நதியில் விழுந்துவிட்டார். ஐயர், தாமும் உடனே நீரில் பாய்ந்து அவர் தலையைப் பற்றினார். ஆனால், இருவருமே நீரிலேயே இறந்துவிட்டனர்.

பரலி சு. நெல்லையப்பர்

திருநெல்வேலியிலிருந்து எட்டுக் கல் தொலை வில் உள்ளது. பரலிக் கோட்டை, இங்கு பிறந்தவர் தான் பரலி சு. நெல்லையப்பர். பாரதியாரின் தம்பி என்று அழைக்கப்பட்டவர். வ.உ. சிதம்பரம் பிள்ளையின் சிறந்த துணைவர் பரலி சு. நெல்லையப்பர். வ.உ.சி. கோயம்புத்தூர் சிறை யில் இருந்தபோது, எப்படியோ சிறைக்குள் சென்று வ.உ.சி.-யின் துண்டுச் சீட்டுகளைப் படித்து உதவிகள் செய்தார். வ.உ.சி. 1912-இல் வெளிவந்த போது, அவரை வரவேற்றவர் நெல்லையப்பர் ஒருவரே. நீலகண்ட பிரம்மச்சாரி, ஆஷ் கொலையில் ஈடுபட்டதாக அரசாங்கம் வழக்குத் தொடர்ந்தபோது நீலகண்டரைப் பரலி பார்த்தார்.

1910-இல் புதுவை புகுந்த பரலியப்பர் நீலகண்டருடன் கலவை பங்களாவில் தங்கினார்.

வும் பணியாற்றினார். விடுதலை வரலாறு குறித்த நூல்கள் எழுதி இருக்கிறார்.

வ.வே.சு. ஐயர்

இலண்டன் கல்லூரியில் சட்டம் படித்த வ.வே.சு. ஐயர் சுதந்திரத்திற்காகத் தங்களை அர்ப்பணித்த வீரத் தியாகிகள் வரலாற்றில் உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளார்.

1911-இல் வாஞ்சிநாதன் ஆஷ் துரையைச் சுட்டுக் கொன்றார். இச்சம்பவத்திற்கு வ.வே.சு. ஐயரே காரணம் என்று குற்றம் சாட்டிக் குற்றப் பத்திரிகை தயாரித்தது ஆங்கிலேய அரசு. 1920-இல் எல்லா அரசியல் கைதிகளும் விடுவிக்கப் பட்டபோது, இவரும் விடுதலை ஆனார். மீண்டும் சதிக் குற்றம் சாட்டப்பட்டு சிறைத் தண்டனை அடைந் தார். விடுதலை அடைந்தபின் நாடு முழுவதும் பாதயாத்திரை செய்தார். நெல்லை மாவட்டத்தில் உள்ள சேரன் மாதேவியில் தமிழ்க் குருகுலம் ஒன்றை நிறுவினார். பலரும் அதில் மாணவர் களாகச் சேர்ந்து பயிற்சிபெற முன்வந்தனர். ஆனால், குரு குலத்தை ஐயர் அவர்களால் நடத்த முடியாமல் போய்விட்டது.

1915-இல் பரலியார் சென்னை 'லோகோபகாரி' ஆசிரியரானார். பாரதியார் பாடல்களுக்கு நல்ல விளம்பரம் தந்தவர் பரலியாரே ஆவார். வ.வே.சு. ஐயருடன் தேசபக்தனில் பரலியப்பர் துணை ஆசிரியராக இருந்தார்.

1941-இல் சத்தியாகிரகப் போராட்டத்தில் சிறை சென்று வந்து அதே பத்திரிகையைத் திரும்ப நடத்தினார். நெல்லையப்பருக்குத் தமிழக அரசு இறுதிவரை மாதம் ரூபாய் இருநூற்று ஐம்பது அளித்து வந்தது.

எஸ். மீனாட்சி சுந்தரம் (சங்கரன் கோவில்)

பதினைந்து வயதிலேயே காங்கிரஸ் இயக்கத் தில் ஆர்வம் கொண்டு பேச்சாளர் ஆனார். 1928-இல் காங்கிரஸ் தொண்டனாகச் சேர்ந்து ஈடுபாடு. 1930-இல் அன்னியத் துணி பகிஷ் கரிப்பு, கள்ளுக்கடை மறியல் போராட்டங்களில் கலந்து கொண்டார். நகர தாலுகா ஜில்லா காங்கிரஸ் கமிட்டியில் அங்கம் வகித்தார். 1941-இல் சத்தியாகிரகத்தின்போது கைது

செய்யப்பட்டு, மதுரை மத்தியச் சிறையில் ஆறு மாதங்கள் தண்டனை அடைந்தார். 1942-இல் ஆகஸ்ட் புரட்சியின்போது கைது செய்யப்பட்டு, ஓராண்டுப் பத்து மாதங்கள் வேலூர், தஞ்சாவூர், கண்ணனூர் சிறைகளில் தண்டனை அனுபவித் தார். 1945-இல் மாவட்டக் காங்கிரஸ் கமிட்டி யின் செயலாளரானார். சர்வோதயப் பணியில் முக்கியப் பங்கு வகித்தார்.

ஆ.கு. முத்தாச்சாரி (சங்கரன் கோயில்)

1930-இல் சட்ட மறுப்பு இயக்கங்களில் பங்கு கொண்டார். 1931-இல் அன்னியத் துணி பகிஷ் காரத்தில் கலந்துகொண்டார். 1941-இல் தனி நபர் சத்தியாக்கிரகத்தில் பங்குகொண்டு மதுரை மத்தியச் சிறையில் ஐந்து மாதங்கள் தண்டனை பெற்றார். 1928 முதல் விடுதலை இயக்கத்தில் பங்கேற்றார். நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்தார். தம் சொத்துக்களை எல்லாம் தேசிய சேவைக்கே செலவு செய்தார். நெல்லை மாவட்டத்தில் நடைபெற்ற அத்தனைப் போராட்டங்களிலும் பங்கெடுத்தார். சத்தியாக் கிரகக் காலத்தில் மறியல் செய்ததற்காக, போலீசார் இவரைக் கடுமையாக அடித்துச் சாக்கடையில் போட்டுவிட்டுப் போய்விட்டனர். ரண காயங் களோடு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த இவரை ஊர் மக்கள் எடுத்துச் சென்று மருத்துவ உதவி செய்தனர். குணமான பின் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டார்.

நல்லபெருமாள் பிள்ளை (நகரம்)

காந்தியடிகளின் உத்தரவு கிடைத்தும், தன் ஆசிரியர் வேலையை ராஜினாமா செய்துவிட்டு 1941-இல் மலையடிக்குரிச்சியில் தனிநபர் சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்தார். கர்ப்பிணியா யிருந்த தன் மனைவியையும், மரணப் படுக்கையில் இருந்த தன் தாயாரையும் பொருட்படுத்தாது, டில்லி நோக்கி பாதயாத்திரை புறப்பட்டார். வழியில் மதுரையில் கைது செய்யப்பட்டு மதுரை, திருச்சி சிறைகளில் தண்டனை அனுபவித்தார்.

இந்த நேரத்தில் மனைவி ஆண் குழந்தையைப் பெற்றெடுத்துவிட்டு இறந்து விட்டார். எனினும், சத்தியாக்கிரகத்திலிருந்தும் வீடு திரும்ப மறுத்த இவரை, காந்தியடிகள், தன் ஆணையினால் மனைவியின் ஈமக்கடன் செய்ய அனுப்பினார். ஒரு வாரத்தில் தாயும் காலமானார்.

1942 ஆகஸ்டுப் போராட்டத்திற்கு முன்பே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு திரு நெல்வேலி சப்ஜெயிலில் தண்டனை அனுபவித் தார். ஆகஸ்ட் போராட்டத்தின் போது மீண்டும் சங்கரன்கோவில் சப் ஜெயிலில் தண்டனை அனுபவித்தார். இந் நேரம் இவர் மகன் இறந்து போனார். சுதந்திரத்திற்குப் பின் அரசு கொடுத்த நிலத்தை வாங்க மறுத்தார்.



அந்நியர்கள் நம் மண்ணில், முதன் முதலில் காலெடுத்து வைத்துக்கட்டிய கோட்டையின் கொத்தளத்தில், நம் விடுதலைக் கொடி இன்று பட்டொளி வீசிப் பறப்பது, நம் சுதந்திரத்தின் மகிமையை உலகுக்கு உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது.

விடுதலை நாள் விழாவைக் கொண்டாடுகிற இந்த நேரத்தில், அதற்கு வித்திட்டவர்களின் தியாகங்களைப் பெருமையோடு நினைவுகூர்வது நம் கடமையாகும். இந்த விடுதலைதான் இந்தியாவை ஒரே நாடாக்க உதவியது; அடிமை இந்தியனைச் சுதந்திர மனிதனாக அரியாசனத்தில் அமர்த்தியது.

எனவே, தாய்த்திரு நாட்டின் விடுதலைக்காகத் தம் உயிர், உடல், உடைமைகளை ஈந்த பல்லாயிரக் கணக்கான விடுதலைப் போராட்ட வீரர்களுக்குத் தமிழ்நாட்டு மக்கள் சார்பில் எனது வீர வணக் கத்தை அஞ்சலியாக்குகின்றேன்.

—மாண்புமிகு முதல்வர்
டாக்டர் ஜெ. ஜெயலலிதா

டாக்டர் டி.சி. சங்கரய்யர் (கல்லிடைக் குறிச்சி)

1931-32 சட்ட மறுப்புப் போராட்டங்களில் தீவிரப் பங்கு கொண்டார். மதுபானக் கடைகள் முன்பும், அன்னியத் துணிக் கடைகள் முன்பும் மறியலில் தீவிரப் பங்கு பெற்றார். நெல்லை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டித் தலைவரானார். 1942 ஆகஸ்ட் புரட்சியின்போது இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டு வேலூர், தஞ்சாவூர் மத்தியச் சிறைகளில் தண்டனை அனுபவித்தார். தம் இல்லத்தை, தேச பக்தர்களின் அன்னதானச் சத்திரமாக நடத்தியவர்.

கே.எஸ். ராஜகோபால் (முக்கூடல்)

1941 தேசிய இயக்கத்தில் தீவிரப் பணியாற் றினார். 1941 தனிநபர் சத்தியாக்கிரகத்திலும் 1942 ஆகஸ்ட் புரட்சியிலும் பங்கு பெற்றார். பல சப்ஜெயில்களில் கைதியாகத் தண்டனை அனுப வித்து அலிப்புரம் முகாம் சிறையிலும் தண்டனை அனுபவித்தார்.

எஸ். வீரபாகு செட்டியார் (வீரவ நல்லூர்)

1932-இல் தேசிய இயக்கத்தில் கலந்து கதர் அபிவிருத்தி, தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, அன்னியத்துணி பகிஷ்காரம் ஆகிய பணியில் தீவிரப் பங்கு கொண்டார். வீரவநல்லூர் நகரக் காங்கிரஸ் கமிட்டிச் செயலாளராகவும் பணி

சாதனையை நிகழ்த்தியுள்ளோம்.

வியத்தகு உற்பத்தியில் தங்களை ஈடு படுத்திக் கொண்டுள்ள, வேளாண் பெருமக்களுக்குத் துணையிருக்கும் வகையில்தான், விவசாய மோட்டார் பம்பு செட்டுகளுக்கான மின்சாரத்தைத் தொடர்ந்து இலவசமாகவே கொடுத்து வருகிறோம். அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் என்பது, தமிழகத்தில் மட்டுமே, தொடர்ந்து இருந்து வரும் தனிச் சலுகை என்பது, குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளன்று கூட, ஒரு புத்தாடை வாங்கி அணிவதற்கான சக்தி இல்லாதவர்களாக, ஏழ்மையிலும் வறுமையிலும் வாடும், விவசாயத் தொழிலாளர்களின் நிலை அறிந்து, கடந்த இரண்டு ஆண்டுகளாக, பொங்கல் திருநாளின்போது, ஒவ்வொரு முறையும் 45 கோடி ரூபாய் செலவில், 1 கோடியே 20 இலட்சம் பேருக்கு, இலவச வேட்டி சேலைகள் வழங்கி, இது ஏழைகளின் துயரத்தை துடைக்கும், மக்கள் அரசு என்ற பெயர் எடுத்துள்ளோம்.

மின்வெட்டே இல்லாத மாநிலம் தமிழகம், எனப்பெயர் எடுக்கும் அளவுக்கு, மின் உற்பத்தியிலும், விநியோகத்திலும், சாதனை நிகழ்த்திக் காட்டியுள்ளோம்.

சமுதாயத்தின் அடித்தளத்தில், ஒடுக்கப்பட்டுக் கிடந்த, தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் உயர்வுக்கு, வெறும் சட்டங்களும், கண்துடைப்பான திட்ட அறிவிப்புக்களும் மட்டும், கை கொடுக்காது என்பதை உணர்ந்து, அவர்களுக்கெனப் பிரத்யேகமான, ஆக்கபூர்வமான, பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை மேற்கொண்டுள்ளோம்.

சிறப்புத் தன்னிறைவுப் பணிகள்!

'இந்தியா கிராமங்களில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறது', என்ற அண்ணல் காந்தி அடிகளின் கனவை, நனவாக்கும் இலட்சிய உணர்வுடன், தமிழகத்தின் பட்டிதொட்டிகள் அனைத்தும், நகரங்களில் கிடைக்கும் வசதிகளை எல்லாம், பெற்றிடச் செய்யும் இலட்சிய உணர்வுடன், பல்வேறு சிறப்புத் தன்னிறைவுப் பணிகளை, உங்கள் அரசு நிறைவேற்றி வருகிறது.

இவை மட்டுமல்லாது, சமுதாயத்தின் நலிந்த பிரிவினரான, நெசவாளர்கள், மீனவர்கள், பனை ஏறும் தொழிலாளிகள், மூட்டை சுமப்போர், கூலி வேலை செய்வோர், கல்லுடைப்போர், கட்டடத் தொழிலாளர்கள், கூடை முடைவோர் என்றெல்லாம் உள்ள, அமைப்பு ரீதியில் இல்லாத Unorganised Sector தொழிலாளர்கள் வாழ்வில் எல்லாம், ஒளியேற்றும் பல சிறப்புத் திட்டங்களை எல்லாம், உங்கள் சகோதரி ஆளும் இந்த மாநிலம், மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக இருந்து, செயல்படுத்தி வருகிறது.

''பெண்ணிற்கு மதிப்புக் கொடுங்கள்; உரிமை கொடுங்கள்; வணக்கம் செலுத்துங்கள். பெண்ணை மதித்துப் போற்றலே நாகரிகம், அவளைக் கட்டுப் படுத்தல் - அடிமைப்படுத்தல் - கொடுமையாக நடத்தல் - அநாகரிகம்''.

-தமிழ்த் தென்றல் திரு.வி.க.

பின்னி மில் திறக்கப்பட்டதும்; திறக்கப்பட்டு மீண்டும் மூடப்பட்ட Standard Motors நிறுவனத்தை, மீண்டும் முயற்சித்து, இம்மாதம் முதல் திறக்கச் செய்ததும், இந்த அரசு, அமைப்பு ரீதியில், Organised Sector-ல் இயங்கும் தொழிலாளர்கள் நலனிலும், அதிக அக்கறை கொண்டுள்ளது, என்பதற்குரிய எடுத்துக்காட்டுகளாகும்.

இம்மண்ணின் உயர்வுக்கும், மக்களின் நன்மைக்கும் என்றே, இயங்கி வரும் உங்கள் சகோதரியின் தலைமையிலான நல்லரசு, ஆற்றிவரும் சிலபல பணிகளை மட்டுமே, கோடிட்டுக் காட்டினேன்.

நல்லரசு

இன்னும் கடந்த இரண்டாண்டுகளாக, நாங்கள் திட்டமிட்டுப் பணியாற்றி ஈட்டியுள்ள சாதனைகள், எண்ணற்றவை என்றே சொல்ல வேண்டும். ''அனைவர்க்கும் அவரவர் இருப்பிடத்திலேயே சென்று, மருத்துவப் பரிசோதனை, சிகிச்சை'' என்பன போன்ற திட்டங்களும்; பெண் சிசுக் கொலைகளைத் தடுத்து நிறுத்திட, நாங்கள் தொடங்கிய, ''அரசுத் தொட்டில் குழந்தைகள் திட்டமும்'', அனைத்திந்திய அளவில், உலகளாவிய பல அமைப்புக்களாலும், பாராட்டப் பெற்றுள்ளன.

நாடு சுதந்திரம் அடைந்ததன் பலன், முழுமையாக நாட்டு மக்களைச் சென்றடைய வேண்டும், என்ற எங்களின் அடிப்படை இலட்சியமும், உணர்வும் தான், எங்களது இத்தகைய தீவிரப் பணிகளுக்கெல்லாம் அடித்தளமாகும்.

''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டு'' மகிழ்ந்த பேரறிஞர் அண்ணா, எல்லோராலும் ''எங்கள் வீட்டுப் பிள்ளை'' என ஏற்றுக்கொள்ளப்பட்ட, எங்கள் இதய தெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் அடிச்சுவட்டில், துளியும் பிறழாது நடைபோடும் நல்லரசாகவே, தொடர்ந்து எங்களது பயணம் இருக்கும், என்ற உறுதியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொய்வின்றி நம் பணியைத் தொடர்வோம்!

பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்திடுவது, இன்றைய காலகட்டத்தில், நம் தலையாய கடமை என்பதிலும், உங்கள் அரசு கண்ணும் கருத்துமாக உள்ளது. நம் சுதந்திரத்தையும், நாட்டின் ஒருமைப்பாட்டையும், ஒற்றுமை உணர்வினையும், இன்றைக்குச் சவாலுக்கு அழைத்துக் கொண்டிருப்பன, நாட்டின் பல பகுதிகளிலும் தலைதூக்கி வரும், ஜாதி மதச் சச்சரவுகளும், தீவிரவாத அமைப்புக்கள் சிலவற்றின், அராஜக நடவடிக்கைகளும் ஆகும்.

ஜாதி மதச் சண்டைகளோ, தீவிரவாதிகள் நடவடிக்கைகளோ, தமிழகத்தில் தலை எடுக்கவிடாது, தடுத்து நிறுத்தியுள்ளதோடு, அமைதிப் பூங்காவாகவே, தமிழகத்தை நிலைநிறுத்தி வருகிறோம்.

இவ்வாறு பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்பதிலும், முன்னிலை வகித்து வரும் தமிழகத்தின் குரலாக, அண்ணல் காந்தியடிகளும், அவர் தலைமையில் எண்ணற்ற தியாக சீலர்களும், பெற்றுத் தந்த சுதந்திரத் திருநாட்டின் பெயரையும் புகழையும் என்றென்றும் நிலைநாட்டுவோம், நிமிர்ந்து நிற்போம் எனச் சூளுரைத்து,

''பாருக்குள்ளே நல்ல நாடு-
நம் பாரத மணித் திருநாடு''-

என்ற நிலையை அடையத் தொய்வின்றி நம் பணியைத் தொடர்வோம் எனக் கூறி, அனைவர்க்கும் என் விடுதலை நாள் வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். ●

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 12.8.93 அன்று சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவது குறித்து விரிவாக ஆய்வு செய்தார்.

அமெரிக்கத் தொழில்நுட்ப உதவியுடன் சென்னையில் செயற்கை மழை உண்டாக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இதற்காக ஆகும் செலவு ரூ.1.5 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், சென்னை நகர மக்களுக்குத் தங்குதடையின்றித் தாமதமில்லாமல் குடிநீர் வழங்கவேண்டுமென்றும், எவ்வளவு செலவு ஏற்பட்டாலும் சென்னை நகர மக்களுக்கு குடிநீர் எவ்விதத் தடங்கலுமின்றி வழங்கவேண்டுமென்றும் உத்தரவிட்டார்.

தற்போது சென்னை நகருக்கு 410 லாரிகள் மூலம் நெய்வேலியிலிருந்து தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள், மேலும் அதிக அளவில் லாரிகள் மூலம் குடிநீர் கொண்டுவர ஆணையிட்டார். அதன்படி 1000 லாரிகள் மூலம் நெய்வேலியிலிருந்து குடிநீர் கொண்டுவந்து வழங்கப்படும்.

இந்த ஆய்வுக்கூட்டம் சுமார் 1 மணி நேரம் நடந்தது. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், மாண்புமிகு ஊக்கத்துறை அமைச்சர் திரு. இ. மதுசூதனன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. டி.எம். செல்வகணபதி, மாண்புமிகு பிற்படுத்தோர் நலத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன், மாநில காவல் துறைத்தலைவர் திரு. எஸ். ஸ்ரீபால், சென்னை நகரக் காவல்துறை ஆணையாளர் திரு. ஆர். ராஜகோபாலன், சென்னைக் குடிநீர் வாரியத்தலைவர் திரு. பி.சி. சிரியாக், நிர்வாக இயக்குநர் திரு. சீனிவாசன் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



WITH BEST COMPLIMENTS FROM

HOTEL SHIVASAND - V.P.N. COMPLEX
V.P.N. MODERN RICE MILL
SARAVANA THEATRE
SARAVANA RICE MILL

GINGEE-604 202
South Arcot District

With Best Compliments From

Thiru P. SEKAR
Contractor
TWAD
Komalur (Post)
Tirukovilur (Tk)

Thiru V. VEERAMANI
Contractor
TWAD
Irulur (Post)
Padalur (Via)
Tiruchy District

Tmt. S. RAJALAKSHMI
Ragavendra Constructions
4-R, Mahavishnu Street
Villupuram

M/s. THIRUMALAI ENTERPRISES
No.30, K.K. Road
Villupuram

பேரூராட்சிகளின் பெரும் பணிகள்

மு. முத்துசாமி
மாவட்டப் பேரூராட்சி அலுவலர்
திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்.

கிராமங்கள் இந்திய நாட்டின் ஆத்மா, உள்ளாட்சி அமைப்புகளே அதன் உயிர் மூச்சு; உள்ளாட்சி அமைப்புகளில் ஒன்று பேரூராட்சி அமைப்பு.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில், 36 பேரூராட்சிகளும், இரண்டு பஞ்சாயத்து நகரியங்களும் உள்ளன.

பேரூராட்சிகளின் நிர்வாக நலன் கருதி 1981-ஆம் ஆண்டு முதல் 'பேரூராட்சித்துறை' என்று தனியாகப் பிரிக்கப்பட்டு இயங்கி வருகிறது.



பேரூராட்சிகளில் மொத்த மக்கள் தொகை 5 இலட்சத்து 87 ஆயிரத்து 273 ஆகும்.

பேரூராட்சிப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குக் குடிநீர், தெருவிளக்கு, பொதுச் சுகாதார வசதிகள் ஆகிய அத்தியாவசியமான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியது பேரூராட்சிகளின் தலையாய கடமையாகும்.

குடிநீர்

இம்மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பேரூராட்சிகளிலுமே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளில் 671 ஆழ்குழாய்க் கிணறுகளும், 594 அடி பம்புகளும் நன்முறையில் இயங்கி வருகின்றன. இது குறிப்பிடப்பட வேண்டியது அவசியம்.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகமும், அரசும் உலக வங்கியும் கடன் உதவியும் மானியமும் வழங்கி உள்ளன. அதன்படி, உயர்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் நிறுவி குழாய்மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது.

குடிநீர் வசதிக்கு அடுத்தபடியாகக் குறிப்பிட வேண்டியது விளக்கு வசதியாகும். இம்மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பேரூராட்சிகளிலும் மின் விளக்குகள் அமைத்துத் தரப்பட்டுள்ளன. மொத்தம் 11,265 குழல் விளக்குகளும், 215 பாதரச மற்றும் ஆவி விளக்குகளும் பொருத்தப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகின்றன. பேரூராட்சிகளில் இயங்கிவரும் மின் விளக்குகள் தடையின்றி ஒளிர, அரசு தனிக் கவனம் செலுத்தி, நிதி வசதி இல்லாத பேரூராட்சிகளில் மின் கட்டணம் மற்றும் மின் உதிரிப் பாகங்கள் வாங்கிட, அரசு அவ்வப்போது தாராளமாக மானியம் வழங்கி வருகிறது. அதன்படி, 1992-93- ஆம் ஆண்டுக்கு 5 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கி நிதி வசதி இல்லாத பேரூராட்சிகளில் தடையின்றி விளக்குகள் ஒளிர இந்த ஆண்டும் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

பேரூராட்சிகளில் சாலைகள் சீராகவும், செம்மையாகவும் இருக்கும் பொருட்டு, ஆண்டுதோறும் ரூ.2 இலட்சத்திற்குக் குறையாமல் அரசு மானியம் வழங்கிவருகிறது. அதன்படி, 1992-93- ஆம் ஆண்டு ரூ.2 இலட்சம் தூசி படியாத சாலை அமைக்க அரசு மானியமாக வழங்கியுள்ளதை இங்கே குறிப்பிட வேண்டும்.

சுத்தம் சுகம் தரும், நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற மூதுரைக்களுக்கிணங்க பேரூராட்சி சுகாதாரம் பராமரிக்கப்பட வேண்டியது மிக மிக அவசியமாகும். சில பேரூராட்சிகளில் சாக்கடை நீர் தேங்கி, கொசுக்கள் ஏற்படுத்தும் தொல்லைகளை நீக்கிட வடிகால் கட்டும் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் கணிசமான அளவுக்கு அரசு ஒதுக்கீடு செய்து வருகிறது. இந்த ஆண்டு ரூ.30,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு, தேவையான பேரூராட்சிக்கு வழங்கப்பட்டு வடிகால் கட்ட உதவி செய்தது குறிப்பிடத்தக்கதாகும்.

ஊராட்சி ஒன்றியங்களில் நிறைவேற்றப்படும் தன்னிறைவுத்

யாற்றினார். சட்ட மறுப்பு இயக்கத்தில் தீவிரப் பங்கு எடுத்ததால், அரசாங்கத்தால் ஒன்பது மாதங்கள் தண்டிக்கப்பட்டார். கண்ணனூர் மத்தியச் சிறையில் தண்டனை அனுபவித்தார்.

டி.ஆர். மகாதேவ அய்யர் (கல்லிடைக் குறிச்சி)

காந்தியடிகளின் கதர் இயக்கத்தை நெல்லை மாவட்டம் முழுவதும் பரப்பினார். இவர் சென்ற இடங்களில் எல்லாம் அந்நிய நாட்டுத் துணிகள் தீயிடப்பட்டன. வ.உ.சி. மீது அரசினரால் தொடங்கப்பட்ட வழக்கில் வ.உ.சி.க்காக வாதாடினார்.

வ.வே.சு. ஐயர் விட்டுச் சென்ற பரத்துவாஜ ஆசிரமத்தை ஏற்று நடத்தி வந்தார். 1927-இல் காந்தியடிகள் நெல்லைக்கு வருகை தந்தபோது ஆசிர மத்தைச் சேர்ந்த 32 ஏக்கர் நிலத்தையும், கட்டடத்தையும், ரூபாய் நாலாயிரத்தையும் காந்தியிடம் ஒப்படைத்தார். காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தவுடன் தனது வக்கீல் தொழிலை வீசி எறிந்தார். 1932 சட்டமறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டதற்காக 18 மாதங்கள் சிறைத் தண்டனை வேலூர், திருச்சி மத்தியச் சிறைகளில் அனுபவித்தார்.

எல். சட்டநாதக் கரையாளர் (செங்கோட்டை)

வழக்கறிஞரான இவர் தேசபக்தர் பாஷ்யம் அவர்களிடம் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கும் போதே, தேசிய இயக்கத்தில் சேர்ந்தார். 1937-இல் கோவில்பட்டித் தொகுதியில் இருந்து சென்னைச் சட்டசபைக்குக் காங்கிரஸ் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1940-இல் சங்கரன் கோவில் தனிநபர் சத்தியாக்கிரகம் செய்ததற்காக இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டு, ஆறு மாதம் கடுங்காவல் தண்டனையைத் திருச்சி மத்தியச் சிறையில் அனுபவித்தார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராகவும் பணியாற்றியிருக்கிறார்.

பொருளாதாரச் சமத்துவம்தான் சுதந்திரத்தின் உயிர்நாடி. முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் இடையே உள்ள நிரந்தரப் பூசலை அகற்றுவதுதான், பொருளாதாரச் சமத்துவத்திற்கான ஒரே வழி.

சுயராஜ்யப் போராட்டம் என்பது வெறும் அரசியல் துறையில் மட்டும் விழிப்பு ஏற்படுவது அல்ல. சுற்றியுள்ள எல்லாத் துறைகளிலும், சமூகம், கல்வி, ஒழுக்கம், பொருளாதாரம், அரசியல் ஆகிய துறைகள் அனைத்திலுமே விழிப்பு ஏற்படுத்தும் போராட்டத்தையே குறிப்பதாகும்.

தூய்மையான வழிகளின் மூலம் பெற்ற அதே சுதந்திரத்தை, அதே தூய்மையான நேர்மையான வழிகளின் மூலம் காப்பாற்றி வர வேண்டும்.

—அண்ணல் காந்தியடிகள்

டி. பெருமாள் நாயுடு (தென்காசி)

தனது வியாபாரம் பொருட்டுப் பதினைந்து வயதில் சென்னை சென்றிருந்த சமயம், 1927-இல் சைமன் பகிஷ்கார இயக்கம் நடைபெற்றதால், அதில் பங்கு கொண்டு இரண்டு ஆண்டு சிறைத் தண்டனை அடைந்தார். மதுரையில் ஜவுளிக்கடை மறியல், தென்காசி வந்து கள்ளுக்கடை மறியல் செய்தபோது போலீசாரின் தடியடிக்கு உட்பட்டார். 1942 ஆகஸ்ட் போராட்டத்தின்போது சதிவேலை செய்ததாக அலிப்புரம் சிறையில் இரண்டு ஆண்டுக் கடுங்காவல் தண்டனை அனுபவித்தார்.

வி.எஸ். சங்கர சுப்பிரமணிய முதலியார் (திருநெல்வேலி)

1930-32-இல் வீரவ நல்லூர், நெல்லை ஆகிய இடங்களில் நடைபெற்ற தேசிய இயக்கங்களில் தீவிரப் பங்கு 1933-40 வரை இந்தியச் சுதேசி இயக்கச் சங்கச் செயலாளர். 1936-இல் நெல்லை நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவர். 1938-45 மாவட்டக் காங்கிரஸ் கமிட்டித் துணைத் தலைவர்.

1945 மாவட்ட காங்கிரஸ் கமிட்டிச் செயலாளர். 1938-45 மாகாண காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர். 1938-42 நெல்லை நகராட்சித் தலைவர் 1942 இயக்கத்தில் கைது செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் சிறை. 1946-இல் நெல்லை-பாளை நகர் பொதுத் தொகுதிச் சட்டசபை உறுப்பினர்.

எஸ். ஜோதிர்மயானந்தா (திருநெல்வேலி)

1931-32-இல் கல்லூரியில் படிக்கும்போதே கள்ளுக்கடை, ஜவுளிக்கடை மறியலில் ஈடுபட்டார். 1933-39 வரை சுதேசிப் பொருட்காட்சியில் தொண்டர்களை நிர்வாகித்தார். 1935-இல் காங்கிரஸ் பொன்விழாச் செயலாளர். 1939-இல் நெல்லை காங்கிரஸ் செயலாளராக இருந்து போலீஸ் தடியடியை எதிர்த்து வழக்குத் தொடர்ந்தார். 1941-இல் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு வேலூரிலும் அலிப்புரத்திலும் ஆறு மாதம் சிறைத் தண்டனை அனுபவித்தார்.

தொகுப்பு:
தி.வ. கல்யாணசுந்தரம்

பொன்விழாக் காணும் 'வெள்ளையனே வெளியேறு'

1942 ஆகஸ்டுப் புரட்சி இயக்கத்தின் வீர வரலாறு!

'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் தொடங்கி, 9.8.93 அன்று ஐம்பதாண்டுகள் நிறைவு பெற்றன. அண்ணல் காந்தியடிகளின் தலைமையின்கீழ் நடந்த இந்த இயக்கத்தின் வீர வரலாறு இதுதான்:

உலகயுத்த மேகம் கடுமையாகிவிட்டது; கருமையாகிவிட்டது. இந்தியாவில் வேறு வழியின்றி அண்ணல் காந்தியடிகள் யுத்தத்தின் கடைசி சங்க நாதத்தை 1942-இல் ஆகஸ்டு 8, 9 தேதிகளில் பம்பாய் நகரில் 'வெள்ளையனே வெளியேறு' 'செய் அல்லது செத்துமடி' என்ற தாரக மந்திரத்தை எழுப்பினார். அவரவர்களே தலைவர்களாக மாறி, நாட்டின் விடுதலைக்குத் தங்கள் பங்குகளை ஆற்றவேண்டும் என்று ஆணையிட்டார் அண்ணல்.

பம்பாயில் கூடிய ஆகஸ்டு-8, முதல் நாள் கூட்டத்தில் இந்தப் புரட்சிக்கான காரணத்தை விளக்கியும், நேசக்கரம் நீட்டிய அண்ணல் காந்தியடிகளை உதாசீனப்படுத்தியது ஏகாதிபத்தியம். அடிகள் போராட்டக் காரணங்களை நன்கு விளக்கி 'இன்று போய் செயல் திட்டங்களை உருவாக்கி, நாளை வருவோம்' என்று அறிவித்து, தன் பாசறைக்குச் சென்றார்.

வெள்ளையரின் விதி விளையாடிவிட்டது. வைசிராய் லின்லித்கோ சதி செய்து விட்டார். காந்தியடிகள், நேரு, பிரசாத், படேல், ஆசாத் உள்ளிட்ட முன்னணித் தலைவர்களை இரவோடு இரவாகக் கைது செய்து எங்கோ கொண்டு போய் விட்டார். அந்த நிமிடத்திலேயே தொலைபேசிகள் துண்டிக்கப்பட்டன. பத்திரிகைகளுக்குச் செய்திகள் மறுக்கப்பட்டன. போதாதற்கு, வானொலியில் லின்லித்கோ, ''காந்தியடிகளும் காங்கிரசும் பலாத்காரச் செயலில் ஈடுபட்டு விட்டார்கள்'' என்று பொய்ப் பிரச்சாரம் செய்தார்.

இதனை வானொலியில் கேட்ட மக்கள் தலைவர்களை எங்கோ கொண்டு சென்று விட்டார்கள் என்று சந்தேகத்தோடும், ஏற்கெனவே பலமுறை ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதில் அனுபவப்பட்டிருந்த காரணத்தாலும் முதல் நாளில் அடிகள், 'செய் அல்லது செத்துமடி', வெள்ளையனே வெளியேறு' என்ற முழக்கங்களைத் தந்து விட்டபடியாலும் அவரவர்கள் மனப்படி யுத்த எதிர்ப்பில் இறங்கி புரட்சித் தீயைப் புயல் எனப் பரப்பினர்.

இந்தியா என்ற எரிமலை வெடித்தது. ஏகாதிபத்தியக் கட்டடங்கள் எரிந்தன; அதிர்ந்தன. தந்திக்கம்பங்கள் அறுந்தன; சாய்ந்தன. ரயில் தண்டவாளங்கள் பெயர்ந்தன. ராணுவ நடமாட்டங்கள் சிதைந்தன. தபால் பெட்டிகள், சாவடிகள் மற்றும் அரசு சம்பந்தப்பட்ட அனைத்தும் தீக்கிரையாக்கப்பட்டன.

All for you! Choose to your Taste!

M/s RAJARAJAN MOTORS
Authorised Dealers for BAJAJ 2/3 Wheelers

CUDDALORE
Pondy Main Road
Alpet
Cuddalore-607 001
Phone: 20844

NEYVELI
Cuddalore Main Road
Periyakurichi
Neyveli

Gram : ASSEFA-MADRAS
Phone: (044) 475 843
DIRECTOR :
(044) 475 763

எங்கள் இனிய வாழ்த்துக்கள்

அசோசியேசன் ஃபார் சர்வ சேவா ஃபார்ம்ஸ்
279, அவ்வை சண்முகம் சாலை
இராயப்பேட்டை
சென்னை-600.014

மகளிர் நலனில் மகத்தான பணிகள்

எஸ். இராஜலட்சுமி
சமூக நல அலுவலர்
திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்

கூட்டுறவு இயக்கம் மக்களை மக்களாக வாழ வைக்கவும், மனிதாபிமானத்திற்கு மரியாதை தரவும், மக்கள் மனதில் சமதர்ம உணர்வு மலரவும், சமத்துவச் சமுதாயம் உருவாகவும் பாடுபடுகிறது. தொடக்க காலத்தில் தேவைக்கு மட்டுமே உருவான கூட்டுறவுச் சங்கங்கள், இன்றைய நாளில் பல்துறையிலும் மக்களுக்குச் சேவை செய்யும் நிறுவனங்களாக விளங்குகின்றன.

தமிழகத்தில் உள்ள வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற இலட்சியத்துடன் நலிவுற்ற பிரிவைச் சார்ந்த மக்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்பு தரவும், சுயமாக வருமானத்தை ஏற்படுத்திக் கொள்ளவும் மாநில அரசுகள் பல சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

இத்திட்டங்களைச் செயல்படுத்த, சமூக நலத்துறை மூலம் மகளிர் மேம்பாட்டுத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கிப் பராமரித்து, உறுப்பினர்களின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்துவதே இத்துறையின் நோக்கமாகும்.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் எட்டு மகளிர் மேம்பாட்டுத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. தையல் மகளிர்க்கு வேலை வாய்ப்பு வழங்கும் நோக்குடன் தொடங்கப்பட்ட இரண்டு தையற் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும், ஊட்டச் சத்துணவு தயாரிக்கும் இரண்டு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும், காலணி தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டும், சாக்குகட்டித் தொழிற் கூட்டுறவுச் சங்கம், எழுது பொருள் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஆகியவை உள்ளன. இச்சங்கங்கள் சுமார் 1500 பெண்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கி, கணிசமான கூலி கொடுத்து லாபகரமாகச் செயல்பட்டு வருகிறது.

தமிழக அரசின் இலவசச் சீருடைத் திட்டம், சத்துணவுத் திட்டம், காலணி, வழங்கும் திட்டம், விதவைக் குழந்தைகளுக்கு மாணவர் குறிப்பேடு வழங்கும் திட்டம், கரும்பலகைத் திட்டத்தின்கீழ் உற்பத்தியை மேற்கொண்டு வறுமைக் கோட்டின்கீழ் உள்ள நலிவுற்ற மகளிர்க்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு இம்மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அளித்து வருகின்றன,

இராஜவல்லிபுரம் இணை உணவுத் தயாரிக்கும் மகளிர் மேம்பாட்டுத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 33 ஆதிதிராவிடர், 13 பிற்பட்ட மற்றும் 4 பிற வகுப்பைச் சார்ந்த 50 மகளிர்களை உறுப்பினர்களாகக் கொண்டது. இது, 1.3.1989 அன்று இணை உணவு உற்பத்தியைத் தொடங்கியது. சங்க மகளிர் உறுப்பினர்களிடம் இருந்து ரூ.18,310 பங்குத் தொகையாகவும், தமிழக அரசிடம் இருந்து பங்குத் தொகையாக ரூ.5,000-மும் நடைமுறை மூலதான மானியம், கருவிகள் மானியம், பயிற்சி மானியமாக ரூ.3,47,350 பெற்றுள்ளது. 1992-93-ஆம் ஆண்டில் ரூ.32,66,990 மதிப்புள்ள 435.235 டன் இணை உணவு உற்பத்தி செய்து ரூ.35,06,000 மதிப்புள்ள 438.250 டன் உணவு விற்பனை செய்து ரூ.66,386 நிகர லாபமாக ஈட்டியுள்ளது. சங்கத்தில் உற்பத்தி செய்யப்படும் இணை உணவு ஊட்டச் சத்துணவுத் திட்ட அலுவலகங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

சுத்தமல்லி பராசக்தி ஊட்டச்சத்து உணவு தயாரிக்கும் மகளிர் மேம்பாட்டுத் தொழில் கூட்டுறவுச் சங்கம் 1.3.1989 முதல் ஊட்டச் சத்துணவு உற்பத்தி செய்து வருகிறது. 52 மகளிர் உறுப்பினர்களைக் கொண்ட

திட்டத்தைப்போல், இம்மாவட்டத்திலுள்ள 38 பேரூராட்சிகளை மூன்று பகுதிகளாகப் பிரித்து, முதல் பகுதியாக 13 பேரூராட்சிக்கும், சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ரூ.23.90 இலட்சம் அரசு அனுமதி வழங்கி கருங்கல் சாலைகள், வடிகால்கள், மற்றும் தார்ச் சாலைகள் பணிகள் தொடங்கப்பட்டு முடியும் தருவாயில் உள்ளன.

பேரூராட்சிகளின் தரத்தை மேம்படுத்தவும், பொதுமக்களுக்கு வசதிகளைக் கூடுதலாகச் செய்திடவும், இத்திட்டம் பெரிதும் பயனுள்ளதாக உள்ளதெனக் கூறினால் அது மிகையாகாது. அரசின் ஆணைப்படி மீதமுள்ள பேருராட்சிகளில் இரண்டு தொகுப்பாகப் பிரிக்கப்பட்டு இத்திட்டம் நிறைவேற்றப்படும். 1993-94-இல் 13 பேரூராட்சிகளிலும் - அடுத்து வரும் ஆண்டில் மீதமுள்ள பேருராட்சிகளில் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

பேருந்து நிலையங்கள்

பொதுமக்களின் வசதிக்காகவும் பேரூராட்சிகளின் வருமானத்தைப் பெருக்கிடும் நோக்கத்துடனும், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூலம், இட வசதி உள்ள பேருராட்சிகளில் பேருந்து நிலையங்கள் அமைத்துக் கொள்வதற்கு, அரசு அவ்வப்போது ரூ.10 இலட்சம் முதல் 15 இலட்சம் கடன் வழங்குகிறது. இந்தக் கடன் 20 ஆண்டுத் தவணைகளில் சுலப வட்டி விகிதத்தில் திரும்பச் செலுத்தப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில், சிவகிரி, வடக்குவள்ளியூர், வாசுதேவநல்லூர், கல்லூடைக்குறிச்சி பேருராட்சிகளில், பேருந்து நிலையங்கள் அமைக்கப்பட்டு, அதன்மூலம் பேரூராட்சிக்குக் கணிசமான வருவாய் கிடைக்க வழி வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பேரூராட்சிக்கும் ஆண்டுதோறும் சராசரி ரூபாய் ஒரு இலட்சம் வருவாய் கிடைத்து வருகிறது.

● பயன் கருதாது செய்யப்படும் பணியே தொண்டாகும். தொண்டு என்பது அடிமை வேலையன்று. அது தெய்வப் பணி.

— தமிழ்த் தென்றல் திரு.வி.க.

அரசு நிதி வசதியற்ற பேரூராட்சிகளுக்குக் குடிநீர், சாலை வசதி செய்து கொடுக்க பகுதி-2 திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் ரூ.2 இலட்சம் வீதம் முழு மானியமாக நிதி உதவி அளித்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இலஞ்சி, நான்குநேரி, பண்பொழி ஆகிய பேரூராட்சிகளுக்குத் தலா 2 இலட்சம் பெற்று குடிநீர்த் திட்டத்தை விரிவாக்கம் செய்துள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதன் மூலம் இந்த மூன்று பேரூராட்சிகளிலும், சுமார் 7,000 மக்கள் பயன் பெறுகின்றனர்.

வறட்சி நிலவுகின்றபோதும், பேரூராட்சிக்கு உரிய பங்கினை அரசு அவ்வப்போது நிதி உதவி அளித்து போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து குடிநீர் வசதி செய்யப்படுகிறது. அதன்படி, 1993-94-ஆம் ஆண்டுக்கு வறட்சி நிவாரணத் திட்டத்திற்கு, குடிநீர் பெருகிட ரூ.0.44 இலட்சமும், புதியதாக 9 ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்க ரூ.2.25 இலட்சமும், மானிய ஒதுக்கீது செய்யப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், பேரூராட்சி நிதியிலிருந்து வறட்சிப் பணிகளைச் செய்திட ரூ.4,01,900 ஒதுக்கீடு செய்து பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

மனிதக் கழிவை மனிதன் சுமக்கக் கூடாது என்ற அரசின் கொள்கைப்படி, பேருராட்சிகளில் தனியார் வீடுகளில் உள் உலர் கழிப்பிடங்களை நவீன கழிப்பிடமாக மாற்றிடத் தனியார் ஒவ்வொருவருக்கும் ரூ.1,500 செலவில், உலர் கழிப்பிடங்களை நவீனக் கழிப்பிடங்களாக மாற்றத் திட்டம் செயலாக்கப்பட்டு, சிவகிரி, வடக்குவள்ளியூர், சுரண்டை ஆகிய பேருராட்சிகளில் மொத்தம் 500 கழிப்பிடங்கள் கட்டப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டம் ஒவ்வொரு வீட்டிலும் நவீனக் கழிப்பிடம் கட்ட வேண்டுமென்ற எண்ணத்தை உருவாக்கி வருகிறது.

பேருராட்சிகளில் முக்கியப் பணிகள் செய்து வரும் சுகாதாரப் பணியாளர்களுக்கு, அரசு கருணை கொண்டு இலவசமாக 370 மழைக்கோட்டுகள் இம்மாவட்டத்திலுள்ள சுகாதாரப் பணியாளர்களுக்கு வழங்கியுள்ளது மிகவும் பாராட்டுக்குரிய திட்டமாகும்.

கடந்த 1992 நவம்பர் மாதத்தில் எதிர்பாராத வகையில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளத்தினால், சில பேரூராட்சிகள் சிக்குண்டு குடிநீர் ஆதாரங்கள் முழுவதும் பாதிக்கப்பட்டன. அப்பகுதியில் வாழ்கின்ற மக்கள் குடிநீர் மற்றும் போக்குவரத்திற்கும் அவதிப்படாமல் இருக்கும் பொருட்டு அரசு தாராளமாக ரூ.71.84 இலட்சம் வெள்ள நிவாரண நிதியாக வழங்கி பாதிக்கப்பட்ட குடிநீர் ஆதாரங்கள் மற்றும் சாலைகளை மேம்பாடு செய்து மக்களின் துயர் துடைக்கப்பட்டதை இங்கே குறிப்பிட வேண்டும்.

இம்மாவட்டத்திலுள்ள பேரூராட்சிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் போதுமான நிதி ஒதுக்கீடுகளை அவ்வப்பொழுது வழங்கி, பேரூராட்சிப் பகுதிகளில் வளர்ச்சிப் பணிகள் நன்கு செயல்பட உதவி செய்துள்ளதை மறக்க முடியாது.

தேசீய திட்டமான குடும்பநலம், சிறுசேமிப்புத் திட்டங்களில் பேரூராட்சிகள் பங்கு கொண்டு ஆண்டுதோறும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் ஒதுக்கீடு செய்யும் குறியீட்டினைத் தொய்வின்றி எய்தி வருவது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

1992-93-ஆம் ஆண்டுக்கு குடும்பநலத் திட்ட ஒதுக்கீடு 600-க்கு 681 சாதனை செய்து இலக்கினை விஞ்சியமைக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பாராட்டுக்கள் தெரிவித்துள்ளதை இங்கே குறிப்பிடலாம்.

இதுபோல் சிறுசேமிப்பிலும் ரூ.950 இலட்சம் நிர்ணயிக்கப்பட்டதற்கு, ரூ.980 இலட்சம் வசூல் செய்து இலக்கினை விஞ்சியுள்ளது.

பேரூராட்சிகள் நிர்வாகம் சீராகவும், செம்மையாகவும் மக்களுக்குப் பயனுள்ளதாக விளங்கிட அதனுடைய வருமானத்தைப் பெருக்குவது மிக முக்கியமானதாகும். பேருராட்சிகளில் விதிக்கப்படும் வரி இனங்கள் மூலமாக ரூ.94.37 இலட்சமும், வரியில்லா இனங்கள் மூலம் ரூ.89.44 இலட்சமும் கிடைக்கின்றது.

பல பேருராட்சிகளில் நிதி வசதிப் பற்றாக்குறையாக இருக்கிறது. இருந்தாலும், அவ்வப்போது அரசு வழங்கும் மானியத்தைக் கொண்டு, பேரூராட்சிகள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

பேரூராட்சிகள் சிறந்து விளங்கிட

இம்மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பேரூராட்சிகளுக்கும், அரசுத் திட்டங்களை அவ்வப்போது தாய் உள்ளத்தோடு தாராளமாகப் பேரூராட்சிகளுக்கு வழங்கி, பேரூராட்சி நிர்வாகம் செம்மையாகச் செயல்பட உதவி செய்து வருகிறார்கள். இதன்மூலம் பேரூராட்சிப் பகுதிகளில் வாழுகின்ற மக்கள் உள்ளாட்சி மூலம் நன்மைகளைப் பெற்று, அவர்களின் ஒத்துழைப்பை மென்மேலும் வழங்க வேண்டுமென இந்த நேரத்தில் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.





எங்கள் மலை!

தென்பாண்டி நாட்டில் இயற்கை அழகும் இறைவன் அருளும் வாய்ந்த சீரூர் திருக்குற்றாலம். அதன் பெருமையைக் கண்களிப்பக் கண்ட திருஞான சம்பந்தர்,

"கொம்பார் சோலைக் கோலவண்டு யாழ் செய் குற்றாலம்" என்று பாடி மகிழ்ந்தார். இத்தகைய குற்றாலத்தின் பெயரைச் சோழ நாட்டிலுள்ள திருத் துருத்தி என்னும் பாடல் பெற்ற தலம் ஏற்றுக் கொண்டது. காவிரித் துருத்தி என்று தேவாரத்திலும், வீங்குநீர்த் துருத்தி என்று சாசனங்களிலும் வழங்கப் பெற்ற அவ்வூர் பிற்காலத்தில் குலோத்துங்க சோழன் குற்றாலம் என்று பெயர் பெற்றது. இப்பொழுது குற்றாலம் என்பதே அதன் பெயராகும்.



திருக்குற்றாலம்

வானரங்கள் கனிகொடுத்து
மந்தியோடு கொஞ்சும்;
மந்திசிந்து கனிகளுக்கு
வான்கவிகள் கெஞ்சும்;

கானவர்கள் விழிஎறிந்து
வானவரை அழைப்பார்;
சுவனசித்தர் வந்துவந்து
காயசித்தி விளைப்பார்;

தேனருவித் திரையெழும்பி
வானின்வழி ஒழுகும்;
செங்கதிரோன் பரிக்காலும்
தேர்க்காலும் வழுகும்;

கூவல்இளம் பிறைமுடித்த
வேணிஅலங் காரர்
குற்றாலத் திரிகூட
மலை எங்கள் மலையே!

— குற்றாலக் குறவஞ்சி

இச்சங்கம், 32 ஆதிதிராவிடர் மற்றும் 20 பிற்பட்ட மகளிர்க்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கி வருகிறது.
உறுப்பினர்களிடம் இருந்து ரூ.17,970 பங்கு மூலதனமாகவும் தமிழக அரசிடமிருந்து பங்குத் தொகையாக ரூ.5,000-மும் நடைமுறை மூலதன மானியம், கருவிகள் மானியம் பயிற்சி மானியமாக ரூ.2,73,850 பெற்றுள்ளது.

1992-93-ஆம் ஆண்டில் ரூ.33,17,931 மதிப்புள்ள 425.1 டன் ஊட்டச் சத்துணவு உற்பத்தி செய்து ரூ.33,96,720 மதிப்புள்ள 424.5 டன் உணவு விற்பனை செய்து நிகர லாபமாக ரூ.1,23,487 ஈட்டியுள்ளது.

இந்தச் சங்கத்தில் உற்பத்தி செய்யப்படும் ஊட்டச் சத்துணவு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், திருநெல்வேலி மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.
விவசாயத் தொழிலைத் தவிர மாற்றுத் தொழில் இல்லாத இப்பகுதியில் இச்சங்கம் அமைந்து மகளிர்க்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கி தரமான உணவு உற்பத்தி செய்து வருகிறது.

திருநெல்வேலி மகளிர் தையற் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம் தையற் தெரிந்த மகளிர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக 18.6.1986-இல் பதிவு செய்யப்பட்டு, 25.7.86-இல் உற்பத்தியைத் தொடங்கியது. 520 அங்கத்தினர்களின் பங்குத் தொகையாக ரூ.52,000 கொண்டு வறுமைக்கோட்டின் கீழே உள்ள மகளிர்க்கும், விதவைகளுக்கும், கணவரால் கைவிடப்பட்ட ஆதரவற்ற மகளிர்க்கும் வேலை வாய்ப்புக் கொடுத்து அவர்களது பொருளாதார நிலையில் முன்னேற்றம் அடைவதற்குப் பாடுபட்டு வருகிறது.

தமிழக அரசின் சத்துணவுத் திட்டத்தின்கீழ் 1 முதல் 8 வகுப்பு வரை மாணவ-மாணவியர்க்குச் சீருடைகள் தைப்பது மூலம், பிற்பட்டோர், நலத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் இதர அரசுத் துறைகளில் இருந்து சீருடைகள் தைக்க ஆணைகள் பெற்று உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகிறது. ஆண்டுதோறும் 500 உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து 7 இலட்சம் ரூபாய் கூலியாகக் கொடுத்து வருகிறது. இச்சங்கம் 1986-87 முதல் தொடர்ந்து இலாபகரமாகச் செயல்பட்டு வருகிறது.

அதுபோல, வள்ளியூர் ஒன்றிய மகளிர் தையற் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கமும் செயல்பட்டு வருகிறது.
உறுப்பினர்கள் 603 பேரும் அவர்களின் பங்கு மூலதனமாக ரூ.64,229 கொண்டு 1992-93-இல் ரூ.7,26,450 தையற் கூலியாக அரசிடமிருந்து பெற்று உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்து, கடந்த ஆண்டில் இச்சங்கம் ரூ.62,827 லாபம் ஈட்டித் தொடர்ந்து லாபத்தில் செயல்பட்டு வருவதுடன், நலிவுற்ற தையற் மகளிர்க்கு தொடர்ந்து வேலை வாய்ப்பும் வருவாயும் போனஸும் ஈட்டிக் கொடுத்து வருகிறது.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் தென்பகுதி கிராமப் புறத் தையற் மகளிர்க்கு விவசாயத் தொழிலுடன் இத்தையற் தொழில் உபரியான வருவாயைக் கொடுத்து அவர்களின் பொருளாதார நிலை மேம்பட உதவுகிறது. பிற்பட்டோர் நலத்துறை ஆதிதிராவிடர் நலத்துறை அரசின் இதரத் துறைகள் மூலமும், கோ-ஆப்டெக்ஸ் போன்ற நிறுவனங்களிடம் இருந்தும் சீருடை தைக்க ஆணைகள் பெற்று உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது.

நலிவுற்ற மகளிர்க்கு வேலை வாய்ப்பு வழங்கும் நோக்குடன் தொடங்கப்பட்ட திருநெல்வேலி அண்ணா மகளிர் காகிதம் மற்றும் எழுது பொருள் தொழிற் கூட்டுறவுச் சங்கம் 19.3.1980 அன்று தனது உற்பத்தியைத் தொடங்கியது. 95 மகளிரை உறுப்பினர்களாகக் கொண்ட இச்சங்கம் அரசு அலுவலகங்களுக்குத் தேவையாக பைல்பேடுகள், அலுவலகங்களுக்குத் தேவையாக பைல்பேடுகள், தபால் பேடுகள், கவர்கள், எழுது பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகிறது.

சத்துணவு மையங்களுக்குத் தேவைப்படும் பதிவேடுகளைக் குறைந்த விலையில் விற்பனை செய்து வருகிறது. மாணவர் குறிப்பேடுகள், கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் லெட்ஜர்களையும் உற்பத்தி செய்து வருகிறது. இச்சங்கத்தில் அச்சுப் பிரிவும் செயல்பட்டு வருவதால் அரசுச் சார்புடைய நிறுவனங்களுக்குத் தேவைப்படும் படிவங்களை அச்சிட்டு வழங்குகிறது.

உறுப்பினர்கள் பங்குத் தொகையாக ரூ.72,375 கொண்டுள்ளது. தமிழக அரசிடம் இருந்து இயந்திரங்கள் மானியமாக ரூ.1,40,000 பெற்றுள்ளது. 1992-93-இல் ரூ.2,08,608.65 விற்பனை செய்து ரூ.36,913.54 நிகர லாபம் ஈட்டியுள்ளது.
விதவைகள் குழந்தைகளுக்குத் தமிழக அரசு சமூக நலத்துறை மூலம் வழங்கும் இலவச மாணவர் குறிப்பேடுகள் இச்சங்கம் தயாரித்து வழங்குகிறது.

கல்லாமையை இல்லாமல் ஆக்குவதே அறிவொளி இயக்கத்தின் பெரு நோக்கமாகும். கரும்பலகைத் திட்டமும், கல்லாமையை ஒழிக்கும் திட்டமாகும். கரும்பலகைத் திட்டத்திற்கு உதவும் பொருட்டே



● தனக்கென்று வாழாது பிறர்க்கென்று வாழ்பவனே மனிதன். அவனது வாழ்க்கையே வாழ்க்கை.

கிராமங்களிலும், நகரங்களிலும் வசிக்கும் ஏழைப் பெண்கள், தாங்கள் வாழும் சூழ்நிலைக்கேற்ப ஒரு தொழிலைத் தேர்வு செய்து, அதன் மூலம் சுயவேலைவாய்ப்புப் பெற அரசு உதவி செய்கிறது. "தனிமரம் தோப்பு ஆகாது" என்ற பழமொழிக்கிணங்க, பெண்கள் ஒன்று சேர்ந்தால் அவர்களின் பலம் பன்மடங்காகும். அதன் பயன் இந்த மாநிலத்தை வாழ வைக்கும் என்பது, நாம் அனைவரும் அறிந்த உண்மையாகும்.

எனவே, இத்திட்டத்தின்கீழ், பெண்களைக் குழுக்களாக ஏற்படுத்தி, அவர்கள் தொழில் செய்ய வங்கிக் கடனும் மானியமும் ஏற்பாடு செய்யப் படுவதோடு, மூலப் பொருட்களைப் பெறுவதற்கும் உற்பத்தியான பொருள் களை விற்பதற்கும், அரசு ஆங்காங்கே வசதி செய்து தருகிறது. இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டவுடனே, பூர்வாங்க வேலைகள் துவங்கப்பட்டு, இன்றைக்கு முதல் கட்டமாக 10,000-க்கு மேற்பட்ட பெண்களுக்கு, சுய வேலைவாய்ப்பு உதவிகள் வழங்கப்படுகின்றன.

பெண்களின் முன்னேற்றத்திற்கு, கல்வியறிவும், அவரவர்களின் பொருளாதார நிலையில் உயர்வும் மிகவும் முக்கியமானவை. பெண்களை முழுவதும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக மாற்ற, அறிவொளி இயக் கத்தை இந்த அரசு தீவிரமாகச் செயல்படுத்தி வருவதை நீங்கள் அறிவீர்கள்.

ஒரு இலட்சம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் எங்களின் இந்த உன்னத முயற்சி, தமிழ்நாட்டில் பெண்களின் முன்னேற்றத்தில் ஒரு சாதனைச் சரித்திரத்தைப் படைக்கும் என்று நம்புகிறேன்.

இம்மாவட்டத்தில் தொடங்கப்பட்ட அன்னை இந்திரா காந்தி சாக்குக் கட்டி உற்பத்தி செய்யும் மகளிர் மேம்பாட்டுத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் 9.2.1987-இல் சாக்கு கட்டி உற்பத்தியைக் கூனியூரில் தொடங்கியது.

விவசாயத் தொழிலே முக்கிய தொழிலான இப்பகுதியில் மகளிர்க்கு மாற்றுத் தொழிலாக இச் சாக்குக்கட்டி உற்பத்தியாளர் மகளிர் மேம்பாட்டுத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் அமைந்துள்ளது. இச் சங்க 71 உறுப்பினர்களின் பங்குத் தொகையாக ரூ.2,710 அரசுப் பங்குத் தொகை ரூ.7,500 தமிழக அரசுப் பயிற்சி மானியம், நடைமுறை மூலதானமானியம் என்று ரூ.3,45,060 வழங்கியுள்ளது. 1992-93-இல் நிகர இலாபமாக ரூ.26,295 பெற்றுச் செயல்பட்டு வருகிறது. அரசுப் பணிகள், தனியார் பள்ளிகள் பொறியியல் கல்லூரி மற்றும் தனியார் கல்லூரிகளுக்குச் சாக்குகட்டி விற்பனை செய்து வருகிறது. அலங்காரப் பொருள் தயார் செய்து விற்பனை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழக அரசு பள்ளி மாணவ மாணவியர்க்கு, இலவசக் காலணி வழங்கும் திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. இலவசக் காலணி உற்பத்திக்காக மகளிர்க்கு வேலை வாய்ப்பு வழங்கும் நோக்குடன் தொடங்கப்பட்டு திருநெல்வேலி மாவட்டத்தில் செயல்பட்டுவரும் காலணி மகளிர் மேம்பாட்டுத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டு ஆகும்.

வாகுதேவநல்லூர் காலணி உற்பத்தியாளர் மகளிர் மேம்பாட்டுக் குடிசை தொழிற் கூட்டுறவுச் சங்கம் 8.1.1988 அன்று தனது காலணி உற்பத்தியை ராயகிரியில் தொடங்கியுள்ளது. மகளிர் காலணித் தொழிலாளர்கள் 62 பேர்கள் உறுப்பினர்களாகக் கொண்ட இச்சங்கத்தில், உறுப்பினர்கள் பங்குத் தொகையாக ரூ.620 செலுத்தியுள்ளார்கள் 1992-93, 7,692 செட் காலணிகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்துள்ளது. இச்சங்க உறுப்பினர்கள் அனைவரும் ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்கள்.
காலணித் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் நோக்குடன் தொடங்கப்பட்ட இன்னொரு மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கம் குருக்கள்பட்டி காலணி உற்பத்தியாளர் மகளிர் மேம்பாட்டு கூட்டுறவுச் சங்கம் ஆகும். இச்சங்கம் குருக்கள்பட்டியில் காலணி உற்பத்தியை 11.1.1988-ஆம் ஆண்டு தொடங்கியுள்ளது. மகளிர் காலணித் தொழிலாளர்கள் 84 பேரை உறுப்பினர்களாகக் கொண்ட இச்சங்கம் 1992-93-இல் 10,366 இணை காலணி உற்பத்தி செய்து விநியோகம் செய்துள்ளது.

மேற்கண்ட சங்கங்களில் காலணிச் சங்கங்கள் தவிர அனைத்துச் சங்கங்களும் இலாபத்தில் இயங்கி வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு தினம் ரூ.20 முதல் 25 வரை கூலியாக வழங்கி, ஆதிதிராவிடர் மற்றும் பின்தங்கிய வகுப்பினர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியுள்ளது.

1897-இல் செல்வி நைஷ் (Miss Naish) என்பாரின் அரு முயற்சியால் மாணவியர் மத்தியில் 'கிறிஸ்துவுக்குள் வாலிபர் சங்கம் (YFCA) என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

1910-இல் செல்வி ஆங்குவித் அம்மையாரால் சாராள் தக்கர் பழைய மாணவியர் சங்கம் (STOGA) ஏற்படுத்தப் பட்டுச் சிறப்பாகச் செயல்படத் தொடங் கியது.

1924-இல் செல்வி சேம்பர்ஸ் அம்மையாரால் சாரணர் இயக்கம் தொடங்கப்பட்டது. மாணவியர் பல துறைகளிலும் சிறந்து விளங்க, அத்தகைய அமைப்புகள் பெரிதும் உதவின.

1934-இல் இட நெருக்கம் காரண மாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளியின் ஒரு பிரிவு பழைய பேட்டைக்கு மாற்றப் பட்டது. 1947- ஆம் ஆண்டு பாளையங் கோட்டை நகராட்சிக்குட்பட்ட பெருமாள் புரத்திற்குத் தெற்கில் 40 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு, அங்குப் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டன. கல்லூரி புதிய இடத்திற்கு நகர்த்தப்பட்டது. செல்வி ஆங்குவித், செல்வி பிளாரன்ஸ் கவெயிள்சன், செல்வி பாசன், செல்வி வின்ட்சி போன் றோரின் அரும்பணியால் பள்ளி வளர்ந்து பெருகியது.

1945-ஆம் ஆண்டு முதல் பாடங்கள் தமிழில் படித்துக் கொடுக்கப்படுகின்றன. 1950-ஆம் ஆண்டில் நர்சரி (Nursery) பள்ளிக்கூடம் தொடங்கப்பட்டது. 1958-இல் நூற்றாண்டு விழா கொண் டாடப்பட்டது. 1962-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் ஆறாம் வகுப் பிலும், அதன் மேல் வகுப்புகளில் ஒரு பிரிவில் எல்லாப் பாடங்களும் ஆங்கிலத் தில் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. இடை நிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கென இப்பள்ளியில் வடகிழக்குப் பாகத்தில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டன. 1963-ஆம் ஆண்டு மே மாதத்தில் அரசின் நிதி உதவி கொண்டு மாணவி யருக்கென விடுதி ஒன்று கட்டப்பட்டது. 1967-ஆம் ஆண்டு முதல் தட்டெழுத்து, மனையியல் பாடங்கள் கற்றுக் கொடுக்கப் படுகின்றன. 1968-ஆம் ஆண்டு அரசின் நிதி உதவியால் அதற்குரிய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. 1969-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் அரசின் நிதி உதவியால் 4 வகுப்பறைகள் கட்டப் பட்டன. 1978-ஆம் ஆண்டு உயர் நிலைப் பள்ளி மேனிலைப் பள்ளி யானது. 1981-ஆம் ஆண்டு 6 வகுப் பறைகள் கட்டப்பட்டன.

பெற்றோர் ஆசிரியர் கழகம்

1979-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5-ஆம் நாள் நிறைந்த குறிக் கோள்களைக் கொண்டு பெற்றோர் ஆசிரியர் கழகம் தொடங்கப்பெற்றுச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது.

இன்றைய நிலை

ஐந்தே மாணவியரோடு தொடங்கப் பட்ட சாராள் தக்கர் உயர்நிலைப் பள்ளி இன்று ஏறத்தாழ ஐயாயிரம் மாணவிய ரோடு சாராள் தக்கர் மேனிலைப் பள்ளியாகச் சிறந்த கல்வியினை மகளிர்க்கு வழங்கி வருகிறது. பத்தாம், பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் - நெல்லைத் திருமண்டலப் பள்ளிகளில் சிறப்பான இடத்தைப் பெற்று வருகிறது. தொடர்ந்து பல் லாண்டுகள் 95 சதவிகிதத்துக்கு மேலேயே தேர்ச்சி பெற்று வருகிறது.

மாணவியர் இறை உணர்வும் சீரிய ஒழுக்கமும் உடையவர்களாய் விளங்க வேண்டுமென்று சன்மார்க்கப் போதனைகள் வழங்கப்படுகின்றன. நெல்லைத் திருமண்டல வேதாகமத் தேர்வில் தொடர்ந்து பல ஆண்டுகள் முதலிடம் பெற்றதால், கேடயம் பள்ளிக்கே நிரந்தரமாக அளிக்கப்பட்டுள் ளது. இசை, ஓவியம், கட்டுரை, சொற் பொழிவு ஆகிய போட்டிகளிலும் பெருமளவு கலந்து, பற்பலப் புரிகளைப் பெற்று வருகிறது.

விளையாட்டுத் துறையில் சாராள் தக்கர் மேனிலைப் பள்ளியின் பங்கு குறிப்பிடத்தக்கது. விளையாட்டுப் போட்டி களில் நெல்லை மண்டலப் பள்ளிகளில் மிகச் சிறந்த பள்ளி என்ற பெயரினைப் பெற்றுள்ளது.

விவசாயிகளின் பார்வைக்கு:

நெல்லையில் நெல் குவிக்கும் சகோதரர்கள்!

விடாமுயற்சி, உழைப்பு, தன்னம்பிக்கை - இம்மூன்றும் வாழ்க்கையில் உயர்வதற்கான படிகள் என்பதைத் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கங்கை கொண்டானை அடுத்த கோட்டையடி கிராமத்தைச் சேர்ந்த திரு எம். பூல்பாண்டி அவர்கள் உணர்ந்திருக் கிறார். இல்லையென்றால், தமிழக அரசின் பரிசுகளை இருமுறை இவர் பெற்றிருப்பாரா?

ஏப்படி? அது ஒரு கதை!

1992-93-ஆம் ஆண்டு, கடந்த ஆண்டைப்போல் பல்வேறு பயிர் களுக்கு விளைச்சல் போட்டி நடத்து வதற்கு அரசு அனுமதி அளித்திருந் தது. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு நெற்பயிருக்கு மாநில முதல் பரிசாக ரூ.50,000-க்குப் பதில், ரூபாய் ஒரு இலட்சமாக மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணைப்படி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார். இது வேளாண்மை அமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் வேளாண்மை வளர்ச்சிக்காக அறிவித்த 21 அம்சங் களில் ஒன்றாகும். இதன்படி, பயிர் விளைச்சல் போட்டியில் மாநில முதல் பரிசாக, எல்லாப் பயிர் களுக்கும் பரிசுத்தொகை கூடுதலாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நெற்பயிருக்கு ஒரு இலட்சமும், நிலக்கடலை (இறவை)-க்கு ரூ.10,000-மும், பயிர்களுக்குத் தலா ரூ.5,000-மும் அறிவிக்கப் பட்டுள்ளது.

தஞ்சைத் தரணி தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்றால், பரணி பாயும் தரணி நெல்லை அள்ளிக் கொடுப்பதில் சிகரம் எனலாம். அந்தவகையில் கடந்த ஆண்டு மாநிலத்திலேயே முதல் விளைச் சலைக் கண்ட நெல்லை விவசாயி, இந்த ஆண்டும் அதே சாதனை யைத் தொடர்ந்து படைத்துள்ளார். இச் சாதனையின் சிகரமாகக் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு அபரித மான மகசூல் எடுத்துள்ளார்.

அவர் செய்த சாதனை தான் என்ன?

இவ்வாண்டு கங்கைகொண்டான் கிராமம் கோட்டையடி திரு எம். பூல்பாண்டி அவர்கள் மாநில நெல் விளைச்சல் போட்டியில் எக்டே ருக்கு 26,921 மகசூல் எடுத்துள்ளார்.

இவரது நிலம் கோட்டையடிக் கிராமத்தில் சிற்றாறுப் பாசனப் பகுதியில் ஒருபோக நஞ்சையாகும். அந்த நிலம் வண்டல் கலந்த கரிச லாகும். வடிகால் வசதி மற்றும் பாசன வசதிகளை மேம்பட்ட முறையில் கொண்டது. சிற்றாறு மூலம் காலத்தில் பாசனமும், கிணறு மூலம் இதரக் காலங்களில் பாசனமும் பெறும் வசதி கொண் டது. இயற்கையாகவே நல்ல வளம் கொண்ட நிலம்.

இவர் கடந்த ஆண்டைப்போல் இந்த ஆண்டும் நெல் விளைச்சல் போட்டியில் மாநில முதல்பரிசு பெறவேண்டும் என்ற அவாவில் சாகுபடி முயற்சிகளை மேற்கொண் டார். இதற்காக அடிப்படையான வித்துத் தேர்வில் கவனம் செலுத்தி அதற்கான ரகம் ஒன்றினைத் தேர்வு செய்தார். அது சாவித்திரி அல்லது பொன்மணி என்று அழைக்கப்படும் சி.ஆர்.1009 என்ற ரகம் ஆகும். தன்னிடமிருந்த விதையை விட, துறையில் சான்றிதழ் பெற்ற விதை யைப் புதிதாக வாங்கவேண்டும் என்று, வேளாண்மை விரிவாக்க மையத்திலிருந்து பெற்று வந்தார்.

விதைகளை வாங்கி வந்த உடன், ஏக்கருக்கு 20 கிலோ என்ற அளவில் எடுத்து விதைநேர்த்தி மருந்து-கார்பெண்டாகிம் கிலோ வுக்கு 2 கிராம் வீதம் விதைப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன் கலந்தார். பின் முளைகட்டிய விதைகளுடன் 20 கிலோ விதைக்கு 2 பொட்டலம் அசோஸ்பைரில்லம் கலந்து பின் விதைத்தார்.

ஒரு ஏக்கருக்கு 8 செண்ட் அளவு நாற்றங்காலை, கிணற்று அருகில் வடிகால் வசதியுடன்கூடிய பகுதியில் தேர்வுசெய்து, இரண்டு வண்டி தொழு உரம் இட்டு உழுது மேட்டுப் பாத்தி நாற்றங்கால் அமைத்தார். விதைக்கும் முன் நாற்றங்காலுக்கு அடியுரமாகச் செண்டுக்கு இரண்டு கிலோ வீதம் 16 கிலோ டிஏபி இட்டார். இத்துடன் 8 செண்டுக்கு 4 பாக்கட் அசோஸ்பைரில்லம் இட்டார். நாற்றங்காலுக்கு முன் பாதுகாப்பாக விதைத்த 18-ஆம் நாள் 1400 கிராம் கார்போ பியூரான் குருணை மருந்து இட்டார். நாற்றுக்களை 45- வது நாளில் பிடுங்கி நட்டார். நடுவதற்கு முன் ஏக்கருக்கு 4 பொட்டலம் அசோஸ் பைரில்லம் கரைசலில் நாற்றுக் களின் வேர்களை 15 நிமிடம் நனைத்து நட்டார்.

நடவு வயலுக்கு 500 ஆடுகள் கொண்ட அட்டுக்கிடை 9 நாட்கள் அமர்த்தி இருந்தார். அதன்பின் சணப்பு விதைத்து 25-ஆம் நாள் மடக்கி உழுது அதனுடன் அடியுர மாக ஏக்கருக்கு 10 டன் தொழு

உரம் இட்டு டிராக்டர் கொண்டு தொழி கலக்கினார்.

அடியுரமாக ஏக்கருக்கு டி.ஏ.பி. 75 கிலோ இட்டார். நடவுக்கு முன் ஏக்கருக்கு 10 கிலோ சிங்கல் பேட்டும் 4 பாக்கட் அசோஸ் பைரில்லம் இட்டார்.

நடவு இடைவெளி 20-க்கு 10 செ.மீட்டர் என்ற அளவில் நாற்றுக் களை குத்துக்கு இரண்டு நாற்றுக்கள் வீதம் மேலாக நட்டார். நட்ட வயலில் சதுர மீட்டருக்கு 50 தூர்கள் இருந்தன.

மேலுரமாக நட்ட 30-ஆம் நாள் முதல் களை எடுத்த உடன் ஏக்கருக்கு 100 கிலோ கடலைப் புண்ணாக்கு, 50 கிலோ வேப்பம் புண்ணாக்கு, 50 கிலோ யூரியா மற்றும் 50 கிலோ பொட்டாஷ் இட்டார். இரண்டாவது முறையாக நட்ட 50-ஆம் நாள் ஏக்கருக்கு 50 கிலோ யூரியா மற்றும் 50 கிலோ பொட்டாஷ் இட்டார். மூன்றாம் தடவையாக நட்ட 80-ஆம் நாள் ஏக்கருக்கு 50 கிலோ யூரியா மற்றும் 50 கிலோ வேப்பம்புண்ணாக்கு இட்டார்.

பூச்சி நோய்களுக்கு எதிராக 45-ஆம் நாள் எண்டோசல்பான் ஏக்கருக்கு 300 மில்லி, 60-ஆம் நாள் கார்பெண்டாசிம் ஏக்கருக்கு 100 கிராம், 90-ஆம் நாள் பென்தியான் ஏக்கருக்கு 200 மில்லி. மருந்துகளை அவை தோன்றியபின் தேவை என்ற தருணத்தில் அடித்துள்ளார்.

நீர் நிர்வாகத்தில் ஒவ்வொரு மேலுரம் இட்டபின் ஒரு வாரத்திற்கு 5 செ.மீட்டர் உயரத்திற்கு நீர்கட்டியிருந்தார். இதர தருணத்தில் பாசனத்தைக் காய்ச்சல், பாய்ச்சல் என்ற முறையில் கையாண்டார். களை கட்டுப்படுத்த இரண்டு தடவை கைக்களை மேற்கொண்டார். முதல் முறை கடலைப்புண்ணாக்கு இட்ட பின்னும் அதாவது 30-ஆம் நாளும் அதன்பின் 45-ஆம் நாளும் களை எடுக்கப்பட்டது. பயிர் 165-ஆம் நாள் முதிர்ச்சி பெற்று அறுவடை செய்யப்பட்டது.

உயர்விளைச்சல் பெறக் காரணம் என்ன?

1. வடிகால் மற்றும் பாசனப் பிரச்சினை அற்ற செழிப்பான வண்டல்நிலம் தேர்வு.

2. ஒருபோக நெல் சாகுபடி மற்றும் முன்பயிராகச் சோயாப் பயிரும் உரப்பயிராகச் சணப்பும் பயிரிட்டது.

3. சரியான ரகத் தேர்வு - சி.ஆர்.1009 - நீண்டகால வித்து, உயர்விளைச்சல் ரகம்.

4. தாராளமாகத் தொழு உரம் இட்டது.

5. சிபாரிசுப்படி நுண்ணூரம் (சிங்சல்பேட் - 10 கிலோ / ஏக்கர்) மற்றும் உயிர் உரம் (அசோஸ் பைரில்லம்) இட்டது.

6. போதிய பயிர் எண்ணிக்கை பராமரித்தது.

7. மேல் உரமாக இரசாயன உரத்துடன் கடலைப்புண்ணாக்கு மற்றும் வேப்பம்புண்ணாக்கு இட்டது. இதனைப் பகுதியாக மூன்று தடவைப் பிரித்து அளித்தது.

8. முறையான நீர்ப்பராமரித்தது.

9. தேவைக்குத் தக்க தருணத்தில், பயிர்ப்பாதுகாப்பு மற்றும் ஆட்கள் கொண்டு களை எடுத்தது.

1991-92-ஆம் ஆண்டில் எக்டேருக்கு 18,808 கிலோ விளைச்சலும், 1992- 93-ஆம் ஆண்டில் 26,921 கிலோ விளைச்சலும் கண்டு மாநிலத்திலேயே சாதனை புரிந்தவர் திரு. எம். பூல்பாண்டி அவர்கள்.

இவருக்கு 80 ஏக்கர் பண்ணை உள்ளது. இந்தப் பண்ணையில் கரும்பு, மிளகாய், பருத்தி, சோயா, ராகி, வாழை ஆகியவற்றையும் பயிர் செய்கிறார். இந்தப் பண்ணையில் ஒரு டிராக்டர் உள்ளது. 20 பேர் வேலை செய்கிறார்கள். அதிகாலை 4 மணிக்கே எழுந்து விடுகிறார் இவர். பண்ணையைப் பார்வையிடுகிறார். பயிர் விளைச்சலைக் கண்ணும் கருத்துமாகக் கவனிக்கிறார். இவருக்கு வலது கரமாய் இருந்து வருபவர், இவரது அண்ணன் திரு. வெள்ளைப்பாண்டி அவர்கள்.

பயிர் விளைச்சல் போட்டியில் அமோக விளைச்சல் கண்ட திரு. எம். பூல்பாண்டி அவர்களைச் சந்தித்தபோது அவர் கூறினார் -

''நானும், என்னுடைய அண்ணனும் இணைந்து விவசாயம் செய்கிறோம். என்னுடைய சகோதரர் பயிர் விளைச்சலில், மாவட்ட அளவில் கடந்த இரண்டு ஆண்டுகளாக ரூ.10,000 பரிசுகள் பெற்றுள்ளார்.

''கடந்த ஆண்டு சோயா உற்பத்தியில் அதிக மகசூலுக்காக, பொள்ளாச்சி திரு. என். மகாலிங்கம் அவர்கள் மூலமாக முதல் பரிசாக ரூ.50,000 பெற்றுள்ளோம்'' என்று மகிழ்ச்சியுடன் கூறிய அவர், தம் ஆசையையும் பணிவுடன் வெளியிட்டார்:

''வேளாண்மைத்துறையில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்க வேண்டும். சாதனை மேல் சாதனை குவிக்க வேண்டும். இது எங்கள் குறிக்கோளும் ஆகும்.

''எங்களைப் போன்று விவசாயப் பெருங்குடி மக்களும் முன்னேற வேண்டும். உணவு உற்பத்தியில் ஒவ்வொரு விவசாயியும் சாதனை புரிந்து நாட்டுக்கும் வீட்டுக்கும் உதவியாக இருக்க வேண்டும்'' என்று பெருமிதத்துடன் கூறினார் அவர்.

மாவட்ட அளவிலான பரிசை, திரு. வெள்ளைப் பாண்டி அவர்களுக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆர்.வேலு, இ.ஆ.ப. அவர்கள் வழங்குகிறார். வேளாண்துறை அலுவலர்கள் உடன் உள்ளனர்.

மக்கள் நல்வாழ்வில் மருத்துவமனையின் பங்கு

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மற்றும் அதைச் சார்ந்த மருத்துவமனை பாளையங்கோட்டையைச் சார்ந்த ஹைகிரவுண்ட் எனப்படும் விரிவாக்க இடத்தில் 350 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ளது.

1965-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு, திருநெல்வேலியில் ஒரு மருத்துவக் கல்லூரியைத் தொடங்கத் திட்டமிட்டது. சென்னைப் பல்கலைக்கழகம் அதை அனுமதித்து 1965-66-ஆம் ஆண்டில் 75 மாணவர்களை முதலாம் ஆண்டு மருத்துவப் பட்டப்படிப்பில் சேர்த்தது. அவர்கள் இதே ஊரில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தங்களது முதலாம் ஆண்டு மருத்துவப்பட்டப் படிப்பைப் பயின்றனர்.

1966-ஆம் ஆண்டு ஜூலை மாதம் புதிதாகக் கட்டப்பட்ட உடற்கூற்றியல் துறைக் கட்டடத்தில் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் முதல் அணியாகத் தங்கள் வகுப்புகளுக்குச் செல்ல ஆரம்பித்தனர். மற்ற சிகிச்சை சாரா துறைகளான, மருந்தாக்கியல் நோய்க் குறியியல், நுண்ணுயிரியல் மற்றும் சமூகம் மற்றும் நோய்த்தடுப்பு ஆகியவை ஜனவரி 1968 முதல் செயல்படத் தொடங்கின. திருநெல்வேலி மாவட்டத் தலைமை மருத்துவமனை திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த மருத்துவமனையாக மாற்றப்பட்டது.

மதுரை காமராசர் பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்பட்ட ஆண்டான 1967-லிருந்து 1988-ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மேற்சொன்ன பல்கலைக் கழகத்தைச் சார்ந்திருந்தது. அதற்குப் பிறகு ஜூலை 1988 முதல் இக் கல்லூரி புதிதாக அமைக்கப்பட்ட டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்துள்ளது. இக் கல்லூரி வளாகத்திலுள் மருத்துவ மாணவ மாணவியருக்கான தனித்தனி தங்கும் விடுதிகள் கட்டப்பட்டு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இக்கல்லூரி 1978-ஆம் ஆண்டு புதுடில்லியிலுள்ள இந்திய மருத்துவக் கவுன்சிலின் அங்கீகாரம் பெற்றது.

11.8.80-இல் இம்மருத்துவக் கல்லூரியில் மாணவர்கள் சேர்க்கை இடங்களை 75-லிருந்து 100 ஆக உயர்த்தி ஆணையிட்டுள்ளது. மேலும் 1980-ஆம் ஆண்டு முதல் மருத்துவப் பட்டப்படிப்பில் சேரும் மாணவர்களுக்கான குறைந்த அளவு கல்வித் தகுதி மேல்நிலைப் பள்ளிப் படிப்பில் தேர்ச்சிப் பெற்றால் போதுமானது என்றும் அனுமதித்துள்ளது.

இக்கல்லூரியில் எல்லா வசதிகளுடன் கூடிய நூலகம் ஒன்று உள்ளது. பட்டப் படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரின் தேவைகளுக்கேற்ப போதுமான பாடப்புத்தகங்கள், நாளிதழ்கள், பல வகையான மருத்துவ விவரங்களை உள்ளடக்கிய காலமுறை ஏடுகள் ஆகியவை வாங்கி வைக்கப்பட்டும் மேலும் தருவிக்கப்பட்டும் வருகின்றன.

கிராம ஒருங்கிணைந்த மருத்துவக் கல்வித் திட்டம் (ரோம்)

ரோம் திட்டம் செப்டம்பர் 1980-இல் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது. கீழ்க்கண்ட மூன்று ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைச் சார்ந்துள்ளன.

1. ஆரம்பச் சுகாதார நிலையம், பத்தமடை
2. ஆரம்பச் சுகாதார நிலையம், தென்திருப்பேரை
3. ஆரம்பச் சுகாதார நிலையம், திசையன்விளை.

களக்காடு பிரிடா மோனியர் மருத்துவமனை 10.10.74 முதல் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சார்ந்த அரசினர் மருத்துவமனையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. மாணவர்கள் மற்றும் உள்ளிருப்பு மாணவர்கள் அணி அணியாக ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, கிராமச் சூழ்நிலை பற்றி அறிந்து வருகின்றனர். பலதுறைகளைச் சார்ந்த சிறப்பு மருத்துவர்கள் மாணவர்களுடன் அங்கு சென்று கிராமப்புற நோயாளிகளுக்குச் சிகிச்சையளிப்பது பற்றி பயிற்சியளிக்கின்றனர். சமூகம் மற்றும் நோய்த் தடுப்புத்துறைப் பேராசிரியர் இத்திட்டத்தின் பொறுப்பு அலுவலர் ஆவார்.

நடமாடும் கண் மருத்துவ பகுதி

கண் மருத்துவத்துறையைச் சார்ந்த இப்பகுதிப் பணியாளர்கள் திருநெல்வேலி-கட்டபொம்மன், கன்னியாகுமரி மாவட்டங்களைச் சார்ந்த கிராமங்கள் மற்றும் சிறிய நகரங்களில் கண் சிகிச்சை முகாம்களை அமைத்து அங்குள்ள பொது மக்களுக்கு இலவசமாகக் கண் மருத்துவச் சிகிச்சைகள் செய்து வருகின்றனர்.

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை 821 படுக்கை வசதிகளுடன் சிறப்புத் துறைகள் மற்றும் தேவையான உபகரணங்களைக் கொண்டுள்ளது. கீழ்க்கண்ட துறைகள் அண்மைக் காலத்தில் மருத்துவமனையில் தொடங்கப்பட்டுள்ளன.

1. ஒட்டுறுப்பு அறுவை மருத்துவம்
2. சிறுநீரக அறுவை மருத்துவம்
3. குழந்தைகளுக்கான அறுவை மருத்துவம்
4. நரம்பியல் மருத்துவம்
5. இதயவியல் மருத்துவம்

பலதுறை ஆராய்ச்சிகளுக்கென ஒரு அதிக அளவு இருப்பு வைக்கப்பட்ட பிராணிகள் அறையும் அவற்றிற்கான ஆய்வுக்கூடமும் உள்ளன.

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை 1968-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. ஏற்கெனவே திருநெல்வேலி மாவட்டத் தலைமை மருத்துவமனையாக இருந்துவந்த கட்டடம் மருத்துவக் கல்வித்துறைக்கு 1968-ஆம்



கல்வியில் சிறந்த தமிழகத்தில், திருநெல்வேலியில் பாளை மாநகரில் உள்ள தனிப் பெருமை வாய்ந்த கல்வி நிறுவனங்களில் ஒன்று சாராள் தக்கர் மேனிலைப் பள்ளி. நூறாவது ஆண்டு நிறைவு விழாவை நோக்கிப் பீடுநடை போடுகின்ற இப்பள்ளிக்கெனச் சீரிய வரலாறு உண்டு.

இந்தியத் திருநாட்டில், தனது திருவடிகளைப் பதிக்காமலேயே, அங்குள்ள பாவையரைப் பார்க்காமலேயே, அவர்கள் மீது பேரன்பு கொண்ட, கருணை உள்ளம் படைத்த ஒருவரின் பெயரால் உருவானதே இப்பள்ளி என்பது நம்மில் பலருக்கும் தெரியாத உண்மையாகும். அவர் யார்?

அவர் தான், செல்வி சாராள் தக்கர்.

செல்வி சாராள் தக்கர்:

''அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு'' என்ற நிலை மாறி, 'எட்டும் அறிவினில் ஆணுக்குப் பெண் இங்கு இளைப்பில்லை' என்ற நிலை ஏற்பட வழிவகுத்தவர்கள் மேலை நாடுகளிலிருந்து இங்கு வந்து, இறைப் பணியோடு, கல்விப் பணியையும் இணைத்துச் செய்த நற்செய்திப் பணியாளர்கள் ஆவர். அவர்களுள் ஒருவரே இங்கிலாந்து நாட்டிலிருந்து இங்கு வந்து, சென்னையில் திருச்சபைத் திருத்தொண்டர் கழகச் (சி.எம்.சி.) செயலராகப் பணியாற்றிய அருள்திரு ஜான் டக்கர் ஆவார். அவரது அன்புச் சகோதரியே செல்வி சாராள் தக்கர்.

செல்வி சாராள் தக்கர் உடல் ஊனமுற்றவர். ஆனால், உள்ளத்தில் ஊனம் அற்றவர். ஒளி படைத்த கண்களையும், உறுதி கொண்ட நெஞ்சினையும் உடையவர். பிறர் நலம் பேணும் நெறியாளர். உலக மீட்பராம் இயேசு கிறிஸ்துவைத் தனது ஊன்றுகோலாகப் பள்ளி கொண்டவர். நெல்லையில் நடந்த பல்வேறு அருட்பணிகளையும், சமூகப் பணிகளையும் தனது தலையனார் மூலம் அறிந்து அதிக மகிழ்ச்சி கொண்டார். குறிப்பாக, பின்தங்கிய நிலையில் வாடும் மக்களின் நலன் கருதி நடத்தப்பட்ட முன்னேற்றப் பணிகளில் தானும் ஈடுபட வேண்டும் என ஆர்வம் கொண்டார். ஆனால், ஊனமுற்ற அவரது உடல் அதற்கு இடம் கொடுக்கவில்லை. எனினும் மனம் தளராமல், படுக்கையிலிருந்தே இந்தியப் பெண்களின் முன்னேற்றப் பணிகளுக்கு உதவிட உறுதி பூண்டார். முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் அன்றோ? படுக்கையிலிருந்த போது, ஆடைகள் பின்னியும், நண்பர்களுக்குக் கடிதம் எழுதியும் நிதி திரட்டினார். 1843-ஆம் ஆண்டு நெல்லை மாவட்டத்தில் கடாட்சபுரம் என்ற ஊரில் தொடங்கப்பட்ட பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கான கட்டட நிதிக்குச் செல்வி சாராள் தக்கர் அனுப்பிய 20 பவுன் பயன்பட்டது.

1857-ஆம் ஆண்டு, இந்திய வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் சிறப்பு மிக்க ஆண்டு 'சிப்பாய்க் கலகம்' எனச் சிறப்பாக அழைக்கப்படும் 'முதல் இந்தியச் சுதந்திரப் போர்' தோன்றிய ஆண்டு அவ்வாண்டின் இறுதியில் டிசம்பர்த் திங்கள் 12-ஆம் நாள், நெல்லையின் கல்விப் பணியிலும் சமுதாயப் பணியிலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த செல்வி சாராள் தக்கர் இவ்வுலக வாழ்வினின்றும் விடுதலை பெற்று, நிலைத்த பேரின்ப வாழ்வினைப் பெற்றார்.

பள்ளியின் தோற்றம்:

1858-இல் இப்போதிருக்கும் சாராள் தக்கர் மேனிலைப் பள்ளிக் கருகில் ஒரு வீட்டில் மிகக் குறைந்த அளவு மாணவியரைக் கொண்டு அன்று ஓர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியாகச் சாராள் தக்கர் மேனிலைப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. நற்செய்திப் பணியாளர்களாகிய 'டிப்' தம்பதியர், செல்வி ரிச்சர்ட்ஸ், மறைதிரு A.H. லஷ் போன்றோரது அரும்பணியால் கல்விப் பணி வளர்ந்தது இத்தகைய தியாகச் செம்மல்களில் சீரிய பணியினைக் கண்ட பெற்றோர் தமது பெண் குழந்தைகளை மனமுவந்து கல்வி கற்கப் பள்ளிக்கு அனுப்பினர். மேல்பாளையம், தென்காசி, அம்பாசமுத்திரம், நல்லூர் போன்ற இடங்களில் பல கிளைப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. சென்னை மாநிலம் முழுமைக்கும், இலங்கை, மொரிசியசுக்கும் கூடத் தேவையான ஆசிரியைகளைச் சாராள் தக்கர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி உருவாக்கியது. செல்வி சாராள் தக்கரின் பெயரால் மாவட்டம் முழுவதும் தோன்றிய நிறுவனங்களின் மையமாக அது இருந்தது.

பார்வையற்றோர் பள்ளி

மேலை நாட்டு நற்செய்தியாளர்கள் தொண்டுள்ளம் கொண்டவர்கள் என்பதற்கு மேலும் ஒரு சான்றாக அமைவதே பார்வையற்றோர் பள்ளியாகும். அப்பள்ளி உருவான விதமே சுவையானது. சாராள் தக்கர் நிறுவனங்களின் நிர்வாகியாகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர் திருச்சபைத் திருத் தொண்டர் கழக நற்செய்திப் பணியாளர் செல்வி ஏ.ஜே. ஆங்குவித் என்னும் ஆங்கில அம்மையார். 1888-ஆம் ஆண்டு ஒரு நாள் பார்வையற்ற சிறுவன் ஒருவன் தனது வயிற்றுப் பசியைப் போக்க, பள்ளி வளாகத்தை நாடி வந்தான். ஆனால், தான் வந்திருக்குமிடம் அறிவுப் பசிக்கு உணவு வழங்கும் பள்ளிக்கூடம் என்பதை அறிந்தவுடன் புறக்கண்கள் அற்ற தனது அகக் கண்களைத் திறக்குமாறு அம்மையாரை வேண்டினான். சிறுவன் மீது பரிவு கொண்ட அம்மையார், முதலில் கண் தெரிந்த பிள்ளைகளோடு சேர்த்து அவனுக்குக் கற்பித்தார். 1890-இல் அரசு அனுமதியுடன் பார்வையற்ற குழந்தைகளுக்கான முதல் வகுப்பைத் தொடங்கினார் இவர் 'மூம்' (Moom) முறையில் கல்வி கற்பித்தார் டெய்லர் பிரேம் (Taylor Frame) என்ற குருந்தொகைச் சட்டத்தைத் துணைக் கருவியாகக் கொண்டு கணிதம் கற்பித்தார். 1892-இல் விடுதியில் மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். 1908-இல் இப்போதிருக்குமிடத்திற்கு அது மாற்றப்பட்டது.

செவிடுஊமையர் பள்ளி

செவிடுஊமையர் பள்ளி என்றவுடன் நமது சிந்தையை நிறைப்பவர் செல்வி பிளாரன்ஸ் சுவெயின்சன் அம்மையார் ஆவார். இவர் ஆசிரியர் பணியோடு சமுதாயப் பணியையும் இணைத்துப் புரிந்தார். அவரிடம் தையல் கற்றுக் கொள்ள வந்த பெண்களில் மூவர் ஊமையர். அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் அன்பினை எடுத்துரைத்தார். மேலும் அவர்களது நலன் கருதி, சாராள் தக்கர் பள்ளியில் ஒரு பிரிவாகச் செவிடு ஊமையர் பள்ளியை ஆரம்பித்தார். படங்களையும் எழுத்துக்களையும் காட்டிக் கருத்துக்களை அறிந்து கொள்ளச் செய்தார். இதனைக் கண்டு பலரும் இப்பள்ளியில் சேர்ந்தனர். மாணவிகளின் தொகை பெருகவே இன்றைக்கும் பிளாரன்ஸ் சுவெயின்சன் செவிடு ஊமையர் பள்ளியைப் பல கட்டடங்களுடன் பெரிதாக்கி ஒரு கல்வி நிலையமாக்கினார். தம் பொருள் அத்தனையையும் அதற்கென அர்ப்பணித்தார்.

உயர்நிலைப் பள்ளி

1890-இல் சாராள் தக்கர் பள்ளியின் உயர் நிலை வகுப்புகள் ஐந்தே மாணவியரோடு தொடங்கப்பட்டன. 6 ஆண்டுகளுக்குப்பின் 4 மாணவியருடன் கல்லூரி வகுப்புகள் தொடங்கப்பட்டன. Senior inter வகுப்பில் 3 பேரும் Junior inter வகுப்பில் ஒருவரும் கல்வி கற்றனர். அத்தி பூத்தாற்போலும் கார்த்திகைப் பிறை போலும் கல்லூரியில் கற்க வந்த பெண்களை ஊக்குவிக்க மாதந்தோறும் 4 வெள்ளி ரூபாய்களும் உண்ண உயர் வகை உணவும், உறங்க நல்ல கட்டில்களும் கொடுக்கப்பட்டன. இவ்வாறு பெண் கல்வி ஊக்குவிக்கப்பட்டது.

முப்பெரும் நிறுவனங்கள்

தென்னகத்தில் பெண் கல்வியில் மாண்பினைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் சாராள் தக்கர் கல்லூரி, விழியற்றோருக்குக் கல்வியாகிய ஒளி வழங்கும் பார்வையற்றோர் பள்ளி, தன்னம்பிக்கையற்றோருக்கு வாழ்வு வழங்கும் செவிடுஊமையர் பள்ளி ஆகிய முப்பெரும் கல்வி நிறுவனங்கள் தோன்றிய இடம் இன்று சாராள் தக்கர் மேனிலைப் பள்ளியிருக்கும் வளாகமே என்பது குறிப்பிடத்தக்கது.

உயர்நிலைப் பள்ளியின் வளர்ச்சி

1900-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 26-ஆம் நாளில் தற்போதுள்ள உயர் நிலைப் பள்ளிக் கட்டடம் அப்போது வைஸ்ராய் ஆக இருந்தது கர்சன் பிரபுவால் திறக்கப்பட்டது. அப்போது May Pole நடனம் மாணவியரால் ஆடப்பட்டது. கர்சன் பிரபுவின் துணைவியார் நடனத்தை மிகுந்த ஆர்வத்தோடு கண்டு களித்துப் பாராட்டினார்.

1896-இல் இறை வழிபாட்டிற்கெனச் சிற்றாலயம் கட்டப்பட்டது. அப்போதிருந்த நெல்லை மாவட்ட ஆட்சியாளரின் மனைவியார் அடிக்கல் நாட்டினார். ஆட்சியாளர் ஆலய மணியைப் பரிசளித்தார். இங்கிலாந்து நாட்டு நண்பர்கள் பாடல் புத்தகங்களைப் (Golden Bells) பரிசாக அளித்தனர்.



ஆண்டு நவம்பர் மாதம் ஒப்படைக்கப் பட்டது.

இம்மருத்துவமனை முறையே திருநெல்வேலி-கட்டபொம்மன், சிதம் பரனார் மற்றும் கன்னியாகுமரி மாவட் டங்கள், திருநெல்வேலி, பாளையங் கோட்டை, மேலப்பாளையம் ஆகிய நக ராட்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும். மருத்துவமனையின் படுக்கைகள் 7.9.72-இல் 325-லிருந்து 407-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் 1979-ஆம் ஆண்டில் படுக்கைகளின் எண்ணிக்கை 715 ஆக உயர்ந்துள்ளது. அதன்பின்பு 715-லிருந்து 795 ஆக உயர்ந்துள்ளது. தற்சமயம் மொத்த படுக்கைகளின் எண்ணிக்கை 821 ஆகும்.

1980-81-ஆம் ஆண்டில் இம்மருத் துவமனையில் செவிலியர் பயிற்சிப் பள்ளி தொடங்குவதற்கான கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ.47.70 இலட்சங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு இரண்டு அணிகளாக மொத்தம் 40 மாணவ மாணவியர் சேர்த்துக்கொள்ளப் படுகின்றனர்.

1981-ஆம் ஆண்டு இம்மருத்துவ மனையில் உடல் ஊனமுற்றோருக்குச் செயற்கை அவயவ மையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு நல்ல முறையில் செயல் பட்டு வருகிறது.

1983-ஆம் ஆண்டு பலநோக்குச் சுகாதாரப் பணியாளர்கள் பயிற்சி மையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு மாணவி யருக்குப் பயிற்சியளித்து வருகிறது. ஆண்டிற்கு 120 மாணவிகள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டு வரு கின்றனர்.

1985-ஆம் ஆண்டு நீராவிச் சலவைக் கூடம் ஒன்று கட்டுவதற்காக அரசு ரூ.20 இலட்சம் அனுமதித்துள்ளது. கட்டடம் கட்டிமுடிக்கப்பட்டு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் நிறுவப்பட்டுள்ளன. விரைவில் நீராவிச் சலவைக்கூடம் மருத்துவத்துறையினரால் எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

1986-ஆம் ஆண்டு இம்மருத்துவ மனையில் இதயவியல், நரம்பியல் மற்றும் சிறுநீரகவியல் பகுதிக் கட்டடம் கட்டுவதற் காக ரூ.10 இலட்சம் அனுமதித்துள்ளது. மேலும் மின்னேணி (லிப்ட்) அமைப்பதற் காக ரூ.6 இலட்சம் அனுமதித்துள்ளது. இம்மருத்துவமனையில் தற்போதைய படுக்கைகளின் எண்ணிக்கை 821.

கீழ்க்கண்ட சிறப்பு மருத்துவச் சிகிச்சை வசதிகள் இம்மருத்துவமனையில் அளிக்கப்பட்டு வருகின்றன.

1. சிறுநீரக அறுவையியல் வெளி நோயாளி மற்றும் உள்நோயாளி
2. ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சை வெளிநோயாளி மற்றும் உள்நோயாளி
3. செயற்கை அவயவமையம் வெளி நோயாளி மற்றும் உள்நோயாளி
4. நரம்பியல் அறுவைச் சிகிச்சை வெளிநோயாளி மற்றும் உள்நோயாளி
5. நரம்பியல் மருத்துவம் வெளிநோயாளி
6. நெஞ்சக அறுவை மருத்துவம் வெளி நோயாளி
7. நீரிழிவு மற்றும் இரத்த அழுத்தம் வெளிநோயாளி
8. அரசுப் பதிவுறா அலுவலர் மருந்தகம்

இத்துறைக்கு என அல்ட்ரோ சோனா கிராம் என்ற நவீனக் கருவி, குளிர்சாதன அறையில் வைக்கப்பட்டுள்ளது. இது மகப்பேறு நோயாளிகளுக்கு, நோயினை உடனடியாகக் கண்டுபிடிக்க உதவியாக உள்ளது.

இம்மருத்துவமனையில் வசதிகளுடன் கூடிய குளிருட்டல் வசதியுடன் கூடிய இரத்தச் சேமிப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது. 24 மணிநேர விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைப் பகுதி மற்றும் 24 மணிநேரமும் இயங்கும் ஆய்வுக்கூடம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. தீவிர இதயநோய் சிகிச்சைப் பகுதி குளிர்சாதன அறையில், ஆறு தனித்தனி அறைகளில் அமைந்துள்ளது. இங்கு 24 மணி நேரமும் தீவிரக் கவனிப்பு உள்ளது. மானிட்டர் போன்ற நவீன வசதிகளும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

இம்மருத்துவமனைப் பணியாளர் களால் கண் அறுவைச் சிகிச்சை முகாம்கள் மற்றும் குடும்பநல அறுவைச் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் இட அளவு 25.8 ஏக்கர். இம்மருத்துவமனையில் ஒன்பது அறுவைச் சிகிச்சைக்கான அரங்கங்கள் உள்ளன.

சமூகநலத்துறை மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக அனுப்பி வைக்கப்படும் போலியோ நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் இம்மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்படுகிறார்கள். தேவைப்பட்டால் அறுவைச் சிகிச்சையும் முடநீக்கியல் துறையில் செய்யப்படுகிறது. இவர் களுக்காக ஒரு தனி வார்டு ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஊரும் பேரும்

திருநெல்வேலி மாவட்டம்

பேரேரி

பேரி என்னும் சொல்லை இறுதியாகவுடைய ஊர்ப் பெயர்கள் சில உள்ளன. நெல்லை நாட்டில் சீவலப்பேரி, கண்டியப்பேரி, அலங் காரப்பேரி, விகவநாதப்பேரி முதலிய பேரிகள் உண்டு. பேரி என்பது பேரேரி என்று பெயர் பெற்றன.

நாவிறுடையார்

நெல்லை நாட்டில் நாவிறுடையபுரம் என்ற சிற்றூர் ஒன்று உள்ளது. நாவிறு என்பது சொல் லின் செல்வம். அச்செல்வத்தைச் சிறப்பாகப் பெற்ற நம்மாழ்வாரை நாவிறுடையார் என்று வைணவ உலகம் போற்றுகின்றது. அவர் பெயர் கொண்டு விளங்குவது நாவிறுடையபுரம்.

சாயர்

நெல்லை நாட்டிலுள்ள மற்றொரு சிற்றூர் சாயர்புரம் என்று பெயர் பெற்றுள்ளது. அங்கும் திருஸ்தவர்களே பெருந்தொகையினராக வசிக் கின்றார்கள். அவ்வூரில் குடியிருப்புக்கேற்ற மனை யிடங்களை விலை கொடுத்து வாங்கியவர் சாயர் என்னும் போர்க்கப்பலின் வணிகர். திருஸ்தவச் சங்கத்தார் நெல்லை நாட்டிற்குச் செய்த பெரும் பணிகளை அவர் மனமுவந்து ஆதரித்தார். அவர் வழங்கிய பொருளால் எழுந்த ஊர் சாயர்புரம் என்று பெயர் பெறுவதாயிற்று.

களிமண்ணில் கைவண்ணம்

திருநெல்வேலியிலிருந்து சுமார் 30 கி.மீ. தொலையில் அமைந்துள்ளது காருக்குறிச்சிக் கிராமம். பிரபல நாதசுரக் கலைஞர் அருணாசலம் பிறந்த ஊர் இது. இந்த ஊர் மண்பாண்டத் தொழிலுக்குப் பெயர் பெற்றது. காருக்குறிச்சி மண்பாண்டக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் பல வகையான சுட்ட களிமண் பொம்மைகள் (Terracotta Indoor Decoration Materials) தயாரிக்கப்பட்டு இந்தியா முழுவதும் விநியோகம் செய்யப்படுகிறது.

கேரளாவிலிருந்து காருகுறிச்சிக்குக் குடியேறி இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள திரு. எம்.சி. மாதவன் அவர்கள், தென்னார்க்காடு மாவட்டத் தில் காதி மற்றும் கிராமத் தொழில் வாரியத்தில் உருவ ஓவியராக (Moulder-cum-Artist) சுமார் 5 ஆண்டுக்காலம் பணியாற்றிவிட்டு, பிறகு அதி லிருந்து விலகி, இப்போது சொந்தமாக இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளார்.

இவர் தமது வீட்டின் அருகாமையிலேயே ஒரு சிறிய கொட்டகையில் சுட்ட களிமண் பொம் மைகள் செய்து விற்பனை செய்கிறார். இங்கு அஜந்தா குதிரைகள், கடவுள் சிலைகள், அலங்கரிக் கப்பட்ட பூந்தோட்டப் பானைகள் (Garden Pots) போன்ற பொம்மைகள் ஏராளமாக செய்து வைக் கப்பட்டுள்ளன. ஒரு அஜந்தா குதிரை செய்து முடிக்க சுமார் 1½ நாள் ஆகுமாம்.

பொதுவாக இத்தகைய பொம்மைகள் Order-ன் பேரில் செய்யப்படுவதாகவும், பொம்மைகள் செய்து முடித்தவுடன் சம்பந்தப்பட்ட நபரே பொருட்களை இங்கு வந்து எடுத்து செல்வதாகவும் கூறுகிறார் திரு. மாதவன்.

இந்த அலங்காரப் பொம்மைகள் செய்வதற்குத் தேவையான மூலப்பொருள் களிமண் காருகுறிச்சி யிலிருந்து சுமார் 4 கி.மீ. தொலைவிலுள்ள பட்டங்காடு என்ற இடத்திலிருந்து கொண்டு வரப்படுகிறது. சுமார் 1½ அடி உயரமுள்ள ஒரு அஜந்தா பொம்மையின் விலை ரூ.250/-.

அண்மையில், இவருடைய பொம்மைகள் INS கட்டபொம்மன் மூலம் குடியரசுத் தலைவர் மாளி கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நெல்லை மாவட் டத்தைச் சார்ந்த நலிந்தோர்க்கு சென்னையில் நலத் திட்ட உதவிகள் வழங்கிய போது, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இங்குத் தயாரிக்கப்பட்ட யானை பொம்மைகள் அன்பளிப்பாக வழங்கப் பட்டன.

திரு. மாதவன் உருவ ஓவியம் மற்றும் சிறபக் கலையில் பட்டயம் பெற்றுள்ளார். இவர் கேரளா மாநிலத்தை சேர்ந்தவராக இருந்தாலும், தமிழ்ப் பெண்ணைக் கலப்புத் திருமணம் செய்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

With Best Compliments From

Grams: 'DEEYES'

Phone: 2821

M/s D ஸ்ரீநிவாச அய்யங்கார் மளிகை
மேலவீதி, சிதம்பரம் 608 001

கிளைகள்

கீழசன்னதி - சிதம்பரம் - சன்னதித்தெரு - ஸ்ரீ முஷ்ணம்

''தங்கள் திருப்தியே எங்கள் பாக்கியம்''

தமிழரசு இதழுக்கு எங்களது உளம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

இங்ஙனம்

எம்.எஸ். பழனி ஆண்டவர் டிரேடர்ஸ்
நாமகிரிப்பேட்டை
ராசிபுரம்
சேலம் மாவட்டம்

பெரியார் மாவட்டத்தில்

அறிவொளி இயக்கம்

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு எழுத்தறிவு மிகவும் அவசியம் என்பதை உணர்ந்த சர்வதேச வல்லுநர்கள் 1965-ஆம் ஆண்டு செப்டம்பர் 8-ஆம் தேதி டெக்ரானில் கூடி முதன்முதலாக எழுத்தறிவின்மையை எப்படிப் போக்குவது என்று ஆலோசனை செய்தார்கள். பின் இந்நாள் உலக எழுத்தறிவுத் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அதை தொடர்ந்து நம் இந்திய நாடும் எழுத்தறிவைப் போக்க பல முயற்சிகள் மேற்கொண்டு, 1995-ஆம் ஆண்டு முடிவதற்குள், 80 மில்லியன் மக்கள் எழுதப்படிக்க தெரிந்தவர்களாக மாற்ற வேண்டுமென்று தேசீய எழுத்தறிவுச் சபை முடிவு செய்து படிப்படியாப் பல்வேறு மாவட்டங்களில் இதைச் செயல்படுத்தி வருகிறது.

அறிவொளி இயக்கம் பெரியார் மாவட்டத்தில் மார்ச் 14-ஆம் தேதி தொடங்கப்பட்டு, மிகுந்த சிறப்புடன் நடைபெற்று வருகிறது. இம் மாவட்டத்தில் மொத்த மக்கள் தொகை 23 இலட்சம், இதில் 8.5 இலட்சம் பேர் படித்தவர்களாகவும், 13 இலட்சம் பேர் படிக்காதவர்களாகவும் உள்ளனர். கிராமப் பகுதியில் 11 இலட்சம் பேர்களும், நகர்ப் பகுதியில் 2 இலட்சம் பேர்களும் படிக்காதவர்களாக உள்ளனர். இம்மாவட்டத்தில் 15-35 வயதிற் குட்பட்டவர்கள் 3.5 இலட்சம் பேர் படிக்காதவர்களாக உள்ளனர். இவர்களை எழுத்தறிவு உள்ளவர்களாக மாற்ற மாவட்ட நிர்வாக முனைப்புடன் அறிவொளி இயக்கத்தைச் செயல்படுத்தி வருகிறது.

இம்மாவட்டத்தில் அறிவொளி இயக்கத் தொடக்க விழா மார்ச் 14-ஆம் தேதி ஆயிரக்கணக்கான மாணவர்கள், பொதுமக்கள் எழுச்சி மிகு பேரணியுடன் வ.உ.சி. பூங்காவில் திரளான மக்கள் முன்னிலையில் பெரியார் மாவட்ட ஆட்சியர் திரு. ரா. கண்ணன், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

தமிழ்ப் புத்தாண்டு அன்று மாவட்டம் முழுவதும் எல்லா வீடுகளிலும் அறிவொளித் தீபம் ஏற்றி வைக்கப்பட்டது. அறிவொளி இயக்கத்தின் முதல் கட்டமான எழுத்தறிவின் இன்றியமையாமையை வலியுறுத்த கலைப் பயணம் தொடக்க விழா ஏப்ரல் 18-இல் பவானி

எம்.ஆர்.லிங்கம்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
பெரியார் மாவட்டம்

ளது. இதைத்தவிர, பொதுப்பணித் துறை பராமரிப்பு நிதியின் மூலம் ரூ.13 இலட்சம் செலவில் சீரமைப்புப் பணிகளும் நடைபெற்றுள்ளது.

திருத்துறைப்பூண்டி உப கோட்டத்தில் 75 குடிமராமத்துப் பணிகள் ரூ.16 இலட்சம் செலவில் செய்யப்பட்டுள்ளது. மன்னார்குடி உப கோட்டத்தில் 45 பணிகள் ரூ.8 இலட்சம் செலவில் செய்யப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறை பராமரிப்பு நிதியில் ரூ.11 இலட்சம் செலவில் பல்வேறு கட்டுமானப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

வடவாற்றில் கடந்த ஆண்டு உடைப்பு ஏற்பட்ட இடத்தில் 5 கி.மீ தூரத்திற்கு கரைகளை உயர்த்தி செய்யப்பட்டிருந்த பணிகள் காண்போர் எல்லாம் பாராட்டும் வகையில் அமைந்திருந்தது.

காவிரி பாசன கோட்டத்தை உள்ளடக்கிய நன்னிலம் உப கோட்டத்தில் 44 குடிமராமத்துப் பணிகள் 150 கி.மீ. நீளத்திற்கு ரூ.7.27 இலட்சம் செலவில் செய்யப்பட்டுள்ளது.

மயிலாடுதுறை உப கோட்டத்தில் 45 பணிகள் ரூ.7 இலட்சம் செலவில் செய்யப்பட்டுள்ளது.

இந்த உப கோட்டத்தைச் சேர்ந்த செம்பனார்கோவில் உபரி ஆற்றில் 'ஏ' வகுப்புக் கால்வாயில் புல்டோசர் மூலம் காட்டு ஆமணக்கு செடிகளையும், தூர்களையும் அகற்றும் பணியினை நேரில் பார்க்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.

சீர்காழி உப கோட்டத்தில் 12 பணிகள் 70 கி.மீ. தூரத்திற்கு ரூ.3.85 இலட்சம் செலவில் செய்யப்பட்டுள்ளது. இந்த உப கோட்டத்தில் கொன்னத்தூர் மண்ணியாற்றில் 5 கி.மீ. தூரத்திற்குச் செய்யப்பட்டிருக்கும் பணி மிகவும் பாராட்டத்தக்க வகையில் அமைந்திருந்தது. இதேபோல் திருநகரி வாய்க்கால், ஐயாவையனாறு ஆகியவையும் பயன் அளிக்கும் வகையில் பணிகள் செய்யப்பட்டிருந்தன.

இக்கோட்டத்தில் காட்டையாறு, முடவனாறு ஆகிய வாய்க்கால்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டதினால் நல்ல வடிகால்கள் பெறுவதற்கு வகை செய்யப்பட்டதன் மூலம் அப்பகுதியில் உள்ள கிராமங்களில் மழைக்காலங்களில் கிராமங்களுக்குள் தண்ணீர் புகுவது தடுக்கப்பட வாய்ப்புள்ளது என்று அப்பகுதி மக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இப்பணிகளைச் செய்தியாளர்களுக்குப் பொதுப்பணித்துறை உதவி செயற் பொறியாளர்கள் திரு. ரெத்தின சபாபதி, திரு. சுந்தரேசன், திரு. பெரியசாமி, திரு. தன பாண்டியன், திரு. ஜெயராமன், திரு. பிச்சைமுத்து ஆகியோர் நேரில் அழைத்துச் சென்று நடைபெற்று வரும் பணிகளையும், முடிக்கப்பட்ட பணிகளையும் நேரில் காண்பித்தனர்.

இம்மாவட்டத்தில் கடந்த ஆண்டு சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் 145 'ஏ' வகுப்புக் கால்வாய்கள் 1034 கி.மீ. தூரத்திற்கு ரூ.10.91 இலட்சம் செலவிலும், புல்டோசர் மூலம் 163 கி.மீ. தூரத்திற்கு 33.29 இலட்சம் செலவிலும் குடிமராமத்துப் பணிகள் மற்றும் தூர் வாரும் பணிகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் 216 'ஏ'- வகுப்பு வாய்க்கால்கள் 1,364 கி.மீ. நீளத்திற்கு ரூ.27.34 இலட்சம் செலவிலும், புல்டோசர் மூலம் 117.52 கி.மீ. நீளத்திற்கு ரூ.28.82 இலட்சம் செலவிலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.

இம்மாவட்டத்தில் நடைபெற்று வரும் குடிமராமத்துப் பணிகள், குறுவைப் பாசனத்திற்குத் தண்ணீர் வந்து சேர்வதற்குள் முடிக்கப்பட்டு விடும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவுப்படி, இந்த ஆண்டும் கடந்த ஆண்டைப்போல் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக ஜூன் திங்கள் 12-ஆம் நாள் பாசனத்திற்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால், இம்மாவட்டத்தில் குறுவை சாகுபடி அமோகமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இவ்வாண்டு நடைபெற்றுள்ள குடிமராமத்துப் பணிகள் மூலம் சுமார் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றுப் பயனடையும்.

இப்பணியினை நேரில் பார்வையிட்டு முடித்தபின், இம்மாவட்டம் இந்த ஆண்டு நெல் உற்பத்தியில் எக்டேருக்கு 10 டன் நெல் விளைச்சல் என்ற அரசின் கொள்கையை நிச்சயம் நிறைவேற்றும் என்பதில் சந்தேகமில்லை என்ற எண்ணம், அனைவர் மனதிலும் எழுந்தது.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள் நாட்டுடைமை!

மறைந்த கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் துணைவியார் திருமதி கௌரவம்மாள் அவர்கள் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் எழுதிய பாடல்களை நாட்டுடைமையாக்குமாறு மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குக் கோரிக்கை மனு ஒன்றை அனுப்பி வைத்திருந்தார். அவரது கோரிக்கையைப் பரிசீலனை செய்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் எழுதிய அனைத்துப் பாடல்களையும் நாட்டுடைமையாக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளார். மேலும், இதற்குரிய மேல் நடவடிக்கையை உடனடியாக எடுக்குமாறும் அரசு அலுவலர்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பணித்துள்ளார்கள்.

வெறிநாய்க் கடி

(RABIES)

டாக்டர் பா. சிற்றம்பலம், எம்.டி.,

கோடைக்காலம் என்றாலே - தெரு நாய்களில் பல வெறிநாய்களாகிப் போவோர் வருவோரைக் கடித்துத் துன்புறுத்தக் கூடும்; அதனால், எப்படிப்பட்ட ஆபத்தெல்லாம் விளையக்கூடும்- அவற்றிலிருந்து விடுபடுவது எப்படி என்றெல்லாம் விளக்குவது இந்தக் கட்டுரை:

மனிதரைத் தாக்கும் பல நோய்களுள், மிகவும் அச்சுறுத்தி வருவது வெறிநாய்க்டி எனும் பழம்பெரும் நோயாகும். இந்நோய் 'வைரஸ்' என்னும் நுண்கிருமியினால் மத்திய நரம்பு மண்டலத்தைத் தாக்குகிறது. மனிதன் இந்நோயினால் பாதிக்கப்படும்போது 'ஹைட்ரோப்போபியா' (Hydrophobia) - அதாவது தண்ணீரைக் கண்டாலே பயம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு இறுதியில் இறக்கவும் நேரிடுகிறது.

நாயினால் மட்டுமல்ல

இந்தியாவில் நாய்கள் அதிகமாக இருப்பதால், இவற்றின் மூலம் தான், 'ரேபிஸ் நோய்' பரவுவதாக மருத்துவ நிபுணர்களால் நம்பப்படுகிறது. ஆனால், பூனை, குரங்கு, ஆடு, மாடு ஆகிய பிராணிகளாலும் இந்நோய் பரவக்கூடும்.

இந்நோயினால் ஓராண்டில் 25,000 மக்கள் இறக்கிறார்கள். நாய்களுடன் பழகுவதற்கு நாட்டம் உடையவர்கள் சிறுவர் சிறுமியர்கள் என்ற காரணத்தால், அவர்களையே பெரிதும் இந்நோய் பாதிக்கிறது.

ரேபிஸ் நுண்கிருமியானது துப்பாக்கியின் குண்டைப் போல நீள உருளை வடிவத்தில் இருக்கும். இதை 'ரேப்டோவைரஸ்' (Rhabdo Virus) என்று மருத்துவர்கள் கூறுவர். இது எளிதில் அழிக்கவல்லதன்று. இறந்த உடல்களில் கூட நீண்ட நாட்கள் உயிருடனிருந்து நோய் பரப்பும் சக்தி வாய்ந்தது, இது. அதனாலேயே இந்நோயினால் பாதிக்கப்பட்டு இறக்க நேரிடுபவரின் உடலைப் புதைகுழியில் போட்டு எரித்துவிட்டு, மண்ணில் மூடிவிட வேண்டும்.

மிருகங்களுடன் ஒப்பிடும்போது, மனித இனம் இந்நோயினால் பாதிக்கப்படுவது மிகக் குறைவே, உடலிலுள்ள காயங்களின் மூலம் உள்நுழையும் நுண்கிருமிகள் தசைநார்களில் வளர்ந்து, இனப்பெருக்கம் செய்து, பின் நரம்புத் திசுக்களில் புகுந்து அதன் வழியாக முதுகுத் தண்டையும், மூளையையும் சென்றடைகிறது. உமிழ்நீர் சுரப்பிகளிலும் சில தங்கிவிடுகின்றன.

நோயின் வாய்ப்புகள்

ஆதலால், பாதிக்கப்பட்ட மனிதன் மற்றும் மிருகங்களின் உமிழ்நீர், மற்றோர் உடலில் உள்ள காயங்கள், கீறல்கள் மேலே படும்போது, இந்நோய் மிக விரைவில் தொற்றிக் கொள்கிறது. ஆனால், இவை இரத்தத்தில் கலப்பதில்லை. இந்நோய் பரவும் தன்மையானது நுண்கிருமியின் வீரியம், எண்ணிக்கை, காயத்தின் இடம் ஆகியவற்றைப் பொறுத்து மாறுபடுகிறது. எடுத்துக்காட்டாக முகத்திலிருந்து மூளையைச் சென்றடைவதற்கு நூறு சதவிகிதம் வாய்ப்பிருக்கிறது.

அதுவே கால், உடல் பகுதிகளிலிருந்து நோய் பரவுவதற்கு இரண்டே இரண்டு சதவிகிதம் வாய்ப்புத்தான் உள்ளது.

கடித்த சில நாட்களுக்குள் நோயின் அறிகுறிகள் தென்படுவதில்லை. இவை தோன்றுவதற்கு முப்பது முதல் தொண்ணூறு நாட்கள் ஆகும். சில அறிகுறிகள் போலியோ மற்றும் மூளைக்காய்ச்சல் போன்ற நோய்களில் தோன்றுபவை போன்றே இருக்கும். அவையாவன: அமைதியின்றி இருத்தல், உடல் நடுக்கம், வலிப்பு வருதல், வில் போன்று உடல் வளைதல், அதிக உமிழ்நீர் சுரத்தல், மூச்சிறைத்தல், தண்ணீர் அருந்துவதற்கு அஞ்சுதல் முதலியன. கடைசியாகக் கை, கால்கள் செயலிழந்து, மூச்சு விடுவதற்குத் துணைபுரியும் தசைகளும் செயலிழந்து, மூச்சு திணறி இறந்து போவர். அதிக

புலவர் இளஞ்செழியன் அவர்களுக்கு பாவேந்தர் பாரதிதாசன் விருது

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பெயரால், தமிழுக்குச் சிறப்பாகத் தொண்டாற்றிய தமிழ்க் கவிஞருக்கு ஒவ்வொரு ஆண்டும் விருது வழங்கப்பட்டு வருகிறது. 1993-ஆம் ஆண்டிற்குரிய பாவேந்தர் பாரதிதாசன் விருதினை வழங்க புலவர் பெ.அ. இளஞ்செழியன் அவர்களை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தேர்வு செய்துள்ளார்.

புலவர் பெ.அ. இளஞ்செழியன் அவர்கள் ''மலர்மாமணி'' என விருது அளித்துச் சிறப்பிக்கப் பெற்றவர். இவரின் ''இளஞ்செழியன் கவிதைகள்'' என்னும் நூல் தமிழ்நாடு அரசு 1991-ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசினைப் பெற்றுள்ளது. பாவேந்தர் பாரதிதாசன் விருதாக புலவர் பெ.அ. இளஞ்செழியன் அவர்களுக்கு ரூ.10,000 வழங்கப்படும்.

வட்டம் வைரம்பாளையம் கிராமத்தில் நடைபெற்றது. இக்கலைக்குழு மாவட்டம் முழுவதும் 153 கலை நிகழ்ச்சிகளை நடத்தி இறுதியாக மே 13-ஆம் தேதி நிறைவு விழா ஈரோடு வட்டம் காரைபாளையத்தில் மாவட்ட ஆட்சியர் திரு. ரா. கண்ணன், இ.ஆ.ப., தலைமையில், யுனிசெப் அதிகாரி டாக்டர் சரளா ராவ், சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. மாணிக்கம் முன்னிலையில் கலைப் பயண நிறைவு விழா நடைபெற்றது.

மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் நான்கு பேர் மாவட்டத்தின் பல்வேறு பள்ளிகளுக்குச் சென்று அறிவொளிப் பிரச்சாரத்தைச் செய்வதை எடுத்துக் கூறினர். மே 29,30 மற்றும் 31 தேதிகளில் முதன்மைப் பயிற்சியாளர் 10 பேருக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டது. இவர்கள் 150 கருத்தாளர்களுக்குப் பயிற்சி கொடுக்க உள்ளனர். இவர்கள் 2000 முதன்மைப் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி கொடுக்கவுள்ளனர். இவர்கள் 40,000 தன்னார்வாளர்களுக்குப் பயிற்சி கொடுக்கவுள்ளனர். ஒரு தன்னார்வாளர் 10 பேர் கொண்ட ஒரு வகுப்பிற்கு எழுத்தறிவு இல்லாதவர்களுக்கு எழுத்தறிவு போதிக்க உள்ளார்கள்.

மாவட்டம் முழுவதும் சுவரொட்டி, கார் விளம்பரம், துண்டு அறிக்கை, சுவர் விளம்பரம், ஸ்டிக்கர் மற்றும் செய்தித்தாள் மூலம் அறிவொளி இயக்கத்தை விளம்பரப்படுத்தி மாவட்ட மக்களிடம் எழுத்தறிவு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது. மாவட்ட அறிவொளி இயக்க நிர்வாகத்தில் நான் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களும், 25 ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்களும், 135 உதவித் திட்ட ஒருங்கிணைப்பாளர்களும் தேர்வு செய்யப்பட்டு அறிவொளி நிர்வாகத்தினை மாவட்ட ஆட்சியர் திரு. ரா. கண்ணன், இ.ஆ.ப., அவர்களின் ஆலோசனைப் படியும், தன்னார்வ அமைப்புகள் உதவியுடனும், ஒத்துழைப்புடனும் மிகுந்த சிறப்போடு செயல்படுத்தி வருகின்றனர். உதவித் திட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்குப் பவானிசாகரில் நான்கு நாட்கள் உறைவிடப் பயிற்சி முகாம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதைத் தவிர வட்டாரங்களில் 21 கலைக்குழு தேர்வு செய்யப்பட்டு அந்த கலைக் குழுவினருக்கும் 10 நாட்கள் பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இந்தக் கலைக் குழுவினர் ஒரு நாளைக்கு மூன்று நிகழ்ச்சி வீதம் ஒரு மாதம் மாவட்டம் முழுவதும் கலைப் பயணம் மேற்கொண்டு அறிவொளிப் பிரச்சாரம் செய்வார்கள்.

மாவட்ட அறிவொளி இயக்கம் இதுவரை 48 பள்ளிக்கூடங்களில் அறிவொளிப் பிரச்சாரமும், 15 நகர் மற்றும் பேரூர்களில் மாபெரும் அறிவொளி பேரணியும் நடத்தப்பட்டன. தொடக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளி ஆசிரியர்கள் மாநாட்டில் மாவட்ட அறிவொளி இயக்கம் பற்றி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் பெரியார் மாவட்ட அறிவொளி இயக்கம் பற்றி விரிவுரையாற்றினார்கள்.

மாவட்டத்தில் உள்ள பல்வேறு சத்துணவு மைய அமைப்பாளர்களிடம் அறிவொளி இயக்கம் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. ஒன்றிய ஊர்நல அலுவலர்களிடமும் அறிவொளி இயக்கம் பற்றி எடுத்துரைக்கப்பட்டது.

ஈரோடு சி.எஸ்.ஐ. மைதானத்தில் ஜூலை 11-ஆம் தேதி 10,000 பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்ட அறிவொளி பேரணி நடத்தப்பட்டது. ஜூலை 14-ஆம் தேதி பவானியில் மாபெரும் அறிவொளி இயக்கப் பேரணி எழுச்சியுடன் நடைபெற்றது. திங்களூர், அத்தாணி, காஞ்சிக்கோயில், அந்தியூர், தவிட்டுப்பாளையம் கிராமங்களில் அறிவொளி இயக்கம் சார்பாக விழிப்புணர்வுப் பேரணிகள் நடத்தப்பட்டது.

அறிவொளி இயக்கம் பற்றிய விழிப்புணர் மாவட்ட மக்களிடம் ஏற்படுத்திய பின் 6 மாதம் தொண்டர்கள் கல்வி அறிவில்லாத மக்களுக்குக் கல்வி போதித்து அதன் பின் மாவட்டம் முழுவதும் மதிப்பீடு செய்யப்பட்டு கற்றவர்களின் எண்ணிக்கை அறிவிக்கப்படும். பெரியார் மாவட்டத்தை மாநிலக் கருத்தாளர்கள் ஆய்வு செய்து முழு எழுத்தறிவு மாவட்டமாகச் செய்வதற்கு மாவட்ட அறிவொளி இயக்கமும், மாவட்ட ஆட்சியரின் ஆலோசனையில் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம்:

பாசன வாய்க்கால் தூர்வாரும் பணிகள்

கர்நாடக மாநிலம் குடகு மலையில் உற்பத்தியாகும் காவிரியின் மூலம் முழுமையான பாசன வசதி பெறும் மாவட்டம் நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம். காவிரி ஆறு பாசனத்திற்காகக் கல்லணையில் இருந்து காவேரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாய், கொள்ளிடம் என்று நான்காகப் பிரிக்கப்பட்டு, பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது.

இதன் மூலம் தஞ்சாவூர், புதுக்கோட்டை, தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்கள் பாசன வசதி பெற்றாலும் மாவட்டம் முழுவதும் உள்ள விளைநிலங்கள் முழுவதும் பாசன வசதி பெறும் மாவட்டம் நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம் ஒன்றே ஆகும்.

இம்மாவட்டம் காவிரி, வெண்ணாறு மூலம்தான் முழுமையான பாசன வசதி பெறுகிறது. காவிரி, வெண்ணாறு ஆகிய ஆறுகள் பாசன வசதிக்காக 'ஏ' வகுப்பு வாய்க்கால்களாகவும், 'பி' வகுப்பு வாய்க்கால்களாகவும், கிளை வாய்க்கால்களாகவும் பிரிக்கப்பட்டு பாசன வசதி செய்யப்பட்டு வருகிறது.

மேலே குறிப்பிடப்பட்ட வாய்க்கால்களில் நெய்வேலி காட்டு ஆமணக்குச் செடிகள் நிறைய வளர்ந்த காரணத்தினால் தண்ணீர் வீணாகி, சரிவரப் பாசன வசதி செய்ய இயலாத நிலையில் இருந்தது. தஞ்சாவூர் மாவட்டத்தில் இருந்து நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம் பிரிக்கப்பட்ட பின்

மு. பிச்சையா
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம்

விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையைக் கருத்திற்கொண்டு கடந்த ஆண்டு முதல் பாசன வாய்க்கால்கள் தூர் எடுக்கும் பணி, குடிமராமத்துப் பணிகள் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் செய்ய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்.

அதன்படி இந்த ஆண்டும் பாசன வாய்க்கால்கள் தூர் வாரும் பணிகள், குடிமராமத்துப் பணிகள் போர்க்கால அடிப்படையில் செய்யப்பட்டு முடியும் தறுவாயில் உள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளைச் செய்தியாளர்கள் நேரில் பார்வையிட, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவின்பேரில் பொதுப்பணித் துறையினர் ஏற்பாடு செய்து அழைத்துச் சென்றனர்.

இப்பயணத்தை நாகப்பட்டினத்தில் இருந்து தொடங்கிய செய்தியாளர்களை, முதல் கட்டமாக வெண்ணாறு கோட்டத்தில் அடங்கிய நாகப்பட்டினம் உபகோட்டத்தில் நடைபெற்றுவரும், நடந்து முடிந்த பணிகளைப் பார்வையிட அழைத்துச் சென்றனர்.

இக்கோட்டத்தில் அடங்கிய பணி முடிக்கப்பட்ட புதுச்சேரி வாய்க்காலைப் பார்வையிட்டபொழுது, இக்கால்வாயின் மூலம் பாசன வசதி பெறும் விவசாயிகளினால் அமைக்கப்பட்டுள்ள கிராம நலச்சங்கத்தின் பொருளாளர் திரு. கணபதி கூறுகையில், 40 ஆண்டுகளாகச் செய்யப்படாமல் இருந்த இப்பணி கடந்த ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. ஒன்பது கிராமங்களுக்கு இந்த வாய்க்கால் பாசனத்திற்காகவும் குறிப்பாக வடிகாலாகவும் பயன்பட்டு வருகிறது.

சம்பா நடவுக்கே திணறிக் கொண்டிருந்த இப்பகுதி, மேற்கண்ட பணிகள் மேற்கொண்டதன் மூலம் குறுவைச் சாகுபடியும் செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. 12 ஆண்டுகளாகக் குறுவைச் சாகுபடி இல்லை. இந்த ஆண்டும் கடந்த ஆண்டைப்போல் குறுவை, சம்பா சாகுபடிகள் நன்றாக அமைய வாய்ப்புள்ளது என்று கூறினார்.

இந்த உபகோட்டத்தில் 49 குடிமராமத்துப் பணிகள் ரூ.15 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்

பொது அறிவுத் தகவல்கள்

வைட்டமின் ''சி'' குறைந்தால் என்ன நோய் வரும்?
''ஸ்கர்வி'' என்ற நோய்.

வைட்டமின் ''சி'' அடங்கியுள்ள பொருட்கள் எவை?
பழங்கள், காய்கறிகள், முட்டைக்கோஸ்.

வைட்டமின் ''டி'' குறைந்தால் என்ன நோய் வரும்?
ரிக்கெட்ஸ் என்னும் எலும்பு நோய்.

ரோஜா எந்த நாட்டின் தேசிய சின்னமாக உள்ளது?
பிரிட்டன்.

அல்லிமலர் எந்த நாட்டின் தேசியச் சின்னமாக உள்ளது?
பிரான்ஸ்.

மனிதனுடைய உடலில் எத்தனை எலும்புகள் உள்ளன.
108.

மலேசியாவின் முக்கிய ஏற்றுமதிப் பொருள்
இரப்பர்.

பலூனைக் கண்டு பிடித்தவர்
மாண்ட் ஹோல்பா.

பருத்தி ஜவுளி உற்பத்தியில் முதலிடம் வகிப்பது எந்த மாநிலம்?
மகாராஷ்டிரா.

சிமெண்ட் உற்பத்தியில் முதலிடம் வகிப்பது எந்த மாநிலம்?
பீகார்.

தேயிலை உற்பத்தியில் முதலிடம் வகிப்பது எந்த மாநிலம்?
அசாம்.

குங்குமப்பூ உற்பத்தியில் முதலிடம் வகிப்பது எந்த மாநிலம்?
காஷ்மீர்.

முந்திரி உற்பத்தியில் முதலிடம் வகிப்பது எந்த மாநிலம்?
கேரளா.

மாணவர் பக்கம்:

பாரில் உயர..

—எழிற்பித்தன்

நேற்று இன்று நாளை
வாழும் கால எல்லை
மாற்று இல்லை தம்பி
மனத்தில் கொள்ள வேண்டும்!

தேரும் கல்வி ஒன்று
திசைகள் எட்டு உண்டு
ஊறுமிந்த நெஞ்சில்
உயிராம் மானம் அன்றோ!

ஆறுகடல் வானம்
அழகு மலைச் சாரல்
தேரு மிந்த மண்ணின்
தேவையன்றோ மாந்தர்!

உள்ளமென்ற விளக்கு
உயரவேண்டும் நமக்கு
பள்ளம் மேடு வாழ்வில்
பழமையென்று விலக்கு!

உரிமைகொண்ட நாடு
உயர்வுதாழ்வு ஏது?
பரிவுகொண்டு பழகு
பாரில் உயர ஒழுகு!

★ நான் கடவுளை நேருக்கு நேராகக் காண விரும்புகிறேன். உண்மைதான் கடவுள் என்று எனக்குத் தெரியும். என்னைப் பொருத்தமட்டில், கடவுளை அறியப் பயன்படும் ஒரே சாதனம் அகிம்சை-அன்பு-என்பதுதான்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், குண்டுவெடிப்பில் சேதமடைந்த ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தைப் பார்வையிட்டார் (9.8.93).

படமும் - செய்தியும்



மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், சென்னைப் பொது மருத்துவமனையில், குண்டு வெடிப்பில் காயமடைந்தவர்களுக்கு ஆறுதல் கூறி மருந்து, ஹார்லிக்ஸ், பழங்கள் ஆகியவற்றை வழங்கினார் (9.8.93)

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு மத்திய உள்துறை இணையமைச்சர் திரு. ராஜேஷ் பைலட் அவர்களுடன், சென்னை குண்டுவெடிப்புச் சம்பவம் குறித்து ஆலோசனை நடத்தினார் (9.8.93).



இரைச்சல், காற்று, வெளிச்சம் முதலியவை இந்த அறிகுறிகளை அதிகரிக்கும் என்பதால் இந்நோயினால் பாதிக்கப்படுபவர்களைத் தனியறையில் வைத்துச் சிகிச்சை அளிக்க வேண்டும். மேற்கூறிய அறிகுறிகள் நாய்களுக்கும் தென்படும்.

பலவகைப் பரிசோதனைகள்

உயிருடன் இருப்பவரின் உமிழ்நீர், முதுகுத்தண்டு நீர், கண் திசுக்கள் ஆகியவற்றைப் பரிசோதிப்பதன் மூலம் இந்நோயை நாம் அறியலாம். இந்நோயினால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் மூளை மற்றும் முதுகுத்தண்டைப் பரிசோதிப்பதன் மூலமும் அறியலாம்.

தனியறையில் வைத்து அந்தந்த அறிகுறிகளுக்கு ஏற்றவாறு சிகிச்சை அளித்து, பாதிக்கப்பட்ட மனிதன் அமைதியுடன் இறப்பதற்கு மட்டுமே மருத்துவம் உதவ முடியும்.

நோய்த் தடுப்பு முறைகள்

1. முதல் உதவி முறைகள்:

அ. காயத்தை நிறையத் தண்ணீரும், சோப்பும் கொண்டு நன்கு கழுவ வேண்டும்.

ஆ. காயத்தின் மீது கிருமி நாசினி அல்லது ஸ்பிரிட் தடவ வேண்டும்.

இ. காயத்திற்கு எக்காரணம் கொண்டும் கட்டுப் போடக்கூடாது; காயம் திறந்தே வைக்கப்பட வேண்டும்.

ஈ. காயத்தின் மீது மிளகாய்த் தூள், மஞ்சள்தூள், எண்ணெய் முதலியவற்றைத் தடவக் கூடாது.

பின்பு மருத்துவரிடம் சென்று வில்வாத ஜன்னி நோய் வராமல் தடுக்கும் TT, Tetanus Toxoid எனப் படும் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். காயங்கள் பெரிதாக இருந்தால் மருத்துவரே அதற்கேற்ற சிகிச்சை அளிப்பார்.

நோய் தொற்றுவதற்கு வாய்ப் பளித்த பின்னர் மேற்கொள்ள வேண்டிய தடுப்பு முறைகள்:

எவ்வகையான மிருகக் கடியினை யும் நாம் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது; காலம் தாமதிக் காமல் எவ்வளவு விரைவாக நாம் தடுப்பூசியைப் போட்டுக் கொள் கிறோமோ அவ்வளவு விரைவாக, நுண்கிருமிகளை நாம் செயலிழக்கச் செய்ய முடியும். அவை தசை நார் களில் இடம் பிடித்துவிட்டால், பின்பு அழிப்பது கடினம். நோய் மூளையைத் தாக்குவதும், உறுதி யாகி விடுகிறது.

தடுப்பூசிகளைப் போட ஆரம் பித்து, கடித்த நாய்களையும் பத்து நாட்கள் வரை கண்காணிக்கலாம். அக்காலகட்டம் முடிவுறும் வரை அவை நலமாக இருப்பின், தடுப் பூசிகள் போட்டுக் கொள்வதை நிறுத்திவிடலாம். அவ்வாறின்றி, நாய்களுக்கு நோயின் அறிகுறிகள் தென்பட்டாலோ, நோயினாலோ மற்ற காரணங்களினாலோ அது இறக்க நேரிட்டாலோ, அல்லது காணாமல் போய்விட்டாலோ, தடுப்பூசியைத் தொடர்ந்து போட்டுக் கொள்ளத்தான் வேண்டும்.

இருவகையான நோய்த் தடுப்பூசி முறைகள்:

1. உடனடியாக நோய்த் தடுப்புச் சக்தியினை அளிப்பது - பிராணிகள் மற்றும் மனிதர்களின் உடலினுள் இந்நுண்கிருமிகளைச் செலுத்தி அவற்றிற்கெதிரான நோய்த் தடுப்புச் சக்தியினை (Anti-bodies) அவை களின் இரத்தத்திலிருந்து பிரித் தெடுத்து ஊசி மூலமாகப் பாதிக்கப் பட்ட பிராணி அல்லது மனிதருக்குத் தடுப்பூசியாகப் போடுவது.

2. பாதிக்கப்பட்ட மனிதர்கள் அல்லது பிராணிகளின் உடலில் தடுப்புச் சக்தியினை உண்டாக்குவது.

இதற்குச் செம்மறி ஆட்டின் மூளையிலுள்ள நரம்புத் திசுக்கள், கோழி - கரு நாகத் திசுக்கள், மனித இரட்டை உயிரணுக்கள், வீரோ செல்கள் ஆகியவற்றில் இந்நுண் கிருமிகளை வளர்த்து, செயலிழக்கச் செய்து, அவற்றை ஊசியாகத் தயாரித்து உடலுக்குள் செலுத்து வதன் மூலம், நோய்த் தடுப்புச் சக்தியினை உண்டாக்கி, பாதிக்கப் பட்ட உடலிலுள்ள நுண்கிருமிகளை அழிக்கிறோம். இவ்வாறு தடுப்புச் சக்தியை உண்டாக்கப் பத்து முதல் பதினைந்து நாட்களாகும்.

செம்மறி ஆட்டின் மூளையி லுள்ள நரம்புத் திசுக்கள் மூலம் தயாரிக்கப்படும் தடுப்பூசி செம்பிள் தடுப்பூசி (Semple Vaccine) எனப் படுகிறது.

உலக சுகாதார நிறுவனம் (WHO) தடுப்பூசி போடுவதைப்பற்றி உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ள விதிமுறைகள் பின்வருமாறு:

நோய் பரவுவதற்கு வாய்ப்பளித்த தன்மைகள்

கடித்த பிராணியின் நிலை, தடுப்பூசி போடப்பட்டதா அல்லது இல்லையா?

நோய் பரவ வாய்ப்பளித்த நேரம், அதைத்தொடர்ந்து பத்து நாட்கள், சிகிச்சை முறைகள்

காயமின்றிப் பிராணியின் உடல் மட்டும் படுதல்; மறைமுகமாகப் படுதல், நோயினால் பாதிக்கப் பட்டது சிகிச்சை முறைகள் தேவை யில்லை, சந்தேகத்திற்குரியது நல முடன் இருத்தல்.

தோலினை நக்கியிருத்தல், கீறல்க அல்லது சுரண்டல்கள், சிறு கடிகள் (மூடியிருந்த கைகள், கால்கள், உடற்பகுதிகள்), தடுப்பூசி போட வேண்டும். நலமுடன் இருந்தால் தடுப்பூசியை நிறுத்தி விடவும்.

ஊரும் பேரும்

திருநெல்வேலி மாவட்டம்

அரியநாயகிபுரம்

தளவாய் அரியநாத முதலி யாரால் உருவாக்கப்பட்டது இவ் வூர். அவர் கட்டிய அரியநாயகி அணை அவர் பெயரை இன்றும் சொல்லிக் கொண்டிருக்கிறது. குமர குருபரருக்கு நாயக்க மன்னர் இவ்வூரைப் பரிசாகக் கொடுத்தார் என்பது வரலாறு. முக்கூடலுக்குச் செல்லும் சாலையில் இவ்வூர் உள்ளது.

சேரன்மாதேவி

சேர மன்னன் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு அரசியின் பெயரால் அமைந்தது இவ்வூர் என்பர். 'சேரன் மாதேவி சதுர்வேதி மங்கலம்' என் பதே இவ்வூரின் முழுப் பெயராகும். மிகப் பழமையான ஊரான இங்கு கோயில்களும், சோழ மன்னர்களின் கல்வெட்டுகளும் உள்ளன.

நோயினால் பாதிக்கப்பட்டது காட்டு மிருகங்கள்; பாதிக்கப்பட்டது கண்காணிக்க முடியாத மிருகம்; பாதிக்கப்பட்டதா எனத் தெரிந்தால் உடனடியாகத் தடுப்பூசி போட வேண்டும்.

பெருங்கடிகள் ஒன்றுக்கு மேல் (முகம், தலை, கழுத்து, விரல்) ஆகிய பகுதிகளில், சந்தேகத்திற் குரியது/கண்காணிக்க முடியாதவை.

செம்பிள் தடுப்பூசி வயிற்றில், தோலுக்கடியில், பத்து ஊசிகளாகப் போட வேண்டும்; நாய்க்கடிக்கு ஆளானவர் கர்ப்பிணியாக இருந் தால் மட்டும், தடுப்பூசியைத் தொடை யில் போடலாம். இத் தடுப்பு ஊசி சில பின்விளைவுகளைத் தருகிறது. இத்தடுப்பூசியே நரம்பு மண்டலத் தைத் தாக்கி, கால்களைச் செயலிழக் கச் செய்து, உணர்வுகளை இழக்கச் செய்து, நீர், மலம் கழிப்பதில் தொந்தரவு போன்றவற்றுடன் இறுதி யில் மூச்சுத் திணறி மக்கள் இறந்து விடவும் காரணமாக உள்ளது. 1:55000, முதல் 1:11000 என்ற அளவில் மக்கள் இவ்வகையில் பாதிக்கப்படுவதாகக் கணக்கிட்டுள் ளார்கள்.

இத்தடுப்பூசி போட்டு முடித்த திலிருந்து, ஆறு மாத காலம் வரை ஒருவர் அந்நோயிலிருந்து காக்கப் படுவர், அக்காலத்திற்குள் மீண்டும் பிராணிகளின் கடிக்கு ஆட்பட்டால் மீண்டும் அதே ஊசியை (பூஸ்டர் டோஸ்களைப்) போட்டுக் கொள்ள வேண்டும்.

திசு வளர்ப்புத் தடுப்பூசிகள்

கோழிக்கரு நார்த்திசுக்களி லிருந்து தயாரிக்கப்படும் தடுப்பூசி இந்தியாவில் Rabipur என்னும் பெயரில் விற்கப்படுகிறது. ஒன்றின் விலை ரூ.200.

சுத்திகரிக்கப்பட்ட வீரோ செல் களிலிருந்து தயாரிக்கப்படுவது (Verorab) என்னும் பெயரில் விற்கப் படுகிறது. ஒன்றின் விலை ரூ.500 ஆகும்.

இத்தடுப்பூசிகள் எவ்விதமான பின் விளைவுகளும் இல்லாதவை. இவ்வூசிகள் தோள்பட்டையில், தசைப்பகுதியில் ஆறு ஊசிகளாக 0, 3, 7, 14, 30, 90 ஆகிய நாட் களில் மூன்று மாத காலம் போடப் படுகிறது. இதில் 'ஒ' என்பது பிராணி கடித்த நாளைக் குறிப்ப தன்று, அஃது முதல் ஊசி போடப் படும் நாளைக் குறிப்பதாகும்.

இத்தடுப்பூசியைப் போட்டுக் கொண்டவர்கள் மூன்று முதல் ஐந்தாண்டுக் காலம் வரை இந் நோயிலிருந்து காக்கப்படுவர். இக் காலகட்டத்திற்குள் மீண்டும் நாயால் கடிக்கப்பட்டால் இரண்டு பூஸ்டர் டோஸ்களை ஒரு வார கால இடை வெளியில் போட்டுக்கொள்ள வேண்டும்.

3. நோய்த் தொற்றுவதற்கு வாய்ப்பளித்ததற்கு முன்பே மேற் கொள்ள வேண்டிய தடுப்பு முறைகள்:

மூன்று ஊசிகளாக 0, 7, 28 ஆகிய நாட்களில் போட்டுக் கொள்ள வேண்டும். ஒன்று முதல் மூன்று ஆண்டுக்கால இடைவெளி யில் ஒரு பூஸ்டர் டோஸைப் போட்டுக் கொள்ள வேண்டும்.

இத்தடுப்பு முறையினை அந்நோய் தொற்றும் வாய்ப்பு இருக்கும்வரை போட்டுக் கொள்ளுதல் நல்லது.

இம்முறைப்படி அவசியமாக போட்டுக் கொள்ள வேண்டிய வர்கள் சிலர் உள்ளனர். அவர்கள் 1. கால்நடை மருத்துவர்கள், 2. நாய்களை பழக்குபவர்கள், 3. இந் நோய் பற்றிய ஆராய்ச்சியாளர்கள், 4. மருத்துவ ஊழியரும் மற்றவர் களும், 5. இறந்த பிராணிகளைப் பதப்படுத்துவோர், 6. நகராட்சியின் கால்நடை அனுப்பு நிலைய ஊழி யர்கள், வேட்டையாடுபவர்கள், 7. தபால்காரர்கள், 8. தெருநாய் அதிகம் திரியும் பகுதிகளில் குடி யிருப்பவர்கள்.

மேற்கூறியவை நம்மைக் காத்துக் கொள்ள நாம் செய்ய வேண்டிய பணிகளாகும். பொதுமக்கள் தாமே முன்வந்து ஆற்ற வேண்டிய கடமைகள் சில உண்டு. அவை: 1. நீங்கள் வீட்டில் நாய் வளர்ப்பவராக இருந்தால், அவற்றிற்கும் முறையான மருத்துவச் சிகிச்சை தக்க சமயத்தில் தேவைப்படும்; ஆதலால் அவ்வப் போது உங்கள் வளர்ப்புப் பிராணியை மருத்துவ சோதனைக்குட்படுத்தவும்; வெறிநாய்க்கடி நோய்த்தடுப்பூசி போட்டுக் கொண்டு செல்லவும் தவறாதீர்கள்; அது பற்றிய விவரங் களைத் தவறாமல் குறித்து வைக் கவும்.

2. தெரு நாய்கள் பற்றிய தகவல் களை, நகராட்சியினருக்குத் தெரி வித்து அவைகளைப் பிடிக்கவும் நீங்கள் உதவ வேண்டும். மறந்து விடாதீர்கள்.

தமிழரசு

புதிய சந்தா விவரம்

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ.72
அரையாண்டுச் சந்தா ... ரூ.36

'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ.36

சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்
சென்னை-600 002.

தமிழரசு

படிக்க — பயன்பெற — பாதுகாக்க

With Best Compliments From

HOTEL : 2066
RES 2552

Hotel Sundari (Lodging)
5, Thiruvalluvar Street, Tindivanam-604 001

திண்டிவனம் நகரின் மையத்தில் 24 மணி நேரமும் சிறந்த முறையில் தண்ணீர் மற்றும் சுகாதார வசதியுடன் கூடிய சிறந்த லாட்ஜ்

T.V. விநாயக முதலியார்

With best compliments from

S.R. SINGARA NAINAR CO.,
Indian Oil Dealers

76, Singavaram Road, Gingee-604 202,
South Arcot District
Phone: 2041

Prop: S. RANGANATHAN

With best compliments from

VELU THEATRE
82, Thiruvannamalai Road
Gingee-604 202

K. VELUGOUNDER
Proprietor

With the best compliments from

Rtn. V. DURAISAMY
President
ROTARY CLUB OF TINDIVANAM
5, R.S. Pillai Street
Tindivanam

Phone: 2782
STD: 04147

மாமன்னன் ஜீவன் ஜீவா

கவிஞர் இளந்தேவன்

(அமரர் ஜீவானந்தம் பிறந்த நாள் ஆகஸ்ட் : 20)



இடிஇடிக்கும் வானமொன்று
தரையிறங்கி வந்ததோ!
ஏழை மக்கள் பகைவர் மீது
கனல் பரப்பி நின்றதோ!
குடையெடுத்த சேரமன்னன்
நடைபடைத்த பான்மையோ!
குற்றவாளி கடவுளேனும்
விட்டிடாத ஆண்மையோ!

மானுடத்தின் ஜீவனிங்கு
மனிதனாக வந்ததோ!
மதங்கள் சாதி பேதமற்ற
மனிதநீதி தந்ததோ!
ஆணவத்து மூடர் முன்பு
சிங்க மாக நின்றதோ!
ஆருமற்ற பாம ரர்க்குத்
தோழனாகி வென்றதோ!

உலக மாந்தன் என்ற போதும்
தமிழில் ஆசை கொண்டதோ!
உலக ஞானி கம்பன் என்னும்
உண்மை தன்னை விண்டதோ!
நிலவு மீது சென்றி டிக்கும்
தலைப டைத்த மானுடன்
நிகரிலாத ஆண்மை யாளன்
ஜீவா னந்தம் வாழ்கவே!

எழில்மிகு குற்றாலத்தில் ஏற்றமிகு சாரல் விழா!

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் குற்றாலம் கலைவாணர் கலையரங்கில், அரசு சார்பில் 9 நாட்கள் 31.7.93 முதல் 8.8.93 முடிய சாரல் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இயற்கை நமக்கு அளித்துள்ள இனிய கொடையான குற்றாலத்தில் சாரல் என்றும் மகிழும் இன்பத்தை நமக்கு அளிக்கின்றது. குற்றால அருவிகளில் நீராடி அகமகிழ்வு பெறும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் மாவட்ட நிர்வாகம் செய்து கொடுத்துள்ளது. அதிலும் குறிப்பாக அண்மையில் ஏற்பட்ட இயற்கையின் சீற்றத்தால் பழுதடைந்த குற்றாலம், அரசின் சீரிய முயற்சிகளினால் நவீன முறையில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. அருவிகளில் நீராடக் குற்றாலத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் வகையில், ஆண்டுதோறும் அரசின் சார்பில் சாரல் திருவிழா நிகழ்ச்சி கொண்டாடப்படுகிறது.

இந்த ஆண்டு சாரல் திருவிழாவின் தொடக்க நாள் நிகழ்ச்சிக்கு, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமை ஏற்க, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் சாரல் திருவிழாவினைத் தொடங்கி வைத்துப் பேசியதாவது:

''உலகத்தில் உள்ள முக்கியமான அருவிகளில் குற்றாலம் அருவிக்குத் தனிச்சிறப்பு உண்டு. பயணிகளின் ஜம்புலன்களுக்கும் நலன் பயக்கும் அருவி குற்றாலம்தான். நயாகரா பெரிய நீர் வீழ்ச்சி. ஆனால், அதைப் பார்க்கத்தான் முடியும்.

''இந்தியாவில் மற்ற மாநிலங்களில் உள்ள சுற்றுலா இடங்களுக்கு இல்லாத சிறப்பு குற்றாலத்துக்கு மட்டுமே உண்டு. கோடி ரூபாய் செலவு செய்தாலும் இந்தப் பெருமை கிடைக்காது. பெருமை பெற்ற குற்றாலத்தை நாம் காப்பாற்ற வேண்டும். இதன் அழகு கெடக் கூடாது. குற்றாலத்தின் பெருமை - தூய்மை பாதுகாக்கப்பட வேண்டும். குற்றாலத்தில் 2.5 கி.மீ. சுற்றளவுக்கு மரங்களை வெட்டத் தடை விதிக்க வேண்டும். நஞ்சை நிலத்தில் வீடு - பங்களா கட்ட அனுமதிக்கக் கூடாது.

'குற்றாலத்தில் பொழுதுபோக்கு அம்சம் இல்லை. இந்தக் குறையைத் தீர்க்கும் வகையில் கலைக்கூடம், நூலகம், ஓவியக் கண்காட்சி போன்றவை அமைக்க வேண்டும். முதலைப் பண்ணையும் ஏற்படுத்தலாம். இதனால் அரசுக்கு வருமானமும் கிடைக்கும். குளிக்க வரும் பயணிகளுக்குப் பொழுது போகும். இது போல் கூந்தகுளத்தில் பறவைகள் சரணாலயம் அமைக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டார். அங்கு என்னென்ன பறவைகள் எந்தெந்த நாடுகளிலிருந்து வருகின்றன' என்ற புள்ளி விவரங்களைக் கொடுத்தால், மத்திய அரசின் ஒத்துழைப்புடன் பறவைகள் சரணாலயம் அமைக்க ஏற்பாடு செய்யலாம்''.

குற்றாலம் நகரியக் குழுத் தலைவர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆர். வேலு, இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மாநிலங்களவை உறுப்பினர் திரு. தங்கராஜ் பாண்டியன் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. பீட்டர் அல்போன்ஸ், திரு. தர்மலிங்கம், திரு. ஆர்.பி. ஆதித்தன், திரு. ஈஸ்வரன் ஆகியோர் விழா நிகழ்ச்சியில் பங்கேற்றுச் சிறப்புரையாற்றினார்கள்.

ஒவ்வொரு நாள் நிகழ்ச்சியிலும் மக்கள் பிரதிநிதிகள் மாவட்டத்திலுள்ள அரசுத்துறை அலுவலர்கள், சேவை நிறுவனங்களின் தலைவர்கள், பல்வேறு மகளிர் அமைப்புக்களைச் சார்ந்தோர், நகரியக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் 7.8.93 அன்று சாரல் திருவிழா நிகழ்ச்சியில் பங்கேற்று, கலை நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்தார். அரசின் சார்பில் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட அதிர்ஷ்ட சாலிகளில் பரிசு பெற்றவர்களுக்குத் தங்கப்பதக்கங்களை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

சாரல் திருவிழா நிகழ்ச்சிகளில் கோ-ஆப்டெக்ஸ் தலைவர் திரு. நெல்லை பாலாஜி, தமிழ்நாடு அரசின் நகராட்சி நிர்வாக ஆணையர் திரு. எஸ். கபிலன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைச் செயலர் திரு. எஸ்.பி. இளங்கோவன், இ.ஆ.ப., கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் பிரதீப் வியாஸ், இ.ஆ.ப., நீதித்துறை நடுவர்கள், காவல்துறைத் தலைவர்கள், வங்கித் துறை அலுவலர்கள், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர், வனத்துறை உயர் அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

சாரல் திருவிழா நிறைவு நாள் நிகழ்ச்சி, மாவட்ட வருவாய் அலுவலர் திரு. பெ. இளங்கோ அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சாரல் திருவிழா சிறப்பு மலரை மாவட்ட வருவாய் அலுவலர் வெளியிட, மாநிலங்களவை உறுப்பினர் திரு. என். தங்கராஜ் பாண்டியன் அவர்கள் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்ச்சியில் குற்றாலம் நகரியக் குழுத் துணைத் தலைவர் திரு. பிரவீன்குமார், நகரிய அலுவலர் திரு. சீன் அஜ்மல்கான் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

சாரல் திருவிழாவின்போது ஒவ்வொருநாளும் தென்மண்டலப் பண்பாட்டு மையத்தினர் வழங்கிய கலை நிகழ்ச்சிகள், நையாண்டி மேளம், ஒயிலாட்டம், மயிலாட்டம், வீரதீர விளையாட்டுக்கள், கட்டபொம்மன் போக்குவரத்துக் குழுவினர், பாண்டியன் போக்குவரத்துக் குழுவினர் மற்றும் காவல் துறையினரின் மெல்லிசை நிகழ்ச்சிகள், தமிழர் பண்பாட்டை எடுத்துக்காட்டும் இந்திய அரசு நேரு இளையோர் மையத்தின் கிராமிய நடனங்கள், பரத நாட்டியம், வரலாற்று நாடகங்கள், குற்றாலம் பராசக்தி கல்லூரி மாணவிகளின் குற்றாலக் குறவஞ்சிப் பாடல்கள் அடங்கிய நடனங்கள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவை மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவர்ந்தன.

விழா முடிவில், மக்கள் தொடர்பு அலுவலர் திரு. எம்.ஏ. லாரன்ஸ் நன்றி நவின்றார்.



துரை. ராஜ்குமார்,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.

நூல் நயம்

பாரதப் போரில் பார்த்தசாரதி

ஆசிரியர்: டாக்டர் த. அமிர்தலிங்கம்
வெளியீடு:
செவ்வேள் பதிப்பகம்,
பி-3, தாடண்டர் நகர்,
வீட்டுவசதி வாரியக்குடியிருப்பு
சைதாப்பேட்டை,
சென்னை-600 015.

பக்கம்:448 விலை:ரூ.55/-

ஐந்தாம் வேதம் என்னும் சிறப்பினைப் பெற்றது பாரதம். சங்க காலத்தில் பெருந்தேவனாரும் இடைக்காலத்தில் வில்லிபுத்தூராழ்வாரும் பாரதத்தைத் தமிழில்பாடிய பெருமக்கள். வில்லிபுத்தூராழ்வாரின் கவிதையாற்றலை, விருத்தப்பாடலின் வித்தகத்தை வியாவாதார் இல்லை. பாட்டிலே இயன்ற அந்தப் பனுவலை ஏட்டிலே உரை வடிவத்தில் கொண்டுவர எடுத்த முயற்சிதான் இந்தநூல்.

பாரதக் கதையை, தெள்ளிய நீரோடை போன்ற உரைநடையில், ஆசிரியர் டாக்டர் த. அமிர்தலிங்கம் அவர்கள் சொல்கிற நேர்த்தி பாராட்டத்தக்கது.

பல்வேறு பாத்திரங்களைப் பாரதக் கதை கொண்டிருந்தாலும், எல்லாரையும் இணைக்கின்ற நூலாக இருந்தவன் பார்த்தசாரதி. கட்டுவிக்கும் நூலாக மட்டுமல்லாமல், ஆட்டுவிக்கும் ஆளாகவும் அவனே அமைவதால் பாரதப் போரில் பார்த்தசாரதி என்னும் புதுத்தலைப்பிலே, காவியச் செய்திகளைக் கருத்துக்கு விருந்தாக்கி மகிழ்கிறார் ஆசிரியர்.

கல்வி, கேள்வி, சிந்தனை, கவிஞர்க்குரிய கற்பனை- இவையனைத்தும் கொண்ட டாக்டர் த. அமிர்தலிங்கத்தின் இந்த அரிய நூலில், எளிமை, இனிமை, உண்மை, தெளிவு- இவையனைத்தையும் காணலாம்.

—இளந்தேவன்

வள்ளுவத்தில் காதல் கணிதம்

ஆசிரியர்: பொறிஞர் இரா. சிதம்பரம்
வெளியீடு:
திலகம் பதிப்பகம்
2/35, ஆயில் மாங்கர் தெரு
சென்னை-14

பக்கம்:144 விலை:ரூ.20/-

முப்பால் என எப்பாலும் போற்றும் திருக்குறளில், காமத்துப்பாலின் சிறப்பை விளக்குகிறது இந்நூல்.

'மனித குலத்தின் நல்வாழ்வுக்கு, வள்ளுவரது காதல் கணிதம் எவ்வாறு தேன் மருந்தாய் அமைகிறது' என்பதை அழகுற எடுத்துக்காட்டுகிறார் ஆசிரியர். பல்வேறு மேற்கோள்களுடன் குறளையும் இணைத்து, தாம் எடுத்துக் கொண்ட பொருளிலிருந்து சற்றும் வழுவாமல் மிகக் கச்சிதமாகச் செய்திருக்கும் பாங்கு பாராட்டுதற்குரியது.

இன்பத்தின் அடிப்படைக் கூறு பாடுகளை வாழ்வியலின் இயற்கை ஒட்டத்தோடு ஆய்ந்து, பெண்மை குறித்து வள்ளுவத்தின் கருத்தை நிலைநாட்டு கிறார். தமிழ் ஆர்வலருக்கும், ஆராய்ச்சி இளைஞர்கட்கும் இந்நூல் சிறந்த கையேடாக விளங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

— பி.வி.ஜி.

மூலநோய்க்கு நவீன வைத்தியம்

ஆசிரியர்: தூரியநாத்
வெளியீடு:
கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்,
92, கங்கையம்மன் கோவில் தெரு,
சென்னை-600 026.

பக்கம்:96 விலை:ரூ.12/-

நமது உணவுப் பழக்க வழக்கங்களே நம்முடைய நோய்களுக்கு மூல காரண மாக அமைகின்றன.

மூல நோய்க்கு மூல காரணமே, மலச் சிக்கல்தான் என்பது மருத்துவர் கருத்து. அளவோடு உண்டால் எந்த நோயும் நம் அண்டாது என்பதை நாம் உணர வேண்டும்.

மூலநோய்க்குக் காரணங்களை மட்டும் கூறாமல், அதைப் போக்கும் வழி முறைகளும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

எளிய மூலிகை மருத்துவம் மூலம் இந்நோயைக் குணப்படுத்தலாம் என்பது டன், யோகாசனப் பயிற்சிகளும் இதற்கு உதவும் என்று கூறுகிறார் ஆசிரியர்.

அதற்கான விளக்கப் படங்களும் உள்ளன.

—மறைமலை

'விஞ்ஞான விந்தைகளும் அறிவியல் வளர்ச்சியும்'

ஆசிரியர்:
இலக்கியச் சித்தர்
தங்கவயல் லோகிதாசனார்
வெளியீடு:
பாண்டியன் பதிப்பகம்,
20, எஸ்.பி.எஸ். முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை-14.

பக்கம்:120 விலை:ரூ.16/-

பழமைகளும் (சூரியன், எரிமலை, நட்சத்திரம்) புதுமைகளும் (ரெடியோ ஸ்கேனர், ரேடார், பிளானடோரியம்) தோன்றிய விதம், அவற்றின் தரம், பயன் என்று மிக விளக்கமாக, எளிமையாகக் கூறும் நூல்.

அறிவியலில் வளர்ச்சிகள் கணக்கிட முடியாதவை, அனைத்தையும் சொல்ல இயலாது என்றாலும் நாம் அறிந்து கொள்ளவேண்டிய சிலவற்றைப் பற்றி இந்நூல் விவரிக்கிறது. எதையும் காரண காரியங்களோடு அறிந்து கொள்ள விரும்புபவர்கள். மாணவர்கள் ஆகியோ ருக்கு இந்நூல் மிகவும் பயனுள்ளது.

பனியைத் துரத்தும் தூரியன்

ஆசிரியர்: இன்பவாணன்
வெளியீடு:
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
த.பெ. எண். 501
பூங்கா நகர், சென்னை-600 003.

பக்கம்:88 விலை:ரூ.23/-

சின்னஞ்சிறு கதைகளின் தொகுப்பு. ஒவ்வொரு கதையும் சாதாரண மனிதனில் இருந்து 'சபை குரு' வரையிலுள்ளவர் களின் ஆசை, பாசம், பொறாமை, கோபம், சந்தேகம் போன்ற உணர்வு களை மையமாக வைத்து, தெய்வ நம் பிக்கையை வலியுறுத்தி எழுதப்பட்டவை யாகும்.

எளிய நடை, நாம் ஒவ்வொருவரும் அன்றாடம் சந்திக்கும் சம்பவங்கள், பிரச்சினைகள், அவை தீர்க்கப்படும் முறைகள் என்று கதைகள் சிறப்பாக எழுதப்பட்டுள்ளன.

அவளுக்கு வேலை கிடைத்து விட்டது, திருமறைப் பேச்சாளர், புகை மண்டினால், காலத்தின் கைகள் போன்ற கதைகள் நினைவில் நிற்பவை.

—என். குமாரசாமி

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568936, 568937

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு
பதிவு எண். M. 8676
No. TN/MS(C)/PP-23



தமிழரசு

1-9-1993 ரூ.3

கண் மருத்துவம்



பதில்கள்:

டாக்டர் வி.எம். லோகநாதன்
இயக்குநர்,
அரசு பொது கண் மருத்துவமனை
சென்னை.

கே. சௌந்தரராஜன்
குஜிலியம்பாறை.

★ என் விழிகள் எப்போதும் சிவப்பாக இருக்கின்றன; பசித்திருக்கும் வேளையிலும், மாலை நேரத்திலும் எரிச்சல் எடுக்கிறது; இதற்கு எளிய முறை வைத்தியம் ஏதாவது சொல்லுங்கள் டாக்டர்?

வைட்டமின் சத்துக் குறைவே இதற்குக் காரணம்; பச்சைக் காய்கறிகள் அதிகம் சேர்த்துக் கொள்ளுங்கள்; நல்ல சத்தான உணவு வகைகளையே உட்கொள்ளுங்கள். நல்லது.

க. பெரியசாமி
வெங்கமேடு

★ என் கண்களைச் சாதாரணமாகத் திறக்க முடியவில்லை; இத்தனைக்கும் எந்தவிதமான வீக்கமும் இல்லை; என்ன செய்யலாம்?

எல்.பி. வேலுசாமி
சேனாபதி பாளையம்

★ எனக்கு வயது 50. சின்ன எழுத்துகளைப் படிக்க முடியவில்லை- இது ஏன்?

இந்த இரண்டு கேள்விகளுக்கும் விடை- இவர்கள் இருவரும் ஒரு நல்ல கண் மருத்துவரை அணுகி முறைப்படி சிகிச்சை பெற்றுக் கொள்ளுவது நல்லது.

சீனிவாஸ் பிரபு
சென்னை-90

★ சிறு குழந்தைகளுக்குக் கண்ணில் எண்ணெய் விடுவது நல்லதா?

அப்படிப்பட்ட மூடநம்பிக்கையால் மேற்கொள்ளப்படும் தவறான காரியம் அது; தேவையற்றதும்கூட!

★ கண்தானம் செய்வது என்றால் எப்படி?

அருகில் உள்ள அரசு கண் மருத்துவமனைக்குச் சென்று, அதற்கான படிவம் ஒன்று வாங்கி முறைப்படி பூர்த்திசெய்து கொடுக்க வேண்டும். முக்கியமாக- நெருக்கமான உறவினர்களிடம் இதுபற்றி முன்கூட்டியே தெரிவித்துவிட வேண்டும். ஏனென்றால்- ஒருவர் இறந்த 6 மணி நேரத்திற்குள் கண்கள் எடுக்கப்பட்டாக வேண்டும்; இப்படிப்பட்ட நிலையில் உறவினர்கள் மறுத்தால் மருத்துவர்கள் மீற முடியாத நிலைமை ஏற்பட்டு விடக்கூடும்.

கே. வெற்றிவேல்
ஈச்சங்கோடு

★ காலையில் எழுந்ததும் கண்களில் ஊளை தள்ளி, கண்ணீர் வடிகிறது; இதற்கு என்ன செய்யலாம் டாக்டர்?

"Antibiotic Drops" நல்லதாது ஏதாவது வாங்கி, தொடர்ந்து போட்டுக் கொள்ளுங்கள்.

க. கோபாலகிருஷ்ணன்
வெங்கடாம்பேட்டை

★ எனக்கு அதிகமாக வேலை எதுவும் இல்லை; இருந்தாலும் எனது விழிகள் அடிக்கடி உறங்க ஆரம்பித்து விடுகிறது என்ன காரணம்?

"நீங்கள் சொல்லுவதைப் பார்த்தால் உங்கள் கண்களில் ஏதும் கோளாறு இருக்க நியாயமில்லை; உடலில் ஏதோ நோய் இருப்பது போல் தெரிகிறது. உடனடியாகத் தகுந்த டாக்டரிடம் நீங்கள் உடலைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள்.

பி. பாப்பையா
திருப்பரங்குன்றம்

★ "நான் 2.6.1992-இல் கேட்டராக்ட் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டேன்; கனமாகக் கண்ணாடி கொடுத்துள்ளனர். ஆனால், பரவலாகப் பல்பு வெளிச்சம் போல் தெரிகிறதே தவிர, இன்னமும் பார்வை சரிப்படவில்லை. எனக்கு வயது 68 ஆகிறது; இனிமேல் நான் வலது கண்ணில் IOL பொறுத்திக் கொள்ளலாமா?

"Intraocular Lens" இனிமேல் இந்த வயதில் உங்களுக்குப் பொருத்துவது சிரமம். மறுபடியும் டாக்டரிடம் காட்டி ஆலோசனை பெறுங்கள்"

வி. சென்றாயன்
கருப்பூர், சேலம்-12

★ பிறவிக்குருட்டைச் சரிசெய்துவிட முடியுமா?

"பிறக்கிறபோதே சில குழந்தைக்குக் கேட்டராக்ட் இருப்பது உண்டு; அப்படியிருந்தால் (Congenital Cataract) குணப்படுத்திவிடலாம்; அப்படி இல்லாவிட்டால் அறவே சரிசெய்ய முடியாது."

ச. ஜான் ரவி
கோவில்பட்டி

★ கண்ணாடியைத் தேவைப்படும் போது மட்டும் போட்டுக்கொண்டிருந்துவிட்டு, பிறகு கழற்றி வைத்து விடலாமா?

"கண்ணாடி போட்டால்தான் சரியான பார்வை கிடைக்கிறது என்று ஆகிவிட்ட பிறகு, தொடர்ந்து போட்டுக்கொள்ளத்தான் வேண்டும்; அவ்வப்போது கழற்றி வைப்பது தவறு."

★ ஒன்றரைக் கண்ணை நல்லபடி சரிப்படுத்தி விடமுடியுமா டாக்டர்?

"முடியும். பார்வைக்கு எந்தப் பழுதும் ஏற்படாமல் அறுவைச் சிகிச்சை மூலம் ஒன்றரைக் கண்ணை நேர்ப் பார்வை கொண்டதாகக் குணமாக்கிவிடலாம்."

எஸ்.பி. பச்சைமுத்து
காரைக்குடி

★ மஞ்சள் காமாலை நோய்க்கும் கண்ணுக்கும் என்ன சம்பந்தம்?

"ஒரு சம்பந்தமும் இல்லை; காமாலை நோயால் உடலில் ஏற்படும் மாற்றம் காரணமாக, விழி வெண்படலம் மஞ்சள் நிறமாகி விடும்; அவ்வளவுதான்!"

எம். முருகேசன்
குட்டிச்செட்டிபட்டி

★ இரவில் அடிக்கடி எனக்கு விழிப்பு வருகிறது; சரியான தூக்கமில்லை - இது ஏன்?

"இதற்கும் கண்ணுக்கும் சம்பந்தமில்லை; உடம்பை ஒரு நல்ல டாக்டரிடம் காட்டிப் பரிசோதித்துக் கொள்ளவும்."

★ எனக்குக் கண்ணீரே வருவதில்லை; இதனால் நன்மையா, தீமையா?

"நிச்சயம் அப்படியிருப்பது தீமைதான். நமது கருவிழியானது பரிபூரண ஒளிபெறக் காரணமே கண்ணீர்தான். கண்ணீர் இல்லையேல், விழியானது உலர்ந்துபோய் விரைவிலேயே பார்வை கெட்டு விடும். இதை உத்தேசித்து செயற்கைக் கண்ணீரே கண்டுபிடித்திருக்கிறார்கள்; வாங்கிப் பயன்படுத்துங்கள். அல்லது அருகிலுள்ள அரசு கண் மருத்துவமனைக்குப் போய்ப் பரிசோதித்துக் கொள்ளுங்கள்."

மு. சுப்பிரமணியன்
நெய்வேலி-7

● 26 வயதுள்ள நான் வெல்டராகப் பணிபுரிந்து வருகின்றேன்; கடந்த நான்காண்டுகளாகக் கண்களில் நீர் கசிகிறது; எரிச்சல் ஏற்படுகிறது; நான் பாதுகாப்புக் கவசத்தோடு வேலை பார்த்தும் இந்த நிலை - இது ஏன் டாக்டர்?

"பாதுகாப்புக் கவசம் அணிவதாகக் கூறுகிறீர்கள்; ஆகவே விழிகளில் பாதிப்பு நேர்ந்திருக்க வழியில்லை; தகுந்த டாக்டரிடம் பரிசோதித்துக் கண்ணாடி போட்டுக் கொள்ளுங்கள். உங்கள் குறைகள் நீங்கிவிடும்.

ஆர்.கே. சிவசுப்பிரமணியம்
ஊர்க்காடு

● என் தங்கைக்கு மாலைக்கண் நோய். இரவு 7 மணிக்கு மேல் பார்வை தெரிவதில்லை; மின்மினிப் பூச்சியைப் பிடித்து உணவோடு கொடுத்தால் பார்வை கிடைத்துவிடும் என்கிறார்கள் சிலர், நான் என்ன செய்யட்டும் டாக்டர்?

"உங்கள் தங்கைக்கு 'RP' ஆகவும் இருக்கலாம். வைட்டமின் 'ஏ' சத்துக் குறைவினாலும் அப்படி ஆகலாம். சரியான கண் டாக்டரிடம் கொண்டுபோய்க் காட்டி சிகிச்சை பெறச் செய்யுங்கள். அப்படியில்லாமல் மின்மினிப்பூச்சி சாப்பிட்டால் சரியாகிவிடும் என்பதெல்லாம் கட்டுக்கதை, நம்ப வேண்டாம்.

● "Cataract" என்றால் என்ன டாக்டர்? அது ஏன் வருகிறது?

"கண்புரை நோய் என்பதே

அது; இந்நோய் கண்டவர்களுக்கு, எப்போதும் நீர்வீழ்ச்சியைப் பார்ப்பது போலவே பார்வை இருக்கும்; இதை முறையான அறுவைச் சிகிச்சை மூலம் நீக்கிவிடலாம்."

பழனிராஜன்
கோவை

● 45 வயதுள்ள என் இடது கண்களின் கறுப்பு வட்டம், வலது கண்ணில் உள்ளதைவிடச் சற்றுப் பெரிதாக இருக்கிறது. இடது விழியால் பார்க்கவோ, படிக்கவோ முடியவில்லை. போதுமான வசதியற்ற நான் இந்தக் குறையைப் போக்க என்ன செய்யலாம்?

"இதுவும் ஒருவகைக் கண் நோயே ஆகும்; தீவிரமான சிகிச்சை மூலம் குணப்படுத்திவிடலாம். அரசினர் கண் மருத்துவ மனையை அணுகுங்கள்; அதுவே போதுமானது; உங்கள் துன்பம் நீங்கி விடும்." ●

மாதம் ஒரு மருத்துவர்:

'மாதம் ஒரு மருத்துவர்' வரிசையில், மனநல மருத்துவ நிபுணர்.

டாக்டர் என். மாத்ருபூதம் அவர்கள்

உங்கள் கேள்விகளுக்குப் பதில் கூறுகிறார்.

● மனநலம் குறித்த உங்கள் கேள்விகளை, 5.9.93-க்குள் அனுப்பி வைக்கும்படிக் கேட்டுக் கொள்கிறோம். கேள்விகளை அஞ்சலட்டையில் எழுதினால் போதும். அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர் 'தமிழரசு'
அரசினர் தோட்டம்
சென்னை-600 002.

ஜெயங்கொண்டத்தில் ரூ.7,000 கோடியில் பழுப்பு நிலக்கரி - மின்சார உற்பத்தித் திட்டம்

மாண்புமிகு முதல்வர் முன்னிலையில் ஒப்பந்தம்

ரூ.7,000 கோடியில் கூட்டுத்துறையில் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி - மின்சார உற்பத்தித் திட்டத்திற்கான ஒப்பந்தம் 27.8.1993 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் கையெழுத்தானது.

இது குறித்துத் தமிழ்நாடு அரசு வெளியிட்டு உள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ள விவரம் வருமாறு:-

ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி, மின்சார உற்பத்தித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான கூட்டு முனைவோர் ஒப்பந்தம். தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம், மெக்நல்லி பாரத் எண்டர்பிரைசஸ் மற்றும் 4 ஜெர்மன் கம்பெனிகள் ஆகியவற்றிற்கிடையில் கையொப்பமிடப்பட்டது (27.8.1993).

இந்த ஒப்பந்தம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி, டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் கையொப்பமிடப் பட்டது.

ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டபோது, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு எம். சின்னசாமி, சென்னையிலுள்ள ஜெர்மன் நாட்டுத் தலைமைத் தூதர் டாக்டர் வோஹல், வில்லியம்ஸன் அன் மேஜர் கம்பெனியின் தலைவர் திரு பி.எம்.கைத்தான், பிர்லா குரூப் கம்பெனிகளின் துணைத் தலைவர் திரு சி.கே. பிர்லா, 'ஸீமென்ஸ்', 'மான்', 'டெயூட்டி' 'பாப்காக்' ஜெர்மன் நாட்டு டாக்ராப் கம்பெனி ஆகியவற்றின் பிரதிநிதிகள், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு டி.வி.வெங்கட் ராமன், மின்சார வாரியத் தலைவர் திரு என். ஹரிபாஸ்கர் மற்றும் மூத்த அலுவலர்கள் ஆகியோர் இருந்தனர்.

ஒப்புதல் மெமோரண்டம்

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும், ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின்சார உற்பத்திக் கார்ப்பரேஷன் ஆகியவற்றிற்கிடையேயான ஒப்புதல் மெமோரண்டம் ஒன்றும் கையொப்பமானது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மின்சார விநியோக நிலைமை குறித்து ஆய்வு செய்தபோது, அவர், மின்சார உற்பத்திக்கான தொலைநோக்குத் திட்டங்கள் உருவாக்கப்படாவிட்டால், மின்சாரப் பற்றாக்குறை காரணமாகத் தொழில்துறை வீழ்ச்சி அடையும் என்[illegible]ணர்ந்தார்.

புரட்சித்தலைவி ஆர்வம்

தமிழ்நாட்டில் நிலக்கரிப் படிவங்கள் இல்லாததையும், பழுப்பு நிலக்கரிப் படிவங்கள் உள்ளதையும் உணர்ந்து, பழுப்பு நிலக்கரியைக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான தொலைநோக்குத் திட்டங்களை மேற்கொள்வதில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆர்வம் காட்டினார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இந்திய அரசைத் தொடர்பு கொண்டு, தனியார் துறையில் மின்சார உற்பத்தி செய்வதற்கான அனுமதி பெறுவதற்கு மூல காரணமாக அமைந்தார்கள்.

தனியார் துறையில் புதிய திட்டங்களுக்கு ஒப்புதல்

மின்சார உற்பத்தியில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் காட்டிய அக்கறையின் காரணமாக, மின்சக்தி குறித்த முதலீட்டை அதிகரிக்கத் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகையில், வருங்காலத்தில் கூடிவரும் பெருமளவு மின் தேவையைக் கருத்தில் கொண்டு மின் உற்பத்தியில் தனியார் துறை முதலீட்டை ஊக்குவிக்கும் வண்ணம் ரூ.12 ஆயிரத்து 600 கோடி அளவில் 3,300 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

கூட்டுத்துறையில் ரூ.7 ஆயிரம் கோடி முதலீட்டுடன் 1,500 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஜெயங்கொண்ட சோழபுரம் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் மின் உற்பத்தித் திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின்சார உற்பத்தித் திட்டத்தில், ஜெயங்கொண்ட சோழபுரத்தில் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் வெட்டுவதும் அடங்கும். இதன் மூலம், ஒவ்வொன்றும் 500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் 3 மின் உற்பத்தி நிலையங்களுக்குப் பழுப்பு நிலக்கரி கிடைக்கும். இத்திட்டத்தின் இறுதிச் செலவு சுமார் ரூ.7,000 கோடியாக இருக்கும்.

ஒப்பந்தம் கையொப்பமிடும் நிகழ்ச்சியின் போது, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்கள்.

நாட்டிலேயே முதன் முதலாகத் தனியார் முதலீட்டின் உதவியுடன் தொடங்கப்படும் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் மற்றும் மின்சார உற்பத்தித் திட்டமாக, ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின்சார உற்பத்தித் திட்டத்தினைச் செயல்படுத்துவதில் அரசு கொண்டுள்ள அக்கறையை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விளக்கிக் கூறினார்கள். மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆங்கில உரையின் தமிழாக்கம் வருமாறு:

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108



தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2024
ஆவணித் திங்கள் - 16
மலர்:24 இதழ்:5
1-9-1993
விலை: ரூ.3

இந்த இதழில்...

ஜெயங்கொண்டத்தில் ரூ.7,000 கோடியில் பழுப்பு நிலக்கரி - மின்சார உற்பத்தித் திட்டம் ... 2
மக்கள் நலன் காக்கும் அரசு ... 5
படமும் செய்தியும் ... 9
பர்கூரைச் சேர்ந்த 696 குடும்பத்தாருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி ... 13
பகுத்தறிவுப் பாதுகாவலர் பேரறிஞர் அண்ணா! —மாண்புமிகு முதல்வர் ... 15
விளையாட்டு வீராங்கனை அமுதாவுக்கு தமிழக முதல்வரின் ஊக்கப் பரிசுகள் ... 16
எண்ணம் கவரும் வண்ணப் பறவைகள்! ... 17
நீலப்புரட்சி ஏற்பட நித்தம் பணியாற்றுவோம்! ... 19
காவிரி ஏன்? கங்கையும் இங்கு வரும்! ... 23
சென்னை மாநகரில் மகளிர் காவல் நிலையங்கள் ... 24
கல்பாக்கம் அணுமின் நிலையம் ... 29
வளரும் வேளாண்மை ... 32
மத நல்லிணக்க நாள் விழா ... 33
உலகச் சுற்றுலா நாள் முன்னேற்பாடுகள்! ... 36
தமிழ்த் தென்றல் திரு.வி.க. ... 37
சென்னை மாநகராட்சிச் செய்திகள் ... 39
சென்னையில் தமிழ்த் தென்றல் திரு.வி.க. பிறந்தநாள் விழா ... 41
ஏழ்மை நிலையிலும் ஏற்றம் பெற... ... 43
இராமநாதபுரம்: குடிநீர்ப் பிரச்சினை தீர... ... 45
வேளாண்மைத் துறை மூலம் விரைவான பணிகள் .. 47

அண்ணாவின் அன்புத் தத்துவம்!

குழந்தைக்குத் தேவையான உணவைத் தாய் அளிப்பது போல, மாணவனுக்குத் தேவையான கல்வியை ஆசிரியர் அளிப்பது போல, இல்லாதவர்களுக்குத் தேவையானதை இருப்பவர்கள் அளிக்க முன்வர வேண்டும் என்பதே அமரர் அண்ணா அவர்களின் அன்புத் தத்துவம்.

அண்ணா அவர்களிடம் சிந்தனை ஆற்றல் மட்டுமல்ல; அதன்படி செயலாற்றும் ஆற்றலும் நிறைந்திருந்தது. அதற்கு அவருடைய சொல்லாற்றல் பேருதவி செய்தது.

ஜெயங்கொண்டத்தில் ரூ.7,000 கோடியில் பழுப்பு நிலக்கரி - மின்சார உற்பத்தித் திட்டம்

மாண்புமிகு முதல்வர் முன்னிலையில் ஒப்பந்தம்

ரூ.7,000 கோடியில் கூட்டுத்துறையில் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி - மின்சார உற்பத்தித் திட்டத்திற்கான ஒப்பந்தம் 27.8.1993 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் கையெழுத்தானது.

இது குறித்துத் தமிழ்நாடு அரசு வெளியிட்டு உள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ள விவரம் வருமாறு:-

ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி, மின்சார உற்பத்தித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான கூட்டு முனைவோர் ஒப்பந்தம். தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம், மெக்நல்லி பாரத் எண்டர்பிரைசஸ் மற்றும் 4 ஜெர்மன் கம்பெனிகள் ஆகியவற்றிற்கிடையில் கையொப்பமிடப்பட்டது (27.8.1993).

இந்த ஒப்பந்தம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி, டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் கையொப்பமிடப் பட்டது.

ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டபோது, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு எம். சின்னசாமி, சென்னையிலுள்ள ஜெர்மன் நாட்டுத் தலைமைத் தூதர் டாக்டர் வோஹல், வில்லியம்ஸன் அன் மேஜர் கம்பெனியின் தலைவர் திரு பி.எம்.கைத்தான், பிர்லா குரூப் கம்பெனிகளின் துணைத் தலைவர் திரு சி.கே. பிர்லா, 'ஸீமென்ஸ்', 'மான்', 'டெயூட்டி' 'பாப்காக்' ஜெர்மன் நாட்டு டாக்ராப் கம்பெனி ஆகியவற்றின் பிரதிநிதிகள், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு டி.வி.வெங்கட் ராமன், மின்சார வாரியத் தலைவர் திரு என். ஹரிபாஸ்கர் மற்றும் மூத்த அலுவலர்கள் ஆகியோர் இருந்தனர்.

ஒப்புதல் மெமோரண்டம்

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும், ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின்சார உற்பத்திக் கார்ப்பரேஷன் ஆகியவற்றிற்கிடையேயான ஒப்புதல் மெமோரண்டம் ஒன்றும் கையொப்பமானது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மின்சார விநியோக நிலைமை குறித்து ஆய்வு செய்தபோது, அவர், மின்சார உற்பத்திக்கான தொலைநோக்குத் திட்டங்கள் உருவாக்கப்படாவிட்டால், மின்சாரப் பற்றாக்குறை காரணமாகத் தொழில்துறை வீழ்ச்சி அடையும் என்று உணர்ந்தார்.

புரட்சித்தலைவி ஆர்வம்

தமிழ்நாட்டில் நிலக்கரிப் படிவங்கள் இல்லாததையும், பழுப்பு நிலக்கரிப் படிவங்கள் உள்ளதையும் உணர்ந்து, பழுப்பு நிலக்கரியைக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான தொலைநோக்குத் திட்டங்களை மேற்கொள்வதில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆர்வம் காட்டினார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இந்திய அரசைத் தொடர்பு கொண்டு, தனியார் துறையில் மின்சார உற்பத்தி செய்வதற்கான அனுமதி பெறுவதற்கு மூல காரணமாக அமைந்தார்கள்.

தனியார் துறையில் புதிய திட்டங்களுக்கு ஒப்புதல்

மின்சார உற்பத்தியில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் காட்டிய அக்கறையின் காரணமாக, மின்சக்தி குறித்த முதலீட்டை அதிகரிக்கத் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகையில், வருங்காலத்தில் கூடிவரும் பெருமளவு மின் தேவையைக் கருத்தில் கொண்டு மின் உற்பத்தியில் தனியார் துறை முதலீட்டை ஊக்குவிக்கும் வண்ணம் ரூ.12 ஆயிரத்து 600 கோடி அளவில் 3,300 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

கூட்டுத்துறையில் ரூ.7 ஆயிரம் கோடி முதலீட்டுடன் 1,500 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஜெயங்கொண்ட சோழபுரம் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் மின் உற்பத்தித் திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின்சார உற்பத்தித் திட்டத்தில், ஜெயங்கொண்ட சோழபுரத்தில் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் வெட்டுவதும் அடங்கும். இதன் மூலம், ஒவ்வொன்றும் 500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் 3 மின் உற்பத்தி நிலையங்களுக்குப் பழுப்பு நிலக்கரி கிடைக்கும். இத்திட்டத்தின் இறுதிச் செலவு சுமார் ரூ.7,000 கோடியாக இருக்கும்.

ஒப்பந்தம் கையொப்பமிடும் நிகழ்ச்சியின் போது, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்கள்.

நாட்டிலேயே முதன் முதலாகத் தனியார் முதலீட்டின் உதவியுடன் தொடங்கப்படும் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் மற்றும் மின்சார உற்பத்தித் திட்டமாக, ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின்சார உற்பத்தித் திட்டத்தினைச் செயல்படுத்துவதில் அரசு கொண்டுள்ள அக்கறையை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விளக்கிக் கூறினார்கள். மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆங்கில உரையின் தமிழாக்கம் வருமாறு:

''இங்கு நமது நாட்டின் புகழ் பெற்ற தொழில் அதிபர்களும், ஜெர்மனி நாட்டுத் தொழில் முன்னோடிகளின் பிரதிநிதிகளும் வந்திருப்பதே ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின்சாரத் திட்டத்தின் வெற்றியை முன்னதாக அறிவிக்கிறது.

என்னைப் பொறுத்தமட்டில் இந்த நிகழ்ச்சி ''கனவு நனவு ஆகிறது'' என்பதையே குறிக்கிறது.

2 ஆண்டுகளுக்கு முன்பு நான் இந்தத் திட்டத்தை உருவாக்கியபோது, பல தடைகளைத் தாண்ட வேண்டியிருந்தது. நிலக்கரிச் சுரங்கம் தோண்டுவது, மின்சார உற்பத்தி என்ற இரு பெரிய, ஒருங்கிணைந்த திட்டத்தைத் தொடங்குவதற்குத் தொழில்நுட்ப, நிர்வாக மற்றும் நிதிக் காரணங்களால் பல சங்கடங்கள் ஏற்பட்டன.

தொழில் கொள்கை

சுரங்கத்துக்குத் தனியார் துறைக்கு அனுமதி வழங்குவதைப் பொறுத்தமட்டில் இந்தத் திட்டத்துக்கு மத்திய அரசாங்கத்தின் தொழில் கொள்கையிலே ஒரு மாற்றம் தேவைப்பட்டது. மேலும், மத்திய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளின் தாராளமயமாக்குதலை எதிர்நோக்க முடியாமல் இந்தியாவிலும் மற்றும் வெளி நாடுகளிலும் உள்ள பல பெரிய தொழில் நிறுவனங்கள் இத்தகைய திட்டங்களில் அதிக ஆர்வம் காட்டவில்லை. ஒன்றன் பின் ஒன்றாக இருந்த பிரச்சினைகளை நாங்கள் தாண்டி வந்தோம்.

உண்மையில் ஜெர்மனி நாட்டில் உள்ள தொழில் முன்னோடிகள் இந்தத் திட்டத்தில் பங்கு கொள்ள முன்வந்திருப்பது எங்கள் பொருளாதாரம் சிறப்பாக இருப்பதில் அவர்கள் நம்பிக்கை வைத்திருப்பது மட்டுமல்லாமல், இவ்வளவு பெரிய திட்டத்தை நடத்த எங்களுக்கு இருக்கும் திறமையைப் பற்றி அவர்களுக்கு இருக்கும் நம்பிக்கையையும் எடுத்துக் காட்டுகிறது.

உங்கள் நம்பிக்கை முற்றிலும் நியாயமானது என்பதை நான் உறுதியாகக் கூற விரும்புகிறேன். தொழில் வளர்ச்சி, தொழில்நுட்பக் கல்வி, தொழில் அடிப்படை வசதிகள் வளர்ச்சி, தொழில் வளர்ச்சிக்கான உகந்த சூழ்நிலையில் தமிழ்நாடு சாதனை படைத்துள்ளது.

சட்டம்-ஒழுங்கு

எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழ்நாட்டில் எங்களின் மேம்பாட்டு முயற்சிகளில் பங்கு பெற முதலீட்டாளர்களை ஈர்க்க இங்கு அரசியல் ஸ்திரத்தன்மையுடன், நல்ல முறையில் உள்ள சட்டம்-ஒழுங்கு நிலைமையே போதுமானது.

நாங்கள் தொழில் முறையில் மிக வேகமாக முன்னேறிச் செல்ல விரும்புகிறோம். ஆனால், மின்சார சப்ளைதான் மோசமாக இருக்கிறது. நீர் மின்சார ஆதாரங்களை அநேகமாகப் பயன்படுத்திவிட்டோம்.

நமது மாநிலத்தில் எதிர்கால மின்சார உற்பத்தி அனல் மின்சார மற்றும் அணு மின்சாரத்தைச் சார்ந்துதான் இருக்கிறது.

அனல் மின்சார நிலையங்களைப் பொறுத்த மட்டில் தொலை தூரங்களிலிருந்து, நிலக்கரியைக் கொண்டுவர வேண்டியிருப்பதால் இங்கேயே கிடைக்கும் பழுப்பு நிலக்கரியையே நாம் அதிகமாகச் சார்ந்திருக்க வேண்டியிருக்கிறது.

எனவேதான் மின்சார உற்பத்திக்காக நமது மாநிலத்தில் உள்ள பழுப்பு நிலக்கரியைத் தோண்டி எடுப்பதற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்து ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின்சாரத் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற அதிக முன்னுரிமை கொடுக்க விரும்புகிறேன்.

பழுப்பு நிலக்கரி ஆதாரங்களை எடுப்பது இது வகையில் மத்திய அரசாங்கத்தின் தனிப்பட்ட அதிகார வரம்புக்குள்ளேயே இருந்தது. நான் இந்தப் பிரச்சினையை எடுத்துத் தொடர்ந்து செய்த என் முயற்சியின் விளைவாகப் பழுப்பு நிலக்கரியைத் தோண்டி எடுப்பதற்கு மாநில அரசுகளுக்கும், தனியார் துறைக்கும் அனுமதி வழங்கும் திட்டத்துக்கும் மத்திய அரசாங்கம் ஒப்புதல் அளித்தது.

பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் மற்றும் மின்சார உற்பத்தி என்ற 2 பணிகளிலும் தனியார் துறையையும் ஊக்குவிக்க முடிவு செய்தோம். தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் பி.எம். கைத்தனையும் மற்றவர்களையும் பங்குதாரர்களாகச் சேர்த்துக் கூட்டுறவுத் துறையில் இந்தத் திட்டத்தை வளர்க்க முடிவு செய்தது.

மின்சார வாரியம்

தமிழ்நாடு மின்சார வாரியம் நாட்டிலேயே இதுபோன்ற நிறுவனங்களில் மிகச் சிறந்ததாகும்.

பிரம்மாண்டமான மின்சாரத் திட்டங்களை நிறைவேற்றியுள்ள தமிழ்நாடு மின்சார வாரியம் மின்சார உற்பத்தியிலும், விநியோகத்திலும் சிறந்த சாதனையைப் படைத்துள்ளது.

ஜெயங்கொண்டம் பழுப்பு நில்க்கரி உற்பத்தி மின்சாரத் திட்டம் ஆசியாவிலேயே மிகப் பெரிய திட்டம் என்று அறிகிறேன். இந்தத் துறையில் ஒங்கிணைந்த வளர்ச்சியை வழங்கும் முதல் திட்டமாகும் இது.

தனியார் துறையையும் ஈடுபடுத்தும் புதுமையான முறையில் இது திட்டமிடப்பட்டுள்ளது. இதில் சில பிரச்சினைகள் வரலாம். பங்குதாரர்களிடையே உள்ள நல்லெண்ணம், இந்தத் திட்டத்தில் உள்ள உறுதி ஆகியவற்றால் அந்தப் பிரச்சினைகளை நாம் விரைவில் தீர்த்துவிடலாம்.

உங்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன். இந்தத் திட்டத்தில் மிக உறுதியாக உள்ள மாநில அரசு இந்தத் திட்டம் வேகமாக நிறைவேற்றப்படத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கும்.

மேற்கண்டவாறு மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பேசினார்.

மக்கள் நலன் காக்கும் அரசு

கோவை மாவட்டம் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை

முதல் அட்டை சொல்லும் செய்தி:

மக்கள் சக்தியின் பேராதரவோடும், நல் வாழ்த்துக்களோடும், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆட்சிப் பொறுப்பேற்ற, உங்கள் சகோதரியின் தலைமையிலான இந்த அரசு, முனைப்புடன் மக்கள் பணியாற்றி வருகிறது என்பதை, நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். மக்களாட்சியின் மாட்சிமையைப் பெரிதும் மதித்து, 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்பதிலும், 'மக்கள் தான் இறுதி எஜமானர்கள்', என்ற ஜனநாயகக் கோட்பாட்டிலும், நம்பிக்கை வைத்து உள்ள நாங்கள், ஐந்தரைக் கோடி தமிழக மக்களின் எண்ணங்களுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும், ஏற்றார்போல இயங்கி வருகிறோம் என்பதை, நாடும் அறியும், நல்லவர்களும் அறிவார்கள்.

சில தேச விரோதச் சக்திகள், சமூக விரோதச் சக்திகள், வன்முறையாளர்கள், ஆகியோரது கொடிய பார்வை, என் மீது படிந்துள்ளது என்ற உண்மையை, நான் நன்கு அறிந்து இருந்த போதிலும், எனது அன்பிற்குரிய மக்களைச் சந்திக்காமல் இருக்க முடியாது என்ற காரணத்தால் தான், என் உயிரையும் பொருட்படுத்தாது, நான் தமிழகத்திலுள்ள எல்லா மாவட்டங்களுக்கும் சென்று, ஒவ்வொரு மாவட்டத்திலும், கோடிக் கணக்கான ரூபாய்க்கான திட்டங்களைத் தொடங்கி



கோவை மாவட்டத்தில்

நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

கோவை மாவட்டம் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, கோவை நகரிலுள்ள வ.உ.சி. பூங்கா மைதானத்தில் 20.8.1993 அன்று காலை நடைபெற்றது.

விழாவில் கலந்து கொள்வதற்காக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 20.8.1993 அன்று காலை 11.45 மணிக்கு மேடைக்கு வந்தார். உடனே அங்கு கூடியிருந்த மக்கள் 'புரட்சித் தலைவி வாழ்க' என முழக்கமிட்டபடி, முதல்வர் அவர்களை வரவேற்றனர். மேடையில் ஏறிய முதல்வர் அவர்கள் அங்கு கூடியிருந்த மக்களைப் பார்த்து வணங்கி வரவேற்பைப் பெற்றுக்கொண்டார்.

பின்னர் விழா நிகழ்ச்சிகள் தொடங்கின. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அடுத்து, சட்டமன்றத் தலைவர் மாண்புமிகு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் பேசினார்.

விழாவில் சுமார் ரூ.3 கோடியே 10 இலட்சம் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகள் 6,212 நபர்களுக்கு வழங்கப்பட்டன. இதில் 100 நபர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நலத்திட்ட உதவிகளை நேரில் வழங்கினார்.

கால் ஊனமுற்றவர்களுக்குச் சக்கர நாற்காலிகள், பெண்கள் சுயதொழில் தொடங்க செயற்கை வைரம் கட்டிங் இயந்திரம் போன்றவைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

இதைத் தொடர்ந்து முதல்வர் அவர்கள் விழாப் பேருரை ஆற்றினார்.

கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு சி.வி. சங்கர், இ.ஆ.ப. அவர்கள் மாவட்டத்தின் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினார்.

விழா முடிவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். விழாவினையொட்டி சேரன் போக்கு வரத்துக் கழக இசைக் குழுவினர் மெல்லிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

பின்னர், கோவை காந்திபுரம் காட்டூர் காவல் நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து மகளிர் காவல் நிலையத்தை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார். இது தமிழ்நாட்டில் அமைக்கப் பட்டுள்ள மூன்றாவது மகளிர் காவல் நிலையமாகும். பின்பு, காவல் நிலையத்துக்குச் சென்று குத்துவிளக் கேற்றி, காவல் நிலையத்தைப் பார்வையிட்டார். முதல்வர் அவர்களுடன் தமிழகக் காவல்துறைத் தலைவர் திரு ஸ்ரீபால், இ.கா.ப. அவர்களும் இந்த விழாவில் கலந்துகொண்டார்.

பின்னர், இந்த மகளிர் காவல் நிலையத்தில் இருந்த குறிப்பேட்டில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் கீழ்க்கண்டவாறு ஆங்கிலத்தில் குறிப்பு எழுதினார்.

I am very happy to be able to inaugurate this All-Women Police Station in Coimbatore, the first of its kind in this City, and the third All Women Police Station in the State of Tamil Nadu.

The first All Women Police Station was inaugurated at Madras in April, 1992. It has been functioning successfully for over a year now. It has proved to be immensely popular among the women, and the tremendous reception it has received has inspired me to announce the establishment of similar All Women Police Stations all over the State.

I have no doubt that this All Women Police Station will also prove to be a great success and that the Inspector, staff and personnel of this Police Station will acquit themselves creditably in the performance of their duties, fulfilling the expectations of the public, in particular women, and bringing honour and glory to the Tamil Nadu Police Force.

கப்பறபடை தலைமைத்தளபதி எம். ராம்தாஸ், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்து உரையாற்றினார். திருமதி ராம்தாஸ் அவர்களும் அப்போது உடனிருந்தார் (13.8.93).

சென்னிந்தியாவின் அமெரிக்கத் தூதர் திமோதி ரொமர், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு, 'அமெரிக்கா' என்னும் புத்தகம் ஒன்றைப் பரிசாக அளித்தார் (18.8.93).

வைத்து, பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு, நானே எனது கைப்பட, அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கி வந்திருக்கிறேன்.

மக்களின் நல்வாழ்விற்கும், வளர்ச்சிக்கும், பல பிரகடனங்களை அறிவித்துக் கொண்டிருப்பதை விட, பல்வேறு நலத்திட்டங்களைத் திறம்பட செயல்படுத்தி, சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கின்ற, ஏழை எளிய மக்களுக்கு, அத்திட்டங்களின் பலன் சென்று அடைகிறதா என்பதைக் கண்காணிப்பதில, ஆழமான நம்பிக்கை கொண்டு உள்ளது எங்கள் அரசு. அதன் அடிப்படையில், அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளைப் பெற்று. தங்கள் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ள, துடித்துக் கொண்டிருக்கும் பல்வேறு பிரிவினர்களிடமிருந்து, மனுக்களை நேரில் பெற்று, துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற உன்னதமான நல்லெண்ணத்தில், சென்ற ஆண்டு ஒவ்வொரு திங்கட் கிழமையையும், குறிப்பிட்ட மாவட்டத்திற்கு என ஒதுக்கி, பொது மக்களிடமிருந்து குறைகளைக் கேட்டு, மனுக்களைப் பெற்று, நடவடிக்கை எடுத்தேன்.

''பொதுமக்கள் குறை தீர்ப்பது'' என்பது, சாதாரணப் பணியாகக் கருதாமல், அதில் தனிக் கவனம் செலுத்தி, மக்களுடைய குறைகளைக் களைய வேண்டும் என்று, அதிகாரிகளுக்கு ஆணைகள் இட்டதோடு, ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒரு துணை ஆட்சியர், Deputy Collector அந்தஸ்த்தில், இதற்காக ஒரு தனி அலுவலரை நியமித்து, குறை தீர்க்கும் பணிக்கு, ஒரு புதிய உத்வேகத்தைக் கொடுத்துள்ளேன். என்னிடம் அளவிட முடியாத நம்பிக்கையும், பேரன்பும் கொண்டுள்ள, பல லட்சக்கணக்கான சகோதர சகோதரிகள், என்னிடம் மனுக்களை வழங்கினார்கள். நானும் பல மணி நேரம், அவர்களை நேரில் சந்தித்து, குறை

மருத்துவ நலத் திட்டம்



மற்ற மாநிலங்களுடன் ஒப்பு நோக்கும்போது, தமிழ்நாட்டில் பொதுச் சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள், சிறப்பாகவே செயல்பட்டு வருகின்றன.

எனினும், குறைபாடுகள் இல்லாமல் இல்லை. திட்டங்களை நிறைவேற்றும் அணுகுமுறையில், செயல்பாடுகளிலும், நாம் மேலும் முன்னேற்றம் காண்பது, இன்றைய கால கட்டத்தில் மிகவும் அவசியமாகிறது.

தொழுநோய், காசநோய், கண்நோய் போன்றவை, தமிழக மக்களை அதிகமாகப் பாதித்து வருகின்றன. இந்த நோய்களைத் தீர்க்க, கிராம மக்களுக்கான அடிப்படை மருத்துவ வசதிகளை நாம் உறுதிப்படுத்த வேண்டும். இவற்றைக் கவனத்தில் கொண்டுதான் கிராம மக்களுக்காக, அவர்கள் இருக்கும் இடத்திலேயே மருத்துவ வசதிகள் செய்து தருவது என்கிற எங்கள் இலக்கினை அடைய, இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் மருத்துவர்களைக் காண்பது அரிது என்றிருக்கும் அவல நிலையைப் போக்கிடும் வகையில், பல்வேறு மருத்துவத் துறையில் உள்ள நிபுணர்களைக் கிராமங்களுக்கு அனுப்பி, பரிசோதனை வசதிகள் செய்து கொடுத்து, மருத்துவ வசதிகளைப் பரவலாக்கிட இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

**'நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்'**

என்றார் திருவள்ளுவப் பெருந்தகை.

நோய் இன்னதென ஆராய்ந்து, நோயின் காரணங்களை அறிந்து, அதைத் தணிக்கும் வழியையும் ஆராய்ந்து, அந்த வழிகள் உடலுக்குப் பொருந்தும் படியாகச் செய்ய வேண்டும். வள்ளுவப் பெருந்தகை இங்ஙனம் சுட்டிக் காட்டியதற்கு, இம் மருத்துவ நலத் திட்டம் உரிய வகையில் செயல் வடிவம் தரும்.

களையும் கேட்டேன், மனுக்களையும் பெற்றேன். பல்வேறு அரசு நலத்திட்டப் பலன்கள், மக்களுக்கு நேரடியாகச் சென்று அடைவது இல்லை என்று, சிலர் குறை கூறி வந்ததால், என்னிடம் மனுக்களை அளித்த மனுதாரர்களுக்கு, நியாயமான முறையில், அரசு நலத்திட்டப் பலன்கள், சென்று அடைய வேண்டும் என்ற எண்ணத்தில், அரசாங்கத்தின் செலவில், மனுதாரர்களைச் சென்னைக்கு நேரில் வரவழைத்து, உதவிகளை நானே வழங்கும் புதிய நடைமுறையைச் செயல்படுத்தினேன்.

23.3.1992 அன்று, மாவட்ட வாரியாக மனுக்களைப் பெற ஆரம்பித்து, 20.7.1992 முடிய, ஒரு சுற்று எல்லா மாவட்ட மக்களிடமிருந்தும், மனுக்களைப் பெற்று, அம்மனுக்களை விசாரணை செய்து, 36,438 தகுதியுடைய மனுதாரர்களை, 13.7.1992 முதல், 2.11.1992 வரை, பல நாட்களில் வரவழைத்து, 52 கோடி ரூபாய் மதிப்புள்ள, பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை, நேரில் வழங்கியுள்ளேன்.

இரண்டாவது கட்டமான தற்போது, மீண்டும் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும், ஏற்கெனவே பெறப்பட்ட மனுக்கள் மீது, விரைந்து நடவடிக்கை எடுத்து, அரசு நலத்திட்ட உதவிகளை, நானே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று வழங்குவதற்கு, ஒரு திட்டம் தீட்டினேன்.

அந்தச் சிந்தனையின் செயல்பாடு தான், இன்று கோவை மாவட்டத்தில், 6,200 பேருக்கு, அரசு நலத்திட்ட உதவிகளை, மனமகிழ்ச்சியுடன் வழங்க வந்துள்ளேன். மக்கள் நலன் காக்கும் அரசாக, ஏழை எளிய மக்கள், மற்றும் நலிந்த பிரிவினர்களின் நலனைக் காக்கும் அரசாக, சமுதாயத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். என்ற உயர்ந்த கொள்கையுடன், நாங்கள் செயல்பட்டு வருகிறோம்.

இன்று வழங்க உள்ள உதவிகளை, ஒவ்வொரு வருக்கும் தனிப்பட்ட முறையில் வழங்க வேண்டும், என்று நான் விரும்பினாலும், நேரம் இன்மையால், 100 பேருக்கு மட்டும், உதவிகளை நானே வழங்க உள்ளேன். மற்றவர்கள் அனைவருக்கும், மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் அரசு அதிகாரிகள், எனது முன்னிலையிலேயே வழங்குவார்கள். இந்த விழாவில் உதவிகளைப் பெறும், எனது அன்பிற்குரிய சகோதர சகோதரிகள், தங்கள் வாழ்க்கையில், மேலும் பல முன்னேற்றங்களை அடைந்து, சீரோடும் சிறப்போடும் வாழ வேண்டும் என்று, எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TNPSC

விளம்பர எண்.32/93

தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு மற்றும் காப்பு மருந்துப் பணியில் நல்வாழ்வு அலுவலர் (Health Officer) பதவியில் ஒன்பது காலியிடங்களுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட மிகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினர்/சீர்மரபினர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் 27.9.1993 அன்று மாலை 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன. (இக்காலியிடங்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர்களுக் குரிய நிலுவையிலுள்ள காலியிடங்களாகும்).

சம்பளம்: மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2500-75-3100-100-4200

குறிப்புகள்: (1) இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவைகள் அவர்களைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டு தெரிவு செய்யப்படுவார்கள்.

விளக்கம்: 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினி யிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

(2) 7.4.1993 நாளிட்ட தேர்வாணையத்தின் அறிவிக்கையில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட இப்பதவிக்குரிய 16 **காலியிடங்களுக்கும் மற்றும் தற்போதைய மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர்களுக்குரிய 9 நிலுவையிலுள்ள** காலியிடங்களுக்கும் சேர்த்து ஒருங்கிணைந்த தேர்வாக நடத்தப்படும்.

(3) 7.4.1993 நாளிட்ட தேர்வாணையத்தின் அறிவிக்கைக்கிணங்க ஏற்கெனவே இப்பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட விண்ணப்பித்து, அவர்களின் விண்ணப்பங்கள் அனுமதிக்கப்பட்டுள்ள பட்சத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் மீண்டும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தேவை இல்லை.

வயது: 1.7.1993 அன்று 35 வயதிற்குக் குறைவாக.

NOTE: (i) சலுகை

தகுதி	சலுகை
Degree Holders	No age limit.
Diploma Holders	No age limit if they have obtained the Diploma after passing Pre-technical Course/ P.U.C./H.S.C. The prescribed age limit will be increased by five years in respect of Destitute Widows, who have obtained the Diploma after passing S.S.L.C.

(Some more concessions are given below)

(ii) The period of service rendered by a candidate as short Service/Regular Commissioned Officer in the Army Medical Corps will subject to a maximum period of five years be excluded in computing his age.

QUALIFICATION AS ON 27.8.1993: (The following or its equivalent) B.S.Sc. degree or the Diploma in Public Health of the University of Calcutta.

or

A certificate of having undergone a special course of training in Sanitary Science in the Medical College, Madras for a period of not less than one year and of having passed the examination for Licenciate in Public Health held at the end of that course.

or

If fully qualified candidates are not available up to the number required applications from candidates possessing the M.B.B.S. degree or from candidates possessing the Diploma in Medicine and Surgery or the Diploma of L.M.P. granted by the Board of Examiners, Medical College, Madras will be considered for selection subject to certain conditions.

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த ஆதரவற்ற விதவைகள் தாயகம் திரும்பியவர்கள் (பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள் தவிர) முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் **குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர் போன்ற** வர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் தேர்வாணையத்தின் "பணி வேட்பாளர்களுக் கான விதிமுறை"-களில் தரப்பட்டுள்ளன. மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த தாயகம் திரும்பியவர்கள், (பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்களைத் தவிர) முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர் போன்றவர்களுக்கு அளிக்கப்படும் விண்ணப்பக் கட்டணச் சலுகைகளும் தேர்வாணையத்தின் "பணி வேட்பாளர்களுக்கான விதிமுறை"-களில் தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், **சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது** ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.8.93 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) சென்னை அண்ணா சாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியில் (State Bank of India) ஏதாவதொரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய, செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.8.1993 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட சென்னை-600 006 பணிக்கிளை (Service Branch) சென்னை-(8443) பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான **(ரூபாய் 10) குறுக்குக் கோடிட்ட "வங்கிக் கணக்கு வைத்துப் பணம் பெறுபவர்" 'கேட்புக் காசோலை'** (Account Payee - Demand Draft)-யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/1486/MS/93

பர்கூரைச் சேர்ந்த 696 குடும்பத்தார்க்கு மாண்புமிகு முதல்வர் உதவி!

பின் தங்கிய மாவட்டமான தர்மபுரி மாவட்டத்தில் பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அந்தத் தொகுதி மக்களின் குறைகளைக் கேட்டு அவற்றைக் களைய வேண்டும் என்பதற்காகப் பர்கூர் நகரில் தொகுதி அலுவலகம் ஒன்றைத் துவக்கி, அதன்மூலம் தொகுதி மக்களின் மனுக்களைப் பெற்று வருகிறார். அந்த அலுவலகத்தில் பெறப்படும் அனைத்து மனுக்களையும் தாமே நேரடியாகப் பரிசீலனை செய்து, அரசுத் துறையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய மனுக்களைப் பல்வேறு அரசுத் துறையின் பிரிவுகளுக்கு மேல் நடவடிக்கைக்கு அனுப்பிவைத்து அரசின் சார்பிலான உதவிகளைப் பெற்றுத் தருகிறார்.

எஞ்சியுள்ள மனுக்களில், அரசு உதவிகள் கிடைக்க இயலாத வண்ணம் உள்ள மனுக்களைத் தெரிந்தெடுத்து, அந்த மனுதாரர்களுக்கு வேண்டிய உதவிகளைத் தனது சொந்த நிதியிலிருந்து பொருட்களை வாங்கியும், நிதியாக வழங்கியும் வருகின்றார்கள். இதுவரை 563 நபர்களுக்கு இத்தகைய உதவிகள் பொருட்களாகவும், நிதியுதவிகளாகவும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளன.

24.8.1993 அன்று, மேலும் 133 நபர்களைத் தனது இல்லத்திற்கு நேரில் வரவழைத்து, தனது சொந்தச் செலவிலிருந்து, பெட்டிக்கடை வைக்க 20 நபர்களுக்கும், காய்கறிக்கடை வைக்க 5 நபர்களுக்கும், துணிக்கடை வைக்க 7 நபர்களுக்கும், ஆடுகள் வளர்க்க 6 நபர்களுக்கும், கோழி வளர்க்க ஒருவருக்கும், சிறு தொழில் தொடங்க உதவி கோரிய 33

சென்னையில் உள்ள ஜப்பானியத் தூதர் திரு டாட்சௌ இஷிஜாகி மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்தார் (18.8.93).

இந்திய யூனிசெப் (UNICEF) பிரதிநிதி டாக்டர் ஜான் எலியட் ராப்டே மற்றும் யூனிசெப் (UNICEF) தலைவர் செல்வி கின் சர்தானி லூயின் அவர்களும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைச் சந்தித்து உரையாடினார்கள்.

வில்லியம்சன் அண்டு மேஜர் கம்பெனியின் தலைவர் திரு பி.எம். கைத்தான், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும், ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின்சார உற்பத்தி கார்பொரேஷனுக்கும் இடையிலான ஒப்புதல்மெமோரண்டத்தில் கையொப்பமிட்டு தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் அளித்தார் (27.8.1993).

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், வேளாண்மை விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதனின் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆராய்ச்சி நிலையத்திற்கு ரூ.5 இலட்சத்தை மானியமாக 27.8.1993 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.



நபர்களுக்கும் நிதி உதவியினை வழங்கினார்.

மேலும் - திருமணம் செய்வதற்காக நிதியுதவி கோரிய 8 நபர்களுக்கும், வீடு கட்ட உதவி கோரிய 3 நபர்களுக்கும், மருத்துவச் சிகிச்சைக்கான உதவி கோரிய 8 நபர்களுக்கும், உடல் ஊனமுற்ற 9 நபர்களுக்கும் நிதி உதவி வழங்கினார்.

மேலும் 10 நபர்களுக்குக் கன்றுடன் கூடிய உயர்ந்த ரகக் கறவை மாடுகளையும், ஒவ்வொருவருக்கும் ஒரு மாட்டு வண்டி; ஒரு ஜோடி காளை மாடுகள் வீதம் 11 நபர்களுக்கும், 6 நபர்களுக்குத் தையல் இயந்திரங்களும், 2 ஊனமுற்ற நபர்களுக்கு மூன்று சக்கர வண்டியும், ஒரு நபருக்கு சைக்கிள் ரிக்ஷாவும், 3 நபர்களுக்கு சைக்கிள்கடை வைக்க தலா 6 சைக்கிள்களும் மற்றும் கடை நடத்தத் தேவையான உபகரணங்களையும் வழங்கினார்.

இத்துடன் தனது பர்கூர் தொகுதியில் வசிக்கும் 696 ஏழைக் குடும்பங்களுக்குத் தம்முடைய சொந்தச் செலவிலிருந்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், நிதியுதவியினை வழங்கியுள்ளார்.

அண்ணா போற்றிய பெருமக்கள்

பாவேந்தர் பாரதிதாசன்

" பாரதிதாசன் தரும் இலக்கியச் கவையை அனுபவிக்க இலக்கணம் கற்றிருக்க வேண்டியது இல்லை. பாரதிதாசன் பாக்களைப் படித்தவுடன் அவை நம் இரத்தத்தோடு இரத்தமாகக் கலக்கின்றன. உணர்ச்சி நம் நரம்புகளிலே ஊறுகிறது; கவைத்தால் குசிக்கிறது.

படிக்கிறோம்; பாரதிதாசன் ஆக நாமே ஆகிறோம்.

படிக்கிறோம்; நாமும் பாடலாமா என நினைக்கிறோம்.

படிக்கிறோம்; 'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்கிறோம். "

செப்-15. அண்ணா பிறந்த நாள்:

பகுத்தறிவுப் பாதுகாவலர் பேரறிஞர் அண்ணா!

- மாண்புமிகு முதல்வர்

'அண்ணா' என்கிற அந்த மூன்றெழுத்து மந்திரத்தின் சக்தி உலகளாவி உள்ளது என்பதை இன்றும் எவரும் மறுக்க முடியாது. இந்த ஆழமான பற்றுதலுக்கும், அன்பிற்கும் பல காரணங்கள் உள்ளன. அண்ணா அவர்களின் செயல், பேச்சாற்றல், சகிப்புத் தன்மை, கொள்கைப் பிடிப்பு, பகுத்தறிவுப் பற்று, அறிவாற்றல், பொதுநோக்கு, சகோதரத்துவம் என்று அடுக்கிக்கொண்டே போகலாம். ஆனால், இவற்றிற்கு எல்லாம் மேலாக மனிதனை மனிதனாக மதித்து, எவர் மனதையும் தன் வாழ்நாளில் புண்படச் செய்யாத அவரது செயல், வாக்கு இவைதான் அவரை உலகளவில் உயர்த்தியதோடு மட்டுமன்றி, அனைவரின் உள்ளத்திலும் இடம்பெறச் செய்தது என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது. 'நான் ஒரு சாமானியன், மிகவும் சாதாரண குடும்பத்தில் பிறந்தவன்' என்று அவர் சொல்லும்பொழுது, அவை வெறும் வாய் வார்த்தைகளாக இல்லாமல்,உண்மையின் உருவாக அவரது உள்ளத்தில் இருந்து வெளியானவை என்பதற்கு அவர் வாழ்ந்து காட்டிய வழியே சான்றாகும்.

அரசியலில் கருத்து மாறுபட்டவர்களை அவர் வாழ்த்திய துணிவும், கட்சித் தொண்டர்களிடம் குடும்பப் பாசத்தைப் புகுத்திய திறனும், எழுத்தாற்றலில் பொருள் பொதிந்த அடுக்கு மொழிகளை அறிமுகப்படுத்திய விதமும், கலைத் துறையை முழுமையாக அரசியலுக்குப் பயன்படுத்தி வெற்றிகண்ட தன்மையும் அண்ணா ஒருவருக்கு மட்டுமே கைவரப்பெற்ற கலையாகும்.

'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன்' என்ற அவரது முழக்கம் என்றென்றும் அவர் வழி நடப்போர்களின் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்;
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு;
எதையும் தாங்கும் இதயம் வேண்டும்;
இனி நடப்பவைகள் நல்லதாக இருக்கட்டும்;
மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு;
மறப்போம்! மன்னிப்போம்!

போன்ற அவரது பொன்மொழிகள் என்றென்றும் நிலையாகத் தமிழ் மொழியில் அழியா இடத்தைப் பெற்றுள்ளன.

அண்ணாவின் பெருந்தன்மை அகில உலகப் பெயர் பெற்றது. அண்ணாவின் சகிப்புத் தன்மை இமாலயப் பெருமை கொண்டது. உறுதியான கொள்கைப் பிடிப்புள்ள வலுவான தொண்டர்களின் தலைவரான அண்ணா வன்முறை நாடாத வரலாற்று நாயகர். பல்வேறு இனத்தினர், மொழியினர் வாழும் மதச்சார்பற்ற மாபெரும் இந்தியத் துணைக் கண்டத்தில், தன்னை யார் என்று அண்ணா அவர்கள் அறிமுகப்படுத்திக் கொள்கிற போது, 'நான் ஒரு திருநீறு, அணியாத இந்து, சிலுவை அணியாத கிறித்தவன், கைலி கட்டாத முஸ்லீம்' என்று பெருமையோடு தன்னை அழைத்துக் கொண்டவர். 'பகுத்தறிவுப் பாதுகாவலர்' என்று பெருமையோடு அனைவராலும் அழைக்கப் பட்ட பேரறிஞர் அண்ணா, பழமையின் பெருமைகளுக்கும் பிறரின் நம்பிக்கைகளுக்கும் வழங்க வேண்டிய மரியாதையை எந்த நேரத்திலும் வழங்கத் தவறியதில்லை.

பேரறிஞர் அண்ணா பொதுவாழ்வில் ஈடுபடுவதற்கு அடித்தளமாக இருந்தது நீதிக் கட்சியும், சுயமரியாதை இயக்கமும் தான். அந்த இயக்கங்களின் பரிணாம வளர்ச்சியின் வாரிசாகத்தான் அவர் வளர்ந்து, சிறந்து இன்று நமது வணக்கத்திற்குரிய வரவாறாகத் திகழ்கிறார். அவர் வழி நின்று, அவரது வாரிசாகத்தான் நாங்கள் இன்று தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பை மகத்தான மக்கள் ஆதரவோடு நடத்தி வருகிறோம். 'அண்ணா எங்களுக்கு மட்டும் சொந்தம்' என்பவர்களை மக்கள் மறந்து விட்டார்கள். 'அண்ணா மக்களுக்குச் சொந்தமானவர்' என்ற புரட்சித் தலைவரின் வழியொட்டி நடப்பவர்களான நாங்கள், அண்ணாவின் அடிச்சுவட்டில் ஆட்சிப் பொறுப்பை இன்று நடத்திக் கொண்டிருக்கிறோம்.

விளையாட்டு வீராங்கனை அமுதாவுக்கு தமிழக முதல்வரின் ஊக்கப் பரிசுகள்!

தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவி செல்வி அமுதா தனது ஏழ்மையான நிலையிலும் கடுமையாகப் பயிற்சி செய்து, ஆசிய சாம்பியன் பட்டம் பெற்றார். அதைப் பாராட்டி, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெ.ஜெயலலிதா அவர்கள், அவரது திறமையை மேலும் ஊக்குவிக்கும் வகையில் அ.இ.அ.தி.மு.க. சார்பாக ரூ.25,000 உதவித் தொகையை 18.8.93 அன்று தலைமைச் செயலகத்தில் செல்வி அமுதாவிடம் வழங்கினார்.

மீனவர் சமுதாயத்தில் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த செல்வி அமுதாவைப் பாராட்டி, தமிழகத்தின் விளையாட்டுத் துறையை மேலும் சிறப்பிக்கும் வண்ணம், செல்வி அமுதாவை தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் குழுமம் தத்து எடுத்துக் கொள்ளும் என்றும், அப்பெண்ணின் திறமையை மேலும் வளர்ப்பதற்காகச் சர்வதேச விளையாட்டுக்களில் பயன்படுத்தப்படும் ரூ.50,000 மதிப்புள்ள சைக்கிள் ஒன்று வழங்கப்படும் என்றும், தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் குழுமம் மூலம் ரூபாய் ஒரு இலட்சம் பரிசுத் தொகை வழங்கப்படும் என்றும், அவருடைய விளையாட்டுப் பயிற்சிக்குத் தேவையான ஊட்ட உணவும், தகுந்த பயிற்சியும் அளிக்கப்படும் என்றும், அப் பெண்ணின் குடும்பம் மிகவும் ஏழ்மையான நிலையில் உள்ளதால் அக்குடும்பம் குடியிருப்பதற்கு ஒரு வீடும் வழங்கப்படும் என்றும் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்.

அப்பெண்ணின் தந்தை தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் குழுமத்தில் தினக்கூலியாக ரூ.30 பெற்று வருவதை அறிந்த டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அவருடைய பணி நிரந்தரம் செய்யப்படும் என்றும் அறிவித்தார்.

வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன்; பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறாது அயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்;
நீடிய பிணியால் வருந்துகின் றோர்என்
நேர்உறக் கண்டுளம் துடித்தேன்;
ஈடின்மா னிகளாய் ஏழைக ளாய்நெஞ்சு
இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்!

—இராமலிங்க அடிகளார்

எண்ணம் கவரும் வெண்ணப் பறவைகள்!



நான்காம் அட்டை சொல்லும் செய்தி:

கூந்தன்குளம் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் நாங்குநேரி வட்டத்தில் உள்ள ஒரு கிராமம். அது திருநெல்வேலியிலிருந்து சுமார் 40 கி.மீ. தூரத்திலும் அரபிக்கடலுக்கு மேற்கே சுமார் 30 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது. இதைச் சுற்றிலும் பல குளங்கள் உள்ளன. இருப்பினும் வெளிநாட்டுப் பறவைகள் இங்கு வந்துதான் குவிகின்றன. இங்கு ஜனவரி மாத அளவில் வர ஆரம்பிக்கும் பறவைகள் இங்குள்ள மரங்களில் கூடுகட்டி, முட்டையிட்டு குஞ்சுபொரிக்கின்றன. பெரியவை ஆகும்வரை அவைகளுக்கான உணவு தேடிக்கொணர்ந்து வளர்க்கின்றன. பறக்கும் தகுதிவரை குஞ்சுகளைப் பாதுகாத்து, பின் ஆடிமாத முடிவிற்குள் எல்லாம் அழைத்துச் சென்றுவிடுகின்றன.

இப்படி நடப்பது இன்று நேற்று அல்ல. பல ஆண்டுகளாக இவ்விதமே நடந்து வருகின்றது. ஆனால், 1992-லிருந்து வெளிநாட்டுப் பறவைகளின் வரத்து அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. காரணம், முக்கியமாக இக்கிராமத்திலுள்ள மக்கள் பறவைகளுக்கு மிகுந்த பாதுகாப்புக் கொடுப்பது, அவைகளுக்கு வேண்டிய உணவு கூந்தங்குளத்திலும் அருகாமையில் உள்ள குளங்களிலும் கிடைப்பது மற்றும் இனவிருத்திக்கான தட்பவெட்பச் சூழ்நிலை சரிவர அமைந்திருப்பது மாகும்.

இதன் காரணமாக, 1992-இல் 15,000-க்கும் மேற்பட்ட பறவைகள் இங்கு வந்து சென்றன. இவ்வாண்டு 18,000-க்கும் மேற்பட்ட பறவை இனங்கள் வந்து சென்ற வண்ணம் உள்ளன. ஆண்டுதோறும் புதுவகையிலான பறவையினங்களும் வந்து செல்கின்றன. சென்ற ஆண்டு (1992-ஜனவரியில்) Flamingo என்ற பறவை கூந்தங்குளத்திற்கு வருகை தந்து குளத்தில் மண்கட்டி முட்டையிட்டு குஞ்சு பொரிந்து அவைகளுடன் பறந்து சென்றன.

Flamingo குளத்தில் முட்டையிட்டு குஞ்சுபொரிப்பதைப் பார்வையாளர்களுக்குக் கூறுகையில், மண் குவியலையும் காட்டப்பட்டது. அதற்கு அவர்கள் இங்குதான் முதன் முதலில் குளத்தில் பார்க்கிறோம் என்று கூறினார்கள். இவ்வாண்டும் Flamingo பறவைகள் கூந்தங்குளத்திற்கு வந்து முட்டையிட்டு குஞ்சு பொரிந்து மே மாதத்தில் சென்று உள்ளன.

இவ்வாண்டு இன்னொரு அதிசயம் நிகழ்ந்துள்ளது. தென் இந்தியாவிலேயே முதன் முதலாக, கூந்தங்குளத்திற்குதான் Glassy Ibsi என்ற நீர்ப்பறவை வருகை தந்திருப்பதும் முட்டையிட்டுக் குஞ்சு

பொரித்து பறக்கும் திறன் கிடைத்தவுடன் தாய்ப்பறவைகளுடன் பறந்து சென்றிருப்பதும் இக்கூந்தன்குளத்திற்குத் தனிச் சிறப்பை ஏற்படுத்தியிருக்கிறது. பறவை ஆராய்ச்சியாளர்களுக்கு இதனைக் கூறி அவர்களுக்கு Glassy Ibis பறவைகளை நேரில் காட்டியதில் மிகவும் ஆச்சரியம் அடைந்து மலைத்து நின்ற காட்சி என்றும் மறக்க முடியாத ஒன்றாகும்.

இங்கு வரும் பறவைகளின் பெயர்களைத் தெரிந்து கொள்வோமா? கூழக்கடா, வண்ண நாரை, கரண்டிவாயன், வெள்ளை அரிவாள் மூக்கன், பாம்புத்தாரா, பூநாரை, நண்டு கொத்திநாரை, வெள்ளை நாரை, நீர்க்காகம், சின்ன கொக்கு, பெரிய கொக்கு, மாட்டுக்கொக்கு, குருட்டுக் கொக்கு, சாம்பல் கொக்கு, ஆள்காட்டி, வானம்பாடி, ஆலா, நீர்மூழ்கிக் கோழி, சிறவி, இந்தியன் ஷாஹ், வக்காரா.

மேலே கூறப்பட்ட இனவிருத்தி இனங்கள் தவிர, முதன்முறையாக 1992-இல் Flamingo இங்குவந்து இனவிருத்தி செய்து குஞ்சுகளுடன் பறந்து சென்றுள்ளன. 1993-இல் மேற்கண்டபறவைகளுடன் Glassy Ibis என்ற பறவை இனம் வந்து முட்டையிட்டு குஞ்சு பொரித்து சென்றிருப்பது கூந்தன்குளம் பறவைகள் சரணாலயத்தின் வளர்ச்சிக்கும், பாதுகாப்பிற்கும் ஓர் எடுத்துக்காட்டு என்பதை யாராலும் மறக்க முடியாது. மறுக்கவும் முடியாது.

இச்சரணாலயம் தற்சமயம் புலிகள் திட்டத்தின் கீழ் மேம்பாட்டு வேலை பாதுகாப்பு வேலை மற்றும் தவறி விழுந்த அனாதைக் குஞ்சுகளுக்குப் பாதுகாப்பாக இருப்பிடவசதி, உணவு வசதி ஏற்படுத்தி, காவலர்கள் நியமித்து நல்ல முறையில் கவனித்து வரப்படுகிறது. ராஜஸ்தானில் உள்ள பரத்பூர் பறவைகளின் சரணாலயத்திற்கு அடுத்தது இங்குதான் பலவிதப் பறவையினங்கள் அதிகமாக வந்து செல்கின்றன என்று கூறினால் அது மிகையாகாது.

கடந்த ஆண்டு (1992-இல்) இப்பறவை இனங்களைக் காண 20-25 ஆயிரம் பார்வையாளர்கள், காரிலும், பஸ்ஸிலும், வேன்களிலும் வந்து சென்றுள்ளனர். இவ்வாண்டும் இதுவரை 25,000 பார்வையாளர்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் வந்து சென்றுள்ளனர். பார்வையாளர் இளைப்பாற, உணவு உட்கொள்ள தற்காலிக இடவசதி ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. குடிநீர் வசதியும் உண்டு. பறவைக்கூடுகள் 600-க்கும் மேற்பட்டு கட்டப்பட்டுள்ளன. முட்டைகளும், குஞ்சுகளும் மரங்களில் உள்ள கூடுகளில் இன்னமும் காணப்படுவதால் ஆகஸ்ட் மாதம் வரை ஆராய்ச்சியாளர்கள் இன்னும் வந்து கொண்டுதான் உள்ளனர். பள்ளி மாணவர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் இது ஒரு அரிய வாய்ப்பு.

கூந்தன்குளத்திற்கு, வெளிநாட்டுப் பறவைகள் பெருமளவில் இம்மாவட்டத்தைத் தாயகமாக எண்ணி ஆண்டுதோறும் வருகை தந்து சிறப்பிக்கின்றன. இப்பகுதியைச் சுற்றுலா மையமாக அமைத்து, வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தைப் போன்று அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து தர வேண்டும் என்று திட்டங்கள் தீட்டப் பெற்று கருத்துரு ஒன்று அரசுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ஆர்.வேலு, இ.ஆ.ப., அவர்கள் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், அண்மையில் குற்றாலத்தில் நடைபெற்ற சாரல் திருவிழா தொடக்க நாள் நிகழ்ச்சியில், மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசும்போது, "கூந்தன்குளத்தில் பறவைகள் சரணாலயம் அமைத்து தமிழகத்தின் சிறந்த சரணாலயமாகத் திகழும் வேடந்தாங்கல் போன்று அனைத்து மக்களும் வந்து செல்லும் சுற்றுலா மையமாகத் திகழச் செய்ய வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டு உள்ளார்.

மாவட்ட நிர்வாகம் அனுப்பிய கருத்துரு பரிசீலிக்கப்பட்டு, மத்திய அரசின் ஒத்துழைப்புடன் பறவைகள் சரணாலயம் கூந்தன்குளத்தில் சிறப்பாக அமைய அனைத்து ஏற்பாடுகளையும் தமிழக அரசு செய்யும் எனக் குறிப்பிட்டார்.

எங்கிருந்தோ வந்து, பயமின்றிச் சுதந்திரமாக மிகவும் பக்கத்தில் இருந்தும் நடந்தும், முட்டையிட்டும், குஞ்சுபொரித்தும், பறந்து மக்களோடு இணைகிற இப்பறவையினங்களைக் காணக் கண் கோடி வேண்டும்.

எம். ஜ. லாரன்ஸ்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்

அண்ணா போற்றிய பெருமக்கள்

கலைவாணர் என்.எஸ்.கே.

"கலைவாணர் தனி ஒரு மனிதர் அல்லர்; அவர் ஒரு 'சகாப்தம்'!

அவரோடு அந்தச் 'சகாப்தம்' முடிந்து விட்டது. அப்படிப்பட்ட ஒரு சகாப்தம் இனித் தோன்றுவது அரிது!

எந்த ஒரு நடிகனும் மக்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்க முடியும்; மக்களின் கைதட்டலையும், மாலைகளையும் பெற முடியும்; நல்லதோர் புகழையும் பெற முடியும். ஆனால், நம்முடைய கலைவாணரைப் போல, மற்ற எவரும் புகழ் பெற்றிருக்க முடியாது; புகழ் பெறவும் முடியாது.

கலைவாணர் - மக்களின் உள்ளத்தைக் தொட்டுச் சிரிக்க வைத்தவர்; உலகிலேயே இவர் ஒருவர் தான் மக்களிடம் தொடர்பு கொண்டு மக்களுக்காக உழைத்த கலைஞர் ஆவார். இவரைப் போன்ற நல்லுள்ளம் கொண்டோர் மிகச் சிலரே!



நீலப்புரட்சி ஏற்பட நித்தம் பணியாற்றுவோம்!

கே. சுப்பையா
மீன்துறை இணை இயக்குநர்
(உள்நாட்டு மீன்வளம்)
சென்னை.

உள்நாட்டு மீன்வளப் பெருக்கத்திற்கென 1940-லிருந்து பல திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. அவை அனைத்தும் துறை சார்ந்த திட்டங்களாகவே இருந்து வந்துள்ளனவே தவிர, பொது மக்களின் கவனத்தை ஈர்த்து மீன்வளர்ப்பில் அவர்களை ஈடுபடுத்த முடியவில்லை. 1960-களில் கூட்டின மீன் வளர்ப்பு முறையை வெற்றிகரமாகச் செயல்படுத்திட முன்னோடித் திட்டங்கள் தீட்டப்பட்டு அதைப் பெரும் விளம்பரத்துடன் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் பரிந்துரை செய்தது. இருந்தும் எதிர்பார்த்த விரிவாக்கம் நடைபெறவில்லை.

மத்திய மீன்வள ஆலோசனைக் கழகம் பல்வேறு கட்டங்களில் உள்நாட்டு மீன்வளப் பெருக்கம் பற்றி விவாதித்து சரியான நடைமுறைகளைக் கண்டறிந்து தெரிவித்திட ஒரு தொழில் நுட்பக் குழுவை நியமித்தது. அக்குழுவின் பரிந்துரையின்படி 1971-ஆம் ஆண்டு மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை அமைக்கும் கருத்தினை வெளியிட்டது. அந்த ஆண்டு தேசிய மட்டத்தில், 5 முகமைகளை அமைத்துப் பரிசோதனை செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து இந்தியா முழுவதும் 50 மாவட்டங்களில் இத்திட்டத்தைப் பரிட்சார்த்தமாகக் கொண்டு வந்தது.

தமிழ்நாட்டில் முதன் முறையாக 1975-76-ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இக்கருத்து வளர்ந்து தமிழ் நாட்டில் தற்போது 13 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் வளர்ப்பினை ஊக்கப்படுத்துவதே இதன் தலையாய நோக்கமாகும். மீன்வளர்ப்பிற்கு உகந்த நீர் நிலைகளைத் தேர்வு செய்து புதிய தொழில்நுட்ப உத்திகளைக் கொண்டு, விரைவாக வளரக்கூடிய மீன்வகைகளை இருப்புச் செய்து மீன் உற்பத்தியைப் பெருக்குவது, மீன் வளர்ப்போர் இல்லாத இடங்களில் திறமையான, ஊக்கமுள்ள நபர்களைத் தேர்வு செய்து தொழில் நுட்பப் பயிற்சி கொடுத்து, உள்ளீட்டுக் கடன் வசதி பெற வழிமுறைகளை விளக்கிக் கூறி மீன் வளர்ப்பினை ஊக்குவித்தல், ஏற்கெனவே, மீன்வளர்ப்பில் ஈடுபட்டுள்ள பகுதிகளில் மேலும் பலரை அதில் ஈடுபடும் வகையில் வேலை வாய்ப்பினைப் பெருக்கிட அனைத்து உதவிகளும் செய்வதாகும்.

மேலும், பயனற்ற நீர்நிலைகளையும் மராமத்துப் பணிகள் செய்து மீன் வளர்ப்புக்குப் பயன்படுத்துவது. ஏற்கெனவே உள்ள மீன்வளர்ப்பு முறைகளில் புதிய உத்திகள் மூலம் மீன் உற்பத்தியைப் பல மடங்கு பெருக்குவது. இக்கருத்தினைப் பொதுமக்களிடையே பரப்பி கிராம மக்களுக்கு இதை ஒரு புதிய தொழில் பிரிவாக ஊக்குவிப்பது. வளர்த்தெடுத்த மீனிற்கு உரிய விலை கிடைக்கும் வகையில் விற்பனை முறையை ஒழுங்குப்படுத்துவது போன்ற பணிகளில் இந்த முகமை ஒரு மாவட்ட மையமாக இருந்து செயல்படும். மத்திய-மாநில அரசுகளும், நிதி நிறுவனங்களும் இதற்கு உதவிகரமாக இருக்கும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் புரதச்சத்து இன்றியமையாதது. இதில் மாமிசப் புரதச்சத்து கட்டாயம் ஒரு கூறாக இருத்தாக வேண்டும். இது இறைச்சியாகவோ, பாலாகவோ, முட்டையாகவோ இருக்கலாம். உலகின் நில-நீர்ப் பரப்பின் விகிதப்படிப் பார்த்தால் நிலத்தினை அடிப்படையாகக் கொண்ட உணவுப் பொருள் உற்பத்தி விரிந்து ஒரு முடிவை நோக்கிச் சென்று கொண்டு உள்ளது. எனவே, நீர்வழி உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்குவது காலத்தின் கட்டாயமாகி வருகிறது. மேலும், மீன் உணவு மிகச் சிறந்த புரதச்சத்தை உடையது. எளிதில் செரிக்கக்கூடியது. குழந்தைகளின் இறப்பு விகிதத்தைக் குறைக்கும். கல்லீரல்நோய், இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கு உகந்த மருந்தாகவும், உள்ளது. திசுக்களுக்குத் தேவையான அமிலங்கள், வைட்டமின்கள் போன்றவை தேவையான அளவில் இதில் உள்ளன. இருந்தும் இந்தியாவில் சராசரியாக ஒரு மனிதன் ஒரு ஆண்டிற்கு உட்கொள்ளும் மீன் உணவின் அளவு 3.5 கிலோ ஆகும். எனவே, மீன்வளத்தைப் பெருக்குவது மிகப் பெரிய தேவைகளில் ஒன்றாகிறது.

மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் செயல்முறை

ஒவ்வொரு மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைக்கும் அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைவராகவும், அவரின் கீழ் அரசால் நியமிக்கப்பட்ட ஒரு மேலாண்மைக்குழுவும் அவரின் ஆலோசனையின்படி செயல்பட ஒரு முதன்மை நிர்வாக அலுவலரும் உள்ளார். முகமையின் வரவு, செலவு மற்றும் செயல் முறைகள் மேலாண்மைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. முதன்மை நிர்வாக அலுவலர் திட்டத்தைச் செயல்படுத்தும் தலைமை அலுவலராவார்.

விரிவாக்க அலுவலர்களால் குளங்களைத் தேர்வு செய்தல், தொழில் நுட்ப அறிவுரை வழங்குதல், மீன்குஞ்சு இருப்புச் செய்தல், குளங்களின் தன்மைக் கேற்ப உரம், உணவிட ஆலோசனை கூறுதல், மீன்களின் வளர்ச்சியைச் சோதனை செய்து வளர்ச்சியைப் பெருக்க தொழில் நுட்ப ஆலோசனை கூறுதல், அறுவடை செய்யப்படும் மீன்களை விற்பனை செய்தல் போன்ற பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. புதிய குளங்கள் ஆய்வு செய்யப்பட்டு, தகுதியறிந்து முகமைக்கு நீண்டகாலக் குத்தகைக்கு எடுக்க ஏற்பாடு செய்யப்படுகின்றது. முகமையைச் சேர்ந்த பொறியாளரின் மூலம் குளங்களில் பரப்பளவு நிர்ணயிக்கப்பட்டு அவற்றை ஆழப்படுத்த மதிப்பீடு தயாரிக்கப்படுகின்றது. மேலும் புதிய சொந்தமான பண்ணைக்குளம் அமைக்கவும், திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றன.

மீன்வளர்ப்பாளராக முகமையில் சேரத் தகுதிகள்

மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் தேர்வுக்குக் கீழ்க்கண்ட அடிப்படையில் மீன்வளர்ப்பாளர்களைத் தேர்வு செய்கின்றது. 18 முதல் 35 வயதுக்குள் இருக்க வேண்டும். எட்டாம் வகுப்பு படித்திருத்தல் வேண்டும். மீனவக் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினராகவோ அல்லது மீன்பிடிப்புத் தொழில் செய்பவராகவோ அல்லது மீன்பாசிக் குத்தகைதாரராகவோ அல்லது சொந்தக் குளம் வைத்திருப்பவராகவோ அல்லது மீன் வளர்ப்பில் ஆர்வமுள்ளவராகவோ இருத்தல் வேண்டும். வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள ஏழைகளும், தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களும், பெண்களும் முன்னுரிமை அடிப்படையில் இத்திட்டத்தில் சேர்ந்து பயனடைய வழிமுறைகள் உள்ளன. கூடுமானவரை குளங்கள் இருக்கும் பகுதியில் உள்ள வரையே தேர்ந்தெடுப்பர்.

மீன்வளர்ப்பாளருக்குப் பயிற்சி

தேர்வு செய்யப்பட்ட மீன்வளர்ப்பாளர்களுக்கு 15 நாட்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. மீன்குஞ்சு உற்பத்தி, மீன்வளர்ப்பு முறைகள் பற்றி விரிவான உரைகள் மூலமும் மீன் வளர்ப்புப் பண்ணைகளுக்கும், மீன்குஞ்சு, உற்பத்தி நிலையங்களுக்கும் நேரில் சென்று பார்த்தும் பயிற்சி பெறுகின்றனர். ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு தினப்படி ரூ.25-ம் போக்குவரத்துச் செலவுக்கு ரூ.40-ம் கொடுக்கப்படுகிறது.

கடன் மற்றும் மானியம்

நீர் அதிகம் நிற்காத தூர் எடுக்கப்படாத குளங்களை வங்கிக்கடன் மூலம் தூர் எடுக்க ஏற்பாடு செய்வதன் மூலம் நீண்ட நாட்கள் நீர்தேங்கிடச் செய்யலாம். இது கிராம மக்களுக்கும் பயன்தரும். ஒரு எக்டேருக்கு ரூ.32,000 வரை தூர் எடுக்கப் பரிந்துரை செய்யப்படுகிறது. இதில் 75 சதவிகிதம் வங்கிக் கடனாகவும் 25 சதவிகிதம் மானியமாகவும் பெறலாம். இதேபோன்று இடுபொருள்கள் வாங்கிட 16,000 வரை அனுமதிக்கப்படும். இத்தொகையைக் கடனாக வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொள்ள முகமை ஏற்பாடு செய்யும். முதலாம் ஆண்டு 25 சதவிகிதம் மானியமாக ரூ.4,000 பெறலாம்.

குளங்கள் தேர்வும், தயார்ப்படுத்தலும்

கிராமப்புறங்களிலுள்ள, சிறிய குளங்கள் பெரும்பாலும் மீன்வளர்ப்புக்குத் தேர்வு செய்யப்படுகின்றன. கூடுமானவரை நீர்ப்பாசனக் குளங்களைத் தவிர்க்கலாம். 6 மாதங்கள் வரை மொத்தப் பரப்பில் 50 சதவிகிதம் வரை நீர் இருக்கக்கூடிய குளங்களாகத் தேர்வு செய்ய வேண்டும். மீன்குஞ்சுகள் இருப்புச் செய்யவும், பராமரிப்பினைத் தொடரவும், மீன்பிடிக் காலத்தில் சிரமமின்றி செயல்படுவதற்கு ஏதுவாகத் தேர்வுச் செய்யப்படும் குளங்கள் சாலை ஓரங்களிலோ அல்லது சாலைத் தொடர்புக்கு நெருங்கிய தூரத்திலோ உள்ள குளங்களாக இருப்பது நல்லது.

உரமிடுதலும் உணவிடுதலும்

இருப்புச் செய்யப்படும் மீன்குஞ்சுகளுக்குத் தேவையான நுண்ணுயிர் உணவு இயற்கையாகவே நீரில் கலந்திருக்கவேண்டும். எந்த அளவிற்கு நுண்ணுயிரிகளின் எண்ணிக்கை நீரில் உள்ளதோ அதே அளவிற்கு மீன்வளர்ச்சி பெறும். எனவே, உரமிட்டு குளத்தின் அடிப்படை நுண்ணுயிர் உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டும். இதற்கு இயற்கை உரமான சாணம் எக்டேருக்கு 10 டன் என்ற அடிப்படையிலும் கொளிஞ்சி போன்ற பசுந்தாள் உரம் 10 டன் என்ற அடிப்படையிலும் அடி உரமாக இட வேண்டும். மேலும், சூப்பர் பாஸ்பேட் 250 கிலோ போட வேண்டும். நீரின் தன்மையை அனுசரித்து 250 கிலோ யூரியாவும் உரமாக இடலாம். சூப்பர் பாஸ்பேட், யூரியா போன்ற உரங்கள் நீரின் தன்மையை அனுசரித்துத் தொடர்ந்து போட வேண்டியவை. நன்கு உரமேறிய குளத்தின் நீரில் முழங்கை வரை அமிழ்த்திப் பார்த்தால் உள்ளங்கையின் வெளுப்பு நிறம் தெளிவற்று காணப்படும். இந்த நிலையில் மீன் குஞ்சு இருப்புச் செய்யலாம். வளர்ப்புக் காலத்தில் நீரின் நுண்ணுயிரிகளின் அளவு மிகவும் குறைந்துவிட்டால் இரண்டாம் முறையும் மேலே கூறியபடி உரமிடலாம். இதனால் மீன் குஞ்சிற்கு எந்தவிதப் பாதிப்பும் இல்லை. பொதுவாக இக்குளங்களைப் பயன்படுத்தும் கிராம மக்கள், உரமிடுவதால் நோய் வருவதாகவும், கால்நடைகள் பாதிப்பதாகவும் கூறுவர். அது உண்மையல்ல.

மீன்வளர்ப்பில் இயற்கை உணவை மட்டும் நம்பி செயல்பட்டால் எதிர்பார்க்கும் உற்பத்தியை எட்ட முடியாது. எனவே, செயற்கை உணவும் இட வேண்டும். சாதாரணமாக, தூள் செய்யப்பட்ட கடலைப் புண்ணாக்கு, நெல் தவிடு போன்றவற்றை நீரின் மேற்பரப்பில் தூவி விடலாம். மூன்று நான்கு மாதம் வளர்ந்த மீன்களுக்கு இந்த உணவினை நீர்விட்டுக் கட்டியாகப் பிசைந்து உருண்டை பிடித்து - சிறிய கூடைகளிலோ, பிளாஸ்டிக் தட்டுகளிலோ வைத்து குளத்தில் பல பகுதிகளில் நீருக்கு அடியில் வைக்கலாம். ஒரு நாளில் இரண்டு முறை இந்த உணவைப் பிரித்து குறிப்பிட்ட நேரத்தில் வைக்க வேண்டும். பொதுவாக மீனின் எடையில் 2 சதவிகிதம் என்ற அடிப்படையில் உணவிட வேண்டும்.

மீன்குஞ்சு இருப்புச் செய்தல்

ஒரு குளத்தில் ஒரே இன மீன்குஞ்சு இருப்புச் செய்யாமல் பலவகைக் கெண்டை மீன் குஞ்சுகளை இருப்புச் செய்ய வேண்டும். வேகமாக வளரக் கூடிய வெவ்வேறு உணவுப் பழக்கமுடைய, நீரின் மட்டத்தில் மூன்று நிலையில் வாழக்கூடிய, நிலையான நீர்நிலைகளில் இனவிருத்தி செய்யாத ஆறுவகை மீன்களை ஒரே நீர்நிலைகளில் குறிப்பிட்ட விகிதத்தில் இருப்புச் செய்து வளர்ப்பதற்குக் கலப்பின/கூட்டின மீன்வளர்ப்பு என்று பெயர். கட்லா, ரோகு, மிர்கால், வெள்ளிக்கெண்டை, புல்கெண்டை, சாதாக்கெண்டை என்ற இந்த ஆறுவகை மீன்குஞ்சுகளையும் சாதாரணமாக எக்டேருக்கு 5000 என்ற எண்ணிக்கையில் இருப்புச் செய்யலாம். இருப்புச் செய்யப்படும் குஞ்சுகள் கட்டாயமாக 50 எம்.எம்.-க்கு மேல் வளர்ந்தவையாக இருக்க வேண்டும். 100 எம்.எம். வளர்ந்தவையாக இருப்பது சிறப்பாகும். இந்த ஆறுவகை மீன் குஞ்சுகளையும் ஒவ்வொரு நீர்நிலையிலும் கட்டாயம் இருப்புச் செய்ய வேண்டுமென்பதில்லை. நீரில் அதிக அளவிற்கு நீர்ப்பாசிகள் இல்லாத குளங்களில் புல்கெண்டை இருப்புச் செய்ய வேண்டியதில்லை. பிற ஐந்து இனங்களையும் கூட நீரின் தன்மை, அடிப்படை நுண்ணுயிர் உற்பத்தித் திறன் நீர் இருக்கும் கால அளவு, குளத்தின் மண்ணின் தன்மை போன்றவற்றை அனுசரித்து இருப்பு சரிசெய்ய வேண்டும். கட்லா, வெள்ளிக் கெண்டை, நீரின் மேல்பரப்பில் உள்ள உணவை உட்கொள்பவை; ரோகு, நீரின் நடுமட்டத்திலுள்ள நுண்ணுயிரை உட்கொண்டு வளர்பவை; மிர்கால்-சாதாக் கெண்டை நீரிலுள்ள பலவகை உணவை உட்கொள்பவை. இந்த உணவுப் பழக்க முறையை அடிப்படையாக வைத்து கட்லா, வெள்ளிக் கெண்டையின் எண்ணிக்கையை 40 சதவிகிதமாகவும், ரோகு மிர்கால், சாதாக்கெண்டைகளின் எண்ணிக்கை ஒவ்வொன்றையும் 20 சதவிகிதமாகவும் இருப்புச் செய்யலாம். முன் ஆண்டு

புகை உயிருக்குப் பகை

கடந்த 31.5.1993-ஆம் நாள் திங்கட் கிழமை ஒரு நாளை - உலக சுகாதார அமைப்பானது புகையிலை தவிர்ப்பு நாளாகக் கடைப்பிடிக்குமாறு அறிவித்தது.

காரணம் - உயிருக்குப் பகையான புகை பிடிக்கும் பழக்கத்தால், ஆண்டு தோறும் 30 இலட்சம் பேர் உயிரிழக்கின்றனர். 1960-இல் புகைப்பிடிக்கும் பழக்கத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் இது மூன்று மடங்கு அதிகமாகும்!

கூட்டு இன மீன் இனங்கள்

களின் மீன்வளர்ச்சியின் அனுபவத்தைக் கொண்டு இந்த விகிதாச்சாரத்தைக் கூட்டலாம்/குறைக்கலாம். ரோகு, மிர்கால், போன்றவை சில நீர் நிலைகளில் விரைவாக வளர்வதில்லை. அனுபவ ரீதியாக இவைகளை இருப்புச் செய்வதைக் குறைக்கலாம் அல்லது தவிர்க்கலாம். முகமை அலுவலரின் அறிவுரையை நாடிச் செயல்படலாம். சாதாரணமாக இந்த வகைக் கெண்டைகள் 7-8 மாதங்களில் ஒரு கிலோவிற்கு மேல் வளரும்.

தேவையான மீன் குஞ்சுகளை முகமை முயற்சி செய்து வாங்கிக் கொடுக்கும். நன்கு வளர்ந்த அனைத்து மீன்குஞ்சுகளும் நாம் நினைத்த நேரத்தில் கிடைப்பதில்லை. எனவே, வசதி உள்ளவர்கள் முன் கூட்டியே மீன்குஞ்சுகளை வாங்கி கூண்டுகளில் இட்டு வளர்க்கலாம். தேவையான அளவு வளர்ந்தவுடன் இருப்புச் செய்யலாம். கூண்டு வாங்கும் இடம், அளவு, பராமரிப்பு முறை போன்றவற்றை முகமைப் பணியாளர்களிடமிருந்து தெரிந்துகொள்ளலாம்.

பண்ணைக் குளங்களில் மீன்வளர்ப்பு

கடந்த காலங்களில் கிராமக் குளங்களை நம்பியே மீன்வளர்ப்பினைத் தொடர வேண்டியிருந்தது. அண்மைக் காலத்தில் தஞ்சை மாவட்டத்தில் பல இடங்களில் புதிய மீன்வளர்ப்புக் குளங்கள் அமைத்து வெற்றிகரமாக மீன்வளர்ப்பினை நடத்தி வருகின்றனர். அரசு மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைத் திட்டம் தயாரிக்கும் பொழுதே, நீர் தேங்கக் கூடிய தாழ்வான விவசாயத் திற்குப் பயன்படுத்த இயலாத நிலங்களை மீன்வளர்ப்பிற்குப் பயன்படுத்தலாமெனக் கூறி வந்தது. ஆனால், தற்போது தான் இக்கருத்து மக்களிடையே விரிவடைந்து வருகிறது. இதைப் பயன்படுத்தி அரசும் புதிதாக வகுத்துள்ள கொள்கையின்படி குளம் அமைப்பதற்கான நிரந்தரச் செலவில் அதிகபட்சமாக ஒரு எக்டேருக்கு 20 சதவிகித மானியம் ரூ.20,000 வழங்க ஆணை வழங்கியுள்ளது.

நல்ல நீர் வசதியுள்ள, களிமண் பூமியை இந்தகைய குளங்கள் அமைப்பதற்குப் பயன்படுத்தலாம். நிலத்தின் களிப்புத் தன்மை, நீரின் உப்புத் தன்மை கார அமிலத் தன்மை, மீன் வளர்ப்பிற்கு உகந்ததாவென்பதை முகமை ஆய்வு செய்து அறிவுரை வழங்கும். (1) நீரின் அளவு குறைவாக இருந்தால் 50 செ.மீ. ஆழத்திற்கு மண் எடுத்து குளம் அமைக்கலாம். (2) நீரின் அளவு அதிகமிருந்து வண்டல் கலந்த களிப்பு மண் பகுதியாக இருந்தால் முழுப்பரப்பையும் வெட்டாமல், 3 மீட்டர் அகலத்திற்கு உள்ள மண்ணை மட்டும் 50 செ.மீ. அளவிற்கு குளம் அமைக்கும் இடத்தில் பரப்பின் ஓரங்களில் மட்டும் உள் வாய்க்கால் போல் தோண்டி எடுத்து கரை அமைக்கலாம். இந்த முறை வெகுவாக தஞ்சை மாவட்டத்தில் பரவி வருகிறது. சொந்த நிலம் வைத்திருப்பவர்கள் முகமையில் அங்கத்தினராகச் சேர்ந்து பயனடையலாம்.

ஒரு எக்டேர் பண்ணை அமைக்க (1)வது முறைப்படி மண்வெட்டிக் கரை அமைக்க ரூ.70,000 வரை செலவாகும். ஆனால் (2) முறைப்படி மண்வெட்டிக் கரை அமைக்க ரூ.8,000 முதல் ரூ.12,000 வரை செலவாகும். இப்படி, குளம் அமைக்க வங்கிகள் கடன் கொடுக்கின்றன. தேசீய விவசாய வங்கி (NABARD) முழுக் கடனையும் வங்கிகளுக்கு அளிக்கின்றது. (REFINANCE) இவ்வாறு அமைக்கும் குளங்களில் கெண்டையின மீன்களுடன் நன்னீர் இறால்களையும் சேர்த்து வளர்த்து, ஒரு எக்டேருக்குச் சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.35,000 வரை வருமானமாகப் பெற வாய்ப்பு உள்ளது. முகமை, தொழில் நுட்ப ஆலோசனை கொடுப்பதுடன், திட்ட மதிப்பீடு தயாரித்து வங்கிக்குப் பரிந்துரை செய்கிறது.

முகமையினால் ஏற்படும் பயன்கள்

குளங்களைத் தேர்வு செய்வதும், மீன்வளர்ப்போரைத் தேர்வு செய்து பயிற்சியளிப்பதும் முதல் பணியாகும். குளங்கள் தயாரிப்பு - உரமிடுதல், உணவிடுதல், மீன்குஞ்சு இருப்புச் செய்தல், மீன்வளர்ப்புக் காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் போன்ற அனைத்துத் தொழில் நுணுக்க உதவியும் முகமை இலவசமாகச் செய்து கொடுக்கும். குளங்கள் மராமத்து, உரம், மீன்குஞ்சு வாங்குவது - இப்பணிகளுக்கான நிதி ஆதாரங்களைப் பெற உள்ள வாய்ப்புகளை ஒருங்கிணைத்து உதவிடும். தற்போதுள்ள அரசு ஆணையின்படி:

1. குளங்கள் குறைந்த விகிதத்தில் குத்தகை நிர்ணயம் செய்து 10 ஆண்டுகள் வரை மீன்வளர்ப்பிற்கு வைத்துக் கொள்ளலாம்.

2. முகமையின் ஊர்திகளை மீன்குஞ்சு ஏற்றிச் செல்ல குறைந்த வாடகைக்கு வழங்கும்.

3. மராமத்துப் பணிகளுக்கு எக்டேருக்கு ரூ.8000 வரை மானியம் பெற முடியும்.

4. உரம், உணவு, மீன்குஞ்சு போன்றவைகளை வாங்கிட உள்ளீட்டுக் கடன் ஒரு எக்டேருக்கு ரூ.16,000 வரை பெற முடியும்.

5. முதல் ஆண்டில் உள்ளீட்டுக் கடனில் 25 சதவிகிதம் மானியம் ரூபாய் 4000 பெறலாம்.

6. பயிற்சிக் காலத்தில் செலவு முழுவதையும் அரசு ஏற்றுக்கொள்கிறது.

7. புதிய மீன்வளர்ப்புக் குளங்கள் அமைக்க அதிகபட்சமாக ஒரு எக்டேருக்கு ரூ.20,000 வரை மானியம் உண்டு.

8. மீன்பிடிக் காலங்களில் மீன்பிடிப்பதற்கும், விற்பனை செய்வதற்கும் முகமை ஏற்பாடு செய்யும்.

9. மீன்வளர்ப்போருக்கு வேண்டிய அனைத்துத் தொழில் நுட்ப ஆலோசனையும் முகமை வழங்கும்.

மீன் வளர்ப்பதன் மூலம் நிலத்திலிருந்து கிடைக்கக் கூடிய வருவாயைப் பெருக்கிடுவோம். நாட்டிலுள்ள எந்த வளர்ப்பு முறையும் (நெல், கரும்பு, குச்சிக் கிழங்கு, வாழை) மீன்வளர்ப்புக்கு நிகராகாது. பசுமைப் புரட்சியும், வெண்மைப் புரட்சியும் செய்த நம் நாட்டில், நீலப் புரட்சி மூலம் மீன் உற்பத்தியைப் பெருக்கி புரதப் பற்றாக்குறையை நீக்கிடுவோம்.





காவிரி ஏன்? கங்கையும் இங்கு வரும்!

— கவிஞர் கரு. நாகராசன்

உடல் பொருள் ஆவி என்னும்
ஒப்பிலா மூன்றையும்
தேசத்திற்காக ஈந்த
தியாகிகளை
சரித்திர வரிகளுக்குள்
தரிசித்திருக்கிறோம்!
ஆனால்
பூவிரிந்து தேன் பாயும்
பொன்னான தமிழ் மண்ணில்
காவிரியை வரத்தடுத்த
கயமையினைப் போக்குதற்கு
உடல் பொருளால் செய்த
உன்னதத் தியாகமெல்லாம்
ஒரு பயனும் தராததால் -
உயிரையே தரத்துணிந்த
ஒப்பிலாத் தியாகத்தை -
சங்க இலக்கியத்தின்
சத்தான வீரமெல்லாம்
தங்கிக் குடியிருக்கும்
தன்மானத் தமிழ்மனத்தை
புரட்சித்தலைவியென்னும்
புகழ்வடிவில்
சரித்திரம் இப்போதுதான்
சந்திக்கிறது;
தேசமே அவரைப் பற்றித்தான்
சிந்திக்கிறது!

வாடிய பயிரைக் கண்டபோது
வாடத்தான் முடிந்தது
வள்ளலாரால்!
ஆனால்
உயிரினைத்தந்து
பயிரினைக்காக்க
உறுதிமேற்கொண்டவர்
ஒப்பிலா நம்தலைவி!
பயிர்களிடத்தில்
வள்ளலாருக்கிருந்த
வாஞ்சையைவிட
தலைவியின் வாஞ்சை
தலையாயது அல்லவா?

வெயிலில் வாடிய முல்லைக்கு
தேரைத்தான் பாரி தந்தான்;
குளிரில் ஆடிய மயிலுக்கு
ஆடையைத்தான் பேகன் ஈந்தான்;
தங்களையே கொடையாகத்
தந்தவர்கள் யாருமில்லை!
ஆனால்
பயிர்களைக் காக்க
உயிரையே தரத்துணிந்த
வள்ளலைப் பற்றி எந்த
வரலாறும் சொன்னதுண்டா?
பாரியும் பேகனும்
புரட்சித் தலைவியின்
பக்கத்தில் நிற்பார்களா?

ஆடியும் பாடியும் வந்தோர்க்கு
அள்ளிக் கொடுத்த
வள்ளல் பலருண்டு;
ஆனால்
தீயில் துடித்தோர்க்கும்
செத்து மடிந்தோர்க்கும்
அன்றாடம் வழங்கும்நம்
அன்புத்தலைவி
ஈகைக்கே புதிய
இலக்கணம் படைத்தவர்.
அதனால்தான்
தண்ணீருக்காக ஏன்
தவமிருக்கிறீர்கள்?
கண்ணீரைத் தருகிறோம்
காணிக்கையாய் என்று
தாய்க்குலம் அழுதது;
தமிழகம் தொழுதது!

அசோகவனத்தில்
அன்றிருந்த சீதை
'சொல்ஒன்றால் உலகையே
சுட்டெரிப்பேனென்று
துணுரைத்தாளாம்!
வங்கக் கடலோரம்
காவிரிக்காக நோன்பிருந்த
தங்கத் தலைவிக்காக
தமிழகமே பொங்கியபோது
'இந்த நிமிடம் முதல்
யாரும் எச்செயலிலும்
ஈடுபடாதீர்கள்' என்ற அவர்
ஒரு வாக்கே இங்கு
திருவாக்காய் மாறி
தேசமெங்கும் அமைதித்
தென்றலாய் வீசியது!
சீதையின்
நெருப்புச் சொல்லை
புரட்சித் தலைவியின்
விருப்புச் சொல்
விஞ்சிவிட்டதே!

உரிமையைக் காக்க தமது
உயிரையே தரத்துணியும்
வித்தகத் தலைவியின்
வீரமும் விவேகமும்
காவிரியை மட்டுமல்ல;
ஓர்நாள் இங்கே
கங்கையையும் கொண்டுவரும்!

சென்னை மாநகரில் மகளிர் காவல் நிலையங்கள்

தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்கள்தோறும் 'அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்' அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சட்டப் பேரவையில் காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து சென்னை மாநகரில் உள்ள ஆயிரம் விளக்குப் பகுதியில் முதன்முதலாக 'அனைத்து மகளிர் காவல் நிலையம்' ஒன்றினை 13.4.92-இல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்துவைத்தார்.

அதன்பின்னர் - அதேபோல மதுரையில் 14.7.93 அன்றும், கோவையில் 20.8. 93 அன்றும் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

அவற்றையடுத்து-23.8.93 அன்று - சென்னை மாநகரில், குறிப்பாக தென் சென்னை காவல்துறை மாவட்டத்தில் அடையாறு பகுதியிலும், வட சென்னைக் காவல் துறை மாவட்டத்தில் கொத்தவால் சாவடியிலும் 'அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்' இரண்டு திறந்துவைக்கப்பட்டன.

தென் சென்னை

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இவ்விழாக்களில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சிகளுக்கு - மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அரசு தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட்ராமன், உள்துறைச் செயலாளர் திரு கே. மலைச்சாமி முதலான அரசு உயர் அதிகாரிகளும், வாரியத் தலைவர்களும், காவல்துறை உயர் அதிகாரிகள் திரு சு. ஸ்ரீபால், திரு ராஜசேகரன் ஆகியோரும் - ஏராளமான தாய்மார்களும் பொதுமக்களும் வருகை தந்திருந்தார்கள்.

அடையாறு சரகத்தில் உள்ள காவல் நிலைய அலுவலகக் கட்டட வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் சரியாக மாலை 3.50 மணிக்கெல்லாம் வந்து சேர்ந்தார்; அளிக்கப்பட்ட மகளிர் காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

பின்பு, அனைத்து மகளிர் காவலர் கட்டடத்தைத் திறந்து வைத்து, குத்துவிளக்கேற்றினார்.

அங்கிருந்த பார்வையாளர் குறிப்பேட்டில் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பின் வருமாறு வாழ்த்துரை எழுதிக் கையெழுத்திட்டார்.

'தமிழ்நாட்டில் நான்காவதாகவும், சென்னை நகரில் இரண்டாவதாகவும் அமைக்கப்பட்டுள்ள இந்த அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் திறந்து வைப்பது எனக்குப் பெரும் மகிழ்வளிக்கிறது.

கடந்த 1992-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆயிரம் விளக்கில், முதன்முதலாக அனைத்து மகளிர் காவல் நிலையம் தொடங்கப்பட்டு, அது சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. சட்டபூர்வமான உரிமை அடிப்படையில் மனிதாபிமான உணர்வோடு பெண்கள் தரும் புகார்களை விசாரித்துக் குறைகளைத் தீர்க்க ஆயிரம் விளக்கு அனைத்து மகளிர் காவல் நிலையம் உதவுகிறது என்ற நம்பிக்கை மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது.

இந்த வகையில் ஆயிரம் விளக்கில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு மக்கள் மத்தியிலும் - குறிப்பாகப் பெண்களிடத்திலும் மிக நல்ல வரவேற்புக் கிடைத்திருக்கிறது.

இதுதான் - தமிழகமெங்கும் அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தை எனக்கு ஏற்படுத்தியது.

இவ்வகையில் - இந்த அனைத்து மகளிர் காவல் நிலையமும் சிறப்புறச் செயல்பட்டு, பொதுமக்களுக்கும் - குறிப்பாகப் பெண்களுக்குப் பாடுபட்டு உழைத்துக் காவல்துறைக்குப் பெருமை சேர்க்கும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து வாழ்த்துகிறேன்.

—இவ்வாறு குறிப்பெழுதிவிட்டு, அருகே அமைக்கப்பட்டிருந்த அலங்

TNSC BANK

The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

Rate of Interest on Deposits (Effective from 1.3.1993

Sl.No.	Type of Deposit	Rate of Interest per annum
1.	Savings Bank Accounts	5.25 % w.e.f. 1.7.93
2.	Fixed Deposits :	
	For 46 DAYS and above but upto 270 days	11.25%
	For 271 DAYS and above but upto 364 days	11.00%
	For 1 YEAR and above	11.25%

Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

அணுசக்தி - ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று பணிகளுக்குமே இந்த மகத்தான சக்தி பயன்படுகிறது என்றாலும், ஆக்கப்பூர்வமான வளர்ச்சிப் பணிகளுக்கு மட்டுமே இந்தியா இதனைப் பயன்படுத்தி வருவது நமக்கெல்லாம் பெருமையளிக்கும் விஷயமாகும்.

சென்னைக்கு அருகில் உள்ள கல்பாக்கம் அணுமின் நிலையம் இதற்குச் சான்றாகத் திகழ்கிறது. மரபுசார் எரிசக்தி வளங்கள் வெகுவாகக் குறைந்து வரும் நேரத்தில் நாம் வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து முன்னேற அணுமின் நிலையம் வருங் காலத்தில் பெரும் பங்காற்றும்.

பல்லவர்களின் சிற்பத்திறனுக்குச் சான்றாகத் திகழும் மாமல்லபுரத்தில் இருந்து ஏழு கி.மீட்டர் தொலைவில், நவீன இந்தியாவின் சாதனைக்குச் சான்றாகக் கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் இரண்டு மாபெரும் குவிந்த மண்டபங்கள் திகழ்கின்றன.

சிறப்பம்சங்கள்

கல்பாக்கம் அணுமின் நிலையத்திற்கு மற்றொரு பெருமையும் உண்டு. நாட்டிலேயே முதல் முறையாக நமது பொறியியல் வல்லுனர்கள் - அறிவியலாளர்களால் முழுக்க முழுக்க உள் நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டு இயக்கி வைக்கப்பட்டுள்ள அணுமின் நிலையம் இதுவாகும். இதன் பராமரிப்பும் நமது தொழில் நுட்ப வல்லுனர்களாலேயே மேற்கொள்ளப் பட்டு வருகிறது என்பதும் குறிப்பிடத் தக்கது.

கல்பாக்கம் நிலையத்தின் கட்டுமானப் பணியில் ஒரு சிறப்பம்சமாகக் கடல் படுகைக்கு 200 அடி கீழே தோண்டப் பட்டுள்ள சுரங்கப்பாதையைக் குறிப் பிடலாம். கடினமான பாறைகளைக் குடைந்தெடுத்து இந்தச் சுரங்கப்பாதை உருவாக்கப்பட்டுள்ளது. டர்பைன் கண்டன்சரைக் குளிர்விப்பதற்காக மணிக்கு 1,20,000 டன் கடல் நீர் இதன் வழியாக உள்ளே கொண்டு வரப் படுகிறது. இது இந்தியாவில் வேறு எங்கும் இல்லாத தனித்தன்மையாகும்.

கல்பாக்கம் நிலையத்தின் முதல் பிரிவு 1983-ஆம் ஆண்டு ஜூலை இரண்டாம் தேதியன்று உற்பத்தியைத் தொடங்கு வதற்கான உச்சகட்ட நிலையை அடைந் தது. அம்மாதம் 23-ஆம் தேதியன்று தென்னக மின் தொகுப்புடன் இது இணைக்கப்பட்டது. அமைதிப் பணி களுக்கே அணுமின் சக்தி என்ற இந்தியா வின் இலட்சியப் பாதையில் இது ஒரு முக்கியமான மைல் கல்லாகும். இந்தப் பிரிவு இவ்வாண்டு ஜூலை 23-ஆம் தேதியன்று வெற்றிகரமான பத்தாண்டு களைக் கடந்து பதினோராவது ஆண்டில் அடி எடுத்து வைத்தது. இந்நிலையத்தின் இரண்டாவது பிரிவு மேலும் இரண்டு ஆண்டுகள் கழித்து, அதாவது 1985 ஆகஸ்ட் 12-ஆம் தேதியன்று உச்சகட்ட மின் உற்பத்தி நிலையை அடைந்தது. அதே ஆண்டு செப்டம்பர் 20-ஆம் தேதியன்று இந்தப் பிரிவு தென்னக மின் தொகுப்புடன் இணைக்கப்பட்டது.

எம்.பி.சி.

சென்னை அணுமின் நிலையம் 1987-இல், நியூக்ளியர் மின்சக்திக் கழகத்தின் (என்.பி.சி.) ஆளுகையின் கீழ் கொண்டு வரப்பட்டது. மேலும் நான்கு அணுமின் நிலையங்கள் இந்தக் கழகத் தின் கட்டுப்பாட்டில் உள்ளன. தாராபூர் (2x160 மெகாவாட்), இராஜஸ்தான் (2x200 மெகாவாட்), நரோரா (2x220 மெகாவாட்), மற்றும் கக்ராபார் (2x220 மெகாவாட் - இதன் இரண்டாம் பிரிவு இவ்வாண்டு இறுதிக்குள் உச்சகட்ட நிலையை அடையக்கூடும்.) ஆகியவை இந்த நான்கு நிலையங்களாகும். இவை தவிர, கர்நாடகாவில் கைகா (2x200 மெகாவாட்), இராஜஸ்தான் (2x220 மெகாவாட்) ஆகியவையும் உருவாகி வருகின்றன. விரைவில் நாட்டின் முதலாவது 500 மெகாவாட் பிரிவுகள் தாராபூரில் இயங்கத் துவங்கும்.

கல்பாக்கம் - அறிமுகம்

கல்பாக்கம் அணுமின் வளாகம் 2,500 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந் துள்ளது. இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையமும் இதே வளாகத்தில் இடம்பெற்றுள்ளது. இந்நிலையத்தில் பணியாற்றும் 2,000 பணியாளர்களுக் கான (200 பொறியாளர்களும், அறிவிய லாளர்களும் இதில் அடங்குவர்) குடி யிருப்புகளும் உண்டு.

தற்சமயம் கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் இரு பிரிவுகள் தலா 170 மெகாவாட் மின் உற்பத்தியில் ஈடு பட்டுள்ளன. அணுஉலை கலத்தினுள் எளிதில் எட்ட இயலாத பகுதியில் கன நீர் வழங்கீடு சாதனத்தின் 1988-இல் ஏற்பட்ட ஒரு கோளாறையடுத்து, நிறுவு திறனை விடவும் குறைவான அள விலேயே இங்கு மின் உற்பத்தி செய்யப் படுகிறது. இதைத் தொடர்ந்து அணு சக்தி முறைப்படுத்தும் வாரியம் குறைந்த அளவில் மின் உற்பத்தி செய்யுமாறு அறிவுறுத்தியது. இந்த இரு பிரிவுகளின் நிறுவு திறனான தலா 220 மெகாவாட் நிலையை மீண்டும் எட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வடிவமைப்புகளில் சில மாற்றங்களைச் செய்வதன் மூலம் இதனை எட்டு வதற்கான நடவடிக்கைகளில் விஞ் ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

பெரும்பான்மையான மக்கள் நினைப்பது போல அணுமின் சக்தி உற்பத்திக்கு அதிகச் செலவு பிடிப் பதில்லை. சமீபத்தில் நிறுவப்பட்டுள்ள சில அனல்மின் நிலையங்களில் ஒரு

பிற்படுத்தப்பட்டோருக்கு 50 சதவிகித ஒதுக்கீடு தேவை:

உச்சநீதிமன்றத்தில் வழக்கு

மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

"பிற்படுத்தப்பட்டோருக்கு 50 சதவிகித இடஒதுக்கீடு, பிற்படுத்தப்பட்ட மக்களின் சமூக நிலையை மேம்படுத்த மிகவும் அவசியமானதாகும் என்ற நிலையினை மீண்டும் வலியுறுத்த உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனு தாக்கல் செய்ய உள்ளோம். இடஒதுக்கீட்டுக் கொள்கையில் தமிழ்நாடு மேற்கொண்டுள்ள நிலையினையும், அதன் நெறியினையும் உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளும் வரை தமிழ்நாடு அரசு தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளும்" என்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 27.8.93-இல் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ள விவரம் வருமாறு:-

"இடஒதுக்கீட்டுக் கொள்கையைப் பொறுத்த வரை, தமிழகத்திற்கென ஒரு நீண்ட நெடிய வரலாறு உண்டு. அவ்வரலாறு 1921-ஆம் ஆண்டில் முதல் கம்யூனல் ஜி.ஓ. நடைமுறைக்கு வந்தது முதல் தொடங்குகின்றது. தமிழ்நாட்டில் ஏற்பட்ட நிலைமைகளைக் கருத்தில் கொண்டு தான், இந்திய அரசியல் சட்டத்தில் 15(4) என்ற புதிய பிரிவைச் சேர்த்ததன் மூலம், முதல் திருத்தமே கொண்டு வரப்பட்டது. இடஒதுக்கீட்டுக் கொள்கையில் தமிழ்நாடு அனைத்திந்தியாவிற்கும் முன்னோடி மாநிலமாக, முன் உதாரணமாகத் திகழ்ந்து வருகின்றது.

இடஒதுக்கீட்டுக் கொள்கையின் நோக்கத்தினைச் சிறப்புடன் செயல்படுத்துகிற வகையில், பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டு அளவு 31 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதமாக, தமிழ்நாடு அரசால் 1980-ஆம் ஆண்டு உயர்த்தப்பட்டது.

இதனால் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவியர் தொழிற் கல்லூரிகளில் அனுமதி பெறுவதிலும், அரசுப் பணிகளில் வேலை வாய்ப்பினைப் பெறுவதிலும் கணிசமான பயன் பெற்று வருகின்றனர்.

சட்டமன்றத் தீர்மானம்

பல்லாண்டுக் காலமாக அமலில் உள்ள இடஒதுக்கீட்டுக் கொள்கை காரணமாகத் தமிழ் நாட்டில் சமுதாய மேம்பாடும், பொருளாதார உயர்வும் மக்களிடையே குறிப்பாகப் பிற்படுத்தப் பட்ட மக்களிடையே பரவலாகக் கூடிய சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் மைய அரசு, மண்டல் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தும் வேளையில், மைய அரசு தமிழ்நாட்டில் உள்ளது போலப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 சதவிகித இடஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று என்னால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை 30.9.1991 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நிறைவேற்றியது. நானும் இந்திய நாட்டுப் பிரதம அமைச்சருக்குக் கடிதம் எழுதினேன்.

நீதிபதி பாராட்டு

மண்டல் வழக்கு விசாரணைகளில் இந்திய உச்ச நீதிமன்றத்தில், தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள நிலை தெளிவாக விளக்கப்பட்டது. நாம் மேற்கொண்ட நிலையினை நீதிபதி திரு எஸ். ரத்தினவேல் பாண்டியன் அவர்கள் பாராட்டினார். மண்டல் வழக்கில் உச்ச நீதிமன்றம் தந்த தீர்ப்பிற்கு மதிப்பளிக்கும் அதே வேளையில், தமிழ்நாடு அரசு இந்திய உச்ச நீதிமன்றத்தில் இடஒதுக்கீட்டிற்கு வரம்பு விதிப்பது போன்றவற்றிற்கு எதிரான மறுஆய்வு மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

நமது நிலையினை மீண்டும் வலியுறுத்த உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனுதாக்கல் செய்ய உள்ளோம். தமிழ்நாட்டில், அமலில் உள்ளது போன்ற இடஒதுக்கீடு பிற்படுத்தப்பட்ட மக்களின் சமூக நிலையை மேம்படுத்த மிகவும் அவசியமானதாகும்.

சட்டத்திருத்தம் வேண்டும்

இடஒதுக்கீட்டுக் கொள்கையில் தமிழ்நாடு மேற்கொண்டுள்ள நிலையினையும், அதன் நெறியினையும் உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளும் வரை அரசு தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளும்.

தமிழ்நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் இடஒதுக்கீட்டுக் கொள்கையின் நோக்கத்தினை மைய அரசுக்கு வற்புறுத்துவதோடு, மைய அரசு அதை ஏற்றுக்கொண்டு அரசியலமைப்புச் சட்டத்தில் இதற்கான திருத்தம் கொண்டு வரவேண்டும் என்றும் வலியுறுத்தி நான் எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன் என்றும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

— இவ்வாறு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கூறியுள்ளார்.

கரூர் மேலைக்கு வந்தார் மாண்புமிகு முதல்வர்; மெய்ஞ்சானாக்கு கூடி விழிந்த மக்கள் வாழ்த்தொலி முழக்கிக் கிளார்கள். மதிய்வேளு அவர்களை தொர்க்கிக் கரமைத்தார் மாண்புமிகு முதல்வர்.

அதன்பிறகு, மக்கிர் கரவல் நிலைய ஆய்வாளர் கமலாவிடம் நலன் முறையில், கரவல் நிலையம் மெயவ்பட வேண்டியதும் குறித்து அறிவுரை வழங்கினார்.

கரவல்துறை உயர் அழுவலர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நிலைவுப் பரிசு வழங்கிச் சிறப்பித்தார்கள்.

வட மெலைகை

அங்கிருந்து புறப்பட்டு, தொடர்வட மெலைகை மாநகர அலைத்து மக்கிர் கரவல் நிலையத்து விழா நிகழ்விற்கு 4.30 மணியளவில் வந்து சேர்ந்தார் மாண்புமிகு புரட்சித்தலைவி 'பழக இதிலை உதவி' - பணியில் தொர்வம் - இதுவே நமக்கு பெருமை! எனது அங்கே எழுதிவைக்கப்பட்டிருந்தது.

அலைத்து மக்கிர் கரவல் நிலைய உதவி ஆய்வாளர் பெலவைத் தாய நலைவயில் நலைபெற்ற மக்கிர் கரவலர் அனிலுப்பு மரியாலுலை அவர் ஏற்றுக்கொள்ள பார். அலைத்து மக்கிர் கரவல் நிலையங்களுக்கு நிறைந்தலைக்கொற்றினார்.

அங்கே, லைக்கப்பட்டிருந்த பதிவேடுல் குறியுளை எழுதி வாழ்த்தினார். மக்கிர் கரவலர்களுத் நக்க அறிவுரைகள் வழங்கினார்.

பிரைவார், மேலைக்கு அவர் வந்தபோது கூடியிருந்த பலவாயிரக் கணக்கான மக்கள் வாழ்த்தொலி எழுப்பினார்; மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டார் மாண்புமிகு முதல்வர்.

அதன்பிறகு - இரவு 9 மெலை மணிக்கு தம் குழந்தைகளுடன் பெயர் தூட்டும்படி கேண்டுகொண்ட மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் டெ. ஜெயலலிதா அவர்கள், ஒரு குழந்தைக்கு இராமச் சந்திரன், எனறும் இரண்டாவது குழந்தைக்குக் கல்யாணி எனறும் பெயர் தூட்டி வாழ்த்தினார்.

கரவல்துறை அதிகாரிகள் அளித்த நிலைவுப் பரிசுகளை பெற்றுக் கொண்டு - அங்கிருந்து விடை பெற்றார்.

எத்தலைக் கரவலர்

இந்தக் கரவல் நிலையங்களில் - ஒரு பெண் பொலீஸ் இலைஸ்பெக்டர், 3 சப்-இலைஸ்பெக்டர்கள், 6 ஏட்டுகள், 23 பெண் பொலீசார் எனற வலகையில் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

—நிருபர்.

அவர்கள் பேசுகிறார்கள்

டி.ஜி.ஆர்.

"எம்.ஜி.ஆரைப் பாராட்டுவது - எல்லை டாக்டர் எம்.ஜி.ஆர். கொள்வதாக கருதப்படும்.

எம்.ஜி.ஆர். எனது எல்லைக்கு நாடு அறியும்.

எம்.ஜி.ஆர். எனது எல்லைக்கு கூறி முன்னவைக்கு மனம் உண்டு எல்லைக்கு கூறி

மனம் வேண்டும்?

மனம் வேண்டும்?

இந்தக் கனி நகைகள் மடியில் விழுந்த எனவே, மனதில் எனவே எனது எதிர்பார்த்தனர். அது இதயத்தில் வைத்துக் மனம் எனது இதயத்தில் எடுத்து விழுந்தது. எனவே மடியில்!"

தஞ்சை மாவட்டத்தில் நவீன அரிசி ஆலை!

தஞ்சை மாவட்டத்தில் ஒரு புதிய நவீன அரிசி ஆலை ரூ.7.5 கோடி செலவில் அமைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இது, நாள் ஒன்றுக்கு 440 டன் நெல்லை அரைக்கும் திறன் கொண்டதாக இருக்கும். தவிட்டிலிருந்து எண்ணெய் எடுத்தல், கால்நடைத் தீவனம் முதலிய உபதொழில்களும் இந்த அரிசி ஆலை மூலம் நிறுவப்படும். இந்தப் புதிய நவீன அரிசி ஆலை தனியார் துறை மூலம் அமைக்கப்படும்.

யூனிட் மின் சக்தி உற்பத்தி செய்திட ரூ.1.25 செலவாகின்றது. அத்தோடு ஒப்பிடுகையில் கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் மின் உற்பத்திச் செலவு யூனிட்டுக்கு 75 காசுகள் மட்டுமே.

எரி பொருள் கலவை

கல்பாக்கம் நிலையத்தில் உள்ள அணு உலைகளில் யுரேனியத்தை எரி பொருளாகப் பயன்படுத்துகிறார்கள். சம நிலைப்படுத்தும் இடைப் பொருளாக கன நீர் பயன்படுகிறது. நமது நாட்டில் கிடைத்துவரும் நமது அணுமின் நிலையங்களுக்கான எரிபொருள் எவ்வளவு காலத்திற்குத் தாக்குப் பிடிக்கும்? என்ற ஒரு கேள்வி எழுவது இயற்கையே. தற்சமயம் இந்தியாவில் போதுமான அளவில் உள்ள இயற்கை யுரேனியம் (யு-238) அடுத்த நூற்றாண்டின் பாதி வரையில் ஆண்டு ஒன்றுக்குப் பத்தாயிரம் மெகாவாட் என்ற விகிதத்தில் மின் உற்பத்தி செய்வதற்குப் போதுமானது என மதிப்பிடப்பட்டுள்ளது. பீகாரில் உள்ள ஜடுகுடா சுரங்கத்தில் இருந்து யுரேனியம் அகழ்ந்தெடுக்கப்படுகிறது. ஐதராபாத்தில் உள்ள அணு சக்தித் துறையின் நியூக்ளியர் எரிபொருள் வளாகத்தில் இது பதப்படுத்தப்படுகிறது.

அணு உலையில் பயன்படுத்தப்படும் கன நீரும், நாட்டின் பலவேறு பாகங்களில் அமைந்துள்ள அணு சக்தி துறையின் நிலையங்களில் இருந்து பெறப்படுகிறது. தூத்துக்குடி, கோட்டா, தால்சேரி. பரோடா, மனகுரு ஆகிய இடங்களில் உள்ள கனநீர் நிலையங்கள் கனநீர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கைகள்

சில ஆண்டுகளுக்கு முன்பு, 1986-இல், முன்னாள் சோவியத் யூனியனில் உள்ள செர்நோபில் அணுமின் நிலையத்தில் ஏற்பட்ட விபத்தைத் தொடர்ந்து, இத்தகைய அணுமின் நிலையங்களின் பாதுகாப்புத் தன்மை குறித்து மக்களிடையே அச்ச உணர்வு ஏற்பட்டது. சில சமயம் இது தேவையற்ற பீதியாகவும் உருவாகிறது. செர்நோபில் விபத்துக்குப் பல ஆண்டுகள் முன்பாகவே கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் கட்டுமான மற்றும் இயக்க அளவில் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன. இரு சுற்றுத் தடுப்புகள் கொண்டதாக அணு உலை அமைந்துள்ளது. ஏதேனும் விபத்து ஏற்படும் சமயத்தில், இவை கதிர் வீச்சைப் பெருமளவில் குறைத்துவிடும்.

இவ்வாண்டு மார்ச் மாதம் நரோரா அணுமின் நிலையத்தின் டர்பைன் பிரிவில் தீ விபத்து ஏற்பட்டது. இது டர்போ ஜெனரேட்டர் பகுதியில் மட்டுமே நிகழ்ந்தது. அணுஉலைப் பகுதிக்கு இதனால் பாதிப்பு ஏதுமில்லை. எனினும் கூட ஒரு முன் எச்சரிக்கை நடவடிக்கையாக, நாட்டிலுள்ள அனைத்து அணுமின் நிலையங்களிலும் டர்போ ஜெனரேட்டர்களை முழுவதுமாகப் பரிசோதிப்பதற்கான திட்டமொன்றை அணு சக்தி முறைப்படுத்தும் வாரியத்தின் ஆணைப்படி என்.பி.சி. மேற்கொண்டுள்ளது. இதில் முதல் கட்டமாக, கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் முதல் பிரிவில் மின் உற்பத்தி ஜூலை 31-ஆம் தேதியிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. டர்போ ஜெனரேட்டர் ஆய்வுப் பணி ஒரு மாதம் நிகழக்கூடும்.

சுற்றுச் சூழல் விளைவுகள்

சுற்றுச் சூழல் பாதுகாப்பு நோக்கில் ஒப்பிடும்போது கூட அணுமின் நிலையங்களைக் காட்டிலும் அணுமின் நிலையங்களில் பயன்படும் எரிபொருள் தூய்மையானது என்றே கூறலாம். அனல்மின் நிலையங்கள் புவியின் வெப்ப நிலையை அதிகரிக்க வழிகோலுகின்றன. அமில மழைப் பொழிவிற்கும் காரணமாய் அமைகின்றன. ஆனால், அணுமின் நிலையங்களில் இத்தகைய மாசுக்கேடுகள் இல்லை. அணுமின் நிலையத்தின் சுற்று வட்டாரத்தில் உள்ள நீர், காற்று, மண், கடல் உயிரினங்கள் ஆகியவற்றில் மாசுக்கலப்பு ஏதேனும் தென்படுகிறதா என்பதைத் தொடர்ந்து முறையான வழிகளில் கண்டறிய - கல்பாக்கத்தில் 'சுற்றுச் சூழல் ஆய்வுக் கூடம்' முழு சுதந்திரத்துடன் செயல்பட்டு வருகிறது. கல்பாக்கம் நிலைய வளாகத்தின் சுற்றுச் சூழல் நிலவும் கதிர் வீச்சு அளவு அப்பகுதியில் இயற்கையாகக் காணப்படும் அதே அளவில் அல்லது அதை விட மிகச் சொற்ப அளவில்தான் கூடுதலாக உள்ளது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. கல்பாக்கம் நிலையத்தின் இரு பிரிவுகள் சற்றேறக் குறைய கடந்த பத்தாண்டுகளாகச் செயல்பட்டு வந்த போதிலும் இதனால் சுற்றுச் சூழலுக்குப் பாதக விளைவு ஏதுமில்லை என்பது சேகரிக்கப்பட்டுள்ள தகவல்கள் மூலமாக உறுதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

வருங்காலத் திட்டங்கள்

தற்போது இந்தியாவில் உள்ள அணுமின் நிலையங்கள் நாட்டின் மொத்த மின் உற்பத்தியில் இரண்டு சதவிகிதப் பங்கை ஏற்றிருக்கின்றன. இதனை இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் பத்து சதவிகிதமாக உயர்த்திட நியூக்ளியர் மின் சக்திக் கழகம் திட்டமிட்டுள்ளது.

கல்பாக்கத்தைப் பொறுத்த வரையில் ஐந்நூறு மெகாவாட் திறன் கொண்ட அணு உலையை நிறுவுவதற்கான முன்னோடித் திட்டம் உள்ளது. இதற்கான வடிவமைப்பு ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ளது. இத்தகைய பரிசோதனை அணுஉலை ஒன்று இந்த வளாகத்திலேயே அமைந்துள்ள இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தில் 16 மெகாவாட் மின் உற்பத்தியைச் செய்து வருகிறது. இத்தகைய ஃபாஸ்ட் ப்ரீடர் அணுஉலைகள், ப்ளுடோனியம் மற்றும் யுரேனியத்தை எரிபொருளாகக் கொண்டு செயல்படும். தற்போது இயக்கத்தில் உள்ள அணு உலைகளில் பயன்படுத்தப்படும் எரிபொருள் கழிவை மூல எரிபொருளாகவும், தோரியத்தை அணு உலையைச் சுற்றியமையும் போர்வையாகவும் கொண்டு இவை செயல்படும்.

நூல் நயம்

நல்ல கணவனாக இருப்பது எப்படி?

ஆசிரியர்: டாக்டர் மு. முத்துக்கானந்தி
விற்பனை உரிமை: பாரி நிலையம்
184, பிராட்வே
சென்னை-108

பக்கம்:12 விலை:ரூ.96/-

இல்லறம் நல்லறமாக விளங்க, கணவனும் மனைவியும் இணைபிரியாத் தம்பதிகளாக உண்மையில் வாழ வேண்டும். அதற்குத் தம்பதியரிடையே ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளும் தன்மையும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் இருந்திடல் இன்றியமையாததாகும்.

'நல்ல மனைவியாக இருப்பது எப்படி?' என்று எழுதிய இந்நூலாசிரியரே, இப்போது 'நல்ல கணவனாக இருப்பது எப்படி?' என்ற நூலையும் எழுதியிருக்கிறார். இதில் அவர் பல அற்புதமான கருத்துக்களைக் கூறுகிறார். எடுத்துக் காட்டுக்கு, கணவன், மனைவியின் அன்பைப் பெற 50 வழிகளைக் கூறுகிறாரே- அதுவே போதுமே!

இல்லறத்தில் இருக்கவேண்டிய இன்றியமையாத நூல்.

திருக்குறள்
(எளிய உரை - இனிய நடை)

ஆசிரியர்: ஞா. மாணிக்கவாசகன்

வெளியீடு: உமா பதிப்பகம்,
58, ஐயப்ப செட்டித் தெரு
மண்ணடி,
சென்னை-1.

பக்கம்:304 விலை:ரூ.16/-

வான்புகழ் வள்ளுவர் இயற்றிய திருக்குறளுக்குப் பலவேறு காலகட்டங்களில் பலர் உரை எழுதிப் பேரும் புகழும் பெற்றுள்ளார்கள்.

அந்த வகையில், எளிய உரையும், இனிய நடையும் கொண்டு விளங்குகிறது. இந்நூல் - அழகிய அச்சமைப்பு. உரை ஆசிரியர் பாராட்டுக்குரியவர்.

சாக்ரடீஸின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்

ஆசிரியர்: டாக்டர் சோ. சேசாசலம்
வெளியீடு: பாரதி நிலையம்
108, உஸ்மான் சாலை
சென்னை-17.

பக்கம்:96 விலை:ரூ.12/-

'உன்னையே நீ அறிவாய்' என்னும் உண்மையை உலகுக்கு உணர்த்திய தத்துவஞானி சாக்ரடீஸ்.

அவர் முழங்கிய சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்கள் பல சரம் சரமாய்க் கோக்கப்பட்டிருக்கிறது. சாக்ரடீசின் வாழ்க்கைக் குறிப்போடு, அவரது அனுபவ மொழிகளையும் இணைத்திருப்பது பயனுள்ளது.

நெஞ்சக் கனல்கள்

ஆசிரியர்: முனைவர் சரளா இராசகோபாலன்
வெளியீடு: ஒளிப் பதிப்பகம்
63, டாக்டர் ரங்காச்சாரி சாலை,
சென்னை-18.

பக்கம்:96 விலை:ரூ.12/-

கவிஞனின் எண்ணங்கள் கவிதைகளாக மலர்ந்திருக்கின்றன. பெண்மையைப் பற்றிக் குறிப்பிடும்போது,

பெண்மை, உழைப்பின் முதுகெலும்பு என்று கூறுகிறார். அதுமட்டுமா?

பெண்மை, திருமணச் சந்தையில் நகை தாங்கிகள்! - என்று இன்றைய சூழலைப் படம் பிடித்துக் காட்டுகிறார். இதுபோன்ற பல கவிதை வரிகள் சமுதாயத்திலே காணப்படும் சிலரது முகவரிகளைக் காட்டுகின்றன. எல்லாமே சிந்தனைச் சிதறல்கள். படித்து மகிழ - பயன்பெற நல்ல தொகுப்பு.

— மறைமலை

உங்கள் கரங்களில் புத்தகம்

ஆசிரியர்: மூவேந்தர் முத்து
வெளியீடு:
மூவேந்தர் பதிப்பகம்,
29/2, சீனிவாசப் பெருமாள் சன்னதித் தெரு,
சென்னை-600 014.

பக்கம்:52 விலை:ரூ.10/-

ஒரு புத்தகம் எப்படித் தயாராகின்றது என்பதை விளக்கும் நூல் இது.

அச்சுக் கோப்பதிலிருந்து, பைண்டிங் வரையுள்ள அச்சுப் பணிகளை எல்லாத் திறத்தாரும் புரிந்து கொள்ளத்தக்க வகையிலே எளிய நடையில் எழுதியுள்ளார் ஆசிரியர். விளக்கப்படங்களும் உள்ளன. மாணவர்கள் படித்துப் பயன் பெறலாம்.

—பி.வி.ஜி.

'கடல் முத்து'

ஆசிரியர்: பூவை. எஸ். ஆறுமுகம்
வெளியீடு:
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
தபால்பெட்டி எண்-501
பார்க்டவுன், சென்னை-600 003.

பக்கம்:126 விலை:ரூ.26/-

தஞ்சை மாவட்டத்திலுள்ள ஊர்களில் நடக்கும் சம்பவங்களாக இச் சிறுகதைகள் எழுதப்பட்டுள்ளன. மாவட்டப் பேச்சு மொழியோடு ஆசிரியரின் வர்ணனைகளும் ரசிக்கும் படியாய் உள்ளன.

ஒவ்வொரு கதையின் முடிவும் நினைவில் நிற்கும்வண்ணம், நன்றாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. தினக் கூலிகள், பிச்சைக்காரர்கள், நடிகை, மிராசுகள், இவர்களின் நியாயமான-அநியாயமான ஆசைகள்தாம் கதைகள்.

'ஞான் ஒரு இந்தியனான', 'கடல் முத்து' ஆகிய கதைகள் சிறப்பானவை. ஆனால், இக்கதைகள் சுமார் நாற்பதாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டவை என்பதை நினைவுறுத்திக் கொண்டு படிக்க வேண்டும்.

'இடைவேளை இடைவெளியல்ல'

ஆசிரியர்:
ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன்
வெளியீடு:
சுதா பதிப்பகம்,
4, முத்து முதலி தெரு,
புரசைவாக்கம்,
சென்னை-600 007.

பக்கம்:176 விலை:ரூ.23/-

புதிதாகத் திருமணம் ஆன வேலைக்குச் செல்லும், கணவன்-மனைவியின் ஆசைகள், ஏமாற்றங்கள் எதிர்பார்ப்புகள் இவற்றை விவரிப்பதுதான் முதல் நாடகத்தின் கரு. தங்களின் பிரச்சினைகளை இருவரும் கலந்து பேசி ஒரு நல்ல முடிவுக்கு வருகிறார்கள். டாக்டரும் அவரைச் சேர்ந்தவர்களும் செய்யும் கூத்துக்கள் இரண்டாவது நாடகம். இரண்டு காவலர்கள் வெகுளித்தனத்தோடு ஏமாறுவது சற்று மிகை என்றாலும் சிரிப்புக்காக அவற்றை ஏற்றுக்கொள்ளலாம். மூன்றாவது நாடகம் இது.

குருசாமிக்கு வசவுகளை வாங்கித்தரும் ஊறுகாய் பாட்டிலை அவர் வெறுத்து ஒதுக்கினாலும் மீண்டும் மீண்டும் அது அவரிடமே வந்து ஒட்டிக் கொண்டு இறுதியில் அவருக்கு வேலை கிடைக்கக் கடினமாய் இருந்து தெய்வ நிலைக்கு உயர்வது நான்காம் நாடகம். இந் நகைச்சுவை நாடகங்கள் நான்கும் சிடுமூஞ்சியின் முகத்திலுகூட சிரிப்பை வரவழைத்து விடும். நகைச்சுவை விரும்பிகளுக்கு இந் நூல் நல்ல பரிசு.

—குமாரசாமி

வளரும் வேளாண்மை

பூச்சிக் கொல்லிகளை உபயோகிப்பது எப்படி?

டாக்டர் ஆர். விஜயராகவன்
திட்டப்பிரிவு துணை இயக்குநர்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

செய்யக் கூடியவை என்னென்ன?

⊙ தெளிப்பானுக்குத் தக்கவாறு மருந்துக் கரைசலைத் தயார் செய்து கொள்ள வேண்டும். மருந்தடிக்கும் முன்பும், பின்பும் தெளிப்பானை நன்றாகக் கழுவ வேண்டும்.

⊙ மருந்து தெளித்தபின், கை, கால்களைச் சோப்பு போட்டு நன்கு கழுவிய பிறகே மற்ற வேலைகளைச் செய்யவேண்டும்.

⊙ பூச்சிமருந்து கொள்கலனுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்பேடுகளைக் கவனமாகப் படிக்க வேண்டும்.

⊙ மருந்து தெளிப்போர், முகத்தை மறைத்தும், கண்ணாடி அணிந்தும் மருந்து தெளிக்க வேண்டும்.

⊙ பூச்சி மருந்துடன் பூஞ்சாணக் கொல்லி சேர்த்துத் தெளிக்க வேண்டியிருந்தால், அதனுடன் இணக்கமான பூஞ்சாண மருந்துகளைத் தான் கலந்து தெளிக்க வேண்டும்.

⊙ அதிகாலை வேலைகளிலும், மாலை வேளைகளிலும் மட்டும் பூச்சி மருந்து தெளிக்கவோ தூவவோ செய்ய வேண்டும்.

⊙ மருந்தடிக்க வயலில், தெளிக்கப்பட்ட மருந்து, தேதி மற்றும் பூச்சிக் கொல்லிகளின் அளவுகளைக் கையேடுகளில் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

⊙ திரவ மருந்துகளையும், திட மருந்துகளையும் தனித்தனியே சேமிக்க வேண்டும்.

⊙ பூச்சிக்கொல்லி மருந்துகளை, குளிர்ந்த, உலர்ந்த நல்ல காற்றோட்டமுள்ள இடங்களிலுள்ள சேமிப்புக் கிடங்குகளில்தான் சேமிக்க வேண்டும்.

⊙ பூச்சிக்கொல்லிகளை, பரிந்துரை செய்யப்பட்ட அளவுகளில், தேவை ஏற்பட்டால் மட்டுமே உபயோகப் படுத்த வேண்டும்.

செய்யக் கூடாதவை யாவை?

⊙ பூச்சி மருந்துகளை, வீட்டில் உபயோகிக்கும் மருந்துகள், உணவுப் பண்டங்களின் அருகில் வைக்கக் கூடாது.

⊙ குழந்தைகள் கைக்கு எட்டாதவாறு வைக்க வேண்டும்.

⊙ பூச்சி மருந்தைக் கலக்கும்போது, கைகளினால் கலக்கக்கூடாது.

⊙ பூச்சி மருந்து தெளிக்கும்போது, உணவருந்துதல், புகைபிடித்தல், வெற்றிலை பாக்கு போடுதல் கூடாது.

⊙ குழல் மூலம் பூச்சி மருந்தை உறிஞ்சக்கூடாது.

⊙ மருந்தடிக்கப்பட்ட வயலுக்கு அருகில் ஆடு, மாடுகளை மேய விடக்கூடாது.

⊙ மருந்தடிக்கப்பட்ட காய்கறிச்செடி அல்லது பழமரங்களிலிருந்து, குறைந்தது பதினைந்து நாட்களுக்கு காய் அல்லது பழங்களைப் பறிக்கக் கூடாது.

நெல்லை மாவட்டம்: ஒருவரிச் செய்திகள்

★ இன்னில் என்னும் ஆங்கிலேயத் தளபதிதான், நெல்லை-கட்டபொம்மன் மாவட்ட மண்ணில் முதன் முதல் கால்வைத்தவன்.

★ ஷாஜகான் காலத்தில் கட்டிய சந்திரம், நாராயணம் மாண்புரத்தில் உள்ளது.

★ 'தென்னாட்டு ரோமாபுரி' எது தெரியுமா? வடக்கன் குளம்.

★ மக்கள் தொகை குறைந்த அளவுள்ள ஊர், பட்டைக் குறிச்சி.

★ கைதேர்ந்த கொத்தர்களுக்குப் பெயர் பெற்ற ஊர், நெற்கட்டுஞ் செவ்வல்.

★ தமிழ்நாட்டிலேயே சிறிய வட்டம்; செங்கோட்டை.

★ காவடிச் சிந்து பாடிய அண்ணாமலை ரெட்டியார் பிறந்த ஊர், சென்னிகுளம்.

★ சுதர் உற்பத்திக்கு முக்கிய இடமாக இருந்துவருவது, குருவிக் குளம்.

★ சிவசைலத்திற்கு மற்றொரு பெயர் அன்பூர்.

★ வ.உ.சி., பாரதியார் இந்துக் கல்லூரி மாணவர்கள்.



மத நல்லிணக்க நாள் விழா

தமிழ்நாடு அரசின் சார்பில், 20.8.93 அன்று கலைவாணர் அரங்கில், மத நல்லிணக்க நாள் விழா சிறப்புற நடைபெற்றது.

பல்வேறு பள்ளிகளைச் சார்ந்த மாணவ மாணவியர், தேசிய, மத ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் வகையிலும், மனித நேயம், சகோதரத்துவம், ஒற்றுமை உணர்வு, இந்தியக் கலாச்சாரம் போன்ற மனிதனுக்குத் தேவைப்படுகின்ற குணங்களில் முக்கியத்துவத்தை உணர்த்துகின்ற வகையிலும், பல தரப்பட்ட கலைநிகழ்ச்சிகளை நடத்திக் காட்டினார்கள்.

விழாவிற்குத் தலைமை வகித்த மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், கீழ்க்கண்டவாறு மத நல்லிணக்க விழா உறுதிமொழியை வாசிக்க, விழாவிற்கு வருகை தந்த அனைவரும் எழுந்து நின்று, ஒன்று சேர்ந்து வாசித்து உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்.

''சாதி, சமயம், கொள்கை, வட்டாரம், மொழி ஆகியவற்றைக் கடந்து, இந்திய நாட்டின் மக்கள் அனைவரும் உணர்வு பூர்வமாக ஒன்றுபடவும், நல்லிணக்கம் கொள்ளவும் பாடுபடுவேன் என்று உளமார உறுதி கூறுகிறேன். தனிப்பட்டவர்களிடையிலோ, சமுதாயத்தின் பல்வேறு பிரிவினர்களிடையிலோ எழுகிற கருத்து வேறுபாடுகளுக்கு வன்முறை தவிர்த்து, பேச்சுவார்த்தைகள் மூலமாகவும், அரசியல் சட்டத்திற்கு உட்பட்டும் தீர்வு காண்பேன் என்றும் உறுதி கூறுகிறேன்''

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையேற்று உரையாற்றுகையில் பேசியதாவது:

''மறைந்த முன்னாள் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்களின் பிறந்த நாளை மத நல்லிணக்க நாள் விழாவாக இங்கு கொண்டாடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். அனைத்து மத வழிபாடுகளிலும் அன்பு, பக்தி போன்றவையே முக்கிய அங்கமாக இருக்கின்றது. மகாவீரர், ஏசு,

நபிகள் போன்றவர்களின் மார்க்கம் அன்பு மார்க்கமும், மனித நேய மார்க்கமுமாகத் தான் இருந்திருக் கின்றது. இந்துக்களும், இஸ்லாமியர் களும் பழங்காலத்திலிருந்தே ஒற் றுமை உணர்வுடனும், மத ஒருமைப் பாட்டைக் காத்தும் வாழ்ந்திருக் கிறார்கள் என்பதற்கு இப்ராஹீம்கான் வரலாறு மற்றும் திப்புசுல்தான் வரலாறும் நமக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது. ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமை நீங்கிடில் அனை வருக்கும் தாழ்வு'' என்றெல்லாம் கூறப்பட்டிருக்கிறது. மனிதநேயம், அறிவு, உண்மை, நாணயப்பண்பு, பொதுநலம் போன்றவை வளர வேண்டும். அவற்றுக்கு மதிப்புத் தரவேண்டும். ஒருமைப்பாட்டுத் தன்மை பேணப்பட வேண்டும்''.

தவத்திரு ஊரனடிகள் அவர்கள் சிறப்புரையாற்றியபோது கூறிய தாவது:

''இன்று நாம் மத நல்லிணக்க நாள் விழாவைக் கொண்டாடு கிறோம். மிக்க மகிழ்ச்சி. அரசியல் கொள்கைகளாலே அரசியல் கட்சிகள் வேறுபட்டிருப்பது போல, ஆன்மீகக் கொள்கையிலே மதங்கள் வேறுபடு கின்றன. அன்று இருந்த முடியாட்சி போய் இப்போது குடியாட்சி வந் திருக்கிறது. ஆக ஆட்சி என்பது ஒன்றுதான். மனிதர்களின் உடல் குட்டை, நெட்டை என்றும் கருப்பு, சிவப்பு என்றும் பேதமிருக்கலாம். ஆனால், யாவருக்கும் உயிர் ஒன்று தானே. அதில் வித்தியாசப்பட ஒன்றுமில்லை. மத ஒருமைப்பாட் டின் முக்கியத்துவத்தை விளக்க, நாம் விழா நடத்திக் கொண்டிருக் கும் இந்த மேடை ஒன்றே போது மானது. அனைத்து மத, சமயப் பெரியோர்களும் ஒரே இடத்தில் ஒன்று கூடியிருக்கிறார்களே. இது போதாதா! . இந்த மேடை போல உலகம் ஆகி விடக்கூடாதா என்று எண்ணத் தோன்றுகிறது. வள்ள லார் கூறியது போல் ''எம்மதமும் சம்மதம்'' என்பதை அனைவரும் உணர வேண்டும்''

ஆர்க்காடு இளைய இளவரசர் திரு நவாப் காதர் முகமது அப்துல் அலி, அருள் திரு ஐ. எபநேசர் இமானுவேல், பஞ்சாப் சங்கத் துணைத் தலைவர் திரு பி.எஸ்.கிராவல், மாநில சிறுபான்மையினர் நல ஆணைய உறுப்பினர் திரு மோகன்சந்த் தாதா, சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு எம். இராமன், இ.ஆ.ப., செய்தி-சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலீ, இ.ஆ.ப., ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

முன்னதாக, பொதுத்துறைச் செயலர் திரு பி. பாஸ்கரதாஸ், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்றுப் பேசினார். செய்தி-மக்கள் தொடர்புத் துறை உதவி இயக்குநர் (நிர்வாகம்) திரு சுந்தரநாதன் அவர்கள் நிகழ்ச்சி களைத் தொகுத்து வழங்கினார். செய்தி-மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் திரு செயப்பிரகாசம் அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார்.

— நிகழ்ச்சித் தொகுப்பு:
கரு. சண்முகசுந்தரம்

மத நல்லிணக்கம்:

மாண்புமிகு முதல்வர் வேண்டுகோள்!

இந்தியாவில் பல இடங்களில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தபோதிலும் தமிழ்நாடு என்றும் தொடர்ந்து அமைதிப் பூங்காவாக விளங்கிக் கொண்டு வரு கிறது. தமிழ்நாட்டு மக்கள் சாதி, மொழி, சமய உணர்வுகளைக் கடந்து, அமைதியைக் கடைப் பிடிக்கும் மரபையும், பாரம்பரியத்தையும் கொண்ட வர்கள். மதத் தொடர்பான ஊர்வலங்கள், பொது இடங்களில் கூட்டுத் தொழுகை போன்ற நிகழ்ச்சி களை, சில தீயசக்திகள் பயன்படுத்திக் கொண்டு, வன்முறையில் ஈடுபட்டு சட்ட-ஒழுங்கு பிரச்சினை களை ஏற்படுத்தி வருகின்றன என்பதால், இது போன்ற மத ஊர்வலங்கள் மற்றும் கூட்டுத் தொழுகை போன்றவைகளைத் தவிர்ப்பது நல்லது என்ற கருத்தைப் பெரும்பாலான பொதுமக்கள் கொண்டுள்ளனர்.

மத நல்லிணக்கத்திற்கும், பொது அமைதிக்கும் குந்தகம் விளைவிக்கும் செயல்களுக்கு வாய்ப்புகள் தரக்கூடாது என்று பெருவாரியான தமிழகப் பெருங்குடி மக்கள் விரும்புகிறார்கள். பொது மக்களின் இந்த ஏகோபித்த கருத்தினை எங்கள் அரசும் முழுமையாக ஏற்கின்றது. எனினும் தமிழகத்தில் அனைத்துத் தரப்பு மக்களும் இதற்கு முழுமையாக, மனமார்ந்த முழு ஒத்துழைப்பை நல்கவேண்டும் என்பதே எனது தனிப்பட்ட வேண்டுகோள்.

பொது அமைதியைக் கருத்தில் கொண்டு, இந்த ஆண்டு மிலாது-நபி மற்றும் விநாயகர் சதுர்த்தி ஆகிய பண்டிகைகள் தொடர்பாக ஊர்வலங்கள் மற்றும் பொது இடங்களில் கூட்டுத் தொழுகை போன்றவைகள் நடக்க வேண்டாம் என்று தமிழக அரசு கருதுகிறது.

உலகச் சுற்றுலா நாள் முன்னேற்பாடுகள்!

தமிழகத்தில் சிறப்பைப் பிரதிபலிக்கும் வகையில் தமிழகத்தில் நடைபெறும் விழாக்களைச் சிறப்புடன் நடத்தி, அதைக் காணப் பல நாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும் தமிழகத்திற்கு ஈர்க்க வேண்டும் என்ற எண்ணத்தின் விளைவாக 23.8.93 அன்று மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு நாகூர் மீரான் அவர்கள் தலைமையில், சென்னைத் தீவுத் திடலில் அமைந்துள்ள தமிழகச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் உணவகத்தில் முன்னேற்பாடு கூட்டம் நடைபெற்றது.

அவ்வமயம் செப்டம்பர் 27-இல் நடைபெறும் உலகச் சுற்றுலா விழா 1994-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் குன்னூரில் நடைபெற விருக்கும் தேயிலை மற்றும் சுற்றுலா விழா ஆகியவற்றை எவ்வாறு சிறப்புடன் நடத்துவது என்பது பற்றி இக்கூட்டத்தில் பல முடிவுகள் எடுக்கப்பட்டன. கூட்டத்தில் செய்தி சுற்றுலாத் துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, இந்திய அரசு சுற்றுலாத் துறை மண்டல இயக்குநர் திருமதி பூர்ணிமா சாஸ்திரி, தென் இந்திய விடுதிகள் மற்றும் உணவகங்கள் சங்கச் செயலர் திரு நாகேந்திர பிரசாத், தென் மண்டல கலாச்சார மைய இயக்குனர் திரு ஏ. சுகுமார், முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி உமாமகேஸ்வரி ஆகியோர் உட்பட சுற்றுலாத் தொழிலில் ஈடுபட்டுள்ள பல தொழில் அதிபர்கள், பிரமுகர்கள், அதிகாரிகள் ஆகியோர் பங்கு கொண்டனர். கூட்டத்தில் பங்கு கொண்ட அனைவரையும் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு நாகூர் மீரான் அவர்கள் வரவேற்றுக் கூட்ட நடவடிக்கைகளைத் தொடங்கி வைத்தார்.

கூட்டத்தில் உலகச் சுற்றுலா தின விழாவை செப்டம்பர் 27 முதல் அக்டோபர் 3-ஆம் தேதி வரை ஏழு நாட்கள் சென்னையில் சிறப்பாகக் கொண்டாடவும், விழாவின் அங்கமாகத் தமிழகக் கலை நிகழ்ச்சிகளுடன் பிற மாநில கலை நிகழ்ச்சிகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியருக்கான ஓவியப் போட்டி, சுற்றுலா பற்றிய விழிப்புணர்வு ஏற்பட தொடர் ஓட்டம், அருங்காட்சியக அரங்கில் சுற்றுலா வளர்ச்சி பற்றி சுவரொட்டிக் கண்காட்சி, சுற்றுலாப் பயணிகளுக்கான சிறப்பான வரவேற்பு ஆகியவற்றை மிகச் சிறப்பாக நடத்த தீர்மானிக்கப்பட்டது. இறுதி நாளான அக்டோபர் 3-ஆம் நாள் கலைவாணர் அரங்கில் சுற்றுலா அமைச்சர் தலைமையில் நிகழ்ச்சிகளை நடத்தவும் வெற்றி பெற்றோர்க்குப் பரிசுகள் வழங்கவும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

1994-ஆம் ஆண்டில் சனவரித் திங்களில் குன்னூரில் நடைபெறும் தேநீர் மற்றும் சுற்றுலா விழா பற்றி உலக அளவிற்கு விளம்பரப்படுத்தவும் அவ்விழாவிற்குப் பல்நூறு பயணிகளைக் குழுவாக அழைத்து வருமாறும் பயண முகவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். ஏர் இந்தியாவின் அனைத்து வெளிநாட்டு அலுவலகங்களும் இவ்விழா பற்றிய சுவரொட்டிகளுக்காக முக்கியத்துவம் கொடுத்து விளம்பரப்படுத்தவும் கேட்டுக் கொள்ளப்பட்டது. இவ்வாண்டு ஜெய்ப்பூரில் நடைபெற விருக்கும் இந்தியப் பயண முகவர்கள் சங்கத்தின் கருத்தரங்கத்தில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை பங்கு கொண்டு தமிழகம் பற்றி சிறப்பான விளம்பரங்களைச் செய்யவும் பயணிகளை அதிக அளவில் தமிழகத்திற்கு வரவழைக்கவும் முடிவு எடுக்கப்பட்டது. கூட்ட இறுதியில் தென் இந்திய விடுதிகள் மற்றும் உணவகங்கள் சங்கத்தின் தலைவர் திரு பாலகிருஷ்ண ராவ் நன்றி கூறினார்.

அண்ணா போற்றிய பெருமக்கள்

சர். பி. தியாகராயர்

தியாகராயர் தம்முடைய சமூகத் தொண்டைத் தான் ஒரு பொருட்டாக மதித்தார். திராவிடச் சமூகத்தில் ஒரு பெரிய விழிப்புணர்ச்சியை உண்டாக்கினார். அரசியலிலே நம்மவர்கள் முதலிடம் பெற வேண்டுமென்று அவர் விரும்பினார்.

தியாகராயர் போக போக்கியத்தை விட்டுத் தாமாகவே கல்லும் முள்ளும் காட்டாறும் நிரம்பிய பாதை வழியே செல்லத் தொடங்கினார். அவர் களத்திலே தூவிய விதை நன்றாக வளர்ந்திருக்கிறது. அவர் அன்று பறக்கவிட்ட சமுதாயப் புரட்சிக் கொடியின்கீழ் நின்றுதான் நாம் இன்று பணியாற்றி வருகிறோம்.

தமிழ்த் தென்றல் திரு.வி.க.

– இல. பழனியப்பன்

1993 ஆகஸ்டு 26-ஆம் நாள் தமிழ் உள்ளங்களின் தூய திருவிழா. ஆம். அந்நிய ஆதிக்கத்தால் கொத்தடிமையாய் வாழ்ந்து கொண்டிருந்த தமிழச் சமுதாயத்தை வீறுகொண்டு எழச் செய்த வீர மகன் திருவாரூர் வி. கல்யாண சுந்தரனாரின் நூற்றாண்டுப் பெரு விழா.

தனது முன்னோர்கள் வாழ்ந்த திருவாரூரைத் தன் பெயரின் முன்னே இணைத்துக் கொண்டு வாழ்ந்த திரு.வி.க. அவர்கள், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தைச் சேர்ந்த 'துள்ளம்' என்னும் சிற்றூரில் விருத்தாசலம் சின்னம்மை தம்பதிகளின் ஆறாவது மகனாக 1883-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 26-ஆம் நாள் தமிழகம் செய்த நற்பயனால் இம் மண்ணில் மலர்ந்தார்.

இளமையிலேயே இயற்கையாகவே இவருக்கு நாட்டுப்பற்றும், தாய் மொழிப்பற்றும் இறையுணர்வும், சமுதாய உணர்வும் அமைந்திருந்தது நாம் செய்த நற்தவத்தின் பயனேயாகும். இவரது இச்சிறப்புணர்வுகள் இவரது தந்தையார் நடத்திய சிறிய பள்ளியில் தொடங்கி சென்னை இராயப்பேட்டை ஆரியன் பிரைமரி பள்ளியில் வளர்ந்து வெசிலி கல்லூரியில் மெட்ரிகுலேசன் தேர்வில் நிறைவு பெற்றது. இவர் படித்த பள்ளி மற்றும் கல்லூரி இவருக்கு முறையாகத் தமிழ் கற்றுத் தரவில்லை. இவரது சுய முயற்சி தமிழ் அறிஞர்களை நாட வைத்து இவரைத் தமிழ்த் தென்றலாகத் தாலாட்டிப் பாராட்டி வளர்த்தது.

பொருள் மீது இவர் உள்ளம் பற்றுக் கொள்ள மறுத்தது. அருள் உள்ளம் இவரை அரவணைத்தது. ஆனால் சுய மரியாதை உணர்வு இவரை வாழ்க்கைப் பயணத்தை வழிநடத்திச் சென்றது.

பின்னி நிறுவனத்தில் தன் வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கிய இவர் தொழிலாளர் விடுதலை உணர்வை ஊட்டத் தொடங்கிய காரணத்தால் நீண்ட நாள் அங்கு இருக்க இயலாது போயிற்று. பின்னர் வெசிலியன் மிசன் பள்ளியில் தமிழாசிரியர், அதன்பின் இராயப்பேட்டை வெசிலி கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியர் ஆகிய பணிகளில் தனி முத்திரைப் பதித்தார். இந்தக் காலகட்டத்தில் அரவிந்தரின் 'வந்தே மாதரம்' பத்திரிகையும் திலகரின் வீர முழக்கங்களும், விபின்சந்திர பாலரின் விடுதலை முழக்கமும் இவரது நாட்டுப்பற்றை மேலும் வளர்த்து இவரை அரசியலில் ஈடுபடச் செய்தது. இந்த உணர்வு இவரது பணி வாழ்வுக்கு விடுதலை கொடுத்து பத்திரிகை வாழ்வாக உருவெடுத்தது. ஆம். தேச பக்தன், நவசக்தி இதழ்கள் வாயிலாக விடுதலை உணர்வை வளர்த்தார். புதுப் புறநானூறு படைத்தார். ஆங்கிலத்திலிருந்து தூய தமிழாக அனைத்துத் தேசியத் தலைவர்களின் வீர முழக்கங்கள் இவரது கைவண்ணத்தால் நாவன்மையால் நாடு முழுவதும் பரவி விடுதலை உணர்வைத் தமிழகத்தில் தட்டி எழுப்பியது. உலகப் பெரியார் காந்தி அடிகள் வீரத் தளபதி திலகர் ஆகிய இருவரும் இவருக்கு அரசியல் குருவாகத் திகழ்ந்தனர்.

காந்தியடிகளின் உரைகளை தமிழகத்தில் மொழி பெயர்த்து அவரின் பேரன்புப் பெற்றவர். அவ்வாறே அன்னி பெசண்ட் அம்மையாரின் பேச்சும், எழுத்தும் இவரைப் பெரிதும் பாதித்து இவரை இந்திய காங்கிரசுப் பேரியக்கத்தில் தீவிரமாக ஈடுபடச் செய்தது. இவரது உரிமை வேட்கை அல்லது நாட்டுப் பாடல் எனும் நூல் பலரது உள்ளங்களைப் பக்குவப்படுதியது. இவர் பல வேறு அறப் போராட்டங்களில் பங்கேற்று நாட்டு விடுதலைக்குப் பெரிதும் பாடுபட்டுள்ளார். முதறிஞர் இராசாசி அவர்களின் தலைமையில் வேதாரண்யத்தில் நடைபெற்ற உப்பு சத்தியாக்கிரகத்தில் பங்கேற்று சிறை புகுந்த பெருமை இவருக்கு உண்டு. இவரது பேனா முனையில் கிலாபத் இயக்கம், ஒத்துழையாமை இயக்கம், பஞ்சாப் படுகொலை ஆகியவை அனல் பறக்க வெளிவந்து அனைவரையும் விழிப்புணர்வு பெறச் செய்தது.

தொழிற்சங்க வரலாற்றில் திரு.வி.க. அவர்களுக்கு என்றும் தனிப் பெருமை உண்டு. ஸ்பென்சர் நிறுவனத்தில் பணியாற்றிய காலத்தில் அப்போதைய இங்கிலாந்து நாட்டுத் தொழிற் சங்கத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கீர் ஹார்டியைச் சந்தித்ததன் வாயிலாக, தொழிலாளர் சமுதாயத்தின் நல்வாழ்வில் ஈடுபாடு ஏற்பட்டதன் வாயிலாக வாடியா பெருமக்களுடன் சேர்ந்து இந்தியாவிலேயே முதல் முதலாகத் தொழிற்சங்கத்தைத் தோற்றுவித்துத் தனிப் பெருமை பெற்றார்.

இதன் விளைவாக, பல்வேறு தொழிற் சங்கங்கள் சென்னையில் உருவாகி மத்திய தொழிற்சங்கம் உருவாயிற்று. மத்திய தொழிற்சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தொழிலாளர்களை நம் நாட்டின் பொறுப்புள்ள குடிமக்களாக ஆக்கும் பெரும்பணியைத் தொடங்கி வைத்தார். தொழிலாளர்களிடையே மொழியுணர்வு, நாட்டுப் பற்று, சமுதாய ஈடுபாடு, இறையுணர்வு ஒரு குறிப்பிட்ட அளவிற்கு இன்று

ஏற்பட்டுள்ளமைக்கு திரு.வி.க. அவர்களின் இடைவிடாத் தொண்டே முக்கிய காரணமாகும். தொழிலாளர்களிடையே விடுதலை வேட்கை உருவாகி பெரிய தோர் மறுமலர்ச்சி இதன் விளைவாக ஏற்பட்டது. மிகச் சீரிய மூத்த தொழிற் சங்கத் தலைவர்களான சர்க்கரைச் செட்டியார், ம. சிங்காரவேலர் ஆகியோரை தொழிற்சங்க இயக்கத்தில் ஈடுபடச் செய்து அவ்வியக்கத்திற்கு புதிய வலியும் பொலிவும் சேர்த்தார்.

மென்மையை, பெண்மையை, தாய்மையைப் பேணிப் போற்றியது இவர் செய்த மாபெரும் சமுதாயத் தொண்டாகும். பெண் கல்வியே நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படை என்பது இவரது அசைக்க முடியாத நம்பிக்கையாகும். "பெண்ணின் பெருமை" என்னும் இவரது நூல் ஒப்பற்ற வழிகாட்டியாக இன்றளவும் திகழ்கிறது.

குழந்தைத் திருமணத்தைக் கடுமையாகக் கடைசி வரைச் சாடியவர் என்ற பெயரும் இவரையே சாரும். வரதட்சணைக் கொடுமையை எதிர்த்து தொடர்ந்து குரல் கொடுத்தார் கைம்மை மணத்தை வரவேற்ற பெருந்தகையாளர்.

டாக்டர் முத்துலெட்சுமி அவர்களின் தேவதாசி ஒழிப்பு மசோதாவுக்குப் பக்கபலமாகச் செயல் புரிந்தார். அவ்வாறே தீண்டாமையை ஒழிப்பதில் நேரடியாகச் செயல்பட்டார்.

தன் தாய்மொழியால் தமிழ் மீது அவருக்குத் தீராக் காதல். அவர் காலத்தில் அரியணையில் ஆங்கிலமும், ஆலயத்தில் வட மொழியும், இசையரங்கும் தெலுங்கில் மட்டுமே பாடிவந்தனர். இந்நிலையை மாற்றி அன்னைத் தமிழை அனைத்துத் துறையிலும் வளர்த்தார். தாய் மொழியில் தமிழர்களைப் பேச வைத்து அந்நிய மோகத்தைத் தணித்தார்.

இவரது தமிழ்நடை தென்றலாய் இன்றளவும் இனிக்கிறது. உள்ளத்தின் மேன்மையினை உலகறியச் செய்தார். 'ஒன்று பரம்பொருள் நாமதன் மக்கள்' என்ற ஆன்ம நேய ஒருமைப்பாடு கண்ட தமிழ் ஞானி.

தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களைப் போல நாட்டுப்பற்றும், மொழி உணர்வும், சமுதாய நோக்கும், இறை உணர்வும் கொண்ட ஒரு நடமாடும் பல்கலைக் கழகத்தைக் காண்பதரிது. அன்னாரின் கனவுகளை நனவாக்கி, தமிழன்னைக்கு முத்துமாலை சூட்டுவோம்.



பொதுநலப் பூங்காவில் பூத்திட்ட புரட்சிமலர்!

— பி.வி. கிரி

சமுதாயத் தேரோட்டம்
சரியாக நடப்பதற்கு
அமுதான தமிழிலிலே
அரியபல நூல்படைத்தார்!

இதயம் இளித்திடும்
இதழ்கள் நடத்தினார்
பக்குவமாய் சீர்திருத்தம்
பரவிடவே வகைசெய்தார்!

நாளிலம் போற்றுகின்ற
நாவன்மை கொண்டிருந்தார்;
தேனினும் இனிதான
தெளிவுரைகள் பலசொன்னார்!

இளைய தலைமுறை
எழுச்சி கொளச்செய்தார்!
வளைய வந்தார்கள்
வாலிபர்கள் திரள்திரளாய்!

பொதுநலப் பூங்காவில்
பூத்திட்ட புரட்சிமலர்!
புதுமைகள் வாழ்விலே
புரிந்திட்ட சிற்பியவர்!

எளிமையின் உருவாக
இறுதிவரை அவர்இருந்தார்
ஒளிநிறைந்த வாழ்வுக்கு
உதாரணம் அண்ணாவே!



சென்னை மாநகராட்சிச் செய்திகள்

குடிநீர்ப் பரிசோதனை செய்ய பரிசோதனைக் கூடம்!

சென்னை மாநகராட்சியின் பொது சுகாதாரத் துறையின் சார்பில் ரிப்பன் மாளிகையில் அமைக்கப்பட்டுள்ள இரசாயனப் பகுப்பாய்வு (Chemistry Analyser) என்னும் மருத்துவக் கருவியையும், குடிநீர் பருகுவதற்கு ஏற்றதாக உள்ளதா என்பதைக் கண்டறிவதற்காகப் புதிதாக அமைக்கப்பட்ட குடிநீர் ஆய்வுக் கூடத்தினையும் மாநகராட்சித் தனி அலுவலர் திரு. இரா. பூர்ணலிங்கம், இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையர் திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப., முன்னிலையில் 8.7.93 அன்று ரிப்பன் மாளிகையிலுள்ள பொதுசுகாதாரத் துறையைச் சார்ந்த ஆய்வுக் கூடத்தில் தொடங்கி வைத்தார். மாநகராட்சியின் சுகாதாரத் துணை ஆணையர் திரு. ச.சந்திரமௌலி, இ.ஆ.ப., போக்குவரத்துத் துறை துணை ஆணையர் திரு. வி. இராமகிருஷ்ணன், இ.கா.ப., சுகாதார அலுவலர் டாக்டர் கண்ணபிரான் மற்றும் பிற அலுவலர்கள் இதில் கலந்து கொண்டார்கள். இந்த இரு வசதிகளும் ரூ.12 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

ரிப்பன் மாளிகையில் இயங்கி வரும் மாநகராட்சி பொது சுகாதார ஆய்வுக் கூடத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த இரசாயனப் பகுப்பாய்வு (Chemistry Analyser), ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகும். இக்கருவி இரத்தத்தில் உள்ள சர்க்கரை, கொழுப்பு ஆகியவற்றின் அளவு, சிறுநீரகத்தின் வேலைத் திறன், நாளமில்லாச் சுரப்பிகளின் வேலைத்திறன் ஆகியவற்றை எந்தவிதத் தவறுமின்றித் துரிதமாகத் தெரிந்து கொள்ள உதவும்.

இந்த வசதியைப் பொதுமக்கள் குறைந்த அளவே கட்டணம் செலுத்திப் பயன்படுத்திக் கொள்ளலாம். இக் கட்டணம் தனியார் பரிசோதனைக் கூடங்களில் வசூலிக்கும் கட்டணத்தைவிடப் பாதியாக இருக்கும்.

மேலே கூறப்பட்ட பரிசோதனைகளுடன் இ.சி. போன்ற பிற பரிசோதனைகளும் குறைந்த கட்டணத்தில் மாநகராட்சி பொதுசுகாதார ஆய்வுக் கூடத்தில் பொதுமக்கள் செய்துகொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

குடிநீர்ப் பரிசோதனைக் கூடம்

குடிநீர் பருகுவதற்கு ஏற்ற வகையில் சுகாதாரமான முறையில் இருக்கிறதா என்பதைக் கண்டறிய, பரிசோதனைக் கூடம் ஒன்றும் மாநகராட்சியால் ரிப்பன் மாளிகையில் அமைக்கப்பட்டுள்ளது. உணவு விடுதிகள் மற்றும் பிற இடங்களில் அளிக்கப்படும் குடிநீர் பருகுவதற்கு ஏற்ப சுகாதாரமான முறையில் உள்ளதா என்பதைக் கண்டறிவதற்காக இப்பரிசோதனைக் கூடம் மாநகராட்சியால் பயன்படுத்தப்படும்.

குடியிருப்புகளில் கார் நிறுத்தும் இடங்கள்

சென்னை நகரில் குடியிருப்புகளில் அமைந்துள்ள பகுதிகளில் ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்ஸி நிறுத்துவதற்கான இடங்களை அமைக்க சென்னை மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. இவ்வாறு அமைக்கப்படும் வாகனங்கள் நிறுத்தும் இடங்களில் தொலைபேசி செய்தி பெறும் வசதியும் செய்துதர மாநகராட்சி எண்ணியுள்ளது. இதனால் பொதுமக்கள் சிரமமின்றி வாடகை வண்டிகளை ஏற்பாடு செய்து கொள்ள இயலுவதுடன் ஆட்டோ டாக்ஸி ஓட்டுநர்களுக்கும் அதிக அளவில் சிரமமின்றி பயணிகள் கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.

இத்தகைய வண்டிகள் நிறுத்தும் இடங்களை அமைப்பதற்கான இடங்களைத் தேர்வு செய்யும் பணியினை மாநகராட்சி தற்பொழுது மேற்கொண்டு உள்ளது. ஏற்கெனவே சில இடங்கள் தேர்ந்து எடுக்கப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன.

சென்னை மாநகராட்சி பள்ளிகளில் கல்வியின் தரத்தை உயர்த்த நடவடிக்கை

சென்னை மாநகராட்சிக் கல்வித் துறையின் சார்பில், மாநகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்களுக்கான புத்துணர்ச்சி பயிற்சியினை 8.7.93 அன்று ரிப்பன் மாளிகையிலுள்ள கூட்ட அரையில் மாநகராட்சியின் தனி அலுவலர் திரு. இரா. பூர்ணலிங்கம், இ.ஆ.ப., தொடங்கி வைத்தார். விழாவிற்கு மாநகராட்சி ஆணையர் திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப., தலைமை வகித்தார். கல்வித் துறை துணை ஆணையாளர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., சிறப்புரை வழங்கினார். அண்ணா பல்கலைக் கழகப் பாடத் திட்டத்துறையின் பேராசிரியர் டாக்டர் செல்வம், திரு. கே. பிரபாகரன் ஆகியோர் கலந்துகொண்டு ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தார்கள். விழாவிற்கு வந்திருந்தவர்களை, மாநகராட்சி கல்வி அலுவலர் டாக்டர் மு. இராசாராம் வரவேற்று பேசினார்.

மாநகராட்சித் தனி அலுவலர் திரு. இரா. பூர்ணலிங்கம், இ.ஆ.ப., பயிற்சியைத் தொடங்கி வைத்துப் பேசும் போது, கல்வியின் தரத்தை உயர்த்தும் வகையில் மாநகராட்சிப் பள்ளிகளில் பல்வேறு அடிப்படை வசதிகளை ரூ.10 இலட்சம் செலவில் மாநகராட்சி செய்து வருகிறது. எனவே, ஆசிரியர்கள் தங்களுடைய கடமையை உணர்ந்து சிறப்பான முறையில் பணியாற்றி அதிக அளவில் ஏழை எளிய மாணவர்கள் தேர்ச்சிபெற முயற்சி செய்யவேண்டும் என்று குறிப்பிட்டார். மாநகராட்சி ஆசிரியர்கள் தங்களுடைய குறைகளைத் தெரிவித்தால் அவற்றை நிவர்த்தி செய்ய மாநகராட்சி தயாராக இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

சென்னை மாநகராட்சியின் ஆணையர் திரு. சா. அலாவுதீன், இ.ஆ.ப., தலைமை உரையாற்றும்பொழுது, தற்போது கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள பல்வேறு மாற்றங்களை மாநகராட்சி ஆசிரியர்கள் தெரிந்து கொள்வதற்காகவே இத்தகைய பயிற்சிகள் ஏற்பாடு செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டார். மேலும் தனியார் பள்ளிகள் போல நிதி வசூல் செய்யாமல் இலவசமாக மாநகராட்சிப் பள்ளிகள் ஏழை மாணவ மாணவிகளுக்குக் கல்வி வழங்கி வருகிறது. மாநகராட்சிப் பள்ளிகளில் கல்வித் தரத்தை உயர்த்த கடந்த 1½ ஆண்டுகளில் பள்ளிகளில் ஆய்வகங்கள் அமைத்தல், மேசை நாற்காலி, சுற்றுச் சுவர் போன்ற அடிப்படை வசதிகளை அமைத்தல் போன்ற பணிகளைச் செய்து வருகிறது. இத்தகைய வசதிகள் செய்து கொடுத்தப் பின்னரும் மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் தரம் சற்றுக் குறைவாக உள்ளது. இதனை உணர்ந்து இந்நிலையை மாற்ற மாநகராட்சி ஆசிரியர்கள் நல்ல ஒத்துழைப்பு நல்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மாநகராட்சிக் கல்வித் துறையின் துணை ஆணையர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., தன்னுடைய சிறப்புரையில், இத்தகைய பயிற்சிகள் மாநகராட்சி ஆசிரியர்களுக்குத் தங்களுடைய பணியில் ஒரு ஆர்வத்தையும் கடமை உணர்வையும் ஏற்படுத்தும் என்று தெரிவித்தார்.

அண்ணா பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் செல்வம் தன்னுடைய உரையில், இப்பயிற்சி ஆசிரியர்களின் அறிவுத்தன்மையை அதிகப்படுத்துவதுடன், பாடம் கற்பிப்பதில் புதிய முறையைக் கையாலுவதற்கும் உதவும் என்று தெரிவித்தார். ஏதாவது ஒரு மாநகராட்சிப் பள்ளியின் கல்வித் தரத்தை உயர்த்த தாங்கள் பொறுப்பேற்பதாக அண்ணா பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் செல்வம் அறிவித்ததைத் தொடர்ந்து, சைதாப்பேட்டையிலுள்ள மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகியவை அண்ணா பல்கலைக் கழகப் பேராசிரியர்களின் கண்காணிப்பிற்காக அளிக்கப்பட்டுள்ளது. கல்வித் துறையின் உதவிக் கல்வி அலுவலர் திரு. ஜே.டி. கோயில்பிள்ளை நன்றி கூறினார். ஒருநாள் நடைபெற்ற இப்பயிற்சியில் மாநகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் 60 பட்டதாரி ஆசிரியர்கள் கலந்துகொண்டார்கள்.

அண்ணா போற்றிய பெருமக்கள்

காந்தியடிகள் காலத்தின் சின்னம்!

அண்ணல் காந்தியடிகள் ஓர் தூயவர். நமது மார்க்கத்தில் மாசு துடைத்திட வந்த மகான் - என்பாரும்,

அவர் ஓர் விடுதலை வீரர், நமது நாட்டு அடிமைத் தளைகளை உடைத்தெறிந்த அஞ்சா நெஞ்சினர் என்பாரும்,

அவர் ஓர் சமதர்மவாதி, ஏழைப் பங்காளர், ஏழைகள் புதுவாழ்வு பெற வழிவகுத்தவர் என்பாரும்,

அவர் கிராம ராஜ்யம் அமைத்திட முனைந்தவர் என்பாரும், இதுபோல அவரிடம் அவரவர் கண்டவற்றினைக் கொண்டு அளவிட்டு வியந்து பாராட்டுவோர் பல்வேறு வகையினர் உளர். இவர்களின் எவருடைய பார்வையில் முழு காந்தி அடிகள் தெரிகிறார் என்பது, காலமெல்லாம் ஆராய்ந்தறிந்து கொள்ள வேண்டிய ஒரு பிரச்சினையாகும். காரணம், ஒரு மனிதர் என்ற முறையிலே மட்டும் கவனிக்க வேண்டியவர் அல்லர்; அவர் காலத்தின் சின்னம், ஓர் எழுச்சியின் அடையாளம், ஒரு மறுமலர்ச்சியின் உருவகம்.

— பேரறிஞர் அண்ணா.



சென்னையில் தமிழ்த் தென்றல் திரு.வி.க. பிறந்தநாள் விழா

தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில், தமிழ்த் தென்றல் திரு.வி.க. பிறந்தநாள் விழா, 26.8.93 அன்று, சென்னை கலைவாணர் அரங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறைச் செயலாளர் திரு சா.பா. இளங்கோவன், இ.ஆ.ப., அனைவரையும் வரவேற்றார்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஔவை நடராசன் அவர்கள், விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில்,

''திரு.வி.க. ஒரு துறையில் மட்டும் வல்லுநர் என்று வரையறுத்துச் சொல்லமுடியாது. அவர், பல்துறை வல்லுநராக விளங்கினார். வாழ்நாள் முழுவதும் தியாக வாழ்வாக - எளிமை இனிமை பொதுமை கலந்த வாழ்வாக வாழ்ந்தவர். திரு.வி.க. தொடாத துறை இல்லை. சமரச சன்மார்க்கத்தைத் தம் வாழ்வாகக் கருதியவர். எளிய தமிழாசிரியராக வாழ்க்கையைத் தொடங்கியவர். தொழிலாளர் நலனில் ஆர்வங் காட்டி, அவர்களின் தலைவராகத் திகழ்ந்தவர்'' என்றார்.

பிறகு, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள், திரு.வி.க. விருது, பாவேந்தர் விருதுகள் வழங்கி, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி, கம்பராமாயண ஆங்கில

கடலூர் மாவட்டத் தொழில் மையம்

கடலூர் மாவட்டத் தொழில் மையம், 1978-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. ஆண்டுதோறும் குறியீடுகளின் அடிப்படையில் வளர்ச்சிப் பணிகளை இது நிறைவேற்றி வருகிறது. அதன் வளர்ச்சிப் பணிகள் குறித்த விவரங்களும் 1992-93-ஆம் ஆண்டு 28.2.93 வரை அடைந்த சாதனைகளும் அடங்கிய தொகுப்பு இது.

சிறு தொழில் பதிவு: சிறு தொழில் தொடங்கும் திட்டத்துடன் ஒரு முனைப்பாளர் முயற்சிகள் மேற்கொள்ளும் நிலையில் தற்காலிகப் பதிவும் தொழில் தொடங்கி நடத்துவதற்கான ஆயத்தங்கள் யாவும் முடிக்கப்பட்ட பின்னர் அல்லது தொடங்கப்பட்ட பின்னர் நிரந்தரப் பதிவும் செய்யப்படுகின்றன. இவ்வாறு பதிவுகள் செய்யப்படுவதன் மூலம், சிறு தொழில்கள் அரசு வழங்கும் சலுகைகள் - உதவிகள் ஆகியவற்றைப் பெறத் தகுதி பெறுகின்றன.

தற்காலிகச் சிறுதொழில் பதிவு: 2,933; நிரந்தரச் சிறுதொழில் பதிவு: 918; கைவினை மற்றும் குடிசைத் தொழில் பதிவு: 508; ஊரகத் தொழிற்கடன் (தொழில்முனைப்பாளர் முதலீட்டுக் கடன்) ரூ.1.75 இலட்சம்; வட்டியில்லா விற்பனை வரிக்கடன்/விற்பனை வரியைத் தள்ளி வைத்தல் - செலவிடப்பட்டத் தொகை: 0.32 இலட்சம்; விற்பனை வரியைத் தள்ளிவைத்தல்: 5 நிறுவனங்களுக்கு ரூ.38.30 இலட்சத்திற்குத் தகுதிச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

மாநில அரசின் தொழில் முதலீடு மானியம் - ஒதுக்கீடு: ரூ.7.53 இலட்சம்; மின் கட்டண மானியம் - ஒதுக்கீடு: ரூ.3.36 இலட்சம்.

சுய வேலைவாய்ப்புத் திட்டம்

10-ஆம் வகுப்பு வரை படித்த வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்கள் சுயமாகத் தொழில் தொடங்க வங்கிகள் மூலம் கடன் வழங்குதல், இத்திட்டத்தின் கீழ், 1992-93-ஆம் ஆண்டிற்கான பயனீட்டாளர்கள் தெரிவு செய்யப்பட்டு வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர். இவ்வாண்டிற்கான குறியீடு 450. 28.2.93 வரை 750 பயனீட்டாளர்கள் ரூ.131.33 இலட்சத்திற்கு வங்கிகளுக்குப் பரிந்துரை செய்து அனுப்பப்பட்டு உள்ளனர்.

பெண்கள் பயிற்சி முகாம்: 1992-93-ஆம் ஆண்டு 40 பெண் தொழில் முனைவோர் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறார்கள். மேற்கண்ட பெண் தொழில்முனைவோர்களுக்கு அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் கடன் பெற்று தொழில் தொடங்க ஆவன செய்யப்படுகிறது.

டி.என். பாளையம், சத்தி வட்டாரங்களில் தயாரிக்கப்பட்டு ஆண்டிற்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. 'விநாயகா அகர்பத்தி' என்ற முத்திரையில் வாசனைப் பத்தி தயாரிக்கப்பட்டு ஆண்டிற்கு ரூ.1.5 இலட்சம் ரூபாய்க்கு உற்பத்தி செய்யப்படுகிறது. காலணித் தயாரிப்பில் ஆண்டிற்கு ரூ.3.5 இலட்சம் விற்பனை செய்யப்படுகிறது.

ஈரோடு, கொடுமுடி, பெருந்துறை, சத்தி போன்ற வட்டாரங்களில் உள்ள 24 மகளிர் குழுக்கள் மொத்த வியாபாரிகள் கொடுக்கும் துணிகளைப் பயன்படுத்தி ஆடைகள், தயாரித்துக் கொடுப்பதில் கூலியாக மாதத்திற்கு ரூ.40,000 பெறுகிறார்கள். அலுவலகத்திற்குத் தேவைப்படும் பேப்பர் கவர்களைத் தயாரித்து விற்பனை செய்வதில் மாதம் ரூ.15,000 இலாபம் பெறுகிறார்கள். காளான் வளர்ப்பிலும், முயல் வளர்ப்பிலும் பெரியார் மாவட்ட மகளிர் குழுக்கள் சிறந்த முறையில் செயல்பட்டு நல்ல இலாபத்தை ஈட்டுகிறார்கள்.

பவானிசாகர் வட்டாரம் தொட்டம்பாளையத்திலும், சத்தியமங்கலம் வட்டாரம் சதுமுகையிலும், கோயா பட்டைக் கொண்டு அழகிய வேலைப்பாடுகளுடன் கோயா புடவை தயாரிக்கப்படுகிறது. இந்தப் புடவைகள் வட மாநிலங்களில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. கடந்த ஆண்டு டெல்லியில் நடைபெற்ற ஊரக வளர்ச்சிப் பொருட்காட்சியில் மட்டும் பெரியார் மாவட்டத்தில் தயாரான புடவைகள் ரூ.27,000-க்கு விற்பனையானது.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ரா. கண்ணன், இ.ஆ.ப., அவர்களின் தீவிர முயற்சியால், சித்தோடு தேசிய பால் பெருக்கத் திட்டப் பயிற்சி மைய வளாகத்தில், ஜூலை 27 முதல் 31-ஆம் தேதி முடிய 'டோக்ரா' கருத்தரங்கம் நடைபெற்றது. அக்கருத்தரங்கில் பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ரா. கண்ணன், இ.ஆ.ப., மகளிர் குழுக்களுக்கும், கிராமத்தில் உள்ள ஆழ்குழாய்க் கிணறு, குடிநீர்ப் பராமரிப்பு மேற்கொள்ள பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது' என்றார்.

இந்தியாவிலேயே ரூ.5 கோடிக்கு வரவு செலவு நடக்கிற திட்டமானது பெரியார் மாவட்ட 'டோக்ரா' திட்டம் தான் என்று பெயர் சொல்லும் அளவிற்கு, வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது.

ஜி.டி. மோகன்,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
பெரியார் மாவட்டம்.

இராமநாதபுரம் மாவட்டம்

நிறைவேற்ற பெல் (பி.எச்.இ.எல்) நிறுவனத்திடம் திட்டம் தீட்ட வாரியப் பொறியாளர்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவனத்துடனும்

குடிநீர்ப்பிரச்சினை தீர.....

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு செல்வகணபதி, மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் திரு சத்தியமூர்த்தி, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு தென்னவன் ஆகியோர் இராமநாதபுரம் மாவட்டத்தில் நிலவி வரும் கடுமையான குடிநீர்ப் பிரச்சினையைக் குடிநீர் வாரியச் செயலர், நிர்வாக இயக்குநர் (குடிநீர் வடிகால் வாரியம்), உதவிச் செயலர், பொறியியல் இயக்குநர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்), தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தென் மண்டலம் ஆகியோருடன் 24.8.93 அன்று காலை விவாதித்தார்கள்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், கடல்நீரைக் குடிநீராக்குவதற்காக உவர்ப்பு நீரைக் குடிநீராக்கும் 40 ஆலைகளை, நிறுவுவதற்காக ரூ.53 கோடி இராமநாதபுரம் மாவட்டத்திற்கு அளித்துச் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார். இப்பணிகளை உடனடியாக நிறைவேற்ற அரசு அதிகாரிகளுக்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இப்பணிகளை கலந்து உடனடியாக திட்டங்கள் தயாரிக்கும்படி ஆணையிட்டுள்ளார்.

கடலாடி மற்றும் முதுகுளத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் பல ஆண்டுகளாகியும், இன்னும்

அண்ணா கலையறிந்தவர்!

அண்ணாத்துரை கலையறிந்தவர்! தமிழ்நாட்டின் பழைய நிலையறிந்தவர். "மன்னும் இமயமலை எங்கள் மலையே என்று மார் தட்டிக் கூறிய வீரர் வாழ்ந்த தமிழ் சத்தில் இன்று கோழைகளாய், மோழைகளாய் நாம் குன்றலாகாது; காளைகளாய்க் கனிறுகளாய் வாழ் தல் வேண்டும் என்று ஆசைப்படு கின்றவர் அவர். தமிழ்க் குலத்தை அரிக்கும் வேர்ப் புழுக்களை அழித் தாலன்றித் தமிழகம் தழைக்கு மாறி ல்லை; ஊழ்வினையே பேசி ஆள் வினை யற்றிருக்குமளவும் நாம் உய்யுமாறில்லை என்று உறுதியாகக் கருதுகின்றவர் அவர்.

— சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை

திரு.வி.க.

தமிழால் உயர்ந்தவர் தமிழை உயர்த்தியவர்!

மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்டார்.

திரு.வி.க. விருது, பேராசிரியர் டாக்டர் தி. முத்துக்கண்ணப்பன் அவர்களுக்கும், பாவேந்தர் விருது, புலவர் பெ.ஆ. இளஞ்செழியன் அவர்களுக்கும் வழங்கப்பட்டது. இருவருக்கும் பொன்னாடை போர்த்தி, பத்தாயிரத்துக்கான பண முடிப்பும் வழங்கப்பட்டது.

வெளியிடப்பட்ட நூல்களின் முதற்பிரதிகளை, விருது பெற்ற இருவரும் பெற்றுக்கொண்டனர்.

கம்பராமாயணத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பேராசிரியர் பி.எஸ். சுந்தரம் அவர்களுக்கு, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பொன்னாடை அணிவித்துப் பாராட்டினார்.

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து, டாக்டர் தி. முத்துக்கண்ணப்பன், புலவர் இளஞ்செழியன் ஆகியோர் பேசினார்கள்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்:

''பாவாணர் அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் ஆழ்ந்த ஆராய்ச்சிகள் செய்து, தனித்தமிழை நிலை நாட்டப் பாடுபட்டவர்கள் ஆவார். அகர முதலியை உருவாக்குகின்ற முழுத் தகுதி பாவாணருக்கு இருந்தது. அவரைத் தொடர்ந்து, அவரோடு நெருங்கிப் பழகிய மதிவாணன் அவர்கள் இப்பணியைத் தொடர்ந்து, இந்நூல்கள் வெளிவருகிற பெரும் பொறுப்பை ஏற்றுள்ளார்.

''கம்பராமாயண 12,500 செய்யுள்களில், 600-க்கு மேற்பட்ட குறள் கருத்துக்கள் மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ளன. 48 விலங்குகளின் பெயர்களும், 70 மரங்களின் பெயர்களும், 24 மீன் வகைகளும் குறிக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் தமிழ்நாட்டுக்குரிய பெயர்களாகும்.

''திரு.வி.க. தமிழால் உயர்ந்தவர்; தமிழை உயர்த்தியவர். அடக்கம், அமைதி, ஆழ்ந்த புலமை, பொதுநோக்கு முதலான தன்மைகளைக் கொண்டிருந்தவர். சன்மார்க்கம் (உண்மை நெறி) என்னுடைய நெறி என்று சொன்னவர்.

''திரு.வி.க. அவர்களின் நூல்களை இளைஞர்கள் - மாணவர்கள் படித்துப் பயன்பெற வேண்டும்''.

தமிழ் வளர்ச்சி இயக்குநர் திரு ஆ. பன்னீர்செல்வம் அவர்கள் நன்றி நவின்றார்.

— நிகழ்ச்சித் தொகுப்பு:
பி.வி. கிரி



ஏழ்மை நிலையிலிருந்து ஏற்றம் பெற...

பசிக்கும் குழந்தையின் அழுகுரல், கணவன் அகால மரணம், வீட்டின் அடுத்தவேலை சாப்பாட்டுக்கு அலையும் அபலை நெஞ்சங்கள், வயலில் வியர்வை சிந்த உழைத்து ஒரு வேளைச் சாப்பாட்டுக்கே போதாத ஊதியம், விதியின் சதியால் வாழ்க்கையை வேறு பாதைக்கு மாற்றிய மகளிர், கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய் சாப்பாடே வாழ்க்கையெனப் பழக்கப்பட்ட குழந்தைகள் இவையனைத்தும் ஒரு கிராமத்தின் பொருளாதாரச் சீர்குலைவால் ஏற்பட்ட சிதைவுகள்!

கிராம ஏழ்மை நிலை நினைவில் கொண்டு மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களால் உருவாக்கப்பட்டு, செயல்படும் திட்டம் கிராம மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் தான், 'டோக்ரா' திட்டமென அழைக்கப்படுகிறது.

இத்திட்டம் மத்திய அரசின் முயற்சியாலும் மாநில அரசின் மேற்பார்வையிலும் 1983-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 50 மாவட்டங்களில் வெள்ளோட்டம் பார்க்கப்பட்டதில், தமிழகத்தில் பெரியார் மாவட்டமும் ஒன்று. இத்திட்டத்தில் வட்டாரங்களில் பெண்கள் குழுக்களாக அமைக்கப்படுவர். ஒரு குழுவில் 5 முதல் 20 பெண்கள் உறுப்பினர்களாக இருப்பர். இந்த உறுப்பினர்களில் ஒருவர் அக்குழுவுக்குத் தலைவியாகத் தேர்வு செய்யப்பட்டு அக்குழுவினர் சுயமாகத் தொழில் செய்ய மாவட்ட நிர்வாகம் அனைத்து உதவியும் செய்யும்.

இத்திட்டம் பெரியார் மாவட்டத்தில் முதலில் 20 வட்டாரங்களிலும் செயல்படுத்தினாலும், ஆரம்ப காலத்தில் பெருந்துறை, பவானி வட்டாரங்களில் மட்டுமே இரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டு, இன்று படிப்படியாக வளர்ந்து 705 மகளிர் குழுக்கள் மாவட்டம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 680 மகளிர் குழுக்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ரா. கண்ணன், இ.ஆ.ப., அவர்களின் ஆலோசனையின் பேரிலும், ஊக்குவிப்பினாலும் நன்றாகச் செயல்பட்டு, அந்தப் பகுதிகளுக்கேற்பத் தொழில் செய்து, தமிழகத்திலேயே இம்மாவட்டம் சாதனை படைக்கிறது.

இத்திட்டத்தால் இதுவரை 10,980 மகளிர் பயன் அடைந்துள்ளனர். இதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவர்கள் 5,528 ஆகும். இம்மாவட்டத்தில் இதுவரை 366 இலட்சம் செலவிடப்பட்டு, மானியமாக ரூ.127.5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 14 பல்நோக்குக் கூடாரம் கட்டப்பட்டுள்ளது. இதைத் தொழில் கூடாரமாகவும், குழந்தைகள் காப்பகமாகவும், மகளிர் குழுக்கள் கூட்டம் நடத்தவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

'அஞ்சலி' மசாலாப் பொடி என்ற பெயரில் சாம்பார் தூள், மிளகாய்த் தூள், இட்லிப் பொடி, சிக்கன் மசாலா, பருப்புப் பொடி, ரசப் பொடி, போன்ற மசாலாப் பொடிகள் தயாரிக்கப்பட்டு, ஆண்டிற்கு 10 இலட்சம் ரூபாய் வரை விற்பனை செய்கிறார்கள். இந்த மசாலாப் பொடி மாவட்டத்தில் உள்ள அனைத்துச் சத்துணவு மையங்களுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

'மின்மினி' என்ற பெயரில் வாஷிங் பவுடர் காங்கேயம், கோபி போன்ற வட்டாரங்களில் தயாரிக்கப்பட்டு, விற்பனைத் தொகை ரூ.1.5 இலட்சத்தைத் தாண்டியுள்ளது. 'லிக்யுட் ப்ளூ' என்ற பெயரில் சொட்டு நீலம்

பட்டம் பெறுவது எதற்கு?

பட்டம் பெற்றிடுகின்றீர்! பல்கலைக்கழகம் ஈன்றெடுத்த நன்மணிகளாகின்றீர் ஆம். ஆயின் இஃது முடிவா, தொடக்கமா? அஃதே கேள்வி! பட்டம் பெற்றுள்ளீர் பாராட்டுக்குரியீர். ஐய மில்லை, ஆயின் பட்டம் எதற்கு? காட்டிக் களித் திடவா? அன்றிப் பணி செய்திடக்கிடைத்திட்ட ஆணையெனக் கொண்டிடவா? நுமக்கா? நாட்டுக்கா? பொருள் ஈட்டிடவா? நாட்டுப் பெருமையினைக் காத்திடவா? எதற்கு இப் பட்டம் பயன்பட இருக்கிறது? அஃதே கேள்வி! விழாத் தந்திடும் மகிழ்ச்சி யுடன் இழைந்து நம் செவி வீழ்ந்திடும் கேள்வி!

தான் உண்ட நீரதனை, பன் மடங்கு பெருக்கி, பார்மகிழத்தருவதற்கே சூல்கொண்டுலவுவது மேகம்; அறுகின்றோம். தன் தோகைகளை விரித் துக் கலாப மயில் ஆடுவது, தானே கண்டு களித் திடவா? பிறர் காண; பிறர் மகிழ! தான் காத்து வைத்துள்ள பொற்குவியல்தனைக் கொண்டு, தானேயா அணிகலனைச் செய்து நிலமாது பூட்டிக் கொள்கிறாள்? இல்லை - மற்றையோர் பெற்றிடத் தருகின்றாள்.

ஒளிதனை உமிழ்ந்திடும் திரு விளக்கு எதற் காக? இருளில் உள்ளோர் இடர் நீக்க!

பட்டம் பெற்றிடும் சிறப்புடையீர்! நீவிர், திருவிளக்கு-பொற்குவியல்-புள்ளிக் கலாப மயில் - கார்மேகம் - நாட்டைச் செழிக்கச் செய்திடும் வல்லுநர்கள், இசைபாட மக்கள் வாழ உமதாற் றலை ஈந்திட வந்துள்ளீர்; இதற்கான அனுமதிச் சீட்டே இந்தப் பட்டங்கள்; இத்தகையபோரைப் பயிற்றுவித்து அனுப்பிக் கொடுப்பதுவே பல் கலைக் கழகத்தின் தனிச் சிறப்பு. நாட்டின் பொது வுடமை நீவிர் இன்று நுமக்கென்று பெற்றுள்ள நற் பட்டங்கள். மறந்திடுவோர் அல்லர் நீவிர்.

— பேரறிஞர் அண்ணா

(மதுரைப் பல்கலைக் கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழாவில் 7.9.1967-இல் ஆற்றிய உரையிலிருந்து)

வேளாண்மைத் துறை மூலம் விரைவான பணிகள்

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில், வேளாண்மைத் துறை மூலம் 1992-93-ஆம் ஆண்டில் 1,05,610 எக்டேரில் நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டு 4,17,700 மெ. டன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டது. சிறுதானியங்கள் 7,740 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு, 20,250 மெ. டன் உற்பத்தி செய்யப்பட்டது. பயறு வகைப் பயிர்களைப் பொருத்தமட்டில் இதுவரை காணப்படாத வகையில், 37,843 எக்டேரில் சாகுபடி செய்து, 19,091 மெ. டன் உற்பத்தி செய்யப்பட்டது. அதேபோல், எண்ணெய்வித்துப் பயிர்களிலும் குறிப்பிடத்தக்க சாதனையாக 19,419 எக்டேரில் பயிர் செய்யப்பட்டு 21.930 மெ. டன் உற்பத்தி செய்யப்பட்டது.

1992-93-ஆம் ஆண்டில், முதன் முதலாக சோயாமொச்சை 377 எக்டேர் பரப்பில் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டது.

1992-93 நிதியாண்டில், பல்வேறு திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட பொருள் மற்றும் நிதி இலக்குகள் குறைவின்றிச் சாதனை எய்தப்பட்டுள்ளது.

1993-94-ஆம் ஆண்டிற்கு, இம்மாவட்டத்திற்கான உணவுத் தானிய உற்பத்தி இலக்கு 5.0 இலட்சம் மெ. டன்னாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்விலக்கினைச் சாதனை புரிந்திட, அரிசி உற்பத்தியில் எக்டேருக்கு 6 மெ. டன்னும், சிறு தானியங்கள் உற்பத்தியில் எக்டேருக்கு 3.0 மெ. டன்னும் உற்பத்தி செய்திடப் பல வழிகளிலும் முனைப்புடன் செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல் பயறு வகைப் பயிர்களில் எக்டேருக்கு 0.660 மெ. டன்னும் பருத்தியில் 3 பேல்கள், கரும்புப் பயிரில் 12.5 மெ. டன் வெல்லம், நிலக்கடலையில் 1.5 மெ. டன், எள் பயிரில் 0.5 டன், சூரியகாந்திப் பயிரில் 0.7 மெ. டன், சோயாமொச்சைப் பயிரில் 1.0 மெ. டன் உற்பத்தி செய்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1993-94-ஆம் நிதியாண்டில் சிறுகுறு விவசாயிகளுக்கான சிறப்புத் திட்டங்கள், ஆதி திராவிட விவசாயிகளுக்கான நலத் திட்டங்கள் மற்றும் ஏனைய நலத் திட்டங்களும் செயல்படுத்தப்பட உள்ளன.

ஒருங்கிணைந்த அரசி உற்பத்தித் திட்டம்

அரிசி உற்பத்தியைப் பெருக்கும் வகையில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்கள் (விதைகள் பயிர்ப் பாதுகாப்பு மருந்து, களைக்கொல்லி, சிங்கல்பேட் போன்றவை) 50 சதவிகித மானியத்தில் வழங்கப்பட உள்ளன.



நிறைவேற்ற இயலாமை குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவாதித்தார். மேற்படி திட்டத்தின் மூலம் கடலாடி, முதுகுளத்தூர் மற்றும் சாயல்குடி கிராமங்களுக்கு வரும் அக்டோபர் மாத இறுதிக்குள், போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்துக் குடிநீர் வழங்க வேண்டுமென ஆணையிட்டுள்ளார்கள்.

இராமநாதபுர மாவட்டத்தில் இயங்கி வரும் 62 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமே ஏற்று அனைத்துக் குடியிருப்புகளுக்கும் உடனடியாகக் குடிநீர் வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்.

மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர், வைகை ஆற்றிலிருந்து நேரடியாகக் குழாய் மூலம் இராமநாதபுரம் மற்றும் வழியோரக் கிராமங்களுக்குக் குடிநீர் கொண்டுவர சாத்தியக் கூறுகள் என்னென்ன உண்டென ஆராய்ந்து விரிவான திட்டங்கள் தயாரிக்குமாறு ஆணை வழங்கினார்.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள், சக்கரைக் கோட்டை கண்மாயைப் போதிய அளவு ஆழப்படுத்தியும், அகலப்படுத்தியும் மழை நீரைத் தேக்கி வைத்தால் கோடைக்காலங்களில் குடிநீர் வழங்க வசதியாக இருக்குமென்று தெரிவித்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

மாநகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் துறைச் செயலர் அவர்கள், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கண்மாய்கள், ஊருணிகள் மற்றும் நீர்வரத்து வடிகால் ஆகியவற்றை ஆழப்படுத்தியும், அகலப்படுத்தியும், மழைக்காலங்களில் மழை நீரைத் தேக்கி வைத்துக் கோடைக்காலங்களில் குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிக்கத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அறிவுரை வழங்கினார்.

இவ்வாணைகளை உடனடியாகச் செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக இயக்குநர் 26.8.93 அன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் முகாமிட்டு மேற்படி பணிகளை நேரடியாகப் பார்வையிட்டு, விரைந்து அவற்றைச் செயல்படுத்தி முடிக்க ஆவன செய்வதாகத் தெரிவித்தார்.

புதிய சந்தா விவரம்

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ.72
அரையாண்டுச் சந்தா ... ரூ.36

'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ.36

சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்
சென்னை-600 002.

சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கான சிறப்பு உதவித் திட்டங்கள்

தார்ப் பாய்கள் விநியோகம்.

இத்திட்டத்தின்கீழ் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்தில் (அதிகப்பட்சம் ரூ.1000/நபர்) தார்ப்பாய்கள் விநியோகிக்கப்பட உள்ளன. இம்மாவட்டத்தில் 900 எண் ஒதுக்கீடு பெறப்பட்டு விநியோகித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேம்படுத்தப்பட்ட டயர் வண்டி விநியோகம்

இத்திட்டத்தின்கீழ், சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்தில் மேம்படுத்தப்பட்ட டயர் வண்டிகள் (அதிகப்பட்சம் ரூ.7,500/நபர்) விநியோகிக்கப்பட உள்ளது. இம்மாவட்டத்திற்கு 200 எண். ஒதுக்கீடு பெறப்பட்டு விநியோகித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிறிய இயந்திர உழுவை ஒன்றுக்கு ரூ.30,000 மானியத்தில் 25 எண் சிறிய இயந்திர உழுவை வழங்கப்பட உள்ளது.

பவர் டில்லருக்கான இழுவை வண்டி ஒன்றுக்கு ரூ.10,000 மானியத்தில் 45 எண் விநியோகிக்கப்பட உள்ளது.

சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்தில் (அதிகப்பட்சமாகக் கருவி ஒன்றுக்கு ரூ.500 மானியம்) 3,000 வேளாண் கருவிகள் வழங்கப்பட உள்ளன.

பல்வேறு பயிர்களுக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் அடங்கிய கிட்டுகள், பல்வேறு பயிர்களுக்கு ரூ.200 மதிப்பிற்கு 5310 மினிகிட்டுகள் இலவசமாக வழங்கப்பட உள்ளன.

சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்தில் விசைத் தெளிப்பான்கள் 150 எண் வழங்கப்பட உள்ளது.

மேலும், ஏனைய திட்டங்களான சிறப்பு உணவுத் தானிய உற்பத்தித் திட்டங்கள் எண்ணெய்வித்துகள் உற்பத்தித் திட்டம், தேசிய பயறு வகை மேம்பாட்டுத் திட்டம், வேளாண் காடுகள் மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களும் வேளாண் பெருமக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் செயல்படுத்தப்பட உள்ளன.

மேலும், இம்மாவட்டத்திற்கு நடப்பு காரீப் பருவத்திற்குத் தேவைப்படும் விதைகள், உரங்கள் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் போன்ற இடுபொருட்கள் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தனிமையில் வாழும் பெண்கள், கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்டு நிர்கதியாக நிற்கும் பெண்கள் ஆகியோர்களுக்கு வீட்டு வசதி - மாண்புமிகு முதல்வர் ஆணை

தனிமையில் வாழும் பெண்கள், கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்டு நிர்கதியாக நிற்கும் பெண்கள் ஆகியோர்களுக்கு உறைவிடம் கிடைப்பதில் உள்ள இடர்ப்பாடுகளை நீக்குமுகமாக, அவர்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்காக, அரசு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படும் வீடுகள், அடுக்கு வீடுகள் மற்றும் வீட்டு மனைகள் ஆகியவற்றில் 5 சதவிகிதம் ஒதுக்கி, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இவ்வகை ஒதுக்கீட்டின் கீழ் வீடு மற்றும் மனை பெற விரும்பும் கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் தனிமையில் வாழும் பெண்கள், அதற்கான விண்ணப்பத்தை சம்பந்தப்பட்ட வட்டாட்சியரிடம் பெறப்பட்ட சான்றிதழுடன் இணைத்து அரசுக்கு அனுப்பவேண்டும். சம்பந்தப்பட்ட திட்டத்திற்கான ஒதுக்கீட்டுக் குலுக்கல் வாரியத்தால் நடத்தப்பட்ட பிறகே இவ்வகையான விண்ணப்பங்களை அரசுக்கு அனுப்புதல் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
★ லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

இந்த இதழில்...

மக்கள் சக்தி துணையோடு வெற்றி கொள்வோம்!
— மாண்புமிகு முதல்வர் உரை ... 2

பர்கூர், தருமபுரி அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் திறப்பு விழா ... 6

ஒப்பற்ற தலைவர் தந்தை பெரியார் — மாண்புமிகு முதல்வர் ... 9

டாக்டர் புரட்சித்தலைவி வனச்சோலைத் திட்டம் ... 11

தன்மான இயக்கத்தின் முன்னோடி சௌந்தரபாண்டியனார் — மாண்புமிகு முதல்வர் ... 13

படமும் செய்தியும் ... 14

அண்ணா என்னும் வரலாறு (கவிதை) ... 16

தந்தை பெரியார் — பேரறிஞர் அண்ணா ... 17

நூல்நயம் ... 18

சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கம் ... 19

வள்ளுவர் கூறும் பண்புடைமை ... 21

நாட்டுநலப் பணியில் நற்றொண்டு ... 23

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத் திருக்கோயில்கள் ... 24

விடுதலை வீரர் வ.உ.சி. ... 29

மதுரையில் வ.உ. சிதம்பரனார் பிறந்தநாள் விழா ... 33

மனநலம் ... 35

ஆட்டின் நலம் காப்போம் ... 39

கிண்டி தேசியப் பூங்கா - ஒரு வரலாற்றுப் பின்னணி ... 41

நெல் உற்பத்தியைப் பெருக்குவது எப்படி? ... 43

கடலூர் துறைமுகம் - ஒரு கண்ணோட்டம் ... 45

இயல் இசை நாடக மன்றம் — பாரதியார் நினைவுநாள் விழா ... 47

தன்னம்பிக்கை தேவை!

மனிதன் கீழ்மை நிலையிலிருந்து மேம்பாடடைய வேண்டுமானால், தன்னம்பிக்கை உடையவனாகவும், தனது சக்தி என்ன என்பதை உணர்ந்தவனாகவும் இருக்க வேண்டும்.

— தந்தை பெரியார்

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

ஆவணித் திங்கள் - 31

மலர்: 24 இதழ்: 6

16-9-1993

விலை ரூபாய் மூன்று

★ கலை என்பது நெறி முறை, வீரம், ஒழுக்கம், கற்பு, காதல் என்னும் பண்புகளைத் தரக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

- பேரறிஞர் அண்ணா

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

சென்னைப் பகுதிகளுக்கென்று, மேலும் 2 அனைத்து மகளிர் காவல் நிலையங்களையும், மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கென்று 2 மகளிர் காவல் நிலையங்களையும் திறந்து வைத்தேன்.

கோவையில் திறக்கப்பட்ட அனைத்து மகளிர் காவல் நிலையம், கோவை மாநகராட்சிப் பகுதிக்கு மட்டுமின்றி, கோவை மாவட்டம் முழுமைக்கும் சேவை புரியும். அதேபோல், மதுரையில் திறக்கப்பட்ட அனைத்து மகளிர் காவல் நிலையத்தை, மதுரை மாநகராட்சிக்கு மட்டுமல்லாமல், அம்மாவட்டத்திலுள்ள எல்லாப் பெண்களும் பயன்படுத்திக்கொள்ள முடியும். இன்று பிற்பகல் தருமபுரியிலும், பர்கூரிலும், 2 அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத் திறந்து வைக்க உள்ளேன்.

தருமபுரியில் இயங்கும் அனைத்து மகளிர் காவல் நிலையம், தருமபுரி, அரூர், பென்னாகரம் ஆகிய 3 தாலுக்காக்களை முழுமையாகவும், ஊத்தங்கரை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய தாலுக்காக்களின் பகுதியையும், தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும். பர்கூரில் தொடங்கப்பட உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையம், ஓசூர், தேன்கனிக்கோட்டை, பாலக்கோடு ஆகிய தாலுக்காக்களை முழுமையாகவும், கிருஷ்ணகிரி, மற்றும் ஊத்தங்கரை ஆகிய 2 தாலுக்காக்களின் பகுதியையும், தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும். அதாவது, இம்மாவட்டத்திலுள்ள 44 காவல் நிலையங்களில், 22 காவல் நிலையங்கள், தருமபுரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தின் கீழும், மீதமுள்ள 22 காவல் நிலையங்கள், பர்கூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தின் ஆளுகையிலும் வரும். இம்மாவட்டத்துப் பெண்கள், இக்காவல் நிலையங்களை, முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

பெண்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு, பெண் கல்வி மிகவும் முக்கியமானது என்பதை உணர்ந்து, பெண்களின் கல்வி வளர்ச்சி அடைய, நான் பல திட்டங்களைத் தீட்டி, நடைமுறைப்படுத்தி வருகின்றேன்.

பின்தங்கிய பகுதியான இம்மாவட்டத்தில் வசிக்கும் மகளிர், பயன்பெறும் வகையில், பர்கூரில், 60 இலட்சம் ரூபாய் செலவில், ஒரு பெண்கள் கலைக்கல்லூரி தொடங்கிச் செயல்பட, சமீபத்தில் ஆணை பிறப்பித்துள்ளேன். இம்மாவட்டத்தை பெண்களின் முன்னேற்றத்திற்கு, இந்தக் கல்லூரி, உறுதுணையாக இருக்கும் என உறுதியாக நம்புகிறேன்.

இந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெறும் பள்ளியைச் சேர்ந்தவர்கள் இந்தப் பள்ளிக்கென

ஒரு கூடைப்பந்து விளையாட்டு மைதானம் (Basket Ball Court) ஒன்று அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று இந்தப் பள்ளியிலிருந்து கோரிக்கை வந்தன. எனவே, கடந்த ஐந்தாறு நாட்களுக்குள் விரைந்து பணியாற்றி, என்னுடைய ஆணையின் பேரில் இங்கே கூடைப்பந்து மைதானம் அமைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இங்கே வருவதற்குள் இந்தக் கூடைப்பந்து விளையாட்டு மைதானம் அமைத்தாக வேண்டும் என்று ஆணையிட்டதின்பேரில் இவ்வளவு விரைவாக பணியாற்றிய அலுவலர்கள் அனைவருக்கும் எனது பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மைதானத்திற்கு இரண்டு போர்டுகள் தேவைப்படுகின்றன. இந்த (Fibre Glass) போர்டுகள் சென்னையிலிருந்து உடனடியாக இங்கே அனுப்பப்படும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன்னால், வேறொரு ஆட்சி தமிழகத்தில் இருந்த போது இதே பாலக்கோட்டிற்கு நான் சுற்றுப் பயணம் வந்தேன். அப்போது இரவு நேரம். எனக்காக ஒரு பெரிய மேடையை எங்கள் கழகத்தினர் அமைத்திருந்தார்கள். அந்தக் கூட்டம் நல்லமுறையில் நடைபெறக் கூடாது என்று அன்றைய ஆட்சியினர் அந்த மேடைக்குத் தீ வைத்துவிட்டார்கள். அந்த மேடை

முழுவதும் எரிந்து சாம்பலாகி விட்டது.

நன் இங்கே வந்து சேர்ந்தவுடன், மேடை சாம்பலாகி விட்டது என்று உடன் பிறப்புகள் தெரிவித்தார்கள். ''அம்மா என்ன செய்வது? நீங்கள் நின்று பேச மேடையில்லையே'' என்று ஊருக்கு வெளியே என்னைச் சந்தித்துக் கூறினார்கள். ''மேடை இல்லாவிட்டால் என்ன? நான் என்னுடைய பிரச்சார வேன் இருக்கிறது'' என்று கூறி நான் இந்த ஊருக்குள் வந்தேன். ஆனால், ஊர் எல்லைக்குள் நான் வந்தபோது இந்த ஊருக்கான மின்சாரத் தொடர்பை அடியோடு துண்டித்து விட்டார்கள். எங்கேயும் இருட்டாக இருந்தது, ஆனால், மக்கள் சுற்றி நின்று கொண்டிருந்தார்கள். என் வேனில், என்னைச் சுற்றி விளக்குகள் அமைக்கப்பட்டிருந்தது. அதிலிருந்துகொண்டே, வெளியிலிருந்த மக்கள் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும், அந்தக் காரிருளில் மக்களிடம் பேசினேன். அதனைத் தொடர்ந்து மக்கள் செய்த ஆரவாரத்தின் மூலம் அவர்கள் சுற்றிலும் நின்று கொண்டிருந்தார்கள் எனக் கண்டு கொண்டேன். அத்தகைய ஒரு சூழ்நிலையில் பாலக்கோட்டிற்கு வந்து சென்ற என்னை இன்று முதலமைச்சராக வந்து இத்தனை நல்ல திட்டங்களை, நலத்திட்டங்களை உங்களுக்காகத் தருகிற வாய்ப்பைத் தந்த தமிழக மக்களுக்கு எனது நன்றியை மீண்டும் மீண்டும் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

இன்று 15,000-க்கும் மேற்பட்ட இம்மாவட்ட மக்களுக்கு, அரசு

நலத்திட்ட உதவிகளை, 10 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் வழங்குவதில், மகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

உங்கள் ஒவ்வொருவருக்கும், தனிப்பட்ட முறையில், உதவிகளை நானே நேரில் வழங்க வேண்டும் என்று விரும்பினாலும், நேரமில்லாமையால், 100 பேருக்கு மட்டும், உதவிகளை நானே வழங்க உள்ளேன். மற்ற பயனாளிகள் அனைவருக்கும், மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் எனது முன்னிலையிலேயே வழங்குவார்கள்.

இந்த விழாவில் உதவிகளைப் பெறும், எனது அன்பிற்குரிய சகோதர, சகோதரிகள் அனைவரும், உழைப்பு, உண்மை, உறுதி என்ற கொள்கையை பின்பற்றி துணிவுடன் செயல்பட்டு, வாழ்க்கையில் அனைத்து வளங்களும், நலன்களும் பெற வேண்டுமென, என் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொண்டு!

என் தொண்டெல்லாம், நம் மக்கள் உலக மக்களைப் போலச் சரிசமமாக வாழ வேண்டும், அறிவிலே முன்னேற வேண்டும் என்பதற்குத்தான்.

சீர்திருத்தங்கள்

சீர்திருத்தங்கள் - மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பிக்கவும், அறிவை விசாலப்படுத்தவும், உயிர்களிடத்தில் அன்பும் இரக்கமும் காட்டவும், சமத்துவத்தையும் சுயமரியாதை உணர்ச்சியையும் அதிகப்படுத்தவுமே அமைய வேண்டும்.

பர்கூர், தருமபுரி அனைத்து மகளிர் காவல் நிலையம் திறப்பு விழா

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தர்மபுரி மாவட்டம் பர்கூர் மற்றும் தர்மபுரியில் 30.8.93 அன்று அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத் திறந்து வைத்தார். அப்போது, காவல் நிலையப் பார்வையாளர் புத்தகத்தில் (Visitors Book) அறிவுரை வழங்கிக் கையெழுத்திட்டார். அதன் விவரம் வருமாறு:

முதல் அட்டை சொல்லும் செய்தி:

பர்கூர் அனைத்து மகளிர் காவல் நிலையம்

பர்கூரில் இந்த அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் திறந்து வைத்துப்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இது பர்கூரில் முதலாவதும் தருமபுரி மாவட்டத்தில் இரண்டாவதும் ஆன காவல் நிலையம் ஆகும். மேலும் மாநிலத்தில் அனைத்துப் பகுதிகளிலும் திறக்கப்படவிருக்கும் அனைத்து மகளிர் காவல் நிலையத் தொடரில் இதுவும் ஒன்றாகும்.

தமிழ்நாட்டில் அனைத்து மகளிர் காவல் நிலையம் முதன்முதலாக 1992-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சென்னையில் திறந்து வைக்கப் பட்டு, இன்றுவரை அந்தக் காவல் நிலையம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. பெண்கள் தங்கள் சட்ட உரிமைகள் பற்றி நன்கு தெரிந்து கொள்ள இந்தக் காவல் நிலையங்கள் துணைபுரிவதோடு, தங்களின் நியாயமான குறைகள் பரிவோடு கேட்கப்பட்டு உடனடி நிவாரணம் பெற முடியும் என்ற நம்பிக்கையையும் அளித்துள்ளது.

சென்னையில் தொடங்கி வைக்கப்பட்ட முதலாம் அனைத்து மகளிர் காவல் நிலையம் அடைந்துள்ள அளப்பரிய மதிப்பும் பொது மக்களிடம், அதிலும் குறிப்பாகப் பெண்களிட

மிருந்து இது பெற்றுள்ள மிகப்பெரிய வரவேற்பும் மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இது போன்ற அனைத்து மகளிர் காவல் நிலையங்களை நிறுவ எனக்கு ஊக்கமளித்தது.

இந்த அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பணிபுரியும் ஆய்வாளர், காவலர் மற்றும் பிற அலுவலர்கள் தங்கள் பணிகளைப் பாரர்டத்தக்க வகையில் நிறைவேற்றி, பொதுமக்கள் - அதிலும் குறிப்பாகப் பெண்கள் எதிர்பார்த்த அளவுக்குச் செயலாற்றி, தமிழ்நாடு காவல் துறைக்கு மேலும் பெருமையையும் புகழையும் சேர்ப்பார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை.

தருமபுரி அனைத்து மகளிர் காவல் நிலையம்

தருமபுரியில் இந்த அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் திறந்து வைப்பதில் நான் பெரு





மகிழ்ச்சி அடைகிறேன்.

இது, தருமபுரி மாவட்டத்தில் முதலாவதும் இதே போன்று தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் திறக்கப்படவிருக்கும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் தொடர்ச்சியில் ஒன்றும் ஆகும்.

தமிழ்நாட்டில் முதல் அனைத்து மகளிர் காவல் நிலையம் சென்னையில் 1992-93-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த முதலாவது காவல் நிலையம் அன்றிலிருந்து இதுவரை தொடர்ந்து வெற்றிகரமாகச் செயல் பட்டு வருகிறது. இந்தக் காவல் நிலையம் பெண்கள் தங்கள் சட்ட உரிமைகளை நன்கு உணர்ந்துக்கொள்ள உதவுவதோடு தங்களின் நியாயமான குறைகள் பரிவோடு கேட்கப்பட்டு உடனடி நிவாரணம் பெறமுடியும் என்ற நம்பிக் கையையும் மகளிருக்கு அளித்துள்ளது.

சென்னையில் தொடங்கி வைக்கப்பட்ட முதலாம் அனைத்து மகளிர் காவல் நிலையம் அடைந்துள்ள அளப்பரிய மதிப்பும், பொது மக்களிடமிருந்து, அதுவும் குறிப்பாகப் பெண்களிட மிருந்து இந்தக் காவல் நிலையம் பெற்றுள்ள மிகப்பெரிய வரவேற்பும் இதுபோன்று அனைத்து மகளிர் காவல் நிலையகளை மாநிலம் முழுவதும் நிறுவ அறிவிப்பு வழங்க எனக்கு ஊக்கமளித் திருக்கிறது.

இந்த அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பணிபுரியும் ஆய்வாளர், அலுவலர்கள் மற்றும் பிற ஊழியர்கள் தங்கள் பணிகளில் பாராட்டத் தக்க வகையில் செயலாற்றி, பொதுமக்கள் அதிலும் குறிப்பாகப் பெண்கள் எதிர்பார்த்த அளவுக்குப் பணியில் சிறந்தோங்கி தமிழகக் காவல் துறைக்கு மேலும் பெருமையையும் புகழை யும் சேர்ப்பார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை.

அண்ணா போற்றிய பெருமக்கள்

தமிழ்த் தென்றல் திரு.வி.க.

தமிழ்நாட்டிலே நல்ல தமிழிலே மேடையில் பேசமுடியும் என்பதை முதன் முதல் பேசிக் காட்டியவர் திரு.வி.க. (திருவாளர் வி. கலியாண சுந்தரனார்).

அழகிய தமிழிலே அரசியலைப் பற்றியும் எழுத முடியும் என்பதை முதலாவதாக எழுதிக் காட்டியவர் திரு.வி.க.

அரசியலில் புயலாகவும் தமிழில் தென்றலாக வும் இருப்பவர் நம் திரு.வி.க.

நூல்களிலே நுண்ணிய உரையைத் தீட்டியவர் நம் திரு.வி.க.

எதிர்கால உலகத்துக்காகச் சிறந்த ஏடுகளைத் தயாரிப்பவர் நம் திரு.வி.க.

(தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் தலைமையில், பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரை)

ஒப்பற்ற தலைவர் தந்தை பெரியார்

-மாண்புமிகு முதல்வர்

தந்தை பெரியாரது வாழ்க்கை வரலாறு ஒரு பயன் மரம். பலரும் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டிய அனுபவச் சுரங்கம். இறக்கும்வரை சமூக மேம்பாட்டிற்காக உழைத்த ஒரு பெரிய தலைவர் நம்மிடம் உண்டென்றால் அது தந்தை பெரியார் தான்.

பெண்கள் முன்னேற்றத்தைப் பற்றிப் பேசி அதற்காக உழைத்த உலகத் தலைவர்களின் வரிசையில் தந்தை பெரியார் அவர்களுக்கு முதலிடம் என்றைக்குமே உண்டு என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மையாகும்.

நமக்கெல்லாம் மகிழ்ச்சி தருகிற மற்றொரு செய்தி, பெரியார் என்கிற சிறப்புப் பட்டம் 1938-இல் சென்னையில் நடத்தப்பட்ட தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டில்தான் அவருக்கு வழங்கப்பட்டது.

ஒரு பெரியாரைக் கண்டுபிடிப்பதில் ஆண் களைவிடப் பெண்களுக்கு எப்படிப்பட்ட தொலை நோக்கு எண்ணம் இருந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது இன்னும் மகிழ்ச்சி யாகவும், பெருமையாகவும் இருக்கிறது! அதுவும் தமிழ்நாட்டுப் பெண்களுக்குத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் இருக்கிற சாதுரியம், வேறு எந்த மாநிலப் பெண்களுக்கும் இல்லை என்றே கூற வேண்டும்.

ஒரு பெண்ணை முதலமைச்சர் ஆக்கியிருக்கிற தமிழகத்தின் பெருந்தன்மைக்கு, தொலைநோக்குப் பார்வைக்கு, அரசியல் துணிவுக்கு, தந்தை பெரியாரின் பெண்ணடிமை ஒழிப்புக் கருத்துக் களே உரமாய், ஊக்கமாய் இருந்துள்ளன என் பதை எவரும் மறுத்திட இயலாது.

தந்தை பெரியார் அவர்கள் இன்று நம் மிடையே இருந்தால், ஒரு பெண் தமிழகத்தின் முதலவராய் இருப்பதைக் கண்டு பேரானந்தம் கொண்டிருப்பார். பெருமகிழ்ச்சி அடைந்திருப் பார். ஏனெனில், தனது வாழ்நாள் இலட்சியம்

களில் மிக முக்கியமான பெண்ணுரிமை மேம் பாட்டிற்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாக இதைக் கருதியிருப்பார்.

சமுதாயச் சிந்தனைகளின் மூலம் புரட்சிக் கனல் வீசிய பெரியாரின் மென்மையான குணங் களைப் பற்றிப் படித்து, நான் நிறைய சந்தர்ப்பங் களில் மெய்சிலிர்த்துப் போயிருக்கிறேன்.

குறிப்பாக, நட்புக்குத் தமிழகத்தில் இலக்கணம் வகுத்தவர் தந்தை பெரியார்தான் என்றால் அது மிகையாகாது. "ஈ.வே.ரா. அவர்களுக்கும், எனக்கும் உள்ள அகநகும் நட்பு யார் என்ன சொன்னபோதிலும் என்றும் குறையாது' என்றார் அவரது நண்பர் மூதறிஞர் இராஜாஜி அவர்கள். இராஜாஜி அவர்கள் மறைந்தபோது, அந்த இழப்பைத் தாங்காது குலுங்கிக் குலுங்கிக் கண்ணீர்விட்டு அழுதவர் தந்தை பெரியார். இருவருக்கும் கொள்கையில் பெரிய வித்தியாசம், ஆனால் கொண்டிருந்த நட்பில் அழுத்தமான பிடிப்பு; ஆழமான பாசம்! அரசியல் கட்சியிலிருக் கிற தலைவர்கள் பின்பற்ற வேண்டிய உன்னத மான பாடம் இது. பிரான்ஸ் நாட்டுத் தத்துவ மேதை வால்டேரின் கூற்றுப்படி, 'நீ சொல்வதை நான் ஏற்காமல் போகலாம். ஆனால் அதை நீ சொல்வதற்கான உரிமையை, என் உயிர் கொடுத் தேனும் காப்பேன்'.

கருத்து வேற்றுமைகளுக்கு மதிப்பு அளிப்பது சாதாரண மனிதர்களுக்கு இயல்பாகவே வராது; சரித்திரப் புருஷர்களுக்கு மட்டும் அது சாத்தியம். அந்த வகையில் தந்தை பெரியார் அவர்களை அணுகி ஆராய்ந்தோமானால் நமக்குக் கிடைக்கிற அனுபவங்கள் ஏராளம்.

தேசிய கீதம் இசைக்கப்படுகிறபோது துள்ளாத வயதிலும் அவர் எழுந்து நிற்கிற பாங்கும், குறைந்த வயதுடையவர்களையும் 'வாங்கய்யா' என்று அவர் கூப்பிடுகிற நேயமும், தந்தை பெரியார் அவர்களுக்கு மட்டுமே கைவரப்பெற்ற கலையாகும்.

தமிழ்நாட்டின் தலைவர்கள் எல்லாம் தந்தை பெரியாரைப் பற்றிப் புகழ்வதற்குக் காரணமே அவரிடம் இருந்த நேர்மை, நியாயம், கொள்கை உறுதி, வெற்றியை ஈட்டவிடா முயற்சி ஆகிய வைகள்தான். நமது நாட்டில் தலைவராகவே தோன்றி, தலைவராகவே ஒருவர் மறைந்தார் என்றால் அவர் தந்தை பெரியார் ஒருவர்தான்!

நமது பாசத்திற்குரிய பேரறிஞர் அண்ணா அவர்கள், 'நான் கண்ட ஒரே தலைவர், நான் கொண்ட ஒரே தலைவர் தந்தை பெரியார்தான்' என்றும், 'தந்தை பெரியார் ஒரு தனி மரமல்ல; அவர் ஒரு சகாப்தம்' என்றும் தந்தை பெரியாருக் குப் புகழாரம் சூட்டினார். ஏனென்றால் தமிழர் களுக்கு வழி காட்டியதோடு மட்டுமல்லாமல், தமிழகம் வளர்வதற்கான விஞ்ஞானச் சிந்தனை களைத் தமிழ்நாட்டில் மன தைரியத்தோடு அறிமுகப்படுத்துவதற்கு அடிகோலியவர் தந்தை பெரியார்தான்.



'பெரியார்' என்று பட்டம் வழங்கிய பெண்கள் மாநாடு!

"இந்தியாவில் இதுவரையும் தோன்றிய சீர்திருத்தத் தலைவர்கள் செய்ய இயலாமற்போன வேலைகளை இன்று நமது தலைவர் ஈ.வெ.ராமசாமி அவர்கள் செய்து வருவதாலும், தென்னாட்டில் அவருக்கு மேலாகவும், சமமாகவும் நினைப்பதற்கு வேறொருவருமில்லாமையாலும், அவர் பெயரைச் சொல்லிலும், எழுத்திலும் வழங்கும்போதெல் லாம் 'பெரியார்' என்ற சிறப்புப் பெயரையே வழங்குதல் வேண்டுமென இம் மாநாடு எல்லோ ரையும் கேட்டுக் கொள்கிறது".

(13.11.1938 அன்று தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடு சென்னை ஒற்றைவாடை நாடகக் கொட்டகை யில், திருவாட்டி திருவரங்க நீலாம்பிகை அம்மையார் அவர்களின் தலைமையில் நடைபெற்றபோது நிறை வேற்றப்பட்ட தீர்மானம்).

— நன்றி: 'பெரியார் களஞ்சியம்'

டாக்டர் புரட்சித்தலைவி வனச்சோலைத் திட்டம்

கி. விசுவநாதன், இ.வ.ப.,
வனத்துறைத் தலைவர்

மனித சமுதாயத்தின் நல்வாழ்விற்கு மரங் களும் காடுகளும் மிகவும் அவசியமென்பதை நாம் அறிவோம். அன்றாடத் தேவைகளுக்கும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பலவிதமான பொருட்களை மரங்களிலிருந்து நாம் பெறு கின்றோம். இதைவிட, முக்கியமாக நாம் சுவாசிக் கும் காற்றிலுள்ள நச்சுத் தன்மையையும், தூசி களையும் அகற்றி சுத்தமான காற்றைத் தாவரங்கள் நமக்கு அளித்து சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்து கிறது.

தட்பவெப்ப நிலையைச் சீராக்கி, மண் அரிப் பைத் தடுத்து, நீரோட்டத்தைச் சமப்படுத்தி, நில நீர் வளத்தையும் காப்பதில் மரங்கள் பெரும் பங்கை வகிக்கின்றன.

உள்ளூர் மழைப் பொழிவிற்கும் பெய்யும் மழையைச் சீராக்கித் தருவதிலும் மரங்கள் செயற் கரிய செயல்கள் புரிகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக நம்முடைய உயிர் வாழ்வுக்குத் தேவை யான பிராண வாயுவைத் தந்து மரங்கள் உயர்ந்து நிற்கின்றன. ஆனால், மக்கட் தொகை பெருகி, தேவைகளும் அதிகரித்து வருவதால் மரங்கள் வெட்டப்பட்டு வனங்கள் சீர் குலைந்து, நில வளம் குறைந்து வறட்சி பெருகி அவதிப்படுகிறோம். இதனைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு வனங்களை மேம்படுத்தவும் மர வளத்தைப்

பெருக்கவும் பலவித மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் மழைக் காலத்தில் பொது மக்களுக்கு மரம் நடுவதன் அவசியத்தை வலியுறுத்துவதோடல்லாமல், அதற்கான நாற்றுக்களை வழங்கித் தேவையான தொழில் நுட்பத்தைப் பரப்புவதற்கு, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் "டாக்டர் புரட்சித்தலைவி வனச் சோலைத் திட்டம்" என்ற திட்டத்தை அறிவித்துள்ளார். இத்திட்டம் செப்டம்பர் திங்கள் ஒன்பதாம் நாளில் தொடங்கி, பேரறிஞர் அண்ணா பிறந்த தினமான செப்டம்பர் பதினைந்தாம் நாள் முடிய தமிழ்நாட்டில் உள்ள நகரங்களிலும், கிராமங்களிலும், பொது இடங்களிலும், கல்லூரி, பள்ளி ஆகிய இடங்களிலும் ஒருவார கால விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இத்தருணத்தில், இத்திட்டத்தின் கீழ் பயன் தரும் தேக்கு, புளி, புங்கம், வேம்பு உட்பட சுமார் 20 இலட்சம் மரக் கன்றுகள் வனத்துறையினரால் தமிழ்நாடு முழுவதும் நியாய விலையில் விநியோகிக்கப்படும்.

"மரப் பயிரும் பணப் பயிரே" என்ற கூற்றுக் கேற்ப மானாவாரி நிலங்களில் வருவாய் தரக் கூடிய மரக்கன்றுகளை நடுவதன் மூலம் சில ஆண்டுகளில் பன்மடங்கு இலாபம் பெறக்கூடிய வாய்ப்பு உள்ளது. எனவே வேளாண் பெருங்குடி மக்கள் இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி மரப்பயிர்களைத் தங்கள் நிலங்களில் பயிரிடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

டாக்டர் புரட்சித்தலைவி வனச் சோலைத் திட்டத்தின் கீழ் வனக் கோட்டங்களில் பணியாற்றும் ஒவ்வொரு வனச்சரக அலுவலரும் சம்பந்தப்பட்ட வனச்சரகத்தில் 5000 மரக்கன்றுகள் நடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விழா அந்தந்த வட்டாரங்களில் உள்ள சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசு உயர் அதிகாரிகள், மாவட்ட ஆட்சித்தலைவர்கள் பத்திரிகையாளர்களை அழைத்து சிறப்பாக நடைபெற உள்ளது.

பொதுமக்கள் தம்முடைய நல்வாழ்வுக்கு மட்டுமல்லாமல், வருங்காலச் சந்ததியினரின் நலத்தையும் கருத்திற் கொண்டு மரம் நட வேண்டும். பெருமளவில் எங்கெல்லாம் மரம் நட முடியுமோ அங்கெல்லாம் பல்ன் தரும் மரங்கள் நட முன் வர வேண்டும். நம்முடைய ஒவ்வொரு தேவையையும் பூர்த்தி செய்யக் கூடிய மர வகைகள் உள்ளன. விறகு, தடிமரம், கால்நடைத் தீவனம், பசுந்தாள் உரம் காகிதம், ரேயான் இழைகள் தோல் பதனிடானின் எனப் பல்வேறு பொருட்களை மரங்கள் தரவல்லன.

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் வனச்சோலைத் திட்டத்தின் கீழ், நாம் ஒவ்வொரு வரும் பெருமளவில் மரம் நடுவோம்! நிரந்தரமான வளம் பெறுவோம்!

பார்த்தோம் படித்தோம் :

'தமிழரசு' 'தமிழ் டைஜஸ்ட்' போல் வெளிவருகிறது!

'தமிழரசு' இதழ் தமிழ் டைஜஸ்ட் போல் வெளிவருகிறது. மகிழ்ச்சிக்குரியது.

—இரா. இராகவன்
ஸ்ரீரங்கம்.

★ மாணவர் பக்கம், பெரியவர்களுக்கும் பயன்படும்படி இருக்கிறது; பொதுவாகப் பக்கங்களை அதிகரிப்பது பற்றி யோசிக்கவும்.

- க. பெரியசாமி
வெங்கமேடு, கரூர்.

★ மருத்துவப் பகுதியை வினா-விடை பகுதியாக்கி, என் போன்ற வாசகர்கள் குறைபாடுகளையும், பிரபல டாக்டர்கள் மூலம் தீர்க்கும் தங்களது நன்முயற்சி பெரிதும் போற்றத்தக்கது, தொடரட்டும்.

- ஸ்ரீநிவாஸ் பிரபு சென்னை-90.

(சௌந்தரபாண்டியனார் நூற்றாண்டு விழா குறித்து இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.)

தன்மான இயக்கத்தின் முன்னோடி

சௌந்தரபாண்டியனார்

– மாண்புமிகு முதல்வர்

நாட்டின் விடுதலைக்கு வித்திட்டு, நாட்டிற்காகவும், மொழிக்காகவும், பாடுபட்ட நல்லோரை நாள் தோறும் நினைவு கூர்வது நமது கடமை. அந்த வகையில் தமிழகத்தில் சமுதாயத்தொண்டு ஆற்றி, சுயமரியாதைக்கு வித்திட்டு, தாய் மொழியைக் காத்து, நமக்கு வழி காட்டிய தலைவர்களுக்கு வீர வணக்கம் செலுத்துவது நமது பண்பாடு.

சமுதாய சீர்திருத்தங்களைத், தனது தலையாய நோக்கமாகக் கொண்டிருந்த நீதிக் கட்சியின், திராவிட இயக்கத்தின் சரித்திரத்திலும், முன்னணி வீரராகத் திகழ்ந்து, தனக்கென ஒரு நிரந்தர இடத்தைப் பெற்றவர், பெரியவர் திரு. டபிள்யூ. பி.ஏ. சௌந்திர பாண்டியனார் ஆவார்.

அச்சம் அகற்றிய அண்ணல், சுயமரியாதைச் சுடரொளி, தன்னிகரில்லாச் சிங்கம், என்றெல்லாம் புகழப்படும் பெரியவர் சௌந்திர பாண்டியனார் அவர்கள், தமிழகத்தின் வரலாற்றில் அழியாத சிறப்பிடத்தைப் பெற்றவர். சாதி வேற்றுமை ஒழியவும், தீண்டாமை அகலவும், பெண்கள் சம உரிமை பெறவும், இடைவிடாது பாடுபட்ட முற்போக்குச் சிந்தனையாளர் அவர். தந்தை பெரியார் அவர்களால், சுயமரியாதை இயக்கத்தின் அஸ்திவாரம் என்றே பாராட்டப்பட்டவர். 1929-ஆம் ஆண்டு, செங்கல்பட்டு நகரில் நடைபெற்ற, சுயமரியாதை இயக்கத்தின் முதல் மாநில மாநாட்டிற்குத் தலைமை ஏற்றவர்.

'விவேகம் துணைக்கு வராவிட்டால் வீரம் விலை போகாது' என்ற தத்துவத்திற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் 12 ஆண்டுகள் சட்டமன்ற மேலவை உறுப்பினராக பணி புரிந்தவர், பெரியவர் சௌந்தர பாண்டியனார் அவர்கள். வகுப்பு உரிமை காக்கவும், தாழ்த்தப்பட்டோர் நிலை உயரவும், அவர் ஆற்றிய ஆங்கில உரைகள் புகழ் பெற்றவை. சமுதாயக் கொடுமைகளால் அமுத்தப்பட்டு அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு, புத்தெழுச்சியைத் தந்தவர், அவர் சட்டமன்ற உறுப்பினராகவும், சுயமரியாதை இயக்கத்தின் முன்னணி வீரராகவும், மக்கள் தொண்டாற்றிய பெரியவர்.

உள்ளாட்சி நிர்வாகத்திலும் பங்கேற்று, இராமநாதபுரம் மற்றும் மதுரை ஜில்லா போர்டு தலைவராகவும், சிறப்பாகப் பணி புரிந்தவர்.

தமிழும், தமிழரும், தமிழ்நாடும் மேன்மை பெற வேண்டும் என்ற தீவிர வேட்கை கொண்ட கொள்கைக் கோமானாகத் தன் வாழ்நாள் முழுவதும் திகழ்ந்தவர். 1938-ஆம் ஆண்டு, இந்தியை எதிர்த்து தொடங்கப்பட்ட முதல் மொழிப் போரில், முன்வரிசையில் நின்ற வீரர் அவர்.

மாண்புமிகு முதல்வர் உதவி!

• சென்னை, லாயிட்ஸ் காலனியைச் சேர்ந்த செல்வி பானு என்கிற பாத்திமா, தனது இருதய அறுவைச் சிகிச்சைக்காக நிதியுதவி கேட்டிருந்தார். செல்வி பானு என்கிற பாத்திமாவின் மருத்துவச் சிகிச்சைக்காக ரூ.15,000 முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வழங்க ஆணையிட்டுள்ளார்.

• சேலம் மாவட்டம் - அரிசிபாளையத்தைச் சேர்ந்த திரு. ராஜ்குமார் என்பவர் தனக்குச் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டதைத் தொடர்ந்து மருத்துவச் செலவிற்கு உதவி கோரியிருந்தார். அவரது மனுவினைக் கனிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அவருக்கு ரூ.5,000 முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க ஆணையிட்டார்.

ঘটনার ছবি

ডিগ্রিপ্রাপ্ত প্রকৌশলীগণ (ডানদিক থেকে) মানবেন্দ্র দাস, দুলাল দাস, শ্যামল দাস, শ্রীমতী রুমা দাস, শ্রীমতী মৌসুমী দাস, শ্রীমতী মৌসুমী দাস, শ্রীমতী রুমা দাস এবং ডিগ্রিপ্রাপ্ত প্রকৌশলী মানবেন্দ্র দাস। (15.9.93)

ডিগ্রিপ্রাপ্ত প্রকৌশলী মানবেন্দ্র দাস (ডানদিক) মানবেন্দ্র দাস, দুলাল দাস, শ্রীমতী মৌসুমী দাস, শ্রীমতী রুমা দাস এবং ডিগ্রিপ্রাপ্ত প্রকৌশলী মানবেন্দ্র দাস। (15.9.93)

"বেতকুড়ি বেতাঁ" এ.ই. শ্রীমানুরাণী প্রমীলকলি মাঃ প্রমোদ দাস, বেতকলের গুলাপুত্র এবং শ্রীমতী রুমা দাস, শ্রীমতী মৌসুমী দাস, মানবেন্দ্র দাস, শ্রীমতী রুমা দাস, শ্রীমতী মৌসুমী দাস, প্রমোদ দাস, মানবেন্দ্র দাস এবং ডিগ্রিপ্রাপ্ত প্রকৌশলী মানবেন্দ্র দাস। (5.9.93)

বেতকলের কলেজারত্নেরা প্রাক্তনী বেতকোর-মোঁচাঁ প্রকীর্তিধারী প্রিন্সরাজপুরের. মানবেন্দ্র কর্মরী প্রমোদকর প্রতি বঃ. মানবেন্দ্রদাস প্রমাণকে প্রমোদকীর্তিধারী প্রতিদ্বন্দ্বি প্রীমানীর্ঝরি. কর্মরীঝিল্লক্ষ বেতকলকার প্রতিদ্বন্দ্বি মৌসুমী মুখার্জি. ডি.এ.ই., ব.ব.বে ব.বেকার. (5.9.93)



புதியதோர் உலகு செய்வோம்

ஆசிரியர்: டாக்டர் மா.பா. குருசாமி
வெளியீடு:
காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை-625 020.

பக்கம்:82 விலை:ரூ.9/-

'எல்லாரும் ஒன்று' என்ற மனநிலை மலர வேண்டும் என்கிற வேட்கை இன்று பலரிடம் பரவலாக இருக்கின்றது. அந்த வேட்கையைத் தணிக்கும் வகையிலே அண்ணல் காந்தியடிகளின் கருத்துரைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. அவரது அற்புதமான வாசகங்கள் நம் வாழ்க்கை வளமுடன் திகழ வழிகோலும் என்பதை அழகுறச் சித்திரிக்கிறது இந்நூல்.

சிறுவர்க்கு ஏற்ற சிறந்த பாடல்கள்

ஆசிரியர்: புலவர் அண்ணாமலை
வெளியீடு:
பம்மி பதிப்பகம்
3/2,வெங்கட்டரங்கம் பிள்ளை தெரு,
சென்னை-5.

பக்கம்:64 விலை:ரூ.10/-

சிறுவர்களை மகிழ்விப்பது கதைகள் மட்டுமல்ல, பாடல்களும் கூடத்தான் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் இந்நூலில் இடம் பெற்றுள்ள பாடல்கள் அமைந்துள்ளன. எல்லாப் பாடல்களுமே எளிமை, இனிமை.

இந்தியத் துறவிகள்

ஆசிரியர்: கவிஞர் கு. கான்ஊபன்
வெளியீடு:
கோமளா பதிப்பகம்
2/198, வெங்கடேசபுரம்,
வண்டலூர், சென்னை-48.

பக்கம்:88 விலை:ரூ.15/-

நாளைய தலைமுறைகளான இன்றைய குழந்தைகளுக்கான எளிமையான பாடல்கள் இத்தொகுப்பை அலங்கரிக்கின்றன. மாணவ மணிகள் படித்துப் பயன் பெறலாம்.

நெஞ்சில் நிலைத்த கவிதைகள்

ஆசிரியர்: பெ.கி. பிரபாகரன்
வெளியீடு:
எழில் பதிப்பகம்,
ஏபி 1449 முதல்பிரிவு
இரண்டாவது தெரு,
கே.கே. நகர், சென்னை-600 078.

பக்கம்:92 விலை:ரூ.10/-

குறள், அகம், புறம், கலித்தொகை, குறுந்தொகை, பட்டினப்பாலை, கம்ப ராமாயணம் முதலான கவிதைகளின் கருத்துக்களை இதமாக, பதமாக இதயங்களில் விதைக்கிறார் கவிஞர். நல்ல தொகுப்பு.

அணையா விளக்கு

ஆசிரியர்:
செங்காடு ஆ. கிருஷ்ணமூர்த்தி,
வெளியீடு:
முத்து பதிப்பகம்,
7, வில்லியம் லே-அவுட்
இரண்டாவது தெரு,
கே.கே. ரோடு, விழுப்புரம்-605 602.

பக்கம்:128 விலை:ரூ.20/-

'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்று பாடிய, இராமலிங்க வள்ளலாரின் வாழ்க்கையை, படிப்போரின் கண்முன் கொண்டுவரும் வகையிலே நாடகமாக்கியுள்ளார் ஆசிரியர். படிக்கவும் நடிக்கவும் ஏற்றது.

விபத்துக்களுக்கு முதல் உதவிச் சிகிச்சை

ஆசிரியர்: சூரியநாத்
வெளியீடு:
தமிழ்மணி பதிப்பகம்
107-ஏ, பெரியார் பாதை (மேற்கு),
சென்னை-94.

பக்கம்:112 விலை:ரூ.15/-

விபத்துக்களின்போது, உயிரைக் காப்பாற்ற முதலில் தேவைப்படுவது, முதல் உதவிச் சிகிச்சை அதை விளக்குகிறது இந்நூல். தீ, வெட்டுக்காயம், இரத்தக் கசிவு, எலும்பு முறிவு முதலான வற்றுக்கான முதல் உதவிச் சிகிச்சைகள் குறித்து இந்நூலைப் படித்துத் தெரிந்து கொள்ளலாம்.

சைவம் அசைவம் சமைத்துப்பார்

ஆசிரியர்: வசந்தி அம்மாள்
வெளியீடு:
மயிலவன் பதிப்பகம்
92, கங்கையம்மன் கோயில் தெரு,
சென்னை-26.

பக்கம்:128 விலை:ரூ.18/-

சுவர் இருந்தால்தால்தானே சித்திரம் எழுத முடியும்? அதைப்போல, உடல் நலத்துடன் இருந்தால்தான், செயலாற்ற முடியும். உடல் நலத்துடன் இருக்க உணவு மிகமிக அவசியம். அவரவர்களுக்குப் பிடித்த சைவ-அசைவ உணவு வகைகள் குறித்த ஏராளமான குறிப்புகள் உள்ளன.

தெளிவற்ற மனமும் தெளிவுற்ற மனமும்

ஆசிரியர்: மயிலைத் தொண்டன்
வெளியீடு:
தமிழ்மணி பதிப்பகம்
107-ஏ, பெரியார் பாதை (மேற்கு)
சென்னை-94.

பக்கம்:112 விலை:ரூ.15/-

'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்' என்றார் திருமூலர். எனவே, உள்ளத்தை உண்மையில் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். அதாவது தெளிவுற்ற மனமாக இருந்திட வேண்டும். அதற்கு என்ன வழி? என்பதைத் தக்க மேற்கோள்களுடன் கூறுகிறது இந்நூல். படித்துப் பயன் பெறலாம்.

ரஸ்ஸலின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்

ஆசிரியர்: சோ. சோசாலை
வெளியீடு: பாரதி நிலையம்
108, உஸ்மான் சாலை
சென்னை-17.

பக்கம்:124 விலை:ரூ.16/-

தீர்க்கதரிசி, சிந்தனையாளர் என்று உலகமே போற்றிப் புகழும் பெர்ட்ரான்ட் ரஸ்ஸலின் கருத்துரைகள் காலகாலத்துக்கும் நிற்பவை. சமுதாய வளர்ச்சிக்கு அவரது கருத்துரைகள் அடித்தளமாக அமையும் என்பதை இந்நூலைப் படித்தால் உணர்ந்து கொள்ளலாம். பயனுள்ள நூல்.

தென்பாண்டி மண்டலத்தில் நெல்லைச் சீமை மிகவும் பழமை வாய்ந்த வரலாற்றுக் கால உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற பூமியாக விளங்குகிறது.

காண்போர் கண்களை வியக்க வைக்கின்ற இயற்கை எழில்மிக்க கோடை வாழ் தலங்களும், எல்லோரா, அஜந்தாவை நினைவூட்டுகின்ற சிற்ப வேலைப்பாடுமிக்க அழகிய கற்கோவில்களும், மண்டபங்களும் நிறைந்து காணப்படுகின்றன.

ஐந்திணை நிலங்களாகக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியவை ஒருங்கமையப் பெற்ற ஒப்பு உயர்வற்ற ஒரே மாவட்டமாக இது திகழ்கிறது. இயற்கை எழில் கொஞ்சும் வானளாவிய மலைகளும், மனதைக் கவர்கின்ற தெளிந்த நீரோடைகளும், பசுமையான புல்வெளிகளும், பாலைவனத்தை நினைவூட்டுகின்ற மணல் திட்டுகளும் இயற்கை அன்னை தந்த வரப்பிரசாதங்களாகக் காட்சியளிக்கின்றன.

வனங்களிலே துள்ளித் திரிகின்ற புள்ளிமான்களும் வீர சாகசம் புரிகின்ற யானைகளும், புலிகளும், விளையாட்டு காட்டுகின்ற மந்தி இனங்களும் ஒன்றாகக் கொஞ்சிக் குலாவுகின்றன. அழகிய கடற்கரையும் இம்மாவட்டத்தில் காணப்படுவதால், இது சுற்றுலாப் பயணிகளின் சொர்க்க பூமியாக விளங்குவதில் ஐயமில்லை!

வழிபாட்டுத் தலங்கள்

இம்மாவட்டத்தில் இந்து, இஸ்லாமிய, கிறித்துவப் பேராலயங்கள் நிறைந்து காணப்படுகின்றன. நெல்லையில் அமைந்துள்ள நெல்லையப்பர் கோவிலிலுள்ள அர்ச்சுனன், பகடை ராஜா போன்ற சிற்பங்கள், உயிரோட்டமாக விளங்குகின்றன. இங்குள்ள இசைத் தூண்கள் முக்கியமானவை. கிருஷ்ணாபுரம் விஷ்ணு கோவில் ரதி-மன்மதன் சிலைகள் இன்னும் உயிரோட்டமாக நின்று மொழி பேசுகின்றன. தென் காசி காசி விஸ்வநாதர் கோவில் கல்தூண்கள் தட்டினால் இசை பாடும், கண்டாலே கவிபாடும், திருக்குறுங்குடி விஷ்ணுகோயில் சிற்பங்கள் ஆயகலை அறுபத்தி நான்கும் தத்துரூபமாகச் செதுக்கப்பட்டு இன்றும் அழியா ஓவியமாகக் காட்சி தருகின்றன. இவை இந்து அறநிலையத் துறையினரால் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அது போன்று, இஸ்லாமிய மக்களுக்கு பொட்டல்புதூர் பள்ளி, ஆத்தங்கரை பள்ளி வாசல்களும் கிறித்து மக்களுக்குக் கதிட்ரல் பேராலயமும், உவரி மாதாகோயிலும் சிறந்து விளங்குகின்றது. இம்மாவட்டத்திற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகள் இவைகளைக் காணத் தவறுவதில்லை.

இயற்கை வனப்பு

திருநெல்வேலி மாவட்டத்தின் மேற்கு எல்லையின் அரணாகத் திகழ்கின்ற பொதிகைமலை இயற்கை கொஞ்சும் மலையாக விளங்குகின்றது. இங்கு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்ற வகையில் உலகத்தில் புகழ் பெற்று விளங்குகின்ற 'நயஹாரா' நீர் வீழ்ச்சியை நினைவு கூரத்தக்க வகையில் திருக்குற்றாலம் அமைந்துள்ளது. பருவ காலங்களில் பல்வேறு அருவிகளில் குளிப்பதற்குச் சுற்றுலாப் பயணிகள் குவிந்த வண்ணம் இருக்கிறார்கள்.

குற்றால மலை அருவிகள் பாலாறாகப் பெருக்கெடுத்து தேனருவியாகப் பொழிந்து, செண்பகா தேவி யாக மலர்ந்து, பேரருவியாக பெருமையோடு வந்து, சிற்றருவியாகச் சிதறி விழுகின்ற காட்சி காண்போரைக் களிப்புறச் செய்கிறது. சுற்றுலாத் துறையினராலும், பொதுப்பணித்துறையினராலும், பல்வேறு வசதிகள் செய்யப்பெற்று பாதுகாக்கப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் அதன் வளர்ச்சித் திட்டங்கள் தீட்டப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரால் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

வனவிலங்குச் சரணாலயங்கள்

இம்மாவட்டத்தில் வன விலங்குகளைப் பாதுகாக்கின்ற வகையிலும், முண்டந்துறை வனவிலங்குச் சரணாலயமும், களக்காடு வனவிலங்குச் சரணாலயமும் வனத்துறையினரால் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவ்விரு சரணாலயங்களிலும் புள்ளிமான்களும், சிங்கவால் குரங்குகளும், யானைகளும், புலிகளும், காட்டு மிருகங்களும் நிறையவே உள்ளன. முண்டந்துறையில் புலிகள் நடமாடுவதால் அகில இந்திய அளவிலான சரணாலயமாக விரிவுபடுத்த அரசு திட்டங்களைத் தீட்டியுள்ளது.

மேலும், வெளிநாட்டிலிருந்து பருவ காலங்களில் தென்னிந்தியாவை நோக்கி வருகின்ற பறவை இனங்கள் பாளையங்கோட்டை அருகே உள்ள அரியகுளத்திலும், நாங்குநேரி அருகே உள்ள கூந்தன்குளத்திலும், சங்கமிப்பதால் அங்கு பறவைகள் புகலிடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இங்கு செங்கால்நாரை, நாரை, இரும்பு உண்ணி போன்ற வெளிநாட்டுப் பறவைகள் கோடை காலங்களில் இங்குள்ள நீர்த்தடாகங்களில் குவிந்த வண்ணம் உள்ளன. இப்பறவை இனங்களைப் பாதுகாக்கின்ற நோக்கோடு தாமிரபரணி தண்ணீர் இப்பகுதிகளுக்கு வழங்கப்படுகிறது. இப்பகுதி வாழ் மக்களும் சுற்றுலாப் பயணிகளும் இதனைக் கண்டு இன்புறுகின்றனர்.

தாமிரபரணி முகத்துவாரம்

நெல்லை மாவட்டத்தில் மேற்குப் பகுதியில் இன்னொரு இயற்கை

அண்ணா என்னும் வரலாறு

– கவிஞர் கரு நாகராசன்

இமயம் மனிதஉருப் பெற்றதோ? - அது
இனியதமிழ் ஆங்கிலத்தைக் கற்றதோ? - இங்கு
அமைந்த கொடுமைகளை அடியோடு வேரறுத்து
சமதர்மப் பயிர்வளர தமிழாறாய் நடந்துவந்து
அறுவடையைக் கண்முன்னே கண்டதோ? - அது
'அண்ணா' எனும் நாமம் கொண்டதோ?

பொங்குகடல் மனிதஉரு ஏற்றதோ? - அதன்
புலமையின்முன் அறிவுலகம் தோற்றதோ? - தமிழ்ச்
சங்கமென வலம்வந்து தத்துவங்கள் பலதந்து
சிங்கமெனத் தினம்முழங்கி தெருவெல்லாம் தமிழ்வளர்த்து
ஆட்சியையும் அன்புவழி வென்றதோ? - நம்
அகங்களிலே தெய்வமென நின்றதோ?

பொன்வானம் கால்பதித்து வந்ததோ? - இந்த
பூமிக்கு அறிவொளியைத் தந்ததோ? - இங்கு
தன்மானம் ஏதுமின்றித் தவித்தோர்க்கு உணர்வூட்டி
சன்மானம் அன்புயென்ற சரித்திரத்தை நிலைநாட்டி
புத்துலகைப் படைத்துவைத்துச் சென்றதோ? - பெரியார்
போதனைதான் வேதமிங்கு என்றதோ?

காலம் நமக்களித்த ஞானி - நாம்
கரையேறத் துணைசெய்த தோணி - இந்த
ஞாலம் தொழுதேத்தும் நல்லறிஞர் அண்ணாவின்
சீலமிகு பேர்சொன்னால் சித்தையெல்லாம் தமிழ்மணக்கும்;
வாழ்கஅவர் நாமமெனச் சொல்வோம் - அந்த
வரலாற்றுச் கவட்டின்வழி செல்வோம்.

தந்தை பெரியார்

மக்களிடம் உள்ள மூடப்பழக்கவழக்கங்கள் மாறவேண்டும் - மக்கள் பகுத்தறிவாளர்களாக மாறவேண்டும் என்பதற்காக அரும் பாடுபட்டவர் பெரியார்.

ஜப்பான் போன்ற நாடுகளில் 200 ஆண்டுகள் கழித்துத்தான் பகுத்தறிவுப் புரட்சியை உண்டாக்க முடிந்தது. ஆனால், பெரியார் 20 ஆண்டுகளிலேயே பகுத்தறிவுப் புரட்சியை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்.

இது பெரியதொரு சாதனையாகும்.

எனக்கு அவரோடு - பெரியாரோடு தொடர்பு ஏற்பட்டது 1935-ஆம் ஆண்டில்தான்.

அப்போது நான் பி.ஏ., (ஆனர்சு) தேர்வு எழுதியிருந்தேன். தேர்வு முடியாத நேரம் அது.

அப்போது கோவைக்கு அடுத்த திருப்பூரில் ஒரு வாலிபர் மாநாடு நடந்தது. அங்கேதான் பெரியாரும் நானும் முதன் முதலில் சந்தித்துக் கொண்டோம்.

அவர்மீது எனக்குப் பற்றும் பாசமும் ஏற்பட்டன. அவருடைய சீர்திருத்த கருத்துக்கள் எனக்குப் பெரிதும் பிடித்தன.

பெரியார் என்னைப் பார்த்து, "என்ன செய்கிறாய்?" என்று கேட்டார்.

"படிக்கிறேன்; பரிட்சை (தேர்வு) எழுதியிருக்கிறேன்!" என்றேன்.

"உத்தியோகம் பார்க்கப் போகிறாயா?" என்றார்.

"இல்லை! உத்தியோகம் பார்க்க விருப்பம் இல்லை; பொதுவாழ்வில் ஈடுபட விருப்பம்!" என்று பதிலளித்தேன்.

அன்று முதல் அவர் என் தலைவரானார். நான் அவருக்குச் 'சுவிகாரப் புத்திரனாக' (வளர்ப்பு வழித்தோன்றலாக) ஆகி விட்டேன்.

14 ஆண்டுகள் அவரோடு பழகினேன்.

இத்தனை ஆண்டுகளிலும்,

நான் அறிந்த தலைவர், தெரிந்த தலைவர், பார்த்த தலைவர் இவர் ஒருவர்தான்!

—பேரறிஞர் அண்ணா

பெண்ணுரிமை

• ஒவ்வொரு பெண்ணும், தானும் ஏதாவது சம்பாதிக்கும் தகுதி பெறத்தக்கபடி ஒரு தொழில் கற்றிருக்க வேண்டும். குறைந்தது தன் வயிற்றுக்குப் போதுமான அளவாவது சம்பாதிக்கத் தகுந்த திறமை இருந்தால், எந்தக் கணவனும் அடிமையாய் நடத்தமாட்டான்.

• நமது பெண்கள், தங்களைப் பிறவி அடிமை என்று நினைத்துக் கொண்டிருப்பதை மாற்றிக் கொள்ள வேண்டும்.

• பெண்களுக்குப் பகுத்தறிவுக் கல்வியும், உலக நடப்புக் கல்வியும் தாராளமாகக் கொடுத்து, மூடநம்பிக்கை, பயம் ஆகியவற்றை ஊட்டக்கூடிய கதைகளையோ, சாத்திரங்களையோ, இலக்கியங்களையோ காணவும் கேட்கவும் சிறிதும் இடமில்லாமல் செய்ய வேண்டும்.

— தந்தை பெரியார்



வனப்பு பகுதியாகத் தாமிரபரணி முகத்துவாரத்தில் 'பாபநாசம்' அமையப்பெற்றுள்ளது. இது தொல் காப்பியத்தை நினைவூட்டுகின்ற அகஸ்தியம் வாழ்ந்த இடம் ஆகும். இங்கு அகஸ்தியம் அருவி பெருமையோடு காட்சி தருகிறது.

சிவபெருமானின் திருக்கல்யாணம் அமையப்பெற்ற காட்சியும், கல்யாண தீர்த்தமும், பாணர் தீர்த்தமும் இங்கு வரலாற்று உண்மைகளை நினைவூட்டுகின்றன. இங்கு ஆண்டு தோறும் ஏராளமான உல்லாசப் பயணிகளும், பக்த கோடிகளும் வருகை தருகின்றார்கள். வனத்துறையும், சுற்றுலாத்துறையும் பொதுப் பணித்துறையும் இங்கு அக்கறை செலுத்தி இவ்விடங்களை வளர்ச்சி அடையச் செய்வதோடு பாதுகாத்தும் வருகிறார்கள்.

நீர்த்தேக்கங்களும் மாவட்டச் சுற்றுலா மையங்களும்

மேற்குமலைத் தொடர்ச்சியில் உற்பத்தியாகி, கிழக்கு நோக்கி வருகின்ற ஆறுகளின் குறுக்கே மணிமுத்தாறு அணைக்கட்டு பாபநாசம் அணைக்கட்டு, கடனாநதி அணைக்கட்டு, குண்டாறு அணைக்கட்டு போன்று நீர்த்தேக்கங்கள் நிறுவப் பெற்று இயற்கையையும் மிஞ்சுகின்ற அளவிற்குப் பூங்காக்களையும் நந்த வனங்களையும் உருவாக்கி, மாவட்டச் சுற்றுலாத் தலங்களாகக் காட்சி அளிக்கின்றன. இவைகள் பொதுப் பணித்துறையினரால் பாதுகாக்கப் பட்டு வருகின்றன. இப்பகுதிகளுக்கு இம்மாவட்ட மக்களும், சுற்றுலாப் பயணிகளும், அண்டை மாவட்டத் தினரும் கண்டு களிக்கின்றனர்.

எழில்கொஞ்சும் கடற்கரை

முக்கடலும் சங்கமம் ஆகும். குமரி முனைக்கருகாமையில், இம்மாவட்டத்தில் தெற்கு எல்லையாக உவரிக் கடற்கரை சிறந்து விளங்குகின்றது. இங்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். இம்மாவட்டத்தில் இக்கடற்கரை நீண்டு, விரிந்த மணற் பரப்பைக் கொண்டு விளங்குவதோடு, பல்வேறு பிரிவினர் வந்து செல்கின்ற அளவில் மாதாகோவிலும், இந்துக்கோவிலும் இணைந்து அமையப் பெற்றுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் இம்மாவட்டத்திலுள்ள கைவினைப் பொருட்களைக் கண்டு வியப்புறுகின்றனர். விஸ்வநாதபுரத்திலுள்ள பிரம்பு மற்றும் மூங்கில் தொழிற்கூடமும், பத்தமடைப் பாய் உற்பத்திக்கூடமும், தேன்பொத்தை மண்பாண்டத் தொழிற்கூடமும், இன்னும் கைவினை சிற்ப வேலைகளை நினைவுகூருகின்றன. இவை அரசால் ஆதரிக்கப்பட்டு வளர்க்கப் படுகின்றன.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், சுற்றுலாப் பயணிகள் கண்டு ரசிக்கத்தக்க வகையில் இயற்கை வளமும், வரலாற்றுக் கால நினைவுச் சின்னங்களும், பண்டைய கலாச்சாரங்களையும், புராணகாலக் கோயில்களையும் கொண்டு விளங்குகிறது என்பதில் ஐயமில்லை.

வள்ளுவர் கூறும் பண்புடைமை

— டாக்டர் அரங்க. இராமலிங்கம்
தமிழ்த் துறை
அஞ்சல்வழிக்கல்வி நிறுவனம்
சென்னைப் பல்கலைக்கழகம்

இலக்கிய விருந்து

அகச் செம்மையைப் பண்பு எனவும் புறச் செம்மையை நாகரிகம் எனவும் கூறலாம். மனம் பண்படப் பண்பட அகம் தூய்மையாகும். அகத் தூய்மையே புறவாழ்வில் நாகரிக ஒழுகுவாறுகளுக்கு வித்தாக அமைகிறது. எனவே, பண்புடைமை எனும் அகச் செம்மையே புறச் செம்மையாகிய நாகரிக வாழ்விற்கு அடிப்படை. இதனைக் குறிப்பாக,

''பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்'' ...(996)

எனக் குறிப்பிடுகிறார் வள்ளுவர். பண்பு உடையவர்கள் வாழ்வதினாலேயே உலகம் இயங்குகிறது. அஃது இல்லையானால் மண்ணில் புகுந்து அழிந்து போகும். நல்ல ஆடவர்கள் பண்போடு வாழ்கிற பொழுதுதான் நாடும் நாடாக இருக்கும். இதனை,

''நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே'' ...(புறம்: 187)

எனக் குறிப்பிடுகிறார் ஔவையார்.

அரம்போல் கூர்மையான அறிவு பெற்றிருந்தாலும் மக்களுக்குரிய பண்பினைப் பெறாதவர் ஓரறிவுயிராகிய மரத்தைப் போன்றவரே ஆவர்,

''அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்'' ...(997)

என்கிறார் திருவள்ளுவர். பலரும் உடம்பால் மக்கள் போல் பார்வைக்குத் தெரிகின்றனர். இவ்வாறு உடம்பின் ஒப்புமையை வைத்து மனிதரை மனிதராகக் கருதக் கூடாது; அவரவரின் பண்பை வைத்தே அவர் மனிதரா! இல்லையா என்பதை அறிய வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

''உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு'' ...(993)

பண்பு இல்லாத மனிதனை மனிதனாகத் திருவள்ளுவர் கருதவில்லை. இப்படிப்பட்ட மனிதனிடம் இருக்கும் செல்வம் எப்படி பிறருக்குப் பயன்படும்? பண்பில்லாதவனிடம் இருக்கும் செல்வம் சமுதாயத்தில் இருக்கும் பிற வளங்களையும் அழித்துவிடும்.

''பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தமை யால்திரிந் தற்று'' ...(1000)

எனக் குறிப்பாகப் புலப்படுத்துகிறார்.

இவ்வளவு சிறப்புக்கும், பெருமைக்கும் உரிய பண்பு உடைமையை நாம் எப்படிப் பெறுவது? இதற்கு ஒரு எளிய வழியைக் காட்டுகிறார் திருவள்ளுவர். யாரிடத்திலும் மிகப் பணிவோடும் எளிய தன்மையோடும் இருந்தால் எளிதாகப் பெறலாம்.

''எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு'' ...(991)

என்கிறார் வள்ளுவர். பண்புடைமை எனும் பெறற்கரிய பெருஞ்செல்வத்தைப் பெறுவதற்கு எளிமையே சிறந்த வழி என்பதை மிக எளிமையாக உணர்த்தியுள்ளார்.

''நாகரிகப் பண்பைச் சுட்ட வந்த திருவள்ளுவர்,

''பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்'' ...(580)

என்கிறார். இதனையே பழந்தமிழ் இலக்கியமான நற்றிணை

''முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்''

எனக் குறிப்பிடுகிறது. சமுதாய வாழ்விற்குச் சொல்லப் பட்ட நெறிகளாக இவை திகழ்கின்றன.

நமக்கு வேண்டியவர்கள் நஞ்சினைக் கொடுத்தாலும் அதனை அமைதியாக உண்டு அமர்வதுதான் நாகரிகம் என்பதை ஏற்றுக்கொள்ள இயலுமா? இப்படி பொருள் கூறினால் இன்றைய இளைஞர் உலகம் ஏற்றுக் கொள்ளுமா? நஞ்சை உண்ணுமாறு சான்றோரும் கூறியிருப்பார்களா? எனவே இக்கருத்திற்கு வேறு பொருள் இருக்க வேண்டும். இக் கருத்திற்கு இரண்டு வகையாகப் பொருள் கொள்ளலாம்.

‘வைக்கம் வீரர்!’

நாயக்கர் பேச்சு மழையாகும்; கன மழையாகும்; கல் மழையாகும்; மழை மூன்று மணி நேரம் - நான்கு மணி நேரம் பொழியும்.

வைக்கத்தில் (1924) தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் எழுந்தது. நாயக்கர் அங்கே சென்று சத்தியாக்கிரகஞ் செய்தார். திருவாங்கூர் அரசாங்கம் அவரைச் சிறைப்படுத்தியது. அப்பொழுது யான் ‘வைக்கம் வீரர்’ என்ற தலைப்பீந்து, பெரியாரின் தியாகத்தை வியந்து வியந்து ‘நவசக்தி’யில் எழுதுவேன். ‘வைக்கம் வீரர்’ என்பது பெரியாருக்கொரு பட்டமாகவே வழங்கலாயிற்று.

இராமசாமிப் பெரியார், ஈரோட்டில் பிறந்து வளர்ந்தவர். அவர் தம் புகழோ, தென்னாட்டிலும், வடநாட்டிலும், பிற நாடுகளிலும் மண்டிக் கிடக்கின்றது! காரணம் என்ன? தோழர் ஈ.வெ.ரா.வின் உண்மையும், வாய்மையும், மெய்மையுஞ் செறிந்த அறத்தொண்டாகும்.

ஈ.வெ.ரா.விடம் ஒருவித இயற்கைக்கூறு அமைந்துள்ளது. அதனின்றும் அவரது தொண்டு கனிந்தது அஃதென்னை? அஃது அகவுணர்வு வளர்ந்து செல்லும் பேறு. இப்பேறு பலர்க்கு வாய்ப்பதில்லை; மிகச் சிலர்க்கே வாய்க்கும்.

உரிமைவேட்கை, அஞ்சாமை முதலியன ஈ.வெ.ரா.வின் தோற்றத்திலேயே பொலிதல் வெள்ளிடை மலை.

“...தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்” இது பெரியாருக்குத்தான் பொருந்தும்.

— தமிழ்த்தென்றல் திரு.வி.க.

1. நமக்கு வேண்டியவர்கள் நஞ்சு போன்ற கொடிய செயலை நம் கண் முன்னே செய்தபோதும் (அஃது சொல்லால் சுட்டாலும் அல்லது செயலால் இழிவு படுத்தினாலும் எப்படியிருப்பினும்) அதனை அமைதியாகப் பொறுத்துக் கொண்டு இருத்தலே நாகரிகம்.

2. நஞ்சு என்ற சொல்லுக்கு மிகை, ஒவ்வாமை என்ற இரு பொருளைக் கூறுவர் வாழ்வியற் புலவர் தவத்திரு தேமொழியார் அவர்கள். நமக்கு வேண்டியவர் வீட்டில் நாம் விருந்துண்ணச் செல்கிறோம், அவர்கள் அன்பின் மிகுதியால் மிகுதியாக உணவினை உண்ணச் செய்கிறார்கள். நம்மால் முடியவில்லை என்றாலும் அன்பிற்காக உடன்பட்டு மிகையாக உண்டு துன்பப்படுகிறோம். அது போலவே நமக்குச் சில உணவுப் பொருள்கள் ஒவ்வாமையாக இருக்கும். சிலருக்குக் கத்தரிக்காய் ஒத்துக்கொள்ளாது. விருந்துக்காகச் சென்ற இடத்தில் உறவினர்கள் அன்போடு நமக்கு ஒவ்வாத உணவை அளிக்கின்ற போது நமக்கு ஒத்துக்கொள்ளாது எனத் தெரிந்திருந்தாலும் அதனை உண்டு அமைதியாக வந்து விடுகிறோம்.

இவ்வாறு மிகை, ஒவ்வாமை என்ற இரு நிலைகளில் நாகரிகம் கருதி உண்டு அமைவதையே திருக்குறளும் நற்றிணையும் குறிப்பிடுகின்றன எனக் கொள்வதில் தவறில்லை. இந்த நாகரிகப் பண்பு உள்ளச் செம்மையாகிய பண்புடையவரிடத்திலே தான் அமையும். இதனைக் கலித்தொகை,

“பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்”

எனக் குறிப்படுகிறது.

அகவாழ்விற்கும் புறவாழ்விற்கும் அடித்தளமாக அமைகின்ற பண்புடைமையை முயற்சியின்வழி பெறுவோம். நல்லோர் உழவனொருவன் நாள்தோறும் நிலத்தைக் கண்காணித்துக் களை எடுத்து, உழுது பண்படுத்துவதுபோல நாமும் நம் மனம் எனும் நிலத்தை நாள்தோறும் உள்நோக்கிக் கவனித்து, தீய எண்ணங்களாகிய களையினைக் களைந்து பயன்நோக்காது செய்யும் தொண்டினால் உழுது நல் எண்ணங்களை வித்திட்டுப் பண்படுத்துவோமாக!



நாட்டு நலப்பணியில் நற்றொண்டு!

திருநெல்வேலி-கட்டபொம்மன்-மாவட்டத்திலுள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் நாட்டு நலப்பணித் திட்டத்தை (என்.எஸ்.எஸ்.) 1992-93-ஆம் ஆண்டில் பல சிறப்பு முகாம்களை நடத்தி, பலரும் பாராட்டும் வகையில் தொண்டாற்றியுள்ளது. 1992 ஏப்ரல், மே திங்களில் மாவட்ட அளவில் கலாச்சார நிகழ்ச்சிகளின் மூலம் மக்களுக்குக் கல்வியின் அவசியத்தையும் அருமையையும், போதைப் பொருட்களின் தீமைகளையும், வரதட்சணைக் கொடுமைகளையும் விளக்கிக் கூறியது.

1992 ஆகஸ்ட் திங்களில் ‘வெள்ளையனே வெளியேறு’ தினவிழா, விடுதலை நாள் விழா, சத்பவான நாள் ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

ஆகஸ்ட், செப்டம்பர் திங்களில், இரத்த வகைக் கண்டுபிடிக்கும் முகாம்களை நடத்தி அடையாளச் சீட்டுகள் வழங்கப்பட்டன. நாடகக் கலை மூலம் சமுதாய விழிப்புணர்ச்சியும், நாட்டு ஒற்றுமையும் வலியுறுத்தப்பட்டன.

மகாகவி பாரதியார் பிறந்த நாளான செப்டம்பர் திங்கள் 11-ஆம் நாளன்று கவிதை, கட்டுரை கவரொட்டிப் போட்டிகளின் மூலம், பாரதியின் சமுதாயக் கொள்கைகள் வலியுறுத்தப்பட்டன.

தமிழகத்தின் தென் மாவட்டங்கள் 1992 அக்டோபர் நவம்பர் திங்களில் புயலால் மிகவும் பாதிக்கப்பட்டபோது, நிவாரணப் பணிகளில் என்.எஸ்.எஸ். தொண்டர்கள் தீவிரமாக ஈடுபட்டு, மக்களால் மறக்க முடியாத சேவை புரிந்தனர். என்.எஸ்.எஸ். பிரிவினர், நிதிவசூல் செய்து, பல்கலைக்கழகத் துணை-வேந்தர் மூலம் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் ரூ.50,000 வழங்கினார்.

நாற்பது இளைஞர்களைக் கொண்டதொரு இசைக்குழு அமைக்கப்பட்டு, தேசிய ஒற்றுமைக்கும், மகளிர் முன்னேற்றத்திற்கும் அரும்பாடுபட்டு வருகின்றது.

28.1.93-ஆம் நாளன்று சமுதாய நல்லிணக்க நாள் கொண்டாடப்பட்டது. அனைத்துக் கல்லூரிகளின் என்.எஸ்.எஸ். தொண்டர்கள் பெரியதொரு ஊர்வலத்தை நடத்திக் காண்பித்தனர். ஊர்வலத்தைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தவத்திரு குன்றக்குடி அடிகளாரும், பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வி. வசந்திதேவி அவர்களும், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ஆர்.வேலு அவர்களும், பங்கேற்றுச் சிறப்புரையாற்றினார்கள்.

என்.எஸ்.எஸ். தொண்டர்கள் இரத்த தான முகாம்கள் மூன்று மாவட்டங்களில் வெற்றிகரமாக நடத்திக் காட்டினர். தேசிய அளவிலான மூன்று தேசிய ஒருங்கிணைப்பு முகாம்களையும் இத் தொண்டர்கள் நடத்திக் காட்டினர்.

மாநில அளவில் இளைஞர் விழா நடத்த என்.எஸ்.எஸ்.க்கு, தமிழ்நாடு அரசு ரூ.1,30,000 ஒதுக்கியுள்ளது. ஆனைமலையில் மலையேறும் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இதற்காக மத்திய அரசு ரூ.25,000 ஒதுக்கியது.

சென்னையில் இவ்வாண்டு பிப்ரவரியில் நடைபெற்ற ‘எய்ட்ஸின் தற்போதைய நிலைமை’ பற்றிய இந்திய-இங்கிலாந்து செயலரங்கில் திட்ட ஒருங்கிணைப்பாளரும், மூன்று என்.எஸ்.எஸ். திட்ட அலுவலர்களும் கலந்துகொண்டனர்.

26.4.93 முதல் 1.5.93 முடிய திருநெல்வேலியில் என்.எஸ்.எஸ். திட்ட அலுவலர்களுக்கும், ஆர்வமுள்ள பொதுமக்களுக்கும் திரைப்படத் திறனாய்வுப் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

— டாக்டர் டி. யேசுதாஸ்
திட்ட ஒருங்கிணைப்பாளர்,
நாட்டு நலப்பணித் திட்டம்.

திருக்கோயில்கள்

அருள்மிகு நெல்லையப்பர்-அருள்தரும் காந்தியம்மாள் ஆலயம், திருநெல்வேலி நகரின் மையத்தில் சிறப்புடன் விளங்குகிறது. அழகிய பசுமையான நெல் வயல்கள் வேலி போல் நகரைச் சூழ்ந்து காட்சி தருகிறது. இத்திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் இறைவனின் திருப் பெயர் திருநெல்வேலி உடையார் (நெல்லையப்பர்) என்பதாகும். எழுந்தருளியிருக்கும் இறைவியின் திருப் பெயர் திருகாமகோட்டமுடைய நாச்சியார் (காந்திமதி) என்பதாகும்.

இக்கோவில் 850 அடி நீளமும், 756 அடி அகலமும் கொண்டது. அம்மன் கோவில், சாமி கோவில் சமமாக இரு பிரிவாக இருக்கின்றன.

தமிழகத்தில் ஒன்றாகிய தாமிர சபை இத்திருக்கோவிலில் உள்ளது. இக்கோவிலில் அமைந்திருக்கும் சோலையின் நடுவில் நூறு கால்களுடன் கூடிய வசந்த மண்டபம் உள்ளது. இளவேனில் காலமாகிய சித்திரை, வைகாசி மாதங்களில் நெல்லையப்பருக்கும், காந்திமதி அம்பாளுக்கும் வசந்த விழா சிறப்பாக நடைபெறும்.

சுவாமி சன்னதியில் பெரிய ரிஷபம் உள்ளது. இந்த ரிஷபத்திற்குத் தெற்கே கல்தூண்களில் நுட்பமான கலையழகு மிக்க பல சிற்பங்கள் உள்ளன பெரிய கொடி மரத்திற்கு மேற்குக் கோவில் முகப்பு மண்டபத்துத் தூண்களில் விளங்கும் வீரபத்திரர் முதலிய விக்கிரகங்களும் மிகவும் அருமையாகக் காட்சியளிக்கின்றன. சுவாமி கோவிலில் உள்ள பெரிய சபாபதியின் செம்பு விக்ரகம் உண்மையில் ஒருவர் ஆடுவது போன்று அழகுடன் விளங்குகிறது. இத்திருக்கோவிலின் கல்வெட்டுகளும், சாதனங்களும் வட்ட எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன.

திருவிழாக்கள்:

ஆண்டுதோறும் ஆனி மாதத்தில் ஆனிப் பெருந்திருவிழா 10 நாட்கள் நடைபெறும். ஐப்பசி மாதத்தில் திருக் கல்யாணத் திருவிழா நடைபெறும். ஆனிப் பெருந்திருவிழாவில் தேரோட்டம் மிகவும் சிறப்பாக நடைபெறும். தமிழகத்தில் உள்ள பெரிய தேர்களில் நெல்லையப்பர் திருக்கோவில் தேரும் குறிப்பிடத் தக்க தேராகும்.

கிருஷ்ணாபுரம் திருவேங்கடநாதர் திருக்கோவில்

திருநெல்வேலிக்கு கிழக்கே 12 கி.மீ. தொலைவில் மதுரை நாயக்க மன்னர்களில் ஒருவரான குமார கிருட்டிணப்ப நாயக்கன் உருவாக்கிய, திருவேங்கடநாதர் கோவில் ஒன்று திகழ்கிறது. சிற்பக்கலை நுட்பம் நிறைந்த பல சிற்பங்களை இங்கே காணலாம். இத்திருக் கோவில் பெருமாள் பாம்பணையில் கிடந்த திருக்கோலத்தில் காட்சி அளிக்கிறார்.

பக்தவத்சலர் திருக்கோயில்

சேரன்மகாதேவியில், முதலாம் ராஜராஜன் முதலாம் இராஜேந்திரன் முதல் குலோத்துங்கன் ஆகியோரின் கல்வெட்டுக்கள் காணப் படுகின்றன. இவ்வூரின் வழியாக ஓடும் பொருளை ஆற்றின் கரையில் பக்தவத்சலர் திருக்கோவில் உள்ளது. இக்கோவிலில் தைத் திங்கள் முழு நிலவு நாள், மிகச் சிறப்புக்குரிய திருநாளாகக் கொண்டாடப்படுகிறது.

திருப்புடைமருதூர் கோயில்

பொருநை ஆற்றுக் கரையோரம் எல்லாம் ஒரு காலத்தில் மருத மரங்கள் நிறைந்திருந்தன. முன்பு இவ்வூரில் இருந்த மரத்தில் புடை ஒன்று காணப்பட்டது. அதில் ஒரு சிவலிங்கம் இருந்தது. அதனால், திருப்புடைமருதூர் எனப் பெயர் பெற்றது. சிற்பக் கலைக் களஞ்சியமாக விளங்கும் அளவில் இக் கோயிலின் சிற்பக் கோபுரம் அமைந்துள்ளது. இக்கோவிலின் அம்பிகையின் பெயர் கோமதி அம்பாள். இங்கு, தைப்பூசத் திருநாள் மிகச் சிறப்பு வாய்ந்த திருநாளாகக் கொண்டாடப்படுகிறது.

செப்பறைத் திருக்கோயில்

செம்பினால் ஆகிய அறை என்னும் பொருளைக் கொண்டு, திருநெல்வேலிக்கு கிழக்கே பொருநைக்கரையில் செப்பறை என்னும் திருக்கோவில் உள்ளது. செப்பறையில் திருவாதிரைத் திருநாள் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகத் திகழ்கிறது.

முக்கூடல் அழகர்கோயில்

குற்றாலத்தில் தோன்றும் சிற்றாறு, கயத்தாறு என்னும் உப்போடையோடு இணைந்த பொருநை ஆற்றுடன் சேரும் இடம் முக்கூடல் ஆகும். இதனைச் சீவலப்பேரி முக்கூடல் எனவும் அழைக்கலாம். சீவலன் என்ற பாண்டிய மன்னின் பெயரால் இவ்வூர் வழங்கப்படுகிறது. இவ்வூரில் முக்கூடல் அழகர் கோவில் உள்ளது. தமிழ் மூவேந்தர்களின் கல்வெட்டுகளும் இங்கு உள்ளன. நயினார் புலவர் இயற்றிய முக்கூடல் 'பள்ளு' இவ்வூரை அடிப்படையாகக் கொண்டவை. வைணவர்களுக்கு இது ஒரு சிறந்த தலமாகக் காட்சியளிக்கிறது. தேசியக் கவிஞர் சுப்பிரமணியப் பாரதியாரின் பாட்டனார் இவ்வூரில் வாழ்ந்தவர். மாட்டுச் சந்தை இவ்வூரில் சிறப்புப் பெற்றது.

வள்ளியூர் முருகன்கோவில்

வள்ளியூரில் முருகன் எழுந்தருளி உள்ளான். வள்ளி பிறந்து வளர்ந்ததும், முருகனைத் திருமணம் புரிந்ததும் இந்த ஊரில்தான் என்று கூறப்படுகிறது. எனவே, இவ்வூர் தொன்றுதொட்டு வள்ளியூர் அமிர்து.



சங்கரன் கோவில் திருக் கோயிலின் தோற்றம்

நெல்லையப்பர் திருக்கோவில்

இங்குள்ள கோவில் பழங்காலத்துக் குகைக் கோவில் வகையைச் சார்ந்தது.' இக்குகையில் மூவேந்தர் காலத்து கல்வெட்டுகள் உள்ளன.

நாகன்நாதர் திருக்கோயில்

நாங்குநேரியில் வடபுறம் இருக்கும் பெரியகுளம் நாகன் என்பவனால் வெட்டப்பட்டது. அதற்கு நாகன் ஏரி எனப் பெயர் வந்தது. இதற்குச் சான்றாக இவ்வூர் கோவிலுள்ள சிவனின் திருப்பெயர் நாகன் நாதர் என விளங்குகிறது. இது நாகனால் வழிபடப் பெற்ற மூர்த்தியாம். நாகன் ஏரி என்ற காலத் தால் நான்குநேரி என அழைக்கப்படுகிறது. இவ்வூரில் பங்குனி உத்திரத் திருநாள் அன்று தங்கத் தேர் ஓடும்.

திருக்குறுங்குடி நம்பிராயர்கோயில்

இந்த ஊர், நம்பி ஆற்றங்கரையில் உள்ளது. இவ்வாற்றங்கரையில் அழகிய நம்பிராயர் கோவில் உள்ளது. இத்திருக்கோவில் பழம்பெரும் சிற்பங்களைக் கொண்டு இருப்பதோடு, சிற்பக் கோபுரத்தோடும் விளங்குகிறது.

தென்காசி காசி விசுவநாதர் திருக்கோயில்

குற்றாலம் மலையில் தோன்றி ஓடும் சிற்றாற்றின் கரையில் உள்ளது தென்காசி. இவ்வூரின் நடுவில் காசி விசுவநாதர் திருக்கோவில் உள்ளது. சிறப்பு வாய்ந்த சிற்ப நுணுக்கங்கள் பொருந்திய கோபுரங்களும், திருக்கோவிலின் உள்ளே பல சிற்பங்களும் அமைந்து இவ்வூர் சிறப்புறக் காட்சியளிக்கிறது.

திருமலைக்கோயில்

தென்காசிக்கு வடமேற்கே உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாகத் திருமலை விளங்குகிறது. இங்குக் குமரன் குடியிருக்கும் குன்று உள்ளது. இதன் அடிவாரத்தில் பசுமையான சோலைகள் சூழ்ந்த பைம்பொழில் என்ற ஊர் உள்ளது. இந்தத் திருமலைக் கோவிலில் விசாகத் திருநாளும், பங்குனி உத்திரமும் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது.

சங்கரநயினார் திருக்கோயில்

திருநெல்வேலியிலிருந்து 53 கி.மீ. தூரத்தில் இவ்வூர் அமைந்து உள்ளது. இம் மாவட்டத்தில் உள்ள பெரிய கோவில்கள் உள்ள ஊர்களில், சங்கரன்கோவிலும் ஒன்றாகும். சங்கரநயினார் திருக்கோவிலுக்கு 9 தட்டுக்களுடைய கோபுரம் உள்ளது. இத்திருக்கோவிலில் 3 கருவறைகள் உள்ளன. ஒன்று சங்கரலிங்கம் கருவறை, இரண்டாவது சங்கரநயினார் கருவறை, மூன்றாவது கோமதி அம்பாள் கருவறை. புற்றிலிருந்து சங்கரலிங்கர் தோன்றியதால் வன்மீகநாதர் என்ற பெயர் இப்பெருமானுக்கு உண்டு. கோமதி அம்மை திருவுருவம், பார்ப்பவர் உள்ளத்தை ஈர்க்கக்கூடியது. தங்கப் பாவாடை அணிந்திருக்கும் காட்சி, உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் தனிப் பெருங்காட்சி. சித்திரைத் விழாவில் இவ்வூரில் தேர் ஓடும். சங்கரநயினார் தேர் மிகப் பெரிய தேர். பல புராணங்களைக் கொண்டது இவ்வூர்.

பாபநாச ஈசுவரர் திருக்கோயில்

பொதிகை மலையில் தோன்றும் பொருநை ஆறு மலை அருவிகளில் 24 கி.மீ. அளவில் ஓடி முதன் முதலாகச் சமநிலைப் பகுதிக்கு வருகிற இடம் பாபநாசம் என்று அழைக்கப்படுகிறது.

மலை மீது பழைய பாபநாசம் என்று ஒரு இடம் உள்ளது. அந்த இடத்தில் அகத்திய மாமுனிவரால் வழிபடப்பட்ட முருகக் கடவுளுக்கும், வழிபட்ட இம்முனிவருக்கும் திருக்கோவில்கள் உள்ளன. இப் பொதிகை மலையில் அகத்தியருக்கு இறைவன் கயிலைத் திருமணக் காட்சியைக் காட்டியதால் இக் கோவிலுக்கு மேலே கலியாணத் தீர்த்தம், பைரவர் தீர்த்தம் என்ற அருவிகள் உள்ளன.

நூற்றாண்டுகளாகச் சிற்றாறு விளங்கும் பாபநாச ஈசுவரர் திருக்கோவில் உள்ளது. இஃது அகத்தியர் வழிபட்ட சிறப்பினை உடையது. இத்திருக்கோவிலிலுள்ள இறைவனின் பெயர் முக்கால லிங்கர். இறைவி பெயர் உலகம்மை. திருக்கோவிலின் முன்புறம் பொருநை ஆறு ஓடுகிறது. பொருநை ஆற்றுப் புண்ணியத் தலத்துள் இது ஒன்றாகும்.

குற்றாலம்

தென்றல் காற்றையும் தென்பொதிகைச் சாரலையும் ஒருங்கே பெற்ற திருக்குற்றாலம் இம்மாவட்டத்திலிருந்து தென்காசிக்குத் தென்மேற்கே 5 கி.மீ. தூரத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடியில் உள்ளது.

பாண்டிய நாட்டிலுள்ள சிவத் தலங்கள் பதிநான்கிலும் தொன்மையும் கீர்த்தியும் வாய்ந்ததாகும். திருக்குற்றாலம்கடல் மட்டத்திற்கு மேல் 550 அடிக்கு மேல் உள்ளது. குற்றால மலை. உச்சியில் 3 சிகரங்கள் இருப்பதால் திருகூடமலை அல்லது திரிகூடசலம் என்று அழைக்கப்படுகிறது. திரிகூட மலை அடிவாரத்தில் இறைவன் இருப்பதால் திரிகூட நாதன் என அழைக்கப்படுகிறார். இத்திருக்கோவிலைச் சேர்ந்த சித்திரச்சபை இறைவன் திருநடனமாடும் ஐந்து சபைகளில் ஒன்று.

அகத்தியர்கோயில்

வடமொழி புலமையும், தென்மொழிப் புலமையும் முழுவதும் உணர்ந்த சிவஞான முனிவர் தோன்றிய தலம் விக்கிரமசிங்கபுரம் ஆகும். இவ்வூரின் கிழக்கே 8 கி.மீ. தூரமுள்ள நகரமே அம்பாசமுத்திரம் ஆகும். இவ்வூரில் பல கோயில்கள் உள்ளன. அவற்றுள் பொதிகை மலை அகத்தியருக்கும் இங்கே ஒரு கோவில் உள்ளது. அம்பாசமுத்திரத்தின் வடக்கே பிரம்மதேசம், மன்னார்கோவில் ஆகிய இரண்டு பழைய ஊர்கள் உள்ளன. சோழர்கள் பாண்டிய நாட்டை ஆண்டபோது இவ்வூர்களில் உருவாக்கிய திருக்கோவில்கள் சோழர் காலக் கலை வண்ண உருவச் சிலைகள் இன்றும் காணப்படுகின்றன.

திருக்குறுங்குடி அழகிய நம்பி திருக்கோயில்

தென்பாண்டி நாட்டில் அமைந்துள்ள 18 வைணவத் தலங்களில் ஒன்றாகச் சிறந்து விளங்குகின்றது. இக்கோயில் நெல்லை-கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்து இருக்கின்ற நாங்குனேரி என்னும் இடத்திலிருந்து சுமார் 12 கி.மீ. தூரம் மேற்கு நோக்கிச் செல்ல வேண்டும்.

இக்கோயில் மிகப் பெரிய அளவிலான மதில் சுவர்களோடு அமையப் பெற்றுள்ளது. இக்கோயிலில் அழகிய கற்சிற்பங்களும், கற்தூண்களும், சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய அழகு ஓவியங்களும் காட்சி அளிக்கின்றன.

இந்தத் தலத்தினுடைய பெருமானுக்கு 'அழகியநம்பி' என்று பெயர். நம்மாழ்வார், திருமொழி இசையாழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய நான்கு ஆழ்வார்களால் இதன் புகழ் பாடப் பெற்றுள்ளது. மேலும், இத்தலத்து 'நம்பி' தான் நம்மாழ்வாராக அவதரித்தார் என்று வைணவ வரலாற்று நூல்கள் கூறுகின்றன. திருமங்கையாழ்வார் முக்தியடைந்த தலமும் இதுவே ஆகும்.

முக்கியமாக இந்தத் தலத்தில் 'ஸ்கைதீகம்' என்னும் புராண நிகழ்ச்சிகள் நடந்துள்ளதாகப் புராணக்கால நிகழ்ச்சிகள் 'கூறுகின்றன. வைணவ சமய ஆச்சார்யரான ஸ்ரீராமாநுஜர் சுமார் 900 ஆண்டுகளுக்கு முன்பு இவ்வூருக்கு வருகை செய்து, நம்பியைத் தொழுது, ஒரு மடத்தை நிறுவி இருந்தார். இந்த மடமே இன்று 'ராமாநுஜ ஜீயர்' மடமாக அமைந்து அங்கு நாள் தொறும் சன்னியாசிகளால் பணி செய்யப்பட்டு வருகின்றது.

இக்கோவிலில் பாண்டியர் காலத்துக் கல்வெட்டுக்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. 'கோமாறன் சடையன்' நம்பிக்குப் பல நிபந்தனைகள் விடப்பட்டதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இன்றைக்கும் சுமார் 72 கல்வெட்டுக்கள் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டெடுக்கப்பட்டு ஆராயப்பட்டு வருகின்றன.

மேலும், நாயக்க மன்னர்கள், கேரள அரசன் உதயமார்த்தாண்ட வர்மா போன்றவர்களும் இப்பகுதியில் ஆட்சி செய்த வரலாற்றுக் கல்வெட்டு உண்டு. கேரள அரசன் ஆதித்த வர்மன் 1468-ஆம் ஆண்டு இந்த ஆலயத்திற்கு வெண்கலத்தால் ஆன ஆலயமணி வழங்கியதாக வரலாறு கூறுகிறது. விஜய நகர மன்னர்களால் ராஜகோபுரம் அமைக்கும் பொருட்டு அடித்தளம் போடப்பட்ட நிலைமை இன்றைக்கும் அப்படியே அமைந்துள்ளது.

தமிழகத்தின் பண்பாட்டு மையங்களான ஆலயங்களின் புனிதத்தன்மை காக்கப்பட வேண்டும்; மரபுகள் கெடாத வகையில் திருக்கோயில்களின் நிர்வாகங்கள் சரியான முறையில் அமைத்துச் செயல்பட வேண்டும். பல்லாயிரக்கணக்கில், பராமரிப்பு இன்றி, பாதிக்கப் பட்டுள்ள புராதனக் கோயில்கள் சிறப்பான முறையில் பராமரிக்கப் பட வேண்டும்; அவற்றின் அன்றாடத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும், என்ற எங்களுடைய எண்ணம், நாங்கள் அமைக்க இருக்கின்ற ஆலய நிர்வாக வாரியத்தின் மூலம் நிறைவேற்றப்படும் என்பதில் நம்பிக்கை கொண்டு உள்ளோம்.

திருக்கோயில்களால் 5 கல்லூரிகளும், 10 மேல்நிலைப் பள்ளிகளும், 9 உயர்நிலைப் பள்ளிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. மற்றும் வேதபாடசாலை, தேவாரப் பாடசாலை, தவில் நாதஸ்வரப் பள்ளி, காது கேளாதோர் பள்ளி, சித்த மருத்துவமனைகள், முதியோர் இல்லங்கள், அன்பு இல்லங்கள் ஆகியவை பராமரிக்கப்பட்டு வருகின்றன.

அரசு சார்ந்த மற்றும் அரசு சார்பற்ற நடவடிக்கைகள் மூலம் தமிழ்நாட்டில் கலைப் பொக்கிஷமாகத் திகழும் திருக்கோயில்களைப் பழுதடையாமல் பாதுகாக்கவும், கோயில்களின் கலாச்சாரத்தை, தொன்மையைக் காலவெள்ளம் அழித்துவிடாமல் அரவணைக்கவும் இந்த அரசு தொடர்ந்து பாடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வ.உ. சிதம்பரனார்

உண்மையாகவே நாட்டுக்கு விடுதலையும், மக்களுக்கு நல் வாழ்க்கையும் ஏற்பட வேண்டும் என்ற பொதுநல நோக்குடன் - பேரையும் புகழையும் விரும்பாமல் - ஆடம்பரம் அற்ற வாழ்க்கையை நடத்தி நாட்டுப் பணியாற்றியவர் வ.உ.சி.!

கிள்ளுக்கீரைகளாக மதிப்பதையும், அவற்றைத் தாங்கி அடிமைப்பட்டுக் கிடக்கும் நம்மவர்களின் அறியாமையையும் அதற்கான காரணங்களையும் கண்ட சிதம்பரனார் நம்மில் மண்டிக் கிடக்கும் பேதங்களும், ஆண்டாண்டுக் காலமாக நம்மை மயக்கிய மூடப்பழக்க வழக்கங்களும் ஒழியின் நம்மவர்க்கு மேன்மை என்றறிந்து இவைகளைக் களைவதில் தம்மை இணைத்துக் கொண்டார்.

நம்மிடையே உள்ள சாதிமத பேதங்களை உணர்ந்த சிதம்பரனார், தாழ்த்தப்பட்டவர் என்ற பொய்வாதத்தை உடைக்க, தாமே அரிசனக் குழந்தையைத் தத்தெடுத்து வளர்த்தார். தம்முடைய குழந்தைகளில் ஒருவனாக மேன்மையுற வளர்த்தார். மேலும், தம்முடன் நட்பு பாராட்டிய சென்னையைச் சார்ந்த சுவாமி சகஜானந்தர் என்ற அரிசனப் பெரியாரை அழைத்துச் சென்று தம்முடன் வைத்துக்கொண்டு குறள் கற்பித்து, சைவ சித்தாந்தமும் போதித்தார். ''நீதி வழுவாத நெறிமுறையில் இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்'' என்ற வாக்கினைத் தனது வாழ்நாளில் சிறப்பாகக் கடைப்பிடித்த செம்மல் சிதம்பரனார் அவர்கள்.

நமது சமுதாயம் மேன்மையுற வேண்டுமெனில் அன்னியர் ஆதிக்கம் அழிய வேண்டும் என்று தெளிந்த சிதம்பரனார், தேசீயத்தின்பால் தனது எண்ணத்தைச் செலுத்தினார். நாட்டில் அன்னியராட்சிக்கு எதிராக நடைபெறும் போரில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். இளமை முதலே இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டு, தனது தமிழறிவைக் கூர்மையாக்கிக் கொண்ட சிதம்பரனார் மக்களிடம் சுதந்திர வேட்கையை ஊட்டினார். சுதந்திரப் போராட்டத்தை அவர் ஒரு அரசியல் இயக்கமாகக் கருதவில்லை. அதனைப் புனித வேள்வியாகக் கருதினார். தெய்வபக்தி நிறைந்தவராதலால் அன்னை பூமியையே ஒரு தெய்வமாகக் கருதி, தேசியத்தை ஒரு சமயமாகவும், தேசியப்பற்றை சமயக் கோட்பாடாகவும் கருதினார். இயற்கையிலேயே அஞ்சா நெஞ்சமும், உண்மை ஒளியும், ஆழ்ந்த தமிழறிவும், உறுதியான கோட்பாடும் கொண்ட சிதம்பரனாரின் பேச்சு வீர முழக்கமாக, சத்தியத்தின் ஒலியாக இருந்தது. கேட்பவரைத் தன் வயப்படுத்தும் ஆற்றல் மிக்கதாக விளங்கியது. ஒத்த மனதுடையவர்கள் உண்மை நண்பர்கள் என்ற வாக்குக்கிணங்க சுதந்திரப் போராட்டத்தில் சூறாவளியாய்த் திகழ்ந்த சுப்பிரமணிய சிவாவும், 'கனல்மிகு கவிதையின் களமாக விளங்கிய பாரதியும் சிதம்பரனாரின் இரு கண்களாக விளங்கினார்கள்.

ஒரே மேடையில், சிதம்பரனார், சுப்பிரமணிய சிவாவின் உரிமைக் குரல்கள் முழங்கும் போது, சிவாவின் பேச்சில் நெருப்புப் பொறி பறக்கும்; சிதம்பரனார் பேச்சு சூறைக் காற்றுப் போல் சுழற்றியடிக்கும். ஏற்கெனவே சுதந்திர வேட்கை எனும் தீ எரிந்து கொண்டிருக்கும்போது, காற்றும் சேர்ந்தால் கேட்கவும் வேண்டுமா? விடுதலை வெறி மக்களிடையே தூண்டி எழுந்தது நாட்டுப்பற்று கொழுந்துவிட்டு எரியலாயிற்று. சிதம்பரனாரின் பேச்சு பாரதியின் கவியாயிற்று; மக்கள் அனற் பிழம்பாயினர்; வெள்ளையரின் ஆதிக்கத்தைச் சுட்டது. வெள்ளையன் நடுங்கினார். சிதம்பரனார் கூட்டத் தடை விதிக்க எண்ணினான். வழக்கறிஞரான சிதம்பரனார் வெள்ளையனின் வஞ்சக மண்டபங்களிலும், அறைகளிலும் அரங்கேற்றினார். மேலும், பாதிக்கப்பட்டவர்களைப் பதறிவந்து அணைக்கும் சிதம்பரனார், தொழிலாளர்களின் தோழராகவும் விளங்கினார்.

தொழிலாளர்களை வெள்ளை முதலாளிகள் வயிற்றில் அடிப்பதைக் கண்டு, தொழிலாளர்களை ஓரணியில் நிறுத்தி அவரது கோரிக்கைகளுக்காகப் போராடினார். தூத்துக்குடி கோரல் மில்லில் வேலை நிறுத்தம் ஏற்பட்ட போது, வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்ட தொழிலாளிகளுக்கு மாற்று வேலை கிடைக்கும்படி செய்து, அவர்தம் குடும்பங்களை அவல நிலைக்கு ஆட்படாமல் காப்பாற்றினார். மேலும் அவர்களது கோரிக்கையின் நியாயத்தை முதலாளிகளிடம், தனிப்பெரும் தலைவராக நின்று வாதாடி வெற்றியும் பெற்றார். இவர்தம் பேச்சில் உள்ள நியாயத்தை நிராகரிக்க முடியாத முதலாளிகள் ஆங்கிலேய அரசின் உதவியினை நாடினார்கள். ஏற்கெனவே, சிதம்பரனாரின் சுதந்திர முழக்கத்தால் மக்களிடையே ஏற்பட்டுள்ள கொதிப்பினால் பாதிக்கப்பட்ட வெள்ளையர் ஆட்சி சிதம்பரனாரின் தொழிலாளர் அன்பு கண்டு கோபத்தால் குமுறினர். ''தேச ஆட்சியின் மீட்சிக்கான முதல்வழி, வியாபாரம் செய்ய வந்த வெள்ளையர்களை விரட்டி அடிக்க வேண்டும் என்பதுதான். வெள்ளையர்களை விரட்டுவதென்றால் நம்மவர்க்குக் கடல் ஆதிக்கம் வேண்டும். ஆங்கிலேயர் நம் அரசைகப் பறித்தது பொருள் பறிக்க வேயாம். ஆகவே, பொருள் பறிக்கும் வாணிபக் கப்பலுக்கு வேட்டு வைத்தாலொழிய அவ்வாங்கிலேயர் இந்தியாவை விட்டு வெளியேறார்'' என்று 1906-இல் தம்முடைய சொத்துக்களையெல்லாம் விற்று, கப்பல் ஓட்டி தம்முடைய பொருளெல்லாம் இழந்தாலும், மனம் தளராது போராடியவர் சிதம்பரனார். இச்செயல் ஆங்கிலேயர்களை மேலும் ஆத்திரமூட்டியது. இப்படிப் பல்வேறு வழிகளில் அன்னிய ஆதிக்கத்தை இந்திய மண்ணிலிருந்து விரட்ட சிதம்பரனார் செய்த செயல்களால் சினத்தின் எல்லையை அடைந்த அன்னியர் ஆட்சி, 1908-ஆம் ஆண்டு விபின்சந்திரபாலரின் விடுதலை விழாவை தடையை மீறி நடத்தியதற்காக, சுப்பிரமணிய சிவாவுடன் கைது செய்து நாற்பது ஆண்டுகள் சிறையிலடைத்தது. வெள்ளை ஆட்சியின் தீர்ப்பு வெள்ளையரையே வெகுளச் செய்தது. இங்கிலாந்தில் இந்திய மந்திரியாக இருந்த மார்லி பிரபு இத்தண்டனை நியாயமற்றது என்று உரைத்த பின்னர் சென்னை உயர்நீதி மன்றம் சிதம்பரனாரின் சிறைத் தண்டனையைப் பத்து ஆண்டுகளாகக் குறைத்தது. பிறகு இலண்டன் பிரிவு கவுன்சில் முறையீடு மூலமாக அது ஆறு ஆண்டுகள் குறைக்கப்பட்டது.

சிதம்பரனார் சிறைக்குச் செல்கையில் வயது முப்பத்தைந்து. சிறையிலே சிதம்பரனார் பட்ட கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல. கோவைச் சிறையிலே கல்லுடைக்கவைத்து, செக்கிழுக்க வைத்து கொடுமைப்படுத்தினார்கள். இவ்வளவிற்கும் அஞ்சாத நெஞ்சம் கொண்டு சக கைதிகளின் பிரிவையும் பாசத்தையும் பெற்ற பெரியார் சிதம்பரனார். சிதம்பரனார் கைது செய்யப்பட்டபோது தமிழகமே எரி நெருப்பாகி பின் அணைந்தது. ஆம்! செக்கிழுத்தசெம்மல் 1912-இல் சிறையிலிருந்து வெளிவந்தபோது அவரை எதிர்கொள்ள எவருமில்லை. வறுமையில் வாடி, வெள்ளையர்களால் வழக்கறிஞர் தொழிலையும் செய்யவிடாமல் தடைபடுத்தப்பட்டு துன்பம் மிக உழன்ற வேளையிலும், சிதம்பரனார் மனம் தளராமல் சென்னையில் அரிசி, நெய் வாணிபம் செய்து வாழ்ந்தார்.

தான் மூட்டிய சுதந்திரக் கனல் அணைந்தும், தன்னாட்சியின் சின்னமாகத் தான் நிறுவிய கப்பல் கம்பெனி மூடப்பட்டும் கிடந்த நிலை கண்டு, எதற்கும் கலங்காத இரும்பு இதயம் படைத்த சிதம்பரனார் கண்ணீர் வடித்தார். வாழ்க்கையையே போர்க்களமாகக் கண்ட சிதம்பரனாரர் அரசியல் சூழ் நிலையைக் கண்டு தம்மை இலக்கியப் பணியில் ஈடுபடுத்திக் கொண்டார். சுதந்திர இயக்கத்தில் திலகரின் தலைமை யேற்று, தனது தீவிர கொள்கைகளாலும், செயல்களாலும் பீடுநடைபோட்ட சிதம்பரனார் சிறையிலிருந்து வெளிவந்த பிறகு சுதந்திர இயக்கத்தில் காந்தி அடிகளின் தலைமையில் செயல்படும் ஊக்கத்தை இழந்தார். அரவிந்தர், திலகர் இவர்களோடு புரட்சி, தேவையானால் வன்முறைப் புரட்சி என்ற தீவிர நெறிகளில் செயற்பட்ட வ.உ. சிதம்பரனார், காந்திஜி கொள்கையுடன் பெரிதும் மாறுபட்டார்.

1920-ஆம் ஆண்டு கலகத்தா காங்கிரசிலும் தம்முடைய கொள்கைக்காகப் போராடித் தோற்றார். 1927-ஆம் ஆண்டு சேலம் மாநாட்டிலும் தம் கவலையை வெளியிட்டார்.

தம்முடைய செல்வாக்கு, தனித் தலைமை, தியாகம் இவற்றை முதலீடாகக் கொண்டு புதுக்கட்சித் தொடங்கி, உட்பூசல்களை வளர்க்க விரும்பவில்லை. விடுதலை என்ற முடிவு நோக்கிய பயணத்தில் பாதைகள் மாறினாலும் பயன் ஒன்றே எனக்கருதி குருட்டுச் செருக்கு, தற்பெருமை, தன்னலம் இவற்றிற்கு இடம் தராமல், புதிய சக்திக்குத் தலை வணங்கினார், தனி மனிதனைவிட நாடே பெரிது என்ற உண்மையை உணர்ந்த சிதம்பரனார்.

மகாபாரதத்தின் முடிவில், காண்டீபத்தைத் துறந்து இமயத்தை நோக்கி நடந்த அருச்சுனனைப் போல தமது வீரம் பெரும் அரசியல் தலைமையைத் தாமே துறந்து மொழிப் பணியிலும், சமய வாழ்விலும் ஆழ்ந்தார். இதுவே வ.உ. சிதம்பரனார் அவர்களுடைய தியாகத்திற்கெல்லாம் மணிமுடியாக அமைந்தது.

செந்தமிழ்ச் செல்வன்!

கப்பலை யோட்டிக் கடுங்காவல் தண்டனையில்
உப்பிலாக் கூழுண் டுடல்மெலிந்தோன்-ஒப்பிலாச்
செந்தமிழ்ச் செல்வன் சிதம்பரனை அன்போடு
சிந்தனைசெய் நெஞ்சே தினம்.

வஞ்சிலா வான மதியின் ஒளி போல
விஞ்சிநீ டூழி விளங்குகவே-வன்சிறையில்
செக்கிழுத்த வீரன் சிதம்பரன் மெய்புகழ்தான்
மக்களிடை ஓங்கி வளர்ந்து.

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

பாரதியார்

'மக்கள் கவிஞர்' ஆக மாறுவது எளிதான செயல் இல்லை. மிகவும் கடினமான இந்தச் சாதனையில் தான் முயன்று வெற்றி பெற்றிருக்கிறார் சி. சுப்பிரமணிய பாரதி.

பாரதியார் - ஏரோட்டும் சாதாரண உழவனுக்குப் பாட்டுப் பாடினார். தொட்டில் ஆடும் தாய்மார்களுக்கு - விளையாட்டு வெளிகளிலே ஓடியாடும் குழந்தைகளுக்குக் கவிதைகள் இசைத்தார்.

கடந்த காலப் புலவர் சிகாமணிகளைப்போல, வேதாந்த வியாக்கியானங்களை விடுதலைக் கோரிக்கைக்குச் சப்பைக் கட்டாக அவர் பயன்படுத்தவில்லை. உலகின் மிகத் தொலைவில் உள்ள நாட்டு மக்களின் விடுதலைப் போராட்டங்களைக் கவிதைகள் ஆக்கி, மக்களுக்குப் படைத்தார்.

TNSC BANK

The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

Rate of Interest on Deposits (Effective from 1.3.1993

Sl.No.	Type of Deposit	Rate of Interest per annum
1.	Savings Bank Accounts	5.25 % w.e.f. 1.7.93
2.	Fixed Deposits :	
	For 46 DAYS and above but upto 270 days	11.25%
	For 271 DAYS and above but upto 364 days	11.00%
	For 1 YEAR and above	11.25%

Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

மதுரையில்

வ.உ. சிதம்பரனார் பிறந்தநாள் விழா!

தமிழக அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் கப்பலோட்டிய தமிழன், வ.உ. சிதம்பரனார் அவர்களின் 122-வது பிறந்தநாள் விழா, மாநில அளவில் மதுரையில் 5.9.93 அன்று மாலை விக்டோரியா எட்வர்ட் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு மு.தென்னவன் அவர்கள் தலைமையில், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மேலூர் திரு அ.மா. பரமசிவன் அவர்கள் வ.உ.சி. அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து ஏழை எளியோருக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். விழாவுக்கு மாண்புமிகு தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள் முன்னிலை வகித்து உரையாற்றினார்.

இவ் விழாவில், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மேலூர் திரு அ.மா. பரமசிவன் அவர்கள் வ.உ.சி. அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, அரசின் பல்வேறு துறையின் சார்பில் ஏழை எளியோருக்கு இலவசத் தையல் இயந்திரங்கள், மின்சார குலாலச் சக்கரம், திருமண நிதியுதவி, புரட்சித்தலைவி டாக்டர் ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நிதி உதவி, மானிய விலையில் இரும்புக் கலப்பை, களைக்கொல்லி, இலவச உரம் மினிகிட், மற்றும் செம்மறி ஆடுகள் உழவு மாடுகள், மூன்று சக்கர வண்டி, நெசவுக் கருவி, பெட்டிக்கடை, விதவைகள் நிதி உதவி, மற்றும் பல்வேறு திட்டத்தின் கீழ் 85 நபர்களுக்கு ரூ.2,55,000 மதிப்புள்ள உதவிகளை வழங்கினார்.

மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு மு.தென்னவன் அவர்கள் தமது தலைமையுரையில்,

"சுதந்திரம் எனது பிறப்புரிமை" என முழங்கிய வ.உ. சிதம்பரனார் அவர்களின் 122-வது பிறந்தநாள் விழா மிகச் சீரோடும் சிறப்போடும் மாநில அளவில் இங்கு கொண்

பண்டைய பூம்புகாரின் கட்டடப் பகுதிகள் கண்டுபிடிப்பு!

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையும், தேசீய கடலாய்வு நிறுவனமும் இணைந்து பூம்புகார் கடற்பகுதியில் மேற்கொண்ட ஆழ்கடலாய்வின்போது, வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தொன்மை நகரமாகப் பூம்புகார் திகழ்ந்தமைக்கான தொல்லியல் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

1993-ஆம் ஆண்டு சனவரி மற்றும் பிப்ரவரி திங்களில் மேற்கொண்ட இரண்டாம் கட்ட ஆழ்கடலாய்வின்போது காவிரியாறு வங்கக் கடலுடன் கலக்கின்ற இடத்திலிருந்து சுமார் 300 மீட்டர் முதல் 400 மீட்டர் தொலைவில் கடல் பகுதியில் ஏழு முதல் எட்டு மீட்டர் ஆழத்தில் தொடர்ச்சியான கட்டடப் பகுதிகள் இருப்பது கண்டறியப்பட்டது. மேலும் பூம்புகாரில் தற்போது அமைந்துள்ள கலங்கரை விளக்கத்திற்கு அருகாமையிலும் கடற்பகுதியில் தொடர்ச்சியான கட்டடப் பகுதிகள் இடைவெளி விட்டு இருப்பதும் கண்டுணரப்பட்டது.

இம்முறை, கட்டடப் பகுதியின் மேல் படிந்து காணப்பட்ட வண்டல் படிவத்தினை அகற்றும் பணி மேற்கொண்டனர். அதே சமயம் குறிப்பிடத்தக்க அளவில் கருப்பு, சிவப்பு பானை ஓடுகள், சிவப்பு வண்ணப் பானை ஓடுகள், மதுக்குடுவை, பானை ஓடுகள் மற்றும் செங்கல் துண்டுகள் சேகரிக்கப்பட்டன.
இத்தொல்பொருட்களைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது இக்கட்டடப் பகுதிகள் கி.மு. 300 - கி.பி. 400 ஆகிய இடைப்பட்ட காலத்தைச் சார்ந்ததாகும் என அறிய முடிகிறது.

1991-இல் மேற்கொண்ட முதற்கட்ட ஆழ்கடலாய்வின்போது கண்பிடிக்கப்பட்ட கட்டடப் பகுதியில் மூழ்குநர்களைக் கொண்டு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வின்போது மூழ்குநர்களால் சுத்தம் செய்யப்பட்ட கட்டடப் பகுதியின் செம்புராங் கற்களால் (Laterite) அமைக்கப்பட்ட சுவர்ப் பகுதி, தெளிவாகக் காணும் வண்ணம் வெளிப்படுத்தப்பட்டது. இக்கட்டடப் பகுதியின் அமைப்பு முக்கால் வட்ட வடிவமாகவும், இரு பக்கங்களிலும் உயரமான சுவர் வடக்கு மற்றும் தெற்காகவும் காணப்படுகின்றன. இரு பக்கச் சுவர்களுக்கும் உள்ள இடைவெளிப் பகுதி சுமார் 25 மீட்டர் ஆகும். இக்கட்டட அமைப்புகளை நோக்கும்போது, புகழ்வாய்ந்த பூம்புகார் நகரத்தின் கோயிலாக இது இருக்கக்கூடும்.

மேலும், இங்கு தரை தட்டிய கப்பல் உள்ள பகுதியில் மேற்கொண்ட விரிவான ஆய்வின்போது சுமார் 1.25 மீட்டர் நீளமுடைய இரும்பு பீரங்கி ஒன்றும், இரும்பு மற்றும் செம்பினாலான ஆணிகளும் மற்றும் மரச் சட்டங்களும் வெளிப்படுத்தப்பட்டன. உடைந்த கப்பலில் காணப்பட்ட ஈயக் கட்டிகள் சுத்தம் செய்யப்பட்ட நிழற்படம் மற்றும் வீடியோ படங்கள் எடுக்கப்பட்டன. இக்கப்பல் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் மூழ்கியது என அறியப்படுகின்றது.

பூம்புகார் ஆழ்கடலாய்வுப் பணியுடன் கரையோர ஆய்வும் மேற்கொள்ளப்பட்டபோது பூம்புகார்த் தொடர்பான தொல்லியல் சான்றுகள் சேகரிக்கப் பெற்றன. பூம்புகார்க் கையோரத்தில் அமைந்துள்ள கண்ணகி சிலைக்கருகாமையில் செங்கற் கட்டடப் பகுதி ஒன்று வெளிப்படுத்தப்பட்டது. இச் செங்கற்கள் கீழையூர் பகுதியில் முன்னே கண்டுபிடிக்கப்பட்ட படகுத்துறையில் காணப்படுகின்ற செங்கற்களைப் போன்று அமைப்பிலும், அளவுகளிலும் ஒத்துக் காணப்படுகின்றன.

மேற்கண்ட பூம்புகார் ஆழ்கடலாய்வு மற்றும் கள ஆய்வுத் தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் திரு. நடன. காசிநாதன் மற்றும் தேசிய கடலாய்வு நிறுவனத்தைச் சார்ந்த டாக்டர் எஸ்.ஆர். ராவ் மற்றும் டாக்டர் வோரா ஆகியோரின் மேற்பார்வையில் இத்துறை அலுவலர்கள் திரு. அ. அப்துல் மஜீத், தொல்லியல் துணைக் கண்காணிப்பாளர், திருவாளர்கள் சம்பத், செல்வராஜ், இராஜேந்திரன் மற்றும் ஸ்ரீ குமார், தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழக டாக்டர் இராஜன் மற்றும் தேசிய கடலாய்வு நிறுவனத்தைச் சார்ந்த ஆய்வாளர்கள் திருவாளர்கள் குடிகார், சுந்தரேஷ், கவுர், சீலா திருப்பாதி, பந்தூர்கர் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டன.

காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தென் மேற்கே நான்கு கி.மீ. தொலைவில் அமைந்துள்ள மேலப் பெரும்பள்ளம் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பெருங்கற்காலத்தைச் சார்ந்த ஆண், பெண் சுடுமண் பொம்மைகளுடன் கூடிய ஈமத் தாழியின் உடைந்த பகுதி கண்டுபிடிக்கப்பட்டது. ஏற்கெனவே இத்துறையின் அலுவலர்களால மேற்கூறப்பட்ட பகுதியின் அருகாமையில் அமைந்துள்ள பகுதிகளில் இதுபோன்ற சுடுமண் பொம்மையுடன் காணப்பெறும் ஈமத்தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. குறிப்பாகக் குன்னூர்ப் பகுதியில் இதனைப் போன்ற ஈமத் தாழிகளின் மூடிப்பகுதியில் சுடுமண் உருவம் உள்ளவை சேகரிக்கப்பெற்றிருக்கின்றன. மேற்கண்ட சான்றுகளைக் கொண்டு நோக்கும்போது பூம்புகாரின் தொன்மை வரலாறு பெருங்கற்காலத்திலிருந்தே தொடங்குகின்றது என்பது தெளிவாக அறிய முடிகின்றது.

— தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறை

விடுதலை வீரர் வ.உ.சி

- ஜீவா மணிகுமார்

"சுதந்திரம் எங்களது பிறப்புரிமை" என்று இந்தியாவின் வடக்கே எழுந்த முழக்கத்தின் எதிரொலி தென்னாட்டில், திருநெல்வேலிச் சீமையில் சீற்றத்துடன் எதிரொலித்தது.

இந்த எதிரொலியினைக் கேட்ட வெள்ளையர்கள் இடியோசை கேட்ட நாகம்போல் நடுநடுங்கினர். வாணிபம் என்பது பொருள்மட்டும் சேர்க்க அல்ல, மற்றவர்களை அடிமைப்படுத்தவும் என்பதை உலக வரலாற்றில் ஏற்படுத்தி, பொருளை மட்டுமல்ல, அடுத்த நாட்டின் மானத்தையும் சேர்த்தே கப்பலேற்று வோம் என்ற பறங்கியரின் பாதையினை, அவ்வாணிபத்தைக் கொண்டு கப்ப லோட்டி தடுத்து, நமது தேசத்தின் தன் மானத்தை நிலை நாட்டுவோம் என்று சிலிர்த்து பணம் தேட வந்தவர்களின் பிடரியில் மரண பயத்தை ஏற்படுத்திய மகத்தான சக்தி ஒன்று தென்பாண்டிச் சீமையில் ஒளிவிட்டது.

"இழப்பதற்கு ஒன்றும் இல்லை நம் அடிமை விலங்குகளைத் தவிர" என்பதைத் தொழிலாளர் தோழர்கட்கு உணர்த்தி அவர்களை ஒருங்கிணைத்துப் போராட வைத்த புரட்சிப் புயல் ஒன்று பொது வாழ்வில் புறப்பட்டு, சூரியனே அஸ்த மிக்காத பேரரசுக்குப் புதுப்பாடம் கற்பித்தது கவின்மிகு நெல்லைச் சீமை யிலே. அது 1872-ஆம் ஆண்டு, செம்டம்பர் 5-ம் நாள் நெல்லாலே வேலியிட்டு நெறிவளர்க்கும் நெல்லை மாவட்டத்திலே, ஒட்டப்பிடாரத்தில் தமிழ் வளர்த்த வேளாளர்குடி உலகநாத ருக்கும், பிரமாயி அம்மாளுக்கும் அருந் தவப்புதல்வனாக அவதரித்த சிதம்பரனார் அவர்கள்.

சொல்லேழ்வராக, செயல் வீரராகத் தோன்றிய இவருடைய பாட்டனார் சிதம்பரக் கவிராயர் தமிழ்ப் புலமையிலே தன்னேரின்றி விளங்கியவர். பாட்டன் வழி பேரனும் இளமையிலேயே பைந் தமிழ் நூல்களையெல்லாம் பொருளுடன் கற்று கவி அருளுடன் விளங்கினார். அறிவை ஊட்டுவது தந்தையின் கடன் என்பதை வழுவாது உணர்ந்த சிதம்பர னாரின் தந்தை உலகநாத பிள்ளை, மகனின் கல்விக்கென ஒட்டப்பிடாரத் திலேயே பள்ளி ஒன்று கட்டி மகனின் அறிவுச் செல்வத்தை மேன்மை அடைய வைத்தார்.

மகனின் அறிவாற்றல் இளமை யிலேயே, ஒரே ஆண்டில் இரண்டு வகுப்புகள் கடக்கும் அளவிற்கு ஒளி பெற்றது. உயர்நிலைப் பள்ளியை தூத்துக்குடிக்குச் சென்று கற்ற சிதம்பரனார் குமாஸ்தாவாகப் பணிபுரிந்து பின்பு சட்டக் கல்லூரியில் படித்து சிறந்த வழக் கறிஞராக ஆனார். இளமைப் பருவத் திலேயே ஆற்றல் மிகக் கொண்ட சிதம்பரனார் அன்றிருந்த சமூகச் சூழ் நிலையையும், அரசியல் சூழ்நிலையையும் தெளிவுற உணர்ந்து படிப்படியாகத் தனது வாழ்க்கைப் பாதையினைச் செம்மைப்படுத்தினார். நமது நாடு அன்னியனிடம் அடிமைப்பட்டுக் கிடப்பதையும், அதற்கான நமது சமூகப் பிளவுகளையும், பேதங்களையும் ஆய்ந் துணர்ந்த சிதம்பரனார் தன்னுடைய வழக்கறிஞர் தொழிலையே பல புரட்சி களைச் செய்தார். "வழக்கறிஞர் களெல்லாம் பொய்யர்கள்" என்ற வாதத்தைப் பொய்யாக்கி, 'சட்டம் என்பது இருட்டறை, அதில் வக்கீல்களின் வாதம் ஒரு விளக்கு' என்ற அறிஞர் அண்ணா வின் கருத்தினை அன்றே, தனது வாதத் தில் மெய்யாக்கினார்கள்.

காசுக்காகவே சோரம் போகும் கூட்டம் என்று கூறப்பட்ட தொழிலில் நேர்மையான வழக்குகளையே ஆய்ந்து தேர்ந்தெடுத்து வாதாடி வெற்றி பெற்றார். பாதிக்கப்பட்ட ஏழைகளின்பால் பாசம் மிகக் கொண்ட சிதம்பரனார் அவர் களுடைய வழக்குகளை இலவசமாக வாதாடி வெற்றி பெற்று அவர்கள் இதயத்திலும் குடிபுகுந்தார். வழக்கு மன்றங்களில் நடைபெறும் தவறுகளை 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்பதற்கிணங்க அஞ்சாது எடுத்துரைத்தார். தொழிலில் உண்மை யன்றிப் பொய் பேசுவதில்லை என்று உறுதிபட வாழ்ந்தார்.

அந்நாளில் நீதிமன்றங்களில் நீதி பதிகள் பெரும்பாலும் ஆங்கிலேயர்களே இருந்தனர். அவர்களில் பலர் நம்ம வர்கள் பால் காட்டிய அலட்சியமும், வழங்கிய தீர்ப்பில் காணப்பட்ட பேதமும் சிதம்பரனாரைச் சிந்திக்கச் செய்தன. நம் நாட்டில், நம்மை அடிமைப்படுத்தியும், சுரண்டியும் வாழ்பவர்கள் நம்மைக்

டாடப்படுவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

"வெள்ளைக்காரனை எதிர்த்து, அவனது ஏகாதிபத்தியத்தை எதிர்த்து எத்தனையோ பேர் போராடி இருக்கலாம். இந்த நாட்டிற்குச் சுதந்திரம் வேண்டும் என்று பல்லாயிரக் கணக்கானோர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கலாம். ஆனால், வெள்ளைக்காரனின் பொருளாதார ஆதிக்கத்தை எதிர்த்து, சுரண்டலை எதிர்த்துப் போராட்டம் நடத்திய பெருமை வ.உ.சி. அவர்களுக்கு மட்டுமே உண்டு. வெள்ளைக்காரனை எதிர்த்து அவர்களுக்குப் போட்டியாக சுதேசி இயக்கத்தை ஆரம்பித்து, கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. அவர்கள் இந்தச் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டார் என்பதற்காக, தேசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டு, ஆயுள் தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டு, இந்த நாட்டு மக்களின் சுதந்திரத்திற்காகத் தன் வாழ்வையும், நலனையும், அர்ப்பணித்துக் கொண்டவர். அத்தகைய பெருமையும், துணிச்சல் மிக்க, வீரம் மிக்க இந்த மண்ணில் பிறந்த ஒரு மாபெரும் தலைவர் பிறந்த நாளைத்தான் நாம் இன்று கொண்டாடுகிறோம்.

"அன்று நாட்டு மக்களின் நலன் ஒன்றையே இலட்சியமாகக் கொண்ட வ.உ.சி. அவர்களைப் போலவே, இன்றைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் செயலாற்றி வருகிறார்கள். எத்தகைய இன்னல்களையும் இன் முகத்துடன் அன்று ஏற்றுக் கொண்ட வ.உ.சி. போலவே இன்றைய தமிழக முதல்வர் அவர்களும் பணியாற்றி வருகிறார்.

"சுதந்திரப் போராட்டத் தலைவர்களை மதிக்கும் வகையில் இன்றைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு "வெள்ளையனே வெளியேறு" தியாகிகளின் நினைவாக நினைவுத்தூண் அமைக்கபடப்டதும், வ.உ.சி. அவர்களின் பேத்திக்கு அரசுப் பணியும் தந்ததோடு மட்டுமன்றி, மாநில அளவிலான சுதந்திரப் போராட்டத் தியாகிகளை அரசின் சார்பில் பொன்னாடை அணிவித்து அவர்களைக் கௌரவப்படுத்தியதோடு மட்டுமின்றி, அவர்களுக்கு வழங்கி வந்த உதவித் தொகையினை ரூ.1000 ஆக உயர்த்தி இந்திய ஒருமைப்பாட்டிற்கு முன்னுதாரணமாக இன்றைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருந்து வருகிறார்கள்" என்றார்.

இவ்விழாவில், பெரியகுளம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஆர். ராமசாமி, சுதந்திரப் போராட்டத் தியாகிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்களும் திரளாகக் கலந்து கொண்டார்கள்.

இவ்விழாவில் முன்னதாக, பள்ளி மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

முன்னதாக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஆர்.என். சௌபே, இ.ஆ.ப., அவர்கள் அனைவரையும் வரவேற்றார். செய்தித்துறையின் சார்பில் இணை இயக்குநர் திரு பா. செயப்பிரகாசம் அவர்கள் நன்றி கூறினார்.

துரை. தாமரைச் செல்வம்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
மதுரை மாவட்டம்

கருத்துச் செல்வம் திருக்குறள்!

"திருக்குறளிலே சொல்லப்பட்ட கருத்துக்களை எப்படிப் பயன்படுத்தலாம் எந்த வகையில் பயன்படுத்தலாம் என்பதில் திருக்குறளிலே நாட்டம் உள்ளவர்கள் கவனம் செலுத்த வேண்டும். மற்றவர்கள் துண்டுதுண்டாகச் சொன்னதை இவர் ஒருவரே சொல்லி இருக்கிறார். பத்துப் பேர் சொல்லியதைத் திருவள்ளுவர் ஒருவரே சொல்லி இருக்கிறார். இன்னும் சொன்னால், இவர் சொன்ன பிறகுதான் மற்றவர்கள் எல்லாம் சொல்ல ஆரம்பித்தார்கள்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே எழுதப்பட்ட திருக்குறளிலே ஹைட்ரஜன் இல்லையே, அணுக்குண்டு இல்லையே என்று சொல்லுவது பொருந்தாது. இந்நூல் எழுதப்பட்ட காலத்தையும் ஒப்பு நோக்க வேண்டும். முறையோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

திருக்குறள் எழுதப்பட்ட காலத்தில் அதற்கு ஒப்பான நூல் எதுவும் எழுதப்படவில்லை; உலகத்தில் மற்றவர்களிடத்தில் இல்லாத கருத்துச் செல்வமாம் திருக்குறள் நம்மிடத்திலே இருக்கிறது.

— பேரறிஞர் அண்ணா

மாதம் ஒரு மருத்துவர்:

மனநலம்

டாக்டர் ந. மாத்ருபூதம் அவர்களின் பதில்கள்:

டாக்டர் ந. மாத்ருபூதம் அவர்கள், சென்னை அரசு மனநல நிலையத்தில் மனநல மருத்துவராகப் பணிபுரிந்து வருகிறார். 49 வயதான இவர், 1967-ஆம் ஆண்டு சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் பயின்றார். பின்னர், சென்னை மருத்துவக் கல்லூரியில் பயின்று டி.பி.எம்., பெற்று பின்னர் எம்.டி., பட்டமும் பெற்றார். 1991-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகம் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியது.

டாக்டர் ந. மாத்ருபூதம், "தொழிற் சம்பந்தமான மனநலம்" (Industrial Psychiatry Journal) என்ற ஆங்கில இதழின் ஆசிரியராக உள்ளார். மற்றும், நூற்றுக்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளை, சென்னைத் தொலைக்காட்சி மற்றும் அகில இந்திய வானொலியில் அளித்துள்ளார். டாக்டர் மாத்ருபூதம் அவர்கள், பாமர மக்கள் படித்துத் தெரிந்து கொள்ளும் வகையில் மனநலம் குறித்த நூல் ஒன்றும் எழுதியுள்ளார். அவர் மனநலம் குறித்த வாசகர்களின் கேள்விகளுக்கு பதில் கூறுகிறார்:

எம். அன்பழகன்
புள்ளான்விடுதி

★ ஒருவரை (தெரிந்தவர்) சில நாட்களுக்குப் பின் நேருக்கு நேராகப் பார்த்தால் மனதில் பதக்கென்று ஒரு உணர்வு வருகிறதே ஏன்?

★ ஒன்றை நினைத்து தூங்கினால் ஏன் தூக்கம் வருவதில்லை? அதிர்ச்சிக்குள்ளான காட்சிகளைப் பார்த்தால் (ரத்தத்தை) பய உணர்வு ஏற்படுவது ஏன்?

★ மற்றொருவர் நினைப்பதை நான் சரியாகச் சில நேரங்களில் சொல்வதன் காரணம் என்ன?

★ கூட்டம் அதிகமாக இருக்கும் நேரத்தில் எழுதினால் நடுக்கம் ஏற்படுவதன் காரணம் என்ன?

நீங்கள் குறிப்பிட்டுள்ள அறிகுறிகள் மனப் பதட்டம் அல்லது மனப்பதட்ட நோயைச் சார்ந்தவை. உள்மனதில் திருப்தியின்மை, இனம் புரியாத பயம், நடுக்கம் முதலிய சிலசமயங்களில் பொது இடங்களிலும் குறிப்பிட்ட தருணத்திலும் ("ரத்தத்தைப் பார்த்து" போன்ற) அதிகப் பதட்டமாக வெளிப்படும். மனநல மருத்துவரைக் கலந்தாலோசியுங்கள். தியானத்தையும் நாடுங்கள் (Yoga, Tm etc) அதற்கும் ஒரு குரு தேவையாகும். மற்றவர் மனதில் இருப்பதைச் சிலசமயம் நீங்கள் உணர்வது உங்களுக்குள் மறைந்திருக்கும் "பிறர் புலன் அறியும்" (ESP) சக்தியின் காரணமாகவோ அல்லது ஒரு கூட நடக்கும் யதார்த்த சம்பவமாகவோ இருக்கலாம் (CO-INCIDENCE). இதைப் பெரிதுபடுத்தி மேலும் பதட்டத்திற்கு உள்ளாக வேண்டாம்.

குமுதினிதேவி அன்பழகன்
கச்சிராபாளையம்

★ மனநோய் வருவதற்குக் காரணம் என்ன?...

மனநோய் வருவதற்குப் பல காரணங்கள் உண்டு. உடற்கூறு சம்பந்தமான காரணங்கள், (BIOLOGICAL, GENETIC, BIOCHEMICAL etc.) உளக்கூறு சம்பந்தமான காரணங்கள், (Personality) (ஆளுமை) மற்றும் இதர உளவியல் காரணங்கள், சமூகக் காரணங்கள் (குடும்பம், சுற்றுப்புறச் சூழ்நிலை சம்பந்தப்பட்டவை). உதாரணமாக மனச்சிதைவு நோய் (Schizophrenia) பரம்பரையாக, உடற்கூறு சம்பந்தமான மூளையில் ஏற்படும் ரசாயன மாறுதல் காரணங்களினால் ஏற்பட வல்லது. அதேபோல் மன எழுச்சி நோய் (Mania), தீவிர மனச்சோர்வு நோய் (Depression) கூட உடற்கூறு சம்பந்தமாக ஏற்படக்கூடியது.

ஆளுமைப் பாதிப்பு நோய்கள் (Personality Disorder) ஒருவரது சுபாவமான ஆளுமையையும், அவர் வளரும் சூழ்நிலையையும் பொறுத்து அமைகிறது. ஹிஸ்டீரியா எனப்படும் நோய்

வெளிப்படுத்தமுடியாத மனக்குழப்பம் போன்றவை உளவியல் காரணங்களால் ஏற்படும். குடிப்பழக்கத்திற்கு உடற்கூறு, ஆளுமை, சுற்றுப்புறம் மூன்றும் காரணமாக அமையலாம். பொதுவாக, எல்லா மனநோய்க்கும் இம்மூன்றும் ஓரளவு காரணமாக அமையலாம். ஆனால், அதில் நோயைப் பொறுத்து ஒன்றின் பங்கு அதிகமாக இருக்கக்கூடும் (Generally, mental illness can said to be a bio psycho social phenomenon)

கரண்ட் ட்ரீட்மெண்ட் தீவிர மனச்சோர்வு, மனச்சிதைவு நோய் போன்றவற்றிற்குச் சிறந்தது. மின்சாரம் 70-100 வோல்ட் அளவில் செலுத்திட்டால், நோயாளிக்கு ஒருசில நிமிடங்களுக்கு நினைவு தப்பிவிடும். ஆதலால், வலிக்கும் என்பதற்குச் சாத்தியம் இல்லை. ஆனால், பாதுகாப்பான முறையில் மனநல மருத்துவரால் மட்டும் இச்சிகிச்சை அளிக்கப்பட வேண்டும்.

திருடர்களிடம் மன இயல் சார்பில் அமைந்த முறைகளில் உண்மையை வரவழைக்கலாம். ஆனால், சிலரிடம் எந்த முறையிலும் வரவழைக்க முடியாது. சுயநினைவோடு சொல்லப்படாத உண்மைகள், திருடனாயிருந்தாலும், அவருக்கு எதிராக நீதி மன்றத்தில் எடுத்துக் கொள்ளப் படமாட்டாது. இது ஒருவருக்குச் சட்டம் அளிக்கும் நியாயமான பாதுகாப்பே அன்றி வேறு இல்லை.

வழுக்கையைத் தடுக்க முடியுமா?

வழுக்கையைத் தடுக்கக் கூடிய மருந்தொன்று அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தலையில் வழுக்கை விழுவதற்குப் பல காரணங்கள் உண்டு.

உடலில் 'ஆண்ட்ரோஜென்' (Androgen) என்னும் ஹார்மோன் இருப்பதனாலும் வழுக்கை ஏற்படுகிறது. இத்தகைய ஹார்மோன் உள்ள ஆண்களுக்குத் தலையின் முன்பகுதியிலோ அல்லது பின்னந்தலையிலோ அல்லது தலையின் மையத்தில் வட்டவடிவமாகவோ வழுக்கை விழக்கூடும். பெண்களுக்கோ தலை முழுவதிலும் ரோமம் உதிரக்கூடும்.

'மினோக்ஸிடில்' (Minoxidil) என்னும் மருந்து இவ்வாறு முடி உதிர்வதை வெற்றிகரமாகத் தடுக்கிறது என்று கண்டறியப்பட்டது.

'ரோகெய்ன்' (Rogaine) என்னும் பெயரில் இந்த மருந்து விற்கப்படுகிறது. முடி உதிர்வதைத் தடுப்பது மட்டுமன்றி, மீண்டும் ஓரளவு முடி வளரச் செய்யவும் இந்த மருந்து துணை புரிகின்றதாம்.

தலையின் பின்புறத்திலும், பக்கவாட்டிலும் இருந்து எடுக்கப்படும் ரோமங்கள், வழுக்கைப் பகுதியில் அறுவைச் சிகிச்சை மூலம் பொருத்தப்பட்டு வளர விடப்படுகின்றன. இதற்கான நவீன தொழில்நுட்பம் வேகமாக வளர்ந்து வருகிறது!

—அமெரிக்கத் தகவல் நிலையம்

பாத்திமாபீபீ
சென்னை-2

★ டாக்டர், எனக்கு வயது 26, தற்போதுதான் திருமணமாகியுள்ளது (2 மாதங்கள் ஆகின்றன). ஒரு வருடத்திற்கு முன்பு எனக்குச் சீதபேதியும், ஜுரமும் இருந்தது. அதற்கான மருந்துகள் சாப்பிட்டு உடல் நிலை தேறிவிட்டது. ஆனால், அப்போது முதல் எனக்குத் திடீரென கோபம் வருகிறது அல்லது மனம் இறந்து விடுவாய் என கூறுகிறது. இதற்கான மருந்து ஏதாவது கூறுங்கள். உடல் நலமின்றி இருந்தபோது யாராவது பேசினாலும், சிரித்தாலும், சாப்பிட்டாலும் எனக்குக் கோபமாக வந்து கொண்டிருக்கிறது. ஆனால், தற்போது இவ்வாறில்லை. இருப்பினும் என்னால் சந்தோஷமான வாழ்க்கை மேற்கொள்ள இயலவில்லை. இதற்கான காரணத்தை விளக்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

உங்களுக்கு ஏற்பட்டிருப்பது ஒருவிதமான மனச்சோர்வு. இதற்குப் பேச்சு மூலமும் (Psychotherapy) தேவைப்பட்டால் மருந்துகள் மூலமாகவும் நிவர்த்தி காணலாம். மனநல மருத்துவரை அணுகுங்கள்.

★ என்னுடைய உடல்நலமின்மை ஒருபுறம் இருக்க, அதை நினைத்து மனம் அதே கவலையாக உள்ளது. BP-Sugar - உடல் உளைச்சல் போன்றவற்றினால் மனம் அதையே நினைத்து வேதனை அடைகிறது. தூக்கமும் இல்லை. இதற்கு என்ன செய்வது ஆலோசனை கூறவும் (மருந்து சாப்பிட்டும் அதேபோல் இருக்கிறது).

சர்க்கரை வியாதி, இரத்த அழுத்தம் போன்றவை, மனம் பதட்டம், சோர்வினால் தீவிரமடையவல்லவை. மற்றும் மூட்டுவலி, ஆஸ்த்மா போன்றவையும் அப்படியே, மருந்தோடு, உடற்பயிற்சி, தியானமுறைகள், பதட்டமின்றி இருத்தல் உடற் சோர்வையும் போக்கும். ஆகாரத்திலும் கட்டுப்பாடு தேவை. அதைவிட்டு மனதைக் குழப்பத்திற்குள்ளாக்கினால், உடல் நோய் அதிகமாகும். அது மேலும் மனச்சோர்வு குழப்பத்தை அளிக்கும் (It is a vicious circle). சுபாவத்தில் மனப்பதட்டம் உள்ளவர்கள், மாரடைப்பால் அவதியுறும்போது, அவர்களுக்கு, மனப்பதட்டம் இல்லாதவர்களை விடப் பாதிப்பு அதிகம் எனக் கண்டுபிடித்துள்ளனர். அதேபோல் மனச்சோர்வு, பதட்டம், ரத்த அழுத்தத்தை அதிகமாக்க வல்லது, இரத்தத்தில் சர்க்கரை அளவை அதிகமாக்க வல்லது. ஆதலால், தேவையானால் மனநல மருத்துவ உதவியோடு மனதைச் சமன்படுத்த முயற்சியுங்கள். உடல் நோயும் குறையும்.

சம்பத்
பெரியார் மாவட்டம்

★ தொடர்ந்து ஒரே பிரச்சினையை இரவும் - பகலும் சிந்தித்தால் மனநலம் பாதிக்கப்படுமா? விரிவாகக் கூறவும்.

நீங்கள் கூறுவது, திரும்பத் திரும்ப மனதை வாட்டும் அசம்பாவித அல்லது அர்த்தமற்ற எண்ணங்களானால் அதுவே ஒரு மன நோய் ஆகும் (Obsession). ஆனால், ஒரே பிரச்சினையைப் பற்றி நினைக்காமல் அதைத் தீர்ப்பதைப் பற்றி யோசியுங்கள். தீர்க்கமுடியாத, ஆனால், உடன் இருக்கும் பிரச்சினைகளை நிழல் போல் நினைத்து மறக்க முயற்சியுங்கள் (What cannot be cured must be endured). அதை விடுத்து தீர்க்க முடியாத அல்லது நீங்கள் தீர்க்க முயற்சிக்காத பிரச்சினையை நினைப்பதே உங்கள் தலையாய பிரச்சினை என்பதை உணருங்கள். தேவையானால் உளவியல் நிபுணர் அல்லது மனநல மருத்துவரை அணுகுங்கள்.

இ. குழந்தைராஜ்
மேல்பழங்கூர்

★ கடுமையான மன உழைப்பினால் (Intense mental work) மனநலம் பாதிக்கப்படுமா? என்னென்ன மனம் மற்றும் உடல் நலப் பாதிப்புகள் ஏற்படும்? தெளிவான விளக்கம் தேவை.

உங்கள் கேள்வியைப் படித்ததும், எனது மருத்துவ மாணவ நாட்களில் எனது மருத்துவ பேராசிரியர் டாக்டர் கே.வி. திருவேங்கடம் கூறியது நினைவுக்கு வருகிறது. அவர் கூறுவார், 'பெரும் கடின உழைப்பால் உடல் பாதிக்கப்படுவதில்லை. (Nobody suffers because of hardwork) அதேபோல் கடின மன உழைப்பாலும் ஒரு அபாயமும் இல்லை. மாறாக, தீவிர சிந்தனை, பிரச்சினைகளைத் தீர்க்கவும், ஒரு விஷயத்தை ஆழமாகப் புரிந்து கொள்ளவும் உதவும். அஃதன்றி வாளாவிருப்பதே மன நோய்க்கு வழிகோலும். (Idle mind is a Devil's workshop) ஆனால், கட்டுப்படுத்தமுடியாத அளவு, நிறைய தொடர்பற்ற எண்ணங்கள் (Recurring of thoughts and flight of ideas), மன எழுச்சி நோயின் அறிகுறிகள் எனலாம்.

எம். சீரங்கன்
தே. சீத்தப்பட்டி

★ மனநலம், உடல்நலம் இவை இரண்டிற்கும் சம்பந்தம் உண்டா? ஆசிரியர் பாடம் நடத்தும் போது எனது மனம் பல சிந்தனையுடன் அங்குமிங்குமாக அலைகின்றது போல் இருக்கிறது. இது எதனால்? மனநலம் ஏதேனும் பாதிப்படைந்துள்ளதா? நான் அல்சரால் பாதிக்கப்பட்டு இருக்கின்றேன். அதனால் மன நலத்திற்குத் தீங்கு உண்டா? மனநலம் நன்றாக இருக்கக் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் என்னவென்று கூறவும்.

மனமும் உடலும் இணைந்து செயல்படக் கூடியவை. மனம் உடலையும், உடல் மனத்தையும் பாதிக்கக் கூடியவையே. இவற்றை உடல், உளசம்பந்தமான நோய்கள் எனக் கூறுவர் (Phycho physiological disorder). இவை தன்னிச்சை நரம்பு மண்டலம் பாதிக்கப்படுவதால் ஏற்படும். இவையே உணர்வுகளைத் தூண்டும் மையமாகவும் பல நேரம் அமையும் (Automatic nervous system). உங்களுக்கு வகுப்பில் ஏற்படுவது சிந்தனைச் சிதறல், அல்லது உந்துதல் இல்லாமை, (lack of motivation) ஈடுபாடு இல்லாமை (lack of interest) ஆகியவற்றால் ஏற்பட்ட விளைவுகள். உந்துதலோடு செய்வனவற்றில் ஈடுபாட்டை அதிகப்படுத்திக் கொள்ளுங்கள். சினிமாப் பாடலை ரசிக்கும் நீங்கள், பள்ளிப்படிப்பை உங்கள் எதிர்கால வாழ்வின் அஸ்திவாரமாக நினையுங்கள். இதுவே உண்மையான கட்டடம். மற்றெல்லாம் காற்றில் எழுப்பப்படும் அரண்மனைக் கூடம்!

(இன்னும் வரும்)

வெய்யிலில் சுற்றாதீர்!

உலகின் சில நாடுகளில் அபாயகரமான 'தோல் புற்றுநோய்' பரவி வருவதாக உலகச் சுகாதார நிறுவனம் கவலை தெரிவித்துள்ளது. 'மாலிக்னன்ட் மெலனோமா' (Malignant Melanoma) என்று அழைக்கப்படும் இந்தத் தோல் புற்றுநோய் ஆண்டிற்கு 5 முதல் 10 சதவீதம் வரையில் பெருகி வருவதாகவும் அந்த நிறுவனம் எச்சரித்துள்ளது.

இது உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய நோய் ஆகும்; ஆனால் கவனமாக நடந்து கொண்டால் இந்த நோய் ஏற்படாமல் தடுக்க முடியும் என்று உலகச் சுகாதார நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

கடும் வெயிலில் திரிவதனால் இந்த நோய் ஏற்படுகிறது. தோலைப் பாதுகாக்கக் கூடிய கிரீம்களை உபயோகித்தல், தலைக்குத் தொப்பி அல்லது குல்லாய் போன்றவற்றை அணிதல், பாதுகாப்பான உடைகளை அணிதல் போன்றவற்றின் மூலம் இந்த நோய் ஏற்படாமல் தடுக்க முடியும். சிவந்த மேனி உடையவர்கள் வெயிலில் திரிந்தால், அவர்களுக்கு இந்த நோய் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு அதிகம். இவ்வாறு உலகச் சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

அமெரிக்கா, நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் சில பகுதிகளில் ஆண்டுதோறும் இலட்சம் பேரில் 40 பேர் இந்த நோயால் பாதிக்கப்படுகின்றனர். பிரிட்டனில் ஆண்டிற்கு 3,500 பேர் இந்த நோயால் தாக்கப்பட்டு அவதியுறுகின்றனர். அவர்களுள் சுமார் 800 பேர் இறந்து போகின்றனர்.

ஸ்காட்லாந்தில் மட்டும் கடந்த பத்து ஆண்டுகளில் மெலனோமா நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் தொகை 80 சதவீதமாக அதிகரித்துள்ளது. வெள்ளையர்கள் வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, வெயிலில் அலைந்து திரிவதனால் அவர்கள் இந்த நோயின் பாதிப்புக்கு உள்ளாகின்றனர் என்று உலக சுகாதார நிறுவனம் கருத்து தெரிவித்துள்ளது.

ஐரோப்பாவிலுள்ள 76 நாடுகளில், ஸ்விட்சர்லாந்து நாட்டில்தான் தோல் புற்றுநோய் சாவுகள் அதிகமாக உள்ளனவாம். ஸ்விஸ் மக்கள் அந்நாட்டின் மலைப்பகுதிகளிலும், ஏரிப்பகுதிகளிலும் வெயிலில் அலைகின்றனர். வெயிலில் பல விளையாட்டுக்களில் ஈடுபடுகின்றனர். இதுதான் அவர்களை இந்த நோய் தாக்குவதற்குக் காரணமாகும் என்று உலக சுகாதார நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

—அமெரிக்கத் தகவல் நிலையம்

திருநெல்வேலி மத்தியக் கூட்டுறவு வங்கி லிமிடெட், திருநெல்வேலி - 627 003.

சேமிப்புக் கணக்கு	(Saving Deposit)	6.50%
நிரந்தர வைப்பு	(Fixed Deposit)	6.50%
46 நாட்கள் முதல் 270 வரை		11.50%
271 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை		11.25%
ஒரு வருடமும் அதற்கு மேலும்		11.50

அணையா விளக்குச் சேமிப்புத் திட்டத்தில்
முதலீடு செய்து அதிகப் பயன் பெறுவீர்

தேனருவி சிறு சேமிப்பு
ஸ்ரீ கோமதி குழந்தைகள் சிறு சேமிப்பு
திட்டங்களில் அதிகப் பலன் உண்டு

பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.

இன்னும் நல்ல பல திட்டங்களும் உண்டு.

உங்களுக்குச் சேவை செய்திடத் தலைமையகம் மற்றும் 33 கிளைகள்

ந. கந்தசாமி
செயலர்

ச. காந்தன்
தனி அலுவலர்

நம் நாட்டில் பசுமைப்புரட்சி மூலம், உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருந்த போதிலும், ஊட்டச்சத்துக்கள் இன்னமும் சரியான அளவில் கிடைப்பதில்லை. ஊட்டச்சத்துக்களில் மிகவும் முக்கியமானது புரதச்சத்தேயாகும். தாவர புரதச்சத்தை விட, விலங்கினங்களிலிருந்து கிடைக்கும் புரதச்சத்து மிகவும் உயர்வானது. இது போன்ற உயர்வான புரதச்சத்து, முட்டை, பால், இறைச்சியிலிருந்து கிடைக்கிறது.

மக்களுக்குத் தேவையான புரதச் சத்தை ஈடுகட்ட இறைச்சி உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய கட்டாய நிலையில் உள்ளோம். முக்கியமாக மக்கள் விரும்பி உண்ணும் ஆட்டிறைச்சியின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். இதற்கு மிகவும் உகந்தது செம்மறியாடு வளர்ப்பு. வாழ்க்கைத் தரம் உயர, பொருளாதாரம் வளர வேண்டும். இதில் பெரும் பங்கு கால்நடை வளர்ப்புத்துறைக்கு உண்டு. மற்ற எந்த விவசாயத்தை சார்ந்த தொழில்களையும் விட ஆடு வளர்ப்பு நவீனமாக்கப்படவில்லை. காரணம் செம்மறியாடு வளர்ப்பு தொன்றுதொட்டு ஒரு சமுதாயத்தினரால் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவர்களின் வாழ்க்கை செம்மறியாடு வளர்ப்பை மட்டுமே நம்பி இருக்கிறது. இவர்கள் தங்களுக்குத் தெரிந்தவற்றை பரம்பரையாக கையாளப்பட்டு வந்த சில தவறான முறைகளைத்தான் இதுபோன்ற ஆடு வளர்ப்போர் மத்தியில் நிலவிவரும் மூடநம்பிக்கைகளையும் அறியாமையையும் போக்கி நவீன முறையில் செம்மறி ஆடு வளர்ப்பை மேம்படுத்தி அதனால் இறைச்சி அளவை அதிகரிக்கத் தமிழக அரசு, ஐரோப்பியப் பொருளாதார சமுதாய நிதி உதவியுடன் ஆடு வளர்ப்புத் திட்டம் ஒன்று 13 கோடியே 67 இலட்ச ரூபாய் செலவில் 1989-90-ஆம் ஆண்டில் துவக்கியுள்ளது. இத்திட்டம் திட்ட இயக்குநர் நிர்வாகப் பொறுப்பில் இயங்கி வருகிறது. இத்திட்டத்தின் ஒரு அங்கமாக ஆட்டின நோய் புலனாய்வுப் பிரிவு ஆராய்ச்சி அலுவலர் தலைமையில் இயங்கி வருகிறது.

நம் நாட்டில் 48 மில்லியன் செம்மறியாடுகள் உள்ளன. இதன் மதிப்பு ரூ.1500 கோடியாகும். நம்நாட்டில் ஆண்டுதோறும் 5 மில்லியன் டன் ஆட்டிறைச்சி உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் 1982-ஆம் ஆண்டு கணக்கீட்டின்படி 5.5 மில்லியன் செம்மறி ஆடுகள் உள்ளன. இது இந்தியாவின் மொத்த எண்ணிக்கையில் 12 சதவிகிதமாகும். தமிழ்நாட்டில் செம்மறியாடுகள் பொதுவாக இறைச்சிக்காக மட்டுமே வளர்க்கப்படுகின்றன. அதே சமயம் ஆடு வளர்ப்பில் தோல் மூலமாக நாட்டிற்கு மிகவும் தேவையான அன்னியச் செலாவணி (ரூ.2000 கோடி) பெருமளவில் கிடைக்கிறது. இந்த அன்னியச் செலாவணி அதிகமான அளவில் கிடைக்க வேண்டுமானால், தோலின் தரம் உயர்ந்ததாக இருக்க வேண்டும்.

டாக்டர் சித்ரவேல், டாக்டர் ஸ்ரீதரன், டாக்டர் இராமானுஜம்.
திட்ட இயக்குநர் அலுவலகம்,
ஆடு வளர்ப்புத் திட்டம்.
சென்னை

கால்நடைகளின் தோலுக்கு மதிப்பு அதன் தரத்தை வைத்துதான். தரமான தோல் கிடைக்க வேண்டுமானால் செம்மறியாடுகளைத் தாக்கும் சரும வியாதிகளிலிருந்து காத்தல் அவசியமாகும். பெரும்பாலான சரும வியாதிகள் ஒட்டுண்ணிகளால் ஏற்படுகிறது. ஒட்டுண்ணி தொல்லைகளினால் ஆடுகள் மெலிந்து போவதுடன் தோலின் தரத்தையும் தாழ்த்துகிறது.

தோல் உடலின் ஆரோக்கியத்தைக் காட்டுகிறது. நல்ல ஆரோக்கியமான ஆடுகளில் இருந்து தரமான தோல் கிடைக்கிறது. ஆட்டின் தோலைப் பாதிக்கும் பல நோய்களில் சொறிநோயும் ஒன்று. ஆடு வளர்ப்பில் சொறி நோய்த் தடுப்பு மிக முக்கிய அங்கமாகிறது. ஆடுகளைப் பாதிக்கும் சொறி - 'சார்காட்டிக்', 'சோராப்டிக்', 'டெமோடெக்' என மூன்று வகைப்படும். அதிகமாகக் காணப்படுவது 'சார்காட்டிக்' சொறி ஆகும். இந்நோய் சிற்றுண்ணியால் ஏற்படுகிறது.

ஒட்டுண்ணி உடற்கூறும் இனவிருத்தியும்

'சார்க்காட்டிக்' ஒட்டுண்ணி மிகச் சிறிய அளவுடையது. 0.4 மி.மீ. அளவில் இருப்பதால் நுண்பெருக்கியால்தான் பார்க்க முடிகிறது வட்ட வடிவத் தோற்றம்; மிகக் குறுகிய கால்கள் உடலுக்கு வெளியே நீளாமல் இருக்கும்; வரிகளும் முக்கோண வடிவச் செதில்களும் உண்டு; தோலின் புறப்பாகத்தில் ஆழமான துளைகளைப் போட்டு, அதனால் தோல் திசுக்களில் இருந்து வரும் கசிவுநீரைச் சினையுள்ள ஒட்டுண்ணிகள் உண்ணும். தோலின் துளைகளில் முட்டையிடும்; முட்டைகள் மூன்று நாட்களில் பொரிந்து புழுப்பருவத்தை அடைகிறது. ஒட்டுண்ணிப் புழுக்கள் தோலின் மேற்பாகத்திற்கு வந்து திசுக்களையும், ஊநீர்க் கசிவையும் உண்ணுகிறது. புழுக்கள் வளர்ந்து முன் முதிர்வுப் பருவத்தை அடைகிறது; (ஒட்டுண்ணி நிம்ப்) தோலுப்பிற்குப் பிறகு வளர்ந்த ஒட்டுண்ணியாகிறது.

நோய் உண்டாக்கும் முறை

தோலின் மேற்பாகத்தில் அதிக அளவில் குழிகளை ஏற்படுத்தி திசுக்களை ஒட்டுண்ணி தனது இரம்பம் போன்ற வாய்ப்பகுதியினால் துண்டிக்கிறது. ஒட்டுண்ணியின் எச்சிலிலுள்ள நச்சுத்தன்மையாலும்,

ஆட்டின் நலம் காப்போம்
நாட்டின் வளம் சேர்ப்போம்

தொடர்ந்து தோலைத் துளைப்ப தாலும், ஒவ்வாமை காரணத்தாலும் தோலில் அரிப்பு ஏற்படுகிறது. இதனால் நோய் பாதித்த தோல் பகுதியை முரட்டுப் பகுதியில் தேய்க்க முயற்சிக்கிறது. ஒட்டுண்ணி எச்சிலில் உள்ள நச்சுப்பொருள் இரத்தத்தில் கலக்கும்போது கல்லீர லின் செயல்திறன் பாதிக்கப்படு கிறது.

நோய்க்குறிகள்

பெரும்பாலும் வயது வந்த ஆடு களில் நோய் தாக்கல் காணப் படுகிறது. இளம் ஆடுகளில் ஒரு சதவிகிதம் அளவில் காணப்படு கிறது. சில மந்தைகளில் 25 முதல் 27 சதவிகிதம் வரை பாதிப்புடன் நோய்க்கிளர்ச்சி ஏற்படும்.

முடி குறைவாக உள்ள பகுதி களாகிய முகம், காது, தொடை களின் இடைவெளி, முன்தோளின் இடைவெளி ஆகியவற்றில் சொறி நோய் அதிகமாக காணப்படுகிறது. திட்டுத்திட்டாக முடிகள் உதிர்வதும், தோல் சிவந்து விடுவதும், அதன் திசுக்களின் கணப்பணிமாணம் அதிகமாவதும் (படம்-2) தோலின் மேல் பாகத்தில் ஒரு வகையான திரவம் சுரப்பதும் முக்கியமான அறிகுறிகள் ஆகும். தோலின் அரிப்புத் தன்மையால் ஆடுகள் சரியாக மேயாமலும், அமைதியின்றி யும் காணப்படும்.

சிகிச்சை மற்றும் தடுப்பு முறைகள்

1. ஒட்டுண்ணிக் கொல்லி மருந் துகளான 'பிஎச்சி', 'மாலத்தியான்', 'அசன்டால்', 'பியூடாக்ஸ்' போன்ற மருந்து வகைகளைத் தக்க அளவில் கலந்து ஆட்டைத் தோய்த்து எடுக் கும் முறை சிறந்தது.

2. தோலின் மேல் பாகத்தில் தேய்த்துவிட 'பென்சைல் பென்- சோவெட்' திரவக்கலவை மிகவும் சிறந்தது.

3. அசன்டால் (0.2 சதவிகிதம்) களிம்பு தோலில் தேய்த்தால் குணம் கிடைக்கும்.

4. ஐவர்மெய்டின் மருந்தினை ஊசிமூலம் (2 மிகி/கிலோ எடைக்கு) செலுத்தினால் நோய் குணமாகும்.

5. ஆட்டை அடைக்கும் பட் டிகள் காற்றோட்டம் உள்ளதாக இருந்தால் மிகவும் நல்லது. நெரிச லாக ஆட்டை அடைக்கக்கூடாது.

6. நிலங்களில் ஆடுகளைக் கிடை போடும்போது அவ்வப்போது மேற் படி இடங்களை மாற்றிக் கொண்டே இருக்க வேண்டும்.

7. ஆடு அடைக்கும் பட்டி களிலும், கொட்டகைகளிலும் 0.3 சதவிகிதம் அசன்டால் தெளித்தல் நல்லது.

8. ஆடுகளுக்குத் தீவனம் போடு வதில் கவனம் செலுத்தி, தாதுஉப்பு உயிர்ச்சத்து ஆகியவற்றின் பற்றாக் குறை ஏற்படாது பராமரித்தல் வேண்டும்.

ஆடுகளுக்கு இது போன்ற சொறிநோய் ஏற்பட்டால் மற்ற ஆடுகளுக்கும் பரவும். உடனடியாக அருகில் உள்ள கால்நடை உதவி மருத்துவரை அணுக வேண்டும். ஆடு வளர்ப்போரின் நன்மைக்காக பிரத்தியேகமாக ஆடு வளர்ப்புத் திட்டம் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர், வட ஆர்க்காடு-அம்பேத்கர், திரு வண்ணாமலை-சம்புவராயர், தர்ம புரி, சேலம், தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பணிபுரியும் களப்பணியாளர்களை அணுகி தகுந்த சிகிச்சையும் அறிவுரை யும் பெற கேட்டுக் கொள்ளப்படு கிறார்கள்.

தமிழரசு (அரசு ஏடு)

உங்கள் வீடு தேடி
வர வேண்டுமா?
உடனே
சந்தாதாரராகச்
சேருங்கள்!

ஆண்டுச் சந்தா: (தமிழ்) ... ரூ. 72
ஆங்கிலப் பதிப்பு ... ரூ. 36

தமிழரசில்
விளம்பரம் செய்து
பயனடையுங்கள்!

உள்ளே முழுப் பக்கம் ... ரூ.2000
உள்ளே அரைப் பக்கம் ... ரூ.1000

விவரங்கட்கு:

உதவி இயக்குநர்
'தமிழரசு' அலுவலகம்
அரசினர் தோட்டம்
சென்னை-600 002.

கிண்டி தேசியப் பூங்கா- ஒரு வரலாற்றுப் பின்னணி!

சென்னை நகரத்தின் மையப் பிர தேசத்தில் அமைந்த மிகப் பெரிய பசுமை யான வனப்பிரதேசமாக அமைந்துள்ளது கிண்டி தேசியப் பூங்கா. இது 550 புள்ளி மான்களையும் மற்றும் 100-க்கு அதிக மான வெளிமான்களையும் கொண்ட அழகான வனப்பிரதேசமாகும். இத னுடன் மேலும் சுமார் 120 வகையான பற்பல பறவை இனங்களும் இங்கு உள்ளன. இது இயற்கை எழிலை விரும்புபவர்களுக்கு ஒரு சொர்க்க பூமி ஆகும்.

பிரிட்டிஷ் அரசினர் ஆண்டு வந்த காலத்தில் திரு கில்பர்ட் ரிக்கட்ஸ் என்னும் தனிப்பட்ட குடிமகன் இந்த இடத்தில் ஒரு பெரிய கட்டடத்தை ஏற்படுத்தி வேட்டையாடும் இருப்பிட மாகப் பயன்படுத்தி வந்தார். இவர் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு 1821-இல் ரூபாய் 35,000-க்கு இந்த வனப் பிரதேசத்தை விற்றுவிட்டார். பிறகு இந்த இடம் பிரிட்டிஷ் ஆளுநரின் வாராந்திர முடிவில் தங்கும் இடமாகவும் வேட்டை யாடும் இடமாகவும் பயன்படுத்தப் பட்டது.

1947-இல் இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு ஆளுநரின் மாளிகை இந்த இடத்திற்கு மாற்றப்பட்டது. இந்தக் காலத்தில் சில புள்ளி மான்கள் இந்த வனப்பிரதேசத்தில் அறிமுகப்படுத்தப் பட்டு, பிறகு அவை எண்ணிக்கையில் வளர்ச்சி அடைந்துள்ளன. இப்பிரதேசம் தேசியப் பூங்காவாக அறிவிக்கப்பட்டது. தற்போது இப்பிரதேசத்தில் விலங்குகள் மற்றும் பறவைகள் வேட்டையாடுதல் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தேசியப் பூங்காவில் விலங்கு களின் பராமரிப்பு மிகவும் விருப்பம் உள்ளதாகும். இந்த விலங்குகள் வறட்சிக் காலத்தில் மிகவும் கவனத்தோடு பாதுகாக்கப்படுகிறது. வறட்சிக்காலத்தில் மிகவும் கவனத்தோடு பாதுகாக்கப்படு கிறது. வறட்சிக்காலத்தில் இங்குக் காணப்படும் புல் தரைகள் மிகவும் காய்ந்து காணப்படுவதால் விலங் கினங்கள் இவற்றை உண்ணமுடியாத நிலை ஏற்படுவதால் தமிழ்நாடு வனத் துறை நாள் ஒன்றுக்கு 1000 கிலோ பச்சைப்புற்களை இந்த விலங்குகளுக்கு உணவாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இந்தப் பச்சைப் புல் இனங்கள் கிண்டி தேசியப் பூங்காவில் குறிப்பிட்ட பத்து வகையான இடங்களில் கொடுக்கப்படுகின்றது. தற்போது இந்த விலங்குகளுக்குத் தண்ணீர் இழுவை யோடு (Power triller)) கிடைக்கப்பட்ட தண்ணீர்த் தொட்டிகளின் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு பூங்காவில் ஆங் காங்கே அமைக்கப்பட்ட செயற்கையான தண்ணீர்த் தொட்டிகளில் தண்ணீர் ஊற்றப்பட்டு விலங்குகள் பருகுவதற்கு உகந்த வகையில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

இப்பூங்காவில் சில பிறநாட்டுத் தாவர இனங்கள் வளர்க்கப்பட்டு வருகிறது. இத்தாவர இனங்களுடன் வேலிக்காத் தான் முற்செடிகளும் வளர்கின்றன. இம்முற்செடி விரும்பதகாத இனமாகும். ஆகையினால் இதனை உடனுக்குடன் வேருடன் பிடுங்கி எடுக்கப்படுகிறது. வெளிமான் இனங்கள் திறந்த பரந்த இடத்தில் மட்டும் வசிக்க விரும்புகின்றன. மற்றும் சின்ன புதர்களில் உள்ள முற்செடிகளை வேருடன் உடனுக்குடன் பிடுங்கி எடுக்கப்படுகிறது. வெளி மான்கள் விரும்பும் இடத்தை 'வெளிமான் மைதானம்' என அழைக் கிறோம்.

இப்பூங்காவில் குடியிருக்கும் பணி யாளர்களுக்கும் பூங்காவில் வாழும் விலங்குகளுக்கும் குடிநீர் வழங்குவது என் பது வனத்துறையின் பொறுப்புள்ள செயலாகக் கருதப்படுவதால் இது முக்கிய மான பணியாகும். இதுமட்டும் அல் லாது பொதுமக்களுக்குக் குடிநீர் வழங்க இந்தத் தேசியப் பூங்காவில் அமைந்துள்ள அப்பளாங்குளத்திலிருந்து குழாய் மூலம் எடுத்துவரப்பெற்று விநியோகிக்கப் படுகிறது. முக்கியமாக வேளச்சேரி பகுதி களிலும் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் சுமார் 1500 லிட்டர் தண்ணீர் பொதுமக்களுக்குத் தினமும் விநியோகம் செய்யப்படுகிறது.

குறிப்பாக, இப்பூங்காவில்வெளியிலிருந்து கொண்டு வரப்பட்ட செடி இனங் களோடு விலங்குகளும் இங்கு வாழ் கின்றது. சில பன்றிகள் இந்த வனப் பூங்காவில் உட்புகுந்து இனப்பெருக்கம் செய்து வருகின்றது. எனவே, இவ் வகையான வெளி விலங்குகளைப் பொறி வைத்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேலும், நாய்கள்

சுகாதோ நத், இ.வ.பா.,
வன உயிரினக் காப்பாளர்

அத்துமீறி நுழைந்து புதிதாகப் பிறந்த மான் குட்டிகளைத் தின்று வருகின்றது. எனவே, இந்த நாய்களை உடனுக்குடன் வெளியேற்றவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

கணக்கெடுப்பது எப்படி?

இப்பூங்காவினுள் வசித்துவரும் வெளிமான் மற்றும் புள்ளிமான் இனங்களின் இனப்பெருக்கத்தை அறிந்துகொள்வதற்கு விலங்கினக் கணக்கெடுப்பு ஒரு முக்கியமான பணியாகும். இக்கணக்கெடுப்பு ஆண்டிற்கு இரண்டு முறை ஜுன் மற்றும் டிசம்பர் மாதங்களில் வனத்துறையினால் செய்யப்படுகிறது.

வன உயிரினக் காப்பாளர் அவ்வாண்டுக் கணக்கெடுப்பை, செய்தித் துறை, தொலைக்காட்சி மூலம் அறிவிப்பார். மான்கள் கணக்கெடுப்புக்காக இந்த வனப்பகுதி 13 நீளத் துண்டுகளாகப் பிரிக்கப்படுகிறது. இது மேற்கே தொடங்கி கிழக்கே முடிகின்றது. கணக்கிடும் நாள் அன்று அதிகாலையில் வனத்துறை அதிகாரிகள் ஒவ்வொரு பகுதிக்கும் தலைவராக இருப்பார். இவரின் கீழ் மான் கணக்கெடுக்க வந்த வன விலங்குப் பாதுகாப்பில் விருப்பம் உள்ள நபர்கள் (தொண்டர்கள்) இருப்பார்கள். ஆக, இந்த 13 குழுக்களும் ஒரே நேரத்தில் இப்பணி துவக்கப்படும். இப்பணி தொடங்கும் முன் வன உயிரினக் காப்பாளரால் வகுப்பு எடுக்கப்படும். பின் அனைவரும் கணக்கெடுப்பு முடித்த நிலை அனைத்தும் ஒன்று சேர்த்து வன உயிரினக் காப்பாளர் அவ்வாண்டுக் கணக்கெடுப்பை, செய்தித்துறை, தொலைக்காட்சி நிலையம் முதலியவற்றிற்கு அறிவிப்பார். கணக்கெடுப்பில் 178 புள்ளிமான்கள் ஒரு சதுர கி.மீ.க்கு இருக்கிறது என தெரிய வருகிறது. இது ஒரு முக்கியமான முன்னேற்றமாகும்.

இப்பூங்கா தமிழ்நாட்டிலேயே மிகப் பரந்த முக்கியமான ஒரு பூங்காவாகும். எம்.என்.எஸ். நிறுவனம் (Madras Naturalist Society) இந்தப் பகுதியில் சிறப்பான படிப்பு உணர்வுகளை ஏற்படுத்துவதில் ஆர்வம் காட்டி வருகின்றது. சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை பற்றி அறிய வரும் பலவேறு குழுக்களுக்கு இந்த இயற்கையான வனப் பிரதேசம் பார்வையிடத் தகுந்த இடமாக அமைந்துள்ளது. எனவே, இப்பிரதேசம் சென்னை நகரத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க இடமாக இருப்பதால், எப்பொழுதும் கவனமாகப் பாதுகாக்கப்பட்டு வர வேண்டும்.

மானே.. மானே.. மானே..

துள்ளியோடும் புள்ளிமான்களைக் காண்பதிலே மகிழாதார் இருக்க முடியாது.

பெரும்பாலும் மான்களைப் பெண்களுக்கு ஒப்பிடுவது கதாசிரியர்களுக்கும், கவிஞர் பெருமக்களுக்கும் வாடிக்கை. சீதா பிராட்டியார் மாயமானைத் துரத்திக்கொண்டு ஓடியதை இராமாயணத்திலே காணும் நாம், மேலும் பல புராணங்களிலும், வரலாற்றுக் கால எழுத்தோவியங்களிலும் கூட மான்களைப் பார்க்க முடியும்.

அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு போன்ற சில சங்க இலக்கியங்களிலும் மான்கள் மகிழ்ந்துலாவுகின்றன.

இன்றுள்ள பல வனவிலங்குச் சரணாலயங்களிலே கூட - எந்த விலங்கை நாம் பார்க்க முடிகிறதோ இல்லையோ, கட்டாயம் ஏராளமான மான்களைக் கண்டு களித்திட முடியும். கும்பல் கும்பலாக அவை மேய்வதையும், தரையில் அடித்த பந்தாகக் கால்கள் மண்ணில் படாதபடி தாவித்தாவி அவை காற்றோடு காற்றாகப் பறப்பதையும் காணக் கண் கோடி வேண்டும்.

நம்மில் பலரும் - புள்ளிமான்களைத்தான் பார்த்திருக்கிறோம். இதுதான் கலைமான் எனப்படுவது. ஆனால் மான்களின் வகை இது மட்டுமே அல்ல; சாம்பர் மானில் தொடங்கி இன்னும் சில வகை மான்கள் உள்ளன.

வெளிமான் என்றோர் இனமுண்டு; இதன் வகையறாவைச் சேர்ந்ததே கலைமான். பல கிளைகளுள்ள கொம்புகள் உடையவை இவை; இந்தக் கொம்பானது, இளம்பிள்ளைகளின் பற்களைப் போல, விழுந்து முளைக்கக் கூடியவை.

கலைமானில், கடமான் என்றோர் இனமும் உண்டு. இதுதான் அதிக அளவிலே நாம் காணுகின்ற புள்ளிமான். இவ்வகை மான்களில் பெண்மானை உழை என்றும், ஆண்மானைக் கலை என்றும் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. கலைமான்களின் கொம்பு கவைக்கோடு அல்லது கவை மருப்பு எனப்படும்.

இரலைமான் என்றோர் மான் வகை உண்டு; இதன் கொம்புகளில் கிளைகள் இல்லை; ஆனால் அதை முறுக்கேற்றியதைப் போலக் காணப்படும். அந்தக் கொம்புகளைச் சிலர் ஆயுதங்களாகப் பயன்படுத்துவதும் உண்டு.

சில விலங்குகள், குட்டி போட்டதும் அதை விட்டு மட்டுமல்ல; ஆணும் பெண்ணும் கூடத் தனித்தனியே பிரிந்து போய்விடும். ஆனால், மான்கள் அப்படியல்ல, குடும்பம் குடும்பமாகத்தம் பிள்ளை குட்டிகளோடு வாழும்.

வனங்களிலே உள்ள சிறுத்தைப்புலி, செந்நாய் போன்ற ஆபத்தான விலங்குகளுக்கு - மான்களே மகிழ்ச்சி தரும் உணவாகிறது.

மேலே நாம் குறிப்பட்ட கடமானை, மலைமான் என்றும் குறிப்பிடுவது உண்டு.

மான் இனத்தில் இவ்வகை மான்கள் மிகவும் அபூர்வமானதாகவே காணப்படும்; இரவில்தான் இரைதேடி இவை வெளியிலே உலாவரும்; பகலில் பார்ப்பது அரிது.

ஆனால் மற்றவைகளைப் போலவே கடமானான இந்த மலை மானும் தனியே காணப்படமாட்டாது; மந்தை மந்தையாகவே வெளிப்படும்.

புலிதான் இதற்கு நேர் எதிரி. ஏனெனில், கடமானால் எழுப்பப்படும் மெலிதான ஓசையைப் புரிந்து கொள்ளும், புலிதான் வேகப் பாய்ச்சலில் வேட்டைக்கு வருமாம்.

அதே நேரத்தில், கடமானுக்கு மிகுந்த மோப்ப சக்தி உண்டு; ஆகவே, அவ்வளவு எளிதில் இவை புலிகளிடமோ, வேட்டை நாய்களிடமோ பிடிபடுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

— பி.எல். ராஜேந்திரன்

நெல் உற்பத்தியைப் பெருக்குவது எப்படி?

வல்சலம் மாணிக்கவாசகம்
வேளாண்மைத்துறை
இணை இயக்குநர்
திருநெல்வேலி

வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு தானிய உற்பத்தியை உயர்த்துவது மிகவும் இன்றியமையாதது ஆகும். இந்த இலக்கினை அடைந்திட அரசு பல வழிகளிலும் முனைப்புடன் செயல் பட்டு வருகிறது. வேளாண் விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்படும் புதிய தொழில் நுட்பங்கள் உடனுக்குடன் விவசாயிகளைச் சென்றடைய வேளாண் துறை களப் பணியாளர்கள் கிராமங்களில் முகாம் மேற்கொண்டு தொழில் நுட்பங்களைப் பரவலாக்குகின்றனர்.

அரசின் குறிக்கோள்

தற்பொழுது அரசின் குறிக்கோள் கார்ப் பருவத்தில் ஏக்கருக்கு 4.0 மெ.டன் நெல் உற்பத்தி செய்வதாகும். அதாவது ஏக்கருக்கு 2½ மேனி மகசூல் பெறுவதாகும். பல முன்னோடி விவசாயிகள் இச் சாதனையை ஏற்கெனவே அடைந்துள்ளனர். இதனை ஒப்பு நோக்கு கையில் கார்ப் பருவத்தில் ஏக்கருக்கு 4.0 மெ. டன் என்பது எளிதில் சாதனை புரியக் கூடிய ஒன்றே. இச் சாதனையை அனைத்து விவசாயிகளும் பெற்றிடப் பின்வரும் தொழில் நுட்பங்களைத் தவறாது கடைப்பிடித்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

கோடை உழவு

கோடை மழை பெய்தவுடன் கோடை உழவு செய்தல் வேண்டும். இவ்வாறு செய்வதால் தொடர்ந்து பெறப்படும் மழை வயலில் சேகரிக்கப்படுகிறது. மண் அரிமானம் தவிர்க்கப்படுகிறது. களைகள் கட்டுப்படுத்தப்படுகிறது. உரிய நேரத்தில் விதைப்புப் பணி மேற்கொள்ள ஏதுவாகிறது.

உயர் விளைச்சல் ரகங்கள்

கார்ப் பருவத்திற்கு ஏற்ற உயர் விளைச்சல் ரகங்கள் ஐ.ஆர். 50, அம்பை 16, அம்பை 17, அம்பை 18, ஆடுதுறை 36, டி.கே.எம். 9 போன்ற ரகங்கள் ஆகும். கார்ப் பருவத்தில் பிந்திய கால விதைப்பு (ஜூலை மாதம்) மேற்கொள்ளும் போது குலைநோய்த் தாக்குதலுக்கு இலக்காகும் ஐ.ஆர். 50 டி.கே.எம்.9 போன்ற ரகங்களைத் தவிர்க்க வேண்டும்.

சான்றிதழ் பெற்ற விதைகளில் முளைப்புத்திறன், புறச்சத்தும், இனச்சத்தும் போன்றவை பராமரிக்கப்படுவதால் 10.15 சதம் உயர் மகசூலுக்கு வழி வகை காணலாம்.

விதை நேர்த்தி என்பது விதையுடன் உயிர் உரங்கள், பூஞ்சாள மருந்துகள் போன்றவைகளை அளந்து விதைப்பதாகும்.

ஒரு ஏக்கருக்குத் தேவைப்படும் 24 கிலோ விதைக்கு 2 பொட்டலங்கள் அசோஸ் பைரில்லத்தை விதைப்பதற்கு அரை மணி நேரம் முன்னதாக அரை லிட்டர் ஆறிய வடிகஞ்சியுடன் நன்கு விரவி அரை மணி நேரம் நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் நல்ல வாலிப்பான நாற்றுகள் பெறலாம்.

ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பண்டாசிம் அல்லது திரம் போன்ற பூஞ்சாள மருந்தினை விதைப்பதற்கு 24 மணி நேரம் முன்னதாகக் கலந்து வைத்திருந்து விதைப்பதால் நாற்றங்காலில் தோன்றும் நோய்கள் தவிர்க்கப் படுகிறது.

நாற்றங்கால் நுட்பம்

ஒரு ஏக்கருக்கு 8 செண்ட் நாற்றங்கால் தேவை. மேட்டுப்பாத்தி நாற்றங்கால் அமைத்திட வேண்டும். இதனால் வடிகால் வசதி கிடைப்பதுடன் பின்செய் நேர்த்திப் பணிகள் மேற்கொள்ள ஏதுவாகிறது.

நாற்றங்காலில் ஒரு செண்டுக்கு 2 கிலோ டை அமோனியம் பாஸ்பேட் உரமிடுவதால் நல்ல இனம் நாற்றுகள் கிடைக்கின்றன. உரிய காலத்தில் பறித்து நடவு செய்ய உள்ள இடங்களில் மட்டும் இதனை மேற்கொள்ள வேண்டும். நடவு தாமதப்படும் இடங்களில் நாற்று பறிப்பதற்கு 10 தினங்களுக்கு முன்பாக செண்ட் ஒன்றுக்கு அரை கிலோ டி.ஏ.பி. இட வேண்டும்.

நாற்றங்காலில் தோன்றும் பூச்சிகளைக் கட்டுப்படுத்திட விதைத்த 10-ஆம் நாள் செண்டுக்கு 175 கிராம் காப்போபியூரான் இட வேண்டும். இவ்வாறு செய்வதால் நாற்றங்காலில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் கட்டுப்படுத்துவதோடு நடவு வயலில் முதல் 45 நாட்களுக்கு இப்பூச்சிகளின் தாக்குதல் தவிர்க்கப்படுகிறது.

நடவு வயலில் தொழில் நுட்பம்

நடவு வயலில் ஏக்கருக்கு 5 டன் தொழு உரம் அல்லது 2.5 டன் தழை உரம் இட வேண்டும். இவ்வாறு செய்வதால் பயிருக்குத் தேவையுறும் சத்துகள் கிடைப்பதோடு மண்

> ★ ஒவ்வொன்றிற்கும் 'ஏன்' என்ற கேள்வியைப் போட்டு ஆராய்ச்சி நடத்தும் காலம் இது. மனிதருக்கு எவ்வளவு தூரம் பயன்படுகின்றது என்பதைப் பொருத்துதான், ஓர் பொருளுக்கு மதிப்பு வருகின்றது. இதற்காகத்தான் நாம் உழைக்கின்றோம்.
>
> — தந்தை பெரியார்

ணின் வளம் அதிகரிக்கிறது.

ஒவ்வொரு விவசாயியும் பயிர்ச் சாகுபடிக்கு முன்னதாக மண் பரி சோதனை செய்து பரிந்துரைப்படி உரமிட வேண்டும். இவ்வாறு தேவை அறிந்து உரமிடுவதால் உரச் செலவில் சிக்கனம் காணலாம். மண்ணின் வளம் காக்கப்படுகிறது.

நாற்றுக்களை விதைத்த 18 முதல் 22 நாட்களில் உரிய வயதில் நடவு மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு உரிய காலத்தில் நடவு செய்வதால் பயிர் நடவு வயலில் எளிதில் நிலை கொண்டு நன்கு வளரும்.

நாற்றுகளைக் குத்திற்கு 2.3 நாற்றுகள் வீதம் வைத்து 2.3 செ.மீ. ஆழத்தில் மேலாக நடவு செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதால் பயிர் எளிதில் நடவு வயலில் நிலை நிறுத்திக் கொண்டு நன்கு தூர் வெடிக்கும்.

பயிர் மகசூலில் பயிர் எண் ணிக்கை பராமரிப்பு மிகவும் முக்கிய மான ஒன்றாகும். அதிகமாகத் தூர் வெடிக்கும் ரகங்களுக்கு 15 x 10 செ.மீ. இடைவெளியில் சதுர மீட் டருக்கு 66 குத்துகள் இருக்கும் வண்ணம் நடவு மேற்கொள்ளப்பட வேண்டும். மிதமாகத் தூர் வெடிக் கும் ரகமான அம்பை 16 போன்ற ரகங்களுக்கு 15 x 8 செ.மீ. இடை வெளியில் சதுர மீட்டருக்கு 80 குத்துக்கள் இருக்கும் வண்ணம் நடவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

நடவுக்கு முன்பாக ஏக்கருக்கு 4 பொட்டலம் அசோஸ் பரில்லம் உயிரின உரத்தைப் போதுமான தொழு உரத்துடன் கலந்து சீராகத் தூவ வேண்டும்-

பின் ஏக்கருக்கு 10 கிலோ சிங்சல்பேட் நுண் உரமிடல் வேண் டும். கிங்சல்பேட் தூள் உரமிடு வதால், பயிர் மகசூல் அதிகரிக் கிறது.



களைகள்

நடவு வயலில் தோன்றும் களை களைக் கட்டுப்படுத்த நட்ட 3.5 நாட்களில் பூட்டோகுளோர்களைக் கொல்லி ஏக்கருக்கு 800-1000 மினி (அ) அலிலோ பாஸ் 500 மினி மருந்தினை 20 கிலோ மண லுடன் கலந்து வயலில் 2.5 செ.மீ. நீர் நிறுத்தி சீராகச் சீராகத் தூவ வேண்டும். பின்பு நீரை அடிக்கக் கூடாது.

நட்ட 10-ஆம் நாள் ஏக்கருக்கு 4 கிலோ நீலப்பச்சைப் பாசி விடு வதால் பயிருக்குப் பயிர்ச் சந்துகள் கிடைப்பதோடு மண்ணின் வளம் காக்கப்படுகிறது.

மேலும், பயிர்களுக்குத் தேவை யான சத்துகளைப் பிரித்து அளிப் பதன் மூலம், பயிருக்குத் தேவைப் படும் சத்துகள் சீராகக் கிடைக் கிறது. மேலும் இழப்புகள் தவிர்க்கப் படுகிறது. எனவே, பயிருக்குத் தேவையுறும் தழைச் சத்தினை நான்கு சமப் பாகங்களாக பிரித்து ஒன்றை "அடி" உரமாகவும், மீதம் உள்ளவற்றைத் தூர் கட்டும் பருவம் (நட்ட 15-ஆம் நாள்) பூக்கும் பரு வம், (நட்ட 30-ஆம் நாள்) பால் பிடிக்கும் பருவம், (நட்ட 45-ஆம் நாள்) என மூன்று தவணைகளில் இட வேண்டும்.

வேப்பம் புண்ணாக்கு

முதல் மேலுரம் இடும்பொழுது தழைச்சத்துடன் வேப்பம் புண் ணாக்கை 5:1 என்ற விகிதத்தில் கலந்து ஓர் இரவு வைத்திருந்து இட வேண்டும். இவ்வாறு இடுவதால் தழைச்சத்து பயிருக்குச் சீராகக் கிடைக்கின்றன. சாம்பல் சத்தில் 50 சதவிகிதத்தை அடி உரமாகவும் மீத முள்ள 50 சதவிகித்தை இரண் டாமாவது மேல் உரத்துடன் கலந்து இட வேண்டும். மணிச்சத்து முழு வதும் அடி உரமாக இட வேண்டும்.

அதுபோல் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளைப் கடைப் பிடித்து பயிர்ப் பாதுகாப்பு பணி மேற்கொள்ள வேண்டும்.

காய்ச்சலும் பாய்ச்சலும் என்ற முறையில் கதிர் உருவாகும் பருவம் பால் பிடிக்கும் போன்ற காலங் களில் 5 செ.மீ. நீர் நிறுத்தியும் பிற காலங்களில் 2.5 செ.மீ. நீர் நிலத் திலும், அறுவடைக்கு 10.15 நாட் களுக்கு முன்பாக நீரை வடித்தும் நீர் நிர்வாகம் மேற்கொள்ளப்பட வேண் டும்.

மேற்கூறப்பட்ட அனைத்துத் தொழில் நுட்பங்களையும், வேளாண் துறைத் களப் பணியாளர்களின் உதவி கொண்டு செயல்படுத்தி, கார்ப் பருவ நெல் சாகுபடியில் ஏக்கருக்கு 4.0 மெ.டன் நெல் மகசூல் பெறலாம்.

★ ஒரு சமூகம் முன்னேற்றமடைய வேண்டுமானால் முதலாவது கல்வி, இரண்டாவது பொருளாதாரம் இவ்விரண்டும் பெற்றிராத சமூகம் முன்னேற முடியாது.

— தந்தை பெரியார்

கடலூர் துறைமுகம் - ஒரு கண்ணோட்டம்

தென்னார்க்காடு மாவட்டத்தில் அமைந்துள்ள கடலூர் துறைமுகம் ஒரு முக்கியமான நடுத்தரத் துறைமுக மாகும். கடிலம் நதியும் பரவானர் நதியும் சங்கமிக்கும் இடத்தில் இத்துறைமுகம் அமைந்துள்ளது. சென்னை யிலிருந்து இத்துறைமுகம் சுமார் 183 கி.மீ. தொலைவில் தெற்கே அமைந்துள்ளது.

கடற்கரையிலிருந்து ½ - 2 கி.மீ. தொலைவில் கப்பல்கள் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தப்படுகின்றன. இங்கே பலவிதமான பொருட்கள் கையாளப்படுகின்றன. ஒரே ஆண்டில் அதிகபட்சம் ரூ.5.45 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் கையாளப்பட்டுள்ளன. 3வது, 4வது திட்டக்காலங்களில் ரூ.2 கோடி செலவில் இத்துறைமுகம் மேம்படுத்தப்பட்டது. ஒரே நேரத்தில் மூன்று கப்பல்களை இத்துறைமுகம் கையாளத்தக்க வசதிகளைப் பெற்றுள்ளது. கையாளப்படும் சரக்குகளைப் பொறுத்து நாளொன்றுக்கு 2500 மெட்ரிக் டன் எடையுள்ள பொருட்கள் அனுப்பப் படுகின்றன.

இங்கு கையாளப்படும் பொருட்களில் முக்கியமாக இறக்குமதி செய்யப்படுபவை உரம், உணவு தானியங்கள் ஆகும். வெங்காயம், பெல்ட்ஸ்பர், தவிடு மற்றும் பொதுச் சரக்குகள் சிங்கப்பூர், மலேசியா நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆண்டு முழுவதும் இத் துறைமுகம் பணியாற்றுகிறது. எனினும், வடகிழக்குப் பருவக்காற்றின் காரணமாக அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான காலகட்டத்தில் பலத்த காற்றினாலும், கடல் கொந்தளிப்பாலும் இத்துறைமுகம் பாதிக்கப்படுகிறது.

இந்தத் துறைமுகம் சாலைகளால் நன்கு இணைக்கப் பட்டுள்ளது. கடலூர் துறைமுகத்திலிருந்து அரை கிலோ மீட்டர் தொலைவில் சென்னை, திருச்சி நெடுஞ்சாலை உள்ளது. இத்துறைமுகம் மீட்டர் கேஜ் ரயில் பாதையால் கடலூருடன் இணைக்கப்பட்டுள்ளது.

கப்பல்களிலிருந்து சரக்குகளை இறக்கவும் ஏற்றவும் வசதியாக 5,575 அடிநீள wharf உள்ளது. இங்கு மூன்று கான்கிரீட் கிடங்குகளிலும் 2 திறந்தவெளி கிடங்குகளும், 80,000 ச.மீ. பரப்பளவுள்ள மணல் பரப்பும் அமைந்துள்ளது. இங்கு, 10 டன் எடையை தூக்க வல்ல பளுதூக்கியும் (Crane) 20 டன் எடைத் திறன் கொண்ட எடைபாக்கும் இயந்திரமும் (Weigh bridge) உண்டு.

மேட்டூர் மின் நிலையத்திற்கு நிலக்கரி கொண்டு செல்வது பற்றி ஆராயப்பட்டு வருகிறது. தற்போது சென்னையில் நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டு அங் கிருந்து சேலத்திற்கு ரயில் வண்டிகள் மூலம் கொண்டு செல்லப்படுகிறது. கடலூர் துறைமுகம் மேம்படுத்தப் பட்டால், நிலக்கரியை நேரடியாகக் கடலூரில் இறக்கி அங்கிருந்து சேலத்திற்கு இரயிலில் கொண்டு செல்ல லாம். கடலூரில் மின்நிலையம் அமைக்க தமிழ்நாடு மின்வாரியம் ஏற்கெனவே முடிவு செய்துள்ளது. இத் திட்டத்திற்குத் தேவையான அனைத்து நிலக்கரிகளையும் இத்துறைமுகம் மூலமே இறக்குமதி செய்து கொள்ளலாம்.

சிப்காட்டில் அமைந்துள்ள டேன் ஃபேக் (TANFAC) நிறுவனம் தனக்குத் தேவையான அனைத்துப் பொருட் களையும் இத்துறைமுகத்தின் மூலம் இறக்குமதி செய்து கொள்கிறது. 265 டிகிரி முதல் 295 டிகிரியில் புதிய கலங்கரை விளக்கம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

அபாய காலங்களில் கப்பல்களுக்கு அபாய சமிக்ஞை களையும் தேவையான அறிவுரைகளையும் இத்துறைமுகம் வழங்குகிறது.

இத்துறைமுகத்திற்கு வந்து போகும் கப்பல்களுக்கு சான்றிதழ்களை வழங்குவது, கப்பலுக்கும் கடற்கரைக்கு மிடையே சமிக்ஞைகளை அளிப்பது, கப்பல்களை ஆய்வு செய்து லைசன்ஸ் வழங்குவது, இறக்குமதிக் கட்டணங் களை வசூலிப்பது, துறைமுக வாகன ஓட்டுநர்களைத் தேர்ந்தெடுத்தல் ஆகியவை இத்துறைமுகத்தின் சில முக்கியப் பணிகளாகும்.

இது தவிர, Merchant Shipping Act 1958-ன்படி கப்பல்களை அளந்து பதிவு செய்தல், அபாயத்திலுள்ள



அதிமதுரச் சொல்லுடையார்!

திருவாளர் சி.என். அண்ணாதுரை அவர்களை அறியாத தமிழர் இரார். தென்னாட்டில் அவரைத் தெரியாதார் யாரும் இரார். இவர் ஆங்கிலத்தில் பண்டிதர். பட்டத்தால் மட்டும் பண்டிதராய்த் திரிபவர் பலர் உளர். எனில் எழுத்திலும் பேச்சிலும் பழுத்த மொழியாட்சியிலும் திறனுடையோர் மிகச் சிலரே. அத்தகைய நல்ல நடை வல்லவர் தம் வரிசையிலே முன் அணியில் இடம் உடையவர் இவர்.

தமிழிலோ அமிழ்துமிழும் சொல் வளமும், உணர்வெழுப்பும் தொடர்ச்சிச் செறிவும் குரவனிடம் கல்லாமல் தான் பயின்று திறம்பெற்ற சொல்லின் செல்வர், தமிழ் இளைஞர், 'புத்துலகு' விரைந்து தொழில் கேட்க நிரந்திரிது சொல்லுதல் வல்ல நாவலர்.

அதிமதுரச் சொல்லுடையார்; தளராத உள உரனும், வளரறிவும், வளமலியும் தன்னுடைமையாகக் கொண்டோர்.

— நாவலர் ச. சோமகந்தர பாரதியார்

கப்பல்களையும், மாலுமிகளையும் காப்பாற்றுதல், மோசமான நிலையிலுள்ள கப்பல்களைத் தடுத்து நிறுத்தல், விபத்துக்களைப் பற்றி விசாரணை செய்தல் ஆகியவை மைய அரசுக்காக இத்துறைமுகம் புரியும் இதரப் பணிகளாகும்.

கடலூர் துறைமுகத்தில் கடந்த ஆறு ஆண்டுகளில் கையாளப்பட்ட சரக்குகளின் விவரம் வருமாறு:

1984-85-ஆம் ஆண்டு கப்பல்களின் எண்ணிக்கை 26, ஏற்றுமதி 18,289.5 மெ.டன், கப்பல்களின் எண்ணிக்கை 20, இறக்குமதி 3,49,539 மெ.டன், மொத்தம் 36,78,28,500; 1985-86-ஆம் ஆண்டு கப்பல்களின் எண்ணிக்கை 16, ஏற்றுமதி 22,540.0 மெ.டன், கப்பல்களின் எண்ணிக்கை 20, இறக்குமதி 2,62,794 மெ.டன், மொத்தம் ,2,85,334; 1986-87-ஆம் ஆண்டு கப்பல்களின் எண்ணிக்கை 12, ஏற்றுமதி 10,725.765 மெ.டன், கப்பல்களின் எண்ணிக்கை 10, இறக்குமதி 1,45,419 மெ.டன், மொத்தம் 1,56,145; 1987-88-ஆம் ஆண்டு கப்பல்களின் எண்ணிக்கை 6, ஏற்றுமதி 9,493 மெ.டன், கப்பல்களின் எண்ணிக்கை 2, இறக்குமதி 25,197 மெ.டன், மொத்தம் 34,690; 1988-89-ஆம் ஆண்டு கப்பல்களின் எண்ணிக்கை 2, ஏற்றுமதி 3,192 மெ.டன், கப்பல்களின் எண்ணிக்கை 17, இறக்குமதி 1,97,534 மெ.டன், மொத்தம் 2,00,726; 1989-90-ஆம் ஆண்டு கப்பல்களின் எண்ணிக்கை 2, ஏற்றுமதி 1,001 ஆடுகள், கப்பல்களின் எண்ணிக்கை 20, இறக்குமதி 2,68,602 மெ.டன், மொத்தம் 2,68,062.

கடந்த ஆண்டுகளில் வரவு செலவு விவரம்: 1985-86-ஆம் ஆண்டு வரவு 22,61,305, செலவு 20,65,206; 1986-87-ஆம் ஆண்டு வரவு 13,04,561, செலவு 22,92,741; 1987-88-ஆம் ஆண்டு வரவு 18,91,405, செலவு 23,25,653; 1988-89-ஆம் ஆண்டு வரவு 28,03,060, செலவு 25,66,283; 1989-90-ஆம் ஆண்டு வரவு 21,80,759, செலவு 32,46,313.

இத்துறைமுகத்தின் மேம்பாட்டுக்காக எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பகுதி 2 திட்டத்தின் கீழ் ரூ.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நிதி ஆதாரங்கள் அதிகம் ஒதுக்கப்பட்டால், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் மேட்டூர் அனல் மின் நிலையம் ஆகியவற்றின் தேவைகள் அடிப்படையில் கடலூர் துறைமுகத்தை நன்கு மேம்படுத்தலாம். இச் சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்தி, இதைப் பெரிய துறைமுகமாக உருவாக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை!

—என். இளங்கோ



தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்:

பாரதியார் நினைவு நாள் விழா

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில், பாரதியார் நினைவுநாள் விழா, 11.9.93 அன்று சென்னை மயிலை ரசிக ரஞ்சனி சபாவில் நடைபெற்றது.

மன்றத் தலைவர் திரு குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் கல்லூரி மற்றும் பள்ளி மாணவ - மாணவியர்களிடையே பேச்சுத் திறனை ஊக்குவிக்கும் பொருட்டு, பேச்சுப் போட்டி ஒன்றிற்கு ஏற்பாடு செய்திருந்தது. இப்போட்டியில் பள்ளி மாணவ-மாணவியர் 204 பேரும், கல்லூரி மாணவ-மாணவியர் 45 பேரும் கலந்துகொண்டனர்.

நான்கு தமிழறிஞர்களைக் கொண்ட நடுவர் குழுவால் பள்ளி மாணவர்கள் நால்வரும், கல்லூரி மாணவர்கள் நால்வரும் முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு ஆறுதல் பரிசிற்கெனத் தேர்வு செய்யப்பட்டனர்.

தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு முதல் பரிசு ரூ.1,000, இரண்டாவது பரிசு ரூ.500, மூன்றாவது பரிசு ரூ.250, ஆறுதல் பரிசு ரூ.100 ரொக்கத் தொகையாக வழங்கவும், ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும், போட்டியில் கலந்து கொண்ட 8 குழந்தைகளுக்கு நினைவுப் பரிசும் வழங்கவும் முடிவு செய்திருந்தது.

மாண்புமிகு நீதியரசர் திரு கே.எஸ். பக்தவத்சலம் அவர்கள் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி மாணவ-மாணவியருக்குப் பரிசுகள் வழங்கினார்.

மன்றச் செயலாளர் திரு ஆர்.எஸ்.மனோகர் நன்றி நவின்றார்.

இவ்விழா முடிவில் சென்னை அபிநயா நாட்டியாலயா பள்ளி மாணவிகள் மற்றும் பத்மா சேஷாத்திரி பள்ளி மாணவிகள் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.



தமிழரசு

1-10-1993

புதிய சுவடி M 8676
Licence No. TN/MSD/PP-23

தமிழரசு

தாமரைச் செல்வி - பாலசுந்தரம்:
அரசு நலஞ்சிட்டீட் உருவாக்கும் நிகழ்ச்சி
(30.8.1993)



திருநெல்வேலியிலுள்ள மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத்துக்குச் சொந்தக் கட்டடம்

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத்துக்குத் தமிழக அரசு, திருநெல்வேலியிலிருந்து 4 கி.மீ. தொலைவில் தென்காசி சாலைப் பகுதியில் அமைந்துள்ள அபிஷேகப்பட்டியில் 221·30.0 எக்டேர் நிலம் ஒதுக்கியிருக்கிறது. இதில் 40 ஆயிரம் சதுர அடி பரப்பில் ரூபாய் 200 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் நிர்வாக அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும்.

இந்தப் பணி, இவ்வாண்டு ஜூலை மாதம் தொடங்கப்பட்டது. 1994 மார்ச் மாத இறுதிக்குள் நிர்வாக அலுவலகக் கட்டடத்தின் 'சி' பிரிவு கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த ஆண்டு செப்டம்பர் இறுதிக்குள் கட்டடத்தின் முழுப் பகுதியும் கட்டி முடிக்கப்படும்.

டாக்டர் வி. வசந்திதேவி
துணைவேந்தர்

டாக்டர் எஸ். செல்வநாதன்
பதிவாளர்

மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் – திருநெல்வேலி

ஆசிரியரும் வெளியீட்டாளரும்: இரா. எம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

இந்த இதழில்...

கிராமப் பொருளாதாரத்தில் கால்நடைகளின் பங்கு எந்த விதத்திலும் குறைந்து விடவில்லை! —மாண்புமிகு முதல்வர் ... 2

காந்தி வழியில் உண்மையான கிராமராஜ்யம் அமைப்போம்! —மாண்புமிகு முதல்வர் ... 6

சுற்றுலாப் பயணிகளின் சொர்க்க பூமி —மாண்புமிகு முதல்வர் ... 9

இடைத்தேர்தல்: முடிவுகள் ... 13

இல்லந்தோறும் அறிவொளி ... 19

பொம்மைக் கொலு ... 24

குறளின் குரல் ... 27

ஆர்க்காடு நவாபுகளும் அவர்களது நாணயங்களும் ... 30

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்: தோற்றமும் வளர்ச்சியும் ... 33

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்: பாடலும் படிப்பினையும் ... 37

சிதம்பரத்தில் சிறந்து வரும் நாட்டியாஞ்சலி ... 41

நெல்லை மாவட்டத்தில் பால் வளம் ... 43

மனநலம் (டாக்டர் பதில்கள்) ... 45

காலணி தயாரிப்பில் மகளிர் ... 47



கலையழகு வாய்ந்த சிற்பங்கள்!

— மாண்புமிகு முதல்வர்

உயிரோட்டம் வாய்ந்த சிற்பங்களையும், சிலைகளையும் வடிப்பதில் நமது தமிழக மக்கள், தலை சிறந்து விளங்கினார்கள். மண், மரம், சுதை, செங்கல், கல், பளிங்கு, தந்தம், பித்தளை, வெண்கலம், செம்பு, இரும்பு, பொன், ஐம்பொன் போன்ற பல பொருட்களால், சிலைகள் வார்க்கப் பட்டன; படிமங்கள் சமைக்கப்பட்டன. நவீன உலோகவியல், அதாவது நுணுக்கங்களையெல் லாம் அன்றைக்கே நம் தமிழர், இந்தச் சிலைகளை வடிப்பதில் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்று அறியும்போது, நாம் பெருமையும், பெருமிதமும் கொள்கிறோம்.

நம்நாட்டுச் சிலைகள், சிற்பங்கள், கலையழகு வாய்ந்தவை, நேர்த்தியானவை என்பது, நிலை பெற்றுவிட்ட உண்மை. ஆனால், அவைகளுக்கு மேலும் தனிச் சிறப்புகள் உண்டு. நாம் அவற்றைக் கண்ணுறும்போது, அவை வெறும் உருவங்கள் மட்டும்தான், என்று நம் மனதில் தோன்றாது. அவை நம்மை ஆன்மீக உணர்வுக்கு அழைத்துச் செல்லும் வழிகாட்டி என்கிற நிம்மதியும் வழங்கு கின்றன. சரியாகச் சொன்னால், நமது சிற் பங்கள், அயல்நாட்டுச் சிற்பங்களைப் போன்று, வெறும் காட்சிப் பொருளாக இல்லாமல், கடவுளின் பெருமைகளைப் போதிக்கும் காட்சிப் பொருளாகவும் அமைந்திருக்கின்றன. கடவுள் நம்பிக்கை, நம்மவர்களின் வாழ்க்கை முறையில் இயற்கையாகவே ஏற்பட்ட பற்று, பாசமாகும்.

—'புரட்சித்தலைவியின் முழக்கம்' என்னும் நூலிலிருந்து.

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

புரட்டாசித் திங்கள் - 15

மலர்:24 இதழ்:7

1-10-1993

விலை: ரூபாய் மூன்று

கிராமப் பொருளாதாரத்தில் கால்நடைகளின் பங்கு எந்த விதத்திலும் குறைந்துவிடவில்லை!

— மாண்புமிகு முதல்வர் உரை

அட்டை சொல்லும் செய்தி:

சிறப்பான இந்த விழாவில் கலந்துகொண்டு கால்நடை பராமரிப்புத் துறையின் நூற்றாண்டு விழாவைத் தொடங்கி வைப்பதிலும், அனைத்திந்தியக் கால்நடை - கோழியினக் கண்காட்சியைப் பொதுமக்களின் பார்வைக்குத் திறந்து வைப்பதிலும், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஐரோப்பியப் பொருளாதார சமுதாயத்தின், European Economic Community -யின் உதவியுடன் செயல்படுத்தப்படும், ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ், 60 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள, அலுவலகக் கட்டடங்களையும், ஆய்வகக் கட்டடத்தையும் திறந்து வைப்பதில், நான் பேருவகை அடைகிறேன்.

தேசிய அளவிலான பெருமை மிகு கால்நடை-கோழியினக் கண்காட்சி, நமது மாநிலத்தில், அதுவும் சென்னையில் நடப்பது, கால்நடை மற்றும் கோழியினங்களை வளர்க்கும் நமது விவசாயிகள், அறிவியல்பூர்வமான கால்நடை பராமரிப்பின் வளர்ச்சிக்கும், ஒருங்கிணைந்த கிராமப்புறப் பொருளாதார வளர்ச்சிக்கும், ஆற்றி வருகின்ற சீரிய சேவைக்கு, சிறப்பு செய்ததாக அமைந்துள்ளது என்றால், அது மிகையாகாது.

மிக எளிய அளவில், 1892-ஆம் ஆண்டு தொடங்கப்பெற்ற, கால்நடை பராமரிப்புத் துறை, தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு, கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக அரும்பணி ஆற்றி, நிறைவு செய்திருக்கும் இவ்வேளையில், அத்துறையினருக்கு எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

ஒரு காலத்தில் கால்நடைகள், மனிதனின் செல்வச் செழிப்பைக் கண்டறியும் ஒரு அளவு கோலாகவும், சமூக அந்தஸ்த்தைக் கொடுக்கின்ற, ஒரு பெருமைக்குரிய விஷயமாகவும் கருதப்பட்டு வந்தன. தனி மனிதனின் சொந்த வாழ்க்கையிலும், சமூக வாழ்க்கையிலும், கால்நடைகள் பிரிக்க முடியாத பங்கு வகிக்கின்றன. சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும், தனி மனிதனின் பொருளாதார வளர்ச்சிக்கும், கால்நடைகள் அடிப்படையாக விளங்குகின்றன. கிராமப்புறங்களில் வாழ்பவர்கள், சொந்தமாகக் கால்நடைகளை வைத்துக் கொள்வதில், மிகுந்த ஈடுபாட்டினைக் காட்டுவதற்கு இதுவே காரணமாகும்.

வேளாண்மைத்துறை, புதிய விஞ்ஞான உத்திகளைக் கையாண்டு, கிராமப் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி வகுத்தாலும், அதே நேரத்தில், கிராமப் பொருளாதாரத்தில் கால்நடைகளின் பங்கு, எந்த விதத்திலும் குறைந்து விடவில்லை. மாறாக, சமுதாய, பொருளாதார வாழ்வில், அறிவியல் வளர்ச்சியின் காரணமாக, கால்நடை பராமரிப்பில் புதிய சிந்தனைகள் உருவாகி உள்ளன, என்று தான் கூற வேண்டும்.

குறிப்பாக, பசு மற்றும் எருமைகளின் விஞ்ஞானபூர்வமான இனப்பெருக்க முறையில், தமிழ்நாடு அகில இந்திய அளவில் ஒரு முன்னோடியாக விளங்குகின்றது. கால்நடைகளுக்கும், கோழி இனங்களுக்கும், ஊட்டத் தீவனம், சுகாதாரம், இனப்பெருக்க வசதிகள் போன்றவற்றைச் செய்து கொடுப்பதன் மூலம், பால், முட்டை, இறைச்சி ஆகியவைகளின் உற்பத்தியில், மற்ற மாநிலங்களை விட, நமது மாநிலம் ஒரு உயர்ந்த நிலையில் இருந்தாலும், நமது முழுமையான தேவைகளை அடைய, இன்னும் பல முன்னேற்றங்களையும் நாம் அடைய வேண்டியுள்ளது.

1964-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட, 'தீவிர கால்நடை மேம்பாட்டுத் திட்டம்', Intensive Cattle Development Programme, நமது மாநிலத்தில் கால்நடை மேம்பாட்டு நடவடிக்கைகளில், பெரும் பங்கு ஆற்றி வருகிறது. கால்நடை பராமரிப்பில் மட்டுமன்றி, கோழி வளர்ப்பிலும் தமிழகத்தில் ஒரு புரட்சி ஏற்பட்டு, கிராமப்புற பொருளாதார வளர்ச்சியில், ஒரு மாபெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தி உள்ளது என்றால். அது மிகையாகாது. குறிப்பாக, சேலம் மாவட்டத்தில் கோழி வளர்ப்புத் தொழில், மிக அதிக அளவில் வளர்ச்சி அடைந்துள்ளது. நாமக்கல் மற்றும் ராசிபுரம் தாலுக்காக்களில் உள்ள கோழி வளர்ப்புத் தொழில், மிக அதிக அளவில் வளர்ச்சி அடைந்துள்ளது. நாமக்கல் மற்றும் ராசிபுரம் தாலுக்காக்களில் உள்ள கோழி வளர்ப்போர், இத்தொழிலில் ஈடுபட்டுள்ள மற்றவர்களுக்கு, முன்மாதிரியாகவும், வழிகாட்டிகளாகவும், விளங்கி வருகின்றார்கள்.

கடின உழைப்புக்குச் சொந்தக்காரர்களான, நமது விவசாயப் பெருங்குடி மக்கள், வறட்சிக்கு இலக்காகும் பல பகுதிகளில், கோழிப் பண்ணைகளை அமைத்து, தங்களுடைய வருமானத்தைக் குறிப்பிடத் தக்க அளவிற்குப் பெருக்குவதற்கு, வழிவகைகளைக் கண்டுள்ளார்கள். அனைத்திந்திய அளவில் உற்பத்திச் சாதனைகளில், இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ள தமிழ்நாட்டில், இலட்சக்கணக்கான விவசாயிகள், கோழிப் பண்ணைகள் மற்றும் பால் பண்ணைகள் ஆகிய

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், சென்னைத் தீவுத்திடலில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத் துறையின் நூற்றாண்டு விழா மற்றும் அகில இந்தியக் கால்நடை-கோழியினக் கண்காட்சியைத் துவக்கி வைத்து, ஐரோப்பியப் பொருளாதாரத் திட்ட உதவியுடன் நிறுவப்பட்ட கட்டடங்களைத் திறந்து வைத்துப் பேருரையாற்றினார். (21.9.93)



தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறையின் நூற்றாண்டு விழா

தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத் துறையின் நூற்றாண்டு விழாவும், அகில இந்தியக் கால்நடைக் கோழியினக் கண்காட்சித் தொடக்க விழாவும், ஐரோப்பியப் பொருளாதாரத் திட்ட உதவியுடன் நிறுவப்பட்ட கட்டடங்களின் திறப்பு விழாவும் 21.9.93 அன்று சென்னை தீவுத் திடலில் அண்ணா கலையரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமை ஏற்றார்.

அகில இந்தியக் கால்நடைக் கண்காட்சியை, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்து விழாப் பேருரை ஆற்றினார்.

விழாவில், இந்தியாவிலேயே முதலாவதாக தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை கண்டு பிடித்துள்ள புதிய தடுப்பு மருந்து, கலப்பினக் கால்நடை உற்பத்திக்கான உயிரணுக்கள், புதிய கலப்பின ரக 'அசில்' கோழி இனம் ஆகியவற்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டார்.

விழாவில், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் திரு தே. ஜனார்த்தனன், குஜராத் மாநில மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் திரு சங்கர்ஜி தாக்கூர், அரியானா மாநில மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் திரு ராம்தரம் பால்சிங் ஆகியோர் பேசினார்கள்.

விழாவில் தமிழக அமைச்சர்கள், வாரியத் தலைவர்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு தலைமைச் செயலர் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

விழாவிற்கு வருகை புரிந்தோரை கால்நடைப் பராமரிப்பு, மற்றும் மீன் வளத்துறை செயலர் திரு என்.பி. குப்தா அவர்கள் வரவேற்றுப் பேசினார். விழாவின் இறுதியில் துறை இயக்குநர் டாக்டர் எஸ்.பி. அன்புமணி அவர்கள் நன்றி தெரிவித்தார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சென்னைத் தீவுத்திடலில் நடைபெற்ற கண்காட்சியில் அகில இந்திய அளவில் கலந்து கொண்ட கால்நடைகளைப் பார்வையிட்டார். (21.9.93)

வற்றைத் தொடங்கி, மிகவும் இலாபகரமான தொழிலாக நடத்தி வருகிறார்கள். இத்தொழில் களின் வளர்ச்சிக்குத் தேவையான கால்நடை நிலையங்கள், Veterinary Hospitals, செயற்கைக் கருவூட்டு நிலையங்கள், Artificial Insemination Centres ஆகியவற்றை, இந்த அரசு ஏற்படுத்தி, ஆக்கப்பூர்வமான வளர்ச்சிக்கு வழிவகுத்து வருகின்றது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேகமாக விஞ்ஞானம் வளர்ந்து வரும் சூழ் நிலையில், நமது உற்பத்தித் திறனை இன்னும் அதிகப்படுத்துவது, மிக முக்கியமானதாகும். முதலில் உள்ளூர்க் கால்நடைகளின் தரத்தை, மேம்படுத்த வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் இதனைச் செயலாக்க, எங்கள் அரசு தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கால்நடை பராமரிப்பில் தொடர்ந்து வளர்ச்சி காண ஒரு புதிய கொள் கையை நாம் கடைப்பிடிக்க வேண்டும். மேய்ச்சல் நிலங்கள் வேகமாகக் குறைந்து வரும் சூழ்நிலை யில், தீவினப் பயிர்களும் குறைந்த அளவில் தான் பயிரிடப்படுகின்றன.

எனவே, கால்நடைகள் மற்றும் கோழி இனங்கள் ஆகியவற்றிற்குத் தேவைப்படும் சத்தான தீவனங்களைப் பெரிய அளவில் தயாரித்து, சாதாரண விவசாயிகளுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலையும், அவசியமும் ஏற்பட்டுள்ளன. அதேபோல், அதிகரித்து வரும் தனி நபர் பால் தேவையைக் கருத்தில் கொண்டு, இனி வரும் ஆண்டுகளில், பால் பெருக்கத்திற்கு வழிவகுக்க, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க நடவடிக்கைகளை நாம் வலுப்படுத்த வேண்டி உள்ளது.

எளிதில் புரிந்து கொண்டு பின்பற்றக் கூடிய, அறிவியல் பூர்வமான வேளாண்மை பற்றிய செய்திகள், விவசாயிகளுக்குக் கிடைக்குமாறு செய்வதோடு, அவற்றை அவர்கள் கையாளச் செய்ய வேண்டியதும், நமது தலையாய கடமை ஆகும்.

மிக அதிக அளவில், கால்நடைத் தானியங்கி மருந்தகங்களை ஏற்படுத்தி, அதன் மூலம், ஊட்டச் சத்து மிகுந்த தீவனங்களின் உபயோகத்தை அதிகரித்து, கொள்ளை நோய்களினால், நமது கால்நடைகளுக்கும். கோழி இனங்களுக்கும் ஏற் படும் பேரிழப்பைத் தவிர்க்க வேண்டும். இது போன்ற தேவைகளை எல்லாம் உள்ளடக்கிய, ஒரு தொலை நோக்குத் திட்டத்தை, Long range plan-ஐ தமிழக அரசு தயாரித்து வருகிறது.

உலக வங்கியின் நிதி உதவியுடன், 46.62 கோடி ரூபாய் செலவில், தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை, மாடுகள் மற்றும் எருமைகள் மேம்பாட்டுத் திட்டத்தை,மிகப் பெரிய அளவில் செயலாக்கத் திட்டமிட்டுள்ளது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டத்தின் மூலம், பால் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தி, சுற்றுப்புறச் சூழல் பாதிக் காத வகையில், பால் பண்ணை நடத்த முடியும்.

விஞ்ஞான பூர்வமாகக் கால்நடைகள் பராமரிக் கப்படுமேயானால், கால்நடைப் பண்ணைகள், இலாபகரமான ஒரு முழு நேரத் தொழிலாக அமையும் என்பதை, நமது விவசாயிகளும், படித்த

ஒரே நெருப்பின் ஒளி!

உலகில் 'தீண்டத்தகாதவர்' என்று எவருமே யில்லை. ஏனெனில், ஒரே நெருப்பின் ஒளிதான் ஒவ்வொருவரும். ஆகவே, மனிதப் பிறவியெடுத் தோரெவரையும் தீண்டாதவர் என்று ஒதுக்கி வைப்பது தவறு.

சரியான வாழ்க்கை!

சரியான முறையில் வாழ்க்கை நடத்த ஆரம் பித்தோமானால், முடநம்பிக்கைகளும் பிற குற்றங் களும் தாமாகவே விலகிப்போகும். சரியான முறையில் நடந்து கொள்வதே முக்கியம். மனத் திலுள்ள நம்பிக்கைகள் எவ்வாறாயினும் சரி. அவை தாமாகவே சீர்ப்படும்.

வேலையற்ற ஆண்களும் பெண்களும் உணர வேண்டும் என்பதே, எனது அன்பான வேண்டு கோள் ஆகும்.

இன்று நான் தொடங்கி வைத்த, அனைத் திந்தியக் கால்நடை-கோழியின கண்காட்சி, நமது மாநிலத்தில் உள்ள விவசாயப் பெருமக்கள், இதர மாநிலங்களின் கால்நடை வளர்ப்பில் ஏற் பட்டுள்ள முன்னேற்றத்தைப் பற்றி அறிந்து, தங்களிடம் உள்ள கால்நடைகளின் தரத்தை மேலும் உயர்த்துவதற்கு, ஊக்கமளிப்பதாக அமையும் என நம்புகிறேன்.

கால்நடைகளை, நமது குடும்பத்தின் அங்கத் தினர்களாக நினைக்கும் போக்கு, நம்மிடையே உள்ளதைப் போலவே, கால்நடை பராமரிப்பு முறைகளில், நவீன விஞ்ஞான அறிவைப் புகுத்த வேண்டும் என்பதையும், நமது மரபுகளில் ஒன்றாகக் கருத வேண்டும் என்பதே, எனது அன்பான வேண்டுகோள். அவ்வாறு செய்வதால், நமது விவசாயப் பெருமக்களும் பயன் பெறு வார்கள்; நமது கால்நடைச் செல்வங்களும் நன்மை அடையும்.

பொதுவாகவே, விலங்குகளிடம் அன்பு காட்ட வேண்டும் என்ற கொள்கை, எனக்கு உண்டு. செல்லப் பிராணிகளை வளர்த்து, அவற்றின் மீது அன்பு செலுத்துவதும் எனக்குப் பிடிக்கும். செல்லப் பிராணிகள், நம்மிடம் எதையும் எதிர்பார்ப்பது இல்லை; மாறாக நமக்கு மகிழ்ச் சியை அளித்து அன்பின் அர்த்தத்தை அவை உணர வைக்கின்றன. கால்நடைகளையும் தங்க ளுடைய செல்லப் பிராணிகளாக கருதும் பலரை, எனக்குத் தெரியும். கால்நடைகள் அபரிமிதமான அன்பை, தங்களது எஜமானர்கள் மீது பொழி கின்றன.

இதை நன்கு புரிந்து கொண்டால், அதுவே சிறந்த கால்நடை மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்குவதற்கும், செயலாக்குவதற்கும், அடிப் படையாக அமையும். இந்தக் கண்காட்சியில், பல்வேறு மாநிலங்களில் இருந்து, 600-க்கும் மேற்பட்ட கலப்பினக் கால்நடைகள், பங்கு கொண்டுள்ளன என்பதை அறிந்து, மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய வேளையில், கால்நடைப் பரா மரிப்பாளர்களுக்கு, பயன் அளிக்கக்கூடிய IBD, Infectious Bursal Disease என்ற கொள்ளை நோயைத் தடுக்கும் தடுப்பு மருந்து, Vaccine-ஐ வெளியிடுவதில், மகிழ்ச்சி அடைகின்றேன். மேலும், கலப்பினக் கால்நடைகளை உருவாக்க, "Ebryo Transfer" என்ற நவீன முறையின் கீழ் உருவாக்கப்பட்ட, Embryo"-க்களை அறிமுகம் செய்வதில், பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த துறையின் பணிகளை ஆய்வு செய்த போது, உள்நாட்டுக் கோழியின வகைகளை மேம்படுத்துவதற்கு, தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், என ஆணையிட்டிருந் தேன். எனது கருத்தின் அடிப்படையில் இந்தத் துறை, நோய் எதிர்ப்புச் சக்தி கொண்ட, கலப் பினக் கோழி வகையைச் சேர்ந்த, Asil கோழி இனத்தை உருவாக்கி உள்ளார்கள். இந்த Asil கோழிகளை, இந்த நல்ல நிகழ்ச்சியில் அறிமுகப் படுத்துவதில், நான் பெருமிதம் அடைகிறேன். இத்துறையின் பணி மேலும் சிறக்க வேண்டும் என்பதே என் அவா.

நூற்றாண்டு விழாக் கொண்டாடும் கால்நடை பராமரிப்புத் துறை, மேலும் பல அரிய சாதனை களைச் செய்து, தமிழக விவசாயப் பெருமக்களின் நன்மதிப்பை, தொடர்ந்து பெற வேண்டும் என்ற எனது எதிர்பார்ப்புகளைத் தெரிவித்து, இந்தக் கண்காட்சி, நமது தமிழக விவசாயிகளின் வாழ்க் கையில், ஒரு திருப்பு முனையாக அமைய வேண் டும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

23 திருக்கோயில்களுக்கு ரூ.1.70 கோடியில் திருப்பணி!

—மாண்புமிகு முதல்வர் ஆணை

தமிழகத்திலுள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகைக்கு உட்பட்ட திருக்கோயில்களைச் சீரான முறையில் நிர்வகிப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 'தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரியத்தை' அமைத்து, பல்வேறு திருக்கோயில்களில் புதிய கட்டுமானப் பணிகள், திருப்பணிகள் மற்றும் ஆலய மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், கீழ்க்கண்ட 23 திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்வதற்காக ரூ.1 கோடியே 70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்திருக்கிறார்.

1. நாறும்பூநாத சுவாமி திருக்கோவில்-திருப்புடை மருதூர், அம்பாசமுத்திரம், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.

2. பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சுசூர் திருச்சி மாவட்டம்.

3. ராஜகோபால சுவாமி திருக்கோயில், மன்னார்குடி, நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம்.

4. சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், எட்டுக்குடி, நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம்.

5. மகாலட்சுமி திருக்கோயில் (அஷ்டலட்சுமி கோயில்) பெசன்ட் நகர், சென்னை.

6. காளியம்மன் திருக்கோயில், செங்கம் தாலுக்கா, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம்.

7. வேணுகோபாலசுவாமி திருக்கோயில், சத்திய மங்கலம், பெரியார் மாவட்டம்.

8. சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை, தஞ்சாவூர்.

9. கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோயில், மதுரை மாவட்டம்.

10. நாகப்பசெட்டி பிள்ளையார்கோயில், தம்புச் செட்டி தெரு, மண்ணடி, சென்னை.

11. கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை.

12. மருந்தீஸ்வரர் திருக்கோயில், திருவான்மியூர், சென்னை.

13. இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம்.

14. தேவி சுருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு, சென்னை.

15. வலம்புரிநாத சுவாமி திருக்கோயில், திருவலம்புரம், நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம்.

16. கள்ளபிரான்சுவாமி திருக்கோயில், ஸ்ரீவைகுண்டம், சிதம்பரனார் மாவட்டம்.

17. கோட்டை மாரியம்மன் கோயில், திண்டுக்கல், திண்டுக்கல் அண்ணா மாவட்டம்.

18. பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, சென்னை.

19. திருவாலீஸ்வரர் திருக்கோயில், பாடி, சென்னை.

20. மாரியம்மன் திருக்கோயில், இருக்கன்குடி, காமராசர் மாவட்டம்.

21. பவானியம்மன் திருக்கோயில், பெரிய பாளையம், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்.

22. பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், சத்திய மங்கலம், பெரியார் மாவட்டம்.

23. பகவதி அம்மன் திருக்கோயில், மண்டைக்காடு, கன்னியாகுமரி மாவட்டம்.

சுற்றுலாப் பயணிகளின் சொர்க்க பூமி

— மாண்புமிகு முதல்வர்

தமிழ்நாடு, சுற்றுலாப் பயணிகளுடைய சொர்க்க பூமி என்றால் அது மிகையாகாது. இது கலையும், கலாச்சாரமும் நிறைந்த நாடு; வற்றாத வளங்கள் கொண்ட சரித்திரப் பூமி; காண் போரைக் கவரத்தக்க எழில்மிகு கோடை வாசல் தலங்கள்; தமிழ்ப் பண்பாட்டின் நிலைக்கலன்களாக விளங்கும் பெருங்கோயில்கள்; சிற்பக் கலைக்கு மகுடம் சூட்டிய பெருமை இணையற்ற கலாச்சாரத்தை வெளியுலகிற்குப் பறைசாற்றுகின்ற புராதன பொக்கிஷங்களாகும்.



‘‘காந்தி வழியில் உண்மையான கிராம ராஜ்யம் அமைப்போம்!’’

மாண்புமிகு முதல்வர்

‘மகாத்மா காந்தி’ என்கிற மந்திரச் சொல், சாதாரண இந்தியனை உலக சரித்திரத்தில் சுய மரியாதையோடும், பெருமையோடும் அறிமுகப் படுத்திவைத்த பெயர், இந்தியாவைக் ‘காந்தி தேசம்’ என்று அழைக்க வேண்டுமெனத் தந்தை பெரியார் கேட்டுக்கொண்டாரென்றால், அண்ணல் காந்தியின் பெருமைகளை விளக்கிச் சொல்ல வேறு எவரும் தேவையில்லை.

காந்திஜி சாமானிய மனிதனின் கண்ணோட்டத்திலும், பெரிய பிரச்சினைகளை அணுகத் தெரிந்து வைத்திருந்த சீர்திருத்தச் செம்மல். சுருக்கமாகச் சொன்னால், இந்த நாட்டில் எவரோடும் ஒப்பிடமுடியாத ஈடுஇணையற்ற உயர்ந்த தலைவர், காந்திஜி.

சுதந்திர இந்தியாவின் பிரச்சினைகள் எப்படி இருக்கும் என்பதைத் தனது தொலைநோக்குப் பார்வையில் கணித்து, தமது ஒப்பற்ற காந்தியக் கொள்கைகளின் மூலம், அவற்றிற்கெல்லாம் வழிமுறைகளையும் வகுத்துச் சொன்னார் அவர். எனவேதான் ‘The first and foremost indigenous Social Scientist of India’ என்று அவர் அழைக்கப் பட்டார்.

அரசியல் சுதந்திரம் மட்டுமன்றி, பொருளாதாரச் சுதந்திரத்தையும் இந்தியா அடைய வேண்டும் என்பதே, அவரது அனைத்து எண்ணங்களிலும் மூலப்பொருளாய் விளங்கியது.

அரசியலில் ஈடுபட்டிருந்த மகாத்மா காந்தி அவர்களின் வாழ்க்கை நெறி, வரலாற்று ஆசிரியர்களுக்குப் பெரிய வியப்பைத் தந்தது. ‘சத்தியம்’, ‘உண்மை’ என்ற மாபெரும் தத்தவம் அவரது எண்ணங்களிலும், செயல்களிலும், மற்றும் அனைத்து வாழ்க்கைக் கூறுகளிலும் பரவியிருந்த பாங்கு அவர் ஏற்றிருந்த பொதுப் பணிகளுக்குத் தீவிரமான வழியமைத்துத் தந்தது. இந்த உலகத்தில் தோன்றிய தலைவர்களில் எவருமே காந்தியடிகளைப் போன்று அரசியல், பொருளாதாரம், சமுதாயம், ஆன்மீகம் என்று தாம் தொட்ட அனைத்துத் துறைகளிலும் இந்தத் தத்துவத்தைப் பின்பற்றவில்லை என்பது, உலக வரலாற்றில் அதிசயிக்கத்தக்க உண்மையாகும்.

மகாத்மாவின் அகிம்சைக் கொள்கைகள், நடைமுறைக்கு உதவாதது என்ற சிலரது நினைப்பு பொய்யாகி வருவதை நாம் கண்டுவருகிறோம். இன்றைய உலகிலும் சரி, எதிர்காலத்திலும் சரி, உலக நாடுகளுக்கு இடையே நிலவிவரும் சண்டை சச்சரவுகள், வன்முறைச் செயல்கள் ஆகியவற்றினைத் தடுப்பதில், இந்த அகிம்சை பெரும் பங்கு வகிக்கும் என்பதை, உலக அமைதியில் அக்கறை கொண்டவர்கள் பின்னரே தெரிந்து கொண்டனர். அதுபோலவே, எதிர்ப்பினைத் தெரிவிப்பதற்கு வன்முறை நாடாத மக்களுக்கு, சத்தியாகிரகத்தைவிட வேறெந்த எதிர்ப்பு முறைகளும் சரியான வழி முறைகள் ஆகாது எனவும் காந்தியடிகள் கருதினார்.

அதுவன்றி, தீவிர வன்முறையினை அடிப்படையாகக் கொண்டு, சமுதாயப் பிரச்சினைகளைத் தீர்க்க நினைக்கும் சிலர் ஆயுதம் தாங்கி, அமைதியைக் குலைத்து, சாதாரண மக்களை அன்றாடம் கடுந்துயரத்தில் ஆழ்த்தும் செய்கைகளை, நாம் இன்று எங்கும் காண்கிறோம்! இப்படிப்பட்டவர்கள் விரும்புகிற வெற்றி, அவர்களுக்குக் கிடைக்காமல் தூரப் போய்க் கொண்டே இருக்கிறது. ஆனால், காந்தியடிகள் வலுவாகத் திட்டம் தீட்டி, வன்முறையின்றி அமைதி வழியில், நமக்குச் சுதந்திரத்தினைப் பெற்றுத்தந்து, உலக வரலாற்றில் எவரோடும் ஒப்பிடமுடியாத சாதனையாளராகத் திகழ்கிறார்.

தனது அனுபவப் பாணியில், இந்திய நாட்டில் புரையோடிப் போயிருக்கிற பல்வேறு பிணிகளைக் களைய, மகாத்மா காந்தி எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஏராளம். மகளிர் மேம்பாடு, தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, கிராமியத் தொழில் நலம் காத்தல், மதங்களிடையே ஒற்றுமை, ஆகியவற்றினை நடைமுறைப்படுத்த அவர் ஆற்றிய பணிகள் மகத்தானவை. மறக்க முடியாதவை.

மகாத்மா காந்தி அவர்களின் முக்கியக் கொள்கையான மதுவிலக்கினை, இன்றைக்குத் தமிழகத்தில் எங்கள் அரசு குறிப்பாக, மகளிர் மேம்பாட்டினைக் கருத்தில் கொண்டு, நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது என்பதை எண்ணி நான் பெருமிதம் கொள்கிறேன். எங்களின் இந்தச் செயல், இச் சமுதாயத்திலுள்ள அனைத்துப் பிணிகளையும் களைய, நாங்கள் தொடுத்திருக்கும் அறப்போரின் முதற்கணை என்பதனை, உறுதியோடு உங்கள் முன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுவை ஒழிக்க முயற்சி மேற்கொள்ளாமல், மகாத்மாவின் பிறந்த நாளைக் கொண்டாடுவதும், பெண்ணடிமையை நீருற்றி வளர்த்துக் கொண்டு, தேசப்பிதாவின் பிறந்த நாளைப் பிரமாதப் படுத்துவதும், ஜாதியத்தைப் பேசி மக்களின் மனதில் ஜாதிய விஷத்தை விதைத்துக் கொண்டு, காந்திஜியின் பிறந்த நாளை விளம்பரப்படுத்துவதும்; வெறும் சடங்குகளாக வேண்டு மானால் இருக்க முடியுமே தவிர, அவர் விரும்பிய கொள்கைகளை நாம் பின்பற்றுவதாக நிச்சயமாக இருக்க முடியாது.

எனவேதான், மது ஒழிப்பில் இந்த அரசு காட்டிவரும் தீவிரத்தையும் மக்கள் அதற்காக வழங்கிவரும் ஆதரவையும், பாராட்டுக்களையும், மலர் மாலைகளாகக் கருதி, அவற்றை அண்ணல் காந்தி அடிகளின் பிறந்த நாள் விழாவில், அவருக்கு அணிவித்து மகிழ்வதில் நான் பெருமைப் படுகிறேன்!

மகாத்மா காந்தி தனது இதயத்தில் வைத்துப் போற்றிய இன்னொரு கொள்கை தீண்டாமை ஒழிப்பு. ‘கடவுளின் குழந்தைகள்’ என்று அவரால் கருதப்பட்ட ஆதிதிராவிடர் மக்களை, தங்களது அரசியல் இலாபத்திற்காகத் தூண்டிவிட்டு, பலிகடாவாக ஆக்குகிற முயற்சிகள், நம்முடைய தமிழ்நாட்டிலேயே தற்போது நடந்து வருவதை, நான் சட்டமன்றத்திலே பலமுறை எடுத்துரைத்து உள்ளேன்.

வாழ வழியற்ற அந்த ஏழை மக்களுக்கு உதவுகிற எங்களது இந்த முயற்சியைத் தடுத்து நிறுத்தி, தங்களது வன்முறைத் திட்டத்திற்கு அவர்களைப் பலியாக்க நினைக்கிறவர்களுக்கு, அண்ணல் காந்தி அடிகளின் மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன், என்னுடைய ஆட்சியில் ஆடுகளை ஏமாற்றி, ஓநாய்கள் இரத்தமும் குடிக்க முடியாது; மிரட்டிச் சத்தமும் போடமுடியாது. ஏனென்றால், நான் ஓநாய்களைச் சந்தித்துவிட்டு, வெறிநாய்களை வீழ்த்திவிட்டுத்தான் இந்த ஆட்சிக்கட்டிலில் அமர்ந்திருக்கிறேன். எனது இந்த எச்சரிக்கை மக்கள் எதிரிகளுக்குப் புரியுமென்று நம்புகிறேன். இதைக்கேட்டு அவர்கள் திருந்துவார்கள் என்று நம்புகிறேன். இது மகாத்மா காந்தி அவர்களுடைய பிறந்த நாள் கொண்டாட்டம் என்பதால், இந்த நேரத்தில் நான் இந்த அளவுக்குத்தான் கூற முடியும்.

அடுத்த இதழில்...

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்த -
விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் மாவட்டத் தொடக்க விழா மற்றும் தென்னார்க்காடு - வள்ளலார் மாவட்டப் பெயர் சூட்டும் விழா பற்றிய நிகழ்ச்சித் தொகுப்பு - முழு விவரம்.

பக்கத்துக்குப் பக்கம் படங்கள்!

அண்ணல் காந்தி அடிகளின் மனதைக் கவர்ந்த மற்றொரு அம்சம் கிராம ராஜ்யம். ‘கிராம ராஜ்யம்’ உருவாக்கப்படவேண்டுமென்ற காந்திஜியின் எண்ணம்தான், இன்றைக்குப் பல்வேறு உருப்பெற்று, கிராமங்கள் தன்னிறைவு பெறுகிற திட்டங்களை மத்திய அரசும், மாநில அரசுகளும் தீட்டி நடைமுறைப்படுத்துவதற்கு அடிப்படையாய் அமைந்திருக்கிறது. ‘தமிழ்நாட்டில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூபாய் ஒரு கோடி வழங்கப்படுவதன் நோக்கம், காந்தி அடிகளின் கனவுகளை நனவாக்கத் தீவிர முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்பதுதான்.

இந்தியாவின் ஆத்மா கிராமங்களில்தான் இருக்கிறது என்ற காந்தி அடிகளின் கூற்று வெறும் வார்த்தை ஜாலம் அல்ல; அது அவரது அனுபவத்தின் வெளிப்பாடு. குறிப்பாக சம்பரான் (Champaran) என்ற கிராமப் பகுதி விவசாயிகளை, இந்தியாவிற்கு வந்தவுடன் முதல் முதலில் சந்தித்த போது ‘நான் அவர்களைச் சந்தித்ததன் மூலம் கடவுளை அகிம்சையை, உண்மையை நேருக்கு நேர் சந்தித்தேன்’ என்று கூறி மனம் மகிழ்ந்தார் அவர். அப்படிப்பட்ட கிராம ஏழைகளுக்கு உதவுகிற பணியைத்தான் எங்கள் அரசும் மனமுவந்து, தமிழகத்தில் செயற்படுத்தி வருகிறது. அதன்மூலம் உண்மையான கிராம ராஜ்யம் உருவாக, மேலும் தேவையான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே மகாத்மா காந்தி நமக்குக் காட்டிவிட்டுப் போயிருக்கிற புனித வழியில் தொடர்ந்து, கௌரவத்தோடு நாம் தலை நிமிர்ந்து தைரியமாக முன்னேறவும், அவர் அமைத்துத்தந்துள்ள பாதையில் நடந்து, உலக அமைதிக்குப் பாடுபடவும், அவரது இந்தப் பிறந்தநாள், நமக்கு மீண்டும் வழிகாட்டி உள்ளது. ஒரு வாய்ப்பளித்துள்ளது.

—‘புரட்சித் தலைவியின் முழக்கம்’ என்னும் நூலிலிருந்து.

அண்மையில் நடந்த லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டம் குறித்து, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் மற்றும் அரசு உயர் அதிகாரிகளுடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் ஆலோசனை நடத்தினார் (25.9.'93).

படமும் செய்தியும்

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. எஸ். நாகூர் மீரான் அவர்கள் தலைமையில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. எம். தென்னவன் அவர்கள் உலகச் சுற்றுலா தினத்தை சென்னையில் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார் (27.9.'93).

சென்னை இராஜாஜி மண்டபத்தில், அகில இந்திய ஆப்பிள் கண்காட்சியினை, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள் தொடங்கி வைத்தார் (28.9.'93).

இடைத்தேர்தல்: (20.9.93) முடிவுகள்

34. ராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதி

தேர்தல் நாள் : 20.9.1993
மொத்த வாக்காளர்கள்: 1,93,905
பதிவான வாக்குகள் : 1,47,498
செல்லாத வாக்குகள் : 2,215

திரு. கோவி. எஸ். மோகனன் (அஇஅதிமுக) வெற்றி

1.	கோவி. எஸ். மோகனன் (அஇஅதிமுக)	61,584
2.	ஆர்க்காடு என். வீராசாமி (திமுக)	48,923
3.	கே.எல். இளவழகன் (பாமக)	26,461
4.	ஜே. அசேன் (சுயே)	4,924
5.	எம். துளசி (இதேகா)	816
6.	வி.பி. ரவி யாதவ் (சுயே)	810
7.	கண்ணையன் (பாரத மக்கள் காங்கிரஸ்)	146
8.	புலவர் மணி எழிலன் (சுயே)	141
9.	ஜி. ஜெயராமன் (சுயே)	121
10.	பி.எஸ். உசேன் (சுயே)	120
11.	எம். கணேசன் (சுயே)	114
12.	டி. அப்துல் சத்தார் (சுயே)	90
13.	டாக்டர் கே. பத்ம ராஜன் (சுயே)	83
14.	டி. பிரபு (சுயே)	82
15.	கே. ராஜா (சுயே)	81
16.	ஜே. வரதன் (சுயே)	79
17.	கே. ஆதிநாராயணன் (சுயே)	78
18.	ஆர். விஸ்வநாதன் (சுயே)	73
19.	வி.டி.ஆர். வீரப்ப கவுண்டர் (சுயே)	73
20.	இ. ஜெகந்நாதன் (சுயே)	71
21.	சி.கே. கோவிந்தன் (சுயே)	70
22.	ஆர்.என். சூரியமூர்த்தி (சுயே)	62
23.	ஓ.எ. வரத தேசிகன் (சுயே)	54
24.	கே. ஆறுமுகம் (சுயே)	47
25.	எஸ். வள்ளி வேலன் (சுயே)	44
26.	ஆர். மணி (சுயே)	40
27.	கே.எல். மணி (சுயே)	37
28.	கே. அனுமந்தராவ் (சுயே)	36
29.	டாக்டர் அமான்கான் (தேசிய மானவர் கட்சி)	23

இவைகளைப் பார்க்க வருகிற நோக்கில், தமிழ்நாட்டிற்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரிக்கிற வகையில் அவர்களுக்குத் தேவைப் படுகின்ற வசதிகளை அமைத்துக் கொடுக்கத் தான், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் துவக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் சுற்றுலாவை வளர்ப்பதும், சுற்றுலாப் பயணிகளின் வசதி களைப் பெருக்குவதும் முக்கியக் குறிக்கோள் களாக இருக்கின்றன.

சுற்றுலாப் பயணிகளின் வசதிகளைக் கருத்தில் கொண்டு திருத்தணி, திருக்கழுக்குன்றம், மேல்மருவத்தூர், கடலூர், மேட்டுப்பாளையம், கூடலூர் குன்னூர், இராமேசுவரம் மற்றும் ஒதூர் போன்ற இடங்களில் ஓட்டல்கள் புதிதாகக் கட்டப்பட்டு, விரைவில் திறக்கப்படும் நிலையில் இருக்கின்றன. மேலும் இராணிப்பேட்டை, உளுந்தூர்ப்பேட்டை, சேலம், கும்பகோணம், தஞ்சாவூர், கொடைக்கானல் போன்ற இடங்களில் புதிதாக ஓட்டல்களும் கட்டப்படும். சென்னைக்கு வருகிற சுற்றுலாப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்கிற வகையில் பிராட்வேயிலுள்ள பழைய சட்டக் கல்லூரி விடுதியினை, எல்லா வசதிகளும் கொண்ட ஓட்டல்களாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

—'புரட்சித்தலைவியின் முழக்கம்' என்னும் நூலிலிருந்து.

(உலகச் சுற்றுலா வளர்ச்சி நாள்: செப்டம்பர்-27)

திருப்பதி செல்லும் வழியில் சென்னை வந்த மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்களை, சென்னை விமான நிலையத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மலர்ச்செண்டு கொடுத்து அன்புடன் வரவேற்றார் (23.9.'93).

அண்மையில் சாலை விபத்தில் மரணம் அடைந்த மைலாப்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. டி.எம். ரங்கராஜன் அவர்களின் இல்லத்துக்கு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சென்று, அவரது துணைவியார் திருமதி. மாலதி ரங்கராஜன் அவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார் (21.9.'93).

படமும் செய்தியும்

22. பழநி நாடாளுமன்றத் தொகுதி

தேர்தல் நாள் : 20.9.1993
மொத்த வாக்காளர்கள்: 10,12,517
பதிவான வாக்குகள் : 6,68,691
செல்லாத வாக்குகள் : 10,546

வேட்பாளர்கள் அவர்கள் சார்ந்த கட்சி மற்றும் அவர்கள் பெற்ற வாக்குகளின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

திரு பி. குமாரசாமி (அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்) வெற்றி.

1.	பி. குமாரசாமி (அஇஅதிமுக)	2,78,955
2.	திருமதி கப்புலட்சுமி ஜெகதீசன் (திமுக)	2,34,070
3.	கே.எஸ். வேணுகோபால் (இதேகா)	1,30,626
4.	பி. சின்னதுரை (சுயே)	1,483
5.	கே. குப்புசாமி (சுயே)	1,115
6.	எம்.கே.வி. கோபாலகிருஷ்ணன் (சுயே)	922
7.	வி.எம். சின்னபொன்னுவாத்தியார் (சுயே)	880
8.	ஜி. நாச்சிமுத்து (சுயே)	879
9.	எம். நடராஜன் (சுயே)	783
10.	வி. ராஜாங்கம் (சுயே)	678
11.	ஜி. சாமுவேல்ராஜ் (சுயே)	606
12.	கீழ்நாமக்காரர் கிரிதாதி ஆனந்தர் (சுயே)	497
13.	கே. கப்பையா கவுண்டர் (சுயே)	406
14.	எம். ராயப்பா நாடார் (சுயே)	398
15.	கே. பாண்டியன் (சுயே)	327
16.	யு. நாகூர்மீரான் பீர்முகமது (சுயே)	320
17.	எம். பத்மநாபன் (சுயே)	311
18.	கே. திருமான் (சுயே)	300
19.	கேப்டன் வேணுகுமார் மஹாதேவன் (சுயே)	278
20.	வி.டி.ஆர். வீரப்பகவுண்டர் (சுயே)	245
21.	எ. வையாபுரி (தமிழ்நாடு இந்து வேளாளர் இளைஞர் கழகம்)	239
22.	எ. முகமது உசைன் (சுயே)	213
23.	பி. கவிதாசன் (சுயே)	207
24.	வி.எஸ். பாலசுப்ரமணியம் (தமிழக ஜனதா)	206
25.	செல்வி கே.ஆர். கலையரசி (சுயே)	205
26.	வி. தியாகராஜன் (சுயே)	198
27.	டி. கருத்தபாண்டியன் (சுயே)	197
28.	கே. சுருளிவேலு (சுயே)	194
29.	காகா ஜொகிந்தர்சிங் உர்ப் 'தார்தி-பகத்' (சுயே)	186
30.	பி. தெய்வநாயகம் (சுயே)	186
31.	டாக்டர் கே. பத்மராஜன் (சுயே)	183
32.	கே. பாலசுப்ரமணியம் (சுயே)	178
33.	தொப்பில் ராஜய்பன் (சுயே)	177
34.	என். ஆதிநாராயணன் (சுயே)	140
35.	டாக்டர் பி. செல்லதுரை (சுயே)	136
36.	யு. கண்ணன் (சுயே)	133
37.	ஆர். முத்தையா (சுயே)	133
38.	எம்.வி. ராமசாமி (சுயே)	133
39.	பிரான்சிஸ் சேவியர் (சுயே)	111
40.	எம். அருள்மணி (சுயே)	110
41.	பி. ஆறுமுகம் (சுயே)	106
42.	எம். மன்மதன் (சுயே)	99
43.	டி. ஆண்டவன் (சுயே)	95
44.	என். இராஜகோபாலன் (சுயே)	95
45.	பி. கன்னையன் (சுயே)	76
46.	கே. லோகநாதன் (சுயே)	69
47.	தங்கமருதமுத்து (கிராம முன்னேற்றக் கழகம்)	61

சுகமான சுற்றுலா!

செப்டம்பர் 27 உலகச் சுற்றுலாத் தினம். சுற்றுலா பரந்த மனப்பான்மையை வளர்க்கிறது. பல்வேறு புதிய விஷயங்கள் அறிந்திட உதவுகிறது. தன்னம்பிக்கையும் மனமகிழ்வையும் அளிக்கிறது. சுற்றுலாப் பயணியரின் சொக்க பூமியாக நம் நாடு திகழ்கிறது. பூகோள அமைப்பியல் ரீதியில் அனைத்தும் இங்கு காணக்கிடக்கின்றன. ஆண்டு முழுவதும் உறைபனி போர்த்தி உறங்கும் இமயச் சிகரங்கள், அதற்கு நேர் மாறான வறண்ட தார் பாலைவனம், மழை கொட்டும் மேகாலயா, இதமான நீலஞ்சில் நாடு என ஒரே நேரத்தில் நாட்டின் நான்கு மூலைகளில் வெவ்வேறு தட்பவெட்ப நிலைகள் நிலவும் அதிசயம் 'அல்ட்ரா மாடர்ன்' நகர வாசிகளும் உண்டு. அந்தக் காலத்து ஆதிவாசிகளும் உண்டு.

பல்வேறு மதங்கள், மொழிகள், உணவு-உடைப் பழக்க வழக்கங்கள், கலை, கலாச்சாரம், பாரம்பரியம் என மாநிலத்திற்கு மாநிலம் வித்தியாசம், அண்டை நாடுகளான நேபாளம், திபெத் பகுதிகளின் பிம்பமாக நம் நாட்டிலேயே சில பகுதிகள் திகழ்கின்றன.

சுற்றுலாப் பயணிகளைக் கவரும் அனைத்து அம்சங்களைக் கொண்டதாகத் திகழும் நம் நாட்டில் சுற்றுலாத் தலங்களை அழகுற பராமரிப்பதில் அரசு கவனம் செலுத்தி வருகிறது.

கடந்த ஆண்டில் (1992) 18 இலட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணியர் நம் நாட்டிற்கு வருகை புரிந்துள்ளனர். இத்துறை மூலம் ரூ.4,000 கோடி அன்னியச் செலாவணி கிடைத்து உள்ளது.



'வாய்மை வெல்லும்' என்றொரு பொன்மொழி
கோட்டையில் தெரிகிறது - அந்த
வாசகம் கூறிடும் தத்துவப் பொருள்நம்
நாட்டினில் புரிகிறது!

நாய்மை நேர்மை வாழ்வில் பெற்றவர்
நினைப்பது நடக்கிறது - இங்கு
துணிவே துணையாய்க் கொண்டவர் பின்னே
மலையும் நடக்கிறது!

ஆயிரம் பேர்கள் அடித்துக் கூறினும்
பொய்மைகள் வெல்வதில்லை - தம்மை
அழித்திடும் ஓநாய் காட்டிடும் வழியில்
ஆடுகள் செல்வதில்லை!

தேய்வது போலத் தெரிந்திடும்; ஆனால்
திரும்பவும் நிலவுவரும் - இந்த
தேசத்தில் எத்தனை சோதனை வரினும்
வெற்றியை நீதிபெறும்!

நாற்றுதல் ஒன்றே தொழிலாய்க் கொண்டோர்
எண்ணம் பலிப்பதில்லை - என்றும்
சுயநலக் காரர் காதினில் நேர்மைக்
கீதம் ஒலிப்பதில்லை!

போற்றுதல் செய்வோம் சத்திய வழியில்
புவியை ஆள்வோரை - அமைதிப்
பூங்கா வெனவே உலகை மாற்றிக்
காப்போம் வாழ்வோரை!

தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலை லிட்.,
பேட்டை, திருநெல்வேலி-627 010

தந்தி: "COOPSPIN"
டெலக்ஸ்: 0433-232 SPIN IN.

தொலைபேசி எண்:
ஆட்சியர் (தனி) : 23610
ஆட்சியர் (இல்லம்) : 72899
அலுவலகம் : 23284, 23285
23286

நிறுவப்பட்ட கதிர்கள் - 50,080

எங்களது ஆலை தமிழகத்திலேயே கூட்டுறவுத் துறையில் முதன் முதலில் துவங்கப்பட்டது. தமிழகத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளில் இதுவே பெரிய ஆலையாகும்.

20ஸ், 26ஸ், 40ஸ், 100ஸ், 2/17ஸ், 2/40ஸ், 2/60ஸ், 2/80ஸ் கார்டட் நூல் ரகங்களும் 60ஸ், 80ஸ் கோம்புடு நூல் ரகங்களும் மற்றும் கார்டட் ரகங்களில் கோன் நூல்களும் இங்கு உற்பத்தியாகி இந்தியா முழுவதும் விற்பனையாகின்றன.

ஆலை நவீனப்படுத்தப்பட்டு நூதன மின் சோதனைக் கருவிகளைக் கொண்டு ஒவ்வொரு நிலையிலும் மிகச் சிறந்த முறையில் தரக்கட்டுப்பாடு செய்யப்பட்டு நூல் விற்பனை செய்யப்படுகிறது.

போ. சோலைச்சாமி, எம்.ஏ., எம்.பி.ஏ.,
டி.பி.பி.ஏ.,
கைத்தறி மற்றும் துணிநூல் இணை இயக்குநர்

மதுவெனும் கொடிய மயக்கிடும் நச்சை
மதிமிகு இனிய மானிடர் குடிப்பதோ?
சான்றோர் பழிக்கும் சஞ்சலக் குடியை
சதமென எண்ணி நிதமும் குடிப்பதோ?
நல்வினை ஆற்றும் நம்உடல் உள்ளம்
தீவினைக் குடியால் சாவினை ஏற்பதோ?
சீயென உமிழ நாயினும் கேடாய்
சீரினை அழித்துச் சிறப்பினை இழப்பதோ?
குடியின் கேட்டினால் குடிகொளும் சோம்பல்
தடுமாற் றத்துடன் படுபயம் வாட்டும்
விழிகள் மங்கும் பழுதடை யும்செவி
பழிபல நேரும் பரம்பரை வீழும்!
பொறியின் உணர்வாம் புலன்கள் கெடும்நம்
அறிவின் ஆற்றல் அறவே அழிந்திடும்!
மூளைத் தண்டின் முகுளம் குலைந்து
மூலையில் என்றும் முடங்கும் ஜடமாய்!
நாளடை வினிலே நடுங்கும் உடலம்
நிலைதடு மாறும் கைகால் ஆடும்!
வாயும் குளறும் நாயும் உமிழும்
நோயின் 'நொம்பலில்' நிலைதடு மாறும்!
புதுமை காணும் பொறுமை போய்விடும்
பழமை மறக்கும் நிலைமை இறங்கும்
பேரருள் செல்வம் சீரழி வாகும்
நேரறி வான்மை நெஞ்சம் குலையும்!
மதுவைக் குடித்தோர் மதியை இழந்தார்
மதுவைச் சுவைத்தோர் மதிப்பை இடித்தார்
குடிக்கக் குடிக்கக் குடும்பம் குன்றிடும்
துடிக்கத் துடிக்கத் துயரினில் சாவார்!
எதிரி என்றே இனம்தனைக் காட்டி
உயரிய வாழ்வை உடனே போக்கும்
நச்செனும் கொடிய விஷத்தை நம்பலாம்!
நிச்சய மரணம் நிகழ்த்திக் காட்டும்
திராவகம் தனையும் தீர்க்கமாய் நம்பலாம்!
திரியாத நட்பிலே பிரியாத பிணைப்பின்
நண்பன் போன்றே நடிக்கும் வஞ்சகப்
பண்பின் செயலே போதைமிகு மதுவாம்!
தவணை முறையில் உயிரை வாங்கும்
தரங்கெட்ட குடியைத் தானேற்கலாமோ?

நூல் நயம்

பாரதிதாசன் திருக்குறள் உரை ஆய்வும் பதிப்பும்

ஆசிரியர்: டாக்டர் ச.சு. இளங்கோ
வெளியீடு:
பாரி நிலையம்
184, பிராட்வே
சென்னை-108

பக்கம்:264 விலை:ரூ.32/-

வான்புகழ் வள்ளுவரின் திருக்குறளுக்கு, தமிழறிஞர்கள் பலர் உரை எழுதிச் சிறப்பித்திருக்கின்றார்கள். அந்த வகையில், பாவேந்தர் பாரதிதாசனாரும் திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளார். அவற்றின் அழகிய தொகுப்பே இது.

பாரதிதாசனாரின் வெளிவராத படைப்புகளை வெளிக் கொணரும் அரிய பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு வரும் டாக்டர் ச.சு. இளங்கோவைப் பாராட்ட வேண்டும்.

திருக்குறளின் முதல் 85 குறளுக்குப் பாவேந்தர் எழுதிய உரை, திட்பமாகவும், நுட்பமாகவும் அதேசமயத்தில், தெளிந்த நீரோடை போன்றும் திகழ்கின்ற பாங்கினைப் படித்து மகிழலாம். நல்ல முயற்சி, நாடு வரவேற்குமாக!

கன்னித் தமிழ் கவிதை பாடுவோம்

ஆசிரியர்: முனைவர் புரட்சிதாசன்
வெளியீடு:
பாண்டியன் பாசறை
17, வடக்கு போக்கு சாலை
தியாகராயநகர், சென்னை-17

பக்கம்:210 விலை:ரூ.40/-

இன்று கவிஞர்க்குப் பஞ்சமில்லை. புதிய புதிய கவிஞர்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் மிகச் சிறந்த கையேடாக இந்நூல் விளங்குகின்றது.

நூலாசிரியர் தாமே நூல் இயற்றி, தாமே உரையும் எழுதித் தக்க மேற்கோள்களும் காட்டிப் 'புரட்சி செய்துள்ளார். இளங் கவிஞர்க்கு இது ஒரு இலக்கண இலக்கியம்.

— மறைமலை

'சகல சக்தியளிக்கும் பகவான் பாபா'

ஆசிரியர்: மலிலைத் தொண்டன்
வெளியீடு:
கார்த்திகா பப்ளிகேஷன்
92, கங்கையம்மன் கோவில் தெரு
வடபழனி, சென்னை-600 026

பக்கம்:112 விலை:ரூ.15 -

"சேவை செய், எல்லோரிடத்தும் அன்பு செலுத்து" என்று உபதேசித்த பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபா அவர்களுடைய அருளுரைகளாலும், நிகழ்த்திய அற்புதங்களாலும் ஈர்க்கப்பட்டு இவருடைய பக்தரானோர்கள் உலகம் முழுவதும் வியாபித்து உள்ளனர்.

இந்நூலும் அவருடைய வாழ்க்கை வரலாறு, அவர் வழங்கிய அருளுரைகள், அவர் நிகழ்த்திய அற்புதங்கள் ஆகியவற்றை விளக்குகிறது.

அன்மீக நாட்டம் கொண்டவர்களுக்கு மட்டுமல்லாது, அவரைப் பற்றி அறிந்து கொள்ள விரும்புகிறவர்களும், மிகவும் பயன்படக் கூடிய கையேடு போன்று அமைக்கப்பட்டு, மனநிறைவைத் தருகிறது. பயனுள்ள நூல்.

என். குமாரசாமி

பழமொழிகளில் பெண்மை

ஆசிரியர்: முனைவர் சரளா இராசகோபாலன்
வெளியீடு: ஒளிப் பதிப்பகம்
63, டாக்டர் ரங்காச்சாரி சாலை,
சென்னை-18.

பக்கம்:304 விலை:ரூ.38/-

பழமொழி இன்றைய வாழ்க்கையில் இரண்டறக் கலந்திருப்பதைப் பார்க்கிறோம். சண்டையாகட்டும், சமாதானமாகட்டும் அங்குப் பழமொழி எப்படி யும் புகுந்துவிடும்! பொதுவாக, பழமொழிகள் வாழ்க்கைக்கு உதவுகின்றன என்றே சொல்ல வேண்டும். ஒருவனை இடித்துக் கூற, குற்றங் குறைகளைச் சுட்டிக்காட்ட நல்லதை வரவேற்க, பழமொழிகள் பாடமாக விளங்குகின்றன.

குறிப்பாக, பழமொழிகளில் பெண்மை குறித்து இந் நூலில் அலசியிருக்கிறார் நூலாசிரியர். ஒவ்வொரு பழமொழிக்கும் அவர் கூறும் விளக்கம் விரிவுரை எல்லாம் மனத்தில் நிற்கிறது. மாணவர்கள் மட்டுமல்ல பெரியவர்களும் படித்து மகிழ வேண்டிய அருமையான நூல்.

— மறைமலை

சிறுவர் சிறுமியர் வாழ்வு வளம்பெற...

ஆசிரியர்: டாக்டர் மு. முத்துவள்ளத்தி
விற்பனை உரிமை: பாரி நிலையம்
184, பிராட்வே
சென்னை-108

பக்கம்:96 விலை:ரூ.12/-

குழந்தை ஒரு குளவி. கேள்வியால் கொட்டும், வண்டாகத் துளைக்கும். வகையாகப் பதில் சொன்னால்தான் பெற்றோர் பிழைக்க முடியும் - என்று இந்நூலாசிரியர் கூறுவது உண்மை தானே?

குழந்தைகளுக்கு ஏற்படும் சந்தேகங்களைச் சரியானபடி தீர்க்க வேண்டும். சிறுவர்-சிறுமியர்க்கு எந்தப் பருவத்தில், எதைஎதைப் பற்றி, எவ்வளவு தெரிவிக்க வேண்டும் என்பதையெல்லாம் மிக அருமையாக அழகாகக் கூறியிருக்கிறார் ஆசிரியர். கேள்வி-பதில் வடிவில் மருத்துவ ரீதியான பல கருத்துக்களைப் பக்குவமாகக் கூறியிருக்கும் பாங்கு பாராட்டுதற்குரியது. ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்க வேண்டிய நூல்.

வெற்றிப் பத்து

ஆசிரியர்: தேவகோட்டை பஞ்சநாதன்
வெளியீடு:
புத்தகப் பூங்கா
52, அய்யம்பெருமாள் தெரு
சென்னை-14.

பக்கம்:147 விலை:ரூ.20 /-

வாழ்க்கையில் முன்னேறுவதற்கு, முன்னோர்களின் அனுபவ வாக்குகள் நம்மை முன்னேற்றும் படிகளாக அமைகின்றன. அந்த வகையில், இந்நூலாசிரியரின் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு உதவிய அந்தப் பொன்மொழிகள் எவை? அதுதான் வெற்றிப் பத்து. கதைபோல, கவைபட தன் அனுபவங்களை நம்முடன் பகிர்ந்து கொள்கிறார் ஆசிரியர். முன்னேறத்துடிக்கும் எல்லாத் திறத்தாரும் இந்நூலைப் படித்துப் பயன்பெறலாம்.

கற்றுப்புறச் சூழலும் ஆரோக்கிய வாழ்வும்

ஆசிரியர்: சூரியநாத்
வெளியீடு:
தமிழ்மணி பதிப்பகம்
107-ஏ, பெரியார் பாதை (மேற்கு)
சென்னை-94

பக்கம்:96 விலை:ரூ.13/-

மக்கள் நல்வாழ்வுக்குப் பக்க பலமாகத் திகழ்வது கற்றுப்புறச் சூழலாகும். மனிதன் உயிர் வாழத் தேவையான காற்று, நீர், உணவு இவை மூன்றும் சுத்தமாக இருத்தல் இன்றியமையாததாகும். இவற்றை எப்படிப் பாதுகாக்கலாம் என்பதற்கான காரண காரிய விளக்கங்களைக் கூறுகிறது இந்நூல்.

இராமநாதபுரம் மாவட்டம்:

தமிழ்நாட்டிலுள்ள மிகவும் பின் தங்கிய மாவட்டங்களில் இராமநாதபுரம் மாவட்டமும் ஒன்று. தொழில் ரீதியாகவும் மிகவும் பின்தங்கிய மாவட்டம் இது; இங்கே தொழிற்சாலைகள் என்று எதுவும் கிடையாது.

மாவட்டத்தில் மொத்தம் மூன்று கல்லூரிகள் மட்டுமே உள்ளன. இவற்றில் இரண்டு அரசுக் கல்லூரிகள், ஒன்று அரசு உதவி பெறும் பெண்கள் கல்லூரி. இம் மாவட்டத்தின் மக்கள் தொகை 11.50 இலட்சம். இதில் கல்வியறிவு உள்ளவர்கள் 52 சதவிகிதம். இது மாநிலக் கல்வி விகிதத்தை விட 10 சதவிகிதம் குறைவாகும். பெண்கள் கல்வியறிவு 38 சதவிகிதம் மட்டுமே ஆகும். மிகவும் பின் தங்கிய மாவட்டம் ஆதலால், கல்விக்கான தூலம் மிகவும் குறைவு. அதனாலேயே கல்வி கற்றவராய் இருக்க வேண்டும் என்பதற்கான தேவையும் இங்கே குறைவு.

இங்குள்ள மிகப் பெரும்பான்மையான மக்கள் விவசாயத்தையும், மீன் படித்தலையும் தொழிலாகக் கொண்டு உள்ளனர். மிக நீண்ட 263 கி.மீ. கடற்கரையைக் கொண்டது. இம் மாவட்டம் வயிற்றுப்பாட்டை பார்ப்பதே மிகப் பெரிய சவாலாய்ப் போய்விட்ட கிராம மக்களிடையே எழுத்தறிவு இயக்கத்தை எடுத்துச் செய்வது மிகவும் தொல்லை என்ற எண்ணம் பலரிடமும் இருந்தது.

அறிவொளி இயக்கம்

அறிவொளி இயக்கத்திற்கான பூர்வாங்க வேலைகள் 1992-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து தொடங்க ஆரம்பித்தன. அப்போது, தமிழ்நாட்டில் ஏற்கெனவே பகம்பொன், காமராசர், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை மற்றும் வட ஆர்க்காடு-அம்பேத்கர் ஆகிய ஏழு மாவட்டங்களில் அறிவொளி இயக்கம் நடைபெற்று வந்தது. ஒன்றாக இருந்த இராமநாதபுரத்திலிருந்து பிரிக்கப்பட்ட, பகம்பொன் மற்றும் காமராசர் மாவட்டங்களில் அறிவொளி, நடந்து கொண்டிருந்ததன் தாக்கம், இராமநாதபுரத்தையும் பாதித்தது; அறிவொளிக்கான கோரிக்கை மக்களிடையே எழுந்தது.

ஆனால், கூடவே இராமநாதபுரம் மாவட்டத்தில் இது நடக்குமா? என்ற சந்தேகத்தையும் சிலர் கிளப்பினர்.



மாநாடுகள், பேரணிகள்

1991-ஆம் ஆண்டு அக்டோபர், நவம்பர் மாதங்களில் மாவட்டம் முழுவதும் ஒரு கண்ணோட்டக் கலைப் பயணம் நடத்தப்பட்டது. இது அறிவொளிக்கான ஆரம்ப எழுச்சியை அனைவரிடமும் ஏற்படுத்தியது.

முன்னோட்டக் கலைப் பயணத்தை அடுத்து, ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், மாணவர்கள், இளைஞர்கள், விவசாயிகள் மற்றும் மீனவர்கள், மாநாடுகளும், பேரணிகளும், மாவட்டம் முழுவதும் நடத்தப்பட்டன. இதன் மூலம் எழுத்தறிவு இயக்கத்திற்குத் தேவையான ஒத்துழைப்பும், ஆதரவையும் கற்றோர்களிடமிருந்து பெற முடிந்தது.

ஒரு நாள் - கற்போர் சந்திப்பு இயக்கம்

சென்ற ஆண்டு ஏப்ரலில் மாவட்டத்திலுள்ள 2,30,000 வீடுகளில், தொண்டர் குழு சென்று, கற்போர் அனைவரையும் சந்தித்தது. 5 பேர்கள் கொண்ட 5,000 குழுவினர் ஒரே நாளில் அனைத்து வீடுகளுக்கும் சென்று கற்போர், தொண்டர் பற்றிய தகவல்களைச் சேகரித்தனர். அரசு அலுவலர்கள், தன்னார்வத் தொண்டர்கள், மாணவர்கள், இளைஞர்கள், ஆசிரியர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் என அனைத்துத் தரப்பினரும் இந்த ஒரு நாள் கணக்கெடுப்பில் கலந்து கொண்டது மாவட்டத்தில் மிகப்

புத்தகங்கள் முடித்தவர்களுக்கான தேர்வை 1.5 இலட்சம் பேர் எழுதினர். தற்போது நடத்தப்பட்டு வரும் மூன்று புத்தகங்களைப் படித்து முடித்தவர்களுக்கான டி.9 என்னும் தேர்வை இதுவரை 75,000 பேர் எழுதியுள்ளனர். இன்னும் ஒரு வார காலத்திற்கும் மேற்கொண்டு 25,000 பேர்கள், எழுதி முடிப்பர். இவ்வாறாகக் குறியீடான 2 இலட்சம் கற்போர்களில் 1.72 இலட்சம் பேர்கள், அறிவொளி மையங்களில் சேர்க்கப் பட்டனர்.

இவர்களில் 1.62 பேர் முதல் புத்தகத்தையும் 1.5 இலட்சம் பேர், இரண்டு புத்தகங்களையும், ஒரு இலட்சம் பேர் மூன்று புத்தகங்களையும் நடத்தி முடித்துள்ளனர். இது அறிவொளி இயக்கம், எண்ணறிவு மற்றும் எழுத்தறிவு இயக்கத்தில் ஏற்படுத்திய சாதனையாகும். 1981-ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்ட கல்வி அறிவு பெற்றோர் சதவிகிதம் 48. 1991-ஆம் ஆண்டு இது 52 ஆக உயர்ந்தது. ஆக 10 ஆண்டுகளில் 4 சதவிகிதம் மட்டுமே உயர்ந்தது. ஆனால் அறிவொளி இயக்கம், உந்த ஓராண்டில் மட்டும்ந 13 சதவிகிதம் பேரைக் கல்வியறிவு பெற்றவர்களாய் ஆக்கியது. தற்போது மாவட்டத்தில் கல்வியறிவு சதவிகிதம் 65 ஆகும்.

அறிவொளியில் சமுதாயப் பாதிப்புகள்

அறிவொளி இயக்கம் எழுத்தறிவில் செய்த சாதனையைப் போலவே தேசிய முக்கியத்துவம் வாய்ந்த மற்ற பிரச்சினைகளிலும் தனது தாக்கத்தை ஏற்படுத்தியது. குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பது, இடைவெளியைக் குறைந்தது. குழந்தைகளின் கல்வித் திறனை அதிகப்படுத்தியது. ஆரம்பக் கல்வியிலும் குழந்தைகள் சுகாதாரம், பெண்கள் சுகாதாரம் மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் போன்ற சுகாதாரப் பிரச்சனைகளிலும், சிறு குடும்பம், சிறுசேமிப்பு சத்துணவு தேச ஒற்றுமை, பெண் சமத்துவம் மற்றும் மதச் சார்பின்மை போன்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சமுதாயப் பிரச்சினைகளிலும், மக்களின் பங்கேற்பை அதிகப்படுத்தி உள்ளது. பிரச்சாரங்கள், கலைப் பயணங்கள், மாநாடுகள், பேரணிகள், பயிற்சி முகாம்கள், கண்காட்சிகள், விவாதங்கள் கல்விச் சுற்றலா மூலங்கள் இவைகள் சாதிக்கப்பட்டன.

பெண்கள் மேம்பாட்டு அமைப்பு 'மகரம்'

வறுமையும், எழுத்தறிவின்மையும் ஒரு நாணயத்தில் இரண்டு பக்கங்கள் ஆகும்.

★ ஒரு சமூகம் என்றிருந்தால் அச் சமூகத்தில் ஏழைகள் இல்லாமலும், மனச்சாட்சியை விற்றுப் பிழைப்பவர்கள் இல்லாமலும் செய்வதுதான் சரியான சமூகச் சீர்திருத்த வேலையாகும்.

- தந்தை பெரியார்

அறிவொளி இயக்க மையங்களில் சேர்ந்து எழுத்தறிவு பெற்ற 1.72 இலட்சம் பேரில் 1.42 இலட்சம் பேர், வறுமைக்கோட்டிற்கும் கீழ் உழன்று கொண்டிருக்கும் கிராமப்புற விவசாயக் கூலிப் பெண்கள் மற்றும் நகர்ப்புறக் கூலித் தொழிலாளிப் பெண்கள் ஆவர். அறிவொளி மையங்களில் பத்துப் பத்துப் பேர்களாகச் சேர்ந்து படிக்க ஆரம்பித்த இந்தப் பெண்கள் குழுக்களாய்ச் சேர ஆரம்பித்தனர்.

இவ்வாறு ஒவ்வொரு கிராமத்திலும், நகர்ப்புறப் பகுதியிலும் இந்தப் பெண்கள் குழு இயற்கையாக உருவாக ஆரம்பித்தது. இவர்கள் தங்களுக்குள் கலந்து பேசி, தங்கள் பிரச்சினைகளைப் பற்றி அலச ஆரம்பித்தனர். நாளடைவில் இவர்களுக்குள்ளும், இனக்கமான ஒரு உறவு வளர ஆரம்பித்தது. இவ்வாறு மாவட்டம் முழுவதும் உருவான இந்தக் குழுவினரெல்லாம், 'மகரம்' என்ற அமைப்பின் கீழ் அழைப்பு ரீதியாக்கப்பட்டனர்.

இன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மிகப்பெரிய அமைப்பு இதுவேயாகும். அதிலும், விவசாயக் கூலிப் பெண்களையும், நகர்புறப் பெண் தொழிலாளிகளையும் கொண்ட இந்த அமைப்பு போல், வேறு எந்த அறிவொளி மாவட்டத்திலும் கிடையாது எனலாம். 5.3.92 அன்று இந்த மகரம் அமைப்பின் துவக்கவிழா நடைபெற்றது. இந்த விழாவில் 10,000 பெண்கள் கலந்து கொண்டனர். அறிவொளியில் சேர்ந்து எண்ணறிவு, எழுத்தறிவு கற்றுக்கொண்ட இந்தப் பெண்கள் இன்று அமைப்பு ரீதியாகத் திரண்டு தங்களது சொந்தக் கால்களில் நிற்பதாகத் தொழில் முனைவோராகவும், பெண் சமத்துவத்தை நிலை நாட்டப் பாடுபடுவோராகவும், விழிப்புணர்வு பெற்று வருகின்றனர். அறிவொளியின் சாதனைகளில் இதுவே முக்கியமானதாகும்.

அறிவொளி நிறைவு விழாக்கள்

அறிவொளி இயக்கத்தின் முதல் கட்டம் முடிவுறும் தருவாயை எட்டி உள்ளது. இம்மாதம் முழுவதும், கிராம அளவில் மாவட்டத்திலுள்ள 2,136 கிராமங்களிலும் அறிவொளி நிறைவு விழாக்களும், தொடர் அறிவொளி தொடக்க விழாக்களும் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து ஒன்றிய அளவு விழாக்களும், மாவட்ட விழாவும் நடைபெறும் கிராம அளவிலான விழாக்களில் தொண்டர்கள் பாராட்டப்படுவதும், கற்போர்கள் பாராட்டப்படுவதும், தொண்டருக்கும், கற்போருக்கும், சான்றிதழ்கள், வழங்கப்படுவதும், அறிவொளி சாதனைகள் கிராமந்தோறும், விளக்கப் படுவதும், தொடர் அறிவொளி பொறுப்பாளர்கள் அறிமுகப்படுத்தப்படுவதும் நடைபெறும்.

தொடர் அறிவொளி இயக்கம்

அறிவொளி இயக்கத்தைத் தொடர்ந்து தொடர் அறிவொளி இயக்கம் 2 ஆண்டுகள் நடைபெறும். அறிவொளி இயக்கத்தில் விடுபட்டுப் போனவர்கள் இடையில் நின்றவர்கள், முழுத்திறனை எய்தாதவர்கள் அனைவரும் தொடர் அறிவொளியில் நிறைவு செய்யப்படுவர்.

பிறர் சொல்லிக்கொடுத்து, கற்றுக் கொண்ட நிலையிலிருந்து தானாக் கற்றுக்கொள்ளும் நிலைக்கு, கற்போர் உயர்த்தப்படுவர். அதோடு சேர்ந்து தொழிற் கல்விக்கான பயிற்சி அனைவருக்கும் ஆரம்பக்கல்வி. அனைவருக்கும் அடிப்படைச் சுகாதாரம், பாதுகாக்கப்பட்ட குடிநீர், பெண் சமத்துவம், கல்வி நூலகம், நிலை நிறுத்தத்தக்க வளர்ச்சி ஆகிய இயக்கங்களில் மக்களது ஈடுபாட்டை உறுதிப்படுத்தி தற்சார்பு மிக்கதாய் சொந்தக்காலில் நிற்கக்கூடிய தாய் வெளித்தாக்குதலைத் தாங்கி, நிலைத்து நிற்கக் கூடியதாய்... கிராமங்களை வளர்ச்சி பெறச் செய்யத் தொடர் அறிவொளி இயக்கத்தில் நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இல. திருப்புகழ், இ.ஆ.ப., அவர்கள் சீரிய முயற்சிகள் எடுத்து வருகிறார்.

நா. தில்லைகோவிந்தன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
இராமநாதபுரம்

என்னுடைய குரு!

காந்திஜியின் மேஜைமேல் மூன்று குரங்குப் பொம்மை வைக்கப்பட்டிருந்தது. ஒருநாள் ஒருவர், 'இது ஏன் இங்கு வைக்கப்பட்டுள்ளது? என்று கேட்டார்.

'இவை மூன்றும் என் குரு' என்று பதிலளித்தார் அடிகள். பின் சொன்னார், "எனக்குச் சரியாக நினைவில்லை. பல ஆண்டுகளுக்குமுன் சீன நண்பர் ஒருவர் இதை மகாதேவ் தேசாயிடம் கொடுத்திருந்தார். பின் இது அவரிடமிருந்து என்னிடம் வந்தது. மேலான, உயர்ந்த, நீதிகள் சீனப் பண்பாட்டில் இன்றும் அழியாது இருக்கின்றன. உயர்ந்த தத்துவத்தைக் கூறுகிறது இந்தப் பொம்மைகள். 'ஒரு பொழுதும் பொய் பேசாதே, எவரையும் பழிக்காதே, என்ற நீதியைச் சொல்லும் வகையில் முதல் குரங்கு வாயை மூடிக் கொண்டு உள்ளது. இரண்டாவது குரங்கு தன் கண்ணைப் பொத்திக் கொண்டுள்ளது. இது கண்களால் 'தீயதைப் பாராதே' என்று அறிவுறுத்துகிறது.

மூன்றாவது குரங்கு என்ன சொல்லுகிறது தெரியுமா? என்று மறுபடியும் பேச்சைத் தொடர்ந்தார். 'தீயசெவலையும் தீயசொற்களையும் கேளாதே' என்கிறது அக்குரங்கு. எத்துணை உயர்ந்த கோட்பாடு இது! செவியைத் தீயவழிக்குத் திருப்புவது மனிதனின் அமைதியைக் குலைக்கிறது. மேலும், உள்ளத்தை மன்னிக்க இயலாத குற்றத்திற்கு இழுத்துச் செல்கிறது. நம் எல்லோருக்கும் இந்த அனுபவம் ஏற்பட்டிருக்கிறது'.

நான் இவ்விளையாட்டுப் பொம்மையை, கலையோடு கூடியது என்று கருதுகிறேன். இதன் புறவடிவம் மட்டும் அழகானதல்ல. மறைந்திருக்கும் தத்துவமும் மனித இனத்திற்குப் பயனளிக்கும் மனித சமூகத்தை முன்னேற்றாத கலையையும், மனிதனுக்கு நன்மைதராத கலையையும், கலையென்று சொல்ல முடியாது. கலை மனத்தைத் தூய்மைப்படுத்தி ஆன்மாவையும் தூய்மையாக்குகிறது. நான் இந்த குரங்குகளை அறிவுப் பூர்வமாகவே குரு என்று கருதுகிறேன். அவைகளை நான் செல்லும் இடங்களுக்கெல்லாம் எடுத்துச் செல்லுகிறேன். அடிக்கடி எனக்குப் பாடம் கற்பிக்கின்றன".

— நன்றி:
காந்திஜி வாழ்வில் கலையான நிகழ்ச்சிகள்

ஒழுக்கம் பயில வேண்டும்!



வரலாறு, கணிதம், சமஸ்கிருதம் முதலியவற்றைப் பயின்றாலும், பயிலாவிட்டாலும் எனக்குக் கவலையில்லை. முக்கியமாக ஒழுக்கம் பயில வேண்டும். இதுதான் என் விருப்பம். நான் ஒருக்கால் மனிதனுக்கு அடிமையாவேன்; ஆனால், மனத்திற்கு ஒருபோதும் அடிமைப்பட மாட்டேன். அப்பாவத்தைவிடக் கொடுமையானது வேறொன்றுமில்லை. நீங்கள் நன்கு பயின்று கட்டுப்படுத்துங்கள்.

சத்தியம், உண்மை என்று சொல்லிக்கொண்டு அடக்கம் இல்லாமல் போனால், கர்வத்திலும் அகம்பாவத்திலுமே முடியும். அடக்கத்தோடு உண்மையைக் கடைப்பிடித்தால்தான் வாழ்க்கை அழகுபெறும். இல்லாவிடில் நல்ல சித்திரத்துக்கும், குறும்புக் கோணல் சித்திரத்துக்கும் உள்ள பேதத்தைப் போலவே ஆகும்.

பெரிய எழுச்சியை ஏற்படுத்தியது.

ஒவ்வொரு கிராமத்திலும் காலை 7 மணிக்கெல்லாம் குழுக்கள் கூடி அறிவொளிக் கொடி ஏற்றி பாட்டுப்பாடி கோஷமிட்டு, இந்தக் கணக்கெடுப்புப் பணியில் ஈடுபட்டனர். இந்தக் கணக்கெடுப்பின் மூலம் மாவட்டத்தில் 11 இலட்சம் மக்கள் தொகையில் 10.8 இலட்சம் பேர்களை நேரடியாகச் சந்தித்தனர். இதன்மூலம் அறிவொளிப் பிரச்சாரம் நேரடியாக ஒவ்வொருவரையும் சென்றடைந்தது. 9 முதல் 45 வயதுக்குட்பட்ட கற்போர்கள் 2 இலட்சம் பேர்கள் எனக் கணக்கிடப்பட்டது. அறிவொளி மையங்களில் கற்றுக்கொடுக்க 20,000 தொண்டர்கள் தங்களது பெயர்

கலைப் பயணங்கள்

ஒரு நாள் கணக்கெடுப்பு ஏற்படுத்திய பிரச்சாரப் புயலை அடுத்து, நடத்தப்பட்ட கலைப் பயணங்கள் இரண்டாவது பெரிய பிரச்சாரப் புயலாய் அமைந்தது; 15 கலைக் குழுக்கள், ஏப்ரல் - மே மாதங்களில், 30 நாட்கள் தொடர்ச்சியாக ஒரு நாளைக்கு மூன்று கிராமங்களில், பிரச்சாரம் செய்தன. மாவட்டத்திலுள்ள 2136 கிராமங்களில் 1,858 கிராமங்களில் இந்தப் பிரச்சாரம் நடத்தப்பட்டது. இதன் பலன் கிட்டத்தட்ட 10 இலட்சம் பேர்களைச் சென்றடைந்தது. இந்தப் பிரச்சாரத்தின் மூலம் கற்போர் அனைவரும், மனரீதியாகத் தயார் செய்யப்பட்டனர். கற்றுக்கொடுக்க முன்

வொளி இயக்கம் சாதனை படைத்தது குறிப்படத்தக்கது.

பயிற்சி முகாம்கள்

கற்போர் கண்டறியப்பட்டு, அவர்கள் மனரீதியாகத் தயார் படுத்தப்பட்டு விட்டனர். கற்றுக்கொடுக்கும் தொண்டர்களும் கண்டறியப்பட்டனர். அவர்கள் கற்போரிடையே அறிமுகப்படுத்தப்பட்டனர். ஆனால் கற்பிப்பதில் இவர்கள் பயிற்சி இல்லாதவர்கள் ஆகவே இவர்களுக்கான பயிற்சி முகாம்கள் ஜூன் மாதம் முழுவதும் நடைபெற்றன.

20,000 தொண்டர்களுக்கான பயிற்சி முகாம்கள் 5 நாட்கள், 200 மையங்களில் நடைபெற்றன. இதற்கு

களைத் தன்னார்வத்துடன் பதிவு செய்துள்ளனர். 11.4.92 அன்று கிராமங்களிலும், தெருக்களில் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள், மாவட்ட அளவில் 13.4.92 அன்றெ ஒன்று சேகரித்துத் தொகுக்கப்பட்டது. இது, அறிவொளி வரலாற்றில் இல்லாத சாதனையாகும். அதேபோல் அறிவொளி திட்டப் பரிசோதனைகளை இந்தக் கணக்கெடுப்பின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டதும், அறிவொளி வரலாற்றிலேயே முதல் முறை எனலாம்.

வந்த தொண்டர்கள் 20,000 பேர்களையும், இந்தக் கலைப்பயண மேடைகளில் அறிமுகப்படுத்தி உற்சாகப் படுத்தினர்.

15 வயதுக்குட்பட்ட சிலர், சிறுமிகளைக் கொண்ட ஒரு குழு, மாவட்டம் முழுவதும் சென்று பிரச்சாரம் செய்து, அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. சின்னஞ்சிறு பாலர்களைக் கொண்டு 30 நாட்களில் தொடர்ச்சியாகக் கலைப் பயணம் நடத்தி, இந்தியாவிலேயே முதன் முறையாக இராமநாதபுரம் மாவட்ட அறி

முன்பாக இந்தத் தொண்டர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான தலைமைப் பயிற்றுநர்கள் 1000 பேர்களுக்கும், இவர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்கான வல்லுநர்கள் 100 பேர்களுக்கும், இவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான சிறப்பு வல்லுநர்கள் 20 பேர்களுக்கும், பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன. இந்தப் பயிற்சி முகாம்களே திருவிழாக்கள் போல் இருந்தன. பங்கேற்பாளர்களது, ஆவலையும் தொண்டுள்ளத்தையும் தூண்டுவதாய் இருந்தது.

20,000 தொண்டர்களில் 15,000 தொண்டர்கள் 15-லிருந்து 25 வயதுக்குட்பட்ட இளம் பெண்கள் ஆவர். மிகவும் பின்தங்கிய கிராமப்புறக் கலாச்சாரத்தையும் கொண்ட பண்பாடு, பழக்க வழக்கம் 15,000 இளம் பெண்கள் சமுதாய நோக்கத்துடன் முன்வந்து, தேசியப் பணியில் ஈடுபட்டது என்பதை நினைக்கும்போது, இன்னும்கூட, நம்ப முடியாததாகவும், ஆச்சரியப்படத்தக்கதாகவும் உள்ளது.

கற்பித்தல் பணி துவக்கம்

அனைத்தும் தயார், கற்போர், கற்றுக் கொடுக்கும் தொண்டர்கள், அறிவொளியைச் செயல்படுத்தும் கிராமக் கமிட்டிகள், பஞ்சாயத்து அமைப்பாளர்கள் தயார்; எளிய விஞ்ஞான முறையில் கற்றுக் கொடுக்கப் பயிற்சியளிக்கப்பட்ட தொண்டர்கள், தயார்; பாடப்புத்தகங்கள், சிலேட்டு, பென்சில், எழுதுகுச்சி, சாக்பீஸ், கரும்பலகை என அனைத்தும் கிராமங்களுக்குப் போய்ச்சேர்ந்து விட்டன. வகுப்பகள் நடத்துவதற்கான, இடங்கள் தேர்வு செய்யப்பட்டு விளக்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. கற்பிக்கும் பணி, துவக்கப்பட வேண்டியது ஒன்றுதான் பாக்கி.

ஆம். 2.7.92 அன்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால், கற்பிக்கும் பணி துவக்கி வைக்கப்பட்டது. அன்று இரவு மாவட்டம் முழுவதும்16,000 மையங்களில் 1,72,000 கற்போர்கள் சேர்ந்தனர். முதல் பாடமான பட்டா... படி... மாவட்டம் முழுவதும் படிக்கப்பட்டது. எங்கு பார்த்தாலும், அறிவொளி வகுப்புகள் தெருவோரம், தின்னை, தாழ்வாரம், போட்டன், மேடு, வயல் காடு என அறிவொளி பூக்கள் பூத்துக் குலுங்கின.

விவசாயமும் - சாகுபடியும்

செப்டம்பர் மாதக் கடைசியில் கிட்டத்தட்ட 1.62 இலட்சம் பேர் அறிவொளி முதல் புத்தகத்தை முடித்தனர். இந்த நேரத்தில் தான் மாவட்டம் முழுவதும் நல்ல மழை பெய்தது. இந்த ஆண்டு விவசாயத்திற்குப் போதுமான மழை பெய்தது. மழையைக் கண்டுவிட்டால் சகலத்தையும் மறந்துவிடும் பழக்கம் கொண்ட இம்மாவட்டத்து மக்கள், இந்த ஆண்டு அறிவொளியையும் சேர்த்து மறந்தனர். உழுவதிலும் விதைப்பதிலும், களையெடுப்பதிலும், நாள் முழுவதும் கலைத்துப்போனவர்களுக்கு அறிவொளிப் புத்தகத்தை எடுக்க நேரமில்லாமல் போனது. வயிற்றுப்பாட்டைப் பார்ப்பதே முதல் வேலையாகவும் இறுதி வேலையாகவும் ஆகிப் போனது; ஆனாலும் அறிவொளித் தொண்டர்கள் விடவில்லை!

மழையிலும், சகதியிலும், இருட்டிலும்... பாதயாத்திரைப் பிரச்சாரம் மேற்கொண்டனர். 1000 தொண்டர்கள், மாவட்டம் முழுவதும் 66 குழுக்களாகப் பிரிந்து கொண்டு, 10 நாட்கள் தொடர்ச்சியாய் நடந்து சென்று மக்களை வயல்காட்டிலெல்லாம் சந்தித்துப் பேசி, அறிவொளிக்காக நாள்தோறும் அரை மணி நேரமாவது ஒதுக்க வேண்டுமெனக் கெஞ்சிக் கேட்டனர். இந்த முயற்சிக்குப் பயன் கிடைத்தது. நின்று போன மையங்கள் திரும்பச் செயல்படத் தொடங்கின. அறிவொளி தீபம்-2 அனைத்து மையங்களிலும் விநியோகிக்கப்பட்டது.

எழுச்சிக் கலைப்பயணம்

1992-ஆம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் எழுச்சிக் கலைப்பயணமும் நடைபெற்றது. விவசாய வேலைகளில் மூழ்கிப்போயிருந்த அறிவொளிக் கற்போருக்கு எழுச்சியூட்டுவதற்காக நடத்தப்பட்டது இது.

இம்முறை 12 கலைக் குழுக்கள் தொடர்ச்சியாக 30 நாட்கள் பிரச்சாரம் செய்தன. 1,525 கிராமங்களில் நிகழ்ச்சிகள் நடத்தினர்.

முழுவதும் பெண்களைக் கொண்ட ஒரு கலைக்குழு இம்முறை முழுவதும் பிரச்சாரத்தில் ஈடுபட்டது இன்னுமொரு முக்கியமான சாதனையாகும். இராமநாதபுரம் மாவட்டத்தில் பெண்கள் கலைக் குழுவா? எனப் பலரும் வியந்தனர்.

கற்றோர் தேர்வு எழுதினர்

அறிவொளி தீபம் முதல் புத்தகத்தை முடித்தவர்களுக்காகத் தேர்வு நடத்தப்பட்டது. இதற்குத் தேர்வு ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டனர். வயது வந்த கற்போர், எல்லாம் பள்ளிக் குழந்தைகள் போல், தெருவோரத்து விளக்கடியில் அமர்ந்து தேர்வு எழுதினர்.

1.62 இலட்சம் கற்றோர் இந்தத் தேர்வை எழுதினர். அதன்பிறகு, இரண்டு

பொம்மைக்கொலு

சின்னஞ்சிறிய விரல்கள்! சித்திரம் படைக்கின்றன; வாழ்க்கைச் சித்திரமும் வரைகின்றன; அதுமட்டுமா? விசித்திரமான வேலைப்பாடுகளையும் உருவாக்குகின்றன.

கல்லிலே கலைவண்ணம்!
மண்ணிலே மலைக்கும் வண்ணம் தெய்வத் திருவுருவச் சிலைகள்!

பொம்மைகள் காட்சியில் இடம் பெற்றிருப்பதுடன், நம் இதயத்திலும் இடம் பெற்று விடுகின்றன. அத்தனை நேர்த்தியும் நுணுக்கமும் நிறைந்தவைகளாக அவை காணப்படுகின்றன.

தமிழகக் கைவினைஞர்களின் கற்பனைக்கும், கைவண்ணத்துக்கும் சாட்சியம் கூறும் வண்ணம் அவை புன்னகை பூக்கின்றன.

கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாய் அமையும் கண்காட்சி ஒன்றை அண்மையில் பார்த்தபோது, இந்த மண்ணின் மகிமை தெரிந்தது!

ஆம். சென்னை குறளகத்தில் 'காதிகிராப்ட்' அமைத்துள்ள பொம்மைக் கண்காட்சிதான் அது!

குறளகத்தில் நுழையும்போதே, நம்மை வருக வருகவென வரவேற்பவை, வண்ண பொம்மைகளே!

நவராத்திரிக் கொலுவை முன்னிட்டு, நவநாகரிகமாக உருவாக்கப்பட்ட சிறிய பெரிய அழகிய மலர்கள், மரஞ்செடி கொடி வகைகள், காய்கறிகள், தெய்வத் திருவுருவச் சிலைகள், தேசியத் தலைவர்கள், விலங்கினங்கள், பறவைகள் இப்படி பல்வேறு வகையான பொம்மைகளைப் பார்க்கும்போது, அவற்றையெல்லாம் வாங்க வேண்டும் என்கிற பேராசையே நம் மனத்தில் எழுகின்றது!

ஒவ்வொரு ஆண்டும் பொம்மைக் கொலுவின்போது சிறப்பு வகையாகப் பொம்மைகளை- அதாவது பொம்மைத் தொகுதிகளை வெளியிடுவது வழக்கம். அதன்படி, இவ்வாண்டும் பொம்மைத் தொகுதிகளை வெளியிட்டிருக்கிறார்கள். அவை- தீபாவளி, இராமர் பட்டாபிஷேகம்,

வைகுண்டம், கைலாசப் பருவதம், திருமணம், கோபியர் நடனம், ஆதி சங்கராச்சாரியார் தவம், அரச மரம், ஐயப்பன், தசரதர் தர்பார், அஷ்ட லட்சுமி, பழனி ஆண்டவர், ஆறுபடை வீடு, காமாட்சி அம்மன் விளக்கு, பள்ளிக் கூடம், கிரிக்கெட் பாம்பாட்டி, சந்திரலேகா, மிருகக் காட்சிச்சாலை, ராஜராஜேஸ்வரி, தொலைக்காட்சி, கருட சேவை.

இவையெல்லாம் நம் வீட்டுப் பொம்மைக் கொலுவில் இடம் பெற்றால் எப்படி இருக்கும்?

மண், காகிதக் கூழ், நுணி, மரம், உலோகம், கண்ணாடி ஆகியவற்றிலான பொம்மைகள் இந்தக் கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன.

அதோ, ஓரிடத்தில் காய்கறிகள், பழங்கள் குவிக்கப்பட்டுள்ளதைப் பார்க்கிறோம். உடனே போய் "கத்தரிக்காய், கிலோ எவ்வளவு?" என்று கேட்பதற்குள், "இவை மெழுகினால் ஆன காய்கறிகள், சார்!" என்றதும் நாம் மூக்கின்மேல் விரலை வைக்கிறோம். அத்தனைத் தத்ரூபமாகச் செய்யப்பட்டிருக்கிறது அவை. தக்காளி, கேரட், ஆரஞ்சு இப்படி எல்லாமே

அதே நிறத்தில், இயற்கையாய் விளைந்ததைப் போலவே தோற்றமளிக்கின்றன.

இதேபோல பெரிய அளவில் உள்ள தெய்வத் திருவுருவச் சிலைகளைப் பார்க்கும்போது, கோயிலில் இருப்பது போன்ற பிரமையே ஏற்படுகிறது.

கண்ணாடிக் குச்சியில் செய்யப்பட்ட மான், விநாயகர் முதலானவை கைவினைஞரின் கைத்திறனுக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகின்றன.

காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் இந்தப் பொம்மைகளெல்லாம் எங்கிருந்து தருவிக்கப்படுகின்றன?



நல்ல ஊதியம் கிடைப்பது இந்தச் சந்தர்ப்பத்திலேதான். அதாவது, கிராமத்தில் வாழும் ஏழை எளிய கைவினைஞர்கள் வாழ்க்கைத்தரம் உயர்ந்திட, இம்மாதிரியான பொம்மைக் கொலுக் கண்காட்சிகள் பெரிதும் உதவியாய் இருக்கின்றன.

இந்தக் கண்காட்சியில் ரூ.10 முதல் ரூ.1,500 வரை விலையுள்ள பொம்மைகள் விற்பனைக்குக் கிடைக்கின்றன. இவ்வாண்டு பொம்மைகள், ரூ.28 இலட்சத்துக்கு விற்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

கலை நுணுக்கம் வாய்ந்த இப் பொம்மைகளை, அழகுப் பொருளுக்காக மட்டுமல்லாது, நவராத்திரிப் பண்டிகையின்போது கொலு வைக்கவும் வாங்கிச் செல்கின்றார்கள்.

இந்த அழகிய கண்காட்சி 13.9.93 அன்று தொடங்கியது. 23.10.93 வரை இது நடைபெறும் என்பதால், நாமெல்லாம் பார்ப்பதற்கு நிறைய வாய்ப்பிருக்கிறது.

சென்னை, காஞ்சிபுரம், கடலூர், விருத்தாசலம் முதலான ஊர்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இவை தயாரிக்கப்பட்டு கண்காட்சியில் இடம்பெறுகின்றன.

ஆண்டு முழுவதும் தயாரிப்பதிலேயே ஈடுபட்டிருக்கும் பொம்மைக் கைவினைஞர்களுக்கு, கண்காட்சியின் மூலம் நல்ல வருவாய் கிடைக்கிறது. உழைப்புக்கேற்ற



ஆடவர், மகளிர், குழந்தைகள் என்று அனைவரையும் மகிழ்விக்கும் இந்தப் பொம்மைகள் நம் வீட்டை அலங்கரிக்கின்றன. அதே சமயம், அவற்றை வாங்குவதன் மூலம் நம் நாட்டின் பொருளாதாரமும் உயர்கின்றது. இத்தொழிலில் ஈடுபட்டு வரும் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரமும் உயர்கின்றது. இவற்றின் மூலம் வறுமைக் கோட்டின் சுவடும் அழிக்கப்படுகின்றது.

'கைத்தொழில் களை நாம் மெத்தவும் பரிவுடன்
காப்பது நம்முடைக் கடனாகும்;
எத்தனை ஏழையின் நித்திய ஜீவனம்
என்னுவ தேவெகு புண்ணியமாம்!'

— என்று நாமக்கல் கவிஞர் கூறிய வாக்கின்படி, கைத்தொழிலை வளர்ப்போம்; அவற்றைக் கண்ணாய்க் காப்போம் என்கிற துணிவை நாம் ஒவ்வொரு பொம்மைக் கொலுவன்றும் எடுத்துக் கொண்டாலே போதுமே! கைவினைஞர்கள் கைபிசைய வேண்டியதில்லையே!

—'கிரிஜா

குறளின் குரல்

சாமி பழனியப்பன்

தேடிச் சோறுநிதந் தின்று - பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்
வாடித் துன்பம்மிக உழன்று - பிறர்
வாடப் பலசெயல்கள் புரிந்து - நரை
கூடிக் கிழப்பருவம் எய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே - நானும்
வீழ்வேன் என்று நினைத் தாயோ?

என்றார் கவியரசர் பாரதியார். ஆம், ''பாரதியார் பிறந்தார் - வாழ்ந்தார் - மறைந்தார்'' என்று கூறும் அளவிலேயா அவர் வாழ்க்கை மறைந்தது? அவரது வாழ்க்கை மேற்கூறிய முப்பிரிவுகளுக்குள்ளே அடங்கி இருக்குமாயின், இவ்வுலகில் பிறந்து இறந்த பெரும் பான்மையினரின் பட்டியலில் பாரதியாரின் பெயரும் ஒன்றாகச் சேர்ந்து, காற்றோடு காற்றாக மறைந்திருக்கும். ஆம். அவர் பெயரும் எரிந்து கருகிவீழும் விண்வீழ் கொள்ளியாக ஆகியிருக்கும்.

ஆனால், செயற்கரிய செய்து, சிறப்புப் பெற்ற பாரதியார் விண்ணிலே மிதந்துவரும் வெண்ணிலவு போல, இன்றும் நம் மனத்திலே நின்று நிலவுகிறார், கவிதையெனும் கவினுருவிலே, இப்படித்தான் செய்தற் கரிய செய்த பெரியோர்களெல்லாம் - சான்றோ ரெல்லாம் இறந்தும் இறவாதவராய் புகழுடம்போடு மின்னிப் பொலிகின்றனர்.

''உலகில் புகழ்வளர வறுமையடைதலும், புகழை நிலைநிறுத்திச் சாதலும் வித்தகர்க்கு அல்லால் மற்ற வர்கட்கு அரிதாம்; புகழ் பெற்றோர் அவர் இறந்தாலும் அவர் பெற்ற புகழ் நிலைத்து நிற்கும்'' என்பது திருக்குறள்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, வையகமும் அவ்வழியில் வாழ்ந்து சிறக்க, அரும்பெரும் ஒளி விளக்காக - கலங்கரை விளக்கமாக விட்டுச் சென்ற திருவள்ளுவரின் எண்ணக் கோவையாக அவர் விட்டுச் சென்ற திருக்குறள் - இறந்தும் இறவாமல் புகழோடு வாழுகிற வள்ளுவரை வையத்துப் பெருமக்கள் உள்ளங் களிலே நின்று ஒளிரும் ஒளிவிளக்காக ஆக்கிக் காத்து வருகிறது என்பதிலே இருவேறு கருத்தில்லை.

திருக்குறள் ஒரு மொழியினர்க்கோ, ஒரு நாட் டினர்க்கோ - ஒரு சமயத்தினர்க்கோ உரிய நூல் அன்று - திருவள்ளுவர் அத்தகைய 'ஒட்டைச் சாண்' உள்ள முடையவர் அல்லர். அவர் உலகத்தினரையே எண்ணி னார் - உலகின் மக்களையே சிந்தித்தார். மனித நேயத்தைப் பற்றியே கவலைப்பட்டார். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' - 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற விரிந்து பரந்த விழுமிய கருத்தின் கொள் கலமாகவே விளங்கியது அவரது உள்ளம்.

இத்தகைய விரிந்து - பரந்து விளங்கிய திருவள்ளு வரின் உள்ளத்தினின்றும் உதித்த திருக்குறள் உலகப் பெருநூலாக - உலக மக்கட் சமுதாயத்திற்கென விளங்கும் ஒரு நூலாகத் திகழ்வதில் வியப்பில்லையே யன்றோ? இவ்வாறு, உலகத்தையே சிந்தித்த - ஓங்கிய இமயம் போல வளர்ந்த அந்தப் பெரும்புலவரின் எண்ணக் குவியலை உலகம் உவந்து வரவேற்காமல் இருக்க முடியுமா? அப்புலவர் பெருமகன் எந்நாட்டைச் சார்ந்தவராயிருந்தாலென்ன? அந்நூல், எம்மொழியில் இருந்தாலென்ன?

வள்ளுவத்தால், வள்ளுவத்தைத் தந்த திருவள்ளுவ ரால், தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் வான்புகழ் கிடைத் திருக்கிறது.

இதையே,

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'

என்று பெருமிதத்தோடு பாடி மகிழ்ந்தார் கவியரசர் பாரதியார்.

ஆம். என் மகன் நல்லவன் - புகழாளன் என்று அவனைப் பெற்றெடுத்த தாய் கூறிக் கொண்டிருப்பதை விட, 'அவன் சான்றோன்' என்று மற்றவர்கள் பாராட்டுவதுதானே சிறப்பு? திருக்குறளைக் கற்றுத் தேர்ந்து தெளிந்து - பாராட்டிய பிறநாட்டு நல்லறிஞர் களும், கலைஞர் பெருமக்களும் ஏராளம் ஏராளம்! 'இச்சுவை தவிர வேறு எச்சுவை பெறினும் வேண்டேன்' என்றவர்கள் நிறைய உள்ளனர். அதன் பயனே திருக்குறள் உலக மொழிகள் பலவற்றில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. உலகில், சமயச் சார்பற்ற ஒரு நூல் உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது என்றால் அந்நூல், திருக்குறளே!

இவ்வாறு பல்வேறு நாட்டினரும் பாராட்டிப் போற்று கின்ற திருவள்ளுவரின் பெருமையையும், அவர் இயற்றி அருளிய திருக்குறளின் சிறப்பையும் உணர்ந்து திருக்குறட் பாக்களைக் குற்ற மறக் கற்று, கற்ற வழி நின்று ஒழுகி மனித குலம் சிறப்பு எய்தும் நாள் எந்நாளோ அந்நாளே இம்மண்ணுலகம் விண்ணுலகமாக மாறும் மனித குலத்தை வாழ்வாங்கு வாழ வைக்கும் திருவள்ளுவரின் சிந்தனைகள் நம் சிந்தனைக்குரியன.

''வள்ளுவர்செய் திருக்குறளை
மறுஅறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுஆதி
ஒருகுலத்துக் கொருநீதி''

என்ற வரிகளின் மூலம் வள்ளுவத்தின் சிறப்பையும், திருவள்ளுவரின் நேர்மைத் திறனையும் வலியுறுத்துகிறார் மனோன்மணியம் வழங்கிய பேராசிரியர் சுந்தரம்பிள்ளை.

''தருமர் மணக்குடவர்
தாமத்தர் நச்சர்
பரிமே லழகர்
பரிதி - திருமலையர்
மல்லர் கவிப்பெருமாள்
காளிங்கர் வள்ளுவர்நூற்கு
எல்லை யுரைகண்டா
ரிவர்''

என்கிற வெண்பா, திருக்குறளுக்கு உரை செய்த பழைய நூலாசிரியர் பதின்மர் என வரையறுத்துக் கூறும். இவர்களுக்குப்பின், திருக்குறளுக்கு உரை காணும் முயற்சியில் ஈடுபட்ட அறிஞர் பெருமக்கள் ஏராளம் ஏராளம். இதுகாறும் திருக்குறளுக்கு வெளிவந்த உரைகள் எண்ணற்றன. எனினும், திருக்குறளுக்கு வெளிவந்துள்ள உரைகள் பலவற்றிலும் - பலவற்றுள்ளும் இன்றும்கூட பரிமேலழகர் உரையே சிறந்ததெனப் புலவர் பெருமக்களும் பிறரும் போற்றிப் புகழ்கின்றனர்.

''பாலெல்லாம் நல்லாவின்
பாலாமோ? பைந்தமிழர்
நூலெல்லாம் வள்ளுவர்செய்
நூலாமோ - நூலின்
பரித்த உரையெல்லாம்
பரிமே லழகர்
தெரித்த உரையாமோ
தெளி''

என்ற சிறப்புப் பாயிரம், பரிமேலழகர் உரைச் சிறப்பை வலியுறுத்துவதாகும்.

பரிமேலழகர் உரை, மற்றப் பலரின் உரைகளிலும் சிறந்தது - நயம் பல காட்டும் நல்லுரை என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆயினும், பரிமேலழகர் உரை முற்றிலும் குற்றமற்ற ஒரு உரை என்று கூற முடியாது - அறிவுலகச் சான்றோர் ஒப்புக் கொள்ளவும் இல்லை.

இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமல், 'ஆகா! பரிமேலழகர் உரையிலா குற்றம் காண்பது என்று பாய்ந்தெழுவதோ, பரிமேலழகர் உரையில் குற்றமே இருக்க முடியாது என்று கூறுவதோ, பரிமேலழகர் சொன்னது தான் சரி என்று சாதிப்பதோ சரியாகாது - அறிவுடைமையாகாது. அதுபோல, பரிமேலழகர் தவறுதான் செய்திருக்கிறார் என்று தெளிவாக அறிந்த பின்னும் அதை ஒப்புக் கொள்ளாமல் இடம் பிடிப்பதோ நியாயமுமல்ல - நேர்மையல்ல. பரிமேலழகர் செய்த தவறை உய்த்தறிந்தும், பரிமேலழகர் மீதுள்ள பக்தியால் பாசத்தால் கதை மறைத்து வைப்பதோ, அறுவை மருத்துவம் செய்து குணப்படுத்த வேண்டிய - புரையோடிய புண்ணை புனுகிட்டு மூடிவைப்பது போன்றது.

''எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு''

என்று வள்ளுவரே கூறியிருக்கிறாரே! அப்படியிருக்க உரையாசிரியரான பரிமேலழகரின் உரையில் ஐயப்

உயிர்களிடத்தில் அன்பு வேணும்!

மெய்ப்பொருளைக் காணவேண்டுமானால், தன் உயிரைப் போலவே பிற உயிர்களைக் காணவேண்டும். அற்ப ஜீவன்களையும் தன் உயிரைப்போலவே மதிக்க வேண்டும். நம் உயிரில் நாம் வைத்துக்கொண்டிருக்கும் பற்று பிற உயிர்களிடம் ஜீவகாருண்யமாகப் பரிமளிக்க வேண்டும்.

படுவதோ, அதில் தவறு இருப்பதை எடுத்துக் காட்டுவதோ எப்படிக் குற்றமாக முடியும்?

இனி, பரிமேலழகர் உரையில் சிற்சில தவறுகள் நிகழ்ந்தமைக்கு அடிப்படைக் காரணம் ஒன்று உண்டு என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். 'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' (972) என்ற கொள்கை உடைய திருவள்ளுவர் ஒரு குலத்துக்கு ஒரு நீதி என்று எங்கும் பேசியிருக்க முடியாது. அத்தகைய வள்ளுவப் பெருந்தகையின் அறத்தை விளக்க வந்த பரிமேலழகர், 'மனுமுதலிய நீதி நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்' என்று கூறுகிறார். இத்தகைய கொள்கை வரையறையாலேயே பரிமேலழகரின் உரையில் தவறுகள் ஏற்பட்டுள்ளன.

அடுத்து, பரிமேலழகர் உரையில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை எடுத்துக்காட்டி மறுத்துரைத்த புலவர் பெருமக்களும், சான்றோர்களும் அவ்வப்போது தோன்றாமல் இல்லை. எடுத்துக்காட்டாக,

'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்'

என்ற குறட்பாவை எடுத்துக் கொள்ளலாம். இந்தக் குறட்பாவுக்கு உரை காணப் புகுந்த பரிமேலழகர், 'கேட்டதாய்' என்ற சொற்றொடர்க்குச் சிறப்புரை கூறுகையில், 'பெண்ணியல்பால் தானாக அறியாமையின் கேட்ட தாய் என்றார்' என்று கூறுகிறார். இதனை நாம் ஒப்ப முடியுமா?

பண்டைத் தமிழகத்தில் நுண்மாண் நுழைபுலமிக்க பெண்பாற் புலவர் பலர் வாழ்ந்தனர் என்பது வரலாறு உணர்த்தும் உண்மை. ஔவையார், ஒக்கூர் மாசாத்தியார், காக்கை பாடினியார், நச்செள்ளையார், குறமகள் இளவெயினி, பாரி மகளிர், பூதப் பாண்டியன்தேவி, மாறோக்கத்து நப்பசையார், வெண்ணிக் குயத்தியார், காமக்கண்ணியார் இப்படி எத்தனை எத்தனையோ பெண்பாற் புலவர்களை இலக்கியத்தில் காண்கிறோம். அவ்வாறிருக்க, 'பெண்ணியல்பால் தானாக அறியாமையின்' என்ற பரிமேலழகர் கூற்றை ஒப்புக் கொள்வது அறிவுடைமையாகுமா? சிவப்பிரகாசமுனிவர் என்னும் செம்மைசால் பெரியார், அன்றே பரிமேலழகர் கூற்றை மறுத்துப் பாடியிருப்பதையும் காண்கிறோம்.

தூய இலக்கியம் பிறந்திட...

நமது இலக்கியங்களில் பெண்களை அளவுக்கு மீறி மேன்மைப்படுத்திப் பேசுகின்ற பகுதிகளும் உண்டென்று நான் கேள்விப்படுகிறேன். இப்படிப் போலி மேன்மை அளிப்பது தவறான போக்காகும். எளிய கேள்வியொன்றை உங்களைக் கேட்கிறேன். பெண்களைப் பற்றி எழுத முயலும்போது, எந்த நோக்கத்துடன் நீங்கள் அவர்களை எண்ணிப் பார்க்கிறீர்கள்? காகிதத்தில் பேனாவைக் கொண்டு எழுதத் தொடங்கும் முன், பெண்ணை உங்களுடைய பெற்ற தாயைப் போல எண்ணிக் கொள்ளுங்கள். அப்படி எண்ணினால், தாகத்தினால் தவிக்கும் பூமிக்கு எங்ஙனம் வானத்திலிருந்து மழை கிடைக்கின்றதோ, அதேபோல உங்கள் எழுதுகோலிலிருந்தும் மிகத் தூய இலக்கியம் பிறக்கும்.

''கற்றார் அறிகுவர் மக்கள்தம்
வேறெனக் கட்டுரைத்த
சொற்றான் ஒருபெண் ஒழித்ததென்
பாரொடு தொல்லுலகில்
நற்றான் மகற்பெறு கென்றுஆசி
சொல்பவர் நாணஉனைப்
பெற்றான் மலையரையன் குன்றைவா
ழும்பெரி யம்மையே!''

என்று மறுத்திருக்கிறார் சிவப்பிரகாசமுனிவர்.

இனி,

'அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை' (37)

என்ற குறட்பாவை எடுத்துக் கொள்ளலாம். இக் குறட்பாவுக்கு உரையெழுதிய பரிமேலழகர்,

''அறத்தின் பயன் இது என்று யாம் ஆகம அளவையான் உணர்தல் வேண்டா; சிவிகையைக் காவுவானொடு செலுத்துவா னிடைக் காட்சியளவை தன்னானே உணரப்படும்''

என்றார்.

அதாவது, அறத்தின் பயன் இதுவென நூல்கள் பலவற்றையும் நுண்ணிதாக ஆராய்ந்து தெளிந்து கொள்ள வேண்டுமென்பதில்லை; பல்லக்கில் ஏறிச் செல்வோனையும், அந்தப் பல்லக்கைத் தூக்கிச் செல்வோனையும் கண்டு தெளியலாம் என்பது பரிமேலழகர் கருத்து. இன்னும் தெளிவாகக் கூறினால், 'பல்லக்குச் சுமப்பவன் அறத்தை மதிக்காதவன் - அப்பல்லக்கில் செல்வோன் அறஞ்செய்தோன்' என்றாகும்.

அன்று, திருப்பாணாழ்வாரைத் தோளிலே சுமந்து கொண்டு, திருவரங்கச் சாலை வ[illegible] நடந்து சென்ற லோகசாரங்க முனிவரும், திருஞா[illegible]மபுத்தரின் பல்லக்கினைத் தோளிலே சுமந்து செ[illegible] திருநாவுக்கரசரும் அறத்தை மதிக்காத மாபாவிகளா[illegible]ப்புக்கொள்வோமா?

இன்னும்,

''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற''

என்று அறம் காட்டும் வள்ளுவர்,

''மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்''

என்று பேசுகிற வள்ளுவரா வெறும் புறச் செயல்களைக் கொண்ட அறத்தை வலியுறுத்துவார்? இது பொருந்துமா?

மேலும்,

''அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடையே - மறுத்தார்தம்
பத்தன் சிவிகை பரித்தார் திரிகுவர்மற்
றுந்துஞ் சிவிகையினை யூர்ந்து''

என 'நாலடி நான்மணி'ப் பாடல் ஒன்று பரிமேலழகர் உரையை வெளிப்படையாகவே தெளிவாகவே மறுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு, வேறுபட்டும் மாறுபட்டும் பரிமேலழகராலேயே உரை வகுக்கப்பெற்ற குறட்பாக்கள் பல. இதர உரையாசிரியர்களும், அவரவர்தம் விருப்பத்திற்கும், ஆற்றலுக்கும் தக்கபடி குறட்பாவிற்கு உரை வகுத்துள்ளனர்.

வள்ளுவரின் குறட்பாக்களுக்கு உரையெழுதும் போது, உரையாசிரியர் பலர் தத்தம் உள்ளங்களையும், அவற்றின் உயரங்களையும் காட்டுவதில் முனைந்து நின்றதாலேயே அவர்கள் வள்ளுவர் உள்ளத்தினை, குறட்பாவின் சரியான விளக்கங்களைக் காட்டத் தவறிவிட்டனர்.

எனவே, உரைகள் பல வள்ளுவரின் தெள்ளிய உள்ளத்தினை எடுத்துக்காட்டத் தவறிவிட்டன. எனவே, உரைகள் சில இடங்களில் உரையாகவும், திரையாகவுமே விளங்குகின்றன. எனவே, காய்தல் உவத்தல் இரண்டும் இல்லாமல், நடுநிலை நின்று குறட்பாக்களை ஆராய்ந்தால், வள்ளுவர் உள்ளத்தைத் தெளிவாக உணரலாம் - தெளிவாக உணர்ந்தலாம். அப்போதுதான், நாம் வள்ளுவர் உள்ளத்தினை - திருக்குறள் சித்தனையைப் புரிந்து கொள்ளக்கூடுமாகுமோ.

ஆர்க்காடு நவாபுகளும் அவர்களது நாணயங்களும்

1698-ஆம் ஆண்டில் தென்னாட்டைக் கைப்பற்றிய ஔரங்கசீப், ஐதராபாத்தில் 'நிஜாம்' என்ற பெயரில் ஒரு அதிபரையும், கர்நாடகாவில் 'நவாப்' என்ற பெயரில் ஒரு அதிபரையும் நியமித்து நவாப் நிஜாமுக்குக் கட்டுப்பட்டவராக இருக்க வேண்டும் என்ற நியதியையும் ஏற்படுத்தினார்.

கல்பிக்கர்கான் என்ற ஔரங்கசீப்பின் தளபதி முதன் முதலில் கர்நாடக நவாபாக நியமிக்கப்பட்டார். அவருக்குப் பின் தாவூக்கான் கர்நாடக நவாபாக நியமிக்கப்பட்டார். இதுவரை 'செஞ்சி' தலைநகராக இருந்தது - ஆனால் தாவூக்கான் ஆர்க்காட்டைத் தலைநகராக்கினார். 1712-இல் கர்நாடக நவாப் என்பவரே இதன் காரணமாக நாளடைவில் ஆர்க்காடு நவாப் என்று அழைக்கப்பட்டார்

1707-இல் ஔரங்கசீப் காலமானார். சதத்துல்லாகான் 1710-இல் கர்நாடக நவாபானார். இவரே சுதந்திர முஸ்லீம் நவாபானார்.

இவரைத் தொடர்ந்து தோஸ்த் அலி (கி.பி.1732-1740), சப்தர் அலி (கி.பி.1740-1742), முகமது சையது (கி.பி.1742-1744), அன்வருதின்கான் (கி.பி.1744-1749), முகமதலி, வாலாஜா - (கி.பி.1749-1795), உம்-தத் உல் உமாரா, வாலாஜா (கி.பி.1795-1801), அசிம்-உத்-தௌலா, வாலாஜா (கி.பி.1801-1819), அக்ம்ஜா, வாலாஜா (கி.பி.1825), குலாம் கௌஸ்கான், வாலாஜா (கி.பி.1825-1855) ஆகியோர் ஆர்க்காடு நவாபுகளாக ஆட்சிபுரிந்தனர். அன்வருதின் காலத்திலிருந்து நேவாயத்களின் ஆட்சி முடிவுற்று வாலாஜா பட்டத்துடன் ஆட்சி செய்தனர்.

சுல்பித்கர்கான் காலத்திலிருந்து நாவாபு காசுகளைப் புழக்கத்தில் விட்டாலும் அவர்களது பெயரில் எவ்விதக் காசுகளும் வெளியிடவில்லை. அன்வருதின் காசு வெளியிட்டான். காசின் முன்பக்கத்தில் கொடி ஒன்றும், கொடிக்குள் சூரியன் பிறை ஆகிய சின்னங்களும், கொடியின் கீழ் ஐந்து புள்ளிகளும், பின் பக்கத்தில் அன்வருது என்று தமிழில் பொறிக்கப்பட்ட செப்புக் காசுகள் பல கிடைத்துள்ளன. அவரது மகனான முகமதலி வாலாஜா - ஏறத்தாழ நாற்பத்தாறு ஆண்டுகள் நவாபாக ஆட்சி செய்தார்.

அவரது காலத்தில் (கி.பி.1749-1795) வா-வாலா-வாலாஜா என்ற அராஹபி மொழியிலும், தமிழிலும் பொறிக்கப்பட்ட செப்புக்காசுகள் ஆர்க்காடு, கடுபா, மெட்ராஸ், திருவள்ளூர், மதுரை, நட்டர் நகர், தஞ்சாவூர், திருநெல்வேலி, திருவாமூர் ஆகிய இடங்களிலிருந்து வெளியிடப்பட்டன. கி.பி.1792-இல் மட்டும் 55,772 ஆர்க்காடு ரூபாய்களையும், 66,772 பாண்டிச்சேரி ரூபாய்களையும் வெளியிட்டுள்ளார். வெள்ளி நாணயங்களையும், வெளியிட்டுள்ளார். பின்னர் ஆர்க்காடு ரூபாய்களுடன் இருபது, பத்து, ஐந்து, இரண்டரை செப்புக் காசுகளையும் நவாபுகள் பெயரில் கிழக்கிந்தியக் கம்பெனியார் வெளியிட்டனர். இவற்றின் ஒருபுறம் பாரசீக மொழியில் காசின் மதிப்பும், மறுபுறத்தில் தமிழ் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் காசின் மதிப்பும் பொறிக்கப்பட்டிருக்கும்.

நவாப் உம்-தத்-உல் உமாரா இறந்தவுடன் கர்நாடகத்தில் ஆட்சிப் பொறுப்பையும் கிழக்கிந்தியக் கம்பெனியாரே ஏற்றுக் கொண்டனர். அவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த அஜிம்-உத்-தௌலா பெயரளவிலேயே நவாபாக இருந்தார். கி.பி.1803 முதல் ஒருபுறம் கம்பெனியின் சின்னத்துடனும் ஆண்டு பொறிக்கப்பட்டதும் மறுபுறம் காசின் அளவைப் பாரசீக மொழியிலும் ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டதுமான செப்புக் காசுகள் வெளியிட்டார்.

சமீபத்தில் ஆர்க்காடு டெல்லி கேட் அருகில் ராணிப்பேட்டையைச் சார்ந்த அப்துல் அக்கீம் கல்லூரி வரலாற்றுத்துறை மாணவர் என். சோமு என்பவர் 1803-இல் வெளியிடப்பட்ட செப்புக் காசைக் கண்டுபிடித்து வேலூர் அருங்காட்சியகத்தில் ஒப்படைத்தார். அதில் கிழக்கிந்தியக் கம்பெனி 1803 என்ற ஆங்கில வாசகத்துடன் அவர்களது சின்னமும் பின்புறம் 'ஐந்து காஸ், ஒரு ஃப்ளூசுக்குச் சமம்' எனப் பாரசீக மொழியிலும் அதன் கீழ் 5 காஸ் என ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம் அம்பா சமுத்திரத்தைச் சார்ந்த மருத்துவ டாக்டர் டி. சங்கரநாராயணன் என்பவர் சேகரித்த ஆர்க்காடு நவாபுகள் வெளியிட்ட சுமார் நூறு செப்பு நாணயங்களை வேலூர் அருங்காட்சியகக் காப்பாட்சியர் டாக்டர் வே. ஜெயராஜுடன் ஆய்வை முன்னிட்டு ஒப்படைத்துள்ளார். ஆர்க்காடு நவாபுகள் பற்றிய பல்வேறு உண்மைகளை ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது. அராபிக் வாசகத்தைப் படிப்பதில் வேலூர் அராபிக் கல்லூரியில் பணியாற்றும் திரு பித்வி, திரு குல்சார் அகமது, திரு சபீக் அகமது ஆகியோர் உதவி வருகிறார்கள்.

காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம்,
வேலூர்.

பிறர் நம்மை எவ்வண்ணம் நடத்தவேண்டும் என்று விரும்புகிறோமோ அவ்வண்ணமே பிறரை நாமும் நடத்த வேண்டும்.

— அண்ணல் காந்தியடிகள்

மாணவர் பக்கம்:

சிறுகச் சிறுகச் சேமிக்கப் பழகு
செழிப்பான வாழ்வுக்கு அதுதான் அழகு.
சேமிப்போர் வீட்டில் செல்வம் பெருகும்
செலவாளி வீட்டில் கடனே பெருகும்.

சிறு முயலும் குட்டி போடும்
சேமிக்கும் பணமும் வட்டிபோடும்.

சேமிக்க வழிகள் பலவுண்டு
சேமித்து வந்தால் பலன் உண்டு.

சேமிக்கத் தூண்டும் தேன்கூடு
சேமிப்போர் வாழ்வே பூக்காடு.

சிந்திக்கத் தெரிந்தவன் மனிதனாவான்
சேமிக்கத் தெரிந்தவன் செல்வனாவான்.

கட்டாயம் சேமிக்கப் பழகிக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்.

கட்டை வண்டிக்குக் கடையாணி தேவை
கட்டாயச் சேமிப்பு வாழ்வுக்குத் தேவை.

உடுக்கை இழந்தவன் கை ஒடிஉதவும்
உண்மையில் சேமிப்பு கூடி உதவும்.

விதைநெல்லைச் சேமிப்பவன் விவசாயி
வீண்செலவைத் தவிர்ப்பவன் அறிவாளி.

சேமிக்கச் சேமிக்க இன்பமயம்
செலவிட்டு அழிப்பது துன்பமயம்.

சேமிப்பு செல்வருள் உய்க்கும் செலவதிகம்
பூமியில் தாழ்த்தி விடும்.

— பல்லவன்

கல்வியின் நோக்கம்



வாழ்க்கையில் வெற்றிபெறுவதே கல்வியின் நோக்கம் என்று கருதுவது தவறு. வாழ்க்கையை வளமடையச் செய்வதே கல்வியின் நோக்கம்.

முதலில் தொண்டு, பின்பு தன்னலம் என்ற மனப்பக்குவம் அனைவரிடமும் ஏற்பட வேண்டும். அப்பொழுதுதான் நல்ல சமுதாயம் உருவாகும்.

— டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்

அறிவுச் சுடர்

இந்தியாவில் உள்ள நீளமான ஆற்றுப் பாலம் - பாட்னாவிலுள்ள மகாத்மா காந்தி பாலம்.

உலகில் யானைகளின் நகரம் என்று அழைக்கப்படுவது - சயாம்.

யமுனை ஆறு எங்குள்ளது?
இந்தியாவில் டெல்லியில் அமைந்துள்ளது.

ஹாலந்து நாட்டின் புதிய பெயர் என்ன? - நெதர்லாந்து.

உலகிலேயே மிகப்பெரிய பாலைவனம் - வடஆப்பிரிக்காவைச் சார்ந்த சகாரா பாலைவனமாகும். மொத்தப் பரப்பு 84 இலட்சம் ச.கி.மீ.

உலகில் காப்பி அதிகம் விளையும் நாடு பிராசில். உலகில் பருத்தி அதிகம் உற்பத்தியாகுமிடம் - சீனா. உலகில் அதிகமாக மீன் பிடிபடும் இடம் - ஜப்பான்.

உலகில் பட்டு உற்பத்தியில் முதலிடம் வகிப்பது - ஜப்பான்.

ஆயிரம் ஏரிகள் உள்ள நாடு பின்லாந்து.

காற்று மண்டலத்தில் மிகுதியாக உள்ள வாயு - நைட்ரஜன்.

அமெரிக்காவை சேர்ந்த ஆர்வில் வில்பர்ரைட் 1903-ஆம் ஆண்டு ஆகாய விமானத்தைக் கண்டறிந்தார்.

இரத்த ஓட்டத்தைக் கண்டு பிடித்தவர் வில்லியம் ஹார்வி.

உலகில் கிரிக்கெட் விளையாட்டு முதன்முதலாக இங்கிலாந்தில் தோன்றியது உலகிலேயே மழையே பெய்யாமல், கடந்த 400 ஆண்டுகளாக உள்ள பகுதி சிலி நாட்டில் உள்ள அட்டகாமா.

உலகில் அதிகம் கம்பளி உற்பத்தியாகுமிடம் - ஆஸ்திரேலியா. உலகில் தங்கம் அதிகம் கிடைக்குமிடம் தென்ஆப்பிரிக்கா.

இந்தியாவிலுள்ள மிக பெரிய நீர்மின் திட்டம் - பக்ராநங்கல். மிகவும் ஒளியுள்ள கிரகம் - சுக்கிரன் (வீனஸ்).

நைல் நதியின் நன்கொடை என்று அழைக்கப்படுவது எந்நாடு - எகிப்து.



TNSC BANK

The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

Rate of Interest on Deposits (Effective from 2.9.1993

Sl.No.	Type of Deposit	Rate of Interest per annum
1.	Savings Bank Accounts	5.25% w.e.f. 1.7.1993
2.	Fixed Deposits :	
	For 46 DAYS and above but upto 270 days	9.00%
	For 271 DAYS and above but upto 364 days	9.50%
	For 1 YEAR and above	10.25%

Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வா[illegible]

தோற்றமும் வளர்ச்சி[illegible]

வி.டி. துரைராஜ், இ.ஆ.ப.,
தலைமைச் செயல் அலுவலர்

'இந்தியா கிராமங்களில் வாழ்கிறது!' என்றார் அண்ணல் காந்தியடிகள். பாரம்பரியம்மிக்க நம் நாட்டின் நூல்நூற்பு, துணி நெசவு மற்றும் பல்வேறு கலைநுட்பம் வாய்ந்த கிராமத் தொழில்கள் 200 ஆண்டுக் கால ஆங்கிலேயர் ஆட்சியில் நசிந்து போயின.

நம் நாட்டில் விளைந்த பஞ்சு இங்கிலாந்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கே அது ஆலைகளில் துணிகளாக நெசவு செய்யப்பட்டு மீண்டும் இந்திய மக்களிடமே விற்பனை செய்யப்பட்டது இதனால் இந்திய மக்கள் வேலை வாய்ப்பினை இழந்ததோடு, இந்தியப் பொருளாதாரமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டது.

கிராம மக்கள், குறிப்பாக ஏழை எளிய மக்கள் போதுமான உடையும், வேலை வாய்ப்பும் இன்றி வறுமையில் சிக்கித் தவித்தார்கள். இந்நிலை கண்டு ஆழ்ந்து சிந்தித்து அண்ணல் காந்தியடிகள் இராட்டை மூலம் நூற்பும், கதர்த் துணிகளை உற்பத்தி செய்வதும் நசித்து போன கிராமத் தொழில்களுக்கு மீண்டும் புத்துயிர் ஊட்டி வளர்ப்பதும் தான் ஏழை எளிய மக்களுக்கு உற்ற துணையாக அமையும் என்று ஆணித்தரமாக நம்பினார். அவரே முன்வந்து இராட்டையில் நூற்பதோடு நாட்டு மக்களையும் பெரும் அளவில் நூற்புத் தொழிலில் ஈடுபடுத்தி, கதர் துணியையும் உற்பத்தி செய்யுமாறு மக்களைக் கேட்டுக் கொண்டார். இதனால் கைராட்டையைக் கண்டு அரசு சுதந்திரப் போராட்டக் காலத்தில் அச்சம் அடைந்தது.

அண்ணல் காந்தியடிகளின் அறைகூவலுக்கு நாட்டு மக்கள் அனைவரும் பேராதரவு அளித்தனர். தமிழ்நாட்டு மக்களும் கதர்த் தொழிலை வளர்ப்பதில் மகாத்மா காந்தியடிகளுக்கு உறுதுணையாக நின்றனர்.

1921-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 21-ஆம் நாள் மதுரைக்கு காந்தியடிகள் வருகை தந்தபொழுது, உடுக்கப் போதுமான உடைகளின்றி இலட்சக்கணக்கான மக்கள் வயல்களிலும், வழியெங்கிலும் அவதியுற்றதைப் பார்த்துக் கண்கலங்கி மனம் வருந்தினார். அன்று முதல் தான், முழு ஆடை அணிவதைக் களைந்து, தம் இடையில் ஒரு துண்டு மட்டும் அணிவது என்று உறுதி எடுத்துக் கொண்டார். அவ்வாறு உறுதி எடுத்துக் கொண்டு அண்ணல் காந்தியடிகள் அரை ஆடை உடுத்திய - மதுரை மேலமாசி வீதியில் உள்ள கட்டடம், ஒரு நினைவுச் சின்னமாகத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தினால் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

அந்தக் காலத்தில் முதறிஞர் ராஜாஜி, தந்தை பெரியார் போன்ற தலைவர்கள் கதர் உற்பத்திக்காகவும், கதர் விற்பனைக்காகவும் அரும்பாடுபட்டுள்ளார்கள். சுதந்திரப் போராட்டக் காலத்தில் கதர் மீது பற்றுள்ளவர்களால் நிறுவப்பட்ட கதர் வாரியத்திற்குத் தந்தை



ஓங்கி வளரும் பீங்கான் தொழில்

தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த விருத்தாசலத்தில், தமிழ்நாடு அரசு அமைத்துள்ள பீங்கான் தொழிற்சாலை உலகப் புகழ் பெற்றதாகும்.

பீங்கான் தொழிலுக்குத் தேவைப்படும் வெள்ளைக் களிமண் - நெய்வேலி, பண்ணுருட்டி, திண்டிவனம் போன்ற பகுதிகளிலேயே கிடைக்கின்றது; இதற்கான மற்ற மூலப் பொருட்கள், சேலம், திருச்சி, நெல்லை-கட்டபொம்மன் மாவட்டங்களிலிருந்தும் வெளி மாநிலங்களிலிருந்தும் இங்கே கொண்டுவரப்படுகின்றன.

நட்டுகள், 'கப்'புகள், பூந்தொட்டிகள் மட்டுமல்ல; தலைவர்கள், கடவுளர்களின் திருவுருவங்களும் கூட இங்கே அற்புதமாகத் தயாரிக்கப்பட்டு வண்ண மெருகூட்டப் படுகின்றன.

இவை - வெளி மாநிலங்களுக்கு மட்டுமல்ல; வெளி நாடுகளுக்கும் இங்கிருந்து அனுப்பி வைக்கப் படுகின்றன; பீங்கான் தொழில் மேம்பட - பலருக்கு விருத்தாசலத்தில் தக்கமுறையில் பயிற்சியும் அளிக்கப்படுகின்றது.

-'ராஜூ'

ஒன்றாகும். ஓராண்டுக்குச் சுமார் ரூ.1.55 கோடிக்கு பனந்தும்பு ஏற்றுமதி செய்யப்படுகிறது. பனைத் தொழில் செய்து பதநீர் இறக்கும் தொழிலாளர்கள், விபத்துக்குள்ளாகி மரணமடைய நேர்ந்தால், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.10,000 உதவித் தொகை அவர்களுடைய குடும்பங்களுக்கு வழங்கப் படுகிறது. பனைத் தொழிலின் முக்கியத்துவத்தை மனத்திற் கொண்டு இத்தொழிலை மேலும் வளர்ச்சி அடையச் செய்திட வேண்டி, பனைத் தொழிலுக்கு என ஒரு தனி வாரியம் ஏற்படுத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவுசெய்து, 20.4.92-இல் தமிழகச் சட்டமன்றப் பேரவையிலும் இது அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, பனைத் தொழிலுக்கென்று ஒரு தனி வாரியம் அமைத்திட, அரசு நிலையில் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கதர்த் திட்டங்களின்கீழ் தயாரிக்கப்படும் பொருட்கள் தரம் வாய்ந்தவையாகவும், இயற்கையினால் ஆன பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படுவதாலும், விலை மிகவும் நியாயமாக இருப்பதாலும், அவற்றைப் பொது மக்கள் அதிக அளவில் வாங்கிப் பயன்கொள்ள முடிகிறது. குறிப்பாக காதி கிராப்ட் தேன், கோபுரம் சலவைச் சோப்பு, டிடர்ஜென்ட் சலவை சோப்பு, டிடர்ஜென்ட் திரவ சோப்பு, வேம்பு நறுமணக் குளியல் சோப்பு, சந்தனக் குளியல் சோப்பு, கார்பாலிக் சோப்பு, புதிய இளஞ்சிவப்பு குளியல் சோப்பு, தரம்வாய்ந்த பலவண்ண வாழ்த்து அட்டைகள், ஆடவருக்கும், மகளிருக்கும் தேவையான காலணிகள், பள்ளிச் சிறுவர்களுக்கான காலணிகள், தோல் பொருட்கள், மட்பாண்டங்களிலான தரமான தண்ணீர்ப் பானைகள், தோட்டங்களுக்குத் தேவையான பூந்தொட்டிகள், ஊறுகாய் ஜாடிகள் மற்றும் ஏராளமான வீட்டுத் தேவைப் பொருட்கள் அனைத்தும் கதரங்காடியில் விற்பனை செய்யப்படுகின்றன.

'காதி கிராப்ட்' அங்காடிகளில் விற்பனை செய்யப் படும் தூய்மையான கதர்ப் பட்டுப் புடவைகள் இன்று மக்களிடம் மிகவும் பிரபலமடைந்துள்ளன. பட்டுப் புடவைகள் வாங்க வேண்டுமென்று நினைத்த மாத்திரத்தில், கதர் அங்காடி நினைவுக்கு வரும் வகையில் கதர்ப் பட்டுப் புடவைகள் மக்களிடம் புகழ்பெற்று விளங்குகின்றன.

கதர் கிராமத் தொழில் பொருட்களை ஊரகப் பகுதிகளில் உள்ள மக்களும், நகர மற்றும் மாநகரப் பகுதிகளில் வாழும் மக்களும் வாங்கி உபயோகித்தால், இத் தொழில்களில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான ஏழை மக்களின் வாழ்வு வளம்பெறும் என்பதில் ஐயமில்லை.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்:

பாடலும் படிப்பினையும்

'மக்கள் கவிஞர்' என்று மாநிலத்தவரெல்லாம் போற்றிப் புகழ்ந்து கொண்டிருக்கும் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் பாடல்கள், பாமர மக்களை மட்டுமல்ல, படித்தவரையும்கூடத் தட்டி எழுப்பின.

அவரது பாடல்கள் என்றும் பதினாறாய், எல்லார்க்கும் தேனாறாய் விளங்கின!

எளிய சொற்கள், இதயத்திலே பதமாகப் பதியவைக்கும் கருத்துக்கள் அவரது எழுத்துக்களாகும்.

வெறும் வார்த்தை அலங்காரமாய் இல்லாமல், சமுதாய அலங்கோலத்தைச் சரியாகப் படம் பிடித்துக் காட்டுகின்ற படமாய் - பாடலாய் - பாடமாய் விளங்கின அவரது படைப்புகள்.

அவரது வாழ்க்கை வரலாற்றின் சில ஏடுகளைப் புரட்டுகிறோம்...

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் 13.4.1930-இல் தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டத்திலுள்ள சங்கன்படைத்தான் நாடு என்னும் ஊரில் பிறந்தார். பெற்றோர் திரு எஸ்.ஆர். அருணாசலம், திருமதி விசாலாட்சி.

விவசாயியான இவரது தந்தையார், பாடல் எழுதும் திறமையும் பெற்றிருந்தார். அதனால், கல்யாணசுந்தரத்திற்கு அந்த ஆர்வம் அப்போதே முகிழ்த்தது.

ஏழை எளியோரிடம் பழகிய கவிஞர், அவர்களின் வாழ்க்கைப் போராட்டங்களைக் கவிதையாக்கி, பலரிடம் படித்துக் காட்டியது மட்டுமல்ல, பாடியும் காட்டுவார்.

கவிதை பாடும் ஆற்றல் படிப்படியாய் வளர்ந்தது.

பாவேந்தர் பாரதிதாசனிடம் பாடங்கேட்டார். பாவேந்தரே வியக்கும் வண்ணம் பாடல்களை எழுதிப் பாராட்டுதல்கள் பெற்றார். கவிஞர் பாவேந்தரை மறக்கவில்லை. பாடல் எழுதும்போதும் கூட அவரை நினைவுகூர்ந்தார்.

"நல்ல குடும்பம் ஒரு
பல்கலைக் கழகம் என்று
தெள்ளு தமிழ்க் கவிஞன்
தெளிவுரை சொன்ன துண்டு"

என்று அவர் பாடியிருக்கிறார். பாவேந்தரின் தூண்டுதலால், கல்யாணசுந்தரத்தின் கவிதைத் திரி ஒழுங்காய் எரிந்தது. அதன் ஒளி எங்கும் பரவியது.

கவிஞர் பல நாடகங்களுக்குப் பாடல்கள் எழுதினார். அத்தோடு நடிக்கவும் செய்தார். 'ஜனசக்தி' இதழ், அவரது கவிதைகளை அவ்வப்போது வெளியிட்டு வந்தது. அவரது பாடல்கள் மக்களிடையே செல்வாக்கு பெற்றன. கருத்தாழமிக்க அந்தப் பாடல்களைக் கேட்டு மகிழாதாரே இல்லை எனலாம். பட்டி தொட்டிகளில், நாடு நகரங்களில் அவர் புகழ் பரவியது. அதன் விளைவு திரைப் படங்களில் வாய்ப்புகள் தேடி வந்தன. கவிஞர் எழுதிய முதல் படம் 'படித்த பெண்'. அதற்குப் பிறகு வெளிவந்த மாடர்ன் தியேட்டர்ஸின் 'பாசவலை' படம், ரசிகர்களின் பாசவலையில் கவிஞரைச் சிக்க வைத்தது எனலாம். அதன் பிறகு பல படங்களுக்கும் கவிஞர் பாடல்கள் எழுதினார். பாட்டும் கருத்தும் தேனில் ஊறிய பலாச்சுளையாக இனித்தது. அதன் இனிமையிலே மயங்கியவர் பலர்.

கவிஞரின் பாடல்கள், வெறும் இசைக்காக மட்டும் எழுதப்பட்டது அல்ல; மின்னல் கீற்றாய்த் தோன்றி மறைந்து விடுவதும் அல்ல. அது, கால காலத்துக்கும் நிற்கக்கூடிய கல்வெட்டாய், காலக்கண்ணாடியாய்த் திகழும் தெவிட்டாத தெள்ளமுது.

**அக்டோபர்: 8 -
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
நினைவு நாள்:**



பெரியார் அவர்கள் தான் முதல் தலைவராக இருந்துள்ளார்.

ஆங்கிலேய ஆட்சி முடிந்து இந்தியா சுதந்திரமடைந்தவுடன் தமிழ்நாடு அரசு கதர் முன்னேற்றத்திற்காக ஒரு தனித் துறையை ஏற்படுத்தியது. தமிழ்நாடு அரசின் இந்த முயற்சிக்காக அண்ணல் காந்தியடிகள் தன்னுடைய பாராட்டுகளை வழங்கியுள்ளார். காந்தியடிகள் தம் பாராட்டுரையில் "அனைத்து மாநில ஆட்சி அமைப்புகளிலும், கதர் வளர்ச்சிக்காக ஒரு திட்டத்தை ஏற்படுத்தியதில் சென்னை அரசு பெருமைப்படுகிறது" என்று தமிழ்நாடு அரசையே பெருமைப்படுத்திப் பாராட்டியுள்ளார்.

தொடக்கத்தில் கிராமப் பகுதியில் பிர்க்கா வளர்ச்சித் திட்டத்தின் மூலம் கதர் திட்டம் செயல்படத் தொடங்கிப் பின்னர் ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒரு பகுதியாக இணைந்தது. தமிழ்நாட்டில் கதர் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் மிக வேகமாக வளர்ந்து வந்ததால், 1956-ஆம் ஆண்டு கதருக்காக தமிழ்நாடு அரசு ஒரு தனித் துறையையே ஏற்படுத்தியது. மைய அரசு 1956-ஆம் ஆண்டு அகில இந்திய கதர் கிராமத் தொழில் ஆணையத்தை, பம்பாயைத் தலைமை இடமாகக் கொண்டு நிறுவியது. அதன் அடிப்படையில், 1.4.1960 முதல் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தோற்றுவிக்கப்பட்டது.

1960-ஆம் ஆண்டு இவ்வாரியம் தொடங்கப்பட்ட காலத்தில், கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்தி ரூ.110.50 இலட்சமாகவும், விற்பனை ரூ.102 இலட்சமாகவும் இருந்தன. கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவின் நிதி உதவியையும், தமிழக அரசின் நிதி உதவியையும் பெற்றுப், படிப்படியாக கதர் கிராமத் தொழில் வாரியம் தமிழ்நாட்டில் வளர்ச்சியடைந்துள்ளது.

பேரறிஞர் அண்ணா அவர்கள், கதர் கிராமத் திட்டங்களை, தம் ஆட்சிக் காலத்தில் போற்றி வளர்த்தார். பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தம் ஆட்சிக் காலத்தில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், அகில இந்திய அளவில் மற்ற மாநிலங்களுடன் போட்டி போட்டுக் கொண்டு வளர்ச்சி அடைந்தது. அகில இந்தியாவிலேயே கதர் கிராமத் தொழில் திட்டங்களைத் தன் நேரடி நிர்வாகத்தில் செயற்படுத்திக்கொண்டு வருவது, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தான் என்பது குறிப்பிடத் தக்கது.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் கதர் கிராமத் தொழில் திட்டங்கள் அகில இந்திய அளவில் சிறப்பாக வளர்ச்சியடைந்துள்ளன. புரட்சித்தலைவி அவர்களின் காலத்தில் கதர் கிராமத் தொழில் ஆணையம் வழங்கும் நிதியுதவியுடன் தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டங்களான ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம், சிறப்புக் கூட்டுத் திட்டம், கிராமத் தொழில் வளர்ச்சித் திட்டம், பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்டம், மலைவாழ்வு மக்கள் மேம்பாட்டுத் திட்டம், வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு மலைத்தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம், பகுதி-2 திட்டம் ஆகிய அரசின் சிறப்புத் திட்டங்களின் மூலம், ஏராளமான நிதியுதவி, கதர் கிராமத் தொழில் வாரியத்திற்குத் தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில், அரசின் நிதியுதவியுடன் பல புதிய தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும், விற்பனை நிலையங்களும் தொடங்கப்பட்டுள்ளன. கதர் கிராமத் தொழில் வளர்ச்சிப் பணிகள், புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் மிகப் பன்மடங்காக விரிவடைந்துள்ளன.

அகில இந்திய கதர் கிராமத் தொழில் ஆணையம், கதர் தொழிலோடு கூட 96 கிராமத் தொழில்களின் வளர்ச்சியைச் செயற்படுத்துவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. அவற்றில் 57 தொழில்களை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் செயற்படுத்தி வருகிறது. இந்தத் தொழில்கள்,

1. இவ்வாரியத்திற்குச் சொந்தமான தொழில் அலகுகள்.

2. இவ்வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற் கூட்டுறவு சங்கங்கள்.

3. இவ்வாரியத்தின் நிதியுதவி பெறுகின்ற தனி நபர்கள், கைவினைஞர்கள்

ஆகிய மூன்றடுக்கு நிலைகளில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

கதர்த் திட்டங்கள், பனைத் தொழில், வெல்லம் மற்றும் கண்டசாரி சர்க்கரை எண்ணெய், தேனீ வளர்த்தல், உண்ணா எண்ணெய் மூலம் தயாரிக்கப்படும் சோப்பு வகைகள் (சலவை சோப்பு, மற்றும் குளியல் சோப்பு), டிடர்ஜென்ட் சோப்பு வகைகள், தானியம்-பருப்பு வகைகளைப் பயன்படுத்துதல், மட்பாண்டத் தொழில் மற்றும் செங்கல் தயாரித்தல், தச்சுத் தொழில் மற்றும் கருமாரத் தொழில், தோல் பொருள்கள் தயாரிக்கும் தொழில், நார் தயாரித்தல், பிரம்பு மூங்கில் தொழில், அலுமினியப் பாத்திரங்கள் தயாரித்தல், அகர்பத்தி தயாரித்தல், சீயக்காய்த் தூள், பற்பொடி, நீலகிரி தைலம், எலுமிச்சைப் புல் தைலம் தயாரித்தல் போன்ற பல கிராமத் தொழில்கள் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் மேலும் பல புதிய தொழில்கள் கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ்ச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. செயற்கை

வைரம் பட்டைத் தீட்டுந் தொழிலுக்கென, 12 கூட்டுறவுச் சங்கங்கள், இந்த ஆட்சிக் காலத்தில் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. மின் அணு உற்பத்தித் தொழிலுக்காக 7 கூட்டுறவுச் சங்கங்கள் இந்த ஆட்சிக் காலத்தில் புதிதாக அமைக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

1990-91-ஆம் ஆண்டிலிருந்து, 1992-93-ஆம் ஆண்டு வரை புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் பற்றிய விவரங்களைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்கள் மூலம் அறியலாம்.

1990-91-ஆம் ஆண்டு கதர் உற்பத்தி ரூ.20.29 கோடி, கிராமத் தொழில் உற்பத்தி ரூ.241.94 கோடி, வாரியத்தின் மூலம் வேலை வாய்ப்பு பெற்றுள்ளோர் 9.99 இலட்சங்கள், 1991-92-ஆம் ஆண்டு கதர் உற்பத்தி ரூ.22.80 கோடி, கிராமத் தொழில் உற்பத்தி ரூ.270.40 கோடி, வாரியத்தின் மூலம் வேலை வாய்ப்பு பெற்றுள்ளோர் 10.83 இலட்சங்கள், 1992-93-ஆம் ஆண்டு கதர் உற்பத்தி ரூ.26.50 கோடி, கிராமத் தொழில் உற்பத்தி ரூ.298.71 கோடி, வாரியத்தின் மூலம் வேலை வாய்ப்பு பெற்றுள்ளோர் 11.83 இலட்சங்கள்.

ஒவ்வோராண்டிலும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் வளர்ச்சிப் பாதையில் வேகமாக முன்னேற்றம் அடைந்துள்ளதை, மேற்க்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து தெளிவாக அறியலாம். புரட்சித் தலைவி அவர்களின் வழி காட்டுதலுடன், அகில இந்திய அளவில் சிறப்பானதொரு இடத்தைத் தமிழ்நாடு அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

1991-92-ஆம் ஆண்டிற்கான புள்ளி விவரங்களின்படி, அகில இந்திய அளவில் தமிழ்நாடு, கதர் உற்பத்தியில், உத்திரப்பிரதேசத்திற்கு அடுத்தபடியாக 2-வது இடத்தையும், கிராமத் தொழில் வளர்ச்சியில் மகாராட்டிரம், உத்திரப்பிரதேசம் ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தையும் வகிக்கிறது. வாரியக் கூட்டமைப்பில், இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களுக்குத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் எடுத்துக் காட்டாகவும், முன்னோடியாகவும் செயற்பட்டு வருகிறது.

கதர்த் தொழிலில் சிறிய அளவில் இருந்துவந்த கதர்ப் பட்டு உற்பத்தி இந்த ஆட்சியின் காலத்தில் பன்மடங்கு அதிகரித்துள்ளது. முந்தைய ஆண்டுகளில் குறிப்பாக 1990-91-ஆம் ஆண்டில் இதன் உற்பத்தி ரூ.804.04 இலட்சமாகவும், 1991-92-இல் ரூ.924.84 இலட்சமாகவும், 1992-93-இல் ரூ.1263.64 இலட்சமாகவும் இருந்தது. இதனை மேலும் விரிவுப்படுத்திட 1993-94-ஆம் ஆண்டிற்கான கதர் பட்டு உற்பத்தியின் இலக்கை ரூ.1500 இலட்சமாக உயர்த்தி இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

முன்னர் 179 கதர் அங்காடிகள் மட்டுமே செயற்பட்டு வந்தன. இன்று தமிழகமெங்கும் 206 கதர் அங்காடிகள் செயற்பட்டு வருகின்றன. மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதில், இந்த ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மிகப் பெரும் பங்காற்றி வருகிறது. மொத்த வேலைவாய்ப்பில் மகளிருக்கு மட்டும் 4,44,870 வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. பிற்பட்ட வகுப்பினர் மற்றும் மலைவாழ் மக்களுக்கு, முறையே 2,45,076 பேருக்கும், 13,117 பேருக்கும் இந்த ஆட்சியில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. இந்த ஆட்சியின் காலத்தில் நூற்போர் மற்றும் நெய்வோருக்கு 15 சதவிகிதம் கூலி உயர்வு செய்யப்பட்டு, நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதனால், 34,500 நூற்போரும், 6,750 நெய்வோரும் பயனடைந்து வருகின்றனர்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு, கதர் கிராமப் பொருட்களுக்கு வரி விலக்கு, பட்டு, பஞ்சு மற்றும் நிலக்கடலை கொள்முதல் செய்யும் இடத்தில் விற்பனை வரி விலக்கு, இம்மாநிலத்தின் வெளியிலிருந்து கொள்முதல் செய்யும் பொருட்களுக்கு 4 சதவிகித வணிக விற்பனை வரிச்சலுகை, அரசின் தேவைகளுக்கு சரி சமவிகிதத்தில் கதர் மற்றும் கைத்தறி துணி கொள்முதல் ஒதுக்கீடு போன்ற பல சலுகைகளைப் புரட்சித் தலைவி அவர்களின் அரசு வழங்கி வருகிறது. அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள், வாரியங்கள் தங்கள் தேவைகள் அனைத்தையும் கதர் கிராமத் தொழில் வாரியத்திலிருந்து வாங்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்களின் அரசு ஆணையிட்டிருப்பதன் மூலம், அதிக அளவில் கதர் கிராமத் தொழில் பொருட்களை உற்பத்தி செய்யவும், விற்பனை செய்யவும் அதன் பயனாக வேலைவாய்ப்பினை மேலும் அதிகரிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால் இவ்வாரியத்தின் வளர்ச்சி வேகம், மேலும் பன்மடங்கு அதிகரித்து வருகிறது.

இந்தியாவில் தமிழ்நாட்டில் தான் அதிக அளவில் பனை மரங்கள் உள்ளன. ஏறத்தாழ 5 கோடி பனை மரங்கள் தமிழகத்தில் உள்ளன. பனைத் தொழிலின் மூலம் இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. உண்ணும் பொருட்களாகிய பதநீர், பனஞ் சர்க்கரை, பனங்கற்கண்டு, பனைவெல்லம், பனைமிட்டாய் வகைகள் மற்றும் உண்ணாப் பொருட்களாகிய பனை நார், தூரிகை, பனை ஓலைப் பொருட்கள் முதலியவை உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்றன.

பனைத்தொழில் மூலம் அதிக அளவில் அன்னியச் செலாவணி ஈட்டப்படுகிறது என்பது சிறப்பான

செயற்கை வைரம் பட்டை தீட்டுதல்

அவரது பாடல்களிலே காதல், வீரம், சோகம், நகைச்சுவை, ஒருமைப்பாடு, சமூகச்சீர்திருத்தம் முதலான தன்மைகள் இழைந்தோடியதை நாம் பார்க்கலாம்.

அவரது பாடல்களிலே இலக்கியக் கருத்துக்கள் மட்டுமல்ல, மறைந்தும் மறையாமல் வாழுகின்ற மாக்கவி பாரதி, பாவேந்தர் பாரதிதாசன், திருவள்ளுவர் போன்ற அறிஞர் பெருமக்களின் கருத்துக்கள் இடம் பெற்றன அவற்றைப் பக்குவமாய்த் தம் பாடல்களிலே புகுத்திய பாங்கு மகிழ்தற்குரியது.

ஒரு கவிஞர் இன்னொரு கவிஞரைப் பாராட்டிப் பேசுவது என்பது அரிதாயிருக்கின்ற இச்சூழ்நிலையில், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் பாரதியைப் பற்றிக் கூறுகையில்,

பாரதிக்குநிகர் பாரதியே - மண்ணில்
யாரெதிர்த்தாலும் மக்கள்
சீருயர்த்தும் பணியில் (பாரதி)

என்று பாடியிருப்பது, அவருடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தலைமையில், கல்யாணசுந்தரம் அவர்களுக்குத் திருமணம் நடந்தது. துணைவியார் பெயர் திருமதி கௌரவம்மாள். 1959-இல் அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு குமரவேல் என்று பெயரிட்டு மகிழ்ந்தனர் பெற்றோர். ஆனால்... மழலைச் செல்வம் ஈன்ற அதே ஆண்டில் அதாவது 8.10.1959-இல், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்கள் நம்மையெல்லாம் விட்டுப்பிரிந்தார்.

அவரது மறைவு குறித்து கவிஞர் கண்ணதாசன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

''நட்புக்கும் செம்மையான வாழ்க்கை நெறிக்கும், பண்புக்கும் சிறப்பானவர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம். ஒவ்வொரு படத்திலும் அவரது பாடல்களைக் கேட்ட எனக்கு ஒரு கவிஞனை இழந்து விட்டோமே என்ற துக்கமே மேலிடுகிறது. என்னைக் காட்டிலும் உயர்ந்தவர் ஒருவருக்குச் செலுத்த வேண்டிய மரியாதையையும், அன்பையும் செலுத்துகிறேன்'' என்று புகழஞ்சலி செலுத்தினார்.

கல்யாணசுந்தரம் பாடல்களிலே கருத்து மழை மட்டும் பொழியவில்லை. படிப்போர், படிப்படியாய் உயர்வதற் கான படிப்பினையும் அதில் அடங்கி இருந்தது. அவரது பாடல்கள் சிந்தனையைத் தூண்டின; சமுதாய வளர்ச் சிக்குச் சரியான பாதையைக் காட்டின. அதுவே, அவர் உயர்வுக்கு வழி வகுத்தது - அவரை உன்னதக் கவிஞனாக உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது.

'மனிதரை மனிதர்
சரிநிகர் சமமாய்
மதிப்பது நம் கடமை
வள்ளுவர் பெருமான்
சொல்லிய வழியில்
வாழ்வது அறிவுடைமை'

என்று கூறும் அவரது பாடலில், ஒருமைப்பாடு அரும்பி நிற்கின்றது. 'எல்லாரும் இந்நாட்டு மன்னர்' என்ற

பாரதியின் முழக்கம் பாட்டில் இழையோடுகிறது

எல்லோரும் இந்நாட்டு மன்னரே - நாம்
எல்லோரும் இந்நாட்டு மன்னரே
நல்லாரும் பொல்லாரும்
நல்வழி செல்லாரும்
உள்ளாரும் காசுபணம்
இல்லாமல் இருந்தோரும்
(எல்லோரும்)

என்று எக்களிப்புடன் எழுதுகிறார் அவர்.

'எல்லோருக்கும் உலகம் ஒன்னு
இருளும் ஒன்னு ஒளியும் ஒன்னு
இன்னும் சொன்னா நீயும் ஒன்னு
நானும் ஒன்னு தானே
யாரு மேலே கீறினாலும்
ரத்தம் ஒன்னுதானே
ஆக மொத்தம் பிறந்ததெல்லாம்
பத்தாம் மாதம் தானே!

ஒருமைப்பாட்டை உணர்த்த இவ்வளவு எளிமையாக யாரும் பாடியிருக்க முடியாது.

படித்தால் மட்டும் போதுமா? அத்தோடு உழைப்பும் தேவை. இரண்டும் இணைந்தால் தான் உயர முடியும் என்பதை, எத்தனை அழகாக உணர்த்துகிறார் கவிஞர்!

'படிப்புத் தேவை - அதோடு
உழைப்பும் தேவை'

என்று இரண்டு தன்மைகளுக்கும் விளக்கம் தருகிறார் பாருங்கள் —

'உண்மை தெரியும்
உலகம் தெரியும்
படிப்பாலே - நம்
உடலும் வளரும்
தொழிலும் வளரும்
உழைப்பாலே!'

உழவர், நெசவாளர் முதலான ஏழை எளியோரிடம் பழகியவர் கவிஞர். நெசவாளர் கையினால் நேர்த்தியாய் உருவாகும் கைத்தறியை அவர் பார்த்திருக்க வேண்டும். அதன் அழகில் அவர் மயங்கி இருக்க வேண்டும். இல்லையென்றால், இந்தச் சிங்காரப் பாட்டு பிறந் திருக்குமா?

'சின்னச் சின்ன இழை பின்னிப் பின்னிவரும்
சித்திரக் கைத்தறிச் சேலையடி - நம்ம
தென்னாட்டில் எந்நாளும் கொண்டாடும் வேலையடி'

கைத்தறிச் சேலையின் அழகை வார்த்தைகளால் நெய்த கவிஞர், 'கூட்டுறவு' என்றால் என்ன என்பதை நூலிழை போல பாடலிலே நுழைத்துக் காட்டிய அவரது நுண்மான் நுழைபுலத்தைக் கண்டு வியக்கலாம்.

'ஒற்றுமையோடு அத்தனை நாளும்
ஒழுங்கா வந்தா வளரும் - இதில்
ஒரு நூலறுந்தால் குளரும் - இதை
ஒட்டும் ஏழை கூட்டுறவாலே
உலகில் தொழில் வளம் உயரும் - இந்த
உலகில் தொழில் வளம் உயரும்!

என்று 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்பதைச் சொல்லாமல் சொல்கிறார்.

'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள். கவலை உனக்கில்லை ஒத்துக் கொள்' என்றார் நாமக்கல் கவிஞர். எந்தத் தொழில் செய்தாலும், அப்படிச் செய்கின்ற தொழில்தான் தெய்வமாகும் என்பதைத் தெளிவு படுத்துகிறார் கவிஞர்.

'செய்யும் தொழிலே தெய்வம் - அந்தத்
திறமைதான் நமது செல்வம்
கையும் காலுந்தான் உதவி - கொண்ட
கடமைதான் நமக்குப் பதவி'

ஒவ்வொரு வரியும் வைர வரிகளே அன்றோ?

சமுதாயத்திலே வளர்ந்துவரும் சீர்கேடுகளில் ஒன்று தான், மூட நம்பிக்கை. இந்த நம்பிக்கையினால் நாசமாகும் குடும்பங்கள் பலப்பல. அதைக் கண்ணுற்ற கவிஞர், அதைக் களைய எண்ணினார். மூடநம்பிக்கை எனும் இந்த முடைநாற்றத்தைப் போக்க, யாரிடம் சொன்னால் அது நடக்கும் என்பதை அவர் உணர்ந் திருக்க வேண்டும். உடனே அவருக்குப் பளிச்சென்றத் தெரிந்தது நாளையத் தலைமுறைகளான - இன்றைய குழந்தைகளே. ஆம். அந்தக் குழந்தைகளைப் பார்த்து அறிவுரை கூறுகிறார், கவிஞர். அறிவுரைகளாக மலரும் அந்தப் புகழ் பெற்ற பாடல்தான் -

'சின்னப் பயலே சின்னப் பயலே
சேதி கேளடா!'

என்பது.

வளர்ச்சி என்பது வெறும் உயரத்தை மட்டும் கணக் கிடுவது அல்ல. அது, அறிவைப் பொறுத்தே அமைகிறது என்பதை ஆணித்தரமாகக் கூறுகிறார் கவிஞர்.

'ஆளும் வளரணும் அறிவும் வளரணும்
அதுதாண்டா வள்ர்ச்சி'

என்று கூறிவிட்டு, வள்ளுவர் கூறும் 'சான்றோன் எனக் கேட்ட தாய்' என்னும் குறளை நினைவுறுத்தும் வகையில் இந்தப் பாட்டின் அடுத்த அடியாக,

ஆசையோடு ஈன்றவளுக்கு அதுவே - நீ
தரும் மகிழ்ச்சி'

என்கிறார். இதைப் படிக்கும்போது நமக்கும் மகிழ்ச்சியாக இருக்கிறது!

இந்தப் பாடலிலே தன்மான உணர்ச்சியைக் கோடிட்டுக் காட்டும் கவிஞர், மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்கிற தத்துவத்தைப் போதிக்கிறார்.

'மனிதனாக வாழ்ந்திட வேணும்
மனதில் வையடா - தம்பி
மனதில் வையடா
வளர்ந்து வரும் உலகத்துக்கே - நீ
வலது கையடா - நீ
வலது கையடா!

என்று குழந்தை இலக்கியமே படைக்கிறார் கவிஞர்.

'அச்சம் தவிர்' என்னும் பாரதியின் வாக்கிற்கிணங்க சிறுவயதிலேயே பயத்தைப் போக்கி, பகுத்தறிவைப் புகட்ட வேண்டும். பேய், பிசாசு, என்பதெல்லாம் மூடநம்பிக்கைகள் என்று குழந்தைகளுக்கு உணர்த்த வேண்டும். எப்படி?

'வேப்பமர உச்சியில நின்னு
பேயொன்னு ஆடுதுன்னு
விளையாடப் போகும்போது
சொல்லி வைப்பாங்க - உன்
வீரத்தைக் கொழுந்திலேயே
கிள்ளி வைப்பாங்க.

வேலையற்ற வினர்களின்
மூளையற்ற வார்த்தைகளை
வேடிக்கையாகக் கூட
நம்பி விடாதே - நீ
வீட்டுக்குள்ளே பயந்து கிடந்து
வெம்பி விடாதே - நீ
வெம்பி விடாதே!''

★ நான் என்கிற அகந்தையை ஒழிப்பது; மிகமிகப் பணிவோடு நடந்து கொள்வது, அதிகமான பொறுமை காட்டுவது, தெளிவான நம்பிக்கையோடிருப்பது-இந்தக் குணங்களெல்லாம் உடையதுதான் சத்தியாக்கிரகமாகும்.

★ தூய்மையான வழிகளின் மூலம் பெற்ற அதே சுதந்திரத்தை, அதே தூய்மையான, நேர்மையான வழி களின் மூலம் காப்பாற்றி வர வேண்டும்.

★ நம் தவறுகளுக்காக நாம் வருந்து வதற்கும், இன்றைய நிலையைவிட மேலான, பரிசுத்தமான நிலையை அடைய விரும்புவதற்கும் சின்னமாக விளங்குகிறது பிரார்த்தனை.

ஏக்கம், ஏமாற்றம், அதைரியம், அச்சம், கர்வம், கோபம் எதுவுமே மாணவர்கள் அகராதியில் இருக்கக் கூடாது.

மன அமைதி பிரார்த்தனையினாலேயே உண்டாகும். அமைதி ஒன்றின் மூலமே ஒருவன் பிறருக்கு உதவ முடியும்.

- அண்ணல் காந்தியடிகள்

என்று இப்படி இலைமறைகாயாகக் கருத்துக்களைப் புகுத்தும் திறன் கவிஞருக்குக் கைவந்த கலை.

'மனிதனாக வாழ வேண்டும்' என்று கூறிய கவிஞர், அப்படி மனிதனாக வாழ விழிப்புணர்வு தேவை என்கிறார். தூங்கி, தம் உயர்வைத் தாமே கெடுத்துக் கொள்ளாமல், எதையும் தூங்கி இதயத்தைப் பதப்படுத்திட - பலப்படுத்திக் கொள்ள வேண்டும். கவிஞர் கூறுகிறார்.

'தூங்காதே தம்பி
தூங்காதே - நீயும்
சோம்பேறி என்ற பெயர்
வாங்காதே!

என்று அப்படித் தூங்குவதால், என்னென்ன விளைவுகள் எல்லாம் வரும் என்பதைப் பட்டியல் போட்டுக் காட்டுகின்றார் கவிஞர்.

நல்ல பொழுதையெல்லாம்
தூங்கிக் கெடுத்தவர்கள்
நாட்டைக் கெடுத்ததுடன்
தானுங் கெட்டார் - சிலர்
அல்லும் பகலும்
தெருக்கால்லா யிருந்து விட்டு
அதிர்ஷ்ட மில்லையென்று
அலட்டிக் கொண்டார்

என்று கூறி, அழுத்தந் திருத்தமாக,

'விழித்துக் கொண்டோரெல்லாம்
பிழைத்துக் கொண்டார் - உன்போல
குறட்டை விட்டோரெல்லாம்
கோட்டை விட்டார்.

என்கிறார்.

திருட்டுக்குக் காரணம், வறுமை என்பார்கள். ஆனால், திறமை இருக்கும்போது, ஏன் திருட வேண்டும்? என்று கேட்கிறார் கவிஞர்.

திருடாதே! பாப்பா திருடாதே!
வறுமை நிலைக்குப் பயந்து விடாதே!
திறமை இருக்கு மறந்து விடாதே!

என்று சின்னஞ்சிறு மனத்தில் சித்தனைச் சுடரை ஏற்றுகிறார்.

கற்க வேண்டிய நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும். அவ்வாறு கற்றபிறகு, அதற்கு ஏற்றவாறு நெறியில் நிற்க வேண்டும் என்பது திருக்குறள். அந்தக் கருத்தை வலியுறுத்தும் வண்ணம்,

ஏட்டில் படித்ததோடு
இருந்து விடாதே - நீ
ஏன் படித்தோம் என்பதையும்
மறந்து விடாதே!

என்று கூறி, ''மூத்தோர் சொல் வார்த்தைகளை மீறக்கூடாது'' என்றும் அறிவுறுத்துகிறார். 'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்' என்று சொன்னதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

கேள்வி - பதில் வடிவிலே ஒரு பாட்டு,

உலகில் சிறந்தது என்ன?
அன்பு உள்ளவன் செய்திடும் தானம்.
அந்தத் தானத்தில் சிறந்தது என்ன?
நல்ல தன்மை வளர்க்கும் நிதானம்.
அதிலும் சிறந்தது என்ன?
பல அகிம்சா மூர்த்திகள்
ஆராய்ந்து சொன்ன உலக சமாதானம்!

என்று முத்தாய்ப்பு வைத்ததுபோல முடிக்கிறார். இங்கே அண்ணல் காந்தியடிகளை நினைவுபடுத்துகிறார் கவிஞர்.

ஆசிரியரும் மாணவர்களும் சேர்ந்து பாடுவது போல ஒரு பாட்டு. ஆசிரியர் கூறுகிறார் -

அன்புக்கு வணங்கு
அறிந்த்பின் இணங்கு
பண்புடன் விளங்கு
பசித்தவர்க் கிரங்கு

பிறகு ஒரு பெண் குழந்தை கூறுகிறது -

நேர்மையைக் காட்டு
பொன் மொழி கேட்டு
பொய்மையை மாற்று
பொறுப்புகள் ஏற்று
பொதுப் பணியாற்று

என்று, பிறகு முடிவாக, ஆசிரியர் கூறுகிறார் -

திருக்குறள் நூலை
சிறந்த முப்பாலை
கருத்துடன் காலை
படிப்பது வேலை

என்று. இப்படி ஒவ்வொரு பாடலையும் மேற்கோள் காட்டிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

காலத்தால் அழிக்க முடியாத கருத்துக் கருவூலங்களை வழங்கிச் சென்ற கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள், காலத்தால் அழிக்க முடியாத அவரது படைப்புகளைப் போலவே, இன்றும் பெயரும் புகழுடன் நின்று நிலவுகிறார் நம் நெஞ்சிலே!

பி.வி. கிரி

சிதம்பரத்தில் சிறந்து வரும் நாட்டியாஞ்சலி

சிதம்பரத்திற்குச் சோழராட்சிக் கால வரலாற்று முக்கியத்துவம் நிறைய உண்டு.

ஆதித்த சோழன் தில்லைச் சிற்றம்பல முகப்பில் பொன் வேய்ந்தான்; அவன்மகன் பராந்தகச் சோழன் தில்லையம்பலத்திற்குப் பொன் வேய்ந்தான்; இவனே அங்குள்ள வீரநாராயணன் ஏரியை வெட்டிய பெருமையும் பெற்றான்.

கண்டராதித்த சோழனால், தென்னார்க்காடு மாவட்டத்திலே சமணப் பள்ளியொன்று கட்டப் பட்டது.

அவனுடைய தம்பி அரிஞ்சய சோழன், சில காலமே அரசாண்டான்; பின்னர் ஆற்றூரில் இறந்து போனான்; இதனாலேயே 'ஆற்றூர்த் துஞ்சின தேவர்' எனப் பெயர் பெற்றான்.

வடக்கே கங்கை வரை சென்று வென்றவனும், இலங்கை முழுவதையும் தம் ஆட்சிக்கு உட்படுத்தியவனும், பிற்காலச் சோழர்களில், குறிப்படத்தக்கவனும் ஆன இராசேந்திர சோழன் தம் நாட்டைச் சுற்றிப் பார்க்க வந்தபோது தொண்டை மண்டலத்திலுள்ள பிரம்மதேசத்தில்தான் இறந்தான் என்றும் - அவன் மனைவி வீரமாதேவி இங்கே தான் உடன்கட்டை ஏறினாள் என்றும் வரலாற்றறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார் குறிப்பிட்டு உள்ளார்.

வீரராசேந்திர சோழன், தில்லைச் சிற்றம்பலத்தானின், மணிமுடியை அணிசெய்யும் 'திரைலோக்கியசாரம்' என்ற விலைமதிப்பற்ற மாணிக்க மணியொன்றை வழங்கினான்.

விக்ரம சோழனும், இரண்டாம் குலோத்துங்கனும் தில்லையம்பலத்திற்குப் பல திருப்பணிகள் செய்திருக்கிறார்கள்.

600 ஆண்டுக்காலம் கழித்து ஆட்சிக்கு வந்த பிற்கால சோழப் பேரரசு - விஜயாலய சோழன் முதல் அதிராசேந்திர சோழன் வரை பெரும் புகழ் கொண்டிருந்தது.

தில்லையம்பதியைப் பொறுத்த வரை - பாண்டியராட்சியும் சில காலம் இப்பகுதியிலேயே இருந்து துண்டு.

இவை தென்னார்க்காடு மாவட்டத்தில் முடியாட்சிக் கால முக்கியச் செய்தியாகும்; வள்ளலார் மாவட்

டம் என்றும், இராமசாமி படையாட்சியர் மாவட்டம் என்றும் அப்பகுதி குறிப்பிடப்படும் இந்நாளிலும் அங்கே எண்ணியெண்ணி மகிழத் தக்க நிகழ்ச்சிகள் பல நடந்த வண்ணம் இருக்கின்றன.

அவைகளிலே - முக்கியமாகத் தில்லையம்பதியிலே ஆண்டுதோறும் நடத்தப்படும் 'நாட்டியாஞ்சலி' நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

இசை, நடனம் போன்ற கலைமலி விழாக்கள் பல நடந்தன. சோழராட் சிக் காலத்தே. அந்தப் பாரம்பரியப் பெருமையை நினைவூட்டுவதாக இயங்கி வருவதே 'நாட்டியாஞ்சலி' என்ற அற்புத அமைப்பு.

1981-ஆம் ஆண்டில், மாவட்ட ஆட்சித்தலைவராக இருந்த திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் முன்னின்று ஆர்வத்தோடு துவக்கிய அமைப்பு இது. இவ்வமைப்பின் மூலம், ஆண்டுதோறும் சிதம்பரம் தில்லையம்பலத்திலே நாட்டிய விழா நடத்தப்படுகிறது.

பெரும்பாலும் மாசி மாதத்தில் - அதாவது பிப்ரவரி அல்லது மார்ச்சு மாதத்தில், இவ்விழா ஒருவார காலம் அல்லது ஐந்து நாட்கள் தொடர்ந்து நடத்தப்படுகிறது. பெரும்பாலும் சிவராத்திரியில் இந்நிகழ்ச்சி தொடங்கும். இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலே இருந்தும் நடனக் கலைவல்ல நங்கையர் பலர் இங்கே வந்து இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பிப்பார்கள்.

ஏறத்தாழ முப்பது நாற்பது நடனக்குழுவைச் சேர்ந்த நூற்றுக்கு மேலானோர் கலந்து கொள்ளும் இந்த நாட்டியாஞ்சலி விழா விடிய விடிய நடைபெறும்; ஐந்தாறு குழுவினர் மாறி மாறி ஆடி மகிழ்விப்பர்; ஐயாயிரத்திற்கும் மேலானோர் இதனைக் கண்டானந்திப்பார்கள். நடன மணிகளைப் போலவே பார்வையாளர்களும் வெளியூரிலிருந்தெல்லாம் வந்து கூடுவர்.

ஆடல் கலைக்கழகு தேடப் பிறந்த அவர்கள் - ஒவ்வொரு நாளும் பரதநாட்டியம் மட்டுமல்ல; ஒடிசி, குச்சுபுடி, மயூர்பஞ்ச், மோகினி ஆட்டம், யக்சகானம் கதகளி ஆகிய நடனங்களும் ஆடித் தத்தம் திறமையை வெளிப்படுத்துவது வாடிக்கையாக இருக்கும்.

இத்தனைக்கும் அவர்களுக்கு எந்த விதமான அன்பளிப்பும் தரப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது; போக்குவரத்து, உணவு தங்குமிடம், ஒலி-ஒளி அமைப்பு ஆகியவற்றை மட்டுமே 'நாட்டியாஞ்சலி' அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஏற்பாடு செய்து தருகிறார்கள்.

இதற்காகும் செலவை மத்திய அரசும் மாநில அரசுமே ஏற்கின்றன. இது தவிர, தனியார் நிறுவனங்களும் நிதியுதவி செய்வதுண்டு. இந்த ஒரு வார நடன நிகழ்ச்சிக்கு, ஏறத்தாழ இரண்டு இலட்சம் ரூபாய் வரை செலவாகுமாம்.

கூத்தபிரான் உள்ள திருக்கோயில், இந்தியாவிலேயே இது ஒன்றுதான். இதனாலேயே நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி ஆண்டுதோறும் இக்கோயில் வளாகத்தில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

இந்த நாட்டியாஞ்சலி நிகழ்ச்சியில் பங்கேற்பவர்களின் தகுதி - அவர்களுடைய குரு யார்? எத்தனை நிகழ்ச்சிகளில் பங்கேற்றிருக்கிறார்? அரங்கேற்றம் ஆனவரா? 18 வயதைக் கடந்தவரா? - என்றெல்லாம்

கவனித்தே நிர்ணயிக்கப்படுகிறது.

நாட்டியாஞ்சலி நிகழ்ச்சியைக் கண்டானந்திக்க இந்துக்கள் மட்டுமல்ல; கிறிஸ்தவர்களும், முஸ்லீம்களும் கூட ஆர்வத்தோடு வந்து கூடுவார்கள்.

இந்நிகழ்ச்சி நடைபெறும் காலங்களில், வருவோர்க்கு உதவச் சுற்றுலாத்துறை மூலம் ஒரு தனி அலுவலகப் பிரிவும் சிதம்பரம் கோயிலுக்குள் செயல்படும். இது மட்டுமல்ல; கோயிலில் உள்ள ஆயிரங்கால் மண்டபத்தில், நாட்டியாஞ்சலி துவங்கும் நாளன்று காலையில் கருத்தரங்கம் ஒன்றும் நடத்தப்படும்.

திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., டாக்டர் கால வாத்சாயனா, திரு எம்.ஏ.எம். இராமசாமி, திரு என்.மகாலிங்கம், திரு டி.டி.வாசு, திரு எம்.ஏ. சிதம்பரம், திரு ஏ.சி. முத்தையா, திரு எம்.வி. சுப்பையா ஆகியோர் - நாட்டியாஞ்சலி அமைப்பின் புகழ் காக்கும் புரவலர்களாக உள்ளனர்.

டாக்டர் இரா. நாகசாமி, திரு ஏ. சம்பந்தம் ஆகியோர் நாட்டியாஞ்சலி சிறப்புறச் செயல்படச் செய்திடும் செயலாளர்களாக இருக்கிறார்கள்.

— பி.எல். இராசேந்திரன்

நெல்லை மாவட்டத்தில் பால்வளம்

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் சங்கம் 30.8.1982 அன்று பதிவு செய்யப்பட்டு, 1.1.1983 முதல் செயல்பட்டு வருகின்றது. இதற்கு முன்பு மாநிலப் பால்வளத் துறையின் கீழும் (1.7.74 வரை) அதன்பின் தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் கீழும் (1.2.81 முடிய) இயங்கி வந்தது.

இதன் ஆளுகைக்கு உட்பட்ட திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்டங்களின் மொத்த பரப்பளவு 11,433 ச.கி.மீ. இது தமிழகத்தின் மொத்த பரப்பளவில் 8.8 சதவிகிதம் ஆகும்.

1982-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கென்படி இம் மாவட்டத்தில் உள்ள கால்நடைகளின் மொத்த எண்ணிக்கை 7.16 இலட்சமாகும். இதில் கறவை மாடுகள் 2.71 இலட்சமாகும். எருமை மாடு நாளொன்றுக்கு 1.56 லிட்டர் பாலும் பசு மாடு 2.24 லிட்டர் பாலும் தருகிறது.

திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் சங்கத்தில் 436 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களின் பங்குத் தொகை ரூ.6,16,500 அரசின் பங்குத் தொகை ரூ.1,14,50,000 ஆகும். ஆக மொத்த முதலீடு ரூ.1,20,66,500 ஆகும். இச்சங்கம் 16 தாலுக்காக்களுக்குப் பயனளிக்கிறது. இந்த பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் நாளொன்றுக்கு 87,249 லிட்டர் பால் உற்பத்தி செய்கின்றது. 60,756 லிட்டர் பாலைக் கொள்முதல் செய்கிறது.

திருநெல்வேலி பால் பண்ணையில் நாளொன்றுக்கு 18,522 லிட்டரும் சங்கரன்கோவில் நிறுவனத்தில் 24,640 லிட்டர் பாலும், வள்ளியூரில் 11,952 லிட்டர் பாலும், கோவில்பட்டியில் 3,011 லிட்டர் பாலும், சாத்தான் குளத்தில் 2,651 லிட்டர் பாலும் சேகரிக்கப்படுகிறது. 256 சங்கங்களைச் சேர்ந்த கறவை மாடுகளின் ஆரோக்கியம் பேணப்படுகிறது. இதில் 220 தேர்ச்சி பெற்ற பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். 52 ஏக்கர் நிலப்பரப்பில் மாட்டுத் தீவனம் வளர்க்கப்படுகிறது. மாதம் ஒன்றுக்கு 100 டன் மாட்டுதீவனம் பால் உற்பத்தியாளர்களுக்கு விற்கப்படுகிறது. இம்மாவட்டங்களில் 9 பால் விநியோக வழித்தடங்கள் மூலம் நாளொன்றுக்கு 39,000 லிட்டர் பதப்படுத்தப் பால் பாக்கெட்டுகளில் நிரப்பப்பட்டு விற்கப்படுகிறது.

தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு அரசு ஆகியவற்றின் உதவியுடன் ஒருங்கிணைந்த பால்வளத் திட்டம் 1987 முதல் அமல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாவன:

1. 184 புதிய பால் உற்பத்தியாளர் சங்கங்களை ஒரு நிர்வாகத்தின் கீழ்க் கொண்டு வருதல்- பால் கொள்முதலில் 651 சங்கங்களை ஈடுபடுத்துதல்.

2. 80, 900 விவசாயிகளை கூட்டுறவின் கீழ்கொண்டு வருதல்- 1,05,000 கறவை மாடுகளைப் பேணிக்காத்தல்.

3. பால் கொள்முதலை நாளொன்றுக்கு 73,600 லிட்டராக உயர்த்துதல்.

4. பால் விற்பனையை நாளொன்றுக்கு 60,000 லிட்டராக உயர்த்துதல்.

5. கால்நடை ஆரோக்கியம் செயறிகைக் கருத்தரித்தல் ஆகிய திட்டத்தின் கீழ் 520 சங்கங்களைக் கொண்டு வருதல்.

திராட்சைக்கு கிராக்கி

பழச்சாறுக்கும், பழரசத்திற்கும் மூலம் திராட்சை. உலகில் உற்பத்தியாகும் 5.9 மில்லியன் டன் திராட்சையில் 0.4 மில்லியன் டன் திராட்சை இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகிறது. இத்தாலி, சிலி, தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் பெருமளவில் திராட்சையை உற்பத்தி செய்கின்றன.

இந்தியாவில் மகாராஷ்டிரா '38.9%', கர்நாடகா '31.02%', ஆந்திரப்பிரதேசம் '10.08%', தமிழ்நாடு '8.09%', பஞ்சாப் '5.7%' ஆகிய மாநிலங்களில் திராட்சை உற்பத்தியாகிறது. 1,450 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள 14 இலட்சம் மெட்ரிக் டன் திராட்சை உலக வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்படுகிறது.

ஐரோப்பாவும், வட அமெரிக்காவும் திராட்சையை அதிகம் இறக்குமதி செய்கின்றன. சிலி அதிக அளவில் திராட்சையை ஏற்றுமதி செய்கிறது. மாம்பழத்திற்கு அடுத்தபடியாக திராட்சைதான் அதிக அளவில் இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.704.34 இலட்சங்களாகும். சங்கரன்கோவிலில் நாளொன்றுக்கு 30,000 லிட்டர் பாலையும், கோவில்பட்டியில் 10,000 லிட்டர் பாலையும் குளிர்ப்படுத்தும் நிலையம் கட்டப்பட்டுள்ளது.

கால்நடைகளுக்கான சுகாதார நிலையம் திருநெல்வேலியிலும் கோவில்பட்டியிலும், வள்ளியூரிலும் கிளை நிலையங்களும் அமைக்கப்பட்டன. கால்நடை தீவனக் கிடங்குகள் வள்ளியூரிலும், கோவில் பட்டியிலும் கட்டப்பட்டன.

செயற்கைக் கருத்தரிப்புப் பணியில் 220 கிராமப்புற பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதற்காக 277 குளிர்ப்பதனப் பெட்டிகள் வாங்கப்பட்டுள்ளன.

கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவும் வகையில் பரிசோதனைச் சாதனங்கள், இரசாயனம், புத்தகங்கள், படிவங்கள், முதலுதவிப் பெட்டிகள் முதலியன வழங்கப்படுகின்றன. செயற்கைக் கருத்தரிப்புக் கணக்கு ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. ஆனந்த் மற்றும் இதர பெரிய பால் பண்ணைகளுக்கு விவசாயிகளை அழைத்துச் செல்லும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது.

திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்டங்களில் தலா ரூ.270 இலட்சம் செலவில் மைக்ரோ பால் பண்ணைத் திட்டம் விரைவில் அமல்படுத்தப்படவுள்ளது.

ரூ.3 கோடி செலவில் நாளொன்றுக்கு 10 மெட்ரிக் டன் கால்நடை தீவன தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

ரூ.5.77 கோடி செலவில் ஒரு ஒருங்கிணைந்த பால்வளத் திட்டம் சிதம்பரனார் மாவட்டத்தில் அமைக்கத் திட்டம் அரசின் பரிசீலனை யில் உள்ளது.

இத்தகைய பல்வேறு திட்டங்களினால் திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்டங்களில் வெண்மைப் புரட்சி புதிய உத்வேகத்துடன் நடைபெற்றுக் கொண்டிருப்பது, அனைவரது வரவேற்பையும் பாராட்டையும் பெற்றுள்ளது.

அண்ணல் காந்தியடிகளுக்கு வழிகாட்டிய பாடல்!

அண்ணல் காந்தியடிகளுக்குப் பிடித்தமான பாடல் ஒன்று உண்டு. அது என்ன?

'சத்தியசோதனை'யில், அதை அவரே கூறுகிறார்.

''ஒன்று மாத்திரம் என்னுள் வேரூன்றியது: 'ஒழுக்கமே எல்லாவற்றிற்கும் அடிப்படை; சத்தியமே ஒழுக்கமெல்லாவற்றின் சாரமும்' என்று நான் கொண்ட உறுதியே அது. சத்தியம் என் ஒரே இலட்சியமாயிற்று. ஒவ்வொரு நாளும் அதன் மகிமை வளரலாயிற்று. அதற்கு நான் கொண்ட பொருளும் விரிவாகிக் கொண்டே வந்தது.

''அதேபோல நன்னெறியைப் போதிக்கும் ஒரு குஜராத்திப் பாடலும் என் அறிவையும் உள்ளத்தையும் கொள்ளை கொண்டது. 'தீமை செய்தோருக்கும் நன்மையே செய்' என்ற அப்பாடலின் போதனை, என் வாழ்க்கையில் வழிகாட்டும் தருமமாயிற்று. அதில் எனக்கு அதிகப் பிரேமை உண்டாக்கி விட்டதால், அதை மேற்கோளாகக் கொண்டு பற்பல சோதனைகளையும் செய்யத் தொடங்கினேன். மிக அற்புதமானவை என நான் எண்ணும் அப் பாடலின் வரிகள் இவை:

'உண்ணும் நீர் தந்த ஒருவனுக்குக் கைம்மாறாய்
விண்ணமுதைப்போல் அன்னம் விரும்பிப்
படைத்திடுவாய்.
அன்போடு கும்பிட்டால் அடிபணிந்து நீதொழுவாய்.
உயிர்காத்தோன் துன்பத்தை உயிர்கொடுத்து நீ
துடைப்பாய்.
செயலாலும் சொல்லாலும் சிந்தையினாலும்
பெரியோர்
சின்னஞ்சிறு உதவி செய்தவர்க்கு எந்நாளும்
ஒன்றுக்குப் பத்தாய் உவந்துசெய்வர் பேருதவி,
வையத்தார் எல்லோரும் ஒன்றெனவே
மாண்புடையோர்
ஐயப்பா டின்றி அறிந்திருக்கும் காரணத்தால்
இன்னாசெய்தாரை ஒறுக்க, அவர் நாண
நன்னயம் செய்து விடுவர் இந்நானிலத்தே!'

மாதம் ஒரு மருத்துவர்:

மன நலம்

மனநல மருத்துவர்
டாக்டர் எஸ். மாத்ருபூதம்
அவர்களின் பதில்கள்

வி. ராமையன்
முத்துப்பேட்டை

★ IMP 002, CPZ 001, MVZ 010 மன நோய்க்குரிய இம்மாத்திரைகள் பல ஆண்டுகள் தொடர்ந்து சாப்பிடுவதால், கண், இதயம், விரைவில் பாதிப்பு அடையுமா? தயவு செய்து பதில் அளிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

சில மன நோய்களுக்குத் தொடர்ந்து பல ஆண்டுகள் மருந்து சாப்பிட வேண்டி வரும். ஆனால், சிலருக்கு மாத்திரைகளால் சில பக்க விளைவுகள் (Side effects) ஏற்படுகின்றன. ஆனால், இம்மருந்து தெளிவான பார்வையில், சில பாதிப்பை ஏற்படுத்தலாம். சில சமயம் 'ECG'-இல் மாறுதல் ஏற்படலாம். ஏதேனும் கண், இருதய சம்பந்தமான (பார்வை மங்குதல், இதயவலி) ஏற்பட்டால் மருத்துவரை அணுகவும். அவர் மருந்தைக் குறைத்தோ நிறுத்தியோ, மாற்றியோ உதவுவார். இம்மருந்துகளின் இவ்விளைவுகள், மருந்தைக் குறைத்தால், தேவைப்பட்டால் நிறுத்தினால் சரியாகிவிடும்.

எஸ். செல்லதுரை
சிதம்பரம் மாவட்டம்

★ என் குடும்பத்தில் எனது அக்கா கல்யாணம் செய்வதற்குப் பணம் இல்லாமல் எனக்குச் சோர்வு ஏற்பட்டுவிட்டது. நான் என் அக்காவை நினைத்து எப்போதும் அதே நினைப்புகளில் இருக்கிறேன். நீங்கள் உங்களால் முடிந்தவரை இதிலிருந்து மீள உதவி செய்யுங்கள்.

தீராத பிரச்சினையால் அல்லது இவரால் தீர்க்க முடியாத பிரச்சினையால் இவருக்கு மனச்சோர்வு ஏற்பட்டிருக்கிறது. இவர் தன்னம்பிக்கையோடு செயல்பட்டால், வேலை கிடைக்கும். பண வசதி வரும், அக்காவின் திருமணமும் நடைபெறும்; சோர்வும் நீங்கும்.

க. பெரியசாமி
வெங்கமேடு

★ எனக்குக் கற்பனை அதிகம் வருகிறது.

இதற்கும் மனநலத்திற்கும் சம்பந்தம் உண்டா டாக்டர்?

கற்பனை வளமானதானால், ஆக்கபூர்வமாக அமையும். ஆனால் நல்ல கற்பனையைச் செயலாக்க முயற்சி, உழைப்பு தேவை. தன்னம்பிக்கையும் கொண்டு செயல்பட வேண்டும். அதைவிடுத்து, கற்பனை - பகல் கனவாக மாறினாலோ அல்லது ஆதாரமற்ற தவறான நம்பிக்கைக்கு வழிகோலினாலோ மட்டுமே மன நோய்க்கு வித்தாக அமையும். உலகில் தலைசிறந்த விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள் மற்றும் பலர் தெளிந்த சிந்தனையோடு, கற்பனை வளம் பெருகி நிறைய சாதித்த வரலாறும் உண்டு.

எஸ்.எஸ். வாசன்
தென்எலப்பாக்கம்

★ பிரிவின் பாசத்தால் அந்தச் சம்பவத்தை நினைக்கும் போதும், தனிமையில் இருக்கும் போதும் தானாகவே அழுகை வருகிறது. இதனால் எனக்கு மனநலம் பாதிக்கப்படுமா? என்று பயப்படுகிறேன். வேலை செய்வதிலும் இதனால் சோம்பல் தனமாகிறது. இனி நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

''நினைக்கத் தெரிந்த மனமே உனக்கு மறக்கத் தெரியாதா?'', ''உறவு என்றொரு சொல்லிருந்தால், பிரிவு என்றொரு பொருளிருக்கும்' என்பதற்கேற்ப, நடந்ததைக் கனவாக மறந்து, நடப்பவை நல்லவையாக இருக்கும் என்று நம்பிக்கையோடு செயல்படுங்கள். கடந்தகாலப் பிரிவை நினைத்து வாடுவதால், அது பிரச்சினைக்குத் தீர்வாகாது என்பதால், நிகழ்கால யதார்த்தத்திற்கு வாருங்கள். சோம்பல் முறியும், உள்ளம் மகிழும், ''Past is gone... Don'tt worry about it; Future is yet to come..Don't bother about it. But,Present' is right before you... Make constructive use of it and progress in life''. உள்ளத்திலே உரமும், உண்மையிலே திறமும் கொண்டு வெற்றிப்பாதையில் செல்லுங்கள்.

எம். முருகேசன்
கள்ளிச்செட்டிப்பட்டி

★ எனது தம்பிக்கு 25 வயதாகிறது. அவனுக்கு 10 ஆண்டுகளாக மனநலம் சரியில்லாமல், தலையில் மூளைக்கோளாறு இருக்கிறது என டாக்டர்கள் சொன்னார்கள், மாத்திரையும் சாப்பிடுகிறான். அம்மாவாசை நாட்களில் மட்டும் அவனைக் கட்டுப்படுத்த முடியாதபடி இருக்கிறான். மற்ற நாட்களில் நன்றாகப் பேசுகிறான். வெளியே சென்றால் சுடுகாட்டிற்குச் செல்கிறான். அங்கேயே தூங்கியும் விடுகிறான். இது எதனால்?

★ மனநலம் பெற ஏதாவது உடற்பயிற்சி உண்டா?

★ பொறாமை, கோபம் அடிக்கடி ஏற்படுகிறது எப்படிக் கட்டுப்படுத்துவது?

★ பைத்தியம் எப்படிப் பிடிக்கிறது? செய்வினையா? மூளையின் கோளாறிலா?

★ பெண்களின் மனநிலை இருபக்கக் கொள்ளியாக இருப்பது ஏன்? பிறந்த வீட்டுக்கும், புகுந்த வீட்டுக்கும் ஒருசில பெண்கள், கஷ்டத்தையும் கொடுக்கிறார்கள். - நல்லதையும் செய்கிறார்கள். இவர்களை ஒருமுகப்படுத்த மனநலத்தால் முடியுமா?

இது ஒரு மூளை பாதிப்பால் ஏற்பட்ட அல்லது தானாகவே வரும் மனச் சிதைவு நோயாக இருக்கலாம். மனநல மருத்துவர் பரிட்சைக்குப் பின்னரே தெளிவான பதில் கிடைக்கும்.

நல்ல உடல் நலம் - நல்ல மனநலத்திற்கு உறுதுணையாகும்.

தேவைக்குமேல் கோபம், பொறாமையும் ஒரு மன நோயே! தியானம் சில மருந்துகள் (மனதைச் சமன்படுத்துவன) இதற்கு உதவும். அருகில் உள்ள மனநல மருத்துவரைக் கலந்து ஆலோசிக்கவும்.

பைத்தியம் என்று சொல்லாதீர்கள். மனச் சிதைவு நோய், உணர்ச்சி சார்ந்த மனநோய் - மூளையில் ஏற்படும் இரசாயனக் கோளாறினால், வம்சாவழியாக ஏற்படக்கூடிய நோய்களே.

பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் சில சமயம் இருதலைக்கொள்ளி எறும்பு போல் தவிப்பதுண்டு. அதேபோல் ஆண்களாலும் கஷ்ட நஷ்டமுண்டு. இது ஒரு மனநோய் அல்ல.

இன்னும் வரும்...

புகையே பகை!

★ புகை உயிருக்கு பகை. புகை பிடிப்பவர்கள் விடும் புகையைச் சுவாசிப்பவர்களும் இதனால் பாதிக்கப்படுகிறார்கள்.

★ உலகில் ஆண்டுதோறும் 30 இலட்சம் பேர் புகையிலை சார்ந்த நோயினால் மரணமடைகின்றனர்.

★ உலக மக்கள் தொகையில் 50 கோடி பேர் புகையிலையால் இறப்பார்கள் என்று கருதப்படுகிறது.

★ இந்தியாவில் 15 வயதிற்கு மேல் சுமார் 14.2 கோடி ஆண்களும், 7.2 கோடி பெண்களும் புகையிலைப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ளனர்.

★ 1991-இல் புகையிலைப்பழக்கத்தினால்நம் நாட்டில் சுமார் எட்டு இலட்சம் பேர் இறந்தனர். தினசரி 2,200 பேர் இறந்து விடுகின்றனர்.

★ 1990-இல் 2.1 இலட்சம் பேர் புகையிலைப்பழக்கம் காரணமாக புற்றுநோயால் பாதிக்கப்பட்டனர்.

★ இதய நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் 57 இலட்சம் பேரில் 26 இலட்சம் பேருக்கு, புகையிலையினால் இந்த நோய் வந்துள்ளது.

★ உலகப் புகையிலை உற்பத்தியில் இந்தியா நான்காவது இடத்தையும் ஏற்றுமதியில் எட்டாவது இடத்தையும் வகிக்கிறது.

காலணி தயாரிப்பில் மகளிர்

—ஜோசப் சந்திரகுமார்

காலணிதானே என்று அலட்சியப்படுத்த வேண்டாம். வீட்டு வாசலுடன் நின்றுவிடும் காலணிகளுக்கு ஏற்றுமதி வர்த்தக அரங்கிலோ பெரும் வரவேற்பு உள்ளது. வரும் 2000-ஆம் ஆண்டில் இவற்றின் ஏற்றுமதி ரூ.9,000 கோடியை எட்டும் என்றால் சும்மாவா! கடந்த ஆண்டில் (1992-93) காலணிகள்-காலணி பாகங்களின் ஏற்றுமதி ரூ.1,180 கோடியைத் தொட்டுள்ளது. வெளிநாட்டிலிருந்து அரிய அன்னியச் செலாவணியைக் குவிக்கும் காலணித் தயாரிப்பு மூலம் உள்நாட்டிலோ 6 இலட்சம் பேர் நேரடி வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். இவர்கள் ஆண்டுதோறும் தயாரித்துக் குவிக்கும் தோல் காலணி இணைகளின் எண்ணிக்கையோ 44 கோடியாகும்!

தோல் - தோல் பொருட்கள் ஏற்றுமதியில் இந்தியாவிற்கு வளமான எதிர்காலம் உள்ளது. இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் சர்வதேசக் காலணி வர்த்தகத்தில் நாம் பெரும் பங்கு வகிப்போம். இந்தியத் தோல் தொழிலில் காலணித் தயாரிப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது. அன்னியச் செலாவணியை ஈட்டுவதுடன், வேலை வாய்ப்பும் அளிப்பதால் தேசியப் பொருளாதாரத்துக்குத் தோல்துறை பெருமளவில் உதவுகிறது. கடந்த 20 ஆண்டுகளில் இந்தியத் தோல் தொழில் துறை கணிசமாக முன்னேறியுள்ளது.

மகளிர் பங்கு

அரிசி விளைவிப்பதில் இருந்து ஆகாய விமானம் ஓட்டுவது வரை என அனைத்து தேசிய வளர்ச்சித் துறைகளிலும் தமது உரிமையை நிலைநாட்டி வரும் இந்திய மகளிர், இத்துறையிலும் தமக்குரிய பங்கைப் பெற்று வருகின்றனர். காலணித் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள 6 இலட்சம் தொழிலாளர்களில் மகளிரின் பங்கு 1.5 இலட்சமாகும் (25%). இயந்திரமாக்கப்பட்ட காலணித் தயாரிப்பு ஆலைகளிலும் கூட இவர்கள் பெருமளவில் உள்ளனர். தயாரிக்கப்படும் காலணி களின் எண்ணிக்கைக்கு தகுந்தாற்போல் ஊதியம் வழங்கும் நிறுவனங்களில் இவர்கள் நீக்கமற நிறைந்துள்ளனர் என்றே கூறலாம்.

பெரும்பாலும் 21-30 வயதுப் பிரிவில் உள்ள பெண்களே இங்கு பணி புரிகின்றனர். வேலையின் தன்மை மற்றும் அனுபவத்தைப் பொறுத்த மாதம்தோறும் ரூ.350-ல் இருந்து ரூ.1,200 வரை இவர்களுக்கு ஊதியம் கிடைக்கிறது. விதவைகளும் ஆதரவற்ற மகளிரும் கூட ஆலைகளில் பெரும் எண்ணிக்கையில் வேலை செய்கின்றனர். பல்வேறு இயந்திரங்களை இயக்கும் திறன் பெற்றிருந்தாலும், பெண்கள் பெரும்பாலும் கீழ்மட்ட அளவிலேயே வேலை செய்கின்றனர். பெரும் விரிவாக்கத்தை எதிர்நோக்கியுள்ள இத்துறையில், உரிய பயிற்சிகள் மற்றும் வாய்ப்புகள் அளித்தால் பல்வேறு தரப்பட்ட உயர்நிலைப் பணிகளையும் மேற்கொள்ளும் ஆற்றலை இவர்கள் பெறுவார்கள் என்பது உறுதி. தொழில் முனைவோர் நிலையைக்கூட இவர்கள் எட்ட இயலும்!

தடைகளை மீறி...

ஒரு காலத்தில் காலணித் தயாரிப்பு என்பது ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்கான பணியாகக் கருதப்பட்டு வந்தது. எனவே, சாதி, மத மற்றும் சமூகத் தடைகள் பெண்கள் இத்தொழிலில் பங்கேற்பதற்குத் தடையாக இருந்தன. எனினும் பெருகிவரும் பொருளாதார நெருக்கடிகள், இத்தடைகளையும்

- **''பெண்ணின் உண்மையான அணி, அவளது புனிதமான ஒழுக்கமே ஆகும். உலோகமும் கல்லும் உண்மையான அணிகலன்கள் அல்ல.**
- **நம்மைவிடச் சிலர் தாழ்ந்தவர்களென்று நாம் கருதுவது நம்மிடையே தீமை மிகுதியாக இருக்கிறதென்பதைக் காட்டுகிறது. இந்தத் தீமையை நாம் ஒழிக்காவிட்டால் அது நம்மை ஒழித்து விடும்.**

— அன்னை காந்தியடிகள்

மீறி பெண்கள் இத்தொழிலில் ஈடுபட வைத்துள்ளது. பல்வேறு மதப் பிரிவினர் சேர்ந்து பணியாற்றும் இச்சூழல், சமூக நல்லிணக்கமும் நட்புறவும் வளர்ந்திட உதவுகிறது. தமிழகத்தில் வட ஆற்காடு - அம்பேத்கர் மாவட்டத்தில் பெருமளவில் முகமதிய மகளிரும் காலணித் தயாரிப்பு வேலைகளில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம்.

காலணியும் காதணியும்

காலணித் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள மகளிரின் சமூகப் பொருளாதார வாழ்க்கை இயலில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தமது சம்பாதிக்கும் திறனால் குடும்பத்தில் முடிவெடுக்கும் உரிமைகளை இவர்கள் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தகுந்ததொரு ஏற்றம். பொருளாதார முன்னேற்றத்தால் வாழ்க்கைத் தரமும் கூடியுள்ளது. இது வரை தமது சக்திக்கு மீறியதாக இருந்த ஆடை- அணிகலன்கள், வீட்டு உபயோகச் சாதனங்கள், நுகர்வோர் பொருட்கள் போன்றவைகளை இவர்கள் வாங்கி அனுபவிக்க இயலுகிறது. சிறிது சிறிதாகச் சொத்தும் சேர்த்து வருகின்றனர். உணவு நுகர்வும் முன்னேறியுள்ளது. குழந்தைகளில் கல்வி குறித்த கண்ணோட்டமும் சாதகமானப் போக்கில் மாறியுள்ளது. வசதியான இருப்பிடம், சுத்தமான சுற்றுப்புறத்தால் இவர்களது சுகாதாரம் மேம்பட்டுள்ளது. இப்பொழுது புரிந்திருக்குமே - காலணிக்கும் காதணிக்கும் உள்ள தொடர்பு!

கல்யாணச் சந்தையில்

பணி புரிவதால் சமூகத்தில் இவர்களது அந்தஸ்து ஒருபடி உயர்ந்துள்ளது. சொல்லப்போனால், இத்தகையத் தொழிற்சாலைகளில் வேலை பார்ப்பது என்பது ஒரு கவுரவமான விஷயமாகவே கருதப்படுகிறது. கல்யாணம் கூடி வருவதற்கு இது ஒரு கூடுதல் தகுதியாகவும் திகழ்கிறது என்றால் மேலும் கூறவும் வேண்டுமோ

ஆலையில் பணிபுரியும் போது தலை குனிந்த நிலையிலேயே வேலை செய்ய நேரிடினும், சமூகத்தில் இவர்கள் நிமிர்ந்த நன்னடையுடன் செயல்பட முடிகிறது.

மாவட்டச் சிறப்பிதழ் வரிசையில்...

தமிழரசு

16.11.93 இதழ்

மதுரை மாவட்டச் சிறப்பிதழாக மலர்கிறது!

★ மாவட்டம் பற்றிய பொன்னான தகவல்கள்
★ அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்!
★ உள்ளம் தொடும் உண்மைக் கதைகள்!
★ மண்வாசனை கமழும் மாவட்டச் சிறுகதை!
★ கற்கண்டாய் இனிக்கும் கவிதைகள்!
★ பக்கத்துக்குப் பக்கம் படங்கள்!

தமிழரசு

படிக்க — பயன்பெற — பாதுகாக்க

பத்திரிகைத் தகவல் அலுவலகம்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
★ லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு

இந்த இதழில்...

நல்லோர் பெயரை மாவட்டங்களுக்குச் சூட்டுவதுதான் சிறந்த நாகரிகம் ஆகும். —மாண்புமிகு முதல்வர் உரை ... 2

விழுப்புரம்-ராமசாமி படையாட்சியார் மாவட்டத் தொடக்க விழா மற்றும் தென்னார்க்காடு-வள்ளலார் மாவட்டப் பெயர் சூட்டும் விழா ... 9

புரட்சித்தலைவியின் நல்லாட்சியில் மலரும் புதிய மாவட்டங்கள் பற்றிய ஒரு கண்ணோட்டம் ... 14

32 திருக்கோயில்களுக்கு ரூ.1.65 கோடியில் திருப்பணி ... 18

மகாகவி பாரதியார் நினைவில்லம் திறப்பு விழா ... 20

'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன்விழா நினைவுத்தூண் திறப்பு விழா ... 25

அண்ணல் காந்தியடிகளின் 125-வது பிறந்தநாள் விழா ... 27

பெண் உரிமை காப்பீர்! சமூக நீதி காக்கும் நல்லெண்ணத் தூதுவராய்ச் செயல்படுவீர் —மாண்புமிகு முதல்வர் உரை ... 29

அரசு அளிக்கும் உதவிகள் தொடக்கமேயன்றி, முடிவு அல்ல... ... 34

நமது மாநிலக் காவல் துறையினர் திறமையாகப் பணிபுரிந்து வருகின்றனர் —மாண்புமிகு முதல்வர் உரை ... 41

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

புரட்டாசித் திங்கள் - 30

மலர்:24 இதழ்:8

16-10-1993

விலை: ரூபாய் மூன்று

நல்லோர் பெயரை மாவட்டங்களுக்குச் சூட்டுவதுதான் சிறந்த நாகரிகம் ஆகும்!

விழுப்புரம்-ராமசாமி படையாட்சியார் மாவட்டத் தொடக்க விழா மற்றும் தென் ஆர்க்காடு-வள்ளலார் மாவட்டப் பெயர் சூட்டும் விழா மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரை

சிறப்பான இந்த விழாவில் கலந்து கொண்டு, 'விழுப்புரம்-ராமசாமி படையாட்சியார்' மாவட்டத்தைத் தொடங்கி வைத்து, தென் ஆர்க்காடு மாவட்டத்திற்குத் தென் ஆர்க்காடு-வள்ளலார் மாவட்டம்' என்ற பெயரைச் சூட்டி, பல்வேறு அரசுத் திட்டங்களைத் தொடங்கி வைப்பதில், நான் பேருவகை அடைகின்றேன்.

அகிலம் முழுவதும் ஆட்கொண்டிருக்கும் இறைவனை, 'அருட்பெருஞ் ஜோதி, தனிப் பெரும் கருணை' என்ற தத்துவப் பொருளாய் நமக்குக் காட்டி, இந்த மண்ணில் இன்றும் ஒளியாய், உருவாய், திருவாய், கருவாய், நமக்குக் காட்சி அளித்து வரும் கருணைக் கடல், வள்ளலார் திருப்பெயராலும்; வாழ்வாங்கு வாழ்ந்து, பின்னர் வீழ்ந்த ஓர் சமுதாயத்தை, மீண்டும் தலை நிமிரச் செய்திட, தன் வாழ்நாள் முழுவதும் உழைத்திட்ட பெருந்தகையாளர், ராமசாமி படையாட்சியாரின் திருப்பெயராலும், இரு மாவட்டங்களை உருவாக்கி, அலை கடலெனத் திரண்டுள்ள உங்கள் மத்தியில், அவற்றைத் தொடங்கி வைப்பதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

பரந்த நிலப்பரப்பைத் தன்னகத்தே கொண்டுள்ள தென் ஆர்க்காடு மாவட்டம், இன்று முதல், தென் ஆர்க்காடு-வள் ளலார் மாவட்டம் றும்; விழுப்புரம்-ராமசாமி படையாட்சியார் மாவட்டம்' என்றும் அழைக்கப்படும்.

அப்பர், திருஞானசம்பந்தர் போன்ற சமயப் பெரியோர்கள், அருளிச் சென்ற அருள் மொழிகள், மறைந்திடுமோ என்ற அச்சம் மிகுந்த சூழ்நிலையில், சென்ற நூற்றாண்டு, இம்மாவட்டத்தில மருதூர் மண்ணில், வள் ளலார் பெருமகன் இராமலிங்கனார் அவதரித்தார். அருள் வள் ளலார் இராமலிங்கப் பெருமகனார், தம் வாழ்நாள் முழுவதும், இறைவனைத் தன் தாய்த் தமிழால் பாடியவர். பிறிதொருவர் குறை காண முடியாத அளவிற்கு, உலக மக்களுக்கு அன்பு நெறியைப் போதித்து, பிறர் எவரும் குறை கூறாக் குணக் குன்றாக வாழ்ந்து, அருளின் வடிவமாகத் திகழந்தவர். 'இறைவன் எங்கும் நிறைந்தவன், ஒளி வடிவம் ஆனவன்; என்றும் நின்று நிலைத்து இருப்பவன்' என்பதை உணர்த்திப் பல அற்புதங்களை நிகழ்த்திக் காட்டி, இன்றும் வள்ளலார், நம்மிடையே ஜோதியாக வாழ்ந்து வருபவர், என்ற சிறப்பைப் பெற்றார்.

அந்த மருள் அகன்ற மாமணிக்கு,
மேடையில் வீசுகின்ற அப்பூங்காற்றுக்கு,
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவையாம் அந்நீருக்கு,
கோடையிலே இளைப்பாறிக்கொள்ளும்
குளிர்தருவுக்கு,
குளிர் தருவின் நல் நிழலுக்கு,
நிழலிடை மலர்ந்த அம்மலருக்கு,
நிழலில் கனிந்த அக்கனிக்கு,

இங்கே 'தென் ஆர்க்காடு-வள் ளலார் மாவட்டம்' எனப் பெயர் சூட்டி, அகமகிழ்ந்து கொண்டிருக்கிறோம் என்றால், அது மிகையாகாது.

அதேபோல், 'வாழ்ந்தவர் கோடி - மறைந்தவர் கோடி' என்றாலும்; மக்கள் மனதிலும், சரித்திரத்திலும் நின்று நிலைப்பவர்கள், மாபெரும் வீரர்களும், மானம் காத்தோருமே, என்ற இயற்கை நியதிப்படி, வாழ்ந்து மறைந்த ஒரு பெருந்தகையாளரின் சாதனைகளுக்குச் சிறப்புச் செய்யும் வண்ணம், 'விழுப்புரம்-ராமசாமி படையாட்சியார் மாவட்டம்' அமைத்து, மகிழ்ந்து கொண்டிருக்கிறோம்.

உங்கள் நல்லாதரவோடு, லட்சோப லட்சம் தாய்மார்களின், சகோதரிகளின், பெரியோர்களின் நல்லாதரவு, என்றென்றும், உங்கள் சகோதரியான எனக்குப் பரிபூரணமாக உள்ளது என்பதை நிருபித்து, மீண்டும் உங்கள் முன் வந்து நிற்பதில், நான் பூரிப்படைகிறேன். லட்சோப லட்ச மக்கள் அன்போடு இங்கே கூடியுள்ளார்கள் என்றால், அதற்கு அடிப்படைக் காரணம், உங்கள் மன விருப்பங்களை அறிந்து, வேறு ஒருவரும் இதுவரை சிந்திக்காத, சிந்தித்துச் செயல்படுத்த முன் வராத உங்கள் கோரிக்கைகளை, நானே சிந்தித்து நிறைவேற்றி வருகிறேன் என்பதன் பிரதிபலிப்புத் தானே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

விழுப்புரத்தைத் தலைமை இடமாகக் கொண்டு, இன்று உதயமாகும் ராமசாமி படையாட்சியார் மாவட்டம், நம் தங்கத் தமிழகத்தின் நெற்றித் திலகமாக ஜொலிக்க வேண்டும் என்றும்; கடலூரைத் தலைமை இடமாகக் கொண்ட, 'தென் ஆர்க்காடு-வள் ளலார் மாவட்டம்', அத்திருமகனின் முகப் பொலிவை உணர்த்தும், அருள் ஜோதியாய் விளங்க வேண்டும் என்றும், எனது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துவதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

ஜாதி, சமய, அரசியல் மாச்சரியங்களைக் கடந்து, நல்லோர்களின் பெயரை மாவட்டங்களுக்குச் சூட்டும் நனிநாகரீகம், அனைவருக்கும் வருவது இல்லை. பரந்த மனதும், தன்னம்பிக்கை

யும் உடையவர்கள் தான், அனைத்துப் பேதங்களையும் கடந்து, நல்லவர்களையும், வல்லவர்களையும் பாராட்டிச் சீராட்டி, மகிழ்ச்சி அடைய முடியும்.

ஒரு காலத்து வருவாய் ஈட்டும் எண்ணத்துடன், ஆங்கிலேயர் ஆட்சி அமைத்திருந்த பெரிய மாவட்டங்கள், நாடு சுதந்திரம் பெற்ற பின்னரும், பல்வேறு ஆட்சியினரின் கீழ் தொடாந்தது.

பெரிய மாவட்டங்களாக இருந்தால், வளர்ந்து வரும் மக்களின் தேவைகளை அறிந்து, வளர்ச்சிப் பணிகளை முறைப்படி துரிதமாக மேற்கொள்ள இயலாது என்பதை உணர்ந்து, நிர்வாக நலன் கருதி, பெரிய மாவட்டங்கள் அனைத்தையும் பிரித்து, சிறிய மாவட்டங்களாக் ஆக்கிவிட வேண்டும் என்றும்; அவ்வாறு பிரிக்கப்படும் மாவட்டங்களுக்குத், தமிழக மக்களால், தங்கள் வணக்கத்திற்கு உரியவராய் ஏற்றுக்கொள்ளப் பட்ட, தலைவர்களின் பெயர்களைச் சூட்டுவது என்றும், துணிச்சலோடு முடிவு எடுத்து, முதன் முதலில் அறிவித்தவர், நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தான். அவரது அடிச்சுவட்டில் ஆட்சி நடத்தி வரும், உங்கள் அன்புச் சகோதரியான நானும், எங்கள் அரசும், அதே துணிச்சலுடனும், தன்னம்பிக்கையுடனும், அவர் விட்டுச் சென்ற பணிகளை, அதே உணர்வுடன் தொடர்ந்து ஆற்றி வருகிறோம்.

இன்று ராமசாமி படையாட்சியார் பெயரிலும், வள்ளலார் பெயரிலும், மாவட்டம் கண்டிருப்பது போல்; பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்

களின் பெயரை, மீண்டும் திண்டுக்கல்லைத் தலைமை இடமாகக் கொண்ட மாவட்டத்திற்கே சூட்டினோம். காஞ்சிபுரத்தைத் தலைமை இடமாகக் கொண்டிருந்த, செங்கற்பட்டு மாவட்டத்திற்கு, 'தந்தை பெரியாருக்கும் - பெருந்தலைவர் காமராஜருக்கும் - உத்தமத் தலைவர் முத்துராமலிங்கத் தேவருக்கும் - கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.-க்கும் - வெள்ளையர் ஏகோதிபத்தியத்தை எதிர்த்து, முதல் முழக்கமிட்ட வீரபாண்டியக் கட்டபொம்மனுக்கும்' மாவட்டங்கள் கண்ட, எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் திருப்பெயரால், 'செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம்' எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தோம்.

முன்பு இருந்த ஆட்சியாளர்கள் தொடவே அஞ்சிக் கிடந்த, தஞ்சை மாவட்ட பிரிவினைப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, கண்ணியம் மிகுந்த காயிதேமில்லத் திருப்பெயரைத் தாங்கிய, 'நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம்' அமைத்தது, உங்கள் அன்புச் சகோதரி தான் என்பதை, அனைவரும் நன்கு அறிவார்கள்.

இந்த மாவட்டத்தில், எங்கள் ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்ட இந்த இரண்டாண்டு கால கட்டத்தில், என்னென்ன அரிய பணிகளை மேற்கொண்டுள்ளோம் என்பதை அனைவரும் நன்கு அறிவீர்கள்.

கடந்த ஆண்டு, விழுப்புரத்தில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில், இம்மாவட்டம் முழுவதும் பயன் பெறும் வகையில், 175 கோடி ரூபாய்க்கான திட்டப்பணிகளைத் தொடங்கி வைத்தேன். அதேபோல், இன்றைக்கு இங்கே நடைபெறும் இந்த மகிழ்ச்சியான விழாவில், இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்த்து, 304 கோடி ரூபாய்க்கான திட்டங்களைத் தொடங்கி வைத்தும், கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டியும், இப்பகுதியின் துரிதமான வளர்ச்சிக்கு வழி வகுத்ததில், பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாட்டின் பிரசித்தி பெற்ற மாவட்டங்களில் ஒன்றான, தென் ஆர்க்காடு மாவட்டத்தில், ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள், மலை ஜாதியினர், பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினர், எனப் பலதரப்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இம்மாவட்ட மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு, உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு, கடந்த இரண்டு

ஆண்டுகளாக, பல திட்டங்களை இப்பகுதியில் செயல்படுத்தி வருகிறது. புதிய இரண்டு மாவட்டங்களில் உள்ள, கரும்பு விவசாயிகள் பயன் பெறும் வண்ணம், கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை, 30 கோடி ரூபாய் செலவில் விரிவுபடுத்தும் பணியை, இன்று தொடங்கி வைத்துள்ளேன். தமிழ்நாடு மின் வாரியத்தால், 45.5 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள, 12 புதிய துணை மின் நிலையங்களைத் திறந்து வைத்துள்ளேன்.

சேத்தியாதோப்பு அருகில், வெள்ளாறு மீது பாலம் கட்ட வேண்டும் என்று, பல காலமாக அப்பகுதி வாழ் மக்கள், போராடி வந்ததை அறிந்தவுடன், அந்தப் பாலம் கட்டுவதற்கு வேண்டிய கூடுதல் நிதியை வழங்கி, விரைவில் கட்டுவதற்கு ஆணையிட்டேன், அந்தப் பாலத்தை இப்போது திறந்து வைக்கும்போது, அப்பகுதி வாழ் மக்கள், தங்களது நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளதை அறிந்து, எத்தகைய மகிழ்ச்சியில் ஆழ்ந்திருப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, என் மனம் பூரிப்படைகின்றது.

இம்மாநிலத்தின் தலைநகரான சென்னையிலிருந்து, கடலூரை இணைக்கும் கிழக்குக் கடற்கரைச் சாலை, 75 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது. விழுப்புரத்தில் நடந்தஅரசு விழாவில், இந்த திட்டப் பணியை நான் தொடங்கி வைத்தேன். இன்று இத்திட்டம், 50 கிலோமீட்டர் தூரம், நிறைவேறும் தறுவாயில் உள்ளது.

இதில் 2 பெரிய பாலங்கள், 87 சிறிய பாலங்கள் அமைக்கும் பணியும், நிறைவேறும் தறுவாயில் உள்ளது. இவ்வாண்டு இத்திட்டத்திற்காக, 15 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, இத்திட்டத்தைத் துரிதமாகச் செயல்படுத்த, ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டம் முழுவதுமாக நிறைவேறும்போது, இந்த நெடுஞ்சாலையில் போக்குவரத்து பெருகி, அதன் மூலம், இப் பகுதிவாழ் மக்களின் பொருளாதாரத்திலும், ஒரு மறுமலர்ச்சி ஏற்படும் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லாக் கிராமங்களுக்கும், ஒரு குடிநீர் ஆதாரமாவது இருக்க வேண்டும், என்ற எங்களது கொள்கையின்கீழ், 135 கிராமக் குடிநீர்த் திட்டங்களைத் தொடங்கி வைக்கும் வாய்ப்பினைப் பெற்றதில், பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆட்சிப் பொறுப்பு ஏற்ற நாள் முதல், உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு, ஏழை எளியோருக்கும், நலிந்த பிரிவினருக்கும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் சமுதாயத்தினருக்கும், எண்ணற்ற உதவிகளைப் புரிய வேண்டும் என்ற இலட்சியத்தோடு, மக்கள் பணியில் தனது புனிதப் பயணத்தை, இதய சுத்தியோடு தொடர்ந்து நடத்தி வருகிறது. ஏற்றத் தாழ்வுகள் நிறைந்த இந்த சமுதாயத்தில், இன்னல்களை அனுபவிப்பதை மட்டுமே, தங்கள் வாழ்க்கையின் வாடிக்கையாகக் கொண்டுவிட்ட, நலிவுற்ற பிரிவினரின் வாழ்க்கைத் தரத்தை எப்பாடுபட்டாகிலும், உயர்த்த வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன், இந்த அரசு செயல்பட்டு வருகிறது. குறிப்பாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் வளம் பெற, ''புதிய 10 அம்சத் திட்டம்'' ஒன்றினை அறிவித்து, நாங்கள் செயல்படுத்தி வருகிறோம்.

ஆதிதிராவிட மக்களுக்குத் தகுந்த தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து, அவற்றின் மூலம், அவர்களது பொருளாதார நிலையை உயர்த்தி, அவர்கள் வாழ்க்கையில் வளமை காணுவதற்கு, எங்கள் அரசு புதிய திட்டங்களை மேற்கொண்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில், ஆதிதிராவிடர்களுக்கெனத் தனியாக, இரண்டு தொழிற்பேட்டைகளைத் தொடங்கியுள்ளது எங்கள் அரசு.

இந்தத் தொழிற்பேட்டைகளில் அமையவுள்ள புதிய தொழில்கள் மூலம் வெறும் 200 ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த, தொழில் முனைவோர்கள் மட்டும் உதவி பெறுவதோடு நின்றுவிடாமல், பல்லாயிரக்கணக்கான மக்களும் வேலை வாய்ப்பு பெற்று, பயன் பெறுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறால் வளர்ப்பு, நமது நாட்டின் கடற்கரைப் பகுதியில் வாழும் மக்களுக்கு, செல்வம் கொழிக்கும் தொழிலாக விளங்கி வருகிறது. அந்த இறால் வளர்ப்புத் தொழிலில், நமது ஆதிதிராவிட சகோதர சகோதரிகளை ஈடுபடுத்தி, அவர்கள் வாழ்வில் வளம் காண, எங்கள் அரசு மிகுந்த அக்கறை காட்டி வருகிறது.

ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பில், ஒரு ஆதிதிராவிடக் குடும்பத்திற்கு ஒரு எக்டேர் என்ற அளவில், இறால் வளர்ப்புப் பண்ணைகள் அமைக்க, உதவிப் புரியும் ஒரு மாபெரும் திட்டத்தை, தமிழக அரசு தற்போது செயல்படுத்தி வருகின்றது. அதேபோல, ஆதிதிராவிட மக்களை, பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபடுத்தி, அவர்கள் பொருளாதார முன்னேற்றம் அடைய, வங்கிகளின் நிதி உதவியோடு, 'தாட்கோ' நிறுவனம், 46 கோடி ரூபாய் செலவில், சுமார் 10,000 ஆதிதிராவிடக் குடும்பங்கள், பயன் அடையும் வண்ணம், ஒரு திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள, ஏழை எளிய மக்களின் வாழ்வில், ஏற்றம் காணும் திட்டங்களைத், தொடர்ந்து தொய்வின்றிச் செயல்படுத்துவோம் என்ற உறுதியை, இங்கே அளிக்க விரும்புகிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்தின் ஏனைய பகுதிகள் அனைத்தும், மத, இன துவேஷத்தாலும், பிரிவினை மற்றும்பயங்கரவாதத்தாலும்,வேறு பல பிரச்சினைகளாலும், தீராத் 'தலைவலிகளில்' சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் வேளையில்; தமிழகம் மட்டுமே அமைதிப் பூங்காவாக, வளர்ச்சிப் பணிகளிலும், திட்டங்களிலும், நாளும் ஆர்வம் கொண்டு, பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. இதற்கு அடிப்படைக் காரணம், மக்கள் சக்தியை மட்டுமே மூலதனமாகக் கொண்டு, எங்கள் ஆட்சி அமைந்துள்ளதே ஆகும். மக்கள் சக்தி மட்டுமே துணை எனக் கருதி, உங்கள் அன்புச் சகோதரியான நான், அரசு நிர்வாகத்தை நடத்தி வருகின்றேன்.

மக்கள் சக்தியின் பால், அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ள நாங்கள், 5½ கோடி மக்களின் எண்ணங்களுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும், ஏற்றாற் போல் இயங்க வேண்டும் என்பதை, எங்கள் மக்கள் பணியின் அடிப்படைக் கோட்பாடாக வைத்து, இதய சுத்தியோடு செயல்பட்டு வருகிறோம். நான் பதவி ஏற்றவுடன், தமிழகத்தின் அமைதியைக் குலைக்கும், சில கொடிய சக்திகளுடன் கடுமையாகப் போராடி, அவற்றை விரட்டியடித்து, தமிழகத்தை மீண்டும் ஒரு

மீனவர்களுக்கு இலவச வீடுகள்

தமிழகத்தில் கடலோர மாவட்டங்களில் கடற்கரை அருகே வசித்து வரும் மீனவச் சமுதாயத்தினைச் சேர்ந்த குடும்பங்களுக்கு ''இலவச வீடு'' கட்டிக் கொடுக்கும் திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் அறிவித்திருந்தார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்பினை அடுத்து தற்போது 1993-94-ஆம் ஆண்டில் மீனவக் குடும்பங்களுக்கு இலவச வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் ரூ.16.13 கோடி மதிப்பில் உருவாக்கப்பட்டு, அதன்படி இலவச வீடுகளும், குடியிருப்புகளுக்கு அருகிலேயே சமுதாயக் கூடங்களும் மற்றும் ஆழ்குழாய்க் கிணறுகளும் அமைத்துக் கொடுக்கவும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

இதன்படி, ரூ.14.87 கோடி மதிப்பில் 5,719 இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். இவ்வாறு கட்டிக் கொடுக்கப்படும் ஒவ்வொரு இலவச வீடும் ரூ.26,000 மதிப்பில் இருக்கும். மேலும், இத்தகைய குடியிருப்புகளுக்கு அருகாமையிலேயே ரூ.60 இலட்சம் மதிப்பில் 48 சமுதாயக் கூடங்களும் கட்டிக் கொடுக்கப்படும்.

ஒவ்வொரு சமுதாயக் கூடமும் 1,25,000 ரூபாய் செலவில் கட்டப்படும். இவற்றோடு கூடி ரூ.66.25 இலட்சம் மதிப்பில், ஆழ்குழாய்க் கிணறு ஒன்றுக்கு ரூ.25,000 வீதம் 265 ஆழ்குழாய்க் கிணறுகளும், இந்த மீனவர் குடியிருப்புகளில் அமைத்துத் தரப்படும்.

மீனவர் சமுதாய குடும்பத்தினர் நன்முறையில் வாழ வழிவகுக்கும் ரூ.16.13 கோடி மதிப்புள்ள இத்திட்டத்தினை உடனடியாகச் செயல்படுத்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்திரவிட்டுள்ளார்.

அமைதிப் பூங்காவாக உருவாக்க, பகீரத முயற்சிகள் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

அத்தகைய தேச விரோத சக்திகள், என் உயிருக்குக் குறி வைத்துள்ளன என்பதை, நன்கு அறிந்தும் கூட, மக்களிடம் இருந்து இந்தத் தீய சக்திகள், என்னைப் பிரித்து விடாமல் இருக்க, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று, கோடிக்கணக்கான ரூபாய்க்கான திட்டங்களைத் தொடங்கி வைத்தேன். அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள், சமுதாயத்தின் அடித்தளத்தில், தாங்கொணாத் துயரங்களைத் தாங்கிக் கொண்டு, வாழ்ந்து வரும் பலதரப்பட்ட, ஏழை எளிய மக்களுக்குச் சென்றடைய வேண்டும்; அவர்கள் வாழ்க்கைத் தரம் மேலும் உயர வேண்டும், என்ற எனது சிந்தனையின் வெளிப்பாடு தான், வாரம் ஒரு மாவட்டத்திற்கு என ஒதுக்கி; அம்மாவட்டப் பொதுமக்களை நேரில் சந்தித்து, குறைகளைக் கேட்டு, மனுக்களைப் பெற்று, அம்மனுதாரர்களுக்குப் போய்ச் சேர வேண்டிய நியாயமான உதவிகள், ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் போய் சென்றடைய, தனி முயற்சிகள் மேற்கொண்டேன். மக்கள் குறை தீர்க்கும் பணியைச் சிரமேற்கொண்டு, எங்கள் அரசு செயல்படுகிறது என்பதை, யாரும் மறுக்க முடியாது. தேவையான பணியிடங்கள், எல்லா மாவட்டங்களுக்கும் ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டுள்ளன. மேலும் எனது நேரடிப் பார்வையில், நானே மனுதாரர்களை நேரில் வரவழைத்து, நலத் திட்ட உதவிகளை வழங்கி மகிழ்ந்துள்ளேன்.

இரண்டாவது கட்டமாக, ஒவ்வொரு மாவட்டத் திற்கும் நானே சென்று, அரசு நலத்திட்ட உதவி களைத் தற்போது, நானே வழங்கி வருகிறேன்.

கோவை மாவட்டத்திலும், தர்மபுரி மாவட்டத் திலும், 21,000-க்கும் மேற்பட்டவர்களுக்கு, 13.49 கோடி ரூபாய் செலவில், அரசு நலத்திட்ட உதவிகளைச் சமீபத்தில் வழங்கினேன்.

இன்று இந்த இரண்டு மாவட்டங்களைச் சேர்ந்த 16,000-க்கும் மேற்பட்ட மனுதாரர் களுக்கு, 15.5 கோடி ரூபாய் செலவில், அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குவதில், பெருமிதம் கொள்கிறேன். ஏழை எளியவர்களுக்கும், ஆதரவற்ற வர்களுக்கும், நேரடியாக உதவிகள் சென்றடைய வைப்பதில், எனக்குக் கிடைக்கும் மனத் திருப்தி, இதுவரை நான் ஈடுபட்ட வேறு எந்தப் பணி யிலும், எனக்குக் கிடைத்தது இல்லை. பொது மக்களின் குறைகளைத் தீர்க்கும் பணியை, ஒரு புனிதப் பணியாக நான் கருதுகிறேன்.

ஆதிதிராவிடப் பெருமக்கள் எங்கிருந்தாலும், அவர்களின் முன்னேற்றத்திற்கும் வளமான வாழ் விற்கும் நடவடிக்கை மேற்கொள்வதில், உங்கள் சகோதரியின் தலைமையிலான இந்த அரசு, தீவிரம் காட்டி வருவதை, நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். குறிப்பாக இந்த இரண்டு மாவட்டங்களில் உள்ள, ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த தாய்மார்களுக்கும், சகோதரிகளுக்கும் இருக்கின்ற, சமுதாயப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க, நடவடிக்கை எடுத்து வருகின்றேன். ✿

விழுப்புரம்-ராமசாமி படையாட்சியார் மாவட்டத் தொடக்க விழா மற்றும் தென்னார்க்காடு-வள்ளலார் மாவட்டப் பெயர் சூட்டும் விழா

- மக்கள் மன்றத்தின் முன்னே மாவட்டங்கள் மலர்ந்தன!
- புதிய போக்குவரத்துக்கழக வழித்தடங்கள் பிறந்தன!
- அனைத்து மகளிர் காவல் நிலையம் திறந்து வைக்கப்பட்டது!
- காவல்துறையினரின் கவின்மிகு கல்யாண மண்டபம் தொடங்கி வைக்கப்பட்டது!

தமிழகத்தின் 23-வது மாவட்டத் துவக்க விழா

தமிழகத்தின் 23-வது மாவட்ட மாக உதயமாகும் விழுப்புரம்-ராம சாமிப் படையாட்சியார் மாவட்டத் தொடக்க விழாவும், தென்னார்க் காடு-வள்ளலார் மாவட்டப் பெயர் சூட்டும் விழாவும் 30.9.1993 அன்று கடலூர் மஞ்சை நகர்த் திடலில் கோலாகலமாக நடை பெற்றது.

அன்று கடலூர் நகரமே திரு விழாக் கோலம் பூண்டிருந்தது. கானு மிடமெல்லாம் அலங்கார வளைவு களும், முதல்வரின் திருவுருவப் படங்களும் நீக்கமற நிறைந்திருந்தன. ஆடவரும், பெண்டிரும் தங்கள் வீட்டு விழா போல் கருதி, குடும்பம் குடும்பமாக, சாரை சாரையாக மஞ்சை நகர்த்திடல் நோக்கி சென்ற வண்ணம் இருந்தனர். தமிழகத்தின் அனைத்துச் சாலைகளும் கடலூரை நோக்கியே இருந்தன. இதுவரை கடலூர் கண்டிராத பிரம்மாண்ட மான விழாப்பந்தல், பெரியதோர் மாநாட்டுப் பந்தல் போல அமைந் திருந்தது.

விழாவில் கலந்து கொள்வதற் காக காலை 10.50 மணிக்கு, அண்ணா அரங்கு மைதானத்திற்கு

ஹெலிகாப்டரில் வந்து இறங்கிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களை, அமைச்சர் பெருமக்களும், உயர் அதிகாரிகளும், சட்டப்பேரவை உறுப்பினர்களும் வரவேற்றனர். விழா மேடைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகை தந்தபோது, வண்ணவண்ண பலூன்களுடன் குழந்தைகள் அவரை அன்புடன் வரவேற்றனர். விழா சரியாக 11 மணிக்கு தொடங்கியது. விழாவிற்கு மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு சேடபட்டி முத்தையா அவர்கள் தலைமை தாங்கினார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த விழாவிற்கு, இலட்சக்கணக்கில் திரண்டிருந்த அனைவரையும் தலைமைச் செயலர் திரு டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார். அவரைத் தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர்கள் திரு ஆனந்தன், திரு மு.தென்னவன், திரு ஜனார்தனன், திரு எஸ்.டி. சோமசுந்தரம், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் திரு பிரபாகரராவ், திரு அசோக் வரதன் ஷெட்டி, வருவாய்த்துறைச் செயலர் திரு பால் ராஜ், சிறப்பு ஆணையர் திரு சி.என். ராம்தாஸ், இந்து அறநிலையத்துறை ஆணையர் திரு ஜி.ராமகிருஷ்ணன், திருக்குறள் திரு முனிசாமி ஆகியோர் பேசினார்கள்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் விழுப்புரம்-ராமசாமிப் படையாட்சியார் மாவட்டத்தைத் தொடங்கி வைத்தார். கடலூரைத் தலைநகராகக் கொண்ட மாவட்டத்துக்குத் தென்னார்க்காடு-வள்ளலார் மாவட்டம் எனப் பெயர் சூட்டினார். மேடையிலிருந்து பொத்தானை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அழுத்தினார். உடனே அருகில் அமைக்கப்பட்டிருந்த திரை விலகியது. உள்ளே பிரிக்கப்படாத தென்னார்க்காடு மாவட்ட வரைபடம் தெரிந்தது. அடுத்த பொத்தானை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அழுத்தியதும் தென்னார்க்காடு மாவட்ட வரைபடம் 2 ஆக, தனித்தனி மாவட்டங்களாகப் பிரிந்தது. இரண்டு மாவட்ட வரைபடங்களுக்கு இடையே முதல்வர் அவர்களின் உருவம் தெரிந்தது.

அடுத்து தந்தை பெரியார், எம்.ஜி.ஆர், சோழன் ஆகிய போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படவுள்ள 28 புதிய பேருந்து வழித்தடங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார். உடனே நான்கு அடி உயரத்தில் தாமரை மொட்டு போன்றதொரு வடிவம் பூ போல மலர்ந்தது. அதனுள்ளே முதல்வர் அவர்களின் திருவுருவம் தெரிந்தது. அதை ஒரு மினி பஸ் சுற்றிச்சுற்றி வந்தது.

பின்னர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார். தென்னார்க்காடு-வள்ளலார் மாவட்ட அறிவொளி இயக்கத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தொடங்கி வைத்தார். இதனையொட்டி 'வெளிச்சத்துக்கு வாங்க' என்ற அறிவொளி இயக்க மலரை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டார். அதன் முதல் பிரதியை, தென்னார்க்காடு-வள்ளலார் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் ந. பிரபாகரராவ் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்த்து ரூ.304 கோடி மதிப்புள்ள வளர்ச்சித் திட்டங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார். ரூ.1.50 கோடி மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை முதல்வர் வழங்கினார். மாண்புமிகு முதல்வர் அவர்களும் அவரது அறிவுரையின்படி, விழாவிற்கு வருகை புரிந்த அனைத்து அமைச்சர் பெருமக்களும் நேரடியாகப் பதினாராயிரம் பயனாளிகளுக்கு உதவித் தொகைகளை வழங்கினார்கள்.

ரூ.75 கோடி செலவில் சென்னையிலிருந்து கடலூரை இணைக்கும் கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டப்பணியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகியோர் நினைவுப் பரிசுகளை வழங்கினார்கள்.

ராமசாமிப் படையாட்சியாரின் மனைவி திருமதி ஞானம்பாள், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்தார். அவரது மகன் திரு எஸ்.எஸ்.ஆர். ராமதாஸ் (சட்டமன்ற உறுப்பினர்) உடனிருந்தார்.

விழுப்புரம்-ராமசாமிப் படையாட்சியார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு அசோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., நன்றி நவில விழா இனிதே முடிந்தது. விழா முடிந்து மேடையை விட்டு இறங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொது மக்களிடமிருந்து ஏராளமான மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

விழுப்புரத்தைத் தலைநகராகக் கொண்ட விழுப்புரம்-ராமசாமிப் படையாட்சியார் மாவட்டத்தில், விழுப்புரம், திருக்கோயிலூர், உளுந்தூர்ப்பேட்டை, திண்டிவனம், செஞ்சி, வானூர், கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் ஆகிய எட்டு தாலுக்காக்கள் அடங்கியுள்ளன.

இம்மாவட்டத்தில், 12 சட்டமன்றத் தொகுதிகளும், 22 ஊராட்சி ஒன்றியங்களும் 2 நகராட்சிகளும், 1,084 கிராமங்களும் அடங்கும்.

முதல்வர் திறந்து வைத்தார். அதைத் தொடர்ந்து பர்கூர், தருமபுரி, கோவை, மதுரை ஆகிய இடங்களிலும், சென்னையில் மேலும் 2 இடங்களிலும் மகளிர் காவல் நிலையங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.

விழுப்புரம்-ராமசாமிப் படையாட்சியார் மாவட்டத்தைக் கடலூரில் திறந்து வைத்துவிட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 12.50 மணிக்கு மாவட்டக் காவல் துறை அலுவலர் அலுவலகத்திற்குச் சென்றார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, முதலில் மகளிர் காவலர் பூச்செண்டு கொடுத்து வரவேற்றனர். அதைத் தொடர்ந்து மகளிர் காவலர் அணிவகுப்பு நடந்தது. அணிவகுப்பு மரியாதையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

அதைத் தொடர்ந்து, மகளிர் காவல் நிலையத்தைச் சுற்றிப் பார்த்தார். ஆய்வாளர் அறைக்குச் சென்று அங்கு பார்வையாளர் புத்தகத்தில் கையெழுத்துப் போட்டார். பார்வையாளர் புத்தகத்தில் மாண்புமிகு முதல்வர் எழுதி இருப்பதாவது:

"தென்னார்க்காடு-வள்ளலார் மாவட்டத்தில் கடலூரில் முதல் மகளிர் காவல் நிலையத்தைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் முக்கிய இடங்களில் மகளிர் காவல் நிலையம் திறக்கப்படும். பொது மக்களுக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு மகளிர் காவல் நிலையம் நம்பிக்கை ஊட்டுவதாகவும் அவர்

> கடலூரைத் தலைநகராகக் கொண்ட தென்னார்க்காடு-வள்ளலார் மாவட்டத்தில், கடலூர், பண்ருட்டி, சிதம்பரம், காட்டுமன்னார்குடி, விருத்தாசலம், திட்டக்குடி ஆகிய ஆறு தாலுக்காக்கள் அடங்கும். இம் மாவட்டத்தில், 9 சட்டமன்றத் தொகுதிகளும், 13 ஊராட்சி ஒன்றியங்களும் 5 நகராட்சிகளும், 682 கிராமங்களும் அடங்கும்.

முழுவதும் பெண் காவலர்களைக் கொண்ட முதல் மகளிர் காவல் நிலையத்தைக் கடந்த ஏப்ரல் மாதம் சென்னையில் மாண்புமிகு

களுக்கு உதவிகரமாகவும் இருக்க வேண்டும்".

விழாவில் தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட்ராமன், காவல்துறைத் தலைவர் திரு ஸ்ரீபால், கூடுதல் காவல்துறைத் தலைவர் திரு தேவாரம், ஐ.ஜி.க்கள் அலெக்சாண்டர், வீரராகவன், டி.ஐ.ஜி.க்கள் கோபாலன், கணேசன், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பிரபாகரராவ், போலீஸ் சூப்பிரண்டுகள் சுனில்குமார், விஜய் குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கடலூரில் 20 இலட்சம் ரூபாய் செலவில் காவல்துறையினரின் கல்யாண மண்டபம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்கள் தங்களின் சம்பளத்தில் 5 நாள் முதல் 10 நாள் வரையிலான சம்பளத்தை நன்கொடையாகக் கொடுத்திருப்பதன் மூலம், இந்தக் கல்யாண மண்டபம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய கல்யாண மண்டபத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் திறந்து வைத்தார். காவல்துறையினரின் இந்த வித்தியாசமான முயற்சியை வெகுவாகப் பாராட்டி வாழ்த்தினார்.

வேலை இல்லாமல் ஓய்வாக இருக்கும்போதும், விடுமுறை நாட்களிலும் கல்யாண மண்டபத்தை நிர்மாணிக்கும் வேலைகளிலும் காவல்

துறையினர் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தங்களது வீட்டில் எந்த ஒரு நிகழ்ச்சி என்றாலும் தனியார் கல்யாண மண்டபங்களில் நடத்துவதற்கு வசதி இல்லாத காவல் துறையினருக்கு இனிக் கவலையில்லை. அவர்கள் இந்தக் கல்யாண மண்டபங்களில் நடத்திக் கொள்ளலாம். தவிர கூட்டங்கள், மாநாடு ஆகியவற்றை நடத்திக் கொள்ளலாம். மாவட்டத் தலைமையகத்தில் முக்கியப் பாதுகாப்புப் பணிக்கு வரும் வெளி மாவட்டக் காவல்துறையினரும் இந்த மண்டபத்தில் தங்கியிருக்கலாம்.

வரலாற்றுச் சிறப்புமிக்க கடலூர் விழாக்களை முடித்துக் கொண்டு ஹெலிகாப்டர் மூலம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்று மாலையே சென்னை திரும்பினார்.

விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் மாவட்டம் மற்றும் தென் ஆர்க்காடு-வள்ளலார் மாவட்ட மக்களுக்கு, அரசின் திட்டங்கள் விரைவாகச் சென்றடைய, புதிய மாவட்டம் மிகவும் உதவிகரமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை!

—என். இளங்கோ

புரட்சித்தலைவியின் நல்லாட்சியில் மலரும் புதிய மாவட்டங்கள் பற்றிய ஓர் கண்ணோட்டம்

ஆன்மீகத் திருத்தலங்களுடன் அறிவுசால் பெருந்தகைகள் அவதரித்த புண்ணிய பூமியாய் சன்மார்க்க நெறியின் சங்கமாகவும், ஆய்கலைகளின் கலங்கரை விளக்கமாகவும் விளங்கி தமிழ்த்தாயின் மணிமகுடத்தில் மாணிக்கமாய் சுடர் விட்டு ஒளிதரும் அளவிற் பெரிய மாவட்டம் தென்னார்க்காடு மாவட்டம். பச்சை வயல்களையும், பரந்த கடலையும் தன்னகத்தே கொண்டு, வேளாண் பெருமக்களையும், உதிரத்தை வியர்வையாய் உமிழும் உழைப்பாளிகளையும், கடும் காற்றை எதிர்கொண்டு கலம் ஏந்தி வலம் வந்து மீன் பிடித்து வாழும் மீனவப் பெருங்குடி மக்களையும் பெருவாரியாகக் கொண்டதாகும்.

பிரிக்கப்படாத தென்னார்க்காடு மாவட்டம், தமிழ்நாட்டிலேயே அதிக பரப்பளவையும் மக்கள் தொகையையும் கொண்டது. 11,000 ச.கி.மீ. கொண்ட இம்மாவட்டத்தின் மக்கள் தொகை 48 இலட்சமாகும். இது கிழக்கில் வங்கக் கடலையும், தெற்கில் தஞ்சை, திருச்சி மாவட்டங்களையும், மேற்கில் சேலம் மாவட்டத்தையும் வடக்கில் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மற்றும் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டங்களையும் எல்லைகளாகக் கொண்டது.

வரலாறு, சமயம், சமூகச் சீர்திருத்தம், தொழில், வேளாண்மை ஆகிய பல துறைகளில் உயர்ந்த இடத்தினைப் பெற்று விளங்குவது தென்னார்க்காடு மாவட்டம் ஆகும். பல்லவப் பேரரசுகள், ஆர்க்காடு நவாபுகள், ஆங்கிலேயர் என இதன் வரலாற்றுச் சுவடுகளில் வலம் வந்த அரசுகள் பலவாகும். ஆங்கிலேயர்கள் தம் தலைநகரைச் சென்னைப் பட்டினத்துக்கு மாற்றியதே பிரெஞ்சுக் குடியிருப்பான புதுச்சேரி ஆளுநர் டுப்ளே அவர்களின் தொடர்ந்த படையெடுப்பின் காரணமாகவே. இல்லையேல், தமிழகத்தின் தலைநகரமாக கடலூர் நகரமே எழிலுற விளங்கியிருக்கும்.



புனித செயின்ட் டேவிட் கோட்டை, சுற்றிலும் அகழி, ஆர்ப்பரிக்கும் அலை கடலோரம் உயர்ந்த கட்டடங்கள், ராபர்ட் கிளைவ் அவர்களின் இல்லம், பரந்த பெரிய மஞ்சை நகர் மைதானம் ஆகியவை இம்மாவட்டத்தின் தலைநகரமான கடலூரின் சிறப்புக்குச் சான்று பகர்பவை.

சமயத் துறையில் சைவ, சமயக் குறவர்கள் நால்வருள் இருவரான திருநாவுக்கரசரும், சுந்தரரும் இந்த மாவட்டத்தில் தோன்றியவர்கள். நாவுக்கரசரின் தமக்கை திலகவதி அம்மையார், மெய்கண்டார் ஆகியோரும் சமயச் சீர்திருத்தம் கண்டு எம்மதமும் சம்மதம் என்ற கருணை வள்ளல் இராமலிங்க அடிகளும் இங்கு தோன்றியவர்களே. இங்கு கல்விக் கடலாக விளங்கிய திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகளை எவரும் மறக்க முடியாது.

உலகத்தவர்களுக்கு அச்சாணியாகிய உழவே இம்மாவட்டத்தின் முதன்மைத் தொழில். நெல், கரும்பு, வாழை முதலிய நன்செய் பயிர்களும், மணிலா, முந்திரி ஆகிய பணப் பயிர்களும் இம் மாவட்டத்தில் விளைகின்ற முக்கியப் பயிர்களாகும். பண்ருட்டியில் விளையும் இன்சுவைப் பலாவின் அருமை அனைவருக்கும் தெரிந்ததாகும். பையேந்தி நிற்கும் பணக்கார நாடுகள் இம் மாவட்ட முந்திரிக்குக் கையேந்தி நிற்கின்றன. இங்கிருந்து முந்திரி அமெரிக்கா, ஜெர்மனி, ஆஸ்திரேலியா, ஹாங்காங், சிங்கப்பூர், துபாய், சவூதி ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. மலை நிலங்களை விட இம்மாவட்டத்தில் விளை நிலங்களே மிகுதியானவை.



தொழில் துறையில், நெய்வேலி நிலக்கரி நிறுவனம் இம்மாவட்டத்தின் சிறப்புக்குச் சான்றாகும். இங்கு உற்பத்தி செய்யப்படும் அனல் மின்சாரம் நாட்டின் இருளை நீக்குகிறது. இம்மாவட்டத்தில் பல இடங்களில் கனிம வளங்களும், பெட்ரோல் போன்ற எரிசக்திகளும் மண்ணுக்குள் புதைந்து கிடக்கின்றன.







ஆங்கிலேயர் காலத்தில் தொடங்கப் பெற்று இன்று வரை இயங்கும் நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையும், அதன் பின் பல சர்க்கரை ஆலைகளும் இம்மாவட்டத்தில் அமைந்துள்ளன. கடலூருக்கு அண்மையிலுள்ள சிப்காட் தொழிற்பேட்டையில் பல வேதியல் தொழில் கூடங்கள் விண்ணுயரக் காட்சி தருகின்றன. பல சிறுதொழில்களும் இம்மாவட்டத்தில் சிறப்புற நடைபெற்று வருகின்றன.

சமூக அடிப்படையில், இம்மாவட்டத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். எனினும் கற்றறிந்த சான்றோர் இம்மாவட்டத்தில் அதிகம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். கி.பி. 1822-இல் சர் தாமஸ் மன்றோ அவர்கள் தலைமையில் அமைக்கப் பெற்ற, கற்றவர் தொகைக் கணக்கெடுப்புக் குழு, தென்னார்க்காடு மாவட்டத்திலேயே கற்றவர் அதிகம் என ஆய்ந்து அறிவித்தது. 1879-இல் டவுன் காலேஜ் (Town College) என்ற அரசு கல்லூரியும், 1884-இல் புனித ஜோசப் கல்லூரி என்ற தனியார் கல்லூரியும், இங்கு விளங்கி பின் மறைந்து விட்டன. சாதியும், சமயமும் பொய் என ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ் சோதி கண்ட வள்ளலாரிடம் குன்றாத பற்றுக் கொண்ட ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் இந்த மாவட்டத்தில் தோன்றிய சன்மார்க்க அன்பர். இவர் தமிழகத்தின் முதல் முதலமைச்சராக விளங்கித் தொண்டாற்றியவர். பிற்படுத்தப்பட்ட சமூக வழிகாட்டியான திரு எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியார் இங்கு தோன்றி அரசியல் தொண்டாற்றியவர். இதன் காரணமாகவே, விழுப்புரத்தைத் தலைநகரமாகக் கொண்ட புதிய மாவட்டத்திற்கு இவரது பெயர் வைக்கப்பட்டுள்ளது. பல தாழ்த்தப்பட்ட இனத் தலைவர்களும் இங்கு தோன்றியவர்கள். கல்வி, கள்ளுண்ணாமை இவற்றை வலியுறுத்திய ஆதனூர் நந்தனாரும், தில்லையில் வாழ்ந்த சீர்திருத்தச் செம்மல் சுவாமி சகஜாநந்தாவும் இம்மாவட்டத்தில் போற்றத்தக்கவர்கள். இம்மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையில் வாழும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியவர்களின் மேம்பாட்டிற்காகப் பல வழிகளில் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது. 13.23 இலட்சம் ஆதிதிராவிடர்களில் 20,000 ஆதிதிராவிடர் குடும்பங்கள் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பயன் அடைந்து வருகின்றனர்.



இம்மாவட்டம் வரலாறு, சமயம், கல்வி, உழவுத் தொழில், வாணிபம் எனப் பல துறைகளிலும் மேம்பட்டு விளங்குகிறது. இம்மாவட்டத்தில் தான் அக இருளை நீக்கி ஒளி வழி காட்டிய வள்ளலார் வாழ்ந்த வடலூரும், புற இருளை நீக்கி மின் ஒளி வழங்கும் நெய்வேலியும் அருகருகே உள்ளன. சிதம்பரம், திருக்கோயிலூர், திருவெண்ணெய்நல்லூர், திருப்பாதிரிப்புலியூர், திருவந்திபுரம் முதலிய திருத்தலங்கள் இம்மாவட்டத்தில் அமைந்துள்ளன. பண்ணார் தமிழ் வளர்த்த அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இம்மாவட்டத்தில் உள்ள சிதம்பரத்தில் அமைந்து கல்விப் பணியாற்றுவதில் முதலிடம் வகிக்கிறது. இம்மாவட்டத்தில் திண்டிவனத்திலிருந்து திருவண்ணாமலை மார்க்கத்தில் 25 கி.மீ. தொலைவில் எழுந்து நிற்கும் மலை மீது விண் தொட நிமிர்ந்து நிற்கின்ற 700 ஆண்டுகளுக்கு முந்தைய ராஜா



ராபர்ட் கிளைவ் இல்லம்

தேசிங்கு ஆண்ட செஞ்சிக் கோட்டை இன்னும் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கின்றது.

இவ்வாறு பல வகைகளிலும் சிறப்பும், உயர்வும் பெற்ற இம்மாவட்டம் இப்பொழுது நிர்வாக வசதிக்காகவும், மக்கள் நலனுக்காகவும் இரண்டுமாவட்டங்களாகப்பிரிக்கப்பட்டு ஒன்று கடலூரைத் தலைமையிடமாகக் கொண்ட தென்னார்க்காடு-வள்ளலார் மாவட்டம் எனவும், மற்றொன்று விழுப்புரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட ராமசாமிப் படையாட்சியார் மாவட்டம் எனவும் பெயரிட்டு அழைக்கப்படுகிறது.

தென்னார்க்காடு-வள்ளலார் மாவட்டம்

'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடியவர் வள்ளலார். அருட்பெருஞ்சோதி தனிப் பெருங் கருணை' எனும் அற்புதத் தத்துவத்தை உலகுக்கு வழங்கியவர் வள்ளல் பெருந்தகை. என்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கம் என்ற அடிகளாரின் சமரச சுத்த சன்மார்க்க சங்கம், சத்திய தருமச் சாலை, சத்திய ஞான சபை, சித்தி வளாகத் திருமாளிகை ஆகியவற்றை அன்பர்கள் ஈடேற அளித்துச் சென்றுள்ளார். சமய, சமுதாயச் சீர் திருத்தவாதியாக அறநெறி காட்டிய அடிகளாரின் பெயரை, கடலூரைத் தலைநகரமாகக் கொண்ட தென்னார்க்காடு மாவட்டத்திற்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் சூட்டி முறச் சூட்டியுள்ளார்.

விழுப்புரம்-ராமசாமிப் படையாட்சியார் மாவட்டம்

சமுதாயத்தில் சிறப்புறப் பணியாற்றிய சான்றோர்களின் பெயர்களைப் பல இடங்களுக்குச் சூட்டி மகிழும் மரபு நாம் நன்கறிந்ததாகும். அந்த அடிப்படையில் பல மாவட்டங்களுக்குப் பெயர் சூட்டி உள்ளோம். இம்மாவட்டத்தில் கடலூருக்கு அருகில் உள்ள சூரப்ப நாயக்கன்சாவடி என்ற ஊரைச் சார்ந்தவர் மதிப்பிற்குரிய எஸ்.எஸ். ராமசாமிப் படையாட்சியார் ஆவார். பிற்பட்ட சமுதாயத்திற்கு வழிகாட்டியாகவும், சமூகப் பணிகளின் முன்னோடியாகவும், தமிழக அரசின் அமைச்சராகவும் விளங்கியவர். நாட்டு முன்னேற்றத்திற்குப் பெரிதும் உழைத்தவர்.

ராமசாமிப் படையாட்சியார் மாவட்டம் என்று பெயர் சூட்ட பதினெட்டு வன்னியர் மன்றப் பிரதிநிதிகளும், தென்னார்க்காடு மாவட்ட 14 சட்டமன்ற உறுப்பினர்களும் மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு எம்.ஆனந்தன் அவர்கள் தலைமையில், மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அம்மாவை களைச் சந்தித்துக் கேட்டுக் கொண்டனர். மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் மகிழ்வுடன் அதனை ஏற்று அவ்வாறே பெயர் சூட்ட இன்று செயல்படுத்தியுள்ளார்கள்.

இந்த மாவட்ட மக்களின் நீண்ட காலக் கனவு நனவாகும் வகையில், மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள், இதனை இரண்டாகப் பிரித்து தென்னார்க்காடு-வள்ளலார் மாவட்டம் எனவும், விழுப்புரம்-ராமசாமிப் படையாட்சியார் மாவட்டம் எனவும் பொலிவுடன் சூட்டி தமிழக மக்களின் நெஞ்சங்களை எல்லாம் மகிழ்வித்தார்.



32 திருக்கோயில்களுக்கு ரூ.1.65 கோடியில் திருப்பணி

மாண்புமிகு முதல்வர் ஆணை

தமிழகத்திலுள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்களைச் சீரான முறையில் நிர்வகிப்பதற்கு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், ''தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரியத்தை'' அமைத்து, பல்வேறு திருக்கோயில்களின் புதிய கட்டுமானப் பணிகள், திருப்பணிகள் மற்றும் ஆலய மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதுபோன்ற ஆலய மேம்பாட்டுப் பணிகளுக்காகக் கடந்த 27.9.1993 அன்று தமிழ்நாட்டிலுள்ள 23 திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்வதற்காக ஒரு கோடியே 70 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்தார் இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தற்போது மேலும், கீழ்க்கண்ட 32 திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்வதற்காக ஒரு கோடியே 65 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.

அ/மி. நீலகண்ட பிள்ளையார் திருக்கோயில், தஞ்சாவூர் மாவட்டம்.

அ/மி. ஆதிகேசவபெருமாள் திருக்கோயில், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர் மாவட்டம்.

அ/மி. வீரடேஸ்வரர் திருக்கோயில், தென் ஆர்க்காடு மாவட்டம்.

அ/மி. சிவகொழுந்தேஸ்வரர் திருக்கோயில், தென்னார்க்காடு மாவட்டம்.

அ/மி. தேவநாதசுவாமி திருக்கோயில், தென் ஆர்க்காடு மாவட்டம்.

அ/மி. சிஷ்டகுருநாதசுவாமி திருக்கோயில், தென்னார்க்காடு மாவட்டம்.

அ/மி. நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி மாவட்டம்.

அ/மி.சந்திரசூடேஸ்வரர் திருக்கோயில், தர்மபுரி மாவட்டம்.

அ/மி. பொன்னேஸ்வரசுவாமி திருக்கோயில், தர்மபுரி மாவட்டம்.

அ/மி. மாரியம்மன் காளியம்மன் திருக்கோயில், சேலம் மாவட்டம்.

அ/மி. நாகநாதசுவாமி திருக்கோயில், புதுக்கோட்டை மாவட்டம்.

இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாக அமைப்பு பற்றி நான் சில விளக்கங்களைக் கூற விரும்புகின்றேன். இத்துறையின் ஆளுகைக்கு உட்பட்ட திருக்கோயில்கள், மடங்கள் குறிப்பிட்ட அறக்கட்டளைகள் மற்றும் சமண மத அறநிலையங்கள் ஆகியவைகள் மொத்தம் 35,150 ஆகும்.

இத்துறை 8 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் ஒரு துணை ஆணையர் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகிறது. மேலும், இம் மண்டலங்கள் 17 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு கோட்டமும் ஓர் உதவி ஆணையரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்றது. தற்போது நம் மாநிலம், நிர்வாக வசதிக்காக 21 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு இயங்கி வருகின்றது. மாவட்டங்களுடைய எண்ணிக்கை அதிகரித்த போதிலும் மாநிலம் முழுவதிலும் அறநிலையத் துறையைப் பொறுத்தவரை 8 மண்டலங்களாகவே இயங்கி வருகின்றன.

அத்துடன் சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமாக, ஏராளமான சொத்துக்கள் உள்ளன. அவற்றின் விலை மதிப்பும் தற்போது மிகவும் உயர்ந்து உள்ளது. அவற்றை உரிய முறையில் பயன்படுத்தி வருமானத்தைப் பெருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இக்காரணங்களை முன்னிட்டு சென்னை, சேலம் மண்டலங்களில் இருந்து சில பகுதிகளைப் பிரித்து வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மண்டலமும், அதேபோன்று மதுரை மண்டலத்தை 2 ஆகப் பிரித்து பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டத் தில் சிவகெங்கையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மண்டலமும் அமைக்கப்படும்.

இந்த 8 மண்டலங்களில் குறிப்பாக, சென்னை, சேலம், மதுரை போன்ற 3 மண்டலங்களில் திருக்கோயில்களுக்குச் சொந்தமான விலை மதிப்புள்ள நகர்ப்புற நிலங்கள் இருக்கின்றன. அங்கே நிர்வாகப் பணிகள் அதிகரித்துள்ளன. ஆலயங்கள் குறித்த வழக்குகளும் அதிகமான அளவுக்கு நிலுவையில் உள்ளன. மதுரை, சென்னை மண்டலங்களில் புகழ்பெற்ற, முக்கியத் துவம் வாய்ந்த திருக்கோயில்கள் பல உள்ளன. நாளுக்கு நாள் வருமானம் அக்கோயில்களில் பெருகி வருகிறது.

—'புரட்சித்தலைவியின் முழக்கம்' என்னும் நூலிலிருந்து.

அ/மி. தியாகராஜாசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர், சென்னை.

அ/மி. தர்மராஜா திரௌபதியம்மன் திருக்கோயில், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்.

அ/மி. அம்மன் பெருமாள் திருக்கோயில், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்.

அ/மி. லஷ்மி நாராயணப்பெருமாள் திருக்கோயில், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்.

அ/மி. தண்டபாணிசுவாமி திருக்கோயில், வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம்

அ/மி. ஆகாசமாரியம்மன் திருக்கோயில், தஞ்சாவூர் மாவட்டம்.

அ/மி. சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்.

அ/மி. ஆதிகேசவபெருமாள் திருக்கோயில், கன்னியாகுமரி மாவட்டம்.

அ/மி. மாரியம்மன் திருக்கோயில், திருச்சி மாவட்டம்.

அ/மி. மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை மாவட்டம்.

அ/மி. சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், கோயம்புத்தூர் மாவட்டம்.

அ/மி. தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்.

அ/மி. கொங்காளியம்மன் திருக்கோயில், பெரியார் மாவட்டம்.

அ/மி. மதுரைவீரன் மாரியம்மன் திருக்கோயில், சேலம் மாவட்டம்.

அ/மி. சித்தநாத சிவன் திருக்கோயில், தஞ்சாவூர் மாவட்டம்.

அ/மி. மருந்தீஸ்வரர் திருக்கோயில், திருவான்மியூர், சென்னை.

அ/மி. மாகாளியம்மன் திருக்கோயில், தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டம்.

அ/மி. பன்னன்-குரந்தாதையா ஐயனார் திருக்கோயில், புதுக்கோட்டை மாவட்டம்.

அ/மி. நாகநாதசுவாமி திருக்கோயில், திருச்சி மாவட்டம்.

அ/மி. ஸ்ரீ கந்தசாமி திருக்கோயில், சேலம் மாவட்டம்.

அ/மி. கைலாசநாதசுவாமி திருக்கோயில், திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்.

மகாகவி பாரதியார் நினைவில்லம் திறப்புவிழா

சென்னையில், கடைசிக் காலத்தில் மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லம் தமிழ்நாடு அரசால் நினைவுச் சின்னம் ஆக்கப்பட்டது. 2.10.93 அன்று, திருவல்லிக்கேணியில் உள்ள துளசிங்கப் பெருமாள் கோயில் தெருவில் இருக்கும் அந்த வீட்டை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்.

விழா நாளன்று காலை 10.30 மணியளவில், இவ்விழாவில் பங்கேற்க வருகை தந்த முதல்வர் அவர்களுக்கு அவ்வீட்டின் எதிரே உள்ள அருள்மிகு பார்த்தசாரதி கோயில் வாயிலில் பூரணகும்ப மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதன்பின், மங்கல இசை முழங்க தேசியகவி பாரதியார் வாழ்ந்த இல்லத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகை தந்தார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரும், மாண்புமிகு தமிழக அரசு அமைச்சர் பெருமக்களும் செய்தித்துறைச் செயலாளர் திருமதி சி.கே. கரியாலி,இயக்குநர் திரு. இரா. சம்பத் ஆகியோரும் மற்றும் உயர் அதிகாரிகளும் அவரை மலர்ச்செண்டு வழங்கியும், பொன்னாடை அளித்தும் வரவேற்றார்கள்.

அவ்வில்லத்தின் முன் திரண்டிருந்த மக்கள் ''பாரதி புகழ் ஓங்குக''.. ''பாரதி கண்ட புதுமைப் பெண் புரட்சித்தலைவி வாழ்க'' என்றெல்லாம் வாழ்த்தொலி முழக்கினர்.

மகாகவி பாரதியார் நினைவில்லத்தைத் திறந்துவைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், உள்ளே அமைக்கப் பட்டிருந்த தேசியகவி பாரதியார் திருவுருவச் சிலைக்கு மாலையணிவித்தார். திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினார்.

சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாரியத் தலைவர்கள், அரசு உயர் அதிகாரிகள் இந்த விழாவிற்கு வந்திருந்தனர்.

இந்த விழாவின்போது, மகாகவி பாரதியார் குடும்பத்தினர் மாண்புமிகு முதல்வருக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டனர். அவர்கள், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்குப் பொன்னாடை வழங்கி மரியாதை செய்தனர்.

பாரதி இல்லம்: சில நினைவுகள் - விவரங்கள்

இந்தியா, அடிமை விலங் கறுக்கும் ஆவேசம் கொண்டிருந்த காலத்தில் - எழுச்சி பொங்கும் தம் ஏற்றமிகு கவிதைகளாலே, அந்தக் கனல் அடங்காமல் காத்துப் பெருமை கொண்ட தேசியக் கவிஞர்- மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஆவார்.

பிறந்த நாட்டைத் தாய்நாடு என்பதுதான் உலக வழக்கு; அந் நிலை மாற்றி 'தந்தையர் நாடு' என்று கூறியும் சிறப்பித்தவர் இவர். பாப்பா பாட்டுப் பாடிய இந்த முறுக்கு மீசை முண்டாசுக் கவிஞர், தாலாட்டுப் பாட்டுப் பாடி னாரில்லை; ஏனென்றால், அவர் வாழ்ந்த காலம்- கண்துஞ்சாது பசிநோக்காது, அவரவரும் விடுதலை வேட்கை கொண்டிருந்த காலம்; சுதந்திரச் சூறாவளி வீசிய காலம்.

'வள்ளுவன் தன்னை உல கினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாடியவர் பாரதி; இவரைத் தமிழகத்திற்குத் தந்து தனிப்புகழ் பெற்றது எட்டயபுரம். பிறந்தநாள் - 11.12.1882. பெற்றோர் - சின்னசாமி, இலட்சுமியம்மாள். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் - சுப்பிர மணியன்; செல்லமாக அழைத்த பெயர் - சுப்பையா. பைந்தமிழ்க் கவித் திறத்தாலே - பதினோராம் வயதிலேயே எட்டயபுரம் சமஸ்தான மன்னரால் இடப்பட்ட விருதுப் பெயர் - பாரதியார்.-இளமையிலே, இவருக்கு வாய்ந்த அன்பு மனை யாளின் பெயர் செல்லம்மாள்.

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்னாலேயே - 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே, ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று ஆடுவோமே பள்ளுப் பாடு வோமே' என்று ஆனந்தக் கூத் தாடிய இந்த மகா கவிஞனை - ஆங்கிலேயர் தம் கொள்ளிக் கண்

களால் குறிவைத்தனர்.

அதன் விளைவு? பிரெஞ்சுக் காரர்கள் ஆளுகையிலிருந்த புதுவைக்குப் பறந்தது இந்த புரட்சிப் புயல்; தொல்லை துயரங்கள் தொடர்கதையாயின.

அல்லல் நீங்கி, தமிழகம் திரும்பிய அவர் இந்தச் சென்னை மாநகருக்கு வந்து சேர்ந்தார். தம்புச் செட்டித் தெரு, மயிலாப்பூர் சித்திரக் குளம் கிழக்குத் தெரு - தெற்குத் தெரு, வீரராகவ முதலித்தெரு, வீரசாமி முதலி தெரு சைதாப்பேட்டை, முத்தியாலுப்பேட்டை, வேப்பேரி என இந்த சுதந்திரக் கவிஞனின் 'ஜாகை' அடிக்கடி இடம் மாறிக் கொண்டிருந்தது.

இந்தியா, விஜயா, கர்மயோகி, சக்ரவர்த்தினி - போன்ற ஏடுகளில் அந்த அற்புதக் கவிஞனின் எழுத்தோவியங்கள் இடம் பெறலாயின. 1904-ல் சுதேசமித்திரனில் பணியாற்றத் தொடங்கினார் பாரதி. திருவல்லிக்கேணியில் பார்த்தசாரதி கோயிலுக்குப் பின்புறம் உள்ள துளசிங்கப்பெருமாள் கோயில் தெருவில், 1920-ஆம் ஆண்டில் திரு குவளைக்கண்ணன் என்பார் மூலம் ஒரு வீட்டில் வாடகைக்குக் குடியிருந்தார் பாரதியார். அப்போது அந்த வீட்டின் கதவு எண்.67. இப்போது அந்த வீட்டின் கதவு எண்.83 ஆகும்.

அந்த வீடுதான் - இப்போது தமிழ்நாடு அரசு முறைப்படி கையகப்படுத்தி மகாகவி பாரதியின் நினைவில்லம் ஆக்கியுள்ள இல்லமாகும். பாரதியார் சென்னையில் தம் கடைசிக் காலத்திலே வாழ்ந்த வீடு இதுதான். சிலகால இடைவெளிக்குப் பின், அப்போதும் 'சுதேசமித்திரனில்' பணியாற்றிக் கொண்டிருந்தார் பாரதியார். அந்தப் பிறவிக் கவிஞனின் புகழ் பெற்ற பல கவிதைகள் இங்கிருந்த போதுதான் பாடப்பட்டன; பெரும் புகழ் பெற்றன.

1921-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ஆம் நாளன்று இரவு 1.30-க்கு மாண்டு போனார் அந்தத் தேசியக் கவிஞர்; 'காலா, உனைச் சிறு புல்லென மதிக்கிறேன் - என்றன் காலருகே வாடா சற்றே உனை மிதிக்கிறேன்' - என நெஞ்சுயர்த்திப் பாடிய அந்தப் பாட்டுக் குயிலின் உயிர் பிரிந்தது.

தங்கம்மாள், சகுந்தலா என்கிற இரண்டு பெண்மக்களை மட்டுமே பெற்றிருந்த அவருக்கு அப்போது 38 வயது 9 மாதங்கள் மட்டுமே நிறைவடைந்திருந்தது.

தமிழால் பாரதி தகுதி பெற்றார்; தமிழ், பாரதியால் தகுதி பெற்றது என்பது உண்மை - வெறும் புகழ்ச்சியில்லை.

சென்னை திருவல்லிக்கேணியில் துளசிங்கப் பெருமாள் கோவில் தெருவில் உள்ள இல்லத்திலே பாரதியார் வாழ்ந்தார் என்றோமல்லவா? பின்பு, இந்த இல்லத்தை எம்.எஸ். சான்ஜ்ஜெட்டி என்பவர் வாங்கி நவீன கட்டிடக் கலையுடன் தனது எண்ணம்போல மாற்றி அமைத்திருந்தார்.

இந்த வீட்டைத் தமிழக அரசு 1983-இல் ரூ.3 இலட்சம் செலவில் வாங்கிக் கையகப்படுத்தியது. பின்னர் அரசு ஆணை எண். 329 செய்தி மற்றும் சுற்றுலாத் (எம் & ஏ) துறை நாள்: 31.12.91-இல் பழைய கட்டடக் கலையுடன் சீரமைத்துப் புதுப்பிக்க ரூ.5,00,000/- வழங்கியது.

பாரதியார் வாழ்ந்த இல்லம் பழைய கட்டடக் கலையுடன் கூடிய நிழற்பட உதவியுடன், முகப்பு வேலைகள் கைதேர்ந்த சிற்பிகள் மூலம் மீண்டும் பழையபடியே புதுப்பிக்கப்பட்டது. இந்த இல்லத்தில் கீழ்த்தளம், முதல்மாடி மற்றும் கூரைத்தளத்தில் சிறப்புப் பழுது வேலைகள் செய்யப்பட்டன.

இந்த இல்லம் கீழ்த்தளம் மற்றும் ஒரு மேல்தளத்துடன் உள்ளது. கீழ்த்தளத்தின் முகப்புவராந்தாவில் பழைய கட்டடக் கலைக்கு ஒப்பாகக் கருப்பு நிறத் தரைக்கற்கள் பதிக்கப் பட்டுவிட்டன.

மத்திய அறையில் பாரதியார் அவர்களுடைய மார்பு அளவுச் சிலை, பளிங்குக் கற்கள் பதித்த பீடத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ளது.

கீழ்த்தளத்தின் பின்புறத்தில் 378 ச.மீ. திறந்தவெளி இ[illegible] உள்ளது. இதில் 8 மீட்டர் தீவி[illegible] மீட்டர் அகலத்தில் ஒரு [illegible] அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த இல்லத்தி[illegible] மாநகராட்சி குடிநீர் இணைப்[illegible] கொடுக்கப்பட்டுள்ளது. குடி [illegible] ஊரைச் சேமிப்பதற்கு ஒரு [illegible] நிலைத்தொட்டியும் அமைக்க[illegible] பட்டுள்ளது.

இந்த இல்லத்தின் கீழ்த்தளப் பரப்பளவு 294 ச.மீ. மேல்தளப் பரப்பளவு 294 ச.மீ. ஆகும்.

இக்கட்டுமானப் பணி அக்டோப[illegible] திங்கள் 1992-இல் துவக்கப்பட்[illegible] மே திங்கள் 1993-இல் முடிக்க[illegible] பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்[illegible] புரட்சித்தலைவி டாக்[illegible] ஜெ. ஜெயலலிதா அவர்கள் மகாகவி பாரதியின் நினைவாக இவ்வில்லத்தைத்தம்பொற்கரங்களால் திறந்து வைத்தார்.

—பி.எல். ராஜேந்தி[illegible]

அண்ணா போற்றிய பெருமக்கள்

பாரதியார் நாட்டு மக்கள், முதலில் தங்கள் [illegible]க்கத்தை அடித்துத் துரத்த வேண்டும் என்று [illegible]யார். தாழ்வு மனப்பான்மையைத் தூவென்று உதறித் தள்ள வேண்டும் என்று தூண்டினார். மக்கள் மனத்திலே நம்பிக்கையையும் துணிச்சலையும் விதைத்தார். அவர்களுள் மறைந்து கிடக்கும் மாபெரும் ஆற்றலைப் புலப்படுத்தினார். அந்த மாப்புகழ் வலிமை எவ்வாறு வீணாகிறது - மக்களின் தூங்குமூஞ்சித் தன்மை, அறியாமை, மூட நம்பிக்கைகள், தாழ்வு மனப்பான்மை, சாதி வெறி ஆகியவற்றின் காரணமாக எவ்வளவு தீமை விளைகிறது - என்பதை விளக்கினார்.

சிந்தனைத் தெளிவுடன் பாரதி நிலைமையை ஆராய்ந்தார். நாட்டில் நடமாடும் தீமைகளை வேரோடு கல்லி எறிய முனைந்தார். மக்கள் நலனில் அக்கறை கொண்ட 'மக்கள் கவிஞரை'த் தவிர, யாரும் அவ்வளவு முயற்சி எடுத்திருக்க [illegible]டியாது.

மூத்தோர் சொல்

சாதனை புரியும் புத்தகங்[illegible]

புத்தகங்களும் மனிதர்[illegible] போலவே சாதனை புரிகி[illegible] மிகப் பெரும் காரியங்களை [illegible] சில புத்தகங்கள் சாதித்து [illegible]கின்றன. மிகப் பல புத்தக[illegible] போன இடம் தெரியாமல் [illegible] விடுகின்றன.

- வால்[illegible]

மனதுக்குப் பிடித்த புத்த[illegible]

என் மனதுக்குப் பிடித்த [illegible]கங்களை மட்டும் [illegible] கொடுத்து என்னை [illegible] முழுவதும் சிறைப்படுத்தி[illegible] வருத்தப்பட மாட்டேன்.



கட்டவிழ்த்து விட்டனர். அப்பாவி மக்கள் ஆங்கிலேயர்களின் துப்பாக்கிக்குஇரையாகும்துர்பாக்கிய நிலைக்கு ஆளாகினர்.

ஆனால், அன்று உருவாகிய இந்த விடுதலை முழக்கத் தோட்டாக்கள், 5 ஆண்டுக் காலத்தில் பாரத மாதாவின் அடிமை விலங்குகளை உடைத்தெறிந்தன.

நாம் விடுதலை அடைந்தோம். அதன் பயனாகவே - நமக்குச் சுதந்திரக் காற்றில் சுவாசம் - அந்நியரிடமிருந்து தனித்து வாசம் என்ற நிலை கிடைத்தது.

வெள்ளையனே வெளியேறு இயக்கம் தொடங்கி 50 ஆண்டுகள் நிறைவடைந்திருக்கின்றன. இந்தப் பொன் விழாக்காணும் இந்தியப் புரட்சியினை நன்றியுணர்வோடு நினைவு கூரும் வகையில், வெள்ளையனே வெளியேறு இயக்கப் பொன் விழாவினை இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு மிகச் சிறப்பாக தமிழகத்தில் நடத்திட, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டதின் விளைவாக, [illegible] ஆண்டு நடைபெற்ற பொன் [illegible] பல்வேறு மாவட்டங்களில் இருந்து வருகை தந்த விடுதலைப் போராட்ட வீரர்களுக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவித்தும், சுதந்திரப்போராட்ட வீரர்களின் ஓய்வூதியத் தொகையினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெருமளவு உயர்த்தி வழங்கினார். சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகத்தைப் போற்றிடும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ''வெள்ளையனே வெளியேறு இயக்கப்'' பொன் விழா நினைவுத்தூண் அமைக்க அடிக்கல் நாட்டினார். ரூ.3 இலட்சம் செலவில் வடிவமைக்கப்பட்ட இந்த நினைவுத்தூண், 'அடிமைத்தனம் எனும் இருளிலே அமிழ்ந்து கிடந்த நாடு, விடுதலை எனும் விடியலை நோக்கி சிறகடித்துப் பறக்கும் விதமாக மிக அழகிய முறையில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

இந்த 'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன்விழா நினைவுத்தூண் திறப்பு விழா, அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளான 2.10.93 அன்று சென்னை கிண்டி காந்தி மண்டபவளாகத்தில் இனிதே நடந்தேறியது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மேடையில் வைக்கப்பட்டிருந்த விசையை இயக்கி, நினைவுத்தூணைத் திறந்து வைத்தார்.

மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள், நினைவுப்பரிசை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வழங்கினார்.

விழாவில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், வாரியத்தலைவர்கள், சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் தியாகிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

'வெள்ளையனே வெளியேறு' என்று முழங்கி நம்மையெல்லாம் சுதந்திரக்காற்றைச் சுவாசிக்கச்செய்த மாபெரும் தலைவர்களெல்லாம் இவ்வையகத்தைவிட்டு வெளியேறிவிட்டாலும், அவர்கள் நம்மிடையே விட்டுச் சென்ற தன்னலம் கருதாப்பணி, தியாக உணர்வு மற்றும் 'தேசப்பற்று' போன்ற உணர்வுகள் நம்மை விட்டு வெளியேறாமல் கட்டிக் காப்போமாக!

அண்ணல் காந்தியடிகளின் 125-வது பிறந்த நாள் விழா

அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளான 2.10.93 அன்று, சென்னை மெரீனா கடற்கரையிலுள்ள காந்தியடிகளின் திருவுருவச்சிலை, பிரமாண்டமான மேடையில் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு அழகுறக் காட்சியளித்தது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், காலை 10 மணி அளவில் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து வணங்கினார்.

அவரைத் தொடர்ந்து, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் சேடபட்டி முத்தையா, மற்றும் அனைத்து அமைச்சர் பெருமக்கள், வாரியத் தலைவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினார்கள்.

பின்னர், அன்று மாலை காந்தி அடிகளின் 125-வது பிறந்த தின விழா, தமிழக அரசு சார்பில் சென்னை கிண்டி காந்தி மண்டபத்தில் மிகச் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

இந்த விழாவிற்கு மாண்புமிகு சட்டப் பேரவைத்தலைவர் சேடபட்டி முத்தையா அவர்கள் தலைமை வகித்தார். மாண்புமிகு

ஒற்றுமை உணர்வு இருந்தால் எந்த விடுதலையையும் எளிதில் பெற முடியும்!

—மாண்புமிகு முதல்வர்

'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் நடந்து 50 ஆண்டுகள் கடந்துவிட்டன. அன்று தொடங்கிய சுதந்திர வேள்வியின் பலனை, ஐந்தாண்டுகளிலே பெற்று, சுதந்திரக் காற்றை நாம் சுவாசித்து வருகின்றோம். நாடு விடுதலை அடைந்து 44 ஆண்டுகள் ஆயினும், விடுதலைக்கு வித்திட்ட விடுதலைப் போராட்ட வீரர்களை, மறவாமல் நினைவுகூர்கின்றோம். இந்த நின்னைவு நமது இரத்தத்தில், நமது சந்ததியினரின் உதிரத்தில், என்றென்றும் நின்று நிலைபெறத்தக்க, பெருமையும், புகழும் உடைய தனிச்சிறப்புக் கொண்டது.

'வெள்ளையனே வெளியேறு' என்ற வீர முழக்கம், நாடெங்கும் ஒலித்து, அதை அடக்க ஆங்கில ஏகாதிபத்தியம் அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டது. மக்களோடு இராணுவம் மோதியது. நிராயுதபாணியான மக்களைத் துப்பாக்கியால் இராணுவம் சுட்டுப்பொசுக்கியது.

அன்று பற்றி எரிந்த விடுதலைத் தீ, 5 ஆண்டுக்காலத்தில் பாரத மாதாவின் விலங்குகளை உடைத்து, விடுதலை தந்தது. அதன் பயனாகத்தான் இன்று, நம்மை நாமே ஆளும் நிலை ஏற்பட்டு, வல்லமை கொண்டு, வையகம் புகழ வாழுகிறோம்; புதிய வரலாறு படைக்கின்றோம்.

சுதந்திரப் போராட்டமே அரசியலுக்கு அப்பாற்பட்டது. எந்த ஒரு அரசியல் கட்சியும், அந்நியர் ஆட்சிக்கு ஆதரவு தந்ததாகச் சரித்திரம் இல்லை. ஒவ்வொரு கட்சியும் நமது நாட்டில் விடுதலைக்காகப் பல சோதனைகளை எதிர்கொண்டு போராடியுள்ளது.

நாட்டின் விடுதலை, தேசபக்தி கொண்ட ஒவ்வொருவருக்கும் கிடைத்த மாபெரும் வெற்றி ஆகும். ஒவ்வொரு இந்தியருக்கும் இந்த வெற்றி சொந்தமானது. எனவே, எந்த ஒரு தனிப்பட்ட இனத்தினரோ, மதத்தினரோ இடத்தினரோ, [illegible] இதற்குத் தனி உரிமை கொண்டாட இயலாது. அனைவருக்கும் பொதுவான இந்த வெற்றியினை, ஒற்றுமை உணர்வோடு நினைவுகூர்வது, நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

அந்தத் தியாக வேள்வியில், தங்களின் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அளித்தவர்களை, நாம் இதயம் நிறைந்த நன்றியுணர்வோடு, தொடர்ந்து நினைவுகூரவும் கடமைப்பட்டுள்ளோம்.

எதற்காக, எந்த இலட்சியத்திற்காக, அந்த விடுதலை வீரர்களும், வீராங்கனைகளும் போராடினார்களோ அந்த இலட்சியத்தை, அதன் பலனை, நாம் இன்று அனுபவித்து வருகின்றோம்.

அடிமைத்தளை அகன்று, அன்னை நாடு விடுதலை பெற்றுவிட்டது. அரசியல் விடுதலையை அடைந்த நாம், சமூக, பொருளாதார விடுதலை பெற, இன்னும் போராடிக் கொண்டுதான் இருக்கின்றோம்.

அன்று அந்த விடுதலையை, நமக்குப் பெற்றுத் தந்த அதே ஒற்றுமை உணர்வு, இன்று நம்மிடையே நிலவுமானால், நிச்சயமாக எந்த விடுதலையையும் நம்மால் எளிதாகப் பெற முடியும் என்பதை, இத் தருணத்தில் திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆனால், சாதியால், மதத்தால், இனத்தால், இடத்தால் ஏற்படும் சச்சரவுகளால், நமது இலக்குகளை நாம் விரைவில் அடையமுடியாமல் தடுமாறிக் கொண்டுதான் இருக்கிறோம் என்பதை, நாம் மறைக்க முடியாது. இந்த வேறுபாடுகளைக் களைந்து, நாம் அனைவரும் இந்தியத் திருநாட்டின் குடிமக்கள் என்ற ஒற்றுமை உணர்வோடு செயல்பட்டால், நமது வெற்றிகளை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது.

—'புரட்சித்தலைவியின் முழக்கம்'

தொகுதி-2-லிருந்து

'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன்விழா நினைவுத்தூண் திறப்பு விழா

வெள்ளையனே வெளியேறு!...
அன்னல் காந்தியடிகள்
நாட்டு மக்களுக்காக
எழுப்பிய
வீர முழக்கம்...
அன்று முதல்
ஆங்கிலேயர்களுக்கு
ஏற்பட்டதோ பெரும் கலக்கம்!
ஆம்.

இந்தியச் சுதந்திரப் போராட்ட வரலாற்றில் 1942 ஆகஸ்ட் திங்களில் நடந்த தேசிய காங்கிரஸ் மாநாட்டில் எடுத்த முடிவுதான் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்திற்கு வித்திட்டன.

1942 ஆகஸ்ட் திங்கள் 7,8 தேதிகளில் பம்பாய் கவுவாலியா மைதானத்தில் அகில இந்தியக் காங்கிரஸ் கூட்டம் நடந்தது.

இதில் வல்லபாய் படேல், அபுல்கலாம் ஆசாத், சரோஜினிநாயுடு மற்றும் பல முக்கியத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் அண்ணல் காந்தியடிகள் உரையாற்றியபோது, வெள்ளையனே வெளியேறு [illegible] என்றும், "நாம் நமது கடமைகளை செய்ய வேண்டும் அல்லது செத்து மடிய வேண்டும்" என்றும் முழங்கினார். காந்தியடிகளின் தீர்மானத்தை பண்டித நேரு முன்மொழிய, அதனை சர்தார் வல்லபாய் படேல் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

காந்தியடிகளின் இந்த முழக்கம் இடியோசை போல நாடெங்கும் பரவியது. இந்த இடியோசையைக் கேட்ட ஆங்கிலேயர்கள் நாகம் போல் பதறினர். [illegible]

நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா நெடுஞ்செழியன் **அவர்கள்** மற்றும் செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு.தென்னவன் அவர்கள் விழாவில் கலந்து கொண்டனர்.

அடையாறு இசைப்பயிற்சிக் கல்லூரியிலிருந்து, செய்தி-சுற்றுலாத் துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. இரா.சம்பத், இ.ஆ.ப., செய்தி-மக்கள் தொடர்புத் துறை இணை இயக்குநர் திரு. பா. செயப்பிரகாசம் ஆகியோர் உடனிருக்க, மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள் கொடியசைத்து, மாணவ மாணவியர்களின் ஊர்வலத்தைத் தொடங்கி வைத்தார்.

ஊர்வலத்தில் கலந்து கொண்ட மாணவ மாணவியர், மத ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு, சாதி ஒழிப்பு, மதுவிலக்கு போன்ற முழக் கங்கள் தாங்கிய அட்டைகளை ஏந்திக் குரல் எழுப்பியவண்ணம் காந்தி மண்டபத்தை வந்தடைந்தனர்.

பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பரிசுகள் வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

விழாவில் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. துரை. ராமசாமி, மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. ஆர். இந்திரகுமாரி, மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு.தென்னவன், மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கா.ப. பட்டாபிராமன், மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆனந்தன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள்.

முன்னதாக, செய்தி-சுற்றுலாத் துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. இரா. சம்பத்,

உயிரினங்களைப் பாதுகாப்போம்!

அக்டோபர் முதல் வாரம் வனவிலங்கு பாதுகாப்பு வாரமாக அனுசரிக்கப்படுகிறது. உலகில் வாழும் அனைத்து உயிரினங்களும், மனிதகுலம் உள்பட, ஒன்றொடு ஒன்று இயற்கையில் பின்னிப் பிணைந்துள்ளவையே. எனவே, உயிரினங்களைப் பாதுகாப்பது நமது கடமை. நமது சுய நலமும் இதில் உள்ளது. இதனை நினைவுறுத்தும் விதமாகவே வனவிலங்கு பாதுகாப்பு வாரம் அமைந்துள்ளது.

இங்கு இரண்டு சம்பவங்களை நினைவூட்டுவது பொருத்தமாக இருக்கும். சில ஆண்டுகளுக்கு முன்னர் தவளைக்கால் ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்கப்பட்டது. ஏராளமான தவளைகள் கொல்லப்பட்டதால் பூச்சிகள் பெருகி, அவற்றின் தாக்குதலால் தானிய விளைச்சல் பாதிக்கப்பட்டது. பின்னர் தவற்றை உணர்ந்து தவளைக்கால் ஏற்றுமதிக்கான அனுமதி திரும்பப் பெறப்பட்டது. இதேபோல, தோலுக்காகப் பாம்புகள் கொல்லப்பட்டதால், எலிகளின் எண்ணிக்கை பெருகி, தொல்லைகளும் பெருகின. தானிய விளைச்சல் மிகவும் பாதிக்கப்பட்டது.

இயற்கையின் உயிர் மாலையில் ஏதோ ஒரு காரணமாகவே ஒன்றோடு ஒன்று கோக்கப்பட்டுள்ளது. எதாவது ஒரு உயிருக்குச் சேதம் ஏற்பட்டாலும், இறுதியில் பாதிக்கப்படுவது மனிதகுலமே!

பெண்உரிமை காப்பீர்! சமூகநீதி காக்கும் நல்லெண்ணத் தூதுவராய்ச் செயல்படுவீர்!

(பாளையங்கோட்டை, தூத்துக்குடி நகரங்களில் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் திறப்பு விழாக்களில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை)

மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், திருநெல்வேலியில் உள்ள பாளையங்கோட்டையில் மாவட்ட அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் தொடங்கி வைத்தார்.

10.10.93 அன்று காலை 10.30 மணியளவில் அங்கு வந்த அவரை அரசு தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன், உள்துறைச் செயலர் திரு. கே. மலைச்சாமி, காவல்துறை பொது இயக்குநர் திரு. எஸ்.ஸ்ரீபால் ஆகியோர் மலர்ச்செண்டு வழங்கி மகிழ்வோடு வரவேற்றார்கள்.

இதற்கு முன்பாக வெளியே திரண்டிருந்த மக்கள் ''புரட்சித்தலைவி வாழ்க...'' ''எங்கள் முதல்வர் வாழ்க'' என்றெல்லாம் வாழ்த்தொலி முழக்கினார்கள். அவர்களை நோக்கி இன்முகத்தோடு கரமசைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், சிலர் கொடுத்த மனுக்களைத் தாமே பெற்றுக்கொண்டு ஆவன செய்வதாக வாக்குறுதியளித்தார்.

மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் செல்வி தங்கவல்லி தலைமையில், அனைத்து மகளிர் காவலர் அணிவகுப்பு நடத்தினர்.

அம்மரியாதையை முறைப்படி ஏற்றுக் கொண்ட

மாண்புமிகு முதல்வர் அவர்கள்- நெல்லை மாவட்ட அனைத்து மகளிர் காவல் நிலையக் கல்வெட்டறிவிப்பைத் திறந்து வைத்தார். அதன் பின், 'ரிப்பன்' கத்தரித்துவிட்டு உள்ளே சென்ற அவர், காவல் நிலையத்தைப் பார்வையிட்டார்.

குத்து விளக்கு ஏற்றிவைத்தார்.

இதன்பின், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்- அந்நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த பார்வையாளர் குறிப்பேடு புத்தகத்தில் பின்வருமாறு எழுதினார்.

வாழ்த்தும் எதிர்பார்ப்பும்

'மாநில அளவில், திருநெல்வேலி மாவட்டத்தில் 9-வது மகளிர் காவல் நிலையத்தைத் திறந்து வைப்பதில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

'தமிழ்நாட்டில் முதன்முறையாக அனைத்து மகளிர் காவல் நிலையம் சென்ற 1992-ஆம் ஆண்டு ஏப்ரலில் என்னால் தொடங்கி வைக்கப் பட்டது. இத்தகைய மகளிர் காவல் நிலையங்கள் பொதுமக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதும், பயன்பட்டு வருவதும் பாராட்டத்தக்கதாகும். இத்தகைய காவல் நிலையங்கள்- குறிப்பாகப் பெண்களுக்கு நலம் சேர்ப்பவைகளாக அமைந்திருக்கின்றன.

'மகளிர் காவல் நிலையங்கள், உண்மையிலேயே துன்புறுவோரைக் கண்டறிந்து, அவர்களுடைய இன்னல்களை இன்முகத்தோடு கேட்டறிந்து எல்லாருக்கும் நலம் சேர்ப்பவைகளாகச் செயல்பட வேண்டும்.

'இங்கே இருக்கின்ற ஆய்வாளர் (இன்ஸ்பெக்டர்) முதல் காவலர் வரை அனைவருமே நேர்மையான முறையிலே கடமையாற்ற வேண்டும்; மக்களிடம் இவ்வாறு பணிபுரிந்து இங்குள்ளவர்கள் நன்மதிப்பைப் பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை''.

-பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளரிடம், பொது மக்களிடம் நடந்து கொள்ள வேண்டிய விதம்பற்றி அறிவுரை வழங்கினார்.

காவல் நிலைய ஆய்வாளர், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கிச் சிறப்பித்தார்.

தூத்துக்குடியில் அனைத்து மகளிர் காவல் நிலையம்

10.10.93 அன்று மாலை 3.30 மணியளவில், மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தூத்துக்குடி நகருக்கு வந்து சேர்ந்தார். வ.உ.சி. கல்லூரி



திடலில் அவர் பயணம் செய்த ஹெலிகாப்டர் தரையிறங்கியது. அவரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஹேமந்த்குமார் சின்கா, அரசு தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன், காவல்துறை பொது இயக்குநர் திரு. எஸ். ஸ்ரீபால் முதலானோர் வரவேற்றார்கள்.

அங்கே, அனைத்து மகளிர் காவல் நிலையம் திறந்து வைக்க வந்திருந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் விழா நடக்குமிடத்திற்குக் காரில் பயணம் செய்தார். சாலையின் இருமருங்கும் வண்ணச் சீருடையோடு வரிசையுற நின்றிருந்த மாணவ-மாணவிகள், தம் கையிலிருந்த பல வண்ணக் கொடிகளை வனப்புற வீசி மகிழ்ச்சி கரமான வரவேற்புத் தெரிவித்தார்கள்.

அனைத்து மகளிர் காவல் நிலையக் கட்டடத்திற்கு வந்து சேர்ந்த மாண்புமிகு முதல்வரை, எதிரே திரண்டிருந்த ஏராளமான மக்கள் ''தங்கத் தலைவி வாழ்க...'' ''எங்கள் தலைவியே வருக'' ''தமிழக முதல்வர் வாழ்க'' என்றெல்லாம் வாழ்த்தொலி எழுப்பி வரவேற்றார்கள்.

மகளிர் காவல் நிலையத்தின் முன், மகளிர் காவலர் ஆய்வாளர் செல்வி சுதாராணி தலைமையில் மாண்புமிகு முதல்வருக்கு அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

தூத்துக்குடி மகளிர் காவல் நிலையக் கல்வெட்டைத் திறந்து வைத்தபின், வாயிலில் கட்டப்பட்டிருந்த வண்ண 'ரிப்பனை' பலத்த கைத்தட்டலுக்கிடையே வெட்டியபின் உட்புகுந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், உவகையோடு குத்து விளக்கை ஏற்றி வைத்தார். சுற்றிப் அங்கிந்த பார்வையாளர் ஏட்டில் குறிப் பெழுதினார்.

அதன்பின் மகளிர் காவல் நிலைய ஆய்வாளர்- மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினார்.

காவல் நிலையத்தின் அருகே அமைக்கப்பட்டிருந்த அழகிய மேடைக்கு வந்தார் மாண்புமிகு முதல்வர்; மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு. டி.வி. நடேசன் பால்ராஜ், அரசு தலைமைச் செயலாளர், காவல் துறை பொது இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் உடன்வந்தார்கள்.

'எங்கள் இதய தெய்வமே வருக...' 'தர்மத்தாயே வருக' என்ற வாசகங்களோடு விழா மேடையருகே வரவேற்புத் தட்டிகள் கட்டப்பட்டிருந்தன

வரவேற்புரை

காவல் துறை பொது இயக்குநர் திரு. எஸ். ஸ்ரீபால், வரவேற்புரையாற்றுகையில்- ''சுதந்திர இந்தியாவில்- நல்ல பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி, மக்களின் மகத்தான ஆதரவைப் பெறுபவராக நமது முதல்வர் புரட்சித்தலைவி அவர்களே விளங்கி வருகிறார். சட்டம் ஒழுங்கு மற்றவர்களுக்கு மட்டுமல்ல; அதைக் கட்டிக் காக்கும் காவல் துறையினருக்கும் பொருந்தும் என்பதை வலியுறுத்தும் அவர்களை இவ்விழா மேடையில் வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்'' என்றார்.

-இதையடுத்து மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்.



விழா முடிவில்- காவல்துறை துணைத்தலைவர் (டி.ஐ.ஜி) திரு. தினமணி அவர்கள் நன்றி கூறுகையில்- ''தம்முடைய ஓய்வற்ற உழைப்பிற்கு இடையிலும், எங்கள் அழைப்பை ஏற்று இங்கே வருகைதந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மற்ற அமைச்சர் பெருமக்களுக்கும், உயர் அதிகாரிகளுக்கும், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், பொதுமக்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்; இப்பகுதி மக்கள் இந்தக் காவல் நிலையத்தை நன்முறையில் பயன் படுத்திக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்'' என்றார்.

சிதம்பரனார் மாவட்ட அனைத்து மகளிர் காவல் நிலையம் தொடக்க விழா - முதல்வர் உரை

சிதம்பரனார் மாவட்டத்திற்கான, 'அனைத்து மகளிர் காவல் நிலையத்தை' - தூத்துக்குடி நகரில் துவக்கி வைத்து, உங்களையெல்லாம் நேரில் சந்திப்பதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். சென்ற ஆண்டு மழையாலும், வெள்ளத்தாலும், இந்தப் பகுதி பாதிக்கப்பட்டிருந்த போது, வெள்ள நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட்டு, பாதிக்கப்பட்டிருந்த மக்களை நேரில் கண்டு, ஆறுதல் கூறிட ஓடோடி வந்தேன்.

ஆனால் இன்று ஒரு மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில், அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் திறந்து வைத்து, மலர்ந்த முகத்துடன் கூடி இருக்கின்ற இம்மாவட்டத்து மக்களாகிய உங்களையெல்லாம் மன மகிழ்ச்சியுடனும், மன நிம்மதியுடனும் சந்திப்பதில், உண்மையிலேயே என் மனம் பூரிப்பு அடைகின்றது.

என்னுடைய மனவேதனை!

உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு, மகளிரின்

ஊனமுற்றவரின் உவகை!

தூத்துக்குடியில், அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் திறந்து வைக்க வருகை தந்தார் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்.

விழா மேடையில், சிறப்புரை நிகழ்த்தி முடித்த அவரிடம்- பொதுமக்கள் தம்முடைய மனுக்களை அளித்த அனுமதிக்கப்பட்டனர். கால்கள் ஊனமுற்ற ஓர் இளைஞர் முதலாவதாகத் தமது மனுவை அளித்தார்; கொடுத்துவிட்டு உடனே திரும்பிய அவனை ''கொஞ்சம் பொறுடா தம்பி'' என்ற முதல்வர்- புகைப்படக்காரர்களைப் பார்த்துப் புன்னகையுடன் ''இவனை ஒரு படம் எடுத்துக்குங்க'' என்றார்.

அவ்வளவுதான், உவகை பெருக உணர்ச்சிமயமாகி விட்டான் அந்தச் சிறுவன். படம் எடுக்கப்பட்ட மறுவினாடியே, அவனுக்குத் தனது ஊனம் மறந்து போயிருக்க வேண்டும். ஊன்றுகோலோடு, மேடையை விட்டுக் கீழே அப்படியே குதித்தானே பார்க்கலாம்- அருகே நின்ற காவலர் ஒருவர் பாய்ந்து பிடித்து அவனை அடிபடாமல் காப்பாற்றினார்!



மேம்பாட்டிற்காகவும், அவர்களின் பாதுகாப்பிற்காகவும், தேவையான நடவடிக்கைகளை எடுப்பதில், ஆரம்பத்தில் இருந்தே மிகுந்த தீவிரம் காட்டி வருகின்றது.

எழுத்தளவிலும், பேச்சளவிலும் மகளிரின் நலனுக்கெனப் பல உரிமைகள் வழங்கப்பட்டிருந்தாலும், நடைமுறை வாழ்க்கையில் அந்த உரிமைகள், அவர்களுக்குப் போய்ச் சேருகின்றனவா, என்பதை ஆராய்ந்து பார்க்கும் போது- இன்னும் முழுமையாக இல்லை என்பதை, நாம் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். அந்த உண்மைச் சூழ்நிலையின் அடிப்படையில்தான். காலம் காலமாகத் தங்களுக்கு இழைக்கப்படும், கொடுமைகளையும் தீமைகளையும், ஒரு தியாக உணர்வோடு சகித்துக்கொண்டு, விரக்தியுடன் வாழ்க்கையை நடத்தி வரும். பல தாய்மார்களையும், சகோதரிகளையும் காணும்போது, என் மனம் வேதனை அடைகிறது.

மகளிர் தங்களுடைய சொந்தக் காலில் நிற்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை, ஒரு புறம் எங்கள் அரசு மேற்கொண்டு வருவதோடு, இன்னொருபுறம், அவர்களுக்குச் சமூக நீதி கிடைப்பதற்கும், பல முயற்சிகள் செய்து வருகின்றது. முதன் முதலாகக் காவல்துறையில், பெண் காவலர்கள் பணியாற்றத் தொடங்கியபோது, அவர்கள் பெண் கைதிகளைக் கண்காணித்தல், பாதுகாப்புப் பணி, வழிக் காவல் பணி, தொலைத் தொடர்பு சாதனங்களை இயக்குதல் போன்ற சாதாரணப் பணிகளில் மட்டுமே ஈடுபடுத்தப்பட்டு வந்தனர்.

இருப்பினும், ஆண்களுக்குச் சரிநிகர் சமமாகப் பெண்கள், இராணுவம் உட்பட அனைத்துத் துறைகளிலும், எல்லாப்பணிகளையும் மேற்கொண்டு, அனைவரும் பாராட்டும்வண்ணம் பணி புரிந்து, சாதனைகளைப் படைத்துவரும்போது; தமிழகக் காவல்துறையில், பெண் காவலர்கள் மட்டும் சாதாரணப் பணிகளைச் செய்து வருவதை, என் மனம் ஏற்கவில்லை. முழுமையான அனைத்துக் காவல் பணிகளிலும், அவர்களை ஈடுபடுத்த வேண்டும் என்ற எண்ணத்தை, வெகு நாட்களாகவே கொண்டிருந்தேன்.

மேலும், சமுதாயத்தில் பல்வேறு நிலைகளில் உள்ள மகளிர்க்கு, ஏற்படும் தனிப்பட்ட பிரச்சினைகளைச் சட்டத்தின் துணை கொண்டு களையும் வண்ணம், மகளிருக்கெனத் தனியே காவல் நிலையம் அமைத்தால், அது சிறப்பாகச் செயல்படும் என்று, நான் திடமாக நம்பினேன். அந்த நம்பிக்கையின் வெளிப்பாடாகத் தான், இன்றைய தினம் தமிழகத்தில், ஒவ்வொரு காவல் மாவட்டத்திற்கும், மகளிராலேயே முழுமையாக நிர்வகிக்கப்படும், ஒரு 'அனைத்து மகளிர் காவல் நிலையம்', அமைக்கப்பட்டு வருகின்றது. இந்த அமைப்புகள், சமுதாயத்தில் மகளிருக்கு இழைக்கப்படும் பல்வேறு கொடுமைகளைக் களைந்து, மகளிர் வாழ்வில், ஒரு மறுமலர்ச்சியினை ஏற்படுத்த வழிவகுக்கும், என்று உறுதியாக நம்புகிறேன்.

சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழும்,

வசதியில்லா ஏழை எளிய சகோதரிகளின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க உதவும் இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், திறம்பட செயல்பட, அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.

அது மட்டுமன்றி, இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் முக்கியத்துவத்தை, அனைவரும் உணர வேண்டும் என்பதற்காக, நானே நேரில் சென்று, ஒவ்வொரு அனைத்து மகளிர் காவல் நிலையத்தையும் திறந்துவைத்து வருகிறேன்.

சென்னை நகரில் மட்டும், மூன்று அனைத்து மகளிர் காவல் நிலையங்களையும்; மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்கு என தனித்தனியே இரண்டு அனைத்து மகளிர் காவல் நிலையங்களையும்; பர்கூர், தர்மபுரி, கடலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தனித்தனியே நான்கு மகளிர் காவல் நிலையங்களையும் திறந்துவைத்தேன்.

நன்முறையில் பயன்படுத்திக் கொள்க

இன்று தொடங்கப்பட்டுள்ள இந்தக் காவல் நிலையம் தமிழகத்தின் 10-வது அனைத்து மகளிர் காவல் நிலையம் ஆகும். இந்த மாவட்டத்தில் வாழும் பெண்கள், குறிப்பாக, வாய்ப்புகளும் வசதிகளும் இல்லாமல், சமுதாயத்தின் அடித்தளத்தில் வசிக்கின்ற தாய்மார்களும், சகோதரிகளும், நன்முறையில் இக் காவல் நிலையத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும், எனக்கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், இக்காவல் நிலையத்தில் பணிபுரிபவர்கள், இந்த மாவட்டத்துப் பெண்களின் உரிமைகளைக் கட்டிக் காத்து, அவர்களுக்குச் சமூக நீதி வழங்குகின்ற, நல்லெண்ணத் தூதுவர்களாகச் செயல்பட வேண்டும் என்ற, எனது எதிர்பார்ப்பினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

—'ராஜா'

"அரசு அளிக்கும் உதவிகள் தொடக்கமேயன்றி முடிவு அல்ல; இதை ஆதரவாகக் கொண்டு முன்னேறுவீர்!"

கோயில்பட்டி விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை

சிதம்பரனார் மாவட்டம் மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட ஏழை எளிய மக்களுக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அரசு நலத்திட்ட உதவிகளை நேரில் வழங்கிச் சிறப்பித்தார். இதற்கான விழா, 10.10.93 ஞாயிறன்று நண்பகல் 12 மணியளவில் கோயில்பட்டி நகரில் உள்ள இலட்சுமி மில் மேனிலைப்பள்ளித் திடலில் நடைபெற்றது.

இவ்விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் 30,000-க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

ஊர்ச் சிறப்புகள்

கோயில்பட்டி நகருக்கு வெளியே அமைக்கப்பட்டிருந்த ஹெலிகாப்டர் தளத்திலிருந்து விழா நடக்குமிடம் வரை- வழிநெடுகிலும் அழகிய வரவேற்பு வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன. மாடமாளிகை, கூடகோபுரம், கோயில் போன்ற பல அமைப்புகளில் இருந்த அவையாவும் தஞ்சாவூர் கீற்று வேலைப்பாடுகளால் எழிலோடு விளங்கின.

'வெற்றித் தலைவியே வருக...' 'வீரத் திருமகளே வருக...' 'எங்கள் முதல்வரே வருக...' 'எங்கள் இதயத் துடிப்பே வருக...' என்பன போன்ற வாசகங்கள் அவற்றை அழகு செய்தன. அதேபோல வரவேற்புச் சுவரொட்டிகள் வண்ண வண்ண முதல்வர் உருவப் படங்களோடும் வாழ்த்துச் செய்திகளோடும் ஊரெங்கும் ஒட்டப்பட்டிருந்தன.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தார் சார்பில்- கோட்டை கொத்தளம் போன்றிருந்த வரவேற்பு வளைவு அழகோடு திகழ்ந்தது.

விழா மேம்பாடு

விழா நடக்குமிடத்தில், மிகப் பெரிய மாநாடுகளுக்கு அமைப்பது போலப் பிரம்மாண்டமான பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. பந்தலின் உட்புறம் வெள்ளைத் துணி பரப்பி, மணக்கும் பூச்சரங்கள், காகித மலர்-இலைக் கொத்துகள் கவினுறத் தொங்கவிடப்பட்டிருந்தன.

முதலமைச்சரும் பிறரும் அமரும் மேடையின் பக்கவாட்டில்- மலைப் பாறைகள் கிடப்பதுபோல அலங்கரிக்கப்பட்டிருந்தது. மேடைக்கு வரும் வழிநெடுக பல நிறக் கொடிகள் பட்டொளி வீசிக் கொண்டிருந்தன. சிறிது தூரத்தில் உருவாக்கப்பட்டிருந்த செயற்கை நீரூற்றில் கத்தரிப் பூ வண்ணத் தண்ணீர்ச் சிதறல். வழி நெடுகச் சிவப்புக் கம்பள விரிப்பு!

தொலைவில், 'எங்கள் தலைவியே என்றும் முதல்வரே வருக வருக!' என்கிற வாசகத்தோடு ஒரு ராட்சதப் பலூன் மஞ்சள் நிலாப் போல விண்ணில் பறக்க விடப்பட்டிருந்தது.

மேடையின் உள்ளும் புறமும் மலர்ச் சரங்கள் அணி செய்தன; இடையிடையே கம்பளி நூல் குஞ்சங்கள் கட்டப்பட்டிருந்தது அற்புதமாகக் காட்சியளித்தது. எங்குபார்த்தாலும் சரவிளக்குகள்.

டாக்டர் எம்.ஜி.ஆர்., மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா, அறிஞர் அண்ணா ஆகியோர் உருவப் படங்கள் மேடையில் அணி செய்தன.

மேடைக்கு வலப்புறம் அமைக்கப்பட்டிருந்த சிறிய மேடையில், 'கே.டி.சி. மெல்லிசைக் குழுவினர் இசைநிகழ்ச்சி இனிதே தொடர்ந்தது.

விழாவிற்கு- மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற-நாடாளுமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள், அரசு-காவல்துறை உயர் அதிகாரிகள், இலட்சக்கணக்கான மக்கள் வருகை தந்திருந்தார்கள்.

கோயில்பட்டியின் முதலாவது நகராட்சிமன்றத் தலைவர் என்ற பெருமைக்குரிய பெரியவர் திரு. ஈ.வெ.அ. வள்ளிமுத்து அவர்கள்- நடக்கவியலாத முதுமை நிலையிலும் இருவர் கைத்தாங்கலோடு இவ் விழாவிற்கு வந்திருந்தார்.

வரவேற்புரை

சரியாக 12.15 மணிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வந்து சேர்ந்தார். கூட்டத்தார் மகிழ்ச்சி ஆரவாரம் எழுப்பினார்கள்.

'புரட்சித்தலைவி வாழ்க...' 'பொன்மனத் தலைவி வாழ்க...' 'பாரதிகண்ட புதுமைப்பெண் வாழ்க'- என்பன போன்ற வாழ்த்து முழக்கங்கள் தரையதிரச் செய்தன.

நிகழ்ச்சி தொடங்கியது. செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. இரா.சம்பத் அவர்கள் நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்தித் தொகுத்துரைத்தார்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள், நிகழ்ச்சிக்குத் தலைமையேற்றார்.

சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஹேமந்த் குமார் சின்ஹா வரவேற்புரையாற்றினார். "ஏழை எளிய மக்களின் துயர் துடைப்பதில் ஓடோடிவந்து உதவிக் கரம் நீட்டும் தயாள குணம் பெற்றவர் நம் முதல்வர். சென்ற ஆண்டு திருநெல்வேலி மாவட்ட மக்கள் பெரும் புயலால் பாதிக்கப்பட்ட போது அவர் பேருதவி புரிந்ததே இதற்குச் சான்றாகும். இரண்டு மாவட்ட மக்களின் சார்பிலும் அவர்களை வரவேற்பதில் பேருவுவகை கொள்கிறேன்" என்றார் அவர்.

பின்னர், இரு மாவட்ட ஆட்சித் தலைவர்களும்- மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் பொன்னாடை வழங்கியும், போர்த்தியும் மரியாதை செய்தார்கள்.

கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது, பந்தலுக்கு வெளியேயும் திரண்டிருந்த மக்களைக் கட்டுப்படுத்த இயலாமல் காவல் துறையினர் தவித்தனர்; அதைக் கவனித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேடையிலிருந்தவாறே கையமர்த்தினார்; அவர்கள் அமைதியடைந்தனர்.

வாழ்த்துரைகள்

தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திருமதி சியாமளா தமது வாழ்த்துரையில் குறிப்பிட்டதாவது:

"வஞ்சனைகளையெல்லாம் வகையாக வென்று, குறையாத புகழ்பெற்றிருக்கிறார் நமது முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள். மாவட்டத் தலைநகர்கூட இல்லாத இந்தச் சிற்றூரில், கோயில்பட்டியில் இந்த விழா நடக்கச் செய்து தனிப் பெருமை உண்டாக்கியிருக்கிறார் முதல்வர். கோயில்பட்டி-சீவலபேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றி, பாரதி கண்ட புதுமைப் பெண்ணான அவர்கள்- பாரதி பிறந்த இந்த மண்ணுக்குத் தனிச் சிறப்பை உண்டாக்கித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்"

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. நாகூர் மீரான் அவர்கள் தமது வாழ்த்துரையில் தெரிவித்ததாவது:

"இந்த மாவட்டத்தைச் சேர்ந்த நாற்பதாயிரம் குடும்பங்களிலே விளக்கேற்றி வைக்க வருகை தந்திருக்கும் தங்களைக் கார் உள்ளளவும், கடல் உள்ளளவும் இந்த மாவட்டத்து மக்கள் துளிக்கூட மறக்கவே மாட்டார்கள். நெல்லை என்றாலே தொல்லை என்று எண்ணுகிறவர்களும் இருக்கிறார்;

அன்னையே, தாங்கள்தான் தாய்ப் பாசத்தோடு வந்து இம்மாவட்ட மக்களுக்கெல்லாம் இதய பூர்வமாக நல்ல பல உதவிகளை ஆற்றி உவகை கொள்கிறீர்கள். அத்தனைக் குடும்பமும் நன்றியுணர்வோடு காலகாலத்திற்கும் தங்கள் புகழ் பாடிக்கொண்டிருக்கும் என்பது நிச்சயம்''.

மாண்புமிகு **அறிநிலையத்துறை அமைச்சர் திரு. டி.வி. நடேசன் பால்ராஜ் அவர்கள்** தம் வாழ்த்துரையின்போது கூறியதாவது:

''கொடை என்றாலே அதற்குப் பெயர் பெற்றவன் கர்ணன்தான் என்று சொல்லுவார்கள்; ஆனால், அவன்கூட தனது அரண்மனைக்கு வந்தவர்களுக்குத்தான் அள்ளிக் கொடுத்தான். ஆனால் நம்முடைய புரட்சித்தலைவி அவர்களே ஏழை எளிய மக்களை நாடு முழுதும் தேடிச் சென்று, உரிய உதவிகளை நேரிலேயே அளித்துத் துன்பம் நீக்கி வருகிறார்கள். ஆகவே, கர்ணனை விட இவர்கள் புகழ் நீடித்து நிலைத் திருக்கும் என்பது உறுதி''.

மாண்புமிகு **சமூகநலத்துறை அமைச்சர் திருமதி இந்திரகுமாரி** அவர்கள் தமது வாழ்த்துரையில் குறிப்பிட்டதாவது:

''நம்முடைய முதல்வர் அவர்களை- தர்மதேவதை... ஆறுகோடி மக்களும் பூஜிக்கத்தக்க தெய்வம் என்பேன் நான். ஆதிதிராவிடர்கள் கோயிலுக்குள் செல்லலாம் என்று தான் காந்தியார் சொன்னார்; ஆனால் இவர்களோ, ஆதிதிராவிடர்கள் அர்ச்சகர்களாகவும் ஆகலாம் என்றே தெரிவித்துப் பெருமை கொண்டிருக்கிறார்கள். தமக்கு மனுச் செய்தவர்களைத் தேடிப் பிடித்து உதவுகிற சிறப்பு நம் புரட்சித்தலைவி ஒருவருக்கே உண்டு; முன் எப்போதும், இந்த வகையிலே முதலமைச்சர் அலுவலகங்களும்கூட இவ்வளவு சுறுசுறுப்பாக இயங்கியது கிடையாது''.

மாண்புமிகு **மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. எஸ்.முத்துசாமி** அவர்கள் வாழ்த்துரைச் சுருக்கம் வருமாறு:

''இந்த இயக்கத்தைக் கட்டிக் காக்கும் இமயமாக நாங்கள் எங்கள் புரட்சித்தலைவி அவர்களை மதிக்

கிறோம்; இந்த இமயத்தின் முன்னே நின்று பேசுவதென்றாலே எங்களுக்கு ஒருவித அச்சம் ஏற்படுவது உண்டு. இங்கே உள்ள மக்களுக் குத்தாமே நலத்திட்ட உதவிகளை வழங்க அவர்கள் வந்திருக்கிறார்களென்றால்- உதவிகளெல்லாம் உரிய மக்களுக்கு உடனடியாகப் போய்ச் சேருகிறதா என்று நேரிலே பார்த்துப் பரவசப்படும் குணம்தான் அதற்குக் காரணம். சிலபேர், பிரச்சினைகள் உருவாகிறபோது சுருண்டு படுத்து விடுவார்கள்; ஆனால், நம்முடைய முதல்வர் அவர்களோ, பிரச்சினைகள் உருவாகிறபோது தான் மிகுந்த சுறுசுறுப்போடு செயல்படுவார். இதற்காகவே அவர்களை நாம் வாழ்த்தி வணங்கலாம்''.

தமது வாழ்த்துரையில், மாண்புமிகு **சட்டப்பேரவைத் தலைவர் திரு. இரா. சேடபட்டி முத்தையா** அவர்கள் தெரிவித்த கருத்தாவது:

''இந்த மண்ணுக்கு ஒரு தனிச் சிறப்புண்டு. இது வீரம் செறிந்த மண்; வீரபாண்டியக் கட்டபொம்மன், புலித்தேவனெல்லாம் இங்கேதான் பிறந்தார்கள். இந்த மண் விவேகம் செறிந்த மண்; பாரதியார், வ.உ.சி.யெல்லாம் இங்கேதான் பிறந்தார்கள். இதற்காகவே, வெள்ளையர்கள் இந்த மண் என்றாலே அஞ்சுகிற காலம் ஒன்று இருந்தது. இவ்வகையான தனிச்சிறப்பெல்லாம் இருந்த போதும்- இந்த மண், ஆண்டவனால் கைவிடப்பட்ட மண் என்று கூறுவதுண்டு. அதேபோல இந்த நாட்டை ஆண்டவர்களும் இந்த மண்ணைக் கைவிட்டதுண்டு. இப்போது நம்முடைய முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் இந்த மண்ணிலே கால் வைத்திருக்கிறார்கள். இந்தப் பகுதி மக்களுக்கெல்லாம் அரிய பல உதவிகளை இவ்விழாவிலே வழங்கவிருக்

கிறார்கள். ஆகவே, இனி இப்பகுதி மக்களுக்கெல்லாம் இன்பம்தானே தவிர, துன்பமில்லை''.

—இதன்பின், **மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் செ. செயலலிதா அவர்கள்** விழாச் சிறப்புரையாற்றினார். கூடியிருந்த மக்களெல்லாம் குற்றாலம் அருவியிலே குளித்தெழுந்தாற்போல அதைக்கேட்டு மகிழ்ந்தார்கள்.

முதல்வர் உரை முடிந்த பிறகு, சிதம்பரனார் மாவட்டம் மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட மக்களுக்கெல்லாம் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

நன்றியுரை

விழாவின் நிறைவாகத் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆர். ஜெயராமன் நன்றியுரையாற்றினார்.

''வறுமையால் பாதிக்கப்பட்ட மக்களின் வாட்டம் நீக்கும் வகையிலே திட்டமிட்டு ஆட்சி நடத்தி வருகின்ற பெருமைபெற்றவராக நம்முடைய முதல்வர் அவர்கள் விளங்கி வருகிறார். இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், அரசு

உயர் அதிகாரிகளுக்கும்- இரண்டு மாவட்ட மக்களின் சார்பிலே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்''.

இவ்விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சிதம்பரனார்-திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நினைவுப் பரிசுகள் வழங்கினர்.

இலட்சுமி மில் மேனிலைப் பள்ளி மாணவ மாணவிகள் சார்பில்- மகாராட்டிர மாநிலப் பூகம்ப நிதிக்காகப் பத்தாயிரம் ரூபாய் நிதி மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் செ. செயலலிதா அவர்களிடம் வழங்கப்பட்டது.

அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா — முதல்வர் உரை

''வரலாற்றுச் சிறப்புக்கள் பலவும், இயற்கை எழில் வனப்புகள் எண்ணற்றதுவும், ஒருங்கே அமையப் பெற்ற, இந்த இரண்டு தென் தமிழ் மாவட்டங்களுக்கு வருகை தந்து, பிரசித்தி பெற்ற கோவில்பட்டி நகரில், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்துகொண்டு, எனது பாசத்திற்குரிய உங்களையெல்லாம் சந்தித்து மகிழும் நல்வாய்ப்பு, இன்று எனக்குக் கிடைத்ததை எண்ணி, நான் பெரிதும் மகிழ்கிறேன்.

சிதம்பரனார் மாவட்டம், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆகிய இந்த இரு மாவட்டங்களுக்கும் பொதுவாக, ஒரே மேடையில் ஒருமித்த உணர்வோடு,

இன்று நடக்கும் இந்த அரசு விழா, உண்மையிலேயே, இந்த இரு மாவட்டங்களும், நிர்வாகக் காரணங்களுக்காக இரண்டாகப் பிரிக்கப்பட்டு இருப்பினும், அவை உணர்வுகளால் ஒன்றுபட்டு இருக்கின்றன என்ற உண்மையை நமக்கெல்லாம் உணர்த்திக் கொண்டிருக்கிறது என்பதை, இந்த நேரத்தில் நான் கட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

தியாக பூமி இது

தன்னுடைய பெயரிலேயே, வீர

அரசு நலத்திட்ட உதவிகள்

மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் செ. செயலலிதா அவர்களால் 10.10.93 அன்று கோவில்பட்டியில் நடைபெற்ற விழாவில் - திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்ட மக்களுக்கு அளிக்கப்பட்ட நலத்திட்ட உதவிகள் விவரம் வருமாறு:

பயன்பெற்ற ஆண்கள் 11,714.

பயன்பெற்ற பெண்கள் 8,293, ஆக மொத்தம் 20,007.

வழங்கப்பட்ட கடன் ரூ.1,111.63.

வழங்கப்பட்ட மானியம் ரூ.903.38, ஆக மொத்தம் ரூ.2,015.01 (ரூபாய் இலட்சத்தில்).

சிதம்பரனார் மாவட்ட மக்களுக்கு அளிக்கப்பட்ட நலத்திட்ட உதவிகள் விவரம் வருமாறு:

பயன்பெற்ற ஆண்கள் 12,628.

பயன்பெற்ற பெண்கள் 7,538, ஆக மொத்தம் 20,166.

வழங்கப்பட்ட கடன் ரூ.1,437.19.

வழங்கப்பட்ட மானியம் ரூ.687.11, ஆக மொத்தம் ரூ.2,134.30 (ரூபாய் இலட்சத்தில்).

TNSC BANK

The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

Rate of Interest on Deposits (Effective from 2.9.1993

Sl.No.	Type of Deposit	Rate of Interest per annum
1.	Savings Bank Accounts	5.25% w.e.f. 1.7.1993
2.	Fixed Deposits :	
	For 46 DAYS and above but upto 270 days	9.00%
	For 271 DAYS and above but upto 364 days	9.50%
	For 1 YEAR and above	10.25%

Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE



"நமது மாநிலக் காவல்துறையினர் திறமையாக மக்கள் மதிக்கத்தக்க வகையில் பணிபுரிந்து வருகின்றனர்!"

நெல்லையில் மாண்புமிகு முதல்வர் பெருமிதம்

மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 9.10.93 அன்று திருநெல்வேலிக்கு வருகை தந்தார். சிறந்த சேவை புரிந்த காவல்துறை, சிறைத்துறை, தீயணைப்புத் துறை, ஊர்க்காவல்படை துறையினருக்குத் தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்கும் விழாவில் பங்கேற்கவே அவர் வந்தார்.

அவருடைய வருகையையொட்டித் திருநெல்வேலி நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது.

சுவரெங்கும் மட்டுமல்ல; பெரிய மரங்களின் உடலிலும் கூட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. 'பரணி பாயும் நகருக்கு வருகை தரும் தரணி புகழும் தலைவியே வருக'... 'காவியத் தலைவியே வருக'... 'தமிழகத்தின் திருவிளக்கே வருக'... 'புரட்சித் தலைவியே வருக'... என்பன போன்ற வாசகங்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களின் உருவப் படங்களும் அந்தச் சுவரொட்டியை அணி செய்தன.

சாலையில் - அதிலும் குறிப்பாகப் பாளையங்கோட்டைச் சாலையில் பத்தடிக்கு ஒரு 'வளைவு' (ஆர்ச்) இருக்கலாம்; அவ்வளவு அமைக்கப்பட்டிருந்தன.

தஞ்சைப் பெரிய கோயில்... ஐப்பான் கோபுரம்... கட்டபொம்மன் கோட்டை... ஈபிள் கோபுரம்... என ஒவ்வொன்றும் 'இது மேலா அது மேலா' என்று திகைக்கச் செய்வதாக அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றிலும் 'மாதர்குல மாணிக்கமே வருக'... 'பொன்மனத் தலைவியே வருக'... 'தமிழர் நலம் காக்கும் தலைவியே வருக'... 'காவிரித் தாயே வருக'... 'இதய தெய்வமே வருக'... என்பன போன்ற வாசகங்கள், பல கோணங்களில் உள்ள மாண்புமிகு முதல்வரின் உருவப் படங்கள் இடம்பெற்றிருந்தன.

சாலையின் இருமருங்கும் நெருக்கமாக நிறுத்தப்பட்டிருந்த கம்பங்களில் குழல் விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன; ஆங்காங்கே தலைவிரித்து நின்ற மரங்களில் கொத்துக் கொத்தாகச் சர விளக்குகள் பல நிறங்களில் ஒளி சிந்தின.

எங்கு பார்த்தாலும் ஒலிபெருக்கிகளில் திரைப்படப் பாடல்கள்... கவிதை நடை வரவேற்பு ' முழக்கங்கள் இழைந்தன.

ஊர் மக்களின் முகமெல்லாம் மகிழ்ச்சியால் மலர்ந்திருந்தன.

ஹெலிகாப்டரில்...

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், பாளையங்கோட்டையில் உள்ள ஆயுதப்படைப் பயிற்சியாளர் திடலில் சரியாக 1.15 மணியளவில் ஹெலிகாப்டரில் வந்திறங்கினார்.

அரசு தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட்ராமன், திருநெல்வேலி-கட்டபொம்மன் ஆட்சித்தலைவர் திரு ஆர். ஜெயராமன், சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடப்பட்டி முத்தையா, டெல்லியில் உள்ள தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு ஜக்கையன், மாண்புமிகு தமிழ்நாடு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், காவல்துறை பொது இயக்குநர் திரு எஸ். ஸ்ரீபால், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திருமதி வளந்தாதேவி போன்ற பலரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பூச்செண்டு வழங்கியும், பொன்னாடைகள் வழங்கியும் வரவேற்பளித்தார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் தோழி திருமதி சசிகலா அவர்களும்

திருமகன் வீரபாண்டிய கட்டபொம்மனைக் கொண்டிருக்கும் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், வீரத்தின் விளை நிலமாக நிலவியது என்றால், அது மிகையாகாது. தன்னிகரில்லாத் தன்மானச் செம்மல், பாளை நாட்டுச் சிங்கம், கட்டபொம்மன், அன்று எழுப்பிய போர்க் குரல் தான், ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, இந்தியாவிலேயே எழுப்பப்பட்ட முதல் புரட்சிக் குரல், என்பதை அறிந்து, பெருமை கொள்ளாத இந்தியர்கள் எவரும் இருக்கமுடியாது.

வீரபாண்டிய கட்டபொம்மன், என்ற பெயரை உச்சரித்த மாத்திரத்திலேயே, கோழைகளின் நாடி நரம்புகளில் கூட, வீரம் முறுக்கேறும்; அவர் தம் சோம்பிய நெஞ்சங்களில் கூட ஆற்றல் ஆர்ப்பரிக்கும். அத்தகைய வீர மறவர் பிறந்து, வளர்ந்து சரித்திரம் படைத்து, மறைந்த தியாக பூமி தான் இது.

அதே போன்று, செக்கிழுத்த செம்மல் என்று, எல்லோராலும் புகழப்பட்ட வ.உ. சிதம்பம் பிள்ளை அவர்கள், வாழ்ந்து மறைந்த மண் இது. அந்நியரின் ஆதிக்கம், அனைத்துத் துறைகளிலும் ஊடுருவி, மேலோங்கியிருந்த காலத்தில் - ஒரு தமிழ் வணிகக் குடும்பத்தில் பிறந்து, தனது விடா முயற்சியாலும், உண்மையான நாட்டுப் பற்றாலும், போற்றத் தக்க நெஞ்சுரத்தாலும், சுதேசிகப்பல் ஒன்றினையே வங்கக் கடலில் ஓட்டி, தமிழனின் பெருமையைப் பாரெங்கும் பரவச் செய்த, வ.உ. சிதம்பரனார் தோன்றிய பூமி இது.

நம் அனைவரின் போற்றுதலுக்கும் உரிய, வ.உ. சிதம்பரனார் போன்று, நாட்டுப் பற்றும், பொருளாதாரத் தீர்க்க தரிசனமும் கொண்ட நல்லோர் பலர், இன்று நம்மிடையே இருப்பார்களேயானால், ஜப்பான் போன்ற பொருளாதார வளர்ச்சியுற்ற நாடுகளையே, நம் நாடு வளத்தில் பின்னுக்குத் தள்ளியிருக்கும் என்று, நான் உறுதியாகக் கூறுவேன்.

இத்தகைய வணக்கத்திற்குரிய பெருமகனார்கள் மட்டுமன்றி, தனது புரட்சிக் கவிதைகளின் சாகா வரம்பெற்ற வரிகளில், சுதந்திர இந்தியாவின் மாண்பினைக் கனவு கண்ட மகாகவி பாரதியார், மற்றும் வீர வாஞ்சிநாதன், புலித் தேவன், வ.வே.சு. அய்யர், போன்ற தன்னலமற்ற தலைவர்களையும், நாட்டுக்கு ஈந்ததுதான் இந்த மண்.

பெருமைப்படுகிறேன்

இப்படி, சிறப்புக்கள் பலவற்றினைப் பெற்ற, இந்த இரு மாவட்டங்களைச் சேர்ந்த பெருமக்களுக்குப் பலவேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குவது குறித்து, நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல், இன்று வரை, மக்கட் பணியே தனது தலையாய கடமை என்பதனை நன்குணர்ந்து, இந்த

அரசு உறுதியோடு செயல்பட்டுக் கொண்டு வருகின்றது. இந்த உண்மையைத் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். குறிப்பாக, ஏழைகள், ஆதரவற்றோர், முதியோர், கைம்பெண்டிர், சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழும் மக்கள், போன்றோரின் துன்பங்களை, துயரங்களை, வாழ்க்கைப் பிரச்சினைகளை, அரசு முன்னின்று, முடிந்த வரை தீர்த்து வைக்க வேண்டும், என்ற உயரிய கொள்கையை, நாங்கள் கடைப் பிடித்து வருகின்றோம், பல நடைமுறைச் சிக்கல்கள் இருப்பினும் கூட, இந்தக் கொள்கையை உங்கள் அரசு, சிறிதும் வழுவாமல் பின்பற்றி வர வேண்டும் என்பதில், நானும், எனது அமைச்சரவையும், உறுதியோடு நின்று செயல்பட்டு வருகின்றோம் என்பதை, இங்கே பெருமிதத்தோடு கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

ஓர் அரசினையும், அதன் செயல்பாடுகளையும்பற்றிக் குறிப்பிடுகையில், பொதுவாக 'அரசு இயந்திரம்' என்று, பலரும் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். இங்கு, 'இயந்திரம்' என்ற வார்த்தை பயன்படுத்தப்படுவதை, நான் குறை கூறவில்லை. ஆனால், அந்த 'அரசு இயந்திரத்தை' இயக்குபவர்கள், ஓர் இயந்திரமாக, மக்களின் தேவைகளையும், பிரச்சினைகளையும், புரிந்து கொள்ளும் சக்தியின்றி, இயந்திர கதியில் இயங்குவதைத் தான், என்னால் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

முதன்மையான கடமை

வாக்குகளை அளித்து, தங்களுக்குப் பிடித்தமான அரசினைத் தேர்ந்தெடுத்து, ஆட்சிப் பொறுப்பில் அமர்த்திவிட்டு, தங்களுடைய வாழ்க்கையில் நிலவிக் கொண்டிருக்கும் வறுமையை, வேலையில்லாத் திண்டாட்டத்தை, பொருளாதாரச் சீர்கேட்டினை, மற்றும் எண்ணற்ற அன்றாடப் பிரச்சினைகளை, ஓரள்வேனும் தாங்கள் தேர்ந்தெடுத்த அரசு, களைய முற்படாதா என்று தான், சமுதாயத்தில், பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த மக்களும், எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கின்றனர் என்பதை, நான் நன்கு அறிவேன். அத்தகைய ஏழைகளின் துயரினைத் துடைப்பதைத் தான், என்னுடைய கடமைகளில் முதன்மையானதாகக் கருதுகின்றேன்.

ஆகவே, வருங்கால சமுதாயத்திற்கு உதவக் கூடிய வகையில், தொலை நோக்குத் திட்டங்களைத் தயாரித்துச் செயல்படுத்துவது, உற்பத்திப் பெருக்கத்திற்கு வழிவகை செய்வது, பொருளாதார முன்னேற்றத்திற்கு அடித்தளம் அமைப்பது போன்ற கடமைகள், நீண்ட காலத் திட்டங்களாகவே பெரும்பாலும் இருக்கின்றன.

இவை ஓர் அரசின் இன்றியமையாத கடமைகளாக இருப்பினும் கூட, மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளையும், அவர்களின் பல்வேறு இன்னல்களையும், உடனடியாகத் தீர்த்து வைக்கவேண்டும், என்ற மனிதாபிமானக் கடமையினை, எந்த ஒரு மக்கள் அரசும் புறக்கணிக்கக் கூடாது, என்ற கொள்கையைத்தான், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகிய உத்தமத் தலைவர்கள், தங்கள் வாழ் நாள் முழுவதும் பின்பற்றி வந்தார்கள். அந்தப் புனிதத் தலைவர்களின் உன்னத கோட்பாடுகளுக்கு ஏற்பவே, உங்கள் சகோதரியின் இந்த 'மக்கள் அரசும்' இயங்கி வருகின்றது என்பதை, இந்தத் தருணத்தில் பெருமிதத்தோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மக்களைச் சந்திப்பது, அவர் தம் குறைகளை உடனடியாகத் தீர்த்து வைப்பது, போன்ற ஒரு முதலமைச்சரின் கடமைகளிலிருந்து, சிறிதும் வழுவாமல், மக்கட் பணி ஆற்றிட வேண்டும், என்ற குறிக்கோள்களோடுதான், தேச விரோத சக்திகளால், என்னுடைய உயிருக்குத் தீங்கு விளையக் கூடும், என்ற எச்சரிக்கையையும் மீறி, நானே என் அன்புக்குரிய மக்களை, சென்னையில் குறிப்பிட்ட தினங்களில், மாவட்ட வாரியாகச் சந்தித்து, அவர்களிடமிருந்து மனுக்களைப் பெற்று, பரிசீலித்து வந்தேன்.

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட மக்களையும், இந்த முறையில் சந்தித்து, அவர் தம் குறைகளைக் களைய, அரசு நிர்வாகம் மூலம், துரித நடவடிக்கைகளை நான் மேற்கொண்டதை, ஏழை எளியோர் வாழ்த்தினார்கள்.

என் மன நிறைவு

அப்படி, என்னிடம் மனு அளித்தவர்களில், தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்து, மாவட்ட வாரியாக அவர்களை, அரசு செலவிலேயே, சென்னையில் உள்ள கோட்டைக்கு வரவழைத்து, 36,438 பயனாளிகளுக்கு, 51 கோடி ரூபாய் மதிப்புள்ள அரசு நலத்திட்ட உதவிகளை, எனது கைகளாலேயே வழங்கி, மிக்க மன நிறைவை நான் அடைந்தேன்.

அடுத்து, மாவட்ட வாரியாகச் சென்று, இத்தகைய நலத்திட்ட உதவிகளை, நானே நேரில் பல்லாயிரக்கணக்கான பயனாளிகளுக்கு, வழங்கவேண்டும் என்று முடிவு செய்து, தற்போது மாவட்டம் தோறும் சென்றுவருகின்றேன். அந்த வகையில், இதுவரை, கோவை, தர்மபுரி, தென்னார்க்காடு-வள்ளலார், மற்றும் விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் ஆகிய நான்கு மாவட்டங்களுக்கும் சென்று, 37,000-க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு, 29 கோடி ரூபாய் மதிப்புள்ள அரசு நலத்திட்ட உதவிகளை, வழங்கி மகிழ்ந்தேன்.

தற்போது, சிதம்பரனார், திருநெல்வேலி-கட்டபொம்மன் ஆகிய இரு மாவட்டங்களுக்கு வருகை புரிந்து, 40,173 பயனாளிகளுக்கு, 41 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்புடைய அரசு நலத்திட்ட உதவிகளை, வழங்க இருக்கின்றேன்.

இன்று, பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளைப் பெறும் பயனாளிகள் அனைவருக்கும், எனது ஆலோசனை ஒன்றினைக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். எத்தகைய முறைகளிலெல்லாம், ஓர் அரசு மக்களுக்குப் பணியாற்றிக் கடமைப்பட்டு இருக்கின்றது என்பதைப் பற்றி, இதுவரை நான் பேசினேன். அதே சமயத்தில், பயனாளிகளாகிய உங்கள் அனைவருக்கும், நான் ஒரு செய்தியினைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகின்றேன்.

உழைப்பீர்; உயர்வீர்!

அரசு இன்று உங்களுக்கு அளிக்கும் இந்த உதவி, ஒரு சிறு தொடக்கமேயின்றி, இதுவே முடிவல்ல. பற்றிப் படரும் படர் கொடியானது, எத்தகைய சிறு கிளையின் ஆதரவு கிடைத்தாலும், அதனைப் பற்றிக் கொண்டு, மென்மேலும் உயர உயர வளர்ந்து, பெரும் செடியாக, எவ்வாறு படர்ந்து வியாபிக்கின்றதோ; அது போல, இன்றைய தினம் நீங்கள் பெறுகின்ற இந்த உதவியினை, ஓர் ஆதரவாகக் கொண்டு, உங்கள் உழைப்பு என்னும் மூலதனத்தை இட்டு, கடினமாக உழைத்து, வாழ்க்கைப் போராட்டத்தை, உள்ள உறுதியோடு எதிர்நோக்கக் கற்றுக்கொள்ள வேண்டும், என்ற என்னுடைய அன்பு வேண்டுகோளினை, உங்கள் அனைவரது வாழ்விலும், வளங்கள் அனைத்தும் பெருக வேண்டும், என்று எனது நல்வாழ்த்துக்களையும், தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

நேரமின்மை காரணமாக, இன்று இந்த விழா மேடையில், சில பயனாளிகளுக்கு மட்டுமே, நானே என் கைகளால், நலத்திட்ட உதவிகளை வழங்க இருக்கின்றேன்.

இங்கே பல்லாயிரக்கணக்கில் குழுமியுள்ள, எஞ்சிய பயனாளிகள் அனைவருக்கும், இதே விழா அரங்கில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நலத்திட்ட உதவிகளை வழங்க இருக்கின்றார்கள். நீங்கள் அனைவரும் அவரவர்கள் அமர்ந்திருக்கும் இடங்களிலிருந்து, அவரவர்க்குரிய உதவிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும், என்ற வேண்டுகோளினை விடுத்து, இன்றைய விழா இனிதே நடைபெற, பாடுபட்ட அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும், நன்றியினையும் உரித்தாக்கி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்."

—பி.எல்.ஆர்.



காவல்துறை பொது இயக்குநர் திரு எல். ஸ்ரீபால் நினைவுப் பரிசு வழங்கி மகிழ்ந்தார்.

நெருப்புக் கணைகள்

இதனையடுத்து 5.30 மணியளவில், காவல்துறையினரின் வீரதீர சாகச நிகழ்ச்சிகள், அண்ணா விளையாட்டரங்கை ஆரவாரத்துக்குள்ளாக்கியது.

மாண்புமிகு முதல்வரின் பெயரில், முதன் முதல் காவல்துறையில் உருவாக்கப்பட்டுள்ள மோட்டார் சைகிள் வீரர்கள் 30 பேர், 'நெருப்புக் கணைகள்' (Jaya's Flaming Arrows) என்ற பெயரில் மயிர்க்கூச்செரியும் விளையாட்டுகள் பலவற்றை மோட்டார் சைகிளில் பயணம் செய்தவாறே செய்து காட்டினர். தருமபுரி காவல்துறை ஆய்வாளர் திரு சோமசுந்தரம் தலைமையில், பெங்களூரில் பயிற்சி பெற்றவர்கள் புதுக்கோட்டை, தருமபுரி, மதுரை, வட ஆர்க்காடு மாவட்டக் காவலர்கள் இதில் பங்கேற்றிருந்தனர்.

இவர்கள் வீரதீர விளையாட்டுக்களை மாண்புமிகு முதல்வர் அவர்களும் அவ்வப்போது கைத்தட்டி ரசித்துப் பார்த்தார்.

இதைத் தொடர்ந்து - கூடாரக் கலைப்பு, துப்பறியும் நாய் அறிமுகம், 62 பேர் பங்கேற்ற 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' உயர்ந்த மனிதர்கள், நாகப் பாம்பு, காவடி, கரக ஆட்டம் போன்ற கிராமியக் கலை நிகழ்ச்சிகள், தீப்பந்த அணிவகுப்பு - பந்தயங்கள் மூலமே 'LONG LIVE CM'... 'WELCOME TO CM'... 'THANK YOU CM'... 'வணக்கம்'... போன்ற சொற்கள் வடிவமைப்பு எல்லாம் மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தோடு நடைபெற்றன.

காவல்துறை, சிறைத்துறை, தீயணைப்புத்துறை, ஊர்க்காவல் படையினர் ஆகியோருக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பதக்கம் வழங்கிய இந்த விழா நிறைவு நிகழ்ச்சியாக - இரவு 8 மணியளவில் வாண வேடிக்கை நிகழ்த்தப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்கும் விழா - முதல்வர் உரை

"ஒவ்வொரு மனிதனும், எண்ணத்தால் உயர்ந்து, செயலால் சிறந்து, சாதனைகளைப் படைக்க விரும்புகிறான். அதற்குத் திறமை, வாய்ப்பு வசதிகள் மட்டுமின்றிச் சுற்றுச் சூழ்நிலையும் ஒரு காரணமாக அமைகிறது. எனவே இயற்கையாக அமைந்த திறமையோடு, இனிதாக அமைந்த சூழ்நிலை, ஒருவரின் பணித் திறத்தை மேலும் உயர்த்துகிறது. அந்த வகையில்தான், ஒரு தனி மனிதனிடம் காணப்படும் திறமைகளை ஊக்குவித்து, மேம்படுத்தி, உற்சாகமாகச் செயல்பட வைக்கும்போது, அவரிடம் மறைந்துள்ள அபரிமிதமான தனி ஆற்றல், சிறப்பாக வெளிப்படுகிறது.

பதக்கமும் பணமுடிப்பும்

அந்த உயரிய எண்ணத்தில் தான், காவல்துறை, தீயணைப்புத்துறை, சிறைத்துறை, ஊர்க்காவல் படை ஆகியவற்றைச் சேர்ந்தவர்களின் வீரதீர செயல்களைப் பாராட்டியும் - கொடுத்த பணியை இதய சுத்தியோடு செயல்படுத்தும் கடமையுணர்வையும், போற்றிப் புகழ்ந்து, அரசாங்கமே அவர்களுக்காக விழா எடுத்து, பதக்கமளித்தும், பண முடிப்பு வழங்கியும், மகிழ்ச்சி கொள்கிறது.

பொதுவாக சென்னை மாநகரத்திலே மட்டும், இந்தப் பதக்கம் அளிக்கும் விழா நடைபெறுகின்ற மரபை மாற்றி, மாநிலத்தின் பல் வேறு பகுதிகளில், இந்த விழா வினைக் கொண்டாட ஏற்பாடு செய்ய ஆணையிட்டேன். பல்வேறு மாவட்ட மக்களை, நேரடியாக நான் சென்று பார்ப்பதற்கு ஒரு வாய்ப்பை, இந்த விழா ஏற்படுத்திக் கொடுப்பதோடு, அம்மாவட்ட மக்களும் இது போன்ற சிறப்பான விழாக்களை, நேரில் கண்டுகளிக்க ஓர் வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதே, எனது நோக்கம். சென்ற ஆண்டு திருச்சியில் நடைபெற்ற இந்த விழா, இந்த ஆண்டு இன்று நெல்லைச் சீமையிலே, கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கடந்த ஆண்டு புயலாலும் வெள்ளத்தாலும், நெல்லைச் சீமையைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்ட நேரத்தில், அவர்களின் துயர் துடைக்க ஓடோடி வந்தேன். அப்போது மக்களை மகிழ்ச்சியான சூழ்நிலையில் பார்க்க இயலவில்லை. மன அமைதியோடு, மக்கள் மகிழ்ச்சியோடு இருக்கும் நேரத்தில், அவர்களைச் சந்திக்கின்ற வாய்ப்பினை, இந்தப் பதக்கம் வழங்கும் விழா எனக்கு ஏற்படுத்திக் கொடுத்ததில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மாவட்டத்தின் தனிச்சிறப்பு

பாரோர் போற்றும் பண்பாட்டிற்கும், நீண்ட நெடிய பாரம்பரியத்திற்கும், திறமைக்கும் பெருமைக்கும் உரித்தான மாவட்டம், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம். திருநெல் வயல்களை வெள்ளம் தாக்காது, வேலி அமைத்துக் காத்த நெல்லையப்பர் எழுந்தருளி, ஆசி வழங்கி, அருள் பாலிக்கும் பெருமைக்குரிய மாவட்டம் இது.

தாமிரபரணியும் பாபநாசமும், இம்மாவட்டத்தை மக்கள் வாழ்வில், பின்னிப் பிணைந்துவிட்ட ஒரு அம்சமாகும். சுதந்திர உணர்வு இந்த மண்ணிற்கு மிக அதிகம் என்பதை, இந்த மண்ணில் அவதரித்த, மா பெரும் மனிதர்களின் வரலாற்றிலிருந்து, புரிந்துகொள்ள முடியும்.

அந்நிய ஏகாதிபத்தியத்தையும், அந்நிய ஆட்சியையும், ஆங்கிலேய அடக்குமுறை தத்துவத்தையும் எதிர்த்து, வீரப் போராட்டம் நடத்திய வீர பாண்டிய-கட்டபொம்மன், ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை, அதற்கு முன்னரே எதிர்த்துப் போரிட்ட மாவீரன் புலித்தேவன், சுதந்திர வேள்வியில் தன்னையே தாரை வார்த்துக் கொடுத்த வாஞ்சிநாதன், ஆகியோர் அவதரித்தது இந்த நெல்லைச் சீமையிலேதான். சுதந்திரத் தாகம் என்னும் தியாக வேள்விக்காக, அகிம்சைப் போருக்காக, மக்களைத் தயார் செய்த கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார், மகாகவி சுப்பிரமணிய பாரதியார், சுப்பிரமணிய சிவா ஆகியோர், இந்தப் பகுதிக்குச் சொந்தக்காரர்கள்.

வீரத்திற்கும் தீரத்திற்கும் அடிப்படையாய் விளங்கும் இந்த மண்ணில், இன்று வீரச் செயல் புரிந்தோரையும், விழுமிய பணி ஆற்றியோரையும், பாராட்டிப் பெருமைப் படுத்துவது, பொருத்தமான செயல் என்றே கருதுகிறேன்.

இந்த விழாவில், காவல்துறையைச் சேர்ந்த 65 பேருக்கும், தீயணைப்புத் துறையைச் சேர்ந்த 10 பேருக்கும், சிறைத் துறையைச் சேர்ந்த 10 பேருக்கும், ஊர்க்காவல் படையைச் சேர்ந்த 5 பேருக்கும், மொத்தம் 90 பேருக்குப் பதக்கம் வழங்கப் பட்டுள்ளது.

சென்ற ஆண்டு வரை, வீரதீரச் செயல் புரிந்தோருக்கு பதக்கம் வழங்கி, 3000 ரூபாய் பண முடிப்பும் கொடுக்கப்பட்டு வந்தது. அந்தப் பண முடிப்பு, 3000 ரூபாயிலிருந்து 4000 ரூபாயாக, இந்த ஆண்டு முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கடமையுணர்வோடு சீரிய பணியாற்றும் தலைமைக் காவலர்கள், காவலர்கள் ஆகியோருக்குப் பதக்கத்துடன் வழங்கி வந்த பண முடிப்புத் தொகை, 1000 ரூபாயிலிருந்து 1500 ரூபாயாகவும், ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் ஆகியோருக்கு வழங்கி வந்த தொகை, 2000 ரூபாயிலிருந்து 2500 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது என்பதையும், மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நல்லவை நடந்தே தீரும்

இந்த விழா, சற்றுக் காலம் தாழ்த்தி நடைபெற வேண்டிய

சூழ்நிலை ஏற்பட்டாலும், நாம் நினைத்ததைச் சாதித்துவிட்டு, மக்கள் சக்தியின் மகத்தான ஆற்றலை வெளிப்படுத்திய வெற்றி உணர்வுடன், இவ்விழா நடைபெறுவது, 'காலம் கடந்தாலும் நல்லவை நடந்தே தீரும்', என்ற இயற்கையின் நியதியை, யாரும் மாற்ற முடியாது என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

இந்த இனிய விழாவில், பதக்கங்களையும் பண முடிப்புகளையும் பெறும், கடமை வீரர்களையும், வீராங்கனைகளையும் வீரதீரச் செயல் புரிந்தோர்களையும், உங்கள் அனைவரின் சார்பாக, உள மாரப் பாராட்டி மகிழ்வதில், பேருவகை அடைகிறேன்.

தான் ஏற்துக்காண்ட பணியை, செவ்வனே செய்து முடிக்கவேண்டும் என்பதற்காக, உயிரையும் பொருட்படுத்தாமல் பணியாற்றிய நல்ல நெஞ்சங்களை, நாடு போற்றினால்தான், நாடு வளம் பெரும்; வல்லவர்கள் ஏற்றம் பெறுவார்கள்; வளரும் தலைமுறையினருக்கு ஒரு வழிகாட்டியாக, அந்த நிகழ்ச்சி அமையும்.

கடமை உணர்வும், ஒழுக்கமும் அடிப்படைத் தேவைகளாகக் கொண்டு செயல்படும், காவல்துறை போன்றவற்றில் பணிபுரிபவர்கள், ஊக்கத்துடனும் ஆக்கத்துடனும் செயல்பட, இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது, என்பதை நன்கு அறிவீர்கள்.

இன்று பாராட்டுப் பெறும் அனைவரும், மேலும் சிறப்புடன் பணியாற்றிட, இந்த விழா வழி வகுக்கும் என்று நம்புகிறேன். அதே நேரத்தில், இந்தத் துறையில் பணிபுரியும் மற்றவர்களும், இவர்களைப் போல் சிறப்பாகச் செயல்பட்டு, அவர்களும் பதக்கமும், பண முடிப்பும் பெறுவதற்கு, இந்த விழா ஒரு தூண்டுகோலாக, ஆரம்பமாக அமையும் என்று கருதுகிறேன்.

காவல்துறையின் பணிகள்

அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்தி, மக்களின் உயிருக்கும், உடமைக்கும் உத்திரவாதம் கொடுப்பதில், காவல்துறையின் பங்கு மிக முக்கியமானது என்பதை, அனைவரும் நன்கு அறிவீர்கள் வளர்ந்து வரும் சமுதாயத்தின் தேவைகளுக்கேற்ப, காவல்துறையின் பணிகளும் மாறி வருகின்றன. சட்ட-ஒழுங்கை நிலைநாட்டி, அமைதி காக்கவேண்டும்.

குற்றங்கல் நடக்காமல் தடுக்க வேண்டும். நடந்த குற்றங்களைக் கண்டுபிடித்து, குற்றவாளிகளைத் தண்டிக்கத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். போக்குவரத்து இடையூறு இன்றி இயங்கவேண்டும்; நாட்டைத் துண்டாட நினைக்கும் தீய சக்திகளை, சமூக விரோத சக்திகளைச் சமாளிக்க வேண்டும்; என ஒரு வித்தியாசமான கால கட்டத்தில், காவல்துறையினர் பலதரப்பட்ட பணிகளைச் சுமக்க வேண்டிய நிலைக்கு இன்று ஆளாக்கப்பட்டு உள்ளார்கள்.

காவலர்களின் பணி கடுமையானது, சிக்கலானது; சில நேரங்களில் ஆபத்தும் நிறைந்தது.

பெருமிதம் அடைகிறேன்

பாதிக்கப்பட்டோரும், பரிகாரம் தேடுவோரும், வெவ்வேறு கோணங்களில் காவல்துறையினரைப் பார்த்து, அவர்கள் அளிக்கும் விமரிசனங்களையும், காவல்துறையினர் தாங்கிக் கொண்டாக வேண்டும்.

உடன் வந்திருந்தார்.

பொதுமக்களின் வாழ்த்தொலி விண்ணை எட்டியது!

சாலையும் மணத்தது

திருநெல்வேலிக்கு வந்து சேர்ந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஹெலிகாப்டர் தளத்தைச் சூழ்ந்து நின்ற மக்களை நோக்கி மகிழ்வோடு கரமசைத்தார். பிறகு அங்கிருந்து விருந்தினர் மாளிகைக்குப் பயணமானார்.

சாலையின் இருபுறமும் மாணவ-மாணவிகளும், பெரியவர்களும், தாய்மார்களும், இளைஞர்களும் பல்லாயிரக் கணக்கில் அணிவகுத்து நின்றனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் காரைக் கண்டதும் அவர்களெல்லாம் மகிழ்ச்சி மேலீட்டால் ''முதல்வர் வாழ்க''... ''புரட்சித்தலைவி வாழ்க''... என்றெல்லாம் எழுச்சி முழக்கம் எழுப்பினார்.

மாணவ-மாணவிகள் உற்சாகத்தோடு தூவிய பலவகை மலர்களால் பாளையங்கோட்டைச் சாலையே மணந்திடலாயிற்று.

முதலமைச்சர் பதக்கம் வழங்கும் விழா

முதலமைச்சர் பதக்கம் வழங்கும் விழா நடைபெறவிருந்த திருநெல்வேலி அண்ணா விளையாட்டரங்கை நோக்கி, நண்பகல் முதலே மக்கள் சாரிசாரியாக வரத் தொடங்கினார்கள்.

விளையாட்டரங்கின் சுற்றுப்புறம் கோட்டை மதில்போல அமைக்கப்பட்டிருந்தது. அதன் நுழைவாயிலில், 'தமிழ்நாட்டின் காவல் தெய்வமே வருக' என்று எழுதி, மாண்புமிகு தமிழக முதல்வரின் ஓவியம் வண்ணமுறத் தீட்டி வைக்கப்பட்டிருந்தது.

உள்ளே அமைக்கப்பட்டிருந்த காலரி, மூன்று மணிக்குள்ளாகவே நிரம்பி வழிந்தது; அரங்கின் வெளியே இருந்த

உயரமான மரங்களின் கிளைகளிலும் இளைஞர்களின் தலைகளைக் காண முடிந்தது.

'வெள்ளம்போல் தமிழர் கூட்டம் வீரங்கொள் கூட்டம்'... என்ற கவிஞர் இளந்தேவனின் கம்பீரமான குரலோடு நேர்முக வர்ணனை தொடங்கியது; டாக்டர் சுதா சேஷய்யன் அதைத் தொடர்ந்திடலானார்.

குதிரைப்படை வரவேற்பு

விழா நிகழிடத்திற்குச் சரியாக 4 மணிக்கெல்லாம் வந்து சேர்ந்தார் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள். குதிரைப்படை வீரர்கள் அவர்களை வரவேற்று அழைத்து வந்தார்கள்.

அங்கே வருகைதந்திருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் ''புரட்சித்தலைவி வாழ்க''... ''தமிழ்நாடு முதலமைச்சர் வாழ்க''... என்பனபோன்ற முழக்கங்களை உணர்ச்சிப் பெருக்கோடு மண்ணதிர முழங்கினார்கள்.

அத்திடலின் ஓர்புறம் அமைக்கப்பட்டிருந்த அளவான - அழகான மேடையருகே வந்திறங்கினார் மாண்புமிகு முதல்வர்; உள்துறைச் செயலாளர் திரு கே. மலைச்சாமி, காவல்துறை இயக்குநர் திரு எஸ். ஸ்ரீபால், கூடுதல் இயக்குநர் திரு டபுள்யூ பி. தேவாரம் முதலான காவல்துறையின் உயர் அலுவலர்களை அவருக்கு முறைப்படி அறிமுகப்படுத்தி வைத்தார்.

பின்னர் - திறந்த ஜீப்பில் ஏறி அத்திடலில் திரண்டிருந்த மக்களின் வரவேற்பை ஏற்றுக் கொள்ளும் வகையில் சிற்றுலா வந்தார் மாண்புமிகு முதல்வர் அவர்கள். அதைத் தொடர்ந்து, அணிவகுத்து நின்ற காவல்துறை - மகளிர் காவல் துறையினர் அணிவகுப்பைப் பார்வையிட்டார்.

காவல்துறை அணிவகுப்பு

அரசு தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட்ராமன், மற்றும் உயர் அதிகாரிகளும் வந்திருந்த இவ்விழாவில் - காவல்துறையினரின் அணிவகுப்புத் தொடங்கியது. அம் மரியாதையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

இந்த அணிவகுப்பில் - மகளிர் காவல் துறையினரும், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டக் காவல்துறையினரும், நீலகிரி மாவட்டக் காவல்துறையினரும், சிறப்புக் காவல் படையினரும் திரு. ஜாபர்சேட் தலைமையில் அழகுபட அணி வகுத்துச் சென்றார்கள்.

மகளிர் காவல்துறையில் முதன் முதலாகத் துணைக் கண்காணிப்பாளராகப் பதவி பெற்றுள்ள செல்வி வனிதா, அணிவகுப்பின் துணைத் தளவாயாக வந்தார்.

வரவேற்புரை

இந்நிகழ்ச்சியில் காவல்துறைப் பொது இயக்குநர் திரு எஸ். ஸ்ரீபால் தம்முடைய வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது:

''சென்ற ஆண்டு காவிரிக் கரையிலே அழகியதோர் அணிவகுப்பை நடத்தி விட்டு - பாலாற்றங்கரையிலும் பழநி மலைச் சாரலிலும் வெற்றி நடைபோட்டு விட்டு - பொருநையாற்றங்கரைக்கும் பொதிகை மலைச் சாரலுக்கும் வருகை தந்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களை வரவேற்பதில் பெரிதும் மகிழ்கிறேன்.

''சட்டத்தை மிதிப்பவர்களுக்கு வேங்கையாகவும், மதிப்பவர்களுக்குக் கீதமாகவும் விளங்கக் கூடியவர் நமது முதல்வர்; காவல்துறையிலே புதுமையான திட்டங்கள் பல தீட்டி விரைந்து நிறைவேற்றும் தொலைநோக்குச் சிந்தனை பெற்றவரும் கூட. காவல் நிலையத்திற்குப் புன்பட்டு வருவோரிடமும் பண்பாட்டு உணர்வோடு நடந்துகொள்ள வேண்டும் என்பது அவர்களின் பெருவிருப்பமாகும். அதனடிப்படையிலே தமிழகக் காவல்துறையினர் இதய சுத்தியோடு நடந்துகொள்ள வேண்டும். கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டில், காவல் துறையில் நல்லபல சாதனைகள் நிகழக் கூடும் என்ற அறிகுறி தென்படுகிறது.

''உடுக்கை இழந்தவன் கைபோல - மகாராட்டிரத்தில் பூகம்ப அபாயத்தால் அல்லலுறும் மக்களின் இடுக்கண் களைய நிதி திரட்டி நேசக்கரம் நீட்டியிருக்கிறார் நம் முதல்வர் அவர்கள். அந்தக் கரத்தை வலுப்படுத்தும்வகையிலே இவ்விழாவில் தமிழகக் காவல்துறையின் சார்பில் முதல் தவணையாக ஐந்து இலட்சம் ரூபாய் வழங்குகிறோம்.''

பாராட்டுரை

உள்துறைச் செயலாளர் திரு கே. மலைச்சாமி அவர்கள், தம்முடைய பாராட்டுரையிலே இவ்வாறு தெரிவித்தார்:

''விழா என்றாலே அடைந்த வெற்றி கண்டு பூரிப்பதும், ஆற்ற வேண்டிய கடமைகளைக் கணக்கெடுப்பதும் ஆகும். அந்த வகையிலேயே இந்த விழாவும் நடைபெறுகிறது. காவல்துறையினர் பெற்ற வெற்றிகளுக்காக விருதுகள் வழங்க விருக்கிறார் நம்முடைய முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள்.

''தமிழ் மக்கள் வீரத்திற்கும் விவேகத்திற்கும் பெயர் பெற்றவர்கள். ஆண்கள் மட்டுமல்ல; பெண்களும் வீரத்தில் சிறந்திருந்ததை தமிழிலக்கியங்கள் மூலம் நாம் அறியலாம். சீறிவந்த புலியதனை ஒரு பெண் முறத்தினாலேயே அடித்து விரட்டினாள் என்கிறது இலக்கியம். நம் முதல்வர் அவர்களும் விடுதலைப் புலிகளை விரட்டி விரட்டியடித்த வீராங்கனையாகவே விளங்கிவருகிறார்.

''என்னவாக இருந்தாலும் சரி - தமக்குச் சரி என்று பட்டதை எடுப்பேன், தொடுப்பேன், முடிப்பேன் என்கிற வகையில் - தூங்காமை, கல்வி, துணிவு, கடமை என்றெல்லாம் பெற்ற முதல்வராக இவர் விளங்குகிறார்; காவிரிப் பிரச்சினையானாலும் கச்சத்தீவுப் பிரச்சினையானாலும் விளைத் திட்பத்தோடு செயல்பட்டு வருகிறார். இந்தச் சமயத்தில் நமக்கெல்லாம் இவர் முதலமைச்சராக வாய்த்தது மிகப் பெரிய பொருத்தமாகும்.

''போலீசாரின் பொற்காலம் எது என்று கேட்டால், காவல்துறையினரான நீங்களெல்லாம் அது இதுதான் என்று

நிச்சயமாகச் சொல்லுவீர்கள். காவல் துறையினரைக் கறைப்படுத்தும் விதமாகச் சிலர் திரைப்படம் பிடிக்கிறார்கள்; சிலர் எழுதிவருகிறார்கள். அந்த நிலைமை மாறவேண்டும்.

''பத்தாண்டுக் காலத்தில் செய்ய வேண்டிய சாதனைகளை இரண்டே ஆண்டுகளில் சாதித்த பெருமை நம் முதல்வருக்கு இருக்கிறது. மற்ற மாநிலங்கள் அமைதியுமளிபடுகிற போது, நம் மாநிலம் அமைதிப் பூங்காவாக விளங்கி வருகிறதென்றால் முதல்வர் அவர்களின் பாராட்டத்தக்க பணிகளே அதற்குக் காரணமாகும்''.

முதல்வர் பதக்கங்கள்

வரவேற்புரையும், பாராட்டுரையும் முடிந்தபின் - மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் - காவல்துறை, தீயணைப்புத் துறை, ஊர்க்காவல்படை, சிறைத்துறை, ஆகியவற்றைச் சேர்ந்த 90 பேருக்கும் சிறந்த சேவைக்கான முதலமைச்சர் பதக்கங்களை, மாண்புமிகு தமிழக முதல்வர் பதக்கங்களையும் அளித்துச் சிறப்பித்தார்.

முதலமைச்சர் பதக்கம் பெற்றவர்களில் சென்னை மாநகராட்சி ரகசியப் போலீஸ் பிரிவு ஆய்வாளர் திரு பாபு லட்சுமணனும் ஒருவராவார். மாநகராட்சி ரகசியப் பிரிவினர் முதலமைச்சர் பதக்கம் பெறுவது இதுவே முதன்முறை.

அதன்பின், மாண்புமிகு முதல்வர் அவர்கள் விழாச் சிறப்பரை ஆற்றினார்.

அதையடுத்து - அணிவகுப்பு நடத்திய காவல்துறைப் பிரிவு கூட்டுக் குழுவினர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்கள்.

விழாவில் விருது பெற்றோருடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் குழுவினர் புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

விழாவுக்கு வருகைதந்து சிறப்பித்த மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில்,

நெல்லை காணாத அற்புத அலங்காரம்!

திருநெல்வேலி மாநகரமே- மாண்புமிகு முதல்வர் வருகையை யொட்டி ஒளி வெள்ளத்தில் மூழ்கியிருந்தது; எங்குபார்த்தாலும் ஒலிபெருக்கிகள் இசை முழக்கிக் கொண்டிருந்தன. எங்கு பார்த்தாலும் வசீகரம்மிக்க வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன.

இரவெல்லாம்- ஊர்மக்கள் ஏதோ திருவிழாக் காலம் போல இந்த வியந்தகு வேடிக்கைகளைக் கண்டவாறே நகர வீதிகளிலே வலம் வந்து கொண்டிருந்தார்கள்.

ஒரு பெரிய குடும்பத்தின் முன்னாலே சென்ற பெரியவர் ஒருவரிடம் எதுவும் தெரியாததுபோல நாம் கேட்டோம்- ''என்னங்க... பஸ் கிடைக்காம நடந்து போறீங்களா?''

பெரிய சிரிப்போடு அவர் சொன்னார்- ''என்னன்னு கேட்டீங- பஸ்கங்களா?... கெடச்சாலும் ஏறுவமான்னேன்! நானும் அறுபதெ தாண்டீட்டேன்; இந்தினி வருஷ காலத்துல இந்த திருநெல்வேலி.. அடடா! இவ்வளவு அலங்காரம், அற்புதம் இருந்ததே இல்லிங்க! அதான்... இப்பிடீ... வேடிக்கை பார்த்துகிட்டே போறம்க!''

துயர், துடைப்புப் பணிக்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்பதையும் தெரிவித்திருந்தார்.

வரலாறு காணாத இந்த துயர்ச்சம்பவத்தில் பல்லாயிரக்கணக்கானோர் பரிதாபமான முறையில் மரணமடைந்ததுடன், இன்னும் பல்லாயிரக் கணக்கானோர் இடிபாடுகளுக்கிடையே சிக்கித் தவித்துக்கொண்டிருப்பதை அறிந்து துயரமுற்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள், மிகப் பெரிய அளவில் துயர் துடைப்புப்பணிகள் மேற்கொண்டால்தான் இந்த இயற்கைச் சீற்றத்தினால் ஏற்பட்டுள்ள விளைவுகளைச் சமாளிக்க முடியும் என்கின்ற எண்ணத்திலும், தேசிய அளவில் அனைத்து மாநிலங்களும் ஒன்றுபட்டுத்தங்களால் இயன்ற பொருள் உதவி மற்ற உதவிகளையும் அளித்து இந்த இக்கட்டான சூழ்நிலையை எதிர் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்திலும்.

"தமிழக முதலமைச்சரின் மகாராஷ்டிர மாநில நில நடுக்கத்தால். பாதிக்கப்பட்டோர்களுக்கான நிவாரண நிதி" (Tamil Nadu Chief Minister's Relief Fund for Rehabilitation of Maharashtra Earthquake Victims) என்ற ஒரு நிவாரண நிதியை ஏற்படுத்தி உள்ளார். தனது சொந்தப் பணத்திலிருந்து ஒரு இலட்சம் ரூபாயை நன்கொடையாக வழங்கி, இந்த நிவாரண நிதியினைத் துவக்கி வைத்துள்ளார்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில், கழகத்தின் சார்பில் 5 இலட்சம் ரூபாயை இந்த நிவாரண நிதிக்கு வழங்கினார்.

இந்தியத் துணைக் கண்டத்தைப் பாதிக்கும் எல்லாச் சம்பவங்களிலும் தங்களுக்குரிய முழுமையான பங்கை ஆற்றிவரும் தமிழக மக்கள், மகாராஷ்டிரா மாநிலத்தில் ஏற்பட்டுள்ள இந்த நில நடுக்கத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் துரிதமான முறையில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்குத் தாராளமாக நன்கொடை வழங்க வேண்டும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்பான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த நிவாரண நிதிக்கு நன்கொடை வழங்க விரும்பும் கொடை உள்ளம் கொண்டவர்கள் நன்கொடைத் தொகையைக் காசோலையாகவோ அல்லது டிராப்ட்டாகவோ (Tamil Nadu Chief Minister's Relief Fund for Rehabilitation of Maharashtra Earthquake Victims) என்ற தலைப்பில் எடுத்து, பொதுத்துறைச் செயலாளர், புனித ஜார்ஜ் கோட்டை, தலைமைச் செயலகம், சென்னை-600 009 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கக் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

13.10.93 அன்று ஒரு நாள் மட்டும், ரூ.53,23,299/- "தமிழ்நாடு முதலமைச்சரின் மகாராஷ்டிரா நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரண நிதி"க்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் வழங்கப்பட்டது.

இதுவரை தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் முயற்சியால், 'தமிழ்நாடு முதலமைச்சரின் மகாராஷ்டிர நில நடுக்கத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரண நிதி'க்கு இதுவரை ரூ.1,41,57,504/- திரட்டப் பட்டுள்ளது.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.

எளிமையானவை! நேர்த்தியானவை! மேன்மை மிகுந்தவை! தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

M. 8676
SSCLIPS

தமிழரசு

1-11-1993 ரூ.3



புரட்சித்தலைவியின் முழக்கம்

வியூகங்கள் - ராணுவத் படையாட்சியார்
மாவட்டத் தொடக்கவிழா
மற்றும்
தென்னாற்காடு - வன்னியர்
மாவட்டப் பெயர் சூட்டும் விழாவில்...

குறைகள் சில இருந்தாலும், இன்றைய தழ்நிலையில், மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, நமது மாநிலக் காவல்துறை யினர், திறமையாக, மக்கள் மதிக்கத் தக்க வகையில் பணிபுரிந்து வரு கின்றனர் என்பதை, மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வதில் பெரு மிதம் அடைகிறேன்.

தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பணியை நிறைவேற்றும் போது, காவல்துறையினர் எதிர் நோக்க வேண்டிய சங்கடங்களையும், சாவல் களையும் சமாளிப்பதற்கு ஏதுவாக, இந்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. காவலர்கள் இல்லை, வாகனங்கள் இல்லை, ஆயுதங்கள் இல்லை, சாதனங்கள் இல்லை, போதிய ஆவணங்கள் இல்லை, புதிய நோக்கும் இல்லை, என்ற குறைகளை எல்லாம் குறுகிய காலத் தில் மாற்றி, இந்தத் துறைக்குத் தேவையான முக்கியத்துவத்தைக் கொடுத்து, வளம் பெறச் செய்திருக் கின்றேன்.

காவலர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு என்றே, தமிழ்நாடு சீருடைப் பணி யாளர் தேர்வு வாரியம், (Tamil Nadu Uniformed Services Recruit ment Board) ஒன்றை உருவாக்கி, ஒரே நேரத்தில் 10,000-க்கும் மேற்பட்ட காவலர்களைத் தேர்ந் தெடுத்து, உரிய பயிற்சியை அளித்து வருகின்றோம்.

பதவி உயர்வு கிடைக்காமல், பல ஆண்டுகளாக ஒரே பதவியில் தேங்கி இருக்கிற நிலையை மாற்றி, 1,000-க்கும் மேற்பட்டோருக்கு, ஒரே நேரத்தில் பதவி உயர்வு அளித்து, ஊக்குவித்து வருகின் றோம்.

வாகனங்களையும், வயர்லெஸ் கருவி போன்ற தொலைத் தொடர் புச்சாதனங்களையும், படிப்படியாக எல்லாக் காவல் நிலையங்களுக்கும் வழங்க, இந்த அரசு எல்லா ஏற்பாடு களையும் செய்துவருகின்றது. அது மட்டுமன்றி, காவலர்களின் நல்வாழ் விற்கு, நல்ல பல திட்டங்களை நாளும் தீட்டி, முனைப்புடன் செயல் படுத்தி வருகின்றோம்.

இந்த அரசே அமைத்தது

காவலர்களுடைய திறமையை மேம்படுத்த, பயிற்சிகளை அளித்து வருகிறோம்.

Special Security Group என்று அழைக்கப்படும், சிறப்பு பாதுகாப் புப் படை; Temple Protection Force என்னும் கோயில் பாதுகாப்புப் படை; சில குறிப்பிட்ட பணிகளை நுணுக்கமான முறையில் செய்து முடிக்க, Special Task Force என்னும் அதிரடிப்படை போன்ற சிறப்புப் படைகளை, இந்த அரசுதான் அமைத்துள்ளது என்பதை, பெரு மிதத்துடன் தெரிவித்துக்கொள் கிறேன்.

மகளிரின் நலம் பேணுவதில், இந்த அரசு கொண்டுள்ள மிகுதி யான வேட்கையின் காரணமாக, ஒவ்வொரு மாவட்டத்திலும், மகளி ருக்கென ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் தொடங்கி வருகின்றோம். இதுவரை தமிழகத் தில் 8 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தொடங்கப்பட்டு, நல்ல முறையில் செயல்பட்டு வரு கின்றன.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார், ஆகிய மாவட்டங்களுக்கு உரிய, அனைத்து மகளிர் காவல் நிலையங்களையும் நாளை நான் திறந்து வைக்க உள் ளேன். அப்போது இந்த எண் ணிக்கை பத்தாகிவிடும்.

சிம்ம சொப்பனம்

ஆக, தமிழகத்தின் காவல் படை, தலை சிறந்த படையாக, பார் புக ழும் வண்ணம் பணியாற்ற, உகந்த தழ்நிலைகளை உருவாக்குவதில், நான் கண்ணும் கருத்துமா கிறேன். அவ்வாறு மூலம், அவர்களின் அரு மக்களுக்கு எளிதில் செ வேண்டும், என்பதே நோக்கம்.

தீயவர்களுக்குச் சிம்ம மாகவும், நல்லவர்களுக்கு களாகவும், காவல்துறையின் வேண்டும் என்றே விழிப் னும், துணிவுடனும் செயல் ஏழை எளியோர்கள் நல மும் பெறுவார்கள் என்பதில், எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு.

காவல்துறையினரும், தீயணைப்புத் துறையினரும், சிறைத் துறையின ரும், ஊர்க்காவல் படையினரும், அத்தகைய வல்லவர்களாக, நல்ல வர்களாக விளங்க வேண்டும், என்ற என் மனக் கருத்தினைத் தெரி வித்து; இவ்விழாவினைத் திறம்படச் சீரோடும் சிறப்போடும் நடத்த ஏற்பாடு செய்த காவல்துறை இயக்குநர் திரு எஸ். ஸ்ரீபால் அவர்களுக்கும்; வீர விளையாட்டுக் களைச் சிறப்பாக அமைத்த, காவல் துறைக்கூடுதல் இயக்குநர், திரு வால்டர் தேவாரம் அவர்களுக்கும், காவல் துறையின் அனைத்து மட்ட அலு வலர்களுக்கும், ஆலோசனை கூறி ஆக்கப் பணிகளைச் செய்த அனை வருக்கும், எனது பாராட்டுதல் களைத் தெரிவித்து, விடை பெறு கிறேன். நன்றி, வணக்கம்.

— 'இந்திரன்'

மகாராஷ்டிர மாநில நிலநடுக்கம்:

மாண்புமிகு முதல்வர் உடனடியாக ரூ.10 இலட்சம் உதவி!

⊙ துரித நிவாரணப் பணிக்குத் தாராள நன்கொடை வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் வேண்டுகோள்!

மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள உஸ்மான பாத் மற்றும் லதூர் மாவட்டங்களில் 30.9.1993 அன்று ஏற்பட்ட கடுமையான நில நடுக்கம் காரண மாக, ஏராளமான உயிர்ச்சேதமும், பொருட் சேதமும் ஏற்பட்டதை அறிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இறந்தவர்களின் குடும்பத்தாருக்கு தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்த தோடு, இந்த நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டோ ரின் துயர் துடைப்புப் பணிக்கெனத் தமிழக அரசின் சார்பில் 10 இலட்சம் ரூபாயை உடன் வழங்க ஆணையிட்டார்.

மேலும், நிவாரண நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு மகாராஷ்டிரா மாநிலத்திற்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்து

உலகச் சிக்கன நாள்

மாண்புமிகு முதல்வர் வாழ்த்துச் செய்தி

செலவுகளைக் குறைத்து சிக்கனத்துடன் வாழ்வது வீட்டிற்கும், நாட்டிற்கும் பொருந்துகிற ஒரு நடைமுறை தத்துவம் ஆகும். சிக்கனத்துடன் வாழ்ந்து சிறிய அளவிலேனும் சேமித்து வந்தால் நாம் சீருடனும், சிறப்புடனும் வாழ முடிவதோடு, திடீரென ஏற்படுகின்ற எதிர்பாராத செலவினங்களை ஈடுகட்டிக் கொள்கிற வசதியையும் பெற முடியும்.

தமிழக அரசின் சிறு சேமிப்புத் துறை, சாதாரண ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்களிடையே சேமிக்கும் பழக்கத்தைப் பரவச் செய்வதோடு, செல்வந்தர்களும் சிறு சேமிப்பில் ஈடுபட்டு வருமான வரிச் சலுகையைப் பெற பல திட்டங்களை அமல்படுத்தி வருகிறது. சிறு சேமிப்பு மூலம் திரட்டப்படும் நிதி மாநில அரசு அமல்படுத்தும் மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றச் செலவிடப்படுகிறது. எனவே, சிறுசேமிப்பில் பங்கு கொள்ளும் ஒவ்வொருவரும் அரசின் நலத் திட்டங்களைச் செயல்படுத்த உதவுகின்றவர் என்கின்ற பெருமைக்குரியவர் ஆகிறார்கள்.

1992-93-ஆம் நிதியாண்டில் தமிழக அரசு, சிறுசேமிப்பில் நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டை மிஞ்சி வசூல் செய்து சாதனை படைத்துள்ளது கண்டு நான் பெருமிதம் அடைகிறேன். உலகச் சிக்கனநாள் அனுசரிக்கப்படும் இவ்வேளையில் தமிழக மக்கள் சேமிக்கும் பழக்கத்தைக் கைக்கொண்டு நாட்டின் விரைந்த பொருளாதார வளர்ச்சிக்குத் தங்களாலான பங்கை ஆற்றிட வேண்டும் என்ற எனது அவாவினை வெளிப்படுத்தி, தமிழகம் சிறு சேமிப்புப் பணியில் தொடர்ந்து முன்னணியில் இருக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இதழில்...

மகாராஷ்டிர மாநில நிலநடுக்கம்: மனிதாபிமானம் மலர்ந்தது! மலையென நிதி குவிந்தது! ... 2
'புரட்சித்தலைவியின் முழக்கம்' நூல் வெளியீட்டு விழா ... 4
படமும்-செய்தியும் ... 12
டாக்டர் ஜெ. ஜெயலலிதா 15 அம்சக் குழந்தைகள் நலத்திட்டம் ... 16
பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம் ... 17
நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ... 19
இடுபொருட்கள் வழங்கும் விழா ... 21
பால்வளம் பெருக கால்நடைப் பராமரிப்பு ... 23
தோட்டக்கலை வளர்ச்சி ... 24
டாக்டர் மு. வரதராசனார் ... 27
அருங்காட்சியகம் உணர்த்தும் அரிய காட்சிகள் ... 31
தஞ்சை மண்ணில் தந்தை பெரியார் பிறந்தநாள் விழா ... 33
அன்னை சந்தியா சிறுவர் உலகம் ... 42
மனநலம் ... 45
தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வு ... 48

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2024
ஐப்பசித் திங்கள் - 16
மலர்:24 இதழ்:9
1-11-1993
விலை: மூன்று ரூபாய்

மகாராஷ்டிர மாநில நில நடுக்கம்:

மாண்புமிகு முதல்வர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க

மனிதாபிமானம் மலர்ந்தது!

மாண்புமிகு வாரகத் தொழில்துறை அமைச்சர் திரு. துரை ராமசாமி அவர்கள்...

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. கே. வாரன்ல் அவர்கள்...

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள்...

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கா.ப. பட்டாபிராமன் அவர்கள்...

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. டி. ஜனார்த்தனன் அவர்கள்...

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. டி.எம் செல்வகணபதி அவர்கள்.

மலையென நிதி குவிந்தது!

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆனந்தன் அவர்கள்... மற்றும் 'தாட்கோ' நிறுவனத் தலைவர் திரு. வி.பி. துரைசாமி அவர்கள்...

மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திரு. பி. ஈஸ்வரமூர்த்தி அவர்கள்...

மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள்...

மாண்புமிகு அரசுக் கொறடா திரு. எஸ். ஜெயக்குமார் அவர்கள்...

மாண்புமிகு கற்றலாத்துறை அமைச்சர் திரு. எஸ். நாகூர் மீரான் அவர்கள்...

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி கலோசனா சம்பத் அவர்கள்

(தொடர்ச்சி 35-ஆம் பக்கம்)

'புரட்சித்தலைவியின் முழக்கம்'

நூல் வெளியீட்டு விழா

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பதவி ஏற்று இரண்டாவது ஆண்டில்

பல்வேறு நிகழ்ச்சிகளில் தமிழில் ஆற்றிய உரைகளின் தொகுப்பு "புரட்சித் தலைவியின் முழக்கம் - தொகுதி -2" மற்றும் ஆங்கிலத்தில் ஆற்றிய உரைகளின் தொகுப்பு "Jayalalitha Speaks" Volume-II ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா, 25.10.93 அன்று சென்னைக் கலைவாணர் அரங்கில் மிகச் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

மாநாடு போன்ற காட்சி!

விழாவினையொட்டி கலைவாணர் அரங்கம் வண்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பன்னிறக் கொடிகள் அசைந்தாட பல திறத்தாரும் விழா மண்டபம் நோக்கித் திரள் திரளாகச் சென்ற காட்சி, ஒரு மாநாட்டைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்தியது போன்ற உணர்வையே ஏற்படுத்தியது!



விழா மேடை, வண்ண மலர்களால் நம் எண்ணம் கவரும் வகையிலே எழிலுற அலங்கரிக்கப் பட்டிருந்தது.

ஆடவர் மகளிர் குழந்தைகள் என அனைவரும் வீற்றிருக்க, வெளியீட்டு விழா வெகு சிறப்பாகத் தொடங்கியது.

செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. இரா. சம்பத், இ.ஆ.ப., அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் - "தமிழ் நாட்டு மக்களின் ஒப்பற்ற தலைவி புரட்சித்தலைவி அவர்கள் கடந்த இரண்டாண்டுக் காலத்தில் ஆற்றிய உரைகளின் தொகுப்பாக இன்று இரண்டு தொகுதிகள் வெளியிடப் படுகின்றன. அவரது பேச்சுக்கள், தமிழக மக்களுக்குச் செய்த, செய்யப் போகின்ற நன்மைகளைத் தெளிவாகக் கூறுகின்ற தொகுப்பாக விளங்குகின்றன" என்றார்.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை உதவி இயக்குநர் (தமிழரசு) திரு. ஆர். பரதன் அவர்கள் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

பரவசமூட்டும் பட்டிமன்றம்:

பிறபகல், பார்ப்போரைப் பரவசப்படுத்தும் பட்டிமன்றம் தொடங்கியது. தலைப்பு, "புரட்சித்தலைவியின் முழக்கத்தில் விஞ்சி நிற்பது ... ஆட்சிச் சிறப்பே! அன்புப் பெருக்கே!" என்பது. நடுவராக இருந்து நாவன்மை காட்டியவர் திரு. திருக்குறளார் வீ. முனிசாமி அவர்கள். அவர் பேசுகையில், "மாண்புமிகு முதல்வர் அவர்கள், நிறைந்த அறிவும், படிக்க வேண்டும் என்கிற ஆர்வமும் உள்ளவர். அந்த வகையில் பார்த்தால் டாக்டர் அம்பேத்கர், சண்முகம் செட்டியார், டி.டி. கிருஷ்ணமாச்சாரி போன்றோருக்குப் பிறகு உயர்ந்த நூல் நிலையம் வைத்திருப்பவர் நமது முதல்வர் அவர்களே ஆவார். இந்த விழா நாட்டுக்கு, மக்களுக்கு, சமுதாயத்துக்குப் பயனுள்ள ஒரு விழாவாக விளங்குகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்த சாதனை நூலாக இதை வெளியிட்டிருக்கிறார்கள். இதை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டும்" என்றார்.

ஆட்சிச் சிறப்பும் அன்புப் பெருக்கும்:

'ஆட்சிச் சிறப்பே!' என்னும் அணித்தலைவர் பேராசிரியர் தி. இராசகோபாலன் அவர்கள் பேசுகையில் "இந்தியாவுக்குள் தமிழகம் இருந்தது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, தமிழகத்திற்குள் இந்தியா இருக்கிறது!" என்றார்.

"அன்புப் பெருக்கே!" என்னும் அணித்தலைவர் பேராசிரியர் தெ. ஞானசுந்தரம் அவர்கள் பேசுகையில், "ஆட்சி சிறப்பாக அமைந்திருக்கிறது என்றால், அதற்கு அன்பே அடித்தளமாக அமைகிறது. 'தமிழகத்துக்குள் இந்தியா இருக்கிறது' என்றார் பேராசிரியர் தி. இராசகோபாலன். தமிழகத்துக்குள் உலகத்தையே கொண்டு வந்த பெருமை மாண்புமிகு முதல்வருக்கு உண்டு!" என்றார்.

பேராசிரியர் அசோக்குமரன் அவர்கள் பேசுகையில், "மாண்புமிகு முதல்வர் அவர்களின் இந்த இரண்டு உரைத் தொகுப்புகளும் அரிய சொத்தாகும்" என்றார்.

புலவர் பாலகிருஷ்ணன் அவர்கள் பேசுகையில், "ஆட்சி சிறப்பாக நடைபெறுகிறதென்றால், அதற்குக் காரணம், அன்புதான்" என்றார்.

டாக்டர் சுதாசேஷையன் அவர்கள் பேசுகையில், "ஆட்சி சிறப்புதான், இத்தனைப் பேரையும் இங்கே வர வழைத்திருக்கிறது!" என்றார்.

டாக்டர் சாரதா நம்பியாரூரன் அவர்கள் பேசுகையில், "உறுபசியும் ஓவாப் பிணியும், செறுபகையும், நீக்க, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாடுபடுகிறார்" என்றார்.

இருசாராரின் வாதங்களைக் கேட்ட பட்டிமன்ற நடுவர் திரு.

முத்தமிழ் போல் மூன்று நிகழ்ச்சிகள்!

ஒரே மேடையில் 25 அமைச்சர்கள்

• ஒரே மேடையில் 25 அமைச்சர்கள் பங்கேற்ற ஒரே நிகழ்ச்சி 'புரட்சித்தலைவியின் முழக்கம்' என்னும் நூல் வெளியீட்டு விழாவாகத்தான் இருக்க வேண்டும்.

விழா மேடையிலேயே விற்பனை!

• ஓர் அரசு நூல் வெளியீட்டு விழாவிலேயே ரூ.40,000-க்கு நூல்கள் விற்பனையான நிகழ்ச்சியும் இதுவாகத்தான் இருக்க வேண்டும்.

வெளியீட்டு விழாவில் பட்டி மன்றம்/கவியரங்கம்

• ஓர் அரசு நூல் வெளியீட்டு விழாவில், ஈடும் இணையுமற்ற இலக்கியவிழாவாகத் திகழ்ந்ததும் இந்த விழாவாகத்தான் இருக்கும் எனக் கருதப் படுகிறது.

திருக்குறளார் வீ. முனிசாமி அவர்கள் தீர்ப்பு வழங்குகையில், இரு அணியினரும் பேசிய பேச்சில் குறை எதுவும் இல்லை; நூற்றுக்கு நூறு சரியாகச் சொன்னார்கள்; இருசாராரும் சமமாக ஆழ்ந்த கருத்துக்களை உணர்ந்து சொன்னார்கள். என்றாலும், புரட்சித்தலைவியின் முழக்கத்தில் விஞ்சி நிற்பது ஆட்சிச் சிறப்பே!'' என்றதும், குழுமியிருந்தோர் பலத்த ஆரவாரம் செய்தார்கள்.

கருத்துமிகு கவியரங்கம்!

பட்டிமன்றத்தைத் தொடர்ந்து, பாவலர்கள் பங்கேற்கும் பாட்டரங்கம் தொடங்கியது. ''சரித்திரத் தலைவியின் சாதனைச் சுவடுகள்'' என்னும் தலைப்பிலே சரம் சரமாய்க் கவிமாலை தொடுத்தார்கள் கவிஞர்கள்.

கவியரசர் இளந்தேவன் அவர்கள் தலைமை வகித்து, செவிக்கினிய செந்தமிழ்ப் பாடல்களை - செழுந்

மாண்புமிகு முதல்வரின் வண்ணப்படங்கள் விழாவில் வழங்கப்பட்டன:

• படைப்புகளின் வெளியீட்டு விழாவில் படைப்பாளரின் உருவப்படங்களை வழங்கும் வகையில், மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் அழகிய சின்னஞ்சிறு வண்ணப்படங்கள் இரண்டாயிரத்தை, மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள் விழாவிற்கு வந்திருந்தவர்களுக்கு வழங்கினார்.

தேன் பாடல்களை, தூம்திருந்த சுவைஞர்களுக்குச் சுவையாக வழங்கினார்.

கவியரங்கச் சோலையில் பாடும் குயில்களாகப் பறந்து வந்தவர்கள் கவிஞர் வ. விசயரங்கன், கவிஞர் கரு. நாகராசன், கவிஞர் ஆண்டாள் பிரியதரிசினி, கவிஞர் மா.வே. பசுபதி, கவிஞர் விசாலி கண்ணதாசன் ஆகியோர். இவர்கள் முறையே கலை, கல்வி, தொழில், சமத்துவம், பெண்ணுரிமை என்னும் பாடுபொருள்களில் பாடி 'அம்மாடி!' என்று வியக்கத் தக்க அளவில் சொற் சிலம்பம் ஆடினார்கள். அதைக்கேட்டு அவையோரும் அச்சிலம்ப ஒலியிலே சிந்தை மயங்கினார்கள்.

இரு கண்களென இரு நூல்கள்:

இனிய மாலைப்பொழுது வந்தது!

பெரியார் மாவட்டத்தில் உள்ள அத்தனைப் பேர் கையிலும் இருக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டு, மேடையிலேயே 20 ஆயிரம் ரூபாய் கொடுத்து இந்த நூல்களை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் திருக்கரத்தால் பெற்றுக் கொண்டார். மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி அவர்களும் ரூ.10,000 வழங்கி, நூல்களைப் பெற்றுக் கொண்டார்.

அழியாத இலக்கியம்

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பேசுகையில், ''இந்த நூல் கழகத்திற்கு மட்டுமல்ல, நாட்டு மக்களுக்கு, அனைத்து இந்தியாவுக்கே வழிகாட்டும் நூலாகும். இன்னும் 50 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நூலைப் படித்துப் பார்க்கும் போது, புரட்சித்தலைவி அவர்கள் எவ்வளவு அறிவார்ந்தவராக, வீரப் பெண்மணியாக இருந்தார்? அவர் சொல்லாத கருத்து இல்லை, தொடாத துறையே இல்லை என்பதை இது, அழியாத இலக்கியமாகச் சொல்லும்.

''புரட்சித்தலைவி எதைச் சிந்தித்தாலும், அதில் மிகத் தெளிவாக இருப்பார். யாருக்கும் அஞ்சாத தெளிவோடு இருப்பார். அவர் பிறக்கும்போதே திருவாக - திருமகவாகப் பிறந்தார். இன்று வீரத் திருமகளாக விளங்குகிறார்'' என்றார்.

புரட்சி மலர்

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் பேசுகையில், ''மாண்புமிகு முதல்வர் அவர்கள், பொதுநலப் பூங்காவில் பூத்திட்ட புரட்சி மலர், ஏழை எளியவர்

களைக் காக்க வந்த ஏற்றமிகு புரட்சித்தலைவி, ஈரோட்டுப் பாதையில் தேரோட்டும் புரட்சித் தலைவி, தமிழ்நாட்டின் இங்கர்சால், ஏழை எளிய மக்களின் துயரைத் தீர்த்து வைக்கும் அட்சயப் பாத்திரம்'' என்றார்.

அர்த்தமுள்ள வார்த்தைகளின் தொகுப்பு

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் பேசுகையில், ''அண்மையில் நடந்த சபா நாயகர்கள் மாநாட்டில், புரட்சித் தலைவி அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையைக் குறிப்பிட்டு, இந்த உரை இந்தியாவில் இருக்கிற அனைத்து மாநிலச் சட்டமன்றங்களிலும் வைக்கப்பட வேண்டும் என்று மாநாட்டில் இடம்பெற்ற பலரும் கூறியதை நாம் இங்கே குறிப்பிட வேண்டும்.'' என்று கூறி, ''அர்த்தமுள்ள வார்த்தைகளின் தொகுப்புதான் இந்தப் புரட்சித்தலைவியின் முழக்கம்'' என்றார்.

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு வி. சத்தியமூர்த்தி அவர்கள், 500 பிரதிகளுக்கான தொகையை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடம் கொடுத்து நூல்களைப் பெற்றுக்கொண்டார்.

எதையும் தாங்கும் இதயம் உள்ளவர்!

பிறகு, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள், விழாப் பேருரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

''இந்த அரசின் கொள்கை கோட்பாடு என்ன? எந்தத் திட்டத்தை இந்த அரசு வகுத்துள்ளது? எதைச் செயலாற்றி உள்ளது? என்பதற்கு விளக்கம் தரும் வகையில் இந்த நூல் அமைந்துள்ளது.

''அழகும் அறிவும் ஒருங்கே அமையப்பெற்றவர் நமது முதல்வர் அவர்கள் என்று டெல்லியில் நடைபெற்ற மாநாட்டில் ஒரு முதல்வர் பாராட்டினார். இந்த விழாவில் 26 அமைச்சர்களும் கலந்து கொண்டு இருக்கிறோம். ஏனென்றால் இந்த அமைச்சரவை பிணக்கு இல்லாத அமைச்சரவை. அகில இந்தியாவிலும் உள்ள மாநிலங்களை ஒப்பிடும்போது புரட்சித்தலைவியின் கீழ் உள்ள கட்டுப்பாடு, வேறு எங்கும் இல்லை.

''அண்ணா சொன்னது போல எதையும் தாங்கும் இதயம் புரட்சித் தலைவிக்கு உண்டு. ஒரு பெரியவர் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்று கூறி இருக்கிறார். சட்டம் அப்படியே இருக்கிறது. ஒழுங்கும் ஒழுங்காக இருக்கிறது. சிறப்பாகச் செம்மையாக உள்ளது.''

கலைக்கண்ணாடி!

வெளியீட்டு விழா நிகழ்ச்சிக்குப் பிறகு, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் இரண்டாண்டுச் சாதனைகளை விளக்கிடும் வண்ணத் திரைப்படம் காண்பிக்கப்பட்டது. மக்கள் அதனை மிகவும் ரசித்துப் பார்த்தார்கள். விழா முடிவில், செய்தி மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் திரு பா. செயப்பிரகாசம் அவர்கள் நன்றி நவின்றார்.

அன்றைய விழா, ஒரு சாதாரண விழாவாக அல்லாமல், சரித்திர நாயகியின் சாதனைகளை விளக்கும் திருவிழாவாக - பெருவிழாவாக விளங்கியது.

மாக்கடலிலிருந்து முத்தெடுத்தார்கள். இந்த நூல்கள், மக்கள் கடல் என்னும் மாபெருங்கடலுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்த முத்துகளாகும்.

இவை நம் உள்ளத்தை மட்டுமல்ல, இந்த உலகத்தையே தொடுகின்ற வகையிலே விளங்குகின்ற பாங்கினை இந்த விழாவிலே நாம் பார்க்க முடிந்தது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்வார்கள் - கற்பதிலே மூன்று வகை இருக்கிறது என்று. அதாவது, ''தமிழ்க் கவிதைகளை - தமிழ் நூல்களைக் கற்பது மூன்று வகையில் - ஒன்று - நூலிலுள்ள அருமை பெருமை - நூல் நயம் - இலக்கணச் சுவை கண்டு, படித்து இன்பம் பெறுவது.

இரண்டு - அந்த இலக்கியத்தைப் பிறநாட்டு இலக்கியங்களுடன் ஒப்பிட்டு எந்தெந்த வகையில் அது உயர்ந்தது என அறிந்து பிறநாட்டாரும் உணரச்செய்வது.

மூன்று - அந்த ஏடுகளின் மூலம் இந்தச் சமுதாயத்திற்கு என்ன பயன் இருக்கிறது என்று ஆராய்ந்து சமுதாயத்திற்கு அதைத் தருவது.

பேரறிஞர் அண்ணாஅவர்களின் இந்தத் திருவாசகம், வெளிமிடப் பெற்ற நூல்களுக்கு மெத்தவும் பொருந்தும். அந்த வகையிலே இந்த இரு நூல்களும், காலக் கண்ணாடியாக விளங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!

— நிகழ்ச்சித் தொகுப்பு: பி.வி. கிரி

''அனைவரும் வாங்க வேண்டும்!''

• 'புரட்சித் தலைவியின் முழக்கம்' என்னும் இந்த நூலை செய்தித்துறை அழகிய முறையில் வெளியிட்டிருக்கிறது.

அச்சமைப்பு, கட்டுக்கோப்பு எல்லாமே மிக அருமையாக உள்ளது.

இந்த நூலின் அச்சமைப்பைப் பார்க்கும் போது, இதன் விலை அடக்கம் ரூ.60 அல்லது ரூ.65-க்கு விற்க வேண்டும். ஆனால், இதற்கு ரூ.15 என்றுதான் விலை வைத்திருக்கிறார்கள். ஆகவே, இந்த நூலை அனைவரும் காசு கொடுத்து வாங்கிப் படிக்க வேண்டும்.

அது மட்டுமல்ல, இந்த நூலை ஒட்டு மொத்தமாக வாங்கி, மற்றவர்களுக்கும் வழங்க வேண்டும்.

—மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள்.

இதயமெலாம் கவரும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரைத் தொகுப்பு நூல்கள் வெளியிடும் அரிய நிகழ்ச்சியும் தொடர்ந்தது!

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. இரா. சம்பத், இ.ஆ.ப., அவர்கள், அரங்கத்தில் குழுமியிருந்தோரை அன்புடன் வரவேற்றார். ''புரட்சித்தலைவியின் முழக்கம் - தொகுதி-1 நூலைப் பார்த்த பல மாநிலத்தவரும் அதனை வெகுவாகப் பாராட்டினார்கள். அற்புதமாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது என்று கருத்துத் தெரிவித்தார்கள். அதன் அடிப்படையில் இன்று 2-வது தொகுதி வெளிவருகின்றது'' என்று கூறினார். பிறகு இயக்குநர் அவர்கள் மேடையில் வீற்றிருந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்குப் பொன்னாடை அணிவித்துச் சிறப்பித்தார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார். பிறகு இரு கண்களென மதிக்கத்தகும் இரு நூல்களின் வெளியீட்டு விழா நடந்தது.

புரட்சித் தலைவியின் முழக்கம் தொகுதி - 2 மற்றும் ''Jayalalitha Speaks'' Volume-II நூல்களை, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வெளியிட்டார். அவற்றின் முதல் பிரதிகளை, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் பெற்றுக் கொண்டார். ஒரே மேடையில் இருபத்தைந்து அமைச்சர் பெருமக்கள் அமர்ந்திருந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

படித்தேன்! சுவைத்தேன்!

முதலில், செய்தி-விளம்பரத் துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள் வாழ்த்துரை வழங்குகையில், ''புரட்சித்தலைவியின் முழக்கம் என்னும் இந்த நூல்கள் கருத்துக் கருவூலமாக - சாதனைச் சரித்திரமாக விளங்குகின்றன. அவற்றையெல்லாம் படித்தேன் - படித் தேன் குடித்ததுபோல மகிழ்ந் தேன் - மலைத் தேன் - சுவைத்தேன் - மலைத்தேன்... ஆம். இந்த நூல்கள் ஒரு கருத்துச் சுரங்கம் என்றால் அது மிகையாகாது.

''மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் பார்வை தொலை நோக்குப் பார்வை. அவர்களின் உரையிலே விவேகம், வீரம், நாட்டுப்பற்று, மனித நேயம் வள்ளல் தன்மை முதலான தன்மைகள் எல்லாம் நிறைய இருக்கின்றன. இந்த நூல்களை அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்பது என் பேரவா''. என்றார்.

மக்கள் மனதில் இடம்பெற வேண்டும்!

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி இந்திரகுமாரி அவர்கள் பேசுகையில் ''சொல்லுவதில் வல்லவனாகவும், மறதி இல்லாதவனாகவும், அஞ்சாதவனாகவும், ஒருவன் இருப்பின், அவனோடு

மாறுபட்டு வெல்வது யார்க்கும் அரிதாகும் - என்னும் திருக்குறளுக்கு ஏற்ப இந்த உரைகள் அமைந்திருக்கின்றன. இதில் பல் வேறு கருத்துக்கள் பொதிந்துள்ளன. இந்த நூல்கள் ஆறு கோடித் தமிழர்கள் கையிலும் இருக்க வேண்டிய அரிய நூலாகும். இது நூலகத்தில் மட்டுமல்ல, மக்கள் மனத்திலும் இடம் பெறவேண்டும்''. என்றார்.

பெரியார் மாவட்ட மக்கள் கையில்...

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் பேசுகையில், ''இந்த உரை விளக்கம்

படமும் செய்தியும்

சென்னைக்கு வருகைதந்த மாண்புமிகு பிரதமர் பி.வி. நரசிம்மராவ் அவர்களை, சென்னை விமான நிலையத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சந்தித்துப் பேசினார் (25.10.93).

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு திரிபுரா முதலமைச்சர் திரு. தசரத் தேவ் அவர்களை, விஜயா மருத்துவமனையில் சந்தித்து உடல்நலம் விசாரித்தார் (15.10.'93).

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை, மாண்புமிகு மத்திய செய்தி மற்றும் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் திரு. கே.பி. சிங் தியோ அவர்கள், அவரது இல்லத்தில் சந்தித்தார். இந்தச் சந்திப்பின் போது மாண்புமிகு தமிழகச் செய்தி-விளம்பரத் துறை அமைச்சர் திரு. எம். தென்னவன் அவர்கள் உடனிருந்தார். (2.11.93)

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை, தேசிய பால்வள நிறுவனத்தின் தலைவர் டாக்டர் வி. குரியன் அவர்கள் தலைமைச் செயலகத்தில் சந்தித்து உரையாடினார். தேசிய பால்வள நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் டாக்டர் எம்.எஸ். அமிர்தா பட்டேல், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. டி. ஜனார்த்தனன், தலைமைச் செயலர், திரு. டி.வி. வெங்கடராமன், இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர் (14.10.'93).

டாக்டர் ஜெ. ஜெயலலிதா 15 அம்சக் குழந்தைகள் நலத்திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள குழந்தைகளின் நல்வாழ்விற்காக, சமூகநலத் துறையின் மூலம் 14 சீரிய திட்டங்களும், மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலம் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அண்மையில் அறிவிக்கப்பட்ட "புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா இருதய அறுவைச் சிகிச்சைத் திட்டமும்" உட்பட மொத்தம் 15 அம்சங்கள் கொண்ட ஒரு புதிய திட்டத்தை தமிழக அரசு செயலாக்க உள்ளது. அத்திட்டத்திற்கு "டாக்டர் ஜெ. ஜெயலலிதா 15 அம்ச குழந்தைகள் நலத்திட்டம்" எனப் பெயரிடப்பட்டுள்ளது. இப் புதிய திட்டம் தமிழக மழலைச் செல்வங்களின் வளமான வாழ்வுக்கும், சிறந்த எதிர்காலத்திற்கும் அடிகோலும்.

1. பிறக்கும் குழந்தைகளின் சராசரி பிறப்பு எடையை மூன்று கிலோவாக உயர்த்துதல்.

2. முறையான தடுப்பு ஊசி அளித்து, குழந்தைகளுக்கு வரும் போலியோ மற்றும் வலிப்பு நோய் போன்ற நோய்களை முற்றிலும் அகற்றுதல்.

3. ஐந்து வயதுக்குக் கீழுள்ள குழந்தைகளைத் தாக்கும், வயிற்றுப்போக்கு, நுரையீரல் சம்பந்தமான தொற்று நோய் ஆகியவற்றினால் ஏற்படும் இறப்பினைக் குறைத்து, இளம்சிறார் இறப்பு விகிதத்தை 30 சதவீதத்திற்கும் கீழாகக் குறைத்தல்.

4. குழந்தைகளின் ஊட்டச் சத்தினை அதிகப்படுத்துதல்.

5. வைட்டமின்-ஏ சத்துக்குறைவு, அயோடின் சத்துக்குறைவு மற்றும், சோகை நோய் ஆகியவற்றிலிருந்து குழந்தைகளைக் காத்தல்.

6. அனைத்து மருத்துவமனைகளை மற்றும் தாய்-சேய் நல விடுதிகளை, குழந்தைகள் நலத் திட்டத்திற்கு உகந்த வகையில் நடத்திச் செல்லுதல்.

7. பெண்களின் திருமண வயதினை 21-ஆக உயர்த்தியும், ஒவ்வொரு குழந்தைப் பிறப்புக்கும் இடையில், 3 ஆண்டுகள் இடைவெளி இருக்க வேண்டியதன் அவசியத்தைக் கையாள்வதை மகளிரிடையே பரப்பியும் பெண்கள் பிள்ளைப் பிறப்பு இயந்திரங்கள் போல் கருதப்படுவதிலிருந்து அவர்களுக்கு விடுதலை அளித்தல்.

8. சட்டத்தின் துணை கொண்டும், பிரச்சாரம் மூலமாகவும் ஒவ்வொரு குழந்தைக்கும் குறைந்த பட்சம் 5 ஆண்டுகளாவது தொடக்கக் கல்வியை அளித்து, அதனைப் பரப்புதல்.

9. மகளிரின் எழுத்தறிவையும், தகுதியையும் உயர்த்துதல்.

10. குழந்தைகள் மையங்களில் தூய்மையான குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்தித் தருதல்.

11. 'இளம் சிறார் தொழிலாளர்கள்' நடைமுறையினைப் படிப்படியாகக் குறைத்தல்.

12. பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தினைப் பரவலாக்குதல்.

13. 'பெண் சிசு வதை' என்னும் சமூகக் கொடுமையினை முற்றிலுமாகத் தமிழ்நாட்டிலிருந்து அகற்றுதல்.

14. குழந்தைகளுக்கு ஏற்படும் உடல் ஊனங்களை ஆரம்ப நிலையிலேயே கவனித்து, அவர்களுடைய மறுவாழ்வுக்கு வித்திடல்.

15. 'குழந்தைகள் இலவச இருதய அறுவைச் சிகிச்சைத் திட்டத்தை'ச் செயல்படுத்துதல்.

மேற்கண்ட அம்சங்களைக் கொண்டு விளங்கும் "டாக்டர் ஜெ. ஜெயலலிதா 15 அம்சக் குழந்தைகள் நலத்திட்டம்" என்ற திட்டத்தினை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வருகின்ற 11.11.1993 அன்று, சென்னை கலைவாணர் அரங்கில் தொடங்கி வைக்க அன்புடன் இசைந்துள்ளார்கள்.

பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம் டான்வா

டான்வா எனப்படும் பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம் டென்மார்க் நாட்டின் உதவியுடன் மனித வளத்தைப் பெருக்கி அதன் மூலம் வேளாண்மையை முன்னேற்றுவதில் பெரும் பங்கு வகிக்கும் ஒரு திட்டமாகும்.

பண்ணை மகளிரை ஊக்குவித்து, உதவி செய்து, வழிகாட்டி அதன் மூலம் நிர்வாகத் திறமை பெற்று, வேளாண்மையில் முழுத் திறமையுடன் பங்கெடுத்து, தொழில் நுட்பங்களை ஆர்வத்துடன் செயல்படுத்தி அதிக மகசூலும், வருவாயும் பெற வழிவகுப்பதற்கென்றே இவ் விரிவாக்கத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத் திட்டம், தமிழ்நாட்டில் செங்கை எம்.ஜி.ஆர். தென்னார்க்காடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் திறம்படச் செயல்பட்டு வருகின்றது.

குறிக்கோள்:

நீண்ட காலக் குறிக்கோள்

—வேளாண்மை வளர்ச்சியை அதிகப்படுத்துதல்;

—சமுதாயத்தில் பண்ணை மகளிரின் நிலையை மேம்படுத்துதல்;

—சிறு குறு விவசாயப் பண்ணை மகளிரை முழுத்திறமையுடன் செயல்பட வைத்து, உற்பத்தியைப் பெருக்கி அதன் மூலம் குடும்பத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

குறுகிய கால நோக்கங்கள்

—பண்ணை மகளிருக்குப் புதுத் தொழில் நுட்பங்களை எடுத்துரைத்தல்,

—பண்ணை மகளிருக்குச் செயல் விளக்கப் பயிற்சிகள் மூலம் பயிற்சியளித்து, தொழில் நுட்பங்களைச் செயல்படுத்தத் தூண்டுதல்.

—பயிற்சி பெற்ற பண்ணை மகளிர் தாங்கள் கற்றவற்றைப் பயிற்சி பெறாத மகளிருடன் பகிர்ந்துகொள்ள ஊக்கமளித்தல்;

திட்டம் செயல்படும் முறை:

இத்திட்டத்தில் முதல் 1½ஆண்டுகள் பணியாளர்களை நியமித்தல், அலுவலகக் கட்டடம் கட்டுதல் போன்ற ஆரம்பப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டமான 3½ ஆண்டுகள் திட்ட செயல்பாட்டிற்கென்றும், மூன்றாவது கட்டமான 2½ ஆண்டுகள் திட்ட ஆய்வுக்கெனவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்பட 3.21 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது கட்டமான திட்ட செயல்பாடு 1988-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் செயல்படத் துவங்கியது. 1988-89-ஆம் ஆண்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை தென் பிராந்திய ஜெனரல் ஆபீசர் கமேண்டிங், லெப்டினெண்ட் ஜெனரல் திரு. ஏ.எஸ். கல்கத் அவர்கள் சந்தித்தார். மேஜர் ஜெனரல் மூல்யா, தலைமைச் செயலர் திரு. டி.வி. வெங்கட ராமன், இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர் (14.10.'93).

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம், தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள், தமிழ்நாடு போக்குவரத்து நிதி நிறுவன - அரசுப் பங்குத் தொகையான ரூ.9 இலட்சத்திற்கான காசோலையை வழங்கினார் (14.10.93).

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம், தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி ஆர். இந்திரகுமாரி அவர்கள், முதலமைச்சரின் திருக் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதிக்காக ரூ.5 இலட்சத் திற்கான காசோலையை வழங்கினார் (14.10.'93).

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மறைந்த மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. டி.எம். ரெங்கராஜன் அவர்களின் துணைவியார் திருமதி. மாலதி ரெங்கராஜன் அவர்களிடம் ரூ.50,000-க்கான காசோலையை வழங்கினார் (29.10.93).

டில், 18 கிராம அளவிலான வேளாண்மைத் தொழில் நுட்பப் பயிற்சிகள் நடத்தப்பட்டன.

1989-90-ஆம் ஆண்டில் 16 கிராம அளவிலான வேளாண் பயிற்சி மூலம் 480 பண்ணை மகளிருக்கும், 1990-91-இல் 479 பண்ணை மகளிருக்கும் 1992-93-இல் 360 பண்ணை மகளிருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

மேலும் நடப்பு ஆண்டில் பல்பெருக்கு நோக்குத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் படி ஏற்கெனவே பயிற்சி பெற்ற பண்ணை மகளிரில் ஓர் உதவி வேளாண்மை அலுவலர் பகுதியில் 10 பண்ணை மகளிர் வீதம் 10 உதவி வேளாண்மை அலுவலர் பகுதிகளிலிருந்து 100 பண்ணை மகளிர் தேர்ந்தெடுக்கப்பட்டு மூன்று கட்டமாக பல்பெருக்கு நோக்குத் திட்டப் புத்தறிவுப் பயிற்சி நடத்தப்பட்டது. அவர்கள் மூலம் பயிற்சி பெறாத மகளிர், ஒரு பயிற்சியாளருக்கு ஐவர் வீதம் 500 பேர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

மேலும் 1992-93- ஆண்டில் காளான் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, வேளாண் காடுகள் மற்றும் பால் மாடு பராமரிப்பு சிறப்புப் பயிற்சிகள் நான்கு அணிகளுக்கு வழங்கப்பட்டு அதன் மூலமாக 116 மகளிர் பலன் அடைந்துள்ளார்கள்

பண்ணை மகளிர் கருத்தரங்கு மூலம் 150 பண்ணை மகளிர்களுக்கு ஒரு நாள் சிறப்புப் பயிற்சி அளித்து பண்ணை மகளிர்கள் தொழில் நுட்பங்களைக் கடைப்பிடிப்பதில் உள்ள இடையூறுகளை ஆராய்ந்து அதனை நிவர்த்தி செய்ய வழி வகைகள் எடுக்க; பண்ணை கருத்தரங்கு நடத்தப்பட்டுள்ளது.

இதுவரை 2500 பண்ணை மகளிருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டிலிருந்து ஒரு பயிற்சியாளருக்கு ரூ.25 வீதம் வழங்கப்படுகிறது.

1993-94 முதல் இந்தத் திட்டம் மேலும் 6 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

நெல்லை மாவட்டத்தில் தற்போது செயல்படுத்தப்பட்டுவரும் பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம் குறித்து திருநெல்வேலி அருகாமையிலுள்ள சித்தன் குடியிருப்புப் பகுதியில் இந்தத் திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்று வரும் மகளிர் சிலரைச் சந்தித்தோம். அப்போது அவர்கள் கூறியதாவது:

திருமதி மனோன்மணி (வயது 33)

இவர் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்திருக்கிறார். இவருடைய கணவரும் விவசாயம் செய்கிறார். இவர்களுக்கு 2 ஏக்கர் நன்செய் நிலம் உள்ளது. 1989-முதல் இவர் இந்தத் திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்று வருகிறார். பயிற்சி பற்றிக் கேட்டதற்கு, வாரத்தில் 5 நாட்கள் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை தொடர்ந்து பயிற்சி அளிக்கப்படுவதாகவும், அந்தந்தப் பருவ காலங்களுக்கு ஏற்பச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுவதாகவும் கூறினார்.

இந்தப் பயிற்சியினால், நவீன விவசாய முறை பற்றியும் விதை நேர்த்தி, அறுவடை நுட்பங்கள் போன்ற விவசாய நுணுக்கங்கள் பற்றியும் தெரிந்து கொண்டதாகவும், மேலும் குறைந்த செலவில் அதிக மகசூல் பெறுவது பற்றித் தெரிந்து கொண்டதாகவும் ஆர்வத்தோடு கூறினார்.

திருமதி பரிபூரணம் (வயது 40)

நெல் நாற்று பரவுதல், விதை கலக்கி விதை பரவுதல் தண்ணீரில் நனைய வைத்தல் போன்ற விவசாய நுணுக்கங்களில் இவர் சிறப்புப் பயிற்சி பெற்றுள்ளார். 1 ஏக்கரில் பயிர் செய்வதாகவும், ஒரு ஏக்கருக்கு முன்பு அதிகமாக யூரியா போட்டதாகவும் பயிற்சிக்குப் பிறகு சரியாக யூரியா உபயோகிப்பதால் மகசூல் அதிகமாகக் கிடைப்பதோடு செலவும் குறைந்திருப்பதாகவும் கூறினார். மேலும், தற்போது களைக் கொல்லி மருந்து வாங்கிப் பயன்படுத்துவதாகவும் பயிர்களுக்கு மருந்து அடிக்கடி போடக் கற்றுக் கொண்டதாகவும் தெரிவித்தார்.

திருமதி சுரோலின் (விவசாய அலுவலர்)

உண்மையிலேயே விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் மகளிருக்குத்தான் பயிற்சி அளிக்கப்படுகிறது. 20 முதல் 45 வயது வரை உள்ள மகளிரே பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பயிற்சிக்குக் கல்வித் தகுதி முக்கியமில்லை. சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கே இந்தப் பயிற்சி தரப்படுகிறது. ஒரு உதவி வேளாண் அலுவலருக்கு ஒரு பயிற்சியாளர் வீதம் ஆண்டில் மொத்தம் 16 பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒரு பயிற்சியாளர் 30 பண்ணை மகளிருக்குப் பயிற்சி கொடுப்பார்.

150 பயிற்சியாளர்களுக்கு ஆண்டில் ஒரு முறை சிறப்பு மாநாடு நடத்தப்படும். மாநாட்டிற்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. ஒரு வட்டம் (Block) முடிந்த பிறகு அடுத்த வட்டத்தில் டான்வா பயிற்சி தொடங்கப்படுவதாகவும் கூறினார் இவர்.

—ஜே.சி.

நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் தமிழ்நாட்டிலேயே மழை குறைவாகப் பெய்யும் பகுதியாகும். அத்துடன் காலம் தவறிப் பெய்யும் மழையினால் வேளாண்மை மிகவும் பாதிக்கப்படுகிறது. அதிவேகமாக வீசும் காற்றினால் மண் அரிப்பு ஏற்படுவதுடன் மண்ணின் ஈரப்பதமும் விரைவில் குறைந்து விடுகிறது. இந்தக் காரணங்களினால் ஆயிரக்கணக்கான ஏக்கர் புஞ்சை நிலங்கள் தரிசாகவே உள்ளன.

இம்மாதிரி தரிசாக உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் புஞ்சை நிலங்களைப் பெருக்கவும், அதன் மூலம் வருவாய் பெற்றிடவும் வேண்டி, தமிழ்நாடு அரசு, வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் "விரிவான நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்" ஒன்று தயாரித்து, மத்திய அரசின் அங்கீகாரத்தையும் பெற்றது. இதற்காக நிதி உதவியினைச் செய்ய 'டென்மார்க்' நாடு முன் வந்துள்ளது.

இத்திட்டம் 1.4.91 முதல் செயல்படுத்தப்படுகிறது.

"விரிவான நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்" நான்கு உபதிட்டப் பகுதியாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

சிற்றாறின் தென்பகுதியில் தென்காசி, திருநெல்வேலி, அம்பாசமுத்திரம் ஆகிய வட்டங்கள் சந்திக்கும் பகுதியில் 5000 எக்டேர் பரப்பில் ஒரு துணை நீர்ப்பிடிப்புப் பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டு செயலாக்கப்படுகிறது.

இந்த நீர்ப்பிடிப்புப் பகுதியில் நிலத்தின் தன்மைக்கு ஏற்றவாறு, பாசன நீர் கிடைக்கும் ஆதாரத்தின் அடிப்படையிலும் மழை நீர் சேமிப்புப் பணிகள், மண் ஈரப்பதம் காக்கும் பணிகள் ஆகியவை செயல்படுத்தப்படுகிறது.

இந்தப் பணிகளுக்கு ஆகும் செலவினத்தில் 70 சதவிகித மானியமாகவும், மீதமுள்ள 30 சதவிகித கடனாகவும் அளிக்கப்படும். இந்தக் கடன், திட்டம் நிறைவேறிய 2 ஆண்டுகளுக்குப் பின் 10 ஆண்டுகளில் சம தவணைகளில் திரும்பப் பெறப்படும்.

கசிவு நீர்க்குட்டை அமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல், ஊரணி ஆழப்படுத்துதல் போன்ற பணிகள் அரசு செலவிலேயே நிறைவேற்றப்படும்.

இத்திட்டத்தில் பண்ணைக்காடுகள், மேய்ச்சல் நிலம் மேம்பாடு, பலன் தரும் மரம் மற்றும் பழ மரங்கள் வளர்ப்பு போன்ற பணிகளுக்கு எக்டேருக்கு ரூ.1,200 வீதம் மானியம் வழங்கப்படும். 10 எக்டேருக்கு ஒரு குழாய்க் கிணறு வீதம் அமைத்து, இலவசமாக கைப்பம்புப் பொருத்தப்படும்.

இத்திட்டத்தை நிறைவேற்ற, சிற்றாறு நீர்ப்பிடிப்பில் 3000 எக்டேர் பரப்பளவு கொண்ட துணை நீர்ப்பிடிப்புப் பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

காற்றினால் ஏற்படும் மண் அரிப்பைத் தடுக்க, காற்றின் திசைக்குக் குறுக்கே மரங்களை வளர்க்கும் முறைக்கு 'தாவர அரண்' என்று பெயர். இம் மாதிரி தாவர அரண்கள் அமைந்து மண்ணின் ஈரப்பதம் காக்கவும் காற்றினால் ஏற்படும் மண் அரிப்பிலிருந்து தரிசு நிலங்களைப் பாதுகாத்துப் பயன் பெறுவதற்கும் இத்திட்டம் நிறைவேற்றப்புட உள்ளது. இத்திட்டத்தில் மேய்ச்சல் நிலம் மேம்பாடுக்காகவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

இப்பணிக்கு ஆகும் மொத்தச் செலவினமும் அரசு மானியமாகக் கருதப்படும்.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் ராதாபுரம் வட்டத்தில் மணல் மேடிட்ட தேரி நிலங்களில், வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் ஏற்கெனவே அமைக்கப்பட்ட 330 கி.மீ. நீளமுள்ள தாவர அரண்களைச் செம்மைப் படுத்தி, பராமரித்திட இத்திட்டம் செயல்பட உள்ளது. இதனால் 6000 எக்டர் பரப்பு நிலம் பயன் பெறும்.

இத்திட்டத்திற்காகும் மொத்தச்

செலவும் அரசு மானியமாகக் கருதப் படும்.

ராதாபுரம் தாலுகாவில், பயிர் செய்யக்கூடியதும் ஆனால் தரிசாகவே விடப்பட்டதுமான 3000 எக்டேர் பரப்பில் புதிதாகத் தாவர அரண்கள் அமைக்கப்பட உள்ளன, இதற்காகும் செலவுகள் அனைத்தும் அரசு ஏற்றுக் கொள்ளும். தாவர அரண்களுக்கு இடைப்பட்ட பரப்பில் பழமரக்கன்றுகள் இதர மரக் கன்றுகள் வழங்கிட ஒரு எக்டேர் பரப்பிற்கு ரூ.1,200 மானியமாக வழங்கப்படும். புதிதாகக் கசிவு நீர்க் குட்டைகள் அரசின்முழுச் செலவிலே அமைத்திடவும் திட்டமிடப்பட்டு உள்ளது. மேய்ச்சல் நிலம் மேம் பாட்டுக்காகவும் இத்திட்டத்தில்வகை செய்யப்பட்டுள்ளது.

1. தரிசு நிலங்களில் மழையினாலும், காற்றினாலும் மண் அரிப்பை மேலும் ஏற்படாமல் தடுப்பது.

2. தரிசு நிலங்களின் தன்மைக் கேற்ப, மேம்பாட்டுப் பணிகள் மேற்கொண்டு அந்த வகை நிலங் களிலிருந்தும் வருமானம் கிடைக்க வகை செய்தல்.

3. விவசாயிகளுக்கு ஏற்புடையதும், பலனளிக்கக் கூடியதுமான புதிய விவசாய முறைகளைக் கடைப்பிடிக் கக் கூறுதல்.

4. நிலத்தின் தன்மைக்கேற்பவும், வருவாய் வரும் வகையிலும் புதிய தொழில் நுட்பங்களைத் தெரிவித்து அதனால் ஏற்படும் கூடுதல் ஆதாயங் களைப் பற்றிய விழிப்புணர்வை, விவசாயிகளின் மத்தியில் ஏற்படுத்து தல்.

5. இத்திட்டத்தின் கீழ் வரும் தாவர அரண்களுக்கு இடைப்பட்ட நிலச் சொந்தக்காரர்களும், புஞ்சைப் பகுதி விவசாயிகளும் தீவிர விவ சாயம் செய்து வேளாண்மையில் மேம்பாடு அடைய உரிய இடு பொருட்கள் அவர்களுக்கு கிடைக்க வழி செய்தல்.

6. தற்போது தரிசு நிலம் சொந்த மாக வைத்திருந்து அதில் எந்தவித வேளாண்மையும் செய்யாமல் இருக் கும் நிலச் சொந்தக்காரர்களுக்கு, நீண்ட கால அடிப்படையில் வேலை கிடைக்கும் வாய்ப்புகள் ஏற்படுத்து தல்; அத்துடன் நிலமற்ற கூலி வேலையாட்களுக்கும், குறு விவ சாயிகளுக்கும் அன்றாடம் வேலை கிடைக்கவும் வழி வகை செய்தல்.

நெல்லை மாவட்டம் ஆலங் குளம் ஒன்றியத்தில் தரிசு நிலங் களில் மரங்கள் எவ்வாறு வளர்க்கப் படுகின்றன என்பதை விவசாயி களுக்கு விளக்க ஒரு எக்டேர் நிலப் பரப்பில் ஒரு மாதிரிப் பண்ணை (Observation Plot) உருவாக்கப்பட்டது. இந்த மாதிரி தோட்டத்துக்கு அரசு, ஆண்டுக்கு ரூ.12 ஆயிரம் வீதம் 3 ஆண்டுகளுக்கு ரூ.36 ஆயிரம் மானியம் வழங்குகிறது. மாவட்டத் தின் மற்ற பகுதிகளிலிருந்து விவசாயிகள் இங்கு அழைத்து வரப் பட்டு பார்வையிட வசதிகள் செய்து தரப்படுகிறது.

'டென்மார்க்' அரசு 15 வருட கால இடைவெளியில் 3 கட்டங் களில் நீர்ப்பிடிப்புப் பகுதி மேம் பாட்டுத் திட்டங்களை நிறை வேற்றிட உதவிகள் செய்ய முன் வந்துள்ளது. அதன் முதல் கட்டமாக 1.10.91 முதல் 1.4.94 வரை 3½ வருடத்தில் முதல் 6 மாத காலம் துவக்கப்பணிகள் செய்யவும் மீத முள்ள 3 வருடம் திட்டம் நிறை வேறும் காலமாகவும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

17,500 எக்டேர் பரப்பில் 3½ வருடத்தில் முதல் கட்டப்பணிகள் நிறைவேற்றிட அரசு ரூ.6.47 கோடி ஒதுக்கியுள்ளது.

இந்தத் தொகையில், டென்மார்க் நாடு 'டானிடா' (டென்மார்க் சர்வதேச மேம்பாட்டு முகமை) என்ற உதவித் திட்டத்தின் மூலம் ரூ.6.25 கோடி வழங்குகிறது. மீத முள்ள 0.22 கோடி தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

'விரிவானநீர்ப்பிடிப்புப் பகுதி மேம் பாட்டுத் திட்டம்' - இரண்டாவது கட்டம்

நெல்லை மாவட்டத்தில் டானிடா நிறுவன உதவியுடன் செயல்படுத்தப் படும் 'விரிவானநீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்' இரண் டாம் கட்டப் பணிகள் 1.4.1994 முதல் செயல்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக இந்தத் திட்டத்தின் மேற்பார்வைப் பொறி யாளர் திரு என். சத்தியதாஸ் தெரி வித்தார். இந்தத் திட்டம் ரூபாய் 45 கோடி செலவில் 7 ஆண்டுகள் செயல்படுத்தப்படும். இதன்மூலம் 55 ஆயிரம் எக்டேர் நிலங்கள் பயன்பெறும். முதல் கட்டத்தில் 17,500 எக்டேர் பரப்பு நிலங்கள் ரூ.6.47 கோடி செலவில் பயன் பெறத் திட்டமிடப்பட்டுள்ளது.

இரண்டாவது கட்டத்தின் மூலம் தென்காசி, சங்கரன்கோயில், ராதா புரம், நான்குநேரி ஆகிய வட்டங் களிலுள்ள சுமார் 118 கிராமங்கள் பயன்பெறும். முதல் கட்டத்தில் 34 கிராமங்கள் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைந்தன; முதல் கட்டப் பணிகள் 31.3.1994-இல் முடி வடையும்.

பருவ மழை

நெல்லை மாவட்டம் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு ஆகிய இரு பருவ மழைகளினாலும் பயன்பெறுகிறது. ஜூன் முதல் செப்டம்பர் வரை பெய்யும் தென்மேற்குப் பருவ மழையினால் அம்பாசமுத்திரம் திருநெல்வேலி, பாளையங் கோட்டை போன்ற இடங்களும் சிவகிரி, நான்கு நேரி வட்டாரங்களில் சில பகுதிகளும் பாசனத் திற்குக் கணிசமாக நீரைப் பெறுகின்றன. அக்டோபர் முதல் டிசம்பர் திங்கள் வரை பெய் யும் வடகிழக்குப் பருவ மழையினால் இந்த மாவட்டம் முழுவதும் பாசனத்திற்கான தண்ணீ ரைப் பெறுகிறது.

நெல்லை மாவட்டத்தின் சராசரி மழை அளவு 814.8 மி.மீட்டர் ஆகும்.

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்:

இடு பொருட்கள் வழங்கும் விழா

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தின் சார்பில் குறுவை 93 தொடக்க விழா மற்றும் இடு பொருட்கள் வழங்கும் விழா நன்னிலத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு கு.ப. கிருஷ்ணன் அவர்கள் கலந்து கொண்டு, விழாப் பேருரை ஆற்றுகையில்:-

''இந்த ஆண்டு மட்டும் இம் மாவட்டத்தில் 660 கி.மீ. நீளத் திற்குப் பாசன வாய்கால்கள் தூர் வாரும் பணிகள் மேற்கொள்ளப் பட்டது.

குறுவையில் சர்குபடி செய்யக் கூடிய ஆடுதுறை-36 விதை நெல் கிலோ 5 ரூபாய் 30 காசுக்கு விற்கப்படுகிறது. ஜே.ஜே.92 நெல் விதை 128 விவசாயிகளுக்கு மாவட் டம் முழுவதும் வழங்கப்பட்டுள்ளது. இந்த நெல் வெளி நாட்டில் கிலோ ரூபாய் 60-க்கு விற்கப்படுகிறது. இந்த நெல் ஒரு ஏக்கர் சாகுபடி செய்தால் 16,000 ரூபாய் வரு மானம் கிடைக்கிறது. இதில் விவசாயிகளுக்குச் செலவு - ஏக்க ருக்கு ரூபாய் 6,000 விவசாயி களுக்கு நிகர லாபம் ரூபாய் 10,000.

கலிங்கா என்ற நெல் ரகம் 70, 75 நாட்களுக்குள் பலன் கொடுக்கக் கூடிய நெல். இந்த நெல் வறட்சி யையும் தாங்கக் கூடிய நெல் ரகம். தாய் நிறுவனம், என்கோபெட் மூலம் குறைந்த விலையில் விவசாயி களுக்கு உரங்கள் வழங்கப்படும். இந்த உரங்களை விவசாயிகள் தங் களுக்கு வழங்கப்பட்டுள்ள அடை யாள அட்டையினைப் பயன்படுத் திப் பெற்றுக் கொள்ளலாம்.

விவசாயத் துறையின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக் கும் அடையாள அட்டையின் மகத் துவம் போகப் போகத்தான் தெரி யும். விவசாயிகளுக்கு வேளாண் மைக்குத் தேவைப்படும் டயர் வண்டி, தார்ப்பாய் போன்ற பொருட்கள் தரமானவைகளாகக் கிடைப்பதற் காகத் தான் 'என்கோபெட்' மூலம் வழங்கப்பட்டு வருகிறது. பவர் டிரில்லர் பெறும் விவசாயிகள் ரூ.10,000 மானிய விலையில் டிரெய்லரும் பெற்றுக் கொள்ளலாம்.

இந்தியத் துணைக் கண்டத்தி லேயே தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் தான் சிறந்த பல்கலைக் கழகமாக விளங்குகிறது. இப் பல்கலைக் கழகத்தில் பணி ஆற்றும் விஞ்ஞானிகள் நல்ல உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்களைக் கண்டுபிடித்து வழங்குகிறார்கள். எனவே, இம் மாவட்டத்தில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் அரசின் மூலம் வழங்கப்படும் சலுகைகளை உரிய முறையில் பயன் படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்க உங்களது வீட்டையும், நாட்டையும் உயர்வடையச் செய்ய வேண்டும். அதேபோல் உணவு உற்பத்தியில் தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களிலேயே உங்களது மாவட்டம் முதலிடம் வகிக்க உங் களது உழைப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்று கூறினார்.

நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு கே. ஸ்கந்தன், பேசுகையில் - ''இம் மாவட்டத்தில் காவிரி, வெண் ணாறு, கல்லணைக் கால்வாய் மூலம் 2,73,434 எக்டேர் பாசன வசதி பெறுகிறது. இம் மாவட்டத் தில் 1,77,503 விவசாயிகள் 4,00,856 விவசாயத் தொழி லாளர்கள் உள்ளனர். இம் மாவட்டம் விவசாயத்தை முதன்மை யாகக் கொண்ட மாவட்டம். கடந்த ஆண்டு குறுவை, சம்பாப் பருவத் தில் 8 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு மாவட் டம் வரலாறு காணாத சாதனை படைத்துள்ளது'' என்றார்.

இம் மாவட்டத்தில் - தமிழக முதல்வரின் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் ரூ.57 இலட்சம் செலவில் பாசன வாய்க்கால்கள் தூர்வாரும் பணி மேற்கொள்ளப் பட்டு முடியும் தருவாயில் உள்ளது. அத்துடன் குடி மராமத்துப் பணி களும் சீரிய முறையில் நடைபெறப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

வேளாண்மைத் துறை இயக்குநர் திரு நை. கோவிந்தன் தனது வர வேற்புரையில் - ''கடந்த ஆண்டு இம் மாவட்டத்தில் எக்டேருக்கு 7 டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டு உள்ளது. இந்த ஆண்டு எக்டேருக்கு 10 டன் நெல் விளைச்சல் பெறச் சிறப்புத் திட்டம் ஒன்று செயல் படுத்தப்பட உள்ளது'' என்றார்.

விழாவில் தமிழ்நாடு கை வினைப் பொருட்கள் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு ஓ.எஸ். மணியன், வேளாண் துறைச் செயலாளர் திரு ஜி. ரங்கா ராவ், தமிழ்நாடு வேளாண் பொறி யியல் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு கு. செல்ல முத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கோபால், திரு எஸ். ஆசை மணி, திரு எம். பூராசாமி, திரு து. மூர்த்தி, திரு கு. சீனிவாசன், திரு ஆர். கோடிமாரி, திரு பழனிச் சாமி, திரு வே. தம்புசாமி ஆகி யோர் பேசினார்கள்.

இவ் விழாவில், ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தித் திட்டத்தின் கீழ், ரூ.4 இலட்சம் மானியத்தில் விவ சாய இடுபொருட்களை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

முன்னதாக, மயிலாடுதுறையில் காவிரி டெல்டா நீர்ப் பாசனக் கருத்தரங்கில் கலந்துகொண்டு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

வரும் குறுவைப் பருவத்தில் இம் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு 1,152 டன் விதை, 24 ஆயிரம் டன் உரங்கள், 120 டன் சிங்க் சல்பேட், பெஸ்டிசைட், 1.5 டன் நுண்ணுயிர்ப் பொருட்கள், 25 ஆயிரத்து 400 டன் களைக்கொல்லி ஆகியவை தேவை உள்ளது. இந்தத் தேவையினை விவசாயிகளுக்குப் பூர்த்தி செய்ய அரசு தயார் நிலையில் உள்ளது.

விவசாயப் பெருங்குடி மக்களுக்குச் சாகுபடியை மேற்கொள்ள கூட்டுறவு வங்கிகள் மூலம் 113 கோடி ரூபாய் பயிர்க் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய பயிர்க் கடன் திருப்பிச் செலுத்திய 7-வது நாள் கடன் அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் இம் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் முன்னோடி வங்கியின் மூலம் 3000 விவசாயிகளைக் கண்டறிந்து அவர்களுக்குப் பயிர்க் கடன் வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர் தகுந்த நடவடிக்கை எடுப்பார்.

இம் மாவட்டத்தில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் கழற்சி முறை பாசனத்தை ரத்து செய்யக் கருத்துத் தெரிவித்தார்கள். அதை ஏற்று சுழற்சி முறைப் பாசனத்தை ரத்து செய்யப்படும்.

வரும் குறுவைப் பருவத்தில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தைக் கடைப்பிடித்து உற்பத்தியை விவசாயிகள் பெருக்க வேண்டும். எலியை ஒழிப்பதற்கு முழுமையான ஒத்துழைப்பைத் தந்தால்தான் எலியைக் கட்டுப்படுத்த முடியும். விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தங்களுடைய விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்'' என்று கூறினார்.

இக்கூட்டத்தில் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் விவசாயிகள் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். இறுதியில், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் திரு த. பாலசுப்பிரமணியன் நன்றி கூறினார்.

எம். பிச்சையா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்

★ என்றும், நம் இரண்டு பேருக்குத்தான் வாழ வேண்டும் என்று மனமக்கள் நினைக்கக் கூடாது. சோறில்லை, ஒருத்தன் பட்டினி கிடக்கிறான் என்றால், நாம் எவ்வளவு கொஞ்சமாக சாப்பாடு நம்மிடத்திலே இருந்தாலும் அதிலே கொஞ்சம் கொடுக்கிறோமோ, அந்தக்குணம் இந்த உதவி பெறுபவர்களைவிட செய்கிறவர்களுக்கே பெரிய திருப்தி அளிக்கிறது. 4 பேர் உட்காரும் இடத்தில் இன்னொருவர் வந்துவிட்டால் நாம் இடத்தை நெருக்கிக் கொண்டாவது தருகிறோம் என்றால் அதில் ஒன்றும் கஷ்டம் தோன்றுவதில்லை. உதவி அளிக்கும்படியாக வாய்ப்புக் கிடைத்ததே என்ற மகிழ்ச்சியில் நாம் அதைப் பொருட்படுத்துவது கிடையாது. வாழ்க்கையில் அந்த உணர்ச்சியைப் பெற்று வாழ்ந்தால், பொது நலத்திற்கும் நாம் பயன்பட்டவர்களாக இருக்க முடியும்.



திருநெல்வேலி மாவட்டம்

பால் வளம் பெருக கால் நடைப் பராமரிப்பு

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில், ஒரு கால்நடை மருத்துவப் பெருமனை, ஐந்து கால்நடை மருத்துவமனைகள், ஒரு கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு, முப்பத்தாறு கால்நடை மருந்தகங்கள், 75 கால்நடைக் கிளை நிலையங்கள் மூலம் இம் மாவட்டத்திலுள்ள கால்நடைகளிலும் நலன் பாதுகாக்க சிகிச்சை, தடுப்பூசி பணி மேற்கொள்ளப்படுகிறது.

திருநெல்வேலி அபிஷேகப்பட்டியில் ஒரு மாவட்டக் கால்நடைப் பண்ணை செயலபட்டு வருகிறது. அதில் செயற்கைமுறை இனவிருத்திக்கு வேண்டிய உறைவிந்துக் குச்சிகள் மற்றும் திரவ நைட்ரஜன் உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் உறைவிந்துக் குச்சிகள் மூலம், இம் மாவட்டம் தவிர இதர மாவட்டங்களின் பால் உற்பத்தியை மேம்படுத்த உயர் இனக் காளைகளிலிருந்து சேகரிக்கப்படும் விந்து மூலம் செயற்கைமுறைக் கருவூட்டல் பணி மேற்கொள்ளப்படுகிறது.

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், திருநெல்வேலி மாவட்டக் கால்நடைப் பண்ணையில் செயற்கை முறை இனவிருத்தியாக, 1992-93 நிதியாண்டில் ரூ.10 இலட்சம் பெறுமான உயர் இன முர்ரா காளைகள் வெளி மாநிலத்திலிருந்து வாங்கப்பட்டன.

இம் மாவட்டத்தில் 1992-93 சிறப்பு மத்திய உதவித் திட்டத்தின் கீழ், 'தாட்கோ' மானியத்துடன் இந்து ஆதி திராவிட மக்களுக்கு 100 ஆடு அலகுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 100 இந்து ஆதிதிராவிடர்கள் பயன் பெற்றுள்ளனர். இவர்களுக்காக ரூ.4,05,000 மானியம் வழங்கப்பட்டுள்ளது.

இம் மாவட்டத்தில் உலக வங்கித் திட்டத்தின் கீழ் கால்நடைத் தீவன வளர்ச்சித் திட்டம் தொடங்கிக் கால்நடை வளர்ப்பு மற்றும் தீவன வளர்ச்சித் துணை இயக்குநரால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு எல்லா விதப் புல் விதை கள்று இலவசமாக வழங்கப்படுகிறது.

பால் வளத்தை மேலும் அதிகரிக்க கால்நடை நிலையங்களில் செய்யப்பட்டு வரும் கருவூட்டல் மூலம் பிறக்கும் கன்றுகளை நல்ல முறையில் வளர்க்கக் கால்நடை வளர்ப்போருக்கு தக்க அறிவுரை வழங்கி, அக் கன்றுகளின் உடல் நலம் பேணும் பொறுப்பைக் கால்நடைப் பராமரிப்புத்துறை ஏற்று, இம் மாவட்டத்தில் சுமார் 5000 கன்றுகள் இத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுப் பராமரிக்கப்படுகிறது.

இறைச்சி உற்பத்தியை அதிகரிக்க, இம் மாவட்டத்திலுள்ள செம்மறி ஆடுகளுக்கு 3 மாதத்திற்கு ஒருமுறை குடற்புழு நீக்கம் செய்யும் பணி, கால்நடை நிலையங்கள் மூலம் செய்யப்பட்டு வருகிறது.

முதல்வரின் நலத்திட்ட உதவிகள்

மாண்புமிகு முதல்வர் அவர்களின் நலத் திட்டத்தின் கீழ் நெல்லை மாவட்டத்தில் மார்ச் 1993 முடிய மொத்தம் 10,007 நபர்களுக்கு 1112.30 இலட்ச மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தப் பயனாளிகளில் 3,540 பேர் பெண்கள். மொத்த உதவித் தொகையில் அரசு மானியம் ரூ.436.88 இலட்சம் ஆகும்.

திரையரங்குகள்

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் மொத்தம் 117 திரையரங்குகள் உள்ளன. இவற்றில் 55 நிரந்தரத் திரையரங்குகளும், 51 நடமாடும் திரையரங்குகள் (Touring Talkies) அடங்கும்.

தருமபுரி மாவட்டம்:

தோட்டக்கலை வளர்ச்சி

தருமபுரி மாவட்டம் தோட்டக்கலை மேம்பாட்டிற்கு அதிகமான வளத்தைத் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது. இம்மாவட்டத்தில் நிலவும் தட்பவெப்ப நிலை பலவகையான தோட்டக்கலைப் பயிர்களைப் பயிரிட உகந்ததாக உள்ளது. தருமபுரி மாவட்டத்தில் உள்ள மொத்தப் பயிரிடும் பரப்பில், சுமார் 80 சதவிகிதம் மானாவாரி நிலமாகும்.

இம்மாவட்டத்தில் ஆண்டுச் சராசரி மழையளவு 850 மி.மீ. இது தமிழகத்தின் சராசரி மழையளவைவிட 10 சதவிகிதம் குறைவானதாகும். தருமபுரி மாவட்டத்தில் பல பகுதிகள் பருவமழை தவறுவதன் காரணமாக அடிக்கடி வறட்சிக்கு இலக்காகின்றன. இதனால் மானாவாரிப் பகுதியில் தொன்றுதொட்டுப் பயிரிடப்படும் சிறு தானியம், பயறு வகைகள் மிகவும் பாதிக்கப்படுவதுடன் மிகக் குறைந்த வருவாயையே அளிக்கிறது. இந்நிலைமையைக் கருதியும், தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிடுவதன் முக்கியத்துவத்தைக் உணர்ந்தும் இம்மாவட்ட விவசாயிகள் தங்கள் நிலங்களில் சிறு தானியங்கள் பயறு வகைகள் பயிரிடுவதைத் தவிர்த்துப் பல ஆண்டுகளாகத் தோட்டக்கலைப் பயிர்களான மா, புளி, சீதா, போன்றவைகளையே பெரிதும் பயிரிட ஆரம்பித்து உள்ளனர்.

அத்துடன், நீர்ப்பாசனம் உள்ள பகுதிகளில் கொய்யா, சப்போட்டா, மாதுளை போன்றவைகளையும் பயிரிடுகின்றனர்.

இம்மாவட்டத்தில் மொத்தம் சாகுபடி பரப்பில் 8 சதவிகித பரப்பு பழங்கள் மற்றும் காய்கறிகளின் கீழ் உள்ளது. இதுவே தமிழகத்தில் 4.80 சதவிகிதமாக உள்ளது. பழப்பயிர்களில் மா மட்டும் இம்மாவட்டத்தில் 18,759 எக்டேரில் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பரப்பு, தமிழகத்தில் மா பரப்பில் 35 சதவிகிதமாகும். மாநில அளவில் திராட்சை மற்றும் கொய்யா சாகுபடி பரப்பில் முறையே 18 சதவிகிதம் மற்றும் 11 சதவிகிதத்தைத் தருமபுரி மாவட்டம் கொண்டுள்ளது.

தமிழகத்திலேயே தருமபுரி மாவட்டம் பழப்பயிர்கள் பரப்பில் 15 சதவிகிதத்தைத் தன்னகத்தே கொண்டு முதலிடத்தை வகிக்கிறது.

இம்மாவட்டத்தில் தக்காளி, முட்டைக் கோஸ், மரவள்ளி அதிகளவில் பயிரிடப்பட்டு காய்கறி பயிரிடுதலில் தமிழகப் பரப்பில் 9 சதவிகிதம் சாகுபடி செய்யப்படுகிறது.

வாசனை மற்றும் தாளிதப் பொருளாக உபயோகப்படுத்தப்படும் புளி தமிழகத்தில் 12 சதவிகிதப் பரப்பில், அதாவது 1,659 எக்டேரில் தருமபுரியில் மட்டுமே பயிரிடப்படுகிறது.

இம்மாவட்டம் மா வளர்ப்பு மற்றும் உற்பத்தியில் முதலிடம் வகிப்பதால், இப்பழப்பயிரின் வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு அகில இந்திய மாங்கனி விழா ஒன்று கடந்த ஆண்டு ஜூன் 5 முதல் 9 வரை கிருஷ்ணகிரியில் நடத்தப்பட்டது. இக்கண்காட்சியில் கர்நாடகம், மகாராட்டிரம், மத்தியப்பிரதேசம், ஆந்திரா, பாண்டிச்சேரி உட்பட பல மாநிலங்களிலிருந்தும் 500-க்கும் மேற்பட்ட காட்சிப் பொருட்கள் இடம் பெற்றிருந்தன. சிறந்த காட்சிப் பொருட்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் மதிப்புள்ள பரிசுக் கோப்பைகள் வழங்கப்பட்டன.

1992-93-ஆம் ஆண்டில்...

தருமபுரி மாவட்டத்தில் தோட்டக்கலை வளர்ச்சிக்குக் கீழ்க்கண்ட திட்டங்கள் நடப்பு ஆண்டில் (1992-93) செயலாக்கப்படுகின்றன.

1. ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம்.
2. ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம்.
3. வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம்.
4. அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்.
5. அகில உலகத் தொழிலாளர் ஒருங்கிணைப்புத் திட்டம்.

ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம்

தருமபுரி மாவட்டத்தில் தோட்டக்கலைச் சாகுபடிக்கு நிலவும் சாதகமான சூழ்நிலையை நன்கு பயன்படுத்துமுகமாக நிரந்தரத் தோட்டக்கலைப் பயிர்கள் விவசாயிகளிடையே 50 சதவிகித மானிய விலையில் வழங்கப்பட்டு, புதிய தோட்டங்கள் அமைக்க உதவி செய்யப்படுகிறது. அதிக விளைச்சல் தரும் காய்கறி விதைகள் முழு விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. நடப்பு ஆண்டில் 875 எக்டேர் பரப்பில் பழப்பயிர்களும், 875 எக்டேர் பரப்பில் காய்கறிகளும் சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் நிதி ஒதுக்கீடு ரூ.10.500 இலட்சமாகும்.

வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம்

இத்திட்டம் இம்மாவட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பழச்செடிகள் விவசாயிகளுக்கு 50 சதவிகித மானிய விலையில் வழங்கப்படுகிறது. மேலும், கிடைக்கும் நீரினைச் சிக்கனமாகப் பயன்படுத்தக் கசிவு நீர்ப் பானைகளும், கற்றாழை வேலி அமைக்க முழு மானியமும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் 400 எக்டேர் பரப்பு மா சாகுபடிக்குக் கொண்டுவரப் படவுள்ளது. இத்திட்டத்தின் நிதி ஒதுக்கீடு ரூ.6 இலட்சமாகும்.

ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாட்டில் பழங்குடியினர் நலம் கருதியும் அவர்களின் சமூக பொருளாதார தரத்தை மேம்படுத்தவும், மலைப் பகுதிகளில் தோட்டக்கலைப் பயிர்ப் பரப்பினை அதிகரிக்கவும் ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுகிறது. தருமபுரி மாவட்டத்தில் இத்திட்டம் சித்தேரி மலைப்பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது.

பழங்குடியினருக்குப் பழத் தோட்டங்கள் அமைக்கப் பழச்செடிகள், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், வேளாண் கருவிகள் ஆகியவை 100 சதவிகித மானிய விலையில் வழங்கப்படுகின்றன. நடப்பு ஆண்டில், 80 எக்டேர் பரப்பு, பழப்பயிர்கள் சாகுபடிக்குக் கொண்டு வரப்படவுள்ளது. இத்திட்டத்தின் நிதி ஒதுக்கீடு ரூ.2.540 இலட்சமாகும்.

அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்

இம்மாவட்டத்தில், திம்மாபுரத்தில் ஓர் அரசு பழப்பண்ணையும், ஜீனூரில் ஓர் பெரிய அளவு பழப்பண்ணையும் செயல்படுகின்றன. தரமான பழச் செடிகளை விவசாயிகளுக்கு உற்பத்தி செய்து விநியோகம் செய்வதும், விவசாயிகளிடையே இப்பண்ணைகளை ஓர் மாதிரி தோட்டக்கலைப் பண்ணைகளாக மாற்றுவதும் குறிப்பிடத்தக்கது.

தவிரவும், வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் போளையம்பள்ளியிலுள்ள தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் நாகமங்கலத்திலும், தோட்டக்கலைப் பண்ணைகள் உள்ளன. அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் நடப்பு ஆண்டு 3.90 இலட்சம் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட உள்ளன. இதற்கென ரூ.7.62 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அகில உலகத் தொழிலாளர் ஒருங்கிணைப்புத் திட்டம்

இத்திட்டம் தளி வட்டாரத்தில் செயல்படுத்தப்படுகிறது. இந்தப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால், இப்பகுதியில் உள்ள சிறு விவசாயிகளுக்கு ஒரு விவசாயிக்கு ஒரு ஏக்கர் என்ற அளவில் அரசு செலவில் குழி எடுத்து மா ஒட்டுச் செடிகள் 100 சதமானிய விலையில் தட்டுத் தரப்படுகிறது.

உரிய தொழில் நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. நடப்பு ஆண்டு 22 எக்டேர் பரப்பு 'மா' சாகுபடிக்குக் கொண்டுவரப்படுகிறது. இத்திட்டத்திற்கென ரூ.4.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ●

தமிழரசு

புதிய சந்தா விவரம்

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ.72
அரையாண்டுச் சந்தா ... ரூ.36

'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ.36

சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்
சென்னை-600 002.

தமிழரசு

படிக்க — பயன்பெற — பாதுகாக்க



'நூல்நயம்' பகுதிக்கு இரண்டு பிரதிகள் அனுப்ப வேண்டும்.

— ஆசிரியர்

பட்டத்து யானை

ஆசிரியர்: கவியரசு நா. காமராசன்
வெளியீடு:

மகாகவி பதிப்பகம்
2, ஜயசங்கர் தெரு
சென்னை-33

பக்கம்:100 விலை:ரூ.16/-

முதல் கவிதையே நம் இதயத்தில் இடம் பிடித்துவிடுகின்றது. அது:

''நான் வாழும் வரை
என் கவிதைகள்
உங்கள் உதடுகளில் மலரும்
எனது மரணத்திற்குப் பிறகு
அவை உங்கள்
இதயங்களில் விதைக்கப்படும்''

கவிஞன் என்பவன் யார்? இந்த வினாவிற்குப் பதிலாக வருவதுதான்,

''கவிஞன் ஒளியின் நிழலல்ல;
அவன் இரவின் ஒளி''

என்கிற வைர வரிகள்.

இப்படி தேன்சொட்டும் கவிதை வரிகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

'கல்யாண மண்டபம்' எனும் கவிதை காலத்தின் கண்ணாடியாய்த் திகழும் அற்புதக் கவிதை. இதேபோல, பொய் மான்கள், சாம்பல் நெருப்பு, மனிதனும் மரணமும், கல் இப்படி ஏராளமான கவிதைகள் இதிலே உண்டு. மெச்சத் தகுந்த அழகிய அச்சமைப்பு.

— பி.வி.கிரி.

பேரருள் வழங்கும் சீரடி சாயிபாபா

ஆசிரியர்: ஸ்வாமி முருகானந்தா
வெளியீடு:

கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்
92 கங்கையம்மன் கோயில் தெரு,
சென்னை-26.

பக்கம்:112 விலை:ரூ.16/-

சீரடி சாயிபாபா சிறப்பும் செயலும் அழகுறத் தொகுக்கப்பட்டுள்ளன. வாழ்க்கை வரலாற்றுடன், அவரது மகிமை குறித்தும் பல நிகழ்வுகளை இழைய விட்டிருப்பது நூலின் சிறப்பாகும்.

'உந்தன் மனம் நந்தவனம்'

ஆசிரியர்: தேவிபாலா
வெளியீடு:

மயிலவன் பதிப்பகம்
92, கங்கையம்மன் கோவில் தெரு
வடபழனி, சென்னை-26.

பக்கம்:320 விலை:ரூ.40/-

கிருஷ்ணாவை அவன் கல்லூரியில் பயிலும் கோகுல் வேண்டி, விரும்பி நட்புக் கொள்கிறான். கோகுலின் ஊமைத் தங்கை சுமா கிருஷ்ணாவின் இதயத்தில் இடம் பிடிக்கிறாள். இரண்டு நடுத்தரக் குடும்பங்களிலும் நடைபெறும் அடுக்கடுக்கான சம்பவங்கள் அழகாக விவரிக்கப்படுகின்றன.



கதையை சிறிதும் அலுப்புத்தட்டாமல் விறுவிறுப்பாகக் கொண்டு சென்றாலும், கிருஷ்ணா பாத்திரம் மட்டும் நெருடலை ஏற்படுத்துகிறது.

என். குமாரசாமி

திருக்குறள் ஆய்வுச் சிந்தனைகள்

ஆசிரியர்: புலவர் குமரன்
வெளியீடு:

கவிச்சிங்கம் பதிப்பகம்
உத்தமபாளையம்
மதுரை-625 533

பக்கம்:83 விலை:ரூ.15/-

திருக்குறள் கடல் போன்றது. அதில் ஆழ்ந்து முத்தெடுப்போர் பலர். அந்த வகையில் பல அழகிய அரிய முத்துக்களைத் தந்துள்ளார் இந்நூலாசிரியர்.

முற்றிலும் புதிய கோணத்தில் புதிய கண்ணோட்டத்தில் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள்.

பி.வி.ஜி.

தனித் தமிழியக்கம்

ஆசிரியர்: முனைவர் கு. திருமாறன்
வெளியீடு:

மருதம்
672, பெரியார் சாலை,
கருணாநிதிநகர், திருச்சி-620 021.

பக்கம்:344 விலை:ரூ.60/-

தனித் தமிழியக்கம் என்கிறபோது, தனித் தமிழ்த் தந்தை மறைமலையடிகளார், மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் ஆகியோர் முக்கிய இடம் பெறுகின்றனர். தனித் தமிழியக்க மலர்ச்சிக்கு அவர்கள் ஆற்றிய தொண்டு அளப்பரியது.

இந்நூலில், தனித் தமிழியக்கத்தின் தோற்றம் வளர்ச்சி நன்கு ஆராயப்பட்டுள்ளது. தனிநிகைகளில் எப்படியெல்லாம் தமிழ்ச் சொற்கள் கையாளப் பெற்றுள்ளன என்பதை, தக்க ஆதாரங்களுடன் நிரூபிக்கிறது இந்நூல். அதே போல, ஆட்சி மொழிச் சொற்களும் வளர்ந்துள்ள நிலைமைகளை நூல் நன்கு விளக்கி, தனித் தமிழியக்கம் மக்கள் இயக்கம் என்பதை நிலைநாட்டுகிறது. தமிழ் ஆர்வலர் மற்றும் ஆய்வு மாணவர்க்கு இந்நூல் மிகச் சிறந்த கையேடாக வழிகாட்டியாக அமையும் என்றால் அது மிகையல்ல.

மறைமலை

தமிழ் வளர்த்த பெரியார்:

டாக்டர் மு.வரதராசனார்

மு.வ. என்னும் இரண்டு எழுத்தைத் தமிழுலகம் நன்கறியும். இந்த இரண்டு எழுத்துக்களுக்குள் ஒளி(ர்)ந்து கொண்டிருக்கும் டாக்டர் மு. வரதராசனார் எனும் திருப்பெயர், திருவள்ளுவன் புகழ் போல காலமெல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கும் என்றால் அது மிகையல்ல.

எளிமை, இனிமை, சீர்மை இவற்றின் மொத்த உருவாக மு.வ. விளங்கினார். அவரது படைப்புகளும் அவரைப் போலவே விளங்கின.

அவருடைய வாழ்க்கை, தமிழ்த் தொண்டு, எல்லாமே மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருந்தன. அவர் சொல்லும் செயலும், நிஜமும் நிழலுமாக இணைந்தே இருந்தன.

அவர் எதை எழுதினாலும் அதில் ஒரு செய்தி (Message) நிச்சயம் இருக்கும். எந்தப் பொருளையும் எளிமையாக எழுதுவது அவரது இயல்பு.

ஒரு சமயம் அவரைப் பேட்டி காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நேரம் போவதே தெரியவில்லை.

அலை அலையாய் எண்ணங்கள் வந்து மோத, மலைமலையாய்க் கருத்துக்கள் வந்து குவிந்தன. சிந்தனைச் சிதறல்கள் வைரக் கற்களாய் பின்னின. சிறந்த ஒரு தமிழறிஞரைச் சந்தித்து அளவளாவியது கருதி மகிழ்ந்தேன். இதேபோல பலருக்கும் இத்தகைய நல்வாய்ப்பு ஏற்பட்டிருக்கக் கூடும்.

டாக்டர் மு.வ.வின் பெரு வாழ்வு, தமிழுக்குக் கிடைத்த தவப்பயன் என்றே நாம் குறிப்பிட வேண்டும்.

அந்த வாழ்வின் வடிவங்களைப் பார்ப்போமா?

மு.வ., வட ஆர்க்காடு மாவட்டம் வேலம் என்னும் குக்கிராமத்தில், 25.4.1912-இல் பிறந்தார். பெற்றோர் முனுசாமி, அம்மாக்கண்ணு அம்மையார். மு.வ.-வுக்கு முதலில் இட்ட பெயர் 'திருவேங்கடம்' என்பதே. வரதராசன் என்பது பாட்டனாரின் பெயராகும். குடும்ப மரபுப்படி இந்தப் பெயர் இடப்பட்டது.

மு.வ. தன் பாட்டி நரசம்மாவிடம் வளர்ந்தார். பாட்டியின் அன்பு மழையில் நனைந்தார். பிற்காலத்தில் தாம் எழுதிய நெடுங்கதை ஒன்றில் ('விடுதலையா?') தம் பாட்டியை நினைவு கூர்ந்திருக்கிறார் என்றால், அவர் பாட்டியின் மீது வைத்திருந்த அளவில்லாத அன்பை நாம் தெரிந்து கொள்ளலாம்.

இயற்கையின் எழிலில் யார்தான் இதயத்தைப் பறிகொடுக்கமாட்டார்கள்! மு.வ., அன்னைப் பூமியிலே அழகுற வீற்றிருக்கும் மாஞ்செடி கொடிகள், அருவி, ஆறு, மலர்கள் என்னும் இயற்கைக் காட்சிகளில் மனத்தைப் பறி கொடுத்தார். பொழுது போவதே தெரியாமல், பொன்மாலைப் பொழுதுகளைக் கழித்தார்.

மு.வ., வேலம் மற்றும் வாலாசாவில் தொடக்கக் கல்வி பயின்றார். பள்ளியில் சிறந்த மாணவனாக விளங்கி பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்றார். அப்போது அவருக்கு வயது பதினாறு. 1928-இல், திருப்பத்தூர் தாலுக்கா அலுவலகத்தில் எழுத்தராகப் பணியாற்றினார். அப்போது உட்ல நலம் குன்றிய நிலையில், வேலையை விட்டு விலகினார். வீட்டிலேயே ஓய்வு பெற்று வந்தார். அந்த நிலையில் அவர், திருப்பத்தூர் முருகைய முதலியாரிடம் தமிழ் பயிலத் தொடங்கினார். 1931-இல், மு.வ., வித்துவான் முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று, தொடர்ந்து படித்து, 1935-இல் வித்துவான் பட்டம் பெற்றார்.

வித்துவான் தேர்வில், மாநிலத்திலேயே முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு திருப்பணந்தாள் பரிசாக ரூ.1000 பெற்றார்.

1939-இல் பி.ஓ.எல். பட்டமும், 1944-இல் எம்.ஓ.எல் பட்டமும் பெற்றார். 1948-இல், சென்னைப் பல்கலைக் கழகத்திலேயே, முதன்முதலில் தமிழில் டாக்டர் பட்டம் பெற்றவர் மு.வ., ஒருவரே. 1972-இல், அமெரிக்காவிலுள்ள ஹாஸ்டர் கல்லூரி, அவருக்கு இலக்கியப் பேரறிஞர் (டி.லிட்.,) என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கியது. இதிலும் மு.வ.வுக்கு ஒரு பெருமை உண்டு. அமெரிக்கப் பல்கலைக் கழகம் ஒன்றில் டி.லிட்., சிறப்புப் பட்டம் பெற்ற முதல் தமிழறிஞர் இவரே ஆவார்.

பிறகு மு.வ., நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். அப்போது பல இதழ்களில் கட்டுரைகள் எழுதத் தொடங்கினார்.

1935-இல் இவருக்குத் திருமணம் நடந்தது. மாமன் மகள் ராதாவை மணந்தார்.

டாக்டர் அ. லட்சுமணசாமி முதலியார் உதவியால், சென்னை பச்சையப்பன் கல்லூரியில், விரிவுரையாளராளார் (1939-1944). அப்போது அங்குத் தமிழ்த்துறைத் தலைவராக இருந்தவர் மோ. கந்தசாமி முதலியார் (1889-

1945). இவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆசிரியராவார்.

இந்தக் காலகட்டத்தில்தான் மு.வ., நூல் எழுதுவதில் முதன்முதலாக ஈடுபட்டார். பொதுவாகப் பார்க்கும்போது, இன்று பிரபல எழுத்தாளர்களாக விளங்கிக் கொண்டிருக்கும் எழுத்தாளர்களெல்லாம், தொடக்கத்தில் குழந்தைகளுக்காகவே எழுதினார்கள். நாளைய தலைமுறைகளான இன்றைய குழந்தைகளுக்கு எழுதுவதையே அவர்கள் பெரிதும் விரும்பினார்கள். ஒரு கருத்தை முதலில் யார் மூலம் சொன்னால் அது நாளைய சமுதாயத்துக்குப் பலன் கொடுக்கும் என்பதை உணர்ந்தே அவர்கள் குழந்தைகளுக்காக எழுதினார்கள் போலும்!

அந்த வகையில், மு.வ. அவர்களும் குழந்தைகளுக்காக ஒரு நூலை எழுதினார். 'குழந்தைப் பாட்டுக்கள்' என்னும் அதுவே அவரது முதல் நூலாகும் (1939). அந்தத் தொகுப்பில் உள்ள ஒரு பாடலைப் பார்ப்போமா?

ரோஜாப் பூவாடிவிடும்
சண்பகப் பூவாடிவிடும்
மல்லிகைப் பூவாடிவிடும்
முல்லைப் பூவாடிவிடும்
வாடாத பூ எதுவோ
வளருகின்ற பூஎதுவோ
வாடாத பூஅறிந்தேன்
வளருகின்ற இடம்அறிந்தேன்
வாடாதபூ படிப்பூ
வளரும் இடம்பள்ளிக்கூடம்!

பிறகு இளைஞர்களுக்கேற்ற இனிய கதைகள், படியாதவர் படும்பாடு, கண்ணுடைய வாழ்வு ஆகிய சிறுவர் நூல்களை எழுதினார். 'சிறுவர் இலக்கணம்' எனும் தலைப்பில் மூன்று தொகுதிகளை வெளியிட்டார்.

மு.வ.வின் முதல் நாவல் 'செந்தாமரை' (1944). இது, மு.வ.வுக்குப் பெரும் புகழை ஈட்டித் தந்தது.

பச்சையப்பன் கல்லூரியில் விரிவுரையாளராக இருந்த மு.வ., அவர்கள், 1945-இல், அக்கல்லூரியிலேயே தமிழ்த் துறைத் தலைவராகப் பொறுப்பேற்றார்.

சொல்லின் செல்வர் டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் மறைவிற்குப் பிறகு, டாக்டர் மு.வ., அவர்கள், சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றினார் (1961-1971). பிறகு மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகப் பணியாற்றினார் (1971-1974).

அண்ணா போற்றிய பெருமக்கள்

மறைமலையடிகள்

தமிழர்களுக்கு, அவர்களது தனி நாகரிகம் எது? அவர்கள் வணங்கத் தக்கன என்ன? அவர்கள் மொழியின் மாண்புகள் என்னென்ன? - என்பனவற்றையெல்லாம் ஆராய்ந்து, மக்கள் மன்றத்திற்கு எடுத்துச் சொன்னார்கள். அவர்தம் கருத்துக்களை அறிகிறவர்கள், படிக்கத் தக்க நூல்கள் எவை என்பனவற்றை அறிந்து கொள்ள முடியும்; சிந்திக்கத் தூண்டும் நூல்கள் எவை என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

டாக்டர் மு.வ. அவர்கள் பன்மொழிப் புலவராகத் திகழ்ந்தார். தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்தார். பல மேலை நாடுகளுக்குச் சென்று தமிழின் பெருமையைப் பறைசாற்றினார்.

மு.வ., பல துறைகள் குறித்த நூல்களைத் தமிழன்னைக்குப் படைத்திருக்கிறார். நாவல்-13, சிறுகதை-2, சிந்தனைக் கதை-2, நாடகம்-6, கட்டுரை நூல்-11, இலக்கியம்-24, சிறுவர் இலக்கியம்-4, கடித இலக்கியம்-4, பயண இலக்கியம்-1, இலக்கிய வரலாறு-1, மொழி இயல்-6, வாழ்க்கை வரலாறு-4, ஆங்கில நூல்-2, சிறுவர் இலக்கணம்-3, மொழிபெயர்ப்பு நூல்-2.

இவருடைய நூல்கள் தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, சிங்களம், ஆங்கிலம் முதலிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

டாக்டர் மு.வ. அவர்களின் பல நூல்கள் பரிசும் பாராட்டும் பெற்றுள்ளன. இவர் எழுதிய 'அகல்விளக்கு', குடியரசுத் தலைவரின் சாகத்திய அகாடெமியின் பரிசினையும் பெற்றுள்ளது. 'கள்ளோ? காவியமோ?', 'அரசியல் அலைகள்', 'மொழியியற் கட்டுரைகள்' ஆகிய மூன்று நூல்களும் தமிழக அரசின் பரிசினைப் பெற்றவை.

திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், மொழி நூல், கள்ளோ? காவியமோ?, விடுதலையா?, அரசியல் அலைகள், ஓவச் செய்தி ஆகிய ஆறு நூல்களும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டிதழ்களைப் பெற்றவை.

இறுதி மூச்சு வரை டாக்டர் மு.வ. அவர்கள், தமிழ்த் தொண்டிலேயே தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். நாடு, மொழி, அவரது இரு கண்களாக இருந்தன. உடல் நலத்தைக் கூட கவனிக்காமல் உயர் தமிழ்ச் செம்மொழி குறித்தே சிந்தித்தார்; செயல் பட்டார்.

1974-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் பட்டமளிப்பு விழா ஒன்றில் கலந்து கொண்டபோது, இதயநோய் அவரைத் தாக்கியது - அதன் விளைவால், அவர் படுக்கையில் கிடக்க நேர்ந்தது. உடல் தளர்ந்தாலும் உள்ளம் தளராமல் உறுதியோடு தமிழ்த் தொண்டாற்றினார். ஆனால், இயற்கையழகிலேயே இதயத்தைப் பறிகொடுத்த மு.வ., அவர்களை இயற்கையன்னை அவரை அழைத்துக் கொண்டார். ஆம், 10.10.1974 அன்று டாக்டர் மு.வ. அவர்கள் நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்தார். அவரது மறைவு தமிழுலகிற்குப் பேரிடியாக மட்டுமல்லாமல் பேரிழப்பாகவுங் இருந்தது.

அவர் மறைந்தாலும், அவர் விட்டுச் சென்ற தரமான இலக்கிய படைப்புகள் இந்தத் தரணி உள்ளவரை அவர் பெயரைச் சொல்லிக் கொண்டே இருக்கும்.

அவரது பெருவாழ்வு, முன்னேறத் துடிக்கும் இளைஞர்க்கு மட்டுமல்ல, படிப்படியாய் முன்னேறிக் கொண்டிருப்போர்க்கும் வழிகாட்டியாக அமையும் என்றால் அது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.

— பி.வி. கிரி.

மாணவர் பக்கம்:

தெரிந்து கொள்ளுங்கள்

• சம்பளத்துக்கு ஆங்கிலத்தில் Salary என்று பெயர். Salarium என்னும் இலத்தீன் சொல்லிலிருந்து Salary பிறந்தது. இலத்தீனில் சால் (Sal) உப்பைக் குறிக்கும். முற்காலத்தில் ரோமப் பேரரசின் படை வீரர்கள் தங்களுடைய சம்பளமாக உப்பைத் தான் பெற்றார்கள். உப்பு அப்போது மிக அரிதான பொருளாக இருந்தது. 'உப்புப் பணம்' என்ற பொருளில் சாலரி (Salary) என்ற சொல் பயன்படுத்தப் பட்டது.

• தானத்தில் சிறந்தது கண்தானம். கண்தானம் செய்தவர்கள் இறந்து விட்டால் அவர்களின் கண்கள் ஆறு மணி நேரத்திற்குள் உடலில் இருந்து அகற்றப்பட வேண்டும். மருத்துவர்கள் அதிக நுட்பத்திறனுடன் இந்த ஆபரேஷனைச் செய்வதால் முகத்தில் எந்தவித விகாரமும் ஏற்படாது.

கண்களில் காட்ராக்ட் ஆபரேஷன் செய்தவர்கள்கூட தங்களது கண்களைத் தானம் செய்யலாம்.

நாம் இறந்த பின்பும் நம் கண்கள் இந்த உலகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறது என்று நினைப்போமானால் நாட்டில கண் தெரியாதவர்களின் எண்ணிக்கை குறையுமல்லவா!

• கேப்டன் குக் முதல் முறையாக ஆஸ்திரேலியா வந்தபோது தன் பின்னங் கால்களால் தாவித்திரியும் ஒரு விலங்கைக் கண்டார். அங்கிருந்த பழங்குடி மக்களிடம் அதன் பெயரைக் கேட்க 'கங்காரு' என்றார்கள். அந்த மக்களின் மொழியில் 'கங்காரு' என்றால் 'எனக்குத் தெரியாது' என்று அர்த்தம். இது கேப்டன் குக்கிற்குத் தெரியாது. அப்பெயரே கங்காருவிற்கு நிலைத்து விட்டது.

• ரோஜா அத்தர் தயாரிப்பிற்குப் புகழ் பெற்று பல்கேரியா. ரோஜா இதழ்களிலிருந்து எடுக்கப்படும் அத்தர் எண்ணெய் வாசனைத் திரவியங்கள் தயாரிக்கப் பயன்படுகிறது. உலகிலேயே மிகப் பெரிய ரோஜாத் தோட்டம். மத்திய பல்கேரியாவில் உள்ளது. ஒரு கிராம் அத்தர் தயாரிக்க சுமார் 30,000 ரோஜா இதழ்கள் தேவைப்படுகிறது.

• முதன் முதலாகத் தபால் மூலம் அனுப்பப்பட்ட கடிதம் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த டாக்டர் டியாகோ ஆல்வாரேஸ் சான்கோ என்பவர் இசபெல்லா சான்டாமின்கோ என்ற துறைமுகத்திலிருந்து செர்விலி நகர சபைக்கு ஒரு கடிதம் எழுதினார். அதுதான் முதன் முதலாகத் தபால் மூலம் அனுப்பப்பட்ட கடிதமாகும். 1494 பிப்ரவரி 2-ஆம் தேதி அனுப்பப்பட்ட அக் கடிதம் ஏப்ரல் 8-ஆம் தேதி போய்ச் சேர்ந்தது.

• ஜப்பான் ஏர்லைன்ஸ் நிறுவனம் உடல் ஊனமுற்றோருக்காக தனி ரிசர்வேசன் செய்ய முன்வந்துள்ளது. வாய் பேச முடியாதவர்கள் FAX மூலம் ரிசர்வேசன் செய்து கொள்ளலாம். இதற்காக டோக்கியோ விமான நிலையத்தில் தனி கவுன்ட்டர் திறக்கப்பட்டுள்ளது. விமானத்தில் என்னென்ன உணவு பறிமாறப்படும் என்பதைப் பார்வையற்றோர், பிரெயில் முறையில் எழுதப்பட்ட மெனு கார்டு மூலம் தெரிந்து கொள்ளவும் வசதி உண்டு.

அனைத்து மக்களின் தகவல்-தொடர்பு சாதனமாக விளங்குவது அஞ்சல் துறை. அத்துறையின் ஆண்டறிக்கை தரும் சில தகவல்கள்:

• வரியோருக்கும் வரப்பிரசாதமாக உள்ள தகவல் சாதனம் அஞ்சல் அட்டை. அதன் விலை 15 காசுகள் தான் என்றாலும், முகவரிதாரரிடம் அது சென்றடைவதற்கு, துறைக்கு ஆகும் செலவோ 1,25 காசுகள். அதேபோல் 75 காசு விலையுள்ள உள்நாட்டுக் கடிதம் சென்றடைவதற்கான செலவு 141 காசுகள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

• சரியான முகவரி இல்லாதது போன்ற காரணங்களால் 31.2 மி. கடிதங்கள் அஞ்சலகத்திற்கே திரும்பி வந்தன. இத்தகைய கடிதங்களை மட்டும் கையாள்வதற்கு 15 அலுவலகங்கள் உள்ளன. இவற்றின் முயற்சியால் இவற்றுள் 57 சதவிகித கடிதங்கள் பட்டுவாடா ஆகின; 26 சதவிகிதம் எழுதியவருக்கே திருப்பி அனுப்பப் பட்டன.

—ஸ்வீட்லின் பிரபாகரன்

அஞ்சல் தகவல்கள்

• பாதுகாப்புப் படையினருக்காக மட்டும் 500 இராணுவ அஞ்சலகங்கள் செயல்படுகின்றன.

• தமிழகத்தின் நகர்ப்புறங்களில் 2,043 கிராமப்புறங்களில் 10,007 என ஆக மொத்தம் 12,050 அஞ்சலகங்கள் உள்ளன (31.3.92). இவை சராசரியாக 10.78 சதுர கி.மீ. பகுதிக்குச் சேவை புரிகின்றன.

• உத்தரப்பிரதேசத்தில் மிக அதிகமாக 19,366 அஞ்சலகங்களும், இலட்சத்தீவுகளில் மிகக் குறைவாக ஏழே ஏழு அஞ்சலகங்களும் உள்ளன.

நூலகம்

—கவிஞர் முருகுவண்ணன்

அறிவியல் பல்கலை ஞானம் தரும்;
அருமை - புதுமை நூல்கள் உண்டு!
அறநெறி வாழ்க்கைப் பாடம் சொல்லும்
அரிய - பழைய நூல்கள் உண்டு!

நாளும் சென்று படித்திடலாம்;
நல்லவர் - வல்லவர் ஆகிடலாம்!
வாழும் நெறிமுறை அறிந்திடலாம்;
வையமும் - வானமும் அளந்திடலாம்!

நூலக உறுப்பினர் ஆகிடலாம்;
நூல்களை வீட்டுக்கும் கொணர்ந்திடலாம்!
நூலினைப் படித்தபின், தந்திடலாம்;
நூல்பல படித்த பயன்பெறலாம்!

பணம் தந்து வாங்கிட முடியாத
இதுவரை படித்தே அறியாத
பயன்தரும் நூல்கள் ஆயிரமே
படித்திட பலர்க்கும் நூலகமே!

வீட்டுக்கு வீடு நூலகமே
கட்டாயம் இருக்க வேண்டுவமே!
நாட்டினில் அனைவரும், நூலகமே
நாட்டினால் கற்றவர் ஆகுவமே!

பார் போற்றும் பத்தமடைப் பாய்!

திருநெல்வேலியிலிருந்து 22 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது பத்தமடைக் கிராமம். இந்தக் கிராமத்தில் பிரபலமான தொழில் பாய் பின்னுதல் ஆகும்.

பத்தமடைப் பாய் உலகப் பிரசித்தி பெற்றது. தாமிரபரணி ஆற்றங்கரையில் கிடைக்கும் கோரைப் புல்லிலிருந்து இந்தப் பாய்கள் பின்னப்படுகின்றன. தற்சமயம் இந்தக் கோரைப் புல்லின் தரம் சரியில்லாத காரணத்தால், கரூர் நகரிலிருந்து கோரைப் புற்களை வாங்குவதாகக் கூறுகிறார் இந்தப் பாய் வியாபாரத்தில் பிரபலமடைந்துள்ள திரு. ஏ.எஸ். பீர் முகமது.

1946-இல் அப்போதைய சென்னை மாகாண ஆளுநராக ஆர்ச்பால்ட் பத்தமடையிலுள்ள இவருடைய பாய் விற்பனை நிலையத்துக்கு விஜயம் செய்து பாய் பின்னும் முறையை நேரில் கண்டறிந்திருக்கிறார். இலண்டனில் 1953-இல் நடைபெற்ற இராணி எலிசபெத்தின் முடிசூட்டு விழாவுக்கு உயர்தரமான பாய் ஒன்றினை அன்பளிப்பாக அனுப்பினாராம் திரு. பீர் முகமது. இதைத்தவிர இந்தியா மற்றும் வெளிநாட்டிலிருந்து பிரபலமான தலைவர்கள் திருநெல்வேலிக்கு வந்தபோது, இவருடைய விற்பனை நிலையத்துக்கும் வருகை புரிந்துள்ளனர்.

இங்கு ரூ.15-லிருந்து ரூபாய் 700 வரை மதிப்புடைய பலதரப்பட்ட வண்ணங்களில் பாய்கள் செய்யப்படுகின்றன. 11″ × 18″ அளவுடைய மேசைக்குப் பயன்படுத்தப்படும் பாய் முதல் 3′ × 6′ அளவிலான படுக்கைப் பாய்வரை பல அளவுகளில் பாய்கள் பின்னப்படுகின்றன. பூஜா பாய், உட்காரும் பாய், மடிக்கும் பாய், சாதாரண ரகம், கல்யாணப் பட்டுப் பாய் உட்பட பல ரகங்கள் இங்குத் தயாராகின்றன.

கோடை காலங்களில் மெத்தையின் மேல் பயன்படுத்துவதற்காக 2½′ × 6′ அளவுள்ள உயர்ரக மென்மையான பாய் இங்கு தயாரிக்கப்படுகிறது. இதன் விலை ரூ.700. இதைத் துணிபோல சிறியதாக மடித்து பெட்டிக்குள் வைத்து எடுத்துச் செல்லலாம். இத்தகைய உயர்ரகப் பாய் இந்தியாவிலேயே இந்த ஒரு இடத்தில்தான் செய்யப்படுவதாகக் கூறுகிறார் திரு. பீர் முகமது.

மூலப்பொருளான கோரையின் விலை ஒரு சுமைக்கு ரூ.180-லிருந்து ரூபாய் 300 வரை தரத்துக்கு ஏற்றமாதிரி கிடைக்கிறது. ஒரு சுமை 60 கி.கி. எடை கொண்டதாகும். 40 நபர்களைக் கொண்ட இவருடைய குடும்பமே இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறது. பாய் பின்னுவதற்கு எந்தவிதமான எந்திரங்களும் பயன்படுத்தப்படுவதில்லை. எல்லாமே கையினால் தயாரிக்கப்படுகிறது.

கல்யாணக் காலங்களில்தான் நல்ல வியாபாரம் நடைபெறுகிறது. தற்சமயம் மிக உயர்ரகமான பாய் (Super fine mat) செய்யத் தகுந்த ஆட்கள் கிடைக்காததால், தேவைகள் அதிகம் இருந்தும் தன்னால் தயாரிக்க முடியவில்லை என வருத்தப்பட்டார் அவர்.

இங்குத் தயாராகும் பாய்கள் பூம்புகார் விற்பனை நிலையம் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

முன்னாள் பிரதமர்கள் பண்டித நேரு, ராஜீவ் காந்தி ஆகியோர் இங்கு வருகை புரிந்துள்ளனர்.

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத், தற்போதைய உதவிக் குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராணயன், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா ஆகியோருக்கு, இவர் அழகிய பாய் தயாரித்து அனுப்பி இருக்கிறார்.

ஜே.சி.





அருங்காட்சியகம் உணர்த்தும் அரிய செய்திகள்

பண்பாட்டுக் கல்வி நிறுவனங்களில் அருங்காட்சியகங்கள் ஒரு மேலான இடத்தை வகிக்கின்றன. மியூசியம் என்ற சொல் கிரேக்க மொழியிலிருந்து வந்ததாகும். தேவதைகளின் இருப்பிடம் என்பது அதன் பொருள். அந்தத் தேவதைகள் கலைஞர்களுக்கும் அறிஞர்களுக்கும், உற்சாகத்தைக் கொடுத்தன என்று நம்பப்பட்டது. எனவே இத்தேவதைகளை கல்விக்கு அதிபதிகள் எனக் கொண்டனர்.

இதிலிருந்து அருங்காட்சியகங்களைக் கல்வி வளர்ச்சிக்கும் ஆராய்ச்சிக்கும் உரிய இடமாகக் கொள்ளலாம்.

பண்டைக் காலத்தில் அரச குடும்பத்தினருக்குப் பயன்படும் வகையில் சித்திரசாலைகள் அமைக்கப்பட்டன. கி.பி. 16-ஆம் நூற்றாண்டிலும் 17-ஆம் நூற்றாண்டிலும் ஐரோப்பாவில் விசித்திரப் பெட்டிகள் அமைக்கப்பட்டன. அவை பொது மக்களுக்குப் பயன்படவில்லை. அரசு குடும்பத்தினருக்கும் பணக்காரக் குடும்பத்தினருக்கும் பயன்பட்டன. ஆனால் கி.பி.19-ஆம் நூற்றாண்டில் அருங்காட்சியகங்கள் மக்களின் மகிழ்ச்சிக் காகமட்டும் அல்லாமல் ஆராய்ச்சி நிலையங்களாகவும் மாறின.

அருங்காட்சியகங்கள் பல வகைப்படும். அவை வரலாற்று அருங்காட்சியகம், தொல்பொருள் அருங்காட்சியகம், கலை அருங்காட்சியகம், அறிவியல்-தொழில்நுட்ப அருங்காட்சியகம், உயிரியல் அருங்காட்சியகம், நகர அருங்காட்சியகம், மாவட்ட அருங்காட்சியகம், புகழ்பெற்ற மனிதர்கள் அருங்காட்சியகம், பல்கலைக்கழக அருங்காட்சியகம், கல்லூரி அருங்காட்சியகம்,, பள்ளி அருங்காட்சியகம் எனவும் மேலும் பல புதிய அருங்காட்சியகங்கள் கிளைத்துக்கொண்டு இருக்கின்றன.

கி.பி. 1814-இல் கல்கத்தா அருங்காட்சியகம் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து கி.பி. 1851-இல் சென்னை எழும்பூரில் உள்ள பாந்தியன் சாலையில் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டது. இந்த அருங்காட்சியகம், கடலூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய அருங்காட்சியகங்களுக்கு மத்திய அருங்காட்சியகமாக விளங்கியது. ஆனால் சில நாள்கள் கழித்து இந்தக் கிளை அருங்காட்சியகங்கள் மூடப்பட்டன. 1975-ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஓர் அருங்காட்சியகம் திறக்கப்பட வேண்டும் அப்பொழுதுதான் அவ்வட்டார மக்கள் அருங்காட்சியகத்தின் பயனை எளிதில் அறிய இயலும் எனத் தமிழ்நாடு அரசு கருதியது. இதன் காரணமாக ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலும் ஓர் அருங்காட்சியகம் எனத் தமிழ்நாடு அரசினால் அமைக்கப்பட்டு வருகின்றது.

1986-இல், கடலூரில் அருங்காட்சியகத்தின் அலுவலகம் துவக்கப்பட்டு, 1989 நவம்பர் 30-ஆம் நாளில் அருங்காட்சியகம் பொது மக்களுக்குத். திறக்கப்பட்டது. இது சென்னை அரசு அருங்காட்சியகத்தின் கிளை என்பதால் பல நோக்குடையதாகும். இங்கே கலை, தொல்பொருள், மானிடவியல், நாணயங்கள், படிமங்கள், இயற்கையியல், அஞ்சல்தலைகள், மரச்சிற்பங்கள் ஆகியவற்றைக் காணலாம்.

கி.பி. 2-ஆம் நூற்றாண்டு முதல் தமிழ் எழுத்து வளர்ந்த முறை அருங்காட்சியகத்தின் வெளிச் சுவரில் எழுதப்பட்டுள்ளது. இதை நெடுஞ்சாலையில் இருந்தே பார்த்து அறியும் அளவில் பெரிதாக எழுதப்பட்டுள்ளது. இந்த அட்டவணை, கல்வெட்டினை அறியும் ஆர்வத்தைத் தூண்டுகிறது எனலாம். இந்தக் கல்வெட்டு எழுத்துக்களுக்கு மேல் பகுதியில், கண்ணாடி இழையினால் செய்யப்பட்ட டைனோசரஸ் என்ற அற்றுப்போன விலங்கின் உருவம் அமைக்கப்பட்டுள்ளது. இதுவரையில் நூற்று இருபது சங்கு, கிளிஞ்சல்களின் வகைகள் சேகரிக்கப் பட்டுச் சிறப்புக் கண்காட்சியாக அமைக்கப்பட்டது. தற்பொழுது ஏழேகால்அடி நீள சாரைப்பாம்பு பதப்படுத்தப் பட்டுக் காட்சியில் காணலாம்.

கடலூருக்கு அருகில் உள்ள குடிகாடு என்ற ஊரிலிருந்து, ரோமானிய கூம்பு வடிவ ஜாடியின் தாக்கம் கொண்ட கூம்பு வடிவ ஜாடிகளும், கோமேதம், அகேட், செவ்வந்திக்கல், பளிங்குகல் போன்ற கற்களில் செய்யப்பட்ட மணி களும், மூலப் பொருள்களும், கோமேதிகக் கல்லில் செய்யப்பட்ட உடைந்த மோதிரம், பானை ஓடுகள் ஆகியன மொத்தம் 190 பொருள்கள் சேகரிக்கப்பட்டன. இவைகள் அரிக்க மேட்டில் கிடைத்த தொல் பொருள்களுடன் ஒத்துள்ளதால் குடிகாடும் ரோமானியருடன் தொடர்பு கொண்டிருந்தது எனத் தெளிவாகிறது.

இவைகளை இந்த அருங்காட்சியகம் சேர்த்துள்ளதால் வரலாற்றாய்வாளர்களுக்கும் தொல்லியலாளர்களுக்கும் பெரும் உதவியாக இருப்பதுடன் ரோமானியரின் வியாபாரத் தொடர்பு என்ற வரைபடத்தில் கடலூர் பெறுகின்றது.

உளுந்தூர்பேட்டை வட்டம், சேந்தநாடு என்ற ஊரில் புதையலாகக் கிடைத்த உலோகத் தாலான அருள்மிகு சுப்ரமணியர் சிலை அழகானது; விக்கிரகத்தின் பின்புறம் மயில்

ம. காந்தி
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம், கடலூர்.

இல்லாமலும், கஞ்சனாக இல்லாமலும் செலவு செய்ய வேண்டிய இனங்களுக்கு மட்டும் செலவு செய்யவேண்டும் என்று மக்களுக்குக் கூறியதோடல்லாமல் தானும் அது போல் சிக்கனத்தைக் கடைப்பிடித்தார்.''

மேலும் கேரளாவில் உள்ள வைக்கத்தில் தாழ்த்தப்பட்டோர் கோவிலுக்கு செல்வதற்குப் போராடி வெற்றிபெற்றது இந்திய வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறித்து போற்றிட வேண்டிய ஒரு நிகழ்ச்சியாகும். இதுவரையிலும் 16 மாவட்டங்களில் தந்தை பெரியார் நூற்றாண்டு நினைவுத் தூண்கள் நிறுவப்பட்டுள்ளன. மற்ற 7 மாவட்டங்களில் விரைவில் நிறுவப்படும்'' என்று தெரிவித்தார்.

விழாவில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 2,360 நபர்களுக்கு 45 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நலிந்தோர் நலத் திட்ட உதவிகள் வழங்கினார்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி.சோமசுந்தரம் அவர்கள் தந்தை பெரியார் பற்றிய பேச்சுப் போட்டி கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ மாணவியர்களுக்குப் பரிசுகள் வழங்கி விழாப் பேருரையாற்றும் போது, ''அறியாமையையும், மூடப் பழக்க வழக்கங்களையும் மக்களிடமிருந்து அறவே நீக்கிட தமது வாழ்நாள் முழுவதும் பாடுபட்டவர் தந்தை பெரியார் அவர்கள், அவர் எடுத்துச்சொன்ன கருத்துக்களை நாம் பின்பற்ற வேண்டும்'' என்று கூறினார்.

மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு மு.தென்னவன் அவர்கள் தலைமை உரையாற்றிப் பேசும்போது, ''உலகத்தில் தோன்றிய சீர்திருத்தவாதிகள் சாக்ரடீஸ் முதல் பிரஞ்சுப் புரட்சிக்கு வித்திட்ட ரூஸோ, வால்டேர் போன்றவர்கள், அவர்களுக்குப் பின்னர் உலகில் பல்வேறு நாடுகளில் தோன்றிய சமுதாயச் சீர்திருத்தவாதிகளின் கொள்கைகள் அவர்கள் வாழ்ந்த காலங்களில் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆனால், விதிவிலக்காக நமது தமிழ் மண்ணில் தோன்றிய பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் சமுதாயச் சீர் திருத்தக் கருத்துக்கள் அவர் வாழ்ந்த காலத்திலேயே மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு மட்டுமல்லாமல், அரசும் அத்தகைய கருத்துக்களை ஏற்றுக்கொண்டது போல் உலகில் எங்கும் நடைபெறவில்லை. இது இந்த மண்ணுக்கும், இந்த மக்களுக்கும் கிடைத்த பெருமை ஆகும்'' என்றார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு தி.சண்முகராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் சிறப்புரை ஆற்றவும், செய்தி-சுற்றுலாத்துறை துணை இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு மா. விஸ்வநாதன் வரவேற்புரையும், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திரு த. இளங்கோவன் நன்றியுரையும் கூறினார்கள். விழாவில் சோழன் போக்குவரத்துக் கழகத்தினரின் மெல்லிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழ்நாடு திரையரங்கு உரிமையாளர் சங்கத் தலைவர் திரு. டி. ராமானுஜம்

டாக்டர் எம்.ஏ.எம். ராமசாமி

டாக்டர் ராமமூர்த்தி மலர் தலைமையிடல் சார்பில்...

மகாராஷ்டிர மாநில நிலைநடுக்கம்: மலையென நிதி குவிந்தது!

டாக்டர் கே. சொக்கலிங்கம் (தேவகி மருத்துவமனை சார்பாக)

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி நிறுவனங்கள் சார்பில் திரு. பங்காரு அடிகளாரின் மகன், பொருளாளர் திரு. ஏ.கே. வெங்கடசாமி

அப்பல்லோ மருத்துவமனையின் தலைவர் டாக்டர் பிரதாப் சி. ரெட்டி.

திரு. நல்லி குப்புசாமி.

திரு. விஜி பிரேம்ஸ் இந்தியா லிமிடெட் அண்டு டாக்டர் எஸ். ரங்கராஜ் இந்தியா மோட்டார் பார்ட்ஸ் அண்டு ஆக்சிலெரி லிமிடெட் சார்பில்...

நிற்கின்றது. காட்டுமன்னார்குடி வட்டம், லால்பேட்டையில் இருந்து புதையலாகக் கிடைத்த சத்தியபாமா உலோகச் சிலை நாயக்கர் காலத்து. இதன் கொண்டை அலங்காரமும் இடுப்பு ஆடையும் தனிச் சிறப்புடையன. கடலூர் வட்டத்தில் உலோகத்தாலான காளி, தேவி சிறிய பிரபை ஆகியவை புதையலாகக் கிடைத்தவை என அருங்காட்சியகத்தில் பெறப்பட்டன.

திருக்கோவிலூர் வட்டம் தனக்கனந்தல் காட்டுநாயக்கன் இனத்தவரிடம் மணமக்களை உட்கார வைத்து எடுத்து செல்லும் பல்லக்குப் பெறப்பட்டுக் காட்சியில் கவினுற வைக்கப்பட்டுள்ளது. 140 அஞ்சல் தலைகள் சேகரிக்கப்பட்டன. அவற்றில் இந்திய அஞ்சல் துறையினரால் அளிக்கப்பட்ட பதினைந்து அஞ்சல் உறைகள் அருங்காட்சியகத்தில் அஞ்சல் கூடமாக அமைக்கப்பட்டுள்ளது சிறப்பை அளிக்கின்றது.

தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ஜி. இராமகிருஷ்ணன் அவர்களின் உதவியினால் அனந்தபுரம் கோ. கிருட்டிணமூர்த்தி அவர்கள் கல்வராயன் மலையிலிருந்து புதிய கற்காலத்தைச் சோத்ந்த பதினோரு கல் ஆயுதங்களைச் சேகரித்தளித்தார். இதனால் மாவட்டத்தின் தொன்மையான பண்பாட்டை அறிய எளிதாகின்றது.

செஞ்சி வட்டம், மேல்பாப்பாம்பாடி என்ற ஊரில் இருந்து கலைமலி அம்மிக்கல்லை பொறிஞர் கொடுமுடி ச. சண்முகன் அவர்கள் சேகரித்தளித்தது ஒரு சிறந்த கலைக்கருவூலமாகும். அம்மிக்கல்லின் அடிப்புறம் குடையப்பட்டு நாற்புறங்களிலும் கஜலட்சுமி, நடன கணபதி. பாலகிருஷ்ணன், ஐயனார் தெய்வச் சிற்பங்கள் கவினுற வடிக்கப்பட்டுள்ளன. இந்த அம்மிக்கல் அன்றாட சமையல் பயனுக்கு மட்டுமல்லாமல் பக்தியின் வழியே கலையையும் வளர்த்திருப்பதை அறியலாம். இது கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. காட்டுமன்னார்குடி வட்டம், கொல்லிமலை மேல்பாதியில் இருந்து புதையலாகப் பெறப்பட்ட வெள்ளைக் கல்லில் நேர்த்தியாக வடித்த விஷ்ணு சிலை கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

கடந்த, இரண்டாண்டுகளில் இந்த அருங்காட்சியகம் மாணவ-மாணவிகளுக்கு இரண்டு ஓவியப் பயிற்சிகளையும் ஒரு புகைப்படப் பயிற்சியையும், இந்தியக் காசுகளை அறிதல் பயிற்சியும் நடத்தியது. ஓவியப் பயிற்சியில் பயின்ற மாணவர் மாவட்ட, மாநில, பன்னாட்டு அளவில் ஓவியப் போட்டியில் கலந்து கொண்டதுமல்லாமல் முதல், மூன்றாம் பரிசுகளைப் பெற்றுள்ளனர்.

திருப்பாதிரிப்புலியூரின்கண் அமைந்துள்ள அரசினர் பெண்கள் மேனிலைப் பள்ளியின் மாணவி எம். உமா, கலைக் கழகம் நடத்திய ஓவியப் போட்டியில் இரண்டு முதல் பரிசுகளைப் பெற்றுள்ளார். கடலூர் ரோட்ரேக்டின் ஓவியப் போட்டியிலும் பாண்டிச்சேரி என்.ஐ.ஐ.டி.யின் ஓவியப் போட்டியிலும் முதல் பரிசுகளை வென்றுள்ளார்.

கடலூர் ஏ.ஆர்.எல்.எம். மெட்ரிகுலேஷன் மேனிலைப் பள்ளியின் ஜி.விஜய் கிருஷ்ணா என்ற மாணவர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி நடத்திய 1992 குழந்தைகள் நாள் ஓவியப் போட்டியில் கலந்து கொண்டு மேன்மைத் தகுதிச் சான்றிதழைப் பெற்றுள்ளார். கடலூர் ரோட்ரேக்டின் ஓவியப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றார். பாண்டிச்சேரி என்.ஐ.ஐ.டி.யின் ஓவியப் போட்டி, கடலூர் கலைக்கழக ஓவியப் போட்டி, இந்து நாளிதழின் இளைஞர் உலக ஓவியப் போட்டி, சங்கர் பன்னாட்டு ஓவியப் போட்டி ஆகியவற்றில் கலந்து கொண்டார். மேலே குறிப்பிடப்பட்ட இருவரும் தமிழ்நாடு அரசின் ஓவியத் தேர்வு எழுதியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பாபா மெட்ரிகுலேஷன் மேனிலைப் பள்ளியின் மாணவன் பி. சுபாஷ், கடலூர் ரோட்ரேக்டின் ஓவியப் போட்டி, பாண்டிச்சேரியின் என்.ஐ.ஐ.டி.யின் ஓவியப் போட்டி, தென்னார்க்காடு மாவட்ட விளையாட்டுக் குழு நடத்திய போட்டி ஆகியவற்றில் கலந்து கொண்டு ஒரு முதல் பரிசையும், ஓர் இரண்டாவது பரிசையும் பெற்றுள்ளான். இவ்வாறான போட்டிகளில் மாணவர்கள் கலந்துகொண்டு பரிசுபெறும் வாய்ப்பைப் பெற அரசு அருங்காட்சியகம் நடத்திய ஓவியப் பயிற்சி வழிகாட்டியாக இருந்தது என வெற்றியடைந்த மாணவர்கள் தெரிவித்தனர். புகைப்படப் பயிற்சியில் பங்குபெற்ற இரண்டு பெண்கள் புகைப்படத் தொழிலைப் பொழுது போக்காகக் கொண்டுள்ளனர். கடலூர் பெரியார் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவருடைய மகள் இந்தப் பயிற்சியில் பங்குபெற்றது வேலைவாய்ப்பற்ற இந்த நாள்களில் தாமே வேலையைத் தேடிக் கொள்ள வாய்ப்பளித்ததாகும் எனப் பெருமையுடன் தெரிவித்தார்கள். 1990-1992 கால கட்டத்தில் கடலூர் அரசு அருங்காட்சியகம் வெவ்வேறு வகையான பதின்மூன்று கண்காட்சிகளை நடத்தியது.

மன்னார் கோயில்

நெல்லை நாட்டு அம்பாசமுத்திர வட்டத்தில் மன்னார்கோயில் என்ற ஊர் உள்ளது. அழகிய மன்னார் என்னும் திருநாமமுடைய பெருமாள் அங்குக் கோயில் கொண்டிருத்தலால் மன்னார் கோயில் என்று அது பெயர் பெற்றதென்பர். பிற்காலத்தில் இராஜேந்திர சோழ விண்ணகரம் என்னும் திருக் கோயிலும் அவ்வூரில் எழுந்தது. அக் கோயிலைக் கட்டியவன் இராஜசிம்மன் என்ற சேர மன்னன். அவன் இராஜேந்திரனுக்கு அடங்கி ஆட்சி புரிந்தமையால் சோழ மன்னன் பெயரை அவ்விண்ணகரத்துக்கு அளித்தான் போலும்!

'ஊரும் பேரும்' என்னும் நூலில்,
டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை.

தஞ்சை மண்ணில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழா

தேசத்தலைவர்களின் பிறந்த நாள் விழாக்களைச் சென்னையில் நடத்துவதோடல்லாமல், மாவட்டத் தலைமையிடத்திலும் நடத்திட வேண்டும் என்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூரில் தந்தை பெரியாரின் பிறந்த நாள் விழா 16.10.93 அன்று நடைபெற்றது.

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கு. தங்கமுத்து, திரு இராமநாதன், திரு ப. கலியபெருமாள், திரு கே. பாலசுப்ரமணியன், திரு வை. புண்ணியமூர்த்தி ஆகியோர் விழாவில் கலந்துகொண்டார்கள்.

மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விழாவில் தந்தை பெரியாரின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்து விழாப் பேருரையாற்றி, நலிந்தோர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

விழாவில் மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசும்போது, ''தந்தை பெரியார் அவர்கள் பெண்ணுரிமை, தீண்டாமை ஒழிப்பு, மூடப்பழக்க வழக்கங்களை அகற்றுதல், கல்வி அறிவு, சிக்கனம், விதவைத் திருமணம், சீர்திருத்தத் திருமணம் போன்ற சமுதாயப் பிரச்சினைகளுக்காக, தனது வாழ் நாள் முழுவதும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கிராமங்கள், நகரங்களுக்குச் சென்று மக்களின் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பினார். உலகத்தில் எத்தனையோ சிந்தனையாதிகள் சீர்திருத்தவாதிகள் தோன்றி இருந்தாலும் தந்தை பெரியார் போல் தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று நேரிடையாகவே மக்களைச் சந்தித்து துணிந்து தனது கருத்துக்களை யாரும் கூறியது இல்லை''.

''தந்தை பெரியார் அவர்கள் மக்களிடம் தனது வாழ்நாளில் சிக்கனத்தைப் பற்றி எப்போதும் விளக்கமாகக் கூறுவார். கருமியாக

'தினத்தந்தி' அதிபர் திரு. பா. சிவந்தி ஆதித்தன்.

திரு. பி. ஒபுல் ரெட்டி.

தலைமைச் செயலகப் பணியாளர்கள் சங்கம் சார்பில் அதன் தலைவர்.

விஜயா மருத்துவ மற்றும் அறக்கட்டளை சார்பில் திரு. பி. நாகிரெட்டி.

சக்தி சுகர்ஸ் சார்பாக திரு. எம். மாணிக்கம்.

ஈரோடு திரு. எஸ்.கே. மயில்சாமி.

'என்கோல்பெட்' நிறுவனத் தலைவர் திரு. செல்லமுத்து.

அசோக்லேலண்ட் நிறுவன ஊழியர்கள் சங்க சார்பில் திரு. அய்யப்பன்பிள்ளை.

திரு. அப்துல் அலி, திருமதி அப்துல் அலி மற்றும் திருமதி ராம்.

திரு. கமலஹாசன்.

திரு. சபேசன், திரு. சடகோபன் டி.டி.கே. பார்மா சார்பில்...



தமிழ்நாடு தேவர் பேரவைத் தலைவர் திரு. ஏ.[illegible] சின்னசாமி.

திரு. விஜயகாந்த்.

நரிக்குறவர் சமூகத்தின் சார்பில் திரு. ரகுபதி.

அரசுத்துறை வழக்கறிஞர்கள் மற்[illegible] அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்த வழக்கறிஞர்கள்.

⊙ மருந்துப் பொருட்களும், பொருளுதவியும் குவிந்தன!

திரு. சரத்குமார்.

திரைப்பட இயக்குநர் திரு. பி. வாசு

டாக்டர் பழனி ஜி. பெரியசாமி திரு. வஸந்த்லால் மேத்தா 'மக்கள் குரல்' ஆசிரியர் திரு. எம். சண்முகவேல். ஆர்.கே. குமார்

திரு. எம்.வி. அருணாசலம் திரு. எஸ்.வி. பாலசுப்பிரமணியம் திருமதி ஒய்.ஜி. பார்த்தசாரதி

'நியூஸ் டுடே' ஆசிரியர் திரு. டி.ஆர். ஜவஹர். திரு. எம். சுந்தரம்.

மகாராஷ்டிர மாநில நிலநடுக்கம்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பில் ரூ.2.43 கோடி வழங்கப்பட்டது!

மகாராஷ்டிரா மாநிலத்தில் கடுமையான நில நடுக்கம் ஏற்பட்டதை அறிந்தவுடன் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி புரியவும், நிவாரணப்பணிகளை மேற்கொள்ளவும் தமிழக அரசின் சார்பாக 10 இலட்சம் ரூபாயை உடனடியாக வழங்கினார்.

2.10.1993 அன்று 'தமிழக முதலமைச்சரின் மகாராஷ்டிரா மாநில நிலநடுக்கத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கான நிவாரண நிதி' என்ற ஒரு நிதியைத் தொடங்கி வைத்து தனது சொந்த சார்பில் ரூபாய் ஒரு இலட்சமும் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த நிதிக்குத் தாராளமாக வாரி வழங்கும்படி விடுத்த அன்பான வேண்டுகோளைத் தொடர்ந்து, பல்வேறு தரப்பட்ட துறையைச் சேர்ந்த பொது மக்கள் இந்த நிதிக்குத் தங்களால் இயன்ற அளவு மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வழங்கினார்.

2.10.1993 அன்று ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த நிவாரண நிதியில், இதுவரை (22.10.93) 2.33 கோடி ரூபாய் குவிந்துள்ளது. ஆக, தமிழக அரசின் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும் மகாராஷ்டிரா மாநில நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண நிதிக்கு 2.43 கோடி ரூபாய் கொடுக்கப்படுகிறது.

மாண்புமிகு மகாராஷ்டிய முதலமைச்சர் திரு சரத் பவார் அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, தனது சார்பாக மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் டாக்டர் நெடுஞ்செழியன் அவர்களையும், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்களையும் நிவாரண நிதியுடன் அனுப்பி வைப்பதாக தெரிவித்து இருந்தார். அதன்படி தமிழக அமைச்சர்கள் இருவரும் 24.10.1993(ஞாயிற்றுக்கிழமை)அன்று மகாராஷ்டிர முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, தமிழக முதல்வர் அவர்களின் சார்பில் இந்த நிவாரண நிதியை வழங்கினார்கள்.

மாண்புமிகு மகாராஷ்டிர முதல்வர் அவர்கள் நன்றி

மகாராஷ்டிரா மாநிலத்தில் நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்காக, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் திரட்டிய 2 கோடியே

புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா இளங்குழந்தைகள் இருதய சிகிச்சைத் திட்டம்

தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும், பிறவியிலேயே ஏற்படுகின்ற இருதயக் கோளாறுகள் காரணமாக, நூற்றுக்கணக்கான குழந்தைகள் இறக்க நேரிடுகிறது. இருதய அறுவைச் சிகிச்சைகள் மூலம் பல குழந்தைகளைக் காப்பாற்ற முடியும். சில குழந்தைகளுக்கு மட்டும் இருதய வால்வு மாற்றமோ அல்லது இருதய இயக்கக் கருவிகள் (Pace maker) பொருத்துதலோ தேவைப்படுகிறது.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், குழந்தைகளின் இருதயத்தில் ஏற்படும் கோளாறுகளை நீக்குவதற்குத் தகுந்ததோர் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென ஆணையிட்டிருந்தார்.

அத்திட்டம் உருவாக்கப்பட்டு, வரும் நவம்பர் 14-ஆம் நாள் குழந்தைகள் தினத்தன்று செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்திற்குப் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா இளங் குழந்தைகள் இருதய சிகிச்சைத் திட்டம்' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், 1993-94-ஆம் நிதியாண்டில் வரும் 6 மாதக் காலத்தில் 85 குழந்தைகளுக்கு இருதய அறுவைச் சிகிச்சையும், 5 குழந்தைகளுக்கு வால்வு மாற்றம் சிகிச்சையும், 5 குழந்தைகளுக்கு இருதய இயக்கக் கருவி பொருத்தி சிகிச்சையும் அளிக்கப்படும். இந்த நிதியாண்டில் இத் திட்டத்திற்கென 14 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு செலவிடப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் அறுவைச் சிகிச்சைகள், சென்னை எழும்பூரில் உள்ள குழந்தைகள் நல மருத்துவமனையில் செய்யப்படும்.

முதலமைச்சரின் பொது நிவாரண நிதி

இன்று (17.10.'93) மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை, முதல்வர் இல்லத்தில் சந்தித்துப் பல்வேறு தொழிலதிபர்களும், முக்கிய பிரமுகர்களும், தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்காக காசோலைகளை வழங்கினார்கள்.

அருணா சுகர்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. எம். சிவராம் 2,00,000/- ரூபாயையும், பாட்டியா ஸ்கைலைன்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. பாட்டியா நிறுவனத்தின் சார்பாக 1,00,000/- ரூபாயையும், எம்.ஜி.எம். நிறுவனங்களின் சார்பாக அதன் தலைவர் திரு. எம்.ஜி.எம். முத்து 1,00,000/- ரூபாயையும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் வழங்கினார்கள்.

ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி. ராஜஸ்ரீபதி அவர்களின் சார்பாக 1,00,000/- ரூபாயும், தமிழ்நாடு தோல் ஏற்றுமதி இறக்குமதி சிறு வியாபாரிகள் சங்கத்தின் சார்பாக திரு. ரஹீம் அவர்கள் 2,00,000/- ரூபாயும் மாண்புமிகு முதலமைச்சரிடம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்காக வழங்கப்பட்டது.

தமிழ்நாடு திரையரங்குகள் உரிமையாளர்கள் சங்கத்தின் சார்பாக அதன் தலைவர் திரு. டி. ராமானுஜம் 50,000/- ரூபாயையும், எஸ்.ஆர்.எம். பொறியியல் கல்லூரியின் சார்பாக அதன் தலைவர் திரு. டி.ஆர். பச்சைமுத்து, 1,00,000/- ரூபாயையும், பாரத் பொறியியல் கல்லூரியின் சார்பாக திரு. ஐகத்ரட்சகன் 1,00,000/- ரூபாயையும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்காக வழங்கினார்கள்.

33 இலட்ச ரூபாயை, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்களும், மாண்புமிகு மகாராஷ்டிர முதல்வர் திரு. சரத்பவார் அவர்களிடம் வழங்கினார்கள்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு நன்றி தெரிவித்த மாண்புமிகு மகாராஷ்டிர முதல்வர் திரு. சரத்பவார் அவர்கள், தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் பெருந்தன்மை தன் இதயத்தை நெகிழ செய்து விட்டது என்றுகூறினார்.

தமிழக முதல்வர் அவர்கள் திரட்டிய இந்தத் தொகை, பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட ஒரு கிராமத்தைச் சீரமைக்கப் பயன்படுத்தப்படும் என்றும் அவர் கருத்து தெரிவித்தார்.

இந்தத் தொகை, தமிழக மக்களின் சார்பில் வழங்கப்பட்டது என்று பதில் அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், இந்தத் தொகையை எவ்வாறு பயன்படுத்துவது பொருத்தம் என்று திரு. சரத்பவார் அவர்கள் கருதுகிறாரோ, அந்த வகையில் பயன்படுத்தலாம்'' என்று கூறினார்.

பாதுகாக்கப்பட வேண்டிய கருவூலம்!

பார்த்தோம் படித்தோம்

16.9.93 இதழில் தமிழக முதல்வரின் ''ஒப்பற்ற தலைவர் தந்தை பெரியார்'' கட்டுரை; தந்தை பெரியார் பற்றிய பேரறிஞர் அண்ணாவின் சொல்லோவியம், தந்தை பெரியாரைப் பற்றிய திருவிகவின் கருத்து; அண்ணா போற்றிய பெருமக்கள் வரிசையில், திரு.வி.க., வ.உ.சி., பாரதியார், மற்றும் கருத்துச் செல்வம் திருக்குறள்; ''அதிமதுரச் சொல்லுடையார்'' தலைப்பில் 'அண்ணா'வைப் பற்றி, நாவலர் ச. சோமசுந்தர பாரதியாரின் வாழ்த்துரை, இவைகளோடு, 'பெண் உரிமை' போன்ற பல தலைப்புகளில் பெரியாரின் பொன்மொழிகள்; ஆக, தமிழரசு இதழ், இதழாக அல்ல, தமிழ் மலராக மணம் வீசியது. தமிழரசு படிக்க மட்டுமல்ல; பாதுகாக்கப்பட வேண்டிய கருவூலம்.

—சைதை டி.என். நாகலிங்கம்,
பழவந்தாங்கல், சென்னை-600 114.

'அறிவுக்கடர்' பகுதி உண்மையில் அறிவுக்கு ஒளி காட்டியது. இதுபோன்றவைக்கு ஒரு பக்கம் முழுவதும் எடுத்துக் கொள்ளலாமே!

—இரவிச்சந்திரன்,
நெடிமோதியனூர்.

'குறளின் குரல்' படித்தேன், அருமையாக இருந்தது.

—இன்பவல்லி வாகதேவன்,
கீரைசாத்து.

விடுதலை வீரர் வ.உ.சி. கட்டுரையில் ''சுதந்திரம் எங்களது பிறப்புரிமை'' என்று இந்தியாவின் வடக்கே எழுந்த முழக்கத்தின் எதிரொலி தென்னாட்டில் திருநெல்வேலிச் சீமையில் சீற்றத்துடன் எதிரொலித்தது என்பதைத் தெரிந்து கொண்டேன்.

—வி. சென்றாயன்,
கருப்பூர், சேலம்-12.

நடக்கவிருக்கும் T.N.P.S.C. நுழைத் தேர்வுகள், அவற்றின் நன்மைகள், நகுதிகள் குறித்து நந்நால் மிகவும் பயனுள்ளதாய் இருக்கும்.

—ரவிச்சந்திரன்,
நெடிமோதியனூர்.

''கேள்வி பதில்'' பக்கம் இருந்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

—ரவிச்சந்திரன்,
கடலூர்.

1.10.93 இதழில், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் - பாடலும் படிப்பினையும் கட்டுரை பயனுள்ளதாக இருந்தது.

—சுந்தரவாமி,
திருப்பூர்.

தருமபுரி மாவட்டம் பாலக்கோட்டில் அரசு நலத் திட்ட உதவி வழங்கும் விழாவில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உரை, மாவட்ட மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம். விடுதலை வீரர் வ.உ.சி. பற்றி ஜீவா மணிகுமார் அவர்கள் நன்கு விளக்கமாக எழுதியிருக்கிறார்.

—இரா. இராகவன்,
ஸ்ரீரங்கம்.

'தமிழரசு' இதழ் நிறைய செய்திகளைத் தருகின்றது. மற்ற பத்திரிகைகளில் வராத செய்திகள் நிறைய வருகின்றது. இதில் வரும் கட்டுரைகள் யாவருக்கும் பயன்படும் வகையில் உள்ளது.

—கபி.இமா. சோசப் பேட்ரிக்,
திருச்சி.

16.9.93 இதழில், வள்ளுவன் கூறும் பண்புடைமைக் கட்டுரை படித்தேன். மிகச்சிறந்த கட்டுரை. இதுபோன்ற கட்டுரை ஒவ்வொரு இதழிலும் தொடர்ந்து வருதல் வேண்டும் 'தமிழரசு' ஒரு ''அறிவுக் களஞ்சியம்'' என்றால், அது மிகையல்ல.

—கெ. அனந்த நாராயணன்,
கன்னியாகுமரி.

வரும் இதழ்களில்...

'புரட்சித் தலைவியின் முழக்கம்' நூல் வெளியீட்டு விழாவில் நடந்த பட்டிமன்ற, கவியரங்க நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அறிஞர்கள், கவிஞர்கள் ஆகியோரின் கட்டுரைகள், கவிதைகள் வரும் இதழ்களில் இடம்பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னை சந்தியா சிறுவர் உலகம்



கோவை பீளமேட்டில் அவினாசி ரோட்டையொட்டி அன்னை சந்தியா சிறுவர் உலகம் (சிறுவர் கல்வி பொழுதுபோக்கு வளாகம்) ரூ.11 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டு விழா, கோவை ஆர்.எஸ். புரம் மாநகராட்சிக் கலையரங்கில் 21.10.93 அன்று மாலை மிகச் சிறப்பாக நடந்தது.

விழாவுக்கு மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி இந்திரகுமாரி அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கலந்து கொண்டு சிறுவர் உலகத்திற்கான அடிக்கல்லை நாட்டினார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''கோவை பீளமேட்டில் சிறுவர் உலகம் அழகாக அருமையாகத் தெளிவாக மற்றும் பயன் தரும் வகையில் அமைய உள்ளது. இந்தச் சிறுவர் உலக அடிக்கல்லை 73 வயது நிரம்பிய சிறுவனான என்னை வைத்து நாட்ட வைத்து இருக்கிறார்கள்.

''இந்தச் சிறுவர் உலகம் சுற்றுலா மையமாகவும், சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் வேறு எங்கும் இல்லாத வகையில் அமைய உள்ளது. ரூ.11 கோடி செலவில் தொடங்கப்படும் இந்தத் திட்டத்தில் அரசுப் பங்காக நிலமும் மற்றும் தனியாகப் பங்குத் தொகையும் திரட்டப்படும்.

''இங்குப் பேசியவர்கள் நிதிச் சுமை அரசிற்கு இல்லை என்று கூறினார்கள். ஆனால், பங்குதாரர்களுக்கு லாபம் கொடுக்கும்போது கேளிக்கை வரி அரசிற்கு வருமானவரி வருமானமாகக் கிடைக்கும். மற்றும் பல கடைகள் அமைக்கப்படுவதால் விற்பனை வரியாகவும் அரசிற்குக் கிடைக்கும்.

''இந்தச் சிறுவர் உலகத்திற்கு அரசு இப்போது ரூ.1¼ கோடி மதிப்புள்ள 25 ஏக்கர் நிலத்தை வழங்கி உள்ளது. இதற்குப் பின்புறம் உள்ள மேலும் 100 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த மாவட்ட ஆட்சித்தலைவரிடம் கூறியுள்ளேன். அந்த நிலமும் சிறுவர் உலகத்திற்கு வழங்கப்படும். ஷாஜகான் தாஜ்மகாலைக் கட்டினான். அதற்கு அடுத்தபடியாக எம்.ஜி.ஆர். நினைவு இடத்தைப் புரட்சித்தலைவி செய்துள்ளார். புரட்சித்தலைவியின் சாதனையைப் பார்த்த சிலர், இது என்ன சாதனை, நாங்கள் கூடச்செய்து இருப்போம் என்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பசுக்கு நடந்த பாராட்டு விழாவின்போது சிலர் ''இது என்ன சாதனை?'' என்று கூறியதுபோல் உள்ளது.

''அமெரிக்காவில் உள்ள 'டிஸ்னி' உலகத்தில் ஆபிரகாம் லிங்கன் சிலையை அவர் பேசுவது போல அமைத்து உள்ளனர். அதேபோல் காந்தி, அண்ணா, புரட்சித்தலைவர் சிலையை இந்தச் சிறுவர் உலகில் அமைக்க வேண்டும்''.

இந்தச் சிறுவர் உலகத்திற்குத் தென்னிந்திய விஸ்கோஸ் தொழிற்சாலை சார்பிலும், திருப்பூர் சக்திவேலு சார்பிலும், பிக்னேசுவரா ஜூவல்லரி சார்பிலும் தலா ரூ.1 இலட்சமும், அன்னபூர்ணா ஓட்டல் சார்பில் 25 ஆயிரமும் பங்குத் தொகையாக வழங்கினார்கள். அவர்களுக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சால்வை போர்த்தினார்.

நிலத்திற்கான அரசு ஆணையை, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், சிறுவர் உலகம் அமைப்புக் குழு இயக்குநர் திரு ஆ. சக்திவடிவேலுவிடம் வழங்கினார். விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சங்கர் வரவேற்று பேசினார்.

மாண்புமிகு அமைச்சர்கள் திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு எஸ். கண்ணப்பன், திருமதி ஆர். இந்திரகுமாரி, திரு பி. ஈசுவர மூர்த்தி, சட்டப்பேரவை உறுப்பினர்கள் திரு சிங்கை கோவிந்தராஜ், திரு செல்வராஜ், தமிழ் நாடு மகளிர் மேம்பாட்டு கழக நிர்வாக இயக்குநர் திரு ஜனார்த்தனம் ஆகியோர் பேசினார்கள்.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. ஜஸ்பீர் சிங் பஜாஜ் நன்றி கூறினார்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் பேசுகையில், ''புரட்சித்தலைவி அவர்கள், தொழில் துறையில் 4-வது இடத்தில் இருந்த தமிழகத்தை, முதல் இடத்திற்குக் கொண்டு வந்துள்ளார். சிறுவர் உலகத்திற்குப் போக்குவரத்துத்துறை சார்பில் பணம் முதலீடு செய்வது பற்றி முடிவு எடுக்கப்படும்'' என்று கூறினார்.

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி இந்திரகுமாரி அவர்கள் பேசுகையில், ''இந்தச் சிறுவர் உலகம் இந்தியாவில் மட்டும் அல்லாமல் உலகம் முழுவதிலும் சிறந்து விளங்கும். இங்கு வைக்கப்படும் பொருட்களில் ரூ.65 இலட்சம் மதிப்புள்ளவை வெளிநாட்டிலிருந்து வாங்கப்படும். அடுத்த ஆண்டு மே மாதத்திற்குள் சிறுவர் உலகம் அமைக்கப்படும். இதை மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் திறந்து வைப்பார்கள்'' என்று கூறினார்.

TNSC BANK

The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

Rate of Interest on Deposits (Effective from 2.9.1993

Sl.No.	Type of Deposit	Rate of Interest per annum
1.	Savings Bank Accounts	5.25% w.e.f. 1.7.1993
2.	Fixed Deposits :	
	For 46 DAYS and above but upto 270 days	9.00%
	For 271 DAYS and above but upto 364 days	9.50%
	For 1 YEAR and above	10.25%

Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

மாதம் ஒரு மருத்துவர்

மனநலம்

மனநல மருத்துவர் டாக்டர் எஸ். மாத்ருபூதம் அவர்களின் பதில்கள்

ஆர். இராமச்சந்திரன்
விராலிமலை

★ மனவியாதியை மருத்துவத்தால் பூரணமாகக் குணப்படுத்த முடியுமா?

மனநோய்க்கு மருந்துண்டு. மற்ற சிகிச்சை முறைகளும் உண்டு. மனோ வியாதியால் பீடிக்கப்பட்டவர்கள் ஆரம்ப காலத்திலேயே மனநல மருத்துவரை அணுகினால், நிச்சயம் நல்ல பலன்கிட்டும், ஆனால் சில தீவிரமான நோய்கள் எத்துணைச் சிறந்த சிகிச்சை முறைக்குப் பின்னும் முற்றும் குணமாகும் வாய்ப்பில்லை. ஆனாலும், நோயின் பாதிப்பு குறைவதற்காகவாவது, மருத்துவம் அத்தியாவசியம்.

கா. கிருஷ்ணன்
தஞ்சை

★ கிராமங்களில் மனநோய் கண்டவர்களைக் கோவில்களில் கட்டிப் போடுகிறார்களே. இது குறித்து உங்கள் கருத்து என்ன?

கோவிலாகட்டும், வேறு எங்காகட்டும், மன நோயாளிகளைக் கட்டிப்போடுவது அவர்களைத் துன்புறுத்துவதாகும். மனநோயாளிக்கான விஞ்ஞான பூர்வமான காரணங்கள் கண்டுபிடிக்கப் பட்ட இக்காலத்தில், கோவிலில் கட்டிப்போடுவது சிகிச்சையாகாது. முறையான விஞ்ஞான முறைப் படியான சிகிச்சை செய்பவர்கள் நிச்சயம் அதிகம் முன்னேற்றம் அடைவார்கள். எந்தச் சிகிச்சையும் நன்கு பயனைத்தர, கடவுளை வேண்டுவதில் தவறில்லை. அது அவரவர் நம்பிக்கை. ஆனால், மன நோயாளிகளைக் கோவிலில் கட்டிப் போட்டால் குணமாகும் என நம்புவது மூட நம்பிக்கை.

கே. லதா
பண்ருட்டி

★ ஹோமியோபதி மருத்துவ முறையில் குணமளிக்க முடியும் என்று கூறப்படுகிறது. இது எவ்வளவு உண்மை?

இது ஹோமியோபதி மருத்துவரைக் கேட்க வேண்டிய கேள்வி

எல். தெய்வநாயகம்
கூடாரிபட்டி

★ ஓர் குடும்பத்தில் ஓர் மனநோயாளி இருந்தால், அவரிடம் குடும்பத்தினரின் அணுகுமுறை எவ்வாறு இருக்க வேண்டும்? தயவு செய்து தெரிவிக்கவும்.

மனநலப் பிணியாளர்களிடத்தில் பாசமும், நேசமும் காட்ட வேண்டும். நோயின் ஆரம்ப காலத்திலிருந்தே முறைப்படி சிகிச்சை செய்ய வேண்டும். அவர்களுடன் பேசாமலும் இருக்கக் கூடாது. கோபதாபங்களைக் காட்டி, வளவளவென்று பேசவும்கூடாது. மனநோய் வந்தாலும், குடும்பத்து மற்ற அங்கத்தினர்களைப் போலவே நடத்த வேண்டும். அவர்களை வீட்டிலோ, வெளியிலோ ஏதாவது ஒரு பணியில் ஈடுபடச் செய்ய வேண்டும். குடும்ப நிகழ்ச்சிகளில் அவருக்கும் பங்கு இருக்க வேண்டும். அவர்கள் ஆக்ரோஷம், பெரும்பாலும் மற்றவர்பால் ஏற்படும் சந்தேகம் அல்லது தனக்கு ஆபத்து விளையுமோ என்ற தவறான நோக்கமே ஆகும். அதற்கு வாய்ப்பில்லாமல் நடந்து கொள்ள வேண்டும். அவர்களை எதற்கும் ஒதுக்கி வைக்கக்கூடாது. மனநோயும், உடல் நோயைப் போலக் குணமடையவல்லது. இதை அனைவரும் உணர வேண்டும். திருமணம் செய்வதாயிருந்தால், மனநல மருத்துவரின் ஆலோசனைக்கப்புறமே, முடிவு செய்யவேண்டும்.

எஸ். கிரிஜா
திண்டுக்கல்

★ சாமி வந்து பலபேர் ஆடுகிறார்களே? இது அவர்கள் தங்களை அறியாமல் செய்யும் ஒன்றா அல்லது அவர்கள் பலரைக் கவரவேண்டும் என்ற நோக்கத்தில் நடத்தும் நாடகமா?

சாமி வந்து ஆடுவது ஒருவித ஹிஸ்டிரியோ நோயாகும். Possession State எனக் கூறுவோம். தனது உண்மையான, சிலசமயம் எளிதில் தீர்க்க முடியாத பிரச்சினைகளால் பாதிப்பு ஏற்படும் போது, சிலர், தன்னை ஆண்டவன் ஆட்கொண்ட பாவனையில், இந்நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். அவர்களது செய்கை, பிறர் கவனத்தைக் கவரும் செய்கை என்பது உண்மையே ஆனாலும், அவர்கள் தன்நிலை உணராத போது தான் இவ்வாறு நடந்து கொள்வார்கள். இந்நோய்க்கு மனநல மருத்துவரை அணுகவும்.

முதியவர்களைத் தாக்கும் மூளை நோய்

அறுபது வயதைக் கடந்தவர்களை 'அல்ஷைமர் நோய்' என்னும் மூளை பாதிப்பு நோய் தாக்கக் கூடும். இந்த நோய் முற்றினால், மூளையின் செயல்பாடு சிறிது சிறிதாகக் குறைந்து இறுதியில் மரணத்துக்கே வழிகோலிவிடக் கூடும். இப்போது இந்த நோய்க்குப் புதிய மருந்தொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எண்பத்தைந்து வயதைக் கடந்தவர்களில் கால்வாசிப் பேர் இந்த நோயினால் பாதிக்கப்படுவதாக ஒரு கணக்கெடுப்பு கூறுகிறது. அன்றியும், 95 வயதைக் கடந்தவர்களை இந்த நோய் இன்னமும் அதிக அளவில் தாக்கக் கூடும்.

இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் மூளைச் செல்களில் ''அமிலாய்டு பீட்டா புரோட்டீன்'' என்னும் புரதச் சத்து நுண்ணிய துணைகளை உண்டாக்கி விடுகின்றது. இதனால் இந்த செல்களுக்குள் அதிக அளவில் கால்சியம் கசிந்து, அந்த செல்களை அழித்து விடுகிறது. இதனால் மூளையின் செயல்பாடு படிப்படியாகக் குன்றிப் போய்விடுகிறது.

அல்ஷைமர் நோய்க்கு 'ட்ரோமிதமீன்' என்னும் புதிய மருந்து ஒன்று இப்போது உருவாக்கப்பட்டுள்ளது. இம்மருந்து அமிலாய்டு பீட்டா புரதத்தினால், மூளை செல்களில் ஏற்படும் புரதங்களை அடைக்க வல்லதாகும்.

இதய அறுவைச் சிகிச்சையில் கடந்த முப்பது ஆண்டுகளாக இந்த மருந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது அல்ஷைமர் நோய்க்கும் இதனை மருந்தாகப் பயன்படுத்தலாம் என்று கண்டறியப்பட்டுள்ளது.

—அமெரிக்கத் தகவல் நிலையம்

மு. தயாளன்
ஈரோடு

★ 'ஹிப்னாட்டிசம்' மூலம் ஒருவரை வசியப்படுத்த முடியுமா? சில ஹிப்னாட்டிஸ்ட்கள் Personality Disorders-ஐக் குணப்படுத்த தங்களால் முடியும் என விளம்பரங்கள் மூலம் அறிவிக்கின்றனரே?

ஹிப்னாடிஸம் என்பதே ஒரு மனோவசிய முறைதான். இதைப்பயன்படுத்தி, ஆழ்மன எண்ணங்களை அறியலாம். ஒரு மனதை உடன் படுத்தலாம், சில மனநோயின் அறிகுறிகளைப் போக்கலாம். ஆனால், மனநோய் சம்பந்தப்பட்டவரை, இச்சிகிச்சை முறை ஒரு 'உடன் உதவும்' (Adjustment to other therapies) சிகிச்சையேயன்றி இதையே முழுதாக ஒரு மனநோயை குணப்படுத்த கையாளக்கூடாது. ஆளுமை மேம்பாடு அடைய (Personality Improvement) 'ஹிப்னோஸிஸ்' உதவும். ஆனால் ஆளுமைசார்ந்த நோய்க்கு (Personality Disorder) அது தீர்வு அல்ல.

கே. கலாவதி
காஞ்சிபுரம்

★ என் கணவர் நான் என் அலுவலகத்தில் ஆண்களிடம் பேசக்கூடாது என கண்டிஷன் போடுகிறார். நானோ என் அலுவலகத்தில் தொலைபேசி இயக்குபவர். என் கணவரைச் சமாளிப்பது எப்படி?

உங்கள் கணவர் 100 சதவீதம் நார்மலாக இல்லாதவர். அவருக்குச் 'சந்தேக நோய்' (Paranoid Disorder)இருக்கக்கூடும். அல்லது அவருக்குத் தன் மீதே நம்பிக்கை இல்லாதிருக்கக்கூடும். நீங்கள், அவரை விட அழகாக இருந்தால் ஒரு பொறாமை சார்ந்த அவநம்பிக்கையாலும் (Delusion of Jealousy) அவர் பாதிப்படைந்திருக்கக்கூடும். எதற்கும் மனநல மருத்துவர் உதவியை நாடுதல் நலம்.

பி. இராமசாமி
திருவண்ணாமலை

★ சமீபத்தில் மகாராஷ்டிரத்தில் பல ஆயிரக் கணக்கான குடும்பங்கள் பூகம்பத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இதில் உயிர் தப்பிய பெரும்பாலானோர் முக்கியமாக, குழந்தைகள் ஓர் State of Fear-இல் வாழ்வதாகப் பத்திரிகைகள் கூறுகின்றன. இந்த Social Problem-ஐ சமாளிப்பது எப்படி?

பூகம்பம், புயல் போன்ற நிகழ்ச்சிக்குப்பின், அதில் தெய்வாதீனமாகத் தப்பியவர்கள் "Past Traumautic Disorder" என்ற மனநோயாலும் "Acute Stree Reaction" என்ற படியும், பாதிக்கப்படக் கூடும். நிவாரணப் பணிகளும், மறுவாழ்வுப் பணிகளும் செவ்வனே நிறைவேற்றப்பட்டால் மன பாதிப்பு குறையும். மிகவும் பாதிக்கப்பட்டவர்கள், மனநல மருத்துவரின் ஆலோசனை பெற்று சிகிச்சை பெறுவது நலம். இதுமாதிரி இடங்களுக்கு ஒரு மாதம் கழித்தாவது, மனநல முகாம் நடத்தி, தீவிர, தொடர்ந்த சிகிச்சை தேவைப்பட்டவர்களைக் கண்டறிந்து ஆவன செய்யலாம்.

எம்.ஏ. காதர்
சேலம்

★ மதுப்பழக்கத்தை மனநல மருத்துவத்தால் குணப்படுத்த முடியுமா?

குடிப்பழக்கம் ஒரு நோயாகவே கருதப்படுகிறது. உடலில் உள்ள இரசாயன அமைப்பு மனிதனுக்கு மனிதன் மாறுபடும். கொஞ்சம் குடிக்க ஆரம்பித்து, குடிகாரனாக மாறும் சில ருக்கு இந்த இரசாயன அமைப்பில் கோளாறு இருப்பதாகக் கண்டறிந்துள்ளனர். அவர்கள்



மதுவை விடமுடியாமல், விட்டால் உடல் பாதிப்பு ஏற்படும் வகையில் அவரது மூளை செதில்கள் அமைந்துள்ளன. ஆதலால் குடிப்பழக்கத்தை மாற்ற, நிறுத்த தற்போது நல்ல முறையில் சிகிச்சை செய்யலாம்.

எம். முருகேசன்
கள்ளிச்செட்டிப்பட்டி

★ மனம் ஒரு குரங்கு. அது இருபக்கமும், தாவித் தாவி மனிதர்களைக் கவலைப்படுத்தும், மகிழ்ச்சியிலும் ஆழ்த்துகிறது. இதை ஒருமுகப்படுத்த மனநலத்தால் முடியுமா?

★ பிறந்த 6 மாதக் குழந்தையின் மனநிலை எப்படி இருக்கும்?

★ சிறுவயது என்று சொல்லிவந்தால் எதில் போய் முடியும்?

★ அனுபவம் பெற்ற மனமும், அனுபவமில்லாத மனமும் உடைய இருவரின் வாழ்க்கை எப்படி இருக்கும்?

★ நம்பிக்கை ஒரு மனிதனின் மனதில் இல்லாவிட்டால் எந்த முயற்சியும் செய்ய முடியுமா?

குரங்கான மனத்துக்குத் தியானம் குரங்காட்டியாய் அமையும். பல்வேறு தியான முறைகள் பற்றி உளவியல் நிபுணர், யோகா நிபுணர் அல்லது மனநல மருத்துவ நிபுணரை அணுகி ஆலோசனை பெறவும். அதுவே கவனச் சிதறலையும் தடுக்கும்.

பிறந்த குழந்தைக்கும் சில உணர்வுகள் உண்டு எனக் கண்டுபிடித்துள்ளனர். அவை பய உணர்ச்சி (Startle-response), அழுகை-வருத்தம், சார்ந்திருக்கும் தன்மை (Dependency) என்பவை போன்ற சிலவாகும்.

திரும்பத் திரும்ப குழந்தை மனதில் ஒரு விஷயத்தைச் சொல்லி வந்தால், அது விதையாகி மரமாகவும் வளரும். நல்லது, கெட்டது இரண்டுக்கும் இது பொருந்தும். ஆனால் மாறுபட்ட கருத்துள்ளவர்களுடன் பழகும் போது, மனமுதிர்ச்சி அடையும்போது, விளைவுகளைச் சீர்தூக்கிப் பார்த்து உதாரணமாக, செல்வத்தைப் பற்றி நல்ல முடிவு எடுக்கவும் நல்ல வாய்ப்பு உண்டு.

அனுபவம் ஒரு நல்ல ஆசான். நல்லதைக் கடைப்பிடிக்கவும், தீயன விடவும், ாதையும் சீர்தூக்கிப் பார்க்கும் மனமுதிர்ச்சியையும் அது தரவல்லது. அனுபவமில்லாதவர்களுக்கு இது கடினம். பள்ளியில் படிப்பது ஏட்டுப்படிப்பு. வாழ்க்கையை உணரவைப்பது அனுபவப் படிப்பு.

எந்த முயற்சியும் ஓரளவாவது பலனளிக்கும். ஆனால், நம்பிக்கையோடு சேர்ந்த முயற்சி நிறைந்த பலனை அளிக்கும்.

தொகுப்பு: எம். ஜி. நாகேஷ்

தமிழரசி

தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வு!

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இந்திய அரசு அறிவித்த அதே விகிதத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கு 1.7.1993 முதல் ஒரு தவணை அகவிலைப்படி உயர்வு அனுமதித்துள்ளதாக அறிவித்துள்ளார்.

அதன்படி, 3,500 வரை சம்பளம் பெறும் அரசுப் பணியாளர்கள் தற்போது பெற்று வரும் 92 சதவிகித அகவிலைப்படிக்குப் பதிலாக, 97 சதவிகிதம் திருந்திய அகவிலைப்படி பெறுவார்கள். அதேபோல் ரூ.3,500-க்கு மேல் சம்பளம் பெறும் அரசுப் பணியாளர்கள், தற்போது பெற்று வரும் 69 சதவிகித அகவிலைப்படிக்கு மாறாக, 73 சதவிகித திருந்திய அகவிலைப்படி பெறுவார்கள்.

இதன்மூலம் அரசுப் பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்குக் குறைந்தபட்சம் பயன் ரூ.38-ம் அதிகப்பட்சம் பயன் ரூ.228-ம் கிடைக்கும்.

திருந்திய அகவிலைப்படி, உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் உட்பட அனைத்து அரசுப் பணியாளர்களுக்கும் பொருந்தும். இதன் மூலம் சுமார் 10 இலட்சம் பணியாளர்கள் பயன்பெறுவார்கள்.

இவ்வாறு அகவிலைப்படி உயர்வு அளிப்பதால், அரசுக்கு ஆண்டுக்கு ரூ.71.32 கோடி கூடுதல் நிதிச்சுமையும், நடப்பு நிதியாண்டுக்கு (1993-93) ரூ.47.55 கோடி நிதிச் சுமையும் ஏற்படும்.

1993 ஜூலை 1-ஆம் தேதி முதல் நிலுவையிலுள்3 அகவிலைப்படி உயர்வு உடனடியாகப் பணமாக வழங்கப்படும்.

இதேபோல், ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கும் மத்திய அரசின் ஓய்வூதியம் பெறுவோருக்கு அளித்துள்ளவாறு 1.7.1993 முதல் அகவிலைப்படி உயர்வு அளிக்கப்படும். அதன்படி ரூ.1,750 வரை ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கு, தற்போது 92 சதவிகிதம் அகவிலைப்படி பெறுவதற்குப் பதிலாக, 97 சதவிகிதம் அகவிலைப்படி உயர்வு அளிக்கப்படும். ரூ.1,750-க்கு மேல் 3,000 வரை ஓய்வூதியம் பெறுவோர் தற்போது, பெற்று வரும் 69 சதவிகித அகவிலைப்படிக்கு மாறாக, 73 சதவிகிதத் திருந்திய அகவிலைப்படி பெறுவார்கள். ரூ.3,000-க்கு மேல் ஓய்வூதியம் பெறுவோர், தற்போது 59 சதவிகித அகவிலைப்படி பெறுவதற்குப் பதிலாக 63 சதவிகித திருந்திய அகவிலைப்படி பெறுவார்கள்.

இதனால் மாதத்திற்குக் குறைந்தபட்சம் ரூ.19-ம், உயர்ந்தபட்சம் ரூ.156-ம் கூடுதல் பயன் கிடைக்கும்.

இந்தத் திருந்திய அகவிலைப்படி உயர்வு, உள்ளாட்சி நிறுவனம் மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வூதியம் பெற்று வருவோர் உட்பட அனைத்து ஓய்வூதியம் பெறுவோருக்கும், குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கும் பொருந்தும்.

இதனால், 2.67 இலட்சம் ஓய்வூதியம் பெறுவோரும், குடும்ப ஓய்வூதியம் பெறுவோரும் பயனடைவர். ஓய்வூதியம் பெறுவோருக்குக் கூடுதல் அகவிலைப்படி அளிப்பதன் மூலம், அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக ரூ.10.90 கோடி நிதிச் சுமையும், நடப்பு நிதியாண்டுக்கு ரூ.7.26 கோடி நிதிச் சுமையும் ஏற்படும்.

தமிழரசு

16.11.93 இதழ் மதுரை மாவட்டச் சிறப்பிதழாக மலர்கிறது!

- பக்கத்துக்குப் பக்கம் பயன்தரும் பல்சுவை விருந்து!
- கண்கவர் படங்கள்! கவின்மிகு கட்டுரைகள் கவிதைகள்!
- அரசு ஆற்றும் அரும்பணிகளின் அரிய தொகுப்பாக வெளி வருகிறது!

தமிழரசு

படிக்க-பயன்பெற-பாதுகாக்க

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சுப்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை! மேன்மை மிகுந்தவை! தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

- ★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- ★ லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
- ★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

69 சதவிகித இடஒதுக்கீட்டை உறுதி செய்ய இந்திய அரசியல் சட்டத்தில் உரிய திருத்தம் வேண்டும்!

மாண்புமிகு தமிழக முதல்வர் சட்டமன்றத்தில் நிகழ்த்திய உரை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தந்தை பெரியார்-பேரறிஞர் அண்ணா ஆகியோர், போராடிப் பெற்றுத் தந்த, பிற்படுத்தப்பட்டோருக்கான கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்கான உரிமை, இதய தெய்வம் புரட்சித் தலைவர், எம்.ஜி.ஆர். அவர்களால், 50 சதவிகிதம் என உயர்த்தப்பட்டு, தற்போது தமிழகத்தில் மொத்த ஒதுக்கீடு, 69 சதவிகிதம் என்றுள்ள தனிச் சிறப்புக்கு, பங்கம் நேர்ந்துள்ள சோதனையிலிருந்து மீள்வதற்காக, 4.11.1993 அன்று, தமிழ் நாடு அமைச்சரவைத் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவினை ஒட்டி, விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று, சட்டமன்றப் பேரவையின் இந்தச் சிறப்புக் கூட்டத்தை, இன்று கூட்டியுள்ள தங்களுக்கு, என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறுகிய கால அழைப்பாக இருந்தும் கூட, அதனை ஏற்று, இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு, கருத்துரைகள் வழங்கிட வருகை தந்துள்ள, அனைத்து அரசியல் கட்சிகளையும் சார்ந்த, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும், பேரவைத் தலைவர் வாயிலாக, எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் ஒரு இக்கட்டான, அதே நேரத்தில், சோதனை மிகுந்த கட்டத்தில், இன்றைக்கு இங்கே கூடியிருக்கிறோம். பிற்படுத்தப்பட்ட, பெரும்பான்மைத் தமிழ்நாட்டு மக்களின், சமூக, பொருளாதார, கல்வி மேம்பாட்டுக்காக, வகுத்துச் செயல்படுத்தப்பட்டு வரும், இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்குப் பின்னடைவு ஏற்படுத்தப்பட்டு, ஓர் நெருக்கடியும், சோதனையும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சோதனையிலிருந்து, தமிழ்நாட்டின் கோடானுகோடிப் பிற்படுத்தப்பட்ட மக்களை, மீட்பதற்கான வழி வகைகளை ஆராய்ந்து, தக்க முடிவுகளை மேற்கொள்ள வேண்டிய கட்டத்திலும், கட்டாயத்திலும், நாம் இன்றைக்கு இருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள், இன்றைக்குத் தமிழ்நாட்டில், 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்டோருக்கெனவும், ஒரு சதவிகிதம் பழங்குடியினருக்கெனவும், 30 சதவிகிதம் பிற்படுத்தப்பட்டோருக்கெனவும், 20 சதவிகிதம் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினருக்கெனவும், 31 சதவிகிதம் பொதுத் தொகுப்பிற்கெனவும், அரசுப் பணிகளிலும், கல்வி நிலையங்களிலும், இட ஒதுக்கீடு நடைமுறையில் இருந்து வருகின்றது.

நாம் அனைவரும் அறிவோம்; இட ஒதுக்கீட்டுக் கொள்கையை, அறிமுகம் செய்து, செயல்படுத்துவதில், இந்தியத் துணைக் கண்டத்திலேயே, தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகின்றது. இட ஒதுக்கீட்டில் மாத்திரம் அல்லாமல், பிற்படுத்தப்பட்டோரின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக, பல்வேறு வகையான நலத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்துவதிலும், தமிழகம் முன்னணியில் உள்ளது.

தமிழ்நாட்டைப் பொருத்தவரை, இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கென்று, ஒரு நீண்ட நெடிய வரலாறே உண்டு. இந்த வரலாறு, ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தே தொடங்குவதாகும். 1854-ஆம் ஆண்டு, வெள்ளையர் ஆதிக்கத்தின் ஆட்சி, இங்கே நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அன்றைக்கு இருந்த 'வருவாய் வாரியம்', அதாவது, Board of Revenue, மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையிலிருந்து, இந்த வரலாறு தொடங்குகிறது. 1920-ஆம் ஆண்டு, நீதிக்கட்சி, தேர்தல்களில் வெற்றியைப் பெற்றவுடன், இட ஒதுக்கீட்டுக் கொள்கை, புதிய பரிமாணத்தைப் பெற்றது. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பெற்றது.

அதுவரை வருவாய்த் துறையில் மாத்திரம் நிலவி வந்த இட ஒதுக்கீடு, அரசின் எல்லாத் துறைகளுக்கும், துறைகளின் எல்லா நிலைகளுக்கும், விரிவாக்கம் செய்யப்பட்டது. அரசுப் பணிகளில் சேர்க்கப்படுவோர், ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவிலும், பணிகளில் அமர்த்தப்படுவோரின் எண்ணிக்கை, பரிசீலனைக்கு உட்படுத்தப்படும் வகையில், 1921-ஆம் ஆண்டு ஆணை வெளியிடப்பட்டது. இந்த ஆணை தான், முதல் கம்யூனல் ஜி.ஓ., அதாவது First Communal Government Order என்று, பிற்படுத்தப்பட்டோரின் முதல் உரிமைச் சாசனம் ஆகும்.

இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், அரசுப் பணிகளில் நுழைவதற்கு மாத்திரமே என்று இருந்ததை, பணி உயர்வுக்கும் பொருந்தும்படியாக அமைக்கப்பட்டது தான், இரண்டாவது கம்யூனல் ஜி.ஓ. என்பதாகும்.

பின்னர், 1927 நவம்பர் 4-ஆம் தேதி அன்று, அந்தந்த இனங்களின் மக்கட் தொகை அடிப்படையில், அரசுப் பணிகள் வழங்கப்பட வேண்டுமென்ற, எல்லா தரப்பிலிருந்தும் எழுப்பப்பட்ட கோரிக்கையை ஏற்று; 12 அரசுப் பணியிடங்கள் காலி என்றால், அவற்றுள் 5 பணி இடங்கள், பிராமணர் அல்லாதாருக்கும்; 2 இடங்கள் பிராமணருக்கும்; 2 இடங்கள் ஆங்கிலோ இந்தியர் மற்றும் கிறித்துவருக்கும்; 2 இடங்கள் முகமதியருக்கும்; ஒரு இடம் நலிவடைந்த வகுப்பினருக்கும், என்ற இட ஒதுக்கீட்டு முறை, நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த இட ஒதுக்கீட்டு முறை, 1947-ஆம் ஆண்டு வரை நீடித்தது.

1934-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட, 'சென்னை ராஜதானி பிற்படுத்தப்பட்டோர் லீக்', Madras Provincial Backward Class League என்ற அமைப்பு, தொடர்ந்து கோரி வந்தது. அந்த கோரிக்கையையும் ஏற்று, ஏற்கெனவே இருந்து வந்த இட ஒதுக்கீட்டுப் பட்டியலில், 'பிற்படுத்தப்பட்ட இந்துக்கள்', Backward Hindus என்ற பிரிவும் சேர்க்கப்பட்டு, இட ஒதுக்கீட்டு முறை, 1947-இல் மாற்றியமைக்கப்பட்டது. முதறிஞர் இராஜாஜி அவர்கள் தலைமையில், தமிழ்நாட்டில் அமைந்த முதல் காங்கிரஸ் அரசு, அதற்கு முன்னரே அமலில் இருந்து வந்த, வகுப்புவாரி இட ஒதுக்கீட்டு முறையைத் தொடர்ந்து செயல்படுத்தி வந்தது என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

1951-ஆம் ஆண்டு, பிற்படுத்தப்பட்டோர் இயக்கம், ஒரு திருப்பு முனையைச் சந்திக்க வேண்டியதாயிற்று. இந்திய அரசியல் சட்டம் அமலுக்கு வந்தவுடன், கம்யூனால் ஜி.ஓ. நடைமுறைப்படுத்தப்படுவதற்கு எதிராக, சிலர் நீதிமன்றங்களுக்குச் சென்றனர். கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை, Champakam Dorairajan Vs. State of Madras என்ற வழக்கில், உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அதைப்போலவே, அரசுப் பணிகளில் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை, Venkataraman Vs. State of Madras என்ற வழக்கின் மூலம், உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றது. இந்த இரண்டு வழக்குகளையும் பரிசீலித்த உச்ச நீதிமன்றம், கம்யூனால் ஜி.ஓ., நாடு சுதந்திரம் அடைந்த பின், உருவாக்கப்பட்ட அரசியல் சட்டத்தின்படி, செல்லத் தக்கது அல்ல எனத் தீர்ப்பளித்தது. பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்தில், பேரடி விழுந்தது கண்டு, கிளர்ந்து எழுந்தார் தந்தை பெரியார். அன்று பிற்படுத்தப்பட்டோர் நலம் நாடிய அனைவரும், தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணா ஆகியோரின் தலைமையில், ஓரணியில் திரண்டனர். பெருந்தலைவர் காமராஜரும் அன்றைய தினம், பிற்படுத்தப்பட்டோர் நலம் நாடியே, இந்த உணர்வினைத் தக்க வகையில் வெளிப்படுத்தினார். தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை ஏற்பட்டுவிடும், என்ற தமிழக மக்களின் உறுதியான உணர்வுகள், அன்றைய மாநில அரசை மட்டுமல்லாது, மத்திய அரசையும் சிந்திக்கச் செய்தன.

தமிழ்நாட்டின் உணர்வுகளுக்குச் செவி சாய்த்த, அன்றைய பாரதப் பிரதமர் பண்டித நேரு அவர்கள், இந்திய அரசியல் சட்டத்தில், 15(4) என்ற புதிய பிரிவைச் சேர்த்து, அரசியல் சட்டத்தின் முதல் திருத்தத்திற்கு, வழி வகை செய்து, தமிழ்நாட்டில் அப்போது எழுந்த இட ஒதுக்கீட்டுப் பிரச்சினைக்கு, முடிவு கண்டார்.

அரசியல் சாசனத்தின் 15-வது பிரிவில், 15(4) என்னும் புதிய உட்பிரிவு ஒன்று,

"Nothing in this article or in clause (2) of article 29 shall prevent the State from making any special provision for the advancement of any socially and educationally backward classes of citizens or for the Scheduled Castes and Scheduled Tribes"- எனச் சேர்க்கப்பட்டது.

15(4) என்ற இப்புதிய உட்பிரிவு, அரசியல் சட்டத்தில் சேர்க்கப்பட்டவுடன், தமிழகத்தில் இட ஒதுக்கீடு திருத்தி அமைக்கப்பட்டது தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு, 15 சதவீதம் என்றும், பிற்படுத்தப்பட்டோருக்கு 25 சதவீதம் என்றும், பொதுத் தொகுப்பிற்கு 60 சதவீதம் என்றும், இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்வாறு அரசியல் சாசனத்தின்படி, இட ஒதுக்கீடு பெற்றுத் தந்தது, திராவிட இயக்கத்தின் போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றி என்பதை, எவரும் மறுத்தது இல்லை என்பதை, அனைவரும் அறிவோம்.

மாநிலங்களின் சீரமைப்பிற்குப் பின்னர், 1954-ஆம் ஆண்டு, இட ஒதுக்கீட்டில், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகையைக் கருத்தில் கொண்டு, மாறுதல் செய்யப்பட்டது. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு, 16 சதவீதம் என்று உயர்த்தியும், பிற்படுத்தப்பட்டோருக்கு 25 சதவீதம் என்றும், பொதுத் தொகுப்பிற்கு 59 சதவீதம் என்று குறைத்தும், இட ஒதுக்கீடு மாற்றப்பட்டது.

1969-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட, சட்டநாதன் கமிஷன், அதனுடைய அறிக்கையை, 1970-ஆம் அரசுக்கு அளித்தது. சட்டநாதன் கமிஷன் அளித்த பரிந்துரைகளில், ஒன்று ஏற்கப்பட்டு, இட ஒதுக்கீடு, 7.6.1971-ஆம் நாளன்று, திருத்தி அமைக்கப்பட்டது. அதன்படி, தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு, 18 சதவீதம் என்று உயர்த்தியும், பிற்படுத்தப்பட்டோருக்கு 31 சதவீதம் என்று உயர்த்தியும், பொதுத் தொகுப்பிற்கு 51 சதவீதம் என்று குறைத்தும், இட ஒதுக்கீட்டு முறை அறிவிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்தக் கட்டத்தில், Kerala Vs. N.M. Thomas, என்ற உச்ச நீதி மன்றத்தின், புகழ் பெற்ற வழக்கு ஒன்றில், Justice Thiru Fazal Ali, தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அம்சம் ஒன்றை, இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

"Decided cases of this Court have no doubt laid down that the percentage of reservation should not exceed 50%. As I read the authorities, this is however a rule of caution and does not exhaust all categories. Suppose for instance, a State has a large number of backward classes of citizens which constitute 80% of the population and Government, in order to give them proper representation, reserves

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

இந்த இதழில்...

69 சதவிகித இட ஒதுக்கீட்டை உறுதி செய்ய இந்திய அரசியல் சட்டத்தில் உரிய திருத்தம் வேண்டும் மாண்புமிகு முதல்வர் உரை ... 2
மழை வெள்ளம் - நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட மதுரை - குன்னூர் ஆகிய பகுதிகளுக்கு நேரில் சென்று முதல்வர் அவர்கள் பார்வையிட்டார். 9
நீலகிரி நிலச்சரிவு: பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உதவி ... 12
மதுரை மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ... 17
மதுரை மாவட்டத் திருக்கோயில்கள் ... 21
ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப்பணிகள் ... 24
மதுரை மூதூர் ... 29
டாக்டர் ஜெ. ஜெயலலிதா 15 அம்சக் குழந்தைகள் நலத்திட்டத் தொடக்க விழா ... 33
மனம் கவரும் மதுரை (கவிதை) ... 41
திருமுருக கிருபானந்த வாரியார் ... 43
டான்பெட் ... 45

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2024
கார்த்திகைத் திங்கள் - 1
மலர்:24 இதழ்:10
16-11-1993
விலை: ரூபாய் மூன்று

சட்டத்தில் ஏற்பட்ட, முதல் திருத்தத் திற்குக் காரணமே, தமிழ்நாடு, பிற்படுத் தப்பட்ட மக்களின் நலனைப் பாதுகாக்க, எடுத்த நடவடிக்கை தான் என்பது, வரலாற்று உண்மையாகும்.

மன்னர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மானியத்தை ஒழித்திட, அன்னை இந்திரா அவர்கள் முயற்சித்தாரே! அது புரட்சிகரமான திட்டம் அல்லவா? அதனால் ஏற்பட்ட பிரச்சினைகள் எவ்வளவு? சளைத்தாரா இந்திராகாந்தி அவர்கள்? இல்லை.

14 வங்கிகளை நாட்டுடைமையாக்க, அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், முனைந்தாரே! அது மிகப் பெரிய சோஷலிச நடவடிக்கை அல்லவா? அதற்கு ஏற்பட்ட எதிர்ப்புகள், எத்தகை யவை? இவைகளை எல்லாம் கண்டு, இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், கவலை கொண்டாரா? இல்லை! சாத னைச் சரித்திரம் படைத்தார்.

எப்படி? தடைகளை எல்லாம் அகற்ற, 1971-ஆம் ஆண்டில், இந்திய அரசியல் சட்டத்தில்; 25-வது மற்றும் 26-வது திருத்தங்களை ஏற்படுத்தி, வெற்றி கண்டார்.

1973-ஆம் ஆண்டில், ஆந்திர மாநிலத்திலுள்ள தெலுங்கானா மக்கள், தொடர்ச்சியான போராட்டங்களில் ஈடுபட்டார்களே? அப்போது இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், என்ன செய்தார்? தெலுங்கானா மக்களின் சமூகப் பிரச்சினைகளையும், கோரிக்கை களையும், முழுமையாகப் புரிந்து கொண்ட அவர், தெலுங்கானா மக்கள் மன நிறைவு கொள்ளத்தக்க வகையில், அரசியல் சட்டத்தில், 32-வது திருத்தத்தை கொண்டு வந்து, நிறைவேற்றப் பாடுபட்டார் என் பதை, இந்த மாமன்றத்தின் க்வனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில், பன்னெடுங்காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும், இட ஒதுக்கீட் டுக் கொள்கைக்கு, சமீப காலமாக ஏற்பட்டுள்ள சோதனைகள், அன்னை இந்திரா அவர்களின் சாதனைகளை, நினைவுக்குக் கொண்டு வந்து விட்டன என்பதை, இந்தப் பேரவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நமது உணர்வுகளை நாம் மறைக்கத் தேவையில்லை. அப்படி ஒரு சூழ்நிலை, தமிழ்நாட்டில் இன்றைக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும், சூசகமாகத் தெரிவிப்பது, எனது கடமை என்று கருதுகிறேன்.

இட ஒதுக்கீட்டின் அளவுகோல்களும், வரையறைகளும், சம்பந்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் அமைய வேண்டுமே ஒழிய, அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கும், தேவைகளுக்கும், முரணாக இருக்கக் கூடாது.

இந்திய நாடு ஒரு மிகப் பெரிய நாடு. பல இனங்கள், பல சமயங்கள், பல மொழிகள் ஆகியவைகளை, தன்னகத்தே கொண்ட நாடு. பலதரப்பட்ட மக்களின் சமுதாயப் பிரச்சினைகள், காலப்போக் கில், முழுமையாகத் தீர்க்கப்பட வேண் டும் என்றால், அவ்வப்பொழுது ஏற்படும் மாற்றங்களைக் கருத்தில் கொண்டு, அரசியல் ரீதியாகவும், சட்டங்களின் அடிப்படையிலும், தேவையான மாற்றங் களைக் கொண்டு வந்து, அத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதன் மூலமாகத் தான், இந்தப் பரந்த நாட்டில், மக்களி டையே அமைதியையும், மன நிறைவையும் உருவாக்க முடியும். இட ஒதுக்கீடு, முழுக்கு முழுக்க ஒரு சமுதாயப் பிரச்சினையாகும்.

இந்த சமுதாயப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில், மாநில அரசின் கடமை என்பது மட்டும் அல்லாமல், மத்திய அரசுக்கும் சம பங்கு உண்டு. அதற்கு உறுதுணையான சட்டத் திருத்தங்கள் செய்திட, மாநில அரசுகளுக்கு, மத்திய அரசு துணை இருக்க வேண்டும் என பதைத் தான், இன்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

சமூக ரீதியிலும், கல்வியிலும், பின் தங்கிய மக்களின் முன்னேற்றத்திற்கென, மாநில அரசுகள், தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ள லாம்; அரசியல் சட்டத்தின் பிற பிரிவுகள், அவற்றிற்கு குறுக்கீடாக இருக்கலாகாது, என்ற அரசியல் சட்டத்தின், 15(4) பிரிவை இணைத்து, முதல் அரசியல் சட்டத் திருத்தத்தைப் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்து பேசிய, அன்றைய பிரதமர், பண்டித நேரு பெருமகனார் அவர்கள் கூட, இதே கருத்தைத்தான் வலியுறுத்திப் பேசியுள்ளார். அன்று அவர் பேசும்போது குறிப்பிட்டார்:

"If this amendment is passed, the State Governments concerned will have a certain power to go ahead with the laws that they have already passed. We shall help them in examining them and dealing with them. They should, if necessary, amend their laws here and there so as to deal with these hard cases".

இட ஒதுக்கீட்டுக் கொள்கை குறித்துத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 9.11.1993 அன்றைய சிறப்புக் கூட்டத்தின் தீர்மானம்

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட மக்க ளின், சமுதாய, பொருளாதார, கல்வி மேம்பாட்டுக்கென, அரசுப் பணிகளி லும், கல்வி நிறுவனங்களிலும் இட ஒதுக்கீட்டுக் கொள்கை, நீண்ட நெடுங் காலமாகவே, நடைமுறையில் இருந்து வருகிறது. தற்பொழுது தமிழ்நாட்டில், 18 சதவீதம் தாழ்த்தப்பட்டோருக்கு என்றும், 1 சதவீதம் பழங்குடியினருக்கு என்றும், 30 சதவீதம் பிற்படுத்தப் பட்டோருக்கு என்றும், 20 சதவீதம் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினருக்கு என்றும், 31 சதவீதம் பொதுத் தொகுப்பிற்கு என்றும், இட ஒதுக்கீடு, கடைப்பிடிக்கப்பட்டு வரு கின்றது. தமிழ்நாட்டில், பல நூற் றாண்டுக் காலமாக, ஒடுக்கப்பட்டு நலி வடைந்த மக்கள், இந்த இருபதாம் நூற் றாண்டில் தான், தொடர்ந்து அமலில் இருந்து வரும், இட ஒதுக்கீட்டுக் கொள் கையினால், உரிய பயன்களையும், நல்ல வாழ்க்கை நிலையையும் பெற்று, முன் னேறி வருகின்றனர். தமிழ்நாட்டில் நிலவி வரும், இட ஒதுக்கீட்டுக் கொள்கை யின் பரிணாம வளர்ச்சியை, ஆராய்ந்து பார்க்கும்போது, இட ஒதுக்கீட்டின் அளவு, பெரும்பான்மை மக்களின் தேவைக்கேற்ப, ஒவ்வொரு கட்டத்திலும், மேல்நோக்கி வளர்ந்துள்ளதே அன்றி, எந்த நிலையிலும், ஒதுக்கீட்டு அளவு, இதுவரை குறைக்கப்படவில்லை என்ற வரலாற்று உண்மை, புலனாகும்.

நம் தமிழகத்தில் உள்ள பிற்படுத் தப்பட்ட மக்களின், ஒட்டுமொத்த உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில், 30.9.1991 அன்று, இந்தப் பேரவை யில், "..... மண்டல குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதில், 27 சதவிகிதம் என்பதற்குப் பதிலாக, 50 சதவிகிதம் என்று, இட ஒதுக்கீடு செய்வதைக் கொள்கையாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், மத்திய அரசுத் துறைகள், மத்திய அரசுத் துறை நிறுவனங்கள், ஆகியவற்றின் வேலை வாய்ப்புகளில் மட்டுமன்றி, அனைத்துக் கல்வி நிலையங்களின் அனுமதியிலும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு, 50 சதவிகித இட ஒதுக்கீடு செய்யவேண்டும் என்றும், இந்தச் சட்டப்பேரவை, மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள் கிறது" என்னும் தீர்மானம், எல்லா அரசியல் கட்சிகளையும் சார்ந்த உறுப் பினர்களின் பேராதரவோடு, ஒரு மனதாக நிறைவேற்றப் பெற்றது. அந்தத் தீர்மானம், இந்தியப் பிரதமர் மாண்புமிகு திரு நரசிம்மராவ் அவர்களுக்கு, அனுப்பி வைக்கப்பட்டு, தேவையான வேண்டு கோளும் விடுக்கப்பட்டது.

மண்டல குழு பரிந்துரைகள் தொடர் பாக, உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்குகளில், இந்திய உச்ச நீதிமன்றம், மொத்த ஒதுக்கீடுகள், 50 சதவிகித உச்ச வரம்பினை மீறாத வகையில், அமைய வேண்டும் என்று, 16.11.1992 அன்று, ஆணை பிறப்பித்தது. இதனை நிறை வேற்றக் காலக்கெடு எதையும், உச்ச நீதிமன்றம் நிர்ணயிக்கவில்லை. கல்வி நிறுவனங்களில், இந்த ஆண்டிற்கான

மிகத் தெளிவாக அன்று, பண்டித நேரு தெரிவித்த கருத்துக்களுக்குச் செயல் வடிவம் தர வேண்டிய அவசர அவசியம், இன்றைய மத்திய அரசுக்கு ஏற்பட்டு உள்ளது. இந்தக் கடுமையான பிரச்சினை களில், மாநில அரசுகளின் பிரச்சினை களைத் தீர்க்க, சட்டங்களை, "இங் கொன்றும் அங்கொன்றுமாக" திருத்திக் கொள்வதற்கும், பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும், நாங்கள் உத விடுவோம் என அவர் சொல்லியதி லிருந்து, சட்டத் திருத்தங்கள் செய்ய, மத்திய அரசு துணை இருக்க வேண்டும் என்பது, தெளிவாகிறது.

எனவே, மத்திய அரசின் மூலம், உரிய சட்டத் திருத்தம் செய்ய வேண்டிய, அப்படிப்பட்ட ஓர் அவசியம், இன்று தமிழகத்திலே, ஏன், நாடு தழுவிய நிலையில் எழுந்துள்ளது என்றால், அதை அனைவரும் ஏற்றுக் கொள்வீர்கள், என நம்புகிறேன்.

தமிழ்நாட்டில் பெரும்பான்மையாக வாழும், பிற்படுத்தப்பட்ட மக்களுடைய, சமூக முன்னேற்றம் கருதி, பொருளாதார நலம் கருதி, அவர்களுக்குத் தொடர்ந்து, தேவையான அளவிற்கு இட ஒதுக்கீடு செய்வது, தமிழ்நாடு அரசின் தலையாய கடமையாக அமைந்துள்ள இந்த நேரத் தில், இதற்காகத் தேவைப்பட்டால், அன்று பண்டித ஜவகர்லால் நேரு குறிப்பிட் டதைப் போல், இந்திய அரசியல் சட்டத்தில், தகுந்த திருத்தங்களைக் கொண்டு வர வேண்டுமென்றால், அது ஏற்றுக்கொள்ளக் கூடியதாகத் தான் இருக் கும். நமக்கு நீதிமன்றங்களைப் புறக் கணிக்கும் எண்ணம், கிஞ்சித்தும் இல்லை. பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமை களைத் தெளிவுபடுத்தி, அவற்றைப் பாதுகாப்பதும், அவற்றை நிறைவேற்ற, எல்லா வித நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதும் தான், இப்போது நம்மிடையே இருக்கக்கூடிய, தலையாய பொறுப் பாகும். அன்று 'கம்யூனல் ஜி.ஓ.'-வைப் பாதுகாக்க, எப்படி அரசியல் சட்டத் திலே, முதல் திருத்தம் கொண்டு வரப்பட்டு, நிறைவேற்றப்பட்டதோ- அதே நடவடிக்கை, இன்றும் எடுக்கப்பட்டாக வேண்டும்.

எனவே தான், 69 சதவீத இட ஒதுக்கீட்டினை, உறுதிப்படுத்துவதற்காக, இந்திய அரசியல் சட்டத்தில், திருத்தம் தேவைப்படுகிறது என்பதை, நாம் உரிய முறையில், உணர்த்த வேண்டியவர்களாய் உள்ளோம். அதுதான், பிற்படுத்தப்பட்ட மக்களின் உள்ளங்களில், தற்போது ஏற்பட்டுள்ள காயத்தைப் போக்கும் மாமருந்தாகும். அவர்களை எதிர்நோக்கி நிற்கும் பின்னடைவுகளிலிருந்து, அவர் களை மீட்கும் ஒரே வழியாகும். இதை மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

"In a democracy, neither the Constitution nor the Government is Supreme; it is the people who are Supreme and they have the right to change the Constitution partially or completely... The pre-condition for a constitution to be really democratic is that it is adaptable and responsive to the people's will, and the Government set up under it is not the Government of one or of the few, but of all, by all and for all"

என்ற தத்துவத்தை, மிகுந்த பணிவோடு, உங்கள் எல்லோருடைய கவனத்திற்கும் வைத்து, இன்று ஏற்பட்டுள்ள சூழலில், உடனடியாக நாம் மேற்கொள்ள வேண் டிய நடவடிக்கைகளை உள்ளடக்கிய, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இத் தீர்மானத்தினை, இந்தப் பேரவையில் முன்மொழிந்திட விரும்புகிறேன்●

80% of the jobs for them, can it be said that the percentage of reservation is bad and violates the permissible limits of Clause (4) of Article 16? The answer must necessarily be in the negative. The dominant object of this provision is to take steps to make inadequate representation adequate".

நீதிபதி திரு. பசல் அலி அவர்கள் குறிப்பிட்டுள்ளது, சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனைக் கருதி, அரசு மேற்கொள்ளும் கொள்கைகள் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எந்த விதத்திலும் முரணாகாது என்பதையே வலியுறுத்துகிறது. எனவே, தமிழ்நாட்டில் கடைபிடிக்கப்பட்டு வரும் இட ஒதுக்கீடுக் கொள்கை எந்த வகையிலும் எதற்கும் புறம்பானதாக ஆகாது என்பது தெளிவாகிறது.

நீதிபதி திரு. பசல் அலி அவர்கள் அளித்த, இத்தீர்ப்பின் அடிப்படையில் சிந்தித்த வேளையில் தான், முதலமைச்சராக இருந்த, இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், 1980-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், அதுவரை பிற்படுத்தப்பட்டோருக்கு, 31 சதவீதம் என்று இருந்த இட ஒதுக்கீட்டை, 50 சதவீதம் என உயர்த்தினார். மொத்த ஒதுக்கீடு அன்று, 68 சதவீதம் என்ற அளவுக்குக் கொண்டு செல்லப்பட்டது. இத்தீர்ப்பின் அடிப்படையில், வேறு சில மாநிலங்களும் தங்களது மாநிலத்தில் இட ஒதுக்கீட்டு அளவை, 50 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்த்திக் கொண்டன.

1990-ஆம் ஆண்டு, சென்னை உயர் நீதி மன்றம் வழங்கிய ஒரு தீர்ப்பின் அடிப்படையில், பழங்குடியினருக்கு என்று 1 சதவீதம், தனியாக இட ஒதுக்கீடு ஏற்படுத்தப்பட்டு, பொதுத் தொகுப்பில் அதுவரை இருந்த வந்த, 32 சதவீத இட ஒதுக்கீடு, 31 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

இவ்வாறு, தமிழ்நாட்டில் நிலவி வரும் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின், பரிணாம வளர்ச்சியைப் பரிசீலனை செய்யும் போது, இட ஒதுக்கீட்டின் அளவு, பெரும்பான்மையாக வாழும் பிற்படுத்தப்பட்ட, மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் தேவைக்கு ஏற்ப, ஒவ்வொரு கட்டத்திலும், மேல் நோக்கி வளர்ந்துள்ளதே அன்றி, எந்த நிலையிலும், ஒதுக்கீட்டு அளவு, இதுவரை குறைக்கப்படவில்லை என்ற வரலாற்று உண்மை, புலனாகும்.

மத்திய அரசுத் துறைகளிலும், நிறுவனங்களிலும், பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டுக்கெனப் பரிந்துரைத்த, மண்டல் கமிஷன் பரிந்துரைகளை ஏற்று, 27 சதவீதம் ஒதுக்கீடு செய்வதாக, முந்தைய மத்திய அரசு, 13.8.1990 அன்று ஆணை வெளியிட்டதையும், தற்போதைய மத்திய அரசு, 25.9.1991 அன்று, பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்களுக்கு, 10 சதவிகித ஒதுக்கீடு என்ற அம்சத்தை, இணைத்து வெளியிட்டதையும், அப்படியே நாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை, அனைவரும் அறிவீர்கள்.

நம் தமிழகத்தில் உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களின், ஒட்டு மொத்த உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில், 30.9.1991 அன்று, இதே சட்டப் பேரவையில், "..... மண்டல் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதில், 27 சதவிகிதம் என்பதற்குப் பதிலாக, 50 சதவிகித என்று, இட ஒதுக்கீடு செய்வதைக் கொள்கையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், மத்திய அரசுத் துறைகள், மத்திய அரசுத் துறை நிறுவனங்கள், ஆகியவற்றின் வேலைவாய்ப்புகளில் மட்டும் இன்றி, அனைத்துக் கல்வி நிலையங்களின் அனுமதியும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு, 50 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும், இந்தச் சட்டப் பேரவை, மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது" என்ற தீர்மானம், என்னால் முன்மொழியப் பெற்று, எல்லா அரசியல் கட்சிகளையும் சார்ந்த உறுப்பினர்களின் பேராதரவோடு, ஒரு மனதாக நிறைவேற்றப் பெற்றது என்பதனை, நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். அந்தத் தீர்மானத்தை, இந்தியப் பிரதமர் மாண்புமிகு திரு நரசிம்மராவ் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அத்தோடு, வேண்டுகோளும் விடுத்திருந்தேன்.

மண்டல் குழு பரிந்துரைகள் தொடர்பாக, உச்ச நீதி மன்றத்தில் நடைபெற்ற வழக்குகளில், 16.11.1992 அன்று, உச்ச நீதி மன்றத்தின் ஒன்பது நீதி பதிகள் அடங்கிய அரசியல் சட்ட பெஞ்ச், Nine Judges Constitutional Bench, தனது தீர்ப்பினை வழங்கியது. அந்தத் தீர்ப்பில்,

தீர்ப்பு வழங்கப்பட்ட நாளிலிருந்து, நான்கு மாத காலத்திற்கு உள்ளாகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல், நீக்குதல், ஆகியவற்றைப் பரிசீலனை செய்ய, நிரந்தரக் கமிஷன் Permanent Commission ஒன்றை அமைக்க வேண்டும்.

ஆறு மாத காலத்திற்கு உள்ளாகப், பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருந்து, முன்னேறிய பகுதியினரை, Creamy Layer-ஐ, நீக்க வேண்டும். மொத்த இட ஒதுக்கீடுகள், 50 சதவிகிதம் உச்ச வரம்பை மீறாத வகையில், அமைத்துக் கொள்ள வேண்டும் -

என்பவை, மிக முக்கியமான அம்சங்களாகும்.

இந்திய உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பில், உள்ள அம்சங்கள் எல்லாம், விரிவாகவும், ஆழமாகவும், 7.1.1993 அன்று நடைபெற்ற, தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டத்தில், பரிசீலனை செய்யப்பட்டன. பரிசீலனைக்குப் பின்னர், ஒதுக்கீட்டிற்கு 50 சதவிகித உச்ச வரம்பு விதித்துள்ள ஆணைக்கு எதிராகவும், பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருந்து, முன்னேறிய பகுதியினரை நீக்க வேண்டும் என்று ஆணைக்கு எதிராகவும், உச்ச நீதி மன்றத்தில், தமிழ்நாடு அரசின் சார்பில், மறு ஆய்வு மனு, Review Petition தாக்கல் செய்வது என்று, அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு மேற்கொள்ளப்பட்டது. அத்துடன், உச்ச நீதி மன்றத்தின் ஆணையையொட்டி, நிரந்தரக் கமிஷன் ஒன்றை அமைத்திடவும், அரசு முடிவு செய்தது.

அமைச்சரவைக் கூட்டத்தில், மேற்கொள்ளப்பட்ட முடிவுகளுக்கு ஏற்ப, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் கமிஷன் ஒன்று, 15.3.1993 அன்று அமைக்கப்பட்டது என்பதை, மாண்புமிகு உறுப்பினர்களாகிய நீங்கள் அனைவரும் அறிவீர்கள். அதற்கான அறிவிப்பு, இந்த மாமன்றத்தில் தான் செய்யப்பட்டது. இந்திய உச்ச நீதி மன்றத்தில், மறு ஆய்வு மனு, 22.3.1993 அன்று தாக்கல் செய்யப்பட்டது. அத்தோடு, தெளிவாக்க மனு Clarificatory Petition ஒன்றும், 23.4.1993 அன்று, உச்ச நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. மறு ஆய்வு மனு, உச்ச நீதி மன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாகச் சொல்லப்பட்டாலும், இதுவரை, நமது அரசிற்கு, உச்ச நீதி மன்றத்தில் இருந்து, இது பற்றி எந்தவிதத் தகவலும் வரவில்லை.

மண்டல் கமிஷன் வழக்குகளில், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கென, அமைக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு, உச்ச நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு வரவில்லை என்பதும், இந்திய அரசியல் சட்டத்தில், இட ஒதுக்கீட்டிற்கு, உச்ச வரம்பு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை என்பதும்; வேலைவாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு என்ற பிரச்சினை தான், உச்ச நீதி மன்றத்தின் பரிசீலனைக்கு வந்ததே அல்லாமல், கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை, பரிசீலனைக்கு வரவில்லை என்பதும்; மறு ஆய்வு மனுவில் தமிழ்நாடு அரசு, உச்ச நீதி மன்றத்தின் கவனத்திற்குப் பணிந்து வைத்துள்ள வாதங்களாகும்.

கல்வி நிறுவனங்களில், அனுமதி கொடுக்கும் பிரச்சினையை சென்னையைச் சார்ந்த ஓர் அமைப்பு, சென்னை உயர் நீதிமன்றத்தில் எழுப்பிய போது, சென்னை உயர் நீதி மன்றம் 26.7.1993 அன்று வெளியிட்ட தீர்ப்பில், இட ஒதுக்கீட்டு அளவை, 50 சதவிகிதத்திற்கு குறைத்திட, உச்ச நீதிமன்றம் காலக்கெடு நிர்ணயம் செய்யவில்லை; எனவே இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரை, நடப்பு ஆண்டில், தமிழ்நாடு அரசு, ஏற்கெனவே பின்பற்றி வந்துள்ள கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றலாம்; 1994-95-ஆம் ஆண்டிலிருந்து, இட ஒதுக்கீட்டு அளவை, 50 சதவிகிதமாகக் குறைத்து, அமலாக்கம் செய்ய வேண்டும், என்று தெளிவாக்கியது. உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை ஒட்டி, தமிழ்நாட்டில் உள்ள மருத்துவக் கல்லூரிகள், மற்றும் பொறியியல் கல்லூரிகளில், அனுமதி தொடர்பான ஏற்பாடுகள், விரைந்து மேற்கொள்ளப்பட்டன.

சென்னை உயர் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு எதிராக, சென்னையைச் சார்ந்த ஓர் அமைப்பு, உச்ச நீதி மன்றத்தில், தனி அனுமதி மனு, Special Leave Petition ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது. தமிழ்நாடு அரசும், இப்பொழுது உள்ள இட ஒதுக்கீடு முறை, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உள்ள நிலைமையைக் கருதி, என்றென்றைக்கும் தொடர வேண்டும் என்கிற அடிப்படையில், உயர் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து, உச்ச நீதி மன்றத்தில், தனி அனுமதி மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

நமது அரசின் சார்பில், உச்ச நீதி மன்றத்தில், வாதாடி, நமது நிலையை உறுதி செய்ய, புகழ் பெற்ற வழக்கறிஞர்களான Thiru Kapil Sibal அவர்களும், Thiru Soli Sorabjee அவர்களும், நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

சென்னையைச் சார்ந்த நிறுவனம், உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள, தனி அனுமதி மனுவின் மீது, இடைக்கால உத்தரவாக, உச்ச நீதிமன்றம், கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கின்றபோது, இட ஒதுக்கீடு, 50 சதவீதத்திற்குள் தான் அமைய வேண்டும் என்று, வலியுறுத்தியுள்ளது.

சென்னையைச் சார்ந்த அந்த அமைப்பு, உச்ச நீதிமன்ற இடைக்கால உத்தரவுக்குப் புறம்பாக, தமிழ்நாட்டில், தொழிற் கல்லூரிகளில் ஏற்கனவே பின்பற்றப்பட்டு வந்த, 69 சதவீத இட ஒதுக்கீடு அடிப்படையில், மாணவர்கள் அனுமதிக்கப்படுவதாக, நீதிமன்ற அவமதிப்பு மனு, (Contempt Petition) ஒன்றைத் தாக்கல் செய்து, அதுவும், உச்ச நீதிமன்றத்தின் விசாரணையில் உள்ளது.

எப்படி, அன்று சுயமரியாதை இயக்க காலந்தொட்டு, திராவிட இயக்கம் பெற்றுத் தந்த "கம்யூனல் ஜி.ஓ." விற்கு எதிராக, உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வந்ததோ- அது போன்றே, பிற்படுத்தப் பட்டோரின் நன்மைக்கென, இந்த அரசு கடைப்பிடித்து வரும் கொள்கைக்கு எதிராக, ஒரு முட்டுக்கட்டை உருவாகி உள்ளது என்பதை, மிகுந்த கவலையோடும் வருத்தத்தோடும், இந்த அவையில் குறிப்பிட விரும்புகிறேன்.

நீதிமன்றங்கள் வழங்குகின்ற தீர்ப்புகளைப் புறக்கணிப்பதோ, அவமதிப்பிற்கு உள்ளாக்குவதோ, இந்த அரசின் நோக்கமல்ல. நாட்டிலுள்ள எல்லா நீதிமன்றங்களின் மீதும், மாண்புமிகு நீதிபதிகளின் பாலும், இந்த அரசு எந்த நிலையிலும், மிகுந்த மரியாதையையும், கௌரவமான போக்கையும் கடைப்பிடித்து வருகிறது; தொடர்ந்து கடைப்பிடித்து வரும் என்பதனையும், மிகத் தெளிவாக அறுதியிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதே நேரத்தில், இன்றைக்கு தமிழ் நாட்டில், மிகப் பெரும்பான்மையாக வாழும், பிற்படுத்தப்பட்டோரின் முன்னேற்றத்திற்கு ஏற்பட்டுள்ள சோதனை, பின்னடைவு, இவைகளிலிருந்து அவர்களை மீட்க என்ன தான் வழி? 69 சதவீத இட ஒதுக்கீடு, இனி என்றென்றும் தொடர்ந்திட, இந்திய அரசியல் சட்டத்தில், உரிய திருத்தத்தைக் கொண்டு வருவதைத் தவிர, மாற்று வழி எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

இந்த மாதிரியான சூழ்நிலைகளில், கடந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளையும், அவைகளைத் தவிர்த்திட, தடைக்கற்களை அகற்றிட, மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும், இந்தப் பேரவை நினைவுகூர வேண்டும் என்று, நான் மிகுந்த கனிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

காலப்போக்கில், மக்களின் அபிலாஷைகளுக்கும், மனமாற்றங்களுக்கும் ஏற்ப, சமூகத்தில் ஏற்படும் மாற்றங்கள், தவிர்க்க முடியாதவை மாத்திரம் அல்லாமல், தடுத்து நிறுத்த முடியாதவையும் கூட என்பதை, இந்த மாமன்றத்தில் கோடிட்

டுக் காட்ட, நான் விரும்புகிறேன். அவற்றைத் தொடர்ந்து, இந்திய அரசியல் சட்டத்திலோ, அல்லது மற்ற சட்டங்களிலோ, அல்லது அரசின் கொள்கைகளிலோ, தகுந்த மாற்றங்களைச் செய்வது, அரசியல் விவேகம் ஆகும்; காலத்தின் அவசியமும் ஆகும்.

நான் முன்பே எடுத்துக் காட்டியது போல, Communal G.O., சட்டத்திற்கு புறம்பானது என்று, உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்த போது அன்றைய பாரதப் பிரதமர், ஜவஹர்லால் நேரு அவர்கள், தமிழ் மக்களின் உணர்வுகளுக்குச் செவி சாய்ந்து, முதன் முதலாக, இந்திய அரசியல் சட்டத்தை திருத்துவதற்கே, வழி வகை செய்தார். இந்திய அரசியல்

மழை-வெள்ளம்-நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட மதுரை-குன்னூர் ஆகிய பகுதிகளுக்கு நேரில் சென்று முதல்வர் அவர்கள் பார்வையிட்டார்

வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட புயல் சின்னத்தின் காரணமாகத் தமிழகமெங்கும் சென்ற வாரம் தொடர்ந்து மழை பெய்திடலாயிற்று; குறிப்பாகத் தென் மாவட்டங்களில் இந்த மழையின் வேகம் அதிகமிருந்தது.

இதனால் - குளங்கள், ஏரிகள், ஆறுகள் நிரம்பின; கரையுடைத்துப் பெருக்கெடுத்து ஊருக்குள் புகுந்தன. இதன் விளைவால் 70-க்கும் மேலானோர் உயிரிழந்தார்கள். சாலைகள், இரயில் பாதைகள் படுசேதமடைந்து போக்குவரத்துகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இலட்சக்கணக்கான ஏக்கர் விளைநிலப் பயிர்கள் நாசமாயின. தொடர்ந்து பெய்த மழையினாலும், சூறாவளி காற்றினாலும் மிகுந்த உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் ஏற்பட்டுள்ளதால் அவற்றை நேரிடையாக பார்வையிட மாண்புமிகு அமைச்சர் பெருமக்களை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அனுப்பி வைத்தார்.

பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய நிவாரணப் பணிகளைத் துரிதமாகவும், போர்க்கால அடிப்படையிலும் மேற்கொள்ள வேண்டுமென்று அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்களை அறிந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மக்களை விரைவில் மீட்டு பாதுகாப்பான இடத்தில் கொண்டு சேர்க்க வேண்டுமென்றும், அவர்களுக்கு உணவுப் பொட்டலங்களைத் தயார் செய்து முடிக்க வேண்டுமென்றும், அவர்களைத் தங்க வைக்கும் இடங்களில் நல்ல குடிநீரும் தேவையான அடிப்படை மருத்துவ வசதிகளும் கழிப்பறை வசதிகளும் போர்க்கால அடிப்படையில் செய்து தரும்படியும் ஆணையிட்டார்.

குறிப்பாக அதிகமான பாதிப்புக்கு உள்ளான செல்லூர் பகுதி மக்களுக்காக தமுக்கம் மைதானத்தில் பெரிய அளவில் உணவு தயாரித்து செல்லூர் பகுதி மக்களுக்கு தொடர்ந்து வழங்க ஆணையிட்டார்கள். அதே போல் கூடல் நகர் தங்கியுள்ள பாதுகாப்பான இடங்களுக்கு அருகிலேயே பெரிய அளவில் உணவு தயாரிக்கும் கூடத்தை ஏற்படுத்தி உணவு வழங்க மதுரை மாநகராட்சிக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் ஆணையிட்டார்கள். கப்பற்படை படகுகளை முழுமையாகப் பயன்படுத்தி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பான பகுதிகளுக்குக் கொண்டு செல்லும் பணியைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென்றும் கருத்துத் தெரிவித்தார்.

மேலும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் இருவரையும் மதுரை மாநகரில் [illegible] நிவாரண பணிகளைத் தொடர்ந்து [illegible] வருமாறு கேட்டுக் கொண்டார். [illegible] மழையாலும் நீர்ப்பெருக்காலும் [illegible] உள்ளான மதுரை மாநகராட்சிக்கு [illegible] நெடுஞ்சாலைகளை உடனடியாகச் [illegible] நல்ல நிலைக்குக் கொண்டு வர [illegible] வடிக்கைகளையும் எடுக்க [illegible] ஆணையிட்டார்.

முதல்வர் பயணம்

மதுரை மாநகரம் இந்த மழை [illegible] பலத்த சேதத்திற்கு உள்ளாகியது. [illegible] வாசலை இழந்தும், சொந்து சுகங்களைக் [illegible] கைவிட்டும் ஆயிரக்கணக்கான மக்கள் அல்லல்பட்டனர்.

இதையறிந்த மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா [illegible] பாதிக்கப்பட்ட பகுதிகளைப் [illegible] லுற்ற மக்களையெல்லாம் நேரில் [illegible] கூறவும், அரிசி போன்ற முக்கிய [illegible] வழங்கி அல்லல் நீக்கவும் என்று [illegible]

சென்னையில் இருந்து [illegible] விமானத்தில் 12.11.95 [illegible]

அன்றாடம் ஒருமுக்கும் பிரச்சினை, ஒன்றல்ல உயிர் நீத்தோர்தத்தில் எடுப்பப்பட்டபோது, ஒன்றல்ல உயிர் நீத்தோர்தும், இரு ஒருக்கட்டுடன் [illegible] நீட்டிக்கு அரசு, ஏற்கக்கூடிய பிரச்சனை வந்தவர்கள் ஒருட்டிந்து வரை 1994-95 கல்வியாண்டு [illegible], இரு ஒருக்கீடு அரசு, 50 சதவிகிதமாகக் குறைக்கப்பட வேண்டும் என்றும், நீர்ப்பாசனத்துக்கு [illegible] மக்களையா, ஒருவர் [illegible] விவசாய எரிச்சல் [illegible] ஒருக்கீடு [illegible] 50 சதவிகிதத்தாகள் [illegible] அரசாணை வேண்டும் என்று, வலியுறுத்தியுள்ளது.

தமிழகத்து அரசு, இடுவரை கடைப்பிடித்து வந்துள்ள 69 சதவிகித இடஒதுக்கீடுக் கொள்கை, பிற்படுத்தப்பட்ட மக்களையா, சமுதாய, பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுத்து, அவர்களையா வாழ்க்கை மேம்பாடு அடைய வைக்கும், வளர்ச்சி பெறுவது, ஒரு சிறந்த பயனுள்ள சாதனமாக அமைந்துள்ளது. தமிழகப் பிற்படுத்தப்பட்ட மக்களையா, சமுதாய, பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுத்து, அவர்களையா வாழ்க்கை மேம்பாடு அடைய வைக்கும் பயனுள்ள சாதனமாக அமைந்துள்ள இடஒதுக்கீடு, 69 சதவிகிதத்தாகவே தொடர்ந்து நிலைக்க வேண்டுமென்று, வலியுறுத்தியுள்ளது.

தமிழகத்தில் 69 சதவிகித இடஒதுக்கீடுக் கொள்கை, பிற்படுத்தப்பட்ட மக்களையா, சமுதாய, பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுத்து, அவர்களையா வாழ்க்கை மேம்பாடு அடைய வைக்கும் பயனுள்ள சாதனமாக அமைந்துள்ளது. தமிழகப் பிற்படுத்தப்பட்ட மக்களையா, வளர்ச்சி பெறுவது, ஒரு சிறந்த பயனுள்ள சாதனமாக அமைந்துள்ளது. தமிழகப் பிற்படுத்தப்பட்ட மக்களையா, சமுதாய, பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுத்து, அவர்களையா வாழ்க்கை மேம்பாடு அடைய வைக்கும் பயனுள்ள சாதனமாக அமைந்துள்ள இடஒதுக்கீடு, 50 சதவிகிதத்தாகவே தொடர்ந்து நிலைக்க வேண்டுமென்று, வலியுறுத்தியுள்ளது.

தமிழகப் பிற்படுத்தப்பட்ட மக்களையா, சமுதாய, பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுத்து, அவர்களையா வாழ்க்கை மேம்பாடு அடைய வைக்கும் பயனுள்ள சாதனமாக அமைந்துள்ள இடஒதுக்கீடு, 69 சதவிகிதத்தாகவே தொடர்ந்து நிலைக்க வேண்டுமென்று, வலியுறுத்தியுள்ளது.



9.30 மணியளவில் தனி ஹெலிகாப்டர் விமானத்தில் அவர் புறப்பட்டார்.

வெள்ளச் சேதங்கள்

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர் மாவட்டத்தில், காஞ்சிபுரமும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் பாலாற்றில் பெருக்கெடுத்த வெள்ளத்தால் பாழ்பட்டுள்ளதை அவர் அவ்விமானத்தில் இருந்தவாறே பார்த்தார்.

அடுத்துத் திருச்சி மாவட்டத்திற்கு வந்த அவர் - காவிரியாறு கரைபுரண்டோடியதால் ஏற்பட்ட பாதிப்புகளையும் விராலிமலைப் பகுதிகளில் ஏற்பட்டிருக்கும் விளைவுகளையும் தொலைநோக்கிக் கண்ணாடி மூலம் கண்டு பதைத்தார்.

மதுரையில் முதல்வர்

அதன்பின் மதுரை மாவட்டத்திற்கு வந்து சேர்ந்தது அந்த ஹெலிகாப்டர். கொட்டாம்பட்டி, மேலூர், வெள்ளரிப்பட்டி, ஒத்தக்கடை, நாவிலைப்பட்டி, செல்லூர் ஆகிய பகுதிகளில் இருந்து மக்களுக்கேற்பட்டிருக்கின்ற பாதிப்புகளையும், வெள்ளத்தில் மூழ்கிவிட்ட சாலைகள் - இருப்புப் பாதைகளையும் பார்த்தார்.

முதலில் - மாண்புமிகு முதல்வர் அவர்கள் பயணம் செய்த ஹெலிகாப்டர் மதுரையில் உள்ள ஆயுதப்படையினர் பயிற்சிக்குரிய விமானதளத்தில் இறங்குவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால், எதிர்பாராத பெருமழை காரணமாக அந்தத் தளமும் விமானத்தை இறக்கமுடியாத அளவில் சீர்கேடுற்றிருந்ததால், மதுரை விமான நிலையத்திலேயே தரையிறக்கப்பட்டது.

மதுரை மேம்பாலம்

விமான நிலையத்தில் மாண்புமிகு முதல்வர் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் சேடபட்டி திரு இரா. முத்தையா - மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் வரவேற்கப்பட்டார்.

பின்னர் - மதுரையில், பாதிப்பிற்குள்ளான பகுதிகளைப் பார்க்கக் கார் மூலம் பயணமானார்.

மதுரை மேம்பாலம் பகுதிக்கு வந்த அவர், காரை நிறுத்திக் கீழே இறங்கினார். வைகையின் சீற்றத்தால் உண்டாகியுள்ள விளைவுகளையெல்லாம் வேதனையுடன் பார்த்தார். பின்பு, அதே காரில் நகரின் முக்கியப் பகுதிகளையெல்லாம் பார்த்துவிட்டு நேரே தமுக்கம் திடலுக்கு நண்பகல் ஒரு மணியளவில் வந்து சேர்ந்தார்.

மக்களுக்கு ஆறுதல்

தமுக்கம் திடலில் - வீடு வாசலை இழந்த

ஏறத்தாழ மூவாயிரம் மதுரை வாழ் மக்கள் தங்கவைக்கப்பட்டிருந்தார்கள். துயருற்றிருந்த அவர்களையெல்லாம் பார்த்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆறுதல் கூறினார்.

அதையொட்டி அங்கே நடைபெற்ற பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பல்வேறு உதவிகளும் நேரிலேயே வழங்கும் விழாவிற்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில் தொகுதிச் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். பசும்பொன் முத்து ராமலிங்கத்தேவர் மாவட்ட ஆட்சித்தலைவரும் வந்திருந்தார்.

வாடிக்கிடந்த மக்கள் வரிசையுற மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடம் வரலாயினர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் 500 ரூபாய் பணம், 5 கிலோ அரிசி, ஒரு வேட்டி, ஒரு சேலை ஆகியவை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருக்கரங்களால் வழங்கப்பட்டன; மக்களில் சிலர் கொடுத்த மனுக்கள் பெற்றுக்கொள்ளபட்பட்டன.

ஆலோசனைக் கூட்டம்

அந்நிகழ்ச்சிக்குப் பின் மதுரையிலுள்ள அரசு விருந்தினர் இல்லத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், வெள்ளப் பாதிப்பு நிவாரணம் பற்றி ஆலோசனைக் கூட்டமொன்று நடத்தினார்.

இக்கூட்டத்தில் - மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு எஸ்.டி. சோமசுந்தரம், திரு எஸ். கண்ணப்பன், திரு டி.எம்.செல்வகணபதி, திரு அ.மா. பரமசிவம் ஆகியோரும் - அரசு தலைமைச் செயலாளர் திரு டி.வி.வெங்கட்ராமன், அரசு உயர் அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கிருஷ்ணசாமி ராஜீவன் ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.

அதற்குப் பிறகு - ஹெலிகாப்டர் விமானம் மூலம் - திண்டுக்கல் பகுதியில் வெள்ளச்சேதம் ஏற்பட்ட பகுதிகளைப் பார்த்துவிட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னை திரும்பினார்.

TNSC BANK

The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

Rate of Interest on Deposits (Effective from 2.9.1993

Sl.No.	Type of Deposit	Rate of Interest per annum
1.	Savings Bank Accounts	5.25% w.e.f. 1.7.1993
2.	Fixed Deposits :	
	For 46 DAYS and above but upto 270 days	9.00%
	For 271 DAYS and above but upto 364 days	9.50%
	For 1 YEAR and above	10.25%

Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

வளர்ச்சிப் பணிகள்

திரு. கிருஷ்ணசாமி ராஜீவன்
மாவட்ட ஆட்சித்தலைவர்
மதுரை மாவட்டம்

மதுரை மாவட்டத்தைப் பொருத்தமட்டில் - 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் அடிப்படையில் 2.10.60 முதல் உருவாக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் குடிநீர், தெருவிளக்கு, சாலைபராமரிப்பு, சுகாதாரம் ஆகியவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்பட்டு அதனடிப்படையில் மதுரை மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் கீழ்க்கண்ட வளர்ச்சிப் பணிகள் நடப்பு ஆண்டில் முறைப்படி மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குடிநீர்த்திட்டப் பணிகள்

மதுரை மாவட்டத்தில் 2,268 குடியிருப்புகள் உள்ளன. அவற்றில் 1008 குடியிருப்புகள் முழுமையாகக் குடிநீர் வசதி பெற்றவைகளாகும். 1,260 குடியிருப்புகள் பகுதி குடிநீர் வசதி பெற்றவை. 1,260 குடியிருப்புகள் முழுமையாகக் குடிநீர் வசதி பெறக் கீழ்க்கண்டவாறு குடிநீர்த் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வறட்சி நிவாரணப் பணிகள்

நடப்பு ஆண்டில் ரூ.34.80 இலட்சம் மதிப்பீட்டில் 122 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. ரூ.2 இலட்சம் மதிப்பீட்டில் 8 குடிநீர்க் குழாய் விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரூ.16 இலட்சத்திற்கு 72 புதிய பம்புசெட்டுகள் வாங்கப்பட்டு, பழைய பம்பு செட்டுகளுக்குப் பதிலாகப் பொருத்தப்பட்டு உள்ளன. எழுமலையில் ரூ.1.80 இலட்சம் மதிப்பீட்டில் மேலதிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி துவக்கப்படவுள்ளது.

கிராமக்குடிநீர் மானியத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் ரூ.23.22 இலட்சம் மதிப்பீட்டில் 108 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வேலைகளுக்கு அரசு மானியமாக ரூ.18 இலட்சம் வழங்கியுள்ளது. ரூ.5.22 இலட்சம் ஊராட்சி ஒன்றியங்களின் பங்குத்தொகை பெறப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியப் பொதுநிதி வேலைகள்

ஊராட்சி ஒன்றியத்தினுடைய தேவைகள், அதிகமிருப்பதால், அரசின் நிதி உதவியோடு

போர்க்கால அடிப்படையில் மீண்டும் அமைப்பதற்கு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். பின்னர், வேறு வழியாக ஹெலிகாப்டர் மூலம் பறந்து சென்று குன்னூர் நகரத்தையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் பார்வையிட்டார். இவ்வாறு ஹெலிகாப்டர் மூலம் ஒரு மணி, 15 நிமிடங்கள் பார்வையிட்ட பிறகு, கோவை பீளமேடு விமான நிலையத்திற்கு வந்து சேர்ந்தார்.



ஆலோசனை

நீலகிரி மாவட்டத்தில் பரளியாறு-மரப்பாலம் இடைப்பட்ட பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவையும், அதனால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் ஹெலிகாப்டர் மூலம் பார்வையிட்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், பின்னர் கோவை பீளமேடு விமான நிலையத்தில் அமைச்சர்களுடனும், அதிகாரிகளுடனும் மழை வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்தும், நிலச்சரிவினால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும் மேட்டுப்பாளையம்-குன்னூர் செல்லும் மலைப் பாதையை உடனடியாக அமைத்து, சீர் செய்வது குறித்தும் ஆலோசனை நடத்தினார். இந்தக் கூட்டம் சுமார் 40 நிமிடங்கள் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன், தலைமைச் செயலாளர், வருவாய் நிர்வாக ஆணையாளர் திரு சி.என். ராமதாஸ், நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு சி.வி. சங்கர், நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு டி. பிச்சாண்டி, காவல்துறை இயக்குநர் திரு எஸ். ஸ்ரீபால், கூடுதல் இயக்குநர் திரு வால்டர் தேவாரம், கோயம்புத்தூர் மாநகரக் காவல் ஆணையாளர் திரு சுனேசன், கோவை சரகக் காவல்துறை துணைத்தலைவர் திரு வி.சி. பெருமாள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், பரளியாறு-மரப்பாலம் இடைப்பட்ட பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவைத் தொடர்ந்து, மேலும் நிலச்சரிவு ஏற்படும் அபாயம் உண்டா என்பதைக் கண்டறிய Geological Survey of India நிறுவனத்தின் மூலம் மாநில நெடுஞ்சாலைத் துறை ஒரு ஆய்வு Investigation நடத்த வேண்டும் என்றும், தொடர்ந்து நிலச்சரிவு ஏற்பட வாய்ப்புகள் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பின்பு, மத்திய சாலைகள் ஆராய்ச்சி நிறுவனத்தின் (Central Road Research Organisation) துணையுடன் பொறியியல் ஆய்வு நடத்த வேண்டும் என்றும், அந்த ஆய்வின் அடிப்படையில் நிலச்சரிவால் கிட்டத்தட்ட அழிந்துபோன மலைப்பாதைகளை மீண்டும் போர்க்கால அடிப்படையில் உருவாக்கி, சீர்படுத்திக் கொண்டு வரவேண்டும் என்று ஆணையிட்டார். இப்பணியை விரைவில் செய்து முடிக்க எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

அடர்ந்த வனங்களும் காட்டுப் பகுதிகளுமாக ஒரு காலத்தில் இருந்த நீலகிரி மாவட்டம், வனங்களும் மரங்களும் அழிக்கப்பட்டுவிட்ட காரணத்தால் தான் இதுபோன்ற நிலச்சரிவுகள் ஏற்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த நிலையை முற்றிலுமாக மாற்றி, நீலகிரி மாவட்டம் முழுமையையும் மரங்களை அதிக அளவில் வளர்த்து அடர்ந்த காட்டுப் பகுதிகளை உருவாக்க (Afforestation) செயல் திட்டம் ஒன்றை தயாரித்துச் செயல்படுத்த வேண்டும் என்று குறிப்பாக நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட இடங்களில் மரங்களை மீண்டும் நட்டு வனப்பகுதிகளாக ஆக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆணையிட்டார்.

நிவாரணப் பணியை விரைவில் மேற்கொள்ள...

அதுவரை மேட்டுப்பாளையத்திலிருந்து கோத்தகிரி-குன்னூர் வழியே ஊட்டி செல்லும் பாதையைப் போக்குவரத்திற்குப் பயன்படுத்தவேண்டி உள்ளதால் சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்தை சிறிது காலத்திற்கு நிறுத்திவைக்க வேண்டும் என்றும், மாவட்ட ஆட்சித்தலைவர், காவல்துறை அதிகாரிகளுடன் சேர்ந்து ஒரு போக்குவரத்துத் திட்டம் (Traffic Regulation Plan) தயாரித்துச் செயல்படுத்த வேண்டும் என்றும் ஆணையிட்டார். மேலும் டீ, காய்கறிகள் லாரிகள் மூலமாகக் கொண்டு வருவதற்கும், அத்தியாவசியப் பொருட்களை இரவில் மேலே கொண்டு செல்வதற்கும், காலையில் பயணிகள் போக்குவரத்து செல்லவும் ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

நீலகிரி மாவட்டத்திற்கென ஒரு தனி Repeater Station அமைத்துத் தொலைத் தொடர்பு சாதன வசதியைச் செய்து தர வேண்டும் என்று காவல் துறைக்கு ஆணையிட்டார். அவ்வாறு செய்தால் தான் தகவல்களை விரைந்து அனுப்புவதோடு நிவாரணப் பணியை விரைவில் மேற்கொள்ள முடியும் என்றும் அறிவுறுத்தினார்.

மேலும், மாவட்டத்திற்குத் தேவையான பணி இடங்களையும், ஜீப்பு போன்ற வாகன வசதிகளை விரைந்து வழங்கும்படி ஆணையிட்டார். எல்லா நிவாரணப் பணிகளையும் தொடர்ந்து தொய்வின்றிச் செயல்படுத்த வேண்டும் என்று எல்லா அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கினார். பின்னர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் விமானப்படை தனி விமானம் மூலம் சென்னைக்கு மாலை 3.00 மணியளவில் திரும்பினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்குக் கடிதம்

நீலகிரி மாவட்டத்தில் குன்னூருக்கு அருகே உள்ள பரளியாறு மற்றும் மரப்பாலம் இவற்றுக்கு இடைப்பட்ட பகுதியில் ஏற்பட்ட மிகப் பெரிய நிலச்சரிவையும் அதனால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் ஹெலிகாப்டர் மூலம் பார்வையிட்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்கு

இந்த நிலச்சரிவினால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும், உயிர்ச்சேதம் குறித்தும் மலைப் பாதைக்கு ஏற்பட்ட பாதிப்பைக்குறித்தும் கடிதம் எழுதியுள்ளார்கள். அந்தக் கடிதத்தில் தற்போது 1½ கிலோமீட்டர் தூரத்திற்கு முழுவதுமாக அழிக்கப்பட்டு விட்ட இந்த மலைப்பாதை மீண்டும் விரைவில் அமைப்பதற்கு தக்க நடவடிக்கை எடுப்பதைச் சுட்டிக்காட்டி, அப்பணியில் இராணுவத்திற்குச் சொந்தமான (Border Roads Organisation) மற்றும் மத்திய சாலை ஆராய்ச்சி நிறுவனம் (Central R0ads Research Institute) ஆகிய நிறுவனங்களிலிருந்து தொழில்நுட்ப வல்லுநர்களை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார்கள். மேலும், (Geological Survey of India) நிறுவனத்தின் மண் அரிப்பு நிபுணர்களை அனுப்பி வைத்து, அந்த இடத்தைப் பார்வையிட்டு தொழில்நுட்பக் கருத்துக்களை வழங்க ஏற்பாடு செய்யுமாறும் அக்கடிதத்தில் கோரியுள்ளார். மேலும், அவர்களை மிக விரைவில் நீலகிரி மாவட்டத்திற்கு அனுப்பி வைத்து, இந்த ஆய்வை நடத்துவதோடு மட்டுமல்லாமல், இந்த அமைப்பு பணிக்கும் அவர்கள் தங்களது ஒத்துழைப்பையும், உதவியையும் நல்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு உள்ளார்.

மாண்புமிகு பிரதமர் அவர்கள் பதில்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், பாரதப் பிரதமர் திரு பி.வி.நரசிம்மராவ் அவர்களுக்கு 14.11.93 அன்று நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவு பற்றியும், பலர் உயிர் இழந்தது பற்றியும் ஒரு கடிதம் எழுதினார்.

அந்தக் கடிதத்தைக் கண்ணுற்ற மாண்புமிகு பாரதப் பிரதமர், இந்தச் சம்பவம் குறித்து தனது ஆழந்த அனுதாபத்தையும், வருத்தத்தையும் தெரிவித்து, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தச் செய்தியில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், சம்பவம் குறித்து எடுத்த நிவாரண நடவடிக்கைகளை வெகுவாகப் பாராட்டி, நீலகிரி மாவட்டத்தை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு அனைத்து உதவிகளையும் செய்வதாகவும், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்கள் உறுதி அளித்துள்ளார்.



கிராம மக்களுக்கு தக்க வசதி செய்து தரப் பொது நிதியிலிருந்து பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப் படுகின்றன; அவற்றின் விவரம் வருமாறு:

நடப்பு ஆண்டில் ஊராட்சி ஒன்றிய உபரி நிதியில்ருந்து ரூ.6.70 இலட்சம் மதிப்பீட்டில் 35 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. ரூ.3.51 இலட்சம் மதிப்பீட்டில் 270 ஆழ்குழாய்க் கிணறுகள் சுத்தப்படுத்தப்பட்டன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திட்ட வேலைகள்

கிராமப்புறங்களில் 34 கைப்பம்புகளும் 65 பவர் பம்புகளும் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டமும் ரூ.208.40 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப் பட்டு வருகின்றன. நகரப் பகுதிகளில் 47 குடிநீர்த் திட்டப்பணிகள் ரூ.127.54 இலட்சம் மதிப் பீட்டில் நடை பெற்று வருகின்றன.

குடிநீர் ஆதாரங்கள் - பராமரிப்பு வேலைகள்

மதுரை மாவட்டத்தில் 5,600 கைப்பம்புகளும் 1,443 விசைப்பம்புகளும் பராமரிக்கப்படுகின் றன. கைப்பம்புகளைப் பழுதின்றிப் பராமரிக்க ரூ.17 இலட்சம் பெறுமானமுள்ள உதிரிப் பாகங்கள் சுழற்சி முறையில் வாங்கிப் பயன்படுத் தப்படுகின்றன. கைப்பம்பு/விசைப்பம்புகளைப் பராமரிக்க, நடப்பு ஆண்டில் அரசு மானியம் ரூ.29,24,950 செலவழிக்கப்பட்டுள்ளன.

தெருவிளக்குகள்

மதுரை மாவட்டத்தில் 36,295 தெரு விளக்குகள் உள்ளன. இவற்றைப் பராமரிக்க நடப்பு ஆண்டில் மின் 'கட்டணத்திற்கு ரூ.70 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. நிதி வசதி யில்லாத ஊராட்சிகளுக்கு மின் கட்டணம் செலுத்த, அரசு ரூ.15 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. குழல் விளக்குகள், சோக்குகள், ஸ்டார்ட்டர்கள்போன்ற மின் சாதனங்கள் ரூ.34 இலட்சத்திற்கு வாங்கப்பட்டு மின் கம்பங்களில் பொருத்தப்பட்டுள்ளன.

ஊராட்சி ஒன்றியச் சாலைகள் பராமரிப்பு

பொதுமக்களின் வசதிக்கான, ஊராட்சி ஒன்றியச் சாலையைப் பராமரிக்க நடப்பு ஆண்டில் அரசு மானியம் ரூ.10,55,066 செலவழிக்கப்பட்டுள்ளது.

திருமண மண்டபங்கள்

இந்த மாவட்டத்தில் - ஏழை எளிய மக்கள் தனியார் திருமண மண்டபங்களில் அதிக வாடகை செலுத்தித் திருமணம் நடத்த முடியாத நிலையைத் தவிர்க்கும் பொருட்டு, 20 அம்சத் திட்ட ஊக்கு விப்புத் தொகையிலிருந்து நடப்பு ஆண்டில் உத்தம பாளையம், உசிலம்பட்டி, திருப்பரங்குன்றம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் 3 திருமண மண்டபங்கள் கட்டப் பட்டு வருகின்றன.

சித்தா மருத்துவமனை

பொதுமக்களுக்கு, சித்தா வைத்திய முறையில் மருத்துவ சிகிச்சை அளிக்க, பொது கிராம சித்தா மருத்துவ மனைக்கு நடப்பு ஆண்டில் அரசு மானியம் ரூ.13,000 செலவழிக்கப்பட்டுள்ளது.

மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மானியம்

மகப்பேறு பெறும் தாய்மார்களுக்கு மருத்துவ வசதி அளிக்கவும், குழந்தைகளைப் பராமரிக்கவும் நடப்பு ஆண்டில் அரசு மானியம் ரூ.15,21,000 செலவழிக்கப்பட்டுள்ளது.

ஈமச்சடங்கு மானியம்

மதுரை மாவட்டத்தில் வாழுகின்ற ஆதி திராவிடர் குடும்பங்களில் மரணம் ஏற்படும்போது ஈமச்சடங்குச் செலவிற்காக ரூ.100 வீதம் நடப்பு ஆண்டில் 1,170 ஆதிதிராவிடக் குடும்பங்களுக்கு அரசு மானியம் ரூ.1,17,000 செலவழிக்கப்பட்டு உள்ளது

★ அருள்மிகு முருகக் கடவுளின் அறுபடை வீடுகளில், மதுரை மாவட்டத்தில் மட்டுமே இரண்டு உள்ளன. ஒன்று திருப்பரங்குன்றம்; இன்னொன்று உள்ள இடம் அழகர்மலை. புராணப்படி, முருகப் பெருமான் தெய்வானையை மணந்துகொண்டது திருப்பரங்குன்றத்திலேதான்; இது ஒரு மலைக்குடைவுக் கோயிலாகும். மதுரைக் கும் இதற்கும் இடைப்பட்ட தூரம் 8 கிலோ மீட்டர். நாம் குறிப்பிட்ட மற்றொரு படைவீடு உள்ள இடம் அழகர்மலைக்குச் சற்று மேலே மலை மீதுள்ள பழமுதிர் சோலை. அதற்கும் சிறிது மேலே உள்ளது நூபுரகங்கை (சிலம்பாறு). இங்குள்ள சிறிய நீருற்றில் குளிப்பது, கங்கையில் நீராடுவதற்குச் சமம் என்று அழகர் பெருமானே பாண்டிய மன்னனுக்குக் கூறியதாகப் புராணம் தெரிவிக்கிறது. நூபுரகங்கைக்கு அருகிலேயே ராக்காயி அம்மன் திருக்கோயிலும் அமைந் துள்ளது. குரங்குகள் இங்கே கூட்டம் கூட்ட மாகத் திரிகிற அழகே அழகு!

தொழில் வளர்ச்சியில் மதுரை மாவட்டம்

தொழில் வளர்ச்சியிலும் மதுரை மாவட்டம் தலை நிமிர்ந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். இந்த மாவட்டத்தில் இயங்கிவரும் தொழில்கள் பெரும்பாலும் விவசாயப் பொருட்களையே ஆதாரமாகக் கொண்டுள்ளன. மாறிவரும் வாழ்க்கை முறைகள் மற்றும் விஞ்ஞான வளர்ச்சிக் கேற்பப் புதிய தொழில்களைத் தொடங்கிப் பொருளாதார முன்னேற்றம் பெற, மாவட்டத் தொழில் மையம் அனைத்து உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கிவருகிறது.

இம்மாவட்டத்தில் விவசாயப் பொருட்களை ஆதாரமாகக் கொண்டு நூற்பாலைகள், சர்க்கரை ஆலைகள், அரிசி மற்றும் மாவு ஆலைகள் சமையல் எண்ணெய் தயாரித்தல், தென்னை நார் உற்பத்திக் கூடங்கள், பருத்தி ஆடைகள் உற்பத்திக் கூடங்கள் பலவும் இயங்கி வருகின்றன.

மாவட்டத்தில் தொழில்கள் வளர்ச்சி அடைந்து பொருளாதார முன்னேற்றம் பெற அரசு பல்வேறு சலுகைகளையும் மானியங்களையும் மாவட்டத் தொழில் மையம் மூலம் அவ்வப்போது வழங்கி வருகிறது. இம்மாவட்டத்தில் உள்ள ஒன்பது வட்டங்களில் உசிலம்பட்டி வட்டம் மிகவும் பிற்படுத்தப்பட்டு பகுதியாக அறிவிக்கப்பட்டு, தொழிற்சாலையின் நிலையான முதலீட்டில் 20 சதவிகித மானியமாக வழங்கப்படுகிறது. வாடிப் பட்டி, ஆண்டிபட்டி, உத்தமபாளையம் வட்டங்கள் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப் பட்டு 15 சதவிகித மானியம் வழங்கப்படுகிறது.

முதல் மூன்று ஆண்டுகளுக்கு நிறுவனம் உபயோகப்படுத்தும் மின்சாரக் கட்டணத்தில் 40 சதம், 30 சதம், 20 சதம் மானியமாக வழங்கப் படுகிறது. மின்மானியம் மற்றும் சில சிறப்புத் தொழில்களுக்குச் சிறப்பு முதலீட்டு மானியமாக 20 சதவிகிதம் அல்லது உயர்ந்த அளவு ரூ.15,00,000 (பதினைந்து இலட்சம்) இதில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படுகிறது.

ஒருமுனைத் தீர்வுக்குழு

மின் இணைப்பை உரிய காலத் தில் பெற்றுத் தரவும் அதுகுறித்த இடர்பாடுகளைக் களையவும் மாவட்ட ஆட்சித்தலைவரைத் தலைவ ராகக் கொண்டு 'ஒரு முனைத்தீர்வுக்குழு' ஒன்று இயங்கிவருகிறது. 1992-93-இல் இக்குழுவின் உதவியால் நிறுவனங்கட்கு உரிமங்களும் மின் இணைப்பும் பெற்றுத் தரப்பட்டுள்ளது.

புதிதாகத் தொழில் துவங்க முனையும் தொழில் முனைவோருக்குப் பயிற்சித் திட்ட மொன்று 1990-91 முதல் இதுவரை 120 இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. 11992-93-இல் பயிற்சி வகுப்புகள் முற்றிலும் பெண்களுக்காகவே நடத்தப்பட்டன. 1993-94-இல் மகளிர், தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் இனத்தவர், மின்னணுத்துறையில் பட்டம் பெற்றவர் ஆயியவர்களுக்குச் சிறப்புப் பயிற்சியும் தனித்தனியே நடத்தப்படவுள்ளது.

• மதுரை மாவட்டத்தில் எங்கு நின்று பார்த்தாலும் எழுந்து நிற்கும் அரண்போல மேற்குத் தொடர்ச்சி மலை காட்சி தரும். ஆண்டிப்பட்டி மலை, வருஷநாடு மலை, சிறுமலை, காந்த மலை, கருவிமலை, நத்தம், அழகர் மலை என்றெல்லாம் அம்மலைத்தொடர் குறிப்பிடப்படுகிறது.

• மதுரை மாவட்டத்தில் - வைகையாறு, மஞ்சளாறு, சுருளியாறு, வராக நதி, பாலாறு பெரியாற்றுக் கால்வாய், பொரந்தலாறு ஆகியவை பாய்ந்து பரவி பசுமை தேக்குகின்றன.

தொழில் பேட்டை

கப்பலூரில் 24 ஏக்கர் நிலப்பரப்பில் 'ஆட்டோ மொபைல் தொழிற் கூட்டுறவுத் தொழிற்பேட்டை' ஒன்று பதிவு செய்யப்பட்டு ரூ.128.84 இலட்சம் முதலீட்டில் 240 தொழிற்கூடங்கள் நிறுவப்பட வுள்ளது. இங்கு தானியங்கி உதிரி பாகங்கள் தயாரித்தல், பழுதுபார்க்கும் தொழிற்கூடங்கள் இயங்கவுள்ளன. இங்கு 2,400 நபர்களுக்கு வேலை வாய்ப்பும் ரூ.480 இலட்சம் மதிப்பில் உற்பத்தியும் கிடைத்திட வாய்ப்புள்ளது.

மேலும் மதுரை வடக்கு வட்டம் 'உரங்கான் பட்டி' கிராமத்தில் 68.5 ஏக்கர் நிலப்பரப்பில் மதுரை பின்னலாடை தயாரிப்போர் சங்கத்தினரால் 150 தொழிற்கூடங்கடங்கிய தொழிற்பேட்டை அமைக்கக் கட்டுமானப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இத்தொழிற் பேட்டை மூலமாகத் துணைத் தொழில்கள் பெருகி வேலைவாய்ப்பும் அதிகரிக்கப் போதிய வாய்ப் பிருக்கிறது.

ஆண்டிப்பட்டியில் 'சிட்கோ' நிறுவனத்தின் மூலம் உரிய வகையில் தொழிற்பேட்டைக்கான நிலம் கையகப்படுத்தப்பட்டு தொழிற்கூடங்கள் அமைத்துத் தொழில் வளம் பெருக்கும் வகையில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு வரு கின்றன.

1993-94-ஆம் ஆண்டுக்கான சிறுதொழில் வளர்ச்சி-குறியீடும் முன்னேற்றமும்

	குறியீடு	முன்னேற்றம் (30.9.93 முடிய)
தற்காலிக சிறுதொழில்கள் சான்றுகள்	5160	2289
நிரந்தர சிறுதொழில்கள் சான்றுகள்	1330	578
விற்பனைவரி தள்ளிவைப்பு	-	6 நிறுவனங்களுக்கு ரூ.21.12 இலட்சம்
முதலீட்டு மானியம் முதல் காலாண்டு	ரூ.7.82 இலட்சம்	ரூ.3.6 இலட்சம்
மகளிருக்கான தொழில் முனைவோர் பயிற்சித் திட்டம்	40	40
தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கான தொழில் பயிற்சி	10	10
மின் மற்றும் மின்னணு தொழில் முனைவோருக்கான பயிற்சி	40	35
பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம்	600	465 நபர்களுக்கு பரிந்துரை செய்யப் பட்டுள்ளது.
குடிசைத் தொழில்கள் சான்றிதழ்	440	225
கைவினைத் தொழில்கள் சான்றுகள்	440	229
மின் மானியம்	2 இலட்சம்	2 இலட்சம்

தமிழகத்தில் தொழிலில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் எனும் ஒரு தொழில் நோக்குடன் தமிழ்நாடு அரசு மேற்கூறிய பல்வேறு ஊக்குவிப்புச் சலுகைகளையும் மானியங்களையும் மாவட்டத் தொழில் மையம் மூலமாக வழங்கு கிறது. எனவே இச்சலுகைகளைப் பயன்படுத்தி தொழில்களைத் தொடங்கி, வீடும் நலம்பெற்று பொருளாதார முன்னேற்றம் காண வாரீர் என அழைக்கிறோம். ●



மதுரை நாகமலையில் உள்ள சமணர் கோயிலில் தீர்த்தங்கரர்.

மதுரை மாவட்டத் திருக்கோயில்கள்



அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயில்.

போ. இராமராஜு
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, மதுரை-1.

தமிழ்நாடு, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகைக்குட்பட்டு, மதுரை மாவட் டத்தில் மட்டும், ஆண்டு வருமானமாக ரூ.10,000/-க்கு மேல் வருமானமுள்ள திருக் கோயில்கள் 90 உள்ளன.

மதுரை மாவட்டத் திருக்கோயில்களில், மிகவும் புகழ் பெற்றும், வரலாற்றுச் சிறப்புப் பெற்றும், சுற்றுலா மையமாகவும், கீழ்க்கண்ட திருக் கோயில்கள் விளங்கி வருகின்றன:

1. மதுரை நகர், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில்.
2. அழகர்கோவில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில்.
3. திருமோகூர், அருள்மிகு காளமேகப் பெருமாள் திருக்கோயில்.
4. திருப்பரங்குன்றம், அருள்மிகு சுப்பிர மணியசுவாமி திருக்கோயில்.



வண்ணமுறு தெப்பமுடன் கோவில் தீயர் வெளிச்சத்தில்

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணிகள்

"குழந்தைகள் நாட்டின் மிக உயர்ந்த முக்கியமான சொத்தாகும்" என ஆகஸ்ட் 1974-இல் தெரிவித்ததுடன், அதனைத் தேசியக் கொள்கையாகவும் அரசு அறிவித்தது. அவர்களின் உணவு, வளர்ப்பு மற்றும் எண்ணங்கள் ஆகியவற்றினைப் பேணுதல் தேசத்தின் பொறுப்பாகும் எனவும் அறிவித்தது. குழந்தை பிறப்பதற்கு முன்னும், பிறந்த பின்னும், வளர்ச்சிக் காலத்திலும் அவர்களின் உடல்நிலை, மனநிலை மற்றும் சமூகவளர்ச்சி ஆகியவற்றினைப் போதிய அளவில் கவனிக்கும் பணியினை ஏற்படுத்துவது ஒரு மாநிலத்தின் முக்கியக் கொள்கையாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

குழந்தைகளின் வளர்ச்சியைத், தேசியக் கொள்கையாக அறிவிக்கப்பட்ட பின்னும், ஆரம்பகால குழந்தைப் பருவத்தின் உடல்நிலை, மனநிலை மற்றும் சமூக வளர்ச்சிக்கான ஆதாரங்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளன என்று அறியப்பட்டது. குழந்தைப் பருவத்திலேயே இறப்பு, நோய், பள்ளி செல்லாத நிலை போன்றவற்றினைத் தடுக்கவும், குறைக்கவும் இந்திய அரசானது ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணிகளைத் துவக்கியது. அதன்படி 1975-ஆம் ஆண்டு 33 முன்னோடித் திட்டங்களையும், அதன் பின் 1988-89-ஆம் ஆண்டில், தேசத்தில் உள்ள கிராமப் புறங்களில் 1,201 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டங்களையும், நகர்ப்புறங்களில் 194-ம், மலைப் பகுதிகளில் 547 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டங்களையும் ஆக மொத்தம் 1942 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டங்களையும் துவக்கியது.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் நோக்கமானது, ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோர்களுக்கு அவர்கள் பயனடையும் விதத்தில் சொந்தக் கிராமத்திலோ அல்லது அவர்கள் வசிக்கும் இடத்திலோ பணி செய்வதாகும்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் பணிகள்

1. ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கிய நிலையை மேம்படுத்துதல்.

2. குழந்தையின் உடல், உள்ள அறிவு, சமூக வளர்ச்சிக்கு அடிப்படை அமைத்துக் கொடுத்தல்.

3. குழந்தைகள் இறப்பு விகிதம் நோய்களினால் பாதிக்கப்படும் நிலை, பள்ளி செல்லாநிலை, சத்துப் பற்றாக்குறை நோய், ஆகியவற்றைக் குறைத்தல்.

4. குழந்தைகள் வளர்ச்சிக்காகப் பாடுபடும்படி நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுதல்.

5. முறையான சத்துணவு தாய்மார்களுக்கு வழங்கி அவர்களின் இயல்பான தேகநிலையினைப் பாதுகாப்பதுடன் குழந்தைகளும் ஆரோக்கியமாக இருக்க வழிவகை செய்தல்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், குழந்தைகளுக்கும், தாய்மை அடைந்துள்ள பெண், பாலூட்டும் பெண் ஆகியோர்களுக்குப் பின்வருமாறு பணித் திட்டங்கள் உள்ளன.

1. இணைஉணவு வழங்குதல்.
2. நோய்த் தடுப்பு
3. உடல்நலப் பரிசோதிப்பு
4. தீவிர சிகிச்சை
5. சத்துணவு மற்றும் உடல்நிலைக் கல்வி
6. முறைசாரா முன்பருவக் கல்வி.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தைச் சார்ந்த பல்வேறு திட்டப் பணிகள், பாதுகாப்பான குடிநீர் வசதி ஏற்படுத்துதல், வயது முதிர்ந்த பெண்களின் கல்வி அறிவு மேம்படுத்துதல், நடமாடும் உணவு வசதி போன்றவற்றினை விரிவுபடுத்துதல் போன்றவற்றினைச் செயல்படுத்திட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கூடுதல் சத்துணவு

குறைந்த வருவாய் உள்ள குடும்பத்தைச் சேர்ந்த ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகள், பிரசவ நிலையிலுள்ள பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோர்களுக்குக் கூடுதல் சத்துணவு வழங்கப்படுகிறது. ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகளின் எடை மற்றும் வயது ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டு கூடுதல் சத்துணவு வழங்கப்படுகிறது. மருத்துவ ரீதியில் சத்துணவு வழங்குதல் சாலச் சிறந்ததாகும்.

நோய்த் தடுப்பு

தொண்டை அடைப்பான், இரணவாத ஜன்னி, கக்குவான் இருமல், இளம்பிள்ளைவாதம் ஆகிய நோய்களிலிருந்து காக்கும்பொருட்டு, அனைத்துக் குழந்தைகளுக்கும் நோய்த் தடுப்பு முறை வழங்கப்படுகிறது. 5 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு டைபாய்டு காய்ச்சல் வராத அளவில் தடுப்பூசி போடப்படுகிறது. கர்ப்பிணிப் பெண்களுக்கும் இரணவாத ஜன்னி தடுப்பூசி போடப்படுகிறது. இரும்புச்சத்து மாத்திரையும் வழங்கப்படுகிறது. குழந்தைகளுக்கு வைட்டமின் 'ஏ' சொட்டு மருந்தும், இரும்புச்சத்து மாத்திரைகளும் வழங்கப்படுகிறது.

உடல்நிலை பரிசோதனை

பிரசவ நிலையிலுள்ள தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும், ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும் உடல்நிலையினைப் பரிசோதிக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. குழந்தைகளை வயிற்றுப்போக்கு, வயிற்றுக்கடுப்பு, வயிற்றுப்பூச்சி ஆகிய நோய்களிலிருந்து காக்கும்பொருட்டு குழந்தைகளின் நலனறிய சிற்சில பரிசோதனை செய்யப்படுகிறது. காலந்தவறாது பரிசோதிக்கப்படுகிறது.

தீவிர சிகிச்சைப்பணி

இப்பணி தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படுத்தப்பட்டு உள்ளது. மிகவும் மோசமான

— வீ.பா. பத்மகுமரேசுவரி
திட்ட அலுவலர்
ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப்பணி
மதுரை

மதுரை: சில முக்கிய ஆண்டுகள்

1843 - அரசு மருத்துவமனை திறக்கப்படுதல்.
1866 - மதுரை நகராட்சியாகியது.
1869 - மத்திய சிறைச்சாலை கட்டப்பட்டது.
1873 - மாவட்ட நீதிமன்றம் அமைக்கப்பட்டது.
1875 - மதுரை-திருச்சி இருப்புப்பாதை தொடக்கம்.
1880 - மதுரைக் கல்லூரி தோற்றுவிக்கப்பட்டது.
1881 - பசுமலையில் அமெரிக்கன் கல்லூரி அமைப்பு.
1885 - யானைக்கல் அருகே வைகையில் கீழ்ப் பாலம் கட்டப்பட்டது.
1892 - மதுரை ஆலை (Madura Mills) தொடக்கம்.
1900 - 'மங்கம்மாள் சத்திரம்' கட்டுமானப் பணி முடிவு.
1903 - மதுரைத் தமிழ்ச் சங்கம் மூலம் 'செந்தமிழ்' ஏடு வெளியிடப்படல்.
1911 - மதுரை மாவட்டத்தின் ஒரு பகுதி, இராமநாதபுரம் மாவட்டமாகப் பிரிக்கப்படுதல்.
1913 - பாதாளச் சாக்கடைத் திட்டம் அமல்.
1921 - மீனாட்சி ஆலை தோற்றம்.
1933 - மதுரை நகராட்சிக்கு நிர்வாக அதிகாரிகள் நியமனம்.
1938 - வைத்தியநாத ஐயர் தலைமையில், அருள்மிகு மீனாட்சியம்மன் கோயிலில் அரிசன மக்கள் நுழைவு.
1918 - சீமாட்டி டோக் கல்லூரி தொடக்கம்.
1949 - தியாகராசர் கல்லூரி தொடக்கம்.
1954 - மதுரை மருத்துவக் கல்லூரி தொடக்கம்.
1957 - செந்தமிழ்க் கல்லூரி அமைப்பு.
1958 - மதுரை விமானப் போக்குவரத்து தொடக்கம்.
1964 - வேளாண்மைக் கல்லூரி அமைத்தல்.
1965 - மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரி தொடக்கம்.
1966 - மதுரைப் பல்கலைக்கழகம் நிறுவப்படல்.
1969 - அரசரடியில் தமிழ்நாடு இறையியல் கல்லூரி தொடக்கம்.
1971 - மதுரை மாநகராட்சியாக உயர்வு பெறல்.
1974 - இராஜா முத்தையா செட்டியாரால், தமிழிசைச் சங்கம் நிறுவப்பெறுதல்.
1978 - மதுரை நகரப் பேருந்துத் நடத்தல், பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்கு உட்படல்.
1981 - ஜனவரி 4 முதல் 10 வரை, நான்காவது உலகத் தமிழ் மாநாடு நடத்தப்பெறல்.

—தொகுப்பு: மு.பா. அன்புச்செழியன்

• மதுரைமா நகரில் 1988-ல்தான், பாதுகாக்கப்பட்ட குடிநீர்த்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

அருள்மிகு திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில்.

5. அழகர்கோவில், அருள்மிகு சோலைமலை முருகன் திருக்கோவில்.

இதில் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி எழுந்தருளியுள்ள திருப்பரங்குன்றம் முதல் படை வீடு; அழகர்கோவில், சோலைமலை முருகன் கோயில் ஆறாவது படை வீடு ஆகும்.

பாடல் பெற்ற ஸ்தலங்களாக சைவத்திருக் கோயில்கள் நான்கும், வைணவத் திருக் கோயில்கள்-3ம், இம்மாவட்டத்தில் விளங்கி வருகின்றன. அவை பின்வருமாறு:

மதுரை மாவட்டத்தில் உள்ள

பாடல் பெற்ற சைவத் திருக்கோயில்கள்

1. அருள்மிகு திருவாப்புடையார் திருக் கோயில், செல்லூர்.

2. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக் கோயில், திருப்பரங்குன்றம்.

3. அருள்மிகு ஏடகநாதசுவாமி திருக்கோயில், திருவேடகம்.

4. அருள்மிகு திருமறைநாதசுவாமி திருக் கோயில், திருவாதவூர்.

பாடல் பெற்ற வைணவத் திருக்கோயில்கள்

1. அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர் கோவில்.

2. அருள்மிகு காளமேகப்பெருமாள் திருக் கோயில், திருமோகூர்.

3. அருள்மிகு கூடலழகர் திருக்கோயில், மதுரை நகர்.

மதுரை மாவட்டத்திலுள்ள கீழ்க்கண்ட திருக் கோயில்களில் கீழ்க்கண்ட விவரப்படி முக்கியத் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக் கோயிலில் நடைபெறும். ஸ்ரீ மீனாட்சி திருக் கல்யாணம் சித்திரைத் திருவிழா.

அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில்- அழகர் கோயிலில் நடைபெறும். சித்திரைத் திருவிழா (வைகையாற்றில் கள்ளழகர் எழுந்தருளும் விழா).

தமிழ்நாடு
அரசுப்பணியாளர் தேர்வாணையம்

விளம்பரம்

தொகுதி 2 மற்றும் 3 பணிகளுக்கான முதனிலை எழுத்துத் தேர்வுகள், முறையே 8.1.1994 (சனிக்கிழமை) மற்றும் 9.1.1994 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளன என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. நுழைவுச் சீட்டுகள் விண்ணப்பதாரர்களுக்குத் தனித்தனியே குறித்தகாலத்தில் அனுப்பிவைக்கப்படும்.

DIPR/1817/MS/93

• மதுரை என்ற சொல்லுக்கு இனிமை என்ற பொருளுண்டு. அமிழ்தினுமினிய தமிழ் வளர்த்த நகரமாதலால் மதுரை என்ற மதுரமான பெயரைப் பெற்றது மதுரை மூதூர். பெரும்பாலும் மருத நிலவளம் கொண்ட மாவட்டம் மதுரை; மருதம் என்பது வயலும் வயல்சார்ந்த இடமும் ஆகும். இதனாலேயே அக்காலத்தில் மருதை என்றே இந்நகரின் பெயர் வழங்கப்பட்டதாகவும், நாளடைவில் அதுவே மருவி மதுரை ஆனது என்றும் கூறப்படுவதும் உண்டு. – என். சுப்பிரமணியன்

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்- திருப்பரங்குன்றத்தில் நிகழும். வைகாசி விசாகம்- பங்குனி உத்திரம்.

அருள்மிகு சுந்தரமகாலிங்கசுவாமி திருக் கோயில், சதுரகிரியில் கொண்டாடப்படும். ஆடி அமாவாசை.

அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில்- வீரபாண்டியில் எடுக்கப்படும். சித்திரைத் திருவிழா.

அறநிலையத்துறையின் சார்பில், கீழ்க்கண்ட திருக்கோயில்களில் முறைப்படி கீழ்க்கண்ட விவரப்படி, பள்ளிக்கூடங்கள், அன்பு இல்லங்கள், முதியோர் இல்லங்கள், சித்த வைத்தியசாலை, வேத ஆகமப் பயிற்சி மையங்கள் ஆகியன நடத்தப் பட்டுவருகின்றன.

பள்ளிக்கூடங்கள்

அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மதுரை.

அருள்மிகு ஆண்டவர் சுப்பிரமணியசுவாமி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருப்பரங்குன்றம்.

அருள்மிகு சுந்தரராஜா உயர்நிலைப்பள்ளி, அழகர்கோவில்.

அருள்மிகு சுந்தரராஜா ஆரம்பப்பள்ளி, அழகர்கோவில்.

அன்பு இல்லங்கள்:

திருவாதவூர் - அருள்மிகு மீனாட்சி சுந்த ரேஸ்வரர் திருக்கோயில், மதுரை.

அழகர்கோவில் - அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோவில்.

அருள்மிகு அழகர் கோவில்.

முதியோர் இல்லம்:

திருப்பரங்குன்றம் - அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்.

சித்த வைத்தியசாலை:

திருப்பரங்குன்றம் - அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்.

வேத ஆகமப்புத்தொளிர் பயிற்சி மையங்கள்:

அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக் கோயில், மதுரை.

அருள்மிகு கூடலழகர் திருக்கோயில், மதுரை.

ஒரு கால பூஜைக்குக் கூட வழியில்லாத திருக்கோயில்களில், ரூ.3,500/- அரசு நிதியுதவி அளிக்கப்பட்டு, அதன் மூலம் ஒரு கால பூஜை நடைபெற்று வருகிறது.

இது தவிர ஒரு கால பூஜைக்காக, ரூ.25,000/- முதலீடு செய்யும் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு, மேற்படித் தொகை நான்கில் ஒரு பங்குத் தொகையான ரூ.6250/-ஐப் பொதுமக்களிடம் உபயமாகப் பெற்றும், மீதித் தொகையான ரூ.18,750/-ஐ அரசிடமிருந்து மானியமாகப் பெற்றும், மொத்தத் தொகை ரூ.25,000/-ஐ முதலீடு செய்து, அதிலிருந்து வரும் வட்டி மூலம் நிரந்தரமாக ஒரு கால பூஜை நடத்துவதற்கு, சுமார் 90 ஆலயங்களில் விரைவில் திட்டம் அமல் செய்யப்படவுள்ளது.

பணியிலிருந்து ஓய்வு பெற்ற அர்ச்சகர்கள், வேத பாராயணம் பாடுவோர், நாலாயிர திவ்விய பிரபந்தம், அறையர் சேவை செய்வோர் ஆகியோருக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டமும், பழங்கால இசைக்கருவிகள் வாசித்து ஓய்வில் இருப்பவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டமும் விரைவில் அமல்படுத்தப்படவுள்ளது.

கிராமப்புறங்களில் உள்ள நலிவடைந்த திருக் கோயில்களுக்கு, திருப்பணி செய்வதற்காக, அரசு மானியமாக ரூ.10,000/- வழங்கப்பட்டு, திருப் பணி நடைபெற்றுவருகிறது.

கீழ்க்கண்ட திருக்கோயில்களுக்குச் சிறப்புத் திருப்பணிக்காக, தமிழ்நாடு அரசு மானியம் வழங்கியுள்ளது:

அருள்மிகு காளமேகப்பெருமாள் திருக் கோயில், திருமோகூர்.

அருள்மிகு சுந்தரமகாலிங்கசுவாமி திருக் கோயில், சதுரகிரி.

அருள்மிகு மலைக்கொழுந்து சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், செங்குறிச்சி.

சிறுசேமிப்பு - குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

சிறுசேமிப்புத்துறையின் மகத்தான பரிசுத்திட்டம்



இன்றே ரூ.500/-ம் அதற்கு மேலும் தமிழ்நாட்டில் முதலீடு செய்து இலவச பரிசுக் கூப்பன் பெறுங்கள்.

உங்கள் முதலீடுகளுக்கு 619 கவர்ச்சிகரமான பரிசுகள்

1 சூப்பர் பம்பர் முதல் பரிசு மாருதி ஆம்னிவேன் (அல்லது) 25 h.p.H.M.T. டிராக்டர்(இயந்திரக்கலப்பையுடன்)

1 இரண்டாவது பரிசு	- அஞ்சலக மாதாந்திர வருவாய்த்திட்டத்தில் ரூ.24,000/-க்கான முதலீடு
2 மூன்றாவது பரிசுகள்	- கலர் டெலிவிஷன்
2 நான்காவது பரிசுகள்	- உலர்த்தும் வசதியுள்ள செமிஆட்டோமேடிக் வாஷிங்மெஷின்
3 ஐந்தாவது பரிசுகள்	- 2 நபர்களுக்கு சென்னையிலிருந்து புறப்படும் 6 நாள் தென்னிந்திய சுற்றுலா
10 ஆறாவது பரிசுகள்	- 1 சவரன் (22 காரட்) தங்கநாணயம்
600 ஏழாவது பரிசுகள்	- ரூ.100/- மதிப்புள்ள இந்திராவிகாஸ் பத்திரம்

பரிசுக் கூப்பன் பெற முதலீடு செய்ய வேண்டிய திட்டங்கள்

- இந்திரா விகாஸ் பத்திரம் (IVP)
- கிசான் விகாஸ் பத்திரம் (KVP)
- தேசிய சேமிப்புப் பத்திரம் 8-வது வெளியீடு (NSCVIII ISSUE)
- தேசிய சேமிப்புத்திட்டம் 1992 (NSS '92)
- 15 ஆண்டு பொது சேமநல நிதித்திட்டம் (PPF)
- மாதாந்திர வருவாய்த் திட்டம் (MIS)
- ஓய்வு பெறும் அரசு/பொது நிறுவன ஊழியர்களுக்கான சேமிப்புத் திட்டம் 1 மற்றும் 2 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D) 1% ஊக்கத்தொகை
- 3 மற்றும் 5 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D)
  அஞ்சலகத் தொடர் வைப்புத்திட்டம் / வளரும் மாத சேமிப்புத் திட்டம் (R.D./C.T.D.)

மேலும் 2% ஊக்கத்தொகை (குறிப்பிட்ட திட்டத்தில்)

சேமிப்புப்பத்திரம் அனைத்து அஞ்சலகங்களிலும் கிடைக்கும்

மேலும் விவரங்களுக்கு:
ஆணையர், சென்னை மாநகராட்சி, (சி. சே. பிரிவு) சென்னை - 600 003.
தொலைபேசி: 584440
மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், 92, அண்ணா சாலை,
சென்னை 600 002. தொலைபேசி: 849962.
மாவட்ட ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்,
அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்

வெளியீடு: இயக்குநர்,
சிறுசேமிப்புத்துறை, 621, அண்ணா சாலை,
சென்னை - 600 006. தொலைபேசி : 8251784/8251685
சிறு குடும்பம் - செல்வக்குடும்பம்

DIPR/8840/5/93

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு

மதுரை மாநகர்

'தமிழ் நிலைபெற்ற தாங்கரு மரபின் மதுரை'...

'தென்தமிழ் நன்நாட்டுத் தீது தீர் மதுரை!...'

—இப்படிப் பல பழந்தமிழ் இலக்கியங்களிலே மதுரை மாநகரின் மாண்பு குறைவறச் சொல்லப்பட்டிருக்கிறது. இத்தகைய போற்றுதலுக்கும் புகழுதலுக்கும் காரணம் என்ன என்று பார்க்கின்றபோது, சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பெருமையுடைய திருநகர் அது எனத் தெரியவரும்.

'படுத்திருக்கும் வினாக்குறி போல் மீசை வைத்த பாண்டியர்கள் வளர்த்த மொழி...'

—என்று, இற்றைக் கவிஞர் சுரதா அற்றை நாள் பண்டியரின் அருஞ்சிறப்பைப் பாடுகிறார்.

உலகமொழி என இன்றைக்குச் சொல்லப்படுகின்ற ஆங்கிலத்தின் பிறப்பு வளர்ப்பு பற்றி அறிய முடிகிறது; ஆராய முடிகிறது. ஆனால் தமிழ் மொழியின் தோற்றமும் பிறப்பும் பற்றி ஆராய்ச்சி மனம் கொண்டவர்களாலும் அறிய முடியவில்லை.

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தின் முன்னே தோன்றி, பழமையும் தொன்மையும் கொண்டு, பன்னெடுங் காலமாக மாறா இளமையுடனும் மங்காப் பொலிவுடனும் வாழ்ந்து வளர்ந்துவரும் மொழியான நமதருந் தமிழுக்குத் - தனக்கென ஒரு தனித்துவமும் வரலாறும் கொண்ட தமிழுக்கு மாட மா மதுரையிலே சங்கம் அமைத்திருந்த காலம் பற்றிக் கூறவந்த மூதறிஞர் பலரும் பலவிதமாகக் கூறினர்.

முத்தமிழும் முச்சங்கமும்

சங்ககாலம் கி.மு.8000 முதல் கி.பி. 100 ஆக இருந்திருக்கலாம் என்கிறார். வி.கே. சூரியநாராயண சாஸ்திரியார்; கி.பி.8 முதல் 9-ஆம் நூற்றாண்டாக இருக்கலாம், என்கிறார், ஒப்பிலக்கணம் கண்ட கால்டுவெல்; கி.மு.500 என்கிறார் எம். சீனிவாச ஐயங்கார், கி.மு.1015 முதல் கி.பி.150 வரை இருக்கக்கூடும் என்கிறார் தாமோதரம் பிள்ளை.

இன்னும் இதற்கோர் முடிவு உண்டானபாடில்லை.

பீடும் பெருமையும் கொண்ட நம் தமிழுக்குப் பாண்டிய மன்னர்கள் கூடல் மாநகரில் சங்கம் வைத்திருந்த விவரம் இறையனாராகப் பொருளிலேதான் காணப்படுகிறது.

அதன்படி—

பழமைக்குப் பழமையாய், புதுமைக்குப் புதுமையாய் விளங்கிடும் நம் தமிழுக்கான தலைச் சங்கம் தென் மதுரையில் அமைந்திருந்தது. அதனைக் காய்சினவழுதி முதல் கடுங்கோன் ஈறாகப் பாண்டிய மன்னர்கள் 89 பேர் காத்து வளர்த்தனர். 4449 பேர் அங்கம் வகித்த இச்சங்கம் 4440 ஆண்டுகள் இருந்து கடல் கோள்பட்டது. இந்தத் தலைச் சங்கத்திலே தான் பரிபாடல், முதுகுருகு, முதுநாரை முதலான பல நூற்கள் பாடப்பட்டன.

வாழையடி வாழையென வாழ்ந்த பெருமையும், வரலாற்றுச் சிறப்பும் உடைய தமிழுக்கான இடைச்சங்கம் கபாடபுரத்திலே நிறுவப்பட்டது. பாண்டிய மன்னர்கள் வெண்டேர்ச் செழியனிலிருந்து முடத்திரு மாறன் ஈறாக 59 பேர், இதன் புரவலர்கள்; 3,700 பேர் இதில் பங்கேற்றுப் பாடினர். தமிழ்நலம் நாடினர்; கலி, குருகு, அகவல், வெண்டாளி, வியாழ மாலை எனப் பல நூற்கள் வெளிவரக் காரணமாயிருந்த இந்த இடைச்சங்கம், 3,700 ஆண்டுகள் இருந்து சிறந்திருந்த நிலையில் கடல் கொள்ளப்பட்டது.

உத்தர மதுரையில், மாமன்னன் முடத்திருமாறனால் துவக்கப்பட்டது கடைச் சங்கம். உக்கிரப்பெருவழுதி வரை 49 பேர், கால வெள்ளத்தால் அழிக்க முடியாத இலக்கியச் செல்வங்களும் இலக்கண அரண்களும் உடைய நம் தமிழ்காத்த சங்கம் காத்தனர். 1850 ஆண்டுகள் அரும்பணியாற்றிய இச் சங்கத்தில் 449 புலவர் பெருமக்கள் அணி செய்தார்கள். சிறுமேதாவியார், சேந்தம்பூதனார், கணக்காயனார்மகனார் நக்கீரனார், மதுரை இளநாகனார் உள்ளிட்ட அப்புலவர் பெருமக்கள்- நெடுந்தொகை நானூறு, குறுந்தொகை நானூறு, நற்றிணை நானூறு, புறநானூறு, கூத்து வரி, சிற்றிசை முதலான சிறந்த நூல்கள் பல தோன்றிடக் காரணமாயினர்.

முத்தமிழ் வளர்த்திட முச்சங்கங்களின்



சான்றோரின் சிலைகள்!

★ உலகத் தமிழ் மாநாடு 1981-ஆம் ஆண்டில் நடைபெற்றபோது மதுரை மாநகரில் நிறுவப்பட்ட திருவுருவச் சிலைக்குரிய ஆன்றோர்களின் விவரங்கள்: திருவள்ளுவர், தொல்காப்பியனார், தத்துவ போதக சுவாமி (Rubert De Nobili), பாண்டித்துரைத் தேவர், கவிமணி தேசிக விநாயகம், உ.வே.சாமிநாதையர், திரு வி. கல்யாணசுந்தரனார், ஆறுமுக நாவலர், சோமசுந்தர பாரதியார், வேத நாயகனார், தனிநாயக அடிகள், வீரமாமுனிவர், திருமலை நாயக்கர், தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்.

— எம். கஸ்தூரிபாய்

மதுரை: சில குறிப்புகள்

★ மதுரைக்கு 21 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது அருள்மிகு அழகர் கோவில். இங்கே எழுந்தருளியிருப்பவர் அருள்மிகு திருமால் (விஷ்ணு). கள்ளர் என்ற சமூகத்தார் முக்கியமாக வழிபடும் தெய்வமாக இருப்பதால் இதற்குக் கள்ளழகர் என்று பெயராம். பாண்டிய மன்னர்கள் பலரும் இக்கோயிலுக்குப் பலவகை நிவந்தங்கள் அளித்துள்ளனர். சிற்ப வேலைப் பாடுகள் நிறைந்த கல்யாண மண்டபத்தில் உள்ள அழகிய கற்றூண்கள், விமானம் இங்குண்டு. மதுரை மாநகரில் சித்திரைத் திருவிழா நிகழும் போது, அருள்மிகு கள்ளழகர் மதுரைக்குக் கொண்டுவரப்படுவார். கள்ளழகர் வைகையாற்றில் இறங்கும் திருவிழா, தமிழகத்திலேயே குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

★ ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் (1866) தான் மதுரை மாநகர் ஒரு நகராட்சி ஆகியது; அப்போது அந்நகரின் மக்கள்தொகை 41,600; 1980 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 8,00,000. அன்று முதல் 1971 வரை மதுரை மாநகராட்சியில் 41 பேர் தலைவர்களாகப் பணியாற்றியிருக்கிறார்கள். திரு வி.எச். லெவிஞ் (1866-67) — திரு எஸ். முத்து (1969-71).

★ மதுரை மாவட்டம் மோகூரிலிருந்து 12 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது திருவாதவூர்; சைவ சமயாச்சாரியார் நால்வருள் ஒருவரான மாணிக்கவாசகர் பிறந்த ஊர் இது. 'நரிதனைப் பரியாக்கிய' புராணக் கதையின் நாயகரான இவரைத் திருவாதவூரார் என்றும் குறிப்பிடுவதுண்டு.

★ இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்ற ஏராளமான தியாக சீலர்கள் மதுரை மாவட்டத்தில் இருந்திருக்கிறார்கள். அதனை நினைவுகூரும் வகையில், மதுரை தமுக்கம் கலையரங்கம் அருகே அழகியதோர் நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டு உள்ளது.

— வி. சுந்தரசாமி
('மதுரை வரலாறும் பண்பாடும்' நூலிலிருந்து).

நிலையிலுள்ள தாய்மார்கள் சிறப்புச் சிகிச்சை அளிக்கும் பொருட்டு Referral நிறுவனங்களுக்கு அனுப்படுகிறார்கள். குழந்தைகளுக்கும் உரிய வசதிகள் ஆரம்ப சுகாதார நிலையம், துணை நிலையம், மருந்தகம், மாவட்ட மருத்துவமனைகள் மற்றும் Referral மருத்துவமனைகளில் உள்ளன. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தைச் சார்ந்த மருந்து அலுவலர், மருத்துவச் செவிலியர் தனிச்சிரத்தை எடுத்துச் செயல்படுகின்றனர்.

சத்துணவு மற்றும் உடல் நலக்கல்வி

13 வயதிலிருந்து 45-வயதிற்குட்பட்ட அனைத்துப் பெண்களுக்கும், அவற்றுள் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டு சத்துணவும் உடல்நிலைக் கல்வியும் வழங்கப்படுதல். சிறப்பு நடவடிக்கைகள், அங்கன்வாடி பணியாளர்களால் மேற்கொள்ளப்படுவதுடன் வீடு வீடாகவுக்கு வருகை தந்து சமையல், சுகாதாரம் போன்றவற்றினை எவ்வாறு காத்தல் போன்றவற்றினைச் செயல்படுத்திக்காட்டும் பணியினை மேற்கொள்ளுதல்.

3 முதல் 5-வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு முறைசாராக் கல்வி மையங்கள், பாலர் பள்ளிகள் ஒவ்வொரு கிராமம் மற்றும் வசிக்கும் இடத்திலும் உள்ளன. இதன் நோக்கமானது, குழந்தைகளின் விருப்பநிலை, சக்தி மற்றும் பழகும் தன்மை ஆகியவற்றினை மேம்படுத்துதல்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட நிர்வாக அமைப்புகள், கிராமப்புறங்களிலுள்ள இன வளர்ச்சி வட்டாரம், மலைப்பகுதிகளுக்கு மலைவாழ் மக்கள் வளர்ச்சி வட்டாரம், நகர்ப்புறங்களில் கூட்டமாக அமைந்துள்ள சேரிப் பகுதிகள் ஆகியவற்றில் அமைந்துள்ளன. இத்திட்டப்பணிகள், மலைவாழ் மக்கள், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் வறட்சிப் பகுதியினருக்கும் முன்னுரிமை அளிப்பதற்காகத் தேர்விடப்பட்டுள்ளன.

ஒரே இனத்தைச் சேர்ந்த குழந்தைகள் மற்றும் தாய்மார்கள் வசிக்கும் பகுதிகளில் அங்கன்வாடி மையங்கள் ஏற்படுத்தப்பட்டு பணிகளை மேற்கொள்கின்றன. பொதுவாக ஒரு அங்கன்வாடி 1000 மக்கள் தொகையுள்ள கிராமம் மற்றும் நகர்ப்புறங்களையும், 700 மக்கள் தொகையுள்ள மலைவாழ் பகுதிகளையும் உள்ளடக்கியதாகும்.

முறைசாராக் கல்வி மற்றும் முன்பருவக் கல்வி

இத்திட்டத்தில் முறைசாரா மற்றும் பாலர் கல்வி மையங்கள் ஒரு முக்கிய அங்கமாகும். இது அனைத்துக் குழந்தைகளும் வளர்ச்சியுறமிகவும் பயன்படுவதுடன், குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் நோக்கம் செயல்படவும் பெரிதும் பயனுள்ளதாக உள்ளது.

முறைசாரா மற்றும் பாலர் கல்வி முறையானது 3 வயது முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஏறபடுத்தப்பட்டுள்ளது.

• மதுரை நகரம் 1878-ல் புலவர்களால் தொடர்பு ஏற்பட்டது.

• ஆசைக்கும் அச்சத்திற்குமிடையே ஊசலாடுவோர், பூசலின் போது ஏசலும், பூரித்திருக்கும்போது புன்னகையும் பெறமுடியுமேயொழிய வெற்றி பெறமுடியாது.

—பேரறிஞர் அண்ணா

முறைசாராக் கல்வியின் நோக்கம்

அங்கன்வாடியில் உள்ள பாலர் பள்ளிக் கல்வியின் நோக்கமானது, குழந்தைகளின் உடல்ரீதியான, மனரீதியான நல்லொழுக்கம் மற்றும் சமூக வளர்ச்சியினை மேம்படுத்துதலும், மொழி மற்றும் புத்திசாலித்தனத்தினை வளர்ச்சியுறச் செய்தலுமே ஆகும்.

பாலர் பள்ளிக் கல்வியின் நோக்கம்

1. குழந்தைகள் நல்ல உடல் வளர்ச்சியுடன் இருக்கவும், திடகாத்திரமாக இருக்கவும், கூட்டுறவுடன் சாமர்த்தியமாக இருக்கவும் பயன்படுதல்.

2. சமூகப் பொறுப்புகள், விரும்பத்தக்க உறவு முறைகள் குழந்தைகளுக்கு ஏற்படவும் மற்றவர்களின் உரிமையினை மதிக்க ஏற்றுக் கொள்ளவும், மற்ற குழந்தைகளுடன் பழகவும் பயன்படுதல்.

3. குழந்தைகளின் கற்பனைத்திறன் உருவாகவும், ஆர்வம் ஏற்படவும் வழிவகை செய்தல்

4. குழந்தைகளின் இயற்கையான சண்டையெழுப்புகிற குணத்தினையும், நாசப்படுத்துகிற அல்லது பாழாக்குகிற குணத்தினையும் கட்டுப்படுத்துவதுடன், அவர்களின் சுயமான சக்தி மற்றும் குணநலனை ஒருவழிப்படுத்தவும் பயன்படுதல்.

5. குழந்தைகளின் புத்திசாலித்தனத்தினை வளர்ச்சியுறச் செய்யவும் சொந்த மொழியில் தனது உணர்ச்சி மற்றும் திறமைகளை வெளிப்படுத்தவும், சுற்றுப்புறத்தினை அறிந்து கொள்ளவும் பயன்படுதல்.

6. குழந்தைகள் வேலை செய்யக் கற்றுக் கொள்ளுதலை உற்சாகப்படுத்தலும், தனியாக விளையாடவும், பெரியோர்களிடமிருந்து பெறப்படும் உதவி மற்றும் வழிகாட்டுதலை ஏற்றுக்கொள்ள இயலவும் வழிவகை செய்தல்.

7. குழந்தைகளின் நல்ல பழக்க வழக்கங்கள் மேம்படவும் உடல் ஆரோக்கியமாக இருக்கவும் பயன்படுதல்.

பாலர் பள்ளிகளில் அனைத்துக் குழந்தைககளின் வளர்ச்சியினை மேம்படுத்துவதுடன், 24 பலவேறு தலைப்புகளைத் தேர்வு செய்து, அந்த 24 தலைப்புகளின் கீழ் குழந்தைகளுக்கு முன்பருவக் கல்வி அளிக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட தலைப்பின் பாடமானது இருவாரத்திற்குத் தொடர்ச்சியாக நடத்தப்படுவதுடன், அடுத்த இரு வாரத்திற்கு வேறொரு தலைப்பு பாடமாக நடத்தப்படுகிறது. இத்தலைப்புகள் குழந்தைகளுக்கு அங்கன்வாடிப் பணியாளர்களால் தயார் செய்யப்பட்ட உபகரணங்களின் உதவியால் பாடங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

1. சுதந்திர உரையாடல்
2. மொழிக்கல்வி
3. எண் பயிற்சி
4. செய்கைப்பாடல்
5. கதை சொல்லும் முறை
6. அறிவியல் அனுபவம்
7. திட்டமிட்ட விளையாட்டு
8. புலப்பயிற்சி
9. தினசரி வாழ்க்கைச் செயல்
10. ஆக்க வேலைகள்
11. பொம்மலாட்டம் நடித்துக் காட்டுதல்.
12. சுதந்திர விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி.

நடமாடும் குழு பயிற்சியாளர்களால் அங்கன்வாடிப் பணியாளர்களுக்குப் பாலர் பள்ளி செயல்பாடுகள் குறித்துப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. அங்கன்வாடிப் பணியாளர்கள் ஒவ்வொரு தலைப்புக்கும் பாடங்களைத் திட்டமிட்டுத் தயார் செய்வதுடன், குறிப்பிட்ட தினங்களில் குழந்தைகளுக்கு வகுப்புகளும் நடத்துகின்றனர்.

இப்போது மதுரை மாவட்டத்தில் 5 திட்டங்களும் திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் 3 திட்டங்களும் இராமநாதபுரம் மாவட்டத்தில் 3 திட்டங்களும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் ஒரு திட்டமும் ஆக மொத்தம் 12 திட்டங்கள் மதுரை திட்டக்குழு அலுவலரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு திட்டத்தின் பெயரும் அத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மைய எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

மதுரை மாவட்டத்தில் ஒதுக்கப்பட்ட மையங்களின் எண்ணிக்கையும் திட்டத்தின் பெயர்களும்

திட்டம்-1-க்கு 104 மையங்கள்,
திட்டம்-2-க்கு 76 மையங்கள்,
திட்டம்-3-க்கு 91 மையங்கள்,
திட்டம்-4-க்கு 90 மையங்கள்,
தேனி-84

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் ஒதுக்கப்பட்ட மையங்களின் எண்ணிக்கையும், திட்டத்தின் பெயர்களும்

திண்டுக்கல்-100,
நிலக்கோட்டை-122,
வடமதுரை-89

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒதுக்கப்பட்ட மையங்களின் எண்ணிக்கையும், திட்டத்தின் பெயர்களும்

இராமநாதபுரம்-52, போகலூர்-42, பரமகுடி-68

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டத்தில் ஒதுக்கப்பட்ட மையம் மற்றும் திட்டத்தின் பெயர்

தேவகோட்டை-59

மொத்தம் 977 மையங்கள். •

தெரிந்ததைத் தெரியுமென்றும், தெரியாததைத் தெரியாதென்றும் கூறுவது தான் அறிவு.

—கன்பூஷியஸ்



• மதுரை நகரம் மின்வசதி பெற்ற ஆண்டு 1926.



சிறப்பிவை. இவை மட்டுமா மதுரையின் மாண்பு? இன்னும் பல இலக்கியச் சான்றுகளே உண்டு. இதோ, சில:

மதுரையின் பிறபெயர்கள்

அழகு தமிழ் இலக்கியத்தில் மதுரையின் பிற பெயர்களாக ஏறத்தாழ ஐம்பது பெயர்கள் சொல்லப்படுகின்றன. அவற்றுள் சில வருமாறு: அங்கண் மூதூர், ஆலவாய், உயர் மதிற்கூடல், கடம்பவனம், கன்னுபுரம், கூடற்பதி, கூடல், கூடல்மா நகரம், கூடலம் பெரும்பதி, சிவராசதானி, சிவன் முத்தித் தலம், தக்கண மதுரை, தமிழ் கெழுகூடல், திறல் மதுரை, திருமதுரை, திருமலி மூதூர், திருமாமதுரை, திருவாலவாய், துவாத சாந்தத் தலம், தெய்வத் தமிழ்க் கூடல், தெனி தமிழ்க் கூடல், தென் மதுரை, தென் மதுராபுரம், தொன் மதுரை, நான்மாடக் கூடல், பூலோகக் கயிலாயம், பூலோகச் சிவலோகம், பெரும் பெயர் மதுரை, பொற்கூடல், மதுரை, மதுராபுரி, மதுரா நகர், மதுரை மூதூர், மதுரைப்பதி, மருதை, மல்லன் மூதூர், மலிபுகழ்க்கூடல், மாடமதுரை, மும்மைத்தமிழ்க் கூடல், வழுதிக்கூடல், வெள்ளியம்பலம்.

புகழ்பாடும் நூற்கள்

சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்தத் தக்க தமிழ் வளர்த்த மதுரை பற்றிய குறிப்புக்கள் பல்வேறு தமிழிலக்கியங்களிலே காணக்கிடைக்கின்றன. எவையெல்லாம் அவை தெரியுமா?

அகநானூறு, அழகர் அந்தாதி, அழகர் கிள்ளை விடுதூது, இறையனார் அகப்பொருள் உரை, ஔவையார் தனிப்பாடல்கள், கல்லாடம், கலித் தொகை, கலிங்கத்துப்பரணி, கந்த புராணம், கந்தர் கலிவெண்பா, கம்பர் தனிப்பாடல்கள், காளமேகப் புலவர் பாடல்கள், கூடற்பள்ளு, கோடீச்சுரக் கோவை, சங்கர சோழனுலா, சிலப் பதிகாரம், சிறுப்பாணாற்றுப்படை, சொக்க நாத வெண்பா; தக்கயாகப் பரணி, தமிழ்ச் சங்க மான்மியம், தமிழ்விடுதூது, திருக்குற்றாலக் குறவஞ்சி, திருக் கோவையார், திருமுருகப்பாசுரம், திருமுருகாற்றுப்படை, திருவாலாவாயுடையார் கோவில் திருப்பணி மாலை, திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், திருவாசகம், தேவாரம், தேவையுலா, பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம், பரிபாடல், பரிபாடல் திரட்டு, பாண்டிக்கோவை, பாண்டிமண்டல சதகம், புகழேந்திப் புலவர் பாடல்கள், புறநானூறு, புறத் திரட்டு (ஆசிரிய மாலை) பெரிய புராணம்.

-இவை மட்டுமா? இன்னும் நீன்கிறது பட்டியல்.

நற்றினை, நந்திக் கலம்பகம், நாரை விடு தூது (காளிமுத்துப் புலவர் பாடியது) நாலாயிரத் திவ்யப்பிரபந்தம், நெடுநல்வாடை, மதுரைக் கலம்பகம், மதுரைக்காஞ்சி மதுரைத் தலபுராணம், மதுரைத் திருப்பணிமாலை மதுரைத் தேவாரம், மதுரை மான்மியம், மதுரை மும்மணிக்கோவை, மதுரை யமக அந்தாதி, மணிமேகலை, முக்கூடற் பள்ளு, முத்தொள்ளாயிரம், மூவருலா, மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கலவிருத்தி, வண்டுவிடுதூது (கடிகை முத்துப் புலவர்) ஆகிய பல இனிய தமிழ் நூற்கள், மதுரையின் உயர்வு பற்றிக் கூறுவனவாகும்.

தமிழறிந்தார் மட்டுமல்ல; பிற மொழியாளரும் கூட மதுரை நகரின் மாண்பு குறித்து எழுதிச் சென்றிருக்கின்றனர்.

அல்பரூனியின் குறிப்பு (அராபியர்), கால்டுவெல் குறிப்பு, கௌடில்லியரின் அர்த்த சாஸ்திரம், வடமொழி நூற்களான சியாமளா தண்டகம் - மதுரா விஜயம், நாலமியின் பூகோள நூல், பாரசீகப் பயணிகளின் குறிப்பு, பிளினியின் குறிப்பு, புரொன்யசா பாதிரியார் கடிதங்கள், பெரிப்ளூஸ் எழுதிய எரித்தியன் கடல், மகாவமிசம் (இலங்கை வரலாற்று நூல்), மார்கோபோலோ குறிப்புகள் மெகஸ்தனிஸ் எழுதிய இண்டிகா, வாசப் என்கிற முகமதிய பயணியின் குறிப்புகள், வியாசரின் மகாபாரதம், ஸ்ட்ராபோவினுடைய குறிப்பு, ஸ்கந்தபுராணம் அகத்திய சம்ஹிதை, ஹாலாண்டு மகாத்மியம் ஆகிய பிற மொழி நூற்களிலும் குறிப்புகளிலும் கூட மதுரை மாநகர் சிறப்பித்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

மதுரை நகரப் புலவர்கள்!

கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இலக்கண வரம்பு கொண்டு வாழ்ந்த மொழியான தமிழாம் தாய்க்குப் புகழ் சேர்த்த புலவர் பெருமக்களில் பலர் மதுரையைச் சேர்ந்தவர்களாகவே இருந்திருக்கிறார்கள்.

யாரெல்லாம் அவர்கள் என்கிறீர்களா? இதே விவரம்-

அளக்கர் ஞாழார் மகனார் மன்னனார், அளக்கர் ஞாழார் மகனார் அம்மன்னனார், அறுவை வாணிகன் இளவேட்டனார், ஆசிரியர் நல்லந்துவனார், ஆசிரியர் கோடல் கொற்றன், ஆலருவி நாட்டு ஆலம்பேரி சாத்தனார், இளங் கண்ணிக் கௌசிகனார், இளங் கௌசிகனார், இளம் பாலாசிரியன் சேந்தன் கூத்தனார், ஈழத்துப் பூதன் தேவனார், எழுத்தாளன், எழுத்தாளன் சேந்தன் பூதன், ஓலைக் கடைக்கண்ணம் புகுந்த ராயத்தனார், ஓலைக் கடையத்தூர், நல்வெள்ளையார் பகடையத்தூர்மகன் வெண்ணாகன், கண்டரதத்தன் கண்ணதனார் கண்ணனார், கணக்காயனார், கணக்காயனார் மகனார் நக்கீரனார், சுதக் கண்ணன், சுந்தரதத்தன், கவுணியன் பூதத்தனார், கள்ளம்போதனார், கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார், கவுணியன் பூதத்தனார், கள்ளம்போதனார், கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார், மதுரைக் காமக்கணி நப்பாலத்தனார், காருலவியங் கூத்தனார், குமரன், கூத்தனார், கூல வாணிகன் சாத்தன், கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்.

—மூச்சு முட்டுகிறதா? ஒரு விளாடி ஒய்வெடுத்துக் கொண்டு மேலே படியுங்கள்...

கொல்லன் புலவன், கொல்லன் வெண்ணாகனார், பொன்செய் கொல்லன் வெண்ணாகனார், சீத்தலைச் சாத்தன், செய்கண்ணனார், நத்தங் கண்ணனார், தமிழ்க் கூத்தனார், தமிழ்க் கூத்தனார் கடுவன் மள்ளனார், நக்கீரர் நக்கீரனார், நல்வெள்ளியார், படைமங்க மன்னியார், பண்டவாணிகன் இளந்தேவனார், மருதங் கிழார் மகனார், சோகுத்தனார், பாலாசிரியன், நற்றாமனார், பாலாசிரியன் நப்பாலனார் பாலாசிரியன் சேந்தன் கொற்றனார், புலவங் கண்ணனார், பூதன் இள நாகனார், பூவண்ட நாகன்வேட்டனார், பெருங்கொல்லன், பெருமருதனார், பெருமருதிள நாகனார், பேராலவாயர், போத்தனார், மருதங் கிழார் மகன் இளம்போத்தன், மருதங் கிழார் மகனார் கோகுத்தனார், மருதங் கிழார் மகனார் பெருங்கண்ணனார், மருதனிள நாகனார், வேளாசான், வேளாதத்தார்.

—இவர்களெல்லாம் மதுரைப் புலவர்களே! ஒவ்வொருவர் பெயருக்கு முன்னாலும் 'மதுரையை'ச் சேர்த்துப்படித்திட வேண்டும். அப்படித்தான் இலக்கியங்களிலே காணப்படுகிறது!

பாண்டிய மன்னர்கள் பட்டியல்

மதுரையை ஆண்ட பாண்டிய மன்னர்கள் மொத்தம் நூற்றுத் தொண்ணூற்றேழு பேர் என்கிறது 'இறையனார் அகப்பொருள் உரை'. அவ்வளவு பேரின் பெயர்கள் நமக்குக் கிடைக்கவில்லை. கிட்டிய மன்னர்களின் பெயர்கள் இவை-

அண்டர் மகன் குறுவழுதியார், அறிவுடை நம்பி, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன், ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி, கடுங்கோன், கருங்கை ஒள்வாட் பெரும்பெயர் வழுதி, காய்சின வழுதி, கானப்பேர் எயில் கடந்த உக்கிரப் பெருவழுதி, கீரஞ்சாத்தன் குறுவழுதியார், கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி, சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், நிலந்தரு திருவிற் பாண்டியன், நெடுஞ்செழியன், பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி, பன்னாடு தந்த பாண்டியன், பூதப் பாண்டியன், முடத்திருமாறன், வடிம் பலம்ப நின்ற பாண்டியன், வெண்டேர்ச் செழியன், வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி, வெற்றிவேற்செழியன்.

—இவர்களெல்லாம் சங்க காலப் பாண்டிய மன்னர்களாவர்.

கடுங்கோன் மாறவர்மன் அவனி நாராயணன், சடையவர்மன் செழியன்

திருத்துவோம்

★ வழியில் ஒரு கூடைக்காரனைக் கண்ட நான், ''என்னப்பா அது?'' என்றேன்.

''வாயப்பயம்'' என்றான், அவன்.

''இப்படித் தமிழைக் கொலை செய்யும் நீ, இந்த ஊருக்கு ஏம்பா வந்தே?'' என்றேன்.

''பொயக்க'' என்றான்.

''அடச்சே! எங்கெப்பா இருக்குது உன் ஊரு?'' - இது நான்.

''கெயக்கே'' - இது அவன்.

''ஏன் இப்படிப் பேசறே, தமிழைச் சரியாகப் பேசக் கூடாதா?'' என்றேன் நான்.

''அப்படிப் பேசித்தாங்க வயக்கம்'' என்றான், அவன்.

-இப்படிப்பட்ட தமிழ்க் கொலையாளிகளைத் திருத்த வேண்டும்.

—மதுரையில் 1981-இல் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் கி.ஆ.பெ. அவர்கள் பேசியது.

— ராஜூ

சேந்தன், அரிகேசரி மாறவர்மன், கோச்சடையன் இரணதீரன், முதலாம் மாறவர்மன் இராச சிம்மன், பராந்தக நெடுஞ்சடையன், சீமாறன் சீவல்லபன், இரண்டாம் வர குணவர்மன், பராந்தக வீரநாராயணன்...

—இவர்களெல்லாம் மதுரையை ஆண்ட முற்காலப் பாண்டிய மன்னர்கள்.

மூன்றாம் இராசசிம்ம பாண்டியன், வீரபாண்டியன், அமரபுயங்கன், மானா பரணன், சுந்தர பாண்டியன், விக்ரம பாண்டியன், சீவல்லபப் பாண்டியன், பாண்டியன் வீரகேசரி, மாறவர்மன் திரிபுவனச் சக்ரவர்த்தி பராக்கிரம பாண்டியன், சடையவர்மன் பராந்தக பாண்டியன், மாறவர்மன் சீவல்லவன், சடையவர்மன் குலசேகர பாண்டியன், சடையவர்மன் வீரபாண்டியன், மாறவர்மன் விக்கிரம பாண்டியன்...

—இவர்களெல்லாம் கி.பி. 900 முதல் கி.பி. 1190 வரையில் ஆண்ட பாண்டியர்கள்.

முதல் சடையவர்மன் குலசேகர பாண்டியன், முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியன், இரண்டாம் சடையவர்மன் குலசேகரபாண்டியன், இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன், முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியன், சடையவர்மன் வீரபாண்டியன், சடையவர்மன் விக்ரம பாண்டியன், முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியன், சடையவர்மன் சுந்தர பாண்டியன், மாறவர்மன் விக்ரம பாண்டியன், ஜடாவர்மன் வீர பாண்டியன்..

—இவர்களெல்லாம் கி.பி. 1190 முதல் கி.பி. 1310 முடிய ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர்களாவர்.

சடையவர்மன் வீரபாண்டியன், சடையவர்மன் சுந்தரபாண்டியன், மாறவர்மன் குலசேகர பாண்டியன், சடையவர்மன், பராக்கிரம பாண்டியன், மாறவர்மன் வீர பாண்டியன், மாறவர்மன் பராக்கிரம பாண்டியன்...

—இவர்களெல்லாம் கி.பி. 1310-ஆம் ஆண்டின் பின்னர் ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர்கள்.

பராக்கிரம பாண்டியன், இரண்டாவது பராக்கிரம பாண்டியன், மூன்றாவது பராக்கிரம பாண்டியன், சடையவர்மன் குலசேகரன், சடையவர்மன் விக்ரம பாண்டியன் சடையவர்மன் பராக்கிரம பாண்டியன், சடையவர்மன் குலசேகர பாண்டியன், அழகன் பெருமாள் பராக்கிரம பாண்டியன், சடையவர்மன் சீவல்லபப் பாண்டியன், சடையவர்மன் பராக்கிரம குலசேகர பாண்டியன், நெல்வேலி மாறன், சடையவர்மன் அதிவீரராம பாண்டியன், வரதுங்கராம பாண்டியன், வரகுணராம குலசேகர பாண்டியன்...

—இந்தப் பாண்டிய மன்னர்களெல்லாம் தென்பாண்டி நாட்டில் ஆட்சி புரிந்த பிற்காலப் பாண்டியர்கள் ஆவர்.

1866-ஆம் ஆண்டில் நகராட்சியாகி, 1971-ஆம் ஆண்டில் மாநகராட்சி ஆகிய மதுரையின் மீது - அந்நாளில் படையெடுத்தோர் பலராவர். தமிழகத்தின் அணியெனத் திகழும் இந்நகரைத் தமதாக்கிக் கொள்ள மாலிக்காபூர் (கி.பி. 1311), அலாவுதீன் (கி.பி.1312), குஸ்ருகான் (கி.பி.1316), உலூகான் (கி.பி.1323), முகமது பின்-துக்ளக் ஆகியோர் படையெடுப்பு நடத்தினர்.

சுல்தான்களும் நாயக்க மன்னர்களும்

மதுரையை ஆண்ட சுல்தான்கள்- ஜலாலுதீன், அலாவுதீன்உடௌஜி, குத்புதீன், கியாஸ்உத்தீன் தம்காணி, நாசிர் உத்தீன், அடில்ஷா, பக்ருதீன் முபாரக்ஷா, அலாவுதீன் சிக்கந்தர் ஆகியோராவர்.

மதுரையில் நாயக்க மன்னர்கள் கை ஓங்கியது நாளடைவில். அவர்கள் ஆட்சிக்கால மதுரை வரலாறு இது:

விசுவநாத நாயக்கர், முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர், வீரப்ப நாயக்கர், இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர், விசுவப்ப நாயக்கர், கஸ்தூரி ரங்கப்ப நாயக்கர், முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கர், முதலாம் முத்து வீரப்ப நாயக்கர், திருமலை நாயக்கர், குமாரமுத்து நாயக்கர், இரண்டாம் முத்து வீரப்ப நாயக்கர், சொக்கநாத நாயக்கர், மூன்றாம் முத்து வீரப்ப நாயக்கர், மங்கம்மாள் விஜயரங்க சொக்கநாத நாயக்கர், மீனாட்சி அரசி (விஜயரங்க சொக்கநாதர் மனைவியார்).

—மதுரையை ஆண்ட நாயக்கர்கள் பட்டியல் இது.

அன்றைய வரலாற்றிலும் இன்றைய வரலாற்றிலும் தனக்கென தனிப்பெருமை கொண்டு திகழும் தண்டமிழ் வளர்ந்திட வழிகோலிய மதுரை மூதூரின் மாண்புகள் இன்னும் இன்னும் எத்தனையோ!

—கங்கைகொண்டான்

மது(ரை)ரச் செய்திகள்

★ சங்க காலத்தில் தமிழ் மொழியின் உறைவிடமாக விளங்கிய மதுரையில் - 1981-ஆம் ஆண்டு ஜனவரி(4-10)-யில், ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. உலகத் தமிழ் ஆய்வுக் கழகத்திற்கு, அப்போதிருந்த முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பெருநிதி வழங்கி அம்மாநாடு சிறப்புற நடைபெற வகை செய்தார்.

★ கி.பி. 19, 20-ஆம் நூற்றாண்டுகளில் மதுரையில் வாழ்ந்த தமிழறிஞர்களில் குறிப்பிடத் தக்கோர்; பாண்டித்துரைத் தேவர் (1867-1911), அரசஞ் சண்முகனார் (1868-1915), 'பரிதிமாற் கலைஞர்' எனப்பட்ட வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் (1870-1903), நாவலர் சோமசுந்தர பாரதியார் (1879-1959), ஜெகவீரபாண்டியனார் (1886-1967), சங்கரதாஸ் சுவாமிகள் (1867-1922), தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் (1899-1980), டாக்டர் மு. வரதராசனார் (1912-1974).

டாக்டர் ஜெ.ஜெயலலிதா 15 அம்ச குழந்தைகள் நலத்திட்டத் தொடக்க விழா

மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரை

குழந்தைகளின் நலத்திற்கான இந்த 15 அம்சத் திட்டத் தொடக்க விழா என்னைப் பொறுத்தவரையில் ஒரு உணர்ச்சிகரமான நிகழ்ச்சியாகும். தமிழ்நாட்டில் குழந்தை நலத்திற்காகத் தனித்த ஒரு திட்டத்தை வடிவமைக்க என்னால் தொடங்கப்பட்ட முயற்சியின் நிறைவே இவ்விழாவாகும்.

குழந்தைகளின் தேவைகள் முழுவதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்ற என்னுடைய நீண்ட நாளைய வேட்கைக்குத் திட்டவட்டமான வடிவம் தரவும், இன்றைய குழந்தை நாளைய தலைவராக உருவாகும் வண்ணம், அர்த்தமுள்ள வகையில் அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நமது உறுதிப் பாட்டை மீண்டும் வலியுறுத்தவும் இந்த விழா முனைகிறது.

இந்திய மரபின்படி குழந்தையும் தெய்வமும் ஒன்றே! குழந்தைப் பருவம் என்பது தெய்வீகம் பொருந்தியது. சமுதாயம் தனது சிந்தனையிலும், செயலிலும் முதலிடத்தை வழங்கி, குழந்தைக்கு அனைத்தையும் தந்து வந்திருக்கிறது. எடுத்துக்காட்டாக, குழந்தைகள், பெண்கள், முதியோர், பிணியாளர், உடல் நலிவுற்றோர் ஆகிய அனைவரும் ஒரே அளவில் சமுதாயத்தின் பாதுகாப்பைப் பெறுவதற்கு, சம நிலையில் வைக்கப்பட்டனர். அவ்வாறே, கருவுற்ற தாய்மார்களும், சிறு குழந்தைகளும் ஒரே மாதிரியாகக் கருதப்பட்டு, ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் திகழும் வகையில் ஒரே மாதிரியாகப் பராமரிக்கப்பட்டனர். இந்திய வழக்கப்படி, தாய் சேய் உறவு என்பதை அடிப்படையாகக் கொண்ட ஒரு பெரும் கட்டமைப்பின் ஒரு பகுதியாகவே குழந்தை அன்றும் கருதப்பட்டது; இன்றும் கருதப்படுகிறது. குழந்தை வளர்ச்சிக்கான ஏற்பாடுகளோ, அதன் துன்பங்களைப் போக்குவதற்கான வழிமுறைகளோ, இந்த அடிப்படைப் பிணைப்பைக் கருத்தில் கொண்டே அமைய வேண்டும். பாதுகாப்பு மையமானது படிப்படியாக, தாயிடமிருந்து குழந்தையை நோக்கி நகர்கின்ற வகையில் இது அமைய வேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக, குழந்தைப் பருவத்தைப் பற்றி இந்திய மரபில் காணப்படும் இந்த உயரிய தத்துவம் பெரும்பாலும் பகற்கனவாகவே இருந்திருக்கிறது. இந்தியச் சமூகத்தில் குழந்தையின் நடைமுறை அனுபவம் வேறுபட்டதாகவே இருந்து வந்துள்ளது. இந்தியக் கலாசாரத்தின் பெருங்குறை, பெண் குழந்தைகளைப் புறக்கணித்ததாகும். பெண் குழந்தைக்கெதிரான வன்முறையை வளர்ப்பதாகவே சிற்சில விஷயங்களில் இந்தப் போக்கு அமைந்துவிட்டது.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஒரு நுண்ணிய வஞ்சகமான வகையில், பெண் குழந்தை விஷயத்தில் நடு நிலைமை நீங்கித் தவறிழைப்பதாகவே இந்திய நடைமுறை இருந்து வந்திருக்கிறது. குழந்தைகளுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பும் சலுகைகளும் தங்கள் சொந்தக்

குழந்தைகளிடமிருந்து பொருளாதார, சமூக எதிர்பார்ப்புகளைக் கொண்ட இந்தியப் பெற்றோர்களது சுயநலத் தேவைகளின் மறைமுக வெளிப்பாடாகவே அமைந்து வந்துள்ளன.

பெற்றோர்களின் ஆதிக்கம், மூட நம்பிக்கையைத் தொட்டுவிடக்கூடிய சமுதாய நிர்ப்பந்தங்கள், பொருளாதாரத் தேவைகள் ஆகியவை குழந்தைகளின் பராமரிப்பு விஷயத்தில், நமது சிந்தாந்தத்திற்கும், செயல்பாட்டிற்கும் இடையே ஆழமான பிளவை உண்டாக்கி இருக்கின்றன. இன்று, சூழ்நிலை மாறி வருகின்றது என்பதில் ஐயமில்லை. குழந்தைகளின் சிக்கல்கள், அவற்றைத் தீர்ப்பதற்கான அவசியம், இளைஞர்களிடையே காணப்படும் படைப்புத்திறன், ஆக்க சக்தி, புத்திக் கூர்மையும் செயல் துடிப்பும் மிக்க குடிமக்களாக இளைஞர்கள் உருவாகும் வண்ணம் அவர்களுடைய படைப்பாற்றலையும் ஆக்க சக்தியையும் வளர்க்க வேண்டிய தேவை ஆகியவற்றைப் பொறுத்தவரையில் முன்னைக் காட்டிலும் தற்போது மிகுந்த விழிப்புணர்ச்சி காணப்படுகிறது. ஒரு குழந்தைக்காக நாம் செய்யும் செலவு ஒரு சமுதாயத்தின் உடல் நலத்தையும், திறனையும் தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை உணர்ந்து கொண்டதால், அண்மைக் காலத்தில், ஐ.நா. சபை, யூனிசெஃப், உலக வங்கி உள்ளிட்ட பன்னாட்டு அமைப்புகளும், இந்தியா உள்ளிட்ட பல்வேறு தேசங்களும், தமிழ்நாடு உள்ளிட்ட மாநில அரசுகளும், தலைசிறந்த நிபுணர்களும் குழந்தை வளர்ச்சியில் தங்கள் கவனத்தை அதிகரித்து வருவதைக் காண்கிறோம்.

இன்று, குழந்தையின் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில், நமது சிந்தனையிலும், நமது போக்கிலும், பெருமளவு தெளிவு உண்டாகியிருக்கின்றது. அனைத்து நாடுகளின் ஒருமித்த பார்வை குழந்தையின் மீது விழுந்திருப்பதால், வளர்ச்சிக்கான பாதை எங்கே அமைகிறது என்பதையும், இந்தப் பாதையை வடிவமைக்க எத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதையும், நம்மால் இப்போது காண முடிகிறது. இவ்வாறு நமது திட்டங்களும், செயல்பாடுகளும் இந்த வளர்ச்சிப்பாதையில் குழந்தை முன்னேறிச் செல்வதற்கு உறுதுணையாக இருக்கும்வண்ணம் வடிவமைக்கப்படுகின்றன.

அரைகுறையாகத் தீட்டப்பட்ட, அப்போதைய தேவைகளுக்காகத் தீட்டப்பட்ட திட்டங்களையும், பிரச்சினையின்

விளிம்பை மட்டும் தொடுகின்ற திட்டங்களையும், நாம் பின்பற்றுவதில் அர்த்தமில்லை என்பதே, கடந்த காலத்தில் குழந்தை நலத்திட்டத்தை செயல்படுத்திய அனுபவத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாகும். குழந்தைகளின் தேவைகள் பற்பல; பல்வேறு வகைப்பட்டவை என்பதையும், அவை ஒரு முழுமையான கோணத்தில் காணப்பட வேண்டியவை என்பதையும், குழந்தைகளுக்கான செயல் திட்டம் என்பது, குழந்தையின் உடல் வளர்ச்சி, உணர்வு வளர்ச்சி, மன வளர்ச்சி ஆகியவற்றில் ஒரு முழுமையான திருப்திகரமான விளைவை ஏற்படுத்த வேண்டும் என்பதையும், நாம் தற்போது அறிந்திருக்கிறோம். எல்லாக் குழந்தைகளும், உடலளவில் மட்டும் வளர்ச்சி அடையாமல் உள்ளத் துணிச்சல், நம்பிக்கை, திறன்கள், குன்றா மனவளம் குறையாத உணர்திறன் ஆகியவற்றிலும் வளர்ச்சி காண வேண்டும் என்பதே நம் முயற்சியாக இருக்கவேண்டும்.

சிவகாசியில் ஒரு பட்டாசுத் தொழிற்சாலையில் குழந்தைகள் பணிக்கு அமர்த்தப்பட்டதன் விளைவாக ஏற்பட்ட தவிர்க்கத்தக்க துயரச் சம்பவத்தை இரண்டாண்டுகளுக்கு முன்பாக நான் கண்டேன். நமது சமூக நலத்துறை அமைச்சரிடத்திலும், அதிகாரிகளிடத்திலும் இந்தத் துயரச் சம்பவத்திற்கான முழுப் பொறுப்பையும் மக்களும், மாநில அரசுமே ஏற்கவேண்டுமென்றும், எதிர்காலத்தில் மீண்டும் இது நிகழா வண்ணம் தடுக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் நான் கூறினேன்.

கடந்த ஓராண்டுக்காலமாக நமது சமூக நலத்துறை அமைச்சரும், மாநில அரசு அதிகாரிகளும் ஆழ்ந்த ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தத்தக்க தீர்க்கமான சிந்தனையில் ஈடுபட்டு வந்தார்கள். யுனிசெஃப் மற்றும் குழந்தை நலத்திட்டங்களை மேற்கொண்டு மற்ற பன்னாட்டு அமைப்புகளின் பிரதிநிதிகளுடைய ஆலோசனைகள், வழிகாட்டுதல்கள் ஆகியவற்றாலும் அவர்கள் பயன் பெற்றிருக்கிறார்கள். இதன் விளைவுதான் தமிழகக் குழந்தைகளுக்கான 15 அம்சத் திட்டம்.

நமது எதிர்காலத்தையும், நம்பிக்கைகளையும், கனவுகளையும், பிரதிபலிக்கின்ற குழந்தைகளுக்காகத் தமிழ்நாடு அரசு தன் கட்டுப்பாட்டைப் புதுப்பித்துக் கொள்வதில் நான் பெருமகிழ்வடைகிறேன். இவ்வாறு, இந்த ஈடுபாட்டைப் புதுப்பித்துக் கொள்வதென்பது வெற்று வார்த்தைகளின் வெளிப்பாடல்ல! தாய்சேய் நலம் பேணும் ஓர் உறுதியான 15 அம்சத் திட்டமாகும். இது மாநில அரசின் அனைத்துத் துறைகளுக்கான ஒரு 'செயல் திட்டமு'மாகும்.

குழந்தைகளுக்காக இப்படிப்பட்ட ஒரு விரிவான திட்டத்தை வகுக்கும் முதல் மாநிலம் நமது மாநிலம்தான். இந்த

நூற்றாண்டு நிறைவடைவதற்கு முன்பாகவே அதாவது இன்னும் ஏழு ஆண்டுகளுக்குள்ளாகவே நாம் அடைய வேண்டிய பெரும் இலக்குகள் மீது நம் பார்வையை பதித்து விட்டோம். 1995-ஆம் ஆண்டுக்குள் அடையவேண்டிய குறிப்பிட்ட இலக்குகளையும், 1998-ஆம் ஆண்டுக்குள் (அதாவது 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசிக்குள்) அடைய வேண்டிய குறிப்பிட்ட இலக்குகளையும் நாம் தீர்மானித்து விட்டோம். பல்வேறு இனங்களில் கி.பி. இரண்டாயிரத்துக்குள் அடைய வேண்டிய தேசிய இலக்குகளை நாம் ஏற்கெனவே அடைந்து விட்டோம். உதாரணமாக, 2000-ஆம் ஆண்டில் தேசிய குழந்தை இறப்பு விகிதம் ஆயிரத்துக்கு அறுபது என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாம் ஏற்கெனவே ஐம்பத்தேழு என்ற விகிதத்தை எட்டி விட்டோம். தேசிய பிறப்பு விகிதம் 1000-க்கு 21 என்று நிர்ணயிக்கப்பட்ட நிலையில், 20.7 என்ற விகிதத்தை நாம் ஏற்கெனவே அடைந்து விட்டோம். கி.பி.2000-இல் அடைய வேண்டிய தேசிய இறப்பு விகிதம் 1000-க்கு 9 ஆக உள்ளது. நமது மாநிலத்தில் தற்போதைய இறப்பு விகிதம் 8.8 ஆகும். பிரசவத்தில் இறக்கும் தாய்மார்களின் இறப்பு விகிதம் தேசிய அளவில் 1000-க்கு 2 ஆகும். நமது விகிதம் 1.1 ஆகும். அடிப்படைத் தடுப்பூசி போடுதலில், கி.பி. 2000-க்கான தேசியக் குறியீடு 85 சதவீதம். நாமோ ஏற்கெனவே 100 சதவீதம் இலக்கை எட்டிவிட்டோம். இத்தகைய பெரும்பாலான துறைகளில் தமிழக தன்னிகரற்ற முன்னோடியாக இருந்து வந்துள்ளது. எதிர்காலத்திலும், இந்தத் தனித்தன்மை நீடிக்கும்.

15 அம்சத் திட்டத்தில், குழந்தைத் தொழிலாளர் போன்ற சில அம்சங்கள் ஏதோ ஒருவகையில் என்னால் முன்னால் அறிவிக்கப்பட்டவை. ஒருங்கிணைந்த தாய்சேய் மேம்பாட்டுக்காக ஒட்டுமொத்தமாக, அனைத்து அம்சங்களையும் இணைத்து ஓர் ஒருங்கிணைப்புத் திட்டத்தை உருவாக்கத் தற்போது நான் முயற்சி மேற்கொண்டுள்ளேன். முதலாவதாக, குழந்தைகளின் உடல்நலம், சத்துணவு ஆகியவற்றில் நாம் கவனம் செலுத்த வேண்டும். பிறக்கும் குழந்தை 3 கிலோ எடையுடன் இருப்பது இறப்பு விகிதத்தைக் குறைத்து, குழந்தை உயிர் வாழும் வாய்ப்பைப் பெருமளவு அதிகப்படுத்தும் என்று நிபுணர்கள் என்னிடம் கூறியுள்ளனர். கொத்தடிமைத்தனமும், ஆபத்தான தொழிற்சாலைகளில் 12 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் கொடிய முறையும் ஒழிக்கப்படும். இது நமது பதினோராவது இலக்காகும்.

பெண் குழந்தைகளின் நிலை உயர பெண்குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் பரவலாக்கப்படுகிறது. இது நமது பன்னிரண்டாவது பயனுறு இலக்காகும். இதனால் ஆணுக்குப் பெண் இங்கே அனைத்திலும் சமம் என்று அரியதோர் திட்டம் கி.பி. இரண்டாயிரத்தில் நிறைவேற்றப்பட்டுவிடும். எனவே, நமது முதலாவது இலக்கு கி.பி. இரண்டாயிரத்தில் பிறக்கும் குழந்தைகளின் சராசரி பிறப்பு எடை மூன்று கிலோவாக இருக்க வேண்டும் என்பதேயாகும்.

இரண்டாவதாக, தடுப்பு ஊசி மூலம் தடுக்கப்படக்கூடிய போலியோ, டெட்டனஸ் போன்ற எல்லா வகையான நோய்களையும் அறவே ஒழித்துவிட்ட,

முதல் மாநிலமாக நமது மாநிலம் திகழும். சிசு மரணம் என்பது தற்போது நமது மாநிலத்தில் ஆயிரத்துக்கு 57 என்று இருக்கிறது. இது பிற மாநிலங்களோடு ஒப்பிடும்போது மிகவும் குறைவாகவே உள்ளது. அதே நேரத்தில் ஐந்து வயதுக் குட்பட்ட குழந்தைகளைப் பொருத்த வரை, வயிற்றுப்போக்கால் ஏற்படும் மரணத்தையும், நுரையீரல் சம்பந்தமான நோய்களால் ஏற்படும் மரணத்தையும் ஒழித்து சிசு மரணத்தை 30 சதவிகித மாகக் குறைக்கவும் ஏற்றதொரு திட்டத் தையும் நிறைவேற்றி வருகிறோம். இது நமது மூன்றாவது இலக்காகும்.

நான்காவது இலக்கு வைட்டமின்-ஏ சத்துக்குறைவு, அயோடின் சத்துக்குறைவு, இரத்த சோகை நோய் ஆகியவற்றால் அல்லற்படும் குழந்தைகள், தாய்மார்கள் ஆகியோரின் எண்ணிக்கையை 30 சதவிகிதமாகக் குறைப்பதாகும். தாய்ப் பால் ஊட்டுவதைக் குறைத்து, புட்டிப் பால் ஊட்டும் பழக்கத்தையே தாய் மார்கள் அதிகமாக மேற்கொண்டு வருகிறார்கள். புட்டிப்பாலை ஊட்டு வதால் ஏற்படும் தீமைகளையும், தாய்ப் பால் ஊட்டுவதால் ஏற்படும் நன்மை களையும் தாய்மாருக்கு எடுத்துரைத்து உணர்த்தவேண்டும். எல்லா மருத்துவ மனைகளும், மகப்பேறு நிலையங்களும் 'மழலையர் நட்பகம்' என்று போற்றப் படும் நிலையை இந்தியாவிலேயே முதன் முதலாக உருவாக்கிய மாநிலம் தமிழ்நாடு தான் என்ற அரியதோர் நிலையை உருவாக்குவது நமது ஆறாவது இலக்காகும்.

தாய், சேய் நலம் பேணுவதில் முக்கிய இடம்பெறுவது வயது. அதுபோலவே, குழந்தை பிறப்புகளுக்கு இடையில் தேவைப்படும் கால இடைவெளியும் முக்கியமானதாகும். எனவே, பெண் களின் திருமண வயதினை உயர்த்தியும், குழந்தை பிறப்புகளுக்கு இடையில் உள்ள கால இடைவெளியை அதிகப்படுத்தியும், இளம் வயதிலேயே திருமணம் செய் வதும், அடிக்கடி குழந்தை பெறுவதும் போன்ற அவல நிலைக்குள்ளாகி அடிமைப்பட்டுக்கிடக்கும் பெண்களை விடுவிப்பது நமது ஏழாவது இலக்காகும். இதன்மூலம் அல்லற்படுத்தும் அதிகப் படியான பிறப்பு விகிதத்தை ஆயிரத்துக்கு 15 என்ற அளவுக்கு குறைக்க முடியும் என்று நம்புகிறோம்.

குழந்தை பெறுவது, குழந்தையைப் பேணி வளர்ப்பது போன்றவற்றைப் பற்றிய செய்திகளையும், சிக்கல்களையும் அறிந்துகொள்ள கல்வி அறிவு மிகமிகத் தேவை. ஆண் குழந்தைக்கும், பெண் குழந்தைக்கும் இடையே உள்ள ஏற்றத் தாழ்வு இன்னும் அதிகமாகவே இருந்து வருகிறது.

நம்முடைய விடாமுயற்சியினால் ஆரம்பப் பள்ளிப்படிப்பை இடை யிலேயே நிறுத்திவிடுவோரின் எண் ணிக்கை 1991-ஆம் 19.3 சதவிகிதமாக, ஒரே சீராகக் குறைந்து வந்திருக்கிறது. சட்டத்தின் மூலமும், பிரச்சாரத்தின் மூலமும் எல்லோருக்கும் 5 ஆண்டு கட் டாயக் கல்வி வழங்குவதற்கு ஏற்பவும் கல்வியின் தரத்தை உயர்த்திடவும் தக்கதோர் திட்டத்தை முனைப்புடன் செயற்படுத்தியாக வேண்டும். இது நமது எட்டாவது இலக்காகும்.

பெண்களிடையே கல்வியறிவு பரவும்போது, பிறப்பு விகிதமும், சிசு இறப்பு விகிதமும் குறைந்து வருவதைக் கண்கூடாகக் காணமுடிகிறது. மேலும்,

படித்த ஒரு தாயால் தன் குழந்தைகள் அனைவருக்கும் கல்வியறிவு புகட்டிவிட முடியும். எனவே, கி.பி. இரண்டாயிரத் தில் தமிழ்நாட்டில் பெண்கல்வி நூறு சதவிகிதம் நிறைவேறிவிடும். படிக்காத பெண்களே இல்லை என்ற நிலை ஏற்படும். இதுவே நமது ஒன்பதாவது இலக்கு.

தாயின் உடல் நலத்தையும், சேயின் உடல் நலத்தையும் பேணிக்காத்திட பாதுகாக்கப்பட்ட குடிநீரும், சுகாதார வசதிகளும், கிராமங்களிலும், சிறுவர் வாழ்கிற பகுதிகளிலும் கிடைக்க எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். இது நமது பத்தாவது இலக்கு.

கொத்தடிமைத்தனமும், ஆபத்தான தொழிற்சாலைகளில் 12 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் கொடிய முறையும் ஒழிக்கப் படும். இது நமது பதினோராவது இலக் காகும்.

பெண் குழந்தைகளின் நிலை உயர பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் பரவலாக்கப்படுகிறது. இது நமது பன்னிரண்டாவது பயனுறு இலக்காகும். இதனால் ஆணுக்குப்பெண் இங்கே அனைத்திலும் சமம் என்று அரியதோர் திட்டம் கி.பி. இரண்டாயிரத்தில் நிறை வேற்றப்பட்டுவிடும்.

'பெண் சிசுவதை' என்னும் சமூகக் கொடுமையினைத் தமிழ்நாட்டிலிருந்து முற்றிலும் அகற்றிட சீரிய நடவடிக்கை களை அரசு எடுத்துவருவது நீங்களெல் லாம் அறிந்ததே. அந்த நடவடிக்கைகள் மேலும் தொடரும்; தொய்வின்றித் தொடரும். இது நமது பதின்மூன்றாவது இலக்கு.

கிராமங்களில் உள்ள ஊனமுற்ற குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளித்திட அனைத்து நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படும். குழந்தைகளுக்கு ஏற் படும் ஊனத்தை வராமல் தடுக்கவும், தொடக்கநிலையிலேயே அதனைக் கண்டு பிடிக்கவும் கி.பி. இரண்டாயிரத்தில் பாதிக்கப்பட்ட குழந்தைகள் அத்தனைப் பேருக்கும் மறுவாழ்வு அளித்திடவும், திட்டமிட்டுச் செயற்படுவதே பதினான் காவது இலக்காகும்.

இறுதியாக எனது இதயத்தின் அடித் தளத்திலிருந்து பீறிட்டுக் கிளம்பும் உணர்ச்சிமிக்க ஒன்றினை உங்களுக்குக் கூற விரும்புகிறேன். சின்னஞ்சிறு குழந்தைகள் இளம்வயதிலேயே இதய நோயால் மரணத்தைத் தழுவிடும் கொடு ரத்தை நான் கண்டிருக்கிறேன். இந் நோயினைக் கண்டறியவும், குணப் படுத்தவும் அறிவியல் தந்த அற்புதமான சிகிச்சைச் சாதனங்கள் இன்று நமது மாநிலத்திலேயே உள்ளன. எனவே, இருதய அறுவைச் சிகிச்சையை இலவச மாக அளித்து குழந்தைகளுக்கு ஏற்படும் இருதய நோய்களை அகற்றுவோம். குழந் தைகளுக்கான அறுவைச் சிகிச்சைக்குரிய செலவு முழுவதையும் அரசே ஏற்கும். இந்த அரிய சாதனையை முதன்முதலாக நிகழ்த்துவது நமது மாநிலம்தான்.

நமது பதினைந்து அம்சத்திட்டம் தக்க பாதுகாப்பும் வசதியும் இன்றி வாடும் குழந்தைகள் மீது தனி கவனம் செலுத்திச் செயற்படும். நான் விளக்கிக்காட்டியுள்ள இந்த இலக்குகள் அனைத்தையும் நிறை வேற்றி வெற்றிகாண்பதற்கு ஏற்றவாறு அரசின் நிர்வாக இயந்திரம் முழு மூச்சுடன் முடுக்கி விடப்படும். இந்த ஒருங்கிணைந்த திட்டத்தை பற்றிய அறிவிப்பினை இன்றுதான் வெளியிடு கிறேன் என்றாலும், இந்த இலக்குகளை அடைவதற்குரிய நடவடிக்கைகள் ஏற் கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இரண்டொரு பெண் குழந்தைகளோடு நிறுத்திக்கொண்டு கருத்தடை அறுவை செய்துகொள்ளும் தாய்மார்களுக்கு ஊக்கமளித்திடும் சிறந்த திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்துவது பற்றி மிகவும் ஆர்வத்துடன் ஆலோசித்துக் கொண்டிருக்கிறேன்.

ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் ரூ.2000 வைப்புநிதியும், அக்குழந்தை யின் படிப்புக்கு அவ்வப்போது ஒரு குறிப்பிட்ட தொகையும், பின்னர் அக் குழந்தை இருபது வயதினை அடைகின்ற போது ரூ.10,000 மொத்தத் தொகையும் வழங்கிட உதவிடும் சிறப்பு ஊக்கத் திட்டம் ஒன்றை ஏற்கெனவே அறிமுகப் படுத்தியுள்ளோம். இந்தத் திட்டத்தை மேலும் சிறப்பாகச் செயற்படுத்திடத் திட்டமிட்டு வருகிறேன். இப்போது உள்ள ரூ.2,000 என்ற வைப்புத் தொகை ரூ.4000 ஆகவும், ரூ.10,000 ஆக உள்ள மொத்தத் தொகை ரூ.20,000 ஆகவும் இன்று முதல் உயர்த்தப்படுகிறது என்பதை மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பெண் குழந்தையின் முதலாவது பிறந்த நாளில் வழங்கப்பட்டு வருகிற தொகை இப்போது ரூ.250 ஆகும். இனிமேல் ரூ.800 மதிப்புள்ள 2 கிராம் தங்க மோதிரம் ஒன்று வழங்கப்படும். வைப்புத் தொகையான ரூ.5000 பற்றிய விவரங் களைக்கொண்ட கணக்குப் புத்தகம் (பாஸ் புக்) ஒன்று திறக்கப்பட்டு, அவ் வப்போது எவ்வளவு பணம் எடுக்கப் படுகிறது, எடுக்கப்பட வேண்டும் என்ப தற்கான விவரக்குறிப்புகள் அப்புத்த கத்தில் பதிவு செய்யப்படும். பணத்தைப் பெறுவதற்கான அடையாள அட்டை வழங்கிடும் முறையும் அறிமுகப்படுத்தப் படும். இத்திட்டத்தின்கீழ் பயன்பெறத் தகுதியுள்ள தாய் 35 வயதுக்கு மேற்படாதவராக இருந்தாக வேண்டும் என்றிருந்தது. இந்த வயது வரம்பு 40 ஆக உயர்த்தப்படுகிறது. இப்படிப்பட்ட சீர்மிகு மாற்றங்களினால் அளவான குடும்பங்கள் அமைந்திடவும், சமுதாயத் தில் உயர்ந்த நிலையினை அடையவும், பெண் குழந்தையின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திடவும், இந்தப் பெண் குழந்தைகள் நலத்திட்டம் தக்க வழி வகுக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்த நிகழ்ச்சியில் எங்களோடு கலந்துகொண்டு சிறப்பித்துள்ள டேவிட்

க்ளாஸ் அவர்களுக்கும், அவருடைய தலைமையில அவருடன் பணியாற்ற வந்துள்ள தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தினை நிறைவேற்றிட உதவிடும் உலக வங்கிக் குழுவினருக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் நாட்டின் தனிச்சிறப்புமிக்க ஊட்டசத்துத் திட்டத்தினை நிறைவேற்றிட உதவி வருகின்ற உலக வங்கியின் பணிகளைப் பாராட்டுகிறேன். இன்று நாங்கள் அறிவித்துள்ள இச்சீரிய இலக்குகளை அடைந்திட நாங்கள் மேற்கொள்ளும் அரிய முயற்சிகளுக்கு உலக வங்கியின் உதவி தொடர்ந்து கிடைத்து வரும் என்று நம்புகிறோம்.

'யூனிசெஃப்' நிறுவனத்திற்கும், டாக்டர் ஜான்ரோட் அவர்களுக்கும் எனது இதயமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். 'யூனிசெஃப்' நிறுவனத்தின் அணுகுமுறையும், ஆழ்ந்த ஈடுபாடும், அளப்பரிய அன்பும் இந்த குழந்தைகள் நல ஒருங்கிணைப்புத் திட்டத்தினைப் பற்றி நான் சிந்திக்கவும், செயல் திட்டம் வகுக்கவும் எனக்குப் பெரிதும் ஊக்கமளித்து, உத்வேகத்தைத் தந்தது என்பதை நான் இங்கே தெரிவித்தாக வேண்டும்.

இந்த ஆண்டு ஆகஸ்ட் திங்களில் என்னைச் சந்தித்த 'யூனிசெஃப்' நிறுவனத்தின் இந்தியப் பிரதிநிதி டாக்டர் ஜான் ரோட் அவர்களின் உந்து தலினால்தான் நான் இந்தப் பெரும் பணியினை ஒரு சவாலாக ஏற்றுச் செய்ய முன்வந்துள்ளேன். இதனைப் பொருத்த வரை அவர்தான் எனக்கு உந்து சக்தி, ஊக்க சக்தி.

குழந்தைகளுக்காக அரசு தீட்டும் திட்டத்தில் தமிழ்நாடுதான் இந்தியாவில் முதல் இடத்தைப்பிடிக்க வேண்டும் என்பதே அந்தச் சவால் ஆகும். அந்தச் சவாலை நாம் சந்தித்து விட்டோம், சாதனையையும் படைத்துவிட்டோம் என்றே நான் நினைக்கிறேன். நமது இலக்குகளை அடைவதற்கான பணிகளை இதய சுத்தியுடனும், மிகுந்த ஈடுபாட்டுடனும் தொடங்கவேண்டும். குழந்தைகளின் நலம் காக்க நாம் மேற்கொண்ட இலட்சியப்பணி நமது சமுதாயத்தின் வளர்ச்சிக்கான அரியதோர் முதலீடாகும். நமது நாட்டின் ஆக்கமிக்க பெருமைக் குரிய குடிமக்களாக உருவாக்குவதற்காக தமிழகத்தின் குழந்தைகளுக்கு எல்லா வகையான வாய்ப்புகளும் வசதிகளும் வழங்கி உதவிட நாங்கள் மேற்கொள்ளும் எங்கள் முயற்சிகளுக்கு நீங்கள் அனை

வரும் ஆக்கமும் ஊக்கமும் தந்திட வேண்டும் என உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். மனித வளத்தினை வளர்க்கும் பணியினை குழந்தை வளர்ந்து வரும் ஒவ்வொரு வளர்ச்சிப்படியிலும் நாம் தொடங்கிச் செயற்படுத்தியாக வேண்டும். மனித வளத்தின் மேம்பாடு மழலைப் பருவத்திலேயே தொடங்கியாக வேண்டும்.

மறைந்த நம் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த உண்மையினை நன்றாக உணர்ந்திருந்தார். அதனாலே தான் தமிழ்நாட்டில் பள்ளிக் குழந்தைகளுக்காக இலவச நண்பகல் சத்துணவுத் திட்டத்தினை அவர் அறிமுகப்படுத்தி உறுதியுடன் நிறைவேற்றினார். இந்தியாவின் முதலாவது பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் கூறினார்கள்:

''ஆலைகள், இயந்திரங்கள், அரிய பொதுத் திட்டங்கள் என்று தேசிய வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டுகின்ற நாம் எப்படியோ மனிதனை மறந்து விட்டோம். எதுவுமே மனிதனைச் சார்ந்துதான் இயங்குகிறது என்பதை கருத்தில் கொள்ளத் தவறிவிட்டோம். ஆலைகள், கருவிகள் எல்லாம் முக்கிய மானவைதான். ஆனால், நிச்சயமாக இறுதியில் மனிதன்தான் முக்கியம். மனிதன் தான் முக்கியம் என்கிறபோது அவன் வளர்ந்துவிட்ட மனிதனாக முக்கியத்துவம் பெறுவதைவிடக் குழந்தையாக இருக்கும்போதுதான் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவனாக இருக்கிறான்''.

நம்முடைய குழந்தைகளுக்குத் தேவைப் படுவது எதுவோ, அவர்களுக்குச் சரியாகப் பயன்படுவது எதுவோ அவற்றை நாம் அவர்களுக்கு வழங்கிடுவோம்.

நமது தலைமைச் செயலர் திரு டி.வி. வெங்கட்ராமன் அவர்கள் ராபர்ட் பிராஸ்ட்டின் கவிதை வரிகளை மேற்கோள் காட்டத் தொடங்கினார்.

அந்த மேற்கோள் கவிதையை நான் நிறைவு செய்ய விரும்புகிறேன்.

கண்ணுக்கினிய காரிருள் சூழ்ந்த
அடர்ந்த வனாந்தரம் கண்ணெதிரில்!
காப்பாற்ற வேண்டிய உறுதிமொழிகள்
கைவசம் உள்ளன என்னிடத்தில்!
கண்களை மூடும் காலம் வரும்முன்
கடக்க வேண்டும் பெருந்தொலைவு
கண்களை மூடும் காலம் வரும் முன்
நான் கடக்க வேண்டும் பெருந்தொலைவு

பண்டித ஜவகர்லால் நேரு அவர்களுக்கும் மிகப்பிடித்தமான மேற்கோள்களில் ஒன்றாகும் இது. எனவே, இன்று எனக்கு மட்டுமல்லாமல் குழந்தை நலத்திற்கான 15 அம்சத் திட்டத்தை நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டிருக்கும் தமிழக அரசின் அனைத்து அலுவலர்களுக்கும் இந்த மேற்கோள் பொருந்துவதாகும். எனவே உங்கள் அனைவருக்கும் இந்த மேற்கோள் பொருந்துவதாகும். எனவே உங்கள் அனைவருக்கும் கூறிக்கொள்ள விரும்புவது இதுதான். ''கண்ணுறங்கச் செல்லுமுன் நாம் கடக்க வேண்டிய தொலைவுகளும், ஆற்ற வேண்டிய கடமைகளும் நிறைய உள்ளன. தமிழகக் குழந்தைகளுக்கு நான் எடுத்துக்கொள்ளும் உறுதிமொழி இதுதான். இன்று எங்களுக்கு முன் நாங்களே வைத்திருக்கும் இந்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முன்னால் நாங்கள் இமை மூடமாட்டோம். இந்த இலக்குகளை அடைவதற்கு தமிழக மக்கள் அனைவரது ஒத்துழைப்பையும் வேண்டுகிறேன்.

நன்றி.

டாக்டர் ஜெ. ஜெயலலிதா 15 அம்சக் குழந்தைகள் நலத்திட்டம் –தொடக்க விழா

தமிழ்நாட்டில் ஆரோக்கியமான குழந்தைகள் சமுதாயத்தை உருவாக்கும் வகையில் ஒரு புதுமையான திட்டம் மாண்புமிகு முதல்வர் அவர்களின் திருப் பெயரில் உருவாக்கப்பட்டது. ''டாக்டர் ஜெ.ஜெயலலிதா 15 அம்சக் குழந்தைகள் நலத்திட்டம்'' என்ற இந்த மாபெரும் திட்டத்தின் தொடக்க விழா 11.11.93 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் திட்ட அறிக்கையை வெளியிட்டு இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார். அவரிடமிருந்து இந்தத் திட்ட அறிக்கையை யூனிசெப் நிறுவனத்தின் இந்தியப் பிரதிநிதி ஜான் ரோடே பெற்றுக் கொண்டார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி ஆர். இந்திரகுமாரி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு க. பொன்னுசாமி ஆகியோர் விழாவில் கலந்துகொண்டனர்.

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் வரவேற்புப் பேசுகையில், ''குழல் இனிது யாழ் இனிது என்ப தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்'' என்ற வள்ளுவரின் குறளுக்கேற்ப இன்று கோடிக்கணக்கான குழந்தைகளுக்கு அன்பு, ஆதரவு தரும் வகையில், தாயாகப் பெரும் பணியாற்றி இந்தியத் துணைக்கண்டத்திலேயே ஒரு முன்னோடியாக புதிய திட்டத்தை நமது முதல்வர் புரட்சித்தலைவி ஏற்படுத்தியுள்ளார்'' என்றார்.

யூனிசெப் நிறுவனத்தின் இந்தியப் பிரதிநிதி டாக்டர் ஜான் ரோடே, தலைமைச் செயலர் திரு டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப., ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

உலக வங்கி அதிகாரி திரு டேவிட் கிளாஸ் அவர்கள் பேசுகையில் ''இந்தத் திட்டத்துக்கு உதவ வழியுள்ளதா என்பதை உலக வங்கி தமிழக அதிகாரிகளுடன் கலந்து ஆலோசிக்கும்'' என்றார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு க. பொன்னுசாமி அவர்கள் பேசுகையில், ''சுதந்திரம் என்றால் அண்ணல் காந்தி, தமிழ்நாடு பெயர் மாற்றம் என்றால் அறிஞர் அண்ணா, சத்துணவு என்றால் புரட்சித்தலைவர் என்று நினைவு வருவதுபோல குழந்தைகள் நலத்திட்டம் என்றால் புரட்சித்தலைவி அவர்களின் பெயர் சரித்திரத்தில் நிலைத்து நிற்கும்'' என்றார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள் பேசுகையில், ''இந்த மாபெரும் திட்டத்தை அரசு எந்த முறையில் வெளியிட்டாலும் பொதுமக்களின் ஒத்துழைப்பு சரியாகக் கிடைக்கவில்லையென்றால் இத்திட்டம் வெற்றி பெற இயலாது. இந்தத் திட்டத்தை இந்தியத் துணைக் கண்டத்திலேயே செயல்படுத்திய முதல் மாநிலம் தமிழகமாகத் தான் இருக்கும்'' என்றார்.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் சேடபட்டி திரு இரா. முத்தையா அவர்கள் தலைமை யேற்றுப் பேசுகையில், ''இந்தியத் துணைக் கண்டத்திலேயே முன்னோடியான பல திட்டங்களைக் கொண்டு வந்த புரட்சித்தலைவியின் இத்திட்டமும் உலகத்திலேயே ஒரு மாபெரும் முன்னோடித் திட்டமாக இருக்கும். இந்தத் திட்டம் உலக நாடுகளில் ஒரு முன்னோடித் திட்டம் என்பதோடு மட்டுமல்ல, நமது புரட்சித்தலைவி அவர்களும் ஒரு முன்னோடி முதலமைச்சர் என்பது உண்மை'' என்றார்.

விழாவில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் யூனிசெப் பிரதிநிதி டாக்டர் ஜான் ரோடே அவர்களுக்கும், உலக வங்கி அதிகாரி திரு டேவிட் கிளாஸ் அவர்களுக்கும் நினைவுப் பரிசு வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி ஆர். இந்திரகுமாரி அவர்கள், நினைவுப் பரிசு வழங்கினார். மேலும் திருக்கோயில் புனரமைப்பு நிதிக்காக ரூ.1,50,000 மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வழங்கினார்.

சமூகநலத்துறையில் சிறந்து பணியாற்றியவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் விருது வழங்கினார்.

முன்னதாக விழாவினையொட்டி, சென்னை சேப்பாக்கத்தில் உள்ள விருந்தினர் மாளிகையிலிருந்து சாலையின் இருபுறங்களிலும், மாண்புமிகு முதல்வர் அவர்களை வரவேற்கும் வகையில் மாணவ மாணவியர்கள் வண்ணச் சீருடையில் அணிவகுத்து நின்றனர். சமூகநலத்துறைச் செயலர் திரு ஆர். கிருபாகரன், இ.ஆ.ப., நன்றி கூறினார்.

விழாவில், அமைச்சர் பெருமக்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத்தலைவர்கள் மற்றும் அயல்நாட்டுப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

—நிகழ்ச்சித் தொகுப்பு: கரு. சண்முகசுந்தரம்.

துணைப்பதிவாளர் (வீட்டுவசதி) அலுவலகம்
திருநெல்வேலி

கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் எல்லா வகுவாய்ப் பகுதிகளிலும் கிராமங்களிலும், நகரங்களிலும் சொந்த வீடு கட்ட உதவுகின்றன.

கூட்டுறவுச்சங்கத்தை நாடுவீர்!

குடும்பத்திற்கு ஒரு வீடு கட்டுவீர்!

இவண்;

1. 0.1947 திருநெல்வேலி பாளையங்கோட்டை கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், பைபாஸ் சாலை, திருநெல்வேலி-3.
2. 0.2058 பேட்டை கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், வீரபாகு நகர், பேட்டை.
3. 0.2158 மகாராசநகர் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், மகாராசநகர், திருநெல்வேலி-11.
4. 0.1935 அம்பாசமுத்திரம் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், அம்பாசமுத்திரம்.
5. 0.1167 பாளையங்கோட்டை கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், பெருமாள்புரம், திருநெல்வேலி.
6. டிஎன்வி எச்எஸ்ஜி.39 திருநெல்வேலி வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், திருநெல்வேலி டவுன்.
7. டிஎன்வி எச்எஸ்ஜி.25 பாளையங்கோட்டை வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், திருநெல்வேலி.
8. டிஎன்வி எச்எஸ்ஜி.42 நான்குநேரி வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், நான்குநேரி.
9. டிஎன்வி எச்எஸ்ஜி.43 இராமநாதபுரம் வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், இராமநாதபுரம்.
10. டிஎன்வி எச்எஸ்ஜி.40 தென்காசி வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், தென்காசி
11. டிஎன்வி எச்எஸ்ஜி.41 செங்கோட்டை வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், செங்கோட்டை.
12. டிஎன்வி எச்எஸ்ஜி.20 அம்பாசமுத்திரம் வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், அம்பாசமுத்திரம்.
13. டிஎன்வி எச்எஸ்ஜி.44 சங்கரன்கோவில் வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், சங்கரன்கோவில்.
14. டிஎன்வி எச்எஸ்ஜி.28 வீரகேரளம்புதூர் வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், வீரகேரளம்புதூர்.
15. டிஎன்வி எச்எஸ்ஜி.45 சிவகிரி வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், சிவகிரி.

தமிழ் வளர்த்த பெரியார்:

திருமுருக கிருபானந்த வாரியார்

சென்னை சிந்தாதிரிப்பேட்டை, சிங்கன்னச் செட்டித் தெருவிலுள்ள 'திருப்புகழமிர்தம்' இல்லத்திலுள் நுழைகிறோம்.

கற்பூரம் சந்தனம் மலர்களெல்லாம் இணைந்து மணம் காற்றிலே மெல்ல மிதந்து வருகின்றது. அந்த மணத்தினூடே வெண்கலக் குரலொலி, இன்பத் தேனாய் வந்து பாய்கின்றது காதினிலே. அருகே அன்பர்கள் அடிபணிய, அருளே உருவாய்க் காட்சியளிக்கின்றது ஒரு தெய்விகத் தோற்றம்.

அகன்ற மார்பிலே அணி மணிகள் தவழ, அகன்ற நெற்றியிலே திருநீறும் குங்குமமும் விளங்க, அழகிய கண்களிலே அருளொளி மலர அற்புதத் தோற்றத்தையே காண்கிறோம் அங்கே!

ஆம். தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்து, திருமுருகன் பெருமையே நாளெல்லாம் பேசி நாத்தழும்பேறிய நாவலர் நற்றமிழ்வாணர் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களே அவர்.

வாரியார், வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம், காங்கேயநல்லூரில் 25.8.1906-இல் பிறந்தார். பெற்றோர் மல்லய்யதாச பாகவதர் - கனகவல்லி.

'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்பதாலோ என்னவோ, வாரியார் தம் தந்தையையே குருவாக ஏற்றார்போலும்! ஆம். வாரியார் பள்ளிக்குச் சென்றதில்லை. ஆனால், பிற்காலத்தில் சொற்பொழிவு மேடையையே அவர் பள்ளி ஆக்கிய வரலாறு உண்டே!

தமது மூன்றாவது வயதிலே அவர் தம் தந்தையாரிடம் தமிழ், சமஸ்கிருத இலக்கியங்களைக் கற்றார். சென்னை யானைகவுனிப் பகுதியில் வாழ்ந்த, பிரம்மஸ்ரீ தென்மடம் வரதாச்சாரியாரிடம் வீணை பயின்றார்.

எட்டு வயது எட்டும்போதே வாரியார், வெண்பா பாடி அனைவரையும் தன்பால் ஈர்த்தார். இளம் வயதிலேயே இலக்கிய ஆர்வம் வளர்ந்தது. அத்துடன் இறையுணர்வும் இழைத்தது. வைகறைத் துயிலெழுந்து நீராடி இசைப்பயிற்சியில் ஈடுபடுவார். பிறகு நன்னூல் முதலான இலக்கணங்களைக் கற்பார். பிற்பகலில் தேவாரம், திருப்புகழ் முதலானவற்றை எழுதி, மனப்பாடம் செய்வார்.

தமது பன்னிரண்டாம் வயதில், திருப்புகழ் முதலான ஆயிரம் பாடல்களை மனப்பாடம் செய்து, அப்படியே ஒப்பிவிக்கவும் செய்த அற்புதத்தை நிகழ்த்திக் காட்டினார்.

'மேடைப் பிரசங்கம்' என்பது பிற்காலத்தில் தோன்றிய வித்தையல்ல வாரியாரைப் பொறுத்தமட்டில், அது பச்சிளம் பாலகனாய் இருந்த பருவத்திலேயே கைவந்த கலையாயிற்று. 'குலவித்தை கல்லாமல் பாகம்படும்' என்பதற்கு வாரியாரின் இளமைக் கால நிகழ்ச்சிகள் சான்றாக அமைந்தன.

வாரியாரின் முதல் மேடைப் பிரசங்கம் - சொற்பொழிவு எப்போது நிகழ்ந்திருக்கும்? இருபது வயதிலா? அல்லது முப்பது வயதிலா? இல்லை, பன்னிரண்டு வயதில்! எப்படி? அது ஒரு கதை!

வாரியாரின் தந்தையார், 'மேடைப் பிரசங்கம்' செய்வதில் வல்லவர். கேட்பார் பிணிக்கும் கருத்துக்களைக் கூறும் ஆற்றல் வாய்ந்தவர். அன்னார் ஒரு சமயம் நோய்வாய்ப்பட்டார். அதனால் சொற்பொழிவாற்ற முடியாமல் போய்விட்டது. உடனே தன் மகன் வாரியாரை அழைத்து, திருப்புகழ் பெருமை குறித்துச் சொற்பொழிவாற்றி வரும்படிப் பணித்தார். வாரியார் தம் தந்தை இட்ட கட்டளையைத் தலைமேல் தாங்கி மேடை நோக்கி விரைந்தார். திருப்புகழ் அமிர்தத்தை வாரி வாரி வழங்கினார். அன்பர்கள் அனைவரும் அதன் இனிமையிலே மயங்கினர்; தனிமையிலே நின்று திறம் காட்டிய அற்புதம் கண்டு வியந்தனர்.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பதை வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகி வந்தார் வாரியார்.

தந்தை உயிரோடிருக்கும்போதே அவருக்குச் சமாதிக் கோயில் கட்டினார். 1950-ஆம் ஆண்டு வாரியாரின் தந்தை காலமானார். அவரது உடல் அந்தச் சமாதிக் கோயிலிலே அடக்கம் செய்யப்பட்டது.

வாரியாரின் தாயார் 1977-இல் காலமானார். அப்போது அவருக்கு வயது 99. அவரது உடலும், ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டபடி, தந்தையார் அடக்கம் செய்யப்பட்ட சமாதிக் கோயிலிலேயே அடக்கம் செய்யப்பட்டது.

வாரியார் தமது 19-வது வயதில் தன் தாய் மாமன் மகள், அமிர்தலட்சுமியை மணந்தார். வாரியார் தம்பதிகளுக்கு மகப்பேறு இல்லை. 1986-இல் வாரியாரின் துணைவியார் காலமானார்.

வாரியார் சுவாமிகள் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு!

— மாண்புமிகு முதல்வர் இரங்கல் செய்தி:

"திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், இலண்டனிலிருந்து சென்னை திரும்பும்போது, விமானத்திலேயே திடீர் மரணமடைந்து இறைவன் திருவடியைச் சேர்ந்தார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டதும் நான் மிகுந்த அதிர்ச்சியும் துயரமும் அடைந்தேன்.

"திருமுருக கிருபானந்த வாரியார் இலண்டனில் நோய்வாய்ப்பட்டு, சிகிச்சை பெற்று வந்தபோது, அவர் பூரண குணமடைய, தமிழக அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டது.

"முருகப் பெருமானின் பெருமைகளைப் பரப்புவதையே தனது வாழ் நாளில் இலட்சியமாகக் கொண்டு, நம்மிடையே வாழ்ந்து வந்த திரு வாரியார் சுவாமிகள் அவர்களின் மறைவு, ஆன்மீகத்துறைக்கு மட்டுமன்றி, தமிழ் மொழிக்கும், தமிழ் இசைக்கும் ஏற்பட்டுள்ள ஈடு செய்ய முடியாத பேரிழப்பு ஆகும்.

"திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் அவர்களின் மறைவினால் வாடும் அவரது குடும்பத்தார் மற்றும் அவர் மீது அன்பு கொண்ட பக்தர்கள் அனைவருக்கும், எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

திருமுருக கிருபானந்த வாரியார் மறைவுக்கு தமிழகச் சட்டமன்றப் பேரவையில் இரங்கல் தீர்மானம்

சட்டப் பேரவையின் சிறப்புக் கூட்டம் 9.11.93 அன்று காலை கூடியது, கூட்டம் தொடங்கியதும், திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் மறைவு குறித்து இரங்கல் தீர்மானம்ஒன்றை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் கொண்டு வந்தார்.

இரங்கல் தீர்மானத்தில் அவர் கூறியிருப்பதாவது:

"பிறந்த மண்ணுக்குப் பெருமை பல சேர்த்து உலக நாடுகளில் ஆன்மீக மழையைப் பொழிந்து அளப்பரும் தமிழ்ப் பெரும் தொண்டராக விளங்கி நல்ல பண்பாட்டுத் தமிழை நாளும் வளர்த்து தமிழகத்திலும் உலக நாடுகளிலும் ஆன்மீக நெறிகளின் தீர்ப்புகளைப் பெரும் மழையாகப் பொழிந்து வந்த திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் தமது 87-வது வயதில் 7.11.93 அன்று மறைவுற்ற துக்க செய்தி தமிழகத்திற்கும் தமிழ் அன்பர்கள் அனைவருக்கும் ஆற்றொணாப் பெருந் துயரத்தை அளிப்பதாகும்.

"அவர் ஈடும் எடுப்புமற்ற தமிழ்ப் பேரறிஞராய், சிறந்த இசை வல்லுநராய் அரிய பல நன்னெறிக்கலைகள் மூலம் இசை சொற்பொழிவு ஆற்றும் கலைஞராய், திருப்பணிகள் பல புரிந்த சமயச் சீலராய், அறப்பணிகள் பலவற்றையும் செய்த அருஞ்செம்மலாய், எல்லாத் தரப்பு மக்களாலும் போற்றிப்பாராட்டி வரவேற்கப்படும் சான்றோராய்த் திகழ்ந்தவர் ஆவார்.

"அவரது இழப்பு தமிழ் உலகத்திற்கும் ஆன்மீக உலகத்திற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவர் சென்ற 70 ஆண்டுக் காலமாகத் தன்னலம் கருதாமல் பொதுத் தொண்டாற்றிப் பெரும் புகழ் கொண்ட பெருமான் ஆவார். அவர் மதிப்புமிகு டாக்டர், கலைமாமணி, இசைப்பேரறிஞர், தமிழ்க் கொண்டல் போன்ற பட்டங்கள் பல அளிக்கப் பெற்றுப் பாராட்டப் பெற்றவர் ஆவார்.

"அவர் ஆற்றிய பெருந் தொண்டுகளுக்குத் தமிழ்கூறும் நல்லுலகம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. அன்னார் மறைவு குறித்து இச் சட்டமன்றப் பேரவை ஆழ்ந்த கவலையையும், மிகுந்த வருத்தத்தையும் கொள்வதோடு, அன்னாரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கும் தமிழ் அன்பர்களுக்கும், தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது".

இயற்கை எய்திய பெருமகனார்க்கு அஞ்சலி செலுத்தும் வகையில், அவை உறுப்பினர்கள் அனைவரும் 2 மணித்துளிகள் எழுந்து நின்று மவுன அஞ்சலி செலுத்தினார்கள்.

தந்தையே எல்லா வகையிலும் இவருக்கு வழிகாட்டியாக இருந்திருக்கிறார். இவர் மிகச் சிறந்த முருக பக்தராக விளங்கியதற்கு காரணமே, வாரியாரின் தந்தை முருக பக்தராக விளங்கியதுதான்; இவர் பல கோயில்களுக்குத் திருப்பணிகள் செய் திருக்கிறார். தந்தை வழியொட்டி பிற்காலத்தில் வாரியாரும் பல கோயில் களுக்குத் திருப்பணிகள் செய்து வந்ததைக் குறிப்பிட வேண்டும். குறிப்பாக, வயலூர் முருகனிடம் வாரியார் தம் மனத்தைப் பறிகொடுத்திருந்தார். அந்த முருகன் மீது அளவு கடந்த பக்தி கொண்டிருந்தார் அவர்.

வயலூர் முருகன் திருவுரு வச்சிலையை பஞ்சலோகத்தில் செய்து, சிறிய பெட்டியில் எங்கு சென்றாலும் எடுத்துச் செல்லும் வழக்கமாகக் கொண்டிருந்தார் அவர். நாள்தோறும் அதற்கு வழிபாடு செய்யத் தவறமாட்டார்.

அவர் எல்லா மதத்தாரையும் மதித்தார் என்பதற்கு அவரது இளமைக்கால நிகழ்வுகளே சான்றுகளாக இருக்கின்றன.

வாரியாருக்கு அப்போது பன்னிரண்டு வயதிருக்கும், மேல்விஷாரத்திலுள்ள ஒரு மௌலவியிடம் குரானைத் தமிழில் எழுதி மனப்பாடம் செய்தாராம். அது மட்டுமல்ல, பைபிளுக்கு விளக்கவுரை சொல்லி, போப்பாண்டவரால் பாராட்டும் பெற்றுள்ளார்.

திருப்புகழுக்கு உரை எழுதியுள்ளார். 'திருப்புகழமிர்தம்' என்னும் திங்களிதழின் ஆசிரியராக 37 ஆண்டுகள் பணியாற்றினார். இருநூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை அவர் இயற்றியுள்ளார்.

வாரியார் சமயப்பணியோடு, சமுதாயப் பணியையும் மேற்கொண்டார். அருணகிரிநாதர் அறக்கட்டளை அமைத்துத் திருப்பணிகள் பலவற்றை மேற்கொண்டார். ஏழை எளிய சிறுவர்கள் கல்வி கற்க உதவிகள் புரிந்திருக்கிறார். திருச்சி திருப்பராய்த் துறையில் 'இராம கிருஷ்ண குடில்' எனும் கல்வி நிறுவனத்தைத் தொடங்கி அங்கு ஆதரவற்ற சிறுவர்களுக்குத் தொழிற்கல்வி கற்பிக்க வழிவகுத்தார்.

ஒருசமயம் தாய் கனகவல்லி அம்மையார் வாரியாரிடம் "நீ பெரியவனாக வளர்ந்ததும் ஏழைகளுக்கு அன்னதானம் செய்ய வேண்டும்" என்று கேட்டுக் கொண்டாராம் அதன்படி காங்கேய நல்லூரில் திருக்குறள் சபை நிறுவி நாள்தோறும் ஏழைகளுக்கு உணவு வழங்கி வந்தார். 'திருமுருக கிருபானந்த வாரியார் பொது நல நிதி' ஒன்றை நிறுவி ஏழை மாணவர்களுக்கு உதவி வந்தார்.

வாரியாரின் பாதம் படாத இடமே இல்லை. பட்டி தொட்டிகளில் நாடு நகரங்களில் அவரது குரல் ஒலித்தது. வாரியார் வருகிறார் என்றால் அங்கு வாராத மக்களே இல்லை எனலாம். சங்கத் தமிழை சிங்கமென முழங்கியவர். பாமர மக்களும் உணர்ந்து கொள்ளும் வகையிலே மனமுருகபாடியவர். அவர் எல்லாத் திறத்தாரின் தோழமையையும் சம்பாதித்துக் கொண்டார் என்பதற்கு அவர் மறைவின் போது பல மதத்தவரும் அஞ்சலி செலுத்தியதிலிருந்து நாம் தெரிந்துகொள்ளலாம்.

வாரியார் ஒரு தமிழ்க்கடல். அவரது மனம் எனும் ஆழ்கடலில் நல்ல கருத்துக்கள் என்னும் முத்துக்கள் ஒளிவீசித் திகழ்ந்தன. அந்த நல் முத்துக்களை அவர் நாளெல்லாம் உதிர்த்தார். சிந்திக்கவும் சிரிக்கவுமான செறிவான கருத்துக்கள் அவரது உரைகளிலே இயல்பாக வந்து விழுந்தன.

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களைப் 'பொன்மனச் செம்மல்' என்று வழங்கி மகிழ்ந்தவர் வாரியார் என்பது குறிப்பிடத்தக்கது.

வாரியார் வாரி வாரி வழங்கிய தமிழ் வள்ளலாக விளங்கினார். அள்ள அள்ளக் குறையாத அற்பச் சிந்தனை ஊற்றாக அவர் உள்ளம் திகழ்ந்தது. வாரியார் ஆற்றிய தன்னேரில்லாத் தமிழ்ப் பணியைப் போற்றிப் பாராட்டி பல இலக்கிய அமைப்புகள் அவருக்கு விருதுகள் வழங்கிச் சிறப்பித்தன.

திருப்புகழ் ஜோதி, அருள்மொழி அரசு இசைப் பேரறிஞர், திருப்பணிச் சக்கரவர்த்தி, திருப்பணிச்சரபம், அமுத மொழிக் கொண்டல், சொற்பொழிவு வள்ளல் முதலான விருதுகள் வாரியாரை வந்தடைந்தன.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்குக் 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பித்தது.

வாரியாரின் தமிழ்த் தொண்டைப் பாராட்டி, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கிப் பெருமைப்படுத்தியது.

வாரியார் வாழ்வு, தமிழ் வாழ்வு; தமிழுக்காகவே இறுதிநாள் வரையும் பணியாற்றியவர். ஓய்வு என்பது அவரைப் பொறுத்தவரையில் இல்லை. அவர் எண்பது வயதைக் கடந்த நிலையிலும், இருபது வயது இளைஞராகவே இயங்கி வந்தார். அதற்குக் காரணம் என்ன?

அதற்கு அவரே ஒரு பத்திரிகையின் பேட்டியில் கூறிய பதில்:

"நான் சுறுசுறுப்பாக இருப்பதற்கு முதல் காரணம், மனம். என் மனம் எப்போதும் முருகனையே சேவித்து வருவதால், அது இளமையுடனே இருக்கிறது. அதற்கு அடுத்த காரணம், உணவுக் கட்டுப்பாடு, எண்ணெய்ப் பதார்த்தங்கள், பால், நெய், கிழங்கு வகைகளை அறவே விலக்கி விடுகிறேன். காலையில் எதுவும் சாப்பிடுவது கிடையாது. மதியம் கொஞ்சம் உணவு. இரவு கோதுமைக் கஞ்சி. இப்படி உணவு விஷயத்தில் கட்டுப்பாடாக இருப்பதால், இதுவரை உடம்புக்கு முடியவில்லை. என்று படுத்ததே கிடையாது. அதே போல, இதுவரை நான் காலையில் குளிக்காமல் இருந்ததும் கிடையாது. குளித்து முடிந்து முருகனுக்குப் பூசை செய்த பின் பணிகளில் ஈடுபடுவதால், சுறுசுறுப்பு என் கூடவே இருக்கிறது".

இந்த ரகசியத்தை நாமெல்லாம் கடைப்பிடிக்கலாமே!

வாரியார் உடல் தளர்ந்தாலும் உள்ளம் தளராமல் உழைத்து வந்தார். உலகமெலாம் சுற்றி வந்தார். தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகையில் அவர் இவ்வாண்டு அக்டோபர் திங்கள் 19-ஆம் நாள் இலண்டன் மாநகர் சென்றார். அங்கு அவர் உடல் நலமின்றி மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார்.

நவம்பர் திங்கள் 7-ஆம் நாள் தாயகம் திரும்பி வருகிறபோது, விமானத்திலேயே அவரது உயிர் பிரிந்தது என்கிற செய்தி, செய்தியாக வந்தது. நாளெல்லாம் செந்தமிழ்த் தேனை காதில் பாய்ச்சிய வாரியாரின் மறைவுச் செய்தி, செந்தேளாகக் கொட்டியது. தமிழுலகம் அழுதது. ஆம். ஆன்மீக வானில் ஒளிமிகுந்த தாரகை ஒன்று விழுந்தது!

அருட்கடலாய், அஞ்ஞான இருளை ஆதவன்போல் போக்கி மெய்ஞ்ஞான திருவிளக்காய் திகழ்ந்த திருவுரு மறைந்தது!

அருணகிரி தமிழை அமுதாய் வளர்த்து கருணை மழை பொழிந்த கார்மேகம் மறைந்தது! அவர் மறைந்தாலும், அவர் அருளிய அறிவுரைகள் - அறவுரைகள் எல்லாம் அப்படியே நம் மனத்தில் நிலைகொண்டுள்ளன. அவை படிப்பினையாகவும், அவரது பெருவாழ்வு நமக்கெல்லாம் பாடமாகவும் விளங்கும் என்பது உறுதி.

— பி.வி. கிரி

40-வது இந்தியக் கூட்டுறவு வார விழா!

உழவர் நண்பன் பாகியம்

மு. கிருஷ்ணசாமி
சிறப்பு அலுவலர்
தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்

இந்தியப் பொருளாதாரம் வேளாண்மையையே பெரிதும் சார்ந்துள்ளது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. கடந்த இருபது ஆண்டுகளில் நமது தொழில் துறை வெகுவாக பலமிப் பெருகியிருப்பினும் வேளாண்மையின் மேன்மை என்றும் போல பசுமை படர்ந்ததாகவே இருக்கிறது. இச்சூழலில் மற்றைய தொழில்கள் போன்றே விவசாயச் சார்பு தொழில்களும் வளர்ந்துள்ளன. பொதுத்துறை - தனியார் துறை ஆகியவற்றின் வாயிலாக விவசாய சார்புத் தொழில் பெருக்கங்கள் நமது பொருளாதாரத்தை வளர்ச்சியுறச் செய்துள்ளன. எனினும் உற்பத்திப் பொருட்கள் - குறிப்பாக விளைபொருட்கள் நுகர்பொருளாக மாற்றப் பட்டு மக்களிடையே விநியோகம் செய்வதில் தீமை பயக்கும் போட்டி, செயற்கைப் பற்றாமையை உண்டாக்கல், பதுக்கல், உரிய விலை கொடுக்காது விளைவித்தவனைச் சுரண்டல், அநியாய விலை கோரி நுகர்வோரைச் சுரண்டல் முதலிய கொடுமை கண்டே கூட்டுறவு இயக்கம் அதிலும் குறிப்பாக கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மெல்ல மெல்ல தோற்றுவிக்கப்பெற்றன.

இச்சங்கங்கள் இடைத்தரகரெனும் அரக்கரின் தேவையற்ற ஈடுபாடு, தீமை பயக்கும்போட்டி மனப்பான்மை ஆகிய வற்றினை அகற்றி இடுபொருட்களோடு இடுபொருட்களாக வியர்வை சிந்தி - உழைப்பை நலகி உற்பத்தியின் விளை நிலமாம் விவசாயியின் விளைபொருட்கு உரிய விலை பெற்றுத்தரப் பெரிதும் துணையாய் நின்று வருகின்றன. இவ்வாறு அடிமட்டத்தில் இயங்கும் பிரதம விற்பனைச் சங்கங்கள் விவசாயிகளைத் தமது அங்கங்களாக ஆக்கிப் பின் வரும் நலப் பணிகளை நன்கே ஆற்றி வருகின்றன.

அ. உறுப்பினர்களின் விளை பொருட்கு ஆதாய விலை கிடைக்க வகை செய்தல்.

ஆ. விளைபொருளை அடமானமாகப் பெற்று முறையாகக் கடன் வழங்கல்.

இ. உறுப்பினர்தம் விளைபொருளை விற்றுத்தந்து பிரதமக் கூட்டுறவு வங்கிகள் அவர்க்களித்த பயிர்க்கடனை வசூலித்தளித்தல்.

ஈ. தேவைப்படும் இடுபொருட்கள் அளித்தல்.

உ. விளைபொருளை நுகர்பொருளாய் பக்குவப்படுத்தல்.

ஊ. விவசாய உறுப்பினர் - பொது மக்கள் ஆகியோரின் தேவைப் பொருட்கள் இருப்பு வைத்து நியாய விலையில் விற்பனைச் செய்தல்.

உறுப்பினர்தம் விளைபொருட்கு நல்ல விலை கிடைக்கவும் - அதே நேரத்தில் கூட்டுறவு மற்றும் அரசு சார்பு நிலையங்கள் வாயிலாக அவற்றினை விற்பதின் மூலம் இடைத்தரகர்களை விலக்கி நுகர்வோரும் நற்பயன் பெறவும் தனது உறுப்பினர் சங்கங்களைப் பயன் படுத்திச் செயலாற்றும் தலையாய கடனை ஏற்று 'டான்பெட்' நிறுவனம் செயலாற்றுகிறது. தனது வரம்பில் கிடைக்கும் பொருட்கள் நமது தேவைக்குக் குறைவாக இருக்குமானால் தேவை கருதி பிற மாநிலங்களுக்கும் சென்று விளைபொருள் கொள்முதலில் ஈடுபடுகிறது.

விவசாயத்தின் அடிப்படைத் தேவை இடுபொருட்கள்; விவசாயியின் அடிப்படைத் தேவை அவர்தம் விளைபொருட்களுக்கு ஆதாய விலை பெறுவது. உரம், விரிய விதை, பூச்சிக்கொல்லி மருந்துகள், விவசாயக் கருவிகள் ஆகியவற்றை விநியோகிப்பது, தனது பாமணி 17:17:17 வகை உரக் கலவையினை உற்பத்திச் செய்வது, தோட்டப் பயிர்களுக்குத் தேவையான கலப்புரங்களைக் கலந்து 'டான்பெட்' கலப்புரம் எனும் பேரில் வழங்குவது - இவ்வாறு இடுபொருட்களை வழங்கியான பின்னர் அதனால் கிடைக்கும் உற்பத்திப் பொருட்களைத் தக்க நேரத்தில் விற்பித்துத் தருவது ஆகிய அரும்பணிகளை இணையம் ஏற்று நடத்தி வருகிறது.

இடுபொருள் வழங்கல் - உற்பத்திப் பொருட்களைக் கொள்முதல் செய்தல் ஆகிய சேவைகளை ஒரு கூரையின் கீழ் செய்திடும் நன்நோக்கினை மகிழ்வுடன்

ஏற்றுச் செயலாற்றி வருகிறது டான்பெட்.

உணவெண்ணெய் உற்பத்தி-வர்த்தகம் தற்போது டான்பெட் வசம் இல்லை. எனினும் 1982-83-ஆம் ஆண்டு முதற்கொண்டு உணவெண்ணெய் தயாரிக்கப் பயன்படும் சூரியகாந்தி விதையினைப் பொதுத்துறையில் இயங்கும் தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம் மற்றும் ஒரு சில முன்னணியில் இயங்கும் சூரியகாந்தி எண்ணெய் தயாரிப்பாளர் ஆகியோருக்குப் பெருமளவில் கொள்முதல் செய்து வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதொன்றாகும். கடந்த 1990-91-ஆம் ஆண்டு முதற்கொண்டு மூன்றாண்டுகளில் முறையே ரூ.467.45 இலட்சம், ரூ.187.71 இலட்சம், ரூ.834.93 இலட்சம் மதிப்புக் கொண்ட சூரியகாந்தி விதையினை டான்பெட் கொள்முதல் செய்துள்ளது. நடப்பாண்டின் முதல் ஐந்து மாதங்களில் மட்டும் ரூ.412.34 இலட்சம் மதிப்புள்ள சூரியகாந்தி விதைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

நிலையற்ற சந்தை நிலவரம் நிலவிய காலத்தேயும் பருத்தி உற்பத்தியாளர்களுக்குப் பெரிதும் டான்பெட் உதவியுள்ளது. கூட்டுறவு நூற்பாலைகள், தேசிய மற்றும் தமிழ்நாடு துணிக்கழகங்களின் நூற்பாலைகள் ஆகியவற்றிற்குப் பருத்திப் பஞ்சினைக் கொள்முதல் செய்து டான்பெட் தந்துள்ளது.

மேலும், ஏற்றுமதி வாணிபத்திலும் டான்பெட் 1979-ஆம் ஆண்டு முதற்கொண்டு ஈடுபட்டு பருத்திப் பஞ்சு, மிளகாய், மஞ்சள் எண்ணெய் நீக்கிய மணிலா பிண்ணாக்கு, முந்திரி, கொத்துமல்லி விதை, வெங்காயம் முதலான பொருட்களையும் ஏற்றுமதி செய்து வந்துள்ளது. கடந்த 1989-90-ஆம் ஆண்டு (1991-92 நீங்கலாக) 1992-93 வரை மட்டும் ரூ.428.78 இலட்சம் மதிப்புக் கொண்ட 7,919 'பேல்' பஞ்சு ரஷ்யா, ஜெனீவா, செக்கோஸ்லோவேகியா, நேபாளம், பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா ஆகிய இடங்களுக்கு இவ்வினையம் ஏற்றுமதி செய்துள்ளது.

மொத்தத்தில் 1990-91-ஆம் ஆண்டு முதலான மூன்றாண்டுகளில் முறையே ரூ.392.82 இலட்சம், ரூ.730.61 இலட்சம் மற்றும் ரூ.419.61 இலட்சம் மதிப்பார்ந்த பருத்தியினை டான்பெட் கொள்முதல் செய்தது. மேலும் மஞ்சள், முந்திரி, மிளகாய், வேர்க்கடலை, துவரை, மக்காச்சோளம் போன்ற பொருட்கள் விவசாயிகளுக்கு உதவிட டான்பெட் அதிக அளவில் கொள் முதலில் ஈடுபட்ட பொருட்களாகும்.

இதுபோன்ற வர்த்தக ரீதியான உதவிகள் மட்டுமன்றி, வாங்கல்-விற்றல் ஆகிய வாணிபச் செயல் வகைகளில் ஒருவருக்கொருவர் பயன்படும் வகையில் அனைத்துக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கும் சந்தை நிலவரச் செய்திகளை டான்பெட் அவ்வப்போது அளித்து வருகிறது.

இடுபொருள் விநியோகம்:

வேளாண்மை இடுபொருட்களை-அதிலும் குறிப்பாக இரசாயன உர வகைகள் விநியோகிக்கும் பணியில் 1967-ஆம் ஆண்டு முதற்கொண்டே டான்பெட் ஈடுபட்டு வருகிறது. விவசாயிகளுக்கு உடனுக்குடன் உரம் கிடைப்பதற்கு உத்திரவாதம் அளிக்கும் வகையில் 1973-ஆம் ஆண்டு முதற்கொண்டு ஒரு

முழுமையான மொத்த வர்த்தக நிறுவனமாக 'டான்பெட்' உருவெடுத்தது. கிராம அளவிலுள்ள பிரதமக் கூட்டுறவு வங்கிகள் 1976-ஆம் ஆண்டு முதற்கொண்டு டான்பெட்டின் சில்லறை வணிகராக நியமனம் பெற்றன. இதற்கு முன்னர் மொத்த விற்பனையாளராக இருந்து இயங்கி வந்த பிரதமக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் சில்லறை விற்பனை செய்ய அனுமதி பெற்றன.

விவசாய உறுப்பினர்க்கு வழங்கப்படும் பயிர் கடனில் உரப்பகுதி ஒரு முக்கிய அங்கமாக்கப்பட்டது. இடுபொருள் விநியோகப் பணியின் வெற்றிக்குப் பெரிதும் ஊக்கம் தந்தது. தமிழ் நாட்டில் உபயோகப்படுத்தப்படும் இரசாயன உர மொத்த அளவில் சுமார் 25 விழுக்காடுகளை டான்பெட் விநியோகித்து வந்துள்ளது. டான்பெட் கையாண்ட முறைமைகளும், தொழில் முறைப்படுத்தப்பட்ட மேலாண்மையும் எல்லா இடத்தும் சீரான விலையில் தரமான உர விநியோகம் மேற்கொள்ளப் பெரிதும் உதவியது. டான்பெட்டின் நீண்ட அனுபவம் - அரசினரின் ஒத்துழைப்பு - இவற்றால் எந்தப் பிரச்சினையோ தலையீடோ இன்றி இயங்கவியன்றது. கடந்த 1992-93-ஆம் ஆண்டு மட்டும் ரூ.151.62 கோடி மதிப்புக் கொண்ட 3,87,200 டன் உர வகைகளை டான்பெட் விநியோகம் செய்தது.

இந்திய அரசு 25.8.92 அன்று பால்பேட் மற்றும் பொட்டாஷ் வகை உரங்களுக்குள்ள விலைக்கட்டுப்பாட்டினை நீக்கியது. இதன் காரணமாக இவ்வுரங்களின் விலை இரண்டு - மூன்று மடங்கு உயர்ந்தது. இதன் காரணமாகத் தோன்றிய இக்கட்டான நிலைமையினைத் தவிர்ப்பதற்காக 1.10.92 முதல் ஓர் உரச்சலுகை திட்டத்தினை இந்திய அரசு அறிவித்தது. இத்திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.95.94 கோடி மதிப்புக் கொண்ட 1,37,656 டன் அளவுள்ள டி.ஏ.பி. எம்.ஓ.பி. மற்றும் சில கூட்டுரங்களை விநியோகித்து ரூ.10.83 கோடி பெறுமானமுள்ள சலுகையினை இணையம் உழவர்களிக்கு. இச்சலுகை 1993-94-ஆம் ஆண்டிலும் 12.6.93 முதற்கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. முதல் மூன்று மாதக் காலத்திலேயே ரூ.1.64 கோடி அளவிற்கு இச்சலுகை பெறப்பட்டுள்ளது.

மேலும், உழவர்க்கு உதவிடவும் விவசாயப் பொருளாதாரத்தின் தரம் உயரவும் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் - மண்டல இணைப்பதிவாளர்கள் ஆகியோரின் உறுதுணையோடு தஞ்சை, நாகை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர்த்து மாநிலத்தின் மற்றெல்லா இடங்களிலும் 'ஒரு கூரையின் கீழ் அனைத்துச் சேவை' எனும் உன்னத நோக்கத்தின் அடிப்படையில் பிரதம விவசாயக் கூட்டுறவு வங்கிகள் 100 வேளாண் சிறப்பங்காடிகளைத் தொடங்கிட டான்பெட் ஏற்பாடு செய்தது. இத்திட்டத்தின்கீழ் இவ்வங்காடிகளின் முதன்மைத் தேவைகளான பெயர்ப் பலகைகள், விலைப் பட்டில் அறிவிப்புப் பலகைகள், துணிப்பதாகைகள், மரதாங்கிகள், குவிச்சக்கர ஊர்திகள், விற்பனையாளர்க்கு சீருடைகள் ஆகியன வழங்கி டான்பெட் ரூ.20 இலட்சம் செலவிட்டது. மேலும், இப்பணியாளர்க்கு மதுரை கூட்டுறவுப் பயிற்சி மையத்தின் வாயிலாக உரிய பயிற்சி அளிக்கப்படவுமுள்ளது. இவ்வேளாண் சிறப்பங்காடிகளில் போதிய அளவு உரம், விதை, பூச்சிக்கொல்லி மருந்துகள், கருவிகள் ஆகியன இருப்பு வைக்கப்படுகின்றன. கடந்த 1992-93-ஆம் ஆண்டின் இறுதியில் ரூ.1.50 கோடி பெறுமானமுள்ள இடுபொருட்களும் நடப்பாண்டான 1993-94-இன் முதல் ஐந்து மாதங்களில் ரூ.2.06 கோடி மதிப்பார்ந்த இடுபொருட்களும் இத்திட்டத்தின்கீழ் உழவர்க்கு வழங்கப்பட்டன. நடப்பாண்டில் இரசாயன உரத்தைப் பொருத்தமட்டில் ரூ.254 கோடி மதிப்புள்ள 5,40,000 டன் அளவு உரம் வழங்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது. காலவாக்கில் 1997-98-ஆம் ஆண்டில் 12,65,000 டன் உரத்தினை டான்பெட் விநியோகம் செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், அதிகப்படி விற்பனை விளிம்பும், நிதியுதவியும் அளித்து தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் பிரதம விவசாயக் கூட்டுறவு வங்கிகள் வாயிலாக உழவர் சேவை மையங்கள் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

உர இறக்குமதி

கடந்த 1992-93-ஆம் ஆண்டில் இவ்வினையம் 35,000 டன் டி.ஏ.பி. உரத்தினை 'ஜோர்டான்' மற்றும் அமெரிக்க நாடுகளிலிருந்து இறக்குமதி செய்தது சிறப்பு வாய்ந்ததொன்றாகும். இது உர விநியோகத்தைச் சீராக வைத்திருக்கவும் விலை அதிகரிப்பு தும்நிலையைத் தனியார் பயன்படுத்திக் கொள்வதைத் தவிர்க்கவும் பயன்பட்டது. வெளிச்சந்தை விலை 50 கிலோ கொண்ட மூட்டை ஒன்றிற்கு ரூ.368/- என விற்கப்பட்டபோது கூட்டுறவு அங்காடிகளில் ரூ.340/- என விற்றதே இதற்குப் போதிய சான்றாகும்.

வீரிய விதை, பூச்சி மருந்து மற்றும் வேளாண் கருவிகள் விநியோகம்:

விவசாயத் துறையினரால் சான்றளிக்கப்பெற்ற தரமுள்ள வீரிய விதைகள் விவசாயத் துறையினரின் விதைப் பண்ணைகளிலும், 'டூகாஸ்' கூட்டுறவு நிறுவனம் மற்றும் பலராலும் தயாரித்தளிக்கப்படுகின்றன. இவ்வாறே பூச்சியழிப்பு மருந்துகளைப் பல தனியார் நிறுவனங்களும் 'டூகாஸ்' நிறுவனமும் தயாரித்தளிக்கின்றன. விவசாயக் கருவிகள் தயாரிப்பில் தனியார் நிறுவனங்கள் கூட்டுறவு நிறுவனங்கள் முதலானவை ஈடுபட்டுள்ளன. ''அனைத்து இடுபொருட்களும் ஒரு கூரையின்கீழ் வழங்கப்படுதல்'' எனும் கொள்கை கொண்ட 'டான்பெட்' டும் உரத்தோடு இவ்விடுபொருட்களையும் விநியோகித்து வருகிறது.

★ எங்களுக்குத் தேசம்தான் தெய்வம்; தேசத்தின் மக்கள்தான் எங்கள் சொத்து, சுகம் எல்லாம். அதற்கு ஆபத்து வரும்போது எங்கள் உயிர்களை உருவிக் கொடுத்தாவது தேசத்தைக் காத்து நிற்போம்.

—பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்

சேமிப்பு:

விநியோகப் பணியில் ஈடுபாடு கொண்ட எந்த நிறுவனத்திற்கும் சேமிப்பு வசதி என்பது மிக அத்தியாவசியமானதாகும். சேமிப்புக் கிடங்குகளில் விளைபொருட்கள் முறைப்படி சேமித்து வைக்கப்படுவது மட்டுமன்றி, சந்தையில் கிடைக்காத காலங்களிலும் கிடைக்கச் செய்யுமளவிற்கு சில பொருட்கள் - குறிப்பாக விரைவில் அழுகும் தன்மை கொண்ட பொருட்கள் விஞ்ஞான ரீதியில் அப்படிக் கெட்டுப்போய் விடாமல் நீண்டநாள் சேமித்து வைக்கப்பட வேண்டிய அவசியமுள்ளது. குளிர்ப்பதன வசதி இதற்கு உறுதுணையாகவுள்ளது. தற்போது இணையத்திடம் 26,560 டன் மொத்த கொள்ளளவு கொண்ட 35 கிடங்குகள் தமிழ்நாடெங்கும் உள்ளன. இவை தேவையான அளவிற்கு உரத்தினைக் கையிருப்பு வைத்து உர விநியோகத்தினைச் செவ்வனே செய்திடப் பெரிதும் உதவுகின்றன. மழை வெள்ளம் எனும் இயற்கை சீற்றத்தினின்றும் கோடானு கோடி மதிப்பார்ந்த பொருட்களைப் பாதுகாக்கின்றன.

மேற்கூறப்பட்ட சேமிப்புக் கிடங்குகள் மட்டுமன்றி 'டான்பெட்' வசம் 1,250 டன் கொள்ளளவு கொண்ட குளிர் வசதி நிலையமொன்றுள்ளது. இங்கு உருளைக் கிழங்கு, புளி, பழவகைகள், காய்கறி வகைகள், முட்டை, பால் பொருட்கள், பேரீச்சம் பழம், உலர்ந்த பழ வகைகள், தானிய வகைகள், கலவையூட்டுப் பொருட்கள், மற்றும் பிற பொருட்கள் சேமித்து வைக்கப்படுகின்றன. இக்குளிர்ச்சாதன நிலையம் பெரும்பாலும் சென்னைவாழ் நுகர்வோருக்கே பயன்படுகிறது. 'டான்பெட்' கொள்முதல் செய்த பொருட்கள் மட்டுமன்றி பல வேறு வர்த்தகர்களாலும் குஜராத் கூட்டுறவுப் பால் உற்பத்தி இணையம் மற்றும் பல நிறுவனங்களாலும் கொண்டு வரப்படும் பொருட்கள் நிர்ணயிக்கப் பெற்ற வாடகைக் கட்டணம் விதிக்கப் பெற்று சேமிப்பில் நீண்ட நாட்கள் வைக்கப்படுகின்றன. இந்நிலையத்தின் தேவை தற்போது அதிகரித்து வருகிறது. பெருகும் தேவையைக் கருதியும் - விஞ்ஞான ரீதியில் சேமிப்பதன் அவசியம் - நன்மைகள் ஆகியவற்றைப் பற்றி உபயோகிப்போரிடம் ஒரு விழிப்புணர்ச்சியை உண்டாக்கவும் மிகப் பெரிய அளவில் சென்னையைச் சார்ந்த கோயம்பேடு எனும் இடத்தில் உருவாகி வரும் மொத்த வியாபார அங்காடி வளாகத்தில் ரூ.170 இலட்சம் மதிப்பீட்டில் 2,500 டன் கொள்ளளவில் ஒரு குளிர்ப்பதனச் சாலையை டான்பெட் உருவாக்கி வருகிறது. தற்போது நெரிசலில் திக்குமுக்காடிக் கொண்டிருக்கும் சென்னை கொத்தவால் சாவடிக்குப் பதிலாக நல்ல வசதியான இடத்தில் கனி வகைகள், காய்கறிகள், கன்னகவர் மலர்கள், தானிய வகைகள், பயறுகள் முதலான பலவேறு அன்றாடத் தேவைப் பொருட்களின் வாணிபத்திற்காகச் சீரிய முறையில் நிர்மாணிக்கப்பெற்று சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினர் (எம்.எம்.டி.ஏ.) மூலமாக, தமிழ்நாடு அரசு மேற்படி பேரங்காடியினை அமைத்து வருகிறது. வணிகப் பெருமக்களைப் பெரிதும் கவர்ந்து குளிர்சாதன வசதியெனும் புதுக்கலாச்சாரத்தை ஊரறியச் செய்யவிருக்கும் இப் பெருமைக்குரிய அலகினை அமைக்க 22 'கிரவுண்ட்' நிலப்பரப்பினை 'டான்பெட்' பெற்றுள்ளது. இதன் கட்டுமானப் பணிகள் தற்போது தொடங்கப் பெற்று நடைபெற்றுக் கொண்டுள்ளன.

'டான்பெட்' நிறுவனம் கடன் வழங்குவது இல்லை. மாறாக சேவை வடிவில் பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் ஆக்க வழியில் இயங்குகிறது. ''கொள்வதும் மிகைக் கொளாது கொடுப்பதுவும் குறை படாது'' எனும் அன்றைய காவிரிப்பூம்பட்டின வாணிபத் தந்துவமே இன்றைக்கட்டுறவின் உண்மைத் தந்துவமென உணர்ந்து, இது உயர்ந்த பொருளாதாரத்திற்கு உயிர்நாடியாக விளங்குமெனும் நன் நோக்கத்தில் தன்னால் இயன்ற அளவிற்கு இயங்கிக் கொண்டிருக்கிறது.

பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 14.11.93 அன்று அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் மாலையணிவித்தனர்.

—'தமிழரசு' அடுத்த இதழிலும் மதுரை மாவட்டச் செய்திகள் தொடர்ந்து வெளிவரும்.

பயிர்களுக்கு ஒரு **புதிய** பாதுகாப்பு

வேம்பின் நற்குணங்களைக்கொண்ட

நிம்பிசிடின்®

(பூச்சி மருந்துசட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டது.)

- இது வேப்பங் கொட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட அஸாடிராக்ஷன் 0.03%-ஐ மூலப் பொருளாகக் கொண்டது.
- T.ஸ்டேன்ஸ் கம்பெனியின் ஆராய்ச்சி மையத்தில் உருவாக்கப்பட்ட ஒரு படைப்பு.
- பருத்தி, நெல், நிலக்கடலை, காய்கறிகள், பயறுவகைகள், பூக்கள் போன்றவற்றில் காணும் பச்சைப் புழு, தாய்ப்புழு, மொட்டுத் துளைப்பான், வெள்ளை ஈ, ஸ்போடாப்டீரா, அசுவனி, இலைச்சுருட்டுப் புழு, சுருள் பூச்சி போன்றவற்றைக் கட்டுப்படுத்த நிம்பிசிடின் சிபாரிசு செய்யப்படுகிறது.
- பூச்சிகள் நிம்பிசிடினுக்கு எதிர்ப்புச் சக்தி வளர்த்துக் கொள்வதில்லை.
- இது பூச்சி மருந்து கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதால் இதன் தரம் நிரந்தரமாக உறுதி செய்யப்பட்டுள்ளது.
- இது புழுக்கட்டுப்பாட்டிற்கு உபயோகப்படுத்தப்படும் மற்ற பூச்சி மருந்துகளைவிட 20 முதல் 30 மடங்கு பாதுகாப்பானது.
- இது மருந்து தெளிப்பவர்களுக்கும் பாதுகாப்பானது.
- ஒருங்கிணைந்த பூச்சி பராமரிப்பு குறிக்கோளின்படி நிம்பிசிடின் பயனுள்ள பூச்சிகளைக் கொல்லாது.

T.STANES & CO LTD., 23, RACE COURSE ROAD, COIMBATORE-641 018. Phone: 21 15 14.

எளிமையானவை! நேர்த்தியானவை! மேன்மை மிகுந்தவை! தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

- ★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- ★ லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
- ★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு

1-12-1993 ரூ.3

அமைச்சரவை மாற்றம்

தொடர் மர்மங்கள் முதல்வர் மாலையிடுகிறார்

ஆவணப்படம் ஹிஜாப் தடைக்கான உத்தரவு

பூமிதான நிலங்கள் மீட்பு

ஆவணப்படம் ஹிஜாப் தடைக்கான உத்தரவு

இந்த இதழில்...

வரலாற்றுச் சிறப்புமிக்க அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள் கூட்டம் ... 2

தமிழகத்தின் உயிர்மூச்சான இடஒதுக்கீடு முறை தொடர அரசியல் சட்டத் திருத்தம் வேண்டும்! மாண்புமிகு முதல்வர் உரை ... 5

அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ... 9

முதலமைச்சர் பொது நிவாரண நிதி குவிகிறது! ... 12

மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மாண்புமிகு முதல்வர் உதவி! ... 14

படமும் — செய்தியும் ... 15

மன்னர் திருமலை ... 19

வீரத் தமிழர் விளையாட்டு ... 24

ஆட்சித் தமிழுக்கு அழகு சேர்க்கும் மதுரை ... 27

ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டம் ... 29

அறிவொளி இயக்கம் ... 31

நீலகிரி நிலச்சரிவு: மத்திய நிபுணர்கள் பார்வையிட்டனர் ... 33

கூட்டுறவுக் குடைகளின்கீழ் ஒரு குதூகலப் பயணம் ... 35

பாரதியும் பாப்பாப் பாட்டும் ... 41

குறளின் குரல் ... 44

பொது வேலை நிறுத்தம் ... 47

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

கார்த்திகைத் திங்கள் - 16

மலர்:24 இதழ்:11

1-12-1993

விலை: ரூ.3

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோருக்கு 69 %

வரலாற்றுச் சிறப்பு மிக்க அனைத்து

தலைமைச் செயலகத்தில் 26.11.1993 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் கூடிய அனைத்துக் கட்சி மற்றும் சமுதாய இயக்கங்களின் தலைவர்கள் அடங்கிய கூட்டம் மாலை 2.30 மணிக்குத் தொடங்கி இரவு 7.30 மணி வரை, 5 மணி நேரம் தொடர்ச்சியாக நடந்தது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்துக் கட்சி மற்றும் சமுதாய இயக்கங்களின் தலைவர்கள் அனைவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், இட ஒதுக்கீடு சம்பந்தமாக எடுத்த மற்றும் எடுக்கவுள்ள நடவடிக்கைகளுக்குத் தங்களுடைய முழுமனதான ஆதரவைத் தெரிவிப்பதாகக் கூறி, மாண்புமிகு தமிழக முதல்வரை மனந்திறந்து பாராட்டினார்கள்.

கூட்டத்தின் இறுதியில் ஒரு

இடஒதுக்கீடு பற்றிய பிரச்சினை குறித்து...

அரசியல் கட்சித் தலைவர்கள் கூட்டம்

தீர்மானம் முழுமனதாக நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்தைத் தலைமைச் செயலாளர் அவர்கள் வாசித்து முடித்ததும், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இந்தத் தீர்மானத்திற்கு உங்களுடைய முழு ஆதரவு உள்ளதா? எனத்தலைவர்களைப் பார்த்துக் கேட்டபொழுது, அனைத்துக் கட்சி மற்றும் சமுதாய இயக்கங்களின் தலைவர்கள் அனைவரும் கரவொலி எழுப்பி தீர்மானத்திற்கு அவர்களுடைய முழு ஆதரவையும் தெரிவித்தனர்.

கூட்ட முடிவில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பாகவும், தமிழக அரசின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.



தமிழகத்தின் உயிர்மூச்சான இடஒதுக்கீடு முறை தொடர அரசியல் சட்டத் திருத்தம் வேண்டும்

மாண்புமிகு முதல்வர் உரை

மாண்புமிகு அமைச்சர் பெரு மக்களே!

பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்த தலைவர்களே!

அரசு அலுவலர்களே!

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு, வருகை தந்துள்ள உங்கள் அனைவருக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகம் எதிர்கொண்டுள்ள ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து, தீர்வு காண வேண்டிய ஒரு கால கட்டத்தில், நாம் அனைவரும் இங்கே கூடி உள்ளோம். பல்வேறு கால கட்டங்களில் எழுந்த, நெருடலான பிரச்சினைகளை எல்லாம், எளிதாகச் சமாளித்து, தீர்வு கண்ட பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள் நாம். அதே அடிப்படையில் இன்று, தமிழக மக்களின் ஒட்டுமொத்த உணர்வினைப் பிரதிபலிக்கும் வகையில், 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறையை, தமிழக மக்களின் மேம்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும், தொடர்ந்து வழி கோலுகின்ற வகையில், தொடர்ந்து செயல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காக, நாம் இங்கே கூடி உள்ளோம். இந்திய உச்ச நீதிமன்ற ஆணைப்படி, தமிழகத்தில் 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறையை, செயல்படுத்த இயலாத ஒரு சூழ்நிலை எழுந்தவுடன், தமிழக அரசு விரைந்து செயல்பட்டு, உச்ச நீதிமன்றத்தில் ஒரு தெளிவாக்க மனுவினையும், மறு ஆய்வு மனுவினையும், தாக்கல் செய்தது. இந்த இரண்டு மனுக்களும் உச்ச நீதி மன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது.

9.11.1993 அன்று தமிழகச் சட்டப் பேரவையின் சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டது. சட்டப் பேரவையில் உள்ள அனைத்துக் கட்சிகளும், ஒரு மனதாகக் கூடி, தமிழகத்தின் உயிர் மூச்சான இட ஒதுக்கீட்டு முறை தொடர, அரசியல் சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டும் என்று, மத்திய அரசை வலியுறுத்தி, ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானம் என்னால், பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்கு, அனுப்பி வைக்கப்பட்டது. தமிழக மக்களின் ஒட்டுமொத்த உணர்வினைப் பிரதிபலிக்கும் வகையில், 16.11.1993 அன்று, மாநிலம் தழுவிய பொது வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

அனைத்து அரசியல் கட்சிகள், மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்புடன், பொது வேலை நிறுத்தம் அமைதியாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற்றது. தமிழக மக்களின் நலன் கருதும், எந்த ஒரு அரசியல் கட்சியும், இந்த இட ஒதுக்கீட்டு முறை, தமிழகத்தில் தொடர வேண்டும் என்பதில், மாற்றுக் கருத்து வைத்திருக்காது என்று தீர்க்கமாக நம்புகிறேன்.

இட ஒதுக்கீட்டைப் பொருத்தவரை, தமிழ்நாடு தான் வழிகாட்டியாகவும், முன்னோடியாகவும், மற்ற மாநிலங்களுக்கு விளங்கி வருகிறது என்பதில், இரு வேறு கருத்துகளுக்கு இடமில்லை. தமிழ்நாட்டில் இட ஒதுக்கீட்டுக் கொள்கை, 1921-ஆம் ஆண்டு, ஒரு புதிய பரிமாணத்தைப் பெற்றது.

வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்ற லட்சியம், முக்கியத்துவத்தையும் முன்னுரிமையையும் பெற்றது. அந்த ஆண்டு வெளியிடப்பட்ட முதல் Communal G.O., அதாவது, First Communal Government Order தான், பிற்படுத்தப்பட்ட மக்களின் முதல் உரிமைச் சாசனம் ஆகும். பின்னர் 1927-ஆம் ஆண்டு, அந்தந்த இனங்களின் மக்கள் தொகை அடிப்படையில், அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும், என்ற கோரிக்கையை ஏற்று, ஒரு புதிய இட ஒதுக்கீட்டு முறை சீர்திருத்தத்தின், ஒரு புதிய திருப்பு முனை, 1951-ஆம் ஆண்டு ஏற்பட்டது. அன்று நடைமுறையில் இருந்த ஒதுக்கீட்டு முறை, அரசியல் நிர்ணயச் சட்டத்தின்படி, செல்லத் தக்கது அல்ல என, உச்ச நீதி மன்றம் தீர்ப்பு அளித்த போது, தமிழகம் முழுவதும் தந்தை பெரியாரின் தலையில், ஓரணியாகத்திரண்டது. அன்று தமிழகத்தின் தலைவர்கள் அனைவரும், இட ஒதுக்கீட்டு முறையைச் செயல்படுத்தாவிட்டால், தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு, முட்டுக்கட்டை ஏற்பட்டுவிடும், என்ற உணர்வினை வெளிப்படுத்தினார்கள். தமிழகத்தின் ஒட்டுமொத்த உணர்வுகளுக்கு, செவி சாய்த்த அன்றைய பாரதப் பிரதமர், பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள், முதல் அரசியல் சட்டத் திருத்தத்தை மேற்கொண்டு, இப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டார். அவ்வாறு திருத்தி அமைக்கப்பட்ட, இட ஒதுக்கீட்டு முறையில், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 15 சதவிகிதம் என்றும், பிற்படுத்தப்பட்டோருக்கு 25 சதவிகிதம் என்றும், மொத்தம் 40 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்யப்

பட்டது. பொதுத் தொகுப்பிற்கு 60 சதவிகிதம் வழங்கப்பட்டது. பின்னர் 1954, 1971, மற்றும் 1980-ஆம் ஆண்டுகளில், இட ஒதுக்கீட்டு முறை திருத்தி அமைக்கப்பட்டது.

1980-ஆம் ஆண்டு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 18 சதவிகிதம், பிற்படுத்தப்பட்டோருக்கு 50 சதவிகிதம் என, 68 சதவிகித இட ஒதுக்கீட்டு முறையைச் செயல்படுத்தி, இட ஒதுக்கீட்டை 50 சதவிகிதத்திற்கு அதிகமாக உயர்த்தினார். 1990-ஆம் ஆண்டு, சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய ஒரு தீர்ப்பின் அடிப்படையில், பழங்குடியினருக்கு என ஒரு சதவிகிதம் ஒதுக்கப்பட்டு, மொத்த இட ஒதுக்கீடு, 69 சதவிகிதமாக உயர்த்தப்பட்டு, இன்று வரை செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்தகைய சூழ்நிலையில், 16.11.1992 அன்று உச்ச நீதிமன்றத்தின் ஒன்பது நீதிபதிகள் அடங்கிய, அரசியல் சட்டப் பெஞ்ச், Nine Judges Constitutional Bench, மொத்த இட ஒதுக்கீடுகள், 50 சதவிகித உச்ச வரம்பை மீறாத வகையில், அமைத்துக்கொள்ள வேண்டும் என்று, தீர்ப்பளித்தது. 7.1.1993 அன்று நடைபெற்ற, தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டத்தில், இந்திய உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பினால், எழுந்துள்ள விளைவுகள் விரிவாகப் பரிசீலிக்கப்பட்டன.

அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளின்படி, 22.3.1993 அன்று இந்திய உச்ச நீதிமன்றத்தில், மறு ஆய்வு மனு, Review Petition ஒன்று தாக்கல் செய்யப்பட்டது மட்டும் இன்றி, 23.4.1993 அன்று, தெளிவாக்க மனு, Clarificatory Petition ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், நாம் எடுத்த இந்த முயற்சிகளில் 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறை தொடர சாதகமான பயன்கள் கிடைக்கவில்லை.

கல்வி நிறுவனங்களில் அனுமதி கொடுக்கும் பிரச்சினையை, சென்னையைச் சார்ந்த ஓர் அமைப்பு, சென்னை உயர் நீதிமன்றத்தில் எழுப்பியது. 26.7.1993 அன்று வெளியிட்ட தீர்ப்பில், சென்னை உயர் நீதிமன்றம், இட ஒதுக்கீட்டு அளவை, 50 சதவிகிதத்திற்குக் குறைக்க, உச்ச நீதிமன்றம், காலக்கெடு எதையும் நிர்ணயிக்கவில்லை; எனவே நடப்பு ஆண்டில், தமிழ்நாடு அரசு, ஏற்கெனவே பின்பற்றி வந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றலாம்;

1994-95-ஆம் ஆண்டிலிருந்து, இட ஒதுக்கீட்டு அளவை, 50 சதவிகிதமாகக் குறைத்துப் பின்பற்ற வேண்டும், என்று தெளிவாக்கியது.

சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக, சென்னையைச் சார்ந்த ஓர் அமைப்பு, உச்ச நீதிமன்றத்தில் தனி அனுமதி மனு, Special Leave Petition ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது. பிற்படுத்தப்பட்ட மக்களின், தொடர்ச்சியான முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, தற்பொழுது உள்ள இட ஒதுக்கீட்டு முறை, என்றென்றைக்கும் தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டும், என்ற நமது கொள்கையின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு, சென்னை உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில், தனி அனுமதி மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது. இந்த மனு நிலுவையில் உள்ளது.

உச்ச நீதிமன்றத்தில், தமிழ்நாடு அரசின் கொள்கையை விளக்கி, தற்பொழுது இட ஒதுக்கீட்டை, உறுதி செய்வதற்காக, Thiru Kapil Sibal, Thiru Soli Sorabjee, ஆகிய புகழ் பெற்ற வழக்கறிஞர்கள், நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்குகள் அனைத்தும், உச்ச நீதிமன்றத்தின் விசாரணையில், இருந்து வருகின்றன.

மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்த, இன்றைய மத்திய அரசு, 25.9.1991 அன்று முன் வந்த போதே, 30.9.1991 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், "..... மண்டல் குழுவவின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதில், 27 சதவிகிதம் என்பதற்குப் பதிலாக,

50 சதவிகிதம் என்று, இட ஒதுக்கீடு செய்வதைக் கொள்கையாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், மத்திய அரசுத் துறைகள், மத்திய அரசுத் துறை நிறுவனங்கள், ஆகியவற்றின் வேலை வாய்ப்புகளில் மட்டுமன்றி, அனைத்துக் கல்வி நிலையங்களின் அனுமதியிலும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு, 50 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும், இந்தச் சட்டப்பேரவை, மத்திய அரசை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது", என்ற தீர்மானத்தை, நான் முன் மொழிந்தேன். அந்தத் தீர்மானம், ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தை நான் மாண்புமிகு பாரதப் பிரதமர், திரு பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்கு அனுப்பி வைத்து, வேண்டுகோளும் வைத்து, வேண்டுகோளும் விடுத்திருந்தேன்.

10.4.1992 அன்று, புது டெல்லியில், மண்டல் கமிஷன் பரிந்துரைகளைச், செயல்படுத்துவது தொடர்பாக நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டில், நமது மாநிலத்தின்இட ஒதுக்கீட்டுக் கொள்கை, வலியுறுத்திச் சொல்லப்பட்டது.

மண்டல் கமிஷன் பரிந்துரைகளில் ஒன்றை, மத்திய அரசு ஏற்றுக்கொண்டு, **மத்திய அரசுத் துறைகளிலும், நிறுவனங்களிலும், பணிகளுக்கான இட ஒதுக்கீடு செய்யப்பட்டதை எதிர்த்தே, உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டன எனவே, உச்ச நீதிமன்றத்தில் நீதி மன்றத்தின் தீர்ப்பு அரசுப் பணிகளுக்கு மட்டும் பொருந்துமே அல்லாமல், கல்வி நிலையங்களில் அனுமதிக்குப் பொருந்தாது.**

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர், ஆகியோருக்கான இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை, உச்ச நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு எடுத்துச் செல்லப்படவில்லை. உச்ச நீதிமன்றத்தின பரிசீலனைக்குக் கொண்டு செல்லப்பட்டதெல்லாம், பிற்படுத்தப்பட்டோருக்கு, அரசுப் பணிகளில் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை மட்டுமே தான். இந்திய அரசியல் சட்டத்தின் 15(4) என்ற உட்பிரிவு, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோருக்குக் கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு செய்வதற்கு, வழி வகை செய்கிறது. அதைப்போலவே, 16(4) என்ற உட்பிரிவு, அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு செய்வதற்கு, வகை செய்துள்ளது.

இந்த நிலையில், 50 சதவிகித உச்ச வரம்பை விதித்துள்ள, உச்ச நீதிமன்றம், இந்த 50 சதவிகித உச்ச வரம்பிற்குள், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான, இட ஒதுக்கீடும் அடங்குமா, என்ற அடிப்படைப் பிரச்சினையையும் தெளிவுபடுத்த வேண்டி உள்ளது.

நடைமுறையில் இருந்து வரும், இட ஒதுக்கீட்டு அளவை, 50 சதவிகிதத்திற்கு மிகாத வகையில், அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது, இந்திய அரசியல் சட்டத்தில், சொல்லப்படாத ஒன்று மட்டுமல்ல; மண்டல் கமிஷன் பரிந்துரைகளுக்கு மாறானதும் கூட.

இந்திய நாட்டில், பிற்படுத்தப்பட்ட மக்களின் மொத்த ஜனத்தொகை, 52 சதவிகிதம் என்று, மண்டல் கமிஷன் அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு, 52 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கு, நியாயம் இருந்தும், சட்டப் பிரச்சினை காரணமாக, 27 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கு, மண்டல் கமிஷன் பரிந்துரை செய்வதாக, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது இதற்கு அடுத்த பரிந்துரையிலேயே, மண்டல் கமிஷன் அறிக்கையில், "States which have already introduced reservation for Backward Classes, exceeding 27% will remain unaffected by this recommendation" என்று தெளிவாக்கப்பட்டுள்ளது.

50 சதவிகிதத்திற்கு அதிகமாக, இட ஒதுக்கீடு செய்வது மண்டல் கமிஷன் பரிந்துரைகளோடு, ஒத்துப் போகக் கூடிய ஒன்றாகும்.

இந்த இடத்தில், உச்ச நீதிமன்றத்தின் Kerala Vs N.M. Thomas, என்ற புகழ் பெற்ற வழக்கில், Justice Thiru Fazal Ali வழங்கிய தீர்ப்பின் ஒரு பகுதியை, நினைவுகூர்வது பொருத்தம் உடையதாக இருக்கும், என்று கருதுகிறேன்.

"Decided cases of this Court have no doubt laid down that the percentage of reservation should not exceed 50%. As I read the authorities, this is however a rule of caution and does not exhaust all categories. Suppose for instance, a State has a large number of backward classes of citizens which constitute 80% of the population, and the Government, in order to give them proper representation, reserve 80% of the jobs for them, can it be said that the percentage of reservation is bad and violates the permissible limits of Clause (4) of Article 16. The answer must necessarily be in the negative. The dominant object of this provision is to take steps to make inadequate representation adequate". என்று, Thiru Fazal Ali அவர்கள், தனது தீர்ப்பில் குறிப்பிட்டு உள்ளார்கள். எனவே, தமிழ்நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வரும், இட ஒதுக்கீடு, இந்திய அரசியல் சட்டத்திற்கோ, அல்லது மண்டல் கமிஷன் பரிந்துரைகளுக்கோ, முரணானது ஆகாது என்பதனைச், சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எந்த நிலையிலும், 69 சதவிகித இட ஒதுக்கீட்டைத், தொடர்ந்திட வேண்டும் என்பது தான், இந்த அரசின் உறுதியான கருத்தாகும்.

அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவது, மத்திய அரசின் பொறுப்பாகும். மக்களின் உணர்வை ஏற்று, சமுதாயத்தில், பிற்படுத்தப்பட்டோரின் முன்னேற்றத்திற்கு, வழி வகை செய்யும் சட்டத் திருத்தத்தை, மத்திய அரசு விரைவில் கொண்டு வருவது தான், பொருத்தமானதாக இருக்கும். ஆனால், இதை உடனடியாகச் செய்ய இயலாது, என்கிற கருத்தும், எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில், தமிழ்நாடு அரசு, ஏற்கெனவே மேற்கொண்டுள்ள இட ஒதுக்கீட்டுக் கொள்கை, தொடர்ந்து நிறைவேற்றப்பட வேண்டும். அதில் எந்த விதமான ஐயப்பாடோ, தாமதமோ இருக்கக் கூடாது. இதைக் கருத்தில் கொண்டு, மத்திய அரசு, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில், திருத்தம் கொண்டு வர, காலத்தாமதம் நேரிடலாம் என்கிற சூழ்நிலையில், தமிழ்நாடு சட்டப் பேரவையே, இந்திய அரசியல் சட்டத்தின் 31(சி) பிரிவுப்படி, நமது மாநிலத்திற்கேற்ப, 69 சதவிகித இட ஒதுக்கீட்டுக் கொள்கையைத், தனிச் சட்டமாக்கி, அதற்கு இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று, நடைமுறைப்படுத்தலாம் என்கிற கருத்தும், அரசின் பரிசீலனையில் உள்ளது. இது குறித்து, திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர், திரு கி.வீரமணி அவர்கள் கருத்தினை அரசுக்குத் தெரிவித்துள்ளார்கள். இவ்வாறு இந்திய அரசியல் சட்டத்தின் 31(சி)

நம்மை நாமே உயர்த்திக் கொள்ள வேண்டும். நாம் சுயமாக வாழ்வது எப்படி என்று கற்றுக் கொள்ள வேண்டும். தன்மானம் உடையவர்களாய் வாழ வேண்டும். நாமாக முயற்சி செய்து நமது அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். இவற்றைச் செய்தால், நாம் உயர்வது உறுதி.

— அண்ணல் அம்பேத்கர்

ஒப்பிலா மணி!

தமிழ்நாட்டில் ஒப்பிலாமணியாய் வாழ்ந்து அரும்பெரும் காரியங்களைச் சாதித்த பெரியார் ராஜாஜி.

சமுதாயத் துறையில்... மாபெரும் சீர்திருத்தம் செய்த பெருமை ராஜாஜிக்குத்தான் உண்டு.

உற்சாகம் காரணமாகத் தளிப்பட்ட முறையில் சமுதாயத் தொண்டில் கவனம் செலுத்திக் கொண்டிருந்த என்னை, முழுக்க முழுக்கச் சமுதாயத் தொண்டனாக ஆக்கிய பெருமை ராஜாஜி அவர்களுக்கே உரியதாகும்.

— தந்தை பெரியார்

பிறப்பட்ட மக்களின் உரிமை காப்போம்!

தமிழ்நாட்டில் பெரும்பான்மையாக வாழும், பிற்படுத்தப்பட்ட மக்களுடைய, சமூக முன்னேற்றம் கருதி, பொருளாதார நலம் கருதி, அவர்களுக்குத் தொடர்ந்து, தேவையான அளவிற்கு இட ஒதுக்கீடு செய்வது, தமிழ்நாடு அரசின் தலையாய கடமையாக அமைந்துள்ள இந்த நேரத்தில், இதற்காகத் தேவைப்பட்டால், அன்று பண்டித ஜவகர்லால் நேரு குறிப்பிட்டதைப் போல், இந்திய அரசியல் சட்டத்தில், தகுந்த திருத்தங்களைக் கொண்டு வர வேண்டுமென்றால், அது ஏற்றுக்கொள்ளக் கூடியதாகத் தான் இருக்கும். நமக்கு நீதிமன்றங்களைப் புறக்கணிக்கும் எண்ணம், சிறிதும் இல்லை. பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைகளைத் தெளிவுபடுத்தி, அவற்றைப் பாதுகாப்பதும், அவற்றை நிறைவேற்ற, எல்லாவித நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதும்தான், இப்போது நம்மிடையே இருக்கக் கூடிய, தலையாய பொறுப்பாகும். அன்று 'கம்யூனல் ஜி.ஓ.'-வைப் பாதுகாக்க, எப்படி அரசியல் சட்டத்திலே, முதல் திருத்தம் கொண்டு வரப்பட்டு, நிறைவேற்றப்பட்டதோ- அதே நடவடிக்கை, இன்றும் எடுக்கப்பட்டாக வேண்டும்.

"In a democracy, neither the Constitution nor the Government is Supreme; it is the people who are Supreme and they have the right to change the Constitution partially or completely...'

(9.11.93 அன்று சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதல்வர்)

பிரிவின் கீழ் தமிழக அரசு சட்டமன்றத்தில் நிறைவேற்றும் தனிச் சட்டத்திற்கு, இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்ற பின்னரும் கூட, தக்க பாதுகாப்பு கிடைக்குமா என்பதில் சில அரசியல் சட்ட நிபுணர்கள் ஐயம் தெரிவித்து உள்ள நிலையில்,

அரசியல் சட்டத்தின் 31(பி) பிரிவின்படி, சட்டமன்றத்தில் தனிச் சட்டம் நிறைவேற்றுவது பற்றியும் தமிழக அரசு பரிசீலித்து வருகிறது. அவ்வாறு 31(பி) பிரிவின்படி நாம் நிறைவேற்றும் சட்டம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்ற பின்னர், அரசியல் சட்டத்தின் 9-வது அட்டவணையில் (9th Schedule)-இல் இணைக்கப்பட, அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டே ஆக வேண்டும். எது எப்படி இருப்பினும் எங்களைப் பொருத்தவரை, 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறை, தொடர வேண்டும். நம்முடைய இட ஒதுக்கீட்டுக் கொள்கை, தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட, தமிழக அரசு, நான் தெரிவித்த எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளத் தயாராக உள்ளது.

இதற்கென ஒரு சட்டத்தைத் தமிழ்நாடு சட்டப் பேரவையில், அறிமுகம் செய்து, அதை நிறைவேற்றித் தரவும்; தமிழக அரசு தயங்காது, என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதனைத் தொடர்ந்து எடுக்கப்பட வேண்டிய மேற்கொள்ள நடவடிக்கைகளுக்கு எல்லாம் உங்கள் அனைவரின் ஒத்துழைப்பினையும் வழங்கிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதற்காகவே அனைத்துக் கட்சியினரின் இக்கூட்டம் கூட்டப்பட்டுள்ளது. தமிழக மக்களின், மேம்பாட்டினையும், வளர்ச்சியினையும், தமிழக மக்களின், மேம்பாட்டினையும், வளர்ச்சியினையும், தமிழக மக்களின் ஒட்டுமொத்த உணர்வுகளையும், தமிழக அரசின் அசைக்க முடியாத எண்ணங்களையும் கருத்தில் கொண்டு, அனைத்துக் கட்சித் தலைவர்களும், 69 சதவிகித இட ஒதுக்கீட்டுக் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடிக்கத் தக்க வகையில், தங்களது மேலான கருத்துக்களை வழங்கிட, மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் நிறைவுரை

மாண்புமிகு அமைச்சர்களே!

அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களே!

அரசு அலுவலர்களே!

தமிழகத்தின் உயிர் மூச்சுப் பிரச்சினையான இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில் தீர்வு காண தமிழகத்தின் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒருமித்த கருத்துக்களோடு எப்படியேனும் 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறையைத் தொடர்ந்து செயல்படுத்தவும், சட்டரீதியான பாதுகாப்பை அளிக்கவும் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து மிகத் தெளிவாகவும், சிறப்பாகவும் எடுத்துரைத்தார்கள். சிறந்த கருத்துகளை வழங்கிய உங்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தமிழக முதலமைச்சர் என்கின்ற முறையில் தமிழக மக்கள் அனைவரின் சார்பிலும் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழகத்தின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் தமிழக மக்கள் தொடர்ந்து சம நீதி பெறவேண்டும் என்பதற்கும், 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறையைத் தொடர்ந்து செயல்படுத்த எங்கள் அரசு அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொள்ளும் என்று உறுதி கூறுகிறேன். எங்களது முயற்சிகளுக்கு உங்களது ஆதரவையும், ஒத்துழைப்பையும் நீங்கள் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு மீண்டும் இந்த மன்றத்தில் நல்ல கருத்துக்களை வழங்கிய உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு அமைகின்றேன்.

இடஒதுக்கீட்டுக்குச் சட்டரீதியான பாதுகாப்பினைப் பெற்றுத்தர மைய அரசு எல்லாவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்

அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

26.11.1993 அன்று, சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:

தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டோர், சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆகியோரின் வளர்ச்சிக்காகவும், மேம்பாட்டிற்காகவும், பல்லாண்டுகளாக அரசுப் பணிகளிலும், கல்வி நிலையங்களின் அனுமதியிலும், இட ஒதுக்கீடு செய்யும் முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இட ஒதுக்கீட்டுக் கொள்கையைப் பொருத்தவரை, தமிழ்நாடு இந்திய நாட்டின் மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. இந்த இட ஒதுக்கீட்டு முறைக்குப் பல கால கட்டங்களில், இடையூறுகள் ஏற்பட்டபோதிலும், அவை எல்லாம் சமாளிக்கப்பட்டு இன்று வரை இட ஒதுக்கீட்டு முறை தொடர்ந்து, தமிழ்நாட்டில் அமல் படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள தாழ்த்தப்பட்டோர், சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆகியோரின் சமூக மற்றும் பொருளாதாரக் கல்வி நிலையில், தொய்வில்லாத தொடர்ச்சியான முன்னேற்றம் ஏற்பட, தற்போது தமிழ்நாட்டில், அமலில் உள்ள 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறையை, தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டிய அவசிய சூழ்நிலை இருந்து வருகிறது.

இந்திய உச்ச நீதி மன்ற ஆணையின்படி, இந்த 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறையைத் தொடர்ந்து செயல்படுத்துவதில் இடையூறு ஏற்பட்டபோது, தமிழ்நாட்டின் பெருவாரியான மக்களின் நலன் கருதி தொடர்ந்து 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறை, நடைமுறைப் படுத்தப்படுத்த வேண்டும் என்ற ஒட்டுமொத்த உணர்வினை, அனைத்துத் தரப்புத் தமிழக மக்களும் வெளிப்படுத்தினார்கள்.

இப்பொழுது நிலவுகின்ற சூழ்நிலையில், தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக நிகழ்ந்து வரும் சமூக மறுமலர்ச்சிகளைக் கருத்தில் கொண்டு, தாழ்த்தப்பட்டோர், சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆகியோரின் சமூகப் பொருளாதார மற்றும் கல்வி முன்னேற்றத்திற்கு எந்தவிதமான தடையும் இன்றி, எப்பொழுதும் போல இனி வருங்காலத்திலும், 69 சதவிகித இட ஒதுக்கீடு தொடர்ந்து அமலில் இருக்கத்தக்க வகையில், இந்திய அரசியல் சட்டத்தில் உரிய திருத்தம் விரைவில் மேற்கொண்டுவரப்பட வேண்டும் என்று, 9.11.1993 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தனித்தன்மை வாய்ந்த சிறப்புக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் முன்மொழியப் பெற்று, அனைத்து அரசியல் கட்சிகளையும் சார்ந்த மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்கள் பேராதரவோடு, ஒரு மனதாக நிறைவேற்றப் பெற்று தீர்மானத்தை, அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் சமுதாய இயக்கங்களின் தலைவர்கள் அடங்கிய இந்தக் கூட்டம் ஒரு மனதாக வரவேற்கிறது.

தமிழ்நாட்டு மக்களின் மொத்த உணர்வுகளைப் பிரதிபலிக்கும் அந்த

வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானத்திற்கு விரைந்து செயல் வடிவம் கொடுத்திட மத்திய அரசு முன் வர வேண்டும் என்று, இந்தக் கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

மண்டல் கமிஷன் வழக்குகளில், உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் காரணமாக எழுந்துள்ள விளைவுகளிலிருந்து, தாழ்த்தப்பட்டோர், சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கான இட ஒதுக்கீட்டினை, எந்த விதத் தொய்வும் இன்றித் தொடர்ந்து கடைப்பிடிக்கவும், பேணிக்காக்கவும், தமிழ்நாடு அரசும், மாண்புமிகு முதல்வர் அவர்களும், இதுவரை மேற்கொண்டுள்ள அனைத்து முயற்சிகளையும், எடுத்துள்ள நடவடிக்கைகளையும், இந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் மற்றும் சமுதாய இயக்ககங்களின் தலைவர்கள் அடங்கிய இக் கூட்டம் வரவேற்று மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

உச்ச நீதிமன்றத்தின் ஆணையை மதிக்கவேண்டும் என்று விரும்பும் அனைத்து அரசியல் கட்சிகளும், மற்றும் சமுதாய இயக்கங்களும் அதே நேரத்தில் இட ஒதுக்கீடு முறை தொடரவேண்டும் என்பதிலும், தமிழகத்தில் தாழ்த்தப்பட்டோர், சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருடைய சமூக பொருளாதார மற்றும் கல்வி முன்னேற்றம் பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்பதிலும் தீவிரமாக உள்ளன. எனவே, தற்போது நடைமுறையிலுள்ள 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறையைத் தொடர்ந்து செயல்படுத்தவும், அந்தக் கொள்கையை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, இந்திய அரசியல் சட்டத்தில் தக்க திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும், அல்லது இந்திய அரசியல் சட்டத்தின் 31(பி) பிரிவு அல்லது 31(சி) பிரிவின் கீழ் மாநில அரசு தனிச் சட்டம் ஒன்றை இயற்றி, இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்றும், அதனைத் தொடர்ந்து சட்டரீதியான பாதுகாப்பினைப் பெற்றுத்தர மைய அரசு எல்லாவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டுமென்றும், இந்த வகையில் இட ஒதுக்கீட்டுக் கொள்கையைத் தொய்வின்றி மேலும் தொடர்ந்து கடைப்பிடிக்கத் தேவையான எல்லா முயற்சிகளையும், தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும், அனைத்து அரசியல் கட்சித்தலைவர்கள் மற்றும் சமுதாய இயக்கங்களின் தலைவர்கள் அடங்கிய இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

மேலும், மண்டல் கமிஷன் சம்பந்தப்பட்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியினர் ஆகியோருடைய பதவி உயர்வு போன்றவற்றில், தீர்ப்பில் உள்ள மற்ற பாதகமான பகுதிகளைத் தமிழ்நாடு அரசு பரிசீலித்து, தகுந்த பாதுகாப்பு தரும் வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

தமிழ்நாட்டின் உயிர்மூச்சுப் பிரச்சினையான இட ஒதுக்கீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வுகாண, மாண்புமிகு தமிழக முதல்வரும், தமிழக அரசும் மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளுக்கும், நடவடிக்கைகளுக்கும், தங்களது மனமார்ந்த ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்குவது எனவும் இந்த அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் சமுதாய இயக்கங்களின் தலைவர்கள் அடங்கிய இக் கூட்டம் ஏகமனதாக முடிவு செய்கிறது.

26.11.93 அன்று நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள்

டாக்டர் எம்.எஸ். சந்திரபோஸ், திரு சிதம்பரம் - பார்திய ஜனதா கட்சி.

திரு பி. மாணிக்கம், திரு ஏ.எம். கோபு - கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆப் இந்தியா.

திரு ஏ. நல்லசிவம், திரு வரதராஜன் - கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆப் இந்தியா (மார்க்சிஸ்ட்).

திரு தண்டாயுதபாணி - இந்திய தேசிய காங்கிரஸ்.

திரு ஜி.ஏ: வடிவேல், திரு ஜெகவீரபாண்டியன் - ஜனதா தளம்.

திரு பி.சி. பழனியாண்டி - லோக்தளம் (பி).

திரு பி. சாரதி, திரு சி அருணகிரி - தமிழ்நாடு காங்கிரஸ் (எஸ்).

திரு என்.வி.என். சோமு, திரு மிசா ஆர். கணேசன் - திராவிட முன்னேற்றக் கழகம்.

திரு டாக்டர் ராம்தாஸ், திரு ஆர். எழில்மலை - பாட்டாளி மக்கள் கட்சி.

திரு எஸ். ஆண்டித் தேவர் - பார்வர்டு பிளாக் (ஆண்டி தேவர்).

திரு கே. வரமணி - தராவிடர் கழகம்.

திரு ஜனாப் எஸ்.ஏ. காஜா மொய்தீன், திரு ஜபான் கே.ஏ. வகாப் - முஸ்லீம் லீக்.

திரு எஸ். திருநாவுக்கரசு - எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்.

திரு எம். கந்தசாமி - பார்வர்டு பிளாக் (கந்தசாமி பிரிவு).

திரு கே. செல்லமுத்து - இந்திய உழவர் உழைப்பாளர் கட்சி.

திரு டாக்டர் சிவசாமி - இந்திய உழவர் உழைப்பாளர் கட்சி.

திரு பொன்குமார் - விவசாயிகள் தொழிலாளர் கட்சி.

திரு செ.கு. தமிழ் அரசன் - இந்தியக் குடியரசு கட்சி.

திரு அந்தோணி தாஸ் - இந்திய கிருத்துவ குடியரசுக் கட்சி.

திரு வை. பாலசுந்தரம் - அம்பேத்கர் மக்கள் இயக்கம்.

திரு பி. மாணிக்கம் - பாரத மக்கள் காங்கிரஸ்.

திரு எம்.எஸ். தம்பா - கிருத்துவ ஜனநாயக முன்னணி.

திரு சேலம் எம். சின்னப்பன் - கிருத்துவ ஜனநாயக முன்னணி.

திரு ஜேசன் பெர்னான்டோ - கிருத்துவ முன்னேற்றக் கழகம்.

திரு என்.பி. கல்யாணம் - டெக்கான் காங்கிரஸ்.

திரு கே. காளியப்பன் - இந்திய பொருளாதார விடுதலை இயக்கம்.

திரு ஆர்.எஸ். ஞானசேகரன் - காமராஜ் தேசிய காங்கிரஸ்.

திரு ஜெக வீரபாண்டியன் - இந்திய தொழிலாளர் மற்றும் வேலை தேடுவோர் கட்சி.

திரு ஆர். பக்தவச்சலம் - தமிழர் கழகம்.

திரு ஆர். குலசேகரன் - தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர் கட்சி.

திரு பி. நெடுமாறன், திரு தாமஸ் சேம்சன் - தமிழர் தேசிய இயக்கம்.

டாக்டர் சோழமன்னர் கனகராஜா - உலக மக்கள் நல மகிழ்ச்சி சிந்தனையாளர் கழகம்.

திரு தா. பாண்டியன் - இந்திய ஐக்கிய பொதுவுடைமைக் கட்சி.

திரு அய்யணன் அம்பலம் - பார்வர்டு பிளாக்.

திரு டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி - மக்கள் சக்தி இயக்கம்.

திரு டி. தனசேகர் - தமிழக ஜனதா கட்சி.

திரு டி. வசீகரன் - அகில இந்திய சிறுபான்மையினர் கட்சி.

திரு கே.பி. ஷேக் தம்பி - தமிழ்நாடு முஸ்லீம் லீக்.

திரு டாக்டர் அமான் கான் - தேசிய மாணவர் கட்சி.

திருமதி ஜேன் - அகில இந்திய கிருத்துவ கட்சி.

திரு ஜஸ்டிஸ் பி. வேணுகோபால் - தென் மண்டல சமூக நீதிக்கான மையம் மற்றும் தமிழக மூதறிஞர்கள் குழு.

திரு டி. ஏகாம்பரம் - பகுஜன்சமாஜ்பார்ட்டி.

திரு எஸ்.எஸ். பழனிச்சாமி - இந்திய உழ்வர் உழைப்பாளர் கட்சி.

திரு முருகேசன் - தமிழ்நாடுமக்கள்முன்னேற்றக் கூட்டுறவு சக்தி.

சுற்றுலா

தமிழ்நாட்டின் மிக நீண்ட கடற்கரை, சிறிய தீவுகள், ஏரிகள், மலைவாழ் இடங்கள், பண்பாட்டு கலாச்சார மையங்களான கோவில்கள், அருங்காட்சியகங்கள், குகைக் கோயில்கள், சுவர் ஓவியங்கள், சரணாலயங்கள், இயற்கை நீரூற்றுகள், நீர்வீழ்ச்சிகள், ஆகியவற்றைக் காணவரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை 1991-92-ஆம் ஆண்டைக் காட்டிலும் 1992-93-ஆம் ஆண்டில் 16.77 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளுக்காக 1991-92, 1992-93 ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு முறையே ரூ.79.61 இலட்சம் ரூ.74.93 இலட்சம், ரூ.86.98 இலட்சம் உதவியையும் அளித்துள்ளது. நடப்பு நிதியாண்டில் தமிழ்நாடு அரசு ரூ.1.84 கோடியும், மத்திய அரசு ரூ.2.54 கோடியும் ஒதுக்கியுள்ளன. தமிழ்நாட்டில் சுற்றுலா ஒரு தொழிலாக அறிவிக்கப்பட்டு முதலீடு, நிதி உதவி மற்றும் இதர சலுகைத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. முத்துக்காடு, மாமல்லபுரம், காஞ்சிபுரம், தரங்கம்பாடி ஆகிய சுற்றுலா மையங்கள் சிறப்புச் சுற்றுலாப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. கும்பகோணம், தஞ்சாவூர், ராமேஸ்வரம், கன்னியாகுமரி, தரங்கம்பாடி, திருவரங்கம், திருத்தணி, பழநி, சிதம்பரம், மதுரை போன்ற 13 சுற்றுலா நகரங்கள் கலாச்சாரச் சுற்றுலா மையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

மாமல்லபுரத்தில் நடனவிழா சிதம்பரத்தில் நாட்டியாஞ்சலி விழா, குற்றாலத்தில் சாரல் திருவிழா, கிருஷ்ணகிரியில் மாங்கனி விழா, கொல்லிமலையில் வல்வில் ஓரிவிழா, உதகை, கொடைக்கானல், மதுரையில் சித்திரைப்பெரு விழா, ஏர்க்காடு, கல்வராயன், ஏலகிரி ஆகிய மலைகளில் கோடைவிழா போன்ற விழாக்களைச் சுற்றுலாத்துறை ஆண்டுதோறும் நடத்துகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில், ஓட்டல்கள் மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.2 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது.

முதலமைச்சர் பொது நிவாரண நிதி குவிகிறது!

மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் 19.11.93 அன்று மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு கே.ஜனார்த்தனன் அவர்கள் கால்நடை பராமரிப்புத்துறை சார்பாக ரூ.4,21,229-க்கான காசோலையையும், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் சார்பாக ரூ.2,50,000-க்கான காசோலையையும் பால் உற்பத்தி மற்றும் பால்வளத்துறை சார்பாக ரூ.58,216-க்கான காசோலையையும் ஆக மொத்தம் ரூ.7,29,445-க்கான காசோலையை முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்காக தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு வி. சத்தியமூர்த்தி அவர்கள் 19.11.93 அன்று வணிகவரித்துறை ஊழியர்கள் சார்பாக 5,04,000 ரூபாய்க்கான காசோலையை முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்காகவும், கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதிக்காக ரூ.1,48,095 ரூபாய்க்கான காசோலையையும் ஆக மொத்தம் ரூ.6,52,095-க்கான காசோலையை தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

தமிழ்நாடு வக்ப் வாரியத் தலைவர் திரு முகமது ஆசிப் அவர்கள் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்காக 1,16,812 ரூபாய்க்கான காசோலையையும், 200 லாந்தர் விளக்குகளையும் தமிழகத்திலுள்ள மதுரிகள் மற்றும் தர்காக்களில் பணிபுரியும் முத்தவல்லிகளின் சார்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் எம்.கே.இருஷ்ண சாமி, காள்வெண்ட் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகள் சார்பில் அதன் தாளாளர் மற்றும் முதல்வர் ஆகியோர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத் தலைவர் திருமதி பா. வளர்மதி அவர்களுடன் சென்று முதலமைச்சர் பொதுநிவாரண நிதிக்காக ரூபாய் ஒரு இலட்சம் வழங்கினார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக ஊழியர்களின் சார்பில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு பிரஜ் கிஷோர் பிரஸாத் அவர்கள் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்காக ரூ.1,01,007-க்கான காசோலையை வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக ஊழியர்களின் சார்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கே.எல். வெங்கடாசலம் அவர்கள் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்காக ரூ.1,56,062-க்கான காசோலையை வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தர்மபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக ஊழியர்களின் சார்பில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு எல். வாசுதேவன் அவர்கள் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்காக ரூ.1,42,492-க்கான காசோலையை வழங்கினார்.



மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் திண்டுக்கல் அவர்கள் மாவட்ட பால்வள அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் சார்பில் அதன் தலைவர் திரு வி.ஆர். சாமுவேல் அவர்கள் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்காக ரூ.70,000/- வழங்கினார்.



• நாட்டுக் கிடையில் 180 பள்ளிகளுக்காகவும், 7,000 மாணவர்களுக்கு உள்ளன. இவ்வா சுமார்க்கு அடைந்தபோது 32 பள்ளிகளுடனும், 700 மாணவர்களுடனும் இருந்தன. தற்போது இவ்வாறு பள்ளிகளில் 12 சதவீதம் பேர் அறிவியலையும், 20 சதவீதம் பேர் பொறியியல் - தொழில் வியலையும், 5 சதவீதம் மாணவர்கள் பொறியியல் - தொழில் நுட்பவியலையும், 3.4 சதவீதம் மாணவர்கள் பேர் மருத்துவத்தையும், 55 சதவீதம் பேர் சட்டத் வேளாண்மையையும், 5 சதவீதம் பேர் கலையியல் வதையும் 40 சதவீதம் மாணவர்கள் கலையியல் படிப்பையும் பயில்கின்றனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் திருப்பூர் தொழிற்சங்கங்கள் திரு கே.டி. குஞ்சுமோன் அவர்கள் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்காக ரூ.2,00,000-க்கான காசோலையை வழங்கினார்.

மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மாண்புமிகு முதல்வர் உதவி!

மீனவர்களுக்கு உதவி!

1993-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தமிழ்நாட்டில் பெய்த பெரும் மழை மற்றும் வெள்ளத்தின் காரணமாக இராமநாதபுரம் மாவட்டத்தில் வாழும் மீனவர்களது 'வல்லம்' என்னும் வகை நாட்டுப் படகுகள் அதிக எண்ணிக்கையில் பாதிக்கப்பட்டதை அறிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மீனவ சமுதாயத்தினரின் சாதாரண மீன்பிடிப் படகுகளுக்கு ஏற்பட்ட சேதத்தினை ஈடுகட்டி, அவர்கள் மீண்டும் தங்களது மீன் பிடிப்புத் தொழிலைத் தொடர்ந்து செய்வதற்கு உதவும் வகையில் 14.29 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்க ஆணை பிறப்பித்துள்ளார்கள். மேலும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள 'சின்ன ஏர்வாடி' என்ற மீன்பிடிக் கிராமத்தில் பெருமழையினால் சேதமுற்ற மீன்பிடித் துறையின் சுற்றுச் சுவர், மின்சார வசதி ஆகியவற்றைச் செப்பனிட 60,000 ரூபாயையும், மற்றும் இரர்மேஸ்வரம், மண்டபம் ஆகிய இடங்களில் சேதமடைந்த, தமிழக அரசு மீன் வளத் துறைக்குச் சொந்தமான விசைப் படகுகளைச் செப்பனிடும் பொருட்டு 1,39,000 ரூபாயையும், வழங்கி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

கால்நடைகளுக்குத் தடுப்பூசி போட...

1993-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தமிழ்நாட்டில் பெய்த பெரும் மழையை அடுத்து ஏற்பட்ட வெள்ளத்தினால் மதுரை, திருநெல்வேலி-கட்டபொம்மன், திண்டுக்கல்-அண்ணா, திருச்சிராப்பள்ளி, சிதம்பரனார், காமராசர் ஆகிய மாவட்டங்களில் உள்ள கால்நடைகள், கோமாரி நோயினால் (Foot and Mouth Disease) பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது என்பதை அறிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இம் மாவட்டங்களில் உள்ள கால் நடைகள் இந்த நோயினால், பாதிக்கப்படுவதைத் தடுக்கும் பொருட்டு, அவைகளுக்கு உடனடியாகத் தடுப்பூசி (Vaccination) மற்றும் இதர மருந்துகளை விரைந்து வழங்க 2.50 இலட்சம் ரூபாயை நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.

போர்க்கால அடிப்படையில் சாலை மற்றும் மராமத்துப் பணிகள்!

கடந்த நவம்பர் மாதம் தமிழ் நாட்டில் பெய்த பெருமழையினால் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக, மாநிலத்தின் பல இடங்களில் சாலைகள், ஏரிகள், நீர்சாலைகள் ஆகியவை பாதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பாதிப்பு ஏற்பட்டுள்ள சாலைகளையும், உடைப்பு ஏற்பட்டு உள்ள ஏரி, கால்வாய், கண்மாய் போன்ற நீர்நிலைகளையும் பழுது பார்க்கவும், அவற்றை உடனடியாகச் செப்பனிடவும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 10 கோடி ரூபாய் நிதியினை வழங்கி ஆணை பிறப்பித்து உள்ளார்.

ஒதுக்கப்பட்ட மொத்த நிதியில் பாசன நீர்நிலைகளில் மராமத்துப் பணிக்காக 3 கோடி ரூபாயும், மாநில நெடுஞ்சாலை மற்றும் ஊரகச் சாலைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைச் செப்பனிட 5 கோடி ரூபாயும், தேசீய நெடுஞ்சாலைகளில் மராமத்துப் பணிகளை மேற்கொள்ள 2 கோடி ரூபாயும் செலவிடப்படும்.

மாவட்ட வாரியாகப் பாதிப்புகளை ஆராய்ந்து அவசியத்தின் அடிப்படையில் தேவைப்படுகின்ற இடங்களில் மேற்கண்ட நிதியைக் கொண்டு மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் நிதியைக் கொண்டு மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், செப்பனிடும் பணிகள் போர்க்கால அடிப்படையில் விரைந்து முடிக்கப்படவேண்டும் எனவும், சம்பந்தப்பட்ட துறைகளின் தலைமைப் பொறியாளர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

ஒவ்வொருவரும் தத்தம் வாழ்நாள் முழுவதும் மாணவன் போலவே கற்க வேண்டும். தனக்கென்று ஒரு நூல் நிலையம் வைத்திருக்க வேண்டும். தன்னைச் சுற்றிலும் உள்ள வறியவர்களுக்கு உதவ வேண்டும்.

— அண்ணல் அம்பேத்கர்

மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் பார்கர் தொகுதி மாதேபள்ளியில், தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் கருங்கல் ஒடுகளை மெருகேற்றும் தொழிற்சாலையில் மெருகேற்றப்பட்ட முதல் கருங்கல் ஓட்டினை, மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு எம். சின்னசாமி அவர்களும் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு ஏ.என். தியாகேஸ்வரன் அவர்களும் (19.11.93) அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் 19.11.93 அன்று மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு எம். சின்னசாமி அவர்கள் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் அரசு பங்குத் தொகையாக ரூபாய் ஒரு கோடிக்கான காசோலையையும், தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் அரசு பங்குத் தொகையாக ரூபாய் ஒரு கோடிக்கான காசோலையையும் ஆக மொத்தம் ரூ.2 கோடிக்கான காசோலைகளை தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

23.11.1993 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற இந்திய சர்வதேச வர்த்தகப் பொருட்காட்சி 1993-இல், தமிழ்நாடு நாள் விழாவை மாண்புமிகு தமிழக செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் குத்து விளக்கேற்றித் தொடங்கி வைத்தார்.

திருவேற்காடு அருள்மிகு கருமாரியம்மன் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. மூர்த்தி அவர்கள் தமிழ்நாடு திருக்கோயில் புனரமைப்பு நிதிக்காக 3,00,000/- ரூபாயை மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் வழங்கினார். திரு. குன்னக்குடி வைத்தியநாதன் உடன் உள்ளார்.



மதுரை மாவட்டம் முக்கிய விவரங்கள்

பரப்பளவு: 6,614.43 சதுர கிலோ மீட்டர்
மக்கள் தொகை: 34,47,595

வருவாய்க் கோட்டங்கள்:

1. மதுரை (மதுரை தெற்கு, மதுரை வடக்கு, மேலூர், வாடிப்பட்டி)
2. உசிலம்பட்டி (திருமங்கலம், பேரையூர்)
3. பெரியகுளம் (பெரிய குளம், உத்தம பாளையம், ஆண்டிப்பட்டி)

வளர்ச்சிக் கோட்டங்கள்

மதுரை	உசிலை	பெரியகுளம்
மதுரை கிழக்கு	உசிலம்பட்டி	பெரியகுளம்
மதுரை மேற்கு	திருமங்கலம்	தேனி
திருப்பரங்குன்றம்	தே.கல்லுப்பட்டி	போடிநாயக்கனூர்
மேலூர்	கல்லிக்குடி	கம்பம்
கொட்டாம்பட்டி	செல்லம்பட்டி	சின்னமனூர்
அலங்காநல்லூர்	சேடபட்டி	உத்தமபாளையம்
வாடிப்பட்டி	பேரையூர்	ஆண்டிபட்டி
		மயிலாடும்பாறை
		கடமலைக்குண்டு

பேரூராட்சிகள்

அவனியாபுரம்
திருப்பரங்குன்றம்
ஹார்விபட்டி நகரியம்
திருநகர்
பரவை
அ.வள்ளாளபட்டி
விளங்குடி
ஆனையூர்
உசிலை
பேரையூர்
அலங்காநல்லூர்
சோழவந்தான்
வாடிப்பட்டி
பாலமேடு
தே.கல்லுப்பட்டி
எழுமலை
ஆண்டிப்பட்டி
உத்தமபாளையம்
தேவாரம்
கூடலூர்
ஹைறவேவில் நகரியம்
கோம்பை
புதுப்பட்டி
காமயக்கவுண்டன்பட்டி
வீரபாண்டி
கெங்குவார்பட்டி
தேவதானப்பட்டி
வடுகப்பட்டி
தென்கரை
தாமரைக்குளம்
பழநி ரெட்டிப்பட்டி
குச்சனூர்
அனுமந்தன்பட்டி
ஓடைப்பட்டி
பண்ணைப்புரம்
பூதிப்புரம்
பி.மீனாட்சிபுரம்
மார்க்கண்டேயன் கோட்டை
மேலச் சொக்கநாதபுரம்

துரை. தாமரைச் செல்வம்
செய்திமக்கள் தொடர்பு அலுவலர்
மதுரை.

வரலாற்றில் மதுரை

• சுந்தர பாண்டியன்- ஆகிய வீரபாண்டியன் மன்னர்களுக்கிடை இரு யிலான பதவிச் சண்டை யால் பாண்டியர் ஆட்சி சீர்குலைந்தது; மாலிக்காபூர் மதுரை மாநகரைச் சூறை யாடினான்; சுந்தர பாண் டியன் துணைக்கு அழைத்த தாலேயே அவன் இங்கு வந்தான்.

• குல்ருகான் டில்லியி லிருந்து மதுரை மீது படை யெடுத்தான்; மதுரையில் ஆட்சி ஏற்பட்டது; முகமது பின்-துக்ளக் காலத்தில், மதுரை டில்லி சுல்தான் ஆட்சிக்கு உட்பட்டது.

• முதலாம் சோழன் பாண்டிய நாடு முழுவதும் தஞ்சைச் சோழர் ஆட்சிக் குட்பட்டிருந்தது; போதைய பாண்டிய நாடு ராஜராஜ

எனப்பட்டது. முதலாம் சோழன் இராசேந்திர காலத்திலிருந்து (1012-1044), மதுரையில் சோழ- பாண்டியர் என்ற பட்டத் தோடு அரசப் பிரதிநிதி யொருவர் நியமிக்கப்பட்டி ருந்தார்.

• இலங்கைப் படைகள் உரிமையைக் மதுரையை முற்றுகையிட் டும், அவை சோழப் படை யால் வெல்லப்பட்டதும் இதைப் பற்றி 'மகாவம்சம்' விவரிக்கிறது.

• சங்க காலம் முதல் ஆயிரம் ஆண்டுகள் நடைபெற்ற மன்னர்கள் 1947 வரை இங்கிலாந்து ஆட்சி, கி.பி. 1330-ல் அரசின் காலத்தில் முடிவுற்றது. இதற்கு மதுரை சிலகாலம், தென் மேலும் சிலகாலம் தலைநகராகக் ஆட்சிக் காசியைத் கொண்டு பாண்டியன் அப் பராக்கிரம மண்டலம் அரசாண்டதாக என்பவர் தெரிவிக்கிறது. வரலாறு

• மதுரை நகரானது விஜயநகர அரசரின் கீழும் வம்சத்தார் ஆர்காட்டு நவாப் வசம்), சிலகாலம் ஆட்சியிலும் இருந்திருக்கிறது.

• ஆர்க்காட்டு நவாப்பிட வரிவதுலிக்கும் கி.பி. 1790-ல் மிருந்து ஆங்கிலேயர்கள். பெற்றனர் அப் போதுதான், வரி வது லிக்க எனத் தனி அதிகாரி முதன்முதலாக நியமிக்கப் பட்டார்; அவர் பெயர்- அலெக்சாந்தர் மக்லியோட் (Macleod). 1857 முதல் 1947 வரை இங்கிலாந்து கீழிருந்தது

தொகுப்பு: பி.எல்.ஆர்.

அருள்மிகு மீனாட்சியம்மன் கோயிலில் உள்ள ரதிதேவி சிலை.

மதுரை மாவட்டம்:

மன்னர் திருமலை

திருஷ்ண தேவராயர் வழிவந்த விசுவநாத நாயக்கர்தான் கி.பி. 1529-ல் மதுரை மாநகரையே உருவாக்கிய சிறப்பினராகக் கருதப் படுகிறார். அவரால தொடங்கப் பட்ட நாயக்க அரசு, கி.பி. 1736 வரை நீடித்தது. முதலாமவரான விசுவநாதரே திருச்சிராப்பள்ளியை யும், திருநெல்வேலியையும்கூட அழகு படுத்தியதாகவும் கூறப் படுகிறது.

நாயக்க வமிசத்தார் ஆட்சியில், விசுவநாதரைத் தொடர்ந்து- முதலாம் கிருஷ்ணப்பர், முதலாம் வீரப்பன், இரண்டாம் கிருஷ்ணப்பர், விசுவப்பர், கஸ்தூரிரங்கன், முத்துக் கிருஷ்ணப்பர், முதலாம் முத்து வீரப்பர் ஆகியோர் அடுத்தடுத்து அரசு செலுத்தி வந்தனர்.

இவர்களையடுத்து ஆட்சி பீட மேறியவர்தான், முத்து வீரப்பரின் சகோதரரான மன்னன் திருமலை (1623-1659). மதுரை, நாயக்கர் வமிச ஆட்சியினரிலேயே, முத்துக் கிருஷ்ணப்பரின் இரண்டாவது புதல்வரான இவர், மிகுந்த புகழ் பெற்றவராக விளங்குகிறார். 1584-ல் தைப்பூச நன்னாளில் பிறந்த இவருடைய இயற்பெயர் - திருமலை சவுரிநாயினு அய்யலுகாரு என்பதாகும்.

அதுவரை திருச்சிராப்பள்ளியே இவர்களுடைய தலைநகரமாக இருந்துவந்தது. 1634 முதல் தலை நகர அந்தஸ்தை மதுரையே பெற்றது. மதுரையைத் தலைநகராகக் கொண்ட இவர், தம் முன்னோர்கள் போலன்றி, விஜயநகர மன்னர்

'மாறுபட்டுப் போராடுதல் மானமாகு செற்றெல் என்று, மானை கட்டுப் போராடுத்த அரசான தென் மதுரை'யில்- இப்போதெல்லாம் எத்திரங்களே கதிரடிக்கின்றன!

தொலைபேசி எண்:
மதுரை தலைமையகம்: 602169
திண்டுக்கல் கிளை: 27354

ஏ.2295, மதுரை கூட்டுறவு அச்சகம் லிமிடெட்.

12, திருப்பரங்குன்றம் சாலை, ஆண்டாள்புரம், மதுரை-625 003

உங்களது அச்சுப்பணிகள், தினசரி காலண்டர்கள், மாதாந்திரக் காலண்டர்கள், மாணவர் நோட்டுப் புத்தகங்கள் ஆகியவற்றை சிறந்த முறையில் குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து தருகிறோம். உங்கள் தேவைக்கு மதுரை மற்றும் திண்டுக்கல் கிளையை அணுகவும்.

திண்டுக்கல் கிளை

ஏ.2295, மதுரை கூட்டுறவு அச்சகம் லிமிடெட்
15, சிட்கோ தொழிற்பேட்டை, திண்டுக்கல்-624 006.

விற்பனை நிலையங்கள்

மதுரை: எம்.டி.சி.சி. வங்கி தலைமையகம், இராமலிங்க நகர், வசந்தநகர்.
தேனி: தேனி கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிட்., தேனி.
திண்டுக்கல்: பாண்டியன்நகர் கூட்டுறவுப் பண்டகசாலை லிட்., பாண்டியன்நகர்.

உறுப்பினர்களுக்கு

1. உச்சபட்சமாக 14% பங்கு ஈவு (டிவிடெண்ட்) வழங்கி வருகிறோம்.
2. அச்சுக்கூலியின் மீது 10% வரை கொள்முதல் தள்ளுபடி (ரீபேட்) வழங்கி வருகிறோம்.

எல்லா கூட்டுறவு நிறுவனங்களும் உறுப்பினராகச் சேரலாம். பங்கு ஒன்றுக்கு ரூ.10 மட்டுமே. அச்சகத்தில் உறுப்பினராகச் சேர்ந்து பயன் பெறுவீர்!

அ. தவமணி, எம்.ஏ., எச்.டி.சி., டி.சி.எம்.,
தனி அலுவலர்

களின் பிடியிலிருந்து முற்றிலுமாகத் தம்மை விடுவித்துக் கொண்டார்.

திருமலை மன்னராட்சிக் காலத்தில், முதலமைச்சராக இருந்தவர் நீலகண்ட தீட்சிதர்.

மதுரை மீது போர் தொடுத்த சாமரா உடையார் கி.பி. 1625-ல் திருமலை நாயக்கரால் தோற்கடிக்கப்பட்டார்; திருவாங்கூர் மன்னருக்கெதிராக இவர் அனுப்பிய படைகள் பெரு வெற்றிபெற்றன; இராமநாதபுரம் சேதுபதி சடைக்கத் தேவரும் போரில் வெல்லப்பட்டார்; மீண்டும் தலைதூக்கிய விஜய நகர மன்னரின் துடுக்குத் தனமும் ஒடுக்கப்பட்டது.

மைசூரை ஆண்ட கந்தீரவன், படைவலி மிக்கவனாக இருந்தான்; மதுரை மீது போர் தொடுத்த அவன், மதுரை மக்களின் மூக்கை அறுத்துத் தமது மன்னருக்கு அனுப்பி வைத்தான். இதைக்கண்டு கொதித்தெழுந்த மன்னர் திருமலை, இராமநாதபுரம் ரகுநாத சேதுபதி படைத்துணையோடு அக்கொடியவனை எதிர்த்துக் களம் புகுந்தான். மைசூருக்குள்ளேயே திருமலையின் படைகள் புகுந்து வெறியாட்டம் ஆடின; அவர்களைப் போலவே மைசூர் மக்கள் பலரின் மூக்கறுக்கப்பட்டது; அவை, மன்னன் திருமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. மைசூர் மன்னரின் மூக்கும் கூட இந்தக் கொடூரத்திற்குத் தப்பவில்லை!

இந்தப் போரே, திருமலையின் வீர வரலாற்றில் நடத்தப்பட்ட ஐந்து போர்களில் முக்கியமானதாக ஒன்றெனக் கருதப்படுகிறது. இவர் படையில் 30,000 வீரர்கள் இருந்தனர். ஆயினும், போர்க்கள வெற்றிகளால் மட்டுமே அவர் புகழ் நிலை பெறவில்லை; அவருடைய ஆட்சி நிர்வாகச் சிறப்பே அதற்கு முக்கிய காரணம் என்கிறார்கள் வரலாற்றாசிரியர்கள்.

வைணவரான மன்னர் திருமலை, சாதி சமயச் சகிப்புத் தன்மை மிக்கவராக விளங்கினார். சைவர்களையும் மதித்து நடந்து கொண்டார். கிறிஸ்தவப் பெருமக்களோடும் இவர் நட்பு பாராட்டியதுண்டு. இவருக்கு 200 மனைவியர் இருந்தனர் என்றும், அவர்களில் இரண்டு பேரே பட்டத்தரசிகளாக இருந்தார்கள் என்றும் வரலாறு கூறுகிறது. தலைசிறந்த கட்டடக்கலை நுணுக்க வல்லுநராகத் திகழ்ந்தார் இவர்; மதுரை நகரின் நடுவே இன்றும் பொலிவுறத்திகழும் திருமலை நாயக்கர் மகால் என்ற கட்டடம் ஒன்றே இதனை உறுதிப் படுத்தும்.

மதுரையில் அதுவரை மாசி மாதத்தில் நடைபெற்று வந்த பெரு விழாவைச் சித்திரைத்திருவிழாவாக மாற்றினார் திருமலை நாயக்கர். வண்டியூர் தெப்பத் திருவிழாவைத் தம் பிறந்த நாளிலேயே நடைபெறச் செய்தார். அருள்மிகு மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயில், அருள்மிகு வண்டியூர் மாரியம்மன் திருக்கோயில், திருப்பரங்குன்றம் அருள்மிகு முருகப் பெருமான் திருக்கோயில், அழகர்மலை அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் போன்ற பல கோயில்களிலும் இம்மன்னர் பெருமானால் கோபுரங்கள் கட்டப்பட்டன; திருப்பணிகள் செய்யப்பட்டன. பலிபீடங்கள், கொடிக் கம்பங்கள் அமைக்கப்பட்டன.

திருமலை மன்னரால் 1636-ல் கட்டி முடிக்கப்பட்டதே 'மகால்' எனக் குறிப்பிடப்படுவதாகும். அதுவே இவருடைய அரண்மனையாக விளங்கியது. திருமலை மன்னரால் 'சொர்க்க விலாசம்' என்றே இக்கட்டடத்தில்அவர் வாழ்ந்த பகுதி குறிப்பிடப்படுகிறது.

இந்த மகாலில் நான்கு பெரும் பகுதிகள் இருந்ததாகவும், இப்போதுள்ளது எஞ்சியுள்ள ஒரு பகுதியே என்றும் கூறுகிறார்கள் வரலாற்றாசிரியர்கள்.

திருமலை நாயக்கர் மகாலில் கனகம்பீரமாக, உருண்டு திரண்டு இன்னமும் பளபளப்போடு நிற்கும் தூண்களின் எண்ணிக்கை 248. ஏறத்தாழ 5 மீட்டர் சுற்றளவுள்ள ஒவ்வொரு தூணும் 4.5 மீட்டர் முதல், 9 மீட்டர் வரை உயரம் உடையதாகும்.

இந்தியாவில் உள்ள வேறெந்தப் பழங்காலக் கட்டடத்திலேயும் இத்தனைப் பருமனும் உயரமும் கொண்ட தூண்கள் கிடையாது.

இந்தக் கட்டடத்தின் இன்னொரு முக்கிய வியப்புக்குரிய செய்தி என்ன தெரியுமா? இரும்போ, மரமோ மகாலின் எந்தப் பகுதிக்கும் அறவே பயன்படுத்தப்படவில்லை!

தாமரை மொட்டுப் போன்ற குளிமாடங்களும், மாட விளக்குப் போன்ற கலைநுணுக்கம் மிக்க வளைவுகளும் ஆகிய யாவுமே - சுண்ணாம்பு, மண், செங்கல், கருங்கல் ஆகியவற்றைக் கொண்டு மட்டுமே உருவாக்கப்பட்டிருப்பது ஓர் அற்புதம்! இம் மகாலின் உட்புற இடைவெளி 252 அகலமும், 151 அடி நீளமும் உடையதாகும்!

கட்டடக்கலை நுணுக்கம் வல்லார் இந்துக்காலக் கட்டடக்கலை, இசுலாமியரின் கட்டடக்கலை, ஐரோப்பியக் கட்டடக்கலை, மூன்றுமே திருமலை நாயக்கர் மகாலில் கைகோத்துக் கொண்டு காட்சியளிக்கின்றன என்று உறுதியோடு தெரிவிக்கிறார்கள்.

இத்தனைச் சீரும் சிறப்பு மிக்க இந்த அரண்மனை, மன்னர் திருமலை நாயக்கர் தமது 75-ஆம் வயதில் மறைந்த பிறகு - பிற்காலத்தில் அதே சிறப்பினதாகப் பாதுகாக்கப்படவில்லை; பிற்காலத்தில் அதன் பெரும்பகுதி அவருடைய பேரப் பிள்ளையாலேயே இடித்துத் தள்ளப்பட்ட கொடுமையும் நிகழ்ந்தது.

பிற்காலத்தே, பழஞ்சின்னங்களைப் பாதுகாக்கும் பண்புடைய ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கியது; சென்னையிலிருந்த ஆங்கிலேய ஆளுநர் நேப்பியர் பிரபு முயற்சியால் - இப்போதுள்ள கட்டடப் பகுதியானது ஆங்கிலேய அரசாலேயே செப்பனிடப்பட்டது.

1886-க்குப் பின்னாலே சில காலம் இக் கட்டடத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் செயல்பட்டது; மதுரை-இராமநாதபுர நீதிமன்றங்களும் சில காலம் இங்கே செயல்பட்டதுண்டு.

தமிழ்நாடு அரசால் 1981-ல் இம் மகாலில், 45 நிமிட நேர ஒலி-ஒளி காட்சி தொடங்கப்பட்டது; அதன் மூலம், திருமலை நாயக்கரின் வரலாற்றை அறிய உள்ளூர், வெளியூர், பிற மாநில மக்கள் மட்டுமல்ல; வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் ஏராளமான அளவில் நாள்தோறும் வருகிறார்கள், கண்டு மகிழ்ந்து நல்லின்பம் பெறுகிறார்கள்.

—'இந்திரன்'

• மதுரை ஒரு முக்கியச் சந்திப்பாகும். அங்கிருந்து கிழக்கே இராமேசுவரத்திற்கும்; மேற்கே தேக்கடி, கோட்டயம், கொச்சி முதலிய இடங்களுக்கும்; தெற்கே தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, திருவனந்தபுரம் முதலிய நகரங்களுக்கும், வடக்கே தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சென்னை, கோவை, நீலகிரி முதலிய நகரங்களுக்கும் தடங்கள் பிரிகின்றன.

—என். முருகன்

TNSC BANK

The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

Rate of Interest on Deposits (Effective from 2.9.1993

Sl.No.	Type of Deposit	Rate of Interest per annum
1.	Savings Bank Accounts	5.25% w.e.f. 1.7.1993
2.	Fixed Deposits :	
	For 46 DAYS and above but upto 270 days	9.00%
	For 271 DAYS and above but upto 364 days	9.50%
	For 1 YEAR and above	10.25%

Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

தமிழ்நாட்டில் வனத்துறை அலுவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக மதுரை மாவட்டம் வைகை அணை அருகே தமிழ்நாடு வன வியல் கல்லூரி 1961-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. சுமார் 200 எக்டேர் நிலப்பரப்பில் அமையப் பெற்ற இந்தக் கல்லூரி, வனத்துறை அலுவலர்கள் பயிற்சிக்காகத் தமிழகத்தில் நிறுவப்பட்ட ஒரே கல்லூரியாகும்.

இந்தக் கல்லூரியில் வனவர்களுக்கு (Forester) ஓராண்டுப் பயிற்சியும் வனப்பாதுகாவலர்களுக்கு (Forest Guards) ஆறு மாத காலப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. வனவர் பயிற்சி ஜூலையில் தொடங்கி அடுத்த ஆண்டு ஜூன் மாதம் வரை நடைபெறும். வனப் பாதுகாவலர்களுக்கு சனவரி முதல் ஜூன் மாதம் வரை ஒரு பிரிவும் ஜூலை மாதம் தொடங்கி டிசம்பர் வரை ஒரு பிரிவுமாக ஆண்டுக்கு இரு பிரிவுகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒரே சமயத்தில் 60 வனவர்களுக்கும், 60 வனக் காவலர்களுக்கும் இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. தற்சமயம் இந்த வனக் கல்லூரியில் 33-வது பிரிவு வன அலுவலர்களுக்கும், 60-வது பிரிவு வனக் காவலர்களுக்கும் பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

வனத்துறை அலுவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக இங்கு 6 பயிற்றுநர்களும், 2 உதவிப் பயிற்றுநர்களும் உள்ளனர். இதைத்தவிர இளம் பொறியாளர் ஒருவரும், கல்லூரி வளாகப் பராமரிப்பு, மான் பூங்கா, மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாடு ஆகியவற்றிற்குத் தனித்தனியே ஒரு வனத்துறை அலுவலரும் (Forester) பணியாற்றுகிறார்கள்.

பயிற்சிக் காலத்தில் 13 பாடங்கள் கற்பிக்கப்பட்டு இறுதியில் தேர்வு நடத்தப்படுகிறது. தேர்வில் வெற்றி பெறாத வன அலுவலர்கள் மீண்டும் தேர்வு எழுதத் தேர்ச்சி பெற வேண்டும். ஒரு வனவரோ அல்லது வனப் பாதுகாவலரோ பதவி உயர்வு பெறவேண்டுமாயின் இங்கு பயிற்சி பெறுதல் அவசியமாகிறது. இதன் காரணமாக வனத்துறை அலுவலர்கள் பணி மூப்பின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு, பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள்.

பயிற்சிக் காலத்தின்போது வன அலுவலர்கள் 4 மாத காலமும் வனப் பாதுகாவலர் 2 மாத காலமும் அண்டை மாநிலங்கள் மற்றும் தமிழகத்திலுள்ள பிற மாவட்டங்களுக்குக் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவார்கள். சுற்றுலாவின் போது மலையேறும் பயிற்சி போன்ற பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

வன அலுவலர்களுக்குத் துப்பாக்கி சுடுதல், மாரத்தான் ஓட்டம் போன்றவற்றில் இந்தக் கல்லூரியில் தக்க பயிற்சி தரப்படுகிறது.

இங்கே பணியாற்றும் அனைத்து அலுவலர்களுக்கும் தங்குவதற்குத் தனித்தனி வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. பயிற்சிக் காலத்தின் போது வனத்துறை அலுவலர்கள் தங்குவதற்கு வசதியும், உணவக வசதியும் செய்து தரப்பட்டுள்ளன.

வனக்கல்லூரி வளாகத்தினுள் கல்லூரியைத் தவிர, வன அரும் பொருட்காட்சியகம் ஒன்றும், தனி அரங்கம் (Auditorium) ஒன்றும் நிறுவப்பட்டுள்ளன. இந்த அரங்கம் ரூ.11 இலட்சம் செலவில் கட்டப்பட்டு 12.6.93 அன்று மாண்புமிகு சட்டப் பேரவைத்தலைவர் சேடபட்டி முத்தையா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இவற்றைத் தவிர இங்கு ஒரு அழகிய மான் பூங்காவும் (Deer Park) பராமரிக்கப்பட்டு வருகிறது. கல்லூரி வளாகத்தில் சந்தன மரங்கள் முதலாக அனைத்து ரக மரம் மற்றும் பயன்தரு செடி வகைகளும் வளர்க்கப்பட்டு நன்கு பராமரிக்கப்படுகின்றன.

மதுரை, வைகை அணை வன வியல் கல்லூரி நாட்டிலேயே சிறந்த கல்லூரிகளில் ஒன்றாகத் தேர்வு செய்யப்பட்டிருப்பதாகும்; இதனாலேயே அந்தமான் வனத்துறை தமது இரு வனத்துறை அலுவலர்களை 1985-ஆம் ஆண்டு பயிற்சிக்காக அனுப்பி வைத்ததாகவும், மற்ற மாநிலத்திலிருந்தும் அனுப்பி வைக்கப்படுவதாகவும் இந்தக் கல்லூரியின் பயிற்றுநர் திரு. டி.என். அம்பலத்தரசன் தெரிவித்தார்.

—ஜே.சி.

வீரத் தமிழர் விளையாட்டு

– த. அன்பழகன்

தமிழகத்திலே கலையும் இலக்கியமும் மட்டும் தோன்றவில்லை. திண்தோள் கொண்ட காளையர்கள் பங்கேற்கும் வீர விளையாட்டுகள் பலவும் இருந்தன; இன்றுமிருக்கின்றன. அவ்வாறு தோன்றிய விளையாட்டுகளில் ஒன்றுதான் ''மஞ்சு விரட்டு'' எனப்படும் ஜல்லிக்கட்டு என்ற வீரவிளையாட்டு. இந்த விளையாட்டு இன்று நேற்றுத் தோன்றியதல்ல. தமிழ்ச் சங்கங்கள் கண்ட மன்னர்கள் காலத்திலேயே இவ்விளையாட்டுப் புகழ் பெற்று விளங்கியது. இத்தருணத்தில் இவ் விளையாட்டின் பெயர் ''ஏறு தழுவுதல்'' என்பதாகும். அந்நாட்களில் திருமணமாகாத இளங் காளையர்கள் ஏறு தழுவுதலில் ஆர்வமுடன் பங்கேற்றனர். இந்த ஆர்வத்திற்கு வேறோரு சிறப்புக் காரணமும் உண்டு!

அக்கால ஆண்மகன் தன் மனம் விரும்புகின்ற காதலியரின் கடைக்கண் தரிசனம் பெற வேண்டுமெனில், அவளை மணக்க வேண்டுமெனில் அம்மங்கையரின் முன் அவன் தானொரு வீரன் என்பதை நிரூபிக்க வேண்டும். இதற்காகவே ''ஏறு தழுவும்'' விளையாட்டில் பங்கு கொண்டு சீறி வரும் காளையை அடக்கித் தன்னை ஆண் சிங்கமென நிரூபிப்பான் அவன். இந்த விளையாட்டில் வெற்றி பெறும் வீரனின் பால் மையல் கொண்ட மங்கையரும் அவனை மணம்புரிந்து, அவன் பெற்ற வீரத் தழும்புகளில் முத்தமிட்டு மகிழ்ந்தார்கள் என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

மன்னரே களம்காணல்

ஏறு தழுவும் விளையாட்டு அக்காலத்திலேயே தமிழர்களின் பெருமையைப் பறைசாற்றும் வகையில் பெருவிழாவாக எடுக்கப்பட்டது. தைத்திரு நாளின் போது உழவுக்கு வந்தனை செய்யும் வகையில், இவ் விழா கொண்டாடப்பட்டது. இவ் விழாவுக்கென அக்காலத்திலேயே பெரிய மைதானங்கள் தயார் செய்யப்பட்டு அதனுள் விளையாட்டுகள் நடந்துள்ளன. இவ்விழாக்களில் பல கிராமங்களில் இருந்தும் காளைகள் வந்து பங்கேற்கும்.

தடித்த திமில்களோடும், பளப் பளப்புடன் சீவப்பட்டு நீண்டும், வளைந்தும் காணப்படுகின்ற கொம்புகளோடும், எதிரியை எந்நேரமும் பதம் பார்க்க கோபாவேசத்தோடு நிற்கின்ற இந்தக் காளைகளை அடக்க பல்வேறு கிராமங்களில் இருந்து காளையரும் வந்திறங்குவர். மன்னர் குடி மக்கள் முன்னிலையில் 'மஞ்சு விரட்டு' ஆரம்பமாகும். சீறிடும் காளைகளின் கூரிய கொம்பிலும், கழுத்திலும் பணமுடிப்புகள் காணப்படும். சில பெருந்தனக்காரர்கள் தங்களது காளையை அடக்கிடும் மாவீரனுக்குத் தங்களது மகளிரையே மணமுடித்துத் தருவதாகப் பந்தயம் கட்டுவார்கள்.

கி.பி. 1742-இல் விஜயரகுநாத சேதுபதி மன்னனே இவ்விளையாட்டில் பங்கு கொண்டதாகத் தெரிய வருகிறது. ராமேஸ்வரம் செல்லும் வழியில் உள்ள அக்காமடம் என்ற பகுதியில் இவ்விழா நடந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பாஞ்சாலங் குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு ஆண்டு வந்த வீரபாண்டிய கட்டபொம்மனின் தளபதிகளுள் ஒருவனும், வலதுகரமாக விளங்கிய வனுமான வெள்ளையத்தேவன் என்ற வீரன் 'மஞ்சு விரட்டில்' கலந்து கொண்டு காளையை வெற்றிகண்ட பின்னரே தன் காதலி வெள்ளையம்மாளைக் கரம் பிடித்தான் என்பதும் வரலாறு.

இன்னும் பல வரலாற்றுச் சம்பவங்களைப் பின்னணியாகக் கொண்ட 'ஜல்லிக்கட்டு' வீர விளையாட்டு இன்றும் மதுரையை மையமாகக் கொண்டு பல கிராமங்களில் சிறப்பாக நடந்து வருகிறது.

சங்க காலத்தில்...

ஏறு தழுவுதல், சங்க காலத்தே பெரிதும் புகழ் பெற்றிருந்தது. சங்க இலக்கியங்களில் - எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான கலித்தொகை முல்லைக்கலியில் இந்த வீர விளையாட்டுப் பற்றிய பாடல் பல உண்டு.

ஏறு தழுவும் காளையர்-பிடவம், செங்காந் தள், காயா ஆகியவற்றின் மலர் மாலைகளை அணிந்திருப்பார்கள். மணத்திற்குத் தயாராக உள்ள மங்கையரோ - பிடவம், முல்லை, தோன்றி, கொன்றை மாலைகளை அணிந்து பரண்மேல் அமர்ந்து இந்த வீர விளையாட்டைக் கண்ணுறுவர்.

சல்லிக்கட்டு

மஞ்சு விரட்டின்போது மாட்டின் கழுத்தில் கட்டும் வளையமானது 'சல்லி' எனப்படும். அதைப் பெரும்பாலும் புளிய மிலாறினால் கட்டுவர். அதில் வெள்ளிக் காசுகளோ, பொற்காசுகளோ முடியப் பட்டிருக்கும். இத்தகைய 'சல்லி' யைக் கட்டுவதாலேயே இவ் விளையாட்டைச் சல்லிக்கட்டு என்றும் கூறுவது உண்டு.

மஞ்சு என்கிற ஒருவகை நாரினாலும் இவ்வளையம் முடியப் படும்; அதனால்தான் 'மஞ்சு விரட்டு' மாட்டைப் பிடிப்போர் அந்தப் பரிசுப் பொருட்களை எடுத்துக் கொள்ளுவார்கள்; ரொக்கப் பரிசும் தரப்படுவதுண்டு.

அலங்காநல்லூர்

இப்போது மாட்டுப் பொங்கலன்றோ, அதற்கு மறுநாளோ இந்த வீர விளையாட்டு ஒரு சில கிராமங்களில் மட்டுமே நடைபெறுகிறது. வெற்றி பெறுவோருக்குப் பரிசுகள் மட்டுமே வழங்கப் படுகின்றன.

இந்நாளில் - மதுரை மாவட்டத்தில் உள்ள அலங்காநல்லூர், அரளிப்பாளையம், சிறாவயல், உறங் கான்பட்டி ஆகிய இடங்களில் மட்டுமே மஞ்சுவிரட்டு நடைபெற்று வருகிறது. இதையே மாடுபிடித்தல், எருதுபிடித்தல், காளைச் சண்டை என்றெல்லாம் குறிப்பிடுவதுண்டு.

பல ஊர்க் காளைகளும் இவ் விழாவிற்குக் கொண்டுவரப்படும்.

கிரேக்க ரோமானிய நாடுகளிலும் இத்தகைய வீர விளையாட்டு நடைபெற்று வருகிறது.

ஆபத்தான விளையாட்டு

மஞ்சி விரட்டில் ஈடுபடும் இளைஞர் பலரும் படுகாயம் அடைவதுண்டு; முரட்டுக் காளைகளின் கூரிய கொம்புகள் சிலர் உயிரையே பறித்துவிடுவதும் உண்டு.

குறிப்பாக - அலங்காநல்லூரில் இந்த ஆபத்தான விளையாட்டு அமர்க்களமாக நடத்தப்பட்டு வருகிறது; உள்ளூர் வெளியூர் மக்கள் மட்டுமல்ல; வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் இந்த வீர விளையாட்டைக் கண்டுமகிழ வந்துவிடுவது உண்டு.

• இவ்வுலகில் மதங்கள் தொடர்பான பல வேறுபாடுகள் இருக்கக் கூடும்; மதங்களைப் பற்றிய நம் கருத்து எவ்வாறிருப்பினும், கடவுளின்கீழ் நாமெல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவே இருக்கவேண்டும்.

—டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்

சிறுசேமிப்பு - குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

சிறுசேமிப்புத்துறையின் மகத்தான பரிசுத்திட்டம்



இன்றே ரூ.500/-ம் அதற்கு மேலும் தமிழ்நாட்டில் முதலீடு செய்து இலவச பரிசுக் கூப்பன் பெறுங்கள்.

உங்கள் முதலீடுகளுக்கு 619 கவர்ச்சிகரமான பரிசுகள்

1 சூப்பர் பம்பர் முதல் பரிசு மாருதி ஆம்னிவேன் (அல்லது) 25 h.p.H.M.T. டிராக்டர்(இயந்திரக்கலப்பையுடன்)

1 இரண்டாவது பரிசு	- அஞ்சலக மாதாந்திர வருவாய்த்திட்டத்தில் ரூ.24,000/-க்கான முதலீடு
2 மூன்றாவது பரிசுகள்	- கலர் டெலிவிஷன்
2 நான்காவது பரிசுகள்	- உலர்த்தும் வசதியுள்ள செமிஆட்டோமேடிக் வாஷிங்மெஷின்
3 ஐந்தாவது பரிசுகள்	- 2 நபர்களுக்கு சென்னையிலிருந்து புறப்படும் 6 நாள் தென்னிந்திய சுற்றுலா
10 ஆறாவது பரிசுகள்	- 1 சவரன் (22 காரட்) தங்கநாணயம்
600 ஏழாவது பரிசுகள்	- ரூ.100/- மதிப்புள்ள இந்திராவிகாஸ் பத்திரம்

பரிசுக் கூப்பன் பெற முதலீடு செய்ய வேண்டிய திட்டங்கள்

- இந்திரா விகாஸ் பத்திரம் (IVP)
- கிசான் விகாஸ் பத்திரம் (KVP)
- தேசிய சேமிப்புப் பத்திரம் 8-வது வெளியீடு (NSCVIII ISSUE)
- தேசிய சேமிப்புத்திட்டம் 1992 (NSS '92)
- 15 ஆண்டு பொது சேமநல நிதித்திட்டம் (PPF)
- மாதாந்திர வருவாய்த் திட்டம் (MIS)
- ஓய்வு பெறும் அரசு/பொது நிறுவன ஊழியர்களுக்கான சேமிப்புத் திட்டம் 1 மற்றும் 2 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D) 1% ஊக்கத்தொகை
- 3 மற்றும் 5 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D)
  அஞ்சலகத் தொடர் வைப்புத்திட்டம் / வளரும் மாத சேமிப்புத் திட்டம் (R.D./C.T.D.)

மேலும் 2% ஊக்கத்தொகை குறிப்பிட்ட திட்டத்திற்கு

சேமிப்புப்பத்திரம் அனைத்து அஞ்சலகங்களிலும் கிடைக்கும்

மேலும் விவரங்களுக்கு:
ஆணையர், சென்னை மாநகராட்சி, (சி. சே. பிரிவு) சென்னை - 600 003.
தொலைபேசி: 584440
மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், 92, அண்ணா சாலை,
சென்னை 600 002. தொலைபேசி: 849962.
மாவட்ட ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்,
அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்

வெளியீடு: இயக்குநர்,
சிறுசேமிப்புத்துறை, 621, அண்ணா சாலை,
சென்னை - 600 006. தொலைபேசி : 8251784/8251685
சிறு குடும்பம் செலவுக்குடும்பம்

DIPR/BR/4/05/93

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு

ஆட்சித்தமிழுக்கு அழகு சேர்க்கும் மதுரை

இ. திருவள்ளுவன்
தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் மதுரை

"பேரறிஞர் அண்ணா வகுத்துத் தந்த இருமொழிக் கொள்கை யில் அரசு தொடர்ந்து உறுதி யோடு இருக்கும். தமிழ் மாநில ஆட்சிமொழியாகவும், ஆங்கிலம் அகில இந்தியத் தொடர்பு மொழி யாகவும் இருக்கவேண்டும் என் கின்ற எங்கள் நிலையில் எவ்வித மாற்றமும் இல்லை. இனி இருக்கப் போவதும் இல்லை.

'இருமொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதுதான், இந்த அரசின் உறுதியான கொள்கை யாகும். அதுவே தமிழக மக்கள் அனைவரின் முழுமையான விருப் பமும் ஆகும்.'

—என 10.2.93 அன்று சட்டப் பேரவையில் மாண்புமிகு தமிழக முதல்வர் தகுரைத்தார்கள். ஆட்சி மொழிச் செயலாக்கத்தை முதன்மை நோக்கமாகக் கொண்டு உருவாக் கப்பட்ட தமிழ் வளர்ச்சித் துறை, இச்தகுரையைப் போற்றும் வகை யில் மதுரையில் ஆற்றிவரும் அரும்பணிகள் அளவிட இயலாது.

அரசு அலுவலகங்களிலும், அரசு சார்துறைகளிலும், தன்னாட்சி நிறுவனங்களிலும் தமிழ் ஆட்சி மொழித் திட்டச் செயல்பாடு குறித்து ஆய்வுசெய்து வழிகாட்டு வதே முக்கியப் பணியாகும். எனி னும் செல்லும் இடமெல்லாம் - எவ்வாறு பிழையின்றிக் குறிப்பு களும் வரைவுகளும் எழுதுவது - அயற் சொற்களுக்கான கலைச் சொற்கள் யாவை? என ஒல்லும் வகையெல்லாம் வழிகாட்டி வரு கிறது. மதுரை தமிழ் வளர்ச்சித் துறை இது தொடர்பாக ஆய்விடங் களில் நடத்தப்பெற்ற பயிற்சி வகுப்புகள் ஏராளம்! ஏராளம்?

இத்திங்கள் முதல் வருவாய் நிருவாக முதன்மை ஆணையரின் அறிவுறுத்தலுக்கும் தமிழ் வளர்ச்சி இயக்குநரின் வழிகாட்டலுக்கும் இணங்க, மதுரை ஆட்சியரின் ஆணையின்படி இருமுறை தொடர் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெறு கின்றன.

சிறந்த முறையில் தமிழில் கோப்புகளை எழுதும் பணியாளர் களுக்கு அரசு பரிசுகள் நல்குவதை அறிவோம்! மதுரையோ பணி யாளர்களுக்குப் பரிசு வழங்கு வதுடன் அமைதி கொள்ளவில்லை: 'எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்! என்றும் தமிழ்!' என்பதை நோக்க மாகக் கொண்டு செயல்படும் அலுவலர்களுக்கும், அரசிற்கும் பெருமை சேர்க்கும்வகையில், இத் திட்டப் பணியில் முன்னோடியாக இருக்கும் துறைகளுக்கும் மதுரை யில் பரிசுகள் வழங்கப்படுகின் றன. இவ்வாண்டு நடைபெற்ற ஆட்சிமொழிக் கருத்தரங்கில் செய தித்துறை, தீயணைப்புத்துறை, பதி வுத்துறை முதலான பல அரசுத் துறைகளும், மதுரை மாநகராட்சி, மின்வாரியம், பாண்டியன் போக்கு வரத்துக் கழகம் முதலான உள் ளாட்சி, தன்னாட்சி நிறுவனங் களும் பரிசு பெற்றன.

ஒவ்வொன்றிற்கும் அரசையே எதிர்பார்த்துக் கையேந்தி நிற்கக் கூடாது! என்பது முதல்வர் விடுத்த அன்புக் கட்டளையல்லவா? இதற் கேற்ப மதுரை தமிழ் வளர்ச்சித் துறையும் ஆட்சித் தமிழுக்குப் பெருமைசேர்க்கும் பல்துறை வல் லாரையும் பாராட்டி வருகிறது. முந்தைய ஆண்டுகளில் தமிழில் நூல்கள் எழுதியும் விண்ணப்பிக் கும் வாய்ப்பு அறியாமல் பரிசு பெறாதோர் பலர். கடந்த ஆண்டு சித்திரைப் பொருட்காட்சியில் செய்தித்துறை அரங்கு வாயிலாகத் தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறையின் பணிகள் மக்களுக்கு விளக்கப்பட்டன. இதன்மூலம் விவரம் அருந்து தமிழக அரசின் பாராட்டைப் பெறத் துடித்தோர்

திருவாதவூரில் 'திருவாசகம்' அருளிய மாணிக்கவாசகர் பிறந்த இடம்.



பலர் ஒவ்வொரு துறையிலும் 'மருத்துவத் தமிழ் ஆர்வலர், சட்டத் தமிழ் ஆர்வலர், இதழியல் தமிழ் ஆர்வலர், இசைத் தமிழ் ஆர்வலர், ஆட்சித் தமிழ் ஆர்வலர் என்றும் இன்னும் பல வாறாகவும் உள்ள ஆர்வலர்கள் கண்டறியப்பட்டு, பொதுக் கூட்டங்கள் நடாத்தி மக்கள் கடல் இடையே விருதுகள் வழங்கிச் சிறப்பு செய்யப் பெற்றமை எங்கும் நடைபெறாத புதுமை!

தமிழன்னை, திருவள்ளுவர் முதலான சங்கப் புலவர்கள், நாவலர் பாரதியார் முதலான இக்காலப் புலவர்கள் ஆகியோரைத் திருவள்ளுவர் புத்தாண்டிலும், தமிழ்ப் புத்தாண்டிலும் மாநகராட்சித் துணையால் தூய்மை செய்து வருவதும் குறிப்பிடத்தக்க தொண்டுப் பணியாகும்.

அரகப் பணியாளர்களிடையே பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி மூலமும் ஆட்சிமொழிச் செயலாக்கத்தில் ஈடுபாட்டை ஏற்படுத்தி வருகின்றது. மதுரை அலுவலக முகப்புகளும் பலகையில், தமிழ் இலக்கணக் குறிப்பு ஒன்று தமிழ்ப்பா ஒன்று, கலைச் சொல் ஒன்று' என்ற முறையில் எழுதி வைத்து விழிப்புணர்வை வளர்த்துவருகிறது.

இலக்கணக் குறிப்புகள், அன்றாட அலுவலகப் பயன்பாட்டிற் கேற்ப எடுத்துக்காட்டுக் கூறி 'எழுதுவது எளிதே!' என்ற கையேட்டையும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் துணையுடன் அனைவருக்கும் வழங்கியுள்ளது; இது போன்ற இலவசக் கையேடுகளைத் தரும் தொடர் முயற்சியிலும் ஈடு பட்டு வருகிறது.

பொருட்காட்சி அரங்குகளிலே தமிழ் இடம் பெறாமை அரசு கொள்கைக்கு எதிரானது என்பதை உணர்த்த செய்தித்துறை துணையுடன் போட்டிகள் வைத்துப் பரிசு நல்கியும் மதிப்பெண் வழங்கியும் அரங்குகளில் தமிழ் மணம் கமழச் செய்தது. அதுமட்டுமல்லாமல் தமிழ் வளர்ச்சி தொடர்பான முழக்கங்களையும் தமிழ் ஆட்சிமொழி குறித்த முதல்வரின் கொள்கை முழக்கத்தையும் பல்வேறு துறைகளில் எழுதிவைக்கச் செய்தது.

கடைப் பெயர்களைத் தமிழில் வைக்க வழிகாட்டல், மொழி பெயர்ப்பிற்கு உதவுதல், கலைச் சொல்லாக்கம் உருவாக்கம், என்பன போன்ற பல்வேறு பணிகளையும் ஆற்றிவருகிறது.

'தமிழ் என்றால் மதுரை!
மதுரை என்றால் தமிழ்!'

— என்பது சங்க காலத்திற்கு மட்டுமல்ல, இக்காலத்திற்கும் பொருந்தும் என்பதை எக்காலமும் மெய்ப்பிக்கும் வகையில் தமிழ்நலம் நாடும் மாண்புமிகு முதல்வருக்கும் தமிழக அரசிற்கும் பெருமைசேர்க்கும் முறையில் மதுரை -. தமிழ் வளர்ச்சித்துறை பீடுநடைபோட்டு அரும்பணி பல ஆற்றிவருகிறது.



★ மதுரை மாநகரில் உள்ள முக்கியமான கோயில்கள் ஏராளம். அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் மட்டுமே குறிப்பிடத்தக்கது அல்ல; இன்னுமுண்டு - சிம்மக்கல் அருகில் உள்ள பழைய சொக்கநாதர் கோயில், தெற்கு மாசி வீதியில் உள்ள ஏகாம்பரேசுவரர் கோயில், செல்லூர் திருவாப்புடையார் கோயில், சிம்மக்கல் அருகில் உள்ள செல்லத்தம்மன் கோயில் ஆகியவைகளும் மதுரை நகரின் பழமை மிக்க சிவ வழிபாட்டுத் தலங்களே. செல்லத்தம்மன் கோயிலில் கண்ணகியும் ஒரு தெய்வமாக வழிபாடு செய்யப்படுகிறார்.

இம்மையில் நன்மை திருவார் கோயில், மதன கோபால சுவாமி கோயில், தெற்குக் கிருஷ்ணன் கோயில், வடக்குக் கிருஷ்ணன் கோயில், தெப்பக்குளம் மாரியம்மன் கோயில் ஆகியவைகளும் மாவட்டமெங்கும் பரவலாகக் காணப்படும் சமணர் கோயில்களும் குறிப்படத்தக்கவைகளே. இவை தவிர, பன்னிவாசல்களும், கிறித்தவ ஆலயங்களும் நிரம்ப உண்டு.

உசிலம்பட்டியில்

ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டம்

நம் நாட்டில் மொத்த சாகுபடிப் பரப்பில் 60 சதவிகிதப் பரப்பில் மானாவாரி பயிர் சாகுபடி செய்யப் படுகிறது. எனவே மானாவாரி நிலங்களில் அபிவிருத்திப் பணிகளைச் செய்வதன் மூலம் மானாவாரி நிலங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்து விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற முடியும்.

"புஞ்சை விளைந்தால் பஞ்சம் போகும்" — என்ற பழமொழியினைக் கருத்தில் கொண்டு மானாவாரிப் பகுதிக்கான அபிவிருத்திப் பணிகளைச் செயலாக்க வேண்டும்.

மானாவாரி நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் அதுவும் குறிப்பாக - சரிவாக உள்ள நிலங்களில் பெய்யும் மழை நீர், தேங்கி நிற்பதில்லை. தாழ்வான பகுதிகளுக்கு வழிந்தோடி விடுகிறது. ஆகவே, அந்நீர் பயிர் வளர்ச்சிக்குப் பயன்படுவதில்லை. இது மட்டுமன்றி, மழை நீர் வேகமாக வழிந்தோடும்பொழுது அதனுடன் மண் துகழ்களையும் வாரிச் செல்கிறது. இதன் மூலம் சத்தான மேல் மண் அடித்துச் செல்லப் படுகிறது. இதனால் படிப்படியாக நிலவளம் குறைகிறது. மேலும் பல வகைகளில் நமக்குப் பாதிப்புகளும் கீழ்க்கண்டவாறு ஏற்படுகிறது.

(1) பெய்யும் மழை நீர் முழுவதுமாகப் பயன்படாமல் வழிந்தோடி விடுகிறது.

(2) மழை ஈரம் பயிரின் தேவையான கால கட்டங்களில் குறைந்து விடுவதால் வறட்சி நிலையால் பயிர் மகசூல் கணிசமாகக் குறைகிறது.

(3) சத்தான மேல் மண்ணும், அங்கக் பொருட்களும், பயிர் உணவுச் சத்துக்களும் அடித்துச் செல்லப்பட்டு, நிலவளம் குறைகிறது. இதனால் மகசூல் குறைந்து வருமானத்தில் இழப்பு ஏற்படுகிறது.

(4) இப்பகுதிகளில் மானாவாரி விவசாயம் நிச்சயமற்றதாகி வருகிறது. ஒரு சில ஆண்டுகளுக்குள் நிரந்தரமாக இப்பகுதி தரிசாக மாறிவிடுகின்றது.

எனவே, மானாவாரி நீர் பிடிப்புப் பகுதி அபிவிருத்தியில் முதல் கட்டமாக சரிவான பகுதிகளில் பெய்யும் மழைநீர் முழுவதுமாக அப்பகுதியிலேயே தங்கி அந்நிலத்தில் சாகுபடியாகும் பயிருக்குப் பயன்படச் செய்வதற்காகச் சரிவுக்குக் குறுக்கே கோடை உழவு செய்வதுடன் தாவரத் தடுப்பும் அமைக்கப்படுகிறது. இதனால் மண் வளம் மற்றும் நீர்வளம் அதிகரிக்கப்படுகிறது. இரண்டாவது கட்டமாக இவ்வாறு சீர்திருத்திய பகுதிகளில் சாகுபடியாகும் பயிர்களில் எல்லா மானாவாரித் தொழில்நுட்ப உத்திகளையும் கையாள்வதால் பயிர் மகசூல் அதிகரிக்கப்படுகிறது.

பயிர் சாகுபடியின் ஒரு அம்சமாகச் செலவைக் குறைக்கும் விவசாயக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

நீர்பிடிப்புப் பகுதிகளில் நிரந்தரமான பலன்தரும் மரக் கன்றுகள் மற்றும் பழ மரங்களை நடுவதன் மூலம் தொடர்ந்து ஆண்டுதோறும் வருமானம் பெற்றிடலாம்.

மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி வேளாண்மைக் கோட்டத்தில் ஒருங்கிணைந்த மானாவாரி நீர்ப் பிடிப்புத் திட்டத்தின்கீழ் 32 கிராமங்களில் 3000 எக்டேர் நிலப் பரப்பு தேர்வு செய்யப்பட்டு 1992-93-ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஆறு ஆண்டுகளில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு 3,000 எக்டேர் நிலம் அபிவிருத்தி செய்யப்படுகிறது.

1992-93-இல் 200 எக்டேர் நிலப்பரப்பும், 1993-94-இல் 300 எக்டேர் நிலப்பரப்பும், 1994-95-இல் 400 எக்டேர் பரப்பும், 1995-96-இல் 600 எக்டேர் பரப்பும், 1996-97-இல் 700 எக்டேர் பரப்பும், 1997-98-இல் 800 எக்டேர் பரப்பும் ஆக மொத்தம் 3000 எக்டேர் நிலப்பரப்பு அபிவிருத்தி செய்யப்படும்.

அபிவிருத்திப் பணிக்கான நிதி அளவு

	(எக்டேருக்கு)
கோடை உழவு	... ரூ.200
தாவரத் தடுப்பு	... ரூ.400
மரம் வளர்த்தல்	... ரூ.1500
பழ மரம் வளர்த்தல்	... ரூ.1500
பயிர் நிரூபணம்	... ரூ.750
விதைப்புக் கருவி வழங்குதல் கருவி ஒன்றுக்கு	... ரூ.400

— டி. மாடசாமி
துணை இயக்குநர், (T&V)
மதுரை



அலங்காநல்லூர் கூட்டுறவு தேசிய சர்க்கரை ஆலை.

நீர்பிடிப்புப் பகுதிகளில் ஆறாண்டுச் செயல்திட்டத்திற்கு - கோடை உழவு, தாவரத் தடுப்பு அமைத்தல், பலன்தரும் மரம் வளர்த்தல், பழ மரங்கள் வளர்த்தல், விதைப்புக் கருவிகள், பயிர் நிரூபணங்கள் அமைத்தல் என்ற வகையில் 150 எக்டேரிலிருந்து 3000 எக்டேர் வரை ரூ.22.004 இலட்சம் ரூபாய் செலவாகும்.

மொத்தம் ரூ.22.04 இலட்சம் நிதி உதவியுடன் இந்த நீர்பிடிப்பு பகுதியின் 3000 எக்டேர் பரப்பு மானாவாரி பகுதியில் அபிவிருத்திப் பணிகள் செய்யப்படும்.

வெட்டிவேர் தாவரத் தடுப்பு

மானாவாரி நிலங்களில் நிலத்தையும், நீரையும் சரியாக நிர்வகிக்காவிட்டால் சில ஆண்டுகளில் நிலம் சாகுபடிக்குப் பயனற்றதாகிவிடும்.

சரிவான மானாவாரிப் பகுதிகளில் கிடைக்கும் மழை நீரை நிலப் பகுதி ஆங்காங்கே உறிஞ்சி மழை நீர் வழிந்தோடி வருவதைத் தடுப்பதன்மூலம் பயிர் மகசூலை அதிகப் படுத்தலாம். அதிக மழை ஈரம் கிடைப்பதால் பயிர்கள் வறட்சியால் பாதிக்கப்படுவது இல்லை.

2 சதவிகிதம் சரிவுள்ள நிலத்திலிருந்து ஓராண்டில் சுமார் 10 டன் மண் அரிப்பு மூலம் இழப்பு ஏற்படுகிறது. சத்தான மேல் மண் அரித்துச் செல்லப்படுவதால் முக்கியமான பல பயிர்ச் சத்துக்களும், நுண் சத்துக்களும், அங்ககப் பொருள்களும் அடித்துச் செல்லப் படுகிறது. இதனால் நிலம் வளம் குறைந்து, சாகுபடிக்குப் பயனற்றதாகி, பின்னர் தரிசாக ஆகிறது.

மண் அரிமானத்தைத் தடுக்க சம உயர வரப்புகள் அமைக்கலாம். இதற்கு அதிகம் செலவாகும். ஓரளவு நிலப்பகுதியும், இதனால் வீணாகிறது. இதனை ஆண்டுதோறும் பராமரிக்க வேண்டும். இதற்கும் பெரும் செலவு ஆகிறது.

சரிவான மானாவாரி பகுதிகளில் மண் அரிமானத்தைத் தடுக்க வெட்டிவேர் வரிசைகள் அமைக்கலாம். இது ஒரு தாவர அரணாக அமையும்.

வெட்டிவேர் புல்வகையைச் சேர்ந்தது. இதன் நிறைந்த சல்லி வேர்கள் மண்ணில் பாய் போன்று பின்னிப் பிணைந்து மண் அரிமானத்தைத் தடுக்க உதவுகிறது. இது வறட்சி தாங்கி வளரக் கூடியது. ஆடு மாடுகள் இதனை அதிகம் சேதப் படுத்துவதும் இல்லை.

மானாவாரி நிலங்களில் சரிவுக்குக் குறுக்காகச் சம உயர வரிசைகளை முதலில் நிர்ணயம் செய்ய வேண்டும். இந்த வரிசைகளை 40 மீட்டர் இடைவெளியில் அமைத்து, வரிசையில் குத்துக்கு குத்து 10 செ.மீ. இடைவெளியில் வெட்டிவேர் சிம்புகளை நடலாம். ஒரு குத்துக்கு 3 முதல் 4 சிம்புகள் வைத்து நடலாம்.

தாவரத் தடுப்பான வெட்டிவேரின் பயன்கள்

1. வறட்சி தாங்கி வளரும் தன்மை கொண்டது.

2. குறுகிய காலத்தில் அதிகச் சிம்புகள் வெடிக்கும் தன்மையுடையது.

3. எல்லா வகை மண்ணிலும் வளரும் தன்மை உடையது.

4. கோடையில் காய்ந்தாலும் மழைக் காலத்தில் மீண்டும் தழைத்து வளரும்.

5. இதனைப் பூச்சி நோய் தாக்காது.

6. இதன் விதைகளில் முளைப்புத் தன்மை இல்லாததால் தேவையற்ற இடங்களில் முளைத்துக் களைப் பிரச்சினை வராது.

வரிசையில் பழுதான சிம்புகளுக்குப் பதிலாகப் புதிய சிம்புகள் நட்டு, முதல் 3 ஆண்டுகள் பராமரித்தால் நல்லதொரு வெட்டிவேர் தாவரத் தடுப்பு அரண் அமையும். இந்த அரண், பெய்யும் மழை நீரைத் தேக்கி வைக்கும். வழிந்தோடும் நீரின் வேகத்தைக் குறைத்து, மண் துகள்களை வடிகட்டி, நீரை மட்டும் மெதுவாக விடும். இதனால் மண் அரிமானம் தடுக்கப்படுகிறது. மழை நீர் சேமித்து வைக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

• கிழக்கிந்தியக் கம்பெனியாரால், 1,70,000 ரூபாய்க்கு மதுரை விலைக்கு வாங்கப்பட்டது. பின்னர், முகமது யூசுப் என்பவருக்கு 5,00,000 ரூபாய் ஆண்டுக் குத்தகைக்கு விடப்பட்டது. அதுவும் கி.பி. 1790-ல் முடிவு பெற்றது. கி.பி. 1801-ஆம் ஆண்டு முதல் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் நேரடி ஆட்சிக்கு உட்பட்டது மதுரை.



மதுரை மாநகரில் மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையிலும், மாநகர ஆணையாளர் அவர்களின் மேலான ஆதரவுடனும், கூடுதல் ஆட்சியாளர் அவர்களின் வழிநடத்துதலுடனும், அரசு சார்ந்த அலுவலர்களும், பொதுமக்களும், மாணவ மாணவியர்களும், கல்வி நிறுவனங்களும் இணைந்து நடத்திய அறிவொளி இயக்கம் சிறப்பாக நடந்தேறியது. அதனைத் தொடர்ந்து அறிவொளி வளர்கல்வி இயக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மதுரை மாநகரில் மட்டும் கணக்கெடுப்பின்படி கல்லாதவர்களின் எண்ணிக்கை மொத்தம் 61,807 பேர். இதில் ஆண்கள் 23,791 பேர். பெண்கள் 38,016 பேர். குறிப்பாக தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த கல்லாதவர்களின் எண்ணிக்கை மட்டும் மொத்தம் 14,372 பேர். இதில் ஆண்கள் 5,971 பேர். பெண்கள் 8,401 பேர்.

மாநகரில் அறிவொளியின் தாக்கம் மூலைமுடுக்குகளில் எல்லாம் பரவி மக்களின் வாழ்க்கையுடன் இணைந்த ஒன்றாகிவிட்டது. அறிவொளி இயக்கத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்காக மாநாடுகள், கலைக்குழுக்கள், மூன்று இரத்ததான முகாம்கள், மனிதச்சங்கிலி, ஊர்வலங்கள், சைக்கிள் பேரணி, அறிவொளி கார்த்திகை விழா, அறிவொளிப் புத்தாண்டு தினம், அறிவொளி ஆசிரியர்தினம், அறிவொளி கிறிஸ்துமஸ் விழா, அறிவொளி கண்காட்சிகள், அறிவொளி மரம் நடும் விழா ஆகியவை மாநகர்ப் பகுதியில் சிறப்பாக நடத்தப்பட்டது. இரத்ததான முகாம்கள் நடத்தியமைக்காக டாக்டர். சிவக்குமார் கோப்பையும், டாக்டர். ராமசுப்பிரமணியம் கோப்பையும், டாக்டர். அன்பழகன் சுழற்கோப்பையும் மதுரை மருத்துவக் கல்லூரியால் வழங்கப்பட்டுள்ளது.

வெள்ள நிவாரணப்பணி, இலவச வேட்டி, சேலை வழங்குதல் ஆகிய பணிகளில் பொதுமக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இருந்து, அவர்களின் சுகாதார உடல்நலம் காப்பது வரை, அறிவொளி திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் தீவிரமாகச் செயலாற்றி வருகின்றனர். மத நல்லிணக்கத்தை வலியுறுத்தி ஊர்வலங்களும், கூட்டங்களும் நடத்தப்பெற்றன. மருத்துவக் கல்லூரி நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்கள் உதவியுடன் ''எயிட்ஸ்'' விழிப்புணர்வு முகாம், குடியின் தீமைகளை விளக்கும் நிகழ்ச்சிகள் நடத்தப் பெற்றன. நான்கு கண் சிகிச்சை முகாம்கள் அரவிந்த் கண் மருத்துவமனை உதவியுடன் நடந்தேறியுள்ளது. இதில் சுமார் 750 பேர்களுக்குக் கண் பரிசோதனை செய்யப்பட்டது. 50 பேருக்கு அறுவைச் சிகிச்சை ஏற்பாடு செய்யப்பட்டது. பெண்களின் முன்னேற்றத்தை வலியுறுத்தும் வகையில் மகளிர் மாநாடுகள் நடைபெற்றுள்ளன.

மக்களின் வாழ்க்கையில் அறிவொளி மாற்றத்தையும், தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக மாநகராட்சியில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்கள் 1,500 பேர் இப்பொழுது ''கைநாட்டு'' என்ற அவல நிலையிலிருந்து விடுபட்டுப் பெருமையுடன் வங்கிகளில் கையொப்பமிட்டுச் சம்பளம் பெறுகின்றனர். பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் பனைமரம் ஏறும் தொழிலாளிகள், செங்கல் சூளையில் பணிபுரிபவர்கள், ரிக்ஷா ஓட்டும் தொழிலாளர்கள், உணவு விடுதித் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், சுமை தூக்கும் தொழிலாளர்கள், காய்கறி வியாபாரிகள், பட்டறையில் பணிபுரிபவர்கள், நெசவாளர்கள், பூ கூட்டுபவர்கள், பாய் முடைபவர்கள்,

அப்பள நிறுவனங்களில் பணிபுரியும் சிறுவர்கள், சிறுவர் சிறைச் சாலையில் உள்ள இளம் குற்றவாளிகள், திரையரங்கச் சிற்றுண்டி விடுதித் தொழிலாளர்கள், பூங்கா பணியாளர்கள் ஆகியோர் அறிவொளியில் கற்று மதிப்பீட்டுத் தேர்வில் கலந்து கொண்டு தேர்வு எழுதினர். தேசிய ஒருமைப்பாட்டை நிலைநிறுத்துமுகமாக அறிவொளி மையங்களில் கற்போர்கள் ஜாதி, மத பேதமின்றி கற்றது சிறப்பம்சமாகும்.

அறிவொளியில் கற்றவற்றை மறக்காமல் இருப்பதற்கும், மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் வளர்கல்வியாக அறிவொளி செயல்படுகிறது. நான்கு அறிவொளி மையங்கள் இணைந்து வளர்கல்வி வட்டமாக மாறியுள்ளன. அன்றாடச் செய்திகளை மக்கள் உணரும் வண்ணம் ''அறிவொளிச் சுவர்கள்'' அமைத்து, கற்போர்களைக் கொண்டே சுவர்களில் எழுதச் செய்வதன் மூலம் படிப்பதிலும், நாட்டு நடப்பைத் தெரிந்து கொள்வதிலும் ஆர்வமூட்டப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் அறிவொளி நூலகங்களை அமைத்து,

தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் சிலை.

கற்போருக்குத் தொடர்ந்து படிக்க வழி வகை செய்யப்படுகிறது. ''தென்றல்'' பத்திரிகை இவ்வியக்கத்தின்கீழ் கற்போர்களுக்காகத் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது

அறிவொளியில் தீபம் 1,2,3, ஆகிய மூன்று புத்தகங்களை முடித்து, வளர்கல்வியில் படிக்க வேண்டியவர்களின் எண்ணிக்கை மொத்தம் 22,194 பேர். இதில் சுமார் 6,000 பேர் வளர்கல்வியில் இணைந்து 317 வட்டங்களில் கற்று வருகின்றனர். மீதமுள்ளவர்களும் இதில் பங்கேற்கக் கடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வளர்கல்வி வட்டங்களை நடத்துவதற்குச் சுமார் 1,000 தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டவழிகாட்டிகள் எந்த விதப் பலனும் எதிர்பார்க்காமல் தொண்டாற்றி வருகிறார்கள். இவர்கள் சுகாதாரம், சிறுதொழில், சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு, சிறு சேமிப்பு, சிறுகுடும்பம் போன்ற விழிப்புணர்வு நடைமுறைக் கருத்துக்களை வட்டங்களில் கற்பித்து வருகின்றனர்.

''இந்தியாவிலே முதலாவதாக அறிவொளி துவக்கப்பட்ட மாநகர்'' என்ற பெருமை மதுரை மாநகரையே சாரும். ஒவ்வொரு மனிதனும் சுயசார்புள்ள மனிதனாக மாற வேண்டும் என்பதே வளர் கல்வியின் முடிவான நிலையாகும்.

மது(ர)ரச் செய்தி

''இதுபோன்ற குடிசைகளிலிருந்த எனக்கு, டாக்டர் எம்.ஜி.ஆர். நகரில் அதோ அப்படியொரு அழகிய வீட்டை இலவசமாகக் கட்டித் தந்துள்ளது அரசு'' என்று சொல்லிப் பூரிப்படைகிறார் இந்தப் பெண்மணி.

நீலகிரி நிலச்சரிவு: மத்திய நிபுணர்கள் பார்வையிட்டனர்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் செ. ஜெயலலிதா அவர்கள் 14.11.93 அன்று நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய நிலச்சரிவினையும், அதனால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் பார்வையிட்டார். உயிர் இழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் காயமடைந்தவர்களுக்கும் ஆறுதல் கூறி நிவாரண உதவிகளை வழங்கி, அலுவலர்களுடன் ஒரு கூட்டம் நடத்தியபின், சென்னைக்கு வந்தடைந்த, மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவு குறித்தும், அங்கு ஏற்பட்டுள்ள பொருட்சேதங்கள் மற்றும் உயிர்ச் சேதம் குறித்தும் ஒரு விரிவான கடிதம் எழுதியிருந்தார்.

அக்கடிதத்தில் தமிழக முதல்வர் அவர்கள் நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவுத் பகுதியை நீக்கி, மீண்டும் ஊட்டி பாலத்தை விரைவில் செப்பனிடவும், எதிர்காலத்தில் இதுபோன்ற நிலச்சரிவுகள் ஏற்படாதிருக்க எடுக்க வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் பற்றி ஆராயவும், தகுந்த செயல் திட்டங்களை வகுக்க மாநில அரசிற்கு உதவும் வகையில் ஒரு மலைப் பகுதி ஆராய்ச்சி நிறுவனம், ஆராய்ச்சி சாலைகள் ஆகியவை, இந்திய புவியியல் ஆய்வு, மத்திய நிறுவனங்களிலிருந்து ஆகிய மூன்று நிறுவனங்களையும் நீலகிரி மாவட்டத்திற்கு அனுப்பிவைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். இதைத் தொடர்ந்து எல்லைச் சாலைகள் நிறுவன இயக்குநர் ஜெனரல் வெப்டினன்ட் ஜெனரல் மகராஜ் சிங் தலைமையில், எல்லைச் சாலைகள் நிறுவனத் துணை இயக்குநர் ஜெனரல் பிரிகேடியர் எஸ்.பி. ஜோஷி, மத்திய தரை வழிப் போக்குவரத்து அமைச்சகத் தலைமைப் பொறியாளர்கள் திரு.

கூட்டுறவுக் குடையின் கீழ் ஒரு குதூகலப் பயணம்!

ஆண்டுதோறும் நவம்பர்த் திங்களில் கூட்டுறவு வார விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

இவ்வாண்டு 40-வது அ.இ. கூட்டுறவு வார விழா நடைபெறுவதையொட்டி, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் பத்திரிகையாளர் பயணம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தது.

நவம்பர்த் திங்கள் 10-ஆம் நாளன்று, சென்னை நகரில் உள்ள சில முக்கிய கூட்டுறவு நிறுவனங்களை நேரில் சென்று பார்க்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. அந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்குமுன், இந்த வார விழாவின் முக்கிய நோக்கத்தைத் தெரிந்து கொள்வோம்.

40-வது அகில இந்தியக் கூட்டுறவு வார விழா, பண்டித நேரு அவர்கள் பிறந்த நாளையொட்டி நவம்பர்த் திங்கள் 14 முதல் 20 வரை தமிழ்மெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இக் கூட்டுறவு வார விழா கொண்டாடப்படுவதன் முக்கிய நோக்கம், கூட்டுறவு இயக்கத்தின் கடந்த ஆண்டு சாதனைகளை மதிப்பீடு செய்வதோடு, வரும் காலத்திற்கான செயல் திட்டங்களை வகுப்பதுடன் மக்கள் மனதிலே கூட்டுறவு இயக்கத்தின் மீது ஈடுபாடு ஏற்படுத்துவதற்காகும்.

மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் சார்பில் 14.11.93 அன்று திருச்சியில் கூட்டுறவு வார விழாவின் தொடக்க நாள் விழாவும், 20.11.93 அன்று காஞ்சிபுரத்தில் கூட்டுறவு வார விழாவின் நிறைவு நாள் விழாவும் நடைபெற்றது.

கூட்டுறவு வார விழாவினையொட்டி, மாவட்டங்களில் ஏழை மக்களுக்கு இலவசமாகக் கண்ணாடிகள் அளிக்கப்பட்டது. இலவசமாக அரசு மற்றும் பொது மருத்துவ மனைகளின் உதவியுடன் தகுந்த கண்ணாடிகள் வழங்குதல் கண்களைத் தானமாக வழங்குவோரைப் பதிவு செய்தல் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

அரசு மற்றும் பொது நல மருத்துவ மனைகளின் உதவியுடன் பலதரப்பட்ட கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள், தன்னிச்சையாக இரத்ததானம் செய்ததும் குறிப்பிடத்தக்கது.

கால்நடை மருத்துவர்களின் உதவியுடன் கூட்டுறவு வார விழாக்களின் போது கால்நடைகளுக்கு இலவசமாக மருத்துவம் செய்யப்படுகிறது. இத் திட்டத்தினால் ஏழை மக்களும், விவசாயிகளும் வளர்க்கின்ற கால்நடைகள் பயன் பெறுகின்றன.

முதலாவதாக 'இம்ப்காப்ஸ்' என்னும், நிறுவனத்தைப் பார்ப்போம்.

இம்ப்காப்ஸ்

இந்திய மருத்துவர்கள் கூட்டுறவு மருந்து செய் நிலையம் மற்றும் பண்டக சாலை (இம்ப்காப்ஸ்), 6.7.1944-இல் பதிவு செய்யப்பட்டு 12.9.1944-இல் பணியாற்றத் தொடங்கியது. வெள்ளி விழா நிறைவு பெற்ற இச்சங்கம் விரைவில் பொன் விழாவினைக் கொண்டாட இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தலைமையகம், 9 ஏக்கர் பரப்பளவில் நிர்வாகக் கட்டடம் மற்றும் தொழிற் கூடங்களுடன் அமைந்துள்ளது. இதைத் தவிர ஆந்திர மாநிலம் தாடேப்பள்ளியில் மண்டல மருந்து செய் நிலையமும், விஜயவாடாவில் மண்டல நிர்வாகம் மற்றும் விற்பனை நிலையமும் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன.

சித்தா ஆயுர்வேதா மற்றும் யுனானி மருத்துவத் தொழிலின் பதிவு பெற்ற மருத்துவர்கள் சுமார் 9000 பேர் இச்சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்களுடைய தேவைக்கு ஏற்ப மருந்துகளை இந்நிலையம் செய்து வழங்கி வருகின்றது. இதைத் தவிர தமிழகம் மற்றும் இதர மாநிலங்களில் நிறுவன உறுப்பினர்களும், (பஞ்சாயத்து யூனியன், நகராட்சி மற்றும் பேருராட்சிகள்) பயனடைந்து வருகின்றார்கள். உறுப்பினர்கள் மற்றும் வாங்குவோரின் வசதிக்காக மருந்து விற்பனை நிலையங்கள் அண்ணா சாலை, சென்னை, மதுரை, தஞ்சாவூர், சேலம், திருச்சி, பெங்களூர், ஐதராபாத், கோயம்புத்தூர், விசாகப்பட்டினம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றது.

தமிழக அரசின் கீழ் இயங்கிவரும் தலைமை மருத்துவ மனைகளிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இயங்கி வரும்

மான வாகனங்களையும் செலவும் அளவிற்குப் பழைய நிலைக்குக் கொண்டுவர, புவியியல் ஆய்வு நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆய்வு மேற்கொண்டபின்பு அதன் அடிப்படையில் மேற்கொள்ளலாம் என்ற கருத்துத் தெரிவித்துள்ளார்.

மலைப்பாதையில் சேதம் ஏற்பட்ட பகுதிகளைச் சரிசெய்து பாதையைச் சற்று மாற்றி அமைத்துச் சீர்செய்ய வேண்டிய சூழ்நிலை இருப்பதையும், தொழில்நுட்ப வல்லுநர்கள் கட்டிக்காட்டி உள்ளார்கள். இந்த மலைப்பாதையை உடனடியாகச் சீர்செய்வதற்கு எல்லைச் சாலைகள் நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆலோசனையையும், அந்த நிறுவனத்தைச் சார்ந்த வல்லுநர்களின் முழு ஒத்துழைப்பையும் பெற்றுக் கொண்டு மிக விரைவில் சீர்செய்வது என்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

உலக அமைதிக்காக அவர் அயல் நாட்டுப் பயணம் மேற்கொள்வார்.

அணுஆக்குண்டுகளைச் செய்து குவித்து வைத்திருக்கும் அமெரிக்க நாடு சென்று, அந்நாட்டின் அதிபர் கிளின்டனைச் சந்திப்பார்.

உலகுக்கு அமைதி வேண்டும் என்பதற்காக அந்தப் பயணத்தை மேற்கொள்வார் - 'இந்தியாவிலிருந்து சென்றவர்' என்பது இந்த நாட்டிலுள்ளப் பெருமையிலே அந்தியாயமாக விளங்கும்.

இராஜாஜி ஆற்றிய பணி அத்தகையது. அந்தக் காரியத்துக்கு நடான பெருமை மிக்கது - அவரது வாழ்க்கை வரலாற்றிலும் வேறு இருக்க முடியாது.

முதலிடம் பெறும்மக்கள்:

அன்னை போற்றிய இராஜாஜி

திருக்குறளுக்கு அவர் உரை எழுதி விருக்கிறார். அவரது உரை தனித்தன்மை வாய்ந்தது. அந்தத் தனித் தன்மைக்குக் காரணம், அவருடைய கூர்ந்த மதி தான்.

அவரது சிந்தனையும் செயலும் மார்க்க அரசியலையும் பின் பற்றியவை ஆகும்.

நான் அவரிடத்தில் பெருமதிப்போடு கலந்திருப்பது வாடெனில் - மக்கள் எல்லாவரும் சிந்திக்கும்படி அவர் செய்திருக்கிறார் என்பதேயாகும்.

இதனே, இராஜாஜி தமது வாழ்க்கையில் பெற்றுள்ள மக்கள்தான வெற்றிகளில் தலையாயது ஆகும்.

பி.கே. தத்தா மற்றும் பி.ஆர். ரிஷ்வானி, மத்திய சாலைகள் நிறுவனத் தலைவர் ஆராய்ச்சி நிறுவனத் துணை இயக்குநர் பி.டி. ராவ், இந்தியப் புவியியல் ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த இயக்குநர் திரு. ஏ.கே. பண்டாரி ஆகிய 6 உயர் அதிகாரிகள் அடங்கிய குழு தனி விமானம் மூலம் 15-ஆம் தேதியன்று கோவை மாவட்டத்திற்கு அனுப்பப்பட்டது. அங்கிருந்து அவர்கள் ஹெலிகாப்டர் மூலம் சென்று நீலகிரியில் ஏற்பட்ட நிலச்சரிவினைப் பார்வையிட்டனர். பிறகு தரை மூலம் சென்று நிலச்சரிவுச் சேதங்களைப் பார்வையிட்டு, கோவை திரும்பினர்.

அந்தக் குழுவினர் 16.11.93 அன்று காலை தனி விமானம் மூலம் சென்னை வந்தடைந்தனர்; சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஆலோசனையின் பேரில் அமைச்சர்கள் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், திரு. எஸ். முத்துசாமி, திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. எஸ். கண்ணப்பன் மற்றும் தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கடராமன், பொதுப்பணித்துறைச் செயலாளர் திரு. வி. சுந்தரம், வருவாய் நிர்வாக சிறப்பு ஆணையர் திரு. சி.என். ராமதாஸ், பொதுத்துறைச் செயலாளர் திரு. பி. பாலகிருஷ்ணன், பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறைகளைச் சேர்ந்த உயர்ந்த அதிகாரிகளுடன் தலைமைச் செயலகத்தில் விரிவான ஆலோசனை நடத்தினார்கள்.

இந்தக் கூட்டம் குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிட்டிருப்பதாவது:

எல்லையோரச் சாலைகள் நிறுவனத்தின் டைரக்டர் ஜெனரல் மகாராஜ் சிங், இந்த மிகப்பெரிய நிலச்சரிவிற்குக் காரணம்- ஒரு குறிப்பிட்ட பகுதியில் தொடர்ந்து பெய்த அடை மழையும், மழையால் ஏற்பட்ட வெள்ளத்திற்கு வடிகால் கிடைக்காத தும்தான் என்ற கருத்தை ஆய்வுக்குப் பின்னர் இந்தக் கட்டத்தில் தெரிவித்தார்.

மேலும் இந்தக் கூட்டத்தில் பல் வேறு சாத்தியக் கூறுகளை ஆராய்ந்த பின்னர் மேட்டுப்பாளையத்திலிருந்து குன்னூர் வரையிலும் உள்ள மலைப் பாதையில் ஏற்பட்டுள்ள சேதங்களைக் குறுகிய காலத்திற்குள் போர்க்கால அடிப்படையில் சரி செய்து கார் போன்ற சாதாரண வாகனங்களை மட்டும் செல்ல அனுமதிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

இந்தப் பாதையை எல்லையோரச் சாலைகள் நிறுவனம் மேற்கொள்ளும் என்று ஆலோசனையின் பேரில் சாலைகள் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், திரு. எஸ். முத்துசாமி, திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. எஸ். கண்ணப்பன் மற்றும் தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கடராமன், பொதுப்பணித்துறைச் செயலாளர் திரு. வி. சுந்தரம், வருவாய் நிர்வாக சிறப்பு ஆணையர் திரு. சி.என். ராமதாஸ், பொதுத்துறைச் செயலாளர் திரு. பி. பாலகிருஷ்ணன், பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறைகளைச் சேர்ந்த உயர்ந்த அதிகாரிகளுடன் தலைமைச் செயலகத்தில் விரிவான ஆலோசனை நடத்தினார்கள்.

சித்தா மருத்துவ மனைகளுக்கும் ஒவ்வொரு காலாண்டிற்கும் சுமார் 400 மருந்துப்பெட்டகங்கள் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன. ஆரம்ப காலத்தில் சுமார் ரூ.20,000-க்கு விற்பனை செய்து வந்த இச்சங்கம் கடந்த ஆண்டில் மூன்று கோடியே ஐம்பத்து ஏழு இலட்சம் என்ற அளவில் விற்பனையைப் பெருக்கி வந்துள்ளது.

பிணியாளர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ள ஒரு புற நோய்ப் பிரிவும், அக நோய்ப் பிரிவும் செயல்பட்டு வருகின்றன.

எல்லா நோய்களுக்கும் புறநோய்ப் பிரிவில் மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இம்மருத்துவ மனையில் புற மருத்துவத் துறைக்கு தினசரி 50 நோயாளிகள் வந்து செல்கின்றனர். இவர்களில் அநேகர் தங்கி மருத்துவம் பெற வேண்டியவர்களாக இருக்கின்றனர். பொது மக்களின் நலன்கருதி ரூ.10 இலட்சம் செலவில் இந்த வளாகத்திற்குள்ளேயே மருத்துவ மனை ஒன்று கட்டப்படவிருக்கிறது.

தற்போது மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலும் கூட இம் மருந்துகளுக்குத் தேவை எழுந்துள்ளது. மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

உலகை உலுக்கிக் கொண்டிருக்கின்ற 'எய்ட்ஸ்' நோயினால் விளையவிருக்கின்ற பேரழிவினைத் தடுக்க முடியும் என்கிற உறுதியோடு, இவர்கள் உருவாக்கிய மருத்துவக் கோட்பாடு, தற்போது சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் ஆய்வில் இருக்கின்றது.

என்கோபெட்

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் (என்கோபெட்) 1972-ஆம் ஆண்டு 19 மாவட்ட அளவிலான சங்கங்களும் மற்றும் மாவட்டங்கள் முழுவதும் 187 வட்டார அளவிலான விவசாய மையங்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு ஒரு மாநில அளவிலான கூட்டுறவு இணையமாக அமைக்கப்பட்டது.

வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவுச் சங்கங்களை மாவட்டம் மற்றும் வட்டார அளவில் நிறுவி அனைத்து வேளாண்மைப் பொறியியல் சேவைகளை விவசாயிகளுக்குச் செய்வதே இவ்வினையத்தின் முதன்மையான நோக்கமாகும்.

• நோய் இல்லை என்று மனதில் உறுதி செய்; மனம் போல் உடல் அமையும்.

—பாரதியார்

வேளாண் கருவிகளை வாடகைக்கு விடுவது மற்றும் பயிர்ப் பாதுகாப்பு கருவிகளை விநியோகம் செய்வது ஆகிய பணிகளை மேற்கொண்டு இம்மையங்கள் விவசாயிகளுக்குப் பணியாற்றி வருகின்றன.

1992-93-ஆம் ஆண்டில் ரூ.187 இலட்சம் மதிப்புள்ள 5,113 விசைத் தெளிப்பான்கள் மற்றும் ரூ.445 இலட்சம் மதிப்புள்ள 45,009 கைத் தெளிப்பான்கள் அரசுத் துறைகள் மற்றும் மாவட்ட, வட்டார வேளாண்மைப் பொறியியல் சங்கங்களுக்கு வழங்கப்பட்டன. 1992-93-ஆம் ஆண்டில் ரூ.31.46 இலட்சம் மதிப்புள்ள பைப்புகள், உதிரிப் பாகங்கள், டயர் மற்றும் டியூப்புகள் வழங்கப்பட்டன. 1992-93-ஆம் ஆண்டில் ரூ.55 கோடி மதிப்புள்ள உரங்கள் வழங்கப்பட்டன.

பஞ்சாயத்துக்கள், மற்றும் பஞ்சாயத்து யூனியன்களுக்கு நல்ல சிறப்பான சாலைகள் அமைத்துத் தரும் பணிக்கென இணையம் 6 சாலை உருளைகளைக் கொண்டுள்ளது. 1982-83-ஆம் ஆண்டு முதல் இணையத்தின் 6 சாலை உருளைகளும் சாரசாரியான ரூ.2.25 இலட்சம் ஒவ்வொரு ஆண்டும் ஈட்டியுள்ளது. 1992-93-ஆம் ஆண்டு சாலை உருளைகளை வாடகைக்கு விடுதல் மூலம் ரூ.5.50 இலட்சம் ஈட்டியுள்ளது. 1992-93-ஆம் ஆண்டில் ரூ.37.39 இலட்சம் மதிப்புள்ள 170 ஆழ்துளைக் கிணறுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் மாவட்ட ஆட்சியாளர்கள் மூலம் தோண்டப்பட்டுள்ளன.

டி.ஏ.பி., எம்.ஓ.பி. மற்றும் காம்ப்ளக்ஸ் போன்ற உரங்களை சலுகை விலையில் விநியோகிப்பதற்காக இணையம் முதல் தவணையாக ரூ.61.21 இலட்சங்கள் அரசிடமிருந்து பெறப்பட்டு 1992-93-இல் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு உள்ளது. இரண்டாவது தவணையாக ரூ.139 இலட்சங்கள் அரசிடமிருந்து பெறப்பட்டு முழுவதும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வேளாண்மைத்துறை சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 50 சதவிகித மானிய விலையில் டயர் வண்டிகள் விநியோகம் செய்ய ரூ.3 கோடி அரசு மானிய தொகை வழங்கி உள்ளது. இணையம் இத்திட்டத்தினை நிறைவேற்றி வருகிறது. முதல் முறையாக 24.2.93 அன்று செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உள்ள முத்தையால்பேட்டை கிராமத்தில் 18 டயர் வண்டிகளை விநியோகம் செய்துள்ளது.

டான்பெட்

'டான்பெட்' என அனைவருக்கும் அறிமுகமாகியுள்ள, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் 1959-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. மாநில அளவிலான ஓர் உழவர் நிறுவனம் எனும் வகையில் உழவர்கட்குத் தேவைப்படும் வேளாண் இடுபொருட்களை வழங்குதல் மற்றும் வேளாண் விளைபொருட்களை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து விற்பனை செய்தல் ஆகிய அரும்பணிகளை இந்நிறுவனம் ஆற்றி வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள 122 பிரதமக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் செயல்பாடுகளை இணைக்கும் இந் நிறுவனம் மாவட்டங்களில் அமைத்துள்ள தனது 15 மண்டல அலுவலகங்கள் மூலமாக தனது பணிகளை செயல்படுத்தி வருகிறது.

மன்னார்குடிக்கு அருகே பாமணி எனும் கிராமத்தில் தினசரி 120 டன் தயாரிப்பு சக்தி கொண்ட 'என்.பி.கே.' மணி உரம் தயாரிக்கும் தொழிற்சாலை இவ்வினையம் 1970-ஆம் ஆண்டில் நிறுவியுள்ளது. இத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் உரம் 'பாமணி 17:17:17 என்ற பெயரில் விற்பனை செய்யப்படுகிறது. பயிர்களுக்கு நோய்வராமல் தடுக்கும் நோக்கில் வேப்பம் பிண்ணாக்கு கலந்து இம்மணியுரம் தயார் செய்யப்படுவது இதன் சிறப்பம்சமாகும்.

விவசாயிகளுக்குத் தேவையான வேளாண் இடுபொருட்கள் விதைகள் மற்றும் விவசாயக் கருவிகள் அனைத்தும் ஒரே கூரையின் கீழ் கிடைக்கும் வண்ணம் 100 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 'சிறப்பங்காடி' பிரிவு ஏற்படுத்தி அவை செவ்வனே செயல்பட 'டான்பெட்' வழிவகை செய்துள்ளது. 100 விவசாயக் கூட்டுறவு சிறப்பங்காடிகளுக்கும் பாலிபெல்லட்ஸ், பெயர்ப் பலகை, விலைப்பட்டியல் பலகை, விளம்பர பானர்கள், மர அடுக்குகள், சைக்கிள்கள் மற்றும் விற்பனையாளர்களுக்குரிய சீருடைகள் ஆகியவற்றையும் இணையம் வழங்கியுள்ளது. விற்பனையாளர்களுக்குப் பயிற்சி அளித்து அதன் மூலம் விவசாயிகளுக்குச் சிறந்த சேவை கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

விற்பனை நிறுவனமான இணையம் வேளாண் விளைபொருட்களான பருத்தி, மிளகாய், தனியா, பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் கொள்முதலில் விவசாயிகளுக்கு உறுதுணையாக நின்று இணைந்த சங்கங்களுடன் சேர்ந்து முகவர் அடிப்படையிலும், இணை கொள்முதல் அடிப்படையிலும் மற்றும் நேரிடைக் கொள்முதலிலும் ஈடுபடுத்தப் பட்டுள்ளது. தேசியப் பஞ்சாலைக் கழகத்திற்குத் தேவையான பருத்தி கொள்முதல் செய்தல், மத்திய அரசால் அனுமதிக்கப்பட்ட 10,000 பேல்கள் பஞ்சு ஏற்றுமதிக்கான பஞ்சு கொள்முதல் செய்தல், மற்றும் 'சௌத் இந்தியா வில்கோல்' நிறுவனத்திற்காக தூரிய காந்தி விதைகள் கொள்முதல் செய்தல் போன்ற கொள்முதல் பணிகளை இணையம் செய்து வருகிறது. ஏற்றுமதி அளவான 10,000 பேல்கள் பஞ்சு கொள்முதலில் இணையம் இதுவரை 185.12 இலட்சம் மதிப்புள்ள 2969 பேல்களை நேபாளத்திற்கும், சிங்கப்பூருக்கும் கொள்முதல் செய்து அனுப்பியுள்ளது.

தமிழ்நாடு அரசினால் பரிந்துரை செய்யப்பட்டு தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் 2,500 மெ.டன் கொள்ளளவு உள்ள புதிய குளிர்பதனக் கிடங்கினை இணையம் கோயம்பேட்டில் நிர்மாணித்து வருகிறது. மொத்தம் ரூ.167.59 இலட்சம் மதிப்பு உள்ள நிர்மாணத் திட்டத்தில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து, இதுவரை பெறப்பட்ட நிதியுதவி ரூ.71.328-இல் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து கையகப் படுத்தப்பட்ட 16 மனை நிலத்தில் அடித்தளம் வரை கட்டட முன்னேற்றம் உள்ளது.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யும் பணியில் இவ்வினையம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி நவம்பர் திங்கள் 1905-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 87 ஆண்டுகள் தமிழகத்திலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பெரும்பணி ஆற்றிவருகிறது.

தமிழகத்தில் பசுமைப் புரட்சிக்கு இவ் வங்கி முக்கியப் பங்காற்றியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட வேண்டும். குறுகிய கால மத்தியக் காலப் பயிர்க் கடன்கள் வழங்குவதோடு, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கூட்டுறவு நூற்பாலைகளுக்கும், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கும், கூட்டுறவு நுகர்வோர் சங்கங்களுக்கும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கும் நிதியுதவி அளித்துப் பெரும்பணி ஆற்றிவருகிறது.

தமிழகத்தில் இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட பொது விநியோகக் கடைகளை நடத்துவதற்கு நிதி வசதிகளை மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக வழங்கி, தமிழக அரசின் பொது விநியோகத் திட்டம் சிறப்பாக நடைபெற எங்களது வங்கி பெரிதும் உதவியாக இருந்து வருகிறது.



• நம்பிக்கையைப் பிறர் தரமுடியாது; அது உள்ளத்திலேயே உற்பத்தியாக வேண்டும்.

—அன்னை காந்தியடிகள்

இவ் வங்கி, மாநில அளவில் உள்ள சங்கங்களான, தமிழ்நாடு மாநில கூட்டுறவு நிலவள வங்கி, தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கம், தமிழ்நாடு கூட்டுறவு அத்தியாவசியப் பண்டங்கள் விற்பனைச் சங்கம், தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துச் சாகுபடியாளர் இணையம், தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், தமிழ்நாடு சிறுதொழில் கழகம், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் இணையம் போன்ற நிறுவனங்களுக்கும் தனது சொந்த நிதியிலிருந்து நடைமுறை மூலதனமாக நிதி வசதி அளித்து வருகிறது.

மாநில மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் நிகர இலாபத்தில் ஐந்து சதவிகிதம் ஆண்டுதோறும் ஒதுக்கி 1990-91 முதல் கிராமக் கூட்டுறவு வங்கிகளின் வளர்ச்சி நிதி ஒன்றினை ஏற்படுத்தி இன்றைய தேதியில் ரூ.194.48 இலட்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளது. அகில இந்திய அளவில் எந்தவொரு மாநில வங்கியும் செயலாற்றாத ஒரு சிறப்புமிக்க செயலாகும் இது. இந்த நிதி கிராமச் சங்கங்களின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்படும்.

கடந்த ஆண்டு (31.3.1993) இவ் வங்கி, ரூ.15.39 கோடி நிகர இலாபமாகப் பெற்று அகில இந்திய அளவில் முதலாவதாகத் திகழ்கிறது. இதே போன்று கடந்த சில ஆண்டுகளாக அதிகப்பட்சம் 14 சதவிகித ஈவுத் தொகையாகப் பங்குதாரர்களுக்கு வழங்கி, அகில இந்திய அளவில் முதலாவதாகப் பணியாற்றி வருகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம்

தமிழக அரசின் குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற கொள்கையினைக் கூட்டுறவுத் துறையில் வெற்றிகரமாக நிறைவேற்றி வரும் தலைமை நிறுவனம்தான், வருகிற தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம். இந்த இணையம் 18.3.1959-இல் பதிவு செய்யப்பட்டு 15.7.1959 முதல் செயல்பட்டு வருகிறது.

தமிழகம் முழுவதிலும் உள்ள 625 முதன்மைச் சங்கங்களின் வழியாகப் புது வீடு கட்டுவதற்கு ரூ.2 இலட்சம் வரை, உயர்ந்த பட்சம் 20 ஆண்டு அளவில் திருப்பிச் செலுத்தக் கூடிய நீண்ட காலக் கடன் வழங்கிவருகிறது. தமிழகத்திலுள்ள அனைத்து நகரங்களும், பேரூர்களும், சிறறூர்களும் முதன்மைச் சங்கங்களின் செயல் எல்லையால் (Area of operation) இணைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் எந்த மூலை, முடிக்கிலிருந்தாலும், தனி மனிதன் ஒருவர் வீடு கட்ட விரும்பினால், அவரால் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் மூலம் கடன் பெற இயலும். நகர்ப்புற வீட்டுவசதிச் சங்கங்கள் 460 நகர்ப்புற பகுதிகளிலும், வட்ட வீட்டு வசதிச் சங்கங்கள் 165 கிராமப்புறங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

வருவாய் குறைவாக உள்ள (மாத வருமானம் ரூ.1,250-க்கு மேற்படாதவர்கள்) கிராமங்களில் வாழும் ஏழை எளிய மக்கள் வீடு கட்டிக்கொள்ள அரசு பின்வரும் நிதி உதவிகளை இணையத்தின் மூலம் வழங்குகிறது.

1. வீடு கட்ட கடன் கோரும் ஒவ்வொருவருக்கும் மானியத் தொகையாக ரூ.1,500 வழங்கப்படுகிறது.

2. 1990-91 முதல் வழங்கப்படும் கடன் தொகை ரூ.7,000-க்கு கடன் பெற்ற உறுப்பினர் மாதந்தோறும் கட்ட வேண்டிய தவணைத் தொகை ரூ.60 ஆகும். இதில் ரூ.30-ஐ மட்டுமே திருப்பிச் செலுத்தினால்போதும். மீதிப் பாதியை அரசே செலுத்திவிடும். இந்த வகையில் வீடு கட்டக் கடன் பெற்ற ஒருவருக்கு:—

1. ரொக்கமாக வழங்கும் அரசு மானியம் ரூ.1,500.

2. தவணைத் தொகையில் பாதியைத் திருப்பிச் செலுத்தும் வகையில் மானியம் ரூ.3,500 - கூடுதல் 5,000.

இதேபோல மலைப்பகுதிகளில் வீடு கட்டுவோர் அடையக்கூடிய மொத்த அரசு மானியத் தொகை ரூ.6,000 ஆகும். மேற்கண்ட சலுகைகள் தவணைத் தொகையைத் தவறாது மாதந்தோறும் திருப்பிச் செலுத்துவோருக்கு கிடைக்கும் என்பது கவனத்திற்குரியது.

கிராமப்புறங்களுக்கான மாநில வீட்டுவசதி மேம்பாட்டு (SHUPRA) திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களிலுள்ள பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்களுக்கு அவர்களுடைய வீடுகளை மேம்படுத்துவதற்காக ரூ.3,080 வழங்கப்படுகிறது. இதன்படி ஓலை வேயப்பட்ட கூரைக்குப் பதிலாக ஓடு வேய்தல், சுவர்களை உறுதிப்படுத்துதல், சுகாதார வசதி மற்றும் தண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற காரியங்களுக்கு கடன் உதவி வழங்கத் திட்டமிடப்பட்டு உள்ளது.

கோ-ஆப்டெக்ஸ்

'கோ-ஆப்டெக்ஸ்' என்ற பெயரில் புகழ்பெற்று விளங்கும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், கைத்தறித் தொழிலை அபிவிருத்தி செய்யும், கூட்டுறவுத் துறையில் கைத்தறி நெசவாளர்களுக்கு நலன் பயக்கவும் ஆன முக்கிய குறிக்கோளுடன் 1935-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவைப்படும் முக்கிய கச்சாப் பொருள்களைக் (நூல், சாயம், பட்டு, சரிகை) கொள்முதல் செய்து வழங்குவதும், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் உறுப்பினர்களான நெசவாளர் சங்கங்களின் உற்பத்திகளை விற்பனை செய்வதும் இச்சங்கத்தின் முக்கியப் பணிகளாகும்.

கைத்தறி பாலியஸ்டர் உள்ளிட்டு எல்லா வகையான கைத்தறித் துணிகளையும் கோ-ஆப்டெக்ஸ் வியாபாரம் செய்கிறது. தூய பட்டுக்குக் கோ-ஆப்டெக்ஸ் புகழ் பெற்றுள்ளது. கோ-ஆப்டெக்ஸ் பட்டுத் துணிகள் 100 சதவிகிதம் தூய பட்டு அசல் சரிகையாகும்.

1991-92-ஆம் ஆண்டில் கோ-ஆப்டெக்ஸின் விற்பனை ரூபாய் 172.27 கோடியாக இருந்தது 1992-93-ஆம் ஆண்டில் விற்பனை ரூ.195 கோடியாக உயர்ந்தது. 1992-93-இல் கோ-ஆப்டெக்ஸ் ரூ.3.40 கோடி இலாபம் ஈட்டியது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். 1993-94-க்கு ஆண்டுக் குறியீடு ரூ.232 கோடியாகும்.

நாடு நெடுகிலும் அமைந்துள்ள 434 விற்பனை நிலையங்கள் மூலம் கோ-ஆப்டெக்ஸ் கைத்தறித் துணிகளை விற்பனை செய்கிறது. தமிழகத்தில் 269 கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களும் வெளி மாநிலங்களில் 165 கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களும் பொது மக்களின் துணித் தேவைகளை நிறைவு செய்கின்றது.

பட்டுச் சேலைகளுக்குக் கோ-ஆப்டெக்ஸ் புகழ் பெற்றது. காரணம் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சி, தஞ்சாவூர், ஈரோடு மற்றும் பெங்களூர் ஆகிய நகரங்களில் பிரத்யேகமாக அமைந்துள்ள பட்டு விற்பனை நிலையங்களேயாகும்.

நெசவாளர்கள் நலனுக்காக அட்கோ உதவியுடன் நெசவாளர்களுக்கு வீட்டு வசதித் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், மானிய விகிதங்களில் நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படுகின்றது. இதுவரை ரூ12.93 கோடி மதிப்பில் 11,067 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

1992-ஆம் ஆண்டு பொங்கல் முதல் இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வரும் 1994 பொங்கலுக்கு 60 இலட்சம் ஆண்கள், 60 இலட்சம் பெண்களுக்கு இலவச வேட்டி சேலை வழங்கப்படவிருக்கிறது. இதற்குரிய வேட்டி சேலைகளைக் கோ-ஆப்டெக்ஸ் வழங்குகிறது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

கூட்டுறவு தொடர்பான பல ஆக்கப் பூர்வமான செய்திகளைத் தெரிந்து கொள்வதிலே மனநிறைவடைகிறோம்.

கூட்டுறவே நாட்டுயர்வு என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து செயல்படவும், அதன்மூலம் ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்திட வழியேற்படவும் நடைபெற்ற கூட்டுறவு வார விழா உதவியது என்றால் அது மிகையல்ல!

— பி.வி. கிரி

● ● ●

கூட்டுறவு வார நிறைவு விழா காஞ்சிபுரத்தில் நடை பெறுவதையொட்டி, 20.11.93 அன்று, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ஒருநாள் பத்திரிகையாளர் பயணத்துக்கு ஏற்பாடு செய்திருந்தது. அதன் விவரம் வருமாறு:

பூவிருந்தவல்லி கூட்டுறவு பிரதம நிலவள வங்கி 1927-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது; பூவிருந்தவல்லி, ஸ்ரீபெரும்புதூர், குன்றத்தூர் ஊராட்சிகளில உள்ள ஏழை நடுத்தர மக்கள் இதனால் பெரும் பயன்பெற்று வருகிறார்கள். குறிப்பிட்டுச் சொல்லுவதானால் 253 கிராமங்களுக்கு இதன் உதவிக்கரம் நீளுகின்றது.

"சிறு விவசாயிகளுக்கு ஆடுமாடு வாங்கக் கடன் தருகிறோம். பெரும் விவசாயிகளுக்கு டிராக்டர் போன்றவை வாங்கக் கடன் தருகிறோம்; இதுவரையில 90 பேருக்குப் பண்ணைசாராக் கடன் தந்திருக்கிறோம்..." வாங்கிச் செயலாளர் திரு. எம். மகாதேவன்.

நசரத்பேட்டை

ஸ்ரீபெரும்புதூர் விவசாயப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு வங்கி, நசரத்பேட்டையில் 1946-ல் தொடங்கப்பட்டிருக்கிறது. இதில் சுமார் 7,000 பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இந்த வங்கி மூலம் 237 நியாய விலைக் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. 1992-93-ல், இவ்வங்கி ஈட்டிய லாபம் 4.15 இலட்சமாகும்.

காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் மத்தியக் கூட்டுறவு வங்கியானது 1915-ல் துவங்கப்பட்டதாகும். செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் முழுமைக்குமாக நிழலதரும் வங்கி இது. கூட்டுறவு நிலையங்கள் மூலமும், அரசு மூலமும் இந்த வங்கி பெற்றுள்ள பங்குத் தொகை ரூ.536.17 இலட்சமாகும். திரு. அ. ஜின்னா இவ்

வங்கியின் இணைப்பதிவாளராக இருந்து வருகிறார்.

தமிழ்நாட்டில் உள்ள மத்திய கூட்டுறவு வங்கிகளிலேயே இந்த ஆண்டில் இதுவே தலைச்சிறந்ததாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

"இந்த வங்கிக்காக ஒரு கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடமொன்று கட்டப்பட்டு வருகிறது; அந்தக் கட்டடத்திற்கு இடம் மாறிய பிறகு, இதை முழுக்க முழுக்கப் பெண்களே நிர்வகிக்கும் வங்கியாக மாற்றிவிட இருக்கிறோம். எங்களிடம் கடன் பெறுவோரில் பெரும்பாலோர் ஏழை விவசாயிகளாகவோ அதிலும் குறிப்பாகப் பெண்களாகவே இருக்கிறார்கள்" என்கிறார், இணைப் பதிவாளர்.

பின்னையார் பாளையம்

மூவேந்தர் பட்டு மற்றும் பருத்தி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் துணி நூல் கட்டுப்பாடு அலுவலர் ரகுநாதன், இச்சங்கம் 1947-ல் தொடங்கப்பட்டதாகவும், இதில் 806 பேர் உறுப்பினராக இருப்பதாகவும் கூறினார்.

கடந்த ஆறுமாத காலமாகவே இங்கு பட்டு நூல் உற்பத்தி நடக்கிறது; பெரிதும் லுங்கித் தயாரிப்பே இங்கு அதிகம். 333 தறிகளை உடைய இந்தச் சங்கத்தின் மூலம் 92-93-ல் ரூ.57 இலட்சம் அளவிற்கு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் பட்டு

காஞ்சிபுரம் நகரில் உள்ள காஞ்சிபுரம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு மார்கெட்டிங் சொசைட்டி லிமிடெட் 1955-ல் தொடங்கப்பட்டதாகும். நடப்பு ஆண்டில் இதில் 985 பேர் அங்கத்தினர்களாக இருக்கின்றனர்.

இங்கே ரூ.500 முதல் ரூ.15,000 வரை பெறுமானமுள்ள சரிகை ரவிக்கைத் துண்டோடு பட்டுச் சேலைகளும், பட்டுப் பாவாடைகளும் விற்கப்படுகின்றன.

"எங்கள் சங்கம் முப்பத்தெட்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருகிறது; இதனாலேயே சிறந்த பட்டு கூட்டுறவு சங்கம் என்று எங்களுக்கு பாராட்டுக் கேடயம் வழங்கியுள்ளது அரசு" என்று மகிழ்வோடு தெரிவித்தார், இவ்வமைப்பின் துணி நூல் கட்டுப்பாடு அலுவலரும் தனி அலுவலருமான திரு. ஏ.ஏ. தாஸ்.

கூட்டுறவு வார நிறைவு விழா

தமிழகத்தில் 14.11.93 முதல் தொடங்கிய கூட்டுறவு வார விழா, 20.11.93 அன்று நிறைவுற்றது.

முறையே இவ்விழாவானது செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் திருப்போரூர், பெருநகர், திருக்கழுக்குன்றம், மேற்குத் தாம்பரம், பொன்னேரி, கடம்பத்தூர் ஆகிய ஊர்களில் நடைபெற்றது.

நிறைவு விழா, காஞ்சிபுரத்தில் உள்ள அறிஞர் அண்ணா கலையரங்கத்தில் 20.11.93 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழா தொடங்குமுன்பாக மாலைவ மாணவியர் பங்கேற்ற ஊர்வலம் நடைபெற்றது. மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கா.ப. பட்டாபிராமன் அவர்கள் அதனைப் பார்வையிட்டார்.

மாலை 5 மணியளவில் அறிஞர் அண்ணா கலையரங்கத்தில் மாணவர்

செல்வங்களின் கலைநிகழ்ச்சிகளோடு நிறைவு விழா நிகழ்ச்சிகள் தொடங்கின.

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. ஆர். சத்பதி, விழாவுக்குத் தலைமை யேற்றார். செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மண்டல இணைப்பதிவாளர் திரு. அ. ஜின்னா வரவேற்புரையாற்றினார்.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் இயக்குநர் (பிரச்சாரம்) திரு. பொன். சுப்பையா நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

நுகர்வோர் கூட்டுறவு கூடுதல் பதிவாளர் திரு. பா. இராம் மோகன்ராவ், செங்கற்பட்டு எம்.ஜி.ஆர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் வெ. வரப் பிரசாதராவ், வழக்கறிஞர் திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு ஆகியோர் இவ்விழாவில் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாவட்டத்தில் உள்ள 51 கூட்டுறவு அமைப்புகளின் சார்பில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சருக்குக் கைத்தறி ஆடைகள்- சால்வைகள் அணிவிக்கப் பட்டன.

மாவட்டத்தில் புதிதாக அமைய விருக்கும் நான்கு கூட்டுறவுச் சங்கங் களின் புதிய கட்டடங்களுக்கான அடிக் கல்லைத் திறந்து வைத்து மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கா.ப. பட்டாபிராமன் அவர்கள் விழாச் சிறப்புரையாற்றினார்.

"புரட்சித்தலைவரின் தலைமையில் அரசு அமைந்தபின் கூட்டுறவுத் துறையின்

பணிகள் மிகவும் மேம்பட்டிருக்கின்றன. தமிழகத்தில் உள்ள 23 மாவட்டங் களிலும் கூட்டுறவு வார விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றது; தந்தை பெரியார் அவர்கள் நெடுங்காலம் வாழ்ந்து சிறந்த திருச்சியிலே இதன் தொடக்க விழா நடைபெற்றது; அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த மண்ணான காஞ்சியிலே இந்த நிறைவு விழா நடை பெறுகிறது..." என்று குறிப்பிட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள்- ஒரு வார கால கூட்டுறவு வார விழாக்களிலும் தமிழ்நாடு முழுமையும் நடைபெற்ற நற் பணிகளைத் தொகுத்துரைத்தார்.

"நமது முதல்வர் புரட்சித்தலைவி அவர்களால், தமிழ்நாடு முழுமைக்குமாக மானியமாக அளவிலே தொடங்கப் பட்டுள்ள டாக்டர் புரட்சித்தலைவி 15 அம்சக் குழந்தைகள் திட்டத்திற்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கும் வகை யிலே கூட்டுறவுத் துறையும் தமது பங்கைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. ஆகவே, மாவட்டந்தோறும் அதற்காகப் பத்து அல்லது பதினைந்து படுக்கைகள் கொண்ட மருத்துவமனை- இத்துறை மூலம் அமைக்கப்படும் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள் கிறேன்"- என்றும் அவ்விழாவிலே மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

விழா முடிவில்- டைப்பிஸ்ட் கோபு வின் இராதாலட்சுமி தியேட்டர்ஸ் குழுவினரின் நகைச்சுவை நாடகம் நடை பெற்றது.

—பி.எல்.ஆர்.

பார்த்தோம்-படித்தோம்

1.11.93 இதழில் 'புரட்சித் தலைவி[illegible]' வெளியிட்ட விழா [illegible] குறித்த விவரங்களும், படங்களும் பார்ப்பதற்கும் படிப்பதற்கும் அருமையாக அமைந்திருந்தது.

"டாக்டர் ஜெ. ஜெயலலிதா 15 அம்சக் குழந்தைகள் நலத் திட்டம்" படித்தேன். புரட்சித்தலைவியின் "தாயுள்ளம்" இத்திட்டம் மூலம் மிளிர் கின்றது.

—சி. வள்ளியம்மாள்,
கள்ளியாகுமி.

மகாராஷ்ட்ரா பூகம்பம்-நிதி நன் கொடை குறித்த மாண்புமிகு முதல்வர் அவர்களின் படமும், செய்தியும் மிக அருமை. மகாராஷ்ட்ரா-வந்துள் ச்வொரு, ச்வொருவரின் துயரைத் துடைத்து நல்வாழ்[illegible] இது [illegible] உதவும். இந்நிதி [illegible] பிணைப்பை [illegible] அமைந்துள்ளது.

—எல். ரவிச்சந்திரன்
நெடிமொழியனூர்.

டாக்டர் மு. வரதராசனார்- பற்றிய கட்டுரை படித்தேன். அவரைப் பற்றிய பல செய்திகளைத் தெரிந்து கொள் டேன், பயனுள்ளதாக இருந்தது.

—டி. செல்வராஜ்
தொழுதூர்.

நவம்பர் இதழ் படித்துச் சுவைத்து மகிழ்ந்தேன். கடலூர் அரசு அருங்காட்சி யகத்தைப் பற்றி, காப்பாட்சியர் ம. வாசி வழங்கியுள்ள "அருங்காட்சியகம் உணர்த்தும் அரிய செய்திகள்"- என்ற கட்டுரை உண்மையில் என்னூர் அருங் காட்சியகத்தின் சிறப்புக்களைக் கூறுவ தாக இருந்தது.

—கடல் நாகராசன்,
கடலூர்.

'மாதம் ஒரு மருத்துவர்' வரிசை யில், மலநோய் மருத்துவம் தவிர, இதர மருத்துவர்களைப் பேட்டி கண்டால், மற்ற துறை மருத்துவ முறைகை அறிய வாய்ப்பு கிட்டும்.

—டி. நிலவழகி,
சுமைலம்.

கல்வியின் நோக்கம் பற்றிய டாக்டர் எல். இராதாகிருஷ்ணனின் உன்னத கருத்து என் இதயத்தில் ஆழப் பதித்தது. மனம் கனிந்த நன்றி.

—கே. சதாசுந்தரம்,
மதுராந்தகம்.



அந்தத் தாய், தன் மகனை அழைத்து ஒரு பொருளை எடுத்து வரும்படி கூறுகிறாள்.

"போம்மா... உனக்கு இதே வேலை!" என்று அந்தச் சிறுமி விளையாடத் தெருவுக்கு ஓடி விடுகிறாள்.

இதைக் கவனிக்கிறார் நந்தை.

தன் மகளை அன்புடன் அருகை அழைக்கிறார்.

"அம்மா சொன்ன வேலையைச் செய்ய வேண்டியது தானே? ஏன் முடியாது என்று சொன்னாய்?" என்று செல்லமாக முதுகை வருடியபடியே கேட்டுக் கொண்டே.

"தாய் சொன்ன சொல்லைத் தட்டாதே, பாப்பா!" என்றார்.

மகளும், அப்பாவின் பேச்சைக் கேட்பதாக உறுதி கூறுகிறாள்.

அந்தத் தாய்தான் சிறுமி சகுந்தலாவின் தாய் செல்லம்மாள். அந்தச் சகுந்தலா தான் ஒரு தேசியக் கவிஞனின் மகள்; அந்தத் தேசியக் கவிஞன்தான் கப்பிரமணிய பாரதி.

ஆம். பாரதி தம் மகளுக்காக எழுதிய பாடல்தான், 'பாப்பாப் பாட்டு'!

அந்தப் பாட்டை அவர் தம் மகளுக்காக எழுதினாலும், அதில் உலகத்துக்கே நீதி சொல்லக்கூடிய கருத்துக்கள் பொதிந்திருப்பதை நாம் உணரலாம்.

64 வரிகளில், நான்கு நான்கு அடிகளாக எழுதி உள்ள இந்தப் பாட்டு, சிறந்த ஒரு குழந்தைப் பாட லாகவும், குழந்தை இலக்கியமாகவும் விளங்குவதை நாம் பார்க்கலாம்.

— நாளைய தலைமுறையான இன்றைய குழந்தை களை நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் தயார்ப்

வரிகளு வரி, வார்த்தைகளு வார்த்தை [illegible] சொற்களில் சோலையாக அமை [illegible] குழந்தைகளுக்கு எப்படிச் சொன்னால் புரியும், என்கிற மந்திரச் சக்தி பாரதியாரிடம் இருந்தது. 'நந்தை சொல்லிக்க மந்திரமில்லை' யல்லவா?

ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!
கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா!

பாடலின் தொடக்கம் இது. வயர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்? உடல் நலமாக இருந்தால்தான் உருப்படியாய்ச் செயல்பட முடியும்? அதற்கு விளை யாட்டு மிகவும் அவசியம் என்பதால், தொடக்கத்திலேயே அந்தக் கருத்தை வைத்தார். அதோடு அடுத்தபடி என்ன செய்ய வேண்டும் என்பதையும் கூறி விளையாட்டு, கொண்டாடி மகிழ்வதோடு நின்றுவிடாமல் கூடி விளையாடுவதோடு வாழ்வும் நின்றுவிடாது என்றும் அன்புடன் கூறுகிறார்.

சிட்டுக்குருவியைப் பார்த்திருக்கிறோம். அது ஒரு இடத்தில் சும்மா இருக்காது. சட்டென்று பறந்து, அதைப் போலச் சுறுசுறுப்பாய் இருக்க வேண்டும். அத்துடன், அழகிய பறவையைப் பார்த்து மனத்தில் மகிழ்ச்சி கொள்ள வேண்டும். வயலைக்குள்ளிருந்து இடம் கொடுக்கக் கூடாது என்பது அவரது அறிவுரை.

சின்னஞ் சிறுகுருவி போலே - நீ
திரிந்து பறந்து வா பாப்பா!
வண்ணப் பறவையைக் கண்டு - நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா!

என்று பிஞ்சு மனத்தில் பதியும்படி எத்தனை அழகாகக் கூறுகிறார்!

[illegible] கொண்டு [illegible] மகிழ்ச்சியாக இருக்கிறது. [illegible] கொண்டு விளையாடுவதைப் பாப்பா, இருக்கும்

கோழி என்றால், குறிப்பாக, குழந்தைகளுக்குக் கொண்டாட்டம் தானே? அதைப் பிடிக்கக் குழந்தைகள் ஓடுவதை நாம் பார்க்க வில்லையா என்ன?

வடையைத் திருடிய காக்கைக் கதைதான் நமக்குத் தெரியுமே! குழந்தை கையில் ஏதாவது பண்டம் வைத்திருந்தால், திடீரென்று பிடுங்கிக் கொண்டு பறந்துவிடும் திருட்டுக் காக்கை அல்லவா அது? பாவம்! அந்தக் காக்கைக்கும் இரக்கப்பட வேண்டும்.

கொத்தித் திரியுமந்தக் கோழி - அதைக்
கூட்டி விளையாடு பாப்பா!
எத்தித் திருடுமந்தக் காக்காய் - அதற்கு
இரக்கப் படவேண்டும் பாப்பா!

பால் ஒரு பரிபூரண உணவு. அந்தப் பாலைத் தருவது எது? பசு. அந்தப் பசு மிக நல்லதல்லவா? நாய் வீட்டைக் காக்கிறது. வாலைக் குழைத்துத் தம் விசுவாசத்தையும் காட்டுகிறது. இது நமக்குத் தோழனல்லவா? இதோ பாரதியார் பாடுகிறார்.

பாலைப் பொழிந்துதரும் பாப்பா! - அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா!
வாலைக் குழைத்துவரும் நாய்தான் - அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா!

இதேபோல வீட்டுப் பிராணிகளான குதிரை, மாடு, ஆடு ஆகியவற்றையும் நாம் ஆதரிக்க வேண்டும் என்பது பாரதியாரின் கருத்து.

'வைகறைத் துயிலெழு' என்பார்கள். காலையில் எழுந்ததும் படிக்க வேண்டும். அப்போதுதான் படித்தது மனத்தில் பதியும் என்று சொல்லுவார்கள். பிறகு நல்ல பாடல்களைப் படிக்க வேண்டும், பாட வேண்டும். மாலை முழுவதும் விளையாட வேண்டும். காலையில் படிப்பு; மாலையில் விளையாட்டு. இதை வழக்கமாகக் கொள்வது நல்லது.

காலை யெழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும்நல்ல பாட்டு!
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா!

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்" என்றார் வள்ளலார். 'தன்னைஞ் சறிவது பொய்யற்க' என்றார் திருவள்ளுவர் பாரதியாரும்,

பொய்சொல்லக் கூடாது பாப்பா - என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா,
தெய்வம் நமக்குத்துணை பாப்பா - ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா!

என்றார். அத்துடன் தெய்வமே நமக்குத் துணை என்றும் கூறுகிறார்.

பாரதியார் மேலும் கூறுகிறார்—

- பாதகஞ் செய்பவரைக் கண்டால் - நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா!
- துன்பம் நெருங்கிவந்த போதும் - நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா!
- சோம்பல் மிகக்கெடுதி பாப்பா - தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா!

இவ்வாறு குழந்தைகள் நல்லபடியாக வளர - வாழ வழிவகுக்கும் வகையில் அவரது வார்த்தை அமுதம் விளங்குகிறது.

ஆன்றோர்களும் சான்றோர்களும் வாழ்ந்த இந்த நாடு அமிழ்தினும் இனியதாகும். எனவே, இந்த நாட்டைத் தாய் என்று வணங்கிடு என்று மழலைச் செல்வங்கள் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிய வைக்கிறார்.

'தமிழுக்கு அமுதென்று பேர்' என்றார் பாவேந்தர் பாரதிதாசன். பாரதியும் 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' என்றார். அந்தத் தமிழை நாம் 'தொழுது படித்திட வேண்டும்' என்றும் அன்புக் கட்டளை இடுகிறார்.

இமயம் முதல் குமரி வரை யாவரும் ஒன்று என்கிற எண்ணம் மலர வேண்டும் என்பது மாக்கவியின் ஆசை. அந்த ஆசை நிறைவேற நாம் பாடுபடுவோம்.

வேதம் உடையது இந்த நாடு. நல்ல வீரர் பிறந்ததும் இந்த நாடு. இந்த நாட்டை நாம் வணங்கி வழிபட வேண்டும்.

மேலோர் யார்? கீழோர் யார்? சிறியவர் யார்? பெரியவர் யார்? இதற்குத் திருவள்ளுவர்,

செயற்கரிய செய்வார் பெரியோர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

என்றார். செய்வதற்கு அருமையான செயல்களைச் செய்ய வல்லவரே பெரியோர்; அவ்வாறு செய்ய மாட்டாதவர் சிறியோர் என்பது வள்ளுவர் கருத்து.

பாரதியாரும், 'தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்!' என்று கூறி, யார் மேலோர் என்பதையும் தெளிவு படுத்துகிறார்.

சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சிசொல்லல் பாவம்,
நீதி, உயர்ந்தமதி, கல்வி - அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்

இதைவிட எளிமையாக - அருமையாக யாரால் சொல்ல முடியும்?

மனிதனிடத்தில் உள்ள உயர்ந்த பண்புகளில் அன்புக்கும் முக்கிய இடமுண்டு. 'அன்பே சிவம்' என்பது ஆன்றோர் வாக்கு. மனிதரிடத்தில் அன்பு செலுத்துவது போல, பிற உயிர்களிடத்திலும் அன்பு செலுத்துதல் வேண்டும். ஆம். மனத்தில் ஈடுமும் வேண்டும்; வீரமும் வேண்டும்.

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
வலிய முடைய நெஞ்சு வேணும் - இது
வாழும் முறைமையடி பாப்பா!

என்று நீதி நெறிமுறைகளை ஒருமாலையாகக் கோத்துக் கொண்டே போய், பாடலின் முடிவில் 'இதுதான் வாழும் முறை' என்று முத்தாய்ப்பு வைக்கிறார் பாரதி.

பாரதியின் பாப்பாப்பாட்டு, குழந்தை உலகம் குன்றிவிட்டவிளக்காய் ஒளிவிட வழிகோலும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!

— பி.வி. கிரி

- 1972 அக்டோபர் 8-ந் தேதி சென்னை கிண்டி ராஜ பவனத்தில் நடைபெற்ற அன்னல் காந்தி அடிகள் பிறந்த நாள் விழாதான், ராஜாஜி இறுதியாகக் கலந்துகொண்ட பொது நிகழ்ச்சி யாகும்.

- ராஜாஜி மரணம் அடைவதற்கு முன் - நினைவு இழப்பதற்கு முன்பாக, 'இப்போது எப்படி இருக்கிறீர்கள்?' என்று டாக்டர்கள் கேட்டனர். அதற்கு ராஜாஜி, "நான் சந்தோஷமாக இருக்கிறேன்" என்று பதில் சொன்னார். இதுதான் அவர் பேசிய கடைசி வார்த்தை!



'கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை'

இது திருக்குறள் 'கடவுள் வணக்கம்' என்னும் முதல் அதிகாரத்தில் வருகிற 9-வது குறட்பா.

எண்குணத்தான் ஆகிய இறைவனின் திருவடிகளை வணங்க வேண்டியதின் இன்றியமையாமையை வலியுறுத்துவது இந்தக் குறட்பா.

''தத்தமக்கேற்ற புலன்களைக் கொள்கையில்லாத பொறிகள் போலப் பயன்படுதலுடையனவல்ல, எண்வகைப்பட்ட குணங்களையுடையானது தாள்களை வணங்காத் தலைகள்''

என்பது இக்குறட்பாவிற்கு பரிமேலழகர் எழுதிய உரை. அதாவது,

''தத்தமக்குரிய உணர்வுகளைக் கொள்ளாத (கேளாக் காது - காணாக் கண் போல) புலன்கள் பயனற்றாற் போல எட்டுக் குணங்களையுடைய இறைவனின் திருவடிகளை வணங்காத் தலைகளும் பயனற்றன'' என்பது.

'கோளிற் பொறியிற் குணமிலவே' என்ற குறட்பாவிற்குப் பரிமேலழகருக்கு முன் உரை வகுத்தவராகக் கருதப்பெறும் மணக்குடவர்,

''அறிவில்லாத பொறிகளையுடைய பாவைகள் போல, ஒரு குணமும் உடையவனல்ல; எட்டுக் குணத்தினை உடையவன் திருவடிகளை வணங்காத் தலையினையுடைய உடம்புகள்' என்றார்.

இறைவனின் திருவடிகளை வணங்க வேண்டும் என்பதே எல்லாரது கருத்துமாகும். ஆனால், 'கோளிற் பொறியில் குணமிலவே' என்ற குறட்பாவிற்கு இவைகள் சரியானவைதாமா? என்பதையே நாம் இங்கு ஆராய வேண்டும்.

புலன் உணர்வுகளைக் கொள்ளாத பொறிகள் பயனற்றன என்னும்போது, அத்தகை பொறிகளையுடைய உடம்பும் பயனற்றதே. அவ்வாறிருக்க, தலையையோ, தாளையோ பிற உறுப்புகளையோ தனித்துக் கூற வேண்டியதில்லை. மேலும் ஐம்புலன்களையும் அடக்கி, மன ஒருமைப்பாட்டோடு இறைவனை வழிபடுதலே முறையும் சிறப்பும் ஆகும். அவ்வாறிருக்க,

'வணங்காத் தலை' என்பதற்கு 'வணங்காத தலைகள்' என்று பொருள் கொள்ளுதல் எவ்வகையில் சிறப்புடையது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இனி, 'ஈதல் இயையாக் கடை' (கு.200) வறியவர்க்கு ஒன்று வழங்க முடியாத நிலை வந்தபோது; 'ஒண்டொடி கண்ணே' (கு.1101) ஒளிபொருந்திய வளையல்களை அணிந்த இவளிடத்தில்; 'உள்ளம் உடைந்துக்கக் கால்' (கு.1270) துன்பத்தைத் தாங்காமல் உள்ளம்; 'வணங்காத் தலை' என்பதற்கு, வணங்காதபோது, என்று பொருள் கொள்ளுவதே சிறப்பாகத் தோன்றுகிறது. அதாவது, தலை என்பது ஏழாம் வேற்றுமைபுருபாக நின்றது.

'கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை'

என்பதற்கு,

'எண் குணத்தானின் திருவடிகளை வணங்கவில்லையானால், தத்தமக்குரிய உணர்வுகளைக் கொள்ளாத புலன்களைப் போல வாழ்வும் பயனற்றது' என்று பொருள் கூறுவதே சரியாகும்.

இவ்வாறு 'எண்' என்னும் சொல் எண்ணுதல் என்னும் பொருளில் திருக்குறளில் வேறு எங்கேனும் பயன்படுத்தப்பட்டுள்ளதா? ஆம்.

எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை இல் (கு.910)

என்ற குறட்பாவைக் காட்டலாம். இக்குறட்பாவின் பொருள்:

'நன்கு எண்ணுதல் பொருந்திய (ஆழ்ந்து சிந்திக்கின்ற) உள்ளத்தோடு, தகுந்த நிலையும் வாய்க்கப் பெற்றவர், எக்காலத்தும் மனைவியின் ஏவலுக்கு இணங்கும் பேதைமை புரியார்' என்பது.

இங்கு, எண் எனும் சொல், எண்ணுதல் - சிந்திக்கும் - எண்ணுகின்ற என்ற பொருளில் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இனி, 'கோளிற் பொறியில்' என்ற குறட்பாவில் ''அன்பர்கள் மனத்தகத்தே எண்ணும் குணநலன்களை உடையவனின் திருடிவகளை (தத்துவங்களை)-த் தொழவில்லையானால், தத்தமக்குரிய உணர்வுகளைக் கொள்ளாத புலன்களைப் போல வாழ்வும் பயனற்றதே'' என்று பொருள் காண்பதே சரி.

''மெய்யுணர்வு பெறுதலே வாழ்வின் பயன் - அம்மெய்யுணர்வைப் பெறவில்லையானால் தத்தமக்குரிய உணர்வுகளைப் பெறாத புலன்களைப் போல வாழ்வும் பயனற்றதே என்பதாம்.

ஐயுணர்வு எய்தியக்கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு எய்தாக் கடை' (கு.314)

என்ற குறட்பாவினாலும் இவ்வுண்மையைத் தெளியலாம்.

அடுத்தபடியாக, இக்குறட்பாவில் உள்ள 'எண்குணத்தான்' என்ற சொல்லை ஆராய வேண்டும். எண் குணத்தான் என்பதற்கு,

1. 'தன்வயத்தனாதல், 2. தூய உடம்பினனாதல், 3. இயற்கை உணர்வினனாதல், 4. முற்றுமுணர்தல், 5. இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், 6. பேரருளுடைமை, 7. முடிவிலாற்றலுடைமை, 8. வரம்பிலின்பமுடைமை என எட்டுக் குணங்களையுடைய இறைவன் என்று பொருள் கூறப்படுகிறது.

இந்நிறத்தன், இவ்வியல்பினன், இப் பெயரினன் என்று எவராலும் வரையறுத்துக் கூறமுடியாத இறைவனுக்கு நாமே எட்டுக் குணங்களைக் கற்பித்து, அந்தச் சிமிழுக்குள் அவனை அடக்க முயல்வது நியாயமா? குறுகிய நோக்க மன்றோ?

குலமிலான் குணம் குறியிலான்
குறைவிலான் கொடிதாம்
புவியிலான் தனக் கென்னவோர்
பற்றிலான் பொருத்தம்
இலமிலான் மைந்தர் மனையில்
லான் எவன் அவன்சஞ்
சலமிலான் முத்தி தரும்பர
சிவனெனத் தகுமே''

என்றார் தாயுமானார்.

இத்தகைய இறைவனுக்கு எட்டுக் குணங்கள் கற்பித்து, குடும்பம், கூத்தி, மக்கள், மனைவியும், கற்பித்தல் ஏற்புடையதா? ஏற்றம் தேடுவதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

எனவே, 'எண்குணத்தான்' என்பதற்கு, நாம் மனத்தகத்தே எண்ணுகின்ற குணநலன்களையுடையவன் என்று பொருள்.

இறுதியாக, 'கோளிற் பொறியிலவே' என்னும் குறட்பாவிற்கு,

'மெய்யுணர்வு பெறவில்லையானால், அத்தகைய வாழ்வு, புலன் உணர்வுகளைப் பெறாத பொறிகளைப் போலப் பயனற்றதாம்' என்று பொருள் காண்பதே பொருத்தமும் சிறப்பும் ஆகும்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை
வறுமை ஒழிப்பு மற்றும் வறட்சி நிவாரணத் திட்டங்கள்-1993-94

வ. எண்	திட்டத்தின் பெயர்	வேலைகளின் எண்ணிக்கை	நிதி ஒதுக்கீடு (இலட்சத்தில்)
1.	ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்	9759 (பயனாளிகள்)	402.538
2.	கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம்	996 (பயனாளிகள்)	31.700
3.	ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம்		
	1. தொகுப்பு வீடுகள்	876	168.192
	2. பள்ளிக் கட்டடங்கள்	82	98.400
	3. சத்துணவுக் கூடங்கள்	16	10.720
	4. பஞ்சாயத்து அலுவலகக் கட்டடங்கள்	88	76.560
	5. குடிநீர் குட்டைகள்	14	21.000
	6. கோயில் குளங்கள் சீரமைத்தல்	32	21.000
	7. தார்ச் சாலைகள்	81 (99 கி.மீ)	146.520
	8. செம்மண் சாலைகள்	7 (21.8. கி.மீ)	16.380
	9. ஜீவன்தாரா கிணறுகள்	388	162.960
	10. பஞ்சாயத்து வேலைகள்	864	369.370
	11. சமூக நலக்காடுகள்	11.5 இலட்சம் கன்றுகள்	38.270
4.	சாண எரிவாயுத் திட்டம்	600	7.000
5.	புகையில்லா அடுப்புத் திட்டம்	7500	—
6.	ஒருங்கிணைந்த கிராமப்புற எரிசக்தித் திட்டம்	1980	4.030
7.	மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்	4349 ஹெக். 260 தடுப்பு அணைகள் 6 குடிநீர்குட்டைகள் 6000 ஓடைப் பராமரிப்பு 1 நடமாடும் கால்நடை மருந்தகம்	97.230
8.	கட்டட மையத் திட்டம்	24	18.000
	மொத்தம்	33926	1689.870

டாக்டர் கே. சத்யகோபால், இ.ஆ.ப.,
கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திட்ட அலுவலர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை.

டாக்டர் கிருஷ்ணசாமி ராஜீவன், இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சித் தலைவர்,
மதுரை-20

69 சதவிகித ஒருங்கிணைந்த தமிழ்நாட்டில் தொடர்ந்து அமல் நடத்த வேண்டும் என்று, மத்திய அரசை வற்புறுத்தி தமிழ்நாடு முழுவதும் நவம்பர், 16-ந் தேதி பொது வேலைநிறுத்தம் (பந்த்) நடத்துவது என்று, தமிழகச் சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி 16.11.93 அன்று, தமிழ் நாட்டில் முழு அடைப்பு, எந்தவித அசம்பாவிதமும் இல்லாமல் வெற்றிகரமாக நடத்தது.

தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னையில், எந்த இடத்திலும் கடைகள் திறக்கப்படவில்லை. கொத்தவால் சாவடி, ஜாம் பஜார் மார்க்கெட்டுகள், வியாசர்பாடி தண்ணீர்தொட்டி மார்க்கெட் உள்பட எல்லா முக்கிய மார்க்கெட்டுகளும் அடைக்கப்பட்டிருந்தன.

அண்ணா சாலை [illegible] மணியளவிலிருந்து, மாலை 6 மணி வரை பேருந்து போக்குவரத்து நடக்கவில்லை. பள்ளிகள் மற்றும் திருமண்டபங்கள் பேருந்துகள், டெம்போக்களில் திரும்பி வைக்கப்பட்டிருந்தன. இருசக்கர வாகனங்கள் வெறிச்சோடிக் கிடந்தன. இரு சக்கர [illegible] வாகனங்கள் ஓடவில்லை. மாலை 6 மணிக்கும் பிறகு இரவில்கடை ஓடத் தொடங்கின.

முழு அடைப்பையொட்டி, மாநில அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் அனைத்துக்கும் விடுமுறை விடப்பட்டிருந்தது.

சென்னைத் துறைமுகத்தில் [illegible] சென்னை துறைமுகங்கள் [illegible] அரசு அலுவலகத்தில் சில [illegible]



எழும்பூர் ரயில்நிலையத்தில்...

தலைமை தெரெஞ்சாலையில்...

மாண்புமிகு முதல்வர் அவர்கள் நன்றி

16.11.1993 அன்று காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்திற்கு, தங்களது முழு ஒத்துழைப்பையும் நல்கி, அமைதி காத்து, இந்தப் பொது வேலை நிறுத்தம் வெற்றி பெறச் செய்த தமிழகத்தின் அனைத்துத்தரப்பு மக்களுக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் தற்போது நடைமுறையில் இருந்து வரும் 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறை, தமிழக மக்களின் முன்னேற்றம் கருதி, தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டுமென்ற உறுதியான, உணர்ச்சிபூர்வமான தமிழக மக்களின் ஒட்டுமொத்த உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் இந்தப் பொது வேலை நிறுத்தம் அமைந்திருந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வந்திருந்தனர். இதேபோல அஞ்சல் நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டிருந்தன.

சென்னையில் சென்ட்ரல், எழும்பூர் இரயில் நிலையங்கள் மற்றும் முக்கிய இடங்களில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. பம்பாய் மெயில், மங்களூர் மெயில் ஆகிய தொலை தூர இரயில்கள் மாலை 6 மணிக்கு சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் வந்தன.

பேருந்து வசதி இல்லாததால், பயணிகளைப் போலீசார் வேனில் ஏற்றி அவரவர்கள் வீடுகளுக்கு அனுப்பி வைத்தனர். விமான நேரமும் மாற்றியமைக்கப் பட்டது. அன்றைய பொது வேலைநிறுத்தம் முழு வெற்றி பெற்றுவிட்டது என்பதை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. எம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
விற்பனை மேலாளர் தமிழக அரசுக்கில் அச்சிடப்பட்டது.

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு
Licence No.TN/MS/(C) PP-23





தமிழரசு
16-12-1993 ரூ.3

பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்

அனைத்து

காதி கிராப்ட்

அங்காடிகளில் கிடைக்கும்

RNI/DIS/93/247

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

இந்த இதழில்...

பிரதமரிடம் முதல்வர் நேரில் கோரிக்கை ... 2
மத்திய அரசு பெருமனவில் வெள்ள நிவாரணத் தொகை வழங்க வேண்டும்! ... 4
நாடுகாப்போரை நாம் காத்திடுவோம்! முதல்வர் உரை ... 6
1994-95-ஆம் ஆண்டுத் திட்டத்திற்கு ரூ.2,750 கோடி ஒதுக்கீடு ... 9
புயலாலும் மழையாலும் சேதமடைந்த பகுதிகளை முதல்வர் பார்வையிட்டார் ... 11
தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் ... 17
மதுரை மாநகராட்சி ... 21
பெண்களுக்குப் பெருமைதரும் திட்டங்கள் ... 24
பாலையில் சோலைவனம் ... 27
குறளின் குரல் ... 29
நீதித் துறையினருக்குத் தனிக் குடியிருப்புகள் ... 33
காவல் பணியில் கம்ப்யூட்டர் ... 34
அரசு ஊழியர்களுக்கு ரூ.100 இடைக்கால நிவாரணம் ... 36
பெரியார் மாவட்டத்தில் புயல் வெள்ளம் ... 39
நாட்டின் எல்லாக் குடிமக்களுக்கும் சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் விரைவான நீதி கிடைக்க வேண்டும்! டெல்லி மாநாட்டில் முதல்வர் உரை ... 42

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024
மார்கழித் திங்கள் - 1
மலர்:24 இதழ்:12
16-12-1993
விலை: ரூ.3

சர்வதேசத் தொழிலாளர் நல அமைப்பின் இந்திய இயக்குநர் திருமதி ஜோசபைன் சுரவாசில் அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நினைவுப் பரிசு வழங்கினார் (9.12.1993).

இயற்கைச் சீற்றத்தால் தமிழகத்தில் ரூ 666 கோடியளவில் பெரும் சேதம்!

பிரதமரிடம் முதல்வர் நேரில் கோரிக்கை

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இன்று (10.12.1993) இரவு 9.15 மணியிலிருந்து 10.20 மணி வரை மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்களை புதுடெல்லியில் அவரது இல்லத்தில் சந்தித்தார்கள். இந்த சந்திப்பு 65 நிமிடங்கள் நீடித்தது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மாண்புமிகு பிரதமருக்குப் பொன்னாடை போர்த்தி மலர்ச்செண்டு வழங்கினார்கள். பின்னர் சமீபத்தில் நடந்த தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி பெற்ற வெற்றிக்காகத் தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துத் தமிழ் நாட்டில் புயல் வெள்ளச் சேதங்களை உடனடியாகப் பார்வையிட மத்திய அரசின் சார்பில் மத்திய விவசாய அமைச்சர் திரு பல்ராம் ஜாக்கர் அவர்களையும், மத்திய அரசு அலுவலர்களையும் அனுப்பி வைத்ததற்காக தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் தமிழ்நாட்டில் புயல், பெருமழை வெள்ளத்தால் ஏற்பட்ட உயிர்ச்சேதம் மற்றும் பொருள் சேதங்கள் பற்றி பிரதமருக்கு விளக்கினார்கள். தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் கடந்த 2 மாதங்களில் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ள என்றும், சேதங்களின் மதிப்பு 666 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது என்றும் எடுத்துரைத்தார்கள். 666 கோடி ரூபாய்க்கான சேத விவர அறிக்கையினையும் மழை வெள்ளச் சேதங்கள் பற்றிய வீடியோ, கேசட்டு, புகைப்பட ஆல்பம் ஒன்றினையும் பிரதமரிடம் அளித்தார்.

கடந்த 3 ஆண்டுகளாக, தமிழகம் இயற்கைச் சீற்றங்களால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வந்துள்ளதாகவும், மூன்றாவது ஆண்டாகத் தொடர்ந்து புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதால், இந்த ஆண்டின் சேதங்கள் கடந்த ஆண்டுகளைவிட கடுமையாக உள்ளன என்றும் பாலங்கள், ஏரிகள், நீர்நிலைகள், நெடுஞ்சாலைகள் பொதுக்கட்டடங்கள், மின்வாரிய உபகரணங்கள் ஆகியவற்றிற்கு ஏற்பட்ட சேதங்கள் வெள்ள நிவாரணப் பணிகளை உடன் மேற்கொள்ளத் தமிழகத்திற்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமரை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்.

பாரதப் பிரதமர் அவர்கள் சேத விவர அறிக்கையினைப் பெற்றுக் கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்துக்களைக் கேட்டுக் கொண்டதோடு தமிழகத்திற்குத் தேவையான நிவாரண உதவிகளை அளிப்பதாக உறுதி அளித்தார்.

மேலும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டில் தொடங்கப்படவுள்ள இந்திய-சிங்கப்பூர் வர்த்தக மையத்தின் (Indo-Singapore Trade Corridor) சிறப்பு அம்சங்களைப் பாரதப் பிரதமருக்கு எடுத்துரைத்து, இந்த மையம் தென் மாநிலங்களில் விரைவான தொழில் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்பதையும் எடுத்துரைத்தார். இத்திட்டம் 640 கோடி ரூபாய் முதலீட்டில் சென்னைக்கு அருகில் 800 ஏக்கர் நிலப்பரப்பில் துவங்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதையும் இந்த மையத்தின் மூலம் 100 கோடி அமெரிக்கன் டாலர் (3600 கோடி ரூபாய்) மதிப்புள்ள வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்கும் என்றும், இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 2600 கோடி ரூபாய் பெருமானமுள்ள பொருட்கள் ஏற்றுமதி செய்வதற்கு வாய்ப்புள்ளது என்றும் எனவே இத்திட்டத்தை விரைந்து செயல்படுத்த ஆக்கபூர்வமான உதவிகளையும் சலுகைகளையும் மத்திய அரசு அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மேலும் தமிழக முதல்வர் அவர்கள் தமிழ் நாட்டின் உயிர்மூச்சு பிரச்சினையான 69 சதவிகித இட ஒதுக்கீடு பிரச்சினை குறித்து சமீபத்தில் அனைத்துக்கட்சி கூட்டம் நடைபெற்றதையும், இட ஒதுக்கீடு சம்பந்தமாக ஒரு தனிச் சட்டம் ஒன்றை இயற்றி மத்திய அரசின் மூலமாக அரசியல் சட்டத்தில் தகுந்த திருத்தங்களை மேற்கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டதையும் அவ்வாறு தனிச் சட்டம் இயற்றி அதற்கு அரசியல் நிர்ணய சட்டத்தில் தகுந்த பாதுகாப்பு கொடுக்கப்படுவதற்கும் தமிழ் நாட்டின் ஒட்டுமொத்த நலனைக் கருதி, தொடர்து 69 சதவிகித இட ஒதுக்கீடு செயல்படுத்தப்படவும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் உதவி புரிய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

தென் மாநிலங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும் மற்றொரு திட்டமான தென்னக எரிவாயு இணைப்புத் திட்டத்தையும் (Southern Gas Grid) விரைந்து செயல்படுத்துவதற்கு மத்திய அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அதற்கு முன்னோடியாக இத்திட்டத்திற்கான ஆயத்த ஆய்வுப் பணிகளைத் துவங்குவதற்கு மத்திய அரசு இனியும் தாமதம் செய்யாமல் மேற்கொள்ள வேண்டும் என்றும் பாரதப் பிரதமரை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கேட்டுக்கொண்டார்.

பின்னர் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தமிழக முதல்வர் அவர்களை வாசல்வரை வந்து வழி அனுப்பி வைத்தார்.

மத்திய அரசு பெருமளவில் வெள்ள நிவாரணத் தொகை வழங்க வேண்டும்

மத்திய வேளாண்மைத்துறை அமைச்சரிடம் முதல்வர் கோரிக்கை

மத்திய விவசாயத் துறை அமைச்சர் திரு பலராம் ஜாக்கர் அவர்கள் 9.12.1993 அன்று காலை புயலாலும், மழையாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களை ஹெலிக்காப்டர் மூலம் பார்வையிட்ட பின்பு மதியம் 2.30 மணிக்குத் தலைமைச் செயலகத்தில் தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைச் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பு சுமார் 45 நிமிடம் நேரம் நடந்தது. மத்திய விவசாயத் துறை அமைச்சர் திரு பலராம் ஜாக்கர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் அவருடைய அறையில் தனியாக சுமார் 15 நிமிடம் நேரம் பேசிவிட்டு, பிறகு அவருடன் வந்த மத்திய அரசு அலுவலர்களுடன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைச் சந்தித்துப் பேசினார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மத்திய விவசாயத் துறை அமைச்சர் திரு பலராம் ஜாக்கர் அவர்களிடம் புயல், மழை, வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்கள் மற்றும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளத் தேவைப் படும் நிதி உதவி குறித்த அறிக்கை, சேத விவரங்கள் அடங்கிய போட்டோ ஆல்பம், வீடியோ கேசெட் ஆகியவற்றை வழங்கினார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தக் கூட்டத்தில் பேசும்போது தொடர்ந்து 1991, 1992 மற்றும் 1993 ஆகிய ஆண்டுகளில் தமிழகம் புயல், பெருமழை, வெள்ளத்தால் தொடர்ந்து பாதிக்கப் பட்டுள்ளது என்றும், கடந்த 1992-ஆம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளிக் காற்று மற்றும் பெருமழை, வெள்ளம் காரணமாக ஏற்பட்ட சேதங்களின் மதிப்பு 540 கோடி ரூபாய் என மதிப்பிட்பட்டு நிவாரண உதவு கேண்டி மத்திய அரசிடம் அறிக்கை சமர்ப்பித்தும் கூட மத்திய அரசிடமிருந்து உதவித் தொகை எதுவும் கிடைக்கவில்லை என்றும், மத்திய அரசு வழங்கியது எல்லாம் 1993-94-ஆம் ஆண்டிற்குறிய 'இயற்கைச் சீற்றங்கள் நிவாரண நிதியின்' கீழ் வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டில் 14.65 கோடி ரூபாயும், முன்பணமாக 50 கோடி ரூபாயும், முதல்வர் வழங்கினார்கள்.இந்த 50 கோடி 1992-93 நிதியாண்டு இறுதியில் சரிக்கட்டப் பட்டது என்றும் தெரிவித்தார். இந்நிலையில் அடுத்தடுத்த ஆண்டுகளில் புயல், வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்டதால், இந்த ஆண்டு சேதங்கள் கடுமையானதோடு, நிவாரணப் பணிகள் மேற் கொள்ளக் கூடுதல் நிதியும் தேவைப்படுகிறது என்றும், இந்த ஆண்டு ஏற்பட்ட சேதங்களின் மதிப்பு 666 கோடி ரூபாய் என்றும் எடுத்துரைத் தார். 666 கோடி ரூபாய் உதவி வேண்டி, மதிப்பீட்டு அறிக்கை திரு பல்ராம் ஜாக்கரிடம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், இந்த முறை யாவது மத்திய அரசு, தமிழக அரசின் கோரிக் கையை ஏற்று, தாராளமாக நிதி உதவி வழங்கும் என்று தான் நம்புவதாகவும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் குறிப் பிட்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேலும் குறிப்பிட்டபோது ஊட்டியில் இந்த ஆண்டு ஏற்பட்ட மிகப் பெரிய நிலச்சரிவையும் அதனால் ஏற்பட்ட உயிர்ச் சேதம் மற்றும் பொருட்சேதத்தை யும், எண்ணூர் அருகே கடல் அரிப்பால் தேசிய நெடுஞ்சாலையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளையும் குறிப்பிட்டுக் காட்டி, இவற்றைச் சீர்செய்யவும், செப்பனிடவும், மத்திய அரசு பெருமளவில் வெள்ள நிவாரண உதவித் தொகையைத் தமிழகத் திற்கு வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மத்திய விவசாயத் துறை அமைச்சர் திரு பலராம் ஜாக்கர் அவர்கள் தமிழகத்தில் இந்த ஆண்டு, புயல், வெள்ளம், மழை காரணமாக கடுமையான சேதங்கள் ஏற்பட்டுள்ளதை, இன்று தானே நேரில் கண்டதாகவும், இது குறித்து பாரதப் பிரதமர் அவர்களிடம் தனது விரிவான அறிக்கையை டெல்லி சென்றவுடன் சமர்ப்பிக்கப் போவதாகவும் தெரிவித்தார். மேலும், தமிழக முதல்வர் எடுத்துள்ள அனைத்து நடவடிக்கை களையும் மத்திய அரசு தாராளமாக நிதி உதவி செய்ய வேண்டும் என்ற உணர்வினையும், பிரதமரிடம் நிச்சயமாக எடுத்துரைப்பதாக உறுதி கூறினார்.

இக்கூட்டத்தில் தமிழக அரசின் சார்பில் வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி.சோமசுந்தரம், பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எஸ்.கண்ணப்பன், தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட்ராமன், வருவாய் நிர்வாக ஆணையர் திரு சி.என். ராமதாஸ், வருவாய்த் துறைச் செயலாளர் திரு ஏ. பால்ராஜ், நிதித் துறைச் செயலாளர் திரு என் நாராயணன், பொதுப்பணித் துறைச் செயலாளர் திரு ஆர்.ஆறுமுகம் மற்றும் வேளாண்மைத் துறைச் செயலாளர் திரு ஆர்.சி. பாண்டா ஆகியோர் கலந்துகொண்டனர்.

மத்திய நல்வாழ்வுத் துறை இணை அமைச்சர் திரு கே.வி. தங்கபாலு மத்திய நீர்வளத் துறையைச் சேர்ந்த உறுப்பினர், மத்திய வேளாண் துறை இணைச் செயலாளர், நகர்ப்புற வளர்ச்சித் துறை இயக்குநர் திரு ஸ்ரீபதி, ஹட்கோ செயல் இயக்குநர் திரு சுரேஷ் குமார் ஆகியோர் கலந்துகொண்டனர். தமிழக அரசு கோரும் 666 கோடி ரூபாய்க்கான திட்ட மதிப்பு தொடர்பாக சில முக்கிய குறிப்புகள் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

தமிழகத்தில் கடந்த 2 மாதங்களில் மட்டும் மழை வெள்ளத்தினால் 2.06 இலட்சம் எக்டேர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் 7.06 இலட்சம் குறு மற்றும் நடுத்தர விவசாயிகள் பாதிப்பு அடைந்துள்ளனர். கடந்த 2 மாதங்களில் மட்டும் 238 பேர் தமிழகத்தில் புயல் வெள்ளத்தால் உயிரிழந்துள்ளனர். 2.62 இலட்சம் குடிசைகள் சேதமடைந்துள்ளன.

	ரூபாய் கோடியில்
விவசாயம்	103.96
பொதுப்பணித் துறை	400.05
சென்னை மாநகராட்சி	17.00
தமிழ்நாடு மின் வாரியம்	7.20
நகராட்சிகள்	20.93
கால்நடைப் பராமரிப்புத் துறை	11.05
மீன்வளத் துறை	3.16
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்	6.41
குடிசைமாற்று வாரியம்	8.24
வனம்	5.00
தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம்	5.00
பொது சுகாதாரம்	4.00
பேருராட்சிகள் ஊராட்சிகள்	55.00
கைத்தறி மற்றும் நெசவுத் துறை	4.00
வருவாய்த் துறை	15.00
மொத்தம்	666.00

கொடி நாள்: டிசம்பர்-7

நாடு காப்போரை நாம் காத்திடுவோம்!

மாண்புமிகு முதல்வர் அவர்களின் 'கொடி நாள்'— தொலைக்காட்சி — வானொலி உரை

வணக்கத்திற்குரிய பெரியோர்களே!

என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே!

எனது அன்பிற்குரிய தமிழகப் பெருமக்களே!

நமது தாய்த் திருநாட்டை, எதிரிகளின் படையெடுப்புகளிலிருந்தும், தீய சக்திகளின் ஆதிக்கத்திலிருந்தும், காத்து நிற்பவர்கள், நமது முப்படை வீரர்கள். போற்றுதலுக்குரிய அவர்களது வீரத்திற்கும், அவ்வீரத்தில் விளைந்த அவர்தம் தன்னலமற்ற தியாகத்திற்கும், நாம் அனைவரும் தலை வணங்கும் தியாகத் திருநாளே 'கொடி நாள்'!

நாட்டைக் காக்கும் செயற்கரிய பணியினைச் செவ்வனே செய்து முடித்து, தற்போது ஓய்வு பெற்றிருக்கும், முன்னாள் படை வீரர்களின் வீட்டைக் காக்க வேண்டிய கடமையினை, நமக்கு நினைவூட்டும் நாள், கொடி நாள். வீரமும், விவேகமும் மிக்க படை வீரர்களை தன்னகத்தே கொண்ட நாடு, ஆற்றலும், ஆக்கமும் மிக்க தலைவனைப் பெற்ற வீட்டிற்கு ஒப்பாகும். அத்தகைய வீர மறவர்களை, தொன்று தொட்டு ஈன்றெடுத்து, அவர்களைப் போர்க்களத்திற்கு அனுப்பி மகிழ்ந்த வீர வரலாற்றைக் கொண்டது தான், நமது தமிழகம். சரித்திரம் படைத்த வீரர்கள், இங்கே 'பரணி பாடப்பெற்றனர்'! பாராட்டிப் பெருமைப்படுத்தப்பட்டனர்!

இருப்பினும், வீரத்திற்குப் பாராட்டுதல்களை மட்டும் வழங்குவது, போதுமானது அல்ல என்பதை, நாம் அனைவரும் அறிவோம். வீரர்களது நலன்களைக் காக்க முயற்சிகள் எடுப்பது, நாட்டில் உள்ள நல்லோர் அனைவரின் கடமை என்பதையும், நாம் நன்கு அறிவோம். முப்படை வீரர்களின் நலன்களைக் காக்க வேண்டும்; ஓய்வுபெற்ற முன்னாள் படை வீரர்களது சுமைக்குத் தோள் கொடுக்க வேண்டும்; அவர்தம் குடும்பத்தாரின் இன்னல்களைக் களைய வேண்டும் என்ற எண்ணங்களுக்கு வலுவூட்டி, பல்வேறு நலத்திட்டங்கள் மூலம், அவற்றிற்குச்

செயல் வடிவம் கொடுக்க வேண்டியதன் அவசியத்தை, நமக்கு உணர்த்தும் நாளே, ஆண்டு தோறும் டிசம்பர் 7-ஆம் நாள் கொண்டாடப்படும் கொடி நாள் ஆகும்.

இந்நாளில் திரட்டப்படும் 'கொடி நாள் நிதி', முன்னாள் படை வீரர்களின் குடும்பத்தாருடைய மேம்பாட்டுக்கான, நலத்திட்டப் பணிகள் நடைபெறப்பயன்படுவதை எண்ணி, நாம் அனைவரும் மகிழ்கிறோம். கொடி நாள் நிதியினை அதிக அளவில் திரட்டி, முன்னாள் படை வீரர்களுடைய குடும்பத்தாரின் இன்னல்களைக் களைவதில், பல்லாண்டுகளாக முன்னணியில் நிற்கும் பெருமையினைக் கொண்டது, நமது தமிழகம்.

ஒவ்வொரு ஆண்டும், முப்படை வீரர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, நன்கொடையை வாரி வழங்குவதில், அகில இந்திய அளவில், தமிழ் நாடே முதன்மையான மாநிலமாகத் தொடர்ந்து திகழ்ந்து வருகிறது, என்ற மகிழ்ச்சியான செய்தியை, உங்களோடு நான் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். கொடி நாள் நிதி திரட்டுவதில், அதிக அளவு சாதனை புரிகின்ற மாநிலங்களுக்கு என, மத்திய அரசினால் வழங்கப்படும் முதல் பரிசினை, தமிழகம் தொடர்ச்சியாகப் பெற்று வருவது, நமக்கெல்லாம் பெருமையினையும், பெரு மகிழ்ச்சியினையும் அளிக்கின்றது. அந்தப் பெருமையை நாம் தொடர்ந்து நிலை நிறுத்திக் கொள்ளும் வகையில், இந்த ஆண்டும் கொடி நாள் நிதிக்கு, நீங்கள் அனைவரும் வாரி வழங்குவீர்கள் என்று, நான் உறுதியாக நம்புகின்றேன்.

படை வீரர்களது பணி, மிகவும் கடினமானதாகவும், பல்வேறு அபாயங்களைக் கொண்டுள்ளதாகவும் உள்ளது. நமது பரந்த நாட்டின் எல்லைகளைத் தொடர்ந்து கண்காணித்து, அதற்குப் பாதுகாப்பு அளிப்பதோடு மட்டும், அவர்கள் பணி முடிவுறுவதில்லை. நாட்டில் அவ்வப்போது ஏற்படும் பல்வேறு இன்னல்களைக் களைவதிலும், படை வீரர்களுக்குப் பெரும் பங்கு உள்ளது. மழை, வெள்ளம், புயல், நில நடுக்கம் போன்ற இயற்கைச் சீற்றங்களினால், மக்கள் பெரிய அளவில் பாதிக்கப்படும் பொழுதெல்லாம், அவர்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகளை ஆற்றி, துயர் துடைக்கும் நற்பணியிலும், நமது பாரதப் படை வீரர்கள், மகத்தான பணியாற்றி வருகிறார்கள். சமீபத்தில் மகாராட்டிரா மாநிலத்தில் ஏற்பட்ட கொடிய நில நடுக்கத்தை அடுத்து, அங்கு நமது படை வீரர்களும், அவர்களோடு இணைந்து முன்னாள் படை வீரர்களும் ஆற்றிய துயர் துடைப்புப் பணிகள், உலகோர் அனைவரின், பாராட்டுதல்களையும் பெற்றிடும் வண்ணம் அமைந்திருந்தன. அதே போன்று, நீலகிரி மாவட்டத்தில் [illegible] நடந்த நிலச்சரிவின் போது, மாவட்ட நிர்வாகத்தினரோடு இணைந்து நின்று, படை வீரர்கள் பணியாற்றிய பாங்கினையும், நான் இந்த நேரத்தில் நன்றியோடு நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளேன்.

'நாடு காப்போரை நாம் காத்திடுவோம்' என்ற கருத்திற்கு ஏற்ப, போரில் கணவரை இழந்த பெண்கள், ஊனமுற்ற படை வீரர்கள், ஓய்வு பெற்ற முன்னாள் படை வீரர்கள், ஆகியோரின் குடும்பத்தாருக்கு மறுவாழ்வு அளித்தல், அவர்களைப் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையச் செய்தல், போன்ற பொறுப்புக்களை ஆற்ற வேண்டிய கடமை, சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் உள்ளது என்பதனை, நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விழைகின்றேன். அவர்களது வாழ்வில் செழுமையும், அமைதியும் நிலவிட, அனைத்து முயற்சிகளையும் தமிழக அரசு எடுத்து வருகின்றது. அந்த வகையில் தமிழக அரசு, முன்னாள் படை வீரர்களுக்கென, செயல்படுத்தி வரும் மேம்பாட்டுத் திட்டங்கள், அகில இந்திய அளவில் பெரும் வரவேற்பினைப் பெற்று உள்ளன என்பதை, நான் இங்கே பெருமிதத்தோடு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

மக்கள் மனமுவந்து அளிக்கும் 'கொடி நாள் நிதி', உடல் ஊனமுற்ற வீரர்களுக்கும், பாதுகாப்பு மற்றும் இதரப் பணிகளில் மாண்டு போன, தங்கள் இன்னுயிர்த் தலைவர்களை இழந்த குடும்பங்களுக்கும், வயது முதிர்ந்த, ஓய்வு பெற்ற முன்னாள் படை வீரர்களின் நலனுக்காகவும், பல்வேறு உதவித் தொகைகள் அளிக்கப்படுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

முன்னாள் படை வீரர்கள், தங்கள் வாழ்க்கையை பிரச்சினைகள் ஏதுமின்றி நடத்திச் செல்ல, அவர்களுக்கு உதவும் வகையில், அவர்கள் சிறு தொழில், மற்றும் வியாபாரம்போன்றவற்றைச் செய்து, தங்கள் சொந்தக் கால்களில் நிற்கக் கூடிய அளவிற்கு உதவிடவும், கொடி நாள் நிதி பயன்படுத்தப்படுகின்றது. பெட்டிக் கடை வைக்க, மாவரைக்கும் இயந்திரம், தையல் இயந்திரம் போன்றவற்றை வாங்க, நிதி உதவி அளித்தும், அவர்கள் தாமே சுயமாகத் தொழில் செய்து, வருவாய் ஈட்டிடத் திட்டங்களைச் செயல்படுத்தியும், தமிழ்நாடு அரசு, முன்னாள் படை வீரர்களுக்கு உதவு நல்கி வருகிறது. இது தவிர, சிறு தொழில் தொடங்க வங்கிக் கடன் உதவியும், அவர்கள் பெறும் கடனுக்கு வட்டி மானியமும்,

தொட்டில் குழந்தைகள்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்ட தொட்டில் குழந்தைகள் திட்டம், மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டில் மட்டும் இங்கே 30 குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளன. உசிலம்பட்டியைச் சுற்றிலும் இதேபோல 16 காப்பகங்கள் இருக்கின்றன.



உசிலம்பட்டி காப்பகத்திலிருந்த திருமதி. ஜெயந்தி, செல்வி ராஜேஸ்வரி ஆகியோர்- "இங்குள்ள குழந்தைகளின் மருத்துவப் பராமரிப்புக்காக ஒரு டாக்டர் இருக்கிறார். யாருக்கும் தெரியாமல் என்றில்லை; தெரிந்தே குழந்தைகளைக் கொண்டு வந்து அதன் பெற்றோர் ஒப்படைப்பதும் உண்டு. யாராளாலும் சரி; அப்படிக் கொடுத்த குழந்தைகளைத் திரும்பப் பெற வேண்டுமானால், மூன்று மாதத்திற்குள் முறைப்படி மனுச் செய்ய வேண்டும்..." என்றெல்லாம் தெரிவித்தனர்.

திருமதி. உமா வீரப்பன்- குழந்தைகள் வரவேற்பு இல்லம் எனப்படும் இம்மையத்தின் திட்ட அலுவலராவார்.

அரசால் வழங்கப்படுகிறது. மேலும், சிறு நீரக அறுவைச் சிகிச்சை, இருதய அறுவைச் சிகிச்சை, போன்ற பெரிய மருத்துவச் சிகிச்சைகளுக்கு, 20,000 ரூபாய் வரை, கொடி நாள் நிதியிலிருந்து, தேவைப்படுபவர்களுக்கு வழங்கப்படுகின்றது. தொழு நோய், புற்று நோய், ஆகியவற்றால் துன்புறுவோருக்கும், கண் பார்வை இழந்தவர்களுக்கும், மாதாந்திர நிதி உதவி, அவர்கள் வாழ்நாள் முழுமைக்கும், தமிழக அரசால் அளிக்கப்படுகின்றது.

தாய் நாட்டைக் காத்திடும் சிறப்பான பணியினை, திறமையோடு ஆற்றிய முப்புடை வீரர்களின் ஆற்றலை, அரசு மேலும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு, 'திருக்கோயில் பாதுகாப்புப் படை' ஒன்றினை அமைக்க, சென்ற ஆண்டு நான் ஆணைகள் பிறப்பித்து இருந்தேன். இதன்மூலம், நமது தொன்மையான கோயில்களைப் பாதுகாக்கும் பணியில், முன்னாள் படை வீரர்கள், மீண்டும் பணியாற்றும் நல்வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை, நான் இந்தத் தருணத்தில், மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

முன்னாள் படை வீரர்களது குடும்பத்தாரின் மேம்பாட்டிற்காக, பல்வேறு நலத்திட்ட உதவிகளை, தமிழக அரசு அறிவித்து செயல்படுத்தி வருவதை, நீங்கள் அனைவரும் அறிவீர்கள். முன்னாள் படை வீரர்களின் நலன் காக்கும் பணியில், தமிழ்நாடு என்றென்றும் முன்னணியில் நிற்கும் வகையில், தமிழக அரசு செயல்படும் என்ற உறுதியை, இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நமது நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டதிலும், நாம் அடைந்த சுதந்திரத்தைப்போற்றிப் பாதுகாப்பதிலும், என்றென்றும் முன்னணியில் இருக்கும் தமிழகம், முப்படை வீரர் தம் குடும்பத்தாரின் நலன் பேணுவதிலும், ஆண்டுதோறும் முதல் இடத்தைப் பெற்று வருகின்றது என்பதை, நான் முன்பே குறிப்பிட்டேன். அந்தச் சிறப்பினை நமது தமிழகம், இந்த ஆண்டும் தொடர்ந்து பெற்றிட வேண்டும், என்ற எனது பேரவாவினை, இந்த நேரத்தில் வெளிப்படுத்தி, கொடி நாள் நிதிக்காக, நீங்கள் அனைவரும் வாரி வழங்க வேண்டும் என்று, எனது அன்பிற்குரிய தமிழகத்துப் பெருமக்கள், அனைவரையும் கேட்டுக் கொண்டு, முப்படை வீரர் நலம் காக்க, நாம் எந்தத் தியாகத்தையும் புரிய, எப்பொழுதும் தயாராக இருப்போம் என்ற சூளுரையை, இச்சீரிய நாளில், நாம் அனைவரும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறி, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! என்று கூறி விடை பெறுகின்றேன்.

கொடி நாள்:

நிதி திரட்டும் பணியை மாண்புமிகு முதல்வர் தொடங்கி வைத்தார்

இந்தியா முழுவதும் 'கொடி நாள்' கொண்டாடப்படும் 7.12.93 அன்று, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை, அரசு பொதுத்துறைச் செயலாளர் திரு. பி. பால்கரதாஸ், இ.ஆ.ப. சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆர். குப்புசாமி மற்றும் முன்னாள் படை வீரர்கள் நலத்துறை இணை இயக்குநர் கேப்டன் பாரதி ஆகியோர், அவரது இல்லத்தில், கொடி நாள் நிதி திரட்டுவதற்காகச் சந்தித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், கொடி நாள் நிதி உண்டியலில் தமது காணிக்கையாக ரூ.10,800-ஐ வழங்கி கொடி நாள் நிதி திரட்டும் பணியைத் தொடங்கி வைத்தார்.

வரலாறு காணாத வகையில் 1994-95-ஆம் ஆண்டு திட்டத்திற்கு

ரூ.2,750 கோடி ஒதுக்கீடு

இதுவரை எந்த ஆண்டிலும் கிடைக்காத அளவுக்கு 1994-95-ஆம் ஆண்டுத் திட்டத்திற்கென ரூ.2,750 கோடியைப் பெற்று, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் பெரும் சாதனை படைத்துள்ளார்கள். இந்தத் தொகைக்கான ஒப்புதலை, திட்டக்குழு வழங்கி தமிழக அரசின் சிறப்பான பணிக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

1994-95-ஆம் ஆண்டுக்கான தமிழகத் திட்ட மதிப்பீடு குறித்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 11.12.1993 அன்று மத்திய திட்டக்குழுத் துணைத்தலைவர் திரு பிரணாப் முகர்ஜி அவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் டாக்டர் இரா.நெடுஞ்செழியன் அவர்களும், தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு பி.குழந்தைவேலு அவர்களும், தலைமைச் செயலர் திரு டி.வி. வெங்கட்ராமன் அவர்களும், நிதித் துறைச் செயலர் திரு என். நாராயணன் அவர்களும், முதல்வரின் செயலர் திரு வரதராஜலு அவர்களும் உடன் சென்றிருந்தார்கள்.

1992-93-ஆம் ஆண்டிற்கு, திட்டக்குழு ரூ.1766.75 கோடிக்கான ஒப்புதல் அளித்திருந்தாலும், ரூ.1,935 கோடி அளவுக்குத் தமிழ்நாடு அரசின் திட்ட நிறைவேற்றம் இருந்தமைக்குத் திட்டக்குழுவின் துணைத்தலைவர் திரு பிரணாப் முகர்ஜி தம் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டார். மிகச் சிறந்த சாதனையைத் தமிழக அரசு புரிந்ததற்குத் தமது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், நாட்டின் தற்போதை வளர்ச்சி விகிதம் 5 சதவிகிதத்திற்கும் குறைவாக இருப்பதாகவும், இது குறைந்தபட்சம் 8 சதவிகிதம் ஆகவாவது உயர்த்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். இந்திய சிங்கப்பூர் வர்த்தக மையத்தைச் சென்னையில் அமைப்பதற்கு விரைவில் ஒப்புதல் வழங்க வேண்டுமென்றும் முதல்வர் அவர்கள், இந்தச் சந்தர்ப்பத்தில் திட்டக்குழுவிடம் வலியுறுத்தினார்.

தென் மாநிலங்களின் தேவைகளை நிறைவேற்ற, தென்மாநில எரிவாயு இணைப்புத் திட்டத்தை உடனடியாகத் தொடங்க வேண்டிய தன் அவசியத்தை முதல்வர் வலியுறுத்தினார். இந்தத் திட்டத்திற்கு, தென் மாநிலங்கள் கூட்டு முதலீடு செய்யலாம் என தான் ஆலோசனை வழங்கியிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பெரும் அடிப்படைவசதித்துறைகள் சிலவற்றில் மத்திய அரசு முதலீடு செய்ய வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். தீபகற்ப இந்தியாவில் ஓடும் நதிநீர் இணைப்பை, குறிப்பாக மேற்கு நோக்கி ஓடும் நதிகளைக் கருத்தில் கொண்ட திட்டங்களை, உடன் தொடங்க வேண்டிய அவசியத்தை அவர் வலியுறுத்தினார். கூடங்குளம் அணுமின் திட்டத்தை விரைவில் தொடங்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். நெய்வேலியில் 3-வது சுரங்கம் வெட்டும் திட்டத்தில் நிதி வழங்குவதில் புதிய அணுகுமுறை வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். மாநிலத்தில் திட்டமிடப்பட்டுள்ள தனியார் துறை மின் உற்பத்தி நிலையங்களுக்கு எரிபொருள் வழங்குவதில் உள்ள இடர்ப்பாட்டையும் அவர் தெரிவித்துள்ளார். எரிபொருள் இணைப்பிலுள்ள சிக்கலைத் தீர்க்க, திட்டக் குழுவின் துணைத்தலைவர் அவர்கள் உடனடியாகத் தலையிட வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார். மரபு சாரா சக்தி ஆதாரங்களை, குறிப்பாக காற்றுச் சக்தியை பயன்படுத்திக்கொள்வதில், தமிழ்நாடு படைத்துள்ள மிகச் சிறந்த சாதனையை அவர் எடுத்துக் கூறினார்.

1994-95-ஆம் ஆண்டில் புதிய பெருநகர் சீரமைப்புத் திட்டத்திற்கு சிறப்பு மத்திய உதவியாக ரூ.50 கோடி அளிக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். பெருநகரச் சீரமைப்புத் திட்டத்திற்கு, கொங்கன் இரயில்வே திட்டத்தின் அடிப்படையில் கடன் பத்திரங்கள் மூலம் நிதி திரட்டலாம் என்றும் அவர் யோசனை தெரிவித்தார்.

தமிழ்நாடு எதிர் நோக்க வேண்டியுள்ள சில தனிப்பட்ட பிரச்சினை பற்றியும் முதல்வர் எடுத்துரைத்தார். தேசிய சராசரி அளவில் தமிழ் நாட்டின் தனிநபர் வருமானம் இருப்பதால், நிபுணர்கள் சுட்டிக்காட்டியபடி 1987-88-ஆம் ஆண்டில் வறுமை நிலை 45.13 சதவிகிதமாக இருந்தது என்பதை எடுத்துரைத்தார். மேலும், தனிப்பட்ட சுற்றுச் சூழல் பிரச்சினைகளுடன் கூடிய 'நீண்ட கடற்கரை' கடல் எல்லை பிரச்சினை, எல்லாவற்றுக்கும் மேலாக புயலாலும், வெள்ளத்தாலும் ஏற்படும் சேதங்கள் ஆகியவற்றைப் பற்றியும் எடுத்துரைத்தார். எனவே, வெள்ளத்தடுப்புக்கான கட்டமைப்புப் பணிகளை நீண்ட கால அடிப்படையில் மேற்கொள்ள அடுத்த நிதியாண்டில் ரூ.100 கோடியை மத்திய அரசு வழங்கவேண்டுமென்று முதல்வர் கேட்டுக் கொண்டார்.

விரிவான விவாதங்களின் பயனாகவும், 1993-94-ஆம் ஆண்டிலும் இந்த நிதியாண்டிலும் தமிழ்நாடு அரசு நிகழ்த்தியிருக்கிறது மாபெரும் சாதனையைக் கருத்தில் கொண்டும், 1994-95-ஆம் ஆண்டுக்கு ரூ.2,750 கோடி நிதி ஒதுக்கீடு செய்வது என்று முடிவு செய்யப்பட்டது. இது 1993-94-ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டைவிட 30.89 சதவிகிதம் கூடுதல் என்னும் அளவில் ஒரு புதிய சாதனையாக அமைந்து உள்ளது.

வேளாண்மை, ஊரக வளர்ச்சி, நீர்ப்பாசனம் ஆகியவை தொடர்ந்து முக்கியத்துவம் பெறும் 1993-94-இல் 379.93 கோடி ரூபாயாக இருந்த இவற்றுக்கான ஒதுக்கீடு ரூ.424.77 கோடி ரூபாயாக இருக்கும். 662.36 கோடி ரூபாயாக இருந்த தொழில் மற்றும் மின் சக்திக்கான மொத்த ஒதுக்கீடு இனி ரூ.891.09 கோடியாக இருக்கும். ரூ.212.79 கோடியாக இருந்த போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்புக்கான மொத்த ஒதுக்கீடு ரூ.293.47 கோடியாக உயர்த்தப்படும். சமூகநலம் தொடர்ந்து முன்னுரிமை பெறும். அதற்கான ஒதுக்கீடு ரூ.268.23 கோடியிலிருந்து ரூ.312.68 கோடியாக உயரும். வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறைக் கான ஒதுக்கீடு ரூ.99.09 கோடியிலிருந்து ரூ.149.96 கோடியாக உயரும். குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவுப் பணிகளுக்கான ஒதுக்கீடு ரூ.276.21 கோடியிலிருந்து ரூ.456.90 கோடியாகப் பெரிதும் உயரும்.

புயலாலும் பெரும் மழையாலும் சேதமடைந்த பகுதிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிட்டார்

பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு அரிசி, புடவை, வேட்டி முதலான நிவாரணப் பொருட்களையும் வழங்கினார்

கடந்த சில நாட்களாக தமிழகத்தின் பல பகுதிகளில் தொடர்ந்து பெய்த பெரு மழையின் காரணமாகவும், வெள்ளப் பெருக்கின் காரணமாகவும், தமிழ்நாட்டில் பல நீர் நிலைகளும், ஏரிகளும் பெருகி நிரம்பி வழிந்ததால், மேலும் தொடர்ந்து மழை பெய்தால் சேதம் ஏற்படக் கூடும் என்ற நிலையில் ஆய்வுகளை மேற்கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், எல்லா மாவட்ட நிர்வாகங்களும் நிவாரணப் பணிகளை, துரிதமாகப் போர்க்கால அடிப்படையில் மேற்

நாகப்பட்டினத்தில் புயல் வெள்ளத்தால் பாதிகப்பட்ட இடங்களை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார் (6.12.'93).

கொள்வதற்கு வேண்டிய ஆயத்த ப் பணிகளை மேற்கொண்டு தயார் நிலையில் இருக்க வேண்டுமென ஆணையிட்டு இருந்தார்.

3.12.1993 மற்றும் 4.12.1993 ஆகிய நாட்களில் சென்னை, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., தென் ஆர்க்காடு-வள்ளலார், நாகப்பட்டினம்-காயிதேமில்லத், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் கடும் மழையும் சூறாவளிக் காற்றுடன் கூடிய புயலும் வீசக் கூடும் என்ற விவரம் அறிந்தவுடன், இந்த மாவட்டங்களில் ஆட்சித் தலைவர்களுக்கு, நீர்நிலைகளின் அருகில் வாழும் மக்களையும், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களையும், முன்னெச்சரிக்கையாகப் பாதுகாப்பான இடங்களில் கொண்டு செல்ல வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுறுத்தியிருந்தார். மேலும் புயல் கரையைக் கடந்தவுடன், நிவாரணப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக, நிவாரணப் பொருட்களையும், அரிசி போன்ற இன்றியமையாத பொருட்களையும், தேவையான அளவிற்குச் சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் வருவாய் நிர்வாக ஆணையாளர் மூலமாக மாவட்ட நிர்வாகங்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள முக்கிய நீர்நிலைகள், சென்னை நகரத்திற்கு குடிநீர் கொண்டு வரும் 3 முக்கிய ஏரிகள், பொதுப்பணித் துறையின் கீழ் உள்ள மிக முக்கியமாக ஏரிகள் மற்றும் நீர்நிலைகள் ஆகியவற்றின் நீர் மட்டத்தை அவ்வப்போது ஆய்வு செய்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் , நீர்நிலைகள் ஏரிகள் சேதம் அடையாமல் இருப்பதற்கு வேண்டிய தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென அறிவுறுத்தி வந்தார். கடந்த காலங்களில் ஏற்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அனைத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுக்கச் செய்து, மாநில நிர்வாகத்தைத் தயார் நிலையில் வைக்கச் செய்தார். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் தயார் நிலை காரணமாக, புயலால் ஏற்படவிருந்த பொருட்சேதமும், உயிர்ச் சேதமும் வெகுவாக குறைக்கப்பட்டன.

4.12.1993 அன்று நாகப்பட்டினம், காரைக்காலுக்கும் இடையே புயல் கரையைக் கடந்தவுடன், புயல் காரணமாகவும், பெரும் மழையின் காரணமாகவும் சில மாவட்டங்களில் ஏற்பட்ட பொருட் சேதங்களையும், உயிர்ச் சேதங்களையும் உடனுக்குடன் அறிந்து ஆய்வு செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், புயல் கரை கடந்துவிட்ட சூழ்நிலையில், நிவாரணப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டுமெனத் தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணையிட்டார்.

நெடுஞ்சாலைகள் மற்றும் முக்கியச் சாலைகளில் நீர் பெருக்கெடுத்து ஓடியதால் ஏற்பட்ட பாதிப்புகளை உடனடியாகக் கண்டறிந்து, சீர் செய்ய வேண்டுமென நெடுஞ்சாலைத் துறையினருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார். அதேபோல், ஏரிகள், நீர்நிலைகள் மற்றும் பாசன ஆதாரங்களில் ஏற்பட்டுள்ள சேதங்களை உடனடியாகச் சரிசெய்ய வேண்டுமென, பொதுப்பணித்துறையினருக்கும், புயல் காற்றினால் மின் கம்பங்கள் சில சாய்ந்துவிட்ட காரணத்தினால், மின்சார விநியோகத்தில் ஏற்பட்ட தடங்கல்களை உடனடியாகச் சீர் செய்து மிக விரைவில் இயல்பான மின்சார விநியோகத்தைத் தொடங்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென மின் வாரியத் தலைவர் மற்றும் அதிகாரிகளுக்கு ஆணை வழங்கினார்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் ஆகியோர் தங்கள் துறைகளின் கீழ் உள்ள அதிகாரிகளின் பணிகளை ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட இடங்களில் பணிகளை முடுக்கிவிட வேண்டுமென அறிவுறுத்தினார்.

புயல் மற்றும் பெரு மழையின் காரணமாக இதுவரை 61 பேர் மரணம் அடைந்ததை அறிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மிக்க துயரமும், வருத்தமும் அடைந்தார்கள்.

நாகப்பட்டினம்-காயிதே மில்லத்-20, தென் ஆற்காடு-வள்ளலார் - 9, திருச்சிராப்பள்ளி-5, தஞ்சாவூர்-10, சேலம்-8, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்-2, சென்னை-2, தருமபுரி-2, திருவண்ணாமலை-சம்புவராயர்-1, விழுப்புரம்-2.

பெருமழையின் காரணமாகவும், புயலின் காரணமாகவும், இறந்து போனவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் தலா 10,000 ரூபாய் வழங்கவும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்.

4.12.1993 அன்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி.சோமசுந்தரம் அவர்களுடன், நாகப்பட்டினம்-காயிதேமில்லத், தென் ஆர்க்காடு-வள்ளலார், தஞ்சாவூர், ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்டு உள்ள சேதங்கள் குறித்து ஆய்வு செய்த பின்பு உடனடியாக, இம் மாவட்டங்களுக்கு விரைந்து சென்று நிவாரணப் பணிகளைத் துரிதப் படுத்தி, கண்காணிக்குமாறு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அனுப்பி வைத்தார். ஆனால், சென்னையிலிருந்து நாகப்பட்டினம் வரையில் நெடுஞ்சாலையில் பல இடங்களில் மரங்கள் விழுந்ததாலும், சாலைகள் வெள்ளத்தால் அரிக்கப்பட்டதாலும், சாலை வழியே செல்ல இயலவில்லை. எனவே, அவர் திருச்சி வரை விமானம் மூலம் சென்றார். பின்னர் சாலை வழியே நாகப்பட்டினம் சென்றார்.

அவருடன், வருவாய் நிர்வாக ஆணையாளர் திரு சி.என்.ராமதாஸ் அவர்களும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக உடன் சென்றார்கள். சாலையில் பல இடங்களில் தடைகள் இருந்ததால், பல இடங்களைச் சுற்றிக் கொண்டு, 20 மணி நேரத்திற்குப் பின்பு நாகப்பட்டினம் சென்றடைந்தனர்.

5.12.1993 அன்று, நாகப்பட்டினம், தஞ்சாவூர், தென் ஆர்க்காடு-வள்ளலார் ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட சேதங்கள் குறித்த விவரங்களையும் விரிவாக ஆய்வு செய்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த மாவட்டங்களில் உள்ள சேதங்களை உடனடியாக தானே நேரில் பார்வையிட வேண்டுமென்று கருத்து தெரிவித்தார்கள். சாலை வழியே இந்தப் பகுதிகளுக்கு சென்று பார்வையிட முடியாது என்ற சூழ்நிலையில் 6.12.1993 அன்று காலை 10.30 மணிக்கு சென்னையிலிருந்து ஹெலிக்காப்டர் மூலம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் புறப்பட்டு, கடற்கரையை ஒட்டித் தாழ்வாகப் பறந்தபடி, புயலாலும், பெருமழையாலும் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட்ட வண்ணம் சென்றார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் சதுரங்கப்பட்டினம் கடற்கரைப் பகுதியைப் பார்வையிட்டார். பின்பு சதுரங்கப்பட்டினத்திலிருந்து நாகப்பட்டினம் வரையில் உள்ள கடலோரப் பகுதிகளிலும், கிராமங்களிலும் ஏற்பட்டுள்ள சேதங்களைப் பார்வையிட்டார். குறிப்பாக, கடலூர், குறிஞ்சிப்பாடி, சிதம்பரம், பரங்கிப்பேட்டை, நாகூர் ஆகிய இடங்களை ஹெலிக்காப்டரில் இருந்து பார்வையிட்டார்.

பகல் 12 மணி அளவில் நாகப்பட்டினம், காவல் துறை ஆயுதப் படை மைதானத்தில் வந்து இறங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களை, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி.சோமசுந்தரம், வருவாய் நிர்வாக ஆணையர் திரு சி.என். ராமதாஸ், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு சவார்கர், கூடுதல் டி.ஜி.பி திரு வால்டர் தேவாரம், மாவட்ட அதிகாரிகள் மற்றும் தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு ஓ.எஸ். மணியம், சட்டமன்ற உறுப்பினர்கள், கட்சிப் பிரமுகர்கள் வரவேற்றார்கள்.

அங்கிருந்து அணி வகுப்பு மைதானத்திற்குச் சென்று, அங்கே திரண்டிருந்த 1000-க்கும் மேற்பட்டவர்களுக்கு அரிசியும், புடவை-வேட்டி மற்றும் உதவித் தொகையையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். வீடு இழந்த மக்களும், புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தங்களது பிரச்சினையை எடுத்துக் கூறிய போது, அவர்களது குறைகளைக் கனிவுடன் கேட்டறிந்து, மாவட்ட ஆட்சித்தலைவரிடம் உடனடியாக அவர்களது குறைகளைக் களைய வேண்டும் என்று ஆணையிட்டார்கள். ஆயிரக் கணக்கில் திரண்டிருந்த மக்களிடம் மனுக்களைப் பெற்றுக் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், பின்பு நாகப்பட்டினம் அரசு விருந்தினர் மாளிகைக்குச் சென்றார்.

அங்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், தலைமைச் செய

லாளர், திரு டி.வி. வெங்கட்ராமன், வருவாய் நிர்வாக ஆணையாளர் திரு சி.என். ராமதாஸ், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு சவார்கர் மற்றும் காவல்துறை அலுவலர்களுடன், புயல் மற்றும் வெள்ளப் பெருக்கத்தால் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சேதங்கள் பற்றி விவாதித்து, தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய நிவாரணப் பணிகள் குறித்து அறிவுரை வழங்கினார். இந்தக் கூட்டம் சுமார் 30 நிமிடங்கள் நடைபெற்றது.

இந்த ஆண்டு கடந்த நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் தமிழ் நாட்டில் பெய்த மழையாலும், பெருகி ஓடிய வெள்ளத்தாலும், தற்போது நாகப்பட்டினம் அருகே வீசிய புயலாலும், அதனால் ஏற்பட்ட சேதங்களின் மொத்த மதிப்பு 666 கோடி ரூபாய் என கணக்கிடப்பட்டுள்ளது. குறிப்பாக, பொதுப் பணித் துறையின் கீழுள்ள ஏரிகள், நீர் நிலைகளுக்கு ஏற்பட்ட சேதங்கள், நெடுஞ்சாலைத் துறை பராமரிப்பில் உள்ள நெடுஞ்சாலைகளுக்கும் மற்றும் சாலைகளுக்கும் ஏற்பட்ட சேதங்களைச்செப்பனிடத்தேவையான நிதியையும், பயிர்களுக்கும், குடியிருப்புகளுக்கும் கட்டடங்களுக்கும் ஏற்பட்ட சேதங்களையும் கணக்கிடும் போது, மொத்த சேதத்தின் மதிப்பு 666 கோடி ரூபாய் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

கடலோரக் கிராமங்களில், புயல் மற்றும் பெருமழையால் கடலுக்குள் பல கட்டுமரங்களும், சிறு படகுகளும் அடித்துச் செல்லப்பட்டதைக் கேட்டறிந்த மாண்புமிகு முதல்வர், காணாமல் போன படகுகள் மற்றும் சேதமடைந்த படகுகள் பற்றிய விவரங்களைக் கணக்கெடுத்து, அந்த மீனவர்களின் மறுவாழ்விற்கு, மானிய விலையில் மீன்பிடி படகு, மீன்பிடி வலை போன்ற உபகரணங்களை அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என ஆணையிட்டார்.

கடலோர கிராமங்களிலும், மற்றும் பெரிய நீர்நிலைகளில் ஏற்பட்ட வெள்ளத்தாலும், பயிர்கள் பாதிக்கப்பட்ட இடங்களை உடனடியாக ஆய்வு செய்து பயிர் பாதிக்கப்பட்ட, விவசாயிகளுக்கு உடனடியாக மானிய விலையில் விதை, உரம் போன்ற விவசாய இடுப்பொருட்களை வழங்கி மீண்டும் அவர்கள் விவசாயத் தில் ஈடுபட ஆவன செய்ய வேண்டும் என ஆணையிட்டார்கள். ஏற்கெனவே இதுகுறித்து ஆணை வழங்கப்பட்டு, 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம், கிட்டத்தட்ட 15 கிலோ மீட்டர் தூரம் வரையில் உள்ள மின்கம்பங்கள், புயலால் வளைந்து, தெளிந்து சேதமடைந்து விட்டதை அறிந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், உடனடியாக அருகில் உள்ள மாவட்டத்திலிருந்து 200 மின்வாரிய ஊழியர்களை இங்கு அனுப்பி வைத்து, விரைவில் அவற்றைச் சீர் செய்து, இயல்பான மின்சார விநியோகத்தை ஏற்படுத்த வேண்டும் என்று ஆணையிட்டார்.

மின்சாரம் கிடைக்கும் வரை மண்ணெண்ணெய் அதிக அளவில் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என ஆணையிட்டார். மாவட்ட ஆட்சித்தலைவர், நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டத்திற்கு மாதந்தோறும் 2,213 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கப்பட்டு, நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த மாதத்திற்குக் கூடுதலாக இன்னும் மண்ணெண்ணெய் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வைத்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உடனடியாகக் கூடுதலாக இந்த மாவட்டத்திற்கு 2,213 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்து அதனையும் நியாய விலைக் கடைகள் மூலம் குடும்ப அட்டைக்கு விநியோகம் செய்யும்படி ஆணையிட்டார்.

நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் தென் ஆர்க்காடு-வள்ளலார் மாவட்டங்களில் நெடுஞ்சாலைகளில் ஏற்பட்டுள்ள சேதங்களைப் போர்க்கால அடிப்படையில் சீர் செய்து, செப்பனிட வேண்டும் என்றும் விரைவில் போக்குவரத்துக்கு உகந்ததாகச் செய்ய வேண்டும் என்றும் நெடுஞ்சாலைத் துறையினருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்.

மேலும், அருகில் உள்ள மாவட்டத்தில் இருந்து கூடுதலாகப் பணியாளர்களை அனுப்பி வைத்து மராமத்துப் பணியை முடுக்கி விட வேண்டும் என்று அறிவிறுத்தினார்.

காலரா போன்ற கொடிய தொற்று நோய் பரவுவதற்கு வாய்ப்

புகள் உள்ளதால், புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும், மக்களுக்குக் காலரா தடுப்பு ஊசிகளைப் போட வேண்டும் என்றும், மருத்துவ மற்றும் மருத்துவப் பணியாளர்கள் சுமார் 200 பேரை இந்தப் பகுதிகளுக்கு அனுப்பி, எல்லாப் பொதுச் சுகாதாரப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்.

இந்தச் சூறாவளிக் காற்றால், பல முதிர்ந்த, பழைய மரங்கள் வேரோடு சாய்ந்து விட்டதால், பல இடங்களில் மரங்களை வெட்டி எடுக்கும் பணி நடைபெறுவதைப் பற்றிக் கேட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், இனி வருங்காலத்தில் விரைவில் மரங்களை அறுத்து அப்புறப்படுத்த 'Power Saw' வாங்கி, நெடுஞ்சாலைத் துறையினர் உபயோகிக்க வேண்டும் என்று ஆணையிட்டார். மிக அதிகமான மரங்கள் குவியலாக ஏலத்தில் விற்கும் முறையை மாற்றி, வனத் துறையினர் சிறுசிறு பகுதிகளாகப் பிரித்து ஏலம் விட்டால், விரைவில் மரங்களை விற்று அப்புறப்படுத்த முடியும் என்ற கருத்தை ஏற்று, விரைந்து அதை செயல்படுத்த ஆணையிட்டார்.

Ham Radio ஒன்று நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு முன் கூட்டியே வழங்கப்பட்டதால், புயல் மற்றும் வெள்ளச் சேதங்களை விரைவில் சென்னைக்கு தெரிவிக்க முடிந்தது என்பதையும், நிவாரண உதவிகளை விரைந்து கொடுக்க முடிந்தது என்பதையும் மாவட்ட ஆட்சித் தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கூறினார். தனது ஆலோசனைகளைக் கருத்தில் கொண்டு தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து, நிர்வாகத்தைத் தயார் நிலையில் வைத்திருந்த அலுவலர்கள் அனைவருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனது பாராட்டுதல்களைத் தெரிவித்தார்.

குடிசைகள் மற்றும் வீடுகள் இழந்தவர்களின்கணக்கெடுப்பினைத் துரிதப்படுத்தி, இன்னும் 3 தினங்களுக்குள் அவர்களுக்கு உரிய நிவாரணத் தொகை மற்றும் நிவாரண உதவிகளைப் போர்க்கால அடிப்படையில் வழங்க வேண்டும் என்றும், தேவைப்பட்ட அளவிற்கு உணவுப் பொட்டலங்களையும், அரிசி போன்ற அத்தியாவசியமான பொருட்களையும் வழங்க வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார். நிவாரண உதவிகளை வழங்குவதில், விரைந்து செயல்பட வேண்டும் என்றும், தற்போது எவ்வளவு பேருக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்படுகிறது, எவ்வளவு குடும்பத்தினருக்கு இலவசமாக 5 கிலோ அரிசி, மண்ணெண்ணெய் , வேட்டி, சேலை வழங்கப்படுகிறது என்பதையும் மண்ணெண்ணெய் கேட்டு அறிந்தார்.

பின்னர், பகல் ஒரு மணி அளவில் ஹெலிக்காப்டர் மூலம் நாகப்பட்டினத்திலிருந்து புறப்பட்டு கரையோரமாகத் தாழ்வாகப் பறந்து, வேளாங்கன்னி, முத்துப்பேட்டை, வேதாரண்யம், பாய்ன்ட் காலிமர் (Point Calimer) ஆகிய இடங்களைப் பார்வையிட்டார். பின்னர், திருச்சியிலிருந்து சிதம்பரம் வரை ஹெலிக்காப்டர் மூலமாகக் காவேரி ஆற்றில் கரை புரண்டு ஓடும் பல இடங்களையும், அங்கே ஏற்பட்டுள்ள பயிர்ச் சேதங்களையும் பார்வையிட்டார். பிற்பகல் 3.30 மணிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னை திரும்பினார்.

சென்னை திரும்பியவுடன், மாண்புமிகு பாரதப் பிரதமர் தமிழ் நாட்டில், புயலாலும், வெள்ளத்தாலும் ஏற்பட்டுள்ள சேதங்களைப் பார்வையிடுவதற்காக, மாண்புமிகு மத்திய விவசாயத் துறை அமைச்சர் திரு பல்ராம் ஜாக்கர் அவர்கள் தலைமையில் ஒரு குழுவை அனுப்ப இருப்பதாக உள்ளார் என்பதை அறிந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமரின் அறிவிப்பை மகிழ்ச்சியுடன் வரவேற்றார். மத்திய ஆய்வுக் குழு பார்வையிட்ட பின்பு, சென்ற ஆண்டு, மத்திய அரசு முன்பணம் வழங்கியது போல அல்லாமல் இந்த முறை தாராளமாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற தனது விருப்பத்தினையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்துக் கொண்டார்.

TNSC BANK

The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

Rate of Interest on Deposits (Effective from 2.9.1993

Sl.No.	Type of Deposit	Rate of Interest per annum
1.	Savings Bank Accounts	5.25% w.e.f. 1.7.1993
2.	Fixed Deposits :	
	For 46 DAYS and above but upto 270 days	9.00%
	For 271 DAYS and above but upto 364 days	9.50%
	For 1 YEAR and above	10.25%

Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

மதுரை மாவட்டம்

தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாட்டில் தரிசு நிலங்கள் பலவேறு காரணங்களால் சாகுபடி செய்யப்படாமல் இருந்து வருகின்றன. பொதுவாக எந்த நிலத்திலும் ஏதாவது ஒரு செடியையோ அல்லது மரத்தையோ வளர்ப்பதற்கு வாய்ப்புள்ளது. எந்தச் செடி அல்லது மரம் அந்தப் பகுதியில் வளரும் என்பதைத் தெரிந்து திட்டமிட்டுச் செயல்படுத்தினால் நல்ல முறையில் பயன்பெற வாய்ப்புள்ளது.

இந்தத் தரிசு நிலங்களில் ஏதாவது பயிர் அல்லது மரங்கள் பயிரிட்டு, அதிலிருந்து வருமானம் பெற்று, விவசாயிகள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும்.

தரிசு நிலங்களில் பயன்தரும் மரக்கன்றுகள், பலன் தரும் பழக்கன்றுகளை நட்டு- அதில் ஊடு பயிராகக் குறைந்த வயதுடைய தீவனப்பயிர், [illegible], பயறு வகைகள், [illegible] கடுகு [illegible] பயிரிட்டு, நிலத்தை மேம்படுத்துவதுடன் விவசாயிகளின் பொருளாதாரத்தையும் உயர்த்த வேண்டும் என்ற உயரிய நோக்குடன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அளிக்கப்பட்ட திட்டம்தான் 'தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்'.

தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒரு எக்டேருக்கு அரசு மானியமாக ரூ.1500/-ம் விவசாயிகள் பங்குத் தொகையாக ரூ.1,000/-ம் ஆக மொத்தம் ரூ.2,500/- கீழ்க்கண்டவாறு செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

1. தரிசு நிலங்களில் காணப்படும் முட்கள் புதர்களை அகற்றுதலில் விவசாயிகளின் பங்குத் தொகை ரூ.200, மொத்த செலவு ரூ.200.

2. டிராக்டர் மூலம் ஆழமாக உழவு செய்தலில் அரசு மானியம் ரூ.400, மொத்த செலவு ரூ.400.

3. குழிகள் எடுத்தல், தொழுஉரம்/கம்போஸ்ட் இடுதல் கன்றுகள் வாங்கியது நடவு செய்தல் போன்ற பணிகளில் அரசு மானியமாக ரூ.1,000, விவசாயிகளின் பங்குத்தொகை ரூ.500, மொத்த செலவு ரூ.1,500.

4. கண்டெயிர் சாகுபடிச் செலவு (விதை முதல் அறுவடை வரை) அரசு மானியமாக ரூ.100, விவசாயிகளின் பங்குத்தொகை ரூ.300, மொத்த செலவு ரூ.400.

மதுரை மாவட்டத்தில் 1991-92-ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1991-92-ஆம் ஆண்டில் ரூ.3,750 இலட்சம் செலவில் 250 எக்டேரிலும் 1992-93-ஆம் ஆண்டு ரூ.11,250 இலட்சம் செலவில் 750 எக்டேரிலும் செயலாக்கப்பட்டுள்ளது. 1993-94-ம் ஆண்டில் ரூ.11,250 இலட்சம் செலவில் 750 எக்டேர் பரப்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மா, முந்திரி, கொய்யா, புளி, இலவு, கருவேல் முதலிய மரக்கன்றுகள் பயிரிடப் பயிரிடப்படுகின்றன.

இத்திட்டத்தின் அமுலாக்கம் [illegible] மாவட்டத்தில், [illegible] ஒன்றியங்களில் கண்காணிப்பட்டு. கிராமத்தில் 1992-93-ஆம் ஆண்டு 100 எக்டேர் பரப்பில் இத்திட்டத்தின்மூலம் 10,000 மா மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு, தற்போது நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. 95 சத கன்றுகள் தற்போது உயிருடன் செழிப்பாக உள்ளன. இதனால் 84



விவசாயிகள் பலனடைந்துள்ளனர். இவர்கள் தங்களுக்குள் ஒரு குழு ஏற்படுத்தி, இந்த மரக் கன்றுகளைப் பராமரித்து வருகின்றனர். இதில் சிறப்பு அம்சம் என்னவெனில்- இதில் பங்கு பெறும் விவசாயிகளே அருகில் உள்ள விருமாணூத்து மலையின் மேலிருந்து மெலிதாக- இயற்கையாக வரும் ஊற்றிலிருந்து குழாய்கள் மூலம் தண்ணீர் கொண்டுவந்து சிறுசிறு தொட்டிகள் அமைத்து அதில் இந்த நீரைச் சேமித்து, அதிலிருந்து நடவு செய்யப்பட்ட கன்றுகளுக்குத் தண்ணீர் ஊற்றிப் பராமரித்துவருகிறார்கள்.

கணவாய்ப்பட்டி பகுதியில் ஏறத்தாழ 200 எக்டேர் நிலப்பரப்பில் முட்புதர்கள் மற்றும் செடிகள் வளர்ந்து இந்த நிலம் விவசாயத்திற்கு இலாயக்கற்ற நிலையில் இருந்தது. இதில் ஒட்டு மொத்தமாக 100 எக்டேர் நிலப்பரப்பு தேர்வு செய்யப்பட்டு மொத்தம் 84 விவசாயிகள் பயன் பெறும் வகையில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதனுடைய பயனை அறிந்த அருகில் உள்ள விவசாயிகளும் இத்திட்டத்தில் பங்கு பெறுவதற்கு முன்வந்துள்ளார்கள். ஆகவே நடப்பு ஆண்டில் 1993-94 மேலும் 34 விவசாயிகளுடைய 100 எக்டேர் நிலப்பரப்பில் முந்திரி சாகுபடி செய்யச் செயல்திட்டம் வடிவமைக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகிறது.

இவைகளை முன்னோடியாகவும், மாதிரியாகவும் கொண்டு, தரிசு நிலங்கள் இருக்கும் விவசாயிகள் அந்த நிலங்களுக்கேற்ற மரக் கன்றுகளை நட்டு, நாட்டின் வளங்களைப் பெருக்கி அவற்றின் பலன்களைத் தாங்களும் தங்கள் சந்ததியினரும் பெற்றுப் பலனடையலாம்.

முதலமைச்சரின் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி வட்டத்திலுள்ள கணவாய்ப்பட்டி கிராம விவசாயக் குழுத் தலைவர் திரு. எம். முத்துசாமி அவர்களைச் சந்தித்து இந்தத் திட்டம் குறித்துக் கேட்டபோது அவர் கூறினார்.

''மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை 20.4.'92 அன்று சென்னை கோட்டையில் சந்தித்து இதுபற்றி மனுக் கொடுத்தோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்கள் கோரிக்கையைப் பரிசீலனை செய்யுமாறு விவசாயத் துறைக்கு உத்தரவிட்டார்கள். இதன்படி ஆண்டிப்பட்டி மதுரை மாவட்ட உதவி வேளாண்மை இயக்குநர் அவர்களைச் சந்தித்தோம். விவசாயத் துறை எங்கள் கோரிக்கையை ஏற்றுச் செயல் படுத்த முழு ஒத்துழைப்பு நல்கியதோடு ஊக்கமும் அளித்தது. நாங்களும் விவசாயத் துறையுடன் நன்கு ஒத்துழைத்து இந்தப் பகுதியில் சுமார் 30 ஆண்டுக்காலமாக விவசாயம் செய்யப்படாமல் தரிசாக இருந்த 100 எக்டேர் நிலப்பரப்பில் மாங்கன்றுகள் நட்டு நன்கு பராமரித்து வருகிறோம். ஒரு எக்டேருக்கு 100 மாங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் ஒரு எக்டேருக்கு அரசு மானியமாக ரூ.1,500/- வழங்கப்பட்டது.

விவசாயத்துறையின் உதவி வேளாண்மை அலுவலர் வாரம் ஒரு முறையும், உதவி வேளாண் இயக்குநர் மாதம் ஒரு முறையும் இங்கு வருகை புரிந்து மாங்கன்றுகளைப் பார்வையிட்டுத் தகுந்த ஆலோசனை வழங்குகிறார்கள்'' என்றார்.

விருமாணூத்து மலையிலிருந்து இயற்கையாக வரும் தண்ணீரை அங்காங்கே சேமித்து வைக்க 264 கனஅடி கொள்ளளவு கொண்ட 14 தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. இங்கு தண்ணீர் சேகரிக்கப்பட்டு மாங்கன்றுகளுக்கு எடுத்து ஊற்றப்படுகிறது.

மாங்கன்றுகளுக்கு இடையில் ஊடு பயிராக (Inter crop) கடலை, உளுந்து, துவரை போன்ற வைகளும் பயிர் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் நிலத்தின் மதிப்பு முன்பு தரிசாக இருந்தபோது, ஏக்கருக்கு ரூ.1,500/- முதல் ரூ.2,000/- வரை இருந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் தரிசு நில மேம்பாட்டுத்



1980-ல் சோலைன் பொட்டல் என்ற இடத்தில், தொல் பொருள் ஆய்வுத் துறையினர் அகழ்வாய்வு மேற்கொண்ட போது ஆயிரத்து; இப்பகுதியிலேதான் சோலைன் தலை வெட்டப் பட்டதாம்; அப்படியொரு பாறை, சிறு கட்டமொன்றினுள் வைக்கப்பட்டு பூஜிக்கப்பட்டு வருகிறது.

மது(ன)ர இசை!

மதுரை மாநகரில், இசைத்துறையில் புகழ்பெற்ற மேதைகள் பலர் இருந்தனர்; அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் இவர்கள்- மதுரை மணி ஐயர் (1912-1968), நாதகர இசைமேதை வித்வான் பொன்னுசாமி பிள்ளை (1879-1929)- அவருடைய பிள்ளைகளும், பேரன்களுமான நடேசபிள்ளை, சண்முகம் பிள்ளை, எம்.பி.என். சேதுராமன், எம்.பி.என். பொன்னுசாமி, நாதகர இசையில் தேர்ச்சிபெற்ற பெண்மணியான திருமதி எம்.எஸ். பொன்னுத்தாய், இசைப்புலவர் மாரியப்ப சுவாமிகள், பாஸ்கரதாஸ் (1892-1952), நாகசாமி பாகவதர் (1894-1951), டாக்டர் மதுரை சோமு, டாக்டர் எம்.எஸ். கப்புலட்சுமி, டி.என். சேஷகோபாலன், டி.எம். சௌந்திரராஜன், நாகசாமி பாகவதர், இளையராஜா.

★ மதுரை மாநகரில் உள்ள ஸ்ரீசத்குரு சங்கீத சமாஜம், டாக்டர் ராஜாசர் முத்தையா

செட்டியாரரால் மதுரையில் உருவாக்கப்பட்ட தமிழிசைச் சங்கம் ஆகியவை நாளும் இசை பரப்பும் நற்றொண்டாற்றி வருகின்றன. மதுரை தமிழிசைச் சங்கத்திற்காகத் தல்லா குளத்தில் 'ராஜா முத்தையா மன்றம் பிரம்மாண்டமான அளவில் உருவாக்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு மாநில அரசின் இசைக் கல்லூரிகளில் ஒன்று மதுரை மாநகரில்- மானகிரியில் உள்ளது. சங்கீத வித்வான், வாத்ய விசாரதா, நாட்டிய விசாரதா ஆகிய சிறப்புப் பட்டங்கள் இக்கல்லூரியில் வழங்கப்படுகின்றன.

தொகுப்பு: த.செ. சுப்பிரமணியன்
உதவி மக்கள் தொடர்பு அதிகாரி
மதுரை.

திட்டத்தின் செயல்படுத்தப்பட்ட பிறகு இங்கு நிலத்தின் மதிப்பு ஏக்கருக்கு ரூ.4,500/- முதல் ரூ.5,000/- வரை உயர்ந்துள்ளது. என்றார் விவசாயக் குழு செயலர் திரு சாமிக்கண்ணு அவர்கள்.

மலையின் மேலே உள்ள நீரூற்றை நாமும் போய்ப் பார்த்தோம்; தனித்த சுவையோடு இருந்தது அந்த நீர். ஆண்டு முழுவதுமே அந்த நீர்வரத்து நிற்பதில்லையாம்; அங்கிருந்த மலை

வாழ் மக்களில் ஒருவரான மூதாட்டி பூவாத்தா இதைத் தெரிவித்தார்.

கிராம வளர்ச்சி மன்றக் குழுவினருள் ஒருவரான திரு. பழனிச்சாமி- அங்கிருந்த இரு கல்தூண்களை நமக்குக் காட்டி, "ஒரு காலத்தில் இந்த மலைச் சரிவிலேதான் மாலிக்காபூர் படைவீடு அமைத்திருந்தானாம்!" என்றார்.

—ஜே. சந்திரன்

மதுரை மீனாட்சியம்மன் கோவில் ஆயிரங்கால் மண்டபம்.



மதுரை மாநகராட்சி



தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய நகரம் மதுரை ஆகும். இது சென்னைக்குத் தெற்கே 500 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இந்நகரம் பழங்கால 'நித்தியாவர்தா' என்னும் நகரமைப்பு நூலுக்கமங்களின்படி, வடிவமைக்கப்பட்டதாகும். இந்நகரின் நடுவே உள்ள 'மீனாட்சி-சுந்தரேஸ்வரர் திருக்கோவிலைச் சுற்றிலும் சதுரவடிவில் சாலைகள் ஒழுங்குற அமைக்கப்பட்டு உள்ளன.

மதுரை மாநகராட்சியின் வரலாறு

மதுரை நகரியம் 1866-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இதன் பரப்பளவு 2.60 சதுர கிலோமீட்டராக இருந்தது. அப்போதைய மக்கள் தொகை 41,600.

மதுரை நகராட்சியாக இருந்த காலத்தில் நகரின் பரப்பளவு 23.05 சதுர கிலோமீட்டராக இருந்தது. அதன்பின் மதுரை நகராட்சி மாநகராட்சியாக 1.5.71-இல் உயர்த்தப்பட்டது. 1974-ஆம் ஆண்டில் மதுரையைச் சுற்றியுள்ள 13 பஞ்சாயத்துப் பகுதிகள் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டன. இதன் மூலம் மாநகரின் பரப்பளவு 51.85 சதுர கிலோமீட்டராக உயர்ந்தது. 1991-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மாநகரில் மக்கள் தொகை 9.51 இலட்சமாகக் கணக்கிடப்பட்டது. நாள்தோறும் நகருக்குள் வந்துபோகும் மக்கள் தொகை 3 இலட்சமாகும்.

மதுரை மாநகராட்சி தற்பொழுது 72 வார்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 29.7.1984-ஆம் தேதி முதல் மதுரை மாநகராட்சி தனி அலுவலரின் நிர்வாகத்தில் செயல்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சித்தலைவரே தனி அலுவலராக உள்ளார்.

மதுரை மாநகராட்சியில் கீழ்க்கண்ட வாறு வளர்ச்சிப் பணிகள் தீவிரமாக்கப் பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சாலைகள்

1. கடந்த ஓராண்டுக் காலமாகச் சாலைகள் ரூ.268 இலட்சம் மதிப்பீட்டில் செப்பனிடப்பட்டு வருகின்றது.

2. கடந்த எட்டு மாதங்களுக்குள் ரூ.60 இலட்சம் மதிப்பில் சாலை மேம்பாட்டிற்கான நவீன இயந்திரங்கள் பிஎமஜி மூலமாக வாங்கப்பட்டுள்ளன. (எக்ஸ்சவேட்டர் இரண்டும், டிப்பர் லாரிகள் இரண்டும், டிராக்டர் 5-ம், 12 டிரெயிலர்களும் வாங்கப்பட்டன.)

பாதாள சாக்கடைத் திட்டம்

கடந்த ஓராண்டுக்குள் 7 இலட்சம் செலவில் கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டன. மேலும் 16 இலட்சம் மதிப்பீட்டில் சிறப்புக் கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டன.

குடிநீர்

உலக வங்கி உதவியுடன் வைகை குடிநீர்த் திட்டப்பணிகள் ரூ.4852 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இத்திட்டம் 1994-ஆம் ஆண்டு டிசம்பருக்குள் முடிவடையத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் முடிவடைந்ததும் கோடை காலத்திலும் மதுரை மாநகர் மக்களுக்கு நாள்தோறும் 200 இலட்சம் காலன் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தரத்தையும் அளவையும் மேம்படுத்த ரூ.250 இலட்சம் செலவில் கோச்சடை அருகே வைகை ஆற்றின் குறுக்கே தடுப்புச்சுவர் கட்டும் பணி திட்டமிடப்பட்டு, அரசின் பரிசீலனைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

கழிவுநீர்ப்பண்ணை

வைகை ஆற்றின் தென்பகுதியிலிருந்து வரும் பாதாள சாக்கடை, சந்தைப்பேட்டை தலைமை நீரேற்று நிலையத்தில் சேர்க்கப்பட்டு பின் அங்கிருந்து அவனியாபுரம் கழிவுநீர்ப் பண்ணைக்குப் பம்ப் செய்யப்படுகிறது. இப்பண்ணை 1910-ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இதன் 385 ஏக்கர் நிலத்தில் 185 ஏக்கரில் கினியா புல்லும், 35 ஏக்கர் நிலத்தில் காய்கறி வகைகளும் பயிரிடப்படுகிறது. இதன் மூலம் ஆண்டு வருமானம் ரூ.20 இலட்சம் ஆகும்.

மின்சாரம்

மதுரை மாநகராட்சியில் 500 இடங்களில் நான்கு தெருக்கள் சந்திக்கும் இடங்களில் சோடியம் வேப்பர் மின் விளக்குகள் ரூ.20 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளன மேலும் ரூ.60

இலட்சம் மதிப்பில் 6-வது கட்டமின் நிலையம் அமைக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனால் நகரின் வடபகுதியில் சீரான மின்சார விநியோகம் செய்யமுடியும்.

தகவல் மையம் Information Centre

மதுரை மாநகராட்சியில் பொதுமக்கள் தேவையான அலுவலக விவரங்களை விளக்கிட ரூபாய் இரண்டு இலட்சம் மதிப்பில் தகவல் மையம் அமைக்கப்பட்டு வருகிறது.

புதிய மழைநீர் வடிகால்கள்

மழையின்போது சிம்மக்கல், பெரியார் பேருந்து நிலையம், புட்டுத்தோப்பு ஆகிய பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதைத் தடுக்க ரூ.16 இலட்சம் செலவில் புதிய வடிகால்கள் கட்டத்திட்டமிடப்பட்டுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சிறப்புத் திட்டங்கள்

மதுரை மாநகரின் மையப்பகுதியிலுள்ள போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க, நகரின் மையப்பகுதியில் தற்போது இயங்கிவரும் காய்கறி மொத்த அங்காடி, பூ அங்காடி மற்றும் நெல் கமிஷன் மண்டி ஆகியவற்றை நகரின் வடகரையிலுள்ள மாட்டுத்தாவணி பகுதியில் அமைக்கத் திட்டமிடப்பட்டு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

★ எது அந்தி? கோபமோ, அச்சமோ, இன்பமோ, துன்பமோ, பொறாமைகளோ, ஆசைகளோ நம்மை ஆட்டி வைக்கும்போது நாம் செய்யும் செயல்களுக்கும் பெயர்தான் அந்தி.

- பிளாட்டோ

நவீன பேருந்து நிலையம்

நீண்ட காலமாக மதுரை மாநகர மக்களின் கனவாக விளங்கி வந்த நவீன பேருந்து நிலையத்திற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. மேலூர்ச் சாலையின் நவீன பேருந்து நிலையத்தை ரூ.30 கோடி செலவில் அமைக்கும் பணி வேகமாக நடைபெற்றுவருகிறது. விரைவில் இப்பணி முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பொது ஆகாதாரம்

மதுரை மாநகராட்சியில் 15 மகப்பேறு மருத்துவமனைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்திய மக்கட் தொகைத் திட்டம் 5-இன் கீழ் எல்லா மகப்பேறு மனைகளையும் நவீனப்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. நவீனப்படுத்த ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.10 இலட்சம் ஆகும்.

வாய்க்கால் சீரமைக்கும்திட்டம் (Storm Water Channels Rs.8 Crore Scheme)

மதுரை மாநகர் பகுதியில் பிரதான வாய்க்கால் அனைத்திலும் தூர் வாரி மழை நீரை முறையாக வெளியேற்று வதற்காக உலக வங்கியின் உதவியோடு ரூ.8 கோடி மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டு விரைவில் செயலாக்கப்படவிருக்கிறது.

வளமான வாழ்வுக்கு

மதராஸ் பெர்டிலைசர்ஸ் அளிக்கும்

விஜய் உரங்கள்

விவசாயிகளின் மகிழ்ச்சி, வளமான வாழ்வு இவைகளே எங்களது நோக்கம். நாங்கள் விஜய் உரங்கள், நுண்ணுயிர் உரங்களைத் தயார் செய்கிறோம். உரங்களைத் தயாரித்து விற்பனை செய்வது மட்டுமே எங்கள் குறிக்கோள் இல்லை!

''முறையான பயிர்பாதுகாப்பு, சத்துக்களை ஒருங்கிணைத்து அளித்தல், முதலியவற்றை வலியுறுத்தி விவசாயிகளை ஊக்குவித்து புதிய சாகுபடி முறைகளைக் கடைப்பிடிக்கச் செய்கிறோம்''.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், நீண்டகால வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம், மலைவாழ் மக்கள் முன்னேற்றத் திட்டம் மூலமாக நவீன சாகுபடிக் கருத்துக்களை வலியுறுத்தி விவசாயிகள் முன்னேற்றத்திற்குச் செயல்படுகிறோம்.

விஜய் என்றாலே வெற்றி

மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
(இந்திய அரசு — பொதுத்துறை நிறுவனம்)
மணலி, சென்னை-600 068



நலிவுற்ற கலைஞர்களுக்கு இசைக் கருவிகள், ஆடை ஆபரணங்கள் வாங்குவதற்கு மானியம் வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை

கலைமேதைகள் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள், கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், பாபநாசம் சிவன், தமிழ் நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியார், நாதசுரச் சக்ரவர்த்தி திருவாவடுதுறை டி.என். ராஜரத்தினம் பிள்ளை ஆகியோரது நினைவினைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'ஐம்பெரும் விழா' வினைச் சென்னையில் நடத்துவது வழக்கம்.

இவ்வாண்டு மேற்கண்ட கலை மேதைகள் பிறந்து வளர்ந்து புகழ் பரப்பிய மண்ணில் அவர்களது நினைவினைப் போற்றத்தக்க வகையில், விழா எடுக்கவேண்டுமென மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டிருந்தார். அதன்படி 3.11.93 அன்று தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு நாளினை மதுரை சத்குரு சங்கீத சமாஜத்தின் ஒத்துழைப்புடன் மதுரையிலும், 4.11.93 அன்று கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் நினைவு நாளினை குமரி மாவட்ட கிராமியக் கலைஞர்கள் முன்னேற்றச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் நாகர்கோவிலிலும், 5.11.93 அன்று பாபநாசம் சிவன் நினைவு நாளினை ரசிக ரஞ்சன சபா ஒத்துழைப்புடன் திருச்சியிலும், 6.11.93 அன்று நாதசுரச் சக்கரவர்த்தி டி.என். ராஜரத்தினம் பிள்ளை நினைவு நாளினை வாணி விலாச சபா ஒத்துழைப்புடன் கும்பகோணத்திலும் நடத்தப்படவிருக்கின்றன.

மேலும், இக்கலை மேதைகள் விட்டுச்சென்ற கலைகள் இன்றும் இச்சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் அழிந்துவிடாமல் பாதுகாத்துவரும், வாழ்வில் நலிவுற்றக் கலைஞர்களுக்கு இசைக்கருவிகள், ஆடை ஆபரணங்கள், மேடைப் பொருட்கள் ஆகியன புதிதாக வாங்குவதற்கென, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையின்படி, பின் வரும் மானியத் தொகைகள் இந்நினைவு நாட்களில் வழங்கப்பட இருக்கின்றன.

3.11.93 அன்று மதுரை இலட்சுமிசுந்தரம் ஹாலில் நடைபெற இருக்கும் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு நாளன்று மதுரை, பசும்பொன் தேவர், காமராசர் மாவட்டங்களைச் சார்ந்த 78 கிராமியக் கலைஞர்களுக்கு ரூ.56,450 தொகையும், 4.11.93 அன்று நாகர்கோவில் கலைவாணர் கலை அரங்கில் நடைபெறவிருக்கும் 'கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் நினைவு நாளன்று கன்னியாகுமரி நெல்லை கட்டபொம்மன், வ.உ.சி. மாவட்டங்களைச் சார்ந்த 25 கிராமியக் கலைஞர்களுக்கு ரூ.21,000 தொகையும், 5.11.93 அன்று திருச்சி ரசிக ரஞ்சன சபாவில் நடைபெற இருக்கும் பாபநாசம் சிவன் நினைவு நாளன்று திருச்சி, சேலம், பெரியார், தருமபுரி மாவட்டங்களைச் சார்ந்த 28 கிராமியக் கலைஞர்களுக்கு ரூ.26,600 தொகையும், 6.11.93 அன்று கும்பகோணம் வாணி விலாச சபாவில் நடைபெற இருக்கும் நாதசுரச் சக்கரவர்த்தி டி.என். ராஜரத்தினம் பிள்ளை நினைவு நாளன்று தஞ்சாவூர், நாகை காயிதே மில்லத் மாவட்டங்களைச் சேர்ந்த 34 கிராமியக் கலைஞர்களுக்கு ரூ.26,200 தொகையும் அரசு மானியமாக வழங்கப்பட உள்ளது.

இதுதவிர ஏற்கெனவே 30.6.93 அன்று சென்னை மயிலாப்பூர் ரசிக ரஞ்சனி சபாவில் நடைபெற்ற தமிழ் நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியார் நினைவு நாளன்று சென்னை மற்றும் செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்தைச் சார்ந்த 22 கிராமியக் கலைஞர்களுக்கு ரூ.23,600 தொகையும், 20.10.93 அன்று சென்னை அரசு இசைக் கல்லூரியின் நடைபெற்ற 'நவராத்திரி இசை 'விழா' நிறைவு நாளன்று திருவண்ணாமலை சம்புவராயர், வட ஆற்காடு அம்பேத்கார், மற்றும் தென்னார்க்காடு மாவட்டங்களைச் சார்ந்த 49 கிராமியக் கலைஞர்களுக்கு ரூ.40,250 தொகையும் அரசு மானியமாக ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இந்நினைவு நாட்களில், ஒவ்வொரு விழா முடிவிலும் பின் வரும் கலை நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மதுரையில் கலைமாமணி திரு. ஏ.கே. காளீஸ்வரன் அவர்களின் 'அதிசய சந்தங்களின் அற்புதப் பாடல்கள்' என்ற நிகழ்ச்சியும், மதுரை நாடக நடிகர் சங்கத்தின் சார்பாக 'பவளக்கொடி' நாடகமும் நடைபெறும்.

நாகர்கோவிலில் கலைமாமணி திரு. சி.எஸ். பாண்டியன் குழுவினரின் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் 'வாழ்க்கை' என்ற கலா நிகழ்ச்சியும், குமரி மாவட்ட கிராமியக் கலைஞர்கள் முன்னேற்றச் சங்கத்தினரின் கணியான்கூத்து சிலம்பம் மற்றும் பாவைக்கூத்து நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

திருச்சியில் சென்னை பிரியா சகோதரிகளின் பாபநாசம் சிவன் கீர்த்தனை திரு. எச். இராமகிருஷ்ணன் அவர்களின் இசை நிகழ்ச்சியும், கும்பகோணத்தில் கலைமாமணிகள் திரு. எம்.பி.என். சேதுராமன்-பொன்னுசாமி குழுவினரின் நாதசுர நிகழ்ச்சியும் நடைபெறும்.

இந்நான்கு நாள் நிகழ்ச்சிகளிலும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத் தலைவர் இசைப் பேரறிஞர் நாதப்பிரம்மம் திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களும் உறுப்பினர்-செயலாளர் நாடகக் காவலர் திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்களும் நேரில் கலந்து கொண்டு கலைஞர்களுக்கு அரசு மானியத்தொகைகளை வழங்கிச் சிறப்பிப்பார்கள்.

பெண்களுக்குப் பயனான கூறும் திட்டங்கள்

ஒரு குடும்பத்தில் சிரமப்பட்டு விறகு பொறுக்கிவரும் தன்மையில் அர்ப்பணிப்புக் கொண்டவள் பெண்!

வீட்டில் உள்ள அத்தனை பொறுப்புகளையும் ஏற்று நடத்துபவள் பெண்!

குழந்தைகளின் நலன் பேணி, நல்வழி நடத்திச் செல்வது தாய் முழுவதும் உழைப்பவள் பெண்!

சமூகத்தின் பார்வையில், பெண் என்பவள் என்றைக்குமே பிறரை நம்பி வாழவேண்டிய துர்நிலையில் தான் இன்றும் இருக்கிறாள்.

1. பெண்கள் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும்.

2. வாழ்க்கையில், சமூகத்தில் பெண்கள் முன்னேற்றம் வேண்டும்.

3. பெண் கல்வி உயர்வு பெற வேண்டும்.

4. பொருளாதார உதவிகள் பெற்று முன்னேற்றமடைய வேண்டும்.

5. கூலி வேலை பார்ப்பவர்கள் நாளு பேருக்குக் கூலிதரும் அளவுக்குத் தொழிலில் முன்னேற்றம் வேண்டும்.

6. மொத்தத்தில் பெண்கள் பெண்களாக, ஆண் பெண் பேதமின்றி உயர்வு பெறவேண்டும்.

இந்த அடிப்படை நோக்கங்களோடு தோன்றிய திட்டம்தான் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் மூலம் செயல்படும் மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள்.

நடைமுறையில் பல திட்டங்கள் செயல்பாட்டில் இருந்தாலும், இவை யனைத்திலும் முற்றிலும் மாறுபட்ட [illegible] பெண்களால் பெண் [illegible] பெண்களே ஏற்று [illegible] திட்டம் எனக் கூறினால் [illegible] ஆகாது. உண்மைதான்; [illegible]தோறும் கழகத்தோடு [illegible] உள்ள பெண்கள் குழுக்களாகச் சேர வேண்டும். அவர்களுடைய நிலை என்ன என்பதை அவர்கள் உணர வேண்டும். அவர்கள் வாழ்க்கைத்தரம் உயர என்னென்ன செய்யவேண்டும் என்பதை விவரம்தெரிந்து செயற்பட வேண்டும். சமூக முன்னேற்றம் பொருளாதார முன்னேற்றம் இவைகளுக்கு வழிமுறை காணவேண்டும். அவர்களே தங்கள் தேவைக்கேற்ப தொழில்களைத் தேர்வு செய்ய வேண்டும்.

இதற்கு ஆன்றுகோலாகப் பலர் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

[illegible] நிறுவனங்கள் இது போன்ற பணிகளைச் செம்மையாகச் செய்து வருவதால் கிராமங்களில் பெண்கள் குழுக்கள் அமைக்கும் பணி, அவர்களைப் பெண் ஊக்குவிப்பாளர்கள் மூலம் வழி நடத்திச் செல்லும் பணி தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்திட வழி வகுக்கப்பட்டுள்ளது.

மதுரை கல்லூரி சேலைக்குத் தனி மதிப்பு உண்டு; எழுபது என்பது ரூபாயிலிருந்து எழுநூறு எண்ணூறு ரூபாய் வரை நயாரிக்கப்படுகிறது இது.

சிறு, குறு விவசாயி, தாழ்த்தப் பட்டவர்கள், தினக்கூலிகள் போன்ற அனைவரும் ஒன்றுசேர்ந்து சராசரி இருபத்திரண்டு உறுப்பினர்கள் கொண்ட குழுக்கள் சேர்க்கப்படுகின்றன. பின் இக்குழுக்களுக்கு ஓர் ஊக்குவிப்பாளர் ஒரு பிரதிநிதி தேர்வு செய்யப்பட்டு, குழுக்கள் செயல்படத் தொடங்கும். சேமிப்புப் பழக்கத்தை இவர்கள்பால் எடுத்துரைத்து, சிறுகச் சிறுகப் பணம் சேர்க்கவும், சேர்த்த பணத்தைத் தங்களுக்குள்ளேயே கொடுத்து, பின் பெறும் பழக்கத்தையும் நடைமுறைக்குக் கொண்டுவர கற்றுத் தரப்படுகிறது.

திட்டம் செயல்படும் முன் பல



பயிற்சிகள் ஊக்குவிப்பாளருக்கும் தரப்படுகிறது. பயிற்சியில் கலந்துகொண்ட ஊக்குவிப்பாளர்கள் பின் தங்கள் குழுக்களிடம் [illegible] பயிற்சியில் பெற்ற அனுபவங்களை [illegible]

குழுக்களின் [illegible] தொடர்ந்து நிதானம் [illegible] படும் பயிற்சிகளைப் [illegible] இருக்கிறது. இந்தப் பயிற்சியில் சேமிப்பு, செலவின் [illegible], துறைகளின் பணி, வங்கிப் பணி, உடல் பாதுகாப்பு, சத்துணவு [illegible], பெண்கள் முன்னேற்றம், [illegible] சரியான மேம்பாடுகள், [illegible] குடும்பநலத் தகவல்கள், இருக்கின்ற செல்வங்களை முழுமையாகப் பயன் படுத்தும் உத்திகள், குறிப்பாக பொருளாதாரம், நிர்வாகம், புதிதாகத் தொழில் செய்வதன் மூலம் பொருளாதார முன்னேற்றம், கல்வி அறிவு போன்ற பலவும் சொல்லித் தரப்படுகிறது. இதன்பின், பிற துறைகளின் தொடர்பு ஏற்படுகிறது.

வேளாண் பொறியியல் துறை, வேளாண் துறை, தோட்டக்கலைத் துறை, பட்டுவளர்ப்பு, சிறுதொழில், காவல்துறை போன்ற பல துறைகளைச் சார்ந்த வல்லுநர்களும் தங்கள் பகுதியில் உள்ள குழுக்களை அவ்வப்போது சந்தித்து, அவர்கள் தம் செயல்பாடுபற்றி அறிவதோடு தங்கள் துறைகளின் மூலம் தம் நடைமுறையில் உள்ள திட்டங்கள் பற்றி விளக்கிக் கூறி, அதனால் ஏற்படும் பலாபலன்கள் பற்றியும் அதற்காகும் செலவு, செலவு செய்வதன் மூலம் பெறப்படும் வரவு போன்றவற்றைத் தெள்ளத் தெளிவாகச் சொல்லித்தந்து குழுக்களில் உள்ள உறுப்பினர்களுக்குத் தேவையான தொழில் துவங்க ஆன்றுகோலாக இருக்கிறார்கள்.

வங்கியின் பணி மிகவும் முக்கியமானது. வங்கி அலுவலர்கள், தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்குத் தேவையான கடன் தந்திட உறுப்பினர் சேர்ந்துள்ள பணி பற்றித் தீர விசாரித்துப் பின், பணம்

மகளிர் நலம் ஓங்குக!

இந்நாட்டின் ஏற்றமெல்லாம் இனியநெஞ்சம்
உங்கள் கையில்
இருக்கின்ற வளமெல்லாம் உழைக்கின்ற
உங்கள் கையில்
என்றைக்கும் உழைத்திடுவீர் ஏற்றமுடன்
வாழ்ந்திடுவீர்
உண்மையாய் உழைத்திடுவீர் ஊர்நலம்
காத்திடுவீர்!

விஞ்ஞான முன்னேற்றம் விண்முட்ட உயர்த்திடுவீர்
விவசாய முன்னேற்றம் விளைநிலத்தில்
கண்டிடுவீர்
கண்ணிமைக்கும் நேரத்திலே களர்நிலத்தை
மாற்றிடுவீர்
மண்ணிலையை மாற்றியிங்கே மகசூலைப்
பெருக்கிடுவீர்!

மருத்துவத்தில் மறுமலர்ச்சி மக்களுக்கோ
பெருமகிழ்ச்சி
சிறுகுடும்பம் போதுமென்ற சீரான
நல்லுணர்ச்சி
சிறப்பாக வாழ்ந்துகாட்டும் பொறுப்பான
நன்முயற்சி
முன்னேற்றப் பாதையிலே முறையாகச்
சென்றுவிட்டால்

ஆனென்ன பெண்ணென்ன அத்தனையும்
சரிசமமே
அற்புதங்கள் நடத்தியிங்கே அனைவரையும்
ஏற்கச் செய்வாய்!
உலகத்து மக்களெல்லாம் உமதடியைப்பின்பற்ற
பலகலைகள் பயின்றிடுவீர் பாரபோற்ற
வாழ்ந்திடுவீர்!
கண்ணிமைபோல் மகளிர்நலம் காக்கும்
மேம்பாட்டுக் கழகத்தை
வாயார வாழ்த்துகின்றேன் வாழியவே
பல்லாண்டு!

எஸ். சிதம்பர ராமலிங்கம் திட்ட அலுவலர் (IFAD) மதுரை



மதுரையில் வீட்டுவசதி சாதனைகள்

[illegible] 3,173 [illegible] 1,443 [illegible] செய்யப்பட்டுள்ளது.

1,268 உயர், மத்திய, குறைந்த வருமானப் பிரிவினருக்கான வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த வீடுகள் மார்ச் 31,1984-க்குள் [illegible] முடிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்படும்.

மேலும் 1,755 வீடுகள் கட்ட திட்டம் தீட்டப்பட்டு, வரையறுக்கப்பட்ட ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தொழிலாளர்களுக்கான 440 வீடுகளும் குடியிருப்பும் மற்றும் திட்டத்தின் கீழ் 1,234 வீடுகளும் [illegible] முடிக்கப்பெற்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பட்டுவாடா செய்ய ஏற்பாடு செய்கிறார்கள்.

தொண்டு நிறுவனங்கள் பிற துறைகளின் வல்லுநர்கள், வங்கி அலுவலர்கள் ஆகியோரோடு முன்னேற்றத்தை எதிர்நோக்கி இருக்கும் மகளிர் மன்ற உறுப்பினர்களுக்கு இணைப்புப் பாலமாகச் செயற்படுவதுதான் மகளிர் மேம்பாட்டுக் கழகத் திட்ட அலுவலகம்.

ஒரு திட்ட அலுவலரைத் தலைமையாகக் கொண்டு வேளாண்-பொறியியல் துறை, வேளாண் துறை, தோட்டக்கலைத் துறை, பட்டுவளர்ப்புத் துறை, கதர் மற்றும் கிராமக் கைத்தறித் துறை, வங்கி போன்றவற்றின் தொழில்நுட்ப வல்லுநர் ஒருவரை நியமனம் செய்து திட்டங்கள் செம்மையாகச் செயல்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் பங்கேற்றுப் பயன் பெறும் மகளிர்க்குக் கடன் மற்றும் மானியம் கிடைத்திட வழியுண்டு. தாழ்த்தப்பட்ட மகளிர் மன்ற உறுப்பினர்களுக்கு 50 சதவிகித மானியம் அதிகபட்சம் ரூ.5,000/- மட்டும் தரப்படும். இதர வகுப்பினருக்கு முறையே குறுநில மகளிர்க்கு 33 ⅓ சதவிகித மானியம் அதிகபட்சமாக ரூ.3,000/- மட்டும் சிறுநில மகளிர்க்கு 25 சதவிகித மானியம் அதிகபட்சமாக ரூ.2,500/- மட்டும் மானியம் தரப்படும்.

இந்த மானியமானது பயனடையும் உறுப்பினருடைய கணக்கில் வங்கியில் வரவு வைக்கப்படும். பெற்ற கடனைத் திரும்பச் செலுத்தி முடித்தபின், உறுப்பினருக்கு இந்தப் பணம் திருப்பித் தரப்படும். தொழில் துவங்கியவர்கள் தங்கள் தொழிலை நன்றாகச் செய்து வருகிறார்களா என்பதையும் அவர்களுக்கு அவ்வப்போது ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களைத் தீர்த்துவைக்கவும் கடன் பெற்ற தொகைகள், தவணைகள் தடையின்றிச் சரியாகச் செலுத்தப் படுகிறதா என்பதையும் தொண்டு நிறுவனம், துறையின் அலுவலர்கள் மற்றும் மகளிர் மேம்பாட்டுக் கழகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் ஆகியோர்கள் பயணம் மேற்கொள்ளும்போது உறுப்பினர்கள் சந்தித்து விவாதிப்பார்கள்.

மதுரை மாவட்டத்தில் மதுரை கிழக்கு, திருமங்கலம், கள்ளிக்குடி, சேடப்பட்டி, செல்லம்பட்டி, ஆண்டிப்பட்டி, உசிலம்பட்டி, வாடிப்பட்டி, டி.கல்லுப்பட்டி, மயிலாடும்பாறை ஆகிய 10 ஊராட்சி ஒன்றியங்கள் உட்பட்ட பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு, மேயர்டிரஸ்ட், அசபா, பிரதான், ஐ.சி.சி.டபிள்யு ஆகிய நான்கு தொண்டு நிறுவனங்கள் மூலம் 5 ஆண்டுகளில் 10,000 மகளிர் முன்னேற்றம் பெற்றிட வேண்டும் என்ற நோக்கோடு செயல்படத் தொடங்கியுள்ள இத்திட்டம் மதுரை மாவட்ட நலிவடைந்த பெண்களுக்குக் கிடைக்கப் பெற்ற வரப்பிரசாதம் எனக் குறிப்பிட்டால் அது மிகையாகாது.

நேருவின் கோபம்!

பண்டித நேரு வீட்டில்
விசுவாசமுள்ள வேலைக்காரன்
ஒருவன் இருந்தான்; அவன்தான்
எப்போதும் அவருக்கு உணவு
படைப்பான்.

ஒரு சமயம் அவனுக்கு மாரடைப்பு
ஏற்பட்டு உயிர்பிழைத்தான்;
மாடிப்படி ஏறக்கூடாது என்று
டாக்டர்கள் சொல்லிவிட்டனர்.
நேருவும் அவனிடம்- "இனி நீ
படியேறி எனக்கு உணவு எடுத்து
வரவேண்டாம்; அப்படி
வருவதானால் எனக்காக உள்ள
லிஃப்டிலேயே வரலாம்" என்று
சொல்லிவிட்டார்.

அவனும் அப்படியே செய்தான்.
ஒருநாள் கவனப் பிசகாக, மாடிப்
படியேறிப் போய் விட்டான்.
அதைப் பார்த்தாரோ
இல்லையோ; 'இப்படி இன்னொரு
தடவை நீ படியேறி வருவதைப்
பார்த்தால், உன்னைத் திஹார்
சிறைக்குள் அடைத்துப் பூட்டச்
சொல்லி விடுவேன்.
ஜாக்கிரதை!" என்று கத்தினாரே
பார்க்கலாம்!

வாயடைத்துப் போய்விட்டான்
அந்த வேலைக்காரன்!

—'ஆசிய ஜோதி ஜவாஹர்' என்ற
நூலிலிருந்து

பாலையில் சோலைவனம்

வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஐந்தாவது திட்டக் காலத்தில் இருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அடிக்கடி பொய்க்கும் பருவமழை மற்றும் சமச்சீரற்ற மழைப்பொழிவு ஆகியவை இம்மாவட்டத்தினை அடிக்கடி வறட்சிக்கு ஆட்படுத்துகின்றன

நிலையான நீர் ஆதாரமோ அல்லது ஆறுகளோ இல்லாத நிலையில் ஒழுங்கற்ற மழையும் வேளாண்மையும் அதனைச் சார்ந்த தொழில்களை மிகவும் பாதிக்கின்றன. இந்நிலையில் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம், நசிந்துள்ள பொருளாதார நிலையினை மேம்படுத்துவதுடன் சுற்றுச் சூழலையும் மேம்படுத்துகிறது.

வறட்சியின் தீவிரத்தினைப் போக்கிட செயலாக்கப்படும் திட்டங்கள் நல்லமுறையில் வேகம் பெற்று வருகின்றன. தோட்டக்கலை மற்றும் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் நிலையான மரங்களுள்ள பரப்பு அதிகரித்து வருகிறது. ஏறத்தாழ 13,610 எக்டேர் நிலத்தில் மரங்கள் வளர்க்கப்பட்டு வருகிறது.

மண்வள அபிவிருத்தி மற்றும் நீர்நிலைப் பாதுகாப்புக்கு 48,570 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வொதுக்கீட்டில் பெரிய மற்றும் சிறிய தடுப்பு அணைகட்டுதல் மூலம் மண் அரிப்பினைத் தடுக்கவும் நிலத்தடிநீர் மட்டத்தினை நிலை நிறுத்தவும், பனை விதைகள் நடவு செய்தல் மூலம் மண் அரிப்பைத் தடுத்துமண்பிணைப்பாகச் செயல்படுத்தவும், கோடை உழவு மூலம் நிறைந்த நீர் உறிஞ்சும் மற்றும் நிலை நிறுத்தும் திறனை அதிகரிக்க மற்றும் மேல் மண்ணின் அரிமானத்தைத் தடுக்கவும், செயல்விளக்கப் பண்ணைகள் மூலம் பயறு, சிறுதானியம் மற்றும் சூரியகாந்தி நவீன தொழில் நுட்பங்களைப் பரப்புதலுக்கும், 50 சதவிகிதம் மானிய விலையில் பழச்செடிகள் விநியோகம் செய்தல் மூலம் பழமரங்களின் பரப்பினை அதிகரித்தல் மற்றும் நிலையான வருமான ஆதாரத்தைப் பெருக்கவும், தோட்டக்கலைப் பண்ணை பராமரிப்பும் இத்திட்டத்தின்கீழ் செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

காடு வளர்ப்பு மற்றும் மேய்ச்சல் நில மேம்பாட்டுக்கு 40.450 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பறவைகள் சரணாலயத்தில் வனப் பழத்தோட்டம் அமைத்தல், கண்மாய்க்கரை எரிபொருள் மரத்தோட்டம் அமைத்தல், சவுக்குத்தோட்டம் மற்றும் முந்தைய ஆண்டுகளில் அமைக்கப்பட்ட தோட்டங்களின் பராமரிப்பு கவனித்தல் ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும்.

நீர்நில ஆதார மேம்பாட்டுக்கு 34 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் மூலம் மண்வளம், மண் ஈரம் முதலியவை காக்கப்படுவதுடன் குறைந்த மழையினையும், ஓடும் தண்ணீரையும் சேகரம் செய்யலாம் இதற்காகக் கசிவு நீர்க்குட்டைகள் மற்றும் சமுதாயக் கிணறுகளும் அமைக்கப்படுகிறது.

பிற திட்டங்களுக்காக 22.262 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் தரிசு நிலங்களில் முந்திரித் தோட்டங்கள் அமைத்தல் மற்றும் புல் பண்ணைப் பராமரிப்பு செய்தல். மேலும் மண்வள மேம்பாட்டுப் பிரிவின்கீழ் புதிய

முயற்சியாகவும் மாநிலத்திற்கே ஒரு முன்னோடித் திட்டமாகவும் இராமேஸ்வரத்தில் உள்ள மண் மேடுகளில் 35 எக்டேர் பரப்பளவில் 'ஜோஜோபா' எனப்படும் எண்ணெய் வழங்கும் தாவரம் வளர்க்கப்படுகிறது.

மாதிரித் தோட்டக் கலைப் பண்ணை - சுந்தரமுடையான்

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் வட்டாரத்தில் சுந்தரமுடையான் கிராமத்தில் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் 8,56.5 எக்டேர் பரப்பளவில் 1985-86-ஆம் ஆண்டு ஒரு "மாதிரித் தோட்டக் கலைப் பண்ணை" ஆரம்பிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் பெரிய அளவில் தோட்டக் கலை வளர்ச்சிக்கு வழிவகுக்கவும், தரமான பழச் செடிகள் வழங்கும் ஒரு ஆதார நிலையமாக விளங்கிடும் நோக்கோடும் இப்பண்ணை ஆரம்பிக்கப்பட்டன. மேலும், இப்பண்ணையினைச் சுற்றியுள்ள கிராம மக்களுக்கு இதன் மூலம் நல்ல வேலை வாய்ப்பு கிடைக்கிறது.

கடற்கரை அருகில் மணற்பாங்கான இடத்தீல் அமைந்திருப்பதன் மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏராளமாக உள்ள மணற்பாங்கான இடத்திலும் வெற்றிகரமாகப் பழச்செடிகள் சாகுபடி செய்திட இயலும் என்பதற்கு இப்பண்ணை ஒரு முன் உதாரணமாக திகழ்கிறது.

1986-87-இல் நடவுப்பணி தொடங்கப்பட்டு 1987-88-இல் முடிக்கப்பட்டது. மா, கொய்யா சப்போட்டா, முந்திரி, எலுமிச்சை, மாதுளை போன்ற பழ மரங்களும் மல்லிகை, ரோஜா போன்ற மலர்ச் செடிகளும் இங்கு நடவு செய்யப்பட்டு உற்பத்தி செய்யப்படுகின்றன.

1988-89-இல் செடிகள் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டு அவ்வாண்டு 55,400 எண்களும், 1989-90-இல் 85,000 எண்களும், 1990-91-இல் 1,00,000 எண்களும் 1991-92-இல் 1,50,000 எண்களும், 1992-93-இல் 1,50,000 எண்களும் உற்பத்தி செய்யப்பட்டன.

நடப்பு ஆண்டு (1993-94) ரூ.5.5 இலட்சம் மதிப்புள்ள 1,35,000 எண்கள் செடிகள் உற்பத்தி செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பண்ணையில் நவீனத் தொழில்நுட்ப முறைகள் மூலம் செடிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

தற்பொழுது உள்ள பண்ணையின் மூலம் இம்மாவட்டத் தேவையில் 60 சதவிகிதம் மட்டுமே பூர்த்தி செய்ய இயலும் என்கிற நிலையில் மேலும் அருகாமையில் 4.68.5 எக்டேர் பரப்பளவு நிலம் கையகப்படுத்தப்பட்டு பண்ணை விரிவாக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் நன்கு வறட்சியினைத் தாங்கி வளரக்கூடிய இலந்தை, சீத்தா, சப்போட்டா முதலிய செடிகள் நடப்படுவதுடன் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படும்.

பழ மரங்களின் சாகுபடியில் அதிகப் பரப்பினைக் கொண்டு வரும் நோக்கோடு மா, சப்போட்டா, முந்திரி, எலுமிச்சை, கொய்யா முதலிய பழச்செடிகள் விவசாயிகளுக்கு 50 சதவிகிதம் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. குறைந்த பராமரிப்பு செலவில் விவசாயிகளுக்கு அதிகப் பலனைக் கொடுத்து ஒரு நிரந்தர வருமான ஆதாரமாக இருப்பதுடன், பழச்செடிகள் சாகுபடி சுற்றுச்சூழலையும் மேம்படுத்துகிறது.

1985-86-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் மூலம் இதுவரை சுமார் 1,440 எக்டேர் பரப்புக்குப் பழச்செடிகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 1993-94-ஆம் ஆண்டிற்கு 200 எக்டேர் பரப்பளவிற்குப் பழச் செடிகள் விநியோகம் செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

தா. தில்லைகோவிந்தன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
இராமநாதபுரம்

தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை''

என்னும் குறட்பா வாழ்க்கைத் துணை என்னும் அதிகாரத்தில் உள்ளது.

''பிறதெய்வந் தொழாது, தன் தெய்வமாகிய கொழுநனைத் தொழா நின்று துயில் எழுவாள், பெய் என்று சொல்ல மழை பெய்யும்'

இது - 'தெய்வந் தொழாஅள்' என்ற குறட்பாவிற்குப் பரிமேலழகர் கூறும் உரை. அன்று முதல் இன்று வரை குறட்பாவுக்கு உரை எழுதிய எல்லா உரையாசிரியர்களுமே மேலே குறித்துள்ள உரையை அடியொற்றியே எழுதி வந்திருக்கின்றனர். இக்குறட்பாவை பண்டைய இலக்கிய ஆசிரியர் பலர் உள்ளவாறே எழுத்தாண்டிருக்கின்றனர். குறட்பாவின் கருத்தைக் கையாண்டும் இருக்கின்றனர்.

கருமழை தரல் வேண்டின்
தருகிற்கும் பெருமையளே (கள-39:8)

என்று போற்றுகின்றது கற்றோர் ஏத்தும் கலித்தொகை.

''தெய்வந் தொழாஅள்
கொழுநற் றொழுவாளை''

என்று பேசுகிறது நெஞ்சையள்ளும் செஞ்சொற்காப்பியமான சிலப்பதிகாரம்.

''மண்டினி ஞாலத்து மழைவளந் தருஉம்
பெண்டி ராயிற் பிறர்நெஞ்சு புகல்''
(மணி-சிறை செய் 45-46)

என்கிறது மணிமேகலை என்னும் அணி செய் காப்பியம். மேலும்,

'தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்ற அப்
பொய்யில புலவன் பொருளுரை'

என்ற வரிகளும் இடம் பெற்றுள்ளன. இதில், சாத்தனார், குறட்பாவை அப்படியே கையாண்டு, திருவள்ளுவரை, 'பொய் யில புலவன்' 'பொய்யற்ற புலவன்' என்று சிறப்புற பாராட்டியும் உள்ளார். இன்னும், இது 'பொருள் பொதிந்த உரை' பொருளுரை என்றும் வியந்துள்ளார்.

அடுத்து,

'நாடு மூரும் நனிபுகழ்ந் தேத்தலும்
பீடு றும்மழை பெய்கெனப் பெய்தலும்
கூட லாற்றவர் நல்லது கூறுங்கால்
பாடு சால்மிகு பத்தினிக் காவதே'

என்கிறது வளையாபதி.

'தெய்வம் தொழாஅள்' என்ற இக்குறட்பாவைப் பற்றி வெளிவந்துள்ள கருத்துகள் பல; இக்குறட்பாவைக் கொண்டே ஆசிரியரைத் தாக்குவோரும் உளர். பன்னெடுநாள் என் நெஞ்சில் குடிகொண்ட பாக்கள் சிலவற்றுள் இஃதும் ஒன்று. பாடபேத மிருக்குமோ என்று ஐயுற்ற நாளும் உண்டு. பண்டையாசிரியர் சிலர் இக்குறளை உள்ளவாறே ஆண்டுள்ளமையால், பாடபேத ஐயப்பாட்டுக்கு இடமில்லை என்ற தெளிவும் ஏற்படுவதுண்டு' என்று குறிப்பிடப்பட்டுள்ளார் தமிழ்த் தென்றல் திரு.வி.க.

இக்குறட்பாவிற்கு உரைகாணும் முயற்சியில் ஈடுபட்ட தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் மேலும் கூறுகையில்,

'எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியர்
திண்ணிய ராகப் பெறின்'

என வருகின்ற திருக்குறளையும்,

''கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கிருந்தால்
நீங்கள் இந்த மலையைப் பார்த்து இவ்விடம் விட்டு
அப்புறம் போ என்று சொல்ல அது அப்புறம் போம்''

என்று வரும் மத்தேயு (18:20) கிறிஸ்துவின் வாக்கினையும் எடுத்துக்காட்டி, காதலால் விழுங்கப்பட்டு இருமையற்றவர் மன உறுதியில் சிறந்து நிற்பாராதலின் அவரால் என்ன செய்தல் கூடாது? அவர் 'பெய்' என்றால் மழை பெய்யும்; வா என்றால் மலை வரும்; அவர்தம் ஆணைக்குப் பூதங்களும் அடங்கும்; தெய்வமும் அடங்கும் என்று கூறுதல் மிகையாகாது; என்று பலபல சொல்லி உறுதிப் படுத்த முயற்சிக்கிறார்.

இவ்வாறாக,

இக்குறட்பாவிற்கு, உரை கண்டார் பலரும், உரையில் தத்மது உள்ளத்தைக் காட்டினாரே தவிர, யாரும் வள்ளுவர் உள்ளம் தெளிவாகக் குறிப்பிடவில்லை.

'தெய்வம் தொழாஅள்' என்ற குறட்பாவிற்குப் பொருள் காண்பதில் எத்தகைய இடர்ப்பாடும் இருப்பதாகத் தோன்றவில்லை. குறட்பாவின் அமைப்பை மாற்றாமல் அப்படியே குறளமைப்பை வைத்துக் கொண்டால், பொருள் காண்பது மிகமிக எளிது.

அதாவது, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் குறிப்பிடுவது போல, இதனை உவமைத் தொகையாகக் கொண்டு பொருள் கூறுதல் மிகவும் பொருத்தமுடையது.

இன்றிருப்பதுபோல வள்ளுவர் காலத்திலும் சிறு தெய்வ வணக்கம் வழக்கத்தில் இருந்தது. பின்னர் வந்த பாரதியார்கூட 'ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்' என்றார்.

மன்னாராமுனீரா முரசு

'தெய்வங்களை வணங்காமல், தன் கணவனையே தெய்வமாக மதித்துப் போற்றித் துயில் எழும் துடியிடையாள், 'பெய்' என்ற அளவில் பெய்யும் மழை போன்று இனியவள்'

பெய் யென்ற அளவில் பெய்யும் மழை இவ்வையகத்து உயிர்களுக்கு இனியது. தெய்வங்களைத் தொழாமல் தன் கணவனையே தெய்வமாகப் போற்றித் தொழுது துயில் எழுகின்றவள், (அவள் கணவனுக்கு) அம்மழை போன்றவள்'.

'தெய்வங்களைத் தொழாமல், தன் கணவனையே தொழுது துயில் எழுகின்றவள், பெய்யெனப் பெய்யும் மழை போன்றவள்' - இதுதான் இக்குறட்பாவின் பொருள்.

இக்குறட்பாவின் மூலம், தமிழகத்தில் பண்டைக் காலத்திலும் இந்த நாளிலும் இருந்த - இருந்து வருகிற சிறு தெய்வங்களின் வழிபாட்டை வள்ளுவர் மறுத்திருக்கிறார் என்றும் கொள்ளலாம்.

'வானமழை நீயெனக்கு'

என்று பாடுகிறார் பாரதியார். உடலினால் இருவரேனும் உள்ளத்தால் ஒன்றாக இணைந்த காதலனுக்கும் காதலிக்கும் உள்ள தொடர்பு - அவர் பெறுகின்ற இன்பம் முதலியவற்றைத் 'தெய்வம் தொழாஅள்' என்ற குறட்பா தெளிவிற விளக்கும்.

இனி, வள்ளுவரின் தெய்வம் தொழாஅள் என்ற குறட்பாவிற்கு இப்படிப் பொருள் காண்பதற்கு வேறு ஆதாரம் ஏதேனும் உண்டா என்று கேட்பாரும் உண்டு.

"வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி (1192)

என இன்பத்துப் பாடலில் இடம் பெற்றுள்ள குறட்பாவினையே தகுந்த ஆதாரமாகக் காட்டலாம்.

"ஒருவனையும் ஒருத்தியையும் ஒன்றுபடுத்துவது காதல். காதலர்க்கு எல்லாவற்றையும்விட, அந்தக் காதல் மேம்பட்டதாகும். காதலியின் உள்ளத்தில் கடந்த பொருளாகக் காதலனும், காதலன் உள்ளத்தே கடந்த பொருளாகக் காதலியுமே இருப்பர். சுருங்கக் கூறினால், 'இருதலைப் புள்ளின் ஒருயிர்' போல்வர் அவர்கள்! 'புனற்கே புனல் கலந்தாற் போன்று' என்று நளவெண்பாவும்,

'வெள்ளத்தி னோடொரு வெள்ளமுமாய் - நல்ல
வீணையும் நாதமும் ஆகிவிட்டார்'.

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் கூறுவது போல உள்ளம் கலந்த காதலர்களுக்குள் ஒருவர்க்கு ஒருவர் அளிக்கும் இன்பம், உலகத்தில் வாழும் உயிர்களுக்கு வானம் பெய்து பயன்தரல் போன்றது. வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் என்ற குறட்பா வாயிலாக நாம் இவ்வுண்மையை அறிகிறோம். இக்குறட்பாவின் கருத்தை நன்றாக நெஞ்சில் நிறுத்திக் கொண்டு, 'தெய்வம் தொழாஅள்' என்ற குறட்பாவிற்கு நாம் பொருள் காண முற்பட்டால், வள்ளுவர் 'பொய்யிற்புலவன்' என்றும் அவர் உரை 'பொருளுரை' என்றும் உணரலாம்.

திருக்குறள் 'வான் சிறப்பு' அதிகாரத்தில்,

'வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று'

என்ற குறட்பாவில், வானின்று அமிழ்கின்ற (பெய்கின்ற) காரணத்தால் மழையை அமிழ்தாக்கிக் காட்டுகிறார் வள்ளுவர். 'அமிழ்து' என்பது ஆழ்ந்து பொருள்காண வேண்டிய ஒரு சொல்.

திருக்குறள் இன்பத்துப் பாலில், 'புணர்ச்சி மகிழ்தல்' என்ற அதிகாரத்தில் உள்ள

உறுதோறும் உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள் (கு.1106)

என்னும் குறட்பாவில், தலைவியின் மெல்லிய இனிய தோள்களை அமிழ்தாக்கிக் காட்டுகிறது.

நான் என் காதலியின் மெல்லிய தோள்களைப் பொருந்தும் போதெல்லாம், எனது உயிர் தளிர்க்கும் படியாக - புத்துணர்வு துளிர்க்கும் படியாக என்னை அவள் தழுவுகிறாள். எனவே, அவளது தோள்கள் அமிழ்தத்தால் ஆக்கப்பெற்றிருக்க வேண்டும்! என்று தலைவன் பேசுகிறான். இக்குறட்பாவில் தலைவியின் தோள்களை அமிழ்தாக - மழையாக சிறப்பித்துக் கூறிய வள்ளுவர், 'தெய்வம் தொழாஅள்' எனும் குறட்பாவில், தலைவியையே மழையாக உருவகித்துக் காட்டினார் என்பதில் என்ன தவறு?

எனவே, 'தெய்வம் தொழாஅள்' என்னும் குறட்பாவிற்குப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கண்ட உரையே சிறப்புடையது எனலாம்.

எழுத்தாளருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி!

'இந்து' ஆங்கில நாளேட்டினைச் சேர்ந்த பழம்பெரும் பத்திரிகையாளரும், எழுத்தாளருமான திரு டி. ஆஞ்சநேயலுவின் 70-வது பிறந்த நாளையொட்டி, நாற்பத்தைந்து ஆண்டுக்காலமாக பத்திரிகையாளராகச் சமுதாயத்துக்கு அவர் ஆற்றியுள்ள பணியினைப் பாராட்டும் வண்ணம், கடந்த ஜனவரி, 1993-இல் ஒரு விழா எடுக்கப்பட்டு அவ்விழாவில் ஒரு சிறப்பு மலர் வெளியிடப்பட்டதென்றும், அச்சிறப்பு மலரை வெளியிடுவதற்கு ரூ.30,000 செலவாகியதென்றும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதியுதவி அளிக்க வேண்டுமெனக் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அச்சிறப்பு மலரை வெளியிட்டபோது செலவான தொகையான ரூ.30,000-த்தை 'முதலமைச்சரின் பொது நிவாரண நிதி'-யிலிருந்து அளிக்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

திரைப்படத் துறையைச் சேர்ந்தவர்களின் குழந்தைகளுக்கு, திரைப்படக் கல்லூரியில் இட ஒதுக்கீடு

தமிழகத் திரைப்படத்துறையில் திரைப்படத் தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் நடிக நடிகையர் ஆகியோர்களுக்கிடையே நிலவி வந்த கருத்து வேறுபாடுகளையும், பிரச்சினைகளையும் அனைத்துத் தரப்பினரும் ஏற்கும் வண்ணம், கடந்த 25.7.1993 அன்று நடந்த பேச்சு வார்த்தையில் சுமுகமாகத் தீர்த்து வைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தமிழகத் திரைப்படத் துறையில் ஈடுபட்டு வரும் அனைத்துப் பிரிவினருக்கும் நன்மை பயக்கும் வண்ணம் ஒரு சில நலத்திட்டங்களையும் அறிவித்திருந்தார்.

அவற்றில் ஒன்று, தமிழகத் திரைப்படத் துறையில் சேர்ந்தவர்களின் குழந்தைகளுக்குத் திரைப்படக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு செய்வது குறித்ததாகும். அதன்படி, தமிழ்நாடு திரைப்படக் கல்லூரி நடத்தி வரும் திரைப்பட இயக்கம் (Film Direction) ஒளிப்பதிவு (Cinematography) ஒலிப்பதிவு (Sound Recording) படத்தொகுப்பு (Editing) படச்சுருள் தொகுப்பு (Film Processing) ஆகிய 5 டிப்ளோமா பயிற்சிப் பிரிவு ஒவ்வொன்றிலும் ஒரு இடம் வீதமும், மற்றும் நடிப்புப் பயிற்சிப் பிரிவில் மாணவர் பிரிவில் ஒரு இடமும், மாணவியர் பிரிவில் ஒரு இடமும், ஆக மொத்தம் ஏழு புதிய இடங்கள் உருவாக்கப்பட்டு, அவற்றை அனைத்துத் திரைப்படத் துறையைச் சேர்ந்தவர்களின் குழந்தைகளுக்கு ஒதுக்கீடு செய்து, அதற்கான ஆணைகளை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பிறப்பித்துள்ளார்.

சூற்றுப் பாம்புகளைச் சட்டத்தை எதிர்த்துப் போராடி 3.6.1980-ல், சேப்பாக்கு ஒன்றியம் பெருங்காவ தலூரில் தாய்க்குப் பலியான 16 பேர் நினைவாக 19.9.92-ல் அமைக்கப்பட்ட நினைவுத்தூண்; இன்றுமாலை மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் சேப்பாக்கு திரு. முனுசாமி, திரு. ஆண்டிபட்டி எம்.எல்.ஏ., ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு எவ்வாறு கட்டணச் சலுகைகள் வழங்கப்படுகின்றதோ, அதே விகிதத்தில் கட்டணச் சலுகைகள் திரைப்படத் துறையைச் சேர்ந்தவர்களின் குழந்தைகளுக்கும் அளிக்கப்படும் என்ற சலுகையையும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார். இந்த இட ஒதுக்கீடு இந்தக் கல்வி ஆண்டான 1993-94-லிருந்து அமலுக்கு வருகின்றது.

பொது இடங்களில் படப்பிடிப்பு

திரைப்படத் தயாரிப்பாளர்களின் மற்றொரு கோரிக்கை, பொது இடங்களில் படப்பிடிப்பு நடத்த அனுமதி பற்றியதாகும். அரசின் கட்டுப்பாட்டிலுள்ள கட்டடம், கல்வி நிலையம், கோயில்கள், விருந்தினர் மாளிகைகள் போன்ற பொது இடங்களில் திரைப்படப் படப்பிடிப்பு நடத்துவதற்கு, பலவேறு துறைகளிடமிருந்து அனுமதி பெறும் முறையினை எளிதாக்க வேண்டும் என்று கோரிக்கையைப் பரிசீலித்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இத்தகைய அனைத்துப் பொது இடங்களிலும் படப்பிடிப்பு நடத்த ஒரே அதிகாரியிடமிருந்து ஒட்டுமொத்த அனுமதி பெறும்வண்ணம் Single Window Clearance என்ற திட்டத்தை அமல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், அரசுக் கட்டுப்பாட்டிலுள்ள இத்தகைய அனைத்துப் பொது இடங்களிலும் படப்பிடிப்பு நடத்த அனுமதி வழங்குவார். பொது இடங்களில் திரைப்படப் படப்பிடிப்பு நடத்தும், தயாரிப்பாளர்களுக்கு நன்மை பயக்கும் இத்திட்டம் உடனடியாக அமலுக்கு வருகின்றது.

சிறுசேமிப்பு - குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

சிறுசேமிப்புத்துறையின் மகத்தான பரிசுத்திட்டம்



இன்றே ரூ.500/-ம் அதற்கு மேலும் தமிழ்நாட்டில் முதலீடு செய்து இலவச பரிசுக் கூப்பன் பெறுங்கள்.

உங்கள் முதலீடுகளுக்கு 619 கவர்ச்சிகரமான பரிசுகள்

1 சூப்பர் பம்பர் முதல் பரிசு மாருதி ஆம்னிவேன் (அல்லது) 25 h.p.H.M.T. டிராக்டர்(இயந்திரக்கலப்பையுடன்)
1 இரண்டாவது பரிசு - அஞ்சலக மாதாந்திர வருவாய்த்திட்டத்தில் ரூ.24,000/-க்கான முதலீடு
2 மூன்றாவது பரிசுகள் - கலர் டெலிவிஷன்
2 நான்காவது பரிசுகள் - உலர்த்தும் வசதியுள்ள செமிஆட்டோமேடிக் வாஷிங்மெஷின்
3 ஐந்தாவது பரிசுகள் - 2 நபர்களுக்கு சென்னையிலிருந்து புறப்படும் 6 நாள் தென்னிந்திய சுற்றுலா
10 ஆறாவது பரிசுகள் - 1 சவரன் (22 காரட்) தங்கநாணயம்
600 ஏழாவது பரிசுகள் - ரூ.100/- மதிப்புள்ள இந்திராவிகாஸ் பத்திரம்

பரிசுக் கூப்பன் பெற முதலீடு செய்ய வேண்டிய திட்டங்கள்

- இந்திரா விகாஸ் பத்திரம் (IVP)
- கிசான் விகாஸ் பத்திரம் (KVP)
- தேசிய சேமிப்புப் பத்திரம் 8-வது வெளியீடு (NSCVIII ISSUE)
- தேசிய சேமிப்புத்திட்டம் 1992 (NSS '92)
- 15 ஆண்டு பொது சேமநல நிதித்திட்டம் (PPF)
- மாதாந்திர வருவாய்த் திட்டம் (MIS)
- ஓய்வு பெறும் அரசு/பொது நிறுவன ஊழியர்களுக்கான சேமிப்புத் திட்டம் 1 மற்றும் 2 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D) 1% ஊக்கத்தொகை
- 3 மற்றும் 5 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D)
  அஞ்சலகத் தொடர் வைப்புத்திட்டம் / வளரும் மாத சேமிப்புத் திட்டம் (R.D./C.T.D.)

மேலும் 2% வரையிலான ஊக்கத்தொகை திட்டத்தில்

அனைத்து அஞ்சலகங்களிலும் கிடைக்கும்

மேலும் விவரங்களுக்கு:
ஆணையர், சென்னை மாநகராட்சி, (சி. சே. பிரிவு) சென்னை - 600 003.
தொலைபேசி: 584440
மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், 92, அண்ணா சாலை, சென்னை 600 002. தொலைபேசி: 849962.
மாவட்ட ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்

வெளியீடு: இயக்குநர்,
சிறுசேமிப்புத்துறை, 621, அண்ணா சாலை,
சென்னை - 600 006. தொலைபேசி : 8251784/8251685

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு

நீதித் துறையினருக்குத் தனிக் குடியிருப்புகள்

நீதித் துறைக்குத் தேவையான கட்டடங்கள் முதலான அடிப்படை வசதிகளை உருவாக்கித்தர உரிய நிதி ஒதுக்கீட்டினைத் திட்ட அமைப் பின்கீழ் கொண்டுவர வேண்டும் என்று, மத்திய திட்டக் குழுவிற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கருத்துத் தெரிவித்திருந்தார். நீதித் துறையில் பணிபுரிபவர்களுக்குக் குடியிருப்பு வசதிகளைத் தனியாக உருவாக்கித் தர வேண்டும் என்ற கருத்தினை அகில இந்திய அளவில் முதன்முதலாகத் திட்டக் குழுவின் கவனத்திற்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கொண்டு வந்தார்.

மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் அவர்களின் கருத்தினை ஏற்றுக் கொண்ட திட்டக் குழு, நீதித்துறை அடிப்படை வசதிகள் முன்னேற்றத்தை முதன் முதலாக ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கொண்டு வந்துள்ளது. இதனை அடுத்து, 1993-94-ஆம் ஆண்டில் 3.70 கோடி ரூபாய் மதிப்பில் தமிழ்நாடு நீதித்துறையின் அடிப் படை வசதிகளை முன்னேற்றும் பொருட்டு நீதிமன்றக் கட்டடங்கள், நீதிபதிகளுக்குக் குடியிருப்புகள் ஆகியவை கீழ்க்கண்ட இடங்களில் கட்டித் தரப்பட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித் துள்ளார்.

1. சென்னை மாநகர உரிமை யியல் நீதிமன்றக் கட்டடத்தில் மூன் றாவது மாடியினை ரூ.150 இலட்சம் செலவில் கட்டுதல்;

2. தருமபுரி மாவட்டம் ஒதூரில், மாவட்ட முனிசிப் நீதிமன்றக் கட்டடம், நீதிமன்ற நடுவர் கட்டடம் ஆகியவற்றை ரூ.70 இலட்சம் செலவில் கட்டுதல்;

3. திண்டுக்கல், செங்கற்பட்டு, சேலம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டத் தலைமையிடங்களில், மாவட்ட நீதிபதிகளுக்குக் குடி யிருப்புகள் ரூ.67 இலட்சம் செலவில் கட்டுதல்;

4. திருவள்ளூர், அரியலூர், விழுப்புரம் மற்றும் குழித்துறை ஆகிய இடங்களில் சார்-நீதிபதி களுக்கான குடியிருப்புகள் ரூ.20 இலட்சம் செலவில் கட்டுதல்;

5. தேர்ந்தெடுக்கப்பட்ட 15 இடங்களில் சார்நிலை நீதிமன்ற நடுவர்களுக்குக் குடியிருப்புகளை ரூ.60 இலட்சம் செலவில் கட்டுதல்; ஆகிய பணிகள் 1993-94-ஆம் நிதியாண்டில் ரூ.3.70 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு, அவை துரிதமாகச் செயல்படுத்தப் பட வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்தார்.

சாலை விபத்தில் இறந்தவரின் துணைவியாருக்கு வேலைவாய்ப்பு முதல்வர் ஆணை

திருமதி சோபனாதுரை என்பவர், தனது கணவர் திரு. துரை, இந்தியக் கப்பற்படையில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது, விசாகப்பட்டினத்தில் நடந்த சாலை விபத்து ஒன்றில் இறந்துவிட்டார் எனவும், 29 வயதான அவர், தன்னுடைய 3 வயது குழந்தையோடு மிகவும் சிரமமான நிலையில் வாழ்ந்து வருவதாகவும், தனக்குக் கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் எனவும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குக் கருணை மனு அனுப்பியிருந்தார். அதில், அவர் பி.லிட்., எம்.பில்., மற்றும் பி.எச்.டி., (தமிழ்) போன்ற பட்டங்களைத் தாம் பெற்றிருப்ப தாகவும் குறிப்பிட்டிருந்தார்.

திருமதி. சோபனாதுரையின் மனுவினைப் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திருமதி சோபனா துரைக்கு, அவரது கல்வித் தகுதிக்கு ஏற்ப, தமிழ்நாடு தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத்துறையில் புதி தாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள 'தமிழாய்வு அலுவலர்' என்ற பணி யினை வழங்கி ஆணை பிறப் பித்தார்.

காவல் பணியில் கம்ப்யூட்டர்

தமிழகக் காவல் துறையில் பணி புரியும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் காவல் பணியில் கம்ப்யூட்டர் உபயோகம் குறித்துப் பயிற்சி அளிப்பதற்கு என்று, "காவல் துறை கம்ப்யூட்டர் பயிற்சி மையம்" மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் ஆலோசனையுடன் துவக்கப்பட்டுள்ளது. தற்போது இந்தப் பயிற்சி மையத்தில் காவல் துறை கண்காணிப்பாளர் நிலையிலிருந்து, அதற்கு மேற்பட்ட நிலையில் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் கம்ப்யூட்டர் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

15.12.1993 அன்று முற்பகல் 11.00 மணி முதல் 12.30 வரை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 'காவல் துறை கம்ப்யூட்டர் மையத் திற்கு'ச் சென்று அங்கு அளிக்கப்படும் பயிற்சியைக் கவனித்தார். மேலும், ஒரு காவல் நிலையத்தில் அனைத்துப் பணிகளையும், கம்ப்யூட்டர் உதவியுடன் எவ்வாறு சிறப்புடன் செயலாற்ற முடியும் என்பதைக் கூறிய போது, அது குறித்து விளக்கமாகக் கேட்டறிந்தார்.

குறிப்பாகக் காவல் நிலையத்தில், மனுதாரர்களிடமிருந்து முதல் தகவல் அறிக்கை (First Information Report) பெறுவது, மனுதாரர்களிடமிருந்து வாக்குமூலங்கள் சேகரிப்பது, குற்றப்பத்திரிகை (Charge Sheet) தயாரிப்பது போன்ற முக்கியப் பணிகளை எவ்வாறு செயலாக்க முடியும் என்பதும், பெரிய வரிசைகளில் போக்குவரத்து தடையின்றி இயக்குவது குறித்தும் அப்போது விளக்கிக் கூறப்பட்டது.

உயர் அதிகாரிகள் மட்டுமன்றி, காவலர் மற்றும் உதவி ஆய்வாளர் நிலையில் இருக்கின்ற அனைவரும் எளிதில் இயக்கக் கூடியதாகவும், புரிந்துகொள்ளக் கூடியதாகவும், இந்த கம்ப்யூட்டர் பயிற்சி வடிவமைக்கப்பட்டுள்ளது என்று காவல் துறை கம்ப்யூட்டர் ஆலோசகர் திரு என். கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

இந்தப் பயிற்சியின் உபயோகத்தைப் பற்றி எடுத்துரைக்கும் போது, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தமிழகத்தின் காவல் துறையை, நவீனப்படுத்துவது மட்டுமன்றி, மனிதநேயமிக்க ஒரு துறையாக, இதனை மாற்றுவதைத் தனது தலையாய கடமையாக மேற்கொண்டுள்ளதாக எடுத்துரைத்தார். காவல் துறையின் அனைத்து மட்டங்களிலும் கம்ப்யூட்டர் உபயோகத்தைக் கொண்டுவரச் செய்து அதன்மூலம் காவல் துறையை, நவீனப்படுத்துவதோடு, காவல் துறையைச் சேர்ந்த அனைத்து நிலையில் உள்ள அலுவலர்களுக்கும் கம்ப்யூட்டர் பயிற்சி அளிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டி, தமிழ்நாடு காவல் துறை மற்ற மாநிலங்களுக்கு இத்துறைகளில் முன்னோடியாக விளங்குகிறது என்பதை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்.

தமிழக அரசின் ஒவ்வொரு துறையும், பொது மக்களுக்கு நன்முறையில் சேவை செய்யவேண்டும் என்பதோடு, அரசுப் பணியாளர்கள் அனைவரும், நன்முறையில் பணியாற்றத் தயார்படுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார். அவ்வாறு அரசு ஊழியர்கள் மற்றும் அலுவலர்களுக்குச் சிறந்த முறையில் பணியாற்றுவதற்குத் தேவையான அனைத்துப் பயிற்சிகளையும் அளிக்கும் திட்டத்தின் கீழ், இந்த மையம் செயல்பட்டு வருகிறது என்பதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சுட்டிக் காட்டினார்.

வளர்ந்துவரும் தமிழகத்தின் பல வேறு பிரச்சினைகளைச் சமாளிக்க காவல் துறையை நவீனப்படுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்து 80 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்ட அறிக்கை தயார் செய்து, மத்திய அரசுக்கு அனுப்பி வைத்து, இதுவரை 10 கோடி ரூபாய் தான் மத்திய அரசு கொடுத்துள்ளது என்றும், அதற்கு மேலும் தமிழக அரசே கூடுதலாக 10 கோடி ரூபாயை வழங்கி நவீனப்படுத்தும் பணியைத் தொடர்ந்து மேற்கொண்டு உள்ளது என்பதையும் சுட்டிக் காட்டினார்.

இந்தியாவிலேயே தமிழகக் காவல் துறைதான் மிகச் சிறந்த முறையில் பணியாற்றும் காவல் துறை என்பதில் இரு வேறு கருத்துக்களுக்கு இடமில்லை என்பதையும் எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்குள், காவல் துறையை நவீனப்படுத்துவதற்கான அனைத்துத் திட்டங்களும் செயல்படுத்தப்படும் என்பதையும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் குறிப்பிட்டார்.

இந்தப் பயிற்சி நிலையத்தில் வைக்கப்பட்டு பார்வையாளர் புத்தகத்தில் தனது கருத்துக்களை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பதிவு செய்தார்.

நிகழ்ச்சியில் உள்துறை செயலாளர் திரு கே. மலைச்சாமி, இ.ஆ.ப., டி.ஜி.பி. திரு எஸ். ஸ்ரீபால், சென்னை நகர கமிஷனர் திரு ஆர். ராஜகோபாலன் மற்றும் ஐ.ஜி., டி.ஐ.ஜி நிலையில் உள்ள பல அதிகாரிகள் கலந்துகொண்டார்கள்.



The objective of the Government from the day it took over the administration, is to modernise and humanise the limbs of Government. In this process, several new instruments have been created to achieve the overall objective. The Special Security Group, the Uniformed Services Recruitment Board, and the Computer School are all such instruments created within the Police Department, apart from many other such tools created elsewhere.

I feel extremely happy to visit this Police Computer Training School headed by Thiru N. Krishnaswami, the Consultant appointed by this Government. He has delineated in great detail the ambitious plans on the anvil. I will be the happiest person when these schemes are finally implemented, for these schemes are aimed at improving the quality of service rendered by the Police Force to the public.

I wish the School the very best and express the hope that the trainees who go through this School will go out as better equipped Police Officers.

15/12/1993

Chief Minister.

அரசு ஊழியர்களுக்கு ரூ.100 இடைக்கால நிவாரணம்!

மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

★ தொழில் வரியில் சலுகை.
★ மருத்துவப்படி உயர்வு குறித்து பட்ஜெட்டில் அறிவிப்பு
★ இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் செல்ல விடுப்புக் காலப் பயணச் சலுகை.

அரசு அலுவலர்களின் பல்வேறு சங்கங்கள் டிசம்பர் 15-ஆம் தேதி முதல் அவர்களுடைய பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத்தம் செய்வதாக முடிவு செய்திருந்தார்கள்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அவர்களுடைய பல்வேறு கோரிக்கைகளைத் தீவிரப் பரிசீலனை செய்து தலைமைச் செயலாளர் மற்றும் நிதித்துறைச் செயலாளர் அவர்களுடன் கலந்தாலோசித்து, பல ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் ஆலோசனையின்படி தலைமைச் செயலாளர் அவர்களும் நிதித் துறைச் செயலாளர் அவர்களும் பல்வேறு சங்கங்களையும் அழைத்து அவர்களுடைய கோரிக்கைகளைப் பல்வேறு கட்டங்களில் பேசினார்கள்.

6.12.93 அன்று அனைத்துச் சங்கங்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்தால்தான் அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேறும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்திப்பதற்காக அனுமதி கேட்டிருந்தார்கள். மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களை ஹெலிகாப்டர் மூலம் பார்வையிடும் பணி இருந்தும்கூட, அரசு அலுவலர்கள் சங்கங்கள் அனைத்தையும் தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பு சுமார் 45 நிமிடம் நடந்தது.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது கீழ்க்கண்ட சங்கங்கள் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டன.

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் மாநிலத் தலைவர் திரு சிவ. இளங்கோ மற்றும் பொதுச் செயலாளர் திரு. சு. அறிவுக்கரசு.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் திரு. கே. கங்காதரன் மற்றும் மாநிலப் பொருளாளர் திரு. என்.எல். ஸ்ரீதரன்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் திரு. கே. பாலசுப்பிரமணியம் மற்றும் பொதுச் செயலாளர் திரு பி.எஸ். சவுந்திரபாண்டியன்.

தமிழ்நாடு அலுவலக உதவியாளர் மற்றும் அடிப்படை ஊழியர் சங்க மாநிலத்தலைவர் திரு. எம். மாணிக்கம் மற்றும் பொதுச் செயலாளர் திரு. கே. தங்கராஜ்.

தமிழ்நாடு ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை சங்கங்களின் கூட்டமைப்பு மாநிலத் தலைவர் திரு. வா. பாலகிருஷ்ணன் மற்றும் மாநில பொருளாளர் திரு. க. முருகேசன்.

தமிழ்நாடு அரசு அலுவலர் கழக (சி மற்றும் டி பிரிவு) மாநிலத் தலைவர் திரு எ.கோபாலகிருஷ்ணன், துணைத் தலைவர்கள் திருவாளர்கள் தா. ஜேசுதாஸ் மற்றும் என். முத்து ராமலிங்கம், பிரச்சாரச் செயலாளர் திரு. கே.எஸ். சந்திரசேகரன், பொருளாளர் திரு என். முருகன்.

தமிழ்நாடு அரசு அலுவலர் கழகம் (சி மற்றும் டி பிரிவு) மாநிலத் தலைவர் திரு கே.ஜி. மோகன், பொதுச் செயலாளர்கள் திரு. மு. முத்துசீனிவாசன் மற்றும் திரு. என். சங்கரன் மற்றும் மாநில பிரச்சாரச் செயலாளர் திரு. பெ. சந்திர சேகரன்.

இந்தப் பேச்சுவார்த்தையின் முடிவில் கீழ்க்கண்டவாறு முடிவு எடுக்கப்பட்டது 1.1.94-முதல் இடைக்கால நிவாரண மாக ஊதிய விகிதங்களில் உள்ள அரசு அலுவலர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100-ம், மாதம் ஒன்றுக்கு ரூ.500-க்கு மேல் தொகுப்பூதியம் மற்றும் மதிப்பூதியம் பெறுபவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.40-ம் வழங்கப்படும். மாதம் ஒன்றுக்கு ரூ.500-க்கு கீழ் தொகுப்பூதியம் மற்றும் மதிப்பூதியம் பெறுபவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.25-ம் வழங்கப்படும். இதனால் ஆண்டொன்றுக்குக் கூடுதல் நிதிச் சுமை ரூ.120 கோடியாகும். 1.1.94 என்ற தேதி இடைக்கால நிவாரணத்திற்கு மட்டும்தான் பொருந்தும்.

தமிழக அரசு ஏற்கெனவே 1.6.88- முதல் 13 சதவிகித அக விலைப்படியைக் கணக்கில் கொண்டு அரசு அலுவலர் களுக்கு ஓய்வூதியப் பலன்களை வழங்கி வருகின்றது. மத்திய அரசு தனது அலுவலர்களுக்கு அண்மையில் வழங்கியது போல இவ்வரசும் 1.1.94-முதல் பணியிலிருந்து ஓய்வு பெறும் அரசு அலுவலர்களுக்கு 20 சதவிகித அக விலைப்படியை (ஏற்கெனவே வழங்கிய 13 சதவிகித அகவிலைப்படியை உள்ளடக்கி) சேர்த்து பணிக்காலக் கொடை மட்டும் வழங்குவது என முடிவு செய்யப்பட்டது.

அரசு அலுவலர் சங்கங்கள் தொடர்ந்து தொழில் வரியை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி வருவதால் அரசு அலுவலர்களின் நலனைக் கருதி ரூ.5,000 வரை சில பிரிவினர்களுக்கு தொழில் வரியைச் சற்று குறைத்து வசூலிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

தற்போதுள்ள மாத மருத்துவப் படியான ரூ.15-ஐ ஓரளவிற்கு உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை அரசு பரிசீலித்து தக்க முடிவினை வரும் நிதிநிலை அறிக்கையில் வெளியிடும்.

தொகுப்பூதியம் மற்றும் மதிப்பூதியப் பணியாளர்களுக்கு இனிவரும் காலத்தில் கால ஊதியம் பெறுகின்ற அரசு அலுவலர்களுக்கு அக

விலைப்படி வழங்கும்போது தகுந்த முறையில் அகவிலைப்படி வழங்குவது என முடிவு செய்யப்பட்டது.

தற்போதுள்ள விடுப்புக் கால பயணச் சலுகையை விரிவுபடுத்தி மாநிலத்திற்குள் எங்கு வேண்டுமானாலும் செல்வதற்குப் பதிலாக அவர்களின் விருப்பப்படி இந்தியாவின் எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் 400 கி.மீ. என்று பயண தூரத்தைக் கட்டுப்படுத்தி வழங்கப்படும்.

பதிவறை எழுத்தர்களுக்குப் பதவி உயர்வில் உள்ள தேக்கநிலையைக் கருத்தில் கொண்டு 1000 பதிவறை எழுத்தர் பணியிடங்கள் இளநிலை பதிவறை எழுத்தர் நிலைக்கு மேம்படுத்தப்படும்.

தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை ஊதிய விகிதங்களிலும் வீட்டு வாடகைப்படியிலும் மாற்றம் எதுவும் தேவையில்லை என முடிவு செய்யப்பட்டது.

உள்ளாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் பிரச்சினை பற்றி அலுவலர் மட்டத்தில் தனியாக விவாதிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முடிவிற்கு அனைத்துச் சங்கங்களும் ஆதரவு தெரிவித்ததுடன், 15.12.1993 முதல் மேற்கொள்ள இருந்த அவர்களுடைய வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதாக மாண்புமிகு முதலமைச்சர் முன்னிலையில் அறிவித்தனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஹெலிகாப்டர் மூலம் சென்று பார்வையிடும் பணி இன்று இருந்தும் கூட, பல்வேறு சங்கங்களின் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து, அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களுடைய கோரிக்கைகளைப் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்த்து வைத்ததற்கு அவர்கள் அனைவரும் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்கள். மேலும் தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் உள்ள தமிழக அரசுக்குத் தங்களுடைய முழு ஒத்துழைப்பை அளிப்பதாக உறுதி அளித்தார்கள். இந்தச் சந்திப்பின்போது தலைமைச் செயலாளர் திரு டி.வி.வெங்கட்ராமன் அவர்களும், நிதித்துறைச் செயலாளர் திரு என். நாராயணன் அவர்களும் உடனிருந்தார்கள்.

இயல் இசை நாடக மன்றம் நடத்தும்

சலங்கை விழா!

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பரதக்கலையைப் பன்னாட்டவரும் அறிந்து பாராட்டி, அக்கலையை வளர்ப்பதற்குத் திறமையான வளரும் இளம் பரதக் கலைஞர்களையும், பரதக் கலை வல்லுநர்களையும் கொண்டு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலமாக ஒரு சிறந்த விழா ஏற்பாடு செய்யப்படும் என அறிவித்து இருந்தார். மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்திற்கிணங்க சென்ற ஆண்டு, 'சலங்கை விழா' என்ற பரத நாட்டியக் கலை விழா 5 நாட்கள் சென்னையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இந்த ஆண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம், கொண்டாடப்படும் இந்தச் 'சலங்கை விழா' எனும் பரத நாட்டியக் கலை விழாவை அனைவரும் பார்த்து மகிழ வேண்டும் என்பதற்காகவும், கிராம மக்களும் இந்தக் கலை நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழ வேண்டும் என்பதற்காகவும், இந்தக் கலை விழாவைச் சென்னையைத் தவிர்த்த மற்ற இடங்களில் நடத்த வேண்டும் என்று கருத்து தெரிவித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆலோசனையின்படி, இந்த ஆண்டு, 1993 டிசம்பர் 19-ஆம் தேதி முதல் 23-ஆம் தேதி வரை கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் 'சலங்கை விழா' சம்பந்தப்பட்ட மாவட்ட நிர்வாகத்துடனும் மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஒத்துழைப்புடனும் நடத்தப்படும்.

19.12.1993 — சிதம்பரம் — கலைமாமணி திருமதி இந்திரா ராஜன் அவர்களின் 'வாதினி நாட்டியாலயா' வழங்கும் பரத நாட்டியம்.

20.12.1993 — புதுக்கோட்டை — திருமதி ரேவதி முத்துசாமி அவர்களின் 'ஸ்ரீரங்கம் பரதநாட்டியாலயா' வழங்கும் 'பூம்புகார் கலைச் செல்வி' நாட்டிய நாடகம்.

21.12.1993 — காரைக்குடி — திருமதி சந்திரா தண்டாயுதபாணி அவர்களின் 'நாட்டிய கலாலயம்' வழங்கும் 'பாஞ்சாலி சபதம்' 'பாரதியாரின் பாரத தேசம்' நாட்டிய நாடகம் மற்றும் பொம்மை நடனம்.

22.12.1993 — ராஜபாளையம் — செல்வி நிதுசிந்தூரி அவர்களின் 'ஸ்ரீசக்தி சாரதா கலாநிகேதன்' வழங்கும் பரதநாட்டியம் மற்றும் குச்சுப்புடி நடனம்.

23.12.1993 — இராமேஸ்வரம் — கலைமாமணி திருமதி கிருஷ்ணகுமாரி நரேந்திரன் அவர்களின் 'அபிநய நாட்டியாலயா' வழங்கும் 'ஆடும் சிவனும் - அருள்தரும் ராமனும்' நாட்டிய நாடகம்.

இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் தலைவர் திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களும், உறுப்பினர்- செயலர் திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்களும் செய்வதோடு விழாவிலும் கலந்துகொள்வார்கள்.

பெரியார் மாவட்டத்தில் வெள்ளம்

மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணையின்படி, மாண்புமிகு அமைச்சர்கள் உதவிகளை வழங்கினார்கள்.

பெரியார் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள நிலைமையை அறிந்த மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உடனடியாக, வெள்ளச்சேதம் ஏற்பட்ட பகுதிகளைப் பார்வையிட மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கே.ஏ.செங்கோட்டையன் வெள்ளச் சேதம் ஏற்பட்ட தாராபுரம், வெள்ளக்கோயில் பகுதிகளைப் பார்வையிட்டு, மக்களுக்கு ஆறுதல் கூறு அனுப்பி வைக்கப்பட்டார். அவர்கள் அங்கு ஏற்கெனவே நேரடியாகப் பணியாற்றும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு துரை ராமசாமி அவர்களுடனும், மாண்புமிகு சுதர் மற்றும் கிராமத் தொழில் துறை அமைச்சர் திரு பி. ஈஸ்வரமூர்த்தி அவர்களுடனும் சேர்ந்து அப்பகுதியில் உள்ள அமராவதி, உப்பாறு கரையோரக் கிராமங்களைப் பார்வையிட்டு அங்குள்ள மக்களுக்கு ஆறுதல் கூறினார்கள்.

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு இராம வீரப்பன் அவர்கள் காங்கயம், சென்னிமலைப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நீருந்து நிலையங்களை பார்வையிட்டு வெள்ளத்தால் பாதிக்கப் பட்டுப் பள்ளிகளில் தங்க வைத்திருக் கும் குடும்பங்களுக்கு நேரடியாகச் சென்று ஆறுதல் கூறினார்.

பவானிசாகர் அணை 120 அடி கொள்ளளவுக்கு மேல் பெருகி வெள்ளச் சேதம் ஏற்படும் நிலைமை உள்ளதால், பவானி ஆற்றின் கரையோரப் பகுதிகளில் உள்ள கிராமங்களான ஆண்டிகுளம், ஓரிச்சேரி, ஆப்பக்கூடல், கீழ் வாணி, மூங்கில்பட்டி, சவுண்டப்பூர், பெரிய கொடிவேரி, மேவாணி, அம்மாபாளையம், பெருந்தலையூர்,

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உடனடி உதவி

தமிழ்நாடு முழுவதும் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் பெய்த மழையாலும், புயலாலும் பல்லாயிரக்கணக்கான குடிசைகள் பாழ் அடைந்துள்ளன.

முழுமையாகப் பாழடைந்த குடிசைகளுக்கு ரூபாய் 500-ம், 5 கிலோ அரிசியும், ஒரு லிட்டர் மண்ணெண்ணை, ஒரு வேட்டி, ஒரு சேலை ஆகியவை வழங்கப்படும்.

பகுதியாகப் பாழடைந்த குடிசைகளுக்கு ரூ.250-ம், 5 கிலோ அரிசியும், ஒரு லிட்டர் மண்ணெண்ணை, ஒரு வேட்டி, ஒரு சேலை ஆகியவை கொடுக்கப்படும். இதனை விரிவுபடுத்த எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர்.

கூகலூர், பெருமுகை, தொட்டம் பாளையம், இக்கரை தத்தப்பள்ளி, அக்கரை தத்தப்பள்ளி, அக்கரை நெகமம், பி.பி.அக்ரஹாரம் போன்ற பகுதிகளில் உள்ள மக்கள் முன்னேற்பாடாகப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு, சேதங்களிலிருந்து காப்பாற்றப்பட்டார்கள். வெள்ளப்பகுதிகளில் அதிகாரிகள் ரோந்து மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் திரு என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப., அவர்கள் ஆணையிட்டார்.

திடீரென்று கனமழை பெய்த தினாலும், அமராவதி அணையிலிருந்து சுமார் ஒரு இலட்சம் கன அடி திறந்து விட்டதன் காரணமாகவும், அமராவதி ஆறு நிரம்பி தாராபுரம், வெள்ளக்கோயில், மூலனூர் பகுதிகளில் சில சேதங்களை ஏற்படுத்தியது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவின்படி, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி அளிக்கப்பட்டது.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு துரை ராமசாமி அவர்கள் வெள்ள நிவாரணப் பகுதிகளை நேரடியாகவே சென்று பார்வையிட்டு நிவாரண உதவிகளைக் கவனித்தார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உடனடியாக ரூ.6,81,000 நிவாரண உதவியாக 1771 குடும்பங்களுக்கு வழங்கினார். இது தவிர வேட்டி, சேலை, அரிசி, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களும் வழங்கப்பட்டன.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மாற்று இடத்தை ஏற்பாடு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு என்.எஸ்.பழனியப்பன், இ.ஆ.ப., அவர்கள் உடனடி உத்தரவிட்டார். இதனால் முலையாம் பூண்டி, ஒரத்துப்பாளையம், நஞ்சைத்தலையூர், தூரம்பாடி, ஆகிய இடங்களில் குடியமர்த்தும் பணி விரைவாக நடைபெற்றது.

பழனி அருகில் அமராவதி ஆற்றின் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 800 உணவுப் பொட்டலங்களும், 400 லிட்டார் மண்ணெண்ணெய்யும், வழங்கக் கோரி திண்டுக்கல்-அண்ணா மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக் கொண்டதால், பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தாராபுரம் பகுதி வெள்ள நிவாரணக் குழுவிற்கு ஆணையிட்டு உடனடியாக அவை வழங்கப்பட்டன.

— ஜி.டி. மோகன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
பெரியார் மாவட்டம்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மேதகு இந்தியக்குடியரசுத் துணைத் தலைவர் திரு கே.ஆர். நாராயணன் அவர்களை புதுடெல்லியில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார் (11.12.1993).

படமும் செய்தியும்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் சென்னை சாந்தோமில் உள்ள காவல் துறை கம்ப்யூட்டர் தகவல் தொடர்பு வலையத்தை 15.12.1993 அன்று பார்வையிட்டார். அப்போது காவல் துறை உயர் அலுவலர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் எடுத்துக்கொண்ட படம்.

கவிஞன் நாட்டுத் திரைப்பட விழாவை சென்னை கலைவாணர் அரங்கில் மாண்புமிகு செய்தி-விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் 14.12.1993 அன்று தொடங்கி வைத்தார். செய்தி-மற்றுமத் துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., F.F.S.I. துணைத் தலைவர் திரு சந்திர நாயர் மற்றும் கவிஞன் நாட்டுத் துணைத் தூதர் திருமதி ஸ்வனா வாக ஆகியோர் உடன் இருந்தார்கள்.

நாட்டின் எல்லாக் குடிமக்களுக்கும் சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் விரைவான நீதி கிடைக்க வேண்டும்!

மாலிமாத் குழுவின் பரிந்துரைகளைப் பரிசீலிக்க நடைபெற்ற முதலமைச்சர்கள் மற்றும் தலைமை நீதிபதிகளின் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் உரை

புதுடில்லியில் 4.12.93 அன்று மாலிமாத் குழுவின் பரிந்துரைகளைப் பரிசீலிக்க நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள் மற்றும் தலைமை நீதிபதிகள் மாநாட்டில் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்களால் படிக்கப் பட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உரை:

மாண்புமிகு இந்தியப் பிரதமரும், மாண்புமிகு உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களும், மாண்புமிகு உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதிகளும் மற்றும் புகழ்பெற்ற பேராளர்களும் கலந்து கொள்ளும் பெருமைமிக்க இக்கூட்டத்தில் பங்கேற்றுப் பேசுவதில் பெருமகிழ்வடை கிறேன்; பெருமிதம் கொள்கிறேன். இந்த வாய்ப்பு மறக்கமுடியாதது. பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களைப் பற்றி விவாதிப்பதற்கான தகுந்ததொரு தூமலை இன்று இங்குக் கூடியிருக்கும் பேரறிவாளர்கள் உருவாக்குவார்கள் என்று நம்புகிறேன்.

நாட்டின் எல்லாக் குடிமக்களுக்கும், சமூக, பொருளாதார, அரசியல் துறை களில் விரைவான நீதி கிடைக்கவேண்டும் என்பதுதான் நம் அரசியல் அமைப்புச் சட்டத்தின் தலையாய குறிக்கோளாகும். பலவேறு நீதிமன்றங்களில் வழக்குகள் குவிந்துகிடப்பதால், குடிமக்களுக்கு நீதி கிடைப்பதில் தகாத தாமதம் ஏற்படு கிறது. இத்தகைய தாமதம், குடிமக்களுக்கு நீதியை மறுப்பதாகவே ஆகிவிடுகிறது. எனவே பலவேறு நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளுக்கு விரை வாகத் தீர்வு காண வேண்டியது தவிர்க்க முடியாததாக ஆகிவிடுகிறது. இந்தக் குறிக்கோளை எய்திட விரைவாக நீதி வழங்குவதில் ஏற்படுகின்ற தாமதத்திற்குக் காரணமாக உள்ள சட்ட விதிகள் - பிரிவுகள், நடைமுறைகள் ஆகியவற்றில் தேவைப்படுகின்ற மாற்றங்களை நாம் செய்தாக வேண்டியது மிகவும் இன்றி யமையாததாக உள்ளது. நீதிமன்றங்களில் வழக்குகள் தேங்கிக் கிடப்பதைக் குறைப்பதற்கான வழிவகைகளை எடுத் துக்கூற, மாண்புமிகு நீதிபதி மாலிமாத் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவானது இப்பிரச்சினையின் பலவேறு அம்சங்களை ஆராய்ந்து நீதித்துறைச் சீர் திருத்தங்களுக்கு மதிப்பு வாய்ந்த பல பரிந்துரைகளை வழங்கியிருக்கிறது.

நீதித்துறையும் திட்டங்களின் வரம்புக் குள் கொண்டு வந்து, அதற்காக, 1993-94-ஆம் ஆண்டுக்கான நிதிகளை, (அவை போதுமானதாக இல்லாவிட்டால் கூட) ஒதுக்கி, நீதித்துறையின் வரலாற்றி லேயே ஒரு புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்தியிருக்கும் மத்திய அரசுக்கு எனது பாராட்டுதலையும் நன்றியறிதலை யும் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசின் குறிப்புக்கிணங்க தமிழ்நாடு அரசு 1994-'95, 1995-'96 ஆண்டுகளில் நீதித்துறை திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 83 கோடி ரூபாய் தொகையைக் கேட்டிருக்கிறது. இந்தத் திட்டங்களைப் பரிவுடன் பரிசீலித்துக் கணிசமான நிதியை மத்திய அரசு வழங்கு மென்று நான் நம்புகிறேன். இதன் மூலமாக நீதித்துறைக்கு ஒரு புதுப் பொலிவு ஏற்படும். அடிப்படை வசதி களைச் சிறந்த முறையில் வழங்குவதில் ஒரு புதிய தொடக்கம் உண்டாகும்.

குழு பரிந்துரைத்துள்ள நீதித் துறைச் சீர்திருத்தங்களைத் தமிழ்நாடு அரசு பொதுவாக, ஏற்றுக்கொள்கிறது. குறிப் பாக, நீதிபதிகளை நியமிப்பதில் பின் பற்றப்பட வேண்டிய வழிமுறைகளையும், நீதிபதிகளின் எண்ணிக்கை குறித்த ஆய்வை அவ்வப்போது மேற்கொள்ள வேண்டும் என்பதையும், நீதிமன்றங் களின் பழைய செயல்பரப்பை நீக்க வேண்டும் என்பதையும், மேல்முறையீட் டுப் பெருக்கத்தைத் தவிர்க்கவேண்டும் என்பதையும், தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொள்கிறது.

உயர்நீதிமன்றங்களில் நீதிப்பேராணை மனுக்களும் மேல் முறையீடுகளும் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாகத் தேங்கிக் கிடக்கின்றன. இந்தத் தேக்கத்தைக் குறைப்பதற்கு நான் ஒரு யோசனை கூற விழைகிறேன். தேக்கத்தைக் குறைப்பதற் கும், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத் தின் 226-ஆவது பிரிவின் கீழ் விரைவில் பரிகாரம் பெற விரும்பும் குடிமக்களுக்கு விரைவான நிவாரணம் கிடைப்பதற் காகவும், அரசியல் அமைப்புச் சட்டத்தின் 323-அ, 323-பி ஆகிய இரண்டு பிரிவு களின் கீழ் ஒரு மாற்றுத் தீர்ப்பு அரங்கு அல்லது நடுவர் மன்றத்தை நிறுவிடலாம் என்பதே என் யோசனை.

நீதிப்பேராணை மனுக்கள், நீதிப் பேராணை மேல் முறையீடுகள் உள்ளடங் கலாக, வழக்குகளை விசாரணை செய்து தீர்ப்புரைப்பதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்தி, தீர்ப்புகளை விரைவில் அளிக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் யோசனை கூறப்பட்டுள்ளது. எந்த நீதிமன்றத்திலும் சரி, எந்த ஒரு வழக்கும் ஓராண்டுக் காலத்திற்கு மேல் நிலுவையில் இருக்கக்கூடாது என்பதை நாம் உறுதிப்படுத்தவேண்டும்.

உயர் நீதிமன்றங்கள் உட்பட எல்லா நீதிமன்றங்களிலும் காலியிடங்கள் நிரப் பப்பட வேண்டும். உயர்நீதி மன்றங்களில் நீதிபதி பதவிகள் இதுவரை நிரப்பப் படாமைக்குக் காரணங்கள் என்னவாக இருந்தாலும் அத்தகைய இடங்களை உடனடியாக நிரப்ப நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும். பல்லாண்டு களாக இவ்வாறு குவிந்து கிடக்கும் தற் போதைய நிலைமை திறனோடு மாற்றி அமைக்கப்படாவிட்டால் இன்றுள்ள நீதித்துறை அமைப்பிலேயே மக்களுக்கு நம்பிக்கை போய்விடும்.

ஒரு மக்கள் நல அரசின் தலையாய குறிக்கோள் பொதுமக்களின் நலனைப் பேணுவதே என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சமூக, பொருளாதார, அரசியல் நீதியை இலட்சியமாகக் கொள்ளும் ஒரு சமூக அமைப்பை எவ்வளவு விரைவாக ஏற்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவாக ஏற்படுத்தவேண்டும். சட்டமன்றம், நீதித்துறை, நிர்வாகத்துறை ஆகிய மூன்றும் ஆட்சியின் முப்பெரும் உறுப்புகளாகும். இந்த மூன்று உறுப்பு களும் ஒன்றையொன்று நன்கு புரிந்து கொண்டு ஒன்றையொன்று மதித்துச் செயல்படவேண்டும். சமூகத்தில், அடக்கப் பட்ட, ஒடுக்கப்பட்ட, நலிந்த பிரி வினர்க்காகச் சட்டமன்றமோ, ஆட்சி நிர்வாகமோ சில முற்போக்கு நடவடிக்கை களை மேற்கொள்ளும்போது சுயநலச் சக்திகள் நீதிமன்றங்களை அணுகி நிறுத்தி வைப்பு ஆணைகளை (தடைகளை) அல்லது உறுத்துகட்டளைகளைப் (Injunctions) பெறுவதன் மூலம் மட்டுமே அந்த முற்போக்கு நடவடிக்கைகளை நிறுத்தி வைத்து விடுமானால், அந்த முற்போக்கு நடவடிக்கையின் பயன்கள் ஏழை எளிய வரைச் சென்றடைய முடியாது. இது மக்களிடம் அதிருப்தியை உருவாக்கும். இதன் விளைவாக நீண்ட கால சமூக அரசியல் பாதிப்புகள் ஏற்படும். நீதி மன்றம் முனைப்பாகச் செயல்பட வேண்டும் என்பது குறித்து நீதிபதி எம்.சி. சாக்ளா அவர்கள் பின்வருமாறு கூறினார்:-

"இன்றைக்கு நீதிபதிகள் அரசாங்கத் தின் சமூக பொருளாதாரக் கொள்கை களைக் கவனத்தில் கொள்ளவேண்டும். அந்தக் கொள்கைகளின் அடிப்படையில் சட்டங்களை நோக்கவேண்டும். மக்களின் சமூக பொருளாதாரத் தேவைகளையும், அந்தத் தேவைகளை நிறைவு செய்யச் சட்டமன்றங்கள் விரும்புவதைப் பற்றியும், புறக்கணித்துவிட்டு நீதிபதி தன் ஆசனத் தில் இறுக்கமாக அமர்ந்து கொண்டால் போதுமானது என்று கூறுவது அபத்த மானதாகும். இப்படி, பற்றற்ற நிலையில் இருப்பதுதான் நீதியின் தரம் என்று கூறப்படலாம். ஆனால், அப்படிப்பட்ட நீதியின் தரத்தை யாரும் எய்த முடியாது. மேலும் அத்தகைய நீதியின் தரம் முற்றி லும் விரும்பத்தக்கதன்று என்பதே என் கருத்தாகும்.

காலத்தின் தேவைகளை நிறைவு செய்ய ஒரு சட்டமன்றம் விரும்பினால், அதற்கு ஒரு நீதிபதி துணை செய்ய வேண்டுமென்பதுதான் எனது கருத்து. சமூக முன்னேற்றத்திற்குத் தடைபோடும் சக்தியாக நீதிபதி இருக்கக் கூடாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிகள் அமர்ந்து, சட்டமன்றங்களில் இயற்றிய சட்டங்களைச் செல்லுபடியாகா மல் தடுக்கும் அதிகாரம் கொண்ட மூன்றா வது அமைப்பாக இந்தியாவில் நீதித்துறை விளங்குகிறது என்று ஏற்கெனவே ஒரு விமர்சனம் எழுந்துள்ளது. அந்த விமரி சனத்தை நீதிபதிகள் மெய்ப்பித்து விடக் கூடாது. குடிமகனுடைய தனிநபர் சுதந் திரத்தை நியாயமில்லாத முறையில் நிர்வாகம் ஆக்கிரமித்தால் அதை நீதிபதி தடுக்கவேண்டும். அதே நேரத்தில் சமுதாயத்தில் சமூக மற்றும் பொருளா தாரத் துறைகளில் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதையும் அதில் மற்ற குடிமக்களைப் போலவே தானும் ஒரு குடிமகன் என்கிற முறையில் தனக் கும் அக்கறை இருக்கிறது என்பதையும்





சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் டைரக்டர் ஜெனரல் திரு மைக்கேல் ஹான்சன் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார். இந்த அமைப்பின் ஜெனிவா நாட்டு இயக்குநர் திரு அலி டாக் அப்போது உடனிருந்தார் (9.12.1993).

நீதிபதி மறத்தல் கூடாது. ஒரு நீதிபதி என்பவர் சட்டத்தின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கிவிட்டால் மட்டும் போதாது; தம்மால் இயலுமாயின் தம் மனச்சாட்சிக்குப் பங்கமில்லாத வகையில் பொருளாதார மற்றும் சமூகக் கண்ணோட்டத்திலும் ஒரு நீதிபதி தீர்ப்பை வழங்க முயல வேண்டும்''.

—இவ்வாறு நீதிபதி சாக்ளா கூறியுள்ளார்.

மிகமிக அசாதாரணமான சந்தர்ப்பங்களிலும், மற்றும் தடையாணைகள் அல்லது உறுத்துக்கட்டளைகள் (Injunctions) வழங்கப்படாவிட்டால் அதனால் தகாத இன்னல்கள் விளையக்கூடும் என்கின்ற சந்தர்ப்பங்களிலும் மட்டுமே ஒருதரப்பு சார்பாக தடை (நிறுத்திவைப்பு) ஆணை அல்லது உறுத்துக்கட்டளை வழங்கப்படலாம் என்று நான் உங்கள் அனைவரையும் உளப்பூர்வமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அத்தகைய இடைக்காலத் தடையாணை அல்லது உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்படும்போது தாமதமில்லாமல் இருதரப்பு வாதங்களும் கேட்கப்படுவதை உறுதிசெய்தல் வேண்டும். மற்றும் அந்த இடைக்காலத் தடைகள் நீக்கப்பெறவோ, உறுதி செய்யப் பெறவோ வேண்டும். அப்படிச் செய்யவில்லையென்றால் மக்களுக்குச் சமூக, அரசியல், பொருளாதார நீதியை வழங்குவதற்காக நிறுவப்பட்ட நீதித்துறையானது, மக்களுக்கு நன்மை செய்யக்கருதிக் கொண்டுவரப்படும் முக்கியமான முற்போக்குத் திட்டங்களை நிறுத்துவதன் மூலம் ஒரு தரப்புச் சார்பான இடைக்கால ஆணைகளைக் குறிப்பிட்ட ஒரு சிலரின் தனிநலனுக்காகப் பெறுவதற்குப் பயன்படுகின்ற ஒரு நிலை ஏற்பட்டுவிடும். ஆக நீதித்துறைக்கு உள்ள சுதந்திரத்தன்மைக்கு உரிய மதிப்பளிக்கின்ற அதே வேளையில் இந்த அரங்கத்தின் வாயிலாக நான் விடுத்திட விரும்பும் வேண்டுகோள் என்னவென்றால், தடையாணைகளை அல்லது உறுத்துக் கட்டளைகளை வழங்கும்போது சட்டமன்றத்தால் அல்லது நிர்வாகத் துறையால் மக்கள் நலன் கருதி எடுக்கப்படும் நடவடிக்கைகளின் நோக்கங்களை நீதிமன்றங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

வழக்குகளை எண்ணற்ற முறை தள்ளிவைத்தல் மற்றும் இடைக்காலத் தடையாணைகள் மற்றும் உறுத்துக் கட்டளைகள் ஆகியவற்றை நீதிமன்றங்கள் காதக பாதகங்களைப் பற்றிக் கவலைப்படாமல், ஒரு வாலாயமான முறையில் வெகு இயல்பாக வழங்கி வந்தால் அதன் காரணமாக நீதிவழங்கலில் தாமதம் ஏற்பட நேருகின்றது என்பது மட்டுமல்ல; வழக்குத் தொடுத்த மக்களுக்கு விவரிக்க முடியாத தகாத இன்னல்களும் அதனால் ஏற்பட்டுவிடுகின்றன என்பதை இங்கே சுட்டிக்காட்டுவது பொருத்தமுடையதாகும். அதே போலக் குற்றங்களின் தன்மையைக் கருத்தில் கொள்ளாமலும், அவற்றால் சமூகத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளை எண்ணிப் பார்க்காமலும், பிணையத்தின் (ஜாமின்) பேரில் விட அனுமதிப்பதும் அப்படிப்பட்ட வகையைச் சார்ந்ததேயாகும்.

சமூக, பொருளாதார அரசியல் துறைகளில் பொது மக்களுக்கு நீதி வழங்குவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக விளங்கி வருகின்றது. மக்களுடைய எண்ணங்களின் பிரதிபலிப்பாகத்தான் அரசியல் கொள்கைகள் திகழவேண்டுமென்பதை நான் சொல்ல வேண்டிய அவயசிமில்லை. இந்த அடிப்படையில்தான் பெரும்பான்மை மக்களுடைய எண்ணங்களின் பிரதிபலிப்பாகக் கல்வி நிலையங்களிலும், அரசுப் பணிகளிலுள்ள வேலை வாய்ப்புகளிலும் இட ஒதுக்கீட்டுக் கொள்கைகளைத் தமிழ்நாடு அரசு வகுத்திருக்கிறது என்பதை இங்கு சொல்வதே பொருத்தமாகும் என்று கருதுகிறேன். தமிழ்நாட்டில் 75 சதவிகித மக்கள் பின்தங்கியவர்கள், பிற்பட்டவர்கள். ஆகவே, இட ஒதுக்கீடு என்பது மக்கள் தொகையில் அவர்களது எண்ணிக்கைக்கேற்ப அமைவது தேவையாக உள்ளது. வேறு சில மாநிலங்களில் மொத்த மக்கள் தொகையில் பிற்பட்டோருடைய சதவிகிதம் குறைவானதாக இருக்கக்கூடும். எனவே, அத்தகைய மாநிலங்களோடு தமிழ்நாட்டின் நிலையை ஒப்புநோக்கிப் பார்க்கமுடியாது. எனவே, சமூகத்தில் பெரும்பான்மை மக்களாக இருக்கும் பிற்பட்ட மக்களுக்கு, சமூகநீதி என்கின்ற குறிக்கோளை எய்துவதற்கான ஓர் இன்றியமையாத பயனுள்ள கருவி என்கின்ற வகையில் இட ஒதுக்கீட்டு விஷயத்தில் தமிழ்நாடு அரசு ஒரு வெற்றி வீரனாக விளங்குகிறது.

அண்மையில் Apex நீதிமன்றம் அளித்த தீர்ப்புகளை உச்சநீதிமன்றம் மறுதலித்து வழங்கிய தீர்ப்புகளால் சட்டத்தைப் பொறுத்தவரை ஒரு நிச்சயமற்ற நிலைமை நிலவுகின்றது.

இதன் தொடர்பாகத் தலைசிறந்த நீதிபதிகளில் ஒருவராகிய எச்.எம்.சீர்வை, நான்காம் பதிப்பு (1991) முதல் சுவடி பத்தி 9.340-இல் கூறிய கருத்துக்களை நான் மேற்கோள்காட்ட விரும்புகிறேன். 9.340 சட்டப்பிரிவுக்கூறு 141-இன்படி எல்லா நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும் சட்டங்களை உச்சநீதிமன்றம் கூறுகிறது. இதன்படி, தனிப்பட்ட கருத்து எதுவாயினும் உச்சநீதிமன்ற நீதிபதிகள், நீதிக் கட்டுப்பாட்டுடன் விளங்க வேண்டும் என்றாகிறது.

'அரசியல் சட்டத்தின் தத்துவம் மற்றும் அரசியல் சட்டத்தின் மதிப்பீடுகள் குறித்தும், சட்டமன்றத்தில் செய்யப்படும் சட்டங்கள் மீது நீதிமன்ற ஆய்வு செய்யும் அதிகாரம் கொண்ட நீதிபதியின் வேலை குறித்தும் அநேக நீதிபதிகளுக்கு வன்மையான கருத்துக்கள் உண்டு. கடந்த 12 முதல் 15 ஆண்டுகளாகத் தீர்ப்புகளுக்குக் கட்டுப்படாத சுதந்திரம் தமக்குண்டு என்று இவர்கள் கருதி வந்துள்ளார்கள். அந்தத் தீர்ப்புகளுக்கு அவர்களும் கட்டுப்பட்டவர்களே என்பது வெளிப்படை. மாபெரும் அரசியலமைப்புச் சட்ட முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களில் தீர்க்கமான எந்தச் சட்ட முடிவும் இல்லை என்ற நிலையை நாமடைந்துவிட்டோம். நீதிபதியும் அரசியல் அமைப்புச் சட்டமும் எதிரும் புதிருமாக இருக்கும் நிலையைத் தற்போது பரிசீலிக்கும். அதற்கு முன் நீதிமன்றங்கள் வழக்கைத் தீர்த்துவைப்பதற்காகவே இருக்கின்றன என்பதை நெஞ்சில் கொள்ளவேண்டும்.

நமது சமுதாயத்தை ஆள்கின்ற சிக்கலான சட்டங்களால் வழக்காடுவோர் சட்ட ஆலோசனைக்காக வழக்கறிஞரின் உதவியை நாடித்தான் தீர வேண்டியுள்ளது. முடிவான சட்டத்தீர்வு இல்லை என்றும், தீர்ப்பு வழங்கப்படும் வரை, என்ன தீர்மானிப்பது என்றறியா நிச்சயமற்ற நிலைதான் என்றும், உள்ள ஒரு சூழலைக் கடைசி நீதிமன்றம் உருவாக்குமானால், வழக்கறிஞர்கள் உறுதிப்பாட்டோடு எந்த ஆலோசனையையும் வழங்க முடியாது. நீதிமன்றமும் எதற்காக உள்ளதோ அந்தப் பணியை நிறைவேற்றத் தவறிவிடுகிறது. மண்டல் கமிஷன் வழக்குகளில் இடஒதுக்கீட்டுப் பிரச்சினையில் அண்மையில் அளிக்கப்பட்டுள்ள தீர்ப்பானது பற்பல ஆண்டுகளாக நிலைபெற்று நின்றுள்ள, முந்தைய தீர்ப்புகளின்படி நிலவி வந்துள்ள நிலையான நிலைப்பாட்டை மீறிடும் வகையில் அமைந்துள்ளது. இவ்வாறு நலிந்த பிரிவினருக்கு அரசியலமைப்புச் சட்டத்தின் 46-வது பிரிவின்படி ஒரு மாநில அரசு அளிக்கும் சலுகைகள், அந்த நலிந்த பிரிவினருக்குப் பாதகம் ஏற்படும் வகையில் இந்தத் தீர்ப்புகளால் பறித்துக் கொள்ளப்படும் ஒரு நிலவரம் ஏற்பட்டுள்ளது.

நீதிமன்றங்கள், சட்டங்கள் இன்னவை யென விளம்பலாமே தவிர, முற்றிலும் சட்ட மன்றங்களின் அல்லது நாடாளுமன்றத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்டதான, சட்டம் இயற்றும் அதிகாரங்களைத் தாங்களே மேற்கொண்டுவிட முடியாது.

இந்தப் பின்னணியில் நீதிபதி கிருஷ்ணய்யரின் வாசகங்களை இங்கு குறிப்பிடுவது பொருத்தமென்று கருதுகிறேன்.

''சட்டமென்பது ஓர் இலக்கினை நோக்கிச் செல்வதற்கான வழி, நீதிதான் அந்த இலக்கு. ஆனால், நடைமுறையில் பார்ப்போமானால் நீதியும், சட்டமும் நெடுந்தொலைவில் இருக்கும் சகாக்கள் எனலாம். சில நேரங்களில் சட்டமும், நீதியும் விநோதமான பகையாளிகளாகக் கூட இருக்கின்றன. சட்டம் நீதியைச் சுட்டு வீழ்த்திவிட்டால் என்ன நடக்கும்? மக்கள் சட்டத்தைச் சுட்டு வீழ்த்தி விடுவார்கள். சட்டமே இல்லாத அராஜக நிலை தோன்றி வளர்ச்சியை முடமாக்கிவிடும். ஒழுங்குநிலை குலையும், முன்னேற்றம் தடைப்பட்டுப் பின்னடையும். இதுதான் இன்று காணப்படுகின்ற காட்சி''.

—இவ்வாறு நீதிபதி வி.ஆர்.கிருஷ்ணய்யர் கூறுகிறார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் மாண்புமிகு இந்து அறநிலையத்துறை அமைச்சர் திரு நடேசன் பால்ராஜ் அவர்கள் 'முதலமைச்சரின் திருக்கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு' நிதிக்கு ரூ.1,60,000-க்கான காசோலையை வழங்கினார் (7.12.1993).



புதிதாகப் பொறுப்பேற்றுள்ள சென்னை கப்பற்படைத் தளபதி கமாண்டர் ஆர். நாத் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார் (9.12.1993).

எனவே, நீதி அரங்குகளின் நம்பகத் தன்மையைக் கட்டிக்காக்கவும் பொது மக்களின் மனத்தில் முழுமையான நம்பிக்கையை உருவாக்கிடவும் நீதி மன்றங்களில் அளிக்கப்படும் தீர்ப்புகள் பெருவாரியான மக்கள் ஏற்கத்தக்க வகையில் அமைந்திருக்க வேண்டும். நீதிமன்றங்களின் தீர்ப்பா, மக்களின் தீர்ப்பா என்னும் கேள்வி எழுமாயின் மக்களுடைய தீர்ப்புதான் மேலோங்கி நிற்கவேண்டும். ஏனெனில், மக்களாட்சி முறையில் மக்கள் அளிக்கும் தீர்ப்புதான் இறுதியானது.

ஆக, நீதிமன்றங்கள் சமூகப் பார்வை பெற்றிருப்பதோடு, சட்டத்திலுள்ள வகை முறைகளுக்குப் பொருள் விளக்கம் அளிக்கும் போது அரசியலமைப்புச் சட்டத்தில் போற்றிப் பொறிக்கப் பட்டுள்ள சமூகத் தத்துவக் கருத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும். சமூக பொருளாதார பிரச்சினைகளில் சில நீதிமன்றங்கள் அளிக்கும் தீர்ப்புகள் மக்கள் ஏற்கத் தக்கவையாக இல்லை யென்றால் அதன் காரணமாக மக்களிடையே வெறுப்பு ஏற்பட அது வழி வகுக்கும் என்பதோடு நாளடைவில் நீதிமன்றத்தின் நம்பகத் தன்மையையே அது கடுமையாகப் பாதித்து நீதித்துறையில் மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை அது அரித்துவிடும். அதனால் ஏற்படும் தூலால், சமூகத்தில் ஏற்படும் பாதிப்புகள் கடுமையாக இருக்கக்கூடும்.

பல்வேறு நீதிமன்றங்களில் வசதிகளை நவீனப்படுத்துல் இன்றியமையாத ஒன்று. விரைந்து வழக்குகளை முடிவு செய்ய இது அவசியமாகும். தமிழ்நாடு அரசு இந்த வகையில் துரித நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களின் வேண்டுகோளை ஏற்று, உயர்நீதிமன்றக் கட்டத்தைக் குளிர்பதனப்படுத்தவும், இணைப்புக் கட்டம், நீதிபதிகளின் அறைகள் மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் அறை ஆகியவற்றை உயர் நீதிமன்றக் கட்டத்தில் அமைக்கவும் 1.28 கோடி ரூபாயை எங்கள் அரசு வழங்கியிருக்கிறது.

இது போலவே நீதிமன்றங்களுக்கான கட்டங்கள் கட்டவும், நீதிபதிகளுக்கான குடியிருப்பு இல்லங்கள் அமைக்கவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

இவையெல்லாம், நீதிமன்றங்களை நவீனப்படுத்துவதை நோக்கி எங்கள் அரசு முன்னேறிச் செல்கிறது என்பதற்கான எடுத்துக்காட்டுகளாகும்.

எங்கள் அரசு நீதி நிர்வாகத்திற்கு முன்னுரிமை வழங்கி இருக்கிறது என்று நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள முடியும். பதவியேற்ற முப்பது மாதங்கள் முடிவதற்குள்ளாகவே முப்பத்தைந்து சார்நிலை நீதிமன்றங்களை எங்கள் அரசு அமைத்திருக்கிறது என்பது இந்த உண்மைக்குச் சான்று பகரும்.

எங்கள் அரசு இரண்டாவது செயற் பணிக்குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்கிறது. அற்ப வழக்குகளை விசாரிக்கவும் பொருத்தமான பரிகாரங்களைப் பரிந்துரைக்கவும் மாநிலத் தலைமை அரசு வழக்குரைஞர், சட்டம் மற்றும் நீதி நிர்வாகச் செயலர்கள் ஆகியோர்களை உள்ளிட்ட ஒரு குழுவை அமைக்க வேண்டும் என்பது இரண்டாவது செயற் பணிக் குழுவின் கருத்துரையாகும். குற்றங்கள் தொகைப்படுத்தப்பட வேண்டும். பாதிக்கப்பட்டோருக்கு முறையான இழப்பீடு கிடைக்க வழிமுறைகள் ஆய்ந்து காணப்படவேண்டும். குற்றவியல் சட்டம் 320, 321, 357, 358 மற்றும் 359 ஆகிய பிரிவுகளைத் திருத்த ஒரு பொதுச் சட்டம் கொண்டுவர வேண்டியதன் அவசியத்தை மத்திய அரசு பரிசீலனை செய்யலாம். மாநில அளவில் குறிப்பிட்ட கால இடைவெளியில் நீதித்துறைக் கூட்டம் ஒன்று நடத்தவேண்டியதன் அவசியத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

உயர்நீதிமன்றத்தில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளைப் பற்றி ஆய்வு செய்ய ஓர் உயர்நீதிமன்ற நீதிபதி, அரசுத் தலைமை வழக்குரைஞர் கழகத்தின் பிரதிநிதி ஒருவர், சட்டம் மற்றும் நீதித்துறைகளின் செயலர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும். தற்சமயம் உயர்நீதிமன்ற நீதிபதிகள் மட்டுமே இந்த ஆய்வை மேற்கொள்ளுகிறார்கள்.

அரசாங்கம் வழக்காடுவதில் முதன்மை பெற்றிருப்பதால் அரசுப் பிரதிநிதிகளும், சட்டத்துறை அலுவலர்களும் உயர்நீதி மன்ற நீதிபதிகள் நடத்தும் அத்தகைய ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

பெருவாரியான வழக்குகள் ஒரு சில மூத்த வழக்குரைஞர்களிடம் மட்டுமே தேங்கிக் கிடப்பதும் கூட வழக்குகளை விரைவில் முடிப்பதற்குத் தடையாக இருக்கிறது. வழக்குரைஞர் கழகம் தன்னுடைய உறுப்பினர்கள் சிலரிடம் மட்டுமே முறையில்லாத அளவுக்கு வழக்குகள் தேங்கிக்கிடப்பதற்குத் தீர்வு காண வேண்டுமென்று மூன்றாவது செயற்பணிக்குழு பரிந்துரை செய்திருப்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

மேலும், வழக்குரைஞர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் விரும்பத்தகாத நிலையைத் தவிர்ப்பதற்கு மத்திய அரசு வழக்குரைஞர்களுக்கான பொருத்தமான நடத்தைக் கோட்பாடு ஒன்றை அமைப்பது பற்றிப் பரிசீலிக்கவேண்டும் என்பதையும் எங்கள் அரசு வலியுறுத்திக் கூற விரும்புகிறது. இந்தச் சிக்கலுக்கு இது தீர்வாக அமையும். இந்த வாய்ப்பை பயன் படுத்திக் கொண்டு அறிவார்ந்த இந்த அவையின் முன்னர் இன்னொரு கருத்தையும் நான் முன்வைக்க விரும்புகிறேன்.

மூத்த வழக்குரைஞர்களிடம் இளைய வழக்குரைஞர்கள் பயிற்சி பெறும் முந்தைய முறையைப் புதுப்பித்து, அதைத் தவிர்க்க இயலாததாகச் செய்ய வேண்டும். இதன் மூலமாக ஒளிமிகுந்த வழக்குரைஞர்கள் என்னும் நடச்சத்திரக் கூட்டத்திற்குச் சிறப்பு மிக்க புதிய தாரகைகள் கிடைப்பார்கள்.

சமூகத்தின் அறிவார்ந்த உறுப்பினர்களாகிய இவர்களின் வேலை நிறுத்தம் போன்ற விரும்பத்தகாத தூலல்கள் உருவாவது இதன் மூலம் தடுக்கப்படும். சட்ட உதவி வழங்கு குழு (வழக்குரைஞர்கள்) அமைக்கப்பட்டதும் வழக்குரைஞர்கள் சமூகப் பணியாளர்கள், நீதிபதிகள் ஆகியோர்களைக் கொண்டு முறையாகச் சட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சிகளை விரைவுபடுத்தி இருப்பதும், முன்னாள் இந்தியத் தலைமை நீதிபதியின் பாராட்டைப் பெற்றிருக்கின்றன. குடும்ப வழக்கு மன்றங்கள் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து எங்கள் மாநிலத்தில் திருமணம் தொடர்பான வழக்குகள் தேங்கியிருப்பது கணிசமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இருப்பினும், அரசு இயந்திரம் முழுவதும் சட்ட உதவி வழங்கும் நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபடுத்தப்படாவிட்டால் போற்றத்தக்க இந்த இயக்கத்தின் குறிக்கோள்களைக் கிராமப்புறங்களுக்குக் கொண்டு செல்ல இயலாது என்பதை

திரு. கி.ஆ.பெ. விஸ்வநாதம் சித்த மருத்துவ வாரியத்திற்குத் தலைவராக நியமனம்

திரு கி.ஆ.பெ. விஸ்வநாதம் அவர்கள் சித்த மருத்துவத் துறையில் ஆற்றியிருக்கும் பலவேறு பணிகளைக் கருத்தில்கொண்டு அவர்களை சித்த மருத்துவ வாரியத்தின் தலைவராக மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நியமித்து தலைமைச் செயலகத்திலேயே கோப்பில் உத்தரவிட்டார். திரு. கி.ஆ.பெ. விஸ்வநாதம் அவர்கள் சித்த மருத்துவ வாரியத்தின் தலைவராக ஓராண்டுக் காலத்திற்கு இருப்பார். இவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.5,000 வழங்கவும் மற்றும் அவர் உபயோகத்திற்கு கார், தொலைபேசி வசதிகளையும் அளித்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்.

முன்னதாக, திரு. கி.ஆ.பெ. விஸ்வநாதம் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைச் சந்திப்பதற்கு அனுமதி கோரி இருந்தார். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 6.12.93 அன்று நாகப்பட்டினம் மற்றும் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களை ஹெலிகாப்டர் மூலம் சென்று பார்வையிடும் பணி இருந்தும்கூட, திரு. கி.ஆ.பெ. விஸ்வநாதம் அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்தார். இந்தச் சந்திப்பு சுமார் 30 நிமிடம் நடந்தது.

திரு. கி.ஆ.பெ. விஸ்வநாதம் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பலவேறு பணிகளுக்கிடையேயும் தம்மைச் சந்தித்தது குறித்து, தமது மட்டற்ற மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்.

வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். சட்ட உதவி வழங்கும் கழகத்தின் செயற்பாட்டை முறைப்படுத்தும் நோக்கோடு சட்டப்பணியாளர் ஆணைக்குழு சட்டப் பிரிவு 1987, (1987 மத்திய சட்டப் பிரிவு எண்.39)-க்குத் திருத்தம் கொண்டு வரும் முயற்சியில் மத்திய அரசு ஈடுபட்டிருக்கிறது. ராஜ்ய சபாவில் இந்த மசோதா கொண்டு வரப்பட்டு நிறைவேறி இருக்கிறது. நாடாளுமன்றத்தின் ஒப்புதலைத் தற்போது எதிர்நோக்கி இருக்கிறது. இந்தத் துணைக் கண்டம் முழுவதும் ஒரே மாதிரியான நன்கு சமநிலைப்படுத்தப்பட்ட சட்ட உதவி முறைகள் விளங்கும் விதத்தில், இனியும் காலந்தாழ்த்தாது இந்த மத்தியச் சட்டம் விரைவில் கொண்டு வரப்பட வேண்டுமென்று இந்த நீதியரங்கத்தின் மூலம் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களை நான் வேண்டிக் கொள்கிறேன்.

தமிழகத்தின் தென் பகுதியிலிருந்து வந்து வழக்காடும் மக்களின் குறைதீர்க்க மதுரையில் உயர்நீதி மன்றத்தின் கிளை அமைக்கப்பட வேண்டுமென்று 1972 முதற்கொண்டு மத்திய அரசைத் தமிழ்நாடு அரசு வற்புறுத்தி வந்துள்ளது. அரசுக்கு தன் பரிந்துரைகளை வழங்குவதற்காகச் சென்னை உயர்நீதிமன்றமும் நீதிபதிகள் குழு ஒன்றினை அமைத்துள்ளது. மிக விரைவில் சென்னை உயர் நீதிமன்றம் தன் அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என்றும் எங்கள் மாநிலத்தில் தென்பகுதி மாவட்டங்களைச் சேர்ந்த மக்களின் நீண்டநாள் தேவை விரைவிலே நிறைவேற்றப்படுமென்றும் நான் பெரிதும் நம்புகிறேன்.

அதுபோலவே முன்னாள் தமிழக முதலவரும் எனது ஆசானுமாகிய புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் உச்ச நீதிமன்றத்தின் கிளை ஒன்றினை இந்த மாநிலத்தின் நீண்ட நாள் தேவையை நிறைவேற்றும் விதத்தில் சென்னையில் அமைக்கவேண்டும் என்று விரும்பினார்கள். இந்த நீண்டநாள் தேவையை மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் விரைவில் நிறைவேற்றி வைக்குமாறு வேண்டுகிறேன். மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களின் கவனத்தை இது பெரிதும் ஈர்த்திருக்கிறது என்பதை நான் அறிவேன். தங்கள் குறைகளுக்குப் பரிகாரம் தேட தென்னக மக்கள் வேறு வழியின்றிப் புதுடெல்லி செல்ல வேண்டியிருப்பதாலும் தென்பகுதி மாநிலங்களில் தலைசிறந்த ஓர் இடத்தைச் சென்னை நகரம் பெற்றிருப்பதாலும் சென்னையில் உச்ச நீதிமன்றத்தின் கிளை ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். புதுடெல்லியில் தேசிய சட்டக் கலைக் கழகத்தை மத்திய அரசு நிறுவியிருப்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்தக் கலைக் கழகத்தைச் சென்னையில் நிறுவ வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள இந்தச் சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்த விரும்புகிறேன்.

இன்றியமையாத அரசியலமைப்புச் சட்டப் பணியை, குறிப்பாக எல்லா மக்களுக்கும் நீதி வழங்கும் பணியை மேற்கொள்ளப் பயிற்சி பெற்ற சட்ட நுட்ப அறிஞர்கள் நீதித் துறைக்குக் கிடைக்கும் வகையில் சென்னையில் உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையோடு தமிழக அரசால் தொடங்கப்பட் இருக்கும் பயிற்சிக் கழகமும், தேசியக் கழகமும் முழுக்கப் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

நிறைவாக, தமிழக மக்கள் நீதி மன்றங்களை எளிதில் அணுக முடியும் என்பதை உறுதிப்படுத்த ஆக்கப்பூர்வமான அனைத்து முயற்சிகளையும் தமிழ் நாடு அரசு எடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நிலையில் நீதித் துறையின் தேவைகள் அனைத்தையும் முழுமையாக நிறைவேற்றப் பெருமளவில், மிகுந்த பரிவோடு நிதி வழங்க வேண்டுமென்று மத்திய அரசை இந்த நீதியரங்கின் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

புகழ்பெற்ற பேராளர்கள் நிரம்பிய இந்த அரங்கில், தமிழ்நாடு அரசின் கருத்துக்களைக் கூற எனக்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ●

கூட்டுறவே நாட்டுயர்வு!

தொலைபேசி எண்: 32051 முதல் 32054 வரை

மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட்,
மதுரை 625 001.

சேமிப்பிற்குக் கூடுதல் வட்டி பெற எங்கள் வங்கியை நாடுங்கள்.
முன் கடனைத் திருப்பிச் செலுத்தி புதிய பயிர்க்கடன் பெறுங்கள்.
உங்களுக்கு உதவிட எங்கள் வங்கியின் தலைமையகம் மற்றும் மதுரை மாவட்டத்திலுள்ள 37 கிளைகளையும் அணுகுங்கள்.

எல்லோருக்கும் எளிதான சேமிப்புத் திட்டங்கள்

1. ரொக்கச் சான்றிதழ் திட்டம்.
2. இருமலர் திட்டம்.
3. அணையாவிளக்குத் திட்டம்.
4. பொது பிராவிடெண்ட் பண்ட் திட்டம்.
5. ரெக்கரிங் டிபாசிட் திட்டம்.

உங்களது டெபாசிட்டுக்களுக்கு இன்சூரன்ஸ் பாதுகாப்பு உண்டு. குறைந்த செலவில் காசோலைகள் மற்றும் உண்டியல்கள் வசூலித்துத் தரப்படும்.

விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பயிர்க்கடனாக நடப்பு ஆண்டில் ரூ.21 கோடியும், விவசாயத்தைச் சார்ந்த தொழில்களுக்கு மத்தியக் காலக்கடனாக ரூ.4 கோடியும் வழங்கப்பட உள்ளது. பண்ணை சாராக் கடனாக தனி நபருக்கு ரூ.10 இலட்சம் வரை 12 சதவிகிதம் முதல் 16.50 சதவிகிதம் வட்டியில் கடன் வழங்கப்படுகிறது.

[illegible] ரூபாய் ஒரு இலட்சம் கடன் வழங்கப்படுகிறது.

சி. [illegible],
செயலாளர்.

எஸ். சாந்தூரப்பன்,
தனி அதிகாரி.

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள் வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை விலையகத்தை அணுகவும்

பதிவு எண் M 8676
Licence No. TN/MS(C)/PP-23